


# வானவல்லி

பாகம் 4

சி.வெற்றிவேல்

வானதி பதிப்பகம்

https://telegram.me/aedahamlibra

# வானவல்லி

## பாகம் – 4: இமயத்தில் புலிக்கொடி

சி.வெற்றிவேல்
சாளையக்குறிச்சி

https://telegram.me/aedahamlibra

# வான வல்லி

## பாகம் – 4 : இமயத்தில் புலிக்கொடி

சி.வெற்றிவேல்

சாளையக்குறிச்சி

https://telegram.me/aedahamlibra

# என்னுரை

தமிழக வரலாற்றில் பொற்காலம் என்றால் அது காதலையும், வீரத்தையும் போற்றி வாழ்ந்த சங்க காலத்தின் ஆரம்ப காலம் தான். அச் சங்க கால மன்னர்களுள் தலைச் சிறந்தவன் கரிகாலன். சோழர்கள் தங்களது வல்லமையை இழந்து குறுநில மன்னர்களாகி புகழை இழந்து தஞ்சைக்கு அருகில் ஒடுங்கிய வேளையில் இக் கரிகாலனைத்தான் முன்னுதாரணமாகக் கொண்டு இழந்த புகழை மீட்டெடுத்து தெற்கே குமரி, வடக்கே கங்கை, கிழக்கே கடாரம் வரை வென்றனர். பிற்காலச் சோழர்கள் அன்றி முற்கால சேரர்களான இமயவரம்பன், நெடுஞ்சேரலாதன் மற்றும் செங்குட்டுவனுக்கும் முன்னுதாரணமாக விளங்கியவன் கரிகாற் பெருவளத்தான்.

தமிழக மன்னர்களுள் முதன் முதலில் இலங்கையை வெற்றி பெற்ற பிறகு இமயம் வரைப் படையெடுத்து

வென்று தனது புலிச் சின்னத்தை இமயத்தில் பொறித்து போரில் தோற்ற பிற நாட்டு வீரர்களைக் கொண்டு காவிரிக்குக் குறுக்கே அணையைக் கட்டி, இரு புறங்களி லும் கரை எடுத்த மாபெரும் மன்னன் கரிகாற் பெருவளத்தான். தமிழக வர லாற்றில் யாராலும் நெருங்க இயலாத புகழின் உச்சியை அடைந்த கரிகா லன் அவனுக்குரிய அரியாசனத்தை அடைவதற்குள் அவன் அடைந்த இன்னல்களும், துயரங்களும் பல.

தாய் வயிற்றில் இருக்கும் போதே தந்தையை இழந்தவன் பிறகு வளர்ந்ததும் எதிரிகளால் கைது செய்யப்பட்டு மாளிகைக்குள் அடைத்துவைக்கப்பட்டு மாளிகை யோடு எரிக்க முயன்ற கொடுமையும் அவனது வாழ்வில்தான் அரங்கேறி யது. அதிலிருந்து அவன் எப்படித் தப்பி எங்கெங்கு ஓடியிருப்பான் என அறியும்பொருட்டு காவிரியில் மரக்க லம் சென்றதாய் கூறும் சங்கப் பாடல் களை முனகிக்கொண்டே துளி நீர் கூட இல்லாமல் வறண்ட காவி

ரிக் கரையோரமாகவே முக்கொம்பு முதல் கல்லணை வரை நடந்து சென்ற அனுபவங்களை எளிதில் மறக்க இயலாது!

கரிகாலன் அமர்ந்து ஆட்சி செலுத்திய புகார்ப் பட்டினம் நான்கு காத தூரம் பரந்து விரிந்திருந்தது என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. நான்கு காத தூரம் என்பது சோழர்களின் முற்காலத் தலைநகர் உறைந்தைக்கும் சேரர்களின் தலைநகர் கருவூர் வஞ்சிமா நகரத்திற்கும் இடைப்பட்ட தொலைவு என்பதை அறிந்த போது வியப்பின் உச்சிக்கே சென்றுவிட்டேன். தற்போதைய திருச்சிக்கும் கரூருக்கும் இடைப்பட்ட தொலைவு தான் நான்கு காத தூரம். அவ்வளவு தூரம் பரந்து விரிந்திருந்த பிரமாண்டப் பட்டினமான பூம்புகார் இன்று குணக்கடல் கொண்டது போக எஞ்சியிருக்கும் அதன் எச்சங்களைக் காணுகையில் பட்டினப்பாலையில் புகார்ப் பட்டினத்தின் சிறப்பினைக் கூறும் கடியலூர் உருத்திரங்கண்ணனாரின்

பாடல் வரிகள் மனதிற்குள் தோன்ற கண்களின் கண்ணீர்ப் பெருக்கை என்னால் கட்டுப்படுத்த இயல வில்லை. வழிந்த இருதுளிக் கண் ணீர் புகாரைக் கொண்ட குணக்கட லின் இரக்கமற்ற அலைகளில் சிந்தி கலக்கத்தான் செய்தது.

வானவல்லி எனது முதல் புதி னம். வானவல்லி எழுதத் தொடங் கிய பிறகுதான் சங்க இலக்கியங்க ளையும், ஆய்வுக் கட்டுரைகளையும் வாசிக்க ஆரம்பித்தேன் என்ற உண் மையையும் இங்கு கூறிவிடுவது சரி என்றே நினைக்கிறேன். சங்க இலக் கியங்களை வாசிக்கும்போது நம் முன்னோர்கள் வாழ்ந்த சிறப்பையும், தற்போதைய நாம் வாழும் நிலை யையும் எண்ணுகையில் மட்டும் ஏனோ மனம் வலிக்கத்தான் செய்கி றது. எனக்குக் கிடைத்த குறிப்புகள், நான் அறிந்துகொண்ட உண்மைகள் அனைவருக்கும் பயன்பட வேண்டும் என்ற நோக்கில் அனைத்து உசாத் துணை நூல்களையும் குறிப்பிட்டுள் ளேன். ஆதாரக் குறிப்புகள் அனைத்

தையும் எங்கிருந்து எடுக்கப்பட்டவை, எந்தெந்த பக்கங்கள் என்பதனையும் ஆராய்ச்சியை விரும்புபவர்களுக்காக கொடுத்திருக்கிறேன்.

இக்கதையில் வரும் வளவன், இளந்திரையன், இரும்பிடர்த்தலையர், இருங்கோவேள், சேரன் பெருஞ்சேரலாதன், பாண்டியன் தென்னவன், ஹிப்பாலாஸ் ஆகியவர்களே வரலாற்று பாத்திரங்கள். மற்றவர்களான வானவல்லி, விறல்வேல், வளவனார், திவ்யன், யவன வீரன் டாள்தொபியாஸ், அடிமை வீரன் இம்ஹோடெப் ஆகியவர்கள் அனைவரும் என்னால் உருவாக்கப்பட்ட கற்பனைப் பாத்திரங்கள். யவன வீரன் எதற்கு என்ற கேள்வியும் சிலருக்கு எழலாம்? பன்னெடுங்காலமாக சிறந்து விளங்கிய கிரேக்கம் சங்ககாலத்தின் தொடக்கத்தில் அதன் புகழினை இழந்து உரோமிற்கு அடிமைப்பட நேர்ந்தது. அப்போது உலகப் புகழ் பெற்றிருந்த பட்டினமான புகாருக்கு வாணிபம் செய்ய வந்த யவனர்கள் பலர் புகாரிலேயே தங்கிவிட்டனர் என்பதை பட்

டினப்பாலை மூலம் அறியலாம். ஆதலால் யவனர்களை விடுத்தும் சங்ககால சோழர்களின் வரலாற்றை எழுத இயலாது.

**நான் எழுதத் துவங்கிய போது நான் என்ன எழுதுகிறேன் என்றே தெரியாமல் எனக்கு உற்சாகத்தையும், ஆதரவையும் அளித்த அம்மா, தம்பி வெற்றிச்செல்வம், மாமா ஆகியோருக்கும் எழுதுவதற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் துணையிருந்த என் நண்பர்கள் அனைவருக்கும் இந்நூலைச் சமர்ப்பணம் செய்வதில் மகிழ்கிறேன்.**

நான் எழுதுவதற்குப் பலர் ஊக்கத்தை அளித்தாலும் வானவல்லி புத்தக வடிவம் பெறுகிறதென்றால் அதற்கு முழு முதற்காரணம் அண்ணன் திரு.சுந்தர் அவர்களே! வானவல்லியை எழுதிக்கொண்டிருந்த போதே என்னைத் தொடர்பு கொண்டு தகுந்த ஆலோசனையை வழங்கி வழி நடத்தியவர். அவரது

பெயரை இங்கு நன்றியோடு கூறிக் கொள்கிறேன்.

சிறந்த பல சரித்திர நாவலாசிரியர்களின் படைப்புகளை வெளியிட்டு, படிப்பவர்களின் மனதினில் ‘இதய ராணி’யாகத் திகழும் வானதி பதிப்பகத்தில் இந்நாவலைப் பதிப்பித்து வெளியிட்ட திரு.ராமு அவர்களுக்கு எனது நன்றியையும் இங்கு கூறிக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்..

**கௌசல்யா சி.வெற்றிவேல்**

**சாளையக்குறிச்சி.**

tamilvetrivel@gmail.com
writervetrivel.com

https://telegram.me/aedahamlibra

# உசாத் துணை நூல்கள்

1. பட்டினப் பாலை – கடியலூர் உருத்திரங் கண்ணனார்.
2. கலிங்கத்துப் பரணி – கவிச் சக்கரவர்த்தி செயங்கொண்டார் (பதிப்பும் உரையும் முனைவர் ப.சரவணன்).
3. அகநானூறு பாடல்கள்: 31, 125, 246, 376.
4. புறநானூறு பாடல்கள்: 7, 46, 224, 367.

https://telegram.me/aedahamlibra

5. தமிழக வரலாறு: கரிகாற் பெரு வளத்தான் - புலவர் கா.கோவிந்த னார்.

6. பொருநராற்றுப் படை - முடத் தாமக் கண்ணியார்.

7. சிலப்பதிகாரம் (புகார்க் காண் டம்) - இளங்கோவடிகள்.

8. கரிகால் சோழன் - முனைவர். ரா. நிரஞ்சனா தேவி

9. சங்க காலத் தமிழக வரலாறு பகுதி 1 மற்றும் 2 - மயிலை சீனி. வேங்கடசாமி.

10. தென்னாட்டுப் போர்க்களங் கள் -பன்மொழிப் புலவர் கா.அப்பாத் துரையார்.

11. சோழர்கள் - கே.ஏ. நீல கண்ட சாஸ்திரியார் (தமிழ் மொழி பெயர்ப்பு திரு.ராமன்).

12. பட்டினப் பாலைத் தலைவன் கரிகாலனே - மா. இராச மாணிக்க னார்.

13. சமணமும் தமிழும் – மயிலை சீனி. வேங்கடசாமி.

14. பௌத்தமும் தமிழும் – மயிலை சீனி. வேங்கடசாமி.

15. கிரீஸ் வாழ்ந்த வரலாறு – வெ. சாமிநாத சர்மா.

16. **The Periplus of the Erithrean Sea:** Travel and Trade in the Indian Ocean by a Merchant of the First Century (London, Bombay & Calcutta 1912) – W.H Schoff (tr. & ed)

17. The Hathigumpha Inscription Of Kharavela Of Kalinga. Lines: 4 & 11.

18. முனைவர் இராம.கி'யின் வலைதள இடுகை:

வளவு: சிலம்பின் காலம்-6 http://valavu.blogspot.in/2010/05/6_14/.html

19. **Slavery in Ancient Greece** by **Yvon Garlon (Revised 1988)**

https://telegram.me/aedahamlibra

20. வஞ்சிமா நகரம் – இராக வையங்கார்

21. Histry of India by ROMESH CHUNDAR DUTT, C.I.E Edited by A.V WILLIAMS JACKSON, Ph.D., LL.D. Professor of Indo-iranian language in columbia University.

22. A Comprehensive Histry of Ancient India (3rd Volume) P.N Chopra, B.N Puri, M.N Das, A.C Pradhan.

23. புராணக் கதைகள் - Harshacharita of Bana and Yugapurana of the Gargisamhita.




கரிகாலரின் இமய படையெடுப்பு - அரசியல் களங்கள்

https://telegram.me/aedahamlibra

# பொருளடக்கம்

என்னுரை

உசாத்துணை நூல்கள்

இமயத்தில் புலிக்கொடி

1. தென்னாட்டு நாடோடி

2. பகடைக் காய்

3. கார்த்திகா

4. ஆற்றங்கரைச் சம்பவம்

5. மரண கீதம்

6. தொட்டிலும், கட்டிலும்

7. இணைந்த பகைவர்களும், வகுக்கப்பட்ட வியூகமும்

8. இரண்டு திங்கள்...

https://telegram.me/aedahamlibra

9. பேரழகி அவந்திகா

10. பலதேவனின் ஆணை

11. நதிக்கரை மாளிகை

12. தாக்காளர்கள்

13. தாக்காளர்களின் தாக்குதல்

14. செண்டாயுத அணிவகுப்பு

15. விழுந்த கோட்டை

16. தூதுவனான படைத்தலைவன்

17. கலிங்க வன ஒற்றன்

18. காரவேலரின் வியப்பு

19. பீமவேலனின் மரியாதை

20. வேறொரு காரணமும் வர்த்தினியின் துயரமும்

21. பீமவேலனின் கட்டளை

22. அவந்திகாவுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி

23. முதுகில் பாய்ந்த வாள்

24. விடை கிடைக்காத மர்மங்கள்

25. அவந்திகாவின் கட்டளை

26. விழுப்புண்ணை நனைத்த கண்ணீர்

27. சூழப்பட்ட கார்த்திகா

28. கார்த்திகா அளித்த மருந்து

29. வஜ்ரபாகு வகுத்த வியூகம்

30. சதகர்ணியின் எதிர் வியூகம்

31. திருக்கண்ணனின் திட்டம்

32. செங்குவீரனின் முடிவு

33. அதிரடித் தாக்குதல்

34. திருக்கண்ணனின் கட்டளை

35. சுங்கனின் ஏற்பாடு

36. உருண்ட தலைகளும் சிதைக்கப்பட்ட திட்டமும்

37. வில்லவனின் கழுத்தில் வைக்கப்பட்ட வாள்

https://telegram.me/aedahamlibra

38. இறுதி முடிவு

39. புறப்பட்ட சோழப்படை

40. மகாமேகவாகன வியூகம்

41. இருவித போர்கள்

42. கருடனின் ருத்ர தாண்டவம்

43. போர்க்களத்தில் பூத்த புயல்

44. சுற்றிவளைத்த கலிங்கப் படைகள்

45. அசுரனின் கோர தாண்டவம்

46. காலிங்காதிபதி குதுப்ஸ்ரீ பீமவேலன்

47. தேவ அஸ்திரம்

48. வில்லவனின் பார்வை

49. கைப்பற்றப்பட்ட கோட்டைகள்

50. அதிர்ந்த சோழப் படை

51. வெளியேற்றப்பட்ட சுங்கப் படை

52. செண்டாயுதனின் வெஞ்சினம்

53. இமயத்தில் புலிக்கொடி

54. வரவேற்பு

55. நிறைவு

முடிவுரை

https://telegram.me/aedahamlibra

# வான வல்லி

## பாகம் - 04

## இமயத்தில் புலிக்கொடி

### 1. தென்

https://telegram.me/aedahamlibra

# ணாட்டு நாடோடி

விந்திய மலைப் பகுதியில் உருவான அவந்தி நதியானது தெற்கிலிருந்து வடக்காக அவந்தி தேசம் என அழைக்கப்படும் மாளவத்தின் வழியாக யமுனையை நோக்கிப் பாய்ந்துகொண்டிருந்தது. செல்வத்தின் கடவுள் லட்சுமி தேவியின் இருப்பிடம் எனப் புகழப்படும் மாளவ தேசத்தின் தலைநகரான உஞ்சை மாநகரத்தின் புகழ் காலம் காலமாக பெருகக் காரணமான அவந்தி நதியானது சண்டிகாலேசுவரரின் பாதத்தைத் தழுவியபடி எந்தவித கர்வமும் இல்லாமல் சலனமின்றி அடக்கமாகச் சென்றுகொண்டிருந்தது. பொழுது கிழக்கில் விந்திய மலைச் சரிவில் உதித்து ஒரு ஓரைப் பொழுதே ஆகியிருந்ததாலும் சுள்ளென்று வெயில் அடிக்கத் துவங்கியிருந்தது. நிலத்தின் குளிர்ச்சி முழுவதும் நீங்கியிருக்கவில்லை. அதே நேரம்

மலைச் சரிவிலிருந்து நதியின் போக்கி லேயே குளிர்ந்த காற்றும் வீசிக்கொண்டி ருந்தது.

மலைச் சரிவின் குளிர்ந்த காற்று மற்றும் சுள்ளென்று அடித்த கதிரவ னின் காலை வெயிலை அனுபவித்த படியே இரண்டாகப் பிரிந்த பாதையில் எது உஞ்சை மாநகரத்திற்குச் செல் கிறது என்பதை அறியாமல் குழம் பிப் போய் நின்றான் தென்னாட்டைச் சேர்ந்த நாடோடி வணிகன் ஒருவன். அப் போது அந்த வழியாக வந்த அவந்தி தேச வணிகன் தென்னாட்டு வணிக னுக்கு வழிகாட்டி தன்னுடன் அழைத்துச் செல்லலானான். இரண்டு வணிகர்களும் அவந்தி நதியின் கிழக்குக் கரையோர மாகவே அவந்தி தேசத்தின் தலைநக ரான உஞ்சை மாநகரத்தை நோக்கி நதி யின் போக்கிற்கு எதிர்த்திசையில் நடந்து கொண்டிருந்தார்கள்.

தென்னகத்து நாடோடி அவந்தி வணிகனைக் கவனித்தான். சற்றே

பருத்த உடல். விலையுயர்ந்த சீனத் துப் பட்டாடையை உடுத்தி, நெற்றியில் விலையுயர்ந்த முத்து மற்றும் மரகதக் கல் பதித்த மாலையை அணிந்துகொண்டு ஆடம்பரமாகக் காட்சியளித்தான். சுருள் சுருளான அவனது தலை மயிர்கள் அகன்ற நெற்றியில் விழுந்துகொண்டி ருந்தன. கூர்மையான பார்வை. நெற்றி யில் துவங்கி தாழ்வாய் வரை நீண்டிருந்த பெரிய தழும்பு அவனது முகத்திற்கு அவ லட்சணத்தை அளித்துக் கொண்டிருந் தது. அந்தத் தழும்பினைக் கண்டதுமே தென்னகத்து நாடோடியின் முகத்தில் சொல்ல இயலாத கோபமும், அருவருப் பும் தோன்றியது. கண நேரத்தில் அதை மறைத்துக்கொண்டு புன்சிரிப்பு ஒன்றை அவனைப் பார்த்து சிந்தினான். அப் போது அவந்தி வணிகன் தன் இடையில் குறுவாள் ஒன்றையும் மறைத்து வைத் திருந்ததை தென்னாட்டு நாடோடி கவ னிக்கவே செய்தான்.

அப்போது அவந்தி வணிகன் தென்னகத்து நாடோடியிடம், "உன்னைக் கண்டால் தெற்கிலிருந்து வந்திருப்பவன் போலத் தெரிகின்றதே எந்த ஊர்?" என வினவினான்.

"எனக்கு சொந்த ஊர் காகந்தி"

"எந்த நாடு எனத் தெரிவித்தீர்?" பதற்றத்துடன் வினவினான் மற்றொருவனைப் பார்த்து.

"காகந்தி!"

"காகந்தியா உன் சொந்த ஊர்?"

"ஆமாம்."

"தென்னகத்தில் தன்னை எதிர்த்த அனைத்து மன்னர்களையும் போரில் கொன்று வட நாட்டு மன்னர்களுக்கு எதிராகப் படையைத் திரட்டிப் போரை அறிவித்திருக்கிறாரே சோழ மன்னர். அவருடைய நாடா உங்களது நாடு!" பதற்றத்து

டனும், உடல் நடுக்கத்துடனும் வினவி னான் அவந்தி தேச வணிகன்.

அவன் கூறியதை வியப்புடன் கேட்ட தென்னகத்து வணிகன். "என்ன அய்யா கூறுகிறீர்கள்? நீங்கள் கூறுவது மிகவும் வியப்பாக அல்லவா இருக்கி றது. தென்னக மன்னர்களுக்கு ஒருவரை ஒருவர் எதிர்த்து சண்டையிடவே நேரம் போதாது. எதிர்த்துச் சண்டையிட்டு அழி தலையே வீரம் என்று போற்றுபவர்கள் அவர்கள். இந்த நிலையில் அவர்கள் ஒன்று திரண்டு வடக்கு நோக்கிப் படை எடுத்திருக்கிறார்களா? கனவு ஏதாவது கண்டீர்களா?" ஏளனத்துடன் தெரிவிக் கலானான் தென்னகத்து நாடோடி.

"அப்படியெனில் உனக்கு செய்தி தெரியாதா?"

"என்ன செய்தி?"

"தென்னாட்டு மன்னன் வடக்கு நோக்கிப் போரை அறிவித்திருக்கிறான்!"

https://telegram.me/aedahamlibra

“போரை அறிவித்திருப்பது யார்?”

“தம்பி, வடக்கு நோக்கி வந்துகொண்டிருக்கிறானே பேரரசன். அவனது பெயர் கரிகாலன்.”

“கரிகாலனா?”

“ஆம். மௌரியப் பேரரசன் அசோகன் தென்னகம் நோக்கிப் படையெடுத்த போது தடுத்து நிறுத்தினானே சென்னி. அவனது புதல்வன்.”

“அவனுக்கு யானைக் கால் உண்டா? அல்லது அவனது கால் கரிய நிறத்தில் இருக்குமா?”

“இரண்டில் எதுவும் இல்லை. அவனைக் கரிகால் பெருவளத்தான் என்கிறார்கள் அவந்தி வழியாகச் செல்லும் வணிகர்கள் அனைவரும். அவனைக் கண்டால் கரிய நிறத்தில் இருக்கும் காலனைக் கண்டது போல என்றும், அவனை எதிர்த்தால் வீர சுவர்க்கம் நிச்சயம் என்கிறார்கள். தென்னகத்தின் மன்னர்கள்

https://telegram.me/aedahamlibra

அனைவரும் ஒன்று சேர்ந்து அவனை அடக்கப் பார்த்தார்கள். என்ன நடந்தது தெரியுமா?”

“என்ன நடந்தது?”

“கூறுகிறேன் கேள். உன் சொந்த ஊர் என்றாயே காகந்தி. அந்தக் காகந்தியைத் தான் முதலில் கரிகாலனின் எதிரிகள் முற்றுகை இட்டார்களாம். முற்றுகை என்றால் சாதாரண முற்றுகை அல்ல. நிலத்தில் ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட துருப்புகள். கடலில் அதில் பாதி அளவுள்ள துருப்புகள் என நிலத்திலும், கடலிலும் ஒரே நேரத்தில் முற்றுகையிட்டார்கள்.”

“காகந்தி விழுந்து விட்டதா அய்யா?”

“உன் இருப்பிடம் காகந்தி என்று இன்னொரு முறை கூறாதே... எனக்கு அவமானமாக இருக்கிறது!”

https://telegram.me/aedahamlibra

“மன்னிக்கவும் அய்யா... ஊரை விட்டுப் பிரிந்து வெகு நாள் ஆகிவிட்டது. ஆதலால் தென்னக நிலவரம் எனக்குத் தெரியவில்லை. உங்களுக்குத் தெரிந் ததை கூறுங்களேன்!”

“காகந்தியை முற்றுகையிட்டப் படைகளை இரண்டே கிழமையில் அடித்து விரட்டிவிட்டான் கரிகாலன். அது மட்டுமா புகாரை முற்றுகையிட வந்த சிங் கள வீரர்கள் பன்னிரண்டாயிரத்திற்கும் மேற்பட்டவர்களை சிறை பிடித்து விட் டான்.”

“உயிரோடா?”

“ஆம்!”

“அவர்கள் அனைவரையும் என்ன அய்யா செய்தார்? கொன்று விட்டாரா?”

“அதுதான் இல்லை.”

“கொல்ல வில்லையா?”

"அவர்களைக் கொண்டு காவேரி நதியின் குறுக்கே அணையைக் கட்டத் துவங்கிவிட்டான்."

"காவேரியின் குறுக்கே அணையா? சாத்தியமே இல்லை!"

"கரிகாலன் வடக்கு நோக்கித் தனது படையை செலுத்தக் கட்டளை யிட்டது கூட இங்கிருக்கும் மக்களை வியப்படையச் செய்யவில்லை. அவன் கட்டியிருக்கும் மாபெரும் அணை தான் அனைவரையும் வியப்படை யச் செய்திருக்கிறது. காவேரி நதியைச் சூழ்ந்து காணப்பட்ட அடர்ந்த வனங் கள் அனைத்தையும் போரில் அகப்பட்ட சிங்கள வீரர்களைக் கொண்டு அகற்றி வயல்களாகத் திருத்திவிட்டானாம்!"

"பிரமிப்பாக இருக்கிறது!"

"கரிகாலன் எதற்காக வடக்கு நோக்கிப் படை எடுத்திருக்கிறான் என்று உனக்குத் தெரியுமா?"

"தெரியாதே, எதற்கு அய்யா...?"

காவேரிக்குக் குறுக்கே அணையைக் கட்டிவிட்டதால் நதியின் நீர் ,மட்டம் உயர்ந்துவிட்டதாம். ஆதலால் நதிக்கு கரை எடுத்து உயர்த்தப் போகிறார்களாம்!"

"அதற்கு?"

"வேலை செய்ய அடிமைகள் வேண்டும் அல்லவா?"

"அதற்குத்தான் அவர் போரினைத் துவங்கியிருக்கிறாரா?"

"அப்படித்தான் சிலர் கூறுகிறார்கள்?"

"சிலர் என்றால்...?"

"ஒரு சிலர் அப்படிக் கூறுகிறார்கள். ஆனால், வேறு சிலர் வேறு சில காரணங்களையும் கூறுகிறார்கள்"

"என்ன காரணமாம்?" ஆர்வத்துடன் வினவினான் தென்னக நாடோடி.

“காலம் காலமாக வட நாட்டு மன்னர்கள் தென்னகத்தை நோக்கி படையெடுத்து தாக்கிக்கொண்டிருக்கி றார்கள். இனி வட நாட்டு மன்னர்கள் யாரும் தென்னகத்தை நோக்கிக் கனவி லும் தனது படையை நகர்த்தக் கூடாது. வட நாட்டு மன்னர்களுக்கு தகுந்த பாடத் தைக் கற்பிக்க வேண்டும் எனும் உத்வே கத்துடன் கரிகாலன் படையெடுக்க உத் தரவிட்டிருக்கிறானாம்.”

“நீங்கள் கூறுவதைக் கேட்கக் கேட்க எனது உடலில் இத்தனைக் கால மாக மரணித்துப் போயிருந்த வீரம் ஊற் றெடுப்பதை உணர்கிறேன் நான்...”

“உன்னைப் பார்த்தால் விரைந்து கரிகாலனின் சோழப் படையில் சேர்ந்து கொள்வாய் போலிருக்கிறதே!”

“இதுவரை அந்த நினைப்பு இல்லை... ஆனால், நீங்கள் கூறியதைக் கேட்ட பிறகு அந்த நினைப்பு தோன்றி விட்டது!”

https://telegram.me/aedahamlibra

“மேலே சொன்ன இரண்டு காரணங்கள் மட்டும் அல்ல. இன்னொன்றும் இருக்கிறது!”

“என்ன அய்யா?”

அவந்தி வணிகர் சுற்றும் முற்றும் பார்வையைச் செலுத்தினார். அவர் சுற்றிலும் நோட்டம் விடுவதைப் பார்த்த தென்னகத்து வணிகன், “இங்கு நாம் இருவர் மட்டும் தான் இருக்கிறோம். வேறு யாரும் இல்லை. தயக்கமின்றி தெரிவிக்கலாம் நீங்கள்!” எனத் தெரிவித்தான்.

“அப்படி கூறிவிடாதே! அவந்தி, கலிங்கம், வச்சிர, மகதம் மற்றும் கோசல நாடு முழுவதும் கரிகாலனின் ஒற்றர்கள் ஊடுருவிவிட்டார்கள். இதோ இங்கு பாயும் அவந்தி நதி கூட சோழப் படைத் தலைவர்களுக்கு ஒற்று சொன்னாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.”

https://telegram.me/aedahamlibra

“அந்த இன்னொரு காரணத்தைக் கூற ஏன் அய்யா இப்படித் தயங்குகிறீர்கள்?”

“சென்னி மறைந்ததும் மொழிபெயர் தேயத்தில் நிறுத்தியிருந்த தமிழர் கூட்டணிப் படைகளின் பலம் குறைந்துவிட்டது. பிறகு, கரிகாலன் சிறிய வயதில் இருந்த போது மொழிபெயர் தேயத்தில் தமிழர் நிறுத்தியிருந்த மூவேந்தர் கூட்டுப் படையை தகர்த்து தென்னக எல்லைக்குள் ஊடுருவி தாக்குதல் மேற்கொண்டான் அல்லவா கலிங்க மன்னன் காரவேலன்? அதற்குப் பழி வாங்கப் போகிறான் என்றும் கூறிக் கொள்கிறார்கள்!”

“கலிங்க மன்னன் காரவேலனையே கரிகாலர் எதிர்க்கத் துணிந்துவிட்டாரா?”

“ஆமாம்... ஆமாம்...”

“இதைக் கூறத்தான் சுற்றும் முற்றும் பார்த்தீர்களா?” ஏளனத்துடன் வினவினான் தென்னக நாடோடி.

“இல்லை. வச்சிர நாட்டு இளவரசனும், அவந்தி இளவரசனும் சேர்ந்து சோழப் படைத் தலைவனை நடுகடலில் சிறை செய்து யவனத்திற்கு அடிமையாக விற்று அனுப்பி விட்டார்களாம்! அவர்களைப் பழி வாங்கவே சோழ மன்னன் கடும் கோபத்துடன் வடக்கு நோக்கிப் புறப்பட்டிருக்கிறான் என்று செய்தி அறிந்தவர்கள் கூறுகிறார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணத்தைக் கூறுகிறார்கள். அவனது கோபத்திற்கு எந்தெந்த நாடு அழியப் போகிறதோ, எந்தெந்த பட்டினங்கள் தீக்கிரையாகப் போகிறதோ என்று அனைவரும் நடுங்கிக்கொண்டிருக்கிறார்கள். வட நாட்டு மன்னர்களையும், வீரர்களையும் ருத்ர பகவான் தான் இனி அந்தச் சோழ மன்னனிடமிருந்தும், சோழப் படைத்தலைவர்களிடமிருந்தும் காக்க வேண்டும்!”

https://telegram.me/aedahamlibra

“எனக்கொரு சந்தேகம்!”

“என்ன?”

“சோழ மன்னருக்கு எப்படி அவந்தி மற்றும் மகத இளவரசர்கள் தான் சோழப் படைத்தலைவரை சிறை பிடித்து அடிமையாக அனுப்பினார்கள் என்று தெரியும்? யவனத்திற்கு அடிமையாக செல்பவர்கள் உயிரோடு திரும்புவதில்லையே!”

“யவனத்திற்கு அடிமையாக அனுப்பப்பட்டவன் உயிரோடு திரும்பி வந்து விட்டான்!”

வியப்புடன் அவனை நோக்கினான் தென்னகத்து நாடோடி.

“யவனத்திற்கு அடிமையாக சென்றவன் எப்படி உயிரோடு திரும்பி வந்தான் என்று ஆச்சரியம் அடைகிறாயா?” எனக் கேள்வி எழுப்பினார்.

“ஆமாம்” என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டினான்.

"அடிமையாகச் சென்ற இன்னொரு படைத் தலைவன் அவனை அடிமைத் தளையிலிருந்து விடுவித்து அழைத்து வந்துவிட்டானாம்!"

"ஒரு அடிமை இன்னொரு அடிமையை விடுவித்தானா?"

"ஆமாம்!"

"வினோதம்!"

"வினோதம் தான். இதைக் கேட்டதற்கே நீ ஆச்சரியம் அடைகிறாயே, இன்னொன்றையும் கூறுகிறேன் கேள்."

"என்ன?"

"யவனத்தில் இப்போது அடிமைகள் ஒன்று சேர்ந்து ஆயுதப் புரட்சி செய்யத் துவங்கிவிட்டார்களே, நீ கேள்விப்பட்டிருக்கிறாயா?"

"இல்லை!"

"உனக்கு ஒன்றுமே தெரியவில்லை. யவனத்தில் அடிமை வீரர்

https://telegram.me/aedahamlibra

கள் அனைவரும் ஒன்று சேர்ந்து புரட்சி செய்து உரோமை நிலைகுலையச் செய்து கொண்டிருக்கிறார்கள். உரோமின் பலம் நாளுக்கு நாள் புரட்சி வீரர்களால் சீர்குலைந்து கொண்டிருக்கிறது. உரோம் பட்டினமே அடிமைகளால் விரைவில் கைப்பற்றப் பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்ற செய்தி வந்து கொண்டிருக்கிறது."

"இரண்டு சோழப் படைத் தலைவர்கள் அடிமைத் தளையிலிருந்து விடுதலை அடைந்ததற்கும் யவனத்தில் அடிமை வீரர்களின் புரட்சிக்கும் என்ன தொடர்பு? குழப்புகிறீர்களே!"

"அடிமைப் புரட்சிக்கு தலைமை தாங்குகிறானே "ஸ்பார்டகஸ்" அவன் சோழப் படைத் தலைவர்களின் நண்பன்!"

தென்னக நாடோடி பேச்சற்று அமைதியாக நின்றுகொண்டிருந்தான்.

https://telegram.me/aedahamlibra

“தம்பி, சோழப் படைத் தலைவர்களின் பராக்கிரமத் தனத்தை கேள்விப்படும்போதெல்லாம் எனக்கும் சோழப் படையில் சேர்ந்து விட்டால் என்ன என்றும் தோன்றியதுண்டு. நீ எச்சரிக்கையாக இரு! என்னிடம் அப்பாவியாகத் தெரிவித்ததைப் போன்று வேறு யாரிடமும் நீ காகந்தி”யைச் சேர்ந்தவன் என்று உளறி விடாதே!”

“ஏன் அய்யா எச்சரிக்கை செய்கிறீர்கள்?”

“தென்னகத்திலிருந்து அவந்தி, ராஜகிருதம் மற்றும் பாடலிபுத்திரம், படித்தானம் மற்றும் கோசலத்திற்கு வணிகம் மேற்கொள்ள வரும் வணிகர்கள் ஒற்றர்களாக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் பலர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுகிறார்கள்.”

“அப்படியெனில், எச்சரிக்கையாகத்தான் இருக்க வேண்டும்.”

“உன்னைப் பார்த்தால் அப்பாவியைப் போன்று தெரிகிறது. உங்கள் ஊரில் கூறுவதைப் போன்று வெளுத்ததெல்லாம் பால் என்று நினைக்கிறாய். கவனம்!”

“சரி, அப்படியே செய்கிறேன்.”

“ம்ம்ம்” எனத் தெரிவித்த அவந்தி வணிகன் மேற்கொண்டு எதுவும் பேசாமல் நடையைச் சற்று அகல வைத்து வேகமாக நடக்கலானார். தென்னகத்து நாடோடியும் அவரைத் தொடர்ந்து விரைந்து நடக்கலானான்.

அப்போது முகத்தை விழி வரை மூடியிருந்த புரவி வீரர்கள் சிலர் விரைந்து அவர்களை நோக்கி வந்தார்கள். அதைக் கண்ட அவந்தி வணிகர் தென்னகத்து வணிகனின் கரத்தைப் பற்றியபடி மரப் பொந்திற்குள் இழுத்து, பதுங்கிக் கொண்டார்.

அவனது செயலைக் கண்ட தென்னகத்து வணிகன் பதறியபடி, "ஏன் அய்யா, திடீரென்று பதுங்குகிறீர்கள்? அவ்வீரர்கள் யார்? அவர்கள் எதற்காகப் பெண்களைப் போன்று முகத்தை மூடியிருக்கிறார்கள்?" என வினவினான்.

"அவர்கள் அனைவரும் பெண்கள். வீராங்கனைகள்."

"பெண்களா?"

"ஆம்!" ஆச்சரியமாக இருக்கிறது!"

"ஆம்! அவர்கள் இளவரசியாரின் மெய்க் காவல் வீராங்கனைகள்!"

தென்னக நாடோடி எதுவும் பேசவில்லை. அந்த வீராங்கனைகள் சென்ற பாதையையே கவனிக்கலானான்.

"இளவரசியார் சண்டிகாலேசுவரரை வழிபடச் சென்றுகொண்டிருக்கிறார். அவர் செல்லும்போது ஆடவர்கள் எதிர்படக்கூடாது!"

“இளவரசி செல்லும்போது யாரும் எதிர்படக் கூடாது இது அநியாயமாக அல்லவா இருக்கிறது?”

“அவந்தியில் அனைத்தும் அவந்திகா வைத்தது தான் சட்டம்!”

“அவந்திகா”வா?” என ஆச்சரியத்துடன் வினவினான் தென்னகத்து நாடோடி. அப்போது அவந்தி வணிகன், “நீங்கள் இப்போது தான் முதல் முறையாக உஞ்சைக்கு வருகிறீர்களா?” என வினவினான்.

“ஆம்!” எனப் பதிலளித்தான் தென்னகத்து நாடோடி.

“இளவரசியின் பெயர் அதுதான். இந்த நாட்டின் பெயர் தான் இளவரசியின் பெயரும்!”

“அவர் வைத்ததுதான் சட்டமா?”

“ஆம்! மாளவ தேசத்தை சாதவாகனர்கள் கைப்பற்றிய பிறகு அவந்தியை

ஆள்வது அவந்திகா தான்!" எனக் கூறிக் கொண்டிருந்த போதே நதிக் கரையோரம் காணப்பட்ட சாலையில் இரண்டு புரவித் தேர்கள் விரைந்து பயணித்து அவர்களின் பார்வையிலிருந்து மறைந்தன.

அந்தப் புரவித் தேர்கள் சென்ற பாதையையே நோக்கிக் கொண்டிருந்தான் தென்னகத்து நாடோடி.

"இங்கிருந்து இரண்டு கல் தொலைவில் சண்டிகாலேசுவரரின் சுயம்பு சோதிலிங்கம் இருக்கிறது. முழு நிலவன்றும் இளவரசி சண்டிகாலேசுவரரை வணங்கிய பிறகே மற்ற வேலைகளைக் கவனிப்பார்."

"ஈசனிடத்தில் இளவரசிக்கு பக்தி அதிகம் தான்!"

"சரி, சரி... நீ உஞ்சைக்கு வருகிறாயா? அல்லது உனக்கு வேறு பணி ஏதேனும் இருக்கிறதா?"

https://telegram.me/aedahamlibra

"எனக்கு மாலை தான் உஞ்சையில் காரியம் இருக்கிறது. இப்போது இந்த அவந்தி நதியின் குளிர்ந்த நீரில் நீராடி விட்டு நதிக் கரையிலேயே உறங்கலாம் என்று இருக்கிறேன்!"

"சரி... சரி... நீ நாடோடி. உனக்கு எந்தப் பணியும் இல்லை. ஆனால், நான் அப்படியா? உஞ்சையில் என் மனைவி எனக்காகக் காத்திருப்பாள். முற்றாக ஆறு திங்கள் கடந்து அவளைச் சந்திக்கப் போகிறேன். நான் விரைந்து செல்கிறேன். முடிந்தால் இன்னொரு நாள் சந்திப்போம்!" எனக் கூறிய அவந்தி வணிகன் விரைந்து செல்லலானான்.

அவன் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்தான் தென்னகத்து நாடோடி. சிறிது தொலைவு சென்ற பிறகு, சட்டென்று திரும்பிய அவந்தி வணிகன், "உன் பெயரை இதுவரை நீ தெரிவிக்கவே இல்லையே!" எனப் பெரும் சத்தத்துடன் வினவினான்.

https://telegram.me/aedahamlibra

1. காகந்தி: புராணங்களில் புகாரைக் காகந்தி என்றுதான் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. காவிரிப்பூம்பட்டினம், பூம்புகார், கமாரா, கவீரப் பட்டினம், சபரிஸ் ஆகியவை புகாரின் மற்ற பெயர்கள்.

ககந்தன் காத்தலிற் காகந்தி யென்றே (மணிமேகலை 22 -37) ககந்தன் என்பது புராதான சோழ மன்னனது பெயர்.

2. மகதம் என்பது இப்போதைய பீகார் பகுதி. பாட்னா (பாடலிபுத்திரம்) என்பது இதன் தலைநகரம். ராஜகிருதம் இதன் முற்காலத் தலைநகரம் ஆகும் வச்சிர நாடு என்பது மகதத்திற்கு மேற்கே கொசாம்பியைத் தலைநகராகக் கொண்ட நாடு. வச்சிர நாட்டினை வத்சம் என்றும் குறிப்பிடுவர். சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கடலரசனை எல்லையாகக் கொண்ட வச்சிர நாட்டு வேந்தன் என்று குறிப்பிடுகிறார். கடலினை

எல்லையாகக் கொண்டதாக வச்சிர நாடு இருந்தால் மகதத்திற்கு தெற்கே கலிங்க நாட்டிற்கு மேற்கே இருக்க வேண்டும். வானவல்லியில் வச்சிர நாடு என்பது இளங்கோவின் கூற்றை ஏற்று மகதத் திற்கு கிழக்கே உள்ள பகுதியே எடுத் துக்கொண்டிருக்கிறேன்.

கோசலம் என்பது சாவத்தி/ சாகேதம் பட்டினத்தை தலைநகராகக் கொண்ட பகுதி. இது மகதத்திற்கு கிழக்கே உத்தர கோசலம் மற்றும் தக்சன கோசலம் என இரண்டு நாடாக அமைந் திருக்கிறது.

3. படித்தானம்: பைத்தான் என்றும் பிரதிஷ்டானம் என்றும் குறிப்பி டப்படும் சாதவாகன அரசின் தலைநக ரில் ஒன்று. சாதவாகனரின் முற்காலத் தலைநகர் படித்தானம். பிற்காலத்தில் புனே அருகிலிருக்கும் ஜுன்னார் மற்றும் வடுக நாடு எனப்படும் ஆந்திர மாநிலத் தில் காணப்படும் அமராவதி ஆகியவை

யும் வெவ்வேறு காலங்களில் சாதவாகன அரசின் தலைநகராக விளங்கியிருக்கிறது.

https://telegram.me/aedahamlibra

https://telegram.me/aedahamlibra

# 2. பகடைக் காய்

மௌரியப் பேரரசின் மன்னன் பிருகத்ரதனை அவனது படைத் தளபதி புஷ்யமித்திரன் கொன்று தலைநகர் பாடலிபுத்திரம் மற்றும் மௌரியப் பேரரசைக் கைப்பற்றும் வரை பௌத்த மதமே வட நாட்டில் அதிகாரம் செலுத்திக் கொண்டிருந்தது. மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு வட நாட்டில் மௌரியர்களால் நிறுத்தப்பட்டிருந்த வேத வழிபாடு, உயிர் பலி, யாகம் போன்றவை மீண்டும் துவங்கப்பட்டது மட்டுமல்லாமல் பௌத்த மற்றும் சமண மத வழிபாட்டு முறைகள் பெரும் அடக்கு முறைக்கு உட்படுத்தப்பட்டன. மௌரியர் காலத்தில் சீரும் சிறப்புமாகக் காணப்பட்ட பௌத்த விகார்கள்

அனைத்தும் புஷ்யமித்திர சுங்கனின் ஆட்சி துவங்கியபிறகு கவனிக்கப்படா மல் விடப்பட்டிருந்தன. பல விகார்கள் வைதீக கோயில்களாக மாற்றப் பட்டு உயிர்பலிகள் மற்றும் வேத வழிபாடு துவங்கப்பட்டிருந்தன.

ஆட்சி மாற்றத்தின் காரணமாகக் கைவிடப்பட்டிருந்த விகார் ஒன்றில் பௌத்தர் தனது தலையில் பாதியையும், வலது கையையும் தொலைத்து விட்டு சிரித்தபடியே அமைதியாக அமர்ந்திருந்தார். ஆனால், அவருக்கு முன் அவந்தி வணிகன் மனதில் அமைதி ஏதும் இல்லாமல் ஆத்திரத்துடன் அமர்ந்தபடியே அவனது முகத்தில் காணப்பட்ட பெரிய தழும்பைத் தடவி விட்டுக்கொண்டு காணப்பட்டான்.

அவன் வந்து சேர்ந்த ஒரு ஓரைப் பொழுதிற்கு மேல் இன்னும் இரண்டு பேர் அதே பௌத்த விகாரை அடைந்து அவந்தி வணிகனுக்கு முன் பணிவுடன் நிற்கலானார்கள்.

https://telegram.me/aedahamlibra

அவர்களிடம், “இவ்வளவு நேரம் எங்கே போய் தொலைந்தீர்கள்? எவ்வ ளவு நேரம் உங்களுக்காக நான் காத் திருப்பது? பலதேவன் எங்கே? அவன் ஏன் இன்னும் வரவில்லை?” என வினவி னான்.

“இளவரசே...” எனக் கூறியபடி தயங் கினார்கள் வீரர்கள் இருவரும்.

“பலதேவன் எங்கே என்று வினவி னேன் நான்.”

இருவரில் ஒருவன், “அவரைக் காணவில்லை, அவரையும் அழைத்து வரலாம் எனக் காத்திருந்ததால் தான் தாமதமாகிவிட்டது இளவரசே!”

“இனியொரு முறை என்னை நீ இளவரசன் என்று அழைத்தால் உன் நாவை அறுத்து எறிந்துவிடுவேன். எச்ச ரிக்கை” எனக் கடும் சினத்துடன் எச் சரித்துக் கொண்டிருந்த போதே அந்த விகாருக்குள் நுழைந்த பலதேவன், “வஜ்

https://telegram.me/aedahamlibra

ரபாகு, எதற்காக வீணாக நம் வீரர்கள் மீது கோபம் கொள்கிறாய்? அவர்கள் நமது அந்தரங்க ஊழியர்கள். பைத்தானின் அரியணையை உனக்கு அளிக்காமல் உனது தம்பி கைப்பற்றிக் கொண்டு விட்டான் என்ற காரணத்திற்காக நீ இளவரசன் இல்லை என்று ஆகிவிடுமா? அல்லது உனக்கும் சாதவாகன அரசின் அரியணையில் உரிமை இல்லை என்றாகிவிடுமா?" எனக் கேட்டபடியே வணிகனைப் போன்று மாறுவேடத்தில் காணப் பட்ட வஜ்ரபாகுவின் அருகில் வந்து அமர்ந்தான்.

"பலதேவா, ஏன் தாமதம்?"

"அவந்தி தேசத் தலைநகர் உஞ்சையின் காவல் தலைவன் என்றுதான் எனக்குப் பெயர். ஆனால், உன் தங்கை அவந்திகாவின் காவலை மீறி என்னால் நம் ஒற்றர்களைக் கூட சந்திக்க இயலவில்லை" எனக் கூறிக் கொண்டிருந்த போதே குறுக்கிட்ட வஜ்ரபாகு, "இன்

னொரு முறை அவளை எனது தங்கை என்று கூறாதே பலதேவா! என் கனவு, ஆசை, திட்டம் என அனைத்தையும் தவி டுபொடியாக்கியவள் அவள். சாதவாகன வம்சத்தில் பிறந்த தேவதை அவள் என நினைத்தேன் நான். ஆனால், அவள் எனக்கு ராட்சசியாகிவிட்டாள்" எனத் தனது சகோதரியையே வசை பாடலா னான்.

"இப்போது கோபப்பட்டு எதுவும் ஆகப்போவதில்லை வஜ்ரபாகு. மிகவும் நெருக்கடியான காலகட்டம் நமக்கு. இப் போதுதான் நாம் மிகவும் எச்சரிக்கையு டன் செயலாற்ற வேண்டும். ஆத்திரத் தைக் கைவிட்டு நிதானத்துடன் செய லாற்றுவோம்."

வஜ்ரபாகு எதையும் கூறாமல் அமைதியாக தனது முகத்தில் காணப் பட்ட தழும்பையே தடவியபடி விரக்தியாக அமர்ந்திருந்தான். பிறகு தனக்கு முன் நின்ற இரண்டு வீரர்களிடமும், "நதிக்

கரையோரம் தென்னாட்டைச் சேர்ந்த நாடோடி ஒருவன் உறங்கிக் கொண் டிருப்பான். அவனை கண்காணியுங்கள். சந்தேகம் தோன்றினால் கைது செய்து சிறைப்படுத்துங்கள்" எனக் கட்டளை யிட்டான்.

உடனே இரண்டு வீரர்களும் அங்கி ருந்து புறப்பட்டார்கள்.

"நண்பா, எதற்காக இப்போது தென்னாட்டு நாடோடியை கண்காணிக் கச் சொல்லி கட்டளையிட்டிருக்கிறாய்?"

"பலதேவா, அவனை எங்கோ பார்த்ததைப் போன்ற ஞாபகம்?"

"எங்கு?"

"அதுதான் தெரியவில்லை. ஆனால், அவனை வெகு அருகில் எங்கோ சந்தித்திருக்கிறேன். அவனது விழிகளைக் கண்ட அடுத்த கணமே எனக்குள் சந்தேகம் வந்துவிட்டது."

"சந்தேகம் தோன்றினால் பேசிப் பார்க்க வேண்டியதுதானே?"

"பேசிப் பார்த்தேன். காகந்தியைச் சேர்ந்தவன். ஆதரவற்ற நாடோடி. வெள் ளந்தியாய் இருக்கிறான்."

"அப்புறம் எதற்காக நீ கவலைப் படுகிறாய்?"

"இருந்தாலும் அவனைக் கண்டது முதல் எனது உள்மனம் என்னை எச்ச ரிக்கை செய்து கொண்டிருக்கிறது! மன திற்குள் அச்சம் குடிகொண்டுவிட்டது."

"சந்தேகம் அதிகமாக இருந்தால் அப்போதே அவனை கைது செய்திருக்க வேண்டியதுதானே?"

"கைது செய்து சிறையில் அடைப் பதை விடவும் கண்காணித்தால் அவ னைப் பற்றி மேலும் அறிந்துகொள்ளலாம் அல்லவா?"

"ம்ம்ம்.. அதுவும் சரிதான்." எனக் கூறியவன் வெறுமையாகக் காணப்பட்ட அந்த பௌத்த விகாரை நோக்கிப் பார் வையைச் செலுத்தினான் பலதேவன்

அப்போது வஜ்ரபாகு, "நண்பா..." என அழைத்தான்.

"சொல் வஜ்ரபாகு!"

"சோழப் படைத் தலைவனை அன்று நாம் கிழக்குக் கடலிலேயே கொன்றிருக்க வேண்டும். உயிரோடு யவ னத்திற்கு அனுப்பி வைத்தது பெரும் பிச காகிவிட்டது.."

"அப்போதே நான் மன்றாடினேன். நீயும் சுங்க இளவரசன் சுங்கமித்திரனும் தான் கேட்கவில்லை."

"அவனை அன்று உயிரோடு விட் டது பெரும் தவறுதானோ என்று இப் போது வருந்துகிறேன்."

https://telegram.me/aedahamlibra

“எதற்காக நீ இப்போது திடீரென்று அதைப் பற்றிக் கவலைப் படுகிறாய்?”

“சோழ அரசன் வடக்கு நோக்கி படை எடுத்ததற்கு இதையும் ஒரு காரண மாக வணிகர்கள் கூறுகிறார்கள்.

“அவனை அன்று உயிரோடு விட் டதன் விளைவு தான் இன்று கரிகாலச் சோழன் வடக்கு நோக்கிப் படை எடுத்தி ருக்கிறான். கரிகாலனின் படைத் தலை வர்களில் அவனும் முதன்மையானவ னாம். ஒற்றர்களிடமிருந்து தகவல் வந்து கொண்டிருக்கிறது.”

“நானும் அதைக் கேள்விப்பட்டேன் வஜ்ரபாகு. அவனை மட்டும் நாம் முன் னேற விட்டால் அவந்தி மற்றும் மகதத் தில் காணப்படும் ஒரு கோட்டையைக் கூட சும்மா விடமாட்டான். அனைத்தை யும் தரைமட்டமாகிவிடுவான். காகந்தி முற்றுகையையும், வெண்ணிப் போரை யும் அவர்கள் முடித்த விதத்தை நீ கேள் விப் படவில்லையா? திவ்யனை விடவும்

இன்னொரு படைத் தலைவன் செங்குவீரன் பெரும் அபாயகரமானவனாம். சோழப் படையையே பின்னிருந்து இயக்குபவன் அவன் தான் என்று பரவலாகக் கூறுகிறார்கள்."

"ம்ம்ம்" எனச் சிந்தித்தபடியே தெரிவித்தான் வஜ்ரபாகு.

"முகத்தில் காணப்படும் சிறு தழும்பிற்கே நீ இத்தனைக் கோபம் அடைகிறாயே, நாம் அவனை அடிமையாக விற்றிருக்கிறோம். அதுவும் யவனத்திற்கு! அவனது ஆத்திரம் எப்படி இருக்கும்?" எனக் கூறிக் கொண்டிருந்த போதே இடைமறித்த வஜ்ரபாகு, "எதை பல தேவா சிறிய தழும்பு என்கிறாய்? என் முகத்தில் இருப்பதையா? சோழப் படைத் தலைவனுடன் மரக்கலத்தில் ஏற்பட்ட கைகலப்பில் என் முகத்தை அவன் உடைத்துவிட்டான். அப்போது ஏற்பட்ட இந்தத் தழும்பு என் முக லட்சனத்தையே கெடுத்துவிட்டது. தகளியில் முகத்தைப்

பார்க்கும்போது எனக்கு எவ்வளவு ஆத்திரம் வருகிறதென்று உனக்குத் தெரியுமா? இந்தக் கன்னத்தை என் மனைவி கூட இப்போது தீண்டுவதில்லை. அந்த அவமானத்தை நீ உணர்ந்தால்தான் அதன் ரணம் உனக்குத் தெரியும்!"

"இப்போது கோபப்பட்டு என்ன பயன்? அன்று கைகால்கள் பிணைக்கப்பட்ட நிலையில் தூணில் கட்டியிருந்த போது நீதான் அவனை நெருங்கிச் சென்று முகத்தில் வாங்கிக் கட்டிக்கொண்டாய்! சிறைபிடித்த உடனே வாளால் அவனைக் கொன்று விடு எனத் தெரிவித்தேன். நீதான், அவனது வாழ்நாள் முழுவதும் அவன் யவனத்தில் அடிமையாகக் கழிக்கட்டும் எனத் தெரிவித்தபடி, அவனருகில் நெருங்கினாய். முகத்தை உடைத்துவிட்டான்."

"..........."

"அக்னிபுத்திரனை புகார் அரியணையில் ஏற்றத்தான் நாம் வைதீகர் பாக

வதருக்கு உதவினோம். அவனை தென்னக ஆட்சிக் கட்டிலில் அமரச் செய்து விட்டால் மகதத்தில் சுங்கன், தட்சினா பதத்தில் நாம், தெற்கே அக்னிபுத்திரன் என்று பாரத தேசம் முழுவதும் நமது வைதீக ஆட்சியை நிறுவிவிடலாம் எனத் திட்டம் தீட்டினோம். ஆனால், அக்னி புத்திரன் அந்த முயற்சியின் தொடக்கத் திலேயே அகாலமாக மரணித்துப் போய் விட்டான். இப்போது பாகவதரும் தென் னகத்திலிருந்து விரட்டப்பட்டு சோழ மன் னன் வடக்கை நோக்கி நெருங்கிக் கொண்டிருக்கிறான்."

"அனைத்து முயற்சியும் வீண். நீ முகத்தில் வாங்கிய குத்தும், சோழனிடத் தில் நாம் பெற்ற பகையும் தான் மிச்சம் நமக்கு!" வருந்தினான் பலதேவன்.

"சரி அதை விடு! ஏற்பாடு செய்த காரியம் என்ன ஆயிற்று?"

"உன் தங்கை இருக்கும் வரை யில் நம்மால் சதகர்ணியை நெருங்க இய

லாது. இந்த அவந்தியைத் தாண்டினாலே பெரிய காரியம்!"

"என்ன பலதேவா கூறுகிறாய்?"

"பைத்தானில் இருக்கும் நமது உப படைத் தலைவனை சந்தித்து தகவலைக் கூற இருவரை அவந்தியிலிருந்து அனுப்பி வைத்தேன். வழியிலேயே அவர்களை இடைமறித்து விட்டாள் அவந்திகா. அது மட்டுமா செய்தாள்?" வார்த்தையில் கோபம் காட்டினான் பலதேவன்.

"என்ன செய்தாள்?"

"நம் ஒற்றர்களிடம் தகவலைக் கேட்டிருக்கிறாள். அவர்கள் வாயைத் திறக்கவில்லை."

"பிறகு?"

"இருவரின் தலையையும் துண்டித்துவிட்டாள்!"

எதையும் பேச இயலாமல் அமைதியாக அமர்ந்திருந்தான் வஜ்ரபாகு.

"உன் சகோதரன் உன்னை படைத் தலைவனாக நியமித்துவிட்டு அவந்திகா வையும் எதற்காக அவந்தியில் அமர்த் தியிருக்கிறான் என்று உனக்கு விளங்க வில்லையா?"

"எதற்கு?"

"நீ அவந்திகாவை மீறி எந்தக் காரி யத்தையும் செய்துவிடக் கூடாது என்ப தற்காகத் தான்! என்னால் அவளது ஒற் றர்களைத் தாண்டி ஒரு அடிகூட வைக்க முடியவில்லை. என்ன திட்டம் தீட்டினா லும் அதை முளையிலேயே கிள்ளி விடு கிறாள். அவளைப் போன்ற ராஜ தந்தி ரியை நான் இதுவரைக் கண்டதில்லை."

"என் சிற்றப்பன் குனாலா புஷ்ய மித்திர சுங்கனை விரட்டிக் கைப்பற்றிய அவந்தியை அவள் இல்லாவிட்டால் என் தம்பி சதகர்ணி எப்போதே இழந்திருப் பான். அவந்தியை சுங்கனிடம் இழக் காமல் தக்க வைத்திருப்பதிலிருந்தே நீ அவளுடைய திறமையைப் பற்றி அறிந்து

கொள்ளலாமே? நீ எப்படி பலதேவா அவளைப் பற்றிக் குறைத்து மதிப்பிடலாம்!"

"குறைத்து மதிப்பட்டது தவறுதான் வஜ்ரபாகு!"

"............"

"அவள் சதகர்ணியின் பக்கம் இருக்கும் வரை நம்மால் எதையும் சாதிக்க முடியாது! பெயருக்குத் தான் அவள் உனக்குத் தங்கை. ஆனால், அவளது பற்று எல்லாம் சதர்கர்ணியின் மீதல்லவா இருக்கிறது?"

"நானும் அதை எண்ணிப் பல நாள் வருத்தப்பட்டிருக்கிறேன். நான் அமர வேண்டிய சாதவாகன பைத்தான் அரியாசனத்தில் இன்று எனது சிற்றப்பன் மகன் அமர்ந்திருக்கிறான் என்றால் அதற்குக் காரணம் அவள் தானே! அவளை..." பெரும் கோபம் கொண்டான் வஜ்ரபாகு.

"உன் தந்தை இறந்த பிறகு உனக்கு வயது போதவில்லை என்று உனது சித்

https://telegram.me/aedahamlibra

தப்பனுக்கு அரசுரிமையை அளித்தார் கள். உன் சித்தப்பா குனாலாவைக் கொன்றோம் நாம். உனக்கு அரியணை வந்து சேரும் நேரத்தில் "என் அண்ண னுக்கு அரியாசனம் வேண்டாம். அவர் பெரும் வீரர். அவர் படைச் சேனாதி பதியாக இருந்து படைகளை வழிநடத் துவார். சதகர்ணி"தான் அரியாசனத்தில் அமர வேண்டிய தகுதியை உடையவன். என் அண்ணனும் அதைத்தான் விரும் புகிறார்" என்று கூறியபோது அன்று நீ அமைதியாகத் தானே நின்றாய்? அன்று நீ ஒருவார்த்தை பேசியிருந்தாலும் உனக் குக் கிடைக்க வேண்டிய அரியணை உனது கையை விட்டுப் போயிருக்காது. இன்று வருத்தப்பட்டு என்ன பயன்?"

"அன்று அவளது பேச்சு என் வாயை அடைத்துவிட்டது பலதேவா. என்ன செய்வது. விதி அப்படி!"

"விதியைப் பற்றி இன்னொரு முறை கூறாதே! காகந்தியில் நமது நண்பன்

https://telegram.me/aedahamlibra

அக்னிபுத்திரனை அமரவைக்க பாகவத ருடன் சேர்ந்து செய்த பணிகள் அனைத் தும் வீணாகிவிட்டது. அக்னி புத்திரன் அகாலமாக இறந்து போனான். காகந்தி உபபடைத் தலைவனை அன்று சாதார ணமாக நினைத்தோம். திவ்யனை விட வும் பாகவதரின் திட்டங்கள் அனைத் தையும் தகர்த்து சீரழித்து விட்டான். சத கர்ணிக்கு எதிரான நமது திட்டங்களை இங்கே உனது ஆருயிர் தங்கை தடுத் துக் கொண்டிருக்கிறாள். அனைத்திற் கும் காரணம் விதி என்று கூறுவாயா?”

“விதியைப் பற்றி நாம் பிறகு விவா திப்போம்.”

“பாகவதரிடமிருந்து செய்தி வந்தி ருக்கிறது.”

“என்ன செய்தி?”

“செய்தி எதுவும் அனுப்பவில்லை. ஏதோ, முக்கிய காரியம் பற்றி விவாதிக்க வேண்டுமாம்!”

https://telegram.me/aedahamlibra

"எதற்காக?"

"தெரியவில்லை."

அமைதியாக சிந்தித்தபடி அமர்ந்திருந்தான் வஜ்ரபாகு.

"சுங்க அரசருக்கும் அழைப்பு அனுப்பப்பட்டிருக்கிறது."

"சுங்க அரசருக்குமா?"

"ஆம்!

"எதற்காக இருக்கும்?"

"தெரியவில்லை. நீ எச்சரிக்கையுடன் செல்."

"ஏன் திடீரென்று எச்சரிக்கை செய்கிறாய்?"

"நீ சுங்க இளவரசர்களுடன் நட்பு பாராட்டுவதைப் பற்றி சதகர்ணிக்குத் தெரிய வாய்ப்பில்லை. ஆனால், உனது சகோதரி அவந்திகாவிற்கு தெரியும் என்று நினைக்கிறேன் நான்."

https://telegram.me/aedahamlibra

"என்ன பலதேவா கூறுகிறாய்?"

"உறுதியாகத் தெரியாது. ஆனால், சந்தேகம் கொள்கிறேன்."

"அவளிடம் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நான் மாறுவேடத்தில் உலவுகிறேன் என்ற தகவல் கூட அவளுக்குத் தெரியக் கூடாது. இன்று கூட அவந்தி நதிக் கரையில் நான் வரும்போது அவள் எதிர்பட்டாள். உடனே மரப் பொந்திற்குள் சென்று பதுங்கிக்கொண்டேன். சதகர்ணியை வீழ்த்தி அரியணை கைக்குக் கிடைக்கும்வரை நாம் சற்று எச்சரிக்கையுடன் தான் இருக்க வேண்டும்!"

"விவேகத்துடன் காயை நகர்த்தி தோற்றது போதும் பலதேவா, தன் சகோதரர்கள் தொண்ணூற்றி ஒன்பது பேரைக் கொன்று விட்டு ஆட்சியைக் கைப்பற்றிய மௌரிய மன்னன் அசோகப் பியதசியைப் போன்றும், தன் அரசனைக் கொன்று மௌரிய அரசைக் கைப்பற்றிய படைத் தளபதி புஷ்யமித்திரனைப் போன்றும்

https://telegram.me/aedahamlibra

நாம் மாறினால்தான் நமக்கு வேண்டியது கிடைக்கும்!" என வஜ்ரபாகு உணர்ச்சியு டன் கூறியபோதே "அவந்திகா...." என்று மீண்டும் கலவரமடைந்தான் பலதேவன்.

"அவந்திகா இருக்கும் வரை நமது முயற்சிகள் அனைத்தும் நிறைவேறாது என்று வருந்துகிறாயா பலதேவா?"

"ஆம்!"

"பலதேவா, என் தங்கையைப் பற் றிய கவலை உனக்கு வேண்டாம். அவள் விரைவில் சேர வேண்டிய இடத்திற்குச் சென்றடையப் போகிறாள்."

"நண்பா... அவள் நாம் தூக்கி வளர்த்த பெண்" பதற்றமடைந்தான் பல தேவன்.

வஜ்ரபாகு சிரித்தபடியே, "கவலை வேண்டாம். அவளுக்கு விரைவில் மண முடித்து வைக்கப்போகிறேன். அவளை வைத்துதான் நான் எனது சிம்மாசனத் தைக் கைப்பற்றப் போகிறேன். கலிங்

கத்தைப் பணியவைக்கப் போகிறேன். அதே நேரம் தெற்கிலிருந்த புறப்பட்டிருக்கும் அந்தக் கரிகாலனை விரட்டவும் போகிறேன். அனைத்திற்கும் அவள்தான் எனக்கு பகடைக் காய்" எனக் கூறிய வஜ்ரபாகு பலமாகச் சிரித்தான். அவனது விழிகளில் சாம்ராச்சியக் கனவு எழுந்து தாண்டவமாடியது.

பலதேவன் அவந்திகாவின் எதிர் காலத்தை எண்ணி வருத்தத்துடன் தனது நண்பன் வஜ்ரபாகுவின் அடுத்த கட்டளைக்காகக் காத்திருக்கலானான்.

அடிக்குறிப்பு:

1. குனாலா: சாதவாகன அரசின் மூன்றாவது அரசர். இரண்டே வருடங்கள் தான் ஆட்சியில் இருந்தவர். மாளவத்தை சுங்கர்களிடமிருந்து கைப்பற்றியவர். இரண்டே வருடத்தில் அகால மரணமடைந்தவர். இவரது மகனது பெயர் சதகர்ணி. ஆதாரம்: புராணக் கதைகள் -

https://telegram.me/aedahamlibrary

Harshacharita of Bana, Yugapurana of the Gargisamhita

2. மௌரிய அரசன் பிந்துசார னது மகன் அசோகன் தன் சகோதரி யைத் தவிர மற்ற 99 சகோதரர்களைக் கொன்றுவிட்டே அரியணையைக் கைப் பற்றினான். ஆதாரம்: மகாவம்சம்.

பிந்துசாரனுக்கு ஒரு பெண் உட்பட மொத்தம் நூற்றி ஒரு குழந்தைகள்.

மகாவம்சத்தில் இன்னொரு தகவ லும் அசோகனைப் பற்றிக் காணப்படுகி றது. ஒரு முறை அசோகன் தனது அந் தப்புரத்திற்குச் சென்றிருக்கிறான். வேற்று நாடுகளிலிருந்து கொணர்ந்து வந்த பெண்களால் நிரம்பி வழிந்த அந்தப் புரமானது அழகற்று விகாரமாக வந்த அசோகனைக் கண்டு நகைத்துவிட்டார் களாம்! உடனே கோபம் கொண்ட அசோகன் அத்தனைப் பெண்களையும் கழுவில் ஏற்றிக் கொண்டிருக்கிறான்.

“அரச பதவி ரத்த பாசம் அறியாது” எனும் பழ மொழியைக் குறிப்பிட அனை வரும் மொகலாய மன்னன் ஔரங்கசிப்” பையே உதாரணத்திற்குக் கூறுபவர்க ளின் பார்வைக்கு அசோகன் தெரியாமல் போனது ஏனோ?

https://telegram.me/aedahamlibra

# 3. கார்த்திகா

மலைக் குன்றுகளின் அடிவாரத்தில் சலனமின்றி ஓடிக்கொண்டிருந்த அவந்தி நதியின் கரையில் மலர்கள் சோலைகளாக பூத்துக் குலுங்கிய பகுதியில் சண்டிகாலேசுவரரின் திருத்தலம் காணப்பட்டது. ஈசுவரரின் அருகிலேயே ருத்ரமான சண்டிதேவியின் சிலையும் காணப்பட்டதால் அத்திருத்தலத்தில் நிலைபெற்றிருந்த ஈசுவரர் சண்டிகாலேசுவரர் என அழைக்கப்பட்டார். முக்காலத்தையும் உணர்ந்தவர். முக்காலத்தையும் செலுத்துபவரும் அவர்தான்.

உஞ்சையிலிருந்து புரவித் தேரில் வந்த அவந்திகா சண்டிகாலேசுவரர் கோயிலுக்கு சற்றுத் தொலைவில் பூக்கள் நிறைந்த பகுதியில் தனது தோழிகளுடன் இறங்கி நீராடுவதற்கு அவந்தி நதியை நோக்கி நடக்கலானாள்.

https://telegram.me/...

அப்போது அவளை எதிர்கொண்டாள் கார்த்திகா. அவந்திகாவின் வலது கரம் போன்றவள். அவந்திகாவின் எண்ணத்திற்கு முழு வடிவம் கொடுப்பவள். அவந்திகாவின் நம்பிக்கைக்குரிய தோழி. சகோதரியைப் போன்றவள். அவந்திகாவை மட்டுமல்லாமல் அவந்திகாவின் எதிரிகளையும் நிழலைப் போன்று பின் தொடர்பவள். உஞ்சைப் பட்டினத்தின் காவல் தலைவனாக பலதேவன் இருந்தாலும் உஞ்சைக்குக் காவல் தலைவி இவள் தான். இவளது கட்டளைக்குப் பிறகுதான் பலதேவனின் கட்டளை எடுபடும். அனைத்து இடங்களிலும் அவந்திகாவின் கட்டளையின் பேரில் தனது ஒற்றர்களை ஊடுருவ வைத்திருந்தாள். பெரும் கெட்டிக்காரி. அவந்திகாவின் கவர்ச்சி இல்லாவிட்டாலும் ஒருவகையில் பேரழகி.

காலைப் பொழுதிலேயே அவளை எதிர்பார்க்காத அவந்திகா அவளது விழிகளில் தனது பார்வையை நிலைக்க

https://telegram.me/aedahamlibrary

வைத்தவள், "வா... கார்த்திகா. என்ன
செய்தி, காலையிலேயே என்னைத் தேடி
வந்திருக்கிறாய்? ஏதேனும் முக்கிய காரி
யமா?" என அதிகாரத்துடன் வினவியப
டியே ஆற்றை நோக்கி நடக்கத் துவங்கி
னாள். நீராடுவதற்காக வந்த அவந்திகா
வின் தோழிகள் கார்த்திகாவைக் கண்
டதும் அவந்திகாவைப் பின்தொடராமல்
புரவித் தேரிற்கு அருகிலேயே நிற்கலா
னார்கள்.

அவந்திகா கார்த்திகாவிடம்
பெரும்பாலும் அரசியல் நிலை பற்றியே
விவாதிப்பதால் தன்னுடைய தோழிகள்
அருகில் இருப்பதை அவள் விரும்பமாட்
டாள். அவளது எண்ணத்தை உணர்ந்தே
அவளுடைய தோழிகள் அவந்திகாவின்
கட்டளைக்காகக் காத்திருக்கலானார்
கள்.

அமைதியாகப் பின்தொடர்ந்த
கார்த்திகாவிடம் "என்ன செய்தி கார்த்

திகா?" என மீண்டும் வினவினாள் அவந்திகா.

"உங்களது தமையன் மீண்டும் மாறுவேடத்தில் உலாவத் துவங்கிவிட்டார்!"

"அதை நான் அறிவேன். காரணம் ஏதேனும் கிடைத்ததா?"

"இல்லை. முயற்சி செய்துகொண்டு இருக்கிறேன்."

"கடைசியாக அவரை எங்கே, எப்போது சந்தித்தாய்?"

"இன்று காலையில் நீங்கள் நீராடுவதற்கு வந்தபோது நதிக் கரையில் அவரைக் கவனித்தேன்."

"நான் வந்தபோது எனது கண்களில் அகப்படவில்லையே?"

"உங்களது புரவித் தேரைக் கண்டதும் அவர் மரப் பொந்திற்குள் பதுங்கிக் கொண்டார்."

https://telegram.me/aedahamlibrary

“மாறுவேடத்தில் என்ன செய்து கொண்டு இருந்தார்?”

“தென்னாட்டான் ஒருவனுடன் பேசிக் கொண்டு வந்தார்.”

“யார் அந்த தென்னாட்டான்?”

“தெரியவில்லை. அவனிடம் பேச்சுக் கொடுத்து அவன் யார் என்று அறியலாம் என அவனை நோக்கிச் சென்றேன். என்ன நினைத்தானோ தெரியவில்லை. நதிக்குள் குதித்துவிட்டான்.”

“நதிக்குள் குதித்து விட்டானா?”

“ஆம்! அவன் முகம் முழுக்க தாடி வளர்த்திருந்தான். தொலைவிலிருந்து பார்ப்பதற்கு நாடோடியைப் போன்று காணப்பட்டான். ஆனால், அவன் கம்பீரமாக இருந்தான்.”

“ஆதலால்?”

“அவன் மாறுவேடத்தில் இருக்கிறானோ என அறிய அவனை நெருங்குவதற்குள்...”

“என் தமையனின் ஆளாக அவன் இருப்பான் என்று சந்தேகம் கொள்கிறாயா?”

“ஆம் தேவி!”

“மாறுவேடத்தில் சென்ற எனது தமையனை நீ பின்தொடர்ந்தாயா?”

“தொடர்ந்தேன்!”

“யாரைச் சந்தித்தார்?”

“உஞ்சைக் காவல் தலைவர் பலதேவனை!”

“தினமும் கோட்டையில் தான் இருவரும் சந்தித்துக் கொள்கிறார்களே, இன்று தனியாக அதுவும் பட்டினத்திற்கு வெளியே எதற்காக அவர்கள் இருவரும் இரகசியமாக சந்திக்க வேண்டும்? என்ன அவசியம்?”

https://telegram.me/aedahamlibra

"நேற்று பலதேவனை மகதத்தைச் சேர்ந்தவன் எவனோ சந்தித்துச் சென்றிருக்கிறான்?"

"மகதத்தைச் சேர்ந்தவனா?"

"ஆம்!"

"உறுதியாகத் தெரியுமா?"

"நிச்சயமாக தேவி!"

"மகதத்தைச் சேர்ந்தவனை என்ன செய்தாய்?"

"அவனை எதுவும் செய்யவில்லை. விட்டுவிட்டேன். இப்போது அவன் மீது கைவைத்தால் அவர்கள் எச்சரிக்கை அடைந்து விடுவார்கள். அவனைப் பின் தொடர கட்டளை விதித்திருக்கிறேன். ஏற்கனவே பைத்தானுக்கு அனுப்பிய இருவரை நாம் வழியிலேயே இடைமறித்து தீர்த்துக் கட்டியதை நினைத்தே அவர்கள் நம்மீது கடும் கோபத்தில் இருக்கிறார்கள். இந்த நிலையில் இன்

னொரு ஒற்றனையும் கொல்வது நிலை மையை பாதகமாக்கும் என எண்ணி விட்டுவிட்டேன்!”

சிறிது நேரம் ஆற்றையும் அவளுக்கு முன் நின்ற கார்த்திகாவையும் மாறி மாறிப் பார்த்தபடி சிந்தித்துக் கொண்டு நின்றாள் அவந்திகா.

அப்போது கார்த்திகா, “தேவி, உங்களிடம் நான் ஒன்றைக் கேட்க வேண்டும். வினவலாமா?” எனத் தயக்கத்துடன் வினவினாள்.

“என்ன?” அவளது விழிகளில் தனது அதிகாரப் பார்வையை நிலைக்க வைத்தபடி வினவினாள் அவந்திகா.

அவளது பார்வையிலேயே தனது துணிச்சலை இழந்துவிட்ட கார்த்திகா தயக்கத்துடன், “சாதவாகன அரசர் குனாலா அகால மரணமடைந்த பிறகு அமைச்சர் பெருமக்கள் அனைவரும் மூத்தவரான உங்களது அண்ணன் வஜ்

ரபாகுவிற்குத் தானே சிம்மாசனத்தை வழங்க முடிவு செய்தார்கள். நீங்கள் எதற்காகத் தந்திரமாகத் தடுத்து உங்களது தம்பி சதகர்ணியிடம் ஆட்சியை ஒப்படைத்தீர்கள்?" என வினவினாள்.

"இதைக் கேட்கத்தான் தயங்கினாயா?"

"ஆமாம்!"

"கார்த்திகா நான் எடுத்த முடிவு உனக்குப் புரிய வேண்டுமானால் நீ சாதவாகன சரித்திரத்தை அறிய வேண்டும்" எனக் கூறிய அவந்திகா பெருமூச்சு விட்டாள்

கார்த்திகா எந்தப் பதிலையும் கூறாமல் அமைதியாக நிற்கலானாள்.

"மௌரியருக்குக் கட்டுப்பட்டுக் கிடந்த சாதவாகன அரசை மௌரியப் பேரரசன் அசோகப் பியதசி இறந்தபிறகு அரசர் சிமுகா கனவா மன்னன் சுசர்மனை விரட்டிவிட்டு பைத்தானில் நமது

https://telegram.me/aedahamlibra

சாதவாகன அரசை நிறுவினார். அதே நேரம் கலிங்கத்தில் மகாமேகவாகனர்களும் தங்களை சுதந்திரமாக அறிவித்துக் கொண்டார்கள். மௌரியப் பேரரசன் அசோகப் பியதசி இறந்த பிறகு அவனது பேரனான மௌரிய அரசன் பிருகத்ரதன் தனது முதன்மைப் படைத் தளபதியான புஷ்யமித்திரனால் கொல்லப்பட்டான். மௌரியப் பேரரசு மறைந்து சுங்க மரபு மகதத்தில் தோன்றியது. மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு ஒரே நேரத்தில் வலிமையுடன் தோன்றிய இந்த மூன்று ராச்சியங்களும் ஒன்றையொன்று விழுங்க முயற்சித்துக் கொண்டிருக்கின்றன. அதிலும் சதகர்ணிக்கு முன் ஆட்சிக்கு வந்தவர்கள் மகாமேகவாகன அரசின் மூன்றாவது மன்னனான காரவேலனைத் தாக்குப் பிடிக்கவே பெரும் முயற்சியை மேற்கொள்ள வேண்டியதாகிவிட்டது. சதகர்ணியின் தந்தை அதாவது எனது சித்தப்பா குனாலா இரண்டு வருடங்கள் தான் ஆட்சியில் இருந்தார்.

இரண்டு வருடங்களே ஆட்சியில் இருந்தாலும் அவர் திறமையுடன் போரிட்டு மாளவத்தை சுங்கர்களிடமிருந்து கைப்பற்றினார். திடீரென்று அகால மரணமடைந்து விட்டார். அதன் காரணம் உனக்குத் தெரியுமா?"

"தெரியாது தேவி. ஏதோ வியாதியின் பெயரை மருத்துவர்கள் தெரிவித்தார்கள்."

"அவரது இறப்பிற்குக் காரணம் நோய் அல்ல. அவர் கொல்லப்பட்டார். அதுவும் நஞ்சு வைத்து!"

"தேவி!" பதறினாள் கார்த்திகா.

"பதறவேண்டாம் கார்த்திகா. என் தமையன் வஜ்ரபாகு அரசுக் கட்டிலுக்கு வர வேண்டும் என்ற காரணத்தினால் அரசர் குனாலாவை என் தந்தை அல்லது என் தமையன் வஜ்ரபாகு கொன்றிருப்பார்களோ என்று சந்தேகம் கொள்கிறேன் நான். அவன் செய்தது ராஜ

துரோகம். சதகர்ணியை விடவும் வஜ்ர பாகுதான் வயதில் மூத்தவன். ஆதலால் அமைச்சர் பெருமக்கள் பலரும் அவனது பெயரைத் தான் பரிந்துரைத்தார்கள். வஜ்ரபாகு என் உடன் பிறந்த தமை யன் தான். ஆனால், அவன் முன்கோ பம் உடையவன். அதர்ம வழியில் செல்ல நினைப்பவன். சிந்திக்கும் ஆற்றல் துளி யும் அவனிடம் இல்லை. ஆனால், சத கர்ணி அப்படியல்ல. அவன் நான் தூக்கி வளர்த்தவன். நிதானமாகச் செயல்படுப வன். சாதவாகன அரசு நான்கு புறத்திலி ருந்தும் தாக்குதலை சந்தித்துக் கொண் டிருக்கிறது. வடக்கே சுங்கர்களும், சாகர் களும் தாக்குகிறார்கள். கிழக்கே கலிங்க மன்னன் பெரும் வலிமையுடன் திகழ்கி றான். இப்போதிருக்கும் நிலையில் நம் மால் சாதவாகன அரசை பேரரசாக மாற்ற இயலாது. ஆனால், நம்மைக் காத்துக் கொள்ள வேண்டும். இருப்பதை இழக் கக் கூடாது. இந்த நிலையில் வஜ் ரபாகுவை விட சதகர்ணிதான் அரிய

https://telegram.me/aedahamlibra

ணைக்கு ஏற்றவன். ஆதலால்தான் நான் அவனைத் தேர்ந்தெடுத்தேன்."

"உங்களது தியாகம் யாருக்கும் வராது தேவி!"

"இதில் தியாகமெல்லாம் எதுவு மில்லை கார்த்திகா. சுயநலம் தான். சாத வாகன அரசை மேம்படுத்த வேண்டும். அந்த எண்ணம் தான் அனைத்தையும் செய்யத் தூண்டுகிறது."

"இன்னொரு செய்தி!"

"என்ன?"

"உங்களது தமையன் புஷ்யமித் திர சுங்கனுடன் கூட்டு வைத்திருப்பான் என்ற சந்தேகம் எனக்கு வருகிறது.?"

"இந்தச் சந்தேகம் உனக்கு இப்போ துதான் வருகிறதா?"

"........"

"அவன் பாடலிபுத்திரக் கடிகை யில் பயின்றபோதே புஷ்யமித்திரனுடைய

மகன்களான சுங்கமித்திரன் மற்றும் அக்னிமித்திரனுடனும் நட்பு கொண்டிருந்தான். இவர்களுடன் அக்னிபுத்திரன் என்பவனும் நண்பன். ஆனால், எனக்கு அந்த அக்னிபுத்திரன் மட்டும் யார் என்று தெரியவில்லை. எங்கே சென்றிருக்கிறான் என்றும் தெரியவில்லை. அந்த நட்பு இன்னும் தொடர்கிறது. சில வருடங்களுக்கு முன்பு அனைவரும் தெற்கே பயணித்தார்கள் என்று எனது ஒற்றர்கள் மூலம் அறிந்துகொண்டேன். திரும்பி வரும்போது எதையோ சாதித்துவிட்ட பெரும் குதூகலத்துடன் காணப்பட்டான் வஜ்ரபாகு."

"அப்போதுதானே அவர் முகத்தில் பெரும் தழும்பைப் பெற்று வந்தார்?"

"ஆமாம்... ஆனால், அந்தத் தழும்பு அவரது முகத்தில் எப்படி ஏற்பட்டது என்று இதுவரை எனக்குத் தெரியவில்லை!"

"மர்மமாக இருக்கிறது!"

“.........”

https://telegram.me/aedahamlibra

“இன்று பௌத்த விகாரில் அவர்கள் ஏதோ அந்தத் தழும்பு ஏற்பட்டதைப் பற்றி பேசிக் கொண்டார்கள்!”

“என்ன பேசிக்கொண்டார்கள்?” ஆர்வத்துடன் வினவினாள் அவந்திகா.

“மன்னிக்கவும் தேவி. வெகு தொலைவில் நின்றதால் அவர்களின் உரையாடலை முழுவதுமாகக் கேட்க இயலவில்லை. கிடைத்த வாய்ப்பைக் கோட்டை விட்டுவிட்டேன்.”

“நிச்சயமாக கோட்டை விட்டுவிட்டாய்!”

“இன்னொரு செய்தி தேவி!”

“என்ன?”

“தெற்கிலிருந்து தமிழ் மன்னன் படையை நகர்த்தத் துவங்கிவிட்டானாம்!”

https://telegram.me/aedahamlibra

“இரண்டு வருடங்களுக்கு முன்னரே கேள்விப்பட்ட செய்தி தானே இது!”

“இல்லை தேவி. அப்போது அவன் அறிவிப்பை மட்டும் தான் வெளியிட்டான்!”

“என்ன அறிவிப்பு?”

“வடக்கு நோக்கிப் புறப்படுவோம் என்று?”

“இப்போது?”

“அந்த அறிவிப்பை செயல்படுத்தத் துவங்கிவிட்டான்.”

“அவனைப் பற்றிக் கவலைப் பட வேண்டாம் கார்த்திகா?”

“கவலைப்பட வேண்டாமா?”

“ஆம்!”

“ஏன் அப்படிக் கூறுகிறீர்கள்?”

“காலம் காலமாக நமக்கும் தமிழக மன்னர்களுக்கும் நல்ல உறவு நீடிக்கிறது.

தக்சனாபதம் பாதை வழியாக தென்ன கத்திலிருந்து மகதம் செல்லும் வணிகர் கள் படித்தானம் வழியாகவே செல்கிறார் கள். அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பை நாம் வழங்குகிறோம். அத்தமிழ் மன்னன் நம்முடன் இணக்கமாகவே செல்வான் என்று எதிர்பார்க்கிறேன் நான். எச்சரிக் கையாகவும் இருக்கவேண்டும்."

"கவலைப் பட வேண்டாம் இளவ ரசி. தமிழ் படைகளை எப்படிச் சமாளிக்க வேண்டும் என்பதை சதகர்ணி பார்த்துக் கொள்வார்"

"ஆனால், எனக்கு ஒன்று மட்டும் புரியவில்லை கார்த்திகா?"

"என்ன தேவி?"

"படை எடுப்பவர்கள் முன்னெச்ச ரிக்கை செய்யாமல் படையை எதிரிக ளின் எல்லையில் நிறுத்தி வைத்த பிறகு தானே அறைகூவல் விடுவார்கள்?"

"ஆம்!"

“ஆனால், இவன் மட்டும் எதற்காக அறிவிப்பை வெளியிட்டு காலம் கடந்து படையை நகர்த்தத் துவங்கியிருக்கிறான்?”

“அவன் வடநாட்டு மன்னர்களை சீண்டிப் பார்க்கிறான்.”

“புரியவில்லை!”

“போதிய காலம் அளிக்கிறேன். முடிந்தால் நான் வருவதற்கு முன் உன் படையைத் திரட்டி வலிமையடைந்து உங்களைக் காத்துக்கொள்ள தயார் ஆகிவிடுங்கள்” என்ற குறிப்பும் அதில் அடங்கியிருக்கிறது.”

“எவ்வளவு திமிர் இருந்தால் இப்படி அறைகூவல் விடுவான் அவன்?”

“இது சோழப் பேரரசனின் படைத் தலைவரின் தந்திரம். வெண்ணியிலும் அவர்கள் இப்படித்தான் அனைத்து மன்னர்களுக்கும் உரிய காலத்தை அளித்து

ஒரே இடத்திற்கு இழுத்து மொத்தமாகத் தாக்கி வெற்றி பெற்றார்கள்."

"கார்த்திகா, தென்னாட்டைச் சேர்ந்த வணிகன் அல்லது ஒற்றன் என யாராவது கிடைத்தால் என்னிடம் இழுத்து வா! சோழர்களைப் பற்றி நான் அறிந்துகொள்ள வேண்டும். காகந்தி முற்றுகை மற்றும் வெண்ணிப் போரைப் பற்றி நான் அறிய வேண்டும். குறிப்பாக கரிகாலனின் இரண்டு படைத் தலைவர் களைப் பற்றி!"

"தங்களது உத்தரவு தேவி! நேற்று எனக்கொரு முக்கிய தகவல் கிடைத் தது. அது உண்மைதானா என்று உறுதி செய்துவிட்டு உங்களிடம் கூறலாம் என்று இருந்தேன்" எனக் கார்த்திகா கூறிக் கொண்டிருந்த போதே குறுக்கிட்ட அவந் திகா, "என்ன செய்தி கார்த்திகா?" என்று வினவினாள்.

"சோழப் படைத்தலைவன் அவந்தி இளவரசனைக் கொடூரமாகக் கொல்

வேன் என்று சபதம் மேற்கொண்டிருக் கிறானாம்! அவந்தியை சுங்கர்களிடமி ருந்து கைப்பற்றி ஆண்டுகொண்டிருப் பது நாம் தானே. ஆனால், நீங்கள் தென் னாட்டு மன்னன் நம்முடன் இணக்கமாக செல்வான் என்றல்லவா எதிர்பார்க்கிறீர் கள்?"

"என்ன அவந்தி இளவரசனையா?"

"ஆம்!"

"நீ சதகர்ணி"யையா குறிப்பிடுகி றாய்?" பதற்றத்துடன் வினவினாள் அவந் திகா.

"எனக்கு உறுதியாகத் தெரிய வில்லை."

சிறிது நேரம் சிந்தித்தவள், "ம்ம்ம்... இன்று பலதேவனும், என் தமையனும் பேசிக் கொண்டிருந்த போது வேறு ஏதே னும் உனது காதில் விழுந்ததா?"

https://telegram.me/aedahamlibra

“எனக்கு அரைகுறையாக காதில் விழுந்ததை வைத்துப் பார்க்கும் போது அவர்கள் உங்களது திருமணத்திற்கு ஏற் பாடு செய்யத் துவங்கிவிட்டார்கள் எனக் கருதுகிறேன்!”

“எனது திருமணத்தைப் பற்றி முடிவு செய்ய அவர்கள் யார்?” கோபப்பட்டாள் அவந்திகா.

“அரசியல் ஆதாயத்திற்காக உங்க ளைக் கைமாற்றும் முயற்சியில் அவர்கள் இறங்கத் துணிந்துவிட்டார்கள்”

அவந்திகா எதுவும் பேசவில்லை. கார்த்திகாவும் மேற்கொண்டு எதுவும் அவளிடம் கேட்கவில்லை. அவந்திகா வின் மௌனத்தைக் கண்ட கார்த்திகா விடைபெற்றுச் செல்லலானாள்.

கார்த்திகா திரும்பி வந்ததுமே அவந்திகாவின் தோழிகள் அவளைச் சூழ்ந்து, “கார்த்திகா, என்ன செய்தி? நாங் கள் அறியும் அளவிற்கு செய்தி இருந்

https://telegram.me/aedahamlibra

தால் கூறு!” இன்றைய பொழுதை அதை வைத்தே சிரிப்பும், கும்மாளமுமாகக் கழித்து விடுகிறோம்” என வினவினார்கள்.

சிறிது நேரம் சிந்தித்த கார்த்திகா, “நம் இளவரசிக்கு மாப்பிளை தேட ஆரம்பித்துவிட்டார்கள்!” என மட்டும் கூறி நழுவினாள்.

அப்போது அவளை விடாத அவளது தோழிகள், “இன்று நீயும் நீராடுவதற்கு வாடி. அப்போதுதான் நீராடல் களைகட்டும். இளவரசிக்கு எப்படிப்பட்ட மாப்பிள்ளை வர வேண்டும் என்று நீயே கூறு!” எனக் கூறியபடி அவளையும் சேர்த்துப் பிடித்து அவந்தி நதியை நோக்கி இழுத்துச் சென்றார்கள்.

அவர்களின் வற்புறுத்தலை மறுக்க முடியாத கார்த்திகாவும் வேறு வழியில்லாமல் அவர்களுடன் நீராடுவதற்குச் செல்லலானாள்.

சென்ற கார்த்திகா நீராடுவதற்குத் திரும்பி வருவதைப் பார்த்தபடியே குளிர்ச்சியுடன் ஓடிக்கொண்டிருந்த நதிக்குள் இறங்கலானாள் அவந்திகா. நதிக்குள் இறங்கியவள் தனது ஆடைகள் ஒவ்வொன்றாக அகற்றிக் கரையில் வீசி எறிந்தாள். கடைசியாக ஒரேயொரு மெல்லிய துணியை மட்டும் பெயருக்கு உடலில் சுற்றிக்கொண்டு நதிக்குள் மூழ்கினாள். அவளது தோழிகள் அனைவரும் அவளைத் தொடர்ந்து ஆடைகளைக் களைந்து நதிக்குள் இறங்கினார்கள்.

பிரகாசமான முழு நிலவு அழகுதான். ஆனால், அந்த நிலவை கார் மேகங்கள் கடந்து செல்லும்போது நிலவொளியினால் கார் மேகங்கள் வெண்ணிற மேகங்களாகி நிலவுக்கு மோகன அழகினை அளித்துவிடும். அப்படித்தான் மெல்லிய துணி நீரில் பட்டு அவந்திகா சுமந்து நின்ற இரட்டை நிலவுகளும் பளிச்சிட குளிரில் சிலிர்த்த மோகன

அழகுடன் நீர் வழிந்தபடி நிற்கலானாள். அவந்திகாவின் உடலைத் தழுவும்வரை சலனமின்றி ஓடிவந்த அவந்தி நதி நீரும் அவளைத் தழுவிய பிறகு மோகம் கொண்டு சலசலப்புடன் ஓடத் துவங்கியது. சிறிது நேரம் தோழிகளுடன் விளையாடியவள் பிறகு அந்த மெல்லிய துணியையும் அவிழ்த்துத் கரையில் போட்டு விட்டாள்.

தனது பொன்னிற மேனி பளபளத்தபடி உடல் சிலிர்த்தபடி நின்ற அவந்திகாவைப் பார்த்து, "இளவரசி, உடல் சிலிர்த்து குத்திட்டு நிற்கும் உங்களது தாமரைப் பூ கொங்கைகளைப் பார்த்தால் பெண்ணான எங்களுக்கே மோகம் துளிர் விடுகிறது! எந்த ஆடவன் உங்களை ஆட்கொள்ளப் போகிறானோ?" எனப் பொறாமையுடன் தெரிவித்தாள் கார்த்திகா.

சுற்றி நின்ற தோழிகள் அனைவரும் கொல்லென்று சிரிக்கச் செய்தார்கள்.

https://telegram.me/aedahamlibra

அவள் கூறியதைக் கேட்டதும் அவந்திகா பொய்க் கோபம் கொண்டு அடிப்பதற்காக நீரில் பாய்ந்தாள். அவள் விலகிக்கொண்டாள். நீரில் தொப் பென்று விழுந்தாள் அவந்திகா.

உடனே அவளது தோழிகளில் ஒருத்தி, “கார்த்திகா, நம் இளவரசிக்கு மாப்பிள்ளை தேட ஆரம்பித்து விட்டார்க ளாமே! உண்மையா???” என வினவலா னாள்.

அவந்திகா கார்த்திகாவை நோக்கி முறைக்கலானாள்.

கார்த்திகா அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்டாள்.

“கார்த்திகா, நம் இளவரசிக்கு எப் படிப்பட்ட ஆண்மகன் கணவனாக வாய்க்க வேண்டும்?” என வினவினாள் மற்றொருத்தி.

தனது தோழிகள் கேள்விக்கு மேல் கேள்விகள் கேட்கத் துவங்கியதுமே

https://telegram.me/aedahamlibra

இளவரசி ஒரு முடிவிற்கு வந்துவிட்டாள். "என்ன சொல்லியும் அவர்களை இன்று கட்டுப்படுத்த முடியாது. அதிலும் அவர்கள் கார்த்திகாவை நீராடுவதற்கு அழைத்து வந்ததிலிருந்தே இன்று அவர்களின் கேலிப் பேச்சுகள் சற்று எல்லை மீறித்தான் இருக்கும்" என்பதை உணர்ந்தவள் அவர்களின் பேச்சினைப் பொய்க் கோபத்துடன் ரசிக்கத் துவங்கினாள்.

அமைதியாக நின்ற கார்த்திகாவைப் பார்த்து, "அடியே கார்த்திகா, நீ அமைதியாக இருப்பதற்கா உன்னை இன்று வலுக்கட்டாயமாக நாங்கள் அழைத்து வந்தோம். வாயைத் திறந்து பதில் கூறடி" எனக் கூறியபடி அவளுக்கு அருகில் நின்றவள் அவளது இடையில் நறுக்கென்று கிள்ளினாள்.

"அவன் ஆண்மகனாக இருக்க வேண்டும்!" எனத் தெரிவித்தாள் கார்த்திகா.

https://telegram.me/aedahamlibra

"அடியே, இளவரசிக்கு ஒரு பெண் ணையா மாப்பிளையாக பார்ப்பார்கள். ஆண்மகனைத் தானே அனைவரும் பார்ப்பார்கள்!"

"அடியே, நான் ஆண் மகன் எனக் கூறுவது அவர் ஆணாக மட்டும் அல்ல ஆண் மகனுக்குரிய இலக்கணத்துடன் நெறி பிறழாமல் கம்பீரமானவராக இருக்க வேண்டும் எனக் கூறினேன். நான் பார்த் தவரை இங்கிருக்கும் அனைவரும் இள வரசியின் கடைக் கண் பார்வைக்கே பயந்து நடுங்குபவர்களாகத்தான் இருக் கிறார்கள். எவர் எங்கிருந்து வரப் போகி றாரோ?"

"ஓ! அப்புறம்!"

"இளவரசியின் கடைக் கண் பார் வையிலேயே தேவையை அறிந்து பூர்த்தி செய்பவராக இருக்க வேண்டும்!"

"நாங்கள் திருமணத்திற்கு அப்புறம் அவர் எப்படி இருக்க வேண்டும் என

https://telegram.me/aedahamlibra

கேட்கவில்லை. நம் இளவரசிக்கு எப்ப டிப்பட்டவர் பொருத்தமாக இருப்பார் என வினவுகிறோம் நாங்கள்?”

“வலிமையான உடல், திடமான மனம், என்ன நடந்தாலும் கலங்காத வராக, பிற பெண்களிடத்தில் மனதை அலைய விடாதவராகவும் அவர் இருக்க வேண்டும். வீரத்தில் இணையற்றவராக இருக்க வேண்டும். கடைக் கண் பார் வையில் நமது தேவியை அவர் அடக்க வேண்டும்!”

“பிறகு?”

“அவர் காம சாத்திரத்தை அறிந்து வைத்திருக்க வேண்டும்!”

“அறிந்து வைத்திருந்தால் மட்டும் போதுமா?”

“போதும்!”

“ஏன்?”

https://telegram.me/aedahamlibra

“அடிப்படை ஞானத்தை மட்டும் அவர் அறிந்திருந்தால் போதும். கரை தேர்ந்தவராக இருக்கவேண்டிய அவசிய மில்லை!”

“ஏன் இப்படியொரு நிபந்தனை?”

“அடியே, உங்களுக்கு அறிவு இல் லையா? காம சாத்திரத்தை யாரும் எங் கும் பயின்று கற்றுக் கொள்வதில்லை. அது அனுபவத்தில் வருவது. நமது இள வரசிக்கு கணவனாக வரப்போகிறவர் நம் இளவரசியிடமே அதைக் கற்றுக்கொள் ளத் துவங்க வேண்டும்.”

“இளவரசிக்கு முன் அவன் எந் தப் பெண்ணையும் தொட்டிருக்க கூடாது என்கிறாய். அப்படித்தானே?” எனச் சிரித் தபடி தெரிவித்தாள் ஒருத்தி.

மற்றொருத்தி, “இதை எதற்கடி நீ சுற்றி வளைத்து பேசிக் கொண்டிருக்கி றாய்?” என வினவினாள்.

"நம் இளவரசியை வெல்பவராக அவர் இருக்க வேண்டும்?"

"வெல்பவராகவா?"

"ஆம்!"

"எதில்?"

"அனைத்திலும்தான்!"

"அனைத்திலும் என்றால்?"

"போரில் தானடி!"

"போரிலா?"

"ஆம்!"

"நம் இளவரசியிடம் எத்தனை வீரர்கள் தங்களது வாட்களை பறிகொடுத்திருக்கிறார்கள் என்பதை அறிந்துமா நீ இப்படித் தெரிவிக்கிறாய்!"

"அடியே, நான் கூறுவது வாட்போர் அல்ல!"

“பிறகு?” ஆர்வத்துடன் ஒரே நேரத்தில் வினவினார்கள் அனைவரும்.

“நான் குறிப்பிடுவது கட்டில் போர்!”

“நீ கூறுவதைப் பார்த்தால் இளவரசி திருமணத்திற்கு முன்பே...” என ஒருத்தி கூறிக்கொண்டிருந்த போதே குறுக்கிட்ட இன்னொருத்தி, “அவன் ஆய கலைகள் அறுபத்தி நான்கினையும் கற்றிருக்கிறானோ இல்லையோ ஆனால், அறுபத்தி ஒன்றாவது கலையில் அவன் தேர்ச்சியுடையவனாக இருக்க வேண்டும்” எனக் கூற நாணத்தில் முகம் சிவந்த அவந்திகா அவள் மீது பாய்ந்து மேற்கொண்டு பேசாமல் இருக்க நீருக்கும் அழுத்தினாள்.

திருமணப் பேச்சினை எடுத்ததும் அவந்திகாவின் மனநிலை அப்போது முற்றிலும் மாறிவிட்டதைக் கண்ட அவளுடைய தோழிகள் அனைவரும் மகிழ்ச்சியுடன் அவர்களின் சண்டையில் கலந்துகொண்டு ஒருவர் மேல் ஒருவர் நீரினை

அள்ளித் தெளித்து, நீரில் விழுந்து எழுந்து புரண்டு விளையாடலானார்கள்.

நேரத்திற்கு நேரம் அவர்கள் பேச்சு வரம்பு மீறி வெளிப்படுவதைக் கண்ட அவந்திகா அவர்களிடமிருந்து விலகி நதியின் ஆழம் நிறைந்த பகுதியை நோக்கி நீந்தத் துவங்கினாள். நதியும் சல னமின்றி ஓடிக் கொண்டிருந்ததால் அவ ளால் எளிதில் நீந்த முடிந்தது.

அவள் நாணத்துடன் விலகிச் செல் வதைப் புரிந்துகொண்ட தோழிகளும் அவளை விட்டு கரைக்கு அருகிலேயே விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

ஆடையற்ற நிலையில் நீந்திக் கொண்டிருந்த அவந்திகாவைத் தீண்டி யதால், அதுவரை அமைதியாக ஓடிக் கொண்டிருந்த அவந்தி நதியும் சல னப்படத் துவங்கியது. திடீரென்று நதி யின் போக்கில் மாற்றம் ஏற்பட்டது. நதி நீரின் வேகம் அதிகமாகியது. மென் மையாக அணைத்தபடி சென்றுகொண்

டிருந்த அவந்தி நதி அவளை இறுகத் தழுவியபடி பாயத் துவங்கியது. வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுக் கொண்டிருப்பதை கார்த்திகா தான் முதலில் உணர்ந்தாள். உடனே அவள் “இளவரசி... வெள்ளம்... வந்துவிடுங்கள்” எனக் குரல் எழுப்பி னாள்.

ஆனால், அவந்திகா அவளது அபயக் குரலைக் கேட்கும் நிலையிலோ அல்லது நீரின் வேகம் அதிகமாவதை உணரும் நிலையிலோ இல்லை. முற்றி லும் வேறொரு உலகத்தில் அவள் லயித் திருந்தாள். காலம் கடந்த பிறகுதான் அவளுக்கு நிலைமை புரிய கரையை நோக்கி நீந்தினாள். ஆனால், அவந்தி நதி அவள் மீது கொண்ட கட்டுக்கடங்கா மோகத்தினால் அவளை நீந்த விடாமல் தன் போக்கிலேயே இழுக்க ஆரம்பித் தது.

அவந்திகாவைக் காக்க கார்த்திகா வெள்ளப் பெருக்கில் விழ ஓடினாள்.

ஆனால், அவளது தோழிகள் அவளைப் பிடித்துக் கொண்டார்கள்.

நதியின் போக்கிலேயே அவந்திகா அடித்துச் செல்லப்பட்டுக் கொண்டிருந் தாள். கார்த்திகா தொடர்ந்து நதிக் கரை யிலேயே நதி நீரின் போக்கில் அவந்தி காவைத் தேடி ஓடிக் கொண்டிருந்தாள். கார்த்திகாவின் வேகத்தை விடவும் நதி நீர் அவந்திகாவை விரைந்து அடித்துச் சென்றுகொண்டிருந்தது.

வெள்ளப் பெருக்கில் போராடி னாள் அவந்திகா. அவளது உடல் மெல்ல கலைத்துக்கொண்டிருந்தது. நீந்தியதில் அவளது உடல் முற்றிலும் சோர்ந்து நீரின் போக்கில் அடித்துச் செல்லப்பட் டுக் கொண்டிருந்தாள்.

நினைவை இழக்கத் துவங்கிய வேளையில் இரண்டு கரம் அவளைப் பற்றி கரையை நோக்கி நீந்தத் துவங் கியது. அப்போது அவந்திகா முற்றிலும் தனது நினைவை இழந்து விட்டிருந்தாள்.

https://telegram.me/aedahamlibra

அடிக் குறிப்பு:

1. தக்சனாபதம்: பண்டையத் தமிழர்கள் தென்னகத்திலிருந்து வடக்கு நோக்கிய வணிகப் பயணத்தை தமிழகத்தில் துவங்கி சேர நாட்டு எல்லையில் காணப்படும் துளு நாட்டின் வழியாக பிரமகிரி சென்று அங்கிருந்து படித்தானத்தை அடைவார்கள். படித்தானத்திலிருந்து உஞ்சை. உஞ்சையிலிருந்து பில்சா, சாஞ்சி வழியாக கோசம், ராஜகிர் மற்றும் பாடலியை அடைவார்கள். இப்பாதையே புகழ்பெற்ற தக்சினாபத பாதை ((Daksinapatha route)) என அழைக்கப்படுகிறது.

https://telegram.me/aedahamlibra

# 4. ஆற்றங்கரைச் சம்பவம்

காலம் சில வேளைகளில் தான் நமக்கு வேண்டிய சூழலை உருவாக்கிக் கொடுக்கும். அதிலும் இரண்டு விதமான கோட்பாடுகள் அடங்கியிருக்கின்றன. சூழலுக்காக நாம் காத்திருக்காமல் நாமே நமக்கு உரிய சூழலை உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்பது முதலானது. நமக்குரிய சூழலை உருவாக்க நாம் எப்படிப் போராடினாலும் காலம் அதன் வழியில் தான் சூழலை செலுத்திக் கொண்டிருக்கும். ஆதலால், காலத்திற்கு

ஏற்ப அதனை எதிர்கொள்ள நாம் எப் போதும் தயாராகவே இருக்க வேண்டும் என்பது இரண்டாவது கோட்பாடு. இந்த இரண்டும் அல்லாமல் காலம் சூழலை உருவாக்கும் போது அதைத் தவறவிடா மல் பயன்படுத்திக் கொள்பவனே வாழ் வில் வெற்றியை அடைகிறான்.

அவந்தி வணிகனாக மாறுவேடத் தில் இருந்த வஜ்ரபாகுவை அவனது முகத்தில் காணப்பட்ட தழும்பினைக் கண்டு அடையாளம் கண்டுகொண்ட திவ்யன் மனதில் தோன்றிய ஆத்திரத் தையும், கோபத்தையும் காலம் கருதி அடக்கிக் கொண்டான். எப்படியும் அவன் நம்மைப் பின்தொடர வாய்ப்பிருக்கி றது என்பதை அவனது பேச்சிலிருந்து உணர்ந்தவன் அவனது பார்வையிலி ருந்து தப்பிக்கவே அவந்தி நதிக்குள் குதிக்கலானான்.

ஆனால், அவனது விதி, அவன் யாரைத் தேடி அவந்தி தேசத்திற்கு வந் தானோ அவளிடமே அவனை இழுத்துச் செல்லும் என்பதை அப்போது அவன்

அறிந்திருக்கவில்லை. நதியில் நீந்திய வன் கரையேறி ஓய்வெடுத்துக் கொண் டிருந்தான். அப்போது நதியின் வெள்ளப் பெருக்கில் யாரோ ஒருவர் நீந்திப் போரா டிக் கொண்டிருப்பதைக் கரையிலிருந்து கண்டான். நேரத்திற்கு நேரம் நதியின் போக்கில் மாற்றம் ஏற்பட்டுக் கொண் டிருப்பதை உணர்ந்தவன், “உடனே கைகொடுக்க வேண்டும். இல்லையேல் ஆற்றோடு அடித்துச் செல்லப் படுவார்” என நினைத்துக்கொண்டு உடனே நதிக் குள் குதித்து நீந்தத் துவங்கினான்.

அவந்திகா உடல் களைத்து மூர்ச்சை அடையத் துவங்கிய வேளை யில் தான் திவ்யன் அவளைப் பிடித்து கரையை நோக்கி நீந்தத் துவங்கி னான். கடுமையான போராட்டத்திற்குப் பிறகு அவந்திகாவை கரைக்கு அருகில் இழுத்து வந்த திவ்யன் இடுப்பளவு நீரில் நின்றபடி அவளது தலையை மட்டும் நீருக்கு மேலே உயர்த்தி அவளது கழுத் தில் கையை வைத்து உயிர் இருக்கிறதா?

என்று சோதித்தான். இதயத் துடிப்பு சீராக வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

நிம்மதி அடைந்தான் திவ்யன்.

முகத்தைக் கவசம் போன்று மூடியிருந்த அவளது நீண்ட கருத்த குழலை அவளது முகத்தைப் பார்க்கும் ஆசையில் இரண்டு பக்கமும் விளக்கி விட்டான். அவளது முகத்தைப் பார்த்த திவ்யன் செயலற்று நிற்கலானான். எந்தப் பெண்ணையும் பார்க்கும்போது அதுவரை தோன்றாத ஒரு உணர்வு அவனுக்குள் ஊற்றெடுக்க ஆரம்பித்தது. சற்று நேரம் அவளது அழகிய முகத்தையே பார்த்தபடி மெய்மறந்து நிற்கலானான். கழுத்தில் சுற்றியிருந்த அவளது குழல்களை விடுவித்தான். அது நீரால் அடித்தபடி அவந்திகா நீரில் கிடந்த மறுபுறமாக மிதந்து கொண்டிருந்தது. நீரில் கிடந்த அந்த குழலைக் கவனித்தான். அடர்த்தியான கருங்குழல், அவளது இடை வரை நீளமிருக்கும் என நினைத்துக்கொண்டான்.

அவளது முகத்தை நோக்கினான். பாலைவிடத் தூய்மையான நிறத்தில் அவளது முகம். அகன்ற ஒளி பொருந்திய நுதல், வளைந்த அடர்ந்த புருவம், இமைகள் இரண்டும் விழிகளை மூடியிருந்தன. இமைகள் மூடியிருந்தாலும் அவளது விழிகளின் அழகு எப்படிப்பட்டதாக இருக்கும்? என்பதை அவனால் கற்பனை செய்துகொள்ள முடிந்தது. சற்றே சிறிய அளவான கூர்மையான நாசி. மயங்கிக் கிடந்தாலும் சீராக மூச்சை இழுத்து விட்டுக் கொண்டிருந்தாள். நாசிக்குக் கீழே அவளது சிவந்த அதரங்கள் சற்றே பிளந்து அவளது வெண்ணிறப் பற்களை காட்டிக் கொண்டிருந்தது. தனது மடியில் கிடந்த அந்தப் பைங்கிளியையே வைத்த கண்ணை மாற்றாமல் நோக்கிக்கொண்டிருந்தான் திவ்யன்.

முகத்தில் துளித் துளியாய் நின்றுகொண்டிருந்த ஆற்று நீர் அவளுடைய மோகன அழகை இன்னும் கூட்ட அவளது முகத்தைப் பார்த்தபடியே நின்

றான் திவ்யன். அப்போது அவன் தனக்குள் ஒரு கேள்வியையும் கேட்டுக் கொண்டான், “அவந்தி இளவரசி இவளை விடவும் அழகாக இருப்பாளா?” என்று.

“கரை சேர்க்கலாம்” என எண்ணிய திவ்யன் அவளைத் தோளில் தூக்குவதற்காக நீரிலிருந்து உயர்த்தினான். கண நேரத்தில் ஆடையில்லாத அவளது உடல் நீருக்கு மேல் ஏறி அவனது பார்வைக்கு புலப்பட அப்போதுதான் உணர்ந்தான் அவள் ஆடையின்றி இருப்பதை.

உடனே அவளை நீருக்குள் மீண்டும் போட்டுவிட்ட திவ்யன், தனது இடையில் சுற்றியிருந்த நீண்ட துணியை அவிழ்த்து அவளது உடலில் சுற்றியவன் அவளைத் தூக்கி தனது தோளில் போட்டுக்கொண்டான். தனது தோளில் போட்டிருந்த சில முழத் துணியை தனது இடை

https://telegram.me/aedahamlibra

யில் கட்டிக்கொண்டவன் கரையை நோக்கி நடக்கத் துவங்கினான்.

மயங்கிக்கிடந்த அவந்திகாவை கரையில் காணப்பட்ட நிழல் படர்ந்த பாறை ஒன்றின் மீது கிடத்தினான் திவ் யன்.

மெல்லிய ஈரத் துணி ஒன்றே அவ ளுடைய உடலைச் சூழ்ந்திருந்ததால் அத்துணி பெயருக்குத்தான் அவளது உடலைச் சுற்றி அவளது அழகுகளை மறைத்திருந்தன. மறைத்தும் மறைக் காமலும் வெளிப்பட்டுக்கொண்டிருந்தன அவளது யெளவன செளந்தர்யங்கள். மீண்டும் பார்வையை திருப்பிக் கொண் டான். நீண்ட பெருமூச்சு ஒன்றை வெளி யிட்டான். “வாழ்வில் எத்தனை ஆண் டுகளாக இரவுகளை வெறுமையாகவே கழித்திருக்கிறோம்?” என்று அப்போது வருத்தப்படலானான். கரையில் மயங்கிக் கிடக்கும் வஞ்சிக் கொடியின் வனப்பை அவளது அனுமதியில்லாமல் காண்பது

பெரும் பிழை என்று அவன் கடைப்பிடித்து வந்த நெறி அவனைத் தடுத்தாலும், அவனது விழிகள் தானாக நீர் சொட்ட சொட்ட பாறை மேல் கிடந்த அவந்திகாவைத் தேடிச் செல்வதை அவனால் கட்டுப்படுத்த இயலவில்லை.

மீண்டும் அவளைப் பார்க்கும் ஆவலில் பார்வையைத் திருப்பினான். ஆனால், கரையிலேயே அவந்திகாவைத் தேடிவந்த கார்த்திகா ஓடிவந்து பாறையில் கிடந்த அவந்திகாவின் மீது அவள் கொண்டு வந்த துணிகளைப் போட்டு மூடியவள் அவளை வாரி அணைத்துக் கொண்டாள்.

இடையில் ஈரத் துணியுடன் நீர் சொட்ட சொட்ட நின்ற திவ்யனைக் கண்டவள், “நன்றி” எனக் கூறி கையெடுத்துக் கும்பிடவும் செய்தாள்.

அரைகுறையாக உடலில் ஆடையை சுற்றி இருந்த கார்த்திகாவைப் பார்த்த திவ்யன் அனைவரும் நதியில்

நீராடிக் கொண்டிருந்த போது திடீரென்று ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் இவள் மட்டும் அடித்து வரப்பட்டிருக்கிறாள் என்பதை உணர்ந்துகொண்டான்.

மயங்கிக் கிடந்த அவந்திகாவைப் பார்த்து கண்ணீர் வடித்தாள் கார்த்திகா. அதைப் பார்த்த திவ்யன், "இன்னும் சற்றுப் பொழுதில் இவள் கண் விழித்து விடுவாள். உன் தங்கைக்கு எதுவும் ஆகாது! நீ கவலைப் படாதே!" என ஆறுதல் கூறினான்.

அவனுக்கு மறுமொழி அளிக்க பார்வையை உயர்த்தியபோது அவனது மார்பினைக் கவனித்தாள். வலிமையான, அகன்ற அவனது மார்பு எங்கும் வீர விழுபுண்கள். கண நேரத்தில் அதைக் கண்டவள் பிரமிப்புடன், "எங்களது இளவரசியைக் காப்பாற்றியதற்கு மிக்க நன்றி" எனத் தெரிவித்தாள்.

"இளவரசி" என்ற சொல்லைக் கேட்டதுமே ஒரு கணம் திவ்யன்

திகைத்து விட்டான். தயக்கத்துடன், “இளவரசி...?” என வினவினான்.

“அவந்தி தேச இளவரசி அவந்திகா...” என மட்டும் கன்னத்தில் வழிந்த கண்ணீரைத் துடைத்தபடியே பதிலளித்தாள் கார்த்திகா.

கார்த்திகாவின் மடியில் கிடந்த அவந்திகாவின் அழகிய வதனத்தை ஒரு முறை நோக்கினான் திவ்யன். பிறகு அங்கிருந்து திரும்பினான்.

அப்போது கார்த்திகா, “சிறிது நேரம் பொறுத்திருங்கள். இளவரசி கண் விழித்ததும் உங்களுக்கு வேண்டிய பரிசை அளிப்பார்கள்” எனத் தெரிவித்தாள். அப்போது இளவரசியின் தோழிகள் சற்றுத் தொலைவில் அவர்களை நோக்கி ஓடி வருவதைக் கண்டான் திவ்யன்.

அவள் கூறியதைக் கேட்ட திவ்யன் சிரித்தபடியே, “உங்களது இளவரசி என்னைச் சந்திக்க உகந்த காலம் இதுவல்ல.

எனக்கு வேண்டியதையும் அவளால் இப்போது கொடுக்க இயலாது!" என விசமத்துடன் கூறியவன் கார்த்திகாவின் மறுமொழியை எதிர்பாராமல் விரைந்து நடக்கலானான்.

நன்றிப் பெருக்குடன் அவனை நோக்கினாள் கார்த்திகா. ஆனால், அவனது முதுகில் எதையோ பார்த்துவிட்ட கார்த்திகாவின் முகம் அருவருப்பில் சிவந்தது.

"இந்தக் கோழையா, நம் இளவரசியை இந்த நிலையில் தூக்கி வர வேண்டும்???" எனத் தனக்குத்தானே கேட்டுக்கொள்ளவும் செய்தாள்.

அப்போது அவர்களின் தோழிகள் அனைவரும் ஓடிவந்து கண்ணீருடன் அவந்திகாவைப் பற்றி விசாரிக்கலானார்கள். ஆபத்து ஏதும் இல்லை என்பதைக் கேட்டவர்கள் நிம்மதிப் பெருமூச்சு விடலானார்கள்.

ஒரு நாழிகைப் பொழுதிற்குப் பிறகு கண் விழித்த அவந்திகா கார்த்திகாவின் மடியில் தலை வைத்துக் கிடப்பதை உணர்ந்தாள். அவளது மடியிலிருந்து எழுந்தவள் பாறையில் அமர்ந்தாள். மயக்கத்தில் கிடந்ததால் அவளது தலை சுற்றியது. சிறிது நேரம் தலையைப் பிடித்துக்கொண்டு அமர்ந்திருந்தவள் பிறகு, "எனக்குத் தெரியும் கார்த்திகா... நீ என்னை நிச்சயம் காப்பாற்றுவாய் என்று!" எனச் சொற்களை ஒவ்வொன்றாக விடுவித்தாள்.

"மன்னிக்கவும் இளவரசி. உங்களை நான் காப்பாற்றவில்லை"

"நீ இல்லையா?"

"ம்ம்ம்!"

"எனக்குக் கடைசியாக நினைவு இருந்தபோது யாரோ என்னைப் பற்றி கரையை நோக்கி நீந்தினார்கள். அது நீ என்றுதான் நான் நினைத்தேன். பிறகு

நினைவு தப்பிவிட்டது...” எனக் கூறிக் கொண்டிருந்த போதே அவளது உடலை மூடியிருந்த நீண்ட துணியைக் கவனித் தாள்.

அதைக் கண்டவள், அதிர்ச்சியு டன், “இது யாருடையது?” என கார்த்தி காவிடம் வினவினாள்.

“உங்களைக் காப்பாற்றியவருடைய இடை ஆடை.”

“அப்படியெனில்...” எனக் கூறிய வள் கலங்கிய விழிகளுடன் கார்த்தி காவை நோக்கினாள் அவந்திகா. பிறகு தனது ஆடைக்குள் முகத்தைப் புதைத் துக் கொண்டாள்.

“யார் அவன் கார்த்திகா?” சொற் கள் வெறுமையாக வெளிப்பட்டது அவந் திகாவிடமிருந்து.

“தெரியவில்லை. அவனைப் பார்ப் பதற்கு தென்னாட்டைச் சேர்ந்தவனைப் போன்று காணப்பட்டான். அவனது உடல்

முழுவதும் விழு புண்கள். வீரனைப் போன்று தோன்றினான்."

"காலையில் என் தமையனுடன் ஒரு தென்னாட்டான் பேசிக் கொண் டிருந்ததாக தெரிவித்தாயே, அவனா இவன்?"

"என்னால் உறுதியாகக் கூற இய லவில்லை. அவனுக்கு முகம் முழுக்க தாடை மயிர் வளர்ந்திருந்தது. முதுகும் சற்று கூன் விழுந்திருந்தது. ஆனால், இவன்???" எனக் கூறிக்கொண்டிருந்த போதே அங்கு நின்ற அவந்திகாவின் தோழி ஒருத்தி, "காலையில் இளவர சிக்கு இப்படிப்பட்டவன் கணவனாக வர வேண்டும் எனத் தெரிவித்தாயே, அந்தத் தகுதிகள் அவனுக்கு பொருந்தியிருந் ததா?" என விசமத்துடன் வினவினாள்.

அவள் கூறியதைக் கேட்டதும் கார்த்திகா கடும் கோபம் அடைந்து, "வாயை மூடடி. இன்னொரு முறை அப் படித் தெரிவித்தால், உன் நாக்கை

இழுத்து அறுத்துவிடுவேன்” என விழிகளில் கோபம் தெறிக்க எச்சரிக்கை செய்யலானாள்.

அவளது கோபத்தைக் கண்ட அவந்திகா “ஏதோ பெரும் தவறு நடந்திருக்கிறது” என நினைத்தபடியே கார்த்திகாவை நோக்கினாள்.

“அவன் நல்லவன். அவனது ஆடையை உங்களுக்கு அணிவித்து உங்களைத் தூக்கி வந்த முறையிலிருந்து அவன் நெறியும், ஆண்மையும் தவறாத ஆண்மகன் என்பதை நான் அறிந்துகொண்டேன். அவனைப் பார்த்த அக்கணம் அவந்தி நதியே உங்களது கணவனை அடையாளம் கட்டிவிட்டதோ எனக் கூட எண்ணினேன். நீங்கள் இளவரசி எனத் தெரிவித்த பிறகும் அதைப் பெரிது படுத்தாத அவனது கர்வம், திமிர் என அனைத்தும் சரிதான். ஆனால்...”

“பிறகு என்ன?” அருகில் நின்ற ஒருத்தி வினவினாள்.

https://telegram.me/aedahamlibra

“அவனது முதுகில்...”

“அவனது முதுகில் என்ன?”

“எனக்கு சொல்லவே நா கூசுகி றது!”

“பரவாயில்லை.”

“அவனது மார்பில் காணப்படுவ தைப் போன்றே அவனது முதுகு முழுவ தும் விழு புண்கள். போரில் முதுகினைக் காட்டியிருக்கும் அந்தக் கோழையா நம் இளவரசியை இந்த நிலையில் காப்பாற்ற வேண்டும்? அதுமட்டுமல்லாமல்?” எனக் கூறியவள் கண்ணீர் வடிக்கவும் செய் தாள்.

“என்ன?”

“அவனது உடலில் யவன அடி மைக்கான முத்திரையைப் பார்த்தேன்!”

“அடிமையா???”

“இளவரசியைக் கண்டாலே பத்தடி தொலைவில் மண்டியிட்டு நிற்கிறார்கள்

https://telegram.me/aedahamlibra

மாளவ மற்றும் சாதவாகன மாவீரர்கள். இந்த நிலையில் புறமுதுகிட்டு முது கில் அடையாளத்தைச் சுமந்து வாழும் ஒரு அடிமையின் கரங்கள் நம் இள வரசியைத் தழுவும் நிலை ஏற்பட்டுவிட் டதை நினைக்கையில் தான் எனக்கு... எனக்கு...” எனக் கூறியபடியே கண்ணீர் விட்டு வருந்தலானாள் கார்த்திகா.

அப்போது, அங்கு வந்த இளவரசி யின் மெய்க் காவல் வீராங்கனை ஒருத்தி, “இளவரசி, தென்னாட்டைச் சேர்ந்த வணிகர்கள் சிக்கியிருக்கிறார்கள். அடி மையாக இருப்பார்களா என்று படைத் தலைவர் வஜ்ரபாகு சந்தேகம் கொள்கி றார்! வீரர்கள் சுற்றி வளைத்திருக்கிறார் கள்” எனத் தகவல் தெரிவித்தாள்.

ஈரத்தில் துவண்டு கிடந்த தனது குழலை வாரிக் கொண்டை போட்டுக் கொண்ட இளவரசி, “கார்த்திகா, இன் னொரு முறை என்னைக் காப்பாற் றிய அந்தத் தென்னாட்டானைக் கண்

டால் என்முன் அழைத்து வா, எப்படியும் அவன் இந்த அவந்தி நதிக் கரையில் தான் சுற்றிக்கொண்டிருப்பான். உடனே அவனைக் கண்டுபிடி!" எனக் கட்டளை யிட்டவள், அவளுக்கு முன் பணிவுடன் நின்ற வீராங்கனையிடம், "அவர்களை நான் சந்திக்க வேண்டும். ஏற்பாடுகளை செய். நான் சண்டிகாலேசுவரரை வணங் கிவிட்டு வருகிறேன்" எனக் கூற அவள் அங்கிருந்து செல்லலானாள்.

அவந்திகாவும் ஆற்றங்கரை சம் பவத்தை மறந்து சண்டிகாலேசுவரரை வழிபடச் செல்லலானாள்.

https://telegram.me/aedahamlibra

# 5. மரண கீதம்

வடதேசத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற உஞ்சைப் பட்டினம் மாட மாளிகைகளாலும், அழகுக் கோபுரங்களாலும் நிறைந்து செல்வச் செழிப்பு, இயற்கை வளம், வனப்பு மிகுந்து காணப்பட்டது. மௌரியப் பேரரசன் அசோகப் பியதசி அரசனாக முடிசூடும் முன் இளவரசனாக இருந்த போது உஞ்சையில் தங்கியிருந்த படியேதான் தென்னாடுகளைக் கவனித்துக் கொண்டான். பாடலிபுத்திரத்தை விடவும் செல்வாக்கு மிகுந்த பட்டினமான உஞ்சை சமீபத்தில் சாதவாகனருக்கும், சுங்கர்களுக்கும் நடைபெற்ற போரின் அடையாளங்களைச் சுமந்தபடி கம்பீரத்துடன் நின்று கொண்டிருந்தது. பட்டினத்தைச் சூழ்ந்து ஓடும் அவந்தி நதியின் கரையில் அமர்ந்திருந்த மூன்று தென்னாட்டு வணி

கர்களை முற்றுகையிட்டு கிட்டத்தட்ட பத்து அவந்தி வீரர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களுடன் அவந்தியின் இளவரசனும், படைத் தலைவனுமான வஜ்ரபாகுவும் நின்றுகொண்டிருந்தான். அவன் அணிந்திருந்த படைத் தலைவன் உடைக்கு அவனது முகத்தில் காணப் பட்ட தழும்பு அப்போது மட்டும் பெரும் கம்பீரத்தை அளிக்கத் தவறவில்லை.

உஞ்சை வீரர்கள் சூழ்ந்திருந்ததையும் பொருட்படுத்தாமல் வணிகர் தலைவன், “எங்களை எதற்காகச் சூழ்ந்திருக்கிறீர்கள்?” எனப் பதற்றமில்லாமல் பொறுமையுடன் வினவினான்.

“நீங்கள் அவந்தியை வேவுபார்க்க வந்த ஒற்றர்களாக இருப்பீர்களோ என சந்தேகம் கொள்கிறேன் நான்!”

“சந்தேகமா?”

“ஆம்! உங்களை நான் விசாரணை செய்ய வேண்டும்!”

“விசாரணை தானே, இப்போதே செய்யுங்கள்!” எனக் கூறியபடி மூவரும் தயாரானார்கள்.

https://telegram.me/aedahamlibra

"இப்போதைக்கு அந்த எண்ணம் இல்லை!"

"பிறகு எப்போது விசாரணை செய்யப் போகிறீர்களாம்?"

"உங்களைப் போன்றே உஞ்சைக்கு வடக்கே நதிக்கரையில் ஒருவன் சுற்றிக் கொண்டிருந்தான். அவனையும் கைது செய்த பிறகு உங்கள் நால்வரையும் மொத்தமாக விசாரணை செய்கிறேன் நான்! அதுவரை சிறையில் ஓய்வெடுங்கள்!"

"அவர் உங்கள் கைகளில் சிக்கா விட்டால்?" என அவ்வணிகர் கூட்டத்தின் தலைவனுக்கு அருகில் நின்ற இளையவன் வினவினான்.

"அவன் விரைவில் அகப்பட வேண்டும் என உங்களது விருப்பக் கடவுளிடம் வேண்டிக் கொள்ளுங்கள்?"

"ஏன்?"

"அவன் அகப்படும் வரை நீங்கள் சிறையில் தான் கழிக்கப் போகிறீர்கள்?"

"உங்களது செயல் அதர்மம்" எனக் குறுக்கிட்டான் மூவரில் ஒருவனான யவன தேசத்தவன்.

"தர்மம் எது அதர்மம் எது என்று தீர் மானிக்க வேண்டியவன் நான்! நீ அல்ல?"

"சாதவாகன அரசருக்கு உங்களது செயல் தெரிந்தால் என்ன ஆகும் தெரி யுமா?"

"யார் சதகர்ணியைப் பற்றியா கூறு கிறாய்?"

"ஆம்! அவர் எங்களுக்கு சுதந்திரம் அளித்திருக்கிறார். படித்தானம் வழியாக அவந்தி வருவதற்கும், மகதம் செல்வதற் கும். எங்களைத் தடுக்கும் உரிமை உங்க ளுக்கு இல்லை!"

அதுவரை நிதானத்துடன் காணப் பட்ட வஜ்ரபாகுவிற்கு சதகர்ணியின்

பெயரை தென்னக வணிகர்கள் பயன் படுத்தியதும் பெரும் கோபம் வந்துவிட் டது. கோபம் தலைக்கேறியதால் அவரது விழிகள் சிவக்கத் துவங்கின. சிவந்த விழிகளுடன், “நீங்கள் அவந்தியில் வணி கம் செய்ய வரலாம் என சதகர்கணி தெரிவித்ததற்கான ஆதாரத்தை அளித் துவிட்டு நீங்கள் மூவரும் இங்கிருந்து செல்லலாம். இல்லையேல் உங்களுக்கு மரண தண்டனைதான்!” எனக் கூறிய வன், அருகில் நின்ற தனது வீரர்களிடம் இந்த மூவரையும் உடனே கைது செய் யுங்கள்!” எனக் கட்டளையிட்டு நகர்வ தற்கு அடியை வைத்தான்.

அப்போது அவ்வணிகர் கூட்டத் தின் தலைவன், “சற்றுப் பொறுங்கள்!” எனக் கூறித் தனது தோள் பையில் கையை விட்டு அதில் கிடந்த சாதவாகன தேசத்தின் நாணயத்தை அள்ளி அவனி டம் கொடுத்தான்.

“என்ன எது?”

https://telegram.me/aedahamlibra

"நாணயம்?"

"அது எனக்கும் தெரிகிறது!" நீங்கள் இந்த நாணயத்தை எனக்கு அளித்தால் உங்களை விட்டுவிடுவேன் என்று நினைக்கிறீர்களா?"

"........"

"என் காலில் விழுந்திருந்தால் உங்களை விடுவிக்கச் சொல்லிக் கட்டளையிட்டிருப்பேன். ஆனால், நீங்கள் சதகர்ணியின் பெயரைப் பயன்படுத்தியிருக்கிறீர்கள். இது மன்னிக்க முடியாத குற்றம். இதை ஒருநாளும் என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது" என வெகுண்டெழுந்தார்.

"படைத் தலைவரே, நான் உங்களுக்கு இந்த நாணயங்களை கையூட்டாக அளிக்கவில்லை."

"பிறகு?"

"அந்த நாணயத்தைப் பாருங்கள்!"

அதைப் பார்த்தபடியே வஜ்ரபாகு, "சாதவாகன தேசத்தின் நாணயம்!" என்றார்.

"அதில் என்ன எழுதியிருக்கிறது?"

"எங்களது பிராகிருத மொழியில் "ராஞோ வசிடி புதஸ ஸிரி ஸாதகணிஸ" என்று எழுதியிருக்கிறது!"

"அதே நாணயத்தைத் திருப்பிப் பாருங்கள்!"

நாணயத்தை திருப்பிப் பார்த்தார் வஜ்ரபாகு. ஆனால் அதைப் பார்த்த படியே பேந்த பேந்த விழிக்கலானார். அதைப் பார்த்த அவ்வணிகர் கூட்டத் தலைவன், "உங்களால் அதை வாசிக்க முடியுமா என எனக்குத் தெரியவில்லை படைத் தலைவரே, அது உங்களது மொழி அல்ல!"

"உங்களது மொழி என்கிறாயா?"

"ஆமாம்! இது எங்களது தமிழ் மொழி தான். இப்போது நீங்கள் எங்களிடம் கொடுந்தமிழில் பேசிக் கொண்டிருக்கிறீர்களே இதே மொழி தான். வசிட்ட வழி தோன்றல் உயர்திரு அரசர் சதகர்ணி எனத் தமிழில் பொறிக்கப்பட்டிருக்கிறது. உங்களது பிராகிருதத்தை ஒருபுறமும், எங்களது தமிழை மறுபுறமுமாக சாதவாகனர் அரசு நாணயத்தில் பதித்திருக்கிறது."

நாணயத்தின் இரண்டு பக்கங்களையும் வஜ்ரபாகு திருப்பித் திருப்பிப் பார்க்கலானார். பிறகு அனைத்து நாணயங்களையும் பார்க்கலானார்.

அதைக் கண்ட அங்கு நின்ற இளையவன், "காலம் காலமாக நூற்றுவர் கன்னர் அரச வம்சம் எங்கள் தமிழ் மன்னர்களுடன் கொண்டிருக்கும் நட்பின் அடையாளமாகவும், தமிழ் தக்சனாபதத்தில் செலுத்திக்கொண்டிருக்கும் ஆதிக்கத்தினால் தங்களது நாணயத்தில் தமிழைப் பயன்படுத்துகிறார்கள். இது கூட

https://telegram.me/aedahamlibrary

உங்களுக்குத் தெரியாதா?” என ஏளனம்
செய்யவும் செய்தான்.

அப்போது வணிகர் தலைவன்,
“படித்தானம் நகரம் செழிக்கக் கார
ணம் எங்கள் தமிழ் வணிகர்கள் தான்!
படித்தானம் வழியாக அவந்தி மற்றும்
தூர தேசத்திற்கு செல்லும் வணிகர்க
ளால் தான் பைத்தானில் செல்வம் வந்து
சேர்கிறது. நூற்றுவர் கன்னர் அரசுக்கு
ஆபத்து ஏற்படும் போது மொழிபெயர்
தேயத்தில் நிலை கொண்டிருந்த தமிழ்ப்
படைகள் உதவியிருக்கின்றன. அனைத்
திற்கும் நன்றிக் கடனாகத் தான் நூற்று
வர் கன்னர் அரச மரபு தமிழைத் தங்
கள் நாணயத்திலும் பயன்படுத்துகின்ற
னர். தமிழைப் பொறித்திருப்பதால் இந்
நாணயம் விந்திய மலைக்குத் தெற்கே
தென்னகம் முழுவதும் செல்லுபடியாகும்.
இப்படியும் உங்களது நாட்டு நாணயத்
தின் மதிப்பு கூடுகிறது. எங்களைக் கைது
செய்து தேவையில்லாத பிரச்சனையை

உருவாக்கிக் கொள்ளாதீர்கள்?" என எச்சரிக்கை செய்யலானான்.

ஆனால், அவனது எச்சரிக்கையை செவி மடுக்காத வஜ்ரபாகு, "எனக்கே பாடம் சொல்லிக் கொடுக்கும் இந்த மூன்று முட்டாள்களையும் பாதாளச் சிறையில் அடையுங்கள். இன்னொருவன் கிடைத்தபிறகு நால்வரையும் கழுவில் ஏற்றுங்கள். நான் திரும்பி வரும்போது இவர்களின் பிணங்கள் கூட இங்கு இருக்கக் கூடாது!" எனக் கட்டளையிட்டார்.

உடனே காவல் வீரர்கள் அனைவரின் கழுத்திலும் வேலினை வைத்து கை மற்றும் கால்களை பிணைக்கத் துவங்கினார்கள்.

அப்போது அங்கு வந்த அவந்திகாவின் காவல் பிரிவின் வீராங்கனை, "இம்மூவரையும் இளவரசியார் விசாரணை செய்ய வேண்டுமாம்? வந்துகொண்டிருக்கிறார்! இப்போது இவர்களைப்

பிணைக்க வேண்டாம்" எனத் தெரிவித்தாள்.

அதைக் கேட்ட வஜ்ரபாகு தனது வீரர்களிடம், "என் தங்கை விசாரித்த பிறகு இவர்களை விலங்கிட்டு இழுத்து வாருங்கள்!" எனக் கட்டளையிட்டுவிட்டு அங்கிருந்து விரைந்து செல்லலானார்.

அவர் சென்ற ஒரு நாழிகைப் பொழுதிற்குப் பிறகு அவந்திகா தனது காவல் வீராங்கனைகளின் புடை சூழ புரவியில் அங்கு வந்தாள். இளவரசிக்குரிய ஆடை, அலங்கரிப்புடன் கம்பீரமாகக் காணப்பட்டாள். அவளது விழிகளின் அசைப்பிலே அவளது கட்டளையை உணர்ந்த வீராங்கனைகள் மூவரையும் சூழலானார்கள்.

வந்தவள் சற்றுத் தொலைவில் நின்றபடியே மூவரையும் நோக்கினாள். பிறகு, "உங்களது மூவர் கூட்டணியைக் கண்டாலே எனக்கு விசித்திரமாக இருக்கிறது. ஒருவன் யவன தேசத்தவன். அது

வும் அவனது உடலில் அடிமை முத்திரை காணப்படுகிறது. இன்னொருவன் உங்களது மூவரை விடவும் இளையவனாக இருக்கிறான். அதுவும் இவனது வலது கால் தீயில் வெந்து கருத்துப் போயிருக்கிறது. இன்னொருவனின் கைகள் மற்றும் விழிகளை நோக்கினாலே இவன் போர் வீரன் என்று எளிதில் கண்டறிந்து விடலாம். அப்படியிருக்க எதற்காக மூவரும் வணிகர் வேடத்தில் அவந்திக்கு வந்திருக்கிறீர்கள்?" என வினவினாள்.

தென்னாட்டு வணிகர்கள் மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

பிறகு அவள் போர் வீரன் எனக் குறிப்பிட்ட அவ்வணிகர் குழுவின் தலைவன், "ஒரு காலத்தில் போர் வீரனாக இருந்தவன் இப்போது வணிகனாக இருக்கக் கூடாதா?" என வினவினான்.

"அப்படியெனில் நீங்கள் இப்போது உங்களது போர்த்தொழிலை விட்டுவிட்டீர்கள்?"

"அதேதான்!"

"இதே கருத்தை கிட்டத்தட்ட என் பது ஆண்டுகளுக்கு முன்னர் அசோகப் பியதசி தனது மௌரியப் படையைக் கலைத்து தான் உணர்ந்த பௌத்த தர்மத்தைப் பரப்ப வீரர்களை அனுப்பி வைத்தபோது கூறியிருந்தால் அனைவரும் நம்பியிருப்பார்கள். ஆனால், இப்போது உங்களது தென்னகச் சோழ மன்னன் வட தேசம் நோக்கிய படையெடுப்பை துவங்கியிருக்கிறான். தட்சினாபதம் முழுக்கப் பரவியிருக்கும் தமிழக வணிகர்கள் மற்றும் நாடோடிகள் அனைவரும் போர் வீரர்களாகவும், ஒற்றர்களாகவும் மாறிக் கொண்டிருக்கும் நிலையில் நீங்கள் வீரராக இருந்து வணிகனாக மாறிவிட்டேன் எனக் கூறுவது ஏற்கும்ப

டியாகவா இருக்கிறது வணிகரே?" என ஏளனத்துடன் வினவினாள் அவந்திகா.

அவளது அறிவுக் கூர்மையைக் கண்ட மூவரும் வியக்கலானார்கள். அப்போது அங்கு நின்ற இளைய வணிகன், "இளவரசியின் சிந்திக்கும் திறனும், நிகழ்வுகளை ஒன்றுக்கொன்று முடிச்சு போடும் திறனும் அபாரமாக இருக்கிறது. ஆனால், சில வேளைகளில் உண்மையை உரைப்பவர்களிடமும் நீங்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும்!" எனத் தெரிவித்தான்.

"சரி, நீங்கள் யாராக வேண்டுமானாலும் இருந்து விட்டுச் செல்லுங்கள். அதைப் பற்றி நான் கவலைப் படப் போவதில்லை!"

"திடீரென்று எங்கள் மீது உங்களுக்கு ஏன் இந்தக் கருணை?" என வினவினான் யவனன்.

அப்போது அங்கு நின்ற வணிகர் தலைவன், "இம்ஹோடெப், அவந்தியின் படைத் தலைவர் நம்மை விசாரிக்காமலேயே பாதாள சிறையில் அடைக்கச் சொல்லி கழுவில் ஏற்றக் கட்டளையிட்டார். ஆனால், இளவரசி விசாரணை செய்யாமலேயே நம்மீது கருணை கொள்கிறார். விசித்திரமாக அல்லவா இருக்கிறது?" எனத் தெரிவித்தான்.

அப்போது இம்ஹோடெப், "திருக்கண்ணா, இளவரசி நம்மை கருணை விழிகளுடன் நோக்கும் போது அதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இப்படி விதண்டா வாதம் புரிந்தால் படைத் தலைவர் ஆணையிட்டதைப் போன்று நாம் மரணத்தைச் சந்திக்க வேண்டியிருக்கும்" என்றான்.

அவர்கள் இருவரும் கூறியதைக் கேட்ட அவந்திகா புன்சிரிப்பை அவர்கள் மீது சிந்தியபடி, "என் தமையன் சற்று முன்கோபக்காரர். அவர் தெரிவித்ததை

நீங்கள் மறந்துவிடுங்கள்! எனக்கு உங்களைப் பற்றி எந்த வித ஐயமும் இல்லை!" எனத் தெரிவித்தாள்.

"அதைத் தான் ஏன் என்று வினவுகிறோம் நாங்கள்?" என வினவினான் திருக்கண்ணன்.

"காலம் காலமாகவே சாதவாகன அரசு தமிழ் மன்னர்களுடன் இணக்கமான நிலையையே கடைப்பிடித்து வருகிறது. ஆதலால் வடக்கு நோக்கி நகரும் சோழ மன்னனால் எங்களுக்கு எந்த ஆபத்தும் நேராது. பார்க்கலாம், சென்னியின் புதல்வன் என்ன செய்யப் போகிறான் என்று? எனக்கு சில தகவல்கள் தேவை. அதைத் தெரிவித்தால் உங்கள் மூவரையும் நான் விடுதலை செய்துவிடுகிறேன்!"

"படைத் தலைவரின் கட்டளை???"

"அதைப் பற்றி நீங்கள் கவலை கொள்ளத் தேவையில்லை."

https://telegram.me/aedahamlibra

"சரி, உங்களுக்கு என்ன தகவல் வேண்டும்? கேளுங்கள். தெரிந்ததை சொல்கிறோம்! ஆனால், கடைசியில் வாக்கு மாறக் கூடாது!"

"நிச்சயமாக, நீங்களும் உங்களுக்குத் தெரிந்ததை மறைக்காமல் எனக்குக் கூற வேண்டும்!"

"நிச்சயமாக இளவரசி!"

"வடக்கே படையெடுத்து வருகிறானே சென்னியின் புதல்வன்? அவனைப் பற்றித் தெரிவியுங்கள். அவன் நடத்திய வெண்ணிப் போரைப் பற்றிக் கூறுங்கள். அவனது படைத் தலைவர்களைப் பற்றிக் கூறுங்கள்! அவனது படைகளைப் பற்றிக் கூறுங்கள்" என அவள் கூறிக்கொண்டிருந்த போதே இடைமறித்த திருக்கண்ணன், "இப்படி ஒரே நேரத்தில் கேள்விகளைக் கேட்டால் என்னால் எப்படி இளவரசி பதிலைக் கூற இயலும்? ஒவ்வொரு கேள்விகளாகக் கேளுங்கள். எங்களுக்குத் தெரிந்த

பதிலை நாங்கள் தெரிவிக்கிறோம்!" எனத் தெரிவித்தான்.

"சரி, உங்களது சோழ மன்னனைப் பற்றிக் குறிப்பிடுங்கள்!"

சிறிது நேரம் சிந்தித்தான் திருக் கண்ணன், அருகில் நின்ற இளைய வனை நோக்கினான். பிறகு அவந்தி காவை நோக்கினான். அவளது விழிக ளையே சிறிது நேரம் பார்த்துக் கொண் டிருந்தவன், "தென்னகத்தின் மீது படை யெடுத்த மௌரியப் பேரரசன் அசோகப் பியதசியின் படையைத் தடுத்து நிறுத்திய மாமன்னன் செருப்பாழி எறிந்த இளஞ் சேட்சென்னியின் புதல்வன்தான் கரிகா லன். அவர் பிறப்பதற்கு முன்னரே தந் தையை இழந்தார். பிறந்த போது தாயை யும் இழந்தார். வளரும் போது தனக்குரிய அரசையும் இழந்தார். தனது இளம் பரு வத்திலேயே எதிரிகளால் தனது தலை நகரிலேயே சிறை வைக்கப்பட்டார். சிறை வைக்கப்பட்டது மட்டுமல்ல. மாளி

கைக்குள் அடைக்கப்பட்டு உயிரோடு கொளுத்தப்படவும் செய்தார்!"

"உயிரோடு கொளுத்தினார்களா?"

"ஆம்!"

"பிறகு எப்படி அங்கிருந்து அவன் தப்பித்தான்?"

"கூர்மையான நகத்தையும், வளைந்த வரிக் கோடுகளையும் உடைய புலிக் குட்டியானது கூட்டிலே அடைபட்டு வளர்வதைப் போல பகைவரின் சிறைச் சாலையிலேயே வளர்ந்தவர் சோழ மன்னர் கரிகாலர். தனக்குரிய அறிவு ஆண்மைக் குணங்களால் வயிரம் போல முதிர்ந்து குழியில் அகப்பட்டுக்கொண்ட யானை நீண்ட தனது துதிக்கையால் அக் குழியை நிரப்பி தப்பிச் சென்று தனக்குரிய பெண் யானையுடன் கூடுவதைப் போன்று சோழ இளவலும் எதிரிகளால் சிறை வைக்கப்பட்ட போது தனக்குரிய காலம் வரும்வரை பகைவனின் சிறையி

லேயே உயிர் பிழைத்து, பிறகு அங்கி ருந்து தப்பித் தனது புலிப் படையைத் திரட்டி தன்னை எதிர்த்த பகைவர்கள் அனைவரையும் கொன்று தனக்குரிய ஆசனத்தை மீட்டுக் கொண்டார்."

"மாவீரனாகத் தான் இருக்கிறான்!"

"அவர் வீரர் மட்டுமல்ல. கொடை வள்ளலும் கூட! அவரிடம் மண்டியிட்டு உன் நாட்டை எனக்குக் கொடு எனக் கேட்டால் தயங்காமல் கொடுத்துவிட் டுச் சென்றுவிடுவார். ஆனால், அவருக் குரியதை தட்டிப் பறிக்க எண்ணினால் அவரது கருணையே அற்ற வேலிற்கு பதில் கூற வேண்டியதிருக்கும்!"

"........."

"மற்ற மன்னர்களைப் போன்று படைக்குப் பின்புறமாக நின்று உத்தரவை மட்டும் பிறப்பிப்பவர் அல்ல எங்களது மாமன்னர். படைக்கு முன்னால் வீரர்களு டன் வீரர்களாக நின்று படையை வழிந

டத்துபவர்தான் எங்களது சோழப் பேரரசர் கரிகாற் பெருவளத்தான். மாறுவேடமிடுதலில் அவரை மிஞ்ச உலகில் எவராலும் இயலாது. இப்போது கூட அவரே மாறுவேடமிட்டு எந்த நாட்டில் உலாவிக் கொண்டிருக்கிறாரோ?" எனக் கூறிக் கொண்டிருந்த போது குறுக்கிட்ட இளையவன், "தலைவரே, எவ்வளவு நேரம் தான் உமது அரசரின் புகழைக் கூறுவீர்கள்? இளவரசியின் மற்ற கேள்விகளுக்கு விடை அளிக்கும் எண்ணம் இல்லையா?" எனச் சிரித்தபடி வினவினான்.

புன்சிரிப்பை வெளிப்படுத்தினான் திருக்கண்ணன். அப்போது அவந்திகா, "காகந்தி முற்றுகையையும், வெண்ணிப் போரைப் பற்றியும் குறிப்பிடுங்கள்!" எனக் கட்டளையிட்டாள்.

"இருங்கோவேளின் ஒட்டு மொத்தப் படையும் புகாரை முற்றுகையிட்டது. அது மட்டுமல்ல, சேர, பாண்டிய மற்றும்

https://telegram.me/aedahamlibra

சிங்கள நாட்டுக் கடற்படைகளும் ஒரே நேரத்தில் புகாரை முற்றுகையிட்டன.”

“ஒரே நேரத்தில் தரை மற்றும் கடல் மார்க்கமாக முற்றுகையிட்டார்களா?” என எதுவுமே வெண்ணிப் போரைப் பற்றிக் கேள்விப் படாதவளைப் போன்று வினவினாள் அவந்திகா.

“ஆம்! தனது படைத் தலைவர் செங்குவீரர் இல்லாமலேயே புகார் முற்றுகையை இரண்டே கிழமையில் முறியடித்து புகாரைத் தாக்க வந்த படைகளை துவம்சம் செய்து விரட்டிச் சென்றுவிட்டார் சோழ இளவல். ஆனால்...”

“என்ன ஆனால்?”

“மொத்த படையும் புகாரை விட்டு விலகிச் சென்ற பிறகு புகாரைக் கைப்பற்ற சிங்கள இளவரசன் பல்லாயிரக்கணக்கான வீரர்களுடன் வந்துவிட்டான்.”

“பிறகு?”

https://telegram.me/aedahamlibra

“பிறகு என்ன, எங்களது கடற் படைத் தலைவன் பரதவன் குமரன் சேர, பாண்டிய மற்றும் சிங்களப் படை களை கடலுக்குள் மூழ்கடித்த கையோடு அடுத்த நாள் சிங்கள இளவரசனின் படையையும் தடுத்து நிறுத்திவிட்டான். அவன் தீர்க்கமாகப் போரிட்டுக்கொண்டி ருந்த போது யவனத்திலிருந்து எங்களது படைத் தலைவர் செங்குவீரர் அவரது நண்பரான வேளக்காரப்படைத் தலை வர் திவ்யனுடன் புகார் வந்துவிட்டார். சிங்களப் படையை இரண்டு புறத்திலும் சுற்றி வளைத்தது சோழர் கடற்படை. சர ணடைந்தான் சிங்கள இளவரசன்!”

“சரணடைந்தவர்களைக் கொண் டுதான் சோழ மன்னன் காவேரி நதிக்குக் குறுக்கே அணையைக் கட்டத் துவங்கி விட்டானா?”

“ஆம்!”

“சிங்கள இளவரசன் என்ன ஆனான்?”

"அவன் கொடூரமாகக் கொல்லப் பட்டான்."

"எதற்கு?"

"அது அவனது விதியின் பயன். அவன் செய்த தவறுக்கு உரிய தண்ட னையைப் பெற்றான்!"

"யவனத்திலிருந்து உங்களது படைத் தலைவர் திரும்பி வந்தார்கள் என்கிறாயே, அவர்கள் எதற்காக யவனம் சென்றார்கள்?"

"சோழ இளவரசரின் வேளக்காரப் படைத் தலைவர் திவ்யன் சிங்கள இள வரசன், அவந்தி இளவரசன், மகத இள வரசன் மற்றும் புகாரின் வைதீகர் மகன் அக்னி புத்திரன்" எனக் கூறிக்கொண் டிருந்த போதே குறுக்கிட்ட அவந்திகா, "என்ன பெயர் தெரிவித்தாய்?" என வின வினாள்.

"அக்னிபுத்திரன்!"

https://telegram.me/aedahamlibra

"சரி மேலே கூறு!"

"இவர்கள் அனைவரும் வேளக்காரப் படைத்தலைவர் சென்ற மரக்கலத்தை நடுக் கடலில் மறித்துத் தாக்கி அவரை யவனத்திற்கு அடிமையாக விற்றுவிட்டார்கள்!"

"அங்கிருந்து அவர் எப்படித் தப்பி வந்தார்?"

"கொற்கைக்கு மாறுவேடத்தில் சென்றிருந்த எங்களது சோழ இளவலைக் கொலை செய்ய முயன்றார்கள். அப்போது செங்குவீரர் தன்னுயிரை தியாகம் செய்து இளவலைக் காப்பாற்றினார். அவர் இறந்து போனார் என்று அனைவரும் நினைத்தார்கள்! ஆனால், சரியான நேரத்திற்கு அடிமையாக விற்கப் பட்ட வேளக்காரப் படைத் தலைவரை விடுவித்து புகாருக்கு அழைத்து வந்து விட்டார்."

"கேட்பதற்கு பிரமிப்பாக இருக்கிறது. செங்குவீரரைப் பற்றி கூறு!"

"என்ன தெரிவிக்க வேண்டும்?"

"அவர் யவனத்திற்கு சென்ற விதம் அங்கிருந்து அவர் தப்பி வந்தது பற்றி?"

"என்னை விட எனக்கு அருகில் இருக்கும் இந்த யவனன் தான் செங்குவீரரைப் பற்றி அதிகம் தெரிந்தவன். "இம்ஹோடெப் இளவரசியின் கேள்விக்கு பதில் கூறு!" எனக் கட்டளையிட்டான் திருக்கண்ணன்.

அடிமை வீரனான இம்ஹோடெப், "அவரது வீர தீரச் செயல்களைப் பற்றியும், அவரது கருணையைப் பற்றியும் கூற வேண்டுமானால் நான் நாள் முழுவதும் கூறிக்கொண்டு இருப்பேன். காலம் விரையமாகும். பரவாயில்லையா?" என வினவினான்.

"பரவாயில்லை. நான் கேட்பதற்கு தயாராக இருக்கிறேன்!" எனக் கூறியவள்

"நீ தொடரலாம்" எனக் கூறும்பொருட்டு கையை மட்டும் ஆட்டி சைகை செய் தாள்.

இம்ஹோடெப், செங்குவீரனின் சாகசப் பயணத்தைக் கூறத் துவங்கி னான். "செங்குவீரன் கொற்கையில் கரி காலரைக் காப்பாற்றிவிட்டு மரக்கலத்தில் அகப்பட்டு ஹிப்பாலாசின் கலத்திற்குச் சென்றது முதல் அங்கு அவன் ஹிப்பா லாசால் ஏமாற்றப்பட்டு யவனக் கன்னி ஆண்ட்ரிமேடாவை சந்தித்தது, பிறகு அவளாலும் ஏமாற்றப்பட்டு யவனத்திற்கு விற்கப்பட்டது முதல் கடைசியில் சர் கஸ் மாக்சிமிசத்தில் அடிமை வீரர்களு டன் சண்டையிட்டு அவன் பெற்ற வெற் றிகள், திவ்யனை சந்தித்த விதம், பிறகு யவனத் தளபதியைக் கொன்று அவர்கள் அனைவரும் அங்கிருந்து தப்பியது. வரும் வழியில் ஆண்ட்ரிமேடாவுடன் நிகழ்ந்த கடற் போர், கடைசியில் ஆண்ட்ரிமேடா ஹிப்பாலாசைக் கொன்றது. அவர்கள் புகாரை அடையும் வேளையில் சிங்களக்

கடற்படை முற்றுகையிட்ட விதம், சிங்க ளப் படையை முறியடித்து வெண்ணிப் போரை செங்குவீரன் முடித்து வைத்தது வரை" என அனைத்தையும் தெரிவித் தான் இம்ஹோடெப்.

அவன் கூறியதைக் கேட்டதும் அவந்திகா பிரமிப்பில் ஆழ்ந்து போய், "தன்னம்பிக்கையை தளரவிடாத முரட்டு வீரன்தான்" எனத் தெரிவித்தாள்.

அப்போது குறுக்கிட்ட இம்ஹோ டெப், "வீரர் என்று கூறுங்கள். கரு ணையே வடிவானவர் அவர். முரடர் எனக் கூற வேண்டாம்" என உணர்ச்சி வசப்பா டலானான்.

அதையும் கவனித்திருந்த அவந் திகா, "முரண்பாடாக அல்லவா இருக்கி றது?" என வினவினாள்.

"என்ன முரண்பாடு?"

"வீரமும் கருணையும் ஒரே இடத் தில் குடியிருக்கிறது என்கிறாயே?"

https://telegram.me/aedahamlibrary

“தமிழர்கள் காதலையும் வீரத்தையும் போற்றவில்லையா? அதைப் போன்றதுதான் அவரது வீரமும் கருணையும்!”

அவன் கூறிய பதிலைக் கேட்டுப் புன்னகைத்த அவந்தி இளவரசி, “யவனனான நீ தமிழ் வீரனைப் பற்றிக் குறிப்பிடுவது விசித்திரமாக இருக்கிறது. அதிலும் நீ வீரனிடத்தில் காதல், கருணை ஆகியவை பற்றிக் குறிப்பிடுவது விசித்திரத்திலும் விசித்திரம்!” எனக் கூறியவள் அவனது அடுத்த பதில் என்னவாக இருக்கும் என கவனத்துடன் நோக்கினாள்.

பதிலுக்கு இம்ஹோடெப், “செங்குவீரர், ஆண்ட்ரிமேடாவின் கலத்திற்குச் சென்றதே அடிமைகளை ஹிப்பலாசிடமிருந்து விடுவிக்கத்தான்” எனக் கூறிக்கொண்டிருந்த போதே குறுக்கிட்ட திருக்கண்ணன், “இம்ஹோடெப், தென்னக வீரரின் காதல் பயணத்தைப் பற்றியும் அவரது வெஞ்சினத்தை அவர்

நிறைவேற்றிய விதத்தைப் பற்றியும் இள வரசிக்குக் கூறிவிடு! அப்போதாவது நம் தமிழ் வீரர்களின் காதலைப் பற்றி அவர் அறிந்து கொள்கிறாரா என்று பார்ப் போம்?” எனச் சிரித்தபடி கட்டளையிட் டான்.

உடனே இளவரசியும் ஆவலுடன் தலையசைக்க இம்ஹோடெப் மீண்டும் செங்குவீரனது காதல், அவன் வெஞ்சி னத்தை நிறைவேற்றி தனது காதலியை அடைந்த விதம் பற்றிக் கூறலானான். இம்ஹோடெப் கூறி முடித்ததும், அவந்தி காவின் வீராங்கனை அவளது காதோ ரம், “இளவரசி, இவர்கள் மூவரையும் கண்டால் எனக்கு சந்தேகமாக இருக் கிறது. அதிலும் இவர்கள் கூறுவதைக் கேட்ட பிறகு என் சந்தேகம் பலம டங்கு அதிகமாகிவிட்டது” எனப் பிராகி ருத மொழியில் அவளிடம் தெரிவித்தாள்.

பதிலுக்கு அவந்திகா, “என்ன சந் தேகம்?” என வினவினாள்.

“மரக்கலத்தில் செங்குவீரருடன் பயணித்த அடிமை நமக்கு முன் நிற்கும் யவனனாக இருப்பானோ, எனத் தோன்றுகிறது எனக்கு!”

“எதனால் உனக்கு இந்த சந்தேகம் வந்தது?”

“அருகில் இருந்தவனைத் தவிர எவனாலும் இப்படிக் கதையைப் பொருத்தமாகக் கூற இயலாது!”

“அதை மட்டும் தான் நீ கவனித்தாயா?”

“வேறு எதை இளவரசி?”

“மூவரில் ஒருவன் இளையவனாக நிற்கிறானே அவனது வலது காலை நீ கவனித்தாயா?” என வினவ அவ்வீராங்கனை அவனது காலை நோக்கினாள். “அவனது இடைத் துணிக்குக் கீழே தெரியும் கெண்டைக் கால் கருகியிருக்கிறது. எதிரிகள் மாளிகையோடு எரித்த சோழ இளவல் இவராக இருக்குமோ என்று சந்

தேகம் கொள்கிறேன் நான்" என அவந்தி இளவரசி கூறியதும் அவ்வீராங்கனை யின் உடல் அச்சத்தில் நடுங்கத்துவங்கி யது.

மூவரையும் நோக்கிய அவந்திகா, "சோழப் படையைப் பற்றி யாரும் குறிப்பி டவில்லையே?" என வினவினாள்.

"சோழப் படை இப்போது மொழி பெயர் தேயத்தில் கிருஷ்ணை நதிக்க ரையில் அமராவதிக்கு அருகில் இறங் கியிருக்கிறது எனக் கேள்விப்பட்டோம். எவ்வளவு பெரிய படை தெரியுமா அது?"

"எவ்வளவு பெரிய படை அது?"

"தென்னகத்தின் அனைத்து நாடு களின் வீரர்களையும் அடங்கிய கூட்டுப் படை அது! பேரரசர் கட்டளையை எதிர் பார்த்து நிறைவேற்றும் படைத் தலைவர் களைக் கொண்ட படை அல்ல அது. பேரரசரின் மனதில் நினைத்திருக்கும் காரியத்தை நிறைவேற்றி விட்டு தகவ

https://telegram.me/aedahamlibra

லைத் தெரிவிக்கும் படைத் தலைவர்களைக் கொண்டது அது. படை பெருத்ததால் இந்த உலகம் சிறியதாக இருக்கிறதா அல்லது இந்த உலகம் சிறியதாக இருப்பதால் படை பெரியதாக இருக்கிறதா என நினைக்க வைக்குபடியான பெரிய படை அது. திறமையான காலாட், யானை, புரவி மற்றும் தேர்ப் படையையும் கொண்டது சோழர் படை. அது மட்டுமல்ல கடல் மார்க்கமாகவே அப்பெரும் படை அமராவதிக்கு வந்து சேர்ந்திருப்பதாக அனைவரும் கூறுகிறார்கள். சோழர் படையின் காலாட்படை நகரத் துவங்கினால் வீரர்கள் மொத்தமாக ஓரிடத்தைக் கடக்க ஒரு பொழுது பிடிக்கும். அவர்களின் யானைகள் ஒரே நாளில் ஒரு காட்டையே உண்டு அழித்துவிடும். அவர்களின் ஒற்றர் படை ஊடுருவாத இடமே இல்லை. சோழப் பேரரசருக்குத் தெரியாமல் தட்சனாபதத்தில் ஒரு நிகழ்வு கூட நடக்காது."

https://telegram.me/aedahamlibra

"நீங்கள் கூறும் தகவல்கள் அனைத்தும் விசித்திரமாக இருக்கிறது" எனத் தெரிவித்தவள், அருகில் நின்ற வீரனிடம், "அவர்களின் தோள் பைகளை வாங்கிக் கீழே கொட்டு. அதில் என்ன இருக்கிறது என நான் அறிய வேண்டும்!" எனக் கட்டளையிட்டாள்.

அருகில் நின்ற வீரன் ஒருவன் மூவ ரின் தோள்களில் கிடந்த பைகளை வாங் கிக் கீழே கொட்டினான். அதிலிருந்து நாணயங்கள், வளவிகள், சில குறுவாட் கள் மற்றும் மாற்றுடைகள் கீழே விழுந் தன.

அதைப் பார்த்த இளவரசி புன் னகை ஒன்றை வெளிப்படுத்தி, "வணி கரே, முன்னொரு காலத்தில் வீரனாக இருந்தேன் எனத் தெரிவித்தீர்கள்? அத் தொழிலின் ஞாபகத்தில் இந்த ஆயுதங் களை வைத்திருக்கிறீர்களா?" என விச மத்துடன் வினவினாள்.

“எங்களது வாழ்க்கை நாடோடி வாழ்வு என்றாகிவிட்டது. சுய பாதுகாப்பிற்கு ஆயுதம் இல்லாமல் எப்படி?” எனப் பதிலுக்கு வினவினான் திருக்கண்ணன்.

அவன் கூறியதைப் பார்த்தபடியே பையை மேலும் ஆராய்ந்தாள் அவந்திகா. அதில் ஒரு புல்லாங்குழலும் கிடந்தது.

அதைப் பார்த்தவள், “இது யாருடையது?” என வினவினாள்.

இம்ஹோடெப், “என்னுடையது?” எனப் பதிலளித்தான்.

“யவனனான உனக்கு புல்லாங்குழலையும் வாசிக்கத் தெரியுமா?” என வினவினாள்.

“தென்னகத்தில் கற்றுக்கொண்டேன்!”

“வாசித்துக் காட்டு பார்க்கலாம்!”

https://telegram.me/aedahamlibra

கையில் புல்லாங்குழலை எடுத்து வாசிப்பதற்காக வாயில் வைத்தான் இம்ஹோடெப். அப்போது திருக்கண்ணன், “இம்ஹோடெப், தயவுசெய்து அதை நீ வாசிக்காதே!” என அலறினான்.

அவன் அலறியதைப் பார்த்த அவந்திகா, “எதற்காக அவனை தடுக்கிறீர்கள்?” என வினவினாள்.

“வேறு யாரை வேண்டுமானாலும் வாசிக்கச் சொல்லுங்கள். இவர் மட்டும் அதனை வாசிக்க வேண்டாம்!”

“எதற்கு?”

“அவரால் அதில் மரண ராகத்தை மட்டுமே வாசிக்க இயலும்?”

“மரண ராகமா?”

“ஆம்!”

“புதிதாக அல்லவா இருக்கிறது?”

“புதியது அல்ல!”

https://telegram.me/aedahamlibra

"அவ்வளவு மோசமாகவா வாசிப்பார் அதனை?"

"இல்லை, இவரை விடவும் புல்லாங்குழலை அதியற்புதமாக வாசித்தவரை நான் கண்டதில்லை. ஆனால், அவர் வாசிக்கும் இராகத்தை என் செவிகள் கேட்டால் எனக்குள் சித்தம் கலங்கிவிடுகிறது. என்னை என்னால் கட்டுப்படுத்த இயலாது! இவர் அதனை வாசித்திருக்கும் தருணங்களில் எல்லாம் மரணமே நிகழ்ந்திருக்கிறது."

"இப்போது, அதையும் தான் பார்த்து விடுவோமே?"

"விபரீதம் நிகழ்ந்தால் நான் பொறுப்பல்ல!"

இருவரின் உரையாடலையும் கேட்டுக்கொண்டு நின்ற இம்ஹோடெப்பிடம், "இன்னும் எதற்காக வெறுமனே நிற்கிறீர்கள்? வாசியுங்கள்!" என அவந்திகா கட்

டளையிட்டதும் இம்ஹோடெப் வாசிக்கத் துவங்கினான்.

அவன் வாசிக்கத் துவங்கியதும் குழலிலிருந்து இசை அருவியாய் விழுந்து காதை நிரப்பத் துவங்கியது. நேரம் கடக்கக் கடக்க குழலிலிருந்து வெளி வந்த ஒளியின் சுருதி அதிகரித்து நாதம் நீண்டு கொண்டிருந்தது. ஒரு கட்டத்தில் அங்கு நின்ற அனைவருமே அவனது புல்லாங்குழல் இசையில் மயங்கி விழிகளை மூடியிருந்தார்கள்.

சுற்றி நின்றவர்கள் அனைவரும் இம்ஹோடெப்பின் இசையில் விழிகளை மூடியிருக்க இசையின் இன்பத்தில் நின்றுகொண்டிருந்தாள் அவந்திகா. அப்போது திடீரென்று அவந்திகாவின் வீராங்கனை ஒருத்தி அதிர்ச்சியில் அலற விழிகளைத் திறந்தாள். தான் காண்பதை அவளால் நம்ப முடியவில்லை. பேரதிர்ச்சிக்கு உட்பட்டிருந்தாள். அவளுக்கு முன் நின்ற கிட்டத்தட்ட பத்து வஜ்ரபாகுவின்

வீரர்களும் மரணித்துக் குருதிப் பெருக்கில் மண்ணில் கிடந்தார்கள். அவளுக்கு முன் நின்ற திருக்கண்ணனை மிரட்சியுடன் நோக்கினாள் அவந்திகா.

"நான்தான் அப்போதே தெரிவித்தேனே, இவன் மரண கீதத்தை வாசிக்க வேண்டாம் என்று. கேட்டீர்களா?" எனச் சர்வ சாதரணமாக வினவினான்.

அதுவரை இம்ஹோடெப்பின் இசையில் லயித்திருந்த மற்ற வீராங்கனைகளும் அலறல் சத்தத்தைக் கேட்டு கண் விழித்து கீழே மரணமடைந்து கிடந்தவர்களைக் கண்டார்கள். உடனே அவந்திகாவிற்குக் காவலுக்கு வந்த வீராங்கனைகள் அனைவரும் வாட்களை உயர்த்தி மூவரையும் சுற்றி வளைத்தார்கள்.

சுற்றி வளைத்த வீராங்கனைகளை மிரட்சியுடன் நோக்கினர் மூவரும்.

"தப்பிக்க முயன்றால் மூவரும் கொல்லப் படுவீர்கள்!" எச்சரித்தாள் அவந்திகா.

"அதற்கு அவசியம் இருக்காது தேவி. எனது குறுவாளை நான் இதுவரை பெண்களை நோக்கி உயர்த்தியதில்லை. என்னால் இவர்களுக்கு எந்த ஆபத்தும் வராது? தாராளமாகத் தாங்கள் என் மீது நம்பிக்கை கொள்ளலாம்!" எனத் தெரி வித்தான் திருக்கண்ணன்.

அதற்கு மேல் அவந்திகா தாமதிக் கவில்லை. "மூவரையும் கைது செய்யுங் கள்!" என்று கட்டளையைப் பிறப்பித் தாள். உடனே வீராங்கனைகள் மூவரை யும் கைது செய்து அழைத்துச் செல்லலா னார்கள்.

அப்போது திருக்கண்ணனுடன் மாறுவேடத்தில் நின்ற கரிகாலர், "அவர் களை எதற்காக திருக்கண்ணா இப் போது கொன்றாய்?" என வினவினார்.

"என் பேரரசர் மாறு வேடத்தில் நின்றாலும் அவரை அவமதித்தவர்களை நான் எப்படி அரசே சும்மா விடுவேன்! வாய்ப்பு கிடைத்தது பயன்படுத்திக் கொண்டேன்! என்ன துணிச்சல் இருந் தால் உங்களது கழுத்தில் வேலினை வைப்பார்கள்?"

"பெண்களிடத்தில் உன் வாளினை உயர்த்த மாட்டேன் என்றாயே, என்ன செய்வதாய் உத்தேசம்?"

"கவலை வேண்டாம் அரசே. நம் படைத் தலைவர் செங்குவீரரும், வேளக் காரப் படைத் தலைவர் திவ்யனும் துணைக்கு இருக்க நமக்கு என்ன கவலை? தகுந்த காலம் வரும்வரை அவந்தியில் பாதுகாப்பாக இருக்கச் சொல்லி அனுப்பி வைத்தார். அவந் தியில் அவந்திகாவின் காவலை விட வும் வேறு எங்கே நம்மால் பாதுகாப்பாக இருக்க முடியும்? செங்குவீரரின் உத்த ரவு வரும்வரை இளவரசி அவந்திகாவின்

சிறைச் சாலையில் சிறிது காலம் ஓய்வு எடுக்கலாம்! நெடுந்தொலைவு புரவிப் பயணம் களைப்பை ஏற்படுத்தியிருக்கிறது" என திருக்கண்ணன் கூறியபடி மூவரும் வீராங்கனைகளுடன் நடக்கலானார்கள்.

இறந்து கிடந்த வஜ்ரபாகுவின் வீரர்களின் உடல்களைப் பார்த்தபடியே நின்ற அவந்திகாவிடம், "அவர்கள் மூவரையும் எங்கு இளவரசி சிறை வைக்க?" என வினவினாள் வீராங்கனை ஒருத்தி.

"சிறைச் சாலையில்தான்!" சட்டென்று பதில் வந்தது அவளிடமிருந்து.

"சோழப் பேரரசரை சிறையில் அடைப்பதா?" பதற்றத்துடன் வினவினாள் அவள்.

"முடிவே செய்து விட்டாயா நீ?"

"......."

சிறிது நேரம் சிந்தித்த அவந்திகா, "அவர்கள் மூவரையும் மாளிகையில் காவல் வை. அதே நேரம் அவர்களுக்கு வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொடு. அதில் எந்தக் குறை யும் வேண்டாம். உடனே சதகர்ணிக்குப் புறா மூலம் தகவல் அனுப்பிவிடு. அவன் விரைந்து வரட்டும்! நிலைமை மோசம டைவதற்குள் அவன் இங்கு வந்துவிடட் டும்" எனக் கட்டளையிட்டாள்.

உடனே விடைபெற்றுச் சென்றாள் அவ்வீராங்கனை.

மற்றொரு வீராங்கனை அவந்திகா விடம், "இளவரசி, அவர்கள் கூறியதைப் போன்று மாவீரர்களை உள்ளடக்கியதா சோழர் படை?" என அச்சத்துடன் வின வினாள்.

"அவர்கள் கூறியதைப் பற்றிக் கவ லைப் படாதே! இது உளவியலின் ஒரு யுக்தி. படையெடுத்துச் செல்வதற்கு முன் பலத்தைப் பல மடங்கு உயர்த்தித் தெரி

வித்தால் எதிரிகள் போரின் தொடக்கத் திலேயே நம்பிக்கையை இழந்து விடு வார்கள். அதைத் தான் சோழர்களும் கையாள்கிறார்கள். போரியல் நுட்பங் கள் அனைத்தையும் அறிந்த எவனோ ஒருவன் சோழர் படையைப் பின்னால் இருந்து நகர்த்துகிறான். அவனை எப்ப டித்தான் வட தேசத்து மன்னர்கள் எதிர் கொள்ளப் போகிறார்களோ?"

"அவன் இப்போது எங்கு இளவரசி இருப்பான்?" என வினவினாள்.

அவள் கேட்ட கேள்விக்குப் பதில் கூற முடியாத அவந்திகா, "கார்த்திகாவை நான் உடனே சந்திக்க வேண்டும். பல மர்மங்களுக்கு விடை கிடைத்துவிட்டது இன்று! அவளை உடனே அழைத்து வா!" எனக் கட்டளையிட்டவள் தனது மாளி கையை நோக்கிப் புரவியில் கிளம்பி னாள்.

அடிக்குறிப்பு:

https://telegram.me/aedahamlibra

1. அகழ்வாராய்ச்சியின் போது சாதவாகன கால ஆறு நாணயங்கள் இதுவரை கண்டெடுக்கப்பட்டிருக்கின் றன. அந்த ஆறு நாணயங்களிலும் ஒரு புறம் பிராகிருத மொழியிலும் இன்னொரு புறம் பண்டைய (தமிழ்) தமிழி எழுத்திலும் சாதவாகன அரசரது பெயர் பொறிக்கப் பட்டிருக்கிறது. குமரிக்கும் வடவேங்கடத் திற்கும் அப்பாற்பட்ட தமிழகம் அல்லாத தேசத்தில் கண்டெடுக்கப்பட்ட தமிழ் பொறித்த பழமையான நாணயம் சாதவா கனர்களின் நாணயம் தான். சங்ககாலத் தின் தொடக்க காலத்தில் தமிழ் கொடுந் தமிழாக விந்திய மலை வரை பேசப்பட் டிருக்கிறது என்பதற்கு இந்த நாணயங் கள் பெரும் ஆதாரமாக விளங்குகின்றன. மேலும் விந்திய மலை வரை தமிழுக்கு இருந்த செல்வாக்கையும் இந்நாணயங் கள் நன்கு வெளிப்படுத்துகிறது.

சாதவாகன நாணயத்தில் ஒருபு றம் காணப்படும் பிராகிரத எழுத்துகளும்,

https://telegram.me/aedahamlibrary

மறுபுறம் காணப்படும் தமிழ் எழுத்துகளும்:

1. ராஞோ வசிடி புதஸ ஸிரி புலுமாவிஸ > அரசனகு வசிட்டி மகனகு திரு புலுமாவிகு

2. ராஞோ வசிடி புதஸ ஸிரி ஸாதகணிஸ > அரசனகு வசிட்டி மகனகு திரு சதகணிகு

3. ராஞோ வசிடி புதஸ சிவ ஸிரி புலுமாவிஸ > அரசனகு வசிட்டி மகனகு சிவதிரு புலுமாவிகு

4. ராஞோ வசிடி புதஸ ஸிரி கட ஸாத கனிஸ > அரசனகு வசிட்டி மகனகு திரு சதகணிகு

5. ராஞோ கௌதமி புதஸ ஸிரி யஞ்ஞ ஸாத கணிஸ > அரசனகு கௌதமி புதகு திரு யஞ்ஞ சதகணிகு

https://telegram.me/aedahamlibra

6. ராஞோ வசிடி புதஸ சிவ ஸிரி விஜய ஸாத கணிஸ > அரசனகு வசிட்டி புதகு திரு விஜய சதகணிகு

இதில் இரண்டாவது கிடைத்திருக்கும் நாணயம் தான் நம் வானவல்லியில் வரும் சதகர்ணியின் கால நாணயம். இந் நாணயங்களில் வரும் "வசிட்டி" எனும் சொல் சாதவாகனர்கள் வசிஷ்ட முனிவரின் வழி வந்தவர்கள் என்பதைக் குறிப்பிடுகிறது.

2. நூற்றுவர் கன்னர்: சாதவாகனர் என்பதைத் தமிழ் சங்ககால இலக்கியங்கள் நூற்றுவர் கன்னர் என்றே குறிப்பிட்டிருக்கின்றன. (சாத - புரவி, வாகன - பயணிப்பவர்) சாதவாகனர் - புரவியில் பயணிப்பவர்கள் என்றும் சாதவ - கன்னர், சாதவ > சதம் > நூறு > நூற்றுவர் = சாதவாகனர் - நூற்றுவர் கன்னர் என்றும் பொருள் கொள்கிறார்கள். சிலப்பதிகார கால்கோள் காதையில் தமிழருக்கு மிகவும் நெருக்கமான நூற்றுவர் கன்னர் அரச

https://telegram.me/aedahamlibrary

மரபைப் பற்றி இளங்கோவடிகள் குறிப் பிட்டிருக்கிறார்.

3. கூர் உகிர்க்

கொடுவரிக் குருளை, கூட்டுள் வளர்ந்தாங்குப்

பிறர், பிணியகத்து இருந்து, பீடுகாழ் முற்றி,

அருங்கரை கவியக் குத்திக், குழி கொன்று,

பெருங்கை யானை, பிடி புக்காங்கு

நுண்ணி தின் உணர நாடி, நண் ணார்

செறிவுடைத் திண்காப்பு ஏறி, வாள் கழித்து

உருகெழு தாயம் ஊழின் எய்தி. பட் டினப்பாலை: 220 - 227

4. அமராவதி: வடுகர் நாட் டில் கிருஷ்ணை நதி வங்கக் கடலுடன்

கலக்கும் முகத்துவாரத்தில் காணப்படும் நகரம். இது சாதவாகனர்களின் கடைக் காலங்களில் தலைநகராவும் சில காலம் விளங்கியது.

https://telegram.me/aedahamlibra

# 6. தொட்டிலும், கட்டிலும்

சோழ நாட்டிலிருந்து புறப்பட்டிருந்த பெரும்படை வடுகர் நாட்டில் மொழிபெயர் தேயத்தில் கிருஷ்ணை நதியின் வடகரையில் அமராவதி நகருக்கு அருகில் நிலை கொண்டிருந்தது. விழிகளுக்கு எட்டும் தொலைவு வரை வீரர்களின் கூடாரங்கள் தான் பார்வைக்கு எட்டியது.

கூடாரம் அமைத்துக்கொண்டும், போர் ஒத்திகையிலும் ஈடுபட்டுக்கொண்டிருந்த வீரர்களைப் பார்வையிட்டபடியே செங்குவீரனும், வில்லவனும் சென்று

கொண்டிருந்தார்கள். அப்போது வில்ல வன், "தலைவரே, எவ்வளவு நாள் நாம் இங்கே நிலை கொண்டிருக்கப் போகி றோம்?" என வினவினான்.

"அதைக் காரவேலனும், சுங்கனும் தான் வில்லவா முடிவு செய்யவேண்டும். அவர்கள் என்ன முடிவெடுத்திருக்கிறார் கள் என்பதை முதலில் அறிவோம் நாம். அவர்களின் முடிவிற்குத் தகுந்ததைப் போன்று பிறகு நம் படையை நாம் நகர்த் தத் துவங்குவோம்" எனப் பதிலளித்தான் விறல்வேல்.

"காரவேலனும், புஷ்யமித்திர சுங் கனும் ஒன்றாகப் பகைமையை மறந்து இணைவார்கள் என்று எண்ணுகிறீர் களா நீங்கள்?"

"அந்த நம்பிக்கை எனக்கில்லை வில்லவா. சுங்கன் வைதீக வேத வழி பாட்டை நிலை நிறுத்த முயல்கிறான். வைதீக தர்மத்தை நிலை நிறுத்தத் தான் அவன் மௌரிய அரசனின் முது

கில் குத்தி ஆட்சியைக் கைப்பற்றி னான். காரவேலன் சமண மதத்தை நிலை நிறுத்தப் பாடுபடுகிறான். இரண்டு மதங்களும் எதிரெதிரானது. இருந்தாலும் அவர்களின் ராச்சியங்களுக்கு ஆபத்து எனும் நிலை வரும்போது அவர்கள் ஒன் றாக இணைந்தாலும் ஆச்சரியப்படுவதற் கில்லை. எதிரிகளை நாம் குறைத்து மதிப்பிடக் கூடாது. இருவருடன் நூற்று வர் கன்னரும் சேர்ந்து நம்மைத் தாக்க முடிவெடுத்தாலும் அதற்கும் நாம் தயாரா கவே இருக்க வேண்டும்."

"மூவரும் இணைந்தால் அவர்க ளின் படை பலம் பெருகிவிடும் அல் லவா..."

"படை பலத்தைக் கண்டு ஒரு நாளும் போரின் முடிவைப் பற்றிக் கவலைப் படக்கூடாது. அதிக வீரர்க ளைக் கொண்டா நீ அகப்பா கோட் டையைக் கைப்பற்றினாய்? படை பலத் தைக் கொண்டா கரிகாலர் வெண்ணி

https://telegram.me/aedahamlibrary

யில் தனது எதிரிகளைக் கொன்று தனக்குரிய உறைந்தை ஆசனத்தை மீட்டார். பலத்தை விடவும் தாக்குதல் உக்தி என்ற ஒன்று இருக்கிறது. காரவேலன், சுங்கர், நூற்றுவர் கன்னர் என மூவரும் ஒன்று திரண்டாலும் அவர்களுக்குள் ஒற்றுமை இருக்காது. ஆதலால் அவர்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். மூவரும் ஒன்றிணைந்தால் போர் ஒரு முறை தான் வரும். தனித்தனியாகப் போரிட்டால் போர் சற்று நீளும். இரண்டிற்கும் உள்ள வேறுபாடு அவ்வளவே."

"தலைவரே, கிருஷ்ணை நதிக் கரையில் நாம் இறங்கியிருப்பதற்கு பதில் கோதாவரி நதிக்கரையில் நிலை கொண்டிருந்தால் கலிங்கத்தைத் தாக்கு வது எளிது அல்லவா?"

"வில்லவா, வடுகர்கள் நம்மை வரவேற்றிருப்பதால் நம்மால் புகாரிலிருந்து புறப்பட்டு கிருஷ்ணை நதிக்கரையில் இறங்கி நிலை பெற்றிருக்க முடிகிறது.

வடுகர்களால் இப்போது நமக்கு உணவுப் பிரச்சனை இல்லை. இதே வடுகர் நம்மை எதிர்க்கத் துணிந்திருந்தால் நாம் வடுகர் களை முறியடித்த பிறகே இங்கு வந்தி ருக்க முடியும். கோதாவரி நதிக்கரையில் நாம் இறங்கியிருந்தால் கலிங்கத்தைத் தாக்குவது எளிது. ஆனால், அதே நேரம் அவர்களும் நம்மைத் தாக்குவது எளிதா கிவிடும் வில்லவா. நாம் கோதாவரி நதிக் கரையில் இறங்கி நிலை பெறுவதற்குள் அவர்கள் தாக்கினால் நம்மால் எதிர்த்துத் தாக்க இயலுமா? கடற் மார்க்கமாகவே சோனை நதியின் வழியாக பாடலியையும் அடையலாம் என்பதற்காக நாம் பாடலிக் கரைக்கே நேராகச் சென்றுவிட முடியுமா? அதே நேரம் நூற்றுவர் கன்னரின் நிலை நமக்கு இன்னும் தெரியவில்லை. அவர் கள் நம்மை எதிர்க்கத் துணிந்து நம்மை பின்புறமாகத் தாக்கினால்???”

“.........”

"நூற்றுவர் கன்ன அரசன் சத கர்ணி படித்தானத்தில் இருக்கிறான். எனது கணிப்பு மட்டும் சரி என்றால் அவன் விரைவில் அவந்திக்கு அழைக் கப்படுவான். அவந்தியில் அவன் முடி வெடுக்கட்டும். அவந்தியில் இருக்கும் நம் வேளக்காரப் படைத்தலைவருக்குத் தெரியும் அவன் நம்மை எதிர்க்கப் போகி றானா? அல்லது வரவேற்கப் போகி றானா? என்று. சதகர்ணியின் நிலை முத லில் தெரியட்டும். பிறகு தாக்குதல் உக் தியை வகுத்துக்கொள்வோம்."

"ஒருவேளை சதகர்ணி நம்மை எதிர்க்கத் துணிந்துவிட்டால்?"

"படித்தானம் முதலில் சோழப் பேரர சின் ஆளுமைக்குள் கொண்டுவரப்படும். பிறகு அவந்தி தாக்கப்படும். அங்கிருந்து மகதம் நோக்கி நாம் நகருவோம். கடைசி யாக சிங்கபுரி."

"சதகர்ணி பணிந்துவிட்டால்?"

https://telegram.me/aedahamlibra

"நேராக சிங்கபுரியை நோக்கி நகரு வோம்! பிறகு மகதம்."

விறல்வேல் கூறியதைக் கேட்டு சிந் தித்த வில்லவன், "புகாரிலிருந்து செய்தி வந்திருக்கிறது!" எனத் தெரிவித்தான்.

"என்ன?"

"பரதவன் குமாரனால் அங்கே நிம் மதியாக இருக்க முடியவில்லையாம்!" சிரித்தபடியே தெரிவித்தான் வில்லவன்.

"ஏன்?"

"அவன் போர்க்களத்திற்கு வருவ தற்குத் துடித்துக் கொண்டிருக்கிறான். சோழப் படைகள் புறப்பட்டுவிட்ட பிறகு அவனால் புகாரில் வெறுமனே கோட் டைகளையும், வீரர்களையும் பார்த் துக்கொண்டு இருக்க முடியவில்லை யாம்! குருதியின் ருசியைக் கண்டுவிட்ட அவனது வாட்களையும், போர் தினவெ டுத்த அவனது தோள்களையும் அவ னால் கட்டுப்படுத்த முடியவில்லையாம்.

உணவினை கூட அவனால் உட்கொள்ள முடியவில்லை என்று புலம்பியிருக்கிறான். வருத்தத்தில் உழல்கிறான் அவன். "சோழ நாட்டை இரும்பிடர்த்தலைவரிடமும், பெருமறவர் மகேந்திர வளவனாரிடமும் ஒப்படைத்துவிட்டு வந்துவிடுகிறேன்" என்று ஓலைக்கு மேல் ஓலை அனுப்பி மன்றாடிக்கொண்டு இருக்கிறான்."

"இதில் என்னால் எந்த முடிவையும் எடுக்க இயலாது வில்லவா... முடிவெடுத்த வானவல்லிதான் அடுத்த கட்டளையை பரதவன் குமரனுக்குப் பிறப்பிக்க முடியும். அவளது கட்டளையை மீறி பரதவன் குமரன் புகாரைக் கைவிட்டு வெண்ணிக்கு வந்ததை நினைத்தே அவள் கடும் கோபத்தில் இருக்கிறாள். இந்த நிலையில் பரதவன் குமரனைப் பற்றி அவளிடம் பேசி என்னால் வாங்கிக் கட்டிக்கொள்ள முடியாது!" எனச் சிரித்த படியே தெரிவித்தவன், "நமது மரக் கலங்களை தயாராக வைத்திருக்கச் சொல்லி

அவனுக்கு தகவலை அனுப்பிவிடு" என மட்டும் கூறிவிட்டு தனது கூடாரத்தை நோக்கி நடக்கலானான்.

அப்போது வில்லவன், "தலைவரே, இன்னொரு செய்தியும் வந்திருக்கிறது!" என வருத்தத்துடன் தெரிவித்தான்.

அவனது முகவாட்டத்தைக் கவனித்த விறல்வேல், "என்ன? ஏதேனும் வருத்தச் செய்தியா?" என வினாவினான்.

"ஆம்!"

"என்ன?"

"பத்திரைத் தேவி துறவறம் வாங்கிக்கொண்டு விட்டாள்!"

"இப்போது எங்கே இருக்கிறாள்!"

"நாகத் தீவிற்குச் சென்றுவிட்டாளாம்!"

"இனியாவது அவளது மனம் நிம்மதி அடைகின்றதா என்று பார்ப்போம்!"

https://telegram.me/aedahamlibra

"........."

"எப்போது வேண்டுமானாலும் நம் நிலைகள் மீது எதிரிகள் தாக்குதல் தொடுக்கலாம்! முன் பின் அறியாத இடம். கவனமாக இரு."

"தங்களது உத்தரவு தலைவரே!" எனத் தெரிவித்த வில்லவன் விடைபெற எத்தனித்த போது ஓடிவந்த அவனது உப படைத்தளபதி செங்குவீரனிடம் பணிந்தான். மூச்சு வாங்கியபடி, "படைத் தலைவரே..." என அழைத்தான்.

"என்ன?" என வினவினான் செங்குவீரனிடம்.

"தங்களது அனுமதி தேவை!"

"எதற்கு?"

தயக்கத்துடன் நின்றான் உபதளபதி. "தயக்கம் வேண்டாம். எதற்கு அனுமதி வேண்டும்?" என வினவினான் அருகில் நின்ற வில்லவன்.

"தலைவரே ஓய்வாக இருக்கும் வேளையில் நம் படை வீரர்கள் குளங் களை வெட்டவும் தாங்கள் அனுமதி தர வேண்டும்! எப்படியும் படை நகரும் போது அழிவு ஏற்படுவது நிச்சயம். அந்த அழிவை மாற்று வழியில் சமநிலைப் படுத் தலாமே!"

"நல்ல காரியம் தானே! இதற்கு எதற்கு அனுமதியை எதிர்பார்க்கிறீர்கள். வெட்டும் குளங்களுக்கு நமது கரிகால ரின் பெயரையே சூட்டுங்கள். காலத்திற் கும் அவை கரிகாலரின் பெயரைத் தாங்கி நிற்கட்டும்!" கட்டளையிட்டான் செங்குவீ ரன்.

இருவரும் மகிழ்ச்சியுடன் விடை பெற்றுச் சென்றார்கள்.

நதியோரமாக அமைந்திருந்த தனது கூடாரத்திற்குச் சென்ற செங்கு வீரன் கூடாரத்தின் திரைச் சீலையை விலக்கிவிட்டு உள்ளே நுழைந்தான். அங்கே வானவல்லி தரையில் பட்டுத்

துணியை விரித்து மடியில் குழந்தையைப் போட்டுக்கொண்டு விறல்வேலின் வருகையை அலட்சியப்படுத்தியடி குழந்தையைக் கொஞ்சிக்கொண்டிருந்தாள்.

அவள் குழந்தைக்கு முத்தமிடும் போது பல் இல்லாத அக்குழந்தை சிரித்தபடி பதிலுக்கு முத்தமிடுகிறேன் என்ற பெயரில் அவளது தாழ்வாயைக் கடித்துக் கொண்டிருந்தது. பிறந்து ஒன்றரை வருடங்கள் ஆன அம்மழலையின் முத்தத்தில் மயங்கிப் போயிருந்தாள் வானவல்லி.

அருகில் தொங்கிக் கொண்டிருந்த தூக்குத் தொட்டிலில் குழந்தையைப் போட்ட பிறகே விறல்வேல் கூடாரத்திற்குள் அவளைப் பார்த்தபடியே நிற்பதை வானவல்லி கவனித்தாள்.

அவனைப் பார்த்துப் புன்னகைத்த வானவல்லி, “தாங்கள் எப்போது உள்ளே வந்தீர்கள்?” என வினவினாள்.

"என் குழந்தைக்கு நீ முத்தமிடப் பழகிக் கொடுக்கத் துவங்கிய போதே நான் உள்ளே நுழைத்துவிட்டேன்."

விறல்வேலின் முகத்தை நோக்கிய வானவல்லி, "அத்தான், இப்போதெல்லாம் உங்களது முகம் சற்று வாட்டமாகவே இருக்கிறதே, ஏன்?" என வினவினாள்.

"போர்க் களத்திற்குச் சென்றாலும் விடமாட்டேன் என்று பின்தொடர்ந்து வந்து விடுகிறாயே, அந்தக் கவலை தான் வானவல்லி" என விறல்வேல் கூற "உங்களுக்கு நான் இருப்பது பிடிக்கவில்லை என்றால் தெரிவித்து விடுங்கள். நான் என் மகனுடன் புகாருக்குச் சென்றுவிடுகிறேன்" எனச் சிணுங்கினாள்.

அவளது போலிச் சிணுங்களைக் கண்டு வருந்திய விறல்வேல், "சிறு பொய்க்கு முகத்தைத் திருப்பிக் கொள்ளலாமா வானவல்லி? நீ அருகில் இருக்கும் போது எனக்கு என்ன கவலை இருந்

துவிடப் போகிறது?" எனச் சிரித்தபடியே தெரிவித்தவன் அவளது மடியில் தலை வைத்துப் படுத்துக்கொண்டான்.

"அப்புறம் எதற்கு உங்களது முகம் வாடியிருக்கிறது?" என அவனது தலைக் குழலை வருடியபடியே வினவினாள்.

"அப்படியெல்லாம் ஒன்றும் இல்லையே!"

"இல்லை, எதையோ நீங்கள் மறைக்கிறீர்கள்!"

"உண்மையைக் கூறினால் நீ என் மீது கோபம் கொள்வாயே!"

"பரவாயில்லை. எதுவானாலும் தெரிவியுங்கள்!"

"குழந்தை வந்த பிறகு எனக்குக் கிடைக்க வேண்டிய முத்தம், அரவணைப்பில் முக்காலும் பறிபோய்விட்டதே? அதை எண்ணித்தான் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறேன்" என அவன்

சிரித்தபடியே கூறியதுதான் தாமதம் அடுத்த கணம் அவனது தலையில் கொட்டு வைத்த வானவல்லி, "நினைப் பைப் பார்! இனி மொத்த முத்தமும் எனது மகன் திரையனுக்குத் தான். உங்களுக்கு அறவே கிடையாது" எனத் தெரிவித்தபடி அவனை மடியிலிருந்து கீழே தள்ளிவிட் டாள்.

அப்போது தூக்குத் தொட்டிலில் கிடந்தபடி சிணுங்கினான் இளந்திரை யன். வானவல்லி எழுவதற்குள் விறல் வேல் குழந்தையைத் தூக்கி மார்பில் கிடத்திக் கொண்டு மீண்டும் அவளது மடியிலேயே படுத்துக்கொண்டான்.

குழந்தை அவனது மார்பில் வளர்ந் திருந்த முடிகளைப் பற்றி இழுத்தபடி விளையாடிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்தபடியே வானவல்லி, செங்குவீர னின் தலையைக் கோதியபடி அமர்ந்தி ருந்தாள்.

https://telegram.me/aedahamlibra

அப்போது விறல்வேல், "வான வல்லி, நீ செய்தது தவறோ என்று கூட எனக்குச் சில நேரம் தோன்றுகிறது?" எனத் தெரிவித்தான்.

"பத்திரையிடமிருந்து குழந்தை யைப் பெற்றுக் கொண்டதைப் பற்றிக் கூறுகிறீர்களா?"

"ம்ம்ம்!"

"வேளக்காரப் படைத் தலைவரின் மரணத்திற்குப் பிறகு அவளது மனநிலை முற்றிலும் மாறிவிட்டது. குழந்தை பிறந்த பிறகும் கூட அவள் மாறவில்லை. குழந் தையை அவளிடம் விடுவதற்கு எனக்கு அச்சமாக இருந்தது அத்தான். இயல்பாக இருக்கிறாள். ஆனால், அனைத்தையும் திடீரென்று மறந்து பிரமை பிடித்தவளைப் போன்று ஆகிவிடுகிறாள். அவளுக்குக் கடவுள் இப்படிப்பட்ட நிலையை அளித் திருக்கக் கூடாது!"

https://telegram.me/aedahamlibra

“இளந்திரையனின் வீர மரணத்தை அவளால் தாங்கிக்கொள்ள இயலவில்லை. குழந்தை பத்திரையிடம் இருந்தால் அவளுக்கும் ஆறுதலாக இருந்திருக்கும் அல்லவா?”

“வேளக்காரப் படைத் தலைவரின் ஆசையை நிறைவேற்ற வேண்டுமானால் இக்குழந்தை உங்களுடன் போர்க் களத்திலேயே தான் வளர வேண்டும்” என அவளே என்னிடம் கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டாள்.”

“ஆதலால் குழந்தையை வாங்கிக் கொண்டு வந்துவிட்டாய்!”

“ம்ம்ம்!”

“புகாரிலிருந்து செய்தி வந்திருக்கிறது!”

“என்ன செய்தி?”

“பத்திரைத் தேவி நாகத் தீவிற்கு சென்றுவிட்டாள்!”

https://telegram.me/aedahamlibra

"எதற்கு?"

"புகாரில் இருந்தால் வேளக்காரப் படைத்தலைவரின் சிந்தனைதான் வந்து கொண்டிருக்கிறதாம்!"

"ஆதலால்..."

"அனைத்தையும் துறந்துவிட்டு காவி உடையைத் தரித்துக்கொண்டு துறவறம் வாங்கிச் சென்றுவிட்டாள்."

"இந்த வயதில் அவள் இப்படியொரு முடிவை எடுத்திருக்கக் கூடாது!"

"வருத்தமாகத் தான் இருக்கிறது!" என விறல்வேல் கூறிக்கொண்டிருந்த போதே நகர்ந்து வந்த திரையன் செங்கு வீரன் முகத்தில் ஏறி அமர்ந்துகொண்டு. அவனது தலையை முடியைப் பற்றி இழுக்கத் துவங்கினான்.

அவன் செய்த சேட்டையை மகிழ்ச்சியுடன் அனுபவித்தபடி மீண்டும்

அவனை இறக்கி மார்பில் போட்டுக் கொண்டான் விறல்வேல்.

வருத்தத்தில் காணப்பட்ட வான வல்லியின் முகத்தைக் கண்ட விறல் வேல், “பத்திரையை எண்ணி வருத் தப்பட்டது போதும் வானவல்லி” என அவளது வாடியிருந்த முகத்தைப் பார்த் துத் தெரிவித்தான்.

“இப்போது நான் பத்திரையை எண் ணிக் கவலைப்படவில்லை. அவளுக்கு அத்துறவறம் நிச்சயம் நிம்மதியை அளிக் கும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது!”

“பிறகு எதற்கு வருத்தமாகக் காணப்படுகிறாய்?”

“அவந்தி தேசம் சென்றிருப்பவர் களை எண்ணி வருத்தப்படுகிறேன்!”

“யார் உமது தமையனை எண்ணி வருந்துகிறாயா?”

“இல்லை!”

https://telegram.me/aedahamlibra

"பிறகு?"

"என் தம்பியை எண்ணி வருத் தப்படுகிறேன். திருக்கண்ணன் மற்றும் இம்ஹோடெப் இருவரும் அண்ணனுக்கு உதவிக்குப் போதாதா? இவன் எதற்காக சென்றிருக்கிறான்? ஏதேனும் ஆபத்து ஏற்பட்டால் என்ன ஆவது?"

"எதுவும் ஆகாது வான வல்லி! வேளக்காரப் படைத்தலைவ னான உனது தமையன் தான் உடன் இருக்கிறாரே!"

"அவர் கரிகாலனுக்கு உதவிக்குச் சென்றிருந்தால் நான் வருத்தப்பட மாட் டேன். அவர் பெண்ணைத் தேடி அல் லவா சென்றிருக்கிறார். இந்த நிலையில் அவர் அவந்தி இளவரசியைத் தேடுவாரா அல்லது கரிகாலனுக்குக் காவல் இருப் பாரா?"

அவள் கூறியதைக் கேட்டுச் சிரித் துவிட்டான் செங்குவீரன்.

https://telegram.me/aedahamlibra

"நான் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறேன். நீங்கள் என்னைப் பார்த்து நகைக்கிறீர்களா?" எனக் கூறியவள் மீண்டும் அவனது தலையில் செல்லமாக அடித்தாள்.

மார்பில் தவழ்ந்த திரையனையே பார்த்துக்கொண்டிருந்தான் விறல்வேல். அப்போது வானவல்லி, "அத்தான், கரிகாலன் எதற்காக அவந்திக்குச் சென்றிருக்கிறான்?" என வினவினாள்.

"எப்படியும் போர் துவங்க இன்னும் சில காலம் ஆகும். அதுவரை அவர் அவந்தியில் பாதுகாப்பாக ஓய்வெடுக்கட்டுமே!"

"பாதுகாப்பாகவா?"

"ஆம்!"

"அவனுக்கு இங்கே பாதுகாப்புக்கு என்ன குறைச்சல்?"

https://telegram.me/aedahamlibra

“அவரது உயிருக்கு ஆபத்து என்று ஒற்றர்கள் மூலம் தகவல் கிடைத்திருக்கிறது. எப்படிக் கரிகாலரை பாதுகாக்கலாம் என்று நினைத்தபோதுதான் கரிகாலரை அவந்திக்கு அனுப்பி வைத்துவிடலாம் என்ற எண்ணம் தோன்றியது. அனுப்பி வைத்துவிட்டேன்!”

“அவந்தியில் அவர்களை உபசரிக்க யார் இருக்கிறார்கள்?”

“அவந்தி இளவரசி இருக்கிறாளே?”

“அவந்தி இளவரசி???”

“ஆம்! இந்நேரம் திருக்கண்ணனும், இம்ஹோடெப்பும் அந்தப் பணியை நன்கு செய்திருப்பார்கள். இன்னும் சில மாதங்கள் கரிகாலர் அங்கேயே ஓய்வெடுக்கட்டும். தேவைப்படும்போது அவரே வெளிப்பட்டுக்கொள்வார்.”

“நீங்கள் எதையோ என்னிடமிருந்து மறைக்கிறீர்கள்?”

https://telegram.me/aedahamlibra

"எதை மறைக்கிறேன்?"

"பாதுகாப்பு எனக் கூறி என்னை ஏமாற்ற நினைக்காதீர்கள். தகுந்த பாதுகாப்பில்லாமல் ஒரு நாட்டின் பேரரசன் அதுவும் தனியாக மாற்றான் தேசத்திற்கு மாறுவேடத்தில் செல்ல வேண்டிய அவசியம் என்ன? ஏதோ காரணம் இருக்கிறது. ஆனால், மறைக்கிறீர்கள்!"

"உன் தம்பி வந்ததும் நீயே கேட்டுத் தெரிந்துகொள். எனக்குத் தெரிந்ததை நான் சொல்லிவிட்டேன்!"

"நீங்கள் எப்போது கிளம்பப் போகிறீர்கள்?"

"எங்கே?"

"கரிகாலனுக்குத் துணையாக!"

"எனக்கு அவந்திக்குச் செல்லும் எண்ணம் இல்லை."

"அவந்திக்குச் செல்லும் எண்ணம் இல்லையா?"

https://telegram.me/aedahamlibra

"ஆம்!"

"பிறகு எங்கே?"

"சிங்கபுரிக்கு செல்ல நினைக்கி றேன்!"

"சிங்கபுரிக்கா?"

"ஆம்!"

"அங்கு எதற்கு?"

"காரவேலனின் படை பலத்தை முறியடித்து அவனது தலைநகரை எப் படிக் கைப்பற்ற முடியும் எனும் மார்க் கத்தை அறிய!"

"ஒற்றர்களைத் தான் ஏற்கனவே அனுப்பிவிட்டீர்களே?"

"ஆமாம்!"

"பிறகு நீங்கள் எதற்காகச் செல்கி றீர்கள்?"

"அனைத்திற்கும் நாம் ஒற்றுத் தக வல்களை மட்டும் கொண்டு முடிவெ

டுக்க இயலாது வானவல்லி. சிலவற்றை நேரில் கண்டுதான் முடிவெடுக்க இயலும். சிறு தவறு நேர்ந்தாலும் பாதிக்கப் படப் போவது ஒட்டு மொத்த தமிழகமும் தான். ஆதலால் நான் சென்றே ஆக வேண்டும்."

"ஆபத்தான காரியம்!!"

"ஆபத்துதான்!"

"சிங்கத்தின் குகைக்கே சென்று ஒற்றறிய நினைக்கிறீர்கள்!"

"சில உயர்ந்த நோக்கத்திற்காக சில வேளைகளில் அந்தப் பணியையும் செய்ய வேண்டி இருக்கிறது."

"உறைந்தையில் தனியொருவராக இருங்கோவின் அரண்மனைக்குள்ளே சென்று திரும்பியவர் தானே நீங்கள்! காரியத்தை வெற்றிகரமாக முடித்துவிட்டு வாருங்கள்!"

"தேவியின் உத்தரவு!"

"கரிகாலர் மற்றும் அண்ணா இருவரும் சென்றுவிட்டார்கள். நீங்களும் சென்றுவிட்டால் படையை இங்கிருந்து நகர்த்துவது யார்?"

"நீ இருக்கிறாயே?"

"நானா?"

"ஆம்!"

"எனது மகனை சமாளிக்கவே எனக்கு நேரம் போதவில்லை. இந்த நிலையில் இந்தப் படையை வேறு கவனித்துக்கொள்ள வேண்டுமா? ஆளை விடுங்கள்!"

"இதைத் தேர்ந்தெடுத்ததே நீ தானே!"

"அப்போது நீங்கள் இல்லை!"

"இப்போதும் நான் தான் செல்லப் போகிறேனே?"

"அத்தான்...???"

"வில்லவன் இருக்கிறான். அவனுக்குத் துணையாக உபதளபதிகள் இருக்கிறார்கள். வேளிர்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் அனைத்துப் பணிகளையும் பார்த்துக் கொள்வார்கள். வேண்டிய ஆலோசனைகளை மட்டும் வழங்கிக்கொண்டிரு!"

"என்னைத் தனித்திருக்கவிட்டுச் செல்ல முடிவெடுத்துவிட்டீர்கள்!"

"........."

"சரி, எப்போது கிளம்பப் போகிறீர்கள்?"

"தேவி உத்தரவிட்டால் இன்றே அடியேன் விடைபெறச் சித்தமாக இருக்கிறேன்."

"அப்படியெனில் கிளம்புங்கள்!" எனக் கோபத்துடன் கூறிக்கொண்டிருந்த போதே விறல்வேலின் மார்பில் தவழ்ந்த திரையன் அவனது காதைக் கடிக்கத் துவங்கினான்.

https://telegram.me/aedahamlibra

அதைப் பார்த்த வானவல்லி, "என் மகன் காதில் என்ன சொல்கிறான்? அவனையும் அழைத்துக்கொண்டு செல்லச் சொல்கிறானா?" என வினவினாள்.

"இல்லை!"

"பிறகு இங்கேயே அம்மாவுக்குத் துணையாக இருக்கச் சொல்கிறானா?"

"இல்லை!"

"அப்புறம்?"

"அவனுக்குத் தனியாக இருக்கப் பிடிக்கவில்லையாம்!"

"அதற்கு?"

"செல்வதற்குள் உடன் விளையாடுவதற்கு அவனுக்கொரு தம்பியை ஏற்பாடு செய்துவிட்டு புறப்படச் சொல்கிறான்!" எனக் கூறிய விறல்வேல் திரையனை தொட்டிலில் போட்டுவிட்டு வானவல்லியைத் தூக்கிக்கொண்டு கட்டிலுக்குச் செல்லலானான்.

அவள், "குழந்தை விழித்துக் கொண்டிருக்கிறது. விடுங்கள்" எனக் உதறினாள்.

ஆனால், அவன் விடுவதாக இல்லை. அவன் அடுத்தடுத்து கொடுத்த முத்தங்கள் அவளது வார்த்தைகளை விழுங்க வைத்திருந்தன.

தொட்டிலில் இளந்திரையன் தனி யாகச் சிரித்தபடி விளையாடிக் கொண் டிருந்தான். கட்டிலில் இருவரும் சேர்ந்து பேரின்பத்தில் திளைக்கத் துவங்கினார் கள்.

அடிக்குறிப்பு:

1. மொழி பெயர் தேயம்: மொழி பெயர் தேயம் என்பது தமிழ் மொழி திரிந்து கொடுந்தமிழாக பேசப்பட்டுக் கொண்டிருந்த இடம் ஆகும். வடவேங்கட மலைக்கு வடக்கே காணப்படும் வடுக

https://telegram.me/aedahamlibrary

நாட்டு நிலப்பரப்பு மொழிபெயர் தேயம் என அக்காலத்தில் வழங்கப்பட்டது.

ஆதாரம்: தமிழ்கெழுமூவர் காக்கும் மொழிபெயர்த் தேஎத்த பல்மலை அகநானூறு - 31

2. சோனை - கங்கை நதி. தன நந்தர்கள் கங்கை நதிக்கரையில் சுரங்கம் தோன்றி தங்கம், வைரம், வைடூரியம், சொர்ணம் ஆகியவற்றை மறைத்து வைத்திருந்ததால் கங்கை நதிக்கரைக்கு சொர்ணநதி என்ற பெயர் தோன்றியது. தமிழர்கள் அதனை சோனை நதி என்று அழைத்தனர்.

3. பாடலி - பாடலிபுத்திரம். இன்றைய பீகார் மாநிலத்தில் காணப்படும் பாட்னா.

4. சிங்கபுரி - சிங்கபுரி என்பது அக்காலத்தில் கலிங்கத்தில் தோன்றிய மகாமேகவாகன அரச மரபின் தலைநகரம் ஆகும். (மகா - பெரிய/உயர்ந்த,

https://telegram.me/aedahamlibra

மேக - முகில், வாகன - பயணிப்
பவர்கள்) மகாமேகவாகனர் - உயர்ந்த
முகில் கூட்டங்களில் பயணிப்பவர்) இம்ம
ரபின் மூன்றாவது மன்னன் காரவேலன்,
இவனது காலத்தில் தான் கலிங்க மகா
மேகவாகன அரசு உயர்ந்த நிலையை
அடைந்தது. மௌரிய அரசன் அசோ
கப் பியதசி இறந்த பிறகு தட்சனாப
தத்தில் சாதவாகன அரச மரபு தோன்
றிய அதே காலத்தில்தான் கலிங்கத்தில்
மகாமேகவாகன அரச மரபும் தோன்றி
யது. இலங்கைக்கு வந்து சிங்கள அரச
மரபைத் தோற்றுவித்த விஜயன் இந்த
சிங்கபுரியைச் சேர்ந்தவன் என்று மகா
வம்சம் குறிப்பிடுகிறது. சிங்கபுரி தற்போது
ஆந்திர மாநிலத்தில் ஒடிசாவுக்கு அரு
கில் கடற்கரை ஓரமாக சிறிய கிராமமாக
காணப்படுகிறது. மகாமேகவாகன அரச
மரபில் காரவேலனைத் தவிர்த்து மற்ற
மன்னர்களைப் பற்றிய விவரங்கள் தெரி
யவில்லை. சிங்கபுரியை சிங்கபுரம் என்
றும் அழைப்பர்.

https://telegram.me/aedahamlibra

# 7.

# வகுக்கப் பட்ட வியூகம்

பேரரவம் இல்லாமல் சிறு சலசலப்புடன் ஓடிக் கொண்டிருந்தது வெற்றாவதி நதி. இருள் சூழ இன்னும் ஒரு நாழிகைப் பொழுதிற்கு மேல் காணப் பட்டாலும் சூழ்ந்த முகில் கூட்டங்களால் பரிதி மறைக்கப்பட்டு பொழுது மேற்கில் சாய்ந்துவிட்டதைப் போன்ற தோற் றத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. அன்று காலை முதலே முகில் கூட்டங்கள் விரைவாக சேர்ந்து, அதே நேரம் விரை வாகக் களைந்து கொண்டிருந்தன. மாறிக்கொண்டே இருக்கும் வானிலை யையும், அமைதியாக ஓடிக்கொண்டிருக்

கும் வெற்றாவதி நதியையும் பார்த்தப டியே அமர்ந்திருந்தார் வைதீகர் பாகவ தர். வருடங்கள் பல உருண்டிருந்தாலும் அவரது மனதில் பழி உணர்ச்சி மட்டும் சிறிதும் குறைந்தபாடில்லை. "தன் மகன் அக்னிபுத்திரனைக் கொன்று தனது கன வைக் கலைத்தவர்களை நிச்சயம் பழி வாங்க வேண்டும்" எனும் நினைப்பில் வேத மந்திரங்களை உச்சரித்தபடி பாதி தவத்தில் அமர்ந்திருந்தார்.

அவ்வப்போது மந்திரம் உச்சரிப் பதை நிறுத்திவிட்டு வெற்றாவதி நதி யின் கரையை யாராவது வருகிறார்களா? என்று நோக்கிக்கொண்டிருந்தார். நதிக் கரையைச் சூழ்ந்து அடர்த்தியாக வளர்ந் திருந்த மரக் கூட்டங்களையும் கடந்து புர விகளின் குளம்படிச் சத்தம் அவரது கவ னத்தை ஈர்த்தது. உடனே தனது தியா னத்தை பாதியில் நிறுத்திய வைதீகர் அக் குளம்படிச் சத்தங்கள் எழுந்த திசையை நோக்கி நடக்கலானார்.

அவரை நோக்கி வந்த இரண்டு புர விகளைக் கண்டதும் வைதீகரின் முகத் தில் பெரும் மகிழ்ச்சி தோன்றியது. புர

வியில் வந்தவர்களும் வைதீகர் பாகவத ரைக் கண்டதும் மரியாதைக்காக புரவியி லிருந்து குதித்து அவரை நோக்கி நடந்து வந்தவர்கள் அவரது பாதத்தில் விழுந்து தங்களது வணக்கத்தைச் செலுத்தினார் கள்.

"ஆய்ஷ்மான் பவ..." என வாழ்த்திய படி அவர்கள் இருவரையும் அணைத்துக் கொண்டார்.

"புரவிகள் இரண்டும் கரையில் மேய்ந்து கொண்டிருக்கட்டும். இருவரும் வாருங்கள், எனது குடிலுக்குச் செல் வோம்" எனக் கூறியபடி தனது குடிலை நோக்கி நடக்கத் துவங்கினார். புரவியில் வந்த இருவரும் வைதீகரை அமைதியா கப் பின் தொடர்ந்தார்கள்.

அப்போது அவர்களிடம் வைதீகர், "எங்கே, புஷ்யமித்திரன் வரவில்லையா?" என வினவினார்.

https://telegram.me/aedahamlibra

“எங்கள் இருவரையும் முதலில் கிளம்பச் சொல்லி அரசர் கட்டளையிட்டார். ஆதலால் நாங்கள் வந்துவிட்டோம் குருவே” என மூத்தவன் கூற அருகில் நின்ற மற்றொருவன், “தந்தை பின்னால் வருவதாக வாக்களித்திருக்கிறார். எப்படியும் இன்னும் ஒரு ஓரைப் பொழுதிற்குள் வந்துவிடுவார். மேகக் கூட்டங்கள் வேறு இன்று விளையாட்டு காட்டிக்கொண்டு இருக்கின்றன. மழை பெய்தால் அவர் வருவதற்கு தாமதமாகலாம். இல்லையேல் அவர் கூறியபடி விரைந்து வந்துவிடுவார்!” எனப் பதிலளித்தான்.

“நல்லது அவரும் வந்துவிடட்டும். அதுவரை இளவரசர்கள் இருவரும் எனது குடிலில் தயாராக இருக்கும் மதுவையும், புலாலையும் உண்டு இளைப்பாறிக் கொண்டிருங்கள்! நான் எனது நீராடலை முடித்துவிட்டு வந்துவிடுகிறேன்” எனக் கூறியவர் வெற்றாவதி நதியை நோக்கித் தனது கமண்டலத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டார்.

வெற்றாவதி நதியின் மார்பளவு நீரில் நின்றபடி வேதங்களையும், மந்திரங்களையும் உச்சரித்து பல முறை நீரில் மூழ்கி எழுந்து தனது நீராடலை முடித்தவர் கரையேறக் கரையை நோக்கினார்.

கரையில் அவரது வயதை ஒத்த வைதீகன் ஒருவன் அமர்ந்திருந்தான். அவனது உடலில் அணிந்திருந்த பூணூல் அவன் வைதீகன் எனக் கூறினாலும் அவனது கட்டுடல், உடலில் காணப்பட்ட தழும்புகள், முகத்தில் கம்பீரமாக வளர்ந்து நீவி விடப்பட்டிருந்த மீசை ஆகியவை அவன் சத்திரியனாகவும் இருக்கக்கூடும் எனும் எண்ணத்தைத் தோற்றுவித்தது. தலையிலும், முகத்திலும் நரைத்திருந்த ஓரிரண்டு முடிகள் அவனது வயதினை அனைவருக்கும் தெரியப்படுத்திக் கொண்டிருந்தது. அவனைப் பார்த்தவர், "வா, புஷ்யமித்திரா... உன்னைத்தான் இவ்வளவு நேரமாக எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். பிறப்பால் வைதீகனான நீயே

வைதீகன் வேடமிட்டு வந்திருக்கிறாய்?” எனச் சிரித்தபடியே கூறியவர், “உன் புதல்வர்கள் சுங்கமித்திரன் மற்றும் அக்னிமித்திரன் ஆகிய இருவரைக் கண்டதும் எங்கே நீ வராமல் இருந்துவிடுவாயோ? என்று கூட நினைத்துவிட்டேன். ஆனால், கொடுத்த வாக்கினைக் காத்து நீ மகத மன்னன் என்பதை நிரூபித்துவிட்டாய்! என்ன நண்பா, நலம் தானே?” என நட்புடன் வினவலானார்.

“எனது நலத்திற்கு என்ன மித்திரா குறைச்சல்... நீ அழைத்து நான் வராமல் இருப்பேனா? நேரில் வரச்சொல்லி ஆள் அனுப்பியிருந்தாயே, என்ன செய்தி? ஏதேனும் அவசரமா?” என வினவினான்.

“ஆம் புஷ்யமித்திரா. அவசரம்தான்! வா குடிலுக்குச் சென்று பிறகு நாம் அதைப்பற்றிப் பேசுவோம். இங்கே எதுவும் வேண்டாம்!” எனக் கூறியவர் மகதத்தை ஆண்டுகொண்டிருக்கும் சுங்க

மன்னர் புஷ்யமித்திரனைத் தனது குடி லுக்கு அழைத்துச் சென்றார்.

இருவரும் குடிலை நெருங்க அங்கே இன்னும் இரண்டு புரவிகளும் சற்றுத் தொலைவில் வீரர்கள் பலர் நிற் பதையும் பார்த்த புஷ்யமித்திரன் எச்ச ரிக்கை அடைந்து, "நண்பா, பகைவர் கள் சூழ்ந்துவிட்டார்கள். ஆபத்து" எனக் கூறியபடியே இடையில் மறைத்து வைத் திருந்த குறுவாளினை நோக்கித் தனது கையைக் கொண்டு சென்றான்.

வைதீகர், "நண்பா, அழைப்பு உனக்கு மட்டும் அனுப்பப்பட வில்லை. இன்னும் இருவருக்கும் அழைப்பு விடுத் திருந்தேன். அவர்கள் வந்து சேர்ந்தி ருக்கலாம். கவலை வேண்டாம்!" எனப் பொறுமையாகத் தெரிவித்தார்.

"இன்னும் இருவரா? யார் அவர் கள்?"

"உனது பகைவர்கள்?"

https://telegram.me/aedahamlibra

"என்ன, எனது பகைவர்களா?"

"ஆம்!"

"யாரைப் பற்றி நீ கூறிக்கொண்டு இருக்கிறாய்?"

"ஒருவன் உன்னிடமிருந்து செல்வம் செழிக்கும் அவந்தி தேசத்தைக் கைப்பற்றியவன். இன்னொருவன் உனது தாக்குதலை முறியடித்து உன்னை விரட்டியடித்தவன்! உனது நாடு மகதத்திற்குள்ளாகவே பெரும் யானைகளுடன் நுழைந்தவன்."

"அப்படியெனில்...?"

"இருவரும் ஒரு விதத்தில் உன்னை வெற்றிபெற்றவர்கள்."

"நண்பா....?" கடும் கோபம் கொண்டான் புஷ்யமித்திரன்.

"உண்மையைத் தெரிவிக்கும் போது கோபம் எதற்கு?"

"யார் வந்திருக்கிறார்கள்? எதற்கு இப்படி சுற்றி வளைத்துப் பேசிக்கொண் டிருக்கிறாய்?"

"ஒருவன் சாதவாகன அரசின் படைத் தலைவனும், அவந்தியை ஆண் டுகொண்டு இருப்பவனுமான வஜ்ர பாகு."

"இன்னொருவன்?"

"அவனது பெயரைக் கேட்ட பிறகு நீ கோபம் கொண்டு அவன் மீது பாய்ந்து விட மாட்டாய் தானே?"

"பீடிகைகள் போதும் பாகவதா... யாரை அழைத்திருக்கிறாய்?"

"பீமவேலனை."

"பீமவேலன்" எனும் பெயரைக் கேட்டதுமே நடுநடுங்கிப் போன புஷ் யமித்திரன், "பீமவேலனா வந்திருக்கி றான்?" என அதிர்ச்சியுடன் வினவினான்.

https://telegram.me/aedahamlibra

"ஆம். கலிங்கத்தின் மகாமேகவா கன அரசின் இளவரசனும், போர்படைத் தலைவனுமான மகா பீமவேலன் தான் வருகை தந்திருக்கிறான்!"

"என் பரம வைரியான காரவேல னின் புதல்வன் எதற்காக இங்கு வந்தி ருக்கிறான்?"

"நான் தான் அழைத்தேன்!"

"நீயா?"

"ஆம்!"

"எதற்கு?"

"காரணம் இருக்கிறது புஷ்யமித் திரா..."

"நான் வருவது அவனுக்குத் தெரி யுமா?"

"தெரியாது"

"அவனது தந்தை காரவேல னுக்கு!"

https://telegram.me/aedahamlibra

"அவருக்கும் தெரியும்?"

"அப்படியெனில்?"

"காரவேலன் என்னைச் சந்திக்கத் தான் தனது புதல்வனை அனுப்பி வைத்திருக்கிறான். நான் அழைத்த யாருக்குமே யார் யார் அழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரங்கள் தெரியாது."

"ஏதேனும் விபரீதங்கள் நிகழ்ந்து விட்டால்?"

"அப்படி எதுவும் நடைபெறாது. நீ கவலை கொள்ள வேண்டாம்."

"நாங்கள் இருவருமே பரவ விரோதிகள். இருவரும் ஒருவரை ஒருவர் வீழ்த்திக்கொள்ள முயன்றுகொண்டு இருக்கிறோம். இந்த நிலையில் அவனுடன் எப்படி ஒன்றாக பேசுவது?"

"அது ஒன்றும் பிரமாதமான காரியம் அல்ல புஷ்யமித்திரா... இதுவரை இருவருமே ஒருவரை ஒருவர் போட்டி

என்றும் பகைவர் என்றும் நினைத்து அடித்துக் கொண்டீர்கள். ஆனால், இப் போது உங்கள் இருவருக்குமே பொது எதிரி ஒருவன் வந்துவிட்டான். ஆதலால் இனி இருவரும் உங்களது பகைமையை மறந்து விடுவீர்கள். நீ அமைதியாக இரு. மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன்!"

வைதீகர் கூறியதைக் கேட்டு சிந்தித்தபடியே நடந்துகொண்டிருந்தான் புஷ்யமித்திரன். அப்போது வைதீகர் பாக வதரை நோக்கி வந்த பீமவேலன் வணங்கி, "தந்தைக்கு வேறு சில பணி கள் இருப்பதால் உங்களது அழைப்பை ஏற்றுக்கொள்ள இயலவில்லை குருவே. அவருக்குப் பதில் என்னை அனுப்பி வைத்திருக்கிறார்!" எனப் பணிவுடன் தெரிவித்தான்.

"கலிங்க மன்னர் வந்தால் என்ன? கலிங்கத்துப் பட்டத்து இளவரசர் வந்தால் என்ன? உன் வரவு என்னை பெரும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறது! உட்

கார், பருகுவதற்கு நீர் கொண்டு வருகி றேன்” எனக் கூறியபடி தனது குடிலுக் குள் நுழைந்தார் வைதீகர் பாகவதர். அப் போது பீமவேலன், “வேண்டாம் குருவே!” என மறுத்துவிட்டான்.

“ஏன் மறுக்கிறாய்? பயணக் களைப் பாக இல்லையா?”

“வெற்றாவதி நதியிலேயே எனது தாகத்தைத் தீர்த்துக்கொண்டேன்! நாம் பேச வேண்டும் என்றால் அருகில் இருக் கும் மரத்தடியில் பாயை விரித்து அமர்ந்து கொள்வோமா?” என வினவினான்.

பீமவேலன் கூறியதை வியப்புடன் அங்கு நின்ற அனைவரும் நோக்கி னார்கள். அப்போது வைதீகர் பாகவதர் “அனைவரும் அமரும் அளவிற்கு எனது குடிலில் தான் வேண்டிய இடம் தாராள மாக இருக்கிறதே?” எனத் தெரிவித்தார்.

“புலாலை மனத்தாலும் தீண்டாத மகாவீரரின் வழியில் வந்தவன் நான்.

உங்களது இல்லத்திலிருந்து இறைச்சியின் மணம் வந்துகொண்டிருக்கிறது. என்னால் சகிக்க இயலவில்லை. என்னைத் தாங்கள் மன்னித்தருள வேண்டும்."

"இதுதான் காரணமா?" எனச் சிரித்தபடியே கூறியவர் அவரது வீட்டுப் பணிப்பெண்களிடம், "இப்போதே மாட்டு சாணத்தைக் கொண்டு வீட்டினை மெழுகி நன்கு சுத்தம் செய்யுங்கள்!" எனக் கட்டளையிட்டு அருகில் விழுது விட்டு அகலமாகப் பரந்து வளர்ந்திருந்த ஆலமரத்திற்கு அனைவரையும் அழைத்துச் சென்றார்.

விரிக்கப்பட்ட பாயில் அனைவரும் அமர்ந்தார்கள். நதிக்காற்று குளிர்ச்சியுடன் வீசிக்கொண்டிருந்தது. சற்று நேரம் அனைவருமே அமைதியாக இருக்க வைதீகர், "ஆர்ய வதத்தின் மூன்று நாட்டுப் பகைச் சேனாதிபதிகளையும் ஒருங்கே காண்பதில் பெரும் மகிழ்ச்சி

அடைகிறேன் நான்! இப்பொது உங்க ளுக்குள் காணப்படும் ஒற்றுமை எப்போ தும் இருக்கட்டும்” எனத் துவங்கினார்.

அப்போது குறுக்கிட்ட பீமவேலன், “விதிசா கடிகையில் எனக்கு நீங்கள் குரு வாக சில காலம் சில வித்தைகளைக் கற் றுக் கொடுத்திருக்கிறீர்கள். அந்த விதத் தில் தங்கள் மீது எனக்கும், தந்தைக் கும் நல்ல மதிப்பு இருக்கிறது. ஆதலால் நீங்கள் அழைத்ததால் மறுக்க இயலாமல் தந்தை என்னை அனுப்பி வைத்திருக்கி றார். எங்களது பரம வைரியாகிய இவர் களுடன் நாங்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டிய அவசியம் எதுவும் இல்லை!” என அருகில் அவனது பகைவர்களான சுங்க அரசர் மற்றும் இளவரசர்களும், சாத வாகன படைத்தலைவனும் அமர்ந்திருந் ததையும் பொருட்படுத்தாமல் பீமவேலன் தனது குரலை உயர்த்தினான்.

அப்போது அங்கு அமர்ந்திருந்த சுங்கமித்திரனும் பதிலுக்குத் தனது

https://telegram.me/aedahamlibra

வாளினை உயர்த்த நினைத்தான். ஆனால் வைதீகர் பாகவதரின் உயர்ந்த கரங்கள் அவனது வாளினை உறைக் குள்ளாகவே செலுத்த வைத்திருந்தன.

“பீமவேலா... ஆத்திரத்தில் மதியை இழந்து பேச வேண்டாம். இத்தனைக் காலமாக வச்சிர நாடு, கலிங்க நாடு, அவந்தியை ஆண்டு கொண்டிருக்கும் சாதவாகனர் என நீங்கள் அனைவரும் போர்தொடுத்து ஒருவரை ஒருவர் அழித் துகொண்டது போதும். தென்னகத்தில் இப்படித்தான் ஒருவரை ஒருவர் அடித் துக் கொள்வார்கள். ஆனால் வடக்கி லிருந்து ஒருவன் படையெடுத்து வருகி றான் என்றால் அனைவரும் ஒற்றுமை யுடன் ஒன்றுசேர்ந்து எதிர்த்துத் தடுத்து நிறுத்தி விடுவார்கள். உன் தந்தை கார வேலன் கூட “ஆயிரத்து முன்னூறு ஆண் டுகளாக நீடித்து வந்த தமிழர்களின் ஒற் றுமையை முறியடித்து பித்துண்டாவைக் கைப்பற்றி கழுதையைக் கொண்டு உழு

தேன்" என்று உதயகிரியில் பெருமையாக எழுதிக் கொள்ளவில்லையா?"

பீமவேலன் எந்த மறுப்பையும் தெரிவிக்காமல் அமைதியாக அமர்ந்திருந்தான்.

"பித்துண்டாவை உருவாக்கியவர்கள் உன் முன்னோர்கள். உன் எல்லையில் உன் முன்னோர்கள் இழந்த வணிகப் பட்டினத்தை மீண்டும் உன் தந்தை கைப்பற்றியதை ஏதோ அவன் தமிழகத்திற்குள் சென்று தாக்கிக் கைப்பற்றியதைப் போன்று எழுதிக்கொள்ள வில்லையா? ஏன் அப்படி எழுதிக்கொண்டார் என்று நீ ஒரு நாளாவது வினவி இருக்கிறாயா?"

"இல்லை!"

"ஏன் வினவவில்லை?"

"..........."

“தமிழர் படையின் ஒற்றுமை அப்படி. அவர்களின் ஒற்றுமையை சிதைத்து பித்துண்டாவைக் கைப்பற்றியதில் உன் தந்தை காரவேலனுக்கு அவ்வளவு பெருமை. பித்துண்டாவைத் தாண்டியும் முன்னேறிய உன் தந்தை காரவேலனால் தமிழகத்தை முழுவதும் கைப்பற்ற முடிந்ததா? மௌரியப் பேரரசர்கள் பிந்துசாரன் முதல் அசோகன் வரை முயன்று தோற்றுப்போய் விட்டார்கள். ஒருவரையொருவர் அடித்துக்கொண்டு இறப்பதையே வீரம் எனப் போற்றுபவர்கள் அவர்கள். பொது ஆபத்து என்றால் ஒன்று சேர்ந்துவிடுவார்கள் அவர்கள். இதே வேளிர்கள், பாண்டியர்கள், சேரர்கள் என அனைவரும் சோழனை அழிக்க வெண்ணியில் கூடினார்கள். ஆனால் இப்போது சோழனின் தலைமையில் திரண்டு வடக்கு நோக்கி வந்துகொண்டிருக்கிறார்கள். எனக்குக் கடைசியாகக் கிடைத்த தகவலின்படி சோழப் படை புகாரிலிருந்து புறப்பட்டுவிட்டதாம்.

இந்த நிலையில் ஆர்யவதத்தின் அதிபதிகளாக விளங்கும் நீங்கள் மூவரும் ஒற்றுமையுடன் சேர்ந்து அவனை எதிர்த்து விரட்டுவீர்களா அல்லது மூவருமே அடித்துக்கொண்டு போர்தொடுத்து வருபவனின் வேலையை எளிமையாக்குவீர்களா?" எனக் கடும் ஆத்திரத்தில் சொற்களை வெளிப்படுத்தினார் வைதீகர் பாகவதர்.

"குருவே, வருபவன் தென்னவன். அவன் தென்னகத்தில் வேண்டுமானால் பெரும் வெற்றி பெற்றிருக்கலாம். ஆனால் கலிங்கத்தை அவனால் நெருங்கக் கூட முடியாது!" என பீமவேலன் கூறிக்கொண்டிருந்த போதே இடைமறித்த வைதீகர், "பீமவேலா... உன்மீதும் உனது படைகள் மீதும் நீ பெரும் நம்பிக்கை கொண்டிருக்கிறாய். அது மகிழ்ச்சியே! ஆனால் வருபவன் சாதாரணமானவன் அல்ல. உங்களைப் போன்று அந்தப்புறத்தில் அழகிகளின் மடியிலேயே காலத்தைக் கழித்தவனும் அல்ல அவன். அவன் வளர்ந்ததே

எதிரிகளின் கடும் காவலில் தான். சோழ னின் எதிரியான இருங்கோவேளை வழி நடத்தியவன் நான். உன்னைவி டப் பெரும் நம்பிக்கையில் காணப்பட் டான் இருங்கோவேள். முடிவினைப் பற்றி நீ கேள்விப்பட்டிருப்பாய் என எண்ணு கிறேன். சோழப் படைத் தலைவனை நீ இதுவரை நேரில் பார்த்தது இல்லை. அப்போது நீ அறிவாய் "வீரன்" எனும் சொல்லுக்கு என்ன அர்த்தம் என்று. அவர்களின் பலத்தை நீ அறியமாட் டாய். ஒற்றுமையாக எதிர்த்து அவனைத் தடுக்காவிட்டால் வடக்கே இமயம் வரை அவனது பாதத்தில் நிச்சயம் விழுந்துவி டும். பகைமையை மறப்பதில் நன்மைகள் பல. காரணமில்லாத பகைமை வேண் டாம்!" என வைதீகர் கோபத்துடன் பதில ளிக்க அமைதியானான் பீமவேலன்.

அதுவரை அமைதியாக இருந்த அவந்தியின் படைத் தலைவன் வஜ்ர பாகு, "என் தம்பி சாதவாகன அரசன் சதகர்ணியின் நிலை இதுவரை என்ன

என்று தெரியவில்லை?" எனத் தெரிவித்தான்.

"பைத்தானை விடு வஜ்ரபாகு. அவந்தி இப்போது உனது முழு கட்டுப்பாட்டில் தானே இருக்கிறது?" என வினவினார் வைதீகர் பாகவதர்.

"ஆம்!"

"இப்போது நமக்கு அது போதும்! "அவந்தி நம் கைக்கு முதலில் வரட்டும். பிறகு பைத்தானும் நம் கரங்களுக்கு வந்துவிடும்!"

"இது எப்படி சாத்தியம்?"

"அவந்தியும் சுங்கமும் இணையட்டும்!" சட்டென்று பதில் வந்தது வைதீகரிடமிருந்து.

"அவந்தியும், சுங்கமும் இணைவதா?"

"ஆம் வஜ்ரபாகு. முதலில் அவந்தி நம் கைக்கு முழுவதுமாக வந்து விட

வேண்டும். உன் தம்பியின் தலையீடு என்பது சுத்தமாக இருக்கக் கூடாது. முடிந்தால் சதகர்ணியை எதிர்பார்க்காமல் நீயே உன்னை அவந்திக்கு அரசனாக அறிவித்துக்கொள். அவந்தியில் நிலை பெற்றிருக்கும் படை உனது கட்டுப்பாட்டில் தானே இருக்கிறது? அதைப் பயன்படுத்திக் கொள். இப்போது படித்தானத்தைவிட அவந்தியே நமக்கு முக்கியம்!"

குழப்பத்துடன் வைதீகரை நோக்கினார்கள் அவர்கள்.

"வடுகர் நாட்டில் சோழப் படை நிலை கொண்டபிறகு முதலில் சதகர்ணியின் பதிலை எதிர்நோக்குவார்கள். அதாவது சதகர்ணி சோழ அரசை ஆதரிக்கிறானா அல்லது எதிர்க்கிறானா என்று?"

"சதகர்ணி காலம் காலமாகவே தமிழக அரசுகளுக்கு நட்புடையவன். அவன் நம் இருவருக்குமே பகைவன். ஆதலால் அவன் சோழனுக்கே துணை

புரிவான்!” எனக் குறுக்கிட்டான் பீமவேலன்.

அப்போது புஷ்யமித்திர சுங்கன், “சதகர்ணி சோழனை ஆதரித்தால் சோழப் படைகள் நேராக சிங்கபுரியைத் தான் முதலில் தாக்கும்” எனத் தெரிவித்தான்.

“ஆனால் அதே நேரம் சதகர்ணி சோழனை எதிர்த்தால் முதலில் பைத்தான் தாக்கப்படும். பிறகு சோழப்படை பிரியும். சோழப் படை பிரிந்தால் ஒன்று சிங்கபுரியை தாக்கும் மற்றொன்று அவந்தியைத் தாக்கும்!”

“அவந்தி வீழ்ந்தாலோ அல்லது சிங்கபுரி வீழ்ந்தாலோ அடுத்து மகதம் தான்...” என சுங்கமித்திரன் கூற அங்கு அமர்ந்திருந்த பீமவேலன், “சுங்கமித்திரா... ஒரு நாளும் சிங்கபுரி போரில் விழும் நிலை ஏற்படாது. இங்கு அமர்ந்திருக்கும் அனைவருமே சிங்கபுரி சிங்கங்களின் வீரத்தை பல முறை உணர்ந்திருக்

கிறீர்கள்!” என மீண்டும் குரலை உயர்த்தினான்.

“சோழப் படையை நாம் எதிர்ப்பதற்கும், அவந்தியும் சுங்கமும் இணைவதற்கும் என்ன தொடர்பு?” எனக் குறுக்கிட்டு வினவிய வஜ்ரபாகு அவர்களின் கவனத்தைக் கவர்ந்தான்.

அப்போது சுங்கமித்திரன், “தொடர்பு இருக்கிறது வஜ்ரபாகு. பைத்தான் விழுந்தாலும் அவந்தியில் நிலைகொண்டிருக்கும் உனது படையும், என் தலைமையிலான சுங்க தேசப் படையும் ஒன்றுசேர்ந்து நர்மதா நதிக்கரையில் நின்று சோழப் படையைத் தடுத்து நிறுத்தும். அதே நேரம் கலிங்கத்தின் படைகளும் திரண்டு மகாநதி உற்பத்தியாகும் பிரதேசத்தில் சோழப் படையை தடுத்து நிறுத்தும். ஒரே நேரத்தில் நமது இரண்டு படைகளும் இரண்டு புறத்திலிருந்து தென்னகப் படைகளை எதிர்க்

https://telegram.me/aedahamlibra

கும், தென்னகப் படைகள் சிதறும்!" எனத் தெரிவித்தான்.

"சதகர்ணி சோழனுக்கு பணிந்து அவந்தியும் சுங்கத்துடன் இணைய வில்லை என்றால்???" என வினா எழுப் பினான் வஜ்ரபாகு.

"சோழப் படையுடன் சதகர்ணியின் படையும் இணையும். சோழப் படை யும், சாதவாகனப் படையும் சிங்கபுரியை இரண்டாகத் தாக்கும். அதே வேளை யில் அவந்தியிலிருந்து படைகள் மக தத்தின் மேற்குப் புறத்தைத் தாக்கும். மகதப் படைகள் இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டிய நிலை வரும். ஒன்று அவந்திப் படையையும், மற்றொன்று சோழப் படை யையும் எதிர்நோக்கி நிற்கும்."

"இப்படி தனித்தனியாக பிரிந்து நின்றால் அனைவரையும் வீழ்த்திவிட்டு சிங்கபுரி"யிலும் பாடலியிலும் தனது புலிக் கொடியை எளிதாகப் பறக்கவிட்டுவிடு

வான் சோழ அரசன்!" எனத் தெரிவித்தார் வைதீகர்

புஷ்யமித்திர சுங்கனும், பீமவேல னும் வைதீகர் பாகவதரை வெறுப்புடன் நோக்கினார்கள்.

"என் மீது கோபப் பார்வையை இருவரும் உமிழ வேண்டாம். தென்ன கத்தில் நடைபெற்ற போரினை நீங்கள் நேரில் பார்க்கவில்லை. நான் பார்த்தேன். சோழனை எதிர்த்து இரு பெரும் வேந்தர் களான பாண்டியன் மற்றும் சேரன் போர் தொடுத்தனர். அவர்களுக்குத் துணை யாக பன்னிரெண்டு வேளிர்கள். இவர் கள் போதாது என்று சிங்களனின் துணை வேறு. அந்தப் போர் இன்னும் என் விழிகளுக்கு முன் விரிகிறது. அனை வரையும் சோழப் படையினர் எப்படிக் கொன்றார்கள் தெரியுமா?" எனக் கூறிய போதே வைதீகரின் விழிகள் இரண்டும் சிவந்தன. சிவந்து போன விழிகளுடன், "தெளிவான போர் திறனும், தாக்குதல்

https://telegram.me/aedahamlibra

உக்தியும், பெரும் படைபலமும் உங்களுக்குள் ஒற்றுமையும் இல்லை என்றால் சோழனை முறியடிப்பது வெறும் கனவு தான். நீங்கள் நினைப்பதைப் போன்றவன் அல்ல கரிகாலன்” எனக் கூறி முடித்தார் வைதீகர்.

அங்கிருந்த அனைவரும் அமைதியாக அமர்ந்து வைதீகரின் அடுத்த கட்டளை என்னவாக இருக்கும்? என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். வெகு நேரம் அங்கு அமைதி நிலவியது. பிறகு, “சுங்கமித்திரா???” என அழைத்தார்.

அவரை நோக்கினான் சுங்கமித்திரன்!

“உங்களால் யவனத்திற்கு அனுப்பப்பட்டவன் உங்கள் இருவரையும் கொடூரமாகக் கொல்வேன் என்று சபதம் மேற்கொண்டு இருக்கிறானாம்!” என சுங்கமித்திரனையும், வஜ்ரபாகுவையும்

மாறி மாறி நோக்கினார் வைதீகர் பாகவதர்.

“அவன் அன்றே இறந்திருக்க வேண்டியவன். வஜ்ரபாகுவின் கருணையால் பிழைத்துவிட்டான்!” எனக் கோபத்துடன் தெரிவித்தான் சுங்கமித்திரன்.

“சிங்கள இளவரசனின் மரணத்தைப் பற்றி நீங்கள் அறிந்திருக்க மாட்டீர்கள். பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட சிங்கள வீரர்களின் முன் உங்களது நண்பனான சிங்கள இளவரசனை கொடூரமாகக் கொன்றார்கள். இருவரும் எச்சரிக்கையாக இருங்கள்.”

“..........!”

“வஜ்ரபாகு...”

“கூறுங்கள் வைதீகரே!”

“உனது தங்கைக்கும் மகதப் பட்டத்து இளவரசன் சுங்கமித்திரனுக்கும் உடனே திருமணம் நடைபெறட்டும்!”

https://telegram.me/aedahamlibra

"இதைத்தான் தாங்கள் அவந்தியும், சுங்கமும் இணைய வேண்டும் எனத் தெரிவித்தீர்களா?"

"ஆம்!"

"..........."

"இதில் உனக்கு வருத்தம் ஏதாவது இருக்கிறதா?"

"இல்லை. நான் புறப்படும் போதே இந்த நினைப்பில் தான் வந்தேன். தாங்கள் கூறி விட்டீர்கள். எனது நண்பனுக்கு என் தங்கையைக் கொடுப்பதில் எனக்குப் பூரண மகிழ்ச்சியே! அவந்திகாவுக்கும், சுங்கமித்திரனுக்கும் திருமணம் ஆகிவிட்டால் சதகர்ணி நமக்கு உடன்படலாம். ஆனால்..."

"என்ன ஆனால்???"

"அதற்கு அவள் ஒத்துக்கொள்ள வேண்டுமே?"

“யார் உன் தங்கையைப் பற்றி குறிப்பிடுகிறாயா?”

“ஆம்!”

“நீ அவளது மறுப்பையும், உனது சகோதரன் சதகர்ணியின் எதிர்ப்பைப் பற்றியும் நினைத்து வருந்த வேண்டாம். அதற்குரிய வழியை நான் கூறுகிறேன் உனக்கு!” எனக் கூறியவர் அவந்தியிலேயே அவந்திகாவை எப்படி சுங்க அரசின் பட்டத்து இளவரசன் சுங்கபுத்திரனுக்கு மணமுடித்து வைக்கலாம்? எனும் மார்க்கத்தைத் தெரிவித்தார் வைதீகர். பிறகு தென்னாட்டிலிருந்து வந்துகொண்டிருக்கும் கரிகாலனின் படையையும் எப்படிச் சிதறடித்து விரட்டலாம் எனும் திட்டத்தை மூன்று படைத்தலைவர்களுடன் வைதீகர் பாகவதர் பல்வேறு வழிகளில் விவாதிக்கலானார்.

அவர்கள் விடிய விடிய இரகசிய திட்டம் தீட்டிக்கொண்டிருந்த அதே இரவில் அவந்தியில் சோழப் படையின்

வேளக்காரப் படைத்தலைவன் திவ்யன் அவர்களின் திட்டத்தின் அடிப்படையை சிதைத்துக் கொண்டிருந்தான்.

அடிக்குறிப்பு:

1. வெற்றாவதி நதி - Betwa river. பேதுவா நதிக்குத்தான் வெற்றா வதி நதி எனப் பெயர். வெற்றாவதி நதி யானது இப்போதைய மத்தியப் பிரதேசத் தில் விந்திய மலையின் மேற்குச் சரிவில் உற்பத்தியாகி யமுனையில் கலக்கிறது. பேதுவா நதி எனப்படும் வெற்றாவதி நதி யானது அவந்தி நதியைப் போன்று தெற் கிலிருந்து வடக்கு நோக்கிப் பாய்கிறது. வெற்றாவதி நதியும் அவந்தி நதியைப் போன்று யமுனையின் முக்கிய கிளை நதிகளில் ஒன்று.

2. விதிசா - Vidisa. வெற்றாவதி நதிக்கரையில் காணப்பட்ட பழங்கால சிறு நகரம். அவந்திக்கும், மகதத்துக்கும் எல்லையாக அமைந்த இடம்.

https://telegram.me/aedahamlibra

# 8. இரண்டு திங்கள்...

தென்னகத்திலிருந்து புறப்பட்டிருக்கும் கரிகாலனின் படைகளைக் கண்டதாலோ எண்ணமோ கார் முகில்கள் கிழக்கு வானில் ஒளிர்ந்துகொண்டிருந்த பௌர்ணமி நிலவினை மறைத்தபடி அதிவேகமாக வடக்கு நோக்கிச் சென்றுகொண்டிருந்தன. விந்திய மலைச் சரிவில் பெய்த சாரல் மழையினால் காற்றும் குளிர்ச்சியாக வீசிக்கொண்டிருந்தது. மாளிகைச் சாளரத்தில் நின்றுகொண்டு கீழை வானத்தில் தெரிந்த முழு நிலவைப் பார்த்தபடி முகத்தில் அறைந்த குளிர் தென்றலை அனுபவித்தபடி மகிழ்ச்சியுடன் நின்றுகொண்டிருந்தான் பலதேவன். நந்தவனத்தில் பூத்திருந்த மலர்களிலிருந்து வாசனையும் கம்மென்று எழுந்து அவனது விழிகளைத் தானாக

மூட வைத்திருந்தன. விழிகளை மூடியபடியே முகத்தில் குளிர்ச்சியுடன் அறைந்த தென்றலை அவன் அனுபவித்தபடி நின்றாலும் சாளரத்தின் தூண்களை இறுகப் பற்றியிருந்தபடி ஏதோ பெரும் சிந்தனையில் அகப்பட்டிருந்தான்.

முதுகைக் காட்டியபடி நின்று கொண்டிருந்த பலதேவனைக் கண்ட அவனது மனைவி ஆவலுடன் அவனது முதுகில் சாய்ந்துகொண்டாள். சாய்ந்தவள் அவனை அணைக்கவும் செய்தாள். தனது மனைவியின் கரங்களை எடுத்துத் தனது கன்னத்தில் வைத்தவன், "நிலவு குளிர்ச்சிக்கு உவமை என்று யார் சொன்னது?" என வினவினான்.

சிறிதும் தொடர்பில்லாமல் திடீரென்று அவன் வினவியதைக் கேட்ட அவனது மனைவி, "கதிரவனை வெம்மைக்கும், நிலவினைக் குளிர்ச்சிக்கும் உவமைப்படுத்துவது தானே காலம் காலமாக நடக்கிறது!" எனப் புன்சிரிப்புடன் பதிலளித்தாள்.

"அவை அனைத்தும் பொய்!"

https://telegram.me/aedahamlibra

"என்ன பொய்யா?" ஆச்சரியத் துடன் வினவியவள், "ஏன் பொய் என்று கூறுகிறீர்கள்?" என வினவிய படி அவனை இன்னும் சற்று இறுக்கமாக அணைத்துக் கொண்டாள்.

"கதிரவன் வெம்மைக்கும், நிலவு குளிர்ச்சிக்கும் தானே உவமை எனத் தெரிவித்தாய்?"

"ஆம்!"

"நான் இல்லை என்கின்றேன்!"

"அதுதான் ஏன் என்று வினவி னேன்."

"குளிர்ச்சியை அளிக்கக்கூடிய நில வின் ஒளி இந்தப் பூவுலகை இப்போது முழுவதும் நிரப்பியிருக்கிறது. ஆனால், உன் அருகாமையினால் எனது உடல் வெம்மையில் அல்லவா இப்போது தவிக் கிறது" என அவன் தெரிவித்தபோதே அவள் நாணம் கொண்டு அவனது மார்பில் தனது முகத்தைப் புதைத்துக்

கொண்டாள். அப்போது அவன், “அந்த நிலவை விடவும் என்னை அணைத்தி ருக்கும் உனது தேகம் எனக்கு மிக வும் குளிர்ச்சியாக இருக்கிறது” எனத் தெரிவித்தபடியே அவனும் அவளை அணைத்துக் கொண்டான்.

“வர வர உங்களது பேச்சு மோசமா கிக்கொண்டு வருகிறது!”

“நானா மோசமாகப் பேசுகிறேன்?”

“ஆமாம்!”

“அப்படி என்ன மோசமாகப் பேசி விட்டேன்! மனைவியிடம் பேசாமல் வேறு யாரிடம் இதைப்பற்றிப் பேசுவதாம்???”

அவள் எதையும் பதிலுக்குக் கூற வில்லை. அவனது தோள்களில் சாய்ந்து கொண்டு நிலவினை நோக்கிக்கொண் டிருந்தாள்.

“எனது உடல் வெம்மையில் காய் கிறது. குளிர்ச்சியுடன் இருக்கும் உன்...”

என அவன் கூறிக்கொண்டிருந்த போதே அவனது வாயில் கையை வைத்து அவனது பேச்சினை நிறுத்தியவள், "போதும் உங்கள் பேச்சு... எனக்குக் காது கூசுகிறது. வர வர உங்களிடம் பேச்சு மட்டும்தான் மிகுந்துகொண்டிருக்கிறது. ஆனால் செயல் தேய்ந்துகொண்டிருக்கி றது" எனக் கூறியவள் முகத்தைத் திருப் பிக்கொண்டாள்.

"கடமையை முன்னிட்டு மனைவி யைக் கவனிக்காமல் இருந்தது எனது பிழை தான். தவறவிட்ட பொழுதுகளை யும், செய்த பிழைகளையும் இன்றிரவே ஈடுசெய்து விடுகிறேன்" எனத் தெரி வித்த பலதேவன் அவளுக்கு முத்தமிட்ட படி அவளைத் தூக்கிக்கொண்டு நடக்க லானான்.

அப்போது நந்தவனத்தின் மையப் பகுதியிலிருந்து ஆந்தையின் அலறல் சத்தம் எழுந்து அடங்கியது. மீண்டும் அதே அலறல் சத்தம் சற்று நீண்டு எழுந்

தபிறகு மீண்டும் அடங்கியது. ஆந்தை யின் அலறல் இரண்டாவது முறை எழுந் ததுமே மனைவியை ஆசையுடன் தூக் கிச் சென்றுகொண்டிருந்த பலதேவன் அப்படியே நிற்கலானான். அவன் நிற்ப தைக் கண்ட அவனது மனைவி, “உங் களுக்கு அழைப்பு வந்துவிட்டது போலி ருக்கிறதே!” எனக் கோபத்துடன் வினவி னாள்.

பதில் கூறாமல் அப்படியே நின்றான் பலதேவன். அவனது பிடி வலுவிழந்து கொண்டிருந்தது. அவளது மனைவி இறங்கிக் கொண்டாள். அப்போது அவள் சிரித்தபடியே, “இன்றிரவு அனைத்தை யும் சரிகட்டி விடுவதாக சொன்னீர்கள்?” என மீண்டும் அவனது விழிகளில் தனது கோபப்பார்வையை கேலிப் பார்வையாக நிலைநிறுத்திக்கொண்டு வினவினாள்.

தலை குனிந்தான் பலதேவன். அவனது தாழ்வாயைப் பிடித்து உயர்த் தியவள், “வீரர்கள் ஒருநாளும் தலை

குனியக் கூடாது. நீங்கள் பெரும் வீரர். அவந்தியின் படைத் தலைவர் வஜ்ரபாகு வேறு ஊரில் இல்லை. ஏதேனும் முக்கி யக் காரியமாக இருக்கும். சென்று வாருங் கள். இரவு எவ்வளவு நேரமானாலும் நான் உங்களுக்காக காத்திருப்பேன்!” எனக் கூறியவள் அவனது நெற்றியில் முத்த மிட்டு தனது அறைக்குள் சென்று தாழிட் டுக்கொண்டாள்.

அவனது மனைவியை எண்ணிப் பெருமிதத்துடன் நந்தவனத்தை நோக்கி நடந்தான் பலதேவன். முழு நிலவின் ஒளி பிரகாசமாக இருந்தாலும் அடர்ந்த மரங்களாலும், கொடிகளாலும் முற்றிலும் இருட்டாகவே காணப்பட்டது நந்தவனம். இருட்டாகக் காணப்பட்டாலும் பழக்கப் பட்ட நந்தவனமாகையால் எவ்வித சிர மும் இன்றி நந்தவனத்தின் மையப் பகுதிக்கு வந்து சேர்ந்தவன், “என்ன செய்தி?” எனக் கோபத்துடன் வினவி னான்.

அங்கு காணப்பட்ட புதர் ஒன்றிலிருந்து வெளிப்பட்ட பெண் ஒருத்தி எதுவும் கூறாமல் அமைதியாக அவனுக்கு முன் அடக்கமாக நின்றாள். மீண்டும் அவளிடம், "என்ன செய்தி?" எனச் சற்று சத்தமாகவே கத்தினான்.

அவனது கோபத்தைக் கண்டவள், "தலைவர் முக்கியமான காரியத்தில் ஈடுபட்டிருந்த போது இடையூறு செய்திருந்தால் மன்னித்துக்கொள்ளவும். கொண்டு வந்திருக்கும் செய்தி மிகவும் முக்கியமானது. ஆதலால் தான்...." எனப் பணிவுடன் தெரிவித்தாள்.

"ஆதலால் தான் என்ன செய்தி என்று வினவுகிறேன்!"

"இளவரசர் வஜ்ரபாகு அவந்தியிலிருந்து புறப்படுவதற்கு முன் மூவரை சிறையில் அடைக்கும்படி கட்டளையிட்டு விட்டு சென்றார் அல்லவா?"

"ஆம். அதற்கு இப்பொழுது என்ன?"

"அவர்கள் மூவரும் சிறையில் அடைக்கப்படவில்லை!"

"என்ன கூறுகிறாய் நீ?"

"அவர்கள் அனைவரும் மாளிகை யில் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் காவல் இருந்தவர்களில் நானும் ஒருத்தி. முழுக்க முழுக்க இள வரசியின் நம்பிக்கைக்குரியவர்கள் தான் காவலில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். காவல் காப்பவர்களுக்கும் உள்ளிருப்ப வர்கள் யார் என்று தெரியாது. இன்றுதான் மூவர் என்று எனக்குச் செய்தி கிடைத் தது. உடனே தங்களைக் காண வந்து விட்டேன்!"

குழப்பத்துடன் சிந்தித்தபடியே நின் றுகொண்டிருந்தான் பலதேவன். பிறகு "அவர்கள் மூவரும் பத்துக்கும் மேற்பட்ட காவல் வீரர்களைக் கொன்றவர்கள் அல் லவா?" என வினவினான்.

"ஆம்!"

https://telegram.me/aedahamlibra

“பிறகு எதற்காக அவர்களைத் தனி யாக மாளிகையில் தங்க வைத்திருக்கி றார் இளவரசியார்?”

“தெரியவில்லை!”

“........”

“செய்தி அதுமட்டுமல்ல...?”

“வேறு என்ன?”

“சாதவாகன அரசருக்கும் செய்தி அனுப்பப்பட்டிருக்கிறது?”

“என்ன உளறுகிறாய் நீ?”

“நான் உளறவில்லை தலைவரே... எனக்குத் தெரிந்ததைக் கூறுகிறேன். அதுவும் சதகர்ணி உடனே அவந்திக்கு வரவேண்டும் என்று புறா மூலம் அவச ரச் செய்தி அனுப்பியிருக்கிறார்கள். மாளி கையில் தங்கியிருக்கும் மூவருக்கும் ராஜ கவனிப்பு. பெரும் சந்தேகமாக இருக்கி றது!”

"அவர்கள் மூவரையும் நீ பார்த்தாயா?"

"பார்க்கவில்லை. ஆனால் மூவரில் இருவர் தென்னாட்டைச் சேர்ந்தவர்கள். ஒருவன் யவனன்!"

"யவனனா?"

"ஆம்!"

"முரண்பாடாக அல்லவா இருக்கிறது."

"அதுவும் அவன் அடிமை!"

"என்ன அடிமையா?"

"ஆம்! அவனது உடலில் அடிமையின் முத்திரையைப் பார்த்திருக்கிறார்கள்."

"அவ்வடிமையின் தலைவன் உள்ளே இருக்கிறானா?"

"இல்லை..."

தனக்கு முன் நின்றவளையே பார்த்துக்கொண்டிருந்தான் பலதேவன். பிறகு, "எதுவுமே மனதிற்குச் சரியாகப் படவில்லை!" எனத் தெரிவித்தான்.

"அப்புறம் இன்னொரு செய்தி.."

"என்ன?"

"மூவரையும் சாதவாகனத்திலிருந்து வந்துகொண்டிருக்கும் சதகர்ணி சந்திக்கக் கூடாது. அவசரத்தில் வருவதால் சதகர்ணி உரிய பாதுகாப்பு இன்றிதான் வருவான். அவனைத் தீர்த்துக்கட்டவும் இதுதான் தக்க சந்தர்ப்பம்."

"அவன் மடியும் அதே நேரத்தில் நமது இளவரசர் வஜ்ரபாகு அவந்தி அரியணையில் ஏறவேண்டும்."

"ஏற்பாடுகளைச் செய்துவிடுகிறேன் நான். அதே நேரம் இங்கு இருப்பவர்களை நீங்கள் தீர்த்துக்கட்டி விடுங்கள்!"

"அந்தப் பணியை நான் பார்த்துக் கொள்கிறேன்! நீ கிளம்பு!"

"தங்களது உத்தரவு தலைவரே! நமக்குக் கிடைத்திருக்கும் அரிய சந்தர்ப் பம் இது. இதை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும். எனக்கு இன்னொரு சந்தே கம் இருக்கிறது. ஆனால் அது இன்னும் உறுதி செய்யப்படவில்லை. உறுதி செய் தபிறகு அதை நான் தெரிவிக்கிறேன். இப்போது நான் விடை பெறுகிறேன்" எனக் கூறியவள் அங்கிருந்து செல்லலா னாள்.

அப்போது பலதேவன், "உன் சந் தேகம் என்ன?" என வினவினான்.

"அவர்கள் மூவரும் தென்னவர்கள். அவர்களை இளவரசியை சந்தித்த அதே நேரம் சதகர்ணிக்கும் செய்தி அனுப்பட்டி ருக்கிறது."

"அப்படியெனில், அவர்கள் மூவரும் மிகவும் முக்கியமானவர்கள் என்கிறாயா?"

"அதேதான். இந்த நிலையை நமக்குச் சாதகமாக்கிக் கொள்ளுங்கள். அவர்கள் கொல்லப்பட்டால் நிச்சயம் ஏதாவது ஒரு வழியில் குழப்பம் ஏற்படும். அக்குழப்பத்தை நாம் நமது இளவரசர் வஜ்ரபாகுவிற்கு சாதகமாக்கிக் கொள்வோம்!"

"இந்த யோசனையும் நல்லதுதான். நான் இன்றே அவர்கள் மூவரையும் சந்திக்கிறேன். அவர்களை எந்த மாளிகையில் தங்கவைக்கப்பட்டிருக்கிறார்கள்?"

"நதிக்கரை மாளிகையில் தான்!"

"என்ன, நதிக்கரை மாளிகையிலா?" சிரித்தபடி வினவினான் பலதேவன்.

"ஆம்!"

https://telegram.me/aedahamlibra

“அப்படியெனில் நீ கவலைப்பட வேண்டாம். அவர்கள் மூவரையும் நான் பார்த்துக் கொள்கிறேன். வேலை வெகு சுலபம்!”

“நல்லது...” எனக் கூறியவள் அங்கிருந்து விடைபெற்றாள். அப்போது, “இன்னும் இரண்டு திங்களுக்கும் குறைவான காலம் தான் இருக்கிறது. அனைத்து ஏற்பாடுகளும் தயார் தானே?” என அவளிடம் வினவினான்.

“அனைத்து ஏற்பாடுகளையும் முடித்துவிட்டேன். குறிப்பிட்ட காலத்திற்குள் அனைவரும் வந்து சேர்ந்துவிடுவார்கள். திட்டமிட்டபடி அனைத்தும் அரங்கேறும்” எனத் தெரிவித்தவள் அங்கிருந்து விரைந்து சென்று புதர் ஒன்றில் மறைந்தாள்.

தனது மனைவி காத்திருப்பதையும் மறந்த பலதேவன் பலவித எண்ணத்துடன் நதிக்கரை மாளிகையை நோக்கிச் செல்லலானான். நதிக்கரையை நோக்

கிச் சென்ற பலதேவனை அந்த நந்தவனத்தின் மற்றொரு கோடியிலிருந்து ஓர் உருவம் புறப்பட்டு பலதேவன் அறியாத வண்ணம் அவனைப் பின்தொடர்ந்து கொண்டிருந்தது.

அதுவரை அவர்கள் இருவரும் பேசிக்கொண்டிருந்ததை நந்தவனத்தின் மையத்தில் காணப்பட்ட குளக்கரைச் சிற்பத்தில் மறைந்தபடி நின்றுகொண்டிருந்த இளவரசி அவந்திகா அனைத்தையும் கேட்டுக்கொண்டு நின்றாள். ஆனால் அதே நேரம் நதிக்கரை மாளிகையை நோக்கிச் சென்ற பலதேவனை இன்னொரு உருவம் ஒன்று பின்தொடர்வதையும் அவள் கவனித்திருந்தாள்.

அதைப் பெரிதுபடுத்தாத அவந்திகா, “இன்னும் இரண்டு திங்கள் தானா? எதற்குத் திட்டமிடுகிறார்கள் அவர்கள்?” எனச் சிந்தித்தபடியே அங்கிருந்து நகர்ந்தாள்.

https://telegram.me/aedahamlibra

# 9. பேரழகி அவந்திகா

நதிக்கரை மாளிகையை நோக்கிச் சென்ற பலதேவனைப் பின் தொடர்ந்த உருவம் கார்த்திகாவினுடையதுதான் என்பதை அறிந்த அவந்திகா மேற்கொண்டு பலதேவனைப் பின் தொடராமல் தனது மாளிகையை நோக்கி நடக்கலானாள். அதே நேரம் மூவரையும் சந்திக்கச் செல்லும் பலதேவனின் எண்ணமும் ஈடேராது என்பதும் அவளுக்குத் தெரியும். அதற்குக் காரணம், நதிக்கரை மாளிகையில் மூவரையும் சிறை வைத்ததைப் போன்ற தோற்றத்தை ஏற்படுத்தி தனது பார்வையிலேயே தனது மாளிகைக்கு அருகில் இருக்கும் மாளிகையில் தங்கவைத்து வேண்டியவற்றை செய்திருந்தாள். காவலற்ற மாளிகை என்பதைப் போன்ற தோற்றத்தை ஏற்படுத்தினாலும் பெரும் காவல் நிறைந்த மாளிகை அது.

அதே நேரம் அனைத்து கதவுகளையும் வெளிப்புறத்திலிருந்து அடைத்து அவர்கள் மூவரும் வெளியேற இயலா வண்ணம் மாளிகைக்குள் சிறை செய்திருந்தாள்.

பலதேவனின் நடவடிக்கைகளை அறிந்துகொள்ளவே அவளுக்குச் சந்தேகமான சில வீராங்கனைகளையும் நதிக்கரை மாளிகையில் காவலுக்கு அமர்த்தி அவளே செய்திகளைக் கசியவிடவும் செய்திருந்தாள். செய்தியை அறிந்துகொண்டு பலதேவனைத் தேடி வந்த வீராங்கனையை அவளே பின்தொடர்ந்து வந்து அவர்களின் பேச்சினை ஒட்டு கேட்கவும் செய்திருந்தாள்.

பலதேவனின் திட்டத்தைப் பற்றி ஓரளவிற்கு அறிந்துகொண்ட அவந்திகா கவலை எதுவும் கொள்ளாமல் நடக்கலானாள். ஆனால், அவளது மனதில் பெரும் குழப்பமும், சிந்தனையும் நிறைந்திருந்தது. அதிலும் அவர்கள் இன்னும் "இரண்டு திங்கள்" என்று கூறியது அவளுக்குப் பெரும் குழப்பத்தை அளித்

துப் பலவித கேள்விகளை எழுப்பியிருந்தது. “இரண்டு திங்களில் அவர்களால் எதைச் சாதிக்க இயலும்? சதகர்ணியைக் கொலை செய்வது என்பது ஒரு நாளும் நடவாத காரியம். சதகர்ணி பெரும் வீரன். செய்தி அனுப்பப்பட்ட போதே எச்சரிக்கையையும் சேர்த்தே அனுப்பியிருக்கிறேன். சதகர்ணி அவந்தி வந்த பிறகு அவர்களால் என்ன செய்ய இயலும்? எதற்கு இன்னும் “இரண்டு திங்கள்” என்று நாள் குறித்திருக்கிறார்கள்?” எனப் பலவித குழப்பத்துடனே தனது மாளிகையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தாள்.

அதே நேரம் வணிகர்களைப் போன்று வேடமிட்டிருந்த திருக்கண்ணன், இம்ஹோடெப், கரிகாலன் மூவரையும் தேடிக்கொண்டு வேளக்காரப் படைத் தலைவன் திவ்யன் அவந்திகாவின் மாளிகைக்கு வந்திருந்தான். காவல் நிறைந்து காணப்பட்ட மாளிகை அது. ஆனாலும் பொழுது மேற்கில் சாய்ந்து

ஒரு நாழிகைக்கும் மேல் கடந்துவிட்ட தால் ஒரு சிலர் மட்டுமே காவல் காத் துக்கொண்டு நின்றனர். ஆள் அரவ மற்ற அவந்திகாவின் பெரும் மாளிகை யில் மூவரையும் தேடியபடியே எச்சரிக் கையுடன் சாளரத்தில் நடந்துகொண்டி ருந்தான். அவன் எச்சரிக்கையுடன் எவர் கண்களுக்கும் அகப்படாமல் நடந்து கொண்டிருந்தாலும் நிலவின் ஒளியில் அவனது நிழலானது நீண்டு சுவரிலும், சுவருக்குக் கீழேயும் விழுந்துகொண் டிருந்ததை அவன் கவனிக்கவில்லை. காவல் காத்த வீரர்களும் கவனித்திருக் கவில்லை. ஆனால், அவந்திகா கவனித் துவிட்டிருந்தாள்.

அவந்திகா ஓய்வெடுத்துக்கொண் டிருந்த வீரர்களிடம் தகவலைத் தெரி வித்து கட்டளையைப் பிறப்பிக்கலா னாள். வீரர்களும் உடனே திவ்யனைக் கைது செய்ய மாளிகையில் தேடலா னார்கள். மாளிகையின் வாயில் கதவு சத்தமின்றி அடைக்கப்பட்டது. திவ்யன்

https://telegram.me/aedahamlibra

பெரும் மாளிகையின் விளக்கு ஏற்றப்படாத இருள் நிறைந்த உட்புறச் சாளரத்தில் நடந்துகொண்டிருந்தபோது இரண்டு புறமும் வீரர்கள் அவனைச் சுற்றி வளைத்தார்கள். அத்தனை வீரர்களைத் திவ்யன் அவ்விடத்தில் எதிர்பார்த்திருக்கவில்லை. அதிலும் அவனைச் சுற்றி வளைத்திருந்த வீரர்களைக் கண்ட போதுதான் மாளிகையில் இத்தனை வீரர்கள் காவல் இருந்திருக்கிறார்கள் என்பதையே அறிந்துகொண்டான். ஈட்டிகளையும், வாட்களையும் உயர்த்திய காவல் வீரர்கள், "சரணடைந்து விடு..." எனக் கூறியபடி இரண்டு புறமும் அவனை நெருங்கினார்கள்.

"தீவர்த்திகளைக் கொண்டு வாருங்கள்!" கட்டளையிட்டான் காவல் தலைவன்.

உடனே எரிந்துகொண்டிருக்கும் தீவர்த்தி ஒன்று கொண்டுவரப்பட்டது. தீவர்த்தியை வாங்கி நின்றுகொண்டி

ருந்த திவ்யனின் முகத்தை நோக்கினான் காவல் தலைவன். துணியினால் தனது முகத்தை மறைத்திருந்தான் திவ்யன். அவனது கூர்மையான விழிகள் மட்டுமே இருளினில் பளிச்சிட்டது.

"முகமூடியை நீக்கு!" கட்டளையிட்டான்.

திவ்யன் எதுவும் செய்யாமல் இரண்டு பக்கமும் நின்றுகொண்டிருந்த வீரர்களின் நிலை, அவர்களின் கைகள் தாங்கியிருந்த ஆயுதங்கள் என அனைத்தையும் நோக்கினான்.

"முகமூடியை இறக்கி நீ யார் என்று கூறுகிறாயா? அல்லது உன் தலையை இழக்கிறாயா?" எனக் கோபத்துடன் மீண்டும் எச்சரித்தான் காவல் தலைவன்.

அவன் விடுத்த எச்சரிக்கையைக் கேட்ட திவ்யன் கையை உயர்த்தினான். வீரர்கள் அனைவரும் அவன் யார் என்று அறியும் ஆவலில் அவனது முகத்தையே

https://telegram.me/aedahamlibrary

பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஆனால், கையை உயர்த்தியவன் முகமூடியை நீக்காமல் மறைத்து வைத்திருந்த இரண்டு குறுவாட்களை உருவினான்.

அவ்வளவுதான், வீரர்கள் அனைவரும் இரண்டு பக்கமும் அவனை நோக்கிப் பாய்ந்தனர். வீரர்கள் பாயத் துவங்கிய அடுத்த கணமே வீரன் ஒருவனின் கையில் வைத்திருந்த தீவர்த்தியை உதைத்துக் கீழே தட்டி விட்டான் திவ்யன். இருள் சூழ்ந்தது அவ்விடத்தில். சிறிது நேரம் அவ்விடத்தில் வாட்களும், ஈட்டிகளும் அதிவேகமாக உராயும் சத்தம் கேட்டது. அதனுடனே வீரர்கள் பலரின் அலறல் சத்தங்களும் எழுந்து அவ்விடத்தைக் கதிகலக்கத் துவங்கின.

அலறல் சத்தங்களைக் கேட்டு வீரர்களும், வீராங்கனைகளும் வாட்களுடனும், தீவர்த்திகளுடனும் அவ்விடத்தை நோக்கி ஓடி வந்தார்கள். ஓடி வந்தவர்கள் கீழே அடிபட்டுக் கிடந்த வீரர்களைக்

கண்ட வீராங்கனைகளின் தலைவி, "ஒற்றன் எவனோ ஊடுருவி விட்டான். உடனே அவனைத் தேடிக் கண்டுபிடியுங்கள்" என வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் பெரும் ஆத்திரத்துடன் கட்டளையிட்டாள். மாளிகை பரபரப்பானது.

உடனே வீரர்களும், வீராங்கனைகளும் திவ்யனைத் தேடி நான்கு திசைகளை நோக்கியும் பிரிந்துச் செல்லலானார்கள். கீழே அடிபட்டுக் கிடந்தவர்களைச் சோதித்த வீராங்கனை ஒருத்தி, "யாரும் இறக்கவில்லை. ஆனால், பலமாகத் தாக்கப்பட்டிருக்கிறார்கள்" எனத் தெரிவித்தாள்.

அப்போது அம்மாளிகையின் காவல் தலைவி, "வாட்களும், ஈட்டிகளும் உராய்ந்த சத்தம் எழுந்தது. ஆனால், இங்கு வீரர்களின் குருதி கூட சிந்தியிருக்கவில்லையே? இவர்கள் அனைவரும் கை மற்றும் கால்களை இழுத்துக்

கொண்டு கிடக்கிறார்களே?" என வின வினாள்.

"காரணம் தெரியவில்லை. ஒரு வேளை நமது இளவரசி இந்தத் தாக் குதல் யுக்தியைப் பற்றி அறிந்து வைத் திருக்கலாம். வாருங்கள், இளவரசியிடம் தகவல் தெரிவிப்போம்!" என அவ்வீராங் கனை கூறிய அடுத்த கணம் அவர் கள் இருவரும் இளவரசியிடம் செல்லலா னார்கள்.

அங்கே சென்றவர்களுக்கு அடுத்த அதிர்ச்சி காத்திருந்தது. முகமூடியணிந்த திவ்யனை வீராங்கனைகள் நால்வர் ஈட்டி முனையில் கைது செய்து இளவரசிக்கு முன் கொண்டு வந்து நிறுத்தியிருந்தார் கள். அதைப் பார்த்த அம்மாளிகையின் காவல் தலைவி இவனை எப்படி நீங்கள் கைது செய்தீர்கள்?" என ஆச்சரியத்தில் இளவரசி அவந்திகா நிற்பதையும் மறந்து வினவினாள்.

அவளது வினவலைக் கேட்ட அவந்திகா சிரித்தபடியே, “நம் வீரர்கள் மற்றும் வீராங்கனைகளின் திறமையைப் பற்றி நீ அறியமாட்டாயா? அவந்தியின் காவலர்கள் ஒரு ஒற்றனைக் கைது செய்ததையா இப்படி ஆச்சரியத்துடன் வினவுகிறாய்?” எனப் பதிலுக்கு வினவினாள்.

“சற்று முன்னர் இவனால் தாக்கப் பட்டு வலியில் துடித்துக்கொண்டும், கை கால்களை இழுத்தபடியும் கீழே கிடந்த நமது வீரர்களைப் பார்த்தேன். ஆதலால் தான் இவனை எப்படிக் கைது செய்திருப்பார்கள் என்று அறியும் ஆவலில் வினவினேன்” என அதிர்ச்சியிலிருந்து மீளாமல் தெரிவித்தாள்.

அவந்திகா அவளுக்கு முன் நின்ற வீரர்களையும், வீராங்கனையும் நோக்கினாள். அடுத்த கணம் அங்கு நின்ற வீராங்கனை ஒருத்தி, “இவனை நமது வீரர்கள் சிலர் வழி மறித்தார்கள். அனைவரையும் தாக்கிவிட்டு தப்பிக்க முயன்

https://telegram.me/aedahamlibra

றான். ஆனால், நாங்கள் மறித்துத் தாக்கியபோது இவன் தற்காப்பில் கூட ஈடுபடவில்லை. எங்களது தாக்குதலுக்குப் பயந்து பணிந்து விட்டான்!” எனப் பெருமிதத்தில் தெரிவித்தாள்.

“சரி...” எனக் கூறிய அவந்திகா அந்த அறையிலிருந்து வெளியேறி திவ்யனால் தாக்கப்பட்டுக் கிடந்த வீரர்களை நோக்கினாள். வீரர்களின் வாட்கள் வெகு தொலைவு கடந்து சென்று விழுந்து கிடந்ததையும் வீரர்கள் தாக்கப்பட்டுக் கிடந்த விதத்தையும் பார்த்தவள், “அவன் அவர்களுக்குப் பயந்து பணிந்துவிடவில்லை” என்பதை உணர்ந்து கொண்டாள்.

பிறகு, மீண்டும் தனது அறைக்குள் சென்றவள் திவ்யனைச் சூழ்ந்து நின்ற காவலர்கள் மற்றும் காவல் வீராங்கனைகளிடம், “இந்த ஒற்றனைத் தவிர அனைவரும் இங்கிருந்து செல்லலாம். நானே இவனை விசாரித்துக் கொள்கிறேன்!”

எனக் கட்டளையிட அனைவரும் திவ் யனை அங்கேயே விட்டுவிட்டு அங்கிருந் துச் செல்லலானார்கள்.

அந்த விசாலமான அறையில் கைகள் பிணைக்கப்பட்டு கைது செய் யப்பட்டிருந்த திவ்யனும், அவந்தி இளவ ரசியும் மட்டுமே நின்றுகொண்டிருந்தார் கள். திவ்யனை நோக்கிய அவந்திகா, "நீ யார்?" என்று வினவினாள்.

திவ்யன் எந்தப் பதிலையும் கூறா மல் அவளை நோக்கினான். இடையில் ஒரு கையையும், ஒரு காலை முன்னே வைத்து மற்றொரு காலை சற்றே நொடித் தபடி ஒய்யாரமாக நின்றுகொண்டிருந் தாள். அவள் நின்ற தோரணை அவளது வளைவு நெளிவுகள் மற்றும் உடலின் சௌந்தர்யங்களின் பரிமாணத்தைக் கச் சிதமாக வெளிப்படுத்திக்கொண்டிருந் தது. அதைக் கண்ட உடனேயே திவ்ய னுக்கு ஆற்றங்கரை நினைவு வர நீண்ட பெருமூச்சு ஒன்றை விடலானான்.

அந்த அறையில் ஏற்றியிருந்த விளக்குகளிலிருந்து வெளிப்பட்ட செங் கதிர்கள் மற்றும் வெளிப்புறத்திலிருந்து அறைக்குள் நுழைந்த நிலவின் வெண் கதிர்கள் ஆகியவை அவள் மீது விழுந்து, விளக்கின் செங்கதிர்களால் நிலவின் வெண்கதிர்கள் செதுக்கிய சிற் பமாக அவளை வடித்திருந்தன. கதி ரவனின் கிரணங்களை நிலவு பிரதி பலித்து ஒளிர்ந்து கொண்டிருப்பதைப் போன்று அவளது பிறை நுதலும் நில வின் ஒளியைப் பிரதிபலித்து அழகுவீ சிக்கொண்டிருந்தது. நுதலுக்குக் கீழே அடர்ந்த புருவத்தில் எதிரில் நிற்கும் ஆண் மகனின் உயிரையும், உணர்வை யும் ஒருசேர சிதைக்கும் வேல் விழிகள் அவளது விழித்திரைக்குள் இருந்தபடி அதே நேரம் விழிகளில் ஏளனத்தின் சாய லுடன் திவ்யனையே நோக்கிக் கொண் டிருந்தன. திவ்யனும் அவளது விழிகளி லிருந்து தனது பார்வையை விளக்கா மல் அவளது விழிகளிலேயே தனது பார்

வையையும் நிலைக்க விட்டான். ஒரே நேரத்தில் திவ்யனின் வாள் விழிகளும், அவந்திகாவின் வேல் விழிகளும் ஒன்றையொன்று நோக்கிக் கொண்டிருந்தன. பிறகு பார்வையைக் கீழே இறக்கினான். அவளது சிவந்த அதரத்திற்கு மேலே அழகாக, அளவாகக் காணப்பட்ட அவளது நாசி, சிவந்து, சற்றே வெளிறிப்போய் காணப்பட்ட அவளது கன்னம், மரகதக் கல் பதித்த குண்டலங்கள் அவளது காதில் தொங்கிக் கொண்டிருக்க அவளது அடர்ந்த கருங்குழல்கள் அவளது தோளிலும், முதுகிலும் கிடந்தன.

வழுவழுப்பான சிவந்த அவளது கழுத்து, அதற்குக் கீழே பட்டுக் கச்சை மறைக்க முயன்றும் விம்மியபடி புடைத்துக் காணப்பட்டன அவளது யௌவன சௌந்தர்யங்கள். அவன் அவளை நோக்க நோக்க அவனுக்கு ஆற்றங்கரை நினைவு தோன்றி அவனைக் கிறங்கடிக்க அதற்கு மேல் அவளது அழகைப் பற்றி

ஆராய்வதை நிறுத்திய திவ்யன் அவளது விழிகளில் மீண்டும் தனது பார்வையை நிலை நிறுத்தினான்.

ஆடையை விட்டு எழ வீறுகொண் டிருக்கும் அவளது வனப்பினைக் கண்டு திவ்யன் சொக்கி நின்றுகொண்டிருக்கை யில், "நீ எதற்காக என் காவல் வீராங் கனைகளிடம் சண்டையிடாமல் சரண டைந்தாய்?" என வினவியபடியே இரண் டடி முன்னே வைத்தாள்.

அவள் பேசியபோது அவளது இதழ்கள் இரண்டும் அசைந்து அவனது கவனத்தை சிதைக்கத் துவங்கின. அவளது அழகில் பாதி மயங்கியும், பாதி தெளிந்தவனாக நின்ற திவ்யன் "உன் காவல் வீராங்கனைகள் மிகவும் திறமை சாலிகள். உன்னுடைய காவல் வீரர்க ளால் இயலாததை அவர்கள் சாதித்து விட்டார்கள்!" என மட்டும் தெரிவித்தான்.

"பொய் கூறாதே! உன்னால் தாக் கப்பட்ட வீரர்களைக் கண்டேன். உயிரை

https://telegram.me/aedahamlibra

எடுக்காமல் அவர்களின் ஆயுதத்தை மட்டும் பறித்திருக்கிறாய்! அதைப் பார்த்த உடனேயே உன் திறமையை அறிந்து கொண்டேன் நான். எதற்காக அவர்களிடம் நீ சண்டையிடவில்லை?"

சிறிது நேரம் அமைதியாக நின்ற திவ்யன் பிறகு தனது ஏளனப் பார்வையை அவள் மீது செலுத்தியபடி, "பெண்களை நோக்கி எனது வாளினை இதுவரை நான் உயர்த்தியதில்லை" எனத் தெரிவித்தான்.

"இது கோழைத்தனத்தின் அடையாளம்!"

"எது?"

"பெண்களிடம் சண்டையிடுவதில்லை என்று கூறுவது?"

அவளுக்கு எந்தப் பதிலையும் அளிக்காமல் விழிகளை மட்டும் உயர்த்தினான்.

"உன்னை நான் நதிக்கரை மாளிகையில் அல்லவா எதிர்பார்த்தேன்! ஆனால், நீ எனது மாளிகையிலேயே சிக்கிக்கொண்டாய்!"

"நதிக்கரை மாளிகையிலா?"

"ஆம்!"

"அங்கு அப்படி என்ன சிறப்பு இருக்கிறது?"

"நீ தேடிவந்தவர்கள் அங்கு தானே இருக்கிறார்கள்?"

"நான் தேடி வந்திருக்கிறேனா?"

"ஆம்!"

"யாரை?"

"நதிக்கரையில் நாங்கள் சிறை செய்த மூவரை அங்கு தானே சிறை வைத்திருக்கிறோம். நீ அவர்களைத் தானே தேடி வந்திருக்கிறாய்?"

https://telegram.me/aedahamlibra

"அவர்கள் யார்? நான் எதற்காக அவர்களைத் தேடி வரவேண்டும்? அவர்களை நீங்கள் எதற்காகச் சிறை செய்திருக்கிறீர்கள்?"

இளவரசி சிறிது நேரம் அவனையே கோபத்துடன் நோக்கினாள். பிறகு, "நீ என் தமையன் வஜ்ரபாகுவின் ஒற்றன் தானே! உனது முதுகில் காணப்பட்ட கூன், முகத்தில் காணப்பட்ட தாடி அனைத்தும் இப்போது எங்கு சென்றது? ஏன் உனது முகத்தை மறைத்திருக்கிறாய்? முகத்தைக் காட்டக் கூட திராணி இல்லாத நீ அவந்தி இளவரசியின் மாளிகைக்குள் எப்படி நுழையத் துணிந்தாய்?" எனவும் கோபத்தில் வினவினாள்.

திவ்யன் எந்தப் பதிலையும் கூறாமல் அமைதியாகவே நின்றான். அப்போது அவந்திகா, "உனக்கு ஒரு வாய்ப்பு அளிக்கிறேன்!" என அவனது விழிகளில் தனது மந்தகாசப் பார்வையைப் பதிக்கவிட்டபடி தெரிவித்தாள்.

https://telegram.me/aedahamlibra

“என்ன வாய்ப்பு?”

“நீ யார்? எதற்காக இங்கு வந்திருக்கிறாய்? உனக்கும் அவந்தியின் காவல் தலைவர் பலதேவனுக்கும் என்ன தொடர்பு? அவர்களின் திட்டம் என்ன? அவர்கள் இரண்டு திங்கள் என்று எதற்காக நாள் குறித்திருக்கிறார்கள்? என்பதைக் கூறிவிட்டு மண்டியிட்டு மன்னிப்பு கேள். உன்னை விடுவித்து விடுகிறேன்!”

அவள் கூறியதைக் கேட்ட திவ்யன், “மன்னிப்பா...” என சிரித்தபடி வினவினான்.

“ஆம்!”

“மண்டியிடவும் வேண்டுமா?”

“ம்ம்ம்!”

“நீ அளிக்கும் மன்னிப்பை நான் நிராகரிக்கும் பட்சத்தில்...”

அவனது அந்தத் திமிர் பேச்சினை எதிர்பார்க்காத அவந்திகா, “என்னிடம்

https://telegram.me/aedahamlibra

இப்படிப் பலர் திமிருடன் பேசி என் வாளுக்கு இரையாகி இருக்கிறார்கள்” என எச்சரித்தாள்.

“கேள்விப்பட்டிருக்கிறேன். அவந் தியில் யாராலும் வீழ்த்த முடியாதவள் அவந்தி இளவரசி என்று!”

“.........”

“அப்பேற்பட்ட இளவரசியை நேரில் காண வேண்டும் என்று தோன்றியது! ஆதலால் வந்துவிட்டேன். அது மட்டுமா தெரிவித்தார்கள்....”

“வேறு என்ன?”

“பேரழகி என்றார்கள். கூடவே திமி ரும் அதிகம் என்றார்கள். ஆதலால் தான்....”

“ஆதலால் தான் என் வீராங்கனை களை எதிர்த்து நீ சண்டை போட வில்லை!”

"ஆமாம்! அவர்களிடம் சரண் அடைந்ததால் தானே பேரழகி அவந்திகாவை என்னால் காண முடிந்தது!" எனச் சற்றே ஏளனத்துடன் தெரிவித்தான் திவ்யன்.

அதற்கு மேல் அவன் கூறியதைக் கேட்க அவந்திகாவுக்குப் பொறுமை இல்லை. தனது வாளினை உறையிலிருந்து உருவியவள் திவ்யனின் கைக் கட்டுகளை வெட்டி விட்டாள்.

அவளது செய்கையைப் பார்த்துத் திகைத்தபடி திவ்யன் நின்றபோது நீண்ட வாள் ஒன்றை திவ்யனை நோக்கி வீசியவள், "இந்த வாட்போரில் நீ வென்றால் இங்கிருந்து தாராளமாக வெளியேறலாம்" என அவந்திகா கூறிக்கொண்டிருந்த போதே அவளது பேச்சை இடைமறித்த திவ்யன், "வெற்றிபெறாவிட்டால்...?" என வினவினான்.

https://telegram.me/aedahamlibra

"காலம் முழுக்க நீ எனக்கு அடிமை! தப்பிக்க முயன்றால் உனது தலை துண்டிக்கப்படும்!"

அவள் கூறியதைக் கேட்டுச் சிரித்த திவ்யன், "வெற்றி பெற்றால் விடுதலை... தோற்றால் அடிமை. அதுவும் தங்களுக்கு! யாருக்குக் கிடைக்கும் இந்த அரிய பாக்கியம்! இரண்டிற்கும் நான் தயார்!" எனச் சிரித்தபடி கூறியவன் சமருக்குத் தயாரானான்.

அவந்திகா வாளினை முன்னோக்கி நீட்டினாள். அவளது வாள் அதிர்ந்துகொண்டிருந்தது. அதையும் கவனித்த திவ்யன் அவளது விழிகளை நோக்கினான். அது தீர்க்கமாக திவ்யனின் விழிகளையே நோக்கிக்கொண்டிருந்தது.

"இவளது வாள் வீச்சினை சமாளித்தாலும் விழி வீச்சினை சமாளிப்பது தான் பெருங்கடினமாக இருக்கப் போகிறது" என்று மனதிற்குள் நினைத்

தபடி திவ்யனும் அவனிடமிருந்த வாளி னைச் சுழற்றி முன்னோக்கி நீட்டினான். இரண்டு வாளின் முனைகளும் சந்தித் துக் கொண்டன. இருவரது வாள் மற்றும் வேல் விழிகளும் ஒன்றையொன்று நோக் கிக்கொண்டிருந்தன.

திடீரென்று வாளினைப் பின் னோக்கி இழுத்த அவந்திகா அவள் தோளில் அணிந்திருந்த நீண்ட துணியை அதிவேகமாகக் கழட்டி அவன் மீது எறிந்தாள், திவ்யனின் வாளின் மீது விழுந்த அத்துணி வாளினால் கூர்மை யினால் வெட்டப்பட்டு துண்டு துண்டாக கீழே விழுந்தன. அவன் மீது விழுந்த துணியைத் திவ்யன் பார்த்துக்கொண்டி ருந்த போதே அதிவேகமாக திவ்யனின் கழுத்தை நோக்கி வந்தது அவந்திகா வின் வாள். கண நேரத்தில் சுதாரித்து அவளது வாளினைத் தடுத்தான் திவ் யன். அவளுடைய வாளினை அவளிட மிருந்து பிரிக்க வேண்டுமானால் கண நேரம் கூட திவ்யனுக்கு ஆகியிருக்காது.

அவளுடன் சிறிது நேரம் விளையாடிப் பார்க்கலாம் எனத் தோன்ற அவளது தாக்குதலுக்கு எதிர் தாக்குதல் தொடுக் காமல் தற்காத்தபடி நின்றுகொண்டிருந் தான். அவந்திகாவும் அவனைப் பல வாறு தாக்கிப் பார்த்தாள். நின்ற இடத் திலிருந்து சிறிது கூட நகராமல் அவளது வாளினைத் தடுத்துக் கொண்டிருந் தான். வாளினால் தாக்கிக்கொண்டிருந்த அவந்திகா திடீரென்று அவன் எதிர்பா ராத நேரத்தில் இடையில் வைத்திருந்த இரண்டு குறுவாட்களை அடுத்தடுத்து அவனை நோக்கி வீசினாள். எதிர்பாராத நேரத்தில் திவ்யனை நோக்கிப் பாய்ந்து வந்த குறுவாட்களில் ஒன்றை அவனது வாளினால் தடுத்து விட்டிருந்தான், மற் றொன்று அவனது தோளில் பாய்ந்திருந் தது. அவந்திகாவைப் பார்த்தபடியே அந் தக் குறுவாளைத் தோளிலிருந்து பிடுங் கிக் கீழே வீசியவன், “போரில் வெற் றிபெற வேண்டும் என்பதற்காக குறுக்கு வழியை நாடுவது தவறு இளவரசி!” எனக்

கூறியபடியே தனது வாளினைச் சுழற்றிய படி அவளை நோக்கி ஒரு அடி வைத் தான்.

அவந்திகாவும் ஒரு அடி முன்னேறி வாளினைத் திவ்யனை நோக்கி வீசு வதற்குள், திவ்யன் அவளை நோக்கிச் சரமாரியாகத் தனது வாளினைச் சுழற் றினான். திவ்யனின் தாக்குதலை முத லில் வெற்றிகரமாகத் தடுத்துக்கொண்டி ருந்த அவந்திகா நேரம் கடக்கக் கடக்க அவனது தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாமல் திணறினாள். அதற்கு மேலும் சமரை நீட்ட விரும்பாத திவ்யன் அவளது வாளினை நோக்கி ஓங்கி அடித்தான். தனது வாளினைத் தவறவிட்டாள் அவந் திகா. அவளது கரத்திலிருந்து விடுபட்ட வாள் வெகு தொலைவு பறந்து சென்று சுவற்றில் மோதி கீழே விழுந்தது.

வாளினை இழந்ததும் தனது தோல்வியை ஒப்புக்கொள்வாள் என்று எண்ணிய திவ்யன் ஏமாற்றமடைந்தான்.

https://telegram.me/aedahamlibrary

சுவற்றில் மாட்டி வைத்திருந்த இன்னொரு வாளினை எடுத்தவள் திவ்யனை நோக்கி தனது கோபப்பார்வையை வீசினாள்.

அவளது செய்கையைக் கண்ட திவ்யன், “ஆயுதத்தை இழந்த நீ உன் தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டும். இப்படி மீண்டும் ஆயுதத்தைக் கையில் ஏந்தக்கூடாது!” எனத் தெரிவித்தான்.

ஆனால் அவள் எந்தப் பதிலையும் கூறாமல் திவ்யனை நோக்கிப் பாய்ந்தாள். திவ்யனும் பாய்ந்து வந்த அவளது வாளினைத் தடுத்து நிறுத்தியபடி, “அவந்திகா... உன் தோல்வியை ஒப்புக்கொள். இல்லையேல் உன் தாக்குதல் பெரும் விபரீதத்தை விளைவித்துவிடும்!” என எச்சரிக்கை செய்தான்.

ஆனால் அவள் கேட்பதாகத் தெரியவில்லை. திவ்யனை வீழ்த்துவதிலேயே குறியாகத் தாக்கிக் கொண்டிருந்தாள். சரமாரியாக வாளினை திவ்

யனை நோக்கி வீசினாள். எச்சரிக்கையுடன் அவளது வாள் வீச்சினை திவ்யன் தடுத்துக்கொண்டிருந்த போது அவனது கழுத்தைத் தாக்க வாளினை பின்புறமாக இழுத்து வேகமாக ஓங்கினாள். அந்த சிறிய இடைவெளியைப் பயன்படுத்திக் கொண்ட திவ்யன் அவளை நோக்கி தனது வாளினை வீசினான். அடுத்த கணம் தோளில் அணிந்திருந்த அவளது நீண்ட சீலைத் துணி வெட்டப்பட்டு மண்ணில் விழுந்தது.

ஆத்திரத்துடன் அவனை நோக்கினாள் அவந்திகா.

முகத்தை மூடியிருந்த கறுப்புத் துணிக்குள் அவன் சிரித்ததை அவள் உணர்ந்தாள்.

அவனை நோக்கி ஆக்ரோஷமாக மேலும் இரண்டு குறுவாளையும், கையிலிருந்த வாளினையும் வீசினாள் அவந்திகா. அதிவேகமாக வந்த இரண்டு குறுவாட்களையும் தனது வாளினால் திவ்

https://telegram.me/aedahamlibra

யன் தடுத்த போதே அவனது கழுத்தை நோக்கித் தனது வாளினை வீசினாள் அவந்திகா. அவளது தாக்குதலை எதிர் பார்த்த திவ்யன் குனிந்துகொண்டு அவ ளுக்குப் பின்னால் சென்று அவளது முது கினை நோக்கி வாளினை வீசினான். சற்றே முன்னே நகர்ந்து அவனது வாளி லிருந்து தன்னைக் காத்துக்கொண்ட அவந்திகா, "முதுகில் தாக்க நினைப்ப துதான் உங்கள் ஊரில் வீரமா?" என இகழ்ச்சியுடன் வினவினாள்.

அப்போதும் எந்தப் பதிலையும் கூறாமல் அமைதியாகவே நிற்கலானான் திவ்யன்.

இரண்டடி முன்னே வைத்தபோது தான் அவந்திகா உணர்ந்தாள். அவன் தனது மார்பில் சுற்றியிருந்த சீலைத் துணியை முதுகில் வெட்டி விட்டு விட்டான் என்பதை! அவள் தெரிந்து கொண்ட அடுத்த கணம் வெட்டப்பட்ட

சீலைத் துணி அவளுக்கு முன் கீழே விழுந்தது.

இடையில் சுற்றியிருந்த பட்டுத் துணியோடும், மார்பில் கச்சையை மட்டும் அணிந்துகொண்டு நின்றிருந்தாள் அவந்திகா. உடலில் எங்கெங்கு எழுச்சி பெற வேண்டுமோ அங்கெல்லாம் எழுச்சி பெற்று, எங்கெல்லாம் ஒடுங்க வேண்டுமோ அங்கெல்லாம் ஒடுங்கி நின்ற அவந்திகாவின் உடல் பரிமாணத்தை அப்போதுதான் கவனித்திருந்தான் திவ்யன். கச்சையையும் மீறி விம்மியபடி காணப்பட்ட அவளது யௌவன சௌந்தர்யங்கள், மெலிந்த அவளது இடை, இடைக்குக் கீழே மீண்டும் அகன்று காணப்பட அவளது உடலின் பரிமாணத்தைக் கண்டவன் தன்னை மறந்த கிறக்கத்தில் நின்றிருந்தான்.

திவ்யனின் கவனச் சிதறலைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்த முயன்ற அவந்திகா அவனது வாளினைத் தட்டி

https://telegram.me/aedahamlibra

விட முயன்றாள். ஆனால், கவனத்தை இழந்திருந்திருந்தாலும் எச்சரிக்கையுடன் நின்ற திவ்யன் அவளது தாக்குதலிலிருந்து விலகி பிறகு மீண்டும் அவளைத் தாக்கினான். அவனது வாளின் கூர் முனைகள் தனது உடலை உராய்ந்தபடி செல்வதை உணர்ந்த அவந்திகா அவனது தாக்குதல் தொலைவிலிருந்து பின்வாங்கினாள்.

சற்று பின்னால் சென்றவள் அவளது உடலைக் கவனித்தாள். அவனது வாள் அவளது உடலில் எந்த காயத்தையும் ஏற்படுத்தியிருக்கவில்லை. அவளது தோலினைத் தீண்டாமல் அவளது கச்சையையும் மட்டும் வாளினால் வெட்டியிருந்தான் திவ்யன். அதை அவள் உணர்ந்த அடுத்தகணம் ஏற்கனவே தன்னை விடுவித்துக் கொள்ள பெரும்பாடு பட்டுக்கொண்டிருந்த அவளது யெளவன செளந்தர்யங்கள் அதுதான் தக்க சமயம் என்று விடு

https://telegram.me/aedahamlibra

வித்துக்கொள்ள கிழிந்த அவளது ஆடை தரையில் விழுந்தது.

அவளது ஆடைகள் மறைத்து வைத்திருந்த யௌவன வளங்கள் சட்டென்று வெளிப்பட உடனே கையிலிருந்த வாளினைக் கீழே போட்டுவிட்டு இரண்டு கைகளாலும் தனது மார்புகளை மறைத்துக்கொண்டாள் அவந்திகா. இதற்கு முன் அவள் அனுபவிக்காத உணர்வு. வேறொருவன் முன்பு ஆடையின்றி நின்ற அவளது நிலை அவளுக்குக் கோபம், ஆத்திரம், நாணம் என அனைத்தையும் ஒரு சேர வரவழைத்திருந்தது.

ஆத்திரத்திலும், அவமானத்திலும் அவளது உதடுகள் துடித்துக்கொண்டிருக்க, "நான்தான் அப்போதே தெரிவித்தேனே... முறையில்லாமல் தாக்க வேண்டாம் விபரீதம் நிகழ்ந்துவிடும் என்று! நீதான் கேட்கவில்லை!" எனத் தெரி

https://telegram.me/aedahamlibra

வித்த திவ்யன் அவளை நோக்கி நடந்து வந்தான்.

அவன் அவளை நோக்கி நெருங்கி வருவதைப் பார்த்த அவந்திகா, "என்ன ருகில் வராதே!" எனக் கூறிக்கொண்டு பின்னால் நடந்தாள். ஆனால், அங்கே சுவர் நிற்க அவளால் மேற்கொண்டு பின் வாங்க இயலவில்லை.

"என் வீரர்களை நான் அழைத்தால் அவர்கள் உன்னைக் கொன்று போட்டு விடுவார்கள்!"

"உனது வீரர்களா?"

"ஆம்!"

"இப்போதா... முடிந்தால் அழைத் துப்பாரேன்!" என திவ்யன் தெரிவிக்க அடுத்த கணம் அவந்திகா வீரர்களை அழைக்க வாயைத் திறந்தாள். ஆனால், அவளை நோக்கிப் பாய்ந்த திவ்யன் அவள் மேற்கொண்டு பேசாத அளவிற்கு அவனது வாயை மூடினான்.

“ஆத்திரத்தில் மதியை இழந்துவிடாதே! நீயிருக்கும் இந்த நிலையில் உன் வீரர்களையும், வீராங்கனைகளையும் எதற்காக அழைக்கிறாய்?” எனத் தெரிவித்தவன் அவளது இதழ்களிலிருந்து தனது கையை மெதுவாக எடுத்தான். அவளது சிவந்த இதழ்களும், அவள் நின்ற தோரணையும் அவனை அத்துமீறச் சொல்ல, அவனோ தனது முகமூடியை நீக்கி அவனது முகத்தை அவளுக்குக் காட்டியவன் தோளில் அணிந்திருந்த நீண்ட துணியை அவள் மீது போட்டு அவளது உடலை மறைத்தான்.

அவன் அருகில் நெருங்கியதும் ஒருகணம் துடிதுடித்துப் போன அவந்திகா அவன் அளித்த மேலாடையை உடலில் சுற்றிக்கொண்டு அவனை நோக்கினாள். கலங்கமில்லாத பார்வையால் அவளை நோக்கிய திவ்யன், “வாட்போரில் தோற்றால்தான் அடிமை என்றாய்! ஆனால், இப்போது நான் வெற்றிபெற்

றும் அடிமையாகி விடுவேன் போலிருக்கி றதே?" எனச் சிரித்தபடி தெரிவித்தான்.

மனதில் ஆத்திரமும், அவமான மும் தோன்றியிருந்தாலும் நாணத்தை முதல் முறையாக உணர்ந்த அவந்திகா தரையை நோக்கினாள்.

அதைப் பார்த்த திவ்யன், "கோபத் திலும், ஆத்திரத்திலும் இருப்பதை விட வும் நாணத்தில் தரையை நோக்கும்போ துதான் நீ பேரழகியாகத் தெரிகிறாய்!" எனக் கூறியவன் திரும்பி நடக்கலானான்.

அவந்திகா அவனையே பார்த்த படி நின்றுகொண்டிருந்தாள். திடீரென்று திரும்பியவன், "நதிக்கரை மாளிகை எந் தப் பக்கம் இருக்கிறது?" என வினவி னான்.

"நீ அங்கு செல்ல வேண்டாம்!" என எச்சரித்தாள் அவந்திகா.

"ஏன்?"

https://telegram.me/aedahamlibra

“அங்கே சென்றவர்களோ அல்லது அடைக்கப்பட்டவர்களோ உயிரோடு திரும்புவதில்லை! அதுமட்டுமல்லாமல் உன்னைப் போலவே அந்த மூவரையும் தேடிக்கொண்டு பலதேவன் சென்றிருக்கிறார். அவரிடம் நீ சிக்கினால்...”

“அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம் இளவரசி. அம்மாளிகை இருக்கும் திசையைக் காட்டுங்கள்!”

அவந்திகா பார்வையை மேற்குப் புறமாகத் திருப்பினாள். அவளது விழிகளின் அசைவினைப் புரிந்துகொண்ட திவ்யன், “நன்றி!” எனக் கூறிவிட்டு சாளரத்திலிருந்து கீழே குதித்து இருளில் மறைந்தான்.

அவன் சென்ற திசையையே வெகு நேரம் பார்த்துக்கொண்டிருந்த அவந்திகா தன்னையும் அறியாமல் அவனது கரங்கள் தீண்டிய அவளது இதழினை வருடிக்கொண்டிருந்தாள்.

https://telegram.me/aedahamlibra

# 10. பலதேவனின் ஆணை

பொழுது கடந்த இரண்டாவது நாழிகை அது. உஞ்சைப் பட்டினத்தின் தெருக்களில் நிறைந்திருந்த எண்ணெய் விளக்குகளின் ஒளி நிலவொளியுடன் சேர்ந்து இருளினை விரட்டிக்கொண்டிருந்தது. இரண்டாவது நாழிகையிலும் பெரும் பரபரப்புடன் காணப்பட்ட உஞ்சைப் பட்டினத்தையும், அதன் காவலையும் பார்வையிட்டுவிட்டு பட்டினத்தின் வெளிப்புறத்தில் அமைந்

திருக்கும் நதிக்கரை மாளிகையை நோக்கி அவந்தி நதியின் கரையிலேயே சென்றுகொண்டிருந்தான் பலதேவன்.

அதிவேகமாகப் புரவியில் வந்த வீரன் ஒருவன் புரவியிலிருந்து குதித்து பலதேவனை வணங்கிவிட்டு மூச்சு வாங்கியபடி நின்றுகொண்டிருந்தான்.

அவனது வணக்கத்தை ஏற்றுக் கொண்ட பலதேவன் அவனது இறைப்பு அடங்கட்டும் என எண்ணி அவனைப் பார்த்தபடியே சிறிது நேரம் நின்றுகொண்டிருந்தான். பிறகு, "என்ன அவசரம்? தெற்கு எல்லையிலிருந்துதான் வருகிறாயா?" என வினவினான்.

"ஆமாம் பலதேவரே, அவசரம் தான். படைத் தலைவர் வஜ்ரபாகு எங்கே? அவரைச் சந்திக்கவேண்டும்!"

"அவர் அவந்தியில் இல்லை. விதிசா வரை சென்றிருக்கிறார்."

எதுவும் பேசாமல் தனது புரவியில் சாய்ந்தபடி சிறிது நேரம் நின்

றான். அவனது புரவியின் வாயில் நுரை தள்ளி வேகமாக இரைந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்த பலதேவன், “புரவியைத் தட்டிவிடுங்கள். நதிநீரைப் பருகி இளைப்பாரட்டும் ஒற்றர் தலைவரே” எனக் கட்டளையிட அடுத்தகணம் அவ்வீரன் புரவியைத் தட்டிவிட்டான். தலையை ஆட்டியபடி புரவி நதியை நோக்கி ஓடியது.

“ஒற்றர் தலைவரே, என்ன ஆயிற்று? ஏன் இந்த அவசரம்? ஏதேனும் அவசரம் என்றால் ஒற்றர்களை அனுப்ப வேண்டியது தானே? இல்லையேல் புறா மூலமாகவாவது செய்தி அனுப்பலாம் அல்லவா? எதற்காக இப்படி மூச்சு இறைக்க அவசர அவசரமாக வந்திருக்கிறீர்கள்?” என வினவினான் பலதேவன்.

“சற்றுப் பொறுங்கள்!” எனக் கூறிய ஒற்றர் தலைவன் நேராக நதிக்குச் சென்று நீரைப் பருகினான். பிறகு, “பெரும் அவசரம், அதே நேரம் மிகவும்

https://telegram.me/aedahamlibra

முக்கியமானதும் கூட! ஆதலால் தான் நானே நமது படைத் தலைவரைத் தேடி வந்துவிட்டேன்!" எனத் தெரிவித்தான்.

"என்ன செய்தி?"

"தெற்கிலிருந்து பெரும்படை வடுகர் நாட்டில் நிலை பெற்றிருக்கிறது!"

"பைத்தானுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு விட்டதா?"

"தகவல் அனுப்பிவிட்டேன். இன்னும் எந்தக் கட்டளையும் வரவில்லை. அவந்திக்கு வந்து நமது படைத்தலைவர் வஜ்ரபாகுவைச் சந்தித்து பிறகு சதகர்ணியை சந்திக்கலாம் என்று வந்திருக்கிறேன்."

"சரி, நீ மாளிகைக்குச் சென்று ஓய்வேடு. நான் ஒரு முக்கியமான காரியத்தை முடித்துவிட்டு வருகிறேன்."

"மன்னிக்க வேண்டும் பலதேவரே! நான் இரகசியமாக வருகை தந்திருக்கி

https://telegram.me/aedahamlibrary

றேன். இன்றிரவே புரவி ஒன்றை சம் பாதித்துக்கொண்டு புறப்பட வேண்டும். நான் வந்திருக்கிறேன் எனும் செய்தி தப் பித் தவறிக் கூட இளவரசி அவந்திகாவுக் குத் தெரிய வேண்டாம்!"

"..........."

"சோழப் படையினர் கிருஷ்ணை நதிக்கரையில் இறங்கி நிலை கொண் டிருக்கிறார்கள். பொதுவாக படையெ டுப்புக்கு அரசன் தலைநகரில் அமர்ந் துகொண்டு படைகளை மட்டும்தான் அனுப்பி வைப்பார்கள். ஆனால், சோழ மன்னன் நாட்டைத் தனது மனைவியிட மும், படைத் தலைவனிடமும் ஒப்படைத் துவிட்டு படையுடன் வருகை தந்திருப் பதாக ஒற்றர்கள் கூறுகிறார்கள். அவர் கள் நேராக வடக்கு நோக்கி நகர்ந்து கலிங்கத் தலைநகர் சிங்கபுரியைத் தாக் குவார்களா அல்லது வடமேற்கு நோக்கி நகர்ந்து நமது சாதவாகனத் தலைந கர் பைத்தானைத் தாக்குவார்களா என்று

https://telegram.me/aedahamlibra

அனுமானிக்க முடியவில்லை. அவர்க ளின் நிலைகளைத் தாக்கி அழிப்பதா அல்லது அவர்கள் நமது நிலைகளைத் தாக்க முயற்சிக்கும் பட்சத்தில் எதிர் தாக்குதல் மட்டும் நடத்துவதா? படைத் தலைவரான நமது இளவரசரின் நிலை என்ன என்று அறியவே இங்கு வந்திருக் கிறேன். நாளை மறுநாள் நான் அரசர் சத கர்ணியை சந்திக்க இருக்கிறேன். அவர் படைத் தலைவரின் எண்ணத்தைப் பற்றி நிச்சயம் வினவுவார். இப்போதிருக்கும் நிலையில் படைத் தலைவர் வஜ்ரபாகு வைத் தேடி விதிசாவுக்கு செல்ல இய லாது!”

அவன் கூறியதைக் கேட்ட பலதே வன் சிறிது நேரம் சிந்தனையிலேயே நின் றிருந்தான். பிறகு, “நீ பைத்தானுக்குச் சென்றாலும் அங்கு அரசரை உன்னால் சந்திக்க இயலாது ஒற்றர் தலைவரே. எதிரிகள் நமது எல்லையில் திரண்டால் அவர்களை விரட்டுவதே நமது முக்கியக் கடமை. படைத் தலைவரின் கட்டளை

https://telegram.me/aedahamlibra

யும் அதுதான். ஆகவே உன் கடமையை நீ செய். அவர்கள் நிலை பெறுவதற் குள் அவர்களைத் துடைத்து எடுத்து விடு! வடுகர்களின் நிலை என்ன?” என வினவினான் பலதேவன்.

“பலதேவரே, சோழப் படையின் இலக்கு பாடலி என்பதால் வடுகர்கள் அவர்களை வரவேற்று விட்டார்கள்.”

“என்ன வடுகர்கள் சோழப் படையை எதிர்க்கவில்லையா?”

“ஆம்!”

“நமது எல்லையில் நமக்கு அவர் கள் இடையூறு அளிக்கிறார்களா?”

“இல்லை பலதேவரே! இதுவரை எந்த இடையூறும் ஏற்படவில்லை. நமது படைத் தலைவரின் கட்டளைப் படி அவர்களை நான் தாக்கியிருப்பேன். ஆனால், சோழப் படையினர் வடுகர் நாட் டில் இருக்கும் ஏரி குளங்களை தூர் வாரிக்கொண்டிருக்கிறார்கள். புது ஏரி

களையும் வெட்டுகிறார்கள். கோயில்களைக் கட்டுகிறார்கள். முறையான போர் அறிவிப்பு இல்லாமல் அவர்கள் யாரையும் தாக்குவதில்லையாம். குழப்பமாக இருந்தது. அரசர் சதகர்ணிக்கு தகவல் அனுப்பியும் எந்தப் பதிலும் இல்லை. ஆதலால்தான் சாதவாகனப் படைத் தலைவரை நேரில் சந்தித்து ஆணை பெற்றுச் செல்லலாம் என்று வந்துவிட்டேன்.”

“அவர்களின் செயல் விசித்திரமாக இருக்கிறது!”

“ஆமாம். கட்டுக்கோப்பான படை.”

“எத்தனை வீரர்கள் இறங்கியிருக்கிறார்கள்?”

“சரியான தகவல் கிடைக்கவில்லை. ஐம்பது ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இருக்கலாம் என்று கருதுகிறேன்?”

“மீதிப்படை?”

https://telegram.me/aedahamlibra

“மீதிப்படையா?”

“ஆம் ஒற்றர் தலைவரே! வெண் ணியில் அவனை எதிர்த்தவர்களே நூறு ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள். காகந் தியை முற்றுகையிட்டவர்கள் ஐம்பது ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள். இந்த நிலையில் அவர்கள் வெறும் ஐம்பது ஆயிரம் படை வீரர்களைக் கொண்டு வடக்கு நோக்கிப் புறப்படுவார்களா?”

“எனக்குக் கிடைத்த தகவல் அது தான்!”

“சரி ஒற்றர் தலைவரே, அவர்கள் எத்தனை பேர் இருந்தால் நமக்கென்ன? சாதவாகன அரசின் எதிரி நாடான மக தத்தை அவன் தாக்க வந்துகொண்டி ருக்கிறான் என்பதற்காக நமக்கு அவர் கள் நண்பர்கள் ஆகிவிட மாட்டார்கள். அவர்கள் நமக்கும் எதிரிதான் என்பதை நினைவில் கொள்ளுங்கள்!”

"காலம் காலமாக தமிழ் மன்னர்கள் நமக்கு உதவிக்கொண்டு தானே இருக் கிறார்கள்? அரசரின் கட்டளை இல் லாமல் நான் தாக்கினால் ராஜதுரோகம் இழைத்துவிட்டேன் என்ற குற்றச்சாட்டு எழுந்துவிடாதா?"

"பழங்கதையைப் பற்றிப் பேசுவ தால் இப்போது எந்த பயனும் இல்லை ஒற்றர் தலைவரே! கீழைத் திசை மாதண்ட நாயகனுக்கு படைத் தலைவர் வஜ்ரபாகு கட்டளையிட்டதாகச் சொல் லுங்கள். சோழப் படையைத் தொடக்க நிலையிலேயே தாக்கி அழித்து விட வேண்டும் என்று!"

"தங்களது உத்தரவு படைத் தலை வரே!"

"இப்போது அடித்துக் கொண்டிருக் கும் சாதவாகன, மகாமேகவாகன மற் றும் சுங்க அரசுகள் அனைத்தும் ஒன் றுபட்டு தென்னகப் படைகளை சித றடிக்கப் போகிறது ஒற்றர் தலைவரே,

இதன் நிமித்தமாகத் தான் வஜ்ரபாகு விதிசா வரைச் சென்றிருக்கிறார். ஆதலால் சோழப் படையை எதிர்க்கத் தான் போகிறோம்."

"சரி தலைவரே... அப்படியே ஆகட்டும்!"

"........"

"பலதேவரே, அவந்தி அரியணையில் நமது படைத் தலைவரை ஏறச் செய்யும் பணி எந்த அளவில் சென்றுகொண்டிருக்கிறது?"

"இதுவரை அனைத்துப் பணிகளும் எந்தத் தடையுமில்லாமல் சென்றுகொண்டு இருக்கின்றன. விரைவில் உனக்கு தகவல் கிடைக்கும்!"

"நல்லது பலதேவரே. வஜ்ரபாகு அவந்தி அரியணையில் அமர்ந்துவிட்டார் என்ற செய்தி விரைவில் கிடைக்கட்டும். ஆனால்...."

"என்ன ஆனால் ஒற்றர் தலைவரே?"

"அவந்திகா அவந்தியில் இருக்கும் போது நம்மால் கலகத்தை விளைவித்து அவந்தியில் படைத் தலைவருக்கு முடி சூட இயலுமா?"

"மௌரிய அரசன் பிருகத்ரதன் இருந்த போதுதானே சுங்கமித்திரர் மௌரிய அரசைக் கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்றினார். ஆதலால் ஒன்றும் கவலை வேண்டாம். திட்டமிட்டபடி அனைத்தும் நிறைவேறும்."

"நல்லது!"

"நமது படையைத் தயாராக வைத்துகொண்டு முதலில் தாக்காளரைத் தாக்கச் சொல்லுங்கள். அவர்களின் எதிர்பாராத தாக்குதலில் சோழப் படை முதலில் சிதறடையட்டும். பிறகு நீங்கள் நமது புரவிப் படையுடன் சென்று அவர்களை

https://telegram.me/aedahamlibrary

அழித்துவிடுங்கள் அல்லது விரட்டியடித் துவிடுங்கள்!

“நல்ல யோசனை. தாக்காளரைக் கொண்டு முதலில் அவர்களைத் தாக்கு வோம். அவர்களின் பலமும் என்ன என்று நமக்குத் தெரிந்துவிடும். பிறகு பார்த்துக் கொள்வோம்!”

“ம்ம்ம்... சரி...”

“அப்படியெனில், நான் புறப்படுகி றேன் பலதேவரே! படைத் தலைவர் வஜ் ரபாகு வந்ததும் தகவலைத் தெரிவித்து விடுங்கள்!”

“சரி... கவனமாகச் செல்லுங்கள். நீங்கள் வந்த புரவி இனியும் உங் களுக்குப் பயன்படாது. அதற்கு ஓய்வு தேவை. புதுப் புரவியை சம்பாதித்துக் கொண்டு விரைந்து சென்று காரியத்தை நிறைவேற்றுங்கள். நீங்கள் அவர்களைத் தாக்கத் தாமதித்தால் சதகர்ணி சோழப் படையை சிவப்புக் கம்பளம் விரித்து வர

வேற்றுவிடுவான். சதகர்ணிக்கு சோழப் படை ஆதரவு கிடைத்துவிட்டால் நமது படைத் தலைவர் வஜ்ரபாகு அரியணை ஏறுவது என்பது குதிரைக் கொம்பாகி விடும். ஆதலால் உங்களது தாக்குதல் சதகர்ணியை சோழரிடமிருந்து நிரந்தர மாகப் பிரிக்க வேண்டும். சோழப் படை யிடமிருந்து பைத்தானைக் காக்க சத கர்ணி சுங்கமித்திரர் மற்றும் காரவேலரி டம் உதவி கோரும் நிலை ஏற்பட வேண் டும். மூவரும் இணைந்து தென்னாட்டு சோழப் படையை விரட்ட வேண்டும்! என்ன புரிகிறதா?"

"புரிகிறது தலைவரே. நான் விடை பெறுகிறேன்."

"ம்ம்ம்... கவனம்!"

பதிலுக்கு ஒற்றர் தலைவன் எதை யும் கூறவில்லை. புரவியைப் பற்றியும் கவலைப்படாமல் புதுப் புரவி வாங்குவ தற்கு விரைந்து சென்று பலதேவனின் பார்வையிலிருந்து மறைந்தான் சாதவா

கன அரசின் ஒற்றர் தலைவன். நடக்கும் நிகழ்வுகளைத் தொகுத்துப் பார்த்த பல தேவன், “அனைத்தும் சாதகமாகத்தான் நடந்துகொண்டிருக்கிறது!” எனத் தனக் குத்தானே கூறிக்கொண்டவன் தனது முரட்டு மீசையையும் நீவி விட்டுக் கொண்டான்.

அவனுக்கு வலப்புறமாக நதிக்க ரையில் காணப்பட்ட அடர்ந்த புதரில் கருப்பாக ஒரு உருவம் அசைவதை யும் கவனிக்காத பலதேவன் நதிக்கரை மாளிகையில் அடைத்து வைக்கப்பட்டி ருக்கும் மூவர் பற்றிய மர்மத்தை அறிய விரைந்து செல்லலானான்.

https://telegram.me/aedahamlibra

# 11.

# நதிக்கரை மாளிகை

உஞ்சைப் பட்டினத்திற்கு மேற்கே அமைதியாக ஓடிக் கொண்டிருந்த அவந்தி நதியின் கரையில் பட்டினத்திலிருந்து தள்ளி ஒதுக்குப்புறமாக அமைந்திருந்தது அம் மாளிகை. ஆடம்பரமும், பாதுகாப்பும் நிறைந்த மாளிகை அது. சமயத்திற்கு சிறு கோட்டையைப் போன்றும் பயன்படுத்திக்கொள்ளும் அளவிற்கு மாளிகையைச் சுற்றி உயரமான மதில் மற்றும் ஆழமான அகழி சூழ்ந்து பல மர்மங்களைத் தாங்கிக்கொண்டு கம்பீரமாக நின்றுகொண்டிருந்தது நதிக்கரை மாளிகை. மாளிகையைத் தொலைவிலிருந்து பார்த்தபோதே அதன் கம்பீரத்

தைக் கண்டு பெருமைப்பட்ட பலதேவன் தனது முரட்டு மீசையை நீவி விட்டபடியே மாளிகையை அடைந்தான்.

அகழிப் பாலம் உயர்த்தப்பட்டிருந்த மாளிகையின் நுழைவாயிலில் நின்ற பல தேவன், "யார் எங்கே? பாலத்தைக் கீழே இறக்குங்கள்!" என்று குரல் எழுப்பினான்.

அகழியைக் கடந்து மதில் சுவரில் அமைத்திருந்த காவல் பரணில் அமர்ந் திருந்த காவல் வீரன் பலதேவனின் குர லைக் கேட்டு அகழிப் பாலத்தைக் கீழே இறக்கினான்.

பாலத்தின் வழியே உள்ளே சென்ற பலதேவன் காவலனிடம், "அகழிப் பாலத்தை எதற்காக உயர்த்தி வைத்தி ருக்கிறீர்கள்? என்ன அவசியம் நேர்ந்து விட்டது இப்போது?" எனக் கோபத்துடன் வினவினான்.

"இம்மாளிகையின் காவல் பலப்ப டுத்த வேண்டும் என்பது இளவரசியின் கட்டளை! ஆதலால் தான்...."

https://telegram.me/aedahamlibra

"ஆதலால் தான் அவசியமே இல்லாமல் அகழிப் பாலத்தை உயர்த்தி வைத்திருக்கிறீர்கள்!"

"இளவரசியின் கட்டளை..."

"இளவரசியின் கட்டளை இருக்கட்டும். உங்களுக்கு புத்தி எங்கே போனது?"

காவலர்கள் அவனுக்கு எந்தப் பதிலையும் அளிக்க இயலாமல் திணறியபடி நின்றுகொண்டிருந்தனர். அவர்களிடம், "திடீரென்று மாளிகைக்கு எதற்கு இத்தனைப் பாதுகாப்பு?" என வினவினான்.

"காரணம் தெரியவில்லை தலைவரே!"

"இளவரசியின் மெய்க் காவல் வீராங்கனைகள் தானே இம்மாளிகைக்குக் காவல் இருப்பதாகக் கேள்விப்பட்டேன்! நீங்கள் எப்போது காவலுக்கு வந்தீர்கள்?"

"அவர்கள் மாளிகையில் காவலுக்கு இருக்கிறார்கள் தலைவரே. நாங்கள் வெளியே காவலுக்கு அமர்த்தப்பட்டிருக்கிறோம்!"

"சரி... இளவரசியின் கட்டளையில் எந்தக் குறைபாடும் இருக்க வேண்டாம். நான் மாளிகைக்குச் சென்று காவலை சரிபார்த்துவிட்டு வருகிறேன். நீங்கள் நுழைவாயிலை அடைத்து அகழிப் பாலத்தை மீண்டும் உயர்த்துங்கள்!" எனக் கட்டளையிட்டு விட்டு மாளிகைக்குள் செல்லலானான்.

அவன் வருவதைக் கண்டதுமே இரவுக் காவல் புரிந்துகொண்டிருந்த வீராங்கனைகள் அவனுக்குப் பணிந்து வணக்கத்தைத் தெரிவித்தார்கள். அவர்களின் தலைவியிடம், "உள்ளே இருப்பது யார்?" என வினவினான்.

"தெரியவில்லை தலைவரே!"

"தெரியாமலா இத்தனைப் பேர் காவல் காக்கிறீர்கள்?"

அவள் எந்தப் பதிலையும் கூறாமல் அமைதியாக நிற்கலானாள்.

"எத்தனைப் பேருக்கு இத்தனைக் காவல்?"

"மூவர்!"

"அவர்கள் யார்?"

மீண்டும் அவள் அமைதியாகவே நிற்கலானாள்.

"உன்னிடம் பேசி எந்தத் தகவலையும் பெற இயலாது என்பதை நானும் அறிவேன். நானே உள்ளே சென்று பார்த்துக் கொள்கிறேன்!" எனக் கூறிய பலதேவன் விடுவிடுவென்று நடக்கலானான்.

அவன் மாளிகைக்குள் செல்வதைக் கண்ட காவல் தலைவி, "தலைவரே..." எனப் பணிவுடன் அழைத்தாள்.

https://telegram.me/aedahamlibra

“என்ன?” சற்று அதிகாரத்துடனே வினவினான் பலதேவன்.

“மாளிகைக்குள் யாரையும் அனும திக்க வேண்டாம் என்பது இளவரசியின் கட்டளை!”

“இளவரசியின் கட்டளை என்னை ஒருநாளும் கட்டுப்படுத்தாது. நான் உஞ் சையின் காவல் தலைவன் என்பதை நினைவில் கொள்!” எனக் கூறியபடி செல்லலானான்.

மீண்டும் அவள், “தலைவரே?” என அழைத்துத் தடுத்து நிறுத்தினாள்.

ஆத்திரத்துடன் அவளை நோக்கி னான் பலதேவன்.

“உள்ளே செல்வது உங்களுக்கு ஆபத்து!”

“ஆபத்தா???”

“ஆம்!”

“யாருக்கு?”

https://telegram.me/aedahamlibra

"உள்ளே செல்பவர்களுக்கு!"

"யார் சொன்னது?"

"இளவரசி..."

"இந்த எச்சரிக்கையும் மற்றவர்களுக்குத் தான். இந்த மாளிகையைக் கட்டிய பலதேவனுக்கு அல்ல" எனக் கூறியவன் சீழ்க்கை ஒலி எழுப்பினான். அடுத்த கணம் அங்கு ஓடி வந்தன இரண்டு நாய்கள். ஒவ்வொன்றும் கன்றுக்குட்டியின் உயரத்திற்கு வளர்ந்து நீட்டிய பற்களுடன் கொடூரமாக நாக்குகளை நீட்டிக் கொண்டு இரைத்தபடி பலதேவனுக்கு முன் மண்டியிட்டு நின்றன.

இரண்டு நாய்களும் ஓடி வந்து நின்றதுமே வீராங்கனைகள் அனைவரும் அச்சத்தில் விலகி நிற்கலானார்கள். அந்த நாய்களையும், காவல் தலைவியையும் மாறி மாறிப் பார்த்த பலதேவன், "இவற்றை விடவும் வேறு காவல் எனக்

குத் தேவையில்லை!" எனக் கூறியபடி மாளிகைக்குள் நுழைந்தான்.

இரண்டு நாய்களும் அவனைப் பின்தொடர்ந்து சென்றுகொண்டிருந்தன.

அவன் உள்ளே நுழைந்ததுமே காவல் தலைவி புரவி வீரன் ஒருவனை அழைத்து இளவரசிக்குத் தகவல் அனுப்பினாள். புரவி வீரனை அனுப்பி வைத்தது மட்டுமல்லாமல் காவலுக்கு நின்ற வீரர்கள் சிலரை அழைத்து மாளிகைக்குள் அனுப்பி வைத்தாள்.

"அவந்தி நதிக்கரையில் தனது காவல் வீரர்கள் பத்துக்கும் மேற்பட்டவர்களைக் கொன்ற மூவர் யாராக இருப்பார்கள்? அவர்களை எதற்காக இளவரசி அவந்திகா சிறையில் அடைக்காமல் மாளிகையில் அடைத்து வைத்திருக்கிறாள்? இதில் இரகசியம் ஏதாவது இருக்குமா?" எனும் பெருத்த வினாவுடன் மாளிகைக்குள் நுழைந்த பலதேவனுக்குப் பெருத்த அதிர்ச்சி ஒன்று காத்திருந்

https://telegram.me/aedahamlibra

தது. மாளிகையின் அறைக்குள் யாரை யுமே காணவில்லை. அறை முழுவதும் இருள் மட்டுமே கவிழ்ந்து கிடந்தது.

“யார் அங்கே? தீவர்த்தியைக் கொண்டு வாருங்கள்!” எனக் கட்டளை யிட்டான்.

அவன் கட்டளைக்கு யாரும் செவி மடுத்ததாகத் தெரியவில்லை. அவனே மாளிகையின் உள் அறையிலிருந்து தீவர்த்தியை எடுக்க வெளியே வந் தான். காவல் தலைவி அனுப்பிய வீரர் கள் வந்துகொண்டிருந்தார்கள். அவர்க ளிடம் “தீவர்த்தியைக் கொண்டு வாருங் கள்” எனக் கட்டளையிட்டுவிட்டு மீண் டும் உள்ளே நுழைந்தான்.

வீரர்கள் அவனைப் பின் தொடர்ந் தார்கள்.

தீவர்த்தியைக் கொண்டு வந்த வீர னிடம் அதை வாங்கிய பலதேவன் உயர்த்திப் பிடித்தான். அந்த அறையின்

கோடியில் ஒரு உருவம் மட்டும் சுவரைப் பார்த்தபடி அவனுக்கு முதுகைக் காட்டியபடி அமர்ந்திருந்தது. அதைக் கண்ட பலதேவன் “மற்ற இருவர் எங்கே?” என்று பார்வையால் அந்த அறையைச் சுற்றிலும் தேடினான். ஆனால், அந்த ஒருவனைத் தவிர யாரையும் அங்கு காண இயலவில்லை.

உடனே அவனுடன் நின்ற வீரர்களிடம், “நதிக்கரையில் இளவரசி சிறை செய்தது மூவரைத் தானே?” என வினவினான்.

அவர்கள், “ஆமாம் தலைவரே!” எனப் பதில் அளித்தனர்.

“மூவர் எனில் ஒருவன் இங்கு இருக்கிறான். மற்ற மூவர் எங்கே?”

வீரர்கள் அனைவரும் ஒருவரை ஒருவர் பார்க்கலானார்கள்.

“உங்களிடம் தான் கேட்கிறேன். யாராவது பதில் கூறுங்கள்!”

https://telegram.me/aedahamlibra

"தெரியவில்லை தலைவரே!" என வீரர்களில் ஒருவன் துணிந்து பதிலளித் தான்.

"வேறு அறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்களா மற்ற இரு வரும்?"

"இல்லை தலைவரே. மற்ற அறை கள் அனைத்தும் பூட்டி வைக்கப்பட்டி ருக்கின்றன."

"அப்படியெனில் மற்ற இருவரும் தப்பி விட்டனரா?"

"இது நதிக்கரை மாளிகை என் பதைக் கருத்தில் கொண்டு பேசுங்கள் தலைவரே" எனக் கம்பீரத்துடன் பதில ளித்தான் அவ்வீரன்.

"மற்ற இருவர் எங்கேயடா சென் றார்கள்?"

"..........."

https://telegram.me/aedahamlibra

“அப்படியெனில் நதிக்கரை மாளிகையில் கைது செய்தது, அவர்களை இம்மாளிகையில் அடைத்ததாக சொன்னது மற்றும் இங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் கடுங்காவல் என அனைத்தும் வெறும் நாடகம் தானா?” எனக் கடும் ஆத்திரத்துடன் தனது வீரர்களிடம் கத்திய பலதேவன் சுவரைப் பார்த்து அமர்ந்திருந்தவனிடம், “யார் நீ? என வினவினான்.

அவனிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை.

தனது பொறுமையை இழந்த பலதேவன், “அடேய்... உன்னைத்தான் அழைக்கின்றேன். உனக்குக் காது கேட்கும்தானே?” எனக் கோபத்துடன் அழைத்தான்.

அப்போது அவனை நோக்கித் திரும்பியது அவ்வுருவம்.

தீவர்த்தியின் வெளிச்சம் குறைவாகவே இருந்ததால் பலதேவனால் அவனது முகத்தைக் காண இயலவில்லை. கருத்த ஒருவம் ஒன்று இருட்டை ஆடையாகக் கொண்டு நிற்பதைப் போன்றே தோன்றியது பலதேவனுக்கு.

அவனுடன் வந்த இரண்டு நாய்களும் சற்றுத் தொலைவில் பலதேவனது கட்டளையை எதிர்பார்த்தபடி அமர்ந்திருந்தன. வீரர்களும் அப்படியே நின்று கொண்டிருந்தார்கள்.

கையில் வைத்திருந்த தீவர்த்தியைக் கொண்டு சுவரில் மாட்டப்பட்டிருந்த தீப்பந்தங்களை ஏற்றக் கட்டளையிட்டான் பலதேவன். அந்த அறையில் கவிழ்ந்திருந்த இருள் முழுவதையும் விரட்டிவிட்டு வெளிச்சம் ஆக்கிரமித்துக் கொண்டது.

எதிரில் நின்றவனை நோக்கினான் பலதேவன். அவன் தரையைப் பார்த்தபடி நின்றுகொண்டிருந்தான்.

“தரையைப் பார்த்தது போதும். என்னைப் பார்!” கட்டளையிட்டான் பலதேவன்.

அவனது கட்டளையைக் கேட்டவன் தரையை நோக்கிக் கவிழ்ந்திருந்த தனது தலையை உயர்த்தி தனது வாள் விழிகளால் அவனை நோக்கினான்.

அவனது முகத்தையே சிறிது நேரம் உற்றுப் பார்த்த பலதேவன், “உன்னைப் பார்த்தால் தென்னாட்டானைப் போன்று தெரிகிறது. உனக்கு இங்கு அவந்தியில் என்ன வேலை? உன்னுடன் கைது செய்யப்பட மற்ற இருவர் எங்கே? நீ யார்?” என வினவினான்.

“என்ன நண்பா அதற்குள்ளாகவா என்னை நீ மறந்துவிட்டாய்?”

“நண்பனா?”

https://telegram.me/aedahamlibra

"ஆம்!"

"யார்?"

"நீதான்!"

"யாருக்கு?"

"எனக்குத் தான்!" என எதிரில் நின்றவன் கூறியதைக் கேட்ட பலதேவன் வீரனின் கையில் வைத்திருந்த தீவர்த் தியை வாங்கி அவனை உற்றுப் பார்த் தான். உடலெங்கும் தாங்கிய விழுப் புண் களுடன் நின்றுகொண்டிருந்தான் கரிகா லரின் வேளக்காரப் படைத் தலைவன் திவ்யன்.

அவனது முகத்தைப் பார்க்கப் பார்க்க பெரும் வீரனான பலதேவனின் மனதில் கண நேரத்தில் அச்சம் சூழ்ந் துகொண்டது. அவனது கரங்கள் நடுங் கத் துவங்கியது. "அவனைக் கொன்று போடுங்கள்" எனத் தன் வீரர்களுக்கு கட் டளையிட வாயைத் திறந்தான். அவனால் பேச இயலவில்லை. நா குழறியது.

https://telegram.me/aedahamlibra

அவன் பேசாவிட்டாலும் அவனது மன ஓட்டத்தைப் புரிந்துகொண்ட அவனது இரண்டு வேட்டை நாய்களும் எதிரில் நின்ற திவ்யனின் மீது ஒரே நேரத்தில் பாய்ந்தன.

யவன தேசத்தில் அடிமை வீரனாக செண்டாயுதனான திவ்யன் சண்டையிட்ட காலத்தில் அவன் பல சிங்கங்கள், புலி, காண்டாமிருகம், யானை மற்றும் எருமையைக் கொன்று தன்னைக் காப்பாற்றிக்கொண்டவனுக்கு அவனைத் தாக்க வந்த இரண்டு வேட்டை நாய்களும் பெரும் அச்சுறுத்தலாகத் தெரியவில்லை. கையில் வைத்திருந்த செண்டாயுதத்தினால் பாய்ந்து வந்த இரண்டு நாய்களின் உடலையும் ஒரே நேரத்தில் கிழித்து கொன்று சுவற்றில் வீசி எறிந்தான்.

தன்னுடைய வேட்டை நாய்களால் பல அரசியல் கைதிகளை அந்த மாளிகையில் பலதேவன் அடைத்து கொன்

றிருக்கிறான். கண நேரத்தில் அவற்றை இழந்துவிட்ட பலதேவன் அதிர்ச்சியில் தனது விழிகளை நம்பலாமா? அல்லது வேண்டாமா? என எண்ணியபடி நின்று கொண்டிருந்தான்.

அவனது அதிர்ச்சியைப் போக்கும் விதமாக திவ்யன், "நண்பா, நான் உனக் குத்தான் நன்றி கூற கடமைப்பட்டிருக் கிறேன்!" எனச் சொற்களை ஒவ்வொன் றாக உதிர்த்தான்.

சிறிது நேரம் அதிர்ச்சியில் அப்ப டியே நின்ற பலதேவன் பிறகு, "எனக்கா?" என வினவினான்.

"ஆம். உனக்குத்தான்!"

"எதற்கு?"

"அன்று நீ மட்டும் உனது நண் பர்கள் வஜ்ரபாகுவிடமும், சுங்கமித்திர னிடமும் "இவனை உயிரோடு விடாதீர் கள் கொன்று போட்டுவிடுங்கள்" என்று எச்சரிக்கை செய்யாமல் இருந்திருந்

தால் அவர்கள் என்னைக் குணக் கடலிலேயே மரக்கலத்தில் கொன்றிருப்பார்கள். அவர்கள் முடிவெடுக்குமுன்னே அவர்களை நீ எச்சரிக்கை செய்தாய்!" எனக் கூறிய திவ்யன் பிறகு சிரித்தபடி, "உனது எச்சரிக்கை அவர்களின் பொறாமையைக் கிளப்பிவிட அவர்கள் என்னை உயிரோடு யவனத்திற்கு அடிமையாக அனுப்பி வைத்தார்கள்! யவனத்திற்கு சென்ற நான் இப்போது கருணை என்பது சிறிதும் இல்லாமல் முழு வீரனாக பெரும்பலத்துடன் திரும்பியிருக்கிறேன். அனைத்திற்கும் காரணம் நீ! அதற்கு நான் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன் அல்லவா?" எனத் தெரிவித்தான்.

"உன்னை நான் எதிர்பார்க்கவில்லை!"

"நான்தான் அன்றே நீங்கள் என்னை யவனத்திற்கு அடிமையாக அனுப்பும்போது தெரிவித்தேன் அல்

https://telegram.me/aedahamlibra

லவா? ஒரு நாள் நிச்சயம் திரும்பி வரு வேன் என்று!”

“தனியாக உன்னை இங்கு எதிர் பார்க்கவில்லை.”

“அது உனது தவறு!”

“சரி, எதற்காக இங்கு வந்திருக்கி றாய்?”

“நன்றிக்கடனை திருப்பிச் செலுத்த...”

“புரியவில்லை!”

“விரைவில் புரிந்துகொள்வாய்!” எனக் கூறிய திவ்யன் கையிலிருந்த செண்டினை உயர்த்தினான். அதிலி ருந்து நாய்களின் குருதி சொட்டு சொட் டாக வழிந்துகொண்டிருந்தது.

அப்போது பலதேவன், “இந்த மாளி கையிலிருந்து உன்னால் உயிரோடு தப் பிக்க முடியுமா?” எனச் சிரித்தபடி வினவி னான் பலதேவன்.

https://telegram.me/aedahamlibra

“உள்ளே பாதுகாப்பாக நுழைந்தவனுக்கு வெளியே செல்லும் மார்க்கம் தெரியாதா பலதேவா? அந்தக் கவலை உனக்கு வேண்டாம்!” எனத் திவ்யன் கூறியதுதான் தாமதம் அடுத்தகணம் பலதேவன் தனது வீரர்களிடம், “இவனைக் கொன்றுபோடுங்கள்!” எனக் கட்டளையிட்டான்.

உடனே வீரர்கள் திவ்யனை நோக்கி நீண்ட வாள் மற்றும் ஈட்டி ஆகிய ஆயுதங்களுடன் அவனைத் தாக்கினார்கள். தனது செண்டாயுதத்தினால் அவர்களை எதிர்கொண்டான் திவ்யன். அவந்திகாவின் மாளிகையில் போரினை குருதியின்றி முடித்துவிட்டு வந்த திவ்யனால் நதிக்கரை மாளிகையில் தற்காப்புப் போரில் ஈடுபட ஏனோ மறந்துபோயிருந்தான். வெண்ணிப் போர் முடிந்த பிறகு குருதியைச் சுவைக்காத தனது செண்டினை அவந்தி வீரர்களின் குருதியினால் குளிப்பாட்டினான். செண்டாயுதத்தின் கூறிய வேல்களிலும், நீண்ட

https://telegram.me/aedahamlibra

வாளிலும் அகப்பட்ட அவந்தி வீரர்க ளின் உடல் பாகங்கள் அவ்வறை முழுவ தும் சிதறின. வீரர்களின் அலறல் சத்தம் அம்மாளிகையில் காவல் காத்த அனை வரையும் கொலை நடுக்கம் கொள்ளச் செய்திருந்தது. கண நேரத்திற்குள் பல தேவனைத் தவிர அனைத்து வீரர்களின் கதையையும் முடித்திருந்தான் திவ்யன்.

பலதேவன் கையில் வாளினை ஏந் திக்கொண்டு தயாராக நின்றான்.

திவ்யன் அவனை நெருங்கினான்.

“உனது வேகம் பல மடங்கு அதி கரித்திருக்கிறது இப்போது. வா நீயா? நானா? என்று ஒரு கை பார்த்து விடு வோம்!” எனக் கூறியபடியே பலதேவன் திவ்யனை நோக்கிப் பாய்ந்தான்.

வாள் வீச்சில் சிறந்தவனான பல தேவன் தனது வாளினைப் பலமாக வும் அதே சமயம் தந்திரமாகவும் திவ் யனை நோக்கிச் சுழற்றினான். ஆனால்,

https://telegram.me/aedahamlibra

அவனது அனைத்து தாக்குதல்களை யும் திவ்யன் எளிதில் எந்தவித சிர மமுமின்றி தடுத்துக் கொண்டிருந்தான். திவ்யனின் தாக்குதலையும் பலதேவன் திறம்பட சமாளித்துக் கொண்டிருந்தான். அவர்களின் சமர் சிறிது நேரம் நீடித் தது. இதற்கு மேல் போரினை நீட்டச் செய்வது ஆபத்து என்பதை உணர்ந்த திவ்யன் செண்டில் முனையில் காணப் பட்ட வேலினால் பலதேவனின் தோளை நோக்கி இறக்கினான். ஆனால், அதை யும் திறமாகத் தனது வாளினால் தடுத் துவிட்டிருந்தான் பலதேவன். பலதேவன் தனது வாளினைப் பின்னால் இழுத்தான். ஆனால் வாள் வரவில்லை. செண்டின் வேல் முனைகளில் அது சிக்கியிருந்தது.

எந்தக் கணத்திற்காக திவ்யன் காத் திருந்தானோ அந்தக் கணம் வந்ததும் சிரித்தபடி தனது செண்டினைச் சுழற் றினான். அடுத்தகணம் அவனது வாள் காற்றில் விர்ரென்று பறந்தது.

வாளினை இழந்த பலதேவன் தனது தோல்வியை ஒப்புக்கொண்டு திவ்யனுக்கு முன் மண்டியிட்டு, "இதற்கு மேல் நான் உயிர் வாழத் தகுதியற்றவன். என் கதையை இத்தோடு முடித்துவிடு. போரில் உயிர் துறந்தான் பலதேவன் என்று இருக்கட்டும்!" எனக் கூறிக் கொண்டு திவ்யனுக்கு வசதியாக நிலம் நோக்கினான்.

"நீ விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் உனக்கு வீர மரணத்தையே அளிக்க விரும்புகிறேன் பலதேவா" எனக் கூறிய திவ்யன் செண்டின் மறுமுனையில் காணப்படும் நீண்ட வாளினால் அவனது தலையைக் கொய்ய வேகமாக அவனது கழுத்தை நோக்கி இறக்கினான்.

பலதேவனின் கழுத்தினை திவ்யனது செண்டின் முனை தீண்டியது. பலதேவன் ஒருகணம் தனது விழிகளை மூடிக்கொண்டான். சற்று நேரம் கழித்து

கண் திறந்தான். அவனது கழுத்தினைத் தீண்டியபடியே திவ்யனின் வாள் அப் படியே நின்றிருக்க திவ்யன் அவனது தோளில் எதையோ உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

பலதேவன் தனது தோளை நோக் கினான். மல்லிகைச் சரத்திலிருந்து உதிர்ந்த சில மல்லிகை மொட்டுக்கள் அவனது தோளில் கிடந்தது. மனை வியை அணைத்த நேரத்தில் அவளது கூந்தலில் அவள் சூடியிருந்த மலர்ச் சரத்தை நினைத்துக் கொண்டான் பல தேவன்.

மிரட்சியுடன் பலதேவன் திவ்யனை நோக்க அவன் இவனது விழிகளில் தனது பார்வையை நிலைக்க வைத்தபடி, “உனக்கு மணமாகிவிட்டதா?” என வின வினான்.

“ம்ம்ம்!” என மட்டும் பதில் அளித் தான் பலதேவன்.

https://telegram.me/aedahamlibra

“எத்தனைக் குழந்தைகள்?”

“கடவுள் அந்தப் பாக்கியத்தை இன்னும் எனக்கு அளிக்கவில்லை!”

சிறிது நேரம் அவனது முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான் திவ் யன். பிறகு, “உன்னை நான் போர்க் களத் தில் சந்திக்கிறேன். ஆனால், அதற்கு முன் நான் உன்னை எங்காவது சந்தித் தால் உனது உயிருக்கு என்னால் உத் தரவாதத்தை அளிக்க முடியாது” எனக் கூறிக்கொண்டு அந்த அறையிலிருந்து வெளியேறினான்.

அந்த அறையிலேயே நெடுநேரம் மண்டியிட்டபடியே அமர்ந்து கிடந்தான் அவந்தியின் காவல் தலைவனான பல தேவன்.

https://telegram.me/aedahamlibra

# 12.
# தாக்கா ளர்கள்

பொழுது புலர்ந்த காலை நேரம். அவந்தி இளவரசி அவந்திகா சண்டிகாலேசுவரரின் கோயிலுக்கு முன் காணப்பட்ட பாறையில் அமர்ந்திருந்தபடியே அமைதியாகப் பாய்ந்துகொண்டிருந்த அவந்தி நதியையே நோக்கிக் கொண்டிருந்தாள். அவளது மனதில் இனம்புரியாத தவிப்பு, குழப்பம் அவளைச் சூழ்ந்திருந்தது. மனதில் குழப்பம் குடிகொண்டிருந்தாலும் அதை அவள் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

பாறையில் அமர்ந்துகொண்டு நதிக்குள் சிறு கற்களை எடுத்துப் போட் டபடி வெறித்தபடி நதியையே பார்த்துக் கொண்டிருந்த அவந்திகாவிடம் வந்த அவளது வீராங்கனைகளின் காவல் தலைவி பணிந்து தனது வருகையைத் தெரிவித்துக்கொண்டாள்.

அவளைப் பார்த்த அவந்திகா தனக்கு அருகில் அமரும்படி சைகை காட்டினாள். அவளும் அவந்திகாவுக்கு அருகில் அமர்ந்துகொண்டாள். பிறகு, "எதற்காக இளவரசி அழைத்தீர்கள்?" என வினவினாள்.

சிறிது நேரம் அவளது கேள்விக்கு எந்தப் பதிலையும் அளிக்காத அவந்திகா பிறகு, "கார்த்திகா எங்கே? அவளை நீ சந்தித்தாயா?" என வினவினாள்.

"இல்லை தேவி. நேற்று காலை யில் சந்தித்தது. அதன் பிறகு அவளை நான் சந்திக்கவில்லை. ஏதேனும் முக்கி யப் பணியா?"

https://telegram.me/aedahamlibra

“ம்ம்ம்... நேற்றிரவு மாளிகைக்கு பல தேவர் வருகை தந்ததாக செய்தி அனுப் பினாயே என்ன நடந்தது? விரிவாகக் கூறு!”

“அவந்தி நதிக்கரையில் கைது செய்த மூவரையும் நீங்கள் நதிக்கரை மாளிகையில் தான் சிறை வைத்திருக் கிறீர்கள் என்ற எண்ணத்துடன் அவர்க ளைத் தேடி வருகை தந்தார்.”

“மூவரும் நதிக்கரை மாளிகையில் இல்லை என்பதை அறிந்து கொண் டாரா?”

“ஆம்!”

“அதன் பிறகு என்ன நடந்தது?”

“நாம் எதிர்பார்க்காத காரியங்கள் பல அரங்கேறிவிட்டன.”

“என்ன கூறுகிறாய் நீ?”

“மாளிகைக்குள் சென்ற பலதே வரை நான் கடுமையாக எச்சரிக்கை

செய்தேன். ஆனால், அதைப் பொருட்ப டுத்தாமல் அவர் உள்ளே சென்றார்."

"தனியாகவா?"

"இல்லை தேவி. அவரது வேட்டை நாய்கள் இரண்டையும் உடன் அழைத் துச் சென்றார். அவருக்குத் துணை யாக வீரர்களையும் அனுப்பி வைத்தேன் நான்."

"வேட்டை நாயையுமா உடன் அழைத்து வந்தார்!"

"ஆம்!"

"சரி, மேலே கூறு!"

"யாரும் இல்லாத மாளிகையைக் கண்டு அவர் கோபத்தில் திரும்பி வந் துவிடுவார் என்றே நினைத்தேன் நான். ஆனால்... ஆனால்..." என சொற்களை இழுத்த காவல் தலைவி மேற்கொண்டு கூறத் தயங்கினாள்.

https://telegram.me/aedahamlibra

அவளே தொடரட்டும் என எண்ணிய அவந்திகா அமைதியாகவே அவளது விழிகளை நோக்கிக்கொண்டிருந்தாள்.

“ஆனால்... எனது எதிர்பார்ப்பிற்கு மாறாக மாளிகை அறைக்குள் ஒருவன் காணப்பட்டான்!”

“யார் அவன்?”

“தெரியாது தேவி!”

“தெரியாதா?”

“ஆம்!”

“அவன் எப்படி மாளிகைக்குள் நுழைந்தான்.

அவந்திகாவின் கேள்விக்குப் பதிலளிக்க முடியாமல் காவல் தலைவி தலை கவிழ்ந்திருந்தாள்.

“அவன் இப்போது எங்கே?”

“அதுவும் தெரியாது!”

https://telegram.me/aedahamlibrary

"என்ன கூறுகிறாய் நீ? அவந்தியில் காணப்படும் பாதுகாப்பு மாளிகையில் முதன்மையானது நதிக்கரை மாளிகை. அதற்குள் மாற்றான் ஒருவன் உள் நுழைந்து வெளியேறியிருக்கிறான். அதைப் பற்றி எதுவுமே தெரியாது என்கிறாய்?"

"மன்னிக்கவும் இளவரசி. அவனைப் பின்தொடர முயன்றேன் நான். ஆனால், அவன் இருளில் மறைந்துவிட்டான்."

"நான் கேட்டதற்கு பதில் இது கிடையாது!"

"..........."

"சரி... பலதேவர் மாளிகைக்குள் நுழைந்தாரே, என்ன நடந்தது?"

"மூவரைத் தேடிச் சென்றவர் ஒருவனைக் கண்டு திகைத்துவிட்டார். அவனைப் பார்த்த அவரது சப்த நாடிகளும்

அடங்கிப் போய், அவரது உடல் நடுங்குவதைக் கண்டேன் தேவி!"

"பலதேவரது உடல் நடுங்கியதா? என்ன உளறுகிறாய் நீ?"

"ஆம் தேவி! அவனைப் பார்த்த அக்கணத்தில் அவரது குரல் குழறியது. சிறிது நேரம் பேச்சே வரவில்லை. அவரது உடலில் ஒரு வித நடுக்கம் வந்துவிட்டதை உணர்ந்தேன் நான்!"

"அவந்தியில் இருப்பவர்களில் பெரும் வீரர் அவர். என் தமையன் வஜ்ர பாகுவை விடவும் வாள் வீசுவதில் சிறந்தவர் அவர். அவரா வேறொருவனைக் கண்டு நடுக்கம் கொண்டார்?"

"பலதேவர் யாரிடமாவது மண்டியிட்டு நீங்கள் பார்த்திருக்கிறீர்களா தேவி?"

"என்ன பிதற்றுகிறாய் நீ?"

"நான் பிதற்றவில்லை தேவி. கண்ணால் கண்டதைத் தான் கூறுகிறேன். அவனைக் கண்டதுமே தனது இரண்டு நாய்களையும் அவன் மீது ஏவி விட்டார். இரண்டையும் கொன்றான் அவன். அடுத்த கணம் அவனை நமது காவல் வீரர்கள் தாக்கினார்கள். அனைவரையும் கருணை என்பது சிறிதும் இன்று கொன்றுவிட்டான். என் வாழ்வில் இவ்வளவு வேகமாக ஒருவன் தனது வாளினைச் சுழற்றி நான் கண்டதில்லை" எனக் கூறிக்கொண்டிருந்த போதே தனது நாக்கைக் கடித்து வருத்தம் தெரிவித்த காவல் தலைவி, "அவன் கையில் வைத்திருந்தது வாள் இல்லை தேவி. ஒரு முனை வேல்கள் தாங்கிய கூர்மையான ஈட்டியும், மறுமுனையில் வாளும் இருந்தது அவனது ஆயுதத்தில். அந்த ஆயுதத்தால் நமது வீரர்களை அவன் கிழித்துப் போட்ட வேகத்தை நீங்கள் பார்க்கவில்லை!" என அவள் கூறிக்கொண்டிருந்த போதே இடைமறித்த அவந்திகா,

https://telegram.me/aedahamlibra

“அவன் நமது வீரர்களைக் கொல்லும் வரை பலதேவர் என்ன செய்துகொண்டிருந்தார்?” என வினவினாள்.

“அவர் என்ன செய்தார் என்று முன்பே கூறினேனே தேவி. அவரும் அவனைத் தாக்கினார். ஆனால், பலதேவர் தோற்றுவிட்டார். கடைசியில் அவரையும் கொலை செய்ய தனது ஆயுதத்தை அவரது கழுத்தை நோக்கி வீசினான். ஆனால், முடிவில் என்ன நினைத்தானோ தெரியவில்லை. உன்னை நான் சமர் களத்தில் சந்திக்கிறேன் எனக் கூறியவன் இருளில் மறைந்துவிட்டான். அவனைப் பின்தொடர முயன்றேன். ஆனால், அவனது வேகத்திற்கு என்னால் ஈடுகொடுக்க முடியவில்லை.”

“போரில் சந்திக்கிறேன்” என்றா கூறிச் சென்றான்?” என வினவினாள் அவந்திகா.

“ஆம் தேவி. என் காதில் அப்படித் தான் விழுந்தது.”

சிறிது நேரம் அமைதியாக சிந்தித்தபடியே அமர்ந்திருந்தாள் அவந்திகா. அவள் மனதிற்குள் பலவித சிந்தனைகள் சுழன்றுகொண்டிருந்தன. “நேற்று அவன் தனது மாளிகைக்கு வந்தபோது நதிக்கரையில் கைது செய்த மூவரைத் தேடி அல்லவா வந்திருக்கிறான் என எண்ணினேன்? அவன் அம்மூவரைத் தேடி வரவில்லையா? அப்படியெனில் அவன் எதற்காக நேற்றிரவு தனது மாளிகைக்கு வந்திருப்பான்? பலதேவர் அவனைக் கண்டதும் நடுங்குவதற்கு என்ன காரணம்? அவர் எதற்கு அவனைப் பார்த்ததுமே கொலை செய்ய கட்டளையைப் பிறப்பிக்க வேண்டும்? போரில் பலதேவர் தோற்றும் அவரை எதற்காக அவன் கொல்லாமல் போரில் சந்திக்கிறேன் எனக் கூறிவிட்டுச் சென்றிருக்கிறான்? “போர்” என்றால் யாருக்கும் யாருக்கும் நடைபெறப் போகிற போர்? ஒன்றும் புரியவில்லையே? அவன் யாராக இருப்பான்?” எனும் பெரும் குழப்பத்தில் இருந்த

https://telegram.me/aedahamlibra

அவந்திகா, "பலதேவர் எதற்காக அவனைக் கண்டதும் கொலை செய்ய உத்தரவிட்டார்? அவர்கள் ஏதாவது பேசிக் கொண்டார்களா? உன் காதில் ஏதாவது விழுந்ததா? அவன் யாரென்ற தகவல் ஏதாவது கிடைத்ததா?" என அவனைப் பற்றி அறியும் ஆவலில் வினவினாள் அவந்திகா.

"அவர்கள் பேசிக்கொண்டது அரைகுறையாக எனக்குக் காதில் விழுந்தது தேவி."

"என்ன பேசிக் கொண்டார்கள் அவர்கள்?"

"பலதேவரை அவன் தனது நண்பன் என்றான். நன்றிக்கடன் செலுத்துவதற்கு அவந்திக்கு வந்திருப்பதாகத் தெரிவித்தான் அவன்!"

"என்ன, நன்றிக் கடனா?"

"ஆம் தேவி!"

https://telegram.me/aedahamlibra

"என்ன அது?"

"யவனத்திற்கு அடிமையாக அனுப்பிய நன்றிக் கடன் என எனது காதில் விழுந்தது. ஆனால், அப்போது அவர்கள் பேசியது எனக்குச் சரியாக காதில் விழ வில்லை!"

"அடிமையாகவா?"

"ஆம் தேவி!"

"அடிமையாக அனுப்பியதற்கா ஒருவன் நன்றிக்கடன் செலுத்த வருவான்?"

"தேவி, அப்புறம் இன்னொரு தகவல். கூற மறந்துவிட்டேன்!"

"என்ன அது?" பரபரப்புடன் வினவினாள் அவந்திகா.

"பலதேவரை எதிர்கொண்டவன் தென்னாட்டைச் சேர்ந்த வீரன்!"

"என்ன தென்னாட்டைச் சேர்ந்தவனா?"

https://telegram.me/aedahamlibra

"ஆம்!"

"அவர்கள் பேசிக்கொண்டபோது அவனது பெயர் என்ன என்று யாராவது உச்சரித்தார்களா?"

"ஒரே ஒரு முறை பலதேவர் ஏதோ ஒரு பெயரைச் சொல்லி அவனை அழைத்தார்" எனக் கூறியவள் நெற்றியில் கையை வைத்துக்கொண்டு சிந்திக்கலானாள்.

"என்ன பெயர் அது?" அவசரப்படுத்தினாள் அவந்திகா.

"சற்றுப் பொறுங்கள் தேவி. சட்டென்று நினைவிற்கு வர மறுக்கிறது அவனது பெயர்!" எனக் கூறியபடியே சிந்தித்தாள் காவல் தலைவி. பிறகு, "தேவி நினைவிற்கு வந்துவிட்டது. அவனது பெயர் "திவ்யன்" எனத் தெரிவித்தாள்.

"திவ்யன்" என்ற பெயரைக் கேட்டதுமே அமர்ந்திருந்த அவந்திகா எழுந்து நின்றுவிட்டாள். "அன்று அவந்தி நதி

யில் தன்னைக் காப்பாற்றிய நெறி பிறழாத தென்னாட்டு அடிமை, நேற்றிரவு தனது மாளிகைக்குள் நுழைந்த முரட்டு வீரன், நதிக்கரை மாளிகைக்குள் சென்று பல தேவரை வீழ்த்திய தென்னாட்டான் என அனைவரும் ஒருவரே. சோழ தேசத்தின் படைத் தலைவனான திவ்யன் தான் அவன்! சோழ தேசத்தின் படைத் தலைவன் அவந்தியில் இருக்கிறான் எனில் நான் சந்தேகம் கொண்டது சரிதான். நதிக்கரையில் கைது செய்தது சோழ தேசத்தின் பேரரசர் கரிகாலரைத் தான். நல்ல வேளை அவரைக் கைது செய்து சிறையில் அடைக்கவில்லை. எப்பேர்ப் பட்ட தவறினை செய்திருப்பேன் நான். கடவுளே, நான் வணங்கும் சண்டிகா லேசுவரர் தான் தக்க சமயத்தில் அறிவினை அளித்து என்னையும், இந்த சாதவாகன தேசத்தையும் காப்பாற்றியிருக்கிறார்" என மனதிற்குள் பலவிதமாக நினைத்தபடி நின்றுகொண்டிருந்தாள்.

"திவ்யன்" என்ற பெயரைக் கேட்டதுமே எழுந்துவிட்ட அவந்திகாவைக் கண்டதும் காவல் தலைவியும் எழுந்து நின்றிருந்தாள். திடீரென்று மாறிவிட்ட அவந்திகாவின் முக பாவனையைக் கண்டவள், "தேவி, திவ்யன் என் பது சோழ படைத் தலைவராக இருப்பார் என்று எண்ணுகிறீர்களா?" என்று அவளது மனதை வாசித்தவள் போன்றே கேள்வியை எழுப்பினாள்.

"ம்ம்ம்" என மட்டும் பதிலளித்தாள் அவந்திகா.

"நான் கிளம்புகிறேன் தேவி. நதிக் கரையில் கைது செய்த மூவரையும் தாங்கள் பாதாளச் சிறையில் அடைக்காமல் தனி மாளிகையில் வைத்து வேண்டிய வசதிகளைத் தாங்கள் செய்தபோது அதற்கான காரணம் அப்போது எனக்குப் புரியவில்லை. இப்போது அதன் காரணம் தெரிகிறது தேவி. பெரும் அரசியல் நெருக்கடியில் இப்போது அவந்தி சிக்கி

https://telegram.me/aedahamlibra

யிருக்கிறது. தாங்கள்தான் அவந்தியைக் காத்தருள வேண்டும்" எனக் கூறியவள், "நான் விடை பெறுகிறேன்" எனக் கூறிக் கொண்டு அங்கிருந்து விடை பெற்றுச் சென்றாள்.

அவந்திகா அந்த நதிக்கரையி லேயே ஒரு முகூர்த்த நேரத்திற் கும் மேல் குழப்பத்துடனே சிந்தித்த படி அமர்ந்திருந்தாள். அப்போது அவந் திகா எதிர்பார்த்துக்கொண்டிருந்த கார்த் திகா அங்கு வந்து சேர்ந்தாள். அவளி டம், "இவ்வளவு நேரம் எங்கே கார்த்திகா சென்றிருந்தாய்? எவ்வளவு நேரம் உனக் காக நான் இங்கே காத்திருப்பது?" எனக் கோபத்தில் வினவினாள்.

"மன்னிக்கவும் இளவரசி" என அவள் கூறிக்கொண்டிருந்த போதே இடைமறித்த அவந்திகா, "காரணம் எது வும் தேவையில்லை. நேற்று பலதேவ ரைப் பின் தொடர்ந்தாயே, சென்ற காரி

யம் என்ன ஆனது?" என எதுவுமே தெரியாதவளைப் போன்று வினவினாள்.

"மன்னிக்கவும் தேவி. நேற்று என்னால் முழுவதுமாக பலதேவரைப் பின்தொடர இயலவில்லை!" என்று பதிலளித்தாள் கார்த்திகா.

"ஏன்?"

"சாதவாகன ஒற்றர் தலைவர் நேற்றிரவு உஞ்சைக்கு வருகை தந்திருந்தார். அவரைப் பின்தொடர்ந்து சென்றுவிட்டதால் பலதேவரைப் பின்தொடர இயலவில்லை."

"இதற்குத்தான் மன்னிப்பு கேட்டாயா?"

"ஆம்!"

"ஒற்றர் தலைவர் உஞ்சைக்கு வந்தும் என்னைச் சந்திக்காமல் சென்றுவிட்டாரே?"

https://telegram.me/aedahamlibra

“அவர் இரகசியமாக வருகை தந்திருக்கிறார்!” எனச் சிரித்தபடி தெரிவித்தாள் கார்த்திகா.

“அவர்கள் இன்னும் இரண்டு திங்கள் என்று எதற்காக நாள் குறித்திருக்கிறார்களாம்?” என அவந்திகா வினவ கார்த்திகா அவளை வியப்புடன் நோக்கினாள்.

“அனைத்தையும் அறிவேன் கார்த்திகா. நீ வியக்க வேண்டாம்!” என அவந்திகா தெரிவிக்க, “உங்களது தமையனுக்கு அவந்தியின் அரசராக முடிசூட்ட இரண்டு திங்கள் என்று நாள் குறித்திருக்கிறார்கள்!” எனப் பதிலளித்தாள் கார்த்திகா.

“இந்த முயற்சி நான் எதிர்பார்த்தது தான் கார்த்திகா. இதை அவர்கள் எப்படி நிறைவேற்றப் போகிறார்கள் என்ற தகவல் ஏதேனும் கிடைத்ததா?”

https://telegram.me/aedahamlibra

“அதை அறிந்துகொள்ளத்தான் நான் ஒற்றர் தலைவரை நேற்றிரவு பின் தொடர்ந்து சென்றேன். ஆனால், என்னால் எதையும் அறிந்துகொள்ள இயலவில்லை.”

“ம்ம்ம்...”

“தேவி இன்னொரு தகவலைப் பற்றி அவர்கள் பேசிக் கொண்டார்கள்?”

“என்ன?”

“நமது எல்லையான வடுகர் நாட்டில் நிலை கொண்டிருக்கும் சோழப் படையைத் தாக்கச்சொல்லி பலதேவர் வஜ்ரபாகுவின் பெயரில் கட்டளை விதித்திருக்கிறார்.”

“எதற்காக?”

“சாதவாகன எல்லைப் படை சோழப் படையைத் தாக்கினால் அவர்கள் பதிலுக்கு சாதவாகன நாட்டைத் தாக்குவார்கள். நெடுங்காலமாக நமக்கும்

தமிழ் அரசர்களுக்கும் இருக்கும் நட்பை சிதைத்து சதகர்ணிக்கு சுங்கர் மற்றும் கலிங்க நாட்டுடன் நட்புறவை ஏற்படுத்தி விடலாம் என்று அவர்கள் பேசிக்கொண் டார்கள்."

அவள் கூறியதைக் கேட்டதுமே தலையில் கை வைத்த அவந்திகா, "கார்த்திகா, மேலோட்டமாக இந்தத் தாக்குதல் கட்டளையில் எந்தவித அர்த் தமும் இருக்காது. ஆனால், இந்தத் தாக் குதலில்தான் சாதவாகன அரசின் எதிர் காலமே அடங்கியிருக்கிறது" எனப் பதற் றத்துடன் கூறியவள், "யார் அங்கே!" எனக் அழைத்தாள்.

"நேற்றிரவு இங்கிருந்து புறப்பட்டுச் சென்ற ஒற்றர் தலைவர் நமது தெற்கு எல்லையை அடையும் முன் அவரைக் கைது செய்து இழுத்து வாருங்கள். அவர் கொண்டு செல்லும் கட்டளை தென் திசை மாதண்ட நாயகனை அடையக் கூடாது! உடனே நம் வீரர்களுக்கு கட்ட

ளையிடுங்கள்!” எனத் தெரிவிக்க வீராங் கனைகள் அவசர அவசரமாக அங்கிருந்து புரவியில் சென்றனர்.

“தேவி, எதற்காக திடீரென்று இப்பொது பதறுகிறீர்கள்? உங்களது முகத்தில் இதுவரை நான் காணாத மாற்றத்தை இன்று காண்கிறேன். நேற்றிரவு என்ன நடந்தது. எதற்காக இப்போது அதிகமாக உணர்ச்சி வசப்படுகிறீர்கள்?” என வினவினாள் கார்த்திகா.

“அவந்தியில் நடக்கும் சில அரசியல் விவகாரங்கள் பற்றி உனக்குத் தெரியாது கார்த்திகா. உரிய காலத்தில் என் பதற்றத்திற்கான காரணத்தை நீ அறிந்துகொள்வாய்!” எனக் கூறிய அவந்திகா நடக்கலானாள்.

அவளுக்குப் பின்னால் கார்த்திகா நடந்தபடியே, “இளவரசி!” என்று அழைத்தாள்.

“என்ன?”

https://telegram.me/aedahamlibra

"தாக்காளர்கள்" என்பவர்கள் யார்?"

"நமது தெற்கு எல்லையில் வடுகர் நாட்டின் ஓரம் வசிக்கும் பழங்குடியினர். பெரும் முரடர்கள். கருணை, தயவு என்பதே சிறிதும் அற்றவர்கள். யாருக்கும் அடங்காதவர்கள். ஆனால், சமீப காலமாக நமது சாதவாகன அரசுக்குக் கட்டுப்பட்டு ஒடுங்கியிருக்கிறார்கள்!"

"........"

"இப்போது எதற்காக அவர்களைப் பற்றி தொடர்பே இல்லாமல் வினவுகிறாய்?"

"நேற்றிரவு பலதேவர் ஒற்றர் தலைவரிடம், "தாக்காளர்கள் முதலில் நிலை கொண்டிருக்கும் சோழப் படையை திடீரென்று தாக்கி சீர் குலைக்கட்டும். அடுத்து நமது எல்லைப் புறக் காவல் படை தாக்கட்டும்" எனக் கட்டளையிட்டார்."

https://telegram.me/aedahamlibra

"நிலைமை மோசமாக ஆகிக் கொண்டிருக்கிறது. தென்திசை மாதண்ட நாயகனுக்கு புறாவின் மூலம் செய்தி அனுப்பி விடுவோமா?"

"புறா சென்று சேர்வதற்குள் ஒற்றர் தலைவர் போய்ச் சேர்ந்து விடுவார். அவர் நேற்றிரவே இங்கிருந்து போய்விட்டார். தாங்கள் இப்போது அனுப்பிய வீரர்களும் உரிய காலத்திற்குள் போய்ச் சேர்வார் களா என்பதும் சந்தேகமா?" என வருத் தத்துடன் தெரிவித்தாள் கார்த்திகா.

"அதை விட்டால் இப்பொது வேறு வழியில்லை கார்த்திகா. கடவு ளிடம் வேண்டிக்கொள். ஒற்றர் தலை வர் கொண்டு செல்லும் கட்டளை தாக் காளர்களுக்குக் கிடைக்குமுன் அவர் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்று."

"ஏன் தேவி?"

"தாக்காளர்களைப் பற்றி உனக் குத் தெரியாது. அவர்கள் புற்றீசலைப்

போன்றவர்கள். பொறி வைத்து கூட் டமாக நிலை கொண்டிருக்கும் படை யைத் தனித் தனியாகப் பிரித்துத் தாக்கு வார்கள். அவர்களால் சோழப் படையை முற்றிலும் அழிக்க இயலாது. ஆனால், கொடூர இழப்பை ஏற்படுத்த இயலும். அவர்களின் தாக்குதலால் ஒரு முறை சோழப் படை ஆத்திரமடைந்தாலும் அழி யப் போவது தாக்காளர்கள் மட்டுமல்ல ஒட்டு மொத்த சாதவாகன அரசும் தான். ஆதலால் தான் அச்சம் கொள்கிறேன் நான். என் கணிப்பின்படி இப்போதிருக் கும் நிலையில் சோழப் படையை யாரா லும் தடுத்து நிறுத்த முடியாது. சோழப் படைத் தலைவர்களின் செயல்கள் விசித்திரமாக இருக்கிறது. ஒருவன் கார ணமே இல்லாமல் அவந்தியில் நாடோடி யாக சுற்றிக்கொண்டு இருக்கிறான். மற் றொருவனைப் பற்றி எதுவுமே தெரிய வில்லை. எல்லாம் நல்லபடியாக நடக்க வேண்டும் என்று சண்டிகாலேசுவரை வணங்கிவிட்டுச் செல்வோம்" எனக்

கூறியவள் கார்த்திகாவை அழைத்துக் கொண்டு சண்டிகாலேசுவரரின் கோயிலுக்குள் நுழைந்தாள்.

https://telegram.me/aedahamlibra

https://telegram.me/aedahamlibra

# 13. தாக்காளர்களின் தாக்குதல்

காலை நேரம். பனி முழுவதும் விலகியிருக்கவில்லை. தன் குழந்தை திரையனுடன் கிருஷ்ணை நதிக்கரையின் வடகரையில் அமர்ந்திருந்த வானவல்லி பரிதியின் எழுச்சியைக் காட்டி சூரியகுல வழி வந்த சோழ மன்னர்களின் வீர தீர கதைகளைக் கூறத் துவங்கினாள். பிறகு குழந்தையின் கரத்தில் மரவாள் ஒன்றைக் கொடுத்து பயிற்சி அளித்துக்கொண்டிருந்தாள். அப்போது அங்கு வந்த படைத் தலைவன் வில்லவன் வானவல்லியின்

கையில் வைத்திருந்த மரவாளினை வாங்கி திரையனுக்கு பயிற்சி அளித்துக் கொண்டே "தேவி அழைத்தீர்களா?" என வினவினான்.

"ஆம் அண்ணா... நமது வீரர்கள் வெட்டிக் கொண்டிருக்கும் ஏரி மற்றும் குளங்களை நேரில் பார்வையிடலாம் என இருக்கிறேன். தாங்களும் வருகிறீர்களா?" என அழைத்தாள்.

"நிச்சயமாக தேவி. இதோ, இப்பொழுதே ஏற்பாடு செய்கிறேன்" எனக் கூறிய வில்லவன் அங்கிருந்து புறப்பட்டான். வானவல்லி தன்னையும் தயார் செய்து கொண்டு இளந்திரையனையும் தயார்படுத்திக்கொண்டாள்.

ஒரு ஓரைப் பொழுதிற்குப் பிறகு திரும்பி வந்த வில்லவனிடம் வானவல்லி, "நாங்கூர் வேளிர் செங்கோடர் எங்கே?" என வினவினாள்.

"அவர் படை வீரர்களுடன் இருப்பதாகக் கூறிவிட்டார் தேவி!"

https://telegram.me/aedahamlibra

“நல்லது அண்ணா... அவர் இங்கேயே இருக்கட்டும். வாருங்கள் நாம் புறப்படலாம்!” எனக் கூறிய வானவல்லி அவளது புரவியில் இளந்திரையனுடன் ஏறிக்கொண்டாள். வில்லவன் மற்றும் சில வீரர்கள் அவளுடன் புறப்பட்டார்கள். கிருஷ்ணை நதிக்கரையின் வட கரையிலேயே ஒரு ஓரைப் பொழுதிற்கு மேல் மேற்கு நோக்கி அவர்கள் சென்றுகொண்டிருந்தார்கள். சிறிது தொலைவு வந்ததுமே அடர்ந்த வனம் ஒன்று அவர்களை வரவேற்றது.

அடர்ந்த வனத்தைக் கண்ட வானவல்லி, “இவ்வனம் உங்களுக்கு நன்கு பரிட்சயம் ஆனது தானே?” என வினவினாள்.

“ஆம் தேவி! தினமும் நாங்கள் இங்குதான் வேட்டைக்கு வருகிறோம். சந்தேகப்படும்படி எதுவும் இல்லை!” என அவன் கூறிக்கொண்டிருந்த போதே கிருஷ்ணை நதியில் மூன்று மனிதர்கள்

https://telegram.me/aedahamlibrary

மிதந்து வந்துகொண்டிருந்ததைப் பார்த்துவிட்டாள் வானவல்லி.

உடனே துணையாக வந்த வீரர்களிடம் சுட்டிக்காட்ட அடுத்த கணம் அவர்கள் நதிக்குள் குதித்து நீந்திச் சென்று அவர்களைக் கரைக்குத் தூக்கி வந்தார்கள். மூவரில் ஒருவர் ஆண், இருவர் பெண். அவர்களின் உடலைச் சிறிது நேரம் பரிசோதித்தாள் வானவல்லி.

“அண்ணா, கழுத்தில் பதிந்திருக்கும் காயத்தின் ஆழத்தையும், உறைந்திருக்கும் குருதியையும் சோதித்ததில் இவர்கள் மூவரும் ஒரு நாழிகைப் பொழுதிற்கு முன்னர் தான் கொல்லப்பட்டிருக்க வேண்டும் எனக் கருதுகிறேன் நான்” எனக் கூறிக்கொண்டே இடையில் வாள் இருக்கிறதா என்பதை உறுதி செய்துகொண்ட வானவல்லி, “வாருங்கள் அண்ணா... நாம் ஐவர் இருக்கிறோம். நதிக்கரையில் சென்றால் அந்தக் கொலைகாரர்கள் யார் என்பதைக் கண்

டறிந்து விடலாம்! புறப்படுவோம்!" எனக் கூறியவள் தனது புரவியில் தாவி அமர்ந் தாள்.

"தேவி, அவசரம் வேண்டாம். நாம் ஐவர் மட்டுமே இருக்கிறோம். அங்கு எத் தனைப் பேர் இருக்கிறார்கள் என்ற விவ ரம் நமக்குத் தெரியாது. ஒரு வேளை நம் மைத் தாக்குவதற்காக நமது எதிரிகள் செய்திருக்கும் சூழ்ச்சியாகக் கூட இது இருக்கலாம். நமது பாசறையிலிருந்து நாம் வெகு தொலைவு வந்துவிட்டோம். அவசரத்தில் நமக்கு உதவி கூட கிடைக் காது" என அவன் கூறிக்கொண்டிருந்த போதே இடை மறித்த வானவல்லி, "அரு கில் நமது வீரர்கள் வெட்டிக்கொண்டி ருக்கும் ஏரி எங்கே இருக்கிறது?" என வினவினாள்.

"இங்கிருந்து இன்னும் ஒரு நாழி கைக்கும் சற்றே அதிக பயணத் தொலை வில்!"

https://telegram.me/aedahamlibra

“நல்லது...” எனக் கூறியவள் அவளுக்கு இடப்புறமாக நின்றுகொண்டிருந்த புரவி வீரனின் விழிகளை நோக்கினாள்.

அவளது கட்டளையைப் புரிந்து கொண்ட அவ்வீரன், “தங்களது உத்தரவு!” எனக் கூறித் தனது தலையைத் தாழ்த்திவிட்டு புரவியில் ஏறிப் புறப்பட்டவன் அடுத்தகணம் அவர்களின் பார்வையிலிருந்து மறைந்தான்.

“வாருங்கள் நாம் முன்னே செல்வோம்!” எனக் கூறிய வானவல்லி புரவியில் முன்னே சென்றாள். அவளைப் பின் தொடர்ந்து வில்லவன் மற்றும் இரண்டு காவல் வீரர்கள் சென்றுகொண்டிருந்தார்கள்.

சிறிது தொலைவு சென்றதும் ஆற்றில் மேலும் இரண்டு பிணங்கள் மிதந்து வருவதைக் கவனித்தான் வில்லவன். அதே நேரம் புரவி வீரன் தீப்பந்தத்திலிருந்து விழுந்த தணல் ஒன்று புகை விட்

டுக்கொண்டிருப்பதைப் பார்த்து வில்லவனிடம் சுட்டிக் காட்டினான்.

புரவியிலிருந்து குதித்த வில்லவன் அந்தத் தணலைச் சோதித்தான். பிறகு, "விடியற்காலையில் தீப்பந்தத்தின் உதவியுடன் பலர் இவ்வழியே சென்றிருக்கிறார்கள்!" என்று கூறியவன் அருகில் அமிழ்ந்து கிடந்த தீப்பந்தத் தணல்களைச் சுட்டிக் காட்டினான். சுட்டிக் காட்டியதோடு இல்லாமல் புகைந்து கொண்டிருந்த அந்தத் தணலை எடுத்து அருகில் காய்ந்த மட்டைகளைக் கொண்ட பனை மரத்தின் ஓலை மீது வைத்து மெல்ல ஊதி விட்டான். அடுத்தகணம் பனைமரம் தீப்பிடித்து புகை மேலெழும்ப ஆரம்பித்தது.

"நல்ல காரியத்தைத் செய்திருக்கிறீர்கள்... இக்கரும்புகை பாசறையில் இருக்கும் நமது வீரர்களை எச்சரிக்கையடையச் செய்துவிடும். அதே நேரம் நமக்கு உதவி தேவை என்பதையும்

அவர்களுக்குத் தெரிவித்துவிடும். சம யோசித சிந்தனை அண்ணா...” என அவள் பாராட்டிய வேளையில் குறுக் கிட்ட வில்லவன், “நமது வருகையை யும் இது அவர்களுக்கு தெரிவித்துவி டும்” என அவன் தெரிவித்த அதே நேரம் புரவியில் சென்ற வீரன் அருகில் ஏரியை வெட்டிக் கொண்டிருந்த வீரர் களை அழைத்து வந்திருந்தான்.

அவ்வீரர்களைக் கண்ட வான வல்லி, “மொத்தம் இரண்டாயிரம் வீரர் கள் இருப்பார்களா?” என வில்லவனிடம் வினவினாள்.

“இரண்டாயிரத்திற்கு நூறு வீரர்கள் குறைச்சல்!”

“வாருங்கள், அந்தக் கொலைகா ரர்களை ஒரு கை பார்த்துவிடுவோம்!” எனக் கூறிக்கொண்டு அவள் முன்னே செல்ல அவளுக்குப் பின்னால் வீரர்கள் சத்தமில்லாமல் பின்தொடரலானார்கள்.

மேலும் ஒரு நாழிகைப் பொழுது ஆற்றின் கரையோரமாகவே அவர்கள் பயணித்ததும் ஒரு கிராமத்தைக் கண் டார்கள் அவர்கள். அக்கிராமம் சற்று முன்னர் சூறையாடப்பட்டிருந்தது. குடில் கள் அனைத்தும் சிதைக்கப்பட்டிருந் தன. அக்கிராம வாசிகளின் பிணங்கள் ஆங்காங்கே சிதறிக் கிடந்தன. அவற் றைக் கண்டதுமே வானவல்லி, "நமது சோழப் படைப் பாசறையின் வெகு அரு கிலேயே இக்கொடிய காரியத்தைப் புரிந் திருக்கிறார்கள் என்றால் அவர்களுக்கு எவ்வளவு துணிச்சல் இருக்கும்?" என வெகுண்டெழுந்தாள்.

சற்றுத் தொலைவில் வானவல்லி இளந்திரையனுடன் நிற்க முன்னேறிய வில்லவன் கீழே பிணமாகக் கிடந்தவர்க ளின் உடல்களை நோக்கினான். சிவந்த மேனி முழுவதிலும் கருநீல நிறத்தில் போர் ஆயுதங்கள், விலங்குகள் மற்றும் பறவைகளின் உருவங்களைப் பச்சை குத்தியிருந்தார்கள். காதுகள் கிழித்துத்

தொங்கும் அளவிற்கு எடை மிகுந்த கற்களால் ஆன குண்டலத்தை அணிந்திருந்தார்கள். கழுத்தில் பெருத்த கருத்த மணியையும் அணிந்து முரட்டு உடலோடு அனைவரும் சொல்லி வைத்தாற் போன்று குப்புற விழுந்து கிடந்தார்கள். கீழே கிடந்தவர்களின் உடலைப் பார்த்த படியே சற்று தூரம் முன்னே சென்றிருந்தான் வில்லவன். அப்போது அவனுக்கு முன்பு இறந்து கிடந்த முரட்டு மனிதனின் தலையைத் தனது காலினால் உயர்த்தினான். விகாரமான முகம். முகத்திலும் பச்சைக் குத்தியிருந்தான். அவனது தலையைக் கீழே போட்டுவிட்டு அவனுக்கு அருகில் கிடந்த மற்றொருவனின் தலையையும் உயர்த்திப் பார்த்தான். அவன் சிறிதும் எதிர்பாராத சம்பவம் அப்போது அரங்கேறியது. வில்லவன் தனது காலினால் அவனது தலையைத் தூக்கியதும் திடீரென்று உயிர் பிழைத்து எழுந்தவன் மறைத்து வைத்திருந்த குறுவாளினால் வில்லவனைத் தாக்கினான்.

அவன் தாக்குவதைக் கண்டதும் சுதாரிப்படைந்த வில்லவன் அவனது குறுவாளினைத் தனது ஒரு கரத் தால் தடுத்தவன் அடுத்த கரத்தினால் இடையில் வைத்திருந்த குறுவாளினால் அவனது வயிற்றைக் கிழித்து மண் ணில் தள்ளினான். அடுத்தது அவன் எதிர் பார்த்ததைப் போன்றே காட்சி கள் அரங்கேறியது. சுற்றிலும் கீழே கிடந் தவர்கள் அனைவரும் உயிர் பெற்று வில்லவனைச் சுற்றி வளைத்தார்கள். அவர்கள் அனைவருமே கையில் குறு கிய கட்டாரியைத் தாங்கியிருந்தார்கள். அவர்களைக் கண்ட வில்லவன் சிறிதும் அஞ்சாமல் கண நேரத்தில் கையிலி ருந்த இரண்டு குறுவாட்களை அவனுக் குப் பின்புறமாகத் தாக்க வந்தவர்களை நோக்கி அதிவேகமாக எறிந்தான். அவன் அந்த இரண்டு குறுவாட்களையும் எறிந்து அடுத்த குறுவாளினை எடுப்பதற்குள் இருவர் உயிரை மீண்டும் இழந்து மண் ணில் சரிந்தார்கள்.

https://telegram.me/aedahamlibra

கையை உயர்த்தினான் வில்லவன். வீரர்கள் கூட்டத்திலிருந்து ஈட்டி ஒன்று அவனை நோக்கிப் பாய்ந்து வந்தது. அதைப் பிடித்துக்கொண்ட வில்லவன் இடையிலிருந்த மற்றொரு ஈட்டி முனையை அந்த ஈட்டியில் பொருத்தி அதிவேகமாகச் சுழற்றினான். அவனது சுழன்ற ஈட்டியைக் கடந்து அவனைத் தாக்கியவர்கள் மற்றும் அவர்களின் குறுவாட்கள், அவர்கள் எறிந்த கட்டாரிகள் என எதுவும் அவனை நெருங்க இயலவில்லை. அவனை நெருங்க முயன்றவர்கள் அனைவரையும் கொன்று வீழ்த்தினான் வில்லவன்.

கீழே கிடந்த கிராமத்தவர்கள் உயிர் பெற்று வில்லவனை நெருங்கிக் கொண்டிருந்த அதே நேரத்தில் வானவல்லி சோழ வீரர்களிடம், “எதிரிகள் விரித்த வலையில் சிக்கிக் கொண்டோம் நாம். அவர்கள் நம்மைத் தாக்குவதற்குள் சக்கர வியூகத்தில் அனைவரும் அணிவ

குத்து நில்லுங்கள்” எனக் கட்டளையிட்டாள்.

அவளது கட்டளை எழுந்த அடுத்த கணம் வீரர்கள் அனைவரும் சக்கர வியூகத்தில் அணிவகுக்கலானார்கள். வில்லவன் தன்னை எதிர்த்த அனைவரையும் நரகத்திற்கு அனுப்பிவிட்டுத் திரும்பி வந்தபோது வீரர்கள் அணிவகுத்திருந்த சக்கர வியூகம் முழுமை பெற்றிருந்தது. சக்கர வியூகத்தின் திறப்பில் வில்லவன் ஈட்டியைக் கையில் தாங்கிக்கொண்டு தயாராக நின்றான். வானவல்லி தோளில் போட்டிருந்த இளந்திரையனை வீரர்கள் இருவரிடம் கொடுத்துவிட்டு, “வியூகத்தின் மையத்திற்கு இளவலைத் தூக்கிச் செல்லுங்கள்!” எனக் கட்டளையிட்டுவிட்டு இடையிலிருந்த வாளினை உருவிக்கொண்டு வில்லவனுக்கு வலப்புறமாக நிற்கலானாள். இருவருக்கும் துணையாக நான்கு உபதலைவர்கள் தங்களது வீர வாளுடன் அணிவகுத்து நின்றார்கள்.

https://telegram.me/aedahamlibra

சிதைக்கப்பட்டிருந்த கிராமத்தின் உட்புறப் பகுதிகளிலிருந்து உடலெங்கும் பச்சைக் குத்திய முரடர்கள் பலர் புற்றீசலைப் போன்று வெளிப்பட்டு சக்கர வியூகத்தில் நின்ற சோழ வீரர்களைச் சுற்றி வளைத்தார்கள். சோழ வீரர்களை விடவும் இரண்டு மடங்கு எண்ணிக்கையில் அதிகமுள்ள முரடர்கள் அவர்களைச் சுற்றி வளைப்பதைக் கண்ட வானவல்லி, "யார் அண்ணா இவர்கள்?" என வினவினாள்.

"தாக்காளர்கள்!"

"அந்த முரடர்கள் இவர்கள் தானா?" என வில்லவனிடம் வினவியவள் "எக்காரணத்தைக் கொண்டும் வியூகத்தின் வெளிப்புற மதில் பிளவுபடக் கூடாது. வியூகத்தின் வாசலைத் தவிர வேறு எப்பாதை வழியாகவும் அவர்கள் ஊடுருவக் கூடாது!" எனச் சத்தமாகத் தனது வீரர்களிடம் கட்டளையிட்ட அடுத்த கணம் வீரர்கள் தூக்கிச்

https://telegram.me/aedahamlibra

சென்ற இளந்திரையன் அவளது குரலைக் கேட்டு வீரிட்டு அழத் துவங்கினான்.

தனது வாளினை இடையுறையில் செலுத்திய வானவல்லி, "அண்ணா, குழந்தையை உறங்க வைக்கப் போகிறேன். சத்தம் இல்லாமல் அவர்களை அனுப்பி வையுங்கள்! விரைவில் வந்துவிடுகிறேன்" எனக் கூறிக்கொண்டு வியூகத்தின் மையத்திற்குள் சென்றவள் திரையனை வாரித் தோளில் போட்டு அணைத்துக்கொண்டு அவனது முதுகில் தட்டிவிட்டபடியே தாலாட்டுப் பாடலைப் பாடத் துவங்கினாள்.

ஆராரோ ஆரிரரோ

ஆராரோ ஆரிரரோ

ஆராரோ ஆரிரரோ

ஆராரோ ஆரிரரோ

அவள் குழந்தையை வாங்கித் தோளில் போட்டு தாலாட்டுப் பாடத் துவங்கிய அதே வேளையில் சோழப் படையைச் சுற்றி வளைத்த தாக்காளர் களின் தலைவன், “அறிட்டி புரடானா மசக்க லாகியோ தூவரா நிரடூனா... மலமா கலராகி தக்டுஅ பகபேட தாரகி டுர் ரானா மகாலகடா...” எனக் கட்டளை யிட்டவன் தூக்க இயலாத பெருத்த கதை ஒன்றை அனாவசியமாகத் தூக்கிக் கொண்டு வில்லவனை நோக்கி ஓடி வந் தான். அவனைப் பின்தொடர்ந்த தாக்கா ளர்கள் அனைவரும் இவர்களைத் தாக் குவதற்காக ஓடி வந்தார்கள்.

வானவல்லி குழந்தையைத் தோளில் போட்டு தட்டிவிட்டுக் கொண்டே பாடிக்கொண்டிருந்தாள்.

அன்னக்கிளி பெற்றவனே

அம்புலியைக் கண்டிடடா!

அதை நீ பிடித்துவந்து

https://telegram.me/aedahamlibra

அரியணை அமைத்திடடா!
(ஆராரோ ஆரிரரோ)

வீரமகன் பெற்றவனே
வீரிட்டு அழுவதேனோ!
வீழ்ந்திடும் குருதி கொண்டு
வீரக்கோட்டை அமைத்திடுவோம்!
(ஆராரோ ஆரிரரோ)

அந்தப் புரமுமில்லை இது
அரசாங்கத் தொட்டிலுமில்லை!
அன்னையிவள் தோள்மீது
கண்ணயர்ந்து உறங்கிடடா!
(ஆராரோ ஆரிரரோ)

உலகாளப் பிறந்தவனே
உடனே விழித்திடடா - நீ

விழி மலர்ந்து பார்க்கையிலே

உச்சியில் சோழர் கோடி பறக்கு மடா! (ஆராரோ ஆரிரரோ)

இகழ்ந்த எதிரியரை

இச்சகத்தில் மாய்த்திடவே

இக்கணம் கண்ணயர்ந்து

அடுத்தகணம் விழித்திடடா! (ஆராரோ ஆரிரரோ)

வானவல்லி பாடிய தாலாட்டினைக் கேட்டுக்கொண்டே தன்னை நோக்கி ஓடிவந்த தலைவனையும், அவனுக்கு இரண்டு புறத்திலும் ஓடிவந்தவர்களை யும் அமைதியாக நின்றபடியே கவனித் தான் வில்லவன். அவர்கள் வேகமாக ஓடி வந்தார்கள். கையிலிருந்த நீண்ட ஈட்டி யைத் தன்னை நோக்கி வந்த தாக்காளர் களின் தலைவனை நோக்கி எறிந்தான்.

https://telegram.me/aedahamlibra

எதிர்பாராத நேரத்தில் தன்னை நோக்கிப் பாய்ந்து வரும் ஈட்டியைத் தடுக்க கதையை நீட்டினான். ஆனால், எடை மிகுந்த அவனது கதையை அவன் நகர்த்துவதற்குள் வில்லவன் எறிந்த ஈட்டி அவனது மார்பில் பாய்ந்து மறுபுறமாக வந்திருந்தது. மார்பில் பாய்ந்த ஈட்டியுடன் வானைப் பார்த்தபடி விழுந்தான் தாக்காளர்களின் தலைவன். அவனது உடலில் குத்திட்டு நின்றது அவனது நீண்ட ஈட்டி. இடையிலிருந்த குறுவாளினை எறிந்து மேலும் இருவரைக் கொன்ற வில்லவன் இடையிலிருந்த வாளினை உருவிச் சுழற்றியபடித் தாக்காளர்களின் கூட்டத்திற்குள் ஊடுருவினான். வில்லவனைத் தொடர்ந்து வாட்போரில் சிறந்த அவனது உபதளபதிகள் நால்வர் அவனுக்குத் துணையாக தாக்காளர்களின் கூட்டத்திற்குள் ஊடுருவினார்கள். அவர்களை எதிர்கொண்ட தாக்காளர்கள் அனைவரையும் கொன்று வீழ்த்தினார்கள் ஐவரும்.

ஐவரையும் தாக்காளர்கள் தாக்கியதோடு மட்டுமல்லாமல் சக்கர வியூகத்தில் நின்றுகொண்டிருந்த சோழப் படையையும் தாக்கினார்கள். சக்கர வியூகத்தின் வெளிப்புறத்தில் நின்றுகொண்டிருந்த வீரர்களின் நீண்ட ஈட்டிக்கும், வேலுக்கும் பலியாகி தாக்காளர்கள் விழுந்துகொண்டிருந்தார்கள். தாக்காளர்கள் வேகமாகவும், ஒட்டுமொத்தமாகவும் ஓடி வந்து தாக்கியும் சக்கர வியூகத்தின் வெளிப்புற மதிலைத் தகர்த்து ஊடுருவ இயலாமல் அதைத் தகர்க்கும் முயற்சியிலேயே மடிந்துகொண்டிருந்தார்கள்.

வில்லவன் மற்றும் நான்கு உப தளபதிகள் வியூகத்தின் வாயிலை விட்டு ஊடுருவிச் சென்றுவிட காவலில்லாத வியூகத்தின் வாயிலில் தாக்காளர்கள் உட்புகத் துவங்கினார்கள். திறப்பின் வழியே அனைவரும் நெருக்கிக்கொண்டு நுழைந்த பிறகுதான் அது பொறி என்பதை உணர்ந்த தாக்காளர்

https://telegram.me/aedahamlibra

கள் பின் திரும்ப இயலாமல் தடு மாற சோழ வீரர்களின் தாக்குதலால் திறப்பின் வழியாக உள் நுழைந்த வர்கள் ஒவ்வொருவராகக் கொல்லப் பட்டார்கள். தொடர்ந்து வியூகத்தைத் தகர்க்க முயன்று நெருங்கியவர்களும், திறப்பின் வழியே உள்நுழைந்தவர்களும் என அனைவரும் தொடர்ந்து கொல்லப் பட்டுக் கொண்டிருந்தார்கள். தாக்காளர் களால் தாக்கப்பட்டு சோழ வீரர்கள் சரிந் தாலும் அருகில் இருக்கும் மற்ற வீரர்கள் நகர்ந்து வியூகம் சிதைவடையாமல் பாது காத்துக் கொண்டிருந்தார்கள்.

யுத்தம் கொடூரமாக ஒரு நாழி கைப் பொழுதிற்கு மேலும் தொடர்ந்து நடந்துகொண்டுதான் இருந்தது. தாக் காளர்கள் புற்றீசலைப் போன்று எங்கி ருந்தோ தோன்றி தொடர்ந்து வந்து தாக் கிக் கொண்டே இருந்தார்கள். குழந்தை யும் வானவல்லியின் தாலாட்டுப் பாடலில் உறங்கியிருந்தது. சக்கர வியூகத்தின் மையத்தில் நின்றுகொண்டிருந்த வீரன்

ஒருவனிடம் இருந்த அம்பறாத்தூணி நிறைய அம்புகளைப் பெற்றுக்கொண்ட வானவல்லி அதை முதுகில் கட்டிக் கொண்டு கையில் வில்லுடன் வில்லவன் மற்றும் உபதலைவர்கள் வியூகத்திற்கு வெளியே சண்டையிட்டுக் கொண்டி ருந்த பகுதியை நோக்கி நடந்தாள். வான வல்லிக்கு வீரர்கள் திறப்பினைத் திறந்து வழி விட்டார்கள். வியூகத்திற்கு வெளியே வந்த வானவல்லி வில்லவன் மற்றும் உபதலைவர்களைத் தாக்க வந்த தாக் காளர்களை நோக்கி அம்புகளைச் சர மாரியாக தொடுத்துக்கொண்டிருந்தாள். குறி தவறாத அவளது அம்புகள் ஐவ ருக்கும் பாதுகாப்பாகப் பாய்ந்துகொண்டி ருக்க ஐவரின் தாக்குதல் வேகமும் அதி கமாகியது. யுத்தம் சிறிது நேரம் நீடித் துக் கொண்டே இருந்தது. வானவல்லி தன்னிடமிருந்த அம்புகள் அனைத்தை யும் இழந்து வாளினைச் சுழற்றிக்கொண் டிருந்தாள். சோழ வீரர்களின் தாக்குத லினால் அப்பகுதி முழுவதுமே குருதி

யினால் நிரம்பியிருந்தது. பாய்ந்து ஓடிய தாக்காளர்களின் குருதி கிருஷ்ணை நதியை சிவப்பாக்கியிருந்தது.

ஒருகணம் பார்வையைச் சுற்றிலும் ஓட விட்டாள் வானவல்லி. தாக்காளர் கள் யாரும் புதிதாக தோன்றி அவர்களை நெருங்கவில்லை. சில நூற்றுக்கணக்கா னவர்கள் மட்டுமே வியூகத்தைத் தகர்க்க முயற்சித்துக் கொண்டிருந்தார்கள். சிலர் புறமுதுகிட்டு தப்பி ஓட முயற்சித்துக் கொண்டிருந்தார்கள்.

எங்கும் தாக்காளர்களின் பிணங் கள் இறைந்து கிடந்தன.

“வியூகம் அமைத்துப் பொறுமை காத்தது போதும்! ஒருவரைக் கூட இங்கி ருந்து தப்ப விடாதீர்கள்!” கட்டளையிட் டாள் வானவல்லி.

அவளது கட்டளை எழுந்தது தான் தாமதம். அவளது கட்டளைக்கா கவே வீரர்கள் காத்துக் கொண்டிருந்த

https://telegram.me/aedahamlibra

தைப் போன்று வியூகத்திலிருந்து விடுபட்ட சோழ வீரர்கள் அனைவரும் சுற்றி நின்ற தாக்காளர்களைக் கண நேரத்திற்குள் கொன்று குவித்து அப்போரினை முடிவுக்குக் கொண்டு வந்தார்கள்.

https://telegram.me/aedahamlibra

# 14. செண்டாயுத அணிவகுப்பு

சோழப் படைத் தலைவன் வில்லவன் ஊதிப் பற்ற வைத்த பனைமரம் கிடுகிடுவென எரியத் துவங்கியது. பனை மரத்தின் அடியில் இருந்த காய்ந்த மட்டைகள் எரிந்து வெள்ளைப் புகை முதலில் மேலெழும்பியது. மரத்தின் உச்சியில் இருந்த பச்சை மட்டைகள் எரிய எரிய கரும்புகை மேலெழுந்து அந்த இடத்தையே ஆக்கிரமிக்கத் துவங்கியது. கரும்புகை எழுந்ததைப் பார்த்ததும் தாக்

காளர்கள் சோழ வீரர்களின் வருகை யைத் தெரிந்துகொண்டு அவர்களைத் தாக்க ஆயத்தமானார்கள்.

பனை மரத்தின் புகை மேலெழும் பிக் கொண்டிருந்த அதே வேளையில் சோழ வீரர்கள் அனைவரும் பாசறையில் போர் ஒத்திகையில் ஈடுபட்டுக் கொண் டிருந்தார்கள். சோழப் பாசறையில் பல வீரர்கள் அருகில் இருக்கும் கோயில் மற்றும் ஏரிகளைப் புனரமைக்க சென்று விட்டதால் பாசறையில் வீரர்களின் எண் ணிக்கைக் குறைவாகவே காணப்பட்டது. பாசறையிலேயே தங்கியிருந்த வீரர்கள் அனைவரையும் காலையிலேயே அணி வகுக்கச் செய்து அனைவருக்கும் போர் வியூகங்கள், தாக்குதல் முறை, தற்காத் துக் கொள்ளும் முறை ஆகியவற்றைப் பற்றி நாங்கூர் வேளிரான செங்கோடர் பயிற்சி அளித்துக்கொண்டிருந்தார்.

வீரர்கள் அனைவரும் காலைப் பொழுதிலேயே தீவிரப் பயிற்சியில் ஈடு பட்டுக் கொண்டிருக்கும் போது பனை

மரத்தின் கரும்புகையை தொடக்கத் தில் யாரும் கவனித்திருக்கவில்லை. ஆனால், ஒரு நாழிகைப் பொழுது கழிந் தவுடன் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டி ருந்த வில் வீரன் ஒருவன் பனை மரத்தின் கரும்புகையை நாங்கூர் வேளிர் செங் கோடருக்குச் சுட்டிக் காட்டினான்.

அதைப் பார்த்த செங்கோடர் அடுத்த கணம், “நம் வீரர்களைப் பார்க் கச் சென்ற வானவல்லி மற்றும் வில்லவ னுக்கு ஆபத்து. உடனே ஆயிரம் புரவி கள் தயாராகட்டும்” எனக் கூறியவர் தனது வாளினை உருவிக்கொண்டு தனது புர வியில் ஏறி கரும்புகை எழுந்த திசையை நோக்கிப் பாய்ந்தார். அவரது கட்டளைப் படி ஆயிரம் தேர்ந்த புரவி வீரர்கள் அவ ருக்குப் பின்னால் அதிவேகத்தில் செல் லலானார்கள்.

செங்கோடர் புறப்பட்டதும் பாசறை வீரர்கள் எச்சரிக்கையடைந்து தற்காப் புப் பணியில் ஈடுபடலானார்கள். தாக்

https://telegram.me/aedahamlibrary

காளர்களுடனான போரை வெற்றிகரமாக முடித்துவிட்டு அதே நேரம் இழப்பின்றி திரும்பி வந்துகொண்டிருந்த வானவல்லி மற்றும் வில்லவனை வழியில் எதிர்கொண்டார் செங்கோடர். அப்போது செந்நிறமாகப் பாய்ந்துகொண்டிருந்த கிருஷ்ணை நதியையும், குருதிக் கறையுடன் வந்துகொண்டிருந்த சோழ வீரர்களையும் பார்த்த செங்கோடர், “யார் அவர்கள்?” என வினவினார்.

“தாக்காளர்கள்!” என வில்லவன் பதிலளிக்க புரவியிலிருந்து குதித்த செங்கோடர் வானவல்லியிடம் சென்று, “என் பேரனுக்கு எந்த ஆபத்தும் இல்லையே?” எனக் கேட்டபடியே வானவல்லியின் தோளில் கிடந்த குழந்தையை வாங்கித் தன் தோளில் போட்டுக்கொண்டார்.

“இல்லை தந்தையே, திரையனுக்கு எந்த ஆபத்தும் இல்லை. அருகில் ஏரியை வெட்டிக்கொண்டிருந்த நமது வீரர்கள் உடனடியாக உதவிக்கு வந்து

விட்டதால் பெரும் அசம்பாவிதம் தடுக்கப்பட்டு விட்டது.”

“வாருங்கள் அனைவரும் நமது பாசறைக்குக் கிளம்புவோம்!” எனக் கூறியவர் புரவியைத் திருப்பிக்கொண்டு முன்னே செல்லலானார்.

அனைவரும் திரும்பி வந்துகொண்டிருந்தார்கள்.

அப்போது அவர்களை நோக்கி வேகமாகப் புரவியில் வந்த சோழ வீரன் ஒருவன் பணிந்து, “நூற்றுவர் கன்னரின் எல்லைப்புறப் படையினர் அறைகூவல் விடுத்திருக்கிறார்கள்” எனத் தெரிவித்தான்.

வானவல்லி, வில்லவன், செங்கோடர் மற்றும் உபதலைவர்கள் அனைவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள். அப்போது வானவல்லி, “இதை எதிர்பார்த்தேன் தந்தையே. ஆனால், இவ்வளவு விரைவாக இந்தப் போரை

எதிர்பார்த்திருக்கவில்லை!" எனத் தெரிவித்தாள்.

"என்ன தாயே, கூறுகிறாய்?"

"ஆமாம்... தாக்காளர்கள் இன்று நம்மைத் தாக்கியதிலிருந்தே வடுகர்கள் அல்லது நூற்றுவர் கன்னர் நம்மைத் தாக்கலாம் என்று எதிர்பார்த்தேன். நூற்றுவர் கன்னரின் கட்டளையின் பேரிலேயே முரடர்களான தாக்காளர்கள் இன்று நம்மைத் தாக்கியிருக்கிறார்கள்" என வானவல்லி கூறிக்கொண்டிருந்தபோதே இடைமறித்த வில்லவன், "போர் முறையைச் சிறிதும் கடைபிடிக்காத தாக்காளர்களை இன்று நாம் முற்றாக அழித்திருக்காவிட்டால் அவர்கள் நிச்சயம் முன்னறிவிப்பின்றி நமது பாசறையையும் சூறையாடியிருப்பார்கள். தாக்காளர்களைக் கொண்டு தாக்குதல் தொடுக்கும் அளவிற்கா நூற்றுவர் கன்னர்களின் வீரம் மட்டமாகிவிட்டது?" என ஏளனத்துடன் வினவினான்.

“இல்லை அண்ணா... இந்தத் தாக்குதல் நூற்றுவர் கன்னர்களின் அரசர் சதகர்ணியின் கட்டளையின் பேரில் நடந்திருக்க வாய்ப்பில்லை. யாரோ சோழ மற்றும் நூற்றுவர் கன்னர் நாடுகளின் ஒற்றுமையைப் பிடிக்காத கீழ் மட்டத் தலைவர்களின் கட்டளையாகத்தான் இது இருக்கும்!”

“இந்தப் போரை இப்போது நான் எதிர்பார்த்திருக்கவில்லை!” எனத் தெரிவித்தார் செங்கோடர்.

“நமது விருப்பத்துடனா போர் நடைபெறுகிறது?” எனச் சிரித்தபடியே தெரிவித்த வானவல்லி, “அண்ணா... நமது படை வீரர்கள் அனைவரும் போருக்குத் தயார் தானே?” என வினவினாள் வில்லவனிடம்.

“அனைவரும்....” எனக் கூறிய வில்லவன் வாக்கியத்தை முடிக்காமல் தயங்கினான்.

“ஏன் அண்ணா, தயங்குகிறீர்கள்?” என வினவினாள் வானவல்லி.

“தாயே, வடுகர் நாட்டில் இறங்கி நிலை கொண்டிருக்கும் நம் வீரர்களில் பாதிக்கு மேற்பட்டோர் அருகில் இருக்கும் குளங்களையும், ஏரிகளையும் வெட்டுவதற்கு தொலை தூரங்களுக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டார்கள். ஒரு பகுதியினர் செங்குவீரரின் கட்டளைப்படி அவந்திக்கும், மறு பகுதியினர் சிங்கபுரிக்கும் சென்றுவிட்டார்கள். மீதிப்படை சோழ நாட்டிலிருந்து இன்னும் புறப்படவில்லை. வடுகர் நாட்டில் செங்குவீரர் உட்பட யாருமே போரினை எதிர்பார்க்கவில்லை!”

“அருகில் ஏரி மற்றும் குளங்களை வெட்டிக்கொண்டிருக்கும் நமது வீரர்களுக்குத் தகவலை அனுப்புங்கள். அனைவரும் உடனே பாசறைக்குத் திரும்ப வேண்டும் என்று” என அவள் கூறிக்கொண்டிருந்த போதே தகவலைக்

கொண்டு வந்த சோழ வீரன், "தேவி, அதற்கெல்லாம் நமக்கு நேரம் இல்லை. இன்று பொழுது உச்சிக்கு வரும்போது சோழர் பாசறை தாக்கப்படும் என்று செய்தி வந்திருக்கிறது!" எனத் தயக்கத் துடன் தெரிவித்தான்.

"இன்றைய உச்சிப் பொழுதிலா?"

"ஆம்!"

கிழக்கு வானை நோக்கிய வான வல்லி, "இன்னும் ஒரு சாமப் பொழுது தானே இருக்கிறது? வாருங்கள் அனை வரும் பாசறைக்குச் செல்வோம்!" எனக் கூறியவள் புரவியைத் தட்டிவிட்டாள்.

அனைவரும் பாசறையை அடைந் தபோது "சாதவாகனர்களின் எல்லைப் புறப் படை சற்றுத் தொலைவில் இருக் கும் சமர்க் களத்தில் அணிவகுத்து நிற்கி றது" என்ற செய்தி அவர்களை எட்டியது.

"அவர்களால் எப்படி இவ்வளவு குறுகிய காலத்தில் பெரும்படையை

நகர்த்தி அணிவகுக்க முடிகிறது?” என வினவினான் வில்லவன்.

“இது திடீர் தாக்குதல் அல்ல அண்ணா... அவர்கள் திட்டமிட்டே தாக்குதல் தொடுக்க முனைந்திருக்கிறார்கள்” எனத் தெரிவித்தவள், “ஒற்றர் தலைவர் எங்கே?” எனக் கோபத்துடன் வினவினாள்.

“செங்குவீரர் சிங்கபுரிக்கு அல்லவா சென்றிருக்கிறார்?”

“நான் அவரைக் கேட்கவில்லை. இங்கிருக்கும் ஒற்றர் உபதலைவன் எங்கே என்று வினவினேன்!”

வில்லவன் அவளுக்கு முன் வந்து தலையைத் தொங்கபோட்டுக்கொண்டு நின்றான்.

“இவர்களின் தாக்குதலை எப்படி நீங்கள் முன்னரே அனுமானிக்க மறந்தீர்கள்?”

https://telegram.me/aedahamlibra

எந்தப் பதிலையும் அளிக்க முடியாமல் வில்லவன் நின்றுகொண்டிருந்தான்.

“நூற்றுவர் கன்னரின் படையை இன்று பொழுது உச்சியை அடையும் போது சோழப் படை எதிர்கொள்ளும் என்று தெரிவியுங்கள்!” எனத் தெரிவித்தாள் வானவல்லி.

உடனே சோழப் புரவி வீரன் ஒருவன் புறப்பட அவனைத் தடுத்த செங்கோடர், “தாயே, அவந்தியில்தான் இப்போது நமது பேரரசர் கரிகாலரும், வேளக்காரப் படைத் தலைவர் திவ்யனும் இருக்கிறார்கள். இந்த நிலையில் நாம் நூற்றுவர் கன்னரை எதிர்த்துத் தாக்குவது நன்மை பயக்குமா?” என வினவினார்.

“என் தம்பி கரிகாலனைக் காக்க யாரும் தேவையில்லை. அவன் தன்னைத் தானே காத்துக்கொள்வான். அதே நேரம் வேளக்காரப் படைத் தலைவரும் அங்குதான் இருக்கிறார். வேளக்

https://telegram.me/aedahamlibrary

காரப் படைத் தலைவரைக் கடந்து ஒரு ஆபத்தும் கரிகாலனை நெருங்க இய லாது. ஆதலால் தாங்கள் எந்தக் கவலை யும் அடையத் தேவையில்லை.”

“இருந்தாலும்...” எனத் தயங்கினார் செங்கோடர்.

“தந்தையே... சோழப் படைத் தலை வராக ஒரு முடிவினை எடுங்கள். மரகத வல்லியின் தந்தையாக எந்த முடிவையும் எடுக்க வேண்டாம்!”

செங்கோடர் பதிலுக்கு எந்தப் பதி லையும் கூறாமல் அமைதியாக நின்று கொண்டிருந்தார். பிறகு, “எதற்கும் ஒரு முறை அவர்களிடம் பேசிப் பார்க்க லாமே?” எனத் தெரிவித்தார்.

“யாரிடம்?”

“நூற்றுவர் கன்ன எல்லைப்புறப் படையிடம் தான்!”

"பேச்சு வார்த்தையில் பயன் இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை தந்தையே. இன்று தாக்காளர்களைக் கொண்டு நம்மைத் தாக்கியிருக்கிறார்கள். முன்னறிவிப்பின்றி படையைத் திரட்டிக்கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த நிலையில் நம்மை அவர்களுடன் சமாதானம் பேச வேண்டும் என்கிறீர்கள்?"

".........."

"எனக்கு நம் வீரர்கள் மீது நம்பிக்கை இருக்கிறது. நமது வீரர்களின் வீரத்தினை நான் நூற்றுவர் கன்னரின் காலடியில் போட்டு உதாசீனப்படுத்தும் எண்ணம் எனக்கு இல்லை!" என அவருக்குப் பதிலளித்த வானவல்லி, "வில்லவரே..." என அழைத்தாள்.

"கட்டளையிடுங்கள்!" என அவனுக்கு முன் வந்த வில்லவன் தனது வாளினைத் தரையில் ஊன்றிப் பணிந்தான்.

https://telegram.me/aedahamlibra

“நீங்களே சென்று நமது படை இன்று உச்சிப் பொழுதில் நூற்றுவர் கன்னரின் படையை எதிர்கொள்ளும் எனத் தெரிவித்துவிட்டு வாருங்கள்!” என அவனது விழிகளில் தனது பார்வையை நிலைக்க வைத்துவிட்டு அதிகாரத்துடன் கட்டளையிட்டாள்.

“தங்களது உத்தரவு!” எனத் தெரி வித்த வில்லவன் தனியொருவனாகப் புர வியில் ஏறி அணிவகுத்து நின்ற சாதவா கனர்களின் எல்லைப் படையை நோக் கிப் புறப்பட்டவன் ஒரு ஓரைப் பொழுது கடந்த பிறகு திரும்பி வந்தான்.

நூற்றுவர் கன்னரை எதிர்க்க சோழப்படை தயாராக நின்றிருந்தது. திரும்பி வந்தவனிடம் வானவல்லி, “அண்ணா, நூற்றுவர் கன்னர்களின் நிலை என்ன?” என வினவினாள்.

“அவர்கள் போருக்கு ஆயத்தமா கிவிட்டார்கள்” என வானவல்லியிடம் தெரிவித்தவன் ஆரவாரத்துடன் போருக்

குத் தயாராக நின்ற படையினரைப் பார்த் தபடியே, “நமது படையும் தயார் நிலை யில் தானே இருக்கிறது?” என வினவி னான்.

“தாங்கள் புறப்பட்டபோதே நமது படை தயாராகிவிட்டது. புறப்பட வேண்டி யதுதான்!”

“........”

“நூற்றுவர் கன்னரின் படை பலம் எவ்வளவு?”

“நமது படை பலத்திற்கு நிகராகத் தான் அவர்கள் இருக்கிறார்கள். சற்றே அதிகமாக இருக்கவும் வாய்ப்பிருக்கிறது. ஆனால்...”

“என்ன ஆனால்?”

“அவர்களுடன் தாக்காளர்களும் இருக்கிறார்கள்! வழக்கம் போல படையை நிறுத்தி வைக்காமல் ஏதோ

https://telegram.me/aedahamlibra

வியூகத்தின் அடிப்படையில் படையைப் பிரித்து நிறுத்தியிருக்கிறார்கள் தேவி!"

"வியூகமா?"

"ஆம்!" எனத் தெரிவித்த வில்லவன் இடையிலிருந்து தனது வாளினை உருவி சாதவாகனர்களின் படை நிறுத்தப்பட்டிருந்த நிலையைத் தரையில் வரைந்து காட்டினான்.

அதைப் பார்த்த வானவல்லி, "நமது படை கண நேரமும் தாமதிக்காமல் சமர்க்களத்தை நோக்கிப் புறப்படட்டும்!" எனக் கூறியவள் தனது புரவியில் தாவி அமர்ந்தாள்.

அதைக் கண்ட வில்லவன், "தேவி..." என அழைத்து "எங்கே" என்ற வினா தொடுக்கும்படி அவளை நோக்கினான்.

"நான் வழியில் உங்களுடன் கலந்து கொள்கிறேன். குழந்தையை பத்திரமாகப் பார்த்துக்கொள்ளுங்கள்!" எனக்

https://telegram.me/aedahamlibra

கூறிய வானவல்லி புரவியைத் தட்டிவிட்டாள். அடுத்த சில கண நேரத்திற்குள் வானவல்லி அவனது பார்வையிலிருந்து மறைந்தாள்.

சோழர்களின் பிரசித்தி பெற்ற தேர்ப் படையைத் தவிர காலாட்படை, புரவிப்படை, யானைப்படை மற்றும் விற்படை வீரர்கள் அனைவரும் ஆயத்தமாகிப் படைக் களத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். சாதவாகன எல்லைப் படையின் அறைகூவல் சோழப் படையின் பலத்தினை பரிசோதனை செய்து பார்க்க நல்லதொரு சந்தர்ப்பமாக அமைந்திருந்தது. புரவி வீரர்கள் முன்னால் செல்ல அதைப் பின்தொடர்ந்து யானைப் படையும் அதற்குப் பிறகு காலாட்படை வீரர்களும் அணிவகுத்துச் செல்லலானார்கள். புறப்பட்டுச் சென்ற படை நெருக்கமாக அல்லாமல் சிறிது இடைவெளிவிட்டே பரந்து விரிந்து சென்றுகொண்டிருந்தார்கள். அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. படை நெருங்கிச் செல்

https://telegram.me/aedahamlibra

வதை விடவும் பரந்து சென்றால் படை யின் பலத்தை விடவும் எதிரிகள் அதி கமாக மதிப்பிடுவார்கள். உலவியில் ரீதி யில் இது வெற்றியைத் தேடித் தரும். அதே வேளையில் வேண்டிய போது படைகள் பிரிந்து அணிவகுப்பினை மாற் றிக்கொள்ளவும் இயலும். ஆனால், படை யானது நெருங்கிச் சென்றால் இரண்டிற் குமே சாத்தியம் இல்லாமல் போய்விடும்.

சோழப் படை புழுதி பறக்க சாத வாகனப் படையை நோக்கிச் சென் றுகொண்டிருந்த போது வானவல்லியும் படைகளை வழிநடத்திச் சென்ற வில் லவன் மற்றும் செங்கோடருடன் சேர்ந்து கொண்டாள்.

அவளிடம் வில்லவன், "தேவி, சென்ற காரியம்...?" என வினவினான்.

"அண்ணா, அவர்கள் ஊர்மி வியூ கம் அமைத்து தாக்குதல் நடத்தப் போகி றார்கள்!"

https://telegram.me/aedahamlibra

"ஊர்மி வியூகமா?"

"ஆம்! பெருங்கடல் வியூகம்."

"இதைப் பற்றி ஏடுகளில் அல்லவா நான் படித்திருக்கிறேன்" எனக் குறுக்கிட்டார் செங்கோடர்.

"ஆம் தந்தையே. நானும் இதைப் பற்றி படித்திருக்கிறேன். பெரும்படையை எதிர்கொள்ளும் வேளையில் பெருங்கடல் வியூகத்தைத் தான் அமைப்பார்கள்!" என வானவல்லி தெரிவிக்க வில்லவன், "எதற்கு?" என்று வினவினான்.

"பெருங்கடலைப் போன்று படையைப் பரந்து விரிந்ததாக நிறுத்தி தாக்கினால் எதிரிப் படையை முற்றுகையிட்டு வியூகத்தை சர்ப்ப வியூகமாக மாற்றி நெருக்கிவிட முடியும். ஆதலால் தான் அவர்கள் பெருங்கடல் வியூகத்தில் படையை நிறுத்தியிருக்கிறார்கள்."

வில்லவன், செங்கோடர் மற்றும் உபதலைவர்கள் அனைவரும் ஒரு

வரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள். அப்போது உபதலைவன் ஒருவன், “தேவி, தாக்காளர்கள் நம்மை தாக்கிய போது சக்கர வியூகத்தில் அணிவகுத்து அவர்களை முற்றுகையிட்டோம். வெறும் சில நூறு வீரர்களை மட்டும் நாம் இழந்து ஆயிரக்கணக்கான தாக்காளர்களை நாம் காலையில் கொன்று குவித்தோம்! அதே போன்று சக்கர வியூகத்தை அமைத்தால் என்ன?” என வினவினான்.

“தாக்காளர்களுக்கு எதுவுமே தெரியாது. அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் முரட்டுத் தனமாக தாக்குவது மட்டும்தான்! அதை மட்டும்தான் காலையில் அவர்கள் செய்து அனைவரும் மாண்டு போனார்கள். ஆனால், நூற்றுவர் கன்னர் படையை வழி நடத்துவது போரில் கரை தேர்ந்த சாதவாகன தேசத்தின் எல்லைப் படையின் மாதண்ட நாயகன். காரவேலனுடன் நேருக்கு நேர் போரிட்டிருக்கிறான். அவனது வீரத்தை நாம் குறைத்து மதிப்பிடக் கூடாது”

https://telegram.me/aedahamlibra

எனக் கூறியவள் சிறிது நேரம் அமைதி யாக இருந்தாள். பிறகு, "பெருங்கடலில் அலைகள் முன்னும் பின்னும் தொடர்ந்து வந்து கரையைத் தாக்குவதைப் போன்று பெருங்கடல் வியூகத்திலும் எதிரில் நிற் கும் படை தொடர்ந்து தாக்கப்படும். பேர லைகளில் சிக்கினால் எப்படி அடித் துச் செல்லப் படுவோமோ அப்படியே நாமும் வியூகத்தின் மையத்திற்கு இழுத் துச் சென்று சிதறடிக்கப்படுவோம்!"

"தேவி, உங்களுக்கு நமது வீரர் களின் மீது நம்பிக்கை இல்லையா? உயிரை இழந்தாவது சோழ தேசத்திற்கு வெற்றியைப் பெற்றுக்கொடுக்க நாங்கள் இருக்கிறோம்!" எனத் தெரிவித்த வில் லவன் தனது வாளினை உயர்த்தினான். வில்லவன் கூறியதைக் கேட்ட சோழ வீரர்கள் அவன் வாளினை உயர்த்திய போது அவர்களும் தங்களது வாளினை உயர்த்தி ஆரவாரமிடலானார்கள்.

"அண்ணா... உணர்ச்சி வசப்பட இது தகுந்த நேரம் அல்ல. சிந்தித்துப் பாருங்கள். நமது தாக்குதல் இலக்கு நூற்றுவர் கன்னர் அல்ல. மகதம் தான்! இடையில் கலிங்கத்தின் மகாமேகவாகன மன்னனான காரவேலன் இருக்கிறான். அவனைக் கடக்க வேண்டி இருக்கிறது. கலிங்கத்தைக் கடப்பது என்பது சாதாரண காரியம் அல்ல. நமது முழு சோழப் படையும் இன்னும் வந்து சேரவில்லை. சிறு படையைத் தான் வடுகர் நாட்டில் இறக்கி நிலை கொண்டிருக்கிறோம். அதிலும் பாதி பேர் அங்கும் இங்கும் சென்றுவிட்டார்கள். இருக்கும் வீரர்களைக் கொண்டு நான் நூற்றுவர் கன்னரின் எல்லைப் புறப் படையை எப்படி முறியடிப்பது என்பதைப் பற்றி நான் சிந்திக்கவில்லை. இழப்பினைத் தவிர்த்து எப்படி நூற்றுவர் கன்னரின் எல்லைப் படையை ஒழிக்கலாம் என்று சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். இது நமது ,முதல் போர். இந்தப் போர் தான் நமது வீரர்களுக்கு

உத்வேகத்தை வழங்கி மகதம் வரை நம்மை அழைத்துச் செல்லப் போகிறது. அதே நேரம் நமது இன்றைய தாக்குதல் சோழப் படையின் பெயரைக் கேட்கும் எதிரிகளை கொலை நடுக்கம் கொள்ளச் செய்ய வேண்டும். அதைப் பற்றி சிந்தித் துக் கொண்டிருக்கிறேன் நான்!" எனக் கூறிய வானவல்லி வில்லவனிடம், "உங் களின் தேர்ந்த உபதலைவர் இருவரை அழையுங்கள்!" எனக் கட்டளையிட்டாள்.

அவளது கட்டளையின் கார ணத்தை அறியாத வில்லவன் குழப்பத் துடன் அவனது உபதலைவர்கள் இரு வரை அழைத்து வானவல்லி முன் நிறுத் தினான். அவர்களிடம் வானவல்லி, "நூறு யானைகள், ஆயிரம் புரவிகள், ஐந்தாயி ரம் காலாட்படை மற்றும் வில் வீரர்களு டன் இருவரும் பின்வாங்கிக் கொள்ளுங் கள்!" எனக் கூறிக்கொண்டிருந்த இடை மறித்த செங்கோடர், "தாயே, படையின் ஒரு பிரிவினை இவர்களுடன் அனுப் பிவிட்டால் நாம்..." என அவர் பேசிக்

கொண்டிருந்த போதே கையை உயர்த்தி னாள் வானவல்லி.

நாங்கூர் வேளிர் வாயை மூடிக் கொண்டார். அதற்கு மேல் அவர் எதுவும் பேசவில்லை.

தனக்கு முன் நின்ற இரண்டு உப தலைவர்களிடமும் இரகசியக் கட்டளை ஒன்றைப் பிறப்பித்தாள். பிறகு அனை வரும் கேட்கும் வண்ணம், “இன்னும் ஒன்றரை சாமப் பொழுதுக்குள் கட் டளை நிறைவேற்றப்பட்டிருக்க வேண் டும்” எனக் கட்டளையிட அவளது திட் டத்தை அறியாத வில்லவனும், செங்கோ டரும் குழம்பிப் போய் காணப்பட்டார்கள்.

அவளது கட்டளைப்படியே இரண்டு உபதலைவர்களும் கொடுக்கப் பட்ட படைகளுடன் பின்வாங்கிக்கொண் டார்கள். சோழப் படை சமர்க்களத்தை நெருங்கியிருந்தது. பார்வையில் சாதவா கன எல்லைப் படை வீரர்கள் பெருங்க

https://telegram.me/aedahamlibra

டலைப் போன்று பறந்து விரிந்து காணப் பட்டார்கள்.

அவர்கள் அணிவகுத்து நிற்பதை யும், உச்சி வானையும் பார்த்த வான வல்லி, “அண்ணா... வஜ்ர வியூகத்தைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா?” என வினவினாள்.

“இல்லை. ஆனால் வஜ்ராயுதத் தைப் பற்றி கேள்விப் பட்டிருக்கிறேன்!”

“அந்த ஆயுதம் எப்படி இருக்கும் என்று தெரியுமா?”

“எப்படி தேவி இருக்கும்?”

“அதன் தாக்குதல் எப்படி இருக் கும் என்று கேள்விப் பட்டிருக்கிறீர்களா அண்ணா?”

“இல்லை!”

“இன்று நமது சோழப் படையின் மூலம் அதைத் தெரிந்து கொள்வீர்கள்!” எனத் தெரிவித்த வானவல்லி சோழப்

https://telegram.me/aedahamlibra

படையை ஒரு முறை நோக்கினாள். கையில் புலிக் கொடியைத் தாங்கி வந்த காலாட்படை வீரனிடம், "புலிக் கொடி யைத் தாங்கி வந்தது போதும், வேளக் காரப் படைத் தலைவரின் கொடியை ஏற்றுங்கள்" எனக் கட்டளையிட்டவள் கையில் வைத்திருந்த சிவப்பு நிறத் துணியை அவனை நோக்கி வீசினாள்.

அதை வாங்கிய அடுத்த கணம் வேளக்காரப் படைத் தலைவனின் கொடியை ஏற்றிக் கம்பீரமாகத் தூக்கிப் பிடித்தான் அவ்வீரன்.

அதைப் பார்த்தவர்கள் அனைவ ரும், "செண்டு" "செண்டு" என்று முணுமு ணுத்துக் கொண்டார்கள்.

சோழப்படை எங்கும் புலிக்கொடி பறக்க வீரன் தாங்கிப் பிடித்திருந்த செண்டாயுதக் கொடியைப் பார்த்த வில் லவன் உடனே வானவல்லியின் திட்டத் தைப் புரிந்து கொண்டு சுறுசுறுப்படைந் தான். வானவல்லி கட்டளையைப் பிறப்

https://telegram.me/aedahamlibra

பதற்கு முன்னரே வில்லவன், “வீரர்களே, வேளக்காரப் படைத் தலைவரின் செண் டாயுதத்தின் வடிவத்தில் அணிவகுத்து நில்லுங்கள்” எனக் கட்டளையிட்டான்.

அவனது கட்டளை எழுந்த அடுத்த கணம் வீரர்கள் அனைவரும் பிரிந்து அணிவகுக்கத் துவங்கினார்கள். அணி வகுப்பில் யானைப்படை, புரவிப்படை மற்றும் காலாட்படை வீரர்கள் எங்கெங்கு நிலை பெற வேண்டும் என வானவல் லியிடம் ஆலோசித்துவிட்டு படைகளை நிறுத்தினான்.

பரந்து விரிந்திருந்த பெருங்கடல் அணிவகுப்பையும், சற்றே நெருக்கமா கக் காணப்பட்ட செண்டாயுத அணிவ குப்பையும் கண்டவள் வில்லவன் மற்றும் செங்கோடரிடம், “யவனத்தில் வேளக் காரப் படைத் தலைவர் செண்டினைப் பயன்படுத்திப் போரிட்டதை இம்ஹோ டெப்பும், செங்குவீரரும் கூறக் கேட்டி ருக்கிறேன். ஆனால், இதுவரை செண்

டின் வல்லமையை நான் கண்டதில்லை. ஆனால், இன்று இந்த செண்டாயுத வியூகத்தின் மூலம் அதைக் காணப்போகிறோம்" எனத் தெரிவித்த வானவல்லி, "பட்டத்து யானையை அழைத்து வாருங்கள்!" எனக் கட்டளையிட்டாள்.

அடுத்த கணம் போரினைத் தலைமை ஏற்று நடத்துபவர் அமர்ந்து புறப்படும் பட்டத்து யானை அலங்கரிக்கப்பட்டுக் கொண்டு வரப்பட்டது. அங்கு காணப்பட்ட யானைகளிலேயே பெரிய யானை அதுதான். நீண்ட தந்தங்களுடனும், அந்தத் தந்தத்தின் முகப்பில் கூரிய தங்க ஈட்டியையும் இணைத்திருந்தார்கள். கம்பீரமாக நடந்து வந்தது பட்டத்து யானை. வானவல்லி, வில்லவன் மற்றும் செங்கோடரை அடையாளம் கண்டு தனது நீண்ட தும்பிக்கையைத் தூக்கிப் பிளிறியது.

அது அருகில் வந்ததுமே வில்லவனை நோக்கினாள் வானவல்லி. வில்

https://telegram.me/aedahamlibra

லவன் ஆச்சரியத்துடன் வானவல்லியை நோக்கினான். அப்போது செங்கோடர், "படைக்குத் தலைமை வகுக்க நீயே அனைவரையும் வழி நடுத்து தாயே!" எனத் தெரிவித்தார்.

அவர் கூறுவதைக் கேட்டதும் வானவல்லி, "தந்தையே படையை வழி நடத்தப் போவது நான் அல்ல!" எனத் தெரிவித்தாள்.

"அப்படியெனில் படையை வழி நடத்தப் போவது யார்? என வினவினார்."

"தொண்டை நாட்டின் இளவரசர்" சட்டென்று பதில் வந்தது வானவல்லியிட மிருந்து.

"புரியவில்லையே..." என செங்கோ டர் கூறிக்கொண்டிருந்த போதே, "என் மகன் திரையனைக் கொண்டு வாருங் கள்!" எனக் கட்டளையிட்டாள் வான வல்லி.

வீரர்கள் திரையனைக் கொண்டு வந்து வானவல்லியிடம் கொடுத்துவிட்டுச் சென்றார்கள். திரையனை வில்லவனிடம் கொடுத்த வானவல்லி, "அண்ணா... பட்டத்து யானை மீது திரையனுடன் ஏறிக்கொள்ளுங்கள். படையை நீங்களே வழிநடுத்துங்கள். தொண்டை மண்டல இளவலின் தலைமையிலான படையை வழிநடத்தும் தார்மீக உரிமை உங்களுக்குத்தான் உண்டு!" எனக் கூறிய வானவல்லி கையை உயர்த்தினாள்.

வில்லவன் தயக்கத்துடன், "தேவி... நானா?" எனப் பதற்றத்துடன் வினவினான்.

"ஆம் அண்ணா... உங்களது நண்பர் வேளக்காரப் படைத் தலைவர் இளந்திரையனின் கனவினை நீங்கள் தான் நிறைவேற்ற வேண்டும். அவர் தனது மகனை வீரமானவனாக வளர்க்க வேண்டும் என்று நினைத்திருந்தார். அந்தக் கனவின் முதல் படி இதுதான். அதை

வெற்றிகரமாகத் துவங்கி வையுங்கள்!" எனத் தெரிவித்த வானவல்லி "பொழுது உச்சிக்கு வர இன்னும் நாழிகைக்கும் குறைவான நேரமே இருக்கிறது. தாமதம் வேண்டாம்!" எனக் கட்டளையிட்டாள்.

அருகில் நின்ற நாங்கூர் வேளிர் செங்கோடரிடம், "தந்தையே, இந்த முடி வில் உங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை தானே?" என வினவினாள்.

"தாயே, என்ன கேள்வி இது! நம் பேரரசர் கரிகாலரைக் காக்க தனது உயி ரையே துறந்தவர் வேளக்காரப் படைத்த லைவர். அவரது மகன் தொண்டை மண் டலத்தின் மன்னன் என்பதைக் கரிகா லர் என்றோ அறிவித்து விட்டார். அதற்கு நான் எப்படித் தாயே ஆட்சேபனை செய் வேன்?" எனக் கலங்கினார் செங்கோடர்.

"சோழப் படையின் முதல் வீரராக நிற்கப் போவது தாங்கள்தான் செங்கோ டரே... தயாராகுங்கள்!" எனத் தெரிவித்த வானவல்லி புரவியில் ஏறி செண்டா

யுத அணிவகுப்பின் மையத்தில் நின்று கொண்டாள்.

"சோழப் படை யுத்தத்திற்கு தயார் என்று அறிவியுங்கள்!" கட்டளையிட்டாள் வானவல்லி.

அணிவகுப்பின் முதல் ஆளாகப் புரவியில் அமர்ந்திருந்த செங்கோடர் கையிலிருந்த சங்கினை வேகமாக ஊதி னார்.

அதே நேரம் சாதவாகனப் படையி லிருந்தும் சங்குச் சத்தம் முழங்கியது.

https://telegram.me/aedahamlibra

# 15. விழுந்த கோட்டை

சாதவாகன தேசத்தின் இளவரசர்களுள் ஒருவனும், சாதவாகன படைத் தலைவனுமான வஜ்ரபாகுவின் கட்டளையின் பேரில் பலதேவன் ஒற்றர் தலைவனின் மூலம் அனுப்பப்பட்டிருந்த செய்தி கிடைத்த அடுத்த கணமே எல்லைப்புறப் படைத் தலைவனான மாதண்ட நாயகன் சோழப் படையைத் தாக்க நடவடிக்கையை மேற்கொண்டுவிட்டான். ஒற்றர் தலைவனின் அறிவுறுத்தலின் பேரில் தாக்காளர்களைக் கொண்டே முதலில் சோழப் படைப் பாசறையைத் தாக்க திட்டம் தீட்டியிருந்தான்.

மாதண்ட நாயகனின் கட்டளையை ஏற்றுக்கொண்ட தாக்காளர்களின் தலைவன் சோழப் படைப் பாச

றையை நோக்கி வந்தபோது அவர்களின் வருகையைப் பார்த்துவிட்ட பூர்வ குடிகளைக் கொன்று கிருஷ்ணை நதிக்கரையில் எறிந்திருந்தார்கள். அவர்களின் கெட்ட நேரம் சோழப் படையினர் வெட்டிக்கொண்டிருக்கும் ஏரி மற்றும் குளங்களைப் பார்வையிடச் சென்ற வானவல்லி அவர்கள் வீசி எறிந்த உடல்களைப் பார்த்துவிட்டாள்.

அவர்கள் வந்த தடத்தினைப் பார்த்துவிட்ட வில்லவன் பனை மரத்திற்குத் தீ வைத்து வீரர்களை அழைக்க, எழுந்த புகையைக் கண்டு சோழப் படையின் வரவை எதிர்பார்த்து தாக்குவதற்கு தாக்காளர்கள் ஆயத்தமாகிவிட்டிருந்தார்கள்.

தாக்காளர்கள் திடீரென்று சோழப் படையைத் தாக்குவதற்குத் தயாரான அதே நேரம் தனது வீரர்களையும் அருகிலிருக்கும் கோட்டையிலிருந்து திரட்டிக் கொண்டு போருக்குப் புறப்பட்டிருந்தான்

https://telegram.me/aedahamlibra

சாதவாகன எல்லைப் படைத் தலைவன். தாக்காளர்கள் சோழப் படையை எப்படியும் சிதறடித்து விடுவார்கள். கிருஷ்ணை நதிக்கரையில் இறங்கியிருக்கும் எஞ்சிய படையையும் அழித்து ஒழித்து அவந்திக்குத் தகவல் அனுப்பலாம் எனத் திட்டமிட்ட எல்லைப்புறத் தலைவன் தனது படையை ஊர்மி வியூகம் எனப்படும் பெருங்கடல் வியூகத்தில் அணிவகுக்கச் செய்திருந்தான்.

பெருங்கடல் வியூகம் என்பது மற்ற வியூகங்களைப் போன்றது அல்ல, தனித்துவமானது. சக்கர வியூகம், பத்ம வியூகம், கருட வியூகம், வஜ்ர வியூகம் ஆகிய புகழ் பெற்ற வியூகங்களை ஒரு முறை அமைத்துவிட்டால் கடைசி வரை அதாவது போர் முடியும் வரை மாற்றிக்கொள்ள இயலாது. ஆனால், ஊர்மி வியூகம் எனப்படும் பெருங்கடல் வியூகம் அப்படிப்பட்டது அல்ல. தொடக்கத்தில் ஊர்மி வியூகத்தைப் போன்று அமைத்துப் போரிட்டால் போர் இறுதி கட்டத்தை நெருங்கும்போது

வியூகத்தை நீட்டித்து சர்ப்ப வியூகமாக மாற்றி எதிரிப் படையை வியூகத்திற்குள் ஒட்டு மொத்தமாகச் சிக்க வைத்து தப் பிக்க இயலாவண்ணம் அழித்து விடலாம்.

பெருங்கடலின் ஆழிப் பேரலை எப் படி இடை விடாமல் தொடர்ந்து கரை யைத் தாக்கிக் கொண்டிருக்குமோ அப் படியே பெருங்கடல் வியூகத்திலும் அணி வகுத்திருக்கும் படைகள் தொடர்ந்து தாக்கும். மற்ற அணிவகுப்பில் புரவிப் படை, காலாட்படை மற்றும் யானைப் படைகள் ஆகியவை தனித்தனியாக நிற் கவைக்கப்பட்டு தாக்குதல் தொடுக்கப்ப டும். ஆனால், பெருங்கடல் வியூகத்தின் தாக்குதல் அப்படி இருக்காது. முதலில் காலாட் படையினர்தாக்கினால் அடுத்த கணம் புரவிப்படை வீரர்கள் அதிவேக மாகத் தாக்குதல் தொடுப்பார்கள். அடுத் தது யானைப்படையின் தாக்குதல் பேரி டியாக இறங்கும். ஒரு நாழிகைப் பொழு திற்குள் காலாட்படை, புரவிப் படை மற்றும் யானைப் படையின் தாக்குத

லைச் சமாளிக்க வேண்டும். தாக்குதலானது அலை அலையாகத் தொடர்ந்து நீடித்துக்கொண்டே இருக்கும். அதற்குத் தகுந்தாற்போன்று படைகள் சிறு சிறு குழுவாக பிறை வடிவில் அணிவகுக்கப்பட்டிருக்கும். போர் இறுதி கட்டத்தை அடையும் போது பெருங்கடல் வியூகத்தின் இரண்டு ஓரங்களிலும் அணிவகுத்திருக்கும் காலாட்படை வீரர்கள் நீட்சியடைந்து சர்ப்பமாக மாறி எதிர்ப் படையை சூழ்ந்து எதிர்ப் படையினர் தங்களது வியூகத்தை மாற்றித் தற்காத்துக்கொள்ள இயலாத நிலையை ஏற்படுத்தி விடுவார்கள். தொடக்கத்தில் பெருங்கடலின் வியூகத்தை முறியடிக்க தனது படையை அணிவகுக்கச் செய்திருக்கும் எதிர்ப் படையினர் சர்ப்ப வியூகத்தின் தாக்குதலைச் சமாளிக்க இயலாமல் திணறி சரணடைந்து விடுவார்கள்.

அல்லது போரிட்டு அழிந்துவிடுவார்கள்.

https://telegram.me/aedahamlibra

"கிருஷ்ணை நதிக்கரையில் இறங்கியிருக்கும் சோழப் படை வீரர்களுள் ஒருவர் கூட உயிரோடு திரும்பிச் செல்லக் கூடாது. அவர்கள் அனைவரும் பெருங்கடல் வியூகத்தால் தாக்கப்பட்டு பிறகு சர்ப்ப வியூகத்திற்கு இரையாக்கி விட வேண்டும்" எனும் எண்ணத்தில் பெருங்கடல் வியூகத்தை அமைத்திருந்தான் சாதவாகன எல்லைப் புறத் தலைவனான மாதண்ட நாயகன். ஆனால், பெருங்கடல் வியூகத்திற்கும் பலவீனம் உண்டு. அதில் விற்படை வீரர்கள் பயன் படுத்தப்பட மாட்டார்கள். யானை மற்றும் புரவி வீரர்களைத் தவிர்த்த அனைவரும் காலாட்படை வீரர்கள்தான்.

பெருங்கடலைப் போன்று பரந்து விரிந்திருந்த அவனது அணிவகுப்பின் தொடக்கமானது பெருங்கடலில் தோன்றும் அலைகளைப் போன்றே காலாட்படை வீரர்களை நிலை நிறுத்தியிருந்தான். அணிவகுப்பை பெருங்கடலின் அலைகளைப் போன்று நிறுத்தியிருந்

https://telegram.me/pedahamlibra

தாலும் முன் யோசனையாகப் பிறை நிலவைப் போன்று நிறுத்தியிருந்தான். நெருக்கமாக அதே நேரம் பரந்து காணப்பட்ட காலாட்படை வீரர்களுக்கு முன் பெரிய கட்டாரியைத் தாக்கிக்கொண்டு தாக்காளர்கள் சீரான இடைவெளியில் நின்றுகொண்டு மிரட்டிக் கொண்டிருந்தார்கள்.

அணிவகுப்பின் இரண்டு புறங்களிலும் சர்ப்ப வியூகத்திற்குப் பயன்படும் வகையில் காலாட்படை வீரர்கள் குவிக்கப்பட்டிருந்தார்கள். அணிவகுப்பின் மையத்தில் யானைப் படையும், புரவிப் படையும் சிறு சிறு பிறைக் குழுவாக நிறுத்தப்பட்டிருந்தார்கள். வியூகத்தின் மையத்தில் யானை மீது அமர்ந்திருந்தான் சாதவாகன எல்லைப் படைத் தலைவன்.

பெருங்கடல் வியூகத்தை எதிர்த்துச் சோழப் படையினரால் அமைக்கப்பட்டிருந்த செண்டாயுத அணிவகுப்பின்

https://telegram.me/aedahamlibrary

தொடக்கத்தில் புரவியின் மீது அமர்ந்திருந்தார் நாங்கூர் வேளிர் செங்கோடர். வேலினைப் போன்றே அணிவகுக்கப்பட்டிருந்த படையின் முனையில் தான் செங்கோடர் நின்றுகொண்டிருந்தார். அந்த வேலின் மையத்தில் பட்டத்து யானை மீது வில்லவன் தொண்டைமண்டல இளவரசன் இளந்திரையனுடன் கையில் வில்லுடன் அமர்ந்திருந்தான். வேல் போன்ற அணிவகுப்பு முழுவதும் சோழப் படையின் அதி சிறந்த வீரர்களை உள்ளடக்கிய கருணையே இல்லாத வேல் படை வீரர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களுக்குக் காவல் அரணாக யானைகள் நின்றுகொண்டிருந்தன. செண்டின் வேலுக்குக் கீழே காணப்படும் சிறு சிறு வேல்களாகப் புரவி வீரர்கள் நின்றுகொண்டிருந்தார்கள்.

வேலுக்குப் பின்புறமாக வில் வீரர்கள் அணிவகுத்திருந்தார்கள். வில் வீரர்களுக்குப் பின்புறமாக பெரும் எண்ணிக்கையிலான புரவி வீரர்கள் நிறுத்தப்

பட்டிருந்தார்கள். இந்த ஒட்டு மொத்த செண்டாயுத அணிவகுப்புக்கும் காவல் அரணாக யானைப் படையினர் நிறுத்தப் பட்டிருந்தார்கள்.

அணிவகுப்பின் மையத்தில் புரவி வீரர்களுக்கும் வில் வீரர்களுக்கும் இடையில் புரவியில் அமர்ந்திருந்தாள் வானவல்லி.

பெருங்கடல் வியூகத்தின் இரண்டு புறங்களிலும் காலாட்படை வீரர் கள் நிறுத்தப்பட்டிருந்ததைப் போன்றே செண்டாயுத அணிவகுப்பின் இரண்டு பக்கங்களிலும் குறைந்த எண்ணிக்கை யில் புரவி வீரர்கள் நிறுத்தப்பட்டிருந்தார் கள். புரவிகளுக்கும், செண்டாயுத அணி வகுப்புக்கும் இடையில் யானைப் படை நிறுத்தப்பட்டிருந்தது.

மொத்தமாக வந்த சோழப் படை யினர் திடீரென்று அணிவகுப்பை மாற் றிக்கொண்டு நின்றுவிட்டதைப் பார்த்துக் கொண்டிருந்த சாதவாகன உபதலைவர்

https://telegram.me/aedahamlibrary

களுள் ஒருவன், “தலைவரே, இது என்ன வியூகம்?” என சாதவாகன படைத் தலைவனான மாதண்ட நாயகனிடம் வினவினான்.

“வஜ்ர வியூகமா இது?” என அவனும் குழம்பிப் போய் பதிலுக்கு வினவினான்.

“இல்லை தலைவரே! வஜ்ர வியூகம் ஆப்பு வடிவத்தில் காணப்படும். ஆனால், இது சற்று மாறுபட்டதாக அல்லவா இருக்கிறது?”

“நம்மைக் குழப்புவதற்காக அவர்கள் மேற்கொண்டிருக்கும் தந்திரமா இது?”

“இல்லை தலைவரே, நமது ஊர்மி வியூகத்தை எதிர்கொள்ள அவர்கள் வகுத்திருக்கும் வியூகம் இது!” என அவனது உபதலைவன் கூறுவதைக் கேட்டுச் சிரித்த மாதண்ட நாயகன், “ஊர்மி வியூகத்தை அவர்கள் வேண்டு

மானால் எதிர்க்கலாம். ஆனால், நமது சர்ப்ப வியூகத்தினால் அவர்கள் விழுங் கப்படப் போவதை யாராலும் தடுக்க இய லாது!" என அவன் கூறிக் கொண்டி ருந்த போது செண்டாயுத அணிவகுப்பின் முதல் வீரராக நின்றுகொண்டிருந்த செங் கோடர் வலம்புரிச் சங்கை எடுத்து வேக மாக ஊதினார்.

பொழுது உச்சிக்கு வருவதற்கு முன்னரே தயாராகிவிட்ட சோழப் படை யைக் கண்ட சாதவாகன எல்லைப் படைத் தலைவனும் போருக்கு ஆயத்தம் என்பதைத் தெரிவிக்க சங்கினை வேக மாக ஊதினான்.

இரண்டு நாட்டுப் படை வீரர்க ளும் எதிர்ப் படையைத் தாக்குவதற் குக் கட்டளைக்காக காத்திருக்கலானார் கள். செண்டாயுத அணிவகுப்பு முடிவ டைந்ததுமே வானவல்லி, வில்லவன் மற் றும் செங்கோடர் மற்றும் உபதலைவர்கள் அனைவரும் விவாதித்த படி சாதவாக

https://telegram.me/aedahamlibra

னப் படையே முதலில் தாக்கட்டும் என்று எதிர்பார்த்தபடி காத்திருந்தார்கள்.

சாதவாகன எல்லைப் புறத் தலைவன் முதலில் கட்டளையிட்டான், “தாக்காளர்கள் முன்னேறட்டும்!” என்று.

அவனது கட்டளை எழுந்த அடுத்த கணம் காலாட்படை வீரர்களுக்கு முன்பு முன் வரிசையில் நின்றுகொண்டிருந்த முரட்டு மனிதர்களான தாக்காளர்கள் சோழப் படை அணிவகுப்பின் மையத்தை நோக்கி ஆவேசமாக ஓடி வந்தார்கள்.

முன் வரிசையில் நின்ற செங்கோடர் தக்க சமயத்தை எதிர்பார்த்து அமைதி காத்தார். தாக்காளர்கள் நெருங்கிய போது தனது வலது கையை உயர்த்தினார். அடுத்த கணம் செண்டாயுத அணிவகுப்பின் வேல் முனைக்குப் பின்னால் நின்றுகொண்டிருந்த வில் வீரர்கள் தாக்காளர்களை நோக்கி அம்புகளைத் தொடுக்கலானார்

கள். குறி தவறாத சோழ வீரர்களின் அம்புகள் ஆவேசத்துடன் கத்தியபடி ஓடி வந்த தாக்காளர்களின் கவசங்களைத் துளைத்துக்கொண்டு தாக்கின. பாதி பேர் வழியிலேயே மரணித்தாலும் உடலில் அம்புகளைத் தாங்கிக்கொண்டு ஆவேசமாக முன்னேறிக்கொண்டிருந்தார்கள் தாக்காளர்கள். அனைவரும் செண்டாயுத அணிவகுப்பின் முனையை நெருங்கியிருந்தார்கள்.

அப்போது சாதவாகன படைத் தலைவன், “காலாட்படை வீரர்கள் புறப்படட்டும்” எனக் கம்பீரமாக தனது மீசையை நீவி விட்டபடியே கட்டளையிட்டான். அணிவகுக்கப்பட்டிருந்த படை வீரர்கள் கடல் அலைகளைப் போன்று செண்டின் வேலினை நோக்கி ஓடி வந்தார்கள்.

அவர்கள் நகரத் துவங்கியதுமே செங்கோடரின் கட்டளைப்படி வில் வீரர்

https://telegram.me/aedahamlibra

கள் தொடர்ந்து அம்புகளை எய்து கொண்டிருந்தார்கள்.

இரண்டு கையையும் உயர்த்தி காலாட்படையை சுட்டிக் காட்டினார் செங்கோடர். அடுத்த கணம் செண்டாயுத அணிவகுப்பின் இரண்டு பக்கங்களிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த புரவிப் படை வீரர்கள் அதி வேகமாகச் சென்று சாதவாகன காலாட்படை வீரர்களைத் தாக்கி நிலை குலையச் செய்தார்கள். சோழப் புரவிப்படை வீரர்கள் கையில் வாட்களையும், வேல்களையும் தாங்கிக் கொண்டு சாதவாகன காலாட்படைக் குள் ஊடுருவ நிலைகுலைந்தது அவர் களின் காலாட்படை அணிவகுப்பு. புரவி வீரர்களின் அதிவேகத் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத காலாட்படை சிதறத் துவங்கியது. சிதறிய அணிவகுப்புடன் சோழப் படையினரைத் தாக்கினார்கள் சாதவாகனர்.

செண்டின் முனையை நெருங்கித் தாக்கிக்கொண்டிருந்த தாக்காளர்களையும், சாதவாகன காலாட்படை வீரர்களையும் அரணாக நின்ற சோழ யானைகள் துவம்சம் செய்தன. தாக்காளர்கள் மொத்தமாக அழிக்கப்பட்டு காலாட்படையும் சிதறடிக்கப்படத் துவங்கியதும், "புரவிப் படையும், யானைப்படையும் அலை அலையாக முன்னேறிச் செல்லட்டும்" எனக் கட்டளையிட்டான் சாதவாகன மாதண்ட நாயகன்.

அவனது கட்டளை எழுந்த அடுத்த கணம் பிறை வடிவில் கூட்டம் கூட்டமாக நின்றுகொண்டிருந்த புரவிகளும், யானைகளும் தனித் தனியாகப் பிரிந்து செண்டாயுத வியூகத்தை நோக்கி அலை அலையாய் விரைந்து வந்தார்கள்.

சாதவாகன காலாட்படை வீரர்களைத் தடுத்துக் கொன்று கொண்டிருந்த சோழ புரவிப்படை வீரர்களைத் தாண்டி அம்புகளை எய்து தாக்குதல் தொடுக்க

லானார்கள் சோழ வில் வீரர்கள். சோழ வில் வீரர்களின் அம்புகள் தொடக்கத்தில் சாதவாகனப் படையின் முன்னேற்றத்தைத் தடுத்தாலும் தொடர்ந்து அவர்கள் அலை அலையாய் முன்னேறி வந்தபோது அம்புகள் பயன்படாமல் போய்க் கொண்டிருந்தது.

முன்னேறி வந்த யானைகளும், புரவிகளும் சோழப் படையின் முன்னேறியிருந்த புரவிப் படையைத் தாக்கின. சாதவாகனப் படையின் எதிர் தாக்குதல் துவங்கியதும் சோழப் புரவிப் படையினர் பின்வாங்கலானார்கள். ஆவேசத்துடன் விரட்டி வந்தனர் சாதவாகன புரவி மற்றும் யானைப் படையினர். இதுதான் தக்க சமயம் என்பதைப் புரிந்து கொண்ட செங்கோடர் இரண்டு கைகளிலும் வாளினை ஏந்திக்கொண்டு கையை முன் பக்கமாக நீட்டினார். அவருக்கு இரண்டு பக்கங்களிலும் அணிவகுத்து நின்ற யானைகள் அனைத்தும் பிளிறிக்கொண்டு சாதவாகனப் படையைத் தாக்கின.

https://telegram.me/aedahamlibrary

யானைகள் பாய்ந்த அடுத்த கணம் கையில் இரண்டு வாட்களையும் தாங்கிக்கொண்டு புரவியில் பாய்ந்தார் நாங்கூர் வேளிர் செங்கோடர். அவரைத் தொடர்ந்து சோழப் படையின் கருணையே இல்லாத வேல் வீரர்களும் சாதவாகனப் படைக்குள் ஊடுருவினார்கள். வில் வீரர்களும் விற்களைத் துறந்து இடையில் வைத்திருந்த வாட்களை உருவிக்கொண்டு ஆவேசத்துடன் முன்னேறினார்கள். யானை மீது அமர்ந்துகொண்டு வில்லவன் அம்புகளை எய்து தாக்கிக்கொண்டிருந்தான். சிறிது நேரத்தில் எரிச்சல் அடைந்தவன் அவனுக்குப் பின்னால் நின்ற வானவல்லியை நோக்கினான்.

அவனது தேவையைப் புரிந்துகொண்ட வானவல்லி சிரித்துக்கொண்டு தலையை ஆட்டினாள். அவள் தலையை ஆட்டியதுதான் தாமதம். அடுத்தகணம் அருகில் போர் புரிந்துகொண்டிருந்த உபதலைவர்கள் இருவரை தொண்டை

மண்டல இளவலுக்கு காவலாக நிறுத்தி விட்டு தனது நீண்ட வாளினைக் கையில் ஏந்திக்கொண்டு புரவியில் தாவி படைக ளின் நடுவில் புகுந்து சாதவாகன படைத் தலைவனை நோக்கி முன்னேறினான். அவன் முன்னேறிய பாதையெங்கும் சாத வாகன வீரர்களின் தலைகள் விழுந்து கொண்டிருந்தன.

சாதவாகன வீரர்களுக்கும் சோழ வீரர்களுக்கும் யுத்தம் உக்கிரமாக நடந்து கொண்டிருப்பதைக் கண்ட எல்லைப் படைத் தலைவன் இதுதான் தக்க சமயம் என்பதை உணர்ந்துகொண்டு, “காலாட் படை வீரர்கள் சுற்றி வளைக்கட்டும். வியூகம் சர்ப்பமாக மாறட்டும்!” எனக் கட் டளையிட்டான்.

அவனது கட்டளை எழுந்ததும் பெருங்கடல் வியூகத்தின் இரண்டு பக் கங்களிலும் நின்றுகொண்டிருந்த சாத வாகனக் காலாட்படை வீரர்கள் சோழப் படையின் செண்டாயுத அணிவகுப்பின்

இரண்டு பக்கங்களிலும் தாக்கி சுற்றிவளைக்கத் துவங்கினார்கள்.

செண்டாயுத அணிவகுப்பின் வேல் முனை வீரர்கள் சாதவாகன வீரர்களைத் தாக்கிக் செய்துகொண்டிருந்த போது சாதவாகன வீரர்களின் வியூகம் சர்ப்ப மாக விரிவடைந்து அவர்களைச் சூழத் துவங்கினார்கள். பெருங்கடல் வியூகம் சர்ப்பமாக மாற மாற சாதவாகனர்களின் கை ஓங்கிக் கொண்டிருந்தது. வியூகம் சர்ப்பமாக மாறி சோழப் படை நெருக்கப் பட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்த உப தலைவர்கள் பதறினார்கள்.

“சர்ப்ப வியூகத்தைத் தகர்க்க வேண்டுமெனில் நமக்கு உதவி வெளிப் புறத்திலிருந்து தேவி!” என வானவல் லியிடம் கூறிக்கொண்டிருந்த போதே, “அதற்கு அவசியம் இல்லை. சற்று நேரம் பொறுங்கள்!” எனத் தெரிவித்த வான வல்லி தக்க சமயத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.

சாதவாகன காலாட்படை வீரர்கள் சோழப் படையை முழுவதுமாகச் சூழ்ந்து சர்ப்ப வியூகத்தை நிறைவேற்றினார்கள். அவர்கள் சோழப் படையை இறுகத் துவங்கினார்கள்.

“புரவிப் படைகள் பிரிந்து இரண்டு புறமும் தாக்குதல் தொடுக்கட்டும்!” கட்டளையிட்டாள் வானவல்லி.

அவளது கட்டளை எழுந்ததுதான் தாமதம். அதுவரை செண்டாயுதத்தின் வேலுக்குக் கீழே சிறு சிறு வேல்களைப் போன்று அணிவகுத்து நின்ற புரவி வீரர்கள் மற்றும் செண்டின் பின்புறமாக வானவல்லியுடன் அணிவகுத்து நின்ற புரவி வீரர்கள் என அனைவரும் வில்லின் நாணிலிருந்து புறப்படும் அம்புகளைப் போன்று அதி வேகமாக சர்ப்ப வியூகத்தைக் கிழித்துக்கொண்டு வெளிப்பட்டு சாதவாகன வீரர்களைச் சூறையாடத் துவங்கினார்கள்.

அணிவகுப்பின் பின் வரிசையில் நின்றுகொண்டிருந்த காலாட்படை வீரர்களும் களத்தில் இறங்க சாதவாகனப் படை மொத்தமாக சிதறத் துவங்கியது. வில்லவனும் போரிட்டுக் கொண்டிருந்த மாதண்ட நாயகனை நெருங்கியிருந்தான். கணத்திற்கு கணம் சாதவாகனப் படை தோல்வியை நோக்கி வேகமாக நெருங்கிச் சென்றுகொண்டிருந்தார்கள்.

தனது திட்டங்கள் அனைத்தும் சோழப் படையினரால் முறியடிக்கப்பட்டு பெரும் இழப்பினை அடைந்துவிட்டதை உணர்ந்த சாதவாகன படைத் தலைவன் சங்கினை நீண்ட நேரம் ஊதினான். "அவன் தோல்வியை ஒப்புக்கொண்டு விட்டான்" என்று சோழ வீரர்கள் அனைவரும் சற்று நேரம் போரிடுவதை நிறுத்தி விட்டு அமைதி காக்க சாதவாகனப் படை வீரர்கள் அனைவரும் பின்வாங்கினார்கள்.

“அனைவரும் கோட்டைக்குப் பின் வாங்குங்கள்” என எல்லைப் படைத் தலைவன் கட்டளையிட்டு சோழ வீரர்களைத் தாக்கிக்கொண்டே கோட்டையை நோக்கிப் பின்வாங்கிக் கொண்டிருந்தான்.

சோழப் படையினர் சாதவாகனப் படையை விரட்டியபடியே சென்றுகொண்டிருந்தார்கள். கோட்டையை நெருங்கியதும் சாதவாகன வீரர்கள் மீண்டும் சோழப் படையை எதிர்த்துத் தாக்குதல் தொடுக்கலானார்கள். கோட்டைக்குள்ளிருந்து வீரர்கள் அவர்களுக்கு உதவியாக வந்துகொண்டிருந்தார்கள்.

கோட்டைக்குள்ளிருந்து வீரர்கள் உதவிக்கு வெளிப்பட்டதும் சாதவாகன வீரர்கள் திடீர் எழுச்சி பெற்று விரட்டி வந்த சோழ வீரர்களைத் தாக்கினார்கள். அவர்களின் திடீர் தாக்குதல் சோழப் படைக்கு அதிர்ச்சி அளித்தாலும், சாதவாகன வீரர்களுக்குப் பேரதிர்ச்சியாக

கோட்டைக்குள்ளிருந்து உதவிக்கு வந்த வீரர்கள் சாதவாகன வீரர்களையே தாக் கலானார்கள். சாதவாகனப் படை அதிர்ச் சியில் நிற்க கோட்டை மதிலை நோக்கி னான் எல்லைப் புறத் தலைவன்.

அங்கே புலிக்கொடி கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தது.

"தனது கண்களை நம்பலாமா? அல்லது வேண்டாமா?" என அவன் எண்ணிக்கொண்டிருந்த போது அவ னுக்கு முன்னால் வந்து நின்றான் சோழப் படைத் தலைவன் வில்லவன். அவனது குழப்பத்தைக் கண்டவன், "உனக்கு மட் டும்தான் அதிர்ச்சி அளிக்கத் தெரியுமா?" எனக் கூறிக்கொண்டே தனது வாளினை ஓங்கினான்.

காலையில் தாக்காளர்களைக் கொண்டு தாக்கியதையும், முன்னறிவிப் பின்றி போருக்கு அழைத்ததையும் தான் சோழப் படைத்தலைவன் குறிப்பிடுகி றான் என்பதைப் புரிந்துகொண்ட சாத

https://telegram.me/aedahamlibra

வாகன எல்லைப் படைத் தலைவன் வாளினை உருவிக்கொண்டு ஆவேசத் துடன் வில்லவனை நோக்கிப் பாய்ந் தான்.

இருவருக்கும் சற்று நேரம் கடு மையான வாள் சமர் அங்கே நடந்தது. அவர்களின் வாட்சமர் முடிவடைவதற் குள் சோழப் படைகளுக்கு நடுவில் சிக் கிக்கொண்ட சாதவாகன எல்லைப் புறப் படை மொத்தமாக அழிந்துவிட்டிருந்தது.

வில்லவனால் சாதவாகன எல் லைப் படைத் தலைவனான மாதண்ட நாயகன் தோற்கடிக்கப்பட அன்றைய யுத்தம் முடிவுக்கு வந்தது. ஆயு தத்தை இழந்து நிராயுதபாணியாக நின் றவனைக் கண்ட வானவல்லி முகத்தில் வழிந்த குருதிக் கரையைத் துடைத்த படியே, “வில்லவரே, இவனைக் கோட் டைக்கு இழுத்து வாருங்கள்!” எனக் கூறி வள் சாதவாகனர்களின் எல்லைப் புறக்

கோட்டைக்குள் வெற்றித் திருமகளாக நுழைந்தாள்.

அடிக்குறிப்பு:

1. வஜ்ர வியூகம் - ஙிஹு ஶ்ரீஞ்ஹு Mடிடுடிtச்ணுூது ஊணிணுூ ணச்tடிணிண. வஜ்ர வியூகம் ஆப்பு வடிவத்தின் சாயலையே ஒத்திருக்கும் ஒரு வகைப் போர் வியூகம். எதிரியின் அடர்ந்த பெரும்படையை ஊடறுத்துத் தாக்குவதற்காக வஜ்ர வியூகம் அமைக்கப்படும்.

https://telegram.me/aedahamlibra

# 16. தூதுவனான படைத்தலைவன்

“நூற்றுவர் கன்னரின் எல்லைப் படை வீரர்கள் அனைவரும் போருக்குப் புறப்பட்டு வந்துவிட்டதால் அவர்களின் எல்லைப் புறக் கோட்டை காவலற்று காணப்படும். கோட்டை நூற்றுவர் கன்னரின் கட்டுப்பாட்டில் இருக்கும் வரை தொடர்ந்து ஆபத்து வந்துகொண்டே தான் இருக்கும். முழுவதுமாக ஒடுக்கும் வரை அவர்

கள் தொடர்ந்து அலைகளைப் போன்று தொடர்ந்து தாக்கிக் கொண்டே தான் இருப்பார்கள். அவர்களின் தாக்குதலை தடுத்து நிறுத்தவேண்டும் என்றால் அவர்களின் தளத்தினை முதலில் கைப்பற்றி விட வேண்டும்" என முடிவு செய்த வான வல்லி போர் முடிவடைவதற்குள் அவர்களின் எல்லைப்புறக் கோட்டையைக் கைப்பற்றிவிட வேண்டும் எனும் திட்டத்தில் தேர்ந்த இரண்டு உப தலைவர்களின் கீழ் நூறு யானைகள், ஆயிரம் புரவிகள், ஐந்தாயிரம் காலாட்படை மற்றும் வில் வீரர்களை இரகசியமாக அனுப்பி வைத்தாள்.

வானவல்லியின் கட்டளையுடன் புறப்பட்ட சோழ வீரர்கள் காவல் குறைந்து காணப்பட்ட சாதவாகன எல்லைப்புறக் கோட்டையை எந்த வித முன் அறிவிப்பும் இன்றி தாக்கினார்கள். சோழ வீரர்களின் திடீர் தாக்குதலை எதிர் பார்க்காத கோட்டைப் பாதுகாப்பு வீரர்கள் அதிர்ச்சியடைந்து எதிர் நடவடிக்கையில் இறங்குவதற்குள் சோழ வீரர்கள் அதிர்ச்சி அளித்து கோட்டைக்குள் நுழைந்து எதிர்த்த அனைவரை

யும் கொன்று போட்டு கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டார்கள். கோட்டை யைக் கைப்பற்றியதோடு மட்டுமல்லாமல் அதில் பறந்து கொண்டிருந்த சாதவாகன கொடியை இறக்கிவிட்டு புலிக் கொடி யைப் பறக்கவிடவும் செய்தார்கள்.

சோழ வீரர்கள் வெற்றி முழக்கத்து டன் சாதவாகன கோட்டைக்குள் நுழை யலானார்கள். அடிப்படைப் பாதுகாப்பு ஏற்பாடுகள் அனைத்தும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டன. கோட்டையின் காவலை சோழ வீரர்கள் ஏற்றுக் கொண் டார்கள். கோட்டைக்குள்ளிருந்தப் பணி யாட்களைத் தவிர அனைத்து வீரர்களும் வெளியேற்றப் பட்டார்கள். போர் முடிந்த ஒரே இரவில் கோட்டையின் முழு கட்டுப் பாடும் சோழர்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது.

அடுத்த நாள் காலையில் கோட் டையின் அவை கூட்டப்பட்டது. தன் குழந்தை திரையனுடன் வானவல்லி,

செங்கோடர், வில்லவன், உப படைத் தலைவர்கள், உப தளபதிகள் என அனைவரும் கோட்டையின் அவையில் குழுமியிருந்தார்கள். தனது பெரும் படை அனைத்தையும் இழந்துவிட்டு அவை யில் தலையைக் கீழே தொங்கபோட்டுக்கொண்டு தனியொருவனாக நின்று கொண்டிருந்தான் சாதவாகன எல்லைப் புறப் படைத் தலைவனான மாதண்ட நாயகன்.

கோட்டையில் அனைவரும் அமை தியாக இருக்க வில்லவன் வானவல்லியி டம், “பல வீரர்களின் இழப்புக்குக் கார ணமான இவனைச் சிறையில் அடைத்து விடலாம் அல்லது மரண தண்டனை அளித்துவிடலாம்!” என வெகுண்டெ ழுந்தான்.

வானவல்லி அவையில் அமர்ந் திருந்த அனைவரின் முகங்களையும் நோக்கினாள். அனைவரும் வானவல் லியின் பதில் என்னவாக இருக்கும்

என அறியும் ஆவலில் அவளது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்போது சாதவாகன எல்லைப் படைத் தலைவனை நோக்கிய வானவல்லி, “சோழப் படையைத் தாக்கச் சொல்லி உனக்குக் கட்டளையிட்டது யார்?” என வினவினாள்.

எந்தப் பதிலையும் தெரிவிக்காமல் அமைதியாகவே நின்றுகொண்டிருந்தான் சாதவாகன எல்லைப் படைத் தலைவன்.

வானவல்லி அவனது பதிலை எதிர்பார்த்தபடி அவனது முகத்தையே நோக்கிக்கொண்டிருந்தாள். சிறிது நேரம் அமைதியாக நின்றவன் பிறகு, “சாதவாகன படைத் தலைவரின் கட்டளை!” எனப் பதிலளித்தான்.

“படைத் தலைவரின் கட்டளை அரசர் சதகர்ணி அறிவாரா?”

https://telegram.me/aedahamlibra

"அதைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது!"

"உனக்குத் தெரியாதா?"

"ஆம்! சோழப் படையைத் தாக்கச் சொல்லி கட்டளை அவந்தியிலிருந்து வந்தது. கட்டளைக் கிடைத்த அடுத்த கணத்தில் போருக்குப் புறப்பட்டுவிட்டேன்!"

"அவந்தியிலிருந்தா?"

"ஆம்!"

"........."

"அவந்தியில் வசிக்கும் சாதவாகன இளவரசர் வஜ்ரபாகு"விடமிருந்து ஒற்றர் தலைவர் மூலம் கட்டளை கிடைத்தது!"

"தாக்காளர்களைக் கொண்டு தாக்கச் சொல்லிக் கட்டளையிட்டது?"

"அந்தக் கட்டளையும் அவந்தியிலிருந்துதான் வந்தது!"

அருகில் அமர்ந்திருந்த செங்கோடரை நோக்கினாள் வானவல்லி. பிறகு, "அடுத்து என்ன செய்யலாம்?" எனவும் வினவினாள்.

"இவனைச் சிறையில் அடைத்துவிடலாம் தேவி! நூற்றுவர் கன்னர்களின் தலைநகர் படித்தானத்திற்கு படைத் தலைவர் மூலம் செய்தி அனுப்புவோம்! அதே நேரம் நம் அரசர் மற்றும் படைத்தலைவர்களுக்கும் நம் வெற்றியைத் தெரிவித்து விடுவோம்!"

"படித்தானத்திற்கு செய்தி அனுப்புவது நல்லது தான். ஆனால்..." என்று சிந்தித்த வானவல்லி, "படித்தானத்திற்கு வில்லவர் செல்வதை விடவும் இந்தப் போருக்குக் காரணமான நூற்றுவர் கன்னபடைத் தலைவன் செல்வதுதான் சாலச் சிறந்தது என எண்ணுகிறேன் நான்" எனத் தெரிவித்தாள் வானவல்லி.

செங்கோடர் அவளை வியப்புடன் நோக்கினார்.

"ஆமாம் தந்தையே. வில்லவர் செல்வதை விடவும் நூற்றுவர் கன்னர் படைத் தலைவர் செல்வதுதான் முறை யாக இருக்கும். இந்தப் போர் நடந்த சூழ லையும் சதகர்ணி அறிந்து கொள்வார்."

"சரி தாயே! இந்த யோசனையும் நன்று தான்! சாதவாகன படைத் தலை வரே படித்தானத்திற்கு தூதுவராக செல் லட்டும்" என நாங்கூர் வேளிர் தெரி விக்க வானவல்லி அவளுக்கு முன்னால் நின்ற சாதவாகன படைத் தலைவனி டம், "நூற்றுவர் கன்னர் அரசர்கள் தமிழ் அரசர்களுடன் நல்லுறவையே பேணி வந்துகொண்டிருக்கிறார்கள். அந்த நல் லுறவை நாங்களும் பின்பற்ற விழை கிறோம். சோழ வீரர்களின் தாக்குதல் இலக்கு மகதம் தான். படித்தானமோ அல்லது நூற்றுவர் கன்ன தேசமோ அல்ல. நடந்த போரைப் பற்றி நீயே அர சரிடம் தெரிவி. நூற்றுவர் கன்னருடன் நாங்கள் மேற்கொண்டு போரினை முன் னெடுக்க விரும்பவில்லை. ஆனால், சத

கர்ணி போரினை விரும்பினால் சோழப் படை அதற்கும் தயார் என்பதை நீயே சத கர்ணியிடம் தெரிவித்துவிடு!" என அவ னிடம் தெரிவித்த வானவல்லி அவையை ஒருமுறை கூர்ந்து நோக்கினாள். பிறகு சாதவாகன எல்லைப் புறப் படைத் தலை வனிடம், "நீ இப்பொழுதே இங்கிருந்து படித்தானத்தை நோக்கிப் புறப்படலாம்!" எனக் கட்டளையிட்டு கையை வாயிலை நோக்கி நீட்டினாள்.

தலையைத் தொங்க போட்ட படியே சாதவாகன எல்லைப் படைத் தலைவ னான மாதண்ட நாயகன் வானவல்லியின் கட்டளையைச் சுமந்தபடி அங்கிருந்து வெளியேறினான். உடனே செங்கோடர், "நான்கு புரவி வீரர்கள் அவனைப் பின் தொடரட்டும்!" எனக் கட்டளையிட்டார்.

அடுத்தகணம் அவையில் காவல் இருந்த வீரர்கள் அவனைப் பின்தொடர லானார்கள்.

https://telegram.me/aedahamlibra

அவையை நோக்கிய வானவல்லி, “காரவேலனால் முறியடிக்கப்பட்ட மூவேந்தர் கூட்டணியை இந்த மொழிபெயர் தேயத்தில் கரிகாலனின் கட்டளையின் பேரில் இப்போது முதல் தமிழக வீரர்கள் காவல் இருக்கத் துவங்குவார்கள்” எனக் கூறியவள் வில்லவனை நோக்கி, “புகாரிலும், தொண்டை நாட்டிலும் போருக்குப் புறப்பட்டுத் தயாராக இருக்கும் நமது படை வீரர்கள் அனைவரும் புறப்பட்டு வரட்டும். தளவாடங்கள் அனைத்தும் வந்து இறங்கட்டும். அடுத்த கட்டளை கரிகாலரிடமிருந்தோ அல்லது படைத் தலைவர் செங்குவீரரிடமிருந்தோ கிடைக்கும் வரை இனி இந்தச் சாதவாகன எல்லைப் புறக் கோட்டை தான் நமது இருப்பிடம்!” எனத் தெரிவித்தாள்.

அப்போது வில்லவன் வானவல்லியிடம், “தேவி, பரதவன் குமரனிடமிருந்து ஓலைக்கு மேல் ஓலை வந்துகொண்டிருக்கிறது. அவனால் அங்கு இருப்பு

https://telegram.me/aedahamlibra

கொள்ளவில்லை! குமரனையும் புறப் பட்டு வரச் சொல்லி தகவல் அனுப்பி விடட்டுமா?” என வினவினான்.

“சரி வில்லவரே... உங்களது விருப் பம்!” எனச் சிரித்தபடியே தெரிவித்தாள் வானவல்லி.

தனது நண்பனை காணப்போகும் மகிழ்ச்சியில் வசப்பட்டான் வில்லவன். அவன் மகிழ்ச்சி அடங்குவதற்குள், “கும ரன் போருக்கு வந்துவிடட்டும். தாங்கள் புகார் காவலுக்குச் சென்றுவிடுங்கள்!” எனக் கட்டளையிட்டாள் வானவல்லி.

அடுத்த கணமே அடங்கிப் போனான் வில்லவன்.

அவனது பதில் என்னவாக இருக் கும் என்பதை அறிய அவனது முகத் தையே நோக்கினாள் வானவல்லி. வில் லவன் எந்தப் பதிலையும் கூறாமல் அமைதியாக நிற்கலானான். சிறு புன்ன

https://telegram.me/aedahamlibra

கையுடன் வானவல்லி, "என்ன குரலே காணவில்லை?" என வினவினாள்.

அப்பொழுதும் வில்லவன் தயங்கியபடி நின்றுகொண்டிருந்தான்.

"பரதவன் குமரன் வரவேண்டுமா வில்லவரே?"

"வேண்டாம் தேவி! புகாரின் காவல் மிகவும் முக்கியம். அவன் மரகதவல்லி தேவியார், இரும்பிடர்த்தலையர் மற்றும் வளவனாருக்குத் துணையாக புகாரிலேயே இருக்கட்டும்!" எனச் சட்டென்று பதிலளித்தான் வில்லவன்.

அவனது பதிலைக் கேட்டதும் வானவல்லி, செங்கோடர் மற்றும் உபதலைவர்கள் அனைவரும் சிரிக்கலானார்கள்.

"இனி பரதவன் குமரனைப் பற்றி பேசுவாய் வில்லவா?" எனச் சிரித்தபடியே வினவினார் செங்கோடர்.

வில்லவன் அமைதியாக நின்று கொண்டிருந்தான்.

அவனது வருத்தத்தைக் கண்ட வானவல்லி, "அண்ணா... கவலை வேண்டாம். உங்களது நண்பரைத் தாங் கள் விரைவில் சந்திப்பீர்கள். அது வரை தாங்கள் பொறுத்துத் தான் ஆக வேண்டும்" எனப் புன்னகையுடன் தெரி வித்த வானவல்லி அவனை இருக்கை யில் அமரச் சொல்லி கட்டளையிட்டாள்.

"எதிர்பாராத போரினை வெற்றிகர மாக முடித்து விட்டோம்! அடுத்து என்ன தேவி செய்வது?" என வினவினான் உப தலைவன் ஒருவன்.

"இந்தத் தாக்குதலிலிருந்து நாம் நமது குறைபாடுகள் சிலவற்றை அறிந்து களைந்தாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்! அதனை முதலில் நாம் களைவோம். பிறகு அடுத்த நடவடிக்கை யைப் பற்றி சிந்திப்போம்!" எனத் தெரி வித்த வானவல்லி வில்லவனை நோக்கி,

"படைத் தலைவரே இந்தப் போரின் மூலம் நாம் சரி செய்து கொள்ள வேண்டி யவை என்னென்ன?" என வினவினாள்.

"நமது ஒற்றர் படையை நாம் நிச் சயமாக மேம்படுத்த வேண்டிய நிலை யில் இருக்கிறோம். நூற்றுவர் கன்னரின் படைத் தலைவன் அறைகூவல் விடுக் கும் வரை நாம் அவர்களின் திட்டத் தைப் பற்றி முன்னரே அறிந்துகொள்ளத் தவறிவிட்டோம்! இந்தத் தாக்குதல் மூலம் நமது சோழப் படைக்கு எந்த நேரத்தி லும் எப்பேர்ப்பட்ட சூழலிலும் விரைந்து போருக்குத் தயார் ஆகிவிடும் வல்லமை உண்டு என்பதை இந்தப் போர் தெரிவித் துவிட்டது."

"அதேதான் தலைவரே, நாம் நமது ஒற்றர் படையை மேம்படுத்த வேண் டிய கட்டாயத்தில் இருக்கிறோம்" எனக் கூறிக்கொண்டிருந்த போதே இடைம றித்த செங்கோடர், "இனி அந்தத் தவறு நடக்காது தாயே, அதை நான் நிவர்த்தி

செய்துவிடுகிறேன்." எனத் தெரிவித்தவர் தனது வீரர்கள் அனைவரையும் அழைத்து உரிய கட்டளையைப் பிறப்பித்து அனுப்பி வைத்தார்.

வானவல்லி வீரர்களை அழைத்து, "நேற்று நடந்த போரைப் பற்றி கரிகாலருக்கு இன்றே தகவலை அனுப்பி வைத்து விடுங்கள்!" எனக் கட்டளையிட்டாள்.

புரவி வீரர்கள் உடனே புறப்பட்டுச் சென்றார்கள்.

"சபை கலையட்டும்" கட்டளையிட்டாள் வானவல்லி.

அப்போது வில்லவன், "தேவி, சிங்கபுரிக்குச் சென்றிருக்கும் நமது படைத் தலைவர் செங்குவீரருக்கும் தகவலை அனுப்பி வைத்து விடவா?" என வினவினான்.

"அவசியமில்லை வில்லவரே!"

https://telegram.me/aedahamlibra

"அவசியமில்லையா?"

"ஆம்!"

"ஏன்?"

"செங்குவீரர் நீண்ட நாட்கள் சிங் கபுரியில் தங்கப் போவதில்லை. அவர் விரைவில் திரும்பிவிடுவார். ஆதலால் தான் அவசியமில்லை எனத் தெரிவித் தேன். நீங்கள் கோட்டையின் காவலைக் கவனியுங்கள்!" எனக் கட்டளையிட வில் லவனும் அங்கிருந்து புறப்பட்டுச் சென் றான்.

https://telegram.me/aedahamlibra

# 17. கலிங்க வன ஒற்றன்

மேற்கில் தொலைதூரத்தில் காணப்பட்ட குன்றுகளுக்குப் பின்னால் கதிரவன் விழுந்திருந்தான். கதிரவன் மேற்கில் மறைந்திருந்தாலும் இருள் முழுவதும் புவியை ஆக்கிரமிக்காமல் வெளிச்சம் சிறிதளவு எஞ்சியிருந்தது. கலிங்க நாட்டிற்கும் வடுக நாட்டுக்கும் இடைப்பட்ட வனத்தை இருளானது கவ்வத் துவங்கி பெரும் பயங்கரத்தை உருவாக்கியிருந்தது. வடுக நாட்டிலிருந்து கலிங்க நாட்டின் சிங்கபுரிக்கு பயணித்துக் கொண்டிருந்த வழிப்போக்கர்களும், வணிகர்களும் வனத்தின் எல்லையில் காணப்பட்ட சத்திரங்களிலேயே தங்கிக் கொண்டார்கள். கலிங்க மன்னன் காரவேலன் சமண மதத்தைப் பின்பற்றிக் கொண்டிருந்த

தால் வழிப்போக்கர்கள் தங்கிப் பயணிக்கும் அன்ன சத்திரங்கள் அனைத்தும் எந்தக் குறையும் இல்லாமல் காணப்பட்டது. ஆதலால் அந்த வழியே பயணிக்கும் அனைத்து வணிகர்களும் இரவில் சத்திரங்களில் தங்கியேச் சென்றுகொண்டிருந்தனர்.

வழிப்பாதையின் வழியே பயணித்து வரும் பாதசாரிகளை சத்திர ஊழியர்கள் மறித்து வலுக்கட்டாயமாக சத்திரத்திற்குள் அழைத்து வந்து தங்கவைத்துக் கொண்டிருந்தனர். அப்படி வலுக்கட்டாயமாக அழைத்து வரப்பட்ட வீரர்களுள் சோழப் படைத்தலைவன் விறல்வேலும் ஒருவனாக உணவருந்திக் கொண்டிருந்தான். தனக்கு அருகில் அமர்ந்து உண்டு கொண்டிருந்த பௌத்த தேரர் ஒருவரிடம் செங்குவீரன், "இங்கிருந்து சிங்கபுரி எத்தனை நாழிகைப் பயணம்?" என வினவினான்.

"சிங்கபுரி" என்ற சொல்லைக் கேட்டதுமே அந்த பவுத்தத் தேரர் காதில் கொதிக்கும் எண்ணெய்யை ஊற்றிக்

https://telegram.me/aedahamlibra

கொண்டவரைப் போன்று விறல்வேலை விட்டு தூரச் சென்றுவிட்டார்.

அவரது செயலை விறல்வேல் ஆச் சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்த போது அவனுக்கு அருகில் அமர்ந்தி ருந்த பெரியவர் ஒருவர், “தம்பி தெற்கிலி ருந்து வருகிறாயா?” என வினவினார்.

குரல் வந்த திசைக்குத் திரும்பிய விறல்வேல், “ஆமாம் பெரியவரே!” எனப் பதிலளித்தான்.

“ஆதலால் தான் உனக்கு சிங்கபு ரியைப் பற்றியும், அதன் மன்னன் கார வேலனைப் பற்றியும் தெரியாமல் தேர ரிடம் கேட்டுக் கொண்டிருக்கிறாய்?” எனக் கூறியவர் விறல்வேலைப் பார்த்து நகைக்கவும் செய்தார்.

அதற்கு மேல் விறல்வேல் அவ ரிடம் எதைப் பற்றியும் வினவவில்லை. சிற்றுண்டியை முடித்துவிட்டு மரத்தடியில் கட்டியிருந்த தனது புரவியை நோக்கி

னான். அது அவனைப் பார்த்து வாஞ்சையுடன் தலையாட்டியது. புரவிக்கு அருகில் சென்றவன் அதைத் தடவிக் கொடுத்துக் கொண்டு நின்றுகொண்டிருந்தான். அப்போது அவனுக்கு அருகில் வந்த அப்பெரியவர், "தம்பி, இங்கிருந்து புரவியில் மூன்று சாமக் காலம் பயணித்தால் தான் உன்னால் சிங்கபுரியின் எல்லையை அடைய இயலும். அடர்ந்த வனம் அது. நிலவொளியாலும் புக இயலாத அளவிற்கு அடர்ந்து காணப்படும். பொழுது கடந்ததும் மாய மோகினி, கள்வர்கள் என அனைவரும் உலாவத் துவங்கிவிடுவார்கள். ஆதலால் இந்த வனத்தின் வழியே யாரும் பொழுது மேற்கில் விழுந்த பிறகு பயணிப்பது கிடையாது. விடிந்ததும் நீ புறப்படு. நண்பகலுக்கு எல்லாம் நீ சிங்கபுரியை அடைந்து விடலாம்!" எனத் தெரிவித்தார்.

அப்போது அவரிடம், "பெரியவரே, எதற்காக சிங்கபுரி என்ற சொல்லைக் கேட்டதும் அப்பெளத்த தேரர் எழுந்து

சென்றுவிட்டார்?" என எதுவும் தெரியா தவனைப் போன்று வினவினான் விறல் வேல்.

"தம்பி, நம் தென்னகத்தைப் போன்று இங்கு வட நாட்டு மன்னர்கள் அனைத்து சமயங்களையும் ஒன்றாகப் பாவித்து ஒழுகுவதில்லை. காரவேலன் சமணத்தை கடை பிடிக்கிறான். ஆத லால் அவன் பௌத்தர்களையும், வைதீ கர்களையும் எதிரியாகவே பார்க்கிறான். சுங்கன் வைதீக மதத்தைச் சார்ந்தவன். அவன் சமணர்களையும், பௌத்தர்க ளையும் விரோதியாக நினைத்து விரட் டுகிறான். பௌத்த தேரர்களின் தலை யைக் கொண்டுவந்தால் ஒவ்வொரு தலைக்கும் நூறு பொற்காசுகள் அளிப்ப தாக புஷ்யமித்திர சுங்கன் அறிவித்திருக் கிறான் என்றால் அவர்களின் சமய காழ்ப் புணர்ச்சி எப்படிப்பட்டது என்பதை அறிந் துகொள்ளேன். ஆதலால் தான் அந்தப் பௌத்தத் தேரர் சிங்கபுரி என்ற சொல்

https://telegram.me/aedahamlibra

லைக் கேட்டதுமே அருவெறுத்து விலகிச் சென்றுவிட்டார்.”

“வனத்திற்குள் பாதை ஒன்றுதானா அல்லது கிளைப் பாதைகள் நிறைய இருக்கிறதா?” என வினவினான் விறல் வேல்.

“ஒரே சாலை தான் தம்பி...”

“நன்றி பெரியவரே...” எனத் தெரிவித்த விறல்வேல் மரத்தில் கட்டியிருந்த தனது புரவியை அவிழ்த்து அதில் சாணத்தைப் பூட்டினான். அவனது செயலைக் கண்ட அப்பெரியவர், “தம்பி, நான் கூறுவதைக் கேட்டபிறகும் நீ புறப்பட ஆயத்தமாகிவிட்டாய் போலிருக்கிறதே?” என வினவினார்.

விறல்வேல் எந்தப் பதிலையும் அளிக்காமல் புன்சிரிப்பு ஒன்றை மட்டும் உதிர்த்தான்.

“தம்பி, இது தேய்ப்பிறைக் காலம் நீ பயணிக்கும் முதல் சாமத்தில் வெளிச்சம்

https://telegram.me/aedahamlibra

என்பதையே உன்னால் காண இயலாது. அவசரம் என்றால் நிலவு கீழ் வானத்தில் தோன்றிய பிறகாவது புறப்படு. அதற்கு முன் நீ கலிங்க வனத்தில் பயணிப்பது எமபுரியை நோக்கிச் செல்வதற்குச் சமம்!" என எச்சரிக்கை செய்தார்.

விறல்வேல் கண நேரம் அவர் கூறி யதைக் கேட்டபடி சிந்தித்தபடி நின்று கொண்டிருந்தான். அப்போது அப்பெரிய வர், "நீ வருவதற்கு ஒரு நாழிகைப் பொழு திற்கு முன்னால் ஒரு பெண் தனியாகப் புறப்பட்டு சிங்கபுரிக்கு சென்றிருக்கிறாள். எவ்வளவோ தடுத்தும் அவள் கேட்க வில்லை. அவளுக்கு இன்னேரம் என்ன நேர்ந்திருக்குமோ? தெரியாது! உனக்கு மனதில் உறுதியும், ஆபத்தை எதிர்க்கும் துணிச்சலும் இருந்தால் புறப்பட்டுச் செல். முடிந்தால் அந்தப் பெண்ணைக் காப் பாற்றி சிங்கபுரிக்கு அழைத்துச் செல்! கருணையே வடிவான சேயோனின் வெற்றிவேல் உனக்குத் துணையிருக்கட் டும்" எனக் கூறியவர் வேல் ஒன்றை

யும் பந்தம் ஒன்றையும் எடுத்து அவனிடம் கொடுத்தார்.

அவரது திடீர் மாறிவிட்ட சிந்தனை யைக் கண்ட விறல்வேல் அதை வாங் கிக்கொண்டு புரவியில் அமர்ந்து சிங்கபு ரியை நோக்கிப் புறப்பட்டான்.

இரண்டு பக்கங்களிலும் கரும் பூதம் போன்று வளர்ந்து நின்றுகொண்டிருந்த மரங்கள் அவனை வரவேற்க வனத் திற்குள் நுழைந்தான் விறல்வேல். புரவி சீரான வேகத்தில் பயணிக்க அவனது கையில் வைத்திருந்த தீப்பந்தம் அவ னுக்கு உதவியாக இருக்கவில்லை. காற் றில் தீப்பந்தத்தின் செந்தீ நிலையாக இல்லாமல் ஆடிக்கொண்டிருந்தது. முன் னும் பின்னுமாக விழுந்துகொண்டிருந்த நிழல் புரவியை மிரளச் செய்ய தீப் பந்தத்தை அணைத்துக் கீழே போட்டு விட்டுச் சென்றான் விறல்வேல். முத லில் அடர்ந்த வனம் அவனது பார்வை யைப் பறித்துவிட்டதைப் போன்ற இருள்

அப்பிக்கொண்டாலும் நேரம் கடக்கக் கடக்க இருளும் அவனுக்குப் பழக்கமாகத் துவங்கியது. தொடர்ந்து புரவியைத் தட்டிவிட்டான் விறல்வேல். ஒரு ஓரைப் பொழுது பயணித்திருப்பான். இருளில் புரவிகள் அவனைப் பின்தொடர்வதைப் போன்று குளம்படிச் சத்தங்கள் கேட்க புரவியின் வேகத்தைக் குறைத்தான். அவனைத் தொடர்ந்த குளம்படிச் சத்தங்களின் சுருதியும் குறைந்தன.

சீரான வேகத்திலேயே புரவியைத் தட்டிவிட்டான். இருளைக் கிழித்துக் கொண்டு அவனது புரவி சென்று கொண்டிருந்தது. மேலும் ஒரு நாழிகைப் பொழுது பயணித்த பிறகு அவனுக்கு முன்னாள் சற்றுத் தொலைவில் தீப்பந்த ஒளியின் உதவியுடன் புரவி வீரன் ஒருவன் பயணித்துக் கொண்டிருப்பதைக் கண்டான். அவனது துணிச்சலைக் கண்டு விறல்வேல் வியந்தபடியே புரவியின் வேகத்தை கூட்ட அவனை நெருங்கிக் கொண்டிருந்தான். விறல்வேல் பின்

னால் வருவதைக் கண்டதும் புரவியில் சென்றவன் என்ன நினைத்தானோ, அவனும் தனது புரவியின் வேகத்தைக் கூட்டி விரைந்து பயணிக்கத் துவங்கினான்.

"அவனைப் பின்தொடரும் என்னை அவன் கள்வன் என்று நினைத்து விட்டானோ?" என அவனை எண்ணி சற்று உரக்கவே சிரித்தான் விறல்வேல். "சரி... சற்று இடைவெளியிலேயே பயணிப்போம்!" எனத் தனக்குத் தானே கூறிக்கொண்ட போது அவனுக்குள் அப்போது ஒரு சந்தேகமும் தோன்றி மறைந்தது. "சற்று முன் அப்பெரியவர் வனத்தில் ஒரு பெண் பயணிப்பதாக அல்லவா கூறினார். ஆனால், தீப்பந்த ஒளியில் ஆண் பயணிப்பதைப் போன்று அல்லவா தோன்றுகிறது?" எனக் குழப்பத்துடனே புரவியைத் தட்டிவிட்டு முன்னால் சென்ற புரவி வீரனை நோக்கினான். "சந்தேகமே இல்லை. அவன் ஆண் தான்" என எண்ணிக்கொண்டவன், "இவன்

ஆண் எனில் அப்பெண் எங்கே சென்றி ருப்பாள்?" என்ற வினாவும் அவனுக்குள் எழவே செய்தது.

விறல்வேல் பெரும் சிந்தனை யில் சென்றுகொண்டிருந்த போது அந்த வனமே நடுங்கும்படி ஆந்தை யின் அலறல் ஒன்று எழுந்து அடங் கியது. ஆந்தையின் அலறல் எழுந்த அடுத்த கணம் அவனுக்கு முன்னால் சென்றுகொண்டிருந்த புரவி நிலை தடு மாறி கீழே விழ புரவி வீரனும் தரை யில் விழுந்தான். தீப்பந்தம் கீழே விழுந்து எப்போது வேண்டுமானாலும் அணைந் துவிடுவேன் என்று சிணுங்கிக்கொண்டி ருந்தது. கீழே விழுந்த அப்புரவி வீரனை ஏழெட்டு பேர் சூழ்ந்து கொண்டார்கள். அதே நேரம் அவனுக்குப் பின்னால் வந் துகொண்டிருந்த சில புரவிகளும் விறல் வேலை நோக்கி விரைந்து வந்துகொண் டிருந்தன.

https://telegram.me/aedahamlibra

அப்பெரியவர் அளித்த தீப்பந்தத்தை விறல்வேல் தூக்கி எறிந்துவிட்டாலும் அவர் அளித்த வெற்றி வேலினை அவன் எறிந்திருக்கவில்லை. இடையில் அவனது வீர வாள் எதற்கும் தயாராகவே உறைக்குள் உறங்குவதைப் போன்று பாசாங்கு செய்துகொண்டிருந்தது. கீழே விழுந்த புரவி வீரனுக்கு உதவுவதற்காக தனது புரவியை அதிவேகத்தில் செலுத்தினான்.

கீழே விழுந்த வீரனை ஏழெட்டு பேர் சூழ்ந்து கொண்டிருந்தார்கள். அவனது புரவி ஒருபுறம் கீழே கிடக்க இவன் மறுபுறம் எழுந்து நின்றான். அவ்வீரனது ஆயுதம் அப்புரவியின் சேனத்தில் வைக்கப்பட்டிருந்ததால் ஆயுதமின்றி நிராயுதபாணியாக நின்றுகொண்டிருந்தான் அவன்.

“அசக்கில்னா படுக்கியரா தனக்காத்தனா பலவுநிசடா லாசேடாறேனா, தனக்கீது மரடு எசபால டகனா அசக்கி”

எனக் கட்டளையிட்டான் அக்குழுவின் தலைவன்.

அவனது கட்டளை எழுந்ததுமே அதை நிறைவேற்ற நான்கைந்து பேர் அப்புரவி வீரனை நோக்கி வாளினை ஓங்கிக்கொண்டு நெருங்கி சென்றார்கள். ஆயுதமின்றி நின்ற புரவி வீரன் என்ன செய்வதென்று திகைக்கையில் அவனை நோக்கி வந்தவனது மார்பில் வேல் ஒன்று பாய்ந்து வானத்தைப் பார்த்து அலறியபடியே கீழே விழுந்தான். அவன் விழுந்த அடுத்த கணம் சுற்றி நின்ற மேலும் இருவர் உடலில் குறுவாட்கள் பாய்ந்து கீழே விழுந்தார்கள். கண நேரத்தில் மூவர் கீழே விழுந்ததும் நம்பிக்கை பெற்ற அப்புரவி வீரன் கீழே விழுந்தவனின் மார்பில் பாய்ந்திருந்த வெற்றி வேலினைக் கையில் எடுத்து அவனை நெருங்கிய மேலும் இருவரைக் கொன்று போட்டபடியே வேலினை சுழற்றினான். விறல்வேல் அவனுக்கு அருகில் புரவியில் வருவதற்குள் அவனைச் சுற்

றியிருந்த அனைவரையும் தோற்கடித்து மண்ணில் தள்ளியிருந்தான் அவ்வீரன். அவனது கையிலிருந்த வேலிலிருந்து குருதித் துளிகள் சொட்டிக்கொண்டிருந் ததை அணையும் தருவாயில் எரிந்து கொண்டிருந்த தீப்பந்த ஒளியின் மூலம் கண்டான் விறல்வேல்.

தனது வாளினை உறையிலி ருந்து உருவிக்கொண்டு வந்த விறல் வேலின் வாளுக்கு எத்தகைய வேலை யையும் மிச்சம் வைக்காமல் அவனை எதிர்த்த அனைவரது கதையையும் அப் புரவி வீரன் முடித்து வைத்திருந்தான். அவனது வேல் சுழன்ற வேகத்தினை கண்டு பிரமித்தபடியே விறல்வேல் புரவி யில் நின்றுகொண்டிருந்த போது விறல் வேலை நோக்கிக் கையில் வைத்திருந்த வேலினை எறிந்தான் அப்புரவி வீரன்.

உடனே சுதாரிப்படைந்த விறல் வேல் அவ்வேலின் பாதையிலிருந்து குனிந்து விலகிக் கொண்டான். அவனது

https://telegram.me/aedahamlibra

உச்சி முடியைத் தொட்டபடி பாய்ந்த அவ் வேல் அவனுக்குப் பின்னால் அவனை வெட்டுவதற்கு கையை ஓங்கிக்கொண்டு புரவியில் நின்ற கள்வன் ஒருவனின் மார் பின் மீது பாய்ந்து அவனைக் கீழே தள்ளி யது. எஞ்சியிருந்த இரண்டு புரவி வீரர்க ளையும் அடுத்த கணத்தில் தனது கையி லிருந்து வாளுக்குப் பலி கொடுத்து அப் போரை முடித்து வைத்த விறல்வேல் புர வியிலிருந்து கீழே குதித்தான். அவனது வாளில் சொட்டிக்கொண்டிருந்த குருதித் துளியைத் துடைத்து மீண்டும் தனது வாளுறையில் போட்டுக்கொண்டு கீழே விழுந்து தணிந்துகொண்டிருந்த தீப்பந் தத்தை கையில் எடுத்தான். அவனது கைக்கு வந்ததுமே மீண்டும் உயிர் பெற்ற தீப்பந்தம் சுடர் விட்டு எரியத் துவங்கியது.

தீப்பந்த ஒளியின் மூலம் அப்பு ரவி வீரனை நோக்கினான் விறல்வேல். அதிர்ச்சியிலிருந்து விலகாமலே அவ னும் விறல்வேலை நோக்கிக் கொண் டிருந்தான். தலைப்பாகை அணிந்து

கொண்டு தனது குழல்கள் அனைத்தையும் அதற்குள் மறைத்திருந்தான். சற்றே கருத்த நிறம். கூர்மையான விழிகள். அவனது முகத்திற்கு மேலும் அழகு சேர்க்கும் அவனது மீசை. ஒட்ட சவரம் செய்திருந்த அவனது முகத்தில் குழந்தைத் தனம் மிகுந்திருந்தது. அவனது முகத்தில் தெறித்து விழுந்திருந்த குருதித் துளியைத் துடைக்க கையைக் கொண்டு சென்றான் விறல்வேல்.

ஓரடி பின்னால் நகர்ந்தான் அப்புரவி வீரன்.

அவன் தயங்குவதைக் கண்ட விறல்வேல், “முகத்தில் குருதித் துளி படிந்திருக்கிறது. துடைத்துக் கொள்!” எனக் கூறியவன் அவனது வலது பக்க கன்னத்தை சுட்டிக் காட்டினான்.

தனது தோளில் போட்டிருந்த துண்டினை எடுத்து தனது முகத்தில் படிந்திருந்த குருதித் துளியைத் துடைத்தான் அப்புரவி வீரன். அவன் குரு

தித் துளியைத் துடைத்த பிறகு அவனது முகத்தை நோக்கினான் விறல்வேல். அவன் துடைத்த இடத்தில் அவனது கருத்த நிறம் சற்றே இளமஞ்சள் நிறத் திற்கு மாறியிருந்தது. அதைக் கண்ட விறல்வேலுக்கு அனைத்தும் புரிந்துவிட் டது. "இவன் தனது தலையில் கட் டியிருக்கும் தலைப்பாகை, பூசியிருக்கும் இந்த கறுப்புச் சாயம் மற்றும் முகத் தில் அணிந்திருக்கும் அந்த மீசை ஆகி யவற்றை நீக்கினால் இவன் இவனாக இருக்கமாட்டான். அப்பெரியவர் கூறிய பெண் நிச்சயம் இவளாகத்தான் இருக்க வேண்டும். எதற்காக இவள் தனது உரு வத்தை மாற்றி ஆண் வேடமிட்டு சுற்றிக் கொண்டு இருக்கிறாள்?" என எண்ணிய விறல்வேல் அவளது முகத்தையே பார்த் துக் கொண்டிருந்தான்.

அப்போது அவள், "வீரரே, வந்த திலிருந்து எனது முகத்தையே வியப்பு டன் பார்த்துக்கொண்டு இருக்கிறீர்களே!

https://telegram.me/aedahamlibra

ஏன்?” எனத் தனது குரலை மாற்றிக் கொண்டு ஆண் குரலில் வினவினாள்.

அவளது திறமையைக் கண்டு வியந்த விறல்வேல் அவள் பெண் என்பதை அறிந்துகொண்டதைக் காட் டிக்கொள்ளாமல், “இருண்ட வனத்தில் தனியாக வந்திருக்கும் உனது துணிச் சல் என்னை பிரமிப்படையச் செய் துவிட்டது!” என வியப்படைந்தவனைப் போன்று தெரிவித்தான்.

“நீங்களும் தான் இந்த வனத் தில் தனியாக வந்திருக்கிறீர்கள்? நீங்கள் உங்களது வேலினையும், குறுவாட்கள் இரண்டையும் எறிந்த விதத்திலிருந்தே உங்களது திறமையை அறிந்துகொண் டேன்! இப்படிப்பட்ட தாக்குதலை நான் கண்டதே இல்லை!” என வியப்புடன் அவனது வீரத்தைப் பற்றி சிலாகித்தாள் அவள்.

பதிலுக்கு எந்தப் பதிலையும் கூறா மல் அமைதியாக நின்றான் விறல்வேல்.

https://telegram.me/aedahamlibrary

பிறகு, "கீழே அடைந்திருக்கும் உனது புரவியை எழுப்பிப் புறப்படு. நாம் இனியும் இங்கு தாமதிக்க வேண்டாம்! எப்போது வேண்டுமானாலும் ஆபத்து நம்மை மீண்டும் சூழலாம்! உடனே புறப்படுவோம்" என அவசரப்படுத்தினான் விறல்வேல்.

அவன் கூறியதைக் கேட்டதும் கீழே விழுந்து கிடந்த அவளது உடைமைகளை எடுத்துத் தனது தோளில் போட்டுக்கொண்டு புரவியை எழுப்பினாள். அப்புரவி எழ மறுத்தது. எழ முயன்றாலும் அது தனது கால்களை ஊன்ற இயலாமல் திணறி மீண்டும் கீழே விழுந்தது. அதைக் கண்ட விறல்வேல், "வீரரே, உங்களது புரவி இனி பயன்படாது. என் புரவி தாராளமாக இருவரைச் சுமக்கும். என் புரவியில் ஏறிக்கொள்ளுங்கள். ஆபத்து மீண்டும் சூழும் முன் நாம் இங்கிருந்து புறப்பட்டுவிடுவோம்!" எனத் தெரிவித்தான்.

அவன் கூறியதைக் கேட்டு அவள் பெரும் அதிர்ச்சி அடைந்தாலும்,

அதை முகத்தில் காட்டிக்கொள்ளாமல் தயங்கி நின்றாள். மனதிற்குள் சிரித்துக் கொண்ட விறல்வேல், "பெண் என்ன தான் ஆணைப் போன்று வேடமிட்டாலும், இயற்கை சுபாவங்களை மறந்துவிட முடியுமா?" என எண்ணிக்கொண்டே, "தாமதிக்க வேண்டாம். உடனே ஏறிக்கொள்" எனக் கூறி அவளது தோளில் போட்டிருந்த உடமைகளை எடுத்துத் தனது புரவியின் மீது கிடத்தினான்.

தயங்கியபடியே நின்றுகொண்டிருந்தாள் அவள். பிறகு, "என்னை மன்னித்துவிடுங்கள் வீரரே, நீங்கள் புறப்பட்டுச் செல்லுங்கள்!" என மட்டும் தெரிவித்தாள்.

"எதற்காக நான் மட்டும் புறப்பட வேண்டும்?"

"என்னால் இப்போது உங்களுடன் வர இயலாது!"

"ஏன்?"

https://telegram.me/aedahamlibra

"........"

"வீரரே, தயங்குவதற்கு நேரம் இல்லை. உடனே புறப்படுங்கள்!"

"பல இக்கட்டான சூழல்களில் எனது புரவி என்னைக் காப்பாற்றியிருக் கிறது. எனது புரவி பயன்படாது என்பதற் காக என்னால் இதைக் கைவிட்டுவிட்டு வர இயலாது!" எனச் சாமர்த்தியமாகத் தெரிவித்தாள் அவள்.

"நான் செல்கிறேன். நீ வருகிறாயா? அல்லது இங்கேயே இருந்து மறுபடியும் அவர்களிடம் சிக்கிக் கொள்ளப் போகி றாயா?" என வினவியபடியே அவளது உடைமைகளை கீழே போட்டுவிட்டு தனது புரவியைத் தட்டிவிட்டான். அது மெல்ல நகர்ந்தது.

"உங்களுக்கு அவசரம் என்றால் நீங்கள் புறப்படுங்கள்! என்னால் இப் போது வர இயலாது!" எனத் திடமாக தெரிவித்தாள் அவள்.

அவளுக்கு விறல்வேல் எந்தப் பதிலையும் அளிக்கவில்லை. தனது புரவியின் அடிவயிற்றைத் தனது வலது காலினால் சற்றே வேகமாக தட்டினான். அடுத்தகணம் புறப்பட்ட அப்புரவி அவளது பார்வையிலிருந்து மறைந்துவிட்டிருந்தது.

தன்னை நொந்துகொண்டபடியே தனிமையில் நின்றுகொண்டிருந்தாள் அவள். இனி பயன்படப்போகாத தனது புரவியின் அருகில் தரையில் அமர்ந்தாள். அதைத் தடவிக் கொடுத்தபடியே அமர்ந்திருந்தாள். வனத்தில் அடையாளம் புரியாத சத்தம் தொடர்ந்து வெவ்வேறு திசைகளில் எழுந்துகொண்டிருந்தது. எதற்கும் அஞ்சாதவளான அப்பெண் தனது கைவிடப்பட்ட நிலையை எண்ணிக்கொண்டு வருந்த வருந்த அவளும் அச்சத்தை உணரத் துவங்கினாள். வனத்தின் தொலைவில் எழும் சிறு சிறு சத்தங்களும் அவளைக் கொடிய வன விலங்குகள் சூழ்ந்து கொண்டிருப்பதைப் போன்ற மாயத் தோற்றத்தை உருவாக்கி

அவளை நடுங்கச் செய்து கொண்டிருந் தது.

"அவனுடனே சென்றிருக்க லாமோ?" என அவள் கூறிக்கொண் டிருந்த போது திடீரென்று அவளை நோக்கி குளம்படிச் சத்தம் நெருங்கிக் கொண்டிருந்தது. "மீண்டும் கள்வர்கள்" என முணுமுணுத்துக்கொண்டு கீழே கிடந்த விறல்வேலின் வெற்றிவேலினைக் கையில் எடுத்துக் கொண்டாள்.

நடு வழியில் வேலினைக் கையில் பிடித்தபடி நின்றுகொண்டிருக்கும் போது விறல்வேல் அங்கு மீண்டும் திரும்பி வந் தான். அவள் நின்ற தோரணையைப் பார்த்தவன் சிரித்தபடியே, "உன்னைக் கண்டால் எங்கள் ஊர் காவல் தெய்வ மான சாத்தனின் நினைவுதான் வருகி றது" எனக் கூறிக்கொண்டு தனது புரவி யிலிருந்து கீழே குதித்தான்.

"எதற்காகத் திரும்பி வந்திருக்கிறீர் கள்?" என வினவினாள் அவள்.

"கல் நெஞ்சக்காரி" என்று மனதிற்குள் கூறிக்கொண்டவன், "இந்த வனத்தில் ஒருவனை ஆபத்தில் விட்டுச் செல்வது பெரும் பிழை என்று தோன்றியது எனக்கு. ஆதலால் திரும்பி வந்துவிட்டேன்!" எனப் புன்னகையுடன் அவளது விழிகளில் தனது பார்வையை நிலைக்க வைத்துக்கொண்டு தெரிவித்தான்.

அவன் திரும்பி வந்துவிட்டதைக் கண்டு அவள் மகிழ்ந்தாலும், அதை வெளிப்படுத்திக் கொள்ளாமல் கீழே விழுந்து கிடந்த அவளது புரவியையே நோக்கிக் கொண்டிருந்தாள்.

அருகில் கிடந்த சுள்ளிகள் மீது அவளது கையில் எரிந்துகொண்டிருந்த தீப்பந்தத்தை வாங்கிப் போட்டான் விறல் வேல். அடுத்தகணம் அச்சுள்ளிகள் தீப் பிடித்து எரியத் துவங்கி அவ்விடத்தை வெளிச்சத்தால் நிரப்பியது. கீழே கிடந்த புரவியை நோக்கினான். அது வருத்தத்துடன் அவனை நோக்கியது. புரவியின்

தலையைப் பிடித்து மெல்ல தூக்கினான். பின்னங்கால்கள் இரண்டும் நிலைத்து நிற்க முன்னங்கால்கள் இரண்டையும் கீழே ஊன்ற இயலாமல் மீண்டும் கீழே விழுந்தது.

புரவியின் தலையைக் கீழே போட்டுவிட்டு முன்னங்கால்கள் இரண்டின் குளம்புகளைச் சோதித்தான். அதில் எந்தப் பிரச்சனையும் இல்லை. கால்களை மெல்ல அழுத்தியபடியே மேல் நோக்கித் தடவினான் விறல்வேல். வலது கால் தொடையை அவன் தொட்ட போது வலியால் துடித்துக் கனைத்தது அப்புரவி. அக்கனைப்புச் சத்தத்தைக் கேட்டதும் அவளும் துடிதுடித்துப் போனாள்.

புரவியின் கழுத்தைத் தாங்கலாக பிடித்துக்கொண்டு தனியொருவனாக அப்புரவியைத் தூக்கினான் விறல்வேல். அவனது செயலை ஆச்சரியமாகப் பார்த்தபடி அவள் நிற்க விறல்வேல் அப்புரவியைத் தனியொருவனா

கத் தூக்கி நிறுத்தியிருந்தான். பின்னங் கால் நிலைத்து நிற்க முன்னங்கால்கள் இரண்டும் கீழே தரையில் ஊன்ற இய லாமல் தொங்கிக்கொண்டு காணப்பட் டது. பிறகு ஒரு கையால் மட்டும் அதைத் தாங்கிக்கொண்டு மறு கையால் அதன் காலை பிடித்து கீழே இழுத்தான். அடுத்த கணம் “மடக்” என்ற சத்தம் எழ புரவி அந்த வனமே அதிரும்படி மீண்டும் மரண வலியில் கனைத்தது. அதே போன்று இன்னொரு காலையும் முறித்து விட் டான். அப்போதும் அப்புரவி துடிதுடித்து கனைக்க அவள் அழுது கொண்டிருந் தாள்.

மெல்ல தாங்கியபடியே புரவியின் கால்களை சிறிது சிறிதாக தரை யில் ஊன்ற வைத்தான். அதன் கால் கள் நடுங்கிக் கொண்டிருந்தது. இரண்டு கால்களும் தரையில் ஊன்ற மெல்ல விலகினான் விறல்வேல். விலகியவன் புரவியைத் தட்டி விட்டான். அடுத்த

https://telegram.me/aedahamlibra

கணம் அப்புரவி வலியை மறந்து பாய்ந்து சென்றது.

அவளது புரவி மீண்டும் உயிர் பெற்று நடப்பதைப் பார்த்தவள் மகிழ்ச்சி யில் கரம் கூப்பி அவனுக்கு நன்றி செலுத் தினாள்.

அவள் பேச்சின்றி நின்றபோது சென்ற புரவி திரும்பி வந்து விறல் வேலைப் பார்த்து கனைத்தது. விறல் வேல் அப்புரவியை அன்புடன் தடவிக் கொடுத்தான். அப்புரவியும் அவனை நக் கிக் கொடுத்தது.

"என் புரவிக்கு உங்களை நன்கு பிடித்துப் போய் விட்டது" எனத் தெரி வித்தாள் அவள். அப்போது கூட அவள் தனது வேடத்தைக் காட்டிக் கொடுக்கா மல் ஆண் குரலில் பேசியதைக் கண்டு வியந்த விறல்வேல், "தாமதிக்க வேண் டாம்! வா, புறப்படுவோம்!" எனக் கூறிக் கொண்டு அவளது புரவியின் மீது ஏறி னான்.

அவள் குழப்பத்துடன் நிற்க, “இப்புரவி மீண்டும் எப்போது வேண்டுமானாலும் கீழே விழலாம். என் புரவியில் ஏறிக்கொள். அது உன்னைப் பத்திரமாக அழைத்துவரும்!” எனத் தெரிவித்த அடுத்த கணம் அவளும் அப்புரவியின் மீது ஏறிக்கொண்டாள்.

நெடுந்தூரம் இருவரும் எதுவும் பேசிக்கொள்ளாமலே புரவியில் பயணித்துக் கொண்டிருந்தார்கள். புரவி சீரான வேகத்தில் சென்றுகொண்டிருந்தது. அப்போது அவள், “சிங்கபுரிக்கா சென்றுகொண்டு இருக்கிறீர்கள்?” என வினவினாள்.

பதிலுக்கு, “ஆம்!” என மட்டும் தெரிவித்தான் விறல்வேல்.

“தென்னகத்திலிருந்தா வருகிறீர்கள்?”

“ஆம்!”

https://telegram.me/aedahamlibrary

“நீங்கள் எதற்காக சிங்கபுரிக்கு வருகிறீர்கள் என்று தெரியாது. ஆனால், இப்போதிருக்கும் அரசியல் சூழலில் நீங்கள் சிங்கபுரிக்கு வருவது உங்களுக்கு பெரும் கேடாக அமைய வாய்ப்பிருக்கிறது!” என வருத்தத்துடன் தெரிவித்தாள்.

“அப்படி என்ன கேடு வந்துவிடப் போகிறது?”

“உங்களுக்கு செய்தி தெரியாதா?”

“என்ன செய்தி?”

“தென்னகத்திலிருந்து சோழப் படை புறப்பட்டுவிட்டது!”

“அதற்கும் நான் செல்வதற்கும் என்ன தொடர்பு?”

“வடுகர் நாட்டில் தங்கியிருந்தவர்கள் சாதவாகன எல்லைப் புறக் கோட்டையைக் கைப்பற்றியும் விட்டார்கள்!”

https://telegram.me/aedahamlibra

"என்ன, சோழப்படை சாதவாகன நாட்டைத் தாக்கியதா?" வியப்புடன் வின வினான் விறல்வேல்.

"ஆமாம் வீரரே... நீங்கள் அதைப் பற்றி தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஒரு சாமப் பொழுதிற்கு முன்னர் தான் செய்தி கிடைத்தது!"

எந்தப் பதிலையும் கூறாமல் சிந்த னையுடன் அமர்ந்திருந்தான் விறல்வேல்.

"சாதவாகன எல்லைப் படை மொத்தமாக அழிந்து விட்டதாம். சாதவா கன கோட்டையைக் கைப்பற்றியது மட் டுமல்லாமல் கலிங்க மன்னர் காரவே லரால் முறியடிக்கப்பட்ட "திராமிர சங் காத்தம்" எனும் மூவேந்தர் கூட்டணியை மீண்டும் சோழர்கள் நிறுவி விட்டார்கள். இனி மொழி பெயர் தேய மலையில் சோழப் படை தொடர்ந்து காவல் காக் கும்! அது கலிங்க மன்னர் காரவேலரை நிச்சயம் கோபப்படச் செய்யும்! ஆதலால்

தான் கூறுகிறேன், நீ கலிங்க நாட்டிற்குள் நுழைய வேண்டாம் என்று!”

அவள் கூறிய தகவல் விறல் வேலை அதிர்ச்சியடைய வைத்திருந்தது. கிருஷ்ணை நதிக்கரையில் நடைபெற்ற போர் மற்றும் அதற்கான காரணங்கள் என எதுவுமே தெரியாததால் “என்ன நடந்திருக்கும்? சோழ வீரர்கள் எதற்காக நூற்றுவர் கன்னரை தாக்கியிருக்கிறார்கள். அதுவும் கரிகாலர் அவந்தியில் இருக்கும் போது?” எனச் சிந்தித்தபடியே புரவியில் சென்றுகொண்டிருந்தான்.

ஏற்கனவே சிங்கபுரிக்கு வரும் தென்னக வணிகர்கள் ஒற்றர்கள் என்று கைது செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் தாங்கள் வருவது அபத்தமாக முடிய வாய்ப்பிருக்கிறது. சிந்தித்து செயல்படுங்கள்!” என எச்சரித்தாள் அவள்.

https://telegram.me/aedahamlibra

“அதைப் பற்றிய கவலை உனக்கு வேண்டாம் வீரரே! என் மீது கொண்டிருக்கும் அக்கறைக்கு நன்றி!”

மேலும் ஒரு சாமப் பொழுது கலிங்கத்தைப் பற்றியும், கலிங்கத் தலைநகர் சிங்கபுரியைப் பற்றியும் பலவித தகவல்களைப் பற்றி இருவரும் பேசிக்கொண்டே சிங்கபுரியின் எல்லையை அடைந்திருந்தார்கள் இருவரும். அப்போது பாதை இரண்டாகப் பிரிந்தது. புரவியிலிருந்து இறங்கியவள் வலது புறமாகப் பிரிந்த பாதையை சுட்டிக்காட்டி, “நீங்கள் இந்தப் பாதையின் வழியே செல்லுங்கள்! சிங்கபுரியை அடைவீர்கள்! நான் இடப்புறம் செல்ல வேண்டும்!” எனக் கூறிக்கொண்டு விறல்வேலின் புரவியை அவனிடம் ஒப்படைத்துவிட்டு தனது புரவியைப் பெற்றுக்கொண்டு புரவியைக் கையில் பிடித்துக்கொண்டு நடக்க ஆரம்பித்தாள்.

அவள் செல்வதையே விறல்வேல் பார்த்துக்கொண்டிருந்தான். சற்றுத்தொலைவு சென்றவள் விறல்வேலைத் திரும்பிப் பார்த்தாள். அவள் திரும்பியதை நிலவொளியில் கண்டான் விறல்வேல். ஆனால், அவள் அவனைப் பார்த்து புன்னகைத்ததை அவனால் காண இயலவில்லை.

https://telegram.me/aedahamlibra

# 18. காரவேலரின் வியப்பு

கலிங்க வீரர்கள் அனைவரும் தனித்தனி பிரிவாகப் பிரிந்து கடுமையான போர் ஒத்திகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். வீரர்களின் பயிற்சியினைக் கண்ட கலிங்கத்தின் மகாமேகவாகன அரசரான காரவேலர் பெருமையுடன் தனது மீசையினை நீவி விட்டபடியே சென்றுகொண்டிருந்தார். வீரர்களின் பயிற்சியினைப் பார்க்க பார்க்க அவரது மனதில் தோன்றிய கம்பீரம் நடையில் பெருமையாக வெளிப்பட்டது. கலிங்கத்தின் அரசராக அவர் பதவியேற்றதிலிருந்தே அவர் ஓயாமல் நடத்திக்கொண்டிருந்த போர்களால் தான் கலிங்கத்தின் மகாமேகவாகன

அரசு எந்நாளும் அடையாத கீர்த்தியை அடைந்து அதன் புகழ் எட்டுத் திசைகளிலும் பரவியிருந்தது. இளமையிலிருந்து அவர் சுங்கர்களுடனும் சாதவாகனர்களுடன் ஓயாமல் செய்த போர்கள் அனைத்தும் அவரது உடலுள் வீரத் தழும்புகளாக வெளிப்பட்டு அவரது தோற்றத்திற்கு பெரும் பொலிவை அளித்திருந்தது. அவரது தலை மயிர்களில் ஒன்றிரண்டு நரைத்திருந்தாலும் அது அவரது முகத்திற்கு பெரும் கம்பீரத்தை அளித்திருந்தது. முகத்திலும் ஒன்றிரண்டு தழும்புகளுடன் அவரது தாடை மயிர்களும் நரைத்து முரட்டுச் சிங்கத்தைப் போன்றே வீரர்களுக்கு மத்தியில் நடந்து சென்றுகொண்டிருந்தார். இடையில் பட்டுத் துகில், தோளில் வலது இடமாக அணிந்திருந்த பூணூல் மற்றும் அவற்றினூடே கழுத்தில் அணிந்திருந்த சில தங்க நகைகள், இரத்தின குண்டலங்கள் ஆகியவற்றை அவர் தனது படோடோபத்தை வெளிப்படுத்த அணிந்திருந்தாலும் அவரது உடலில் காணப்பட்ட விழுப்புண்களும், சில நரைத்த மயிர்களுமே அவருக்குப் பெரும் கம்பீரத்தை அளித்துக் கொண்டிருந்தது. சிங்கத்தின் பிடரி நரைத்தாலும் அதன் கம்பீரம் ஒரு நாளும் குறையாது என்பதற்கு உதாரணமாக பெரும் கம்பீரத்துடன் நடந்து

சென்றார் கலிங்கத்தின் மகாமேகவாகன அரசர் காரவேலர்.

வீரர்கள் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதே ஒருபுறத்திலி ருந்து எருமைக் கடாக்களின் குரல் எழ அத்திசையை நோக்கினார் காரவேலர். உடனே அவருடன் வந்திருந்த அமைச் சர், "அரசே, நேற்றுதான் நமது வீரர்கள் கலிங்க வனத்திலிருந்து மூன்று எருமைக் கடாக்களைப் பிடித்துக்கொண்டு வந்தி ருக்கிறார்கள். அவை அடங்க மறுக்கின் றன. நம் வீரர்கள் தொடர்ந்து அவற்றை அடக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறார் கள்!" என அவ்வமைச்சர் கூறிக்கொண் டிருந்த போதே தனது இடையில் கட்டியி ருந்த வாளோடு வாளுறையைக் கழட்டி வீரன் ஒருவனிடம் கொடுத்த காரவே லர், "எருமைகளை அடக்கி வெகு காலம் ஆகிறது அமைச்சரே! பீமவேலன் வந் தால் என் வயதினைச் சுட்டிக் காட்டி அனுமதிக்க மாட்டான். அவன் திரும்பு வதற்குள் அந்த எருமைக் கடாவா அல்

லது நானா என்று பார்த்து விடுகிறேன்” எனக் கூறிக்கொண்டே தோளில் அணிந்திருந்த பூணூலையும் கழட்டித் தூக்கி எறிந்தார். அது கீழே விழாமல் பிடித்துக் கொண்டான் அவருடன் வருகை தந்த வீரர்களுள் ஒருவன்.

“எருமைக் கடாக்களை திறந்து விடுங்கள்” கட்டளையிட்டார் கலிங்க மன்னர் காரவேலர்.

அரசரின் கட்டளையைக் கேட்ட வீரன் தயக்கத்துடனே நிற்க. “இரும்புக் கதவைத் திற என்று கட்டளையிட்டேன்!” என மீண்டும் கட்டளையிட்டார் காரவேலர்.

“அரசே இளவரசர்...” என அவ் வீரன் ஏதோ கூற வாயெடுத்தான். ஆனால், அதற்குள் குறுக்கிட்ட காரவேலர், “அவனது கட்டளையைப் பற்றி நானும் அறிவேன். கதவைத் திற!” எனக் கூறியவர் இடைத் துணியை தொடையில் நன்கு வரிந்து கட்டிக்கொண்டார்.

https://telegram.me/aedahamlibra

"அரசே, இம்மூன்று எருமைக் கடாக்களையும் பிடிப்பதற்குள் நம் வீரர்களும் நால்வரை இழந்துவிட்டோம். ஐவரின் நிலை கவலைக்கிடமாக இருக்கிறது. மூன்று கடாக்களும் ஒற்றுமையாக இணைந்து அனைவரையும் எதிர்க்கின்றன. இப்போது திறந்து விட்டால் இந்தப் பயிற்சிப் பாசறையையே அதகளம் செய்து விடும். அது மட்டுமல்லாமல் இளவரசருக்கு எங்களால் பதில் கூற இயலாது!" என படைத்தலைவன் ஒருவன் அவரைத் தடுத்துக் கொண்டிருந்த போதே, "அடேய்... காரவேலனுக்குத் தலை மயிர் நரைத்து விட்டதும் அவனது உடலும் பலவீனமடைந்து விட்டது என்று நினைத்துவிட்டீர்களா?" என வெகுண்டெழுந்தவர், அவருக்கு முன்னால் நின்ற காவலனைக் கண்டு முறைத்தார். அடுத்த கணம் அவன் வாயிலைத் திறக்க நகர்ந்தான். காரவேலர் எருமைக் கடாவை எதிர்பார்த்து தயாராக வாயிலில் நின்றுகொண்டிருந்தார்.

https://telegram.me/aedahamlibrary

அப்போது பாசறையின் மறுபுறத்தில் புரவி ஒன்று கனைக்கும் சத்தம் எழ திரும்பிப் பார்த்தார். அங்கே புரவியில் கம்பீரமாக விரைந்து காரவேலரை நோக்கி வந்து கொண்டிருந்தான் பீமவேலன். அவனைப் பார்த்த அடுத்த கணம் வீரர்கள் மற்றும் காரவேலரின் அமைச்சர் பெருமூச்சு விட காரவேலர், “சில நாழிகை கழித்து அவன் வந்திருக்கக் கூடாதா?” என்று முணுமுணுத்துக் கொண்டார். புரவியில் வந்த பீமவேலனையும், அவருக்கு முன்னால் இரும்புக் கதவுகளுக்குப் பின்னால் நின்றுகொண்டிருந்த எருமைக் கடாக்களையும் மாறி மாறி ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

அங்கு வந்த பீமவேலன் புரவியிலிருந்து குதித்தவன் காரவேலர் நின்ற நிலையை நோக்கினான். பிறகு, “தந்தையர் சிறிது நேரம் கழித்து நான் வந்திருக்கலாமோ?” எனப் புன்சிரிப்புடன் வினவினான்.

"நானும் அப்படித்தான் பீமவேலா நினைக்கிறேன்" எனப் பதிலளித்தவர் பிறகு, "நீ வந்துவிட்டதால் எந்த பாதக மும் இல்லையே!" எனக் கூறிக்கொண்டே இடுப்புத் துணியை மீண்டும் வரிந்து கட் டினார்.

அவரது செயலைக் கண்ட பீமவே லன், "தந்தையே உங்களது வீரத்தை காட்டும் இடம் இது அல்ல. அதற்கான காலமும் இது அல்ல" எனக் கூறியவன் காரவேலரின் கையைப் பிடித்து அழைத் துக் கொண்டு அருகில் காணப்பட்ட குடி லுக்கு அழைத்துச் சென்றான்.

உள்ளே நுழைந்தவன் அமர்வ தற்கு முன்னதாகவே, "தந்தையே, என் தங்கை வர்த்தினி எங்கே?" என்று வின வினான்.

பதிலுக்குக் காரவேலர், "நீயாவது எங்கே செல்கிறேன் என்று தெரிவித் துவிட்டுச் செல்கிறாய். ஆனால் உன் தங்கை எங்கே செல்கிறாள் என்று கூட

தெரிவிக்காமல் சென்று விடுகிறாள்?" என வருத்தத்துடன் பதிலளித்தார்.

"அவள் மாறுவேடத்தில் உங்களுக்கு முன்னால் நின்றால் கூட உங்களால் அடையாளம் காண இயலாது."

"உன் தங்கையை நீ எப்போது விட்டுக் கொடுத்துப் பேசியிருக்கிறாய்?" என காரவேலர் பேசிக் கொண்டிருந்த போதே இடைமறித்த கலிங்க அமைச்சர், "போதும்... போதும்... இளவரசியின் புகழ் பாடியது போதும் இளவரசே, சென்ற காரியம் என்ன ஆனது?" அதைப் பற்றி நாம் விவாதிக்கலாமா?" எனக் குறுக்கிட்டார்.

"அவள் விரைவில் திரும்பி வந்து விடுவாள் பீமவேலா... நீ அவளைப் பற்றி கவலைப் படவேண்டாம். சென்ற காரியம் என்ன ஆனது? வைதீகர் என்ன தெரிவித்தார்?" என வினவினார் காரவேலர்.

"தந்தையே அழைப்பு நமக்கு மட்டும் விடுக்கப்பட வில்லை."

https://telegram.me/aedahamlibra

“பிறகு, யார் யாருக்கு அனுப்பபப்பட் டிருந்தது?”

“சுங்க அரசர் மற்றும் அவந்தி படைத் தலைவன் வஜ்ரபாகுவிற்கும்.”

“யார் யார் வந்திருந்தார்கள்?”

“சுங்க மன்னர் புஷ்ய மித்திரன், சுங்க இளவரசர்கள் சுங்கமித்திரன், அக் னிமித்திரன் மற்றும் அவந்தி படைத்த லைவனும் சாதவாகன இளவரசனுமான வஜ்ரபாகு!”

“எதற்காகத் திடீரென்று இத்த னைப் பெரிய ஏற்பாடு? அதுவும் நமது வைரியான சுங்கர்களுடன் நம்மைச் சந் திக்க வைக்கக் காரணம் என்ன?”

“காரணம் இருக்கிறது தந்தையே?”

“என்ன காரணம் பீமவேலா?” என அவர் கேட்டுக் கொண்டிருந்த போதே அங்கு வந்த காரவேலரின் மகள் வர்த் தினி, “வேறு எதற்காக? நமக்கு பொது

எதிரி ஒருவன் வந்துகொண்டு இருக் கிறான் அல்லவா? அவனைத் தடுத்து நிறுத்தும் வழியைப் பற்றித்தான் விவா தித்திருப்பார்கள். என்ன அண்ணா நான் கூறுவது மெய்தானே?" என வினவிய வள் அவனது விழிகளையே புன்சிரிப்பு டன் நோக்கினாள்.

பீமவேலன் வர்த்தினியைப் பார்த்து தலையாட்டினான். அப்போது காரவே லர், "பீமவேலா என்ன கூறுகி றாள் இவள்? நடந்ததை விளக்கமாகத் தெரிவி!" எனக் கட்டளையிட்டார் கார வேலர்.

"ஆமாம் தந்தையே, இவள் கூறு வது அனைத்தும் உண்மையே. சோழ மன்னன் வட நாடுகளின் மீது படை யெடுப்பதாக அறிவித்து வடுகர் நாட் டில் தனது படையைத் திரட்டிக்கொண்டு நின்றுகொண்டிருக்கிறான் அல்லவா" எனக் கூறிக்கொண்டிருந்த போதே இடைமறித்த வர்த்தினி எதையோ கூற

https://telegram.me/aedahamlibra

வாயெடுத்தாள். ஆனால் அவளைத் தடுத்த காரவேலர், "நடந்த நிகழ்வுகள் பற்றி பீமவேலன் முதலில் அனைத்தை யும் தெரிவிக்கட்டும். பிறகு நீ பேசு!" எனக் கட்டளையிட்டார்.

வர்த்தினி காரவேலரை மறுத்துப் பேசாமல் அமைதியானாள்.

பீமவேலன், "வடக்கு நோக்கி படை யெடுத்து வரும் சோழ மன்னர் கரிகா லனை எப்படித் தடுத்து நிறுத்த வேண் டும் என்பது பற்றி ஆலோசிக்க வரவ ழைத்திருந்தார்." எனத் தெரிவித்தான்.

"என்ன முடிவு எடுத்தார்கள்?"

"பகையை மறந்து கலிங்க நாடும் சுங்க நாடும் ஒன்றிணைய வேண்டுமாம். சாதவாகன இளவரசன் வஜ்ரபாகு ஏற்க னவே சுங்கர்களுடன் சேர்ந்துவிட்டான். அவனை அவந்தியின் அரசனாக அறி விக்கப் போகிறார்கள்! அதற்கான ஏற்பா டுகளும் துவங்கி விட்டன. அது மட்டுமல்

லாமல் வஜ்ரபாகுவின் தங்கை அவந்தி இளவரசி அவந்திகா"வை சுங்க நாட்டுப் பட்டத்து இளவரசன் சுங்கமித்திரனுக்கு திருமணம் செய்து வைக்கவும் முடிவெடுத்திருக்கிறார்கள்."

"சாதவாகன படைத் தலைவன் தன்னிச்சையாக இப்படி முடிவெடுத்தால் சாதவாகன அரசன் சதகர்ணி எப்படி இதற்கு ஒப்புக்கொள்வான்? அதிலும் அவந்தியின் அரியணையை வஜ்ரபாகுவிற்கு அவன் எப்படி விட்டுக் கொடுப்பான்?"

"சோழப் படையை சதகர்ணியுடன் சேர்ந்தே எதிர்க்க வேண்டும் என்பது வைதீகர் பாகவதரின் திட்டம்!"

"அது சந்தேகம் தான் பீமவேலா... சதகர்ணி ஒருநாளும் தமிழ் படைகளை எதிர்க்க மாட்டான். அவர்களுடன் இசைந்து செல்லவே விருப்பப்படுவான். தமிழ் படையை அவன் எதிர்த்தால் அடுத்த கணம் தென்னக வணிகர்கள்

மூலமாக அவர்களின் தலைநகர் பைத் தானுக்கு வரும் செல்வங்கள் அனைத் தும் நின்றுவிடும்."

பீமவேலன் எந்தப் பதிலையும் கூறாமல் அமைதியாக அமர்ந்திருந்தான்.

"அவர்களின் திட்டத்திற்கு நீ என்ன மறுமொழியை தெரிவித்துவிட்டு வந் தாய்?"

"நான் எந்தப் பதிலையும் அளிக்க வில்லை. தங்களிடம் விவாதித்து விட்டு பதில் அளிப்பதாக வந்துவிட்டேன்."

"நீ சுங்கர்களை நம்புகிறாயா?"

"அவர்களின் திட்டத்தில் எனக்குத் துளியளவும் நம்பிக்கை இல்லை!"

"அவர்கள் மீதா அல்லது அவர்கள் வகுத்திருக்கும் திட்டத்தின் மீதா?"

"தனது அரசனின் முதுகில் குத்தி அரசைக் கைப்பற்றியவன் தானே அந்த

புஷ்யமித்திரன். அவனை நான் எப்படித் தந்தையே நம்புவேன்!”

“அவர்களின் போர் தந்திரம் என்ன வேண்டுமானாலும் இருக்கட்டும். கலிங் கப் படை ஒருநாளும் சுங்கர்களுடன் இணையாது என்று புஷ்யமித்திரனுக்கு தகவலைத் தெரிவித்துவிடு!”

“தங்களது உத்தரவு தந்தையே!” எனப் பணிந்தான் பீமவேலன்.

அங்கு சிறிது நேரம் அமைதி நில வியது. அப்போது அவர்கள் விவா தித்துக் கொண்டிருந்த கூடாரத்திற்குள் வீரன் ஒருவன் வந்து வணங்கி நின்றான். அவனைப் பார்த்தவர் அப்படியே நிற்க வைத்துவிட்டு அருகில் தூணில் சாய்ந்து கொண்டு நின்ற அவரது புதல்வி வர்த்தி னியிடம், “மகளே, நீ ஏதோ கூற வந்தாயே என்ன?” என வினவினார்.

“சோழப் படையை ஒருநாளும் சாத வாகன அரசன் சதகர்ணி தாக்க மாட்

டார் என்று கூறினீர்கள் அல்லவா? அந்த அனுமானம் பொய்த்து நாட்கள் சில ஆகிறது தந்தையே!"

"என்ன வர்த்தினி நீ கூறுகிறாய்?"

"ஆம், தந்தையே. நான் கூறுவது உண்மை!"

"என்ன உண்மை?" குறுக்கிட்டான் பீமவேலன்.

"சாதவாகனர்களின் எல்லைப் புறப் படை முன்னறிவிப்பு இல்லாமல் சோழப் படையைத் தாக்கி தினங்கள் இரண்டு ஆகிறது."

"சாதவாகன எல்லைப் புறப் படை சோழப் படையைத் தாக்கியதா?"

"ஆம்!"

"சோழப் படையின் கதி என்ன ஆனது?"

“உங்களது கேள்விக்கு என்ன மறு மொழி அளிப்பது என்று எனக்குத் தெரியவில்லை தந்தையே!”

“எதைப் பற்றி பேசுகிறாய் மகளே?”

“சாதவகனப் படையின் நிலை என்ன ஆனது எனத் தாங்கள் என்னிடம் வினவியிருந்தால் என்னால் பதிலளித்திருக்க இயலும். சோழப் படையின் நிலை என்ன என்று கேட்டால் என்னால் எப்படி பதிலளிக்க இயலும்?”

“என்ன மகளே கூறுகிறாய்?” வியப்புடன் வினவினார் கலிங்க மன்னர் காரவேலர்.

“ஆம் தந்தையே! சாதவாகனப் படை முதலில் முன்னறிவிப்பின்றி தாக்கியதும் சோழப் படை முதலில் சிதறத் துவங்கியது. ஆனால், சில நாழிகைகளுக்குள் சோழப் படை தன்னை தயார் படுத்திக்கொண்டு திருப்பித் தாக்கியது. சாதவாகன எல்லைப் படை மொத்த

https://telegram.me/aedahamlibra

மாக அழிந்து விட்டது. அது மட்டுமல்லா மல்....?"

"மேலும் என்ன இருக்கிறது?" அவ சரத்தில் வினவினார்.

"சோழப் படை வடுகர் நாட்டை ஓட் டிய சாதாவகன கோட்டையையும் கைப் பற்றிக் கொண்டது!"

"என்ன, சாதவாகனக் கோட்டை விழுந்து விட்டதா?"

"ஆம்! விழுந்தது சாதவாகன கோட்டை மட்டும் அல்ல?"

"வேறு என்ன?"

"நமது கௌரவமும் தான்!"

"என்ன மகளே கூறுகிறாய்? சாத வாகன எல்லைப் புறக் கோட்டை விழு வதற்கும் நமது கௌரவத்திற்கும் என்ன தொடர்பு?"

"தொடர்பு இருக்கிறது தந்தையே!"

"அதுதான் என்ன என்று வினவுகிறேன்!"

"சாதவாகனக் கோட்டையைக் கைப்பற்றியதும் சோழர்கள் உங்களால் சிதறடிக்கப்பட்ட மூவேந்தர் கூட்டணியை மீண்டும் திராமிர நாட்டில் நிலை நிறுத்தி விட்டார்கள்! இனி தொடர்ந்து தமிழர் படை மொழிபெயர் தேயத்தில் காவல் காக்கும்! தென்னகத்திலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் வணிகர்களைக் காத்து நிற்கும். வடக்கிலிருந்து தெற்கு நோக்கிய படையெடுப்பையும் தடுத்து நிறுத்தி விடுவார்கள்!"

"மீண்டும் அவர்கள் தங்களின் படையை திராமிர நாட்டில் நிலை நிறுத்திவிட்டால் நமது நாட்டு வணிகம் முற்றிலும் சீர்குலைந்து போய்விடும்!" எனக் குறுக்கிட்டான் பீமவேலன்.

"இது நமக்கு பெருத்த அவமானம் மகளே!"

https://telegram.me/aedahamlibra

“நானும் அதைத்தான் தெரிவித்தேன்” என வர்த்தினி கூறிக்கொண்டிருந்த போதே அங்கு நின்றுகொண்டிருந்த வீரன், “அரசே...” எனக் குறுக்கிட்டான்.

“என்ன?” ஆத்திரத்துடன் வினவினான் பீமவேலன்.

“தென்னக வணிகன் ஒருவன் கைது செய்யப்பட்டிருக்கிறான்.”

“அதற்கு இப்போது என்ன?”

“அவன் அரசரை அல்லது இளவரசரை சந்திக்க வேண்டும் என்கிறான்?”

“இப்போது நான் எந்தக் கைதியையும் சந்திக்கும் நிலையில் இல்லை” எனக் கோபத்துடன் பதிலளித்தார் காரவேலர்.

“தங்களது உத்தரவு அரசே!” என அவ்வீரன் நகர, “அவனைக் கைது செய்து மற்ற ஒற்றர்களுடன் சிறையில் அடை!” எனக் கட்டளையிட்டான் பீமவேலன்.

https://telegram.me/aedahamlibra

"மகளே, நீ தொடர்ந்து கூறு!"

"இந்த முறை வழக்கத்திற்கு மாறாக சாதவாகனர் தாக்காளர்களை பயன்ப டுத்தியிருக்கிறார்கள்!"

"அப்புறம்?"

"சாதவாகனர் சோழப் படையை ஊர்மி வியூகத்தில் தாக்கியிருக்கிறார் கள்!"

"ஊர்மி வியூகமா?"

"ஆம்!"

"அதில் சிக்கினால் மொத்தப் படை யும் அல்லவா சீரழிந்து போய்விடும்?"

"நடந்தது வேறு தந்தையே! ஊர்மி வியூகத்தையும் சோழர்களின் வியூகம் தகர்த்து விட்டது. தகர்த்து விட்டது எனக் கூறுவதை விட மொத்த சாதவாகன படையையும் சோழப் படை அழித்து விட் டது என்றே கூறலாம்!"

"என்ன வியூகம் அது?"

https://telegram.me/aedahamlibra

“தெரியவில்லை தந்தையே!”

“குருஷேத்திரப் போரில் பீஷ்மரால் அமைத்த ஊர்மி வியூகத்தை அருச்சுன னால் கூட தகர்க்க முடியவில்லை. நாம் சாதவாகன நாட்டைத் தாக்கியபோது கூட இதே படைத் தலைவன் ஊர்மி வியூ கத்தைக் கொண்டுதான் தாக்கினான். நினைவு இருக்கிறதா?”

“நினைவு இருக்கிறது தந்தையே!” ஒரே நேரத்தில் பதிலளித்தார்கள் இருவ ரும்.

“அன்று பெரும் மழை பெய்ததால் நமது படை தப்பியது. இல்லையேல்...”

“..........”

“சோழ அரசன் கரிகாலனுடன் எச் சரிக்கையுடன் தான் நாம் இருக்க வேண் டும்!”

"தந்தையே உங்களுக்கு இன்னொரு அதிர்ச்சி அளிக்கக் கூடிய செய்தியும் என்னிடம் இருக்கிறது?"

"என்ன அது?"

"நீங்கள் நினைப்பதைப் போன்று சோழப் படைக்கு தலைமை தாங்கியது சோழப் பேரரசர் கரிகாலர் அல்ல!"

"பிறகு யார்?" என காரவேலர் வினவினார்.

"சோழப் படைத் தலைவன் செங்கு வீரனா?"

"இல்லை. அவரும் இல்லை!"

"பிறகு யார்?"

"யாரோ ஒரு பெண் என்று கேள்விப்பட்டேன். ஆனால், அவள் யார் என்று மட்டும் தெரியவில்லை!"

"ஒரு பெண்ணா சாதவாகன படையைச் சிதறடித்து வீழ்த்தினாள்..." என காரவேலர் ஆச்சரியத்துடன் வினவ அப்

போது வீரர்கள் பயிற்சி செய்து கொண்டிருந்த இடத்திலிருந்து சலசலப்புத் தோன்றியது.

உடனே மூவரும் கூடாரத்தின் வெளியே வந்து பார்த்தார்கள்.

அடைக்கப்பட்டிருந்த மூன்று எருமைக் கடாய்களும் தடுப்புகளை உடைத்துவிட்டு வெளியே வந்திருந்தன.

அடிக்குறிப்பு:

1. சைனர்களுக்கு அதாவது சமணர்களுக்கும் வைதீகர்களைப் போன்றே பூணூல் அணியும் பழக்கம் உண்டு.

https://telegram.me/aedahamlibra

# 19.

# பீமவேல னின் மரியாதை

வனத்தில் பெரும் எருமைக் கூட்டத்தினை வழி நடத்திக் கொண்டிருந்த வலிமையான மூன்று மூத்த எருமைகளை கலிங்கர்கள் பிடித்து வந்திருந்தார்கள். வனத்தில் எதிர்த்த சிங்கம், புலி ஆகியவற்றைத் தங்களின் ஒற்றுமையினாலும் வலிமையான கொம்புகளாலும் தாக்கி சுதந்திரமாக சுற்றித் திரிந்த மூன்று எருமைகளை வலையில் சிக்க வைத்து பெரும் கயிறுகளைக் கொண்டு இழுத்து வந்திருந்தார்கள். இழுத்து வந்த மூன்று எரு

மைக் கடாக்களையும் பெரும் கயிறு களால் கட்டிப் போட்டு நெருக்கமான இடத்தில் அடைத்து வைத்திருந்தார்கள். வனத்தில் சுதந்திரமாக சுற்றித் திரிந்த மூன்று எருமைகளும் கயிறுகளால் கட் டப்பட்டு அதிலிருந்து வெளிப்பட முயற் சித்துக் கொண்டிருந்தன.

கயிற்றினை அறுத்துவிட்டு மூன்று எருமைகளும் தப்பிக்க முயற்சித்து தொடர்ந்து கயிற்றினை இழுத்த வண் ணம் காணப்பட்டன. கயிறானது எருமை களுடன் உடலில் இறுகி குருதி வழிந்த படி ரணத்தை உருவாக்கியிருந்தது.

மூன்றும் முண்டியடித்து இழுத்தன. எருமைகள் திமிரத் திமிர கயிறு அவற் றின் கழுத்தினை கவ்வத் துவங்கி யது. எருமைகள் தொடர்ந்து இழுக்க இழுக்க கயிற்றினைத் தொடர்ந்து திமில், கால் ஆகியவற்றைக் கட்டியிருந்த கயி றுகளும் இறுகி அவற்றின் உயிர்களை மெல்ல பருகத் துவங்கின. கயிற் றின் இறுக்கத்தில் குருதி ஓட்டம் முற் றிலும் தடை பட்டிருந்தது. விழிகள்

வெளியே வந்து விழுந்து விடுவதைப் போன்று விழிகள் சுருங்கின. குருதி ஓட்டம் தடை பட்டதால் விழிகளிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. எருமைகள் முயற்சியைக் கைவிட்டன. ஆனால் தலைமை எருமைக் கடா மட்டும் தன் முயற்சியை கைவிடாமல் தொடர்ந்து அக்கயிற்றினை அறுத்து விடும் முனைப்பில் தொடர்ந்து இழுத்துக் கொண்டிருந்தது. எருமைக் கடாவின் உயிர் மெல்ல போய்க்கொண்டிருக்கிறது. அதைக் கண்ட மற்ற இரண்டு எருமைகளும் அந்த இடமே அதிரும் படி அடித் தொண்டையில் கத்த உடலைச் சிலுப்பிக் கொண்டு இழுத்தது அவ்வெருமை. அடுத்த கணம் அதன் உடலில் கட்டப்பட்டிருந்த கயிறு அனைத்தும் பிய்த்துக் கொண்டன.

நீண்ட ஒரே கயிற்றிலே மூன்று எருமைகளும் கட்டப்பட்டிருந்ததால் கயிறு ஒரு இடத்தில் அறுத்துக் கொண்டதுமே மூன்று எருமைகளும் விடுவித்துக்

கொண்டன. தடுப்பு வேலிகளால் தடுக்கப்பட்டிருந்த அந்தச் சுவரை மூன்று எருமைகளும் சேர்ந்து முட்ட அடுத்த கணம் அந்தக் கொட்டகையே இடிந்து போய் கீழே விழுந்தது. வெளியே வந்த எருமைகளின் மீது காவல் வீரர்கள் ஈட்டிகளையும், வேல்களையும் எறிந்தார்கள். வனத்தில் மழை, வெயில் எனத் திரிந்ததால் மூன்று எருமைகளின் தோல்களும் வச்சிர மரத்தைப் போன்று கெட்டிப்பட்டுக் காணப்பட்டதால் வீரர்கள் எறிந்த ஈட்டிகளும், வேல்களும் அதன் மீது விழுந்து கீழே விழுந்தன. நீண்ட, கூர்மையான கொம்புகள், பிடிக்க முடியாத படி திரண்டு காணப்பட்ட திமில், வலிமையான கால் குளம்பு, தடித்த தோலையும், இறுகிய தசையையும் கொண்ட மூன்று எருமைகளும் சுற்றி நின்றவர்களை அமைதியாக சலனமின்றி நோக்கின. நடுவில் நின்று கொண்டிருந்த எருமை பின்னங்காலால் மண்ணை வாரி இறைத்தது. பக்க வாட்டில் நின்ற இரண்டு எருமைகளும் நடு

வில் நின்ற எருமையை நோக்கின. அது தலையைத் தரையில் வேகமாக முட்டி மண்ணைக் கிளறி தனது முதுகில் போட்டுக் கொண்டது. கண்ணீர் வழிந்த தனது விழிகளுடன் தலையை வேகமாக ஆட்டியது அவ்வெருமை. அடுத்த கணம் இரண்டு எருமைகளும் இரண்டு பக்கமாகச் சுற்றி நின்ற வீரர்களை நோக்கிக் கொம்புகளை நீட்டிக்கொண்டு ஆவேசத்துடன் பாய்ந்தன.

எதிர்பட்ட வீரர்கள் அனைவரையும் கொம்புகளால் குத்தித் தூக்கி எறிந்தபடி அந்த இடத்தையே அதகளப்படுத்தத் துவங்கின மூன்று எருமைகளும். எருமைகளின் உடலில் தொங்கிய கயிறுகளைப் பற்றியபடியும், எருமையின் திமிலை இறுக்கமாகப் பற்றியபடியும் சில வீரர்கள் எருமையுடன் பயணிக்க மற்றவர்கள் எருமையின் கொம்புகளுக்கும், கால் குளம்புகளுக்கும் அகப்பட்டு துடிதுடிக்கலானார்கள். எதிர்பட்ட வீரர்களை கொம்போடு தரையில் அழுத்திக்

கொன்றன எருமைகள். வீரர்கள் எறிந்த சில வேல்கள் எருமைகளின் முகத்தைத் தாக்க எருமைகளின் ஆவேசமும் நேரத்திற்கு நேரம் அதிகரிக்கத் துவங்கியது. தலையை சிலிர்த்து உடலை ஒரு முறை அப்படியும் இப்படியுமாக ஆட்டியது எருமை. அடுத்த கணம் அதன் திமிலைப் பிடித்தபடி எருமையை அடக்க முயற்சித்துக் கொண்டிருந்த வீரர்கள் அனைவரும் பறந்து சென்று தரையில் விழுந்தார்கள். அடுத்தகணம் அவர்கள் அனைவரும் எருமையின் கொம்புகளுக்கும், தரைக்கும் இடையில் அகப்பட்டு மரணத்தைத் தழுவினார்கள்.

சற்று முன்னர் பயிற்சிப் பாசறையாக விளங்கிய அவ்விடம் எருமைகளின் தாக்குதலால் போர்க்களத்தைப் போன்றே காட்சியளித்தது. எங்கும் எருமைகளால் தாக்கப்பட்ட வீரர்கள் விழுந்து கிடந்தார்கள். அலறல் சத்தங்கள் எழுந்து அந்த இடத்தையே போர்க்களமாக்கியது. இந்த நிலையில் தான்

https://telegram.me/aedahamlibra

குடிலுக்குள் தனது மகன், மகள் மற்றும் அமைச்சர் ஒருவருடன் விவாதித்துக் கொண்டிருந்த கலிங்க மன்னர் காரவேலர் வெளியே வந்தார்.

குடிலுக்குள் நுழைந்து சிறிது நேரம் விவாதித்துவிட்டு வருவதற்குள் பாசறை முழுவதும் சிதைவடைந்து விட்டதைக் கண்ட காரவேலர் ஒருகணம் அதிர்ச்சியில் திகைத்து நின்றுகொண்டிருந்தார். அப்போது அமைச்சர், “அரசே” என்று அலறினார்.

அவர் அலறல் வந்த திசையை நோக்கினர் அனைவரும். சற்றுத் தள்ளி நின்ற மன்னர் காரவேலரை நோக்கி எருமைக் கடா ஒன்று ஆவேசத்துடன் ஓடிவந்தது. எருமைக் கடா மன்னரை நோக்கி ஓடி வந்ததும் மன்னரின் மெய்க் காவலர்கள் எருமையைத் தடுக்கப் பாய்ந்தார்கள். ஆனால், எருமையின் கொம்புகளால் அவர்கள் அனைவரும்

சுவரை நோக்கித் தூக்கி எறியப்பட்டார்கள்.

எருமை மன்னரை நோக்கி வேகமாக வந்துகொண்டிருந்தது.

இடைத் துகிலை தொடையிலும், இடையிலும் நன்கு இறுக்கமாக வரிந்து கட்டிக் கொண்டு இடது காலை முன்னால் வைத்து வலது காலை சற்றே பின்னால் வைத்து எருமையை எதிர்கொள்ள தயாரானார்.

நடப்பதைக் கண்ட பெரும் வீரனான பீமவேலன் கலிங்க மன்னர் காரவேலருக்கும் எருமைக்கும் இடையில் சென்று காரவேலரைக் காக்க ஒரு அடியை முன்னால் வைத்தான். அடுத்த கணம் அவனது கரம் அவளது சகோதரியால் இறுக்கமாக பிடிக்கப்பட அவளைக் கோபத்துடன் நோக்கினான்.

அவள் சிறு புன்னகையை இதழ்களில் தழுவ விட்டுக்கொண்டு,

"அண்ணா, தந்தையைத் தடுக்க வேண்டாம்! நடக்கப் போவதை வேடிக்கை மட்டும் பாருங்கள்!" எனக் கூறி அவனது கைகளை விடுவித்தாள்.

தனது திட்டத்தைக் கைவிட்டாலும் எதற்கும் தயாராக காரவேலருக்கு உதவ சித்தமாக நின்றுகொண்டிருந்தான்.

வேகமாக காரவேலரை நோக்கி ஓடிவந்தது எருமை.

கீழே தரையில் கைகளைத் தேய்த்து தட்டித் விட்டுக் கொண்டார் காரவேலர்.

தலையை ஆட்டிக்கொண்டு வேகமாக காரவேலரைத் தூக்கி எறிய அவரை முட்டியது எருமை. அடுத்த கணம் எருமையின் இரண்டு கொம்புகளையும் காரவேலர் பற்ற சிறிது தூரத்திற்கு கால்கள் தேய்ந்தபடி பின்புறமாக சென்றார். அடுத்த கணம் எருமை முன்னோக்கி நகர இயலாமல் அப்படியே நின்றிருந்

தது. தலையை வேகமாக ஆட்டி கொம்பு களை விடுவித்துக்கொள்ள போராடியது எருமை.

காரவேலர் விடுவதாக இல்லை.

எருமையின் கொம்பினைக் கீழே பிடித்து அழுத்தினார் காரவேலர். எருமையும் தொடர்ந்து முன்னோக்கி நகர்ந்தது. காரவேலர் இடது காலைத் தரையில் அழுத்தி ஊன்றிக்கொண்டு பின்னோக்கி நகராமல் எருமைக் கடாவின் தலையைத் திருப்பத் துவங்கினார். எருமை ஒருபுறம் தலையைத் திருப்பி விடுவித்துக் கொள்ள போராட காரவேலர் அதைக் கீழே அழுத்த அதன் தலையை மறுபுறமாகத் திருப்பினார். கடுமையான போராட்டம் நடந்து கொண்டிருந்தது, "அந்தப் போராட்டத்தில் காரவேலர் வென்றால் எருமை அடக்கப்படும். ஆனால், எருமை வென்றால் காரவேலரின் நிலை என்ன ஆகும்? என்பதை யாராலும் ஊகிக்க இயலாது" என்

பதை அறிந்த பீமவேலன் பதற்றத்துடன் வேடிக்கைப் பார்த்தபடி நின்றுகொண்டி ருந்தான்.

ஆனால் வர்த்தினி தனது தந்தை காரவேலரின் வீரத்தைப் பார்த்துக் கொண்டு நின்றுகொண்டிருக்க, "தந் தையே, அதன் கொம்பினை முறித்து அதைக் கொன்றுவிடுங்கள்!" எனச் சத் தம் எழுப்பினான் பீமவேலன்.

"அண்ணா... சற்று நேரம் அமைதி யாக இருக்கிறாயா?" என ஆத்திரத்துடன் தெரிவித்தாள் வர்த்தினி.

காரவேலர் பிடி நேரத்திற்கு நேரத் திற்கு நேரம் இறுகிக் கொண்டிருந்தது. அதே நேரம் அவர் தளர்ந்துகொண்டும் இருந்தார். எருமையின் தலையை அவர் திருப்பத் திருப்ப எருமை தன்னைக் காப் பாற்றிக்கொள்ள கடுமையாக போராடிக் கொண்டிருந்தது.

இரத்த நாளங்கள் அனைத்தும் இறுக்கத்தின் காரணமாக வெடிப்பதைப் போன்று உணர்ந்தார் காரவேலர். விரைந்து எருமையை வீழ்த்தி விட வேண்டும் இல்லையேல் எருமை வெற்றியடைந்து விடும் என்பதைப் புரிந்து கொண்ட காரவேலர் எருமையின் கொம்பிலிருந்து இடது கையை மட்டும் விடுவித்து அதன் மூக்குத் துவாரத்தைப் பற்றி கொம்பினை கீழே அழுத்தி மூக்குத் துவாரத்தைப் பற்றி மேலே உயர்த்தினார். எருமையின் தலை காரவேலரிடம் நன்கு சிக்கிக்கொண்டது. காரவேலர் தொடர்ந்து எருமையின் தலையை திருப்பிக் கொண்டிருந்தார்.

அப்போது அந்த இடமே அதிரும்படி காரவேலருக்கு சற்றுத் தொலைவில் எருமை ஒன்று மரண அலறல் எழுப்பியது. திடீரென்று எழுந்த மரண ஓலத்தினால் ஒரு கணம் பார்வையை சத்தம் எழுந்த திசைக்குத் திருப்பினார். அடுத்த கணம் காரவேலர் தனது கவனத்தை

இழக்க இதுதான் தக்க சமயம் என்பதை உணர்ந்த அந்த எருமையும் பின்னால் நகர காரவேலர் தனது பிடியை இழந்தார்.

தன்னை விடுவித்துக் கொண்ட எருமை காரவேலருக்குப் பயந்து பின் வாங்கி நகர்ந்தது. அவரது கண நேர தவறைக் கண்ட வர்த்தினி, "இன்னும் கண நேரம் தாங்கள் கவனத்தை சிதறடிக்காமல் அந்த எருமையின் மீது செலுத்தியிருந்தால் இந்நேரம் அந்த எருமை மண்ணைக் கவ்வியிருக்கும். கிடைத்த வாய்ப்பினை தவற விட்டுவிட்டீர்களே?" என்று வருந்தினாள்.

அவளது வருத்தத்தைக் கண்ட காரவேலர், "என்ன சத்தம் அது?" என வினவியபடியே பார்வையை எருமையின் சத்தம் எழுந்த திசையை நோக்கினார்.

அங்கே எருமை ஒன்றின் தலையைத் திருப்பி கிட்டத்தட்ட அடக்கியிருந்தான் வீரன் ஒருவன். தொலைவிலிருந்தே அக்காட்சியைக் கண்ட காரவே

https://telegram.me/aedahamlibra

லர், “மகளே, பார்த்தாயே... கலிங்க வீர னின் தீரத்தை! சிங்கபுரியின் சிங்கத்தைப் பார்” என மகிழ்ச்சியுடன் தெரிவித்தப டியே பெருமைப் பாடலானார்.

எருமையின் தலையைத் திருப்பி அதை அடக்கிக் கீழே தள்ளிய பிறகு கம் பீரத்துடன் எழுந்தான் அவ்வீரன். அவ னைக் கண்டதுமே காரவேலர், “பீம வேலா, யார் இந்த வணிகன்?” எனக் கேள்வியை எழுப்பினார்.

அப்போது காரவேலருடன் நின்று கொண்டிருந்த காவல் வீரன், “அரசே, அவனைத்தான் நாங்கள் சற்றுமுன் சந் தேகத்தின் பேரில் தென்னக வணிகனாக இருக்கிறானே என்று கைது செய்தோம்!” எனப் பணிவுடன் தெரிவித்தான்.

அவன் தெரிவித்ததுமே பீமவே லன், “கைது செய்தாய் என்கிறாய் அவனது கைவிலங்குகள் எங்கே?” என வியப்புடன் வினவினான்.

“கை விலங்குகள்...” எனத் தயக்கத்துடன் கூறிய காவல் வீரன் என்ன மறு மொழி அளிப்பது என்று தெரியாமல் குழம்பி நிற்க அப்போது குறுக்கிட்ட காரவேலர், “மதம் கொண்ட யானையைப் போன்றே நமது பாசறையையே அதகளமாக்கிவிட்ட எருமையையே அடக்கிய அவ்வீரனின் பலத்திற்கு முன் கை விலங்குகள் எம்மாத்திரம் தாக்குப்பிடிக்கப் போகிறது? எருமைகள் வெளியேறியதும் கை விலங்குகளை பிய்த்துப் போட்டிருப்பான்” எனத் தெரிவித்தவர் அவனைப் பெருமையுடன் நோக்கினார்.

காரவேலர் கூறியதைக் கேட்டபடியே எருமையை அடக்கிவிட்டு நடந்து வரும் வணிகனை நோக்கினாள் வர்த்தினி. அவனைக் கண்டதுமே அவளது இதழ்கள் இரண்டும், “அவரே தான்” என்று முணுமுணுத்தன.

பாசறையின் ஒருபுறம் காரவேலர், பீமவேலன், வர்த்தினி, அமைச்சர் மற்

https://telegram.me/aedahamlibra

றும் காவல் வீரர்கள் சிலர் நிற்க மறுபுறம் எருமையை அடக்கிய அவ்வணிகன் அரசரை நோக்கி நடந்து வந்துகொண்டிருந்தான். மற்றவர்கள் அனைவரும் எருமையின் தாக்குதலுக்கு உள்ளாகி அடிபட்டுக் கீழே கிடந்தார்கள். ஒரு எருமை கீழே கிடக்க மற்ற இரண்டு எருமைகளும் அப்பாசறை மைதானத்தின் மையத்தில் நடந்து சென்றுகொண்டிருந்த வணிகனை நோக்கின. பிறகு, ஒரே நேரத்தில் இரண்டு எருமைகளும் அவனை நோக்கி ஓடிவந்தன.

அதைப் பார்த்த வர்த்தினி, “அண்ணா... இரண்டு கடாக்களும் அவரை நோக்கி ஓடுகின்றன. அவருக்கு உதவி செய்!” என அவசரப்படுத்தினாள்.

ஆனால், பீமவேலனோ, “சற்றுப் பொறு வர்த்தினி. அவன் என்ன செய்யப் போகிறான் என்று சற்று நேரம் வேடிக்கை பார்ப்போம்!” எனக் கூறியவன் பெரும் சீற்

https://telegram.me/aedahamlibra

றத்துடன் ஓடி வந்த எருமைகளை நோக்கினான்.

புழுதி பறக்க கொம்புகளைத் தரையைக் கீறிக் கொண்டு ஓடி வந்தன இரண்டு எருமைக் கடாக்களும். மைதானத்தின் மையத்தில் நின்ற அவ்வணிகன் இரண்டு திசைகளிலிருந்தும் தன்னை நோக்கி ஓடிவரும் இரண்டு எருமைக் கடாக்களையும் அமைதியாக நோக்கினான்.

இடப்புறம் வந்த எருமை சற்று வேகமாக வந்து கொண்டிருந்தது. முதலில் இடப்புற எருமை தான் தாக்கும் என்பதைப் புரிந்து கொண்ட அவ்வணிகன் இடையில் மறைத்து வைத்திருந்த குறுவாள் ஒன்றைக் கையில் எடுத்தான்.

அவனது செயலைக் கண்ட காரவேலர், “பீமவேலா, எருமை தாக்கியதில் இவனுக்குப் பைத்தியம் ஏதாவது பிடித்திருக்குமோ?” என வினவினார்.

https://telegram.me/aedahamlibra

"ஏன் தந்தையே இப்படி வினவுகி நீர்கள்?"

"எதிர்த்து வருவது எலி என நினைத்தா குறுவாளை உருவுகிறான்?"

"தெரியவில்லை தந்தையே... எனக்கும் அந்த குழப்பம் இருக்கிறது!" எனத் தெரிவித்தவன் வியப்புடன் அவ்வ ணிகனையே நோக்கினான்.

கையில் குறுவாளை எடுத் துக் கொண்ட அவ்வணிகன் அவனை நோக்கி ஓடிவரும் இரண்டு எருமைக ளையும் மாறி மாறி பார்வையில் எந் தவித சலனமுமின்றி நோக்கிக்கொண்டி ருந்தான்.

புலிச் சின்னம் பொதித்த அக் குறுவாளானது அடிப்பகுதியில் பிடித் துக் கொள்வதற்கு ஏதுவாக உருண்டை வடிவ வைரக் கல் ஒன்று பதிக்கப்பட்டி ருந்தது. காலை இள வெயிலில் அந்த வைரக் கல் மின்ன தன்னை முட்ட ஓடி

https://telegram.me/aedahamlibrary

வந்த எருமையைப் பார்த்த படியே குறு வாளை ஓங்கினான்.

குறுவாளை எருமையின் உடலுக் குள் பாய்ச்சப் போகிறான் என அனைவ ரும் நினைத்துக் கொண்டிருக்கும் போது குறுவாளினை மாற்றிப் பிடித்தவன் ஓடி வந்த எருமைக் கடாவின் நடு நெற்றியில் கொம்புகளுக்கு இடையில் காணப்படும் நெற்றி முட்டில் குறுவாளின் அடி முனை யால் ஓங்கி அடித்தான்.

அவ்வளவுதான். அவன் அடித்த அடுத்த கணம் விரைந்து ஓடிவந்த அந் தக் காட்டெருமைக் கடா அதே இடத் தில் அலறித் துடித்து கீழே விழுந்தது. கையில் வைத்திருந்த குறுவாளினை இடையில் மீண்டும் செருகியவன் தாக்க வந்த மற்றொரு எருமையை நோக்கி னான். பாறைக் கற்களால் ஆன குன்று ஒன்று ஓடிவருவதைப் போன்று அந்த எருமைக் கடா அந்த இடமே அதிரும் படி வேகமாகப் புழுதி பறக்க ஓடிவந்தது.

வலது காலை நன்கு மண்ணில் புதைத்து வைத்துக்கொண்டு அதன் விழிகளையே பார்த்துக் கொண்டிருந்தான் அவ்வணி கன்.

அவன் எருமையின் விழிகளையே பார்த்துக் கொண்டிருக்க எருமைக் கடா அவனை நெருங்கி கொம்புகளைக் கீழே கொடுத்து அவனைத் தூக்கி எறிய தலையை ஆட்டி முட்டியது. அதன் விழி களைப் பார்த்தபடியே அவ்வெருமையின் கொம்புகளைப் பற்றினான் அவ்வணி கன்.

ஓடி வந்ததும் எருமையின் கொம்பு கள் திடீரென்று பிடிக்கப்பட்டதால் கண நேரத்தில் நிறுத்தப்பட்ட அதன் உடல் குலுங்கி பின்னங்கால்கள் இரண்டும் மேலே தூக்கி பிறகு கீழே விழுந்தன. எருமை தன்னை விடுவித்துக்கொள்ள போராடியது. அதற்கு அதிக வலியைக் கொடுக்கவில்லை அவ்வணிகன். அது போராட முயல்வதற்குள் அதன் தலை

யைத் திருப்பி அதைப் பிடித்துக் கீழே தள்ளி அடக்கி விட்டிருந்தான்.

அவனைச் சுற்றி மூன்று எருமைகளும் கீழே கிடந்தன. கண் முன்னால் கண்ட காட்சிகளை நம்பலாமா? அல்லது வேண்டாமா? என எண்ணிக்கொண்டு அனைவரும் அவனையே பார்த்துக் கொண்டு நிற்க மேலும் ஒரு அதிசயத்தை நிகழ்த்துபவனைப் போன்று கீழே கிடந்த மூன்று எருமைகளின் காது மடல்களைத் திருப்பி அதன் கழுத்தில் காணப்படும் நரம்பு முடிச்சைத் தாக்கி அவற்றின் காது களில் எதையோ ஓதினான்.

ஒவ்வொரு எருமையின் காதுகளிலும் அவன் ஓதி முடித்ததும் மந்திரத்திற்கு ஆட்பட்டதைப் போன்றே மூன்று எருமைகளும் எழுந்து நின்றன. எழுந்து நின்ற எருமைகளை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்த போது எழுந்து நின்ற எருமை ஒன்றின் மீது தாவி அமர்ந்தான் அவ்வணிகன்.

அமர்ந்ததோடு மட்டுமல்லாமல் பாசறை மைதானத்தின் மறுபுறத்தில் நின்ற அரசர் காரவேலரை நோக்கி எரு மையில் அமர்ந்தபடி வீறு நடை போடலா னான். ஒரு எருமையில் அவன் அமர்ந் திருக்க மற்ற இரண்டு எருமைகளும் அவனுக்குக் கட்டுப் பட்டவைகளைப் போன்றே அவனைப் பின்தொடர்ந்து நடந்து வந்துகொண்டிருந்தன.

எருமையின் மீது அமர்ந்து வருபவ னைக் கண்ட காரவேலர் பீமவேலனிடம், "இவன் யார் பீமவேலா? எருமையின் மீது வருகிறான். காலனா இவன்?" என வின வினார்.

அதைக் கேட்ட பீமவேலன், "ஆமாம் தந்தையே! ஆனால் சிறு திருத் தம்!" எனப் பதிலளித்தவன் தனது இடை யுறையிலிருந்து நீண்ட வாளினை உரு வினான்.

"என்ன திருத்தம்?"

https://telegram.me/aedahamlibra

"காலனின் தூதுவன்!"

"காலனின் தூதுவனா?"

"ஆம்!"

"எந்தக் காலனை நீ குறிப்பிடுகிறாய்?" என காரவேலர் வினவ, "மன்னிக்கவும் தந்தையே, அவரது பெயரை இந்த நிலையில் என்னால் கூற இயலாது! சற்றுப் பொறுங்கள்!" எனக் கூறிய பீமவேலன் வாளினை உருவிக் கொண்டு இரண்டடி முன்னால் சென்று எருமையின் மீது அமர்ந்திருந்த வணிகனை நோக்கியபடியே மண்டியிட்டவன், "அவர் வேறு யாருமில்லை தந்தையே... கருணையே வடிவான செம்பியச்சோழரின் வழித் தோன்றலும், நமது கலிங்கத்தையேச் சுடுகாடாக்கிய அசோகப் பியதசி மௌரியனையேத் தடுத்து நிறுத்தி வெற்றிகண்ட மாமன்னன் இளஞ்சேட்சென்னியின் புதல்வரும், வெண்ணியில் தன்னை எதிர்த்த ஒட்டு மொத்த தென்னக மன்னர்களையும் வென்று தனக்குரிய அரசைக் கைப்

பற்றிய தென்னாட்டு வேங்கை, அகத்தியர் தனது தவ வலிமையினால் பாய வைத்த காவிரியையே தனது பலத்தினால் தடுத்து நிறுத்திய வீரர்களுக்கெல்லாம் வீரர், சூரர்களுக்கெல்லாம் சூரர் கரிகாற் பெருவளத்தான் தான் அவர்!" எனத் தெரிவித்தவன் தரையையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"அப்படியெனில் எருமைக் கடாவின் மீது அமர்ந்திருக்கும் இவர்?"

"கலிங்கத்தின் சிங்கபுரிக்கு தனியொருவனாக வந்தது மட்டுமல்லாமல கலிங்கப் பேரரசரின் முன்பே எருமைக் கடாவின் மீது அமர்ந்திருக்கிறார் என்றால் இவரை உங்களுக்கு அடையாளம் தெரியவில்லையா தந்தையே?"

காரவேலர் எந்த மறுமொழியையும் அளிக்காமல் எருமைக் கடா மீது அமர்ந்திருந்தவனையே வியப்புடன் நோக்கிக் கொண்டிருந்தார்.

https://telegram.me/aedahamlibra

அப்போது பீமவேலன், "எனது ஊகம் மட்டும் சரி என்றால் இவர் கரிகாலரின் போர் படைத் தலைவர் செங்குவீரராகத் தான் இருக்க வேண்டும்!"

"ஆதலால் தான் காலனின் தூதுவன் என்றாயா?"

"ஆம் தந்தையே! கரிகாலச் சோழரின் தூதுவராக வந்திருப்பவர் வேறு யாரும் அல்ல சோழப் படைத் தலைவர் செங்குவீரர் எனும் விறல்வேல் தான்!" எனக் காரவேலரிடம் தெரிவித்த பீமவேலன், "மாவீரரே, உங்களை நேரில் கண்டது என் பாக்கியம். எனது மரியாதையை ஏற்றுக் கொள்ளுங்கள்!" எனக் கூறியபடியே ஒரு காலினை தரையில் மடித்து மண்டியிட்டு தனது வீர வாளினைத் தரையில் ஊன்றி தலையைத் தாழ்த்தினான்.

இதுவரை யாருக்காகவும் தனது வாளினைத் தரையில் ஊன்றி மரியாதை செலுத்தாத தனது தமையன் நேற்று

வனத்தில் தன்னைக் காப்பாற்றிய வீரருக்கு அளிக்கும் மரியாதையைக் கண்டவர்த்தினி அதிர்ச்சி கலந்த வியப்புடன் எருமைக் கடாவின் மீது அமர்ந்திருந்த விறல்வேலையே நோக்கிக்கொண்டிருந்தாள்.

https://telegram.me/aedahamlibra

# 20. வேறொரு காரணமும் வர்த்தினியின் துயரமும்

கலிங்க இளவரசன் பீமவேலனின் மாளிகை அது. சாளரத்தில் நடந்தபடியே சுவற்றில் வரையப்பட்டிருந்த ஓவியங்களையும், தூண்களுடன் நின்றுகொண்டிருந்த சிற்பங்களை

யும் பார்த்தபடியே நடந்துகொண்டிருந் தான் செங்குவீரன். அவனுக்குப் பின் னால் நடந்து வந்துகொண்டிருந்த பீம வேலன் ஓவியங்கள் மற்றும் சிற்பங்க ளைப் பற்றி விளக்கிக்கொண்டிருந்தான். ஏதோ இரண்டு கண்கள் தன்னையே உற்று நோக்குவதைப் போன்று உணர்ந்த செங்குவீரன் திரும்பிப் பார்த்தான். சிற்பங் களைத் தவிர அவனது விழிகளுக்கு எது வுமே புலப்படவில்லை.

தனது மாளிகைக்குள் செங்கு வீரனை அழைத்துச் செல்லலானான். நடந்து கொண்டிருந்த செங்குவீரன் சுவற்றில் வரையப்பட்டிருந்த ஒரு ஓவி யத்தைக் கண்டு அசையாமல் நின்று கொண்டிருந்தான். அதைக் கண்ட பீம வேலன் செங்குவீரனின் பார்வை நிலை கொண்டிருந்த இடத்தை நோக்கினான். அப்போது செங்குவீரன் சுவற்றில் வரை யப்பட்டிருந்த ஓவியத்தை பீமவேலனி டன் சுட்டிக்காட்டியபடியே, “இது கலிங் கர்களின் மகதப் படையெடுப்பை விவ ரிக்கும் ஓவியம் தானே?” என வியப்புடன் வினவினான்.

"ஆமாம், படைத் தலைவரே. கலிங்க வீரர்களின் மகதத் தாக்கு தலை சித்தரிக்கும் ஓவியம்தான் இது!" எனப் பெருமையுடன் கூறிக்கொண்டிருந்த போதே இடைமறித்த செங்குவீரன் "மகதத்திலிருந்து கலிங்க மன்னர் காரவேலரும், தாங்களும் மீட்டு வந்த கலிங்க சைனர் இவர் தானே?" என வினவியபடியே பக்தியுடன் சுவற்றில் வண்ணப் பொடிகளால் தீட்டப்பட்டிருந்த ஓவியத்தை நோக்கினான். செங்குவீரனின் பார்வையில் மிதமிஞ்சிக் குடியிருந்த பக்தியைக் கண்ட பீமவேலன், "படைத்தலைவரே, கலிங்க சைனரை தரிசிக்க வேண்டுமா தாங்கள்?" என வினவினான்.

"அவரைத் தரிசிக்கும் வாய்ப்பு கிடைத்தால் அது எனது பாக்கியம்!" எனப் பணிவுடன் தெரிவித்தான் செங்குவீரன்.

"புறப்படுங்கள் படைத்தலைவரே" எனத் தெரிவித்த பீமவேலன் முன்

னால் நடக்க செங்குவீரன் அவனைத் தொடர்ந்து நடந்துகொண்டிருந்தான். அப்போது பீம்வேலன் செங்குவீரனிடம், “படைத் தலைவரே, கலிங்க சைனரின் வரலாற்றுப் பயணத்தைப் பற்றி தாங்கள் அறிவீர்களா?” என வினவினான்.

“கலிங்கத்திற்கு வருவதற்கு முன் கலிங்க சைனரைப் பற்றி கேள்விப்பட்டி ருக்கிறேன். நீங்களே இன்னொரு முறை அவரைப் பற்றி தெரிவியுங்கள். கலிங்க சைனரோடு இணைந்த கலிங்க வரலாற் றைப் பற்றியும் அறிந்து கொள்கிறேன்” என ஆர்வத்துடன் தெரிவித்தான்.

“சில நூறு ஆண்டுகளுக்கு முன் நந்தர்கள் மகதத்தை ஆண்டுகொண்டி ருந்த போது கலிங்கத்திற்கும், மகதத் திற்கும் பெரும் போர் நடைபெற்றது. அப்போரில் கலிங்கம் தோற்று மகதம் வென்றுவிட சிங்கபுரிக்கு நுழைந்த மகதப் படை எங்களின் குல தெய் வமான கலிங்க சைனரையும், அவரது

இரத்தின அரியணையையும் கொல்லை யடித்துவிட்டுச் சென்றுவிட்டனர். நந்தர்க ளுக்குப் பிறகு மகதத்தை மௌரியர்கள் கைப்பற்றினார்கள். மௌரியர் காலத்தி லேயே தலை தூக்கத் துவங்கிய கலிங்கம் அசோகப் பியதசியின் தாக்குதலால் முற் றிலும் நிலை குலைந்து போனது. அசோ கன் இறந்த பிறகு எனது முப்பாட்டன் அதாவது எனது தந்தை காரவேலரின் தாத்தா கலிங்கத்தை மௌரிய அரசுக்கு எதிராக சுதந்திர நாடாக அறிவித்துக் கொண்டார். மெல்ல வளரத் துவங்கிய கலிங்கம் எனது தந்தை அரசராக முடிசூ டியதும் அது இழந்த தன் பெருமைகளை மீண்டும் பெறத் துவங்கியது. என் தந்தை அரியணை ஏறியதும் அவர் எடுத்த முதல் நடவடிக்கை கலிங்க சைனரை மீட்க எடுத்த நடவடிக்கை தான். அவர் மக தத்தின் ராஜகிருதம் மீது படையெடுத் தார். சுங்கன் தனது தலைநகரை மாற் றிக்கொண்டு பின்வாங்கினான். எதிர்த்த போஜர்களைக் கொன்று போட்டு எனது

https://telegram.me/aedahamlibra

தந்தை கலிங்க சைனர் மற்றும் இரத்தின அரியணையைக் கைப்பற்றி வந்தார்."

"கலிங்கம் அடிமைப்பட்டுக் கிடந்த வேளையில் கலிங்கத்தை விட்டு வெளி யேறிய சைனர் கலிங்கம் பேரரசானதும் திரும்பி வந்துவிட்டார்" எனப் புன்னகை யுடன் தெரிவித்தான் செங்குவீரன்.

"நீங்கள் கூறுவது அனைத்தும் உண்மைதான் படைத் தலைவரே, எங் களது குலக் கடவுள் திரும்பி வந்த பிறகு கலிங்கத்திற்கு வெற்றி மேல் வெற்றி வந்துகொண்டிருக்கிறது" எனப் பெருமையுடன் கூறியபடி சென்றுகொண் டிருந்த போதே எதிரில் நின்றுகொண்டி ருந்த மாளிகையைக் கண்ட செங்குவீரன் வியப்புடன், "இம்மாளிகை தான் கலிங் கத்தின் பெருவெற்றி மாளிகை"யா?" என வினவினான்.

"ஆமாம் படைத் தலை வரே, இதுதான் கலிங்கத்தின் வெற்றித்திருமாளிகை. கலிங்கத்தின்

போர் வெற்றிகளை சுமந்துகொண்டு நிற்கிறது!"

"முப்பத்து எட்டு நூறாயிரம் காசுகளால் கட்டப்பட்டிருக்கும் விஜய மாளிகை அல்லவா அது." எனக் கூறிய செங்குவீரன் பெரும் ஆடம்பரத்துடன் கட்டப்பட்டிருந்த அம்மாளிகையைப் பார்த்தபடியே அதற்குள் நுழைந்தான்.

மாளிகையின் இரத்தின அரியணையின் மீது பெரும் ஆடம்பரத்துடன் நின்றுகொண்டிருந்தார் கலிங்க சைனர். பணிவிடை செய்யும் இரண்டு தேவதைகள் அவருக்கு இரண்டு புறமும் காணப்பட ஏழு தலைகளைக் கொண்ட பாம்புக் குடைக்குக் கீழ் ஆடைகளைக் களைந்து அம்மணமாக நின்றுகொண்டிருந்தார் கலிங்க சைனர். கருணையே வடிவான கலிங்க சைனரின் முகத்தைப் பார்த்தபடியே செங்குவீரன் சிறிது நேரம் தன்னிலை மறந்து நின்றுகொண்டிருந்தான். அப்போது பீமவேலன், "வீரரே,

வாருங்கள் நாம் மாளிகையைச் சுற்றிப் பார்க்கலாம்” எனக் கூறிக்கொண்டு அழைத்துச் சென்றான்.

அந்த விஜய மாளிகைச் சுவரெங்கும் நிரம்பியிருந்த சிங்கம், புலி, காட்டு எருமை ஆகியவற்றின் மண்டை ஓடுகள், கொம்புகள் மற்றும் யானைத் தந்தம் ஆகியவற்றைப் பார்த்த செங்குவீரன் வியப்புடன், “இளவரசே, நானும் உங்களைப் பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன். கலிங்கத்தின் மிகச்சிறந்த வீரர் என்று. பெரும் வேட்டைக் காரராக இருக்கும் தாங்கள் பாசறையில் எருமைகளைக் கண்ட போது எதற்காக அமைதி காத்தீர்கள்?” என வினவினான்.

“சில வேளைகளில் சில அதிசயங்களைக் காண வேண்டுமெனில் அமைதியாகத் தானே இருக்க வேண்டியிருக்கிறது” எனச் சிரித்தபடி தெரிவித்தபோது குறுக்கிட்ட பீமவேலனின் உபதளபதி ஒருவன், “படைத் தலைவரே, இதைப்

போன்றதொரு மாளிகை பாரதவர்சத்தில் இதுவரை யாரும் கட்டியதில்லை. காலம் கடந்தும் இம்மாளிகை கலிங்கத்தின் பேரரசர் காரவேலரின் புகழைப் பறைய றிவித்துத் தெரிவித்துக்கொண்டிருக்கும்" எனப் பெருமையுடன் தெரிவித்தான்.

அவன் கூறியதைக் கேட்ட செங் குவீரன் சிரித்தபடியே, "வீரரே, எங்க ளது மன்னர் கரிகாலர் ஆடம்பரத்திற் காக இப்படியொரு மாளிகையை இது வரை எழுப்பவில்லைதான். ஆனால் மொத்த சோழ நாடே வளம்பெறும் வகை யில் புகார் பட்டினத்தை மேம்படுத்தி யிருக்கிறார். அதனை உலகின் வணி கத் தளமாக மாற்றியிருக்கிறார். கிழக்கே தூர நாடுகளிலிருந்தும், மேற்கே யவனம் வரையிலும் வடக்கே இமயத்தைக் கடந் தும் பெருமையுடன் பேசிக்கொள்ளும்படி புகாரை மாற்றியிருக்கிறார். அவர் மாற் றியமைத்திருக்கும் புகார், இந்த வெற்றி மாளிகை என அனைத்தும் காலத்தி னால் அழிக்கப்படலாம். தடமே தெரியா

மல் கூட அழிந்துவிடும். ஆனால் கரிகாலர் மக்களுக்காக காவேரி நதிக்குக் குறுக்கே கட்டியிருக்கும் அணை காலம் முழுக்க கரிகாலரின் புகழை கூறிக் கொண்டிருக்கும். காடுகளைத் திருத்தி அவர் ஏற்படுத்தியிருக்கும் வயல்கள் இன்னும் ஆயிரம் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு கரிகாலரின் புகழை நிலை நிறுத்தியிருக்கும். கலிங்கத்தின் கிழக்கே சிங்கபுரியின் கடற்கரை மாளிகைகள் அனைத்தும் புயலினால் சேதமடைந்திருப்பதை வரும்போது கண்டேன். அதைப்போன்றே இந்த மாளிகை, இதில் தீட்டியிருக்கும் ஓவியங்கள் இந்தச் சிற்பங்கள் என அனைத்தும் அழிந்து போகலாம். இதைப் போன்றே பெரும் பட்டினமான புகாரும் கூட இயற்கையினால் தடம் தெரியாமல் சிதைந்து போகலாம். ஆனால், கரிகாலரின் வீரப் புகழ் இன்னும் இரண்டாயிரத்து நூறு வருடங்கள் கடந்த பிறகும் நிலைத்து நின்று கரிகாலரின் புகழை எழுதத் தூண்டிக்கொண்டி

ருக்கும்" என அவனது விழிகளில் தனது பார்வையை நிலைக்க விட்டபடியே தெரி வித்தான் செங்குவீரன்.

செங்குவீரன் அளித்த பதிலைக் கேட்டதும் தலையைக் கீழே தொங் கபோட்டுக்கொண்டான் கலிங்கத்தின் உபபடைத் தளபதி. தனது உபதளபதி யின் விபரீதமான கேள்வியைக் கேட்ட தும் சற்றே கோபம் அடைந்தாலும் அதை வெளிப்படுத்திக் கொள்ளாத பீமவேலன் சுவற்றில் மாட்டியிருந்த வாள் ஒன்றைக் கையில் எடுத்து, "வீரரே, உங்களது வீரத்தை இன்று நான் பாசறைக் களத் தில் கண்டேன். பாரதவர்சமே வியந்து போற்றும் வீரருடன் வாட்சமர் புரிவதைப் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். உங் களுடன் வாட்சமர் புரிய விரும்புகிறேன். எனது அழைப்பை ஏற்றுக்கொள்ளுங் கள்" எனக் கூறியபடியே செங்குவீரனை நோக்கிக் கையிலிருந்த வாளினை வீசி னான். எதிர்பாராத நேரத்தில் பீமவேல னின் வாள் தன்னை நோக்கி வருவ

தைக் கண்ட செங்குவீரன் கீழே குனிந்து அவனது வாள் வீச்சிலிருந்து விலகிக் கொண்டான்.

அதைக் கண்ட பீமவேலன், "உங்களது பார்வையைப் போலவே உங்களது நகர்வும் அதிவேகமாக இருக்கிறது" எனக் கூறியவன் சிறிதும் தாமதிக்காமல் மீண்டும் செங்குவீரனைத் தாக்கினான். அவன் தாக்கத் துவங்கிய பிறகுதான் தனது வாளினை புரவியின் மீது கிடத்தியிருக்கும் உடமைகளுக்கிடையில் மறைத்துவைத்து விட்டு வந்து விட்டதை நினைத்துக் கொண்ட செங்குவீரன் உடனே பின்னால் நகர்ந்து சுவற்றில் மாட்டியிருந்த குறுவாள் ஒன்றைக் கையில் எடுத்து பீமவேலனின் தாக்குதலை எதிர்கொள்ள ஆயத்தமானான்.

அப்போது பீமவேலன், "சோழப் படைத் தலைவருக்கு மிகவும் பிடித்த ஆயுதம் குறுவாள் தான் போலிருக்கிறதே!" எனக் கூறியபடியே செங்குவீ

https://telegram.me/aedahamlibra

ரனை நோக்கிச் சரமாரியாகத் தனது வாளினை சுழற்றினான். தான் நின்ற இடத்திலிருந்த சிறிதும் நகராத செங்கு வீரன் அவனது வாளின் தாக்குதலைத் தன் கையிலிருந்த குறுவாளினால் அனா வசியமாகத் தடுத்தபடியே, “நண்பரே, வீரம் கையிலிருக்கும் ஆயுதத்திலிருந்து வெளிப்படுவது அல்ல. அது காதலைப் போன்று உள்ளத்திலிருந்து வெளிப்படு வது!” எனக் கூறியபடியே எந்த வித எதிர் தாக்குதலையும் தொடுக்காமல் பீமவேல னின் திறத்தை அறிந்துகொள்ள தற்காப் புப் போரில் மட்டும் ஈடுபட்டுக் கொண்டி ருந்த போதே, “தாங்கள் கூறுவது முற்றி லும் உண்மை வீரரே!” எனத் தெரிவித்த படியே அங்கு நுழைந்தார் கலிங்க மன்னர் காரவேலர்.

அரசரைக் கண்டதும் செங்குவீ ரன் சமரைக் கைவிட்டு தனது வணக் கத்தைத் தெரிவித்துக் கொண்டான். அவனது வணக்கத்தை ஏற்றுக்கொண்ட காரவேலர் ஏதோ கேட்க வாயெடுத்தார்.

ஆனால் அதற்குள் குறுக்கிட்ட பீமவேலன், "தந்தையே சற்று தாமதமாகத் தாங்கள் வந்திருக்கலாம் அல்லவா?" என வாட்சமர் பாதியிலேயே நின்றுவிட்டதை நினைத்து வருத்தத்துடன் வினவினான்.

"என்ன செய்வது பீமவேலா... கலிங்க சைனரின் நினைப்பு அப்படி இருக்கிறது. காலையில் நீ சற்று தாமதமாக வந்திருந்தாலும் அல்லது சோழ படைத்தலைவர் சற்றுத் தாமதமாக வந்திருந்தாலும் எனது எண்ணம் ஈடேறியிருக்கும். ஆனால், கடைசி வரை எனது எண்ணம் ஈடேறவில்லையே. என்ன நடைபெறவேண்டும் என்று இறைவனால் வகுக்கப்பட்டிருக்கிறதோ அது தானே நடைபெறும்!"

அவர் கூறியதைக் கேட்ட பீமவேலன் எந்தப் பதிலையும் அளிக்காமல் அமைதியாக அவனுக்கு முன்பு நின்ற செங்குவீரனையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அப்போது மகாமேகவாகன அரசர் காரவேலர், “படைத்தலைவரே, நீங்கள் போதுமான அளவு ஓய்வெடுத்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன் நான்!” எனத் தெரிவித்தவர் செங்குவீரனின் முகத்தைப் பார்த்தபடியே புன்னகைத்தார்.

செங்குவீரனும் புன்னகைத்தபடியே, “வழிப்போக்கர் விடுதிகள் மற்றும் அன்னச் சத்திரங்கள் என அனைத்தும் கலிங்க மன்னரின் அறம் நிறைந்த ஆட்சியில் எந்த விதக் குறையும் இல்லாமல் இயங்குகின்றன. பயணத்துடன் ஆங்காங்கே ஓய்வெடுத்தே வந்திருக்கிறேன்” எனத் தெரிவித்தான்.

செங்குவீரன் காரவேலரின் நல்லாட்சியைப் பற்றி தெரிவித்ததைக் கேட்டதும் மகிழ்ச்சியுடன், “தங்களுக்கு எந்தவிதக் களைப்பும் இல்லை என்றால் சோழப் படைத் தலைவரே சிங்கபுரியை நோக்கி வருகை தந்திருக்கும் கார

https://telegram.me/aedahamlibra

ணத்தை யாம் அறிந்துகொள்ளலாமா?” என வினவினார்.

“நிச்சயமாக அரசே!” என அவரது விழிகளில் தனது பார்வையை நிலைக் கவிட்டபடியே செங்குவீரன் தெரிவிக்க ஆசனம் ஒன்றில் அமர்ந்த காரவேலர் அருகில் கிடந்த ஆசனங்களை இருவ ருக்கும் சுட்டிக் காட்டினார்.

இருவரும் அமர்ந்ததும் அங்கு சிறுது நேரம் அமைதி நிலவியது. அப் போது எதிரில் நின்ற உபதலைவனை நோக்கினார் காரவேலர். அவரது கட்ட ளையைப் புரிந்துகொண்டு அங்கிருந்து நகர்ந்தான்.

செங்குவீரன்தான் முதலில் துவங்கி னான். “அரசே, நான் வந்திருக்கும் நோக் கத்தை இருவருமே ஓரளவு ஊகித்திருப் பீர்கள். சோழப் படை புறப்பட்டு வடுக நாட்டில் நிலை கொண்டிருப்பதையும் அறிவீர்கள்” என செங்குவீரன் கூறிக் கொண்டிருந்த போதே குறுக்கிட்ட கார

வேலர், "சோழப் படை வடுக நாட்டில் நிலை கொண்டது மட்டுமல்ல. சாதவா கன தேசத்தின் எல்லைப் புறக் கோட் டையைக் கைப்பற்றிக் கொண்டதைப் பற்றியும் அறிவோம் யாம்!" எனத் தெரி வித்தார்.

"நான் அறியாத என் படையின் தாக்குதலைப் பற்றித் தாங்கள் அறிந்து வந்திருப்பது எனக்கு பெருத்த ஆச்சரி யத்தை அளிக்கிறது அரசே!" என செங் குவீரன் தெரிவித்ததுமே குறுக்கிட்ட பீம வேலன், "சோழப் படையின் தாக்குத லைப் பற்றி உங்களுக்கு தெரியாதா?" என வியப்புடன் வினவினான்.

"இல்லை இளவரசே! நேற்றிரவு கலிங்க வனத்தில் ஒருவன் என்னிடம் சிங்கபுரிக்குச் செல்ல வேண்டாம். சென் றால் கைதுசெய்யப் படுவீர்கள் என எச்ச ரிக்கை செய்யும் போது சோழப் படை மற் றும் சாதவாகன எல்லைப் புறப் படையின் போர் பற்றி தெரிவித்தான். எனது கட்

டளைக்கு முற்றிலும் மாறான தகவலை நான் நம்பவில்லை. கலிங்க அரசரே குறிப்பிடும் போது...” என செங்குவீரன் கூறிக்கொண்டிருந்த போதே குறுக்கிட்ட பீமவேலன், “அவன் எதற்காக உங்களை சிங்கபுரிக்கு வர வேண்டாம் என்று எச்ச ரிக்கை செய்ய வேண்டும்?” என வினவி யபடியே பார்வையை சாளரத்தில் ஆடிக் கொண்டிருந்த திரைச் சீலையை நோக் கிச் செலுத்தினான்.

“நேற்றிரவு கலிங்க வனத்தில் சிலர் ஒருவனைச் சூழ்ந்து கொண்டு தாக்க முனைந்தார்கள். அப்போது அவனை நான் காப்பாற்றினேன். அதனால் கூட அவன் என்னைக் காப்பாற்ற நினைத்தி ருக்கலாம்.”

“என்ன கலிங்க வனத்தில் கள் வர்களா?” என ஆத்திரத்துடன் வினவி னான் பீமவேலன்.

“ஆமாம் இளவரசே... வனத் தொடக்கத்தில் அமைந்திருக்கும் சத்தி

ரத்திலிருந்து நான் பொழுது கடந்து புறப்பட்டபோதே எச்சரிக்கை செய்தார்கள். நான்தான் கேட்காமல் பயணித்தேன். நல்ல வேலை. நான் அவர்களின் எதிர்ப்பையும் மீறி புறப்பட்டதால் என்னால் ஒருவனைக் காப்பாற்ற முடிந்தது. இல்லையேல்...” எனப் பாதியிலேயே வாக்கியத்தை முடித்த செங்குவீரன் அவனுக்கு முன்னால் ஆத்திரத்துடன் அமர்ந்திருந்த பீமவேலனையே நோக்கினான். ஆனால், பீமவேலனோ சாளரத்தின் திரைச் சீலையை நோக்கிப் பார்வையைக் கோபத்துடன் திருப்பினான்.

நேற்றிரவு நடந்த தாக்குதலைப் பற்றி முற்றிலும் மறைத்து விட்ட வர்த்தினியை பீமவேலன் கோபத்துடன் நோக்க அவள் தலையைக் கீழே குனிந்து கொண்டாள்.

அப்போது காரவேலர், “படைத் தலைவரே, உங்களது கட்டளைக்கு முற்

https://telegram.me/aedahamlibrary

றிலும் மாறான தகவல் என்றால்?" என வினவினார்.

"ஆமாம் அரசே, அந்தத் தகவல் எனது கட்டளைக்கு முற்றிலும் மாறான தகவல் தான்!"

"அப்படியெனில் தன்னிச்சையாக சோழப் படை சாதவாகன கோட் டையைக் கைப்பற்றியிருக்கும் என்கிறீர் களா?" என வினவினார் காரவேலர்.

"அதற்கு வாய்ப்பு இல்லை. கிருஷ்ணை நதிக் கரையில் என்ன நடந் தது என்பதை முற்றிலும் அறியாத வரை யில் என்னால் எதையும் கூற இயலாது."

காரவேலர், "அந்தத் தாக்குதலைப் பற்றிய கவலையை விடுங்கள். படைத் தலைவர் நினைத்திருந்தால் தூதுவர் களை அனுப்பி கலிங்கத்திற்குத் தகவ லைத் தெரிவித்திருக்கலாம் அல்லவா? படைத்தலைவரே சிங்கபுரி வரை நேரில் வருகை தந்திருக்கும் காரணத்தை நான்

அறிந்து கொள்ளலாமா?" என மீண்டும் வினவினார்.

"தூதுவர்களை அனுப்பியிருக்கலாம். ஆனால் கலிங்கத்தின் சிறந்த பட்டினமான சிங்கபுரியை நேரில் பார்க்க வேண்டும் என்பது என் நெடுநாள் அவா... அது மட்டுமல்லாமல் கலிங்கத்தின் மாவீரராகிய பீமவேலரையும் நேரில் சந்திக்க வேண்டுமென்பது என் தனி விருப்பம். ஆதலால் நானே புறப்பட்டு வந்துவிட்டேன்."

"யவனம் வரை உங்களது வீரம் பிரசித்தி பெற்றது. இந்த நிலையில் ஒரு சாதாரண வீரனான என்னைத் தாங்கள் உயர்த்திப் பேசுவது எதற்காக செங்குவீரரே?" என வினவினான் பீமவேலன்.

பதிலுக்கு செங்குவீரன், "இளவரசரின் தன்னடக்கம் என்னை வியக்க வைக்கிறது" எனத் தெரிவிக்க அங்கு சிறிது நேரம் அமைதி நிலவியது. பிறகு செங்குவீரனே, "அரசே, சில தனிப்

https://telegram.me/aedahamlibra

பட்ட காரணங்களுக்காக சோழப் பேரரசர் மாவீரர் கரிகால் வளவர் மகத நாடு வரை படையெடுக்க புறப்பட்டிருக்கிறார் என்பதைத் தாங்கள் அறிவீர்கள்" எனத் தனது பேச்சைத் துவங்கினான்.

"தனிப்பட்ட காரணம் என்று கூறி எதற்காக வீரரே பெரும் உண்மையை மறைக்கிறீர்கள்?"

"நான் எதையும் மறைக்கவில்லையே?"

"சோழப் படைத் தலைவர்களில் ஒருவரை அவந்தியின் இளவரசனும், படைத்தலைவனுமான வஜ்ரபாகு மற்றும் சுங்க அரசின் பட்டத்து இளவரசன் சுங்கமித்திரன் ஆகியோர் சிறைபிடித்து யவனத்திற்கு அடிமையாக விற்றுவிட்டார்கள். தன் படைத் தலைவர் மீது பதிந்திருக்கும் கறையைப் போக்க சோழப் பேரரசர் படையைத் திரட்டி போரை அறிவித்திருக்கிறார் என்று கூறுங்களேன்."

https://telegram.me/aedahamlibra

செங்குவீரன் எந்த மறுமொழியை யும் அளிக்காமல் அவரின் விழிகளையே பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான்.

“நான் கூறுவதில் உங்களுக்கு வியப்பு வேண்டாம் படைத் தலைவரே! இதைத் தானே ஒற்றர்கள் மற்றும் தென் னகத்து வணிகர்கள் என அனைவரும் கூறுகிறார்கள்.”

“அவர்கள் உண்மையையே கூறியி ருக்கிறார்கள். சோழப் படையின் இலக்கு மகதம் மட்டுமே! இடைப்பட்ட பகுதியில் தேவையில்லாமல் போர் ஏற்பட்டு வீரர் கள் மடிவதை சோழப் பேரரசர் கரிகா லரும் விரும்பவில்லை, நானும் விரும்ப வில்லை.”

“படைத் தலைவரே, ஒற்றர்களும் தென்னகத்து வணிகர்களும் கூறும் கார ணத்தை சாதாரண மக்கள் வேண்டுமா னால் எளிதில் நம்பிவிடலாம். ஆனால் கலிங்க மன்னன் ஒருநாளும் நம்பமாட்

டான்" எனச் சற்றே சத்தத்துடன் தெரி வித்தார் கலிங்க மன்னர் காரவேலர்.

அதைக் கண்ட செங்குவீரன், "நீங் கள் பேசுவது எனக்குப் புரியவில்லை அரசே!" எனத் தெரிவித்தேன்.

"சோழப் படைத்தலைவனுக்கு இழைத்த அநீதிக்குப் பழி வாங்க சோழப் படை புறப்பட்டிருக்கிறது என்பது உங்க ளது ஒற்றர்கள் மூலம் உங்களால் அனுப் பப்பட்டிருக்கும் வதந்தி. சோழப் படை புறப்பட்டிருப்பதற்கு இன்னொரு கார ணம் இருக்கிறது."

"இன்னொரு காரணமா?"

"ஆம்"

"என்ன அது?"

"படைத் தலைவருக்குத் தெரியாத தையா நான் கூறப்போகிறேன்?"

“தாங்களே கூறினால், கலிங்க மன்னரின் எண்ணத்தையும் அறிந்துகொள்ள இயலும் அல்லவா?”

“அசோகப் பியதசியை சோழ மன்னர் இளஞ்சேட்சென்னியால் தடுத்து மட்டுமே நிறுத்த முடிந்தது. ஆனால் அவரால் வடக்கு நோக்கிப் படையெடுக்க முடியவில்லை. தந்தையால் முடியாததை மகன் செய்து முடிக்க வேண்டும் என நினைக்கிறான். ஒட்டுமொத்த பாரதவர்ஷம் முழுவதும் சோழப் பேரரசன் கரிகாலன் தனது ஆதிக்கத்தை விரிவுபடுத்த முயற்சிக்கிறான். அதற்கு கரிகாலனுக்கு ஒரு காரணம் வேண்டும். ஆதலால சோழப் படைத் தலைவனை யவனத்திற்கு அடிமையாக அனுப்பிய சுங்கமித்திரனைக் காரணமாகக் கொண்டு சோழப் படை புறப்பட்டுவிட்டது.”

அவர் கூறியதைக் கேட்டதும் செங்குவீரன் சிரிக்கவே செய்தான். “பிறகு, சோழப் படைக்கு அப்படியொரு எண்

ணம் இருந்திருந்தால் நான் சிங்கபுரிக்கு வருகை தந்திருக்கவே மாட்டேன்" எனத் தெரிவித்தான்.

"சரி, சோழப் பேரரசர் சிங்கபுரிக்கு அனுப்பியிருக்கும் செய்தி என்ன படைத் தலைவரே?" முகத்தை இறுக்கமாக வைத்துக்கொண்டு வினவினார் காரவேலர்.

"சோழப் படை மகத நாட்டுக்குச் செல்ல வேண்டும் என்றால் கலிங்கத்தைக் கடந்தால் தான் முடியும். ஆதலால் சோழப் படைக்கு கலிங்க நாடு வடுகர்களைப் போன்று வழிவிட வேண்டும்."

"சோழப் படைக்கு கலிங்க நாடு வழிவிடவில்லை என்றால்?"

"சோழப் படை தனக்கு வேண்டிய பாதையை உருவாக்கிக் கொள்ளும். ஆரியவதத்தின் மன்னர்கள் அனைவரும் ஒற்றுமையாக எதிர்த்தாலும் எதிர்

கொள்ள சோழப் படை தயாராகவே இருக்கிறது.”

“செங்குவீரா.....” கோபம் கொண் டார் காரவேலர்.

“ஆயிரத்து முன்னூறு ஆண்டுக ளுக்கும் மேலாக மொழிபெயர் தேயத் தில் நிலை நிறுத்தப்பட்டிருந்த தமிழ் மூவேந்தர் கூட்டணியை சிதைத்து வணி கர் நகராகிய பித்துண்டாவைக் கைப் பற்றியதோடு மட்டுமல்லாமல் அதை உருவாக்கியவர்களே உங்களது முன் னோர்கள் என்றும் பாராமல் கழுதை யைக் கொண்டு உழுது தமிழ் மன்னர் களை அவமானப்படுத்தினீர்கள். உங் களது கலிங்க நாடு அப்போதே தமிழ் படையினரால் அழிக்கப்பட்டிருக் கும். உங்களது நல்ல நேரம் அப் போது சோழ அரசர் இளஞ்சேட்சென்னி மறைந்து போனார். சோழ இளவல் வள வனும் சிறு குழந்தை. தென்னகத்தின் அரசியல் சூழல் உங்களுக்கு சாதகமாய்

https://telegram.me/aedahamlibra

போய்விட்டது. ஆனால், நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. சோழப் படை வீரர்கள் வெற்றியின் சுவையை அறிந்துவிட்டார்கள். அவர்களை அவ்வளவு எளிதில் தடுத்து நிறுத்திவிட முடியாது என்பதை நீங்களும் அறிவீர்கள். முறைப்படி சோழ நாடு உங்கள் மீது போரை முதலில் அறிவித்திருக்க வேண்டும். ஆனால் கரிகாலர் பெருந்தன்மையுடன் என்னைப் பேச அனுப்பி வைத்திருக்கிறார்."

"செங்குவீரா, மறைமுகமாக போருக்கு அறைகூவல் விடுகிறாயா?" வெகுண்டெழுந்தார் கலிங்க மன்னர் காரவேலர்.

"அதை முடிவு செய்யும் பொறுப்பை கலிங்கத்திடமே விட்டுவிட்டோம் யாம்!"

"அப்படியெனில்..."

"போரா அல்லது அமைதியா என்பதை கலிங்கம் தான் முடிவுசெய்யவேண்டும்."

“சாதவாகன எல்லைப் புறக் கோட்டையை சோழப் படை கைப்பற்றியதும் எப்போது என்னால் முறியடிக்கப்பட்ட மூவேந்தர் படையை திராமிரத்தில் நிலை நிறுத்தும் அறிவிப்பு வெளியிடப்பட்டதோ அப்போதே கலிங்கத்தை சீண்டிவிட்டீர்கள். இனி அதன் விளைவை சோழப் படை நிச்சயம் அனுபவிக்கும்.”

அவர் கூறியதைக் கேட்டதும் புன்னகைத்த செங்குவீரன், “அப்படியெனில் போர் என்கிறீர்கள் நீங்கள்?” என வினவினான்.

“சோழப் படையுடன் கலிங்க நாடு போரினை விரும்பவில்லை. ஆனால், கலிங்க நாட்டை மாற்றான் படை கடந்து செல்வதை எங்களால் ஒரு நாளும் அனுமதிக்கக் இயலாது” எனத் தீர்க்கமாகச் செங்குவீரனிடம் தெரிவித்த கலிங்க மன்னர் காரவேலர் பீமவேலனிடம், “கலிங்கத்தில் இருக்கும்வரை நமது விருந்தினர் இவர். ஒரு படைத்தலைவ

ருக்கு அளிக்க வேண்டிய உபசரிப்பில் இவருக்கு எந்தக் குறைவும் நேர வேண் டாம்!" எனத் தெரிவித்தவர் அங்கிருந்து விடுவிடுவென்று நடந்து சென்றார்.

அவர் சென்ற திசையையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தான் செங் குவீரன்.

செங்குவீரன் பீமவேலனிடம் வனத் தாக்குதல் பற்றி பேசிக்கொண்டிருந்த போது தன்னிச்சையாக காரவேலனின் முகம் சாளரத்தை நோக்கித் திரும்பு வதையும், அப்போது அவனது பாவ னைகள் பலவிதமாக மாறிக்கொண்டி ருப்பதையும் செங்குவீரன் கவனித்துக் கொண்டிருந்தான். காரவேலர் கோபத்து டன் திரும்பிச் சென்றுவிட்ட பிறகு பீம வேலனின் பார்வை நிலைகொண்டிருந்த திரைச் சீலையை நோக்கிச் சென்றான் செங்குவீரன். திரைச்சீலையின் மீது நிழல் ஒன்று விழுந்துகொண்டிருந்தது. திரைச் சீலையை இழுத்தான். திரைச் சீலைக்குப்

பின்னால் கலிங்கத்தின் இளவரசி வர்த்தினி நாணத்துடன் செங்குவீரனை நோக்கியபடியே சிற்பத்தோடு சிற்பமாக நின்றுகொண்டிருந்தாள். முகத்தில் நாணம் முற்றிலும் குடிகொண்டிருந்தாலும் அதை மறைத்துக்கொண்டு நிலவை வைத்த கண் மாறாமல் நோக்கிக் கொண்டிருக்கும் செந்தாமரை மலரைப் போன்று மலர்ந்த வதனத்துடனும் மோகன விழிகளுடனும் அவனை நோக்கிக் கொண்டிருந்தாள்.

செங்குவீரனுக்கும் அவளைப் பார்த்த அக்கணத்தில் வனத்தில் கண்ட காட்சிகள் அனைத்தும் அவனது மனத்திரையில் நிழலாட அவன் தன்னிலையை மறந்து சிற்பத்தோடு சிற்பமாக நின்றுகொண்டிருந்த அந்த வஞ்சிக் கொடியின் அழகிய வதனத்தைப் பார்த்தவன் வியப்படைந்து நின்றுகொண்டிருந்தான்.

https://telegram.me/aedahamlibra

வானில் கருத்த முகில்களுக்கிடையில் விட்டு விட்டுத் தோன்றும் மின்னல் கீற்றினைப் போன்று கருத்த மை தடவிய அவளது விழிகளுக்கிடையில் அவளது இமைகளும் விட்டு விட்டு அடித்துக் கொண்டிருந்தது. அந்தப் பைங்கொடியின் மின்னல் வெட்டுப் பார்வையில் அகப்பட்ட செங்குவீரனும் தன்னிலையை மறந்து நின்றுகொண்டிருந்தான். அந்திப் பொழுதில் கிழக்கு வானில் தோன்றும் வானவில்லைப் போன்று அவளது புருவமும் கருத்து அவளது விழிகளுக்கிடையில் வளைந்து காணப்பட்டது. கிரகணத்தின் போது சற்றே தேய்ந்து தோன்றும் பிறை கதிரவனைப் போன்று அவளது நுதலும் பிரகாசத்துடன் பேரழகுடன் விளங்கியது. நுதலில் அவள் சூடியிருந்த பிறை வடிவக் குங்குமப் பொட்டு அவளது நுதலுக்கு அழகைச் சேர்த்திருந்தது. இரவினைத் திரட்டி திரித்ததைப் போன்ற அவளது நீண்ட கருங்கூந்தல் பிறைச் சூரிய நுதலிலிருந்து

https://telegram.me/aedahamlibra

அவளுக்கு முன்னும் பின்னுமாக கற்றைக் கற்றையாக பின்னப்பட்டு தொங்கிக்கொண்டிருந்தது. செங்கதிர் நிலவின் வண்ணத்தில் சற்றே சிவப்பு கலந்த வெண்மை நிறத்தில் அவளது கன்னம் பளிச்சிட மாதுளம் பூவின் நிறத்தில் சிவந்த அவளது இதழ்கள் செங்குவீரனைப் பார்த்து புன்னகையை சிந்திக்கொண்டிருந்தது. அவளது இதழ்களில் காணப்பட்ட சிறு சிறு ரேகைகள் மின்னல் கீற்றினைப் பதித்து வைத்ததைப் போன்று மோகனத்துடன் காணப்பட்டது. மதுவைச் சிந்தி தும்பியை மயக்கும் மலரைப் போன்று கன்னத்தில் குழி விழ புன்னகையுடன் நின்றுகொண்டிருந்தாள் வர்த்தினி.

மழை மண்ணில் விழுந்து எழும் மண் வாசனையினால் மலர்ந்த மலர்களின் இதழ்களைக் கொண்டு உருகிய தங்கத்தால் தேய்த்து வார்க்கப்பட்டதைப் போன்ற அவளது மென்மையான மேனியில் யாரோ சொல்லிக் கொடுத்ததைப்

https://telegram.me/aedahamlibrary

போன்றே செங்குவீரனுக்குப் பிடித்த மரகதப் பச்சை வண்ணத்தில் பட்டுத் துகிலை உடுத்திக் கொண்டு நின்று கொண்டிருந்தாள் அந்த மெல்லிடையுடைய பைங்கிளி.

மெல்லிய காது மடலில் அவள் அணிந்திருந்த மரகதக் குண்டலங்கள் இரண்டும் அவளது புன்னகையைப் போன்றே மெல்ல ஒளி வீசிக் கொண்டிருந்தது. கழுத்தில் விலையுயர்ந்த ஆபரணங்கள் அணிந்துகொண்டு நிற்க, அந்த ஆபரணங்களை விடவும் எதிரில் நிற்பவர்களின் கவனத்தைச் சிதறடிக்கும் அளவிற்கு செழித்து வளர்ந்திருந்தன அவளது முன்னழகுகள் இரண்டும். செழித்து வளர்ந்திருந்த அவளது இரட்டை எழில்களுக்கிடையில் அவளது கழுத்து ஆபரணங்கள் தஞ்சமடைந்திருந்தன. உடலைச் சற்றே இறுக்கமாக அவள் அணிந்திருந்த பட்டுத் துணி அவளது அங்க லாவண்யங்களை நன்கு வெளிப்படுத்தி எதிரில் நிற்பவர்களை

யும் கிறங்கடிக்கும் வகையில் அவளது உடலின் எழுச்சி மற்றும் ஒடுக்கங்களை நன்கு வெளிப்படுத்திக் கொண்டிருந் தது. அவளது ஆடை அவளது வனப் பினை குறைவின்றி வெளிப்படுத்தினா லும், மறைக்க வேண்டியதை மறைத்து பாங்குற தனது ஆடையை அணிந்திருந் தாள் அவள்.

செங்குவீரன் திரைச் சீலையை நீக் கிவிட்டு அவளை நோக்கியபோது அவ ளும் அவனை நோக்கினாள். செங்குவீர னும் அவளது விழிகளை நோக்க நாணம் கொண்ட வர்த்தினி கன்னம் சிவக்க நிலம் நோக்கினாள். அவளது நாணத் தைக் கண்ட செங்குவீரன், “உங்க ளது திறமை என்னை வியக்கவைக்கிறது இளவரசி!” எனத் தெரிவித்தான் செங்கு வீரன்.

அவன் கூறியதைக் கேட்டதும் நாணம் களைந்த வர்த்தினி வியப்புடன் அவனை நோக்கினாள்.

"கள்வர்களையும் தோற்கடிக்கும் உங்களது வேல்வீச்சின் வேகம், ஆடவர் களையும் அடிமைப்படுத்தும் உங்களது நாணம் என அனைத்தும் என்னை வியக் கவைக்கிறது தேவி" எனத் தெரிவித்த செங்குவீரன் அவளது விழிகளில் தனது பார்வையை நிலைக்க விட்டான்.

ஆனால், அவள் விழிகளில் எந் தவித மாற்றத்தையும் ஏற்படுத்திக் கொள்ளாமல் செங்குவீரனை நோக்கிக் கொண்டிருந்தாள். தொடர்ந்த செங்குவீ ரன், "இப்போது புரவி நலமாகத் தானே இருக்கிறது?" என வினவினான்.

பதிலுக்கு எந்தப் பதிலையும் தெரிவிக்காமல் பிரமை பிடித்தவளைப் போன்று தலையை மட்டும் ஆட்டினாள் வர்த்தினி. சிறிது நேரம் அவளது அழகிய வதனத்தையே நோக்கிக் கொண்டிருந்த செங்குவீரன். பிறகு, "உங்களைப் பற்றி நிச்சயம் என் மனைவியிடம் நான் கூறப்போகிறேன் இளவரசி. அவளைப்

போன்றே தைரியமும், வீரமும், அழகும், திறமையும் நிறைந்த பெண்ணாக உங்களைக் காண்கிறேன் நான்" எனத் தெரிவித்தபடியே செங்குவீரன் திரும்பினான்.

ஆனால், செங்குவீரன் தெரிவித்த சொற்கள் அவளது இளகிய உள்ளத்திற்கு திடீரென்று ரணத்தை அளிக்க அவளையே நோக்கிக் கொண்டிருந்த பீமவேலன் அறியாத வண்ணம் விழிகளில் துளிர்த்த கண்ணீர்த் துளியைத் துடைத்துக் கொண்டாள்.

வர்த்தினிக் கண் கலங்கியதைக் கண்ட பீமவேலன் பெரும் துயரடைந்தாலும் அதை வெளிப்படுத்திக் கொள்ளாமல் செங்குவீரனிடம், "நீங்கள் இல்லாத சோழப் படையை வழி நடத்திக் கொண்டிருப்பது யாரோ பெண் என்றல்லவா கேள்விப்பட்டேன். அப்படியெனில்..." எனத் தயக்கத்துடன் வினவினான்.

“வானவல்லி” எனச் சட்டென்று அதே நேரம் கம்பீரமாகப் பதிலளித்தான் செங்குவீரன்.

“வானவல்லி???”

“ஆமாம் இளவரசே... கரிகாலரின் தமக்கை!”

“ஆமாம்... சோழப் பேரரசருக்கு தமக்கை எனில் உங்களுக்கு?”

“சோழப் படையோடு என்னையும் சேர்த்து ஆண்டுகொண்டிருக்கும் அந்த அழகிய ராட்சசிதான் எனது மனைவி!” எனத் தெரிவித்த செங்குவீரன் அங்கிருந்து விடைபெற ஆயத்தமானான்.

அப்போது அங்கு விரைந்து வந்த புரவி வீரன் ஒருவன் கையிலிருந்த வாளினை பீமவேலனிடம் கொடுத்து, “இந்த வாள் அவரது புரவியின் மீது கிடத்தப்பட்டிருந்த உடமைகளுக்கிடையில் மறைத்து வைக்கப்பட்டிருந்தது” எனத் தெரிவித்து விட்டுச் சென்றான்.

https://telegram.me/aedahamlibra

அதை செங்குவீரனிடம் பணிவுடன் அளித்த பீமவேலன், "தனது இடையுறை யிலிருந்து வாளினை உருவி "இனி என் தந்தை நமக்குக் குறுக்கே வரமாட்டார். கைவிட்ட போரினை மீண்டும் துவங்க லாம்" எனக் கூறிவிட்டு மீண்டும் செங்கு வீரனை சமருக்கு அழைத்தான்.

ஆனால் செங்குவீரனோ தனது இடையுறையை இடையில் கட்டி அதில் தனது வாளினைப் போட்டுக்கொண்ட வன், "நமக்குள் போர் நடைபெறப் போவது உறுதியாகிவிட்டது. இந்த நிலை யில் நாம் இங்கே எதற்காக வீண் சண் டையிட்டுக் கொள்ளவேண்டும்? நம்மில் யார் சிறந்த வீரர் என்பதை போர்க்களத் தில் முடிவு செய்வோம் நண்பா..." எனக் கூறிய செங்குவீரன் அதற்கு மேல் அங்கு நிற்காமல் செல்லலானான்.

அவன் செல்வதையே சோகத்து டன் பார்த்துக் கொண்டிருந்த வர்த்தி னியிடம், "வர்த்தினி, உன் மனம் எப்ப

டித் துடிக்கிறது என்பதை நான் அறிவேன். வருத்தம் வேண்டாம்" என ஆறுதல் தெரிவித்தான் பீமவேலன்,

ஆனால் வர்த்தினி, "அவருக்கு மணமாகிவிட்டது என்ற செய்தி எனக்கு சோகத்தை எதற்காக அளிக்கிறது என்று தெரியவில்லை அண்ணா... இந்த சோகம் எனக்குப் பெரிதல்ல. அவரைச் சந்தித்து ஒரு நாள் கூட முழுதும் இன்னும் முடியவில்லை. நான் எதற்காக இன்னும் வருந்திக் கொண்டிருக்க வேண்டும்? இவர் இல்லாவிட்டால் என்ன, எனக்குரிய வீரன் கலிங்கத்திற்கு வராமலா போய்விடுவான். ஆனால், ஒன்று அண்ணா... இவரைப் போன்ற மனிதரை நான் என் வாழ்நாளில் சந்தித்ததே இல்லை. நேற்றிரவு தீப்பந்த ஒளியில் தான் அவர் என்னைக் கண்டார். அதுவும் நான் மாறுவேடத்தில் காணப்பட்டேன். ஆனால் அவர் இன்று என்னை அடையாளம் கண்டுகொண்டார். நாம் எதிர்க்கப் போவது பலம் பொருந்திய சோழப் படையை அல்ல"

https://telegram.me/aedahamlibra

என அவள் கூறிக்கொண்டிருந்த போதே இடைமறித்த பீமவேலன், "என்ன வர்த்தினி கூறுகிறாய்?" என வினவினான்.

"ஆம் அண்ணா... நம்மை எதிர்க்கப் போகும் பலம் பொருந்திய சோழப் படையை விடவும் அபாயகரமானது செங்குவீரரின் தலைமை!"

"நமது நாட்டின் படை பலத்தைப் பற்றி அறிந்த பிறகுமா நீ கவலை கொள்கிறாய்?"

"சாதாரண செய்தியைக் குறிப்பிடவா செங்குவீரர் சிங்கபுரிக்கு வருகை தர வேண்டும்?"

"அவர் எதற்கு வந்தார் என்பதை அவரேதான் தெரிவித்தாரே?"

"அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம் அண்ணா..."

"அதுவும் ஒரு காரணம் என்றால்?"

https://telegram.me/aedahamlibra

“இந்நேரம் நமது கலிங்கப் பெரும் பட்டினமான சிங்கபுரியின் பலவீனங்கள் அனைத்தும் அவரது பார்வைக்கு அகப் பட்டிருக்கும். அவர் வந்த காரியமும் முழு வதும் நிறைவேறியிருக்கும்.”

“என்ன வர்த்தினி கூறுகிறாய்?”

“உடனே, இந்த கணத்திலிருந்து போருக்கு ஆயத்தமாகுங்கள் அண்ணா... நமது படைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் திரட்டுங்கள். கால தாமதம் வேண்டாம்” எனத் தெரிவித்த வர்த்தினி திரும்பிச் சென்றாள். அவளது விழிகளி லிருந்து கண்ணீர் அருவியைப் போன்று பெருக்கெடுக்க கட்டிலில் சென்றவள் அப்படியே விழலானாள்.

வர்த்தினியின் மனக் குமுறலை அறியாத பீமவேலன் செங்குவீரனை வழி யனுப்ப விரைந்து செல்லலானான்.

அடிக்குறிப்பு:

1. அத்திகும்பா கல்வெட்டு (ஏச்ட்டடிஞ்தட்ஞச் - யானைக்குகை கல் வெட்டு வரி - 12)

பிராகிருதம்: மாகயூதா$^{4}$நம்’ ச விபுல ப$^{4}$யம்’ ஜநேதோ ஹதயுஸம்’ கயூங்காயூய பாயயதி ங்||சி மாகயூத$^{4}$ம்’ ச ராஜாந பயூ ஹஸதிமிதம்’ பாதேயூ வந்தாயூபயதி ங்|| சி நந்தயூராஜ நீதம்’ காலிங்கயூஜிந ஸம்’ நிவேஸம்’ ங்கலிங்கயூசி ங்ராஜசி கயூஹ ரதந பரிஹாரே ஹி அங்கயூ மகயூத$^{4}$ வஸப்ம்’ ச நயதி ங்||சி

தமிழ் மொழிபெயர்ப்பு: மகத அர சமனைக்குள்ளே தம் யானைகளை அனுப்பி மகத மக்களை மிரளவைத்து மகதத்தின் மன்னர் பகசதிமிதத்தைத் தன் கால் பணிய வைத்தார். நந்த அர சரால் எடுத்துச் செல்லப்பட்ட “கலிங்கத் தின் சைனர்” என்ற சிலையையும், அதன் அரியணை, ரத்தினங்களையும் மீட்டு ....... (முன்பு கொள்ளையடித்ததற்குப் பரிகார மாக) அங்கநாடு, மகதநாடுகளின் செல்

https://telegram.me/aedahamlibrary

வங்களையும் (அரச) குடும்ப நகைக ளின் காவலர்களையும் கலிங்கத்துக்குக் கொண்டு வந்து ........

இக்கல்வெட்டில் காணப்படும் பக சதிமிசதன் (Bahastimita > brhaspatimitra> Pushyamitra) எனக் குறிப்பிடப்படும் மகத மன்னன் புஷ் யமித்திரன் என்றே வரலாற்று அறிஞர்கள் கருதுகிறார்கள்.

2. அத்திகும்பா கல்வெட்டு (யானைக்குகை கல்வெட்டு வரி - 10)

பிராகிருதம்: ங்நகயூரிய கலிங்கயூசி ராஜநிவாஸம்' மஹாவிஜய பாஸாதயூம்' காரயதி அடயுதிஸாய ஸதஸஹஸேஹி ங்||சி தயூஸமே ச வஸே தயூண்டயூ ஸந்தி$^4$ ஸாம ங்மயோசி ப$^4$ரத$^4$வஸ படாயு நம்' மஹீ ஜயநம்' ... காராபயதி ங்||சி ஏகா தயூஸமே ச வஸே ங்ஸதுநம்'சி பாயாதா நம்' ச மணி ரதநாநி உபலப$^4$தே ங்||சி

https://telegram.me/aedahamlibra

தமிழ் மொழிபெயர்ப்பு: அவர் முப்பத்து எட்டு நூறாயிரம் (காசு) செலவில் .....பெருவெற்றி (மகாவிஜய) மாளிகை என்று அழைக்கப்படும் அரச மனை ஒன்றைக் கட்டுவித்தார். தம் பத்தாம் ஆட்சியாண்டில் அமைதி, நட்புறவு, அடக்கு (சாம, பேத, தண்டம்) (என்னும் முக்கோட்பாட்டுக்கு இணங்க) என்பதைப் பின்பற்றி பாரதநாடெங்கும் (பாரதவர்ஷம்) தம் பெரும்படையை அனுப்பிப் பல நாடுகளைத் தோற்கடித்து, தோற்ற நாடுகளிடமிருந்து மணிகளையும் ரத்தினங்களையும் கைப்பற்றினார்.

https://telegram.me/aedahamlibra

# 21. பீமவேல னின் கட்டளை

செ ங்குவீரனை வழியனுப்பி வைத்த பிறகு தனது படைத் தளபதிகள், உப தலைவர்கள் என அனைவரையும் போர் பற்றி விவாதிப்பதற்காக அழைத்திருந் தான் கலிங்கத்தின் இளவரசனும், போர் படைத் தலைவனுமான பீமவேலன். கலிங்கத்தின் முக்கிய அமைச்சர்கள், உபபடைத் தலைவர்கள், போர் அதிப திகள் என அனைவரும் பீமவேலனுக்கு முன்னால் அமர்ந்திருந்தார்கள். ஆச

னத்தில் அமர்ந்திருந்தபடியே விழிகளை மூடிக்கொண்டு பெரும் சிந்தனையில் காணப்பட்டான் பீமவேலன். அப்போது அவனது மெய்க்காவல் படைத் தலைவன், "அழைத்தவர்கள் அனைவரும் வந்துவிட்டார்கள் இளவரசே!" எனப் பணிவுடன் தெரிவிக்க விழிகளை திறந்தான்.

ஆசனத்திலிருந்து எழுந்த பீமவேலன் அரங்கில் மீண்டும் சிந்தனையுடன் நடந்தான். அப்போது படைத்தலைவன் ஒருவன், "இளவரசே, கலிங்க அரசருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லையா?" என வினாவினான்.

"இல்லை!"

சற்று நேரம் அங்கு பெருத்த அமைதி நிலவியது. பிறகு மூத்த அமைச்சர் ஒருவர் எழுந்து, "இளவரசே, கலிங்கத்தின் முக்கிய அமைச்சர்கள் மற்றும் படைத்தலைவர்கள் என அனைவரும் ஒரே நேரத்தில் எதற்காக அழைக்கப்பட்டிருக்கிறோம் என்று நாங்கள் அறிந்து கொள்ளலாமா?" என வினவினார்.

https://telegram.me/aedahamlibra

அனைவரின் முக பாவனைகளையும் கவனித்த பீமவேலன், "இன்று சோழப் படைத்தலைவர் கலிங்கத்தின் சிங்கபுரிக்கு வந்திருந்ததை அனைவருமே அறிந்திருப்பீர்கள்" எனத் துவங்கினான்.

"ஆமாம் இளவரசே! அறிவோம் நாங்கள். ஆனால்..." எனத் தெரிவித்த அமைச்சர் வாக்கியத்தை முழுவதுமாக முடிக்காமல் பாதியிலேயே நிறுத்திக் கொண்டார்.

அதைக் கவனித்த பீமவேலன், "அமைச்சரே, வினவ வந்ததை தயக்கமின்றி வினவலாம்!" எனத் தெரிவிக்க அமைச்சர், "சோழப் படைத்தலைவர் சிங்கபுரிக்கே வருகை தந்த காரணம் என்ன?" என வினவினார்.

அப்போது படைத்தலைவர்களில் ஒருவர், "இளவரசரை கடந்த ஒரு திங்கள் காலமாக சிங்கபுரியில் காண இயலவில்லை. தங்களை சுங்க நாட்டின் விதிசா"வில் எனது ஒற்றன் கண்டிருக்கிறான்.

அதே நாளில் சுங்க அரசன் புஷ்யமித்தி ரன், சுங்க நாட்டின் பட்டத்து இளவரசன் சுங்கமித்திரனும் வந்து சென்றதாக எனது ஒற்றர்கள் மூலமாக நம்பகத்தன்மையான செய்தி கிடைத்திருக்கிறது. அது மட்டு மல்லாமல் கலிங்கத்தின் எல்லைப் புறக் காவல் தலைவர்கள் அனைவரையும் தாங்கள் நேரில் சந்தித்து வந்திருக்கிறீர் கள்" எனத் தெரிவித்தான்.

அவன் கூறியதைக் கேட்டதும் சிரித்த பீமவேலன், "கலிங்க ஒற்றர்க ளின் திறனை எண்ணி நான் வியக்கி றேன் படைத்தலைவரே! நமது ஒற்றர்க ளின் பார்வைக்கு மற்ற நாட்டு அரசர்கள் மற்றும் படைத் தலைவர்கள் மட்டும் அல் லாது இளவரசனுக்கும் அதில் விலக்கு இல்லை அனைவரும் கண்காணிக்கப்ப டுகிறார்கள் என்பதைக் கேட்கவே மிக வும் பெருமையாக இருக்கிறது" என அவ னைப் புகழ்வதைப் போலவே கடிந்து கொண்டான்.

பதில் பேச முடியாத அந்த படைத் தலைவன் தனது தவறை எண்ணி தலை குனிந்தான்.

அப்போது அங்கு சிறிது நேரம் பெருத்த அமைதி நிலவியது. யாருமே மேற்கொண்டு பேசவில்லை. அந்த அமைதியைப் போக்கும் வகையில் பேசத் துவங்கிய பீமவேலன், "எனது சிறுவயது குரு வைதீகர் பாகவதர் கலிங்க அரசரை சந்திக்க விரும்புவதாக செய்தி அனுப்பி யிருந்தார். ஆதலால் தந்தைக்குப் பதில் நான் விதிசா வரை சென்றிருந்தேன். அங்கு தான் நான் எதிர்பாராத மேலும் சிலர் வந்திருந்தார்கள்" எனத் தெரிவித்த பீமவேலன் அமைதியானான்.

"அவர்கள் யார் இளவரசே?" என வினவினார் அமைச்சர் ஒருவர்.

"சாதவாகன படைத்தலைவன் வஜ்ரபாகு, சுங்க மன்னர் புஷ்மித்திரன் மற்றும் அவருடைய இரண்டு புதல்வர் கள்."

“நமது வைரிகளான சுங்கர்கள் அங்கு வருவது பற்றி தங்களுக்கு முன் னரே தகவல் எதுவும் தெரிவிக்கப்பட வில்லையா?”

“இல்லை.”

“காரணம் என்னவாம்?”

“சோழப் படை வடுக நாடு வரை முன்னேறிவிட்டதல்லவா?”

“ஆமாம்! அவர்கள் சாதவாகன நாட்டின் எல்லையைத் தாக்கி அவர் களின் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டதாகக் கூட தெற்கிலிருந்து செய்தி வந்துகொண்டிருக்கிறது.”

“வடுகர் நாட்டைத் தாண்டினால் கலிங்கம். கலிங்கத்தைத் தாண்டினால் மகதம்” என பீமவேலன் கூறிக்கொண்டி ருந்த போதே இடைமறித்த படைத்தலை வர்களில் ஒருவன் “இளவரசே, அவர்கள் வடுக நாட்டினை வேண்டுமானால் எளி தில் கடந்துவிடலாம். ஆனால் அவர்க

https://telegram.me/aedahamlibra

ளால் கலிங்கத்தை ஒருநாளும் கடக்க இயலாது. அவர்கள் அனைவரும் கலிங்க எல்லையிலேயே அழிக்கப்படுவார்கள்” என கம்பீரத்துடன் தெரிவிக்கலானான்.

அதுவரை அமைதியாகக் காணப் பட்ட உப படைத்தளபதி ஒருவன், “இள வரசே, நீங்கள் எதற்காக இப்போது சோழர்களைப் பற்றி பெரிதும் கவலைப் படுகிறீர்கள் என்று எனக்குத் தெரிய வில்லை. அதன் காரணத்தை எனக்கு யாராவது விளக்குங்களேன்!” என எது வுமே அறியாதவனைப் போன்று வினவி னான்.

பீமவேலன் அந்த உபபடைத் தலைவனை முறைக்க அமைச்சர் ஒரு வர், “நம் நாட்டை நோக்கிப் பெரும் படை யைத் திரட்டிக்கொண்டு மாற்றரசன் ஒரு வன் வந்துகொண்டிருக்கிறான். அவனது படை பலத்தைப் பற்றி நீ கேள்விப்பட்டி ருக்கிறாயா?” என வெகுண்டெழுந்தார்.

"அமைச்சரே, வெறும் படைபலம் மட்டும்தான் போரின் வெற்றியை தீர் மானிக்கிறது என்று நீங்கள் கருதுகி றீர்களா?" என எந்தவித தடுமாற்றமும் இன்றி வினவினான் அந்த உபபடைத் தலைவன்.

அமைச்சர் எந்தப் பதிலையும் அளிக்காமல் அவனையே நோக்கிக் கொண்டிருந்தார்.

அப்போது அந்த உபபடைத் தலை வன், "போரின் வெற்றியைப் படைவீரர் களின் எண்ணிக்கைதான் தீர்மானிக்கி றது என்றால் நாம் சண்டையிட்டு வென்ற போர்களில் சுங்கர்களும், சாதவாகனர் களும் அல்லவா வென்றிருக்க வேண் டும்" எனத் தெரிவித்தபடியே அமைதியா னான்.

அதுவரை அமைதியாகக் காணப் பட்ட பீமவேலன் அப்போது குறுக் கிட்டு, "வந்துகொண்டிருக்கும் சோழப் படையை சாதவாகனர்களின் படையுட

னும், சுங்கர்களின் படையுடனும் நீ ஒரு நாளும் ஒப்பிடாதே!" எனக் கண்டிப்புடன் தெரிவித்தான்.

"இளவரசே, நான் கூற வருவது..." என எதையோ தெரிவிக்க வாயெடுத் தான் உபபடைத் தலைவன், அப்போ தும் குறுக்கிட்ட பீமவேலன், "சாதவாகன எல்லையில் கிருஷ்ணை நதிக்கரையில் நடைபெற்ற போரினைப் பற்றி நீ கேள் விப்பட்டிருப்பாய். சோழப் படையை விட வும் எண்ணிக்கையில் அதிகமுள்ள சாத வாகன எல்லைப் புறக் காவல் வீரர்கள் அனைவரும் சோழப் படையை எதிர்த்து அழிந்துபோனார்கள். அவர்களின் தாக் குதல் யுக்தி பற்றி ஒவ்வொருவரும் ஒவ் வொரு விதமாகக் கூறிக்கொண்டிருக்கி றார்கள். சோழப் படைத் தலைவரின் வீரத்தைத் தான் நாம் இன்று நமது பயிற் சிப் பாசறையில் கண்டோம். ஒரே நேரத் தில் அவரால் தாக்கப்பட்ட மூன்று எரு மைகளும் கீழே விழுந்ததை நீங்களும் கண்டிருப்பீர்கள். அதே நேரம் நமது பாச

றையையே அதகளமாக்கிய அந்த எருமைகளை உங்களால் ஏதாவது செய்ய முடிந்ததா?” என வினவினான்.

“இளவரசே, தாங்கள் சோழப் படைத்தலைவரின் மீது கொண்டிருக்கும் நட்பினால் அவரின் தகுதி மற்றும் வீரத்தையும் மீறி அதிகமாக அவரைப் பற்றி மதிப்பிட்டிருக்கிறீர்கள்!” எனச் சட்டென்று பதிலளித்தான் அந்த உபதலைவன்.

அவன் கூறியதைக் கேட்டதும், “நீ என்னுடன் எத்தனை முறை வாட்சமர் புரிந்திருக்கிறாய்?” என வினவினான் பீமவேலன்.

“எனக்கு பயிற்சியை அளித்ததே தாங்கள் தானே இளவரசே, எத்தனை முறை என வினவினால் நான் எப்படி பதில் அளிப்பது!”

“அதில் நீ எத்தனை முறை வென்றிருக்கிறாய்?”

https://telegram.me/aedahamlibra

"நான் வென்றதே இல்லை!"

"இதுவரை நாம் எத்தனைப் போர்க்களங்களைச் சந்தித்திருக்கிறோம்?" என அடுத்த கேள்வியையும் வீசினான் பீமவேலன்.

என்ன பதில் அளிப்பது எனத் தெரியாமல் உபதலைவன் சிந்தித்துக் கொண்டிருந்த போதே கலிங்க இளவரசன் பீமவேலன், "இதுவரை எனது வாளால் தாக்கப்பட்ட எந்த வாளாவது கையிலிருந்து விடுபடாமல் இருந்திருக்கிறதா?" என வினவினான்.

"இல்லை. உங்களுடன் வாட்சமரில் மோதி வெற்றி பெற்றவரை இதுவரை நான் கண்டதில்லையே!" எனப் பதிலளித்தான்.

"ஆனால், இன்று எனது வாள் வீச்சினை சிறு குறுவாளினால் தடுத்து நிறுத்தினார் சோழப் படைத் தலைவர். அவர் பிரயோகித்த தற்காப்பு முறையை நான்

https://telegram.me/aedahamlibrary

இதுவரை யாரிடமும் கண்டதில்லை.
எனது வாள் மட்டுமல்ல சுற்றி நின்று
வில் வீரர்கள் அம்புகளைச் சரமாரியாக
செலுத்தினாலும் அவரது தற்காப்பு வாள்
வீச்சு வளையத்திற்குள் நுழையுமா என்
பது சந்தேகமே! அவரது போர் வாளி
னைத் தூக்கிப் பார்க்கும் அரிய வாய்ப்
பும் இன்று எனக்குக் கிடைத்தது. அவரது
வாளினை நீ தூக்கி வீசினால் அடுத்த
கணம் உனது கரம் ஒடிந்து விழுந்து
விடும். அவ்வளவு கணம். சமர் களத்
தில் அவர் மட்டும் புரவியில் அமர்ந்து
தனது வாளினைச் சுழற்றினால் உருண்டு
விழும் தலைகளைப் பார்த்தே எத்தனை
தீரமான படையானாலும் சிதறிப் போய்
விடும். படைத் தலைவரின் பலமே இப்
படி என்றால் இவருக்கு பயிற்சி அளித்த
வேளக்காரப் படைத்தலைவன் என்று
எவனோ இருக்கிறானாம். அவன் எப்
படியோ, இருவருக்கும் மேலே சோழ
மன்னர் கரிகாலர் இருக்கிறார். இவர்க
ளால் பயிற்சி அளிக்கப்பட கட்டுக்கோப்

பான படைதான் சோழப் படை என்பதை நினைவில் கொள்."

"இளவரசே, மீண்டும் மீண்டும் நீங்கள் அவர்களின் பலத்தை மிகைப்படுத்திக் கூறுவதிலேயே பெருமிதம் கொள்கிறீர்கள். அவர்களின் படை வலிமையானது தான். பயிற்சி அளிக்கப்பட்ட கட்டுக்கோப்பான படைதான். அந்தப் படையை வழி நடத்தப் போவது செங்குவீரர், கரிகாலர் போன்ற மாவீரர்கள். அதையும் நான் மறுக்கவில்லை. ஆனால் ஒன்றை மட்டும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். நாம் சோழ நாட்டை நோக்கி படையெடுத்துச் செல்லவில்லை. அவர்கள் நம்மை நோக்கி படையெடுத்து வந்து கொண்டிருக்கிறார்கள்" எனத் தெரிவித்தவன் அமைதியானான்.

அப்போது அமைச்சர் ஒருவர், "இப்போது நீ என்ன கூற வருகிறாய். சுற்றி வளைக்காமல் நேரடியாகத் தெரிவி" எனத் தெரிவித்தார்.

"சோழப் படையின் ஒரு பகுதி தான் இப்போது கிருஷ்ணை நதிக்கரையில் இறங்கி நிலை கொண்டிருக்கிறது. பெரும் படை இன்னும் தொண்டை நாட்டிலேயே தான் நிலை கொண்டிருக்கிறது. சோழ நாட்டிலிருந்து கிருஷ்ணை நதிக்கரையை அடைவது என்பது எளிது. கடல் ஓரமாகவே பயணித்து கிருஷ்ணை நதிக்குள் சென்று வடுகர் நாட்டை அடைந்து விடலாம். ஆனால், கிருஷ்ணை நதிக்கரைக்கு வடக்கே நிலை முற்றிலும் வேறு. பல நூற்றுக்கணக்கான காத தூரங்கள் அடர்ந்த காப்புக் காடுகளால் நிறைந்தது. அந்த அடர்ந்த காப்புக் காட்டினை அவர்கள் கடந்தாலும் அதற்குப் பிறகு வரும் பாலை நிலமான கொடுமையான வெயிலில் வெந்து பொய் பாறைகளும் கருப்புக் கருப்பாகக் காணப்படும் கருப்புக் காடுகளை அவர்கள் கடந்து வருவது என்பது சாதாரண காரியம் அல்ல. அதைக் கடந்தால் அவர்கள் அடர்ந்த நமது கலிங்க வனத்தைக் கடக்க வேண்டும்.

நமக்கு வேண்டிய காலம் நிறைய இருக் கிறது இளவரசே. எனது கணிப்பின் படி சோழப் படை காப்புக் காட்டையும், கருப்புக் காட்டையும் கடக்கவே அவர்க ளின் சக்தி வீணடிக்கப்பட்டு பெரும்பகு தியினர் இறந்துவிடுவர். இடையிடையே நஞ்சு முட்கள் மட்டுமே நிறைந்த சிறு சிறு குன்றுகள் ஏராளம். அவர்கள் கலிங் கத்தின் சிங்கபுரியை அடைவது என் பது சாதாரண காரியம் அல்ல. அடர்ந்த காப்புக் காடு, வெயிலில் எரிந்து போய் மொட்டை மொட்டையாக நின்றுகொண் டிருக்கும் கருப்புக் காடு, இடையிடையே எழுந்து நிற்கும் குன்றுகள் மற்றும் மலை கள் அதையும் கடந்தால் ஆர்ப்பரித்து ஓடும் நதிகள். முடிந்தால் அவர்கள் இவற்றைக் கடந்து சிங்கபுரியை அடை யட்டும். அதற்கும் நாம் நம்மைத் தயார் படுத்திக் கொள்ளலாம்!"

அவன் கூறியதைக் கேட்டதும் அனைவரும் சிந்தித்தபடியே அமர்ந்தி ருந்தனர். அப்போது மூத்த அமைச்சர்,

“இளவரசே, விதிசா”வில் வைதீகர் தெரிவித்ததைக் கூறுங்கள்!” எனத் தெரிவித்தார்.

உபதலைவன் கூறியதைக் கேட்டதும் பெருமிதத்துடன் அவனை நோக்கிய பீமவேலன், “நமது பலத்தினை நாம் நன்கு அறிவோம். ஆனால் வைதீகர் பாகவதர் தென்னகத்தில் நடைபெற்ற வெண்ணிப் போரை நேரில் கண்டவர். சோழப் படையின் தாக்குதல் பற்றி நன்கு அறிந்தவர். ஆதலால்....” எனக் கூறி வாக்கியத்தைப் பாதியிலேயே நிறுத்தினான். அங்கு அமர்ந்திருந்தவர்கள் அனைவரும் பீமவேலனையே நோக்கிக்கொண்டிருந்தார்கள்.

“வடக்கு நோக்கிப் படையெடுத்து வரும் சோழப் படையை நாம் தனித் தனியாக எதிர்கொண்டால் அவர்களை தடுக்க இயலாது என்று வைதீகர் கருதுகிறார்.”

"இளவரசே, வைதீகர் வேண்டுமா னால் நமது கலிங்கப் படையின் பலத்தை அறியாமல் இருக்கலாம். ஆனால் தாங் கள் அறிவீர்கள். தங்களது தலைமை யில்தான் நாம் சாதவாகனரை வென்றி ருக்கிறோம். இதே கலிங்கப் படை தான் சுங்கர்களையும் ஓட ஓட விரட்டி மகதம் வரை சென்று நந்தர்களால் கைப்பற்றப் பட்ட நமது குல தெய்வமான கலிங்க சைனரின் திருவுருவச் சிலையை மீண் டும் கைப்பற்றி வந்திருக்கிறோம்."

"வரலாற்றில் இதுவரை எந்தக் கலிங்க வீரர்களும் செய்யாத வீர தீரச் செயல்களை நாம் செய்திருக்கிறோம். ஆனால் தென்னகத்தின் சோழப் படை யினரையும் நாம் குறைத்து மதிப்பி டக் கூடாது. வருவது சோழப் படை யினர் மட்டுமல்ல. அவர்களுடன் ஒட்டு மொத்த தமிழகப் படையும் திரண்டு வந் துகொண்டிருக்கிறது. அவர்களை வழி நடத்துவது படைத்தலைவர் செங்குவீ ரர் மற்றும் சோழ மாமன்னன் கரிகா

லன் என்பதை நாம் நினைவில் கொள் வோம். சோழ நாட்டைக் கைப்பற்ற வந்த சேரர், பாண்டியர் மற்றும் வேளிர்களை ஒரே இடத்தில் திரட்டி ஒட்டுமொத்தமாக அழித்திருக்கிறது சோழப் படை. சோழப் படையின் தாக்குதலை நேரில் கண்ட வைதீகர் பாகவதர் மிரண்டு போய் இருக் கிறார். அந்த மிரட்சியை அவரது விழி களில் கண்டேன் நான். அவர் அதைப் பற்றி நினைக்கும்போதெல்லாம் நடுங்கு கிறார்."

"வைதீகர் தெரிவித்த முடிவுதான் என்ன இளவரசே?"

"ஆர்யவதத்தின் அரசுகளான கலிங்கம், சாதவாகனம், சுங்கம் மற் றும் அவந்தி ஆகிய நான்கு நாடுகளும் ஒன்றாக இணைந்து சோழப் படையை எதிர்த்துத் தாக்க வேண்டும் என்று வைதீகர் வேண்டுகோள் விடுத்தார்."

"அதற்கு சுங்கன் தெரிவித்த பதில்?"

"அவன் அவரது கோரிக்கையை அங்கேயே ஏற்றுக்கொண்டு விட்டான்."

"ஆச்சரியமாக அல்லவா இருக்கிறது?"

"ஆச்சரியம் தான். ஆனால், எனக்கு அவரது இசைவு அதிர்ச்சியாகவே இருந்தது."

அப்போது ஆசனத்திலிருந்த எழுந்த மூத்த அமைச்சர் ஒருவர், "சுங்கனது இசைவைக் கேட்டு தாங்கள் அதிர்ச்சியடைந்தது இருக்கட்டும் இளவரசே, தாங்கள் என்ன கூறிவிட்டு வந்தீர்கள்?" என அவரது கரகரத்த குரலால் வினவினார்.

"நான் எந்தப் பதிலையும் தெரிவிக்கவில்லை."

"ஏன்?"

"அதில் எனக்கு உடன்பாடு இல்லை."

https://telegram.me/aedahamlibra

“அதை வைதீகர் மற்றும் சுங்கனிடமே தெரிவித்து விட்டீர்களா?”

“இல்லை.”

“ஏன் தெரிவிக்கவில்லை?”

“அரசர், அமைச்சர்கள் மற்றும் படைத் தலைவர்களிடம் விவாதித்து விட்டு பதில் கூறுகிறேன் என்று வந்து விட்டேன்.”

“நல்லது. அரசரிடம் இது பற்றி விவாதித்து விட்டீர்களா?”

“விவாதித்து விட்டேன்.”

“கலிங்க மன்னரின் எண்ணம் என்ன?”

“அவருக்கும் அதில் விருப்பம் இல்லை.”

“என்ன காரணம் தெரிவித்தார்?”

"தார்மீக ரீதியில் நாம் அவனிடம் அடிப்படை நம்பிக்கையை எதிர்பார்க்க இயலாது என்று தெரிவித்துவிட்டார்."

"நல்ல முடிவு. அரசரின் முடிவை நாங்கள் வரவேற்கிறோம்" எனத் தெரி வித்தனர் அனைவரும். பிறகு அமைச்சர் கள் மற்றும் படைத் தலைவர்கள் அனை வரும் ஒருவருக்கு ஒருவர் விவாதித்த படி காணப்பட்டார்கள். அப்போது மூத்த அமைச்சர் ஒருவர், "இளவரசே, சோழப் படைத்தலைவர் செங்குவீரர் கலிங்கத் திற்கு வந்துச் சென்றிருக்கிறாரே? என்ன காரியமாம்?" என மீண்டும் வினவினார்.

"சோழப் படையின் இலக்கு மகதம் தானாம்"

"மகதம் தானா?"

"ஆம்!?

"பிறகு எதற்கு அவர்கள் சாதவாகன எல்லைப் புறக் கோட்டையைத் தாக்கி னார்களாம்?"

"அதையேதான் நானும், அரசரும் சோழப் படைத்தலைவரிடம் வினவி னோம்!"

"அவர் அளித்த பதில்?"

"அந்தத் தாக்குதல் செய்தி, அவரது கட்டளைக்கு முரண்பாடாக இருக்கிறது என்று வருந்தினார். நேரில் சென்று பார்த் தால் தான் உண்மை நிலை தெரியவரும் என்றும் கூறிவிட்டார்."

"இந்தப் பதில் ஏற்கத்தக்கதாக இல்லையே! அவரது கட்டளையை மீறி அவரது படைவீரர்கள் எப்படி செயல்பட் டிருப்பார்கள்?"

"எனக்குக் கிடைத்த தகவலின் படி சாதாவாகன எல்லைப்புறப் படையே முத லில் சோழப் படையைத் தாக்கியிருக்கி றது."

"அதற்கு சாத்தியமே இல்லை."

"ஏன் அப்படிக் கூறுகிறீர்கள்?"

"சாதவாகன மன்னன் சதகர்ணி தென்னக நாட்டுடன் நல்லுறவையே பேணுகிறான். படித்தானத்தின் வருவாயில் பெரும் பங்கு தென்னக வணிகர்களைச் சார்ந்திருக்கிறது. இந்த நிலையில்...?" எனக் கேள்வி எழுப்பினார் அமைச்சர்களில் ஒருவர்.

"எனக்கும் அந்தக் கேள்வி எழுந்திருக்கிறது. ஆனால், காரணம் தெரியவில்லை. சாதவாகனர் சோழப் படையை எதிர்க்கக் கூட முடிவு செய்திருக்கலாம்."

"கலிங்கம் தவிர்த்த ஒட்டுமொத்த ஆர்யமன்னர்களும் சேர்ந்து சோழப் படையை எதிர்க்க ஆயத்தமாகிவிட்டார்கள். கலிங்க நாட்டின் நிலை என்ன? சோழப் படையின் இலக்கு மகதம் தான் என்று சோழப் படைத்தலைவர் சிங்கபுரி வரை வருகைதந்து தெரிவித்திருக்கிறார்."

"படைத்தலைவர் நம்மிடம் சோழப் படையின் இலக்கு மகதம் என்று கூறிக்

கொண்டிருந்த அதே வேளையில் சாதவாகன எல்லைப்புறக் கோட்டை கைப் பற்றப்பட்டதும் சோழப் படைத்தலைவி நமது அரசர் காரவேலரால் முறியடிக்கப் பட்ட மூவேந்தர் கூட்டுப் படையை மீண் டும் 1திராமிரத்தில் நிலை நிறுத்துவதாக அறிவித்திருக்கிறார்."

"மீண்டும் மூவேந்தர் படையா?" என ஒருவர் வினவ மற்றொருவர், "படைத் தலைவியா?" என வியப்புடன் வினவினார்.

"ஆம்!" என இரண்டிற்கும் சேர்த்து ஒரே பதிலை அளித்தான் பீமவேலன்.

"இது கலிங்கத்திற்கு எதிரான முடிவு! இதை நாம் ஒருநாளும் அனு மதிக்கக் கூடாது. அவர்கள் மீண்டும் மூவேந்தர் கூட்டணியை திராமிரத்தில் நிலை நிறுத்தினால் அது நமது கௌர வத்திற்கு மிகப்பெரும் இழுக்கு."

https://telegram.me/aedahamlibra

“அரசரும் அதையே தான் சோழப் படைத்தலைவரிடம் தெரிவித்தார்.”

“அதற்கு சோழப் படைத்தலைவர் அளித்த பதில்.”

“சோழப் படையின் இலக்கு மகதம் தான். இடையிலிருக்கும் சாதவாகன நாடோ அல்லது கலிங்க நாடோ அல்ல. ஆதலால் சோழப் படைக்கு வடுகர்களைப் போன்று கலிங்கமும் வழிவிட வேண்டும் என வேண்டினார்.”

“மன்னரது பதில்?”

“வேறு நாட்டின் படை ஒருநாளும் கலிங்கத்தின் மீது கால் பதிக்க நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்று திடமாகத் தெரிவித்து செங்குவீரரின் கோரிக்கையை நிராகரித்துவிட்டார் கலிங்க மன்னர்.”

“அதற்கு சோழப் படைத்தலைவர் என்ன தெரிவித்தார்?”

"சோழப் படையின் நகர்வை யாரா லும் தடுத்து நிறுத்த முடியாதாம்! கலிங்க நாடு வழிவிடவில்லை என்றால் அவர்க ளுக்கு வேண்டிய பாதையை அவர்கள் உருவாக்கிக் கொள்வார்களாம்."

"அப்படியெனில்?"

"கலிங்க நாட்டுடன் போரை அறி வித்து விட்டுச் சென்றிருக்கிறார்."

"எவ்வளவு திமிர்?" என வெகுண் டெழுந்தான் உபபடைத்தலைவன்.

"இளவரசே, சோழப் படை இது தென்னகத்தைப் போன்றது என எண்ணி வந்துகொண்டிருக்கிறார்கள். நமது நாட் டைச் சூழ்ந்திருக்கும் மலைகளையும், வனங்களையும் கடந்து அவர்கள் வருவ தற்குள் அவர்களை நமது படை ஒட்டு மொத்தமாக அழித்துவிடும்" எனத் தெரி வித்தான் மற்றொரு படைத்தலைவன்.

"ஆர்யவதத்தின் ஒட்டு மொத்த மன்னர்களும் சோழப் படையை எதிர்க்க

ஆயத்தமாகிவிட்டோம். இருந்தாலும் நாம் அவர்களைக் குறைத்து மதிப்பிடக் கூடாது. சிங்கபுரியின் காவல் பலப்படுத் தப்படட்டும். சோழப் படை சிங்கபுரியை அடைய காலம் ஆகலாம். அதற்குள் நாம் போருக்குத் தயார் ஆகிவிடுவோம். அவர்களை வழியிலேயே தடுத்து நிறுத்தி தாக்கலாமா? அல்லது அவர்களை சிங் கபுரி வரை முன்னேறவிட்டு தாக்க லாமா? என்பதைப் பிறகு தீர்மானிப்போம். சுங்க நாட்டின் எல்லை மற்றும் அவந்தி எல்லையில் நிலை நிறுத்தப்பட்டிருக்கும் நமது வீரர்கள் அனைவரையும் சிங்கபு ரிக்கு வரவழையுங்கள். அதே நேரத்தில் கடற்படையும் தற்காப்புக்கு ஆயத்தமா கட்டும்."

"இளவரசே, சுங்க எல்லையில் நிலை நிறுத்தப்பட்டிருக்கும் படையை திரும்ப அழைப்பதில் எந்தப் பிரச்ச னையும் இல்லை. அவர்களும் நம் மைப் போன்றே சோழப் படையை எதிர் கொள்ள ஆயத்தமாகிக் கொண்டிருக்

கும் வேளையில் நம்மைத் தாக்கமாட்டார்கள். ஆனால், அவந்தி எல்லையில் இருக்கும் படைகளை திரும்ப அழைப்பது சரியாக இருக்குமா என்று தாங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுகிறேன்" என வேண்டுகோள் விடுத்தான் உபபடைத்தலைவன்.

"இப்போதிருக்கும் நிலையில் அவந்தியைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். அவர்களால் எந்த ஆபத்தும் ஏற்படாது!"

"எந்த ஆபத்தும் ஏற்படாதா?"

"ஆம்."

"எப்படி இவ்வளவு உறுதியுடன் கூறுகிறீர்கள்?"

"சாதவாகன படைத் தலைவனான வஜ்ரபாகு சாதவாகன அரசன் சதகர்ணிக்கு சகோதரன். சதகர்ணியைப் போன்றே வஜ்ரபாகுவிற்கும் அரியணையில் உரிமை உண்டு என்பதை

https://telegram.me/aedahamlibra

அனைவரும் அறிவீர்கள். வஜ்ரபாகு தன்னை அவந்தியின் அரசனாக முடி சூடிக் கொள்ள முடிவு செய்துவிட்டான். அவந்திக்கும் பைத்தானுக்கும் உள்நாட்டுப் போர் மூலப் போகிறது. ஆதலால் அவந்தியைப் பற்றிய கவலை இப்போது தேவை இல்லை. சோழப் படையை எதிர் கொள்ள ஆயத்தமாவோம்" எனத் தெரிவித்தான் பீமவேலன்.

அங்கு அமர்ந்திருந்தவர்கள் அனைவரும் ஒருவருக்கு ஒருவர் விவாதித்தபடி அமர்ந்திருக்க சிறிது சலசலப்புத் தோன்றியது. அந்த சலசலப்பைக் கேட்ட பீமவேலன், "இது வரை நாம் நம்மை எதிர்த்த வடுகர், சுங்கர், சாதவாகனரை தாக்கி வெற்றி பெற்றிருக்கிறோம். ஆனால், அவர்களை விடவும் பெரும் பலமும், வீரமும் நிறைந்த கட்டுக்கோப்பான படையை நாம் எதிர்கொள்ளப் போகிறோம் என்பதை நினைவில் கொள்வோம். அதற்கு நம்மை நாமே தயார்படுத்திக் கொள்வோம். இந்தப்

போர் அதிகாரத்திற்காகவோ அல்லது நாட்டிற்காகவோ நடைபெறப் போகும் போர் அல்ல. நமது பலத்தை நமது வீரத்தை உலகறியச் செய்ய நடைபெறப் போகும் இது. நம்மைத் தாக்க வரும் சோழப் படையை திருப்பி சோழ நாட்டுக்கே விரட்டி அடிப்போம்" என வெகுண்டெழுந்தான்.

உடனே அங்கிருந்தவர்கள் அனைவரும், "சோழப் படையை முன்னேற விடாமல் விரட்டியடிப்போம்" என ஒரு சேர முழக்கமிடலானார்கள்.

"சோழப் படையின் நகர்வை நமது ஒற்றர்கள் தொடர்ந்து கண்காணித்துக் கொண்டே இருக்கட்டும். சாதவாகனம், அவந்தி மற்றும் சுங்கம் ஆகியவற்றையும் தொடர்ந்து கண்காணியுங்கள். குறிப்பாக அவந்தியின் அரசியல் நிலைமையை தொடர்ந்து தெரியப்படுத்திக் கொண்டிருங்கள். இன்னும் சில கிழமைகளில் அவந்தியின் அரசியல் நிலைமை முற்றி

https://telegram.me/aedahamlibra

லும் மாறப்போகிறது. அவந்தியின் அரசியல் நிலைமை தீர்மானிக்கும். சாதவாகனர் சோழப் படையை எதிர்க்கப் போகிறார்களா அல்லது வடுகர்களைப் போன்று வழிவிடப் போகிறார்களா என்று. சாதவாகனம் சோழப் படையை எதிர்த்தால் சோழப் படை பைத்தான் வழியாகவே மகதத்தை நோக்கி முன்னேறும். கலிங்கம் அவர்கள் வழியில் குறுக்கிடாது. ஆனால். சாதவாகன அரசன் சதகர்ணியின் நிலைப்பாடு மாறிவிட்டால் சோழப் படை கலிங்கத்தின் வழியாகவே முன்னேற முனைவார்கள். கலிங்க எல்லையில் நமது வீர வாட்கள் அவர்களை வரவேற்கட்டும்!”

https://telegram.me/aedahamlibra

# 22.
# அவந்திகா வுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி

தனக்கு முன் தலையைக் கீழே தொங்க போட்டுக்கொண்டு நின்ற அவந்தியின் காவல் தலைவன் பலதேவனின் விழிகளுக்குள் ஊடுருவி அவனையே பார்த்துக்கொண்டு அமர்ந் திருந்தாள் அவந்திகா. பலதேவன் சிறிது நேரம் அமைதியாக நின்றுகொண்டிருந் தான். பிறகு, "இளவரசி, தவறு செய்தவ னைப் போன்றே நிற்கவைத்து என்னை

நோக்கிக் கொண்டிருக்கிறீர்களே? நான் என்ன தவறு செய்தேன்?" என குர லைக் கூட அவந்திகாவின் முன் உயர்த்த பலமற்றவனாய் பொறுமையுடன் வினவி னான்.

அவனது கேள்விக்கு உடனே பதில் அளிக்காத அவந்திகா சிறிது நேரம் கழித்து, "இதுவரை தாங்கள் செய்த பிழைகள் அனைத்தையும் பொறுத்துக் கொண்டோம் யாம். இனியும் தாங்கள் எந்த தவறும் செய்யக் கூடாது என்பதற் காகத் தான் தங்களை நிற்க வைத்து பேசிக்கொண்டு இருக்கிறேன். இனியும் தாங்கள் என் தமையன் வஜ்ரபாகுவுடன் சேர்ந்துகொண்டு ஏதாவது முயற்சி செய் தால் தாங்கள் கட்டிய நதிக்கரை மாளி கையே உங்களுக்கு நிரந்தர இருப்பிட மாகிவிடும். நினைவில் கொள்ளுங்கள்!" என அவனது விழிகளைப் பார்த்தபடியே தெரிவித்தாள்.

பெரும் வீரனான பலதேவனின் உடல் அவளது பார்வையிலும், அவள் தெரிவித்த சொற்களிலும் நடுங்கத்

துவங்கியது. அதை அவந்திகா கவனித்தாலும், அதைப் பொருட்படுத்தாமல், “என் தம்பி எங்கே?” என வினவினாள்.

“தங்களது தம்பியா?”

“ஆம்!”

“தாங்கள் யாரைப் பற்றி வினவுகிறீர்கள்?”

“புரியவில்லையே அல்லது புரியாதவரைப் போன்று நடிக்கிறீர்களா?”

“இளவரசி, தங்கள் சாதவாகன அரசர் சதகர்ணியைப் பற்றியா வினவுகிறீர்கள்?”

“ஆம்!”

“அவர் பைத்தானில் அல்லவா இருக்கிறார். அவர் எங்கே என்று என்னிடம் கேட்டால் எனக்கு எப்படித் தெரியும்?”

“அப்படியெனில் உங்களுக்கு சதகர்ணி எங்கே என்று தெரியாது!”

https://telegram.me/aedahamlibra

"ஆமாம் தேவி..."

"பலதேவரே, நான் அவந்திக்கு சத கர்ணியை அழைத்து தூது அனுப்பி யமை, பிறகு எனது கட்டளைக்கு ஏற்ப நீங்கள் மறைமுகமாக செய்த ஏற்பாடு என அனைத்தையும் அறிவேன் நான். அனைத்தையும் அறிந்து தங்களை எதற் காக நான் உயிரோடு சுதந்திரமாக நடமாட விட்டு வைத்திருக்கிறேன் என்று சிந்தித்தீர்களா?"

அவளது கேள்விக்கு எந்தப் பதி லையும் அளிக்காமல் அமைதியாக நின் றுகொண்டிருந்தான் பலதேவன்.

"அனைத்திற்கும் காரணம் இருக்கி றது பலதேவரே, ஆனால் ஒன்றை மட்டும் நினைவில் கொள்ளுங்கள். தவறு ஏதா வது நிகழ்ந்தால் உங்களை வஜ்ரபாகு வால் கூட காப்பாற்ற இயலாது. வஜ்ரபாகு விற்கும் அதே கதிதான் என்பதை நினை வில் கொள்ளுங்கள்."

https://telegram.me/aedahamlibra

பலதேவன் பேசுவதற்கு வாயைத் திறந்தான். ஆனால், அவன் பேசுவதற்குள் எழுந்த அவந்திகாவின் கரங்கள் அவனது பேச்சினை முடமாக்க, “தாங்கள் கிளம்பலாம்” எனக் கூறியபடியே கையை அசைத்தாள்.

“இளவரசி...” என ஏதோ தயக்கத்துடன் கூற முயன்றான்.

“தங்களை நான் கிளம்பச் சொன்னேன் காவல் தலைவரே!” கண்டிப்புடன் வெளிப்பட்டது அவந்திகாவின் கட்டளை.

அடுத்த கணம் எதையும் பேசாமல் அங்கிருந்து வெளியேறினான் பலதேவன்.

அவன் அவளது அறையிலிருந்து வெளியேறியதும், “சொர்ணமுகி” என அழைத்தாள் அவந்திகா.

நந்தவனத்தில் அமர்ந்திருந்த "சொர்ணமுகி" அவளுக்கு முன் பணிந்து, "இளவரசி..." என வேண்டினாள்.

"பலதேவரை நிழலைப் போன்று பின்தொடர்ந்து செல். யாரைச் சந்திக்கிறார், எதற்காகச் சந்திக்கிறார் என்று கண்காணித்து தகவல் அனுப்பு."

அடுத்த கணம் அவந்திகாவின் மாளிகையிலிருந்து வெளியேறிய சொர்ணமுகி பலதேவரைப் பின்தொடரலானாள்.

அவந்திகாவைப் பார்த்ததும் வியர்த்து விறுவிறுத்துப் போன பலதேவன் சற்றே நடுக்கத்துடன் நடந்து சென்றுகொண்டிருந்தான். அப்போது அவனுக்கு எதிரில் புரவியில் வந்தாள் கார்த்திகா. அவளும் அவனைப் போன்றே பதற்றத்துடன், அவசரத்தில் வந்துகொண்டிருந்ததால் பலதேவனைப் பொருட்படுத்தாமல் மாளிகைக்குள் நுழைந்தாள் கார்த்திகா.

பலதேவன் வெளியேறியதும் பல் வேறு இடங்களிலிருந்து வந்த ஒற்றர் களின் ஓலைகளைப் படித்த பிறகு அவற்றை முறித்து எரிந்துகொண்டிருந்த நெருப்பில் போட்டுக்கொண்டிருந்தாள் அவந்திகா.

அவளது அறைக்குள் பதற்றத்து டன் நுழைந்தாள் கார்த்திகா.

அவளது பதற்றத்தைக் கண்ட அவந்திகா, "ஏதாவது பிரச்சனையா, ஏன் இவ்வளவு பதற்றத்துடன் ஓடி வந்திருக் கிறாய்?" என வினவினாள்.

"தேவி, அவந்தியின் படைத்தலை வர் பலதேவர் வகுத்த திட்டம் நிறைவே றிவிட்டது" என மூச்சு வாங்கிய படியே வருத்தத்துடன் தெரிவித்தாள்.

"என்ன திட்டம்?"

"பலதேவரின் திட்டப்படி நமது எல் லைப் புறப்படை சோழப் படையைத் தாக்கி விட்டது!"

https://telegram.me/aedahamlibrary

“என்ன கார்த்திகா கூறுகிறாய்?” என அதிர்ச்சியில் வினவினாள் அவந்திகா.

“ஆமாம் தேவி, சற்று முன்னர் தான் எனக்கு செய்தி கிடைத்தது. உடனே உங்களைச் சந்திக்க ஓடி வருகிறேன்.”

“ஒற்றர் தலைவனைத் தான் தடுத்து நிறுத்துவதற்கு நாம் உடனே நமது வீரர்களை அனுப்பி வைத்தோமே, முடியவில்லை என்று திரும்பி வந்துவிட்டார்களா?”

“இல்லை தேவி!”

“அவர்கள் எங்கே?”

“அவர்கள் அனைவரும் அவந்தியின் காவல் தலைவரால் கொல்லப்பட்டுவிட்டார்கள்.”

“என்ன கூறுகிறாய் நீ?”

“ஆம் தேவி! நாம் அனுப்பிய வீரர்கள் அவந்தியில் எல்லையைக் கூடத்

தாண்டவில்லை. அனைவரையும் வழியிலேயே பலதேவரின் எல்லைப் புறக் காவல் வீரர்கள் கொன்றுபோட்டு விட்டார்கள்."

சிறிது நேரம் கார்த்திகாவை விரக்தியுடன் நோக்கிக் கொண்டிருந்தாள் அவந்திகா. பிறகு, "சரி, போர் என்ன ஆனது. சாதவாகன எல்லைப் படையின் திடீர் தாக்குதலில் சோழப் படை சீர் குலைந்து சிதறிவிட்டதா?" என வினவினாள்.

"இளவரசி..." எனத் துவங்கிய கார்த்திகா கூறுவதற்கே தயங்கினாள்.

"என்ன ஆனது கார்த்திகா, நமது படையின் திடீர் தாக்குதலில் கிருஷ்ணை நதிக்கரையில் நிலை கொண்டிருந்த சோழப் படை முற்றிலும் அழிந்து விட்டதா? என்ன நடந்தது? விரைந்து கூறு!"

"அப்படி நடந்திருந்தால் நானும் மகிழ்ச்சி அடைந்திருப்பேன்."

https://telegram.me/aedahamlibra

"எப்படி நடந்திருந்தால்?"

"தாங்கள் கூறுவதைப் போன்று சோழப் படை அழிந்திருந்தால்..."

"என்ன நடந்தது கார்த்திகா? ஏன் தயங்கித் தயங்கி பேசிக்கொண்டிருக்கி றாய்?"

"இளவரசி, போரில் நமது படை தோற்றுவிட்டது."

"என்ன கார்த்திகா கூறுகிறாய்?" எனக் கூறியபடியே ஆசனத்திலிருந்து அதிர்ச்சியில் உறைந்து போய் எழுந்தாள் அவந்திகா.

"ஆமாம் தேவி. நமது படை வலியச் சென்று தாக்கி தோற்றுப் போய் விட்டது."

"இழப்பு எவ்வளவு?"

"இழப்பு எவ்வளவு எனக் கூறுவ தற்கு பதில் எத்தனை வீரர்கள் தப்பித் தார்கள் என வினவினால் பொருத்தமாக இருக்கும்!"

https://telegram.me/aedahamlibra

“கார்த்திகா...?” ஆவேசமடைந்தாள் அவந்திகா.

“கோபம் வேண்டாம் தேவி. உண் மையைத் தான் கூறுகிறேன் நான்.”

“கார்த்திகா எனது பொறுமையை சோதிக்கிறாய் நீ. என்ன நடந்தது அதை மட்டும் நீ தெரிவி!”

“அமைதியாக கிருஷ்ணை நதிக்க ரையோரம் ஏரிகளை வெட்டி தூர்வா ரிக் கொண்டிருந்தவர்களை நமது எல் லைப்புறப் படை வலியச் சென்று தாக் கியது. உடனே சுதாரிப்படைந்த சோழப் படை எதிர்த்துத் தாக்கியது. தாக்கா ளர்கள் அனைவரும் கொல்லப்பட்டார் கள். நமது எல்லைப்புற மாதண்ட நாய கன் ஊர்மி வியூகம் அமைத்து அலை அலையாய் தாக்கியிருக்கிறான். ஆனால் சோழப் படையின் வியூகத்திருக்கு முன் ஊர்மி வியூகம் செயலற்றுப் போய்விட் டது. நமது படையில் போரில் புறமுது கிட்டு ஓடியவர்களும், உயிரோடு கைது

https://telegram.me/aedahamlibra

செய்யப்பட்ட மாதண்ட நாயகனையும் தவிர வேறு யாரும் உயிரோடு பிழைக் கவில்லை என்று செய்தி வந்திருக்கிறது. நம் வீரர்கள் அனைவரும் வீர மரணத் தைத் தழுவி விட்டார்கள்"

"சோழப் படையின் இழப்பு?"

"அவர்கள் தரப்பில் இழப்பு என்பது சொல்லிக் கொள்ளும்படி இல்லை. நமது படை தான் மொத்தமாக அழிந்து போய் விட்டது."

அவந்திகா எதுவும் கூறாமல் அமைதியாக அமர்ந்திருந்தாள். அப் போது கார்த்திகா, "தேவி தாங்கள் அனு மதிக்கும் பட்சத்தில்..." எனக் கூறத் தயங்கி அமைதியாக நின்றாள்.

"எதற்கு அனுமதி?"

"நான் கூற வந்ததை இன்னும் முழு வதுமாகக் கூறி முடிக்கவில்லை."

https://telegram.me/aedahamlibrary

“இன்னும் என்ன துயரச் செய்தி யைக் கூறப் போகிறாய்?”

“இது துயரச் செய்தி அல்ல. சற்றே ஆறுதலான செய்தி.:

“என்ன?”

“சோழப் படை நமது படையை அழித்தது மட்டுமல்லாமல் அவர்கள் நமது எல்லைப் புறக் கோட்டையையும் கைப்பற்றிக் கொண்டார்கள்?”

அவள் கூறியதைக் கேட்டதும் கடும் கோபம் அடைந்த அவந்திகா, “நமது படையை இழந்தது மட்டுமல்லாமல் நாம் நமது வலிமையான கோட்டை ஒன்றை யும் இழந்திருக்கிறோம். இதைத் தான் ஆறுதலான செய்தி என்கிறாயா?” எனச் சற்று சத்தத்துடன் வினவினாள்.

“இல்லை தேவி. நான் கூற வந்தது இது அல்ல.”

“பிறகு எதை?”

"போரில் கைதுசெய்யப்பட்ட நமது படைகளின் மாதண்ட நாயகனையே சோழப் படைத்தலைவி தூதுவனாக நிய மித்து பைத்தானுக்கு அனுப்பி வைத்தி ருக்கிறாள்!"

"பைத்தானுக்கா?"

"ஆம்!"

"எதற்கு?"

"அவனிடம் அவள் விசாரித்த போது சாதவாகன படைத்தலைவரின் உத்தரவின் பேரிலேயே சோழப் படை யைத் தாக்கியதாக சொல்லியிருக்கிறான், படைத்தலைவரின் உத்தரவில் சந்தே கம் கொண்டவள் "சாதவாகன மன்னர் அமைதியை நாடினால் சோழப் படை யும் அமைதியை நாடும். அப்படி இல்லை என்றால் சோழப் படை போருக்கும் தயார் என்று செய்தி அனுப்பியிருக்கி றாள்! முடிவு சாதவாகன மன்னர் சதகர்

ணியிடமே விட்டுவிடுவதாக அறிவித்தி ருக்கிறாள்.”

“நமது மாதண்ட நாயகன் எங்கே?”

“அவன் பைத்தானுக்குச் சென்றி ருப்பதாகச் செய்தி!”

“சதகர்ணியைத்தான் நான் அவந் திக்கு வரச் சொல்லி செய்தி அனுப்பி விட் டேனே!”

“அரசர் பைத்தானில் இல்லை என் றால் அவந்திக்கு தான் அவன் திரும்பி வரப் போகிறான். கவலை வேண்டாம் இளவரசி!”

“சோழப் படைத் தலைவி சற்றே சிந்தித்து தூதுவனை அனுப்பியிருக்கி றாள். அவள் மட்டும் தூது அனுப்பாமல் கோபம் கொண்டு பைத்தானை நோக்கி முன்னேறியிருந்தால் நமது திட்டம் என்ன ஆகியிருக்கும்? தங்கள் தமையர் வஜ்ர பாகுவின் திட்டம் வென்றிருக்கும். நாம் நமது வைரி சுங்கனிடமோ அல்லது

கலிங்கனிடமோ உதவி கேட்கும் நிலை வந்திருக்கும். காலம் காலமாக நமக்கு நண்பர்களாக இருக்கும் தமிழ் படையை நாம் விரோதிக்கும் நிலை வந்திருக்கும்!" எனத் தெரிவித்த அவந்திகா, "கார்த் திகா, அந்த படைத்தலைவி யார் என்று தகவல் ஏதாவது கிடைத்ததா?" என வினவினாள்.

"கிடைத்தது தேவி!"

"யார் அவள்?"

"கரிகாலரின் தமக்கையாம்!"

"பெயர்?"

"வானவல்லி என்றார்கள்!"

"அவள் தான் மாவீரர் செங்குவீ ரரின் மனைவி. நதிக்கரையோரம் நாம் கைது செய்தபோது அந்த மூன்று வணி கர்களும் அப்பெண்ணைப் பற்றி தெரி வித்தார்கள். நானும் சில வணிகர்களிட மும் அவளைப் பற்றி கேட்டிருக்கிறேன்.

வீரத்தோடு அறிவும், அழகும் மிக்க வள்" எனக் கூறிக்கொண்டிருந்த போதே அவளது அறைக்குள் நுழைந்தாள் சத கர்ணியின் மனைவியான சாதவாகன தேசத்தின் மகாராணி நயனிகா.

அவளை எதிர்பாராத அவந்திகா அவளது திடீர் வரவில் மகிழ்ந்து அவ ளைக் கட்டிக் கொண்டாள். நயனிகா வந் தவுடனேயே "அவந்திகா, உன் தம்பியை அவந்திக்கு வரச் சொல்லி செய்தி அனுப் பினாயே உடன் என்னையும் அழைத்து வரச் சொல்லி செய்தி அனுப்பத் தோன்ற வில்லையா? மணம் ஆகியிருந்தால் நீயும் பிரிவைப் பற்றி அறிவாய். இந்த வரு டமே உனக்கு மாப்பிள்ளையைப் பார்த்து கட்டி வைக்கப்போகிறேன். அப்போது தான் நீயும் கணவரைப் பிரிந்து வாழ் வது எவ்வளவு கடினம் என்பதைப் புரிந் துகொள்வாய்" எனத் தெரிவிக்க நாணம் கொண்டு தலையைக் கீழே குனிந்தாள் அவந்திகா.

அவந்திகா நாணம் கொண்டு நிலம் நோக்குவதை ஆச்சரியத்துடன் பார்த்த படி நின்றாள் கார்த்திகா.

அப்போது நயனிகா, “சரி, சரி. நாம் பிறகு பேசுவோம். அவர் எங்கே அவந் திகா? அவரை நான் இப்போதே சந்திக்க வேண்டும்!” என அவசரப் பட்டாள்.

அவள் வினவியதைக் கேட்டதும் அதிர்ச்சியடைந்த கார்த்திகா, “அரசர் சத கர்ணி இன்னும் அவந்திக்கு வரவில் லையே தேவி. நாங்களும் அவரைத் தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.” எனப் பதிலளிக்க வாயைத் திறந்தாள். ஆனால், அதற்குள் குறுக்கிட்ட அவந் திகா, “நயனிகா நீ கவலை கொள்ள வேண்டாம். நான் தான் ஒரு முக்கிய காரியமாக வரவழைத்து அனுப்பி வைத் திருக்கிறேன். நாளை மாலைக்குள் வந் துவிடுவான். நீ அதுவரை ஓய்வெடுத் துக் கொண்டிரு” எனக் கூறியவள் கார்த்

திகாவை அழைத்துக்கொண்டு அங்கி ருந்து புறப்பட்டாள்.

"தேவி, நாம் இப்போது எங்கே சென்றுகொண்டிருக்கிறோம்?" என வின வியபடியே அவந்திகாவுடன் நடந்து சென்றாள் கார்த்திகா.

"தெரியவில்லை கார்த்திகா. பெரும் குழப்பத்தில் இருக்கிறேன் நான்!"

"என்ன தேவி குழப்பம்?"

"எங்கோ பெரும் தவறு நேர்ந்திருக் கிறது!"

"எங்கு?"

"தெரியவில்லை!"

"என்ன தவறு?"

"சதகர்ணி காணாமல் போய்விட் டான். அவன் பைத்தானிலிருந்து புறப் பட்ட பிறகு எனக்குச் செய்தி கிடைத்தது. கடந்த கிழமையே அவன் அவந்தியை அடைந்திருக்க வேண்டும். ஆனால்,

இன்னும் அவன் வந்துசேரவில்லை. அவனுக்கு என்ன நேர்ந்திருக்குமோ என எண்ணி எனது மனம் பதைபதைக்கி றது. அவன் எங்கே என்றே தெரிய வில்லை. சோழ அரசர் மற்றும் படைத் தளபதிகளை நாம் மாளிகையில் வேறு அடைத்து வைத்திருக்கிறோம். சோழப் படை வேறு நமது எல்லைக் கோட் டையைக் கைப்பற்றிக் கொண்டு சதகர் ணியின் பதிலுக்கு வேறு காத்திருக்கி றது. வஜ்ரபாகு வேறு தன்னை அரச னாக அறிவித்துக் கொள்ள தக்க சந் தர்பத்தை எதிர்பார்த்துக் கொண்டு காத் திருக்கிறார். இந்த இக்கட்டான நிலை யிலா சதகர்ணி மறைய வேண்டும்!" எனக் குழம்பிப் போய் செய்வதறியாது திகைத்து கால் போன போக்கில் நடந்துகொண்டி ருந்தாள்.

அப்போது அவளுக்கு முன் வந்து நின்ற கார்த்திகா, "தேவி, இந்த அனைத்து பிரச்சனைகளும் தீர என்னி

டம் ஒரு வழி இருக்கிறது" எனத் தெரி வித்தாள்.

"என்ன வழி?"

"சோழப் பேரரசர் கரிகாலரிடம் உதவி கேட்பதைத் தவிர வேறு வழி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை."

கார்த்திகாவை வியப்புடன் நோக்கி னாள் அவந்திகா.

"ஆம் தேவி. தனது சோழ நாட்டை விட்டு வெகு தொலைவில் மாற் றான் நாட்டுக் கோட்டையில் வெறு மனே அடைபட்டுக் கிடக்க அவர் ஒன் றும் சாதாரண மனிதர் அல்ல. பெரும் பாதுகாப்பு, திட்டம் இல்லாமல் அவர் அவந்திக்கு வந்திருக்கவே மாட்டார். நீங் கள், நான் மற்றும் உங்களது தமையன் வேண்டுமானால் நினைத்துக் கொண்டி ருக்கலாம். அவந்தியில் சாதவாகன படை மட்டும் தான் காவல் காக்கிறது என்று. தனது நாட்டை விட்டு வெகுதொலைவு

தள்ளி இருக்கும் அவந்திக்கு வந்ததும் அல்லாமல் அவர் காரணமின்றி உங்களி டம் சிறை பட்டிருக்கவும் மாட்டார். சிறிது சிந்தித்துப் பாருங்கள் தேவி!"

"இப்போது என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?"

"சோழப் பேரரசர் கரிகாலரிடம் உதவி கேட்போம்."

சிறிது நேரம் சிந்தித்த அவந்திகா பிறகு, "வா... புறப்படுவோம்" எனக் கூறிக் கொண்டு செல்ல, அவளைப் பின்தொ டர்ந்து சென்றாள் கார்த்திகா.

தனது மாளிகைக்கு அருகில் இருக்கும் மாளிகையிலேயே கரிகா லர், திருக்கண்ணன் மற்றும் இம்ஹோ டெப்பை சிறை வைத்திருந்தாள் அவந் திகா. மாளிகையின் வாயிலைத் திறக்கச் சொல்லி உள்ளே நுழைந்தனர் இருவ ரும்.

உள்ளே நுழைந்த இருவருக்கு பெரும் அதிர்ச்சி காத்திருந்தது அங்கே. அதற்குக் காரணம் அங்கே கரிகாலனை மட்டும் காணவில்லை. இம்ஹோடெப் பும், திருக்கண்ணனும் தரையில் கட்டம் வரைந்து தாயம் விளையாடிக் கொண்டி ருந்தனர்.

காவலரை மாளிகையைத் தேடச் சொல்லி கட்டளையிட்டாள் கார்த் திகா. மாளிகையைத் தேடிய வீரர்களும் வெறுங்கையுடனே திரும்பி வந்தனர்.

https://telegram.me/aedahamlibra

# 23. முதுகில் பாய்ந்த வாள்

அவந்தியின் தலைநகர் உஞ்சையின் காவல் தலைவன் பலதேவனை தனது மாளிகைக்கு அழைத்து அவந்திகா எச்சரிக்கை செய்த பிறகு ஏற்பட்ட உடல் நடுக்கம் குறையவே ஒரு ஓரைக் காலத்திற்கும் மேல் ஆனது. அவனது உடல் நடுக்கம் குறைந்தாலும் தொடர்ந்து வியர்த்த அவனது உடல் அவன் மனம் அடைந்திருந்த பதைபதைப்பை தொடர்ந்து வெளிப்படுத்திக் கொண்டிருந்தது. இத்தனைக் காலமாக அவன் வஜ்ரபாகுவிற்கு நெருங்கிய விசுவாசியாக இருப்பதை அவந்திகா அறிந்திருந்தாலும் அதை அவள் பலதேவனி

டம் நேருக்கு நேர் வினவியதில்லை. எப்போதும் இல்லாமல் அவந்திகா நேருக்கு நேர் வினவியதால் பெரும் அச்சத்தை அடைந்திருந்தான் பலதேவன். அதிலும், அவனுக்கு அவந்தி இளவரசியின் மீது எப்போதும் மரியாதை கலந்த அச்சம் இருந்து கொண்டிருக்கும். ஆனால் அவந்திகா, "காணாமல் போன சாதவாகன அரசன் சதகர்ணியைப் பற்றி பலதேவனிடமே வினவியது அவனுக்கு பெரும் அதிர்ச்சியை அளித்திருந்தது. அதிலிருந்து மீள அவன் நெடுநேரம் எடுத்துக் கொண்டான். அதிலும் பலதேவன் கிளம்பும் போது "ஏதாவது அசம்பாவிதம் நிகழ்ந்தால் உங்களை வஜ்ரபாகுவினால் கூட காப்பாற்ற இயலாது. வஜ்ரபாகுவிற்கும் இதே நிலைமைதான்!" என அவள் எச்சரித்து அனுப்பியது பெரும் வியப்பை அளித்தது பலதேவனுக்கு. என்னதான் வஜ்ரபாகுவின் சதிச் செயலை அறிந்து அவந்திகா தடுத்து நிறுத்திக் கொண்டிருந்தாலும் அவள் இதுநாள் வரை ஒரு நாள் கூட வஜ்ரபாகுவை ஒருமையில் அழைத்தது இல்லை. ஆனால், இன்று நேரில் பலதேவனை வரவழைத்துநையப் புடைத்து அவள் எச்சரித்து அனுப்பிய விதம் அவனுக்குப் பெரும் அச்ச உணர்வை ஏற்படுத்தியிருந்தது. எதிரில் எத்தனை வீரர்கள் தன்னை

எதிர்த்து வந்தாலும் அவர்கள் அனை வரையும் தனது வாளினால் எதிர்த்து நிற்கும் வீரனான உஞ்சையின் காவல் தலைவன் பலதேவன் "அவந்திகாவை நேரில் சந்திக்கும் போது மட்டும் உள் ளூரக் குடிவந்திடும் அச்சத்திற்குக் கார ணம் என்ன?" எனச் சிந்தித்தபடியே புரவி யின் மீது அமர்ந்திருந்தான். புரவி அதன் போக்கில் சென்று கொண்டிருந்தது.

அவந்தி நதிக்கரையில் காணப் பட்ட சிதிலமடைந்த பௌத்த விகாரின் சுவரில் மாறுவேடத்தில் அமர்ந்திருந்த வஜ்ரபாகு, "ஏன் இப்படி புரவிப் பிண மாக வந்துகொண்டிருக்கிறாய் பலதேவா, என்ன ஆனது?" என வினவினான்.

அவனது குரலைக் கேட்டு சிந் தனையிலிருந்து விடுபட்ட பலதேவன், "வஜ்ரபாகு... நீ எப்போது அவந்திக்கு திரும்பினாய்? மாளிகைக்குச் செல்ல வேண்டியதுதானே? ஆற்றங்கரையில் அமர்ந்து என்ன செய்துகொண்டிருக்கி றாய்?" என வினவினான்.

https://telegram.me/aedahamlibra

"இன்று காலையில் தான் அவந் திக்குத் திரும்பினேன்."

"சென்ற காரியம் என்ன ஆனது?"

"அனைத்தும் நமது திட்டப்படிதான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது!"

"ஏன் இத்தனைத் தாமதம்?"

"வைதீகர் மற்றும் புஷ்யமித்திரரைச் சந்தித்த பிறகு நமது முக்கிய உபதலை வர்களை சந்தித்துவிட்டு பேசி வந்தேன். ஆதலால்தான் தாமதம்."

"யார், நாம் இரகசியமாக திரட்டியி ருக்கும் படைகளின் உபதலைவர்களா?"

"அவர்கள்தான்!"

"என்ன கட்டளை விதித்தாய்?"

"அவர்கள் அனைவரையும் நமது திட்டப்படி உஞ்சைக்குள் மாறுவேடத் தில் வரச்சொல்லிக் கட்டளை விதித்தி ருக்கிறேன்."

https://telegram.me/aedahamlibra

"ஒரே நேரத்தில் நம் வீரர்கள் திரண்டால் உனது சகோதரி அவந்திகா எச்சரிக்கை அடைந்து விட மாட்டாளா?"

"மாட்டாள்!"

"எப்படி இப்படி அறுதியிட்டுக் கூறு கிறாய்?"

"அவர்களின் கவனத்தை திசை திருப்ப வேண்டிய ஏற்பாடுகளையும் செய்துவிட்டுத்தான் வந்திருக்கிறேன்!"

"என்ன ஏற்பாடு?"

"சுங்கனை தனது படையு டன் அவந்தி எல்லையில் முகாமிடச் சொல்லி வேண்டினேன். அவரும் செய்வ தாக வாக்களித்திருக்கிறார். வாக்களித் ததோடு மட்டும் அல்லாமல் அந்தப் பணி யையும் துவங்கி விட்டார்."

"நல்ல சிந்தனை வஜ்ரபாகு. அவந் தியின் காவல் வீரர்கள், சாதவாகன நிலைப் படை வீரர்கள், அவந்திகா, சத

https://telegram.me/aedahamlibra

கர்ணி என அனைவரும் சுங்கப் படையைப் பற்றியே எச்சரிக்கையுடன் சிந்தித்துக் கொண்டிருப்பார்கள். இந்த இடைவேளையில் நாம் நமது காரியத்தை சாதித்துக் கொள்வோம்."

"சாதவாகன படைத் தலைவன் நான்தான் என்பதையும் நினைவில் கொள். இன்னும் அனைத்துப் படைகளும் எனது கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. இது நமக்கு மிகவும் வசதியாக இருக்கப்போகிறது."

"வஜ்ரபாகு, ஓர் எச்சரிக்கை."

"என்ன?"

"படையின் தலைவன் நீதான். ஆனால், கட்டளையிடும் உரிமை அரசனுக்கு உண்டு என்பதை நீ ஒருநாளும் மறந்து விடாதே... உன் கட்டளைக்கு இப்போது படைத் தளபதிகள், உபதலைவர்கள், உப தளபதிகள் என பணிந்தாலும் சதகர்ணிக்கு அவர்கள் ஒருநாளும்

https://telegram.me/aedahamlibra

துரோகத்தை இழைக்க மாட்டார்கள்.
பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்ட
போதே சாதவாகன அரசருக்கு விசுவாச
மாக இருப்பேன் எனக் கூறி பதவிப் பிர
மாணத்தை எடுத்துக் கொண்டவர்கள்
அவர்கள். எதற்கும் எச்சரிக்கையா நாம்
இருப்பது நல்லது."

"இவ்வளவு திட்டமிடும் நான்
இதைப் பற்றி சிந்திக்காமல் இருப்
பேனா பலதேவா... அதற்காகத்தான் முக்
கியப் பொறுப்புகளில் நமக்கு வேண்டி
யவர்களை பணிக்கு அமர்த்திவிட்டேன்.
ஆதலால் கவலை வேண்டாம். சதகர்
ணியின் கட்டளையை விடவும், அவர்க
ளுக்கு எனது கட்டளையை நிறைவேற்
றுவதே தார்மீகக் கடமையாக நினைத்து
நிறைவேற்றுவார்கள்."

"நல்ல முன் எச்சரிக்கை!" எனச்
சிலாகித்தான் பலதேவன்.

பலதேவனின் முகம் வாடி அவனது
உடல் வியர்த்து ஒழுகுவதை அப்போது

https://telegram.me/aedahamlibra

தான் கவனித்தான் வஜ்ரபாகு, "என்ன பலதேவா, என் அருமைத் தங்கை அவந்திகாவை சந்தித்து விட்டு வருகிறாயா?" எனச் சிரித்தபடி வினவினான்.

"ஆமாம்" என மட்டும் தலையை ஆட்டினான் பலதேவன்.

"என்ன சொல்லி அனுப்பி வைத்தாள்?"

"உன் தங்கை நாளுக்கு நாள் அத்து மீறிக் கொண்டிருக்கிறாள்?" என அவள் முன் காட்ட இயலாத கோபத்தை வஜ்ர பாகுவிடம் காட்டினான் பலதேவன்.

"என்ன நடந்தது பலதேவா? ஏன் இப்படிக் கோபப்படுகிறாய்? அவந்தி நதியின் குளிர்ந்த காற்றிலும் உனது உடல் வியர்த்து ஒழுகுவது ஏன்? உடலுக்கு ஏதாவது கேடா?" என அக்கறையுடன் வினவினான்.

"நண்பா, உன் தங்கை இன்று என்னை அவளது மாளிகைக்கு வர

வழைத்து மிரட்டி அனுப்பியிருக்கிறாள். அவளது திமிர் நாளுக்கு நாள் எல்லை மீறிக் கொண்டிருக்கிறது. அனைத்திற்கும் ஓர் எல்லை உண்டு. நான் உனக்காகத்தான் அனைத்தையும் சகித்துக் கொண்டு பொறுத்திருக்கிறேன். அவந்தியின் வீரர்கள் அனைவரும் பலதேவனைக் கண்டால் நடுங்குகிறார்கள். ஆனால், இந்தப் பேதைப் பெண் பல சமயங்களில் என்னை நடுங்க வைத்து விடுகிறாள்" என அதுவரை மனதினில் தேங்கி வைத்திருந்த கோபத்தை சுடு சொற்களாக வஜ்ரபாகுவின் மீது தெளித்தான் பலதேவன்.

"எத்தனை நாட்களுக்கு அவளது ராச்சியம் அவந்தியில் கொடிகட்டிப் பறக்கப் போகிறது. நாம் நிர்ணயித்த இரண்டு திங்களில் ஒரு திங்கள் காலம் விரைந்து கடந்துவிட்டது. இன்னும் ஒரு திங்கள் காலம் மட்டுமே எஞ்சியிருக்கிறது. அதன் பிறகு அவள் சுங்க நாட்டில் சுங்கன் கவர்ந்து வைத்திருக்கும் அந்தப்புற

பெண்களுடன் அவளும் குடியேறப்போகிறாள். அதுவரை பொறுத்துக் கொள். அதன் பிறகு நான் அவந்தியின் மன்னனாகி விடுவேன். நீ அவந்தியின் படைத் தலைவனாகிவிடுவாய். அவந்திகா மீதிருக்கும் கோபம் அனைத்தும் அவந்தி நம் கரங்களுக்கு கிடைத்ததும் சரியாகி விடும். நீ அவளைப் பற்றிய கவலையை விட்டுவிடு!" என ஆறுதல் கூறினான் வஜ்ரபாகு.

"நீ கூறுவது நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால்...?"

"என்ன ஆனால்?"

"என்ன சொல்லி அவந்திகா என்னை எச்சரிக்கை செய்து அனுப்பினாள் என்று உனக்குத் தெரியுமா?"

"என்ன சொல்லி அனுப்பினால் என் அருமைத் தங்கை? நீ சொன்னால் தானே எனக்குத் தெரியும்!"

"இனியும் நீ வஜ்ரபாகுவிடம் சேர்ந்து கொண்டு தவறிழைத்தால் உன்னை வஜ்ரபாகுவினால் கூட காப் பாற்ற இயலாது என்று கூறிவிட்டாள்!"

"அப்படியா தெரிவித்தாள்?"

"இது மட்டும் அல்ல!"

"வேறு என்னென்ன?" முகத்தில் நீண்டிருந்த தழும்பினைத் தடவிப் பார்த் தபடியே சிரித்துக்கொண்டு வினவினான் வஜ்ரபாகு.

"வஜ்ரபாகுவிற்கும் உன் கதிதான் ஏற்படும் என மரண எச்சரிக்கை விடுத்து அனுப்பியிருக்கிறாள். அதுமட்டுமல்லா மல் நமது திட்டம் அனைத்தும் தெரியும் என்று கூட தெரிவித்தாள் அவள்."

"நமது திட்டம் தெரியுமா? எந்த திட் டத்தைப் பற்றி குறிப்பிடுகிறாள் அவள்?"

"யாருக்கு நண்பா தெரியும்?"

சிறிது நேரம் சிந்தித்தபடியே அமர்ந்திருந்தான் வஜ்ரபாகு. பிறகு, "அவந்திகாவின் மன தைரியம் திடீரென்று அதிகரித்திருக்கிறது. காரணம் என்ன என்று அறிய முயன்றாயா?

"முயற்சித்துப் பார்த்தேன். ஆனால், பலன் இல்லை."

"நான் சிறைச் சாலையில் மூவரை அடைக்கச் சொல்லிவிட்டுச் சென்றேனே! அவர்கள் யார் என்று தெரிந்ததா?"

"அவர்களை அவந்திகா மாளிகையில் அடைத்ததாக செய்தி கிடைத்தது!"

"அவர்கள் பேசிய விதமே எச்சரிக்கை விடுப்பதைப் போன்று இருந்தது. அவர்களை எதற்காக அவந்திகா மாளிகையில் தங்கவைக்க வேண்டும்?"

"தெரியவில்லை!"

“அவர்களை விசாரணை செய்தாயா?”

“இல்லை!”

“ஏன்?”

“அவர்களை மாளிகையில் அடைக்கச் சொல்லி அவந்திகா விடுத்த கட்டளையும் போலியானது!”

“என்ன உளறுகிறாய் நீ?”

“ஆம்... நதிக்கரை மாளிகையில் யாருமே இல்லை. ஆனால், மேலுக்கு காவல் மட்டும் இருக்கிறது.”

“யாரை ஏமாற்ற?”

“தெரியவில்லை... ஆனால்?”

“என்ன ஆனால்?”

“யாரும் இல்லாத மாளிகைக்குள் ஒருநாள் நான் திவ்யனைக் கண்டேன்?”

திவ்யன் என்ற பெயரைக் கேட்டதுதான் தாமதம்? அடுத்த கணம் மன

தில் ஏற்பட்ட படபடப்பு அதிகமாக உடல் நடுங்க அமர்ந்திருந்த வஜ்ரபாகு எழுந்து நின்றான். "என்ன பலதேவா கூறுகிறாய்?" என வினவினான்.

"ஆம் வஜ்ரபாகு. அவன் நம்மைத் தேடி அவந்தி வரை வந்துவிட்டான்."

"அவனைக் கைது சிறையில் அடைத்து விட்டாயா? சந்தித்த முதல் வேலையாக இதை நீ தெரிவிக்காமல் மற்ற கதைகளைக் கூறிக்கொண்டிருக்கிறாய்?" என ஆர்வத்துடன் வினவினான்.

"அவனை சந்தித்தேன் என்று தானே குறிப்பிட்டேன் நான். ஆனால் கைது செய்தேன் என்று குறிப்பிடவில்லையே?"

"நதிக்கரை மாளிகையில் தானே அவனை நீ சந்தித்தாய்?"

"ஆம்!"

"நமது காவல் கோட்டையான நதிக்கரை மாளிகையில் அவனைச் சந்தித்துமா நீ உயிரோடு விட்டிருக்கிறாய்?"

"சில வருடங்களுக்கு முன் நாம் மரக்கலத்தோடு பிணைத்து அனுப்பிய திவ்யன் அல்ல இவன். இவன் பேச்சு, ஆயுதம், தாக்குதல் யுக்தி என அனைத்தும் மாறி விட்டது. அவனை நான் தாக்கினேன். எனது வீரர்கள் தாக்கினார்கள். ஆனால் என்னைத் தவிர அனைவரையும் கொடூரமாகக் கொன்றுவிட்டான்."

"நீயுமா அவனிடம் தோற்றுப் போனாய்?"

"தோற்று மட்டுமா போனேன், அவனாகவே உயிர்பிச்சை அளித்து என்னை அனுப்பி வைத்தான்!"

"என்ன கூறுகிறாய் நீ?

"ஆமாம்! அவனது அந்தக் கொடூர ஆயுதம் எனது கழுத்தின் தோல் வரைத் தொட்டு விட்டது. என்ன நினைத்தானோ

https://telegram.me/aedahamlibra

தெரியவில்லை. உன்னை நான் போர்க் களத்தில் சந்திக்கிறேன் என்று கூறி அனுப்பி விட்டான்."

"இப்போது அவன் எங்கே? அவந்தி யில்தான் இருக்கிறானா?"

"தெரியவில்லை. காற்றோடு காற் றாக இரவோடு இரவாக அன்று மறைந்து போய் விட்டான். எங்கே சென்றான் என்ன ஆனான் என்று தெரியவில்லை."

"நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்!"

"நிச்சயமாக..."

"இன்றே நான் நமது நண்பன் சுங் கமித்திரனுக்கும் தகவல் அனுப்பி விடுகி றேன்."

"அதை முதலில் செய்." என பலதே வன் கூற, "சரி, நமது அருமை நண்பன் அக்னிமித்திரனின் தந்தை பாகவதரை

சந்திக்கச் சென்றாயே என்ன ஆனது? அனைத்தையும் விளக்கமாகக் கூறு!"

சுற்றும் முற்றும் ஒருமுறை நோக்கினான் வஜ்ரபாகு. பிறகு விதிசாவில் நடைபெற்ற கூட்டத்தைப் பற்றிய அனைத்து தகவல்களையும் ஒன்று கூட விடாமல் வஜ்ரபாகு பலதேவனிடம் தெரிவித்தான்.

அவன் கூறியதைக் கேட்டதும் மகிழ்ந்த பலதேவன், "அப்படியெனில் சோழப் படையைத் தாக்க நான் நமது தூதுவன் மூலம் தகவல் அனுப்பி வைத்தது சரிதான்..." என மகிழ்ந்தான்.

"என்ன பலதேவா கூறுகிறாய்?"

"ஆமாம்... சோழப் படை வடுகர் நாட்டில் நிலை கொண்டிருக்கிறது. என்ன செய்வது திடீர் தாக்குதல் தொடுப்பதா? அல்லது அமைதி காப்பதா? என்று தங்களைத் தேடி தெற்கின் மாதண்ட நாயகன் நமது ஒற்றர் தலைவனை அனுப்பி வைத்தி

ருந்தான். தாக்காளர்களைக் கொண்டு சோழப் படையை தாக்கி அழித்துவிடச் சொல்லி தங்களின் பேரில் கட்டளையிட்டேன். இந்நேரம் நமது படை சோழப் படையை துடைத்து அழித்திருப்பார்கள். நாளை காலை அல்லது மாலை எப்படியும் ஒற்றர்கள் மூலம் உறுதியான தகவல் வந்துவிடும்" என பலதேவன் கூறிக் கொண்டிருந்த போதே இடைமறித்த வஜ்ரபாகு பலதேவனின் தோளில் தட்டிக் கொடுத்து, "என்ன காரியம் செய்திருக்கிறாய் பலதேவா... சரியான நேரத்தில் தக்க கட்டளையை அனுப்பியிருக்கிறாய். பெரும் காட்டு யானைக் கூட்டம் கடந்த காடு எப்படி மொத்தமாக அழிந்து போகுமோ அதைப் போன்றே தாக்காளர்களால் தாக்கப்பட்ட படையும் அழிந்து போய்விடும். இந்நேரம் சோழ வீரர்கள் படித்தானத்தின் மீது படை எடுத்து புறப்பட்டிருப்பார்கள். சதகர்ணிக்கு வேறு வழியே இல்லை. அவன் வைதீகரின் திட்டப்படி சுங்கன் மற்றும் கலிங்க

அரசரிடம் உதவியைக் கேட்டே ஆக வேண்டும். வைதீகரின் திட்டத்தை நீ எளிதாக நிறைவேற்றிவிட்டாய். உனக்கு என்ன செய்வதென்று எனக்குத் தெரிய வில்லை” என உணர்ச்சி வசப்பட்டு தெரி வித்தான் வஜ்ரபாகு.

வஜ்ரபாகு உணர்ச்சி வசப்பட்டா லும் பலதேவன் அமைதியாகவே சிந்த னையுடன் காணப்பட்டான். அவனிடம், “என்ன சிந்தனை பலதேவா?” என வின வினான்.

“திவ்யன் அவந்தியில் இருக்கும் போது...” எனப் பெரும் பீதியுடன் தெரி வித்தான் தெரிவித்தான் பலதேவன்.

“அவன் நமது திட்டங்களுக்கு இடையூறாக இருப்பான் என்று வருந்துகி றாயா?”

“அவனை நினைத்தால் எனது அடி வயிறே கலங்குகிறது.”

"அவனை தேடி முதலில் கண்டுபிடிக்கக் வேண்டும்!"

நதிக்கரையோரம் சென்ற இரண்டு அவந்தி காவல் வீரர்களை அழைத்தான் பலதேவன், பலதேவனிடம் ஓடி வந்த அவர்கள் இருவரும் பணிந்து வணங்கினார்கள். அவர்களிடம், "உஞ்சையில் யார் தெற்கிலிருந்து வணிகத்திற்கோ அல்லது வேறு காரியங்களுடன் வந்திருந்தாலும் அவர்களைக் கைது செய்யுங்கள்" எனக் கட்டளையிட்டான்.

"தங்களது உத்தரவு" எனக் கூறிக் கொண்டு அவர்கள் இருவரும் கட்டளையைச் சுமந்து அங்கிருந்து விடைபெற்றார்கள்.

அப்போது பலதேவன், "அவனைச் சந்தித்த அடுத்த நாளிலிருந்து நானும் நமது இரகசிய ஒற்றர்களைக் கொண்டு தேடிக் கொண்டிருக்கிறேன். ஆனால், அவன் இதுவரை அகப்படவில்லை!"

"திவ்யன் உஞ்சை வரை வந்து விட்ட செய்தியை நாம் உடனடியாக நமது நண்பன் சுங்கனுக்கும் தெரியப்படுத்த வேண்டும்."

"நிச்சயமாக!"

இடையில் வைத்திருந்த வெற்று ஓலையை எடுத்த வஜ்ரபாகு அதில் எழு தியபடியே, "சதகர்ணி அவந்திக்கு வருவ தாக செய்தி கிடைத்ததே, அவனை வழி யிலேயே கொலை செய்ய திட்டம் தீட்டியி ருந்தோமே, அது என்ன ஆனது?"

"அவன் இன்னும் அவந்திக்கு வரவே இல்லை."

"பைத்தானில்தான் அவன் இன் னும் இருக்கிறானா?"

"ஆம்..."

"அப்படியெனில் நீ கவலைப் பட வேண்டாம்."

https://telegram.me/aedahamlibra

“ஏன், அவனை எண்ணிக் கவலைப் பட வேண்டாம் என்கிறாய்?”

“பைத்தானிலேயே அவனது கதையை முடிக்க ஏற்பாட்டினை செய்துவிட்டே நான் விதிசாவிற்குப் புறப்பட்டேன்.”

பலதேவன் வஜ்ரபாகுவை வியப்புடன் நோக்க, “யாருமே இல்லாத வெற்று மாளிகைக்கு காவல் போட்டு நம்மை ஏமாற்றுவதைப் போன்று சதகர்ணியை அழைப்பதாக அனுப்பப்பட்ட ஓலையும் ஏமாற்று வேலையாக இருக்கப் போகிறது. ஆதலால்தான் அப்போதே மாற்று வேலையாக ஏற்பாடு செய்துவிட்டுச் சென்றேன்.”

“பலே... வஜ்ரபாகு பலே...” வஜ்ரபாகுவை பாராட்டினான் பலதேவன்.

சிறிது நேரம் பலதேவனிடம் எதுவும் பேசாமல் ஓலையைக் கவனமாக எழுதினான் வஜ்ரபாகு. அவனது அழைப்பிற்

காகக் காத்திருந்த ஒற்றன் ஒருவனை அழைத்தவன், அவனிடம் ஓலையைக் கொடுத்து, “சுங்க எல்லையில் ஓலை யைச் சேர்ப்பித்துவிடு” என அவனுக்குக் கட்டளையிட்டுவிட்டு அனுப்பிவைத்த வன், “இந்த ஓலை சேர்ந்த அடுத்த கணம் சுங்கன் புறப்பட்டு விடுவான். விரைவில் நமது திட்டம் அனைத்தும் நிறைவேறிவிடும்” எனப் பலதேவனிடம் கூறியபடி புறப்பட ஆயத்தமானான்.

“ஓலையில் என்ன எழுதி அனுப் பியிருக்கிறாய் வஜ்ரபாகு?” என வினவி னான் பலதேவன்.

“சாதவாகன தேசத்தின் எதிர்கா லத்தை அனுப்பியிருக்கிறேன். வா புறப் படுவோம்” எனத் தெரிவித்தபடியே நடக் கத் துவங்கினான்.

அதுவரை அமைதியாக அவர்கள் இருவரும் பேசிக்கொண்டதை பௌத்த விகாரின் சிதிலமடைந்த சுவருக்குப் பின்னால் ஆற்றோரமாக நின்றபடி எச்

சரிக்கையுடன் கேட்டுக் கொண்டிருந் தாள் சொர்ணமுகி. அவர்கள் இருவரும் பேசியதைக் கேட்டு புறப்பட்டுவிட்டதாக நினைத்துக் கொண்டு நகர்ந்தாள் சொர் ணமுகி. அவள் நகர்ந்ததும் சுவரிலிருந்து நான்கைந்து கற்கள் சரிந்தன. எழுந்த சத்தத்தைக் கேட்டு இருவரும் திரும்பி னார்கள்.

சொர்ணமுகியைப் பார்த்த வஜ்ர பாகு கண நேரமும் தாமதிக்கவில்லை. இடையில் மறைத்து வைத்திருந்த குறு வாளை எடுத்து ஓடிக் கொண்டிருந்த சொர்ணமுகியின் முதுகை நோக்கி எறிந் தான். அது அவளது நடு முதுகில் பாய தள்ளாடியபடியே நடக்கலானாள்.

பலதேவன் அவளைத் தடுக்க ஓடி னான். ஆனால், அவனது கரத்தைப் பற்றி நிறுத்திய வஜ்ரபாகு, “அவள் போய்ச் சேருவதற்குள் உடலில் விடம் பரவி இறந்துவிடுவாள். நமக்கு செய்ய வேண் டிய காரியங்கள் பல இருக்கின்றன. புறப்

https://telegram.me/aedahamlibra

படுவோம் வா...” எனக் கூறிக்கொண்டு அவனை அழைத்துச் சென்றான்.

https://telegram.me/aedahamlibra

# 24. விடை கிடைக்காத மர்மங்கள்

மாளிகையின் கதவு திறக்கப்பட்டதையோ அல்லது அவந்திகா மற்றும் கார்த்திகா உள்ளே நுழைந்ததையோ கவனிக்காத திருக்கண்ணனும், இம்ஹோடெப்பும் பெரும் ஆர்வத்துடன் தாயத்தை உருட்டிக் கொண்டிருந்தனர். திருக்கண்ணன் மூன்று காய்களை மலையேற்றி விட்டிருந்தான். இம்ஹோடெப் ஒரே ஒரு காயை மட்டுமே மலைக்கு ஏற்றியிருந்தான். அது மட்டுமல்லாமல் அவனது மூன்று காய்களை வெட்டி வீழ்த்தியிருந்தான் திருக்கண்ணன். மற்ற இரண்டு காய்களும் பாதுகாப்பு இல்லாமல் திருக்கண்ணனால் எப்போது வேண்டுமானா

லும் வெட்டப்பட்டு விடலாம் எனும் நிலையில் இருவரும் பெரும் கவனத்து டன் விளையாடிக் கொண்டிருந்தனர்.

திருக்கண்ணன் தாயக் கட்டை களை உருட்டியபோது அவன் கேட் டவை விழுந்து கொண்டிருந்தன. ஆனால், இம்ஹோடெப் கேட்பது ஒன்று கட்டைகள் உருள்வது ஒன்றாக இருந் துகொண்டிருந்தது. இருந்தாலும் நம்பிக் கையை மட்டும் இழக்காமல் இம்ஹோ டெப் தாயத்தை உருட்டிக்கொண்டிருந் தான். தனது வெளியிலிருக்கும் மூன்று காய்களை உள்ளே நகர்த்தவே பெரும் சிரமப்பட்ட இம்ஹோடெப், "தாயம்" எனக் கேட்டபடியே கட்டையை நன்கு உருட்டி கீழே போட்டான். இரண்டு கட்டைகளும் நான்கைந்து முறை உருண்டு விழுந்தன. கட்டையை நோக்கினான் திருக்கண் ணன்.

இரண்டு கட்டைகளிலும் எந்த புள் ளிகளும் குறிக்கப்படவில்லை. அதைப் பார்த்தவன் சிரித்தபடியே, "இன்று

உனக்கு தாயம் விழுவது குதிரைக் கொம்பு போலத்தான்! உனது மூன்று காய்களையும் நீ உள்ளே நகர்த்துவ தற்குள் நான் எனது ஆறு காய்களை யும் மைய மலைக்கு நகர்த்தி வெற்றி பெற்று விடுவேன்!" என அவனைப் பரிக சித்தபடியே தாயத்தை எடுத்து அவனது முறைக்கு உருட்டினான்.

பலவித பிரச்சனைகள் சூழ பெரும் குழப்பங்களுடன் வந்திருக்கும் அவந் திகா மற்றும் கார்த்திகாவிற்கு இவர்க ளின் விளையாட்டைப் பார்க்கப் பார்க்க பெரும் ஆத்திரம் பெருக்கெடுத்தது. அந்த ஆத்திரத்தினூடே, "அவர் எங்கே?" என வினவினாள் கார்த்திகா.

குரல் வந்ததும் திருக்கண்ணன் மற் றும் இம்ஹோடெப் என இருவருமே தலையை உயர்த்திப் பார்த்தனர். கார்த் திகா நின்றுகொண்டிருந்தாள். அவளைப் பொருட்படுத்தாமல் மீண்டும் தலையைத் தாழ்த்தி விளையாட்டில் கவனத்தை

https://telegram.me/aedahamlibra

செலுத்தினர். தனது முறைக்கு தாயத்தை உருட்டினான் இம்ஹோடெப்.

அந்த முறை அவன் எதிர்பார்த்த தாயம் விழுந்தது அவனது கட்டைகளில். அதைப் பார்த்து குதூகளித்தவன், “திருக்கண்ணா... நீ மலை ஏறுவதற்குள் நான் உன்னைப் பிடித்துவிடுவேன்” எனக் கூறியவன் மீண்டும் தாயத்தை உருட்டினான்.

கார்த்திகாவிற்குப் பின்னால் அது வரை அமைதியாக நின்றுகொண்டிருந்த அவந்திகா இருவருக்கு முன் வந்து நின்று, “உங்கள் ஆட்டத்தை இப்போது நிறுத்துகிறீர்களா? அல்லது நான் நிறுத்தவா?” எனக் கோபத்துடன் வினவினாள்.

அவளது ஆத்திரத்தைக் கண்டதும் திருக்கண்ணன் மற்றும் இம்ஹோடெப் ஆட்டத்தை நிறுத்திவிட்டு எழுந்து நின்று அவளுக்குப் பணிந்து மரியாதை செலுத்தினர்.

இருவரிடமும், "நீங்கள் இருவர் மட்டுமே மாளிகையில் இருக்கிறீர்கள்?" என வினவினாள்.

"ஆமாம், தேவி. நாங்கள் இருவர் மட்டுமே இருக்கிறோம்!" எனப் பதிலளித்தான் திருக்கண்ணன்.

"இன்னொருவர் எங்கே?"

"யாரைப் பற்றி கேட்கிறீர்கள்?"

"உங்களுடன் வந்திருந்த இன்னொரு வணிகனைப் பற்றித்தான் கேட்கிறேன். உங்கள் இருவரை விடவும், இளமையாக ஒருவர் இருந்தார் அல்லவா? அவர் எங்கே?"

"இந்தக் கேள்வியை உங்களது காவல் வீரர்களிடம் அல்லவா தாங்கள் கேட்கவேண்டும். எங்களிடம் கேட்கிறீர்கள்?"

"உங்களுக்கு அவர் எங்கே என்று தெரியாது!"

https://telegram.me/aedahamlibra

"தெரிந்தாலும் கூற வேண்டிய அவசியம் என்பது இல்லையே!"

திருக்கண்ணனது பதிலைக் கேட்டதும் பெரும் கோபம் கொண்டாள் அவந்திகா. ஆனால், அதை வெளிப்படுத்திக் கொள்ளாமல், அந்த மாளிகைத் தலைவியை அழைத்தாள். ஆனால் அவளுக்குப் பதில் இன்னொருத்தி வந்தாள். அவளிடம், "மாளிகைக்குள் அடைத்து வைத்திருந்த மூன்றாமவர் எங்கே?" என வினவினாள்.

அவள் குழப்பத்துடன், "மாளிகைக்குள் மூவரையா அடைத்து வைத்திருந்தீர்கள்?" என வினவினாள்.

அவந்திகாவின் கோபம் நேரத்திற்கு நேரம் அதிகமாகிக் கொண்டிருந்தது. "தேவி, இந்த மாளிகையின் தலைவி என்னிடம் பொறுப்பினை ஒப்படைத்து விட்டுச் செல்லும்போது எத்தனைப் பேர் இருக்கிறார்கள்? மாளிகைக்குள் இருப்பவர்கள் யார்? என எந்தத் தகவலையும்

https://telegram.me/aedahamlibra

எனக்குத் தெரிவிக்கவில்லை. யாரோ அழைத்தார்கள் என்று அவசர அவசர மாக சென்றுவிட்டார்கள். எனக்கு அவர் அளித்த கட்டளை "அவந்தி இளவரசி இல்லாமல் மாளிகைக் கதவைத் திறக் கக் கூடாது. உள்ளே இருப்பவர்களுக்கு எந்த விதக் குறையும் வரக் கூடாது" என்பதுதான். அதைத்தான் நான் இன்று வரை பின்பற்றிக் கொண்டு இருக்கி றேன்!" எனப் பதிலளித்தாள்.

அவந்திகாவும், கார்த்திகாவும், ஒரு வரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

கார்த்திகா, "இம்மாளிகைத் தலைவி எங்கே சென்றிருக்கிறாள்?" என வினவினாள்.

"அதைப் பற்றி அவர் எனக்கு எந்தத் தகவலையும் தெரிவிக்கவில்லை."

"யாரோ அழைத்தார்கள் என்று கூறினாயே அவர்கள் யார்?" எனக் குறுக் கிட்டாள் அவந்திகா.

https://telegram.me/aedahamlibra

"தெரியவில்லை தேவி. அவர்கள் நமது சாதவாகன மன்னர் சதகர்ணியின் இலச்சினைப் பதக்கத்தைத் தாங்கியிருந்தார்கள் என்று காவல் வீராங்கனை என்னிடம் தெரிவித்தாள். அதைத் தவிர எனக்கு எதுவும் தெரியாது."

"இதை ஏன் நீ என்னிடம் தெரிவிக்கவில்லை?"

"மாளிகைத் தலைவியை அழைத்துக் கொண்டதே தாங்கள் தான் என நாங்கள் நினைத்துக் கொண்டோம். ஆதலால் தான்...."

"தேவி, வர வர நமக்குத் தெரியாமல் அவந்தியில் பல காரியங்கள் அரங்கேறத் துவங்கிவிட்டன" எனக் கோபத்துடன் தெரிவித்தாள் கார்த்திகா.

அப்போது குறுக்கிட்ட அக்காவல் வீராங்கனை, "தேவி, அவந்தியில் தங்களுக்குத் தெரியாமல் எதுவும் நடைபெறுவதில்லை என்பது சாதவாகன தேசமே

அறிந்தது. அதைப் போன்றே இதுவும் உங்களுக்குத் தெரியாமல் எப்படி நடை பெறும் என எண்ணி தகவல் தெரிவிக் காமல் இருந்துவிட்டேன்" எனத் தயக் கத்துடன் தெரிவித்தாள்.

சிறிது நேரம் அமைதியாக நின்ற அவந்திகா, "சரி, அவள் சென்றது இருக் கட்டும். இந்த மாளிகையில் நாம் தங்க வைத்திருந்த மூன்றாவது நபர் எங்கே?" எனக் கோபத்துடன் அந்த மாளிகையே நடுங்கும்படி வினவினாள்.

அப்போது அவந்திகாவின் காதில் ஏதோ கிசுகிசுத்தாள் கார்த்திகா. அதைக் கேட்டதும், "சரி... வா. அதையும் பரி சோதித்து விடலாம்!" எனக் கூறியபடியே அவர்கள் அனைவரையும் அங்கேயே நிற்க வைத்துவிட்டு இருவரும் மாளிகை யின் உள் அரங்கிற்குள் நுழைந்தனர்.

உள்ளே இரண்டு அடுக்கு அறை களைக் கடந்து சென்றவர்கள் படிகளில் இறங்கி நிலவறைக்குச் சென்று எரிந்து

கொண்டிருந்த பந்தத்தை எடுத்து அந்த அறையை நன்கு சோதித்தாள். அதைப் பார்த்தவள், "கார்த்திகா, உனது சந்தேகம் முற்றிலும் சரி. ஆனால், மாளிகையின் சுரங்கப் பாதை திறந்ததற்கான எந்த வித சுவடும் இல்லையே" எனக் கூறியபடியே தனது கன்னத்தில் கை வைத்து அருகில் காணப்பட்ட படிக்கட்டில் அமர்ந்தாள் அவந்திகா.

"தேவி, மாளிகையைச் சுற்றிலும் நமது வீரர்களும், வீராங்கனைகளும், ஒற்றர்களும் காவல் இருக்கிறார்கள். இந்த நிலையில் அவர் இந்த மாளிகையை விட்டு தப்பிச் செல்வதற்கு வாய்ப்பே இல்லை. இந்த நிலவறை சுரங்கத்தைத் தான் அவர் பயன்படுத்திருக்க வேண்டும். இதை விட்டால் அவருக்கு வேறு வழியே இல்லை" எனக் கூறியபடியே அந்த நிலவறையையே நோக்கிக்கொண்டிருந்தாள் கார்த்திகா.

“அதற்கு வாய்ப்பே இல்லை அவந்திகா. இந்த நிலவறையில் சுரங்கம் இருப்பது நம் இருவரைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. இந்த நிலையில் அவர் இந்த சுரங்கம் வழியாக எப்படித் தப்பிச் சென்றிருக்க இயலும்?” என அவந்திகா கூறிக்கொண்டிருந்த போதே அவள் அமர்ந்திருந்த படிக்கட்டுக்கு கீழே இருந்த படிக்கட்டை நகர்த்தி அதற்குக் கீழ் இருந்த சிறு கல் ஒன்றை நீக்கினாள்.

சிறு துவாரம் ஒன்று பார்வைக்குத் தென்பட்டது.

அதில் சுவற்றில் வைக்கப்பட்டிருந்த வாள் ஒன்றை எடுத்து நுழைத்தாள். வாளினைக் கீழே தள்ளி நகர்த்தினாள். படிக்கட்டுக்கு எதிர்ப் புறமாக காணப்பட்ட சுவரில் ஆள் நுழையும் அளவிற்கு பெரிய துளை ஒன்று தோன்றியது.

எரிந்துகொண்டிருந்த தீப்பந்தத்தை எடுத்துக் கொண்டு அந்தச் சுரங்கத்திற்குள் தனியாக நுழைந்தாள் கார்த்

https://telegram.me/aedahamlibra

திகா. அந்தச் சுரங்கத்தை சிறிது நேரம் சோதித்தவள் பிறகு வெளியே வந்து அவந்திகாவிடம், “தேவி, அவர் இந்தச் சுரங்கம் வழியாக சென்றதற்கான எந்த வித சுவடும் இல்லை” எனத் தெரிவிக்க, “இந்தச் சுரங்கம் வழியாக சென்றிருக்கவில்லை எனில் வேறு எப்படி அவர் மட்டும் மாளிகையிலிருந்து தப்பிச் சென்றிருக்க முடியும்?” என வினவினாள்.

கார்த்திகா பெரும் குழப்பத்துடன் அமைதியாகவே நின்றுகொண்டிருந்தாள்.

அப்போது அவந்திகா, “கார்த்திகா... இது என்ன சோதனை நமக்கு? அவந்திக்கு வந்த சதகர்ணி காணவில்லை. இங்கே கரிகாலரையும் காணவில்லை?” என அவள் வருந்திக் கொண்டிருந்தபோதே குறுக்கிட்ட கார்த்திகா, “தேவி, எனக்கொரு சந்தேகம்?” என வின்வினாள்.

“என்ன?”

"சோழப் பேரரசர் மட்டும் திடீ ரென்று மாளிகையிலிருந்து மறைந்து போய்விட்டார். ஆனால், அவர் தன்னு டன் வந்த மற்ற இருவரை இங்கேயே எதற்காக விட்டுச் சென்றுள்ளார்? அவர் இங்கிருந்து தப்பிக்க வேண்டும் என்றால் மற்ற இருவரையும் தன்னுடன் அழைத் துச் சென்றிருக்க வேண்டும் அல்லவா?"

"என்னைச் சுற்றி நடப்பது அனைத் தும் மர்மமாகவே இருக்கிறது கார்த் திகா..."

"என்னுடன் வாருங்கள் தேவி, அனைத்து மர்மங்களையும் நான் விடு விக்கிறேன்!" எனக் கூறியபடியே அவந்தி காவை அழைத்துக்கொண்டு மாளிகை யின் முகப்பிற்கு வந்தாள் கார்த்திகா.

அப்போது அங்கு நின்ற காவல் வீராங்கனைகளிடம், "இன்று பொழுது விடிவதற்குள் இந்த மாளிகையின் தலைவி எங்கே சென்றிருக்கிறார் என்ற தகவல் தெரிவிக்கப்பட வேண்டும். அது

மட்டுமல்லாமல் அவளை நமது இலச்சினைப் பதக்கத்தைக் காட்டி அழைத்துச் சென்ற அந்த மர்ம வீரன் யார் என்ற தகவலோடு வந்துவிடுங்கள். இல்லாவிட்டால் நீங்கள் யாரும் அவந்திக்குத் திரும்பவேண்டாம்." எனக் கோபத்தோடே அடுத்தடுத்து கட்டளைகளை பிறப்பித்தாள் கார்த்திகா.

சிறிது நேரம் அமைதியாக நின்றவள் திருக்கண்ணன் மற்றும் இம்ஹோடெப்பை சுட்டிக் காட்டியபடியே, "நமது மதிப்பிற்குரிய விருந்தினர்கள் இருவரும் இனி இந்த மாளிகையில் தங்க வைக்கப் பட வேண்டாம் தேவி. இவர்கள் இருவரையும் தாங்கள் உங்களது மாளிகைக்கு அழைத்துச் சென்று உங்களது நேர் பார்வையில் தங்க வையுங்கள். நிச்சயம் இவர்களைத் தேடி அவர் வருவார்" எனக் கூறியவள் எஞ்சி நின்ற வீரர்களிடம், "மாளிகையில் இருந்து மறைந்து போன அந்த வணிகர் அவந்தியில் எங்கு இருந்தாலும் மீண்டும் கைது செய்து அழைத்து

வாருங்கள்" எனக் கட்டளையிட்டாள் கார்த்திகா.

வீரர்கள் அனைவரும் களைந்து சென்றார்கள். அப்போது அவந்திகாவிற்குப் பின்னால் சற்றுத் தொலைவிலிருந்து, "சோழப் பேரரசரையே கைது செய்து அழைத்து வரச் சொல்லும் அளவிற்கு உனக்குத் தைரியம் வந்துவிட்டதா கார்த்திகா? பாராட்டப்பட வேண்டியதுதான்" என்ற குரல் எழ இருவரும் திரும்பினார்கள்.

அங்கே சாதவாகன அரசன் சதகர்ணி நாடோடியைப் போன்று நின்று கொண்டிருந்தான். மாறுவேடத்தில் நின்றுகொண்டிருந்ததால் அவன் யாரென்று கார்த்திகாவால் அடையாளம் காண இயலவில்லை. "அவந்தியில் தன்னிடமே அதுவும் அவந்திகாவுக்கு முன் கேள்வி கேட்பது யார்?" என்று அவள் நினைத்துக் கொண்டிருந்த போதே சதகர்ணியை அடையாளம் கண்டுகொண்ட

https://telegram.me/aedahamlibra

அவந்திகா அவனை அழைத்து தோளில் சாய்த்துக் கொண்டு உச்சி முகர்ந்தாள். “இது என்ன தம்பி, விளையாட்டு. நீ காணவில்லை என்று பதறிவிட்டேன் நான்!” என வருத்தத்துடன் வினவினாள்.

“அனைத்திற்கும் காரணம் இருக்கிறது. பிறகு நான் தெரிவிக்கிறேன்” என சதகர்ணி கூறிக்கொண்டிருந்த போதே சதகர்ணிக்குப் பின்னால் நின்ற சோழப் படையின் வேளக்காரப் படைத் தலைவன் திவ்யன் கார்த்திகாவை நோக்கி, “தேவி, சோழப் பேரரசர் திரும்பி வரும் வரையில் உபதலைவர் திருக்கண்ணன் மற்றும் இம்ஹோடெப்பிற்கு அவந்தி இளவரசியின் மாளிகையில் தங்க வைத்திருப்பதைப் போன்று என்னையும் தங்க வைக்கச் சொல்லி கட்டளையிடுங்களேன்!” எனச் சிரித்தபடியே அவளது விழிகளில் தனது பார்வையால் ஊடுருவியபடி வினவினான்.

திவ்யனைக் கண்டதுமே அவந்தி காவிற்கு அவளது மாளிகையில் நடை பெற்ற போர் நினைவிற்கு வர அவளது முகம் நாணத்தில் சிவக்க ஆரம்பித்தது. அதிலும் அவன் எதற்காக தனது மாளி கையிலேயே தங்குவதற்கு இடம் கேட் கிறான் என்பதை நினைத்துப் பார்க்க பார்க்க திவ்யனைக் காண இயலாமல் நாணத்தில் நிலம் நோக்கத் துவங்கி னாள்.

அப்போது கார்த்திகா, "தேவி, அன்று அவந்தி நதிக் கரையில் தங்க ளைக் காப்பாற்றி கரை சேர்த்த வீரர் இவர் தான்" என்று தெரிவித்தாள்.

நதிக் கரை மாளிகையில் நடை பெற்ற யுத்தத்தைப் பற்றி மாளிகையின் காவல் தலைவி மூலம் அறிந்துகொண்ட தகவல் மற்றும் அவந்தி நதிக்கரையில் கார்த்திகா தெரிவித்த தகவல் ஆகியவற் றிலிருந்து தனது மாளிகையில் தன்னு டன் சமர் புரிந்த வீரர் தான் தன்னை

https://telegram.me/aedahamlibra

நதிக்கரையில் காப்பாற்றிய தென்னாட்டு வீரராக இருப்பார் என்று அனுமானித்தி ருந்தாள்.

கார்த்திகா அதை உறுதி செய்த தும் அவளுக்கு எதிரில் நின்ற திவ்யனை நன்றியுடன் நோக்கினாள். திவ்யனை அவளது அழகிய வதனத்தைப் பார்த்தப டியே தனது தலையை ஆட்டி அவளது நன்றியை தெரிவித்துக் கொண்டான்.

அப்போது அவந்திகா கார்த்திகா விடம், "சோழப் படைத் தலைவ ரின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று நீயே அவரிடம் தெரிவித்து விடு கார்த்திகா" எனக் கூறியபடியே நிலம் நோக்கினாள்.

திவ்யனை நோக்கினாள் கார்த் திகா. அவன் நிலம் நோக்கிக் கொண் டிருந்த அவந்திகாவையேக் காதலுடன் பார்த்தபடி நின்றுகொண்டிருந்தான்.

https://telegram.me/aedahamlibra

# 25. அவந்திகாவின் கட்டளை

அவந்திகாவின் மாளிகையில் அமைந்திருந்த நந்தவனத்தில் அமர்ந்து திவ்யனுடன் விவாதித்துக் கொண்டிருந்தான் சாதவாகன அரசன் சதகர்ணி. இருவரும் தீவிரமாக விவாதித்துக் கொண்டிருந்த போது பால், பழம், உணவுப் பொருட்கள் ஆகியவை அடங்கிய தங்கத்தட்டு ஒன்றைக் கையில் ஏந்திக்கொண்டு வந்தாள் அவந்திகா. அதைப் பார்த்த சதகர்ணி, “அக்கா, நீங்கள் எதற்காக இவற்றைக் கொண்டு வருகிறீர்கள்? எத்தனைப் பணிப்பெண்கள்

இருக்கிறார்கள்?" என வினவியபடியே அவள் கொண்டு வந்த தங்கத் தட்டில் இருந்த மாங்கனி ஒன்றை எடுத்து அவ னுக்கு அருகில் அமர்ந்திருந்த திவ்யனி டம் கொடுத்தான்.

"எத்தனை பணிப்பெண்கள் இருந் தாலும் எனது தம்பிக்கு நான் உணவு பரிமாறுவதைப் போன்று இருக்குமா?" என மகிழ்ச்சியுடன் தெரிவித்தவள் திவ் யனின் கையில் இருந்த மாங்கனியை வாங்கிக் கத்தி ஒன்றினால் வெட்டி இரு வருக்கும் கொடுத்தாள்.

இருவரும் மாங்கனியை உண்டு கொண்டிருந்த போது அவள் கொண்டு வந்திருந்த காய்ச்சிய பாலினை இரண்டு தங்கக் கிண்ணத்தில் ஊற்றி இருவரி டமும் கொடுத்தபடியே, "தம்பி, எனது பல கேள்விகளுக்கு இன்னும் விடை கிடைக்கப்படாமலே இருக்கிறது. இருவ ரில் யாராவது ஒருவர் எனக்கு விடை அளிக்கிறீர்களா?" என வினவினாள்.

https://telegram.me/aedahamlibra

“அவந்தி இளவரசிக்கு எந்தக் கேள்விக்கு விடை தெரிய வேண்டுமாம்?” என வினவினான் திவ்யன்.

திவ்யன் அவளது முகத்தையே நோக்கிக் கொண்டிருந்தாலும், அவந்திகா சதகர்ணியிடம், “நீ எப்போது அவந்திக்கு வருகை தந்தாய்?” என வினவினாள்.

“சோழப் படையின் வேளக்காரப் படைத்தலைவரின் ஓலை எனக்குக் கிடைத்தபோதே நான் அவந்திக்குப் புறப்பட்டு வந்துவிட்டேன்” எனச் சிரித்தபடியே திவ்யனைச் சுட்டிக்காட்டிப் பதிலளித்தான் சதகர்ணி.

“இவர் உனக்கு ஓலை அனுப்பினாரா?” என வியப்புடன் வினவினாள்.

“ஆமாம் அக்கா... உங்களது ஓலை எனக்குக் கிடைக்குமுன்னே இவர் அனுப்பிய ஓலை எனக்குக் கிடைத்துவிட்டது.”

"அப்புறம் எதற்காக நீ என்னைச் சந்திக்கவில்லை. அக்கா மீதிருக்கும் அன்பு உனக்குக் குறைந்து விட்டதா?" என முகத்தை சோகமாக வைத்துக் கொண்டு வினவினாள் அவந்திகா.

"இவை அனைத்துமே இவரது திட் டம்தான் அக்கா. தாங்கள் என்னைக் கோபித்துக் கொள்ள வேண்டாம்."

"எதற்காக இந்த நாடகம்?"

"காரணம் இருக்கிறது இளவரசி!" எனக் குறுக்கிட்டான் திவ்யன்.

அவனது முகத்தை நேருக்கு நேர் அப்போது நோக்கிய அவந்திகா, அவனது விழிகளில் தனது பார்வையை நிலைக்க வைத்த படியே, "என்ன காரணமாம்?" என வினவினாள்.

"தேவி, அவந்தியில் நடந்து கொண்டிருக்கும் அரசியல் விளையாட் டில் ஒரு பக்கத்தினை மட்டுமே தாங்கள் அறிவீர்கள். அதன் மறு பக்கத்தை தாங்

கள் அறிந்திருக்கவில்லை. ஆறு திங்கள் காலத்திற்கு முன்னரே நான் எனது ஒற்றர்களை அவந்தி மற்றும் மகதத்திற்குள் ஊடுருவ வைத்துவிட்டேன். நீங்கள் கரிகாலரை நதிக்கரையில் கைது செய்த போதே சாதவாகன அரசர் அவந்தியில் தான் இருந்தார்."

"என்ன அப்போதே அவந்திக்கு நீ வந்துவிட்டாயா?" என சதகர்ணியை நோக்கி வினவினாள் அவந்திகா.

"ஆம்..." புன்னகையுடன் தெரிவித்தான் சதகர்ணி.

"எதற்காகத் தாங்கள் சதகர்ணியை எனக்கு முன்பே அவந்திக்கு வரவழைத்து விட்டீர்கள்?" எனத் திவ்யனிடம் வினவினாள் அவந்திகா.

"உங்களது அண்ணன் வஜ்ரபாகுவின் மறைமுகத் திட்டத்தை முறியடிக்க நூற்றுவர் கன்னர் அரசரை வரவழைத்துக் கொண்டேன்."

https://telegram.me/aedahamlibra

“தாங்கள் எதைப் பற்றி கூறுகிறீர்கள்? வஜ்ரபாகு அவந்திக்குத் தன்னை முடிசூட்டிக் கொண்டு சுதந்திர மன்னனாக அறிவித்துக்கொள்ள தக்க சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறார். அதைத் தானே குறிப்பிடுகிறீர்கள்?”

“அவரது திட்டம் அது மட்டுமல்ல. கடந்த ஒரு திங்கள் காலத்திற்கு முன் தங்களை நான் அவந்தி நதியிலிருந்து காப்பாற்றிய அதே நாளில் கரிகாலர் மற்றும் எனது இரண்டு படைத் தலைவர்களை விசாரணை செய்த உங்களது தமையன் வஜ்ரபாகு திடீரென்று மறைந்து விட்டானே, எங்கே சென்றிருந்தான் என்று உங்களுக்குத் தெரியுமா? சரியாகக் கூற வேண்டுமானால் நான் உங்களது மாளிகைக்குள் நுழைந்த போது...” எனத் திவ்யன் வினவிக்கொண்டிருந்த போதே குறுக்கிட்ட சதகர்ணி, “இது எப்போது அக்கா நடந்தது? அவந்தியில் நடந்தது அனைத்தையும் எனக்குத் தெரிவித்த

சோழப் படைத் தலைவர் இதனை கூற மறந்து விட்டது ஏனோ?" எனச் சிரித்தபடியே வினவினான்.

அப்போது சதகர்ணியிடம் அவந்திகா, "அவர் சில நிகழ்வுகளை உன்னிடம் கூறாமல் இருப்பதே நல்லது தம்பி" எனத் தெரிவித்தவள் திவ்யனை நோக்கி, "தாங்கள் மேலே கூறுங்கள். எனது அண்ணன் வஜ்ரபாகு எங்கே சென்றிருந்தார்?" என வினவினாள்.

"விதிசாவிற்கு!"

"விதிசாவிற்கா?" வியப்புடன் வினவினாள் அவந்திகா.

"ஆம்!"

"அங்கே எதற்காக அவர் சென்றார்?"

"தென்னகத்தில் ஏற்பட்ட பெரும் போருக்குக் காரணமான வைதீகரைச் சந்திக்கத்தான்."

https://telegram.me/aedahamlibra

"அவரை இவர் எதற்காகச் சந்திக்கச் செல்ல வேண்டும்?"

"அங்கே வைதீகர் சுங்க மன்னன் புஷ்யமித்திரன், அவனது இரண்டு புதல்வர்கள் மற்றும் கலிங்க இளவரசன் பீமவேலன் ஆகியவர்களை அழைத்திருந்தார். இவர்களைச் சந்திக்கத்தான் உங்களது தமையன் சென்றிருந்தார்."

"இந்த சந்திப்பு உறுதியாக நிகழ்ந்ததா?" சந்தேகத்துடன் வினவினாள் அவந்திகா.

"உறுதியாக அது நடந்தது. உங்களுக்கு சந்தேகமாக இருந்தால் தாங்கள் எனது உபதலைவன் திருக்கண்ணன் மற்றும் அவனது உபதளபதி இம்ஹோடெப் ஆகிய இருவரையும் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்களேன்."

"விதிசாவில் நடைபெற்ற கூட்டத்தைப் பற்றி நான் மாளிகையில் அடைத்த

இருவரிடம் வினவினால் எப்படி உண் மையை அறிந்து கொள்வேன்?”

“வஜ்ரபாகுவைப் பின்தொடர்ந்து சென்ற இருவரிடமும் வினவினால் தானே உண்மை நிலையை தாங்கள் அறிவீர்கள்?”

“என்ன குழப்புகிறீர்கள்? மாளிகை யில் நான் அடைத்த இருவரால் விதிசா வரை எப்படிச் செல்ல முடியும்?”

“அவர்கள் மூவரும் மாளிகைக்குள் அடைபட்டுக் கிடந்தார்கள் எனத் தாங் கள் நினைத்துக் கொண்டிருந்தது உங் கள் தவறு! அது எனது படைத் தலைவர் களின் சாமர்த்தியம்!”

அவந்திகா எந்த பதிலையும் அளிக்காமல் அவளுக்கு முன் அமர்ந் திருந்த சதகர்ணியையேக் கோபத்துடன் நோக்கினாள். அவளது கோபம் திசை மாறுவதைக் கவனித்த திவ்யன், “தேவி, இதில் அவருக்கு எந்தத் தொடர்பும்

https://telegram.me/vedhamlibra

இல்லை. தாங்கள் அரசரைக் கோபத்து டன் பார்க்க வேண்டாம்?" எனத் தெரி வித்தான்.

அவந்திகா திவ்யனை நோக்க, "நீங்கள் மூவரையும் மாளிகையில் அடைத்த அதே இரவில் மூவரும் மாளி கையில் இருந்து வெளியேறி விட்டார் கள்!" என்றான்.

"எனது காவலர்கள் முப்பொழுதும் காவல் இருக்க அவர்களால் எப்படி தப் பிக்க முடிந்தது?" எனச் சற்றே இரைந்து வினவினாள் அவந்திகா.

"முழு காவலும் இருக்கும் போது தானே நான் உங்களது அரண்மனைக் குள் நுழைந்தேன். அப்படி நுழைந்த கார ணத்தினால் தானே..." எனத் திவ்யன் கூறிக்கொண்டிருந்த போதே அவந்திகா, "இதற்கு மேல் தாங்கள் அன்றைய இர வைப் பற்றிக் கூற வேண்டிய அவசிய மில்லை" எனச் சற்றே பொய்க் கோபத்து டன் தெரிவித்தாள்.

திவ்யன் அதற்கு மேல் எதையும் பேசவில்லை. சற்று நேரம் அமைதியாகவே அமர்ந்திருந்தான். அப்போதும் அவந்திகா தனது காவல் வீரர்கள் மீது கொண்ட நம்பிக்கையால், "தாங்கள் கூறுவதை என்னால் ஏற்றுக்கொள்ள இயலாது. அதுவும் விதிசா சென்ற வஜ்ரபாகுவை இருவரும் பின்தொடர்ந்தார்கள் எனக் கூறுவதை..." எனத் தான் கூற வந்த வாக்கியத்தை பாதியிலேயே நிறுத்தினாள்.

அவள் கூறியதைக் கேட்ட திவ்யன் சிரித்தபடியே, "வஜ்ரபாகு விதிசாவில் வைதீகர், கலிங்க அரசன் மற்றும் சுங்க அரசன், இளவரசன் என அனைவரையும் சந்தித்த நாள் எது தெரியுமா?"

"எந்த நாள்?"

"நான் உங்களது மாளிகைக்குள் நுழைந்தேனே, அதே இரவு தான்!"

அவந்திகா அதிர்ச்சியில் திவ்யனை நோக்கினாள். "உங்களுக்கு சந்தேகம் இருந்தால் விதிசாவில் அவர்கள் அனை வரும் என்ன விவாதித்தார்கள் என்று வரிக்கு வரி மாறாமல் கூறுகிறேன். நீங் களே உங்களது தமையனிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்!" எனத் தெரி வித்தான்.

அவந்திகா அமைதியாக சிந்தித்த படி நின்றுகொண்டிருந்தாள். அப்போது திவ்யன் சற்றே விசமத்துடன், "அவர் கள் விதிசாவில் விவாதித்ததில் முக்கிய கருப்பொருள் அவந்தியும், அவந்திகா வும் தான். அதிலும் உங்கள் தமையன் உங்களை சுங்க நாட்டின் பட்டத்து இள வரசன் சுங்கமித்திரனுக்கு மணமுடித்து தருவதாக வாக்குக் கொடுத்துவிட்டு அதற்கான இரகசிய திட்டத்தையும் தீட் டியிருக்கிறான். இந்த செய்தி வேண்டுமா னால் அவந்தி இளவரசிக்கு மகிழ்ச்சியை உருவாக்கலாம். உங்களுக்கு சந்தேகம் இருந்தால் உங்களது தமையனிடமே நீங்

கள் கேட்டு உறுதி செய்துகொள்ளுங் கள்" எனத் தெரிவிக்க அவந்திகா திவ் யனை கோபம் கொண்டு சிவந்த அவளது விழிகளால் நோக்கினாள்.

புன்னகைத்தபடி அவளையே நோக்கிக் கொண்டிருந்தான் திவ்யன்.

அவந்திகா சதகர்ணியிடம், "மாளிகை சுரங்கப் பாதையை அவர் களுக்குத் தெரியப்படுத்தி அவர்களை மாளிகையிலிருந்து அனுப்பி வைத்தது உனது வேலை தானா?" என வினவி னாள்.

"இல்லை அக்கா... மாளிகைக்குள் நீ மூவரையும் தங்க வைத்திருந்ததை அறிந்ததும் சோழப் பேரரசரை சந்திக்க லாம் என எண்ணி இரகசிய சுரங்கத்தில் நான் உள்ளே செல்ல சோழப் பேரரசர் அதே சுரங்கம் வழியாக வெளியே வந்து கொண்டிருந்தார். அவர் எப்படி சுரங் கத்தை கண்டறிந்தார் என்ற மர்மத்திற்கு

எனக்கு இதுநாள் வரை விடை கிடைத்த பாடில்லை.”

“நானே எனது நேரடி கண்காணிப்பில் அவர்களை தங்க வைத்திருக்க வேண்டும். தவறிழைத்து விட்டேன்.”

“ஆமாம் இளவரசி. அவர்கள் அடிக்கடி வெளியே சென்று உள்ளே திரும்புவதற்கு தோதாக தாங்களே மாளிகைக் கதவை அடைத்து வைத்துவிட்டீர்கள். அது மட்டுமல்லாமல் உள்ளே இருப்பவர்களைப் பற்றி காவலர்கள் யாருக்கும் தெரியப்படுத்தவும் இல்லை. எத்தனைப் பேர் இருக்கிறார்கள் எனக் கூட அறியாமல் காவல் காத்தால் நிலைமை இப்படித்தான் இருக்கும். மூவரும் விருப்பத்திற்கு வெளியே சென்று வந்து கொண்டிருந்தார்கள். சில கிழமைகள் உள்ளே வேலையாட்கள் கொண்டு வரும் உணவுப் பொருட்களை உண்ண வேண்டும் என்பதற்காகவே சோழ நாட்டு வீரர்கள் மூவரை கரிகாலர் உள்ளே அமரவைத்து

விட்டு மூவரும் வெளிக் கிளம்பி விட்டார்கள்.”

தான் நன்கு ஏமாற்றப்பட்டு விட்டதை அறிந்த அவந்திகா வருத்தத்தினால் அமர்ந்திருந்தாள். ஆத்திரம் அதிகமாகத் தோன்றினாலும் அதை வெளிப்படுத்த முடியாமல் வருத்தத்துடன் காணப்பட்டாள்.

“எனக்கு ஒரு சந்தேகம்?”

“என்ன?”

“நான் மூவரையும் மாளிகைச் சிறை செய்த போதே சதகர்ணியும் இங்கே தான் இருந்தான் என்று கூறினீர்களே? அவனை எதற்காக வரவழைத்தீர்?”

“வஜ்ரபாகு அவந்தியின் அரசனாக தன்னை அறிவித்துக் கொள்ள முயல்வதை மட்டுமே தாங்கள் அறிவீர்கள். ஆனால், அவன் இரகசியமாகப் படை திரட்டிக் கொண்டிருப்பதை தாங்கள் அறிய சிறிதும் வாய்ப்பில்லை.”

https://telegram.me/aedahamlibra

“என்ன இரகசிய படை திரட்டுகிறாரா?” வியப்புடன் வினவினாள் அவந்திகா.

“ஆமாம் இளவரசி, ஒன்று சாதவாகன அரசரைக் கொன்று அரியணையைப் பறிக்க வேண்டும் அல்லது தான் திரட்டியிருக்கும் படையைக் கொண்டு தாக்குதல் நடத்தி அரியணையைக் கைப்பற்ற வேண்டும் என்பது அவனது எண்ணம்!”

“உள்நாட்டுப் போரா???” அதிர்ச்சியில் வினவினாள் அவந்திகா.

“ஆம் தேவி. அவர்களின் திட்டங்களை தொடக்கத்திலேயே முறியடிக்கப் பட வேண்டுமெனில் அரசர் அவந்தியில் இருக்க வேண்டிய அவசியத்தை முன்னிட்டு கரிகாலரின் உத்தரவின் பேரில் நான் தான் வரவழைத்தேன்.”

அவந்திகா எதையோ கூற வாயெடுத்தாள். ஆனால் அதற்குள் குறுக்கிட்ட சதகர்ணி, “இவர் கூறுவது அனைத்தும்

உண்மைதான் அக்கா. நான் படித்தானத்தில் இருப்பதைப் போன்ற தோற்றத்தை ஏற்படுத்தி அவந்தியில் கரிகாலருடனே நீ அவருக்கு அளித்த மாளிகையில் தங்கிக் கொண்டேன்" என வினவினான்.

அங்குப் பெருத்த மௌனம் நிலவியது. "சாதவாகன தேசத்தின் போர் படைத் தலைவனாக வஜ்ரபாகுவே நியமிக்கப் பட்டிருப்பதால் அவனுக்கு வேண்டிய, அவன் மீது விசுவாசமானவர்களையே உப தலைவர்களாக நியமித்துக் கொண்டு விட்டான். சாதவாகன தேசத்தின் தலையெழுத்து எப்போது வேண்டுமானாலும் மாற்றி எழுதப் படலாம்!" என வருத்தத்துடன் தெரிவித்தான்.

"மௌரிய அரசரைக் கொன்று புஷ்யமித்திரன் மகதத்தைக் கைப்பற்றியதைப் போன்று வஜ்ரபாகுவும் சாதவாகன தேச அரசனாக முயற்சிக்கப் பார்க்கிறான்."

https://telegram.me/aedahamlibra

"கூடா நட்பு கேடாய் முடியும்" என்று எங்கள் ஊரில் இதைக் குறிப்பிடுவார்கள்!"

"முற்றிலும் உண்மைதான் படைத்தலைவரே!"

"வடக்கு நோக்கி நகரும் சோழப் படையை அவனது காரியத்திற்கு பயன்படுத்திக் கொள்ள முயல்கிறான். அதிலும் சோழ மற்றும் சாதவாகனப் படைகளை மோத வைத்து விட்டால் அவனது பணி எளிதாகும் என்று கணக்குப் போடுகிறான்" எனத் தெரிவித்தான் திவ்யன்.

"நேற்று புஷ்யமித்திர சுங்கன் தனது படைகள் அனைத்தையும் அவந்தி எல்லையில் ஒன்று சேரக் கட்டளை பிறப்பித்திருக்கிறான். அதற்கான காரணம் இது வரை எனக்குப் புலப்பட மறுக்கிறது" என வருத்தத்துடன் தெரிவித்தான் சதகர்ணி.

அவன் தெரிவித்ததைக் கேட்ட அவந்திகா, "விதிசாவில் அவர்கள்

https://telegram.me/aedahamlibra

வகுத்த திட்டம் என்ன?” என வினவி னாள்.

“அவந்தியின் அரசனாக வஜ்ரபா குவிற்கு முடிசூட வேண்டும். சோழப் படையும் சாதவாகனப் படையும் மோதி இரண்டு நாடுகளும் பகைமை ஆக வேண்டும். சாதவாகன அரசர் சதகர்ணி புஷ்யமித்திர சுங்கனிடம் உதவி கேட்க வேண்டும். சாதவாகனம், சுங்கம், அவந்தி மற்றும் கலிங்கம் ஆகிய நான்கு நாடு களும் சேர்ந்து ஒற்றுமையுடன் சோழப் படையை எதிர்க்க வேண்டும். இந்தப் போரின் முடிவில் நீ சுங்க பட்டத்து இள வரசன் சுங்கமித்திரனை மணக்க வேண் டும். சாதவாகன அரசரே வஜ்ரபாகுவிற்கு அவந்தியை விட்டுக் கொடுக்க வேண்டு மாம்.”

“மோசமான திட்டம்!” என இகழ்ச்சி யுடன் தெரிவித்தாள் அவந்திகா.

அப்போது சிரித்த திவ்யன், “அவர் கள் ஒற்றுமையுடன் சேர்ந்து தீட்டிய திட்

டத்தையே மோசம் என்றால் வஜ்ரபாகு மற்றும் பீமவேலன் வெளியேறிய பிறகு அவர்கள் வகுத்த திட்டத்தைப் பற்றி தாங்கள் கேட்டால் தெரிவிக்க வார்த்தைகள் இருக்காது போலிருக்கிறதே?" என வினவினான்.

அவந்திகா அவனை வியப்புடன் பார்க்க, சாதவாகன அரசர், "என்ன திட்டம் தலைவரே?" என வினவினான்.

"விதிசாவில் அவர்கள் வகுத்த திட்டத்தின்படி சோழப் படையை சாதவாகன தேசமும், கலிங்கமும் தனித்தனியாக தாக்கும். இதில் மூன்று படைகளுமே பெருத்த சேதத்தை அனுபவிக்கும். எஞ்சியிருக்கும் சோழப் படையை தாக்கி சுங்கர்கள் வெற்றி பெறுவார்களாம். பிறகு தனது பலத்தை இழந்து நிற்கும் சாதவாகனம் மற்றும் கலிங்கத்தைத் தாக்கி தனது சுங்க நாட்டுடன் இணைத்துக் கொள்ள முடிவு செய்திருக்கிறார்

https://telegram.me/aedahamlibra

கள்” எனச் சிரிப்பை அடக்க முடியாமல் தெரிவித்தான் திவ்யன்.

“இது பச்சைத் துரோகம்” என ஒரே நேரத்தில் அவந்திகாவும், சதகர்ணியும் அருவருப்புடன் தெரிவித்தார்கள்.

அப்போது நந்தவனத்தின் மறுபுறத்தில் திடீரென்று இரண்டு பஞ்சவர்ணக் கிளிகள் பறந்து செல்ல ஆள்காட்டிக் குருவி ஒன்று சத்தம் எழுப்பியது. அதைக் கேட்ட திவ்யன் உண்டு கொண்டிருந்த பழத்தைத் தட்டில் வைத்துவிட்டு இடையில் வைத்திருந்த குறு வாளினைக் கையில் எடுத்துக்கொண்டு நடந்தான்.

அப்போது, “இப்படிப்பட்ட சத்தங்கள் இங்கு எழுவது இயல்பு!” எனத் தெரிவிக்க வாயைத் திறந்தாள் அவந்திகா.

ஆனால், “ஸ்ஸ்ஸ்” என்று எழுந்த திவ்யனது குரல் அவளது வாயை மூட வைத்திருந்தது.

மெல்ல நடந்து சென்றவன் யாரா லும் எளிதில் காண இயலாதபடி மரத் தோடு மரமாக சாய்ந்து நின்றிருந்த உரு வத்தின் மீது கையிலிருந்த குறுவாளை வீசினான். குறி தவறாத அந்தக் குறுவாள் ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தவனின் உடலில் குத்த "ஆ..." என்று அலறியப டியே நந்தவனத்தின் சுவரினை நோக்கித் தப்பிக்க ஓடினான்.

அவனைப் பிடிக்க அவனை விரட் டிக்கொண்டு சென்றான் திவ்யன். திவ்ய னைத் தொடர்ந்து சதகர்ணியும், அவந் திகாவும் ஓடிச் சென்றுகொண்டிருந்தார் கள். ஓடிக் கொண்டிருந்தவனை நோக்கி நந்தவனத்தில் கிடந்த மரக் கட்டையை எடுத்து வீசினான் திவ்யன். திவ்யன் எறிந்த கட்டை அவனது புற மண்டையில் தாக்க அங்கேயே கீழே விழுந்தான் அந்த ஒற்றன்.

கீழே விழுந்த ஒற்றனை நோக்கி ஓடினான் திவ்யன். ஆனால், அங்கே

சொர்ணமுகியும் கீழே விழுந்து கிடந்தாள். கீழே விழுந்து கிடந்தவளை நோக்கினான் திவ்யன். அவளது முதுகில் குறுவாள் ஒன்று பாய்ந்திருந்தது. அவளுக்கு உயிர் இருக்கிறதா என்று திவ்யன் தூக்கிப் பார்க்க முனகிக் கொண்டிருந்தாள் அவள்.

திவ்யனைப் பின்தொடர்ந்து வந்து கொண்டிருந்த அவந்திகா முதுகில் கத்தி பாய்ந்து கீழே விழுந்து கிடந்தவளைப் பார்த்து, “சொர்ணமுகி... என்ன ஆனது உனக்கு?” எனக் கேட்டபடியே அவளைத் தூக்கி மடியில் கிடத்தினாள்.

குருதி வெள்ளத்தில் துடித்துக் கொண்டிருந்தாள் சொர்ணமுகி. அதைக் கண்ட அவந்திகா ஆத்திரத்துடன், “உன்னை இப்படிப்பட்ட நிலைக்கு ஆக்கியது யார்” என ஆத்திரத்துடன் வினவினாள்.

மூச்சு தடுமாறிய சொர்ணமுகி, “சுங்க எல்லையை நோக்கி ஒருவன்

சென்று கொண்டிருக்கிறான். அவனைத் தடுத்து நிறுத்துங்கள். அவன் சுங்க எல் லையை அடையக் கூடாது. சுங்கப் படை புறப்பட்டுவிட்டது. வஜ்ரபாகு.... பலதே வன்... பலதேவன்...." எனக் கூறியவள் அவந்திகாவின் மடியிலேயே மரணத் தைத் தழுவினாள்.

அவந்திகாவின் நந்தவனத்தி லேயே உயிரைத் துறந்த சொர்ணமுகி யைப் பற்றி கேள்விப்பட்டதும் மாளிகை யிலிருந்த அனைவரும் அங்குக் குழுமி னார்கள். வருத்தத்துடன் நின்றுகொண் டிருந்த கார்த்திகாவிடம் அவந்திகா, "சுங்க எல்லையை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் ஒற்றன் எந்தச் சூழ்நி லையிலும் தப்பிக்கக் கூடாது! உடனே புறப்படு!" எனக் கட்டளையிட்டாள்.

அடுத்த கணம் அங்கிருந்து புறப் பட்டாள் கார்த்திகா. கார்த்திகா புறப்பட் டதும் திருக்கண்ணனை அழைத்த திவ் யன், "திருக்கண்ணா... நீ கார்த்திகாவைப்

https://telegram.me/aedahamlibra

பின்தொடர்ந்து செல்” எனக் கட்டளையிட அடுத்த கணமே அங்கிருந்து புறப்படலானான்.

திருக்கண்ணன் அங்கிருந்து சென்றதுமே அவந்திகா கடும் கோபத்துடன், “எதற்காக இப்போது கார்த்திகவைப் பின்தொடரச் சொல்லி உங்களது படைத்தலைவரை அனுப்பி வைத்திருக்கிறீர்கள்? உங்களுக்கு கார்த்திகாவைப் பற்றி என்ன தெரியும்? உங்களுக்கு அவள் மீதே நம்பிக்கை குறைவு வந்துவிட்டதா?” என வினவினாள்.

“கார்த்திகாவைப் பின்தொடரச் சொல்லி திருக்கண்ணனை அனுப்பியிருக்கிறேன் என்பதற்காக நான் அவள் மீது நம்பிக்கை வைத்திருக்கவில்லை என்று அர்த்தம் இல்லை இளவரசி. அவர்கள் இருவரும் திரும்பி வரும்போது நான் எதற்காக திருக்கண்ணனை அனுப்பி வைத்தேன் என்று தாங்கள் புரிந்து கொள்வீர்கள்” எனத் தெரிவித்த திவ்யன்

அவந்திகாவின் மறுமொழியை எதிர்பா ராமல் சாதவாகன அரசர் சதகர்ணியை அழைத்துக்கொண்டு அங்கிருந்து கிளம் பினான்.

https://telegram.me/aedahamlibra

https://telegram.me/aedahamlibra

# 26.

# விழுப் புண்ணை நனைத்த கண்ணீர்

சாதவாகன அரசை சீர்குலைக்கும் பயங்கரச் சதிச் செயல்கள் அனைத்தும் அவந்தியில் அரங்கேறிக் கொண்டிருப்பதைக் கண்டு அன்றைய காலை வரை பெரும் அச்சத்தில் காணப்பட்ட அவந்திகா மாளிகையில் திவ்யனையும், சாதவாகன மன்னன் சதகர்ணியையும் சந்தித்த பிறகு பெரும் நம்பிக்கையு

டன் காணப்பட்டாள். ஆபத்துகள் பல அவந்தியைச் சூழ்ந்து கொண்டிருந்தாலும் அதைப் பற்றி கவலைப்படாத அவந்திகா கிழக்கு வானில் மலை இடுக்குகளிலிருந்து எழும் தேய்ந்த நிலவையேப் பார்த்துக் கொண்டிருந்தாள். இரவு நேரத்தில் பல நாட்கள் மலையிலிருந்து எழும் நிலவை கண்டிருக்கிறாள் அவந்திகா. ஆனால், அப்போதெல்லாம் அந்நிலவு அவளுக்கு எந்த இன்பத்தையும் அளித்திருக்கவில்லை. உலகில் நடைபெறும் பல வழக்கமான காரியங்களில் இதுவும் ஒன்று என்று எண்ணி கடந்து போய்விடுவாள். ஆனால், இன்று மட்டும் அவளால் அதனை சாதாரண காரியம் என எண்ணிவிட இயலவில்லை. வானிலிருந்து நிலவு எழுவதைப் பார்க்க பார்க்க அவளது மனதில் இனம் புரியாத இன்பம் ஒன்று ஊற்றெடுப்பதை அவள் உணர்ந்தாள். கிழக்கு வானில் நிலவு உயர உயர அவளது சாளரத்திற்குள் ஊடுருவி வந்தது நிலவொளி. குளிர்ச்சியுடன் ஊடுருவிய நிலவொளியானது அவளது மனதிற்கு பெரும் மகிழ்ச்சியை அளித்தாலும் அவளது மனதில் இனம் புரியாத கணம் ஒன்று நேரத்திற்கு நேரம் அதிகரிக்கவே செய்தது. இது வரை தனது வாழ்நாளில் இப்படியொரு உணர்வை அவள் அனுபவித்ததே இல்லை. “அந்த உணர்விற்கு

என்ன பெயர்? அந்த உணர்வு எதனால் திடீரென்று தோன்றியது?" என்று கூட தெரியாமல் நின்றுகொண்டிருந்தாள்.

திடீரென்று மனதினில் உருவாகியிருக்கும் பாரத்தை எங்கே இறக்கி வைப்பது என்று எண்ணிக் கொண்டு வானில் காய்ந்துகொண்டிருந்த அந்த நிலவையே நோக்கிக் கொண்டிருந்தாள். குளிர்ச்சியான தென்றல் வீசிக் கொண்டிருந்த வேளையிலும் அவளது முகத்தில் ஆங்காங்கே சிறு சிறு வியர்வைத் துளிகள் வெளிப்பட்டிருந்தன. உடலில் புழுக்கத்தைப் பூரணமாக உணர்ந்தாள் அவந்திகா. மனதின் அடி ஆழத்தில் ஏதோ ஒன்று கொதித்துக் கொண்டிருப்பதைப் போன்று உணர்ந்தவள், "என்ன இது? என்றும் இல்லாமல் இன்று மட்டும் எனது உடல் இப்படி தகிப்பது ஏன்?" எனக் கூறியவள் அவளுக்கு அருகில் கிடந்த மயிலிறகு விசிறியை எடுத்து விசிறிக் கொண்டாள்.

வெகுநேரம் நிலவினைப் பார்த்த படியே நின்றுகொண்டிருந்த அவந்திகா, தனக்குப் பின்னால் திடீரென்று யாரோ வெகுஅருகில் நிற்பதைப் போன்று உணர்ந்தவள் சட்டென்று திரும்பினாள். அவளுக்குப் பின்னால் வெகு அருகில் நெருக்கமாக நின்றுகொண்டிருந்த சோழ வேளக்காரப் படைத் தலைவன் திவ்ய னின் மார்பில் மோதி அதிர்ச்சியில் சரிந் தாள் அவந்திகா.

அவளது இடையைப் பற்றி தாங்கிக் கொண்டான் திவ்யன்.

திவ்யன் அவளது இடையைப் பற்றி தாங்கியபடியே நிற்க, “தாங்கள் தானா?” எனக் கூறியபடியே நாணம் கொண்டு நிலம் நோக்கினாள் அவந்திகா.

இருவரும் வெகு அருகில் நின் றுகொண்டிருந்தார்கள். இருவரில் யார் நகர்ந்தாலும் அவர்களது உடல்கள் இரண்டும் தீண்டிக் கொள்ளும் நிலை. உடலிலிருந்து வெளிவந்துகொண்டி

https://telegram.me/aedahamlibra

ருந்த சூடான வெப்பக் காற்று மட்டும் ஒன்றையொன்று சந்தித்துக் கொண்டன. சிறிது நேரம் அவளது அழகிய வதனத்தையே புன்னகையுடன் நோக்கிக் கொண்டிருந்த திவ்யன், “நானேதான் இளவரசி! வரக்கூடாத நேரத்தில் வந்துவிட்டேனா?” எனப் புன்சிரிப்புடன் வினவினான்.

“உங்களை நான் எதிர்பார்த்திருக்கவில்லை!” என அவள் கூறிக்கொண்டிருந்த போதே அவளது தோளைப் பற்றி காய்ந்துகொண்டிருந்த நிலவினை நோக்கித் திருப்பினான் திவ்யன். அவந்திகாவிற்கு வெகு நெருக்கமாக அவளை பின்புறத்தில் உரசியபடி அவனும் நின்றுகொண்டான்.

அவந்திகா நிலவினைப் பார்க்க, “நிலவு அழகாக காய்ந்துகொண்டு இருக்கிறது?” என அவளது காதோரம் தெரிவித்தான் திவ்யன்.

"ம்ம்ம்ம்" என மட்டும் தெரிவித் தாள் அவந்திகா. அதற்கு மேல் அவளது அழகிய அதரத்திலிருந்து வார்த்தைகள் வெளிவரவில்லை.

திவ்யன் வந்தபிறகு அவளது மன நிலை முற்றிலும் மாறியிருந்தது! அத் தனை நேரம் தகித்துக் கொண்டிருந்த அவளது உடல் திவ்யனின் அருகாமை யினால் பேரின்பத்தை வெளிப்படுத்தத் துவங்கியது. அதை அனுபவித்தபடியே திவ்யனின் மீது பின்புறமாக சாய்ந்து கொண்ட அவந்திகா விழிகளை மூடி னாள்.

திவ்யனும் அவளது செவியோடு தனது முகத்தை இழைத்தபடியே அவளது கூந்தல் மற்றும் உடலிலிருந்து வெளிவந்த சுகந்தத்தை அனுபவித்தப டியே விழிகளை மூடினான்.

எவ்வளவு நேரம் அவர்கள் இரு வரும் அப்படியே நின்றுகொண்டிருந்தார் கள் என்று தெரியாது! திடீரென்று அவந்

திகா, "இத்தனைக் காலமாக தாங்கள் எங்கு சென்றிருந்தீர்கள்? இப்போதுதான் என்னைக் காண வேண்டும் என்ற எண் ணம் உங்களுக்குத் தோன்றியதா?" என வினவினாள்.

அவள் கூறியதைக் கேட்டவன், "நானும் உன்னைப் போன்றுதான் இள வரசி தனியாகக் காய்ந்து கொண்டி ருந்த நிலவினைப் பார்த்தபடியே நின்று கொண்டிருந்தேன்!" என அவளது காதோரம் கிசுகிசுத்தான்.

அவளது காதோரம் அவன் தெரி வித்தபோது அவளது காது மடலில் உரசின அவனது இதழ்கள் இரண்டும். அவனது உடலின் மீது அவளது தேகம் சரிந்திருந்தாலும் அவளது காது மடலில் தீண்டிய அவனது இதழ்கள் அவளது உடலை சிலிர்க்கச் செய்தன. அவளது உடல் திடீரென்று சிலிர்த்துவிட்டதையும் உணர்ந்தான் திவ்யன். அப்போது அவந் திகா, "நான் இத்தனைக் காலம் என்று

குறிப்பிட்டது இன்றைய பொழுது அல்ல. யுகம் போன்று கடந்து போன இத்தனை வருடங்களைக் குறிப்பிடுகிறேன் படைத் தலைவரே!" எனத் தெரிவித்தாள்.

அவள் கூறியதைக் கேட்டு சிரித்த திவ்யன், "ஏன், தாமதமாக வந்துவிட்டேனா?" என வினவினான்.

"ம்ம்ம்..." என மட்டும் பதிலளித்தவள் அவனது கழுத்தில் தனது தலையைச் சாய்ந்து கொண்டாள். பிறகு, "எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது படைத் தலைவரே!" என முனகினாள் அவந்திகா.

"என்ன?"

"உங்களை ஒரு திங்கள் காலத்திற்கு முன்தான் நான் சந்தித்தேன். இன்று மீண்டும் உங்களை சந்தித்ததிலிருந்து மனம் எதையோ தேடி தவித்துக் கொண்டிருக்கிறது. உங்கள் அருகாமையையே மனம் விரும்புகிறது. சற்றுமுன்

https://telegram.me/aedahamlibra

தாங்கள் வருவதற்கு முன் என் உடலும் மனமும் எப்படி தவித்தது என்று உங்களுக்குத் தெரியுமா?" என வினவினாள்.

"என்ன காரணமாம்?"

"அதன் காரணத்தைத்தான் நான் உங்களிடம் கேட்கிறேன்!"

"காரணத்தை நீ நிச்சயம் தெரிந்து கொண்டுதான் ஆக வேண்டுமா?"

"ம்ம்ம்..."

"எங்கள் ஊரில் இதற்குப் பெயர் "காதல்" என்று குறிப்பிடுவார்கள்!"

"ம்ம்ம்!" என மட்டும் அப்போதும் பதிலளித்தாள் அவந்திகா. அப்போது திவ்யன் அவளை அணைத்தபடியே

யாயும் ஞாயும் யாரோ கியரோ

எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்

யானும் நீயும் எவ்வழி அறிதும்

https://telegram.me/aedahamlibra

செம்புலப் பெயல்நீர் போல

அன்புடை நெஞ்சம் தாம்கலந்த னவே” என அவளது காதோரம் பாடி னான்.

அவன் பேசிய சொற்கள் அவளுக் குப் புரிந்தாலும் அவன் பாடிய பாடலின் அர்த்தம் புரியாமல், “என்ன பாடல் இது?” என வினவினாள்.

“எங்கள் ஊர் புலவர் ஒருவர் பாடிய பாடல்.”

“எதைப் பற்றிய பாடல் இது? மன் னர்களைப் பற்றிய பாடலா?”

“இல்லை. நம்மைப் போன்ற காத லர்கள் கொண்டாடும் காதலைப் பற்றி யது!”

அவனது பதிலைக் கேட்டபடியே சிரித்தபடியே “அதன் அர்த்தம்?” என்ன என்று வினவினாள்.

https://telegram.me/aedahamlibra

"என் தாயும், உன் தாயும் யாரோ? என் தந்தையும், உன் தந்தையும் எந்த முறையில் உறவினரோ? நானும் நீயும் எவ்வாறு அறிவோமோ? செம்மண் நிலத்தில் பெய்த மழைநீர் அதனுடன் இரண்டறக் கலந்து விடுவதுபோல நம் அன்பு நெஞ்சங்கள் இரண்டும் முன்பின் உறவு இல்லாமலேயே கலந்தன" என்பது இப்பாடலில் பொருள்."

"நம் இந்த நிலைக்கு ஏற்றப் பாடல் தான் இது" எனக் கூறியவள் அவளது உடலைத் தழுவியிருந்த திவ்யனின் கரத்தை இழுத்து அவளது அடிவயிற்றில் பதித்தாள்.

அவந்திகாவின் எண்ண ஓட்டத்தினை அறிந்துகொண்ட திவ்யன் அவளை சற்றே இறுக்கமாக அணைத்தான். வயிரம் போன்று இறுகியிருந்த அவனது கரத்திற்கும் உடலுக்கும் இடையில் இலவம் பஞ்சினைப் போன்று மென்மையான அவளது உடலை இறுக்

அணைத்துக் கொண்டான் திவ்யன். அவனது அணைப்பின் அழுத்தத்தில் அவள் சற்றே வலியை உணர்ந்தாலும் அந்த வலி அவளுக்கு பேரின்பத்தை அளிக்கத் தவறவில்லை.

தன் மீது துவண்டு போய் சாய்ந் திருந்த அந்த வஞ்சிக் கொடியை அணைத்தபடியே அவளது அடிவயிற்றை வருடினான். கரங்கள் வாள் மற்றும் வேலி னைப் பிடித்து காப்பு காய்த்து இறுகிப் போயிருந்ததால் அவனது கரம் அவளது வயிற்றினை வருடியபடியே அவளது உட லில் மேல் நோக்கி உயர்ந்தது. இனம் புரியாத இன்பம் உடலுக்குள் ஊடுருவ அவனது தீண்டலை இரசித்தபடியே நின் றுகொண்டிருந்தாள் அவந்திகா. அவளது உடலில் கோடுகளை தீட்டியபடியே அவளது உடலில் மேல் நோக்கி முன்னே றிய அவனது வலது கரமானது அவளது செழித்து வளர்ந்திருந்த மார்புகளுக்கு முன் தயக்கத்துடன் நின்றுகொண்டது, விழிகளை மூடியிருந்தாலும் திவ்யனின்

https://telegram.me/aedahamlibra

தீண்டல் மூலம் பேரின்பத்தை உணர்ந்து கொண்டிருந்த அவந்திகா அவனது கரத்தைத் தட்டி விட்டு அவனது முகத்தை நோக்கி திரும்பி நின்றுகொண்டாள்.

அவளது முகத்தை நோக்கிய திவ்யன், “இளவரசி...” என அழைத்தான்.

அப்போது அவனது அதரத்தின் மீது தனது கையை வைத்து அவனது பேச்சினை பாதியிலேயே தடுத்த அவந்திகா, “இனி தாங்கள் என்னை இளவரசி என அழைக்க வேண்டாம் படைத் தலைவரே...” எனத் தெரிவித்தாள்.

“வேறு எப்படி அழைப்பதாம்!”

“அவந்திகா என்றே தாங்கள் அழைக்கலாம்...”

“தங்களது உத்தரவு!” எனப் புன்னகையுடன் தெரிவித்தான் திவ்யன்.

அவனது காதோரம், “தலைவரே” எனக் கிசுகிசுத்தாள் அவந்திகா.

https://telegram.me/aedahamlibra

"என்ன?"

"எனக்கு ஒரு விருப்பம்!"

"காதோரம் கிசுகிசுக்கும் அளவிற்கு அப்படி என்ன இரகசிய விருப்பமாம்!"

"உங்களை நான் அணைக்க வேண்டும்!"

"இதற்கெல்லாமா அனுமதியை எதிர்பார்ப்பார்கள்!"

"என் மார்புகள் இரண்டும் கண்ணிப் போய் வலி எடுக்கும் வரை உங்களை அணைத்துக் கொள்ள வேண்டும்!" என அவள் தெரிவித்ததுதான் தாமதம் அடுத்த கணமே திவ்யன் அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

அவனது அணைப்பில் அவள் மூச்சு விடவே சிரமப் படலானாள். அவளது உடலுள் ஆங்காங்கே வலி எடுப்பதையும் உணர்ந்தாள். அந்த வலி

யும் அவளுக்கு அப்போது வேண்டிய தாகவே இருந்தது. திவ்யனின் முது கினை வருடியபடியே, “படைத் தலை வரே, அன்று தாங்கள் என்னை அவந்தி நதிக் கரையில் காப்பாற்றிக் கரை சேர்த்த பிறகு கார்த்திகா உங்களிடம் “இளவரசி கண் விழித்ததும் உங்களுக்கு வேண்டிய பரிசினை அளிப்பார்கள். சற்று பொறுத் திருங்கள்” எனத் தெரிவித்த போது தாங் கள் என்ன பதில் சொல்லிவிட்டுச் சென் றீர்கள்?” என வினவினாள்.

“உங்களது இளவரசியை நான் சந் திக்க உகந்த காலம் இது அல்ல. நான் விரும்புவதையும் இளவரசியால் அளிக்க இயலாது” எனத் தெரிவித்தேன் நான்.”

“அந்த உகந்த காலம் இன்றுதான் வாய்த்ததா?”

“ம்ம்ம்...”

“தாங்கள் விரும்பிய அந்தப் பரிசு என்னவாம்? இப்போது தெரிவித்தால்

https://telegram.me/aedahamlibra

அதை அளிக்க நான் சித்தமாக இருக்கிறேன்!" என அவனது காதோரம் கிசுகிசுத்தாள் அவந்திகா.

"நான் எதை தெரிவித்தேன் என்று உனக்குத் தெரியாதா?"

"தெரியாது!" என அப்பட்டமாக பொய் உரைத்தாள் அவந்திகா.

திவ்யன் எதுவும் கூறாமல் அவளது தோளில் தனது முகத்தைப் புதைத்துக் கொண்டு அவளது உடல் தீண்டலின் மென்மையை அனுபவித்துக் கொண்டிருந்தான்.

"உங்களுக்கு என்ன வேண்டும் என்று வினவினேன் நான்."

"அதை இனி தெரிவிக்க அவசியம் இல்லை அவந்திகா..."

"ஏன்?"

"எனக்கு என்ன வேண்டுமோ, அதைத்தான் நான் இப்போது எடுத்

துக் கொண்டிருக்கிறேன்!" எனத் தெரி வித்தவன் அவனது முரட்டு உதடுகளால் அவளது தோளில் முத்தமிடத் துவங்கி னான்.

அவனது திடீர் அத்துமீறலினால் அதுவரை அவளை எல்லை மீறாமல் வைத்துக் கொண்டிருந்த அவளது அச் சம், மடம், நாணம் என அனைத் தும் சிறிது சிறிதாக விலகத் துவங்கின. அவந்திகாவின் உடலில் திவ்யனை விட வும் வேட்கை அதிகமாகிக் கொண்டிருந் தது. அப்போது திவ்யன், "அவந்திகா... உனக்கு ஒரு உண்மை தெரியுமா?" என வினவினான் திவ்யன்.

"எனக்கு இப்போது எந்த உண்மை யும் தெரிய வேண்டியதில்லை. எனக்கு வேண்டியதெல்லாம் இப்போது உங்க ளது முரட்டுத்தனமான அத்துமீறல்தான்" எனத் தெரிவித்தவள் சற்றே முன்னேறி அவனது கன்னத்தில் முத்தமிட்டபடியே தனது முகத்தைப் புதைத்துக் கொண்

டாள். இருவரும் சிறிது நேரம் அணைத் தபடியே நிற்க, திவ்யன் அவளது உடலில் தனது விரலினால் கோலமிட்டுக் கொண் டிருந்தான்.

பிறகு அவந்திகா, "ஏதோ உண்மை தெரியவேண்டும் என்றீர்களே! என்ன அது?" என வினவினாள் அவந்திகா.

"இப்போது எந்த உண்மையும் தெரியவேண்டிய அவசியம் இல்லை. எனது முரட்டுத் தனம் தானே வேண்டும் என்றாய்?" எனக் கூறியபடியே அவளை இன்னும் இறுக்கமாக அணைத்தவன் அவளது முகத்தில் முத்தமிடத் துவங்கி னான்.

"முரட்டு தேகம்!" எனக் கூறியபடியே அவன் முத்தமிடுவதற்கு வசதியாக தனது முகத்தை தூக்கிக் காட்டிக் கொண்டிருந் தாள் அவந்திகா.

"நான் அவந்தி வருகை தந்ததே, இந்த தேவதையை காணத் தான்!" என

https://telegram.me/aedahamlibra

முத்தத்தினூடே சொற்களை ஒவ்வொன் றாக தெரிவித்தான் திவ்யன்.

அவன் கூறியதைக் கேட்டதும் புன் னகைத்தாள் அவந்திகா. அந்தப் புன்ன கையுடனே, "தேவதையா?" என வினவி னாள்.

"ஆம்!"

"யார்?"

"நீதான்!"

"பொய் கூறாதீர்கள்! காதல் மயக் கத்தில் புலவர்களும், கவிஞர்களுமே பொய் கூறுவார்கள். ஆனால், வீரர்கள் பொய் உரைக்கக் கூடாது!"

"நான் பொய் கூறவில்லை அவந் திகா. உண்மையைத் தான் கூறுகிறேன்!"

"எந்த உண்மை!"

"நீ... தேவதை என்ற உண் மையை..."

எந்தப் பதிலையும் தெரிவிக்காத அவந்திகா புன்னகைத்தாள். அவளது இதழ்களை நோக்கினான் திவ்யன். அவன் தேடிக்கொண்டிருந்த அமுத ஊற்று அவனது இதழ்களுக்கு அருகே வெகு அருகில் நின்றுகொண்டு அவ னைப் பருக வா வா என்று அழைப் பதைப் போன்று தோன்ற தனது இதழ் களை அவளது இதழ்களை நோக்கி கன்னத்தில் முத்தமிட்டபடியே முன்னேற லானான். அவன் அவளது இதழில் முத் தமிட அவள் தனது முகத்தைத் திருப் பிக் கொள்ளவும் அவளது இதழுக்குக் கிடைக்க வேண்டிய முத்தம் அவளது கன்னத்தில் மீண்டும் விழுந்தது.

ஏமாற்றத்துடன் திவ்யன் நிற்க, மீண்டும் புன்னகைத்தாள் அவந்திகா. அப்போது திவ்யன், "யாரெல்லாம், நம்மை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துகிறார் களோ அவர்கள் அனைவருமே நமக் குத் தேவதைகள் தான்!" எனத் தெரிவித் தான் திவ்யன்.

https://telegram.me/aedahamlibra

அப்போது அவந்திகா விசமத்துடன், “நான் உங்களுக்கு எத்தனையாவது தேவதை?” என வினவினாள்.

அவளது கேள்வியில் பொதிந்திருக்கும் உள் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட திவ்யன், “நிச்சயம் இந்த உண்மையை நீ அறிந்துகொண்டுதான் ஆக வேண்டுமா?” என வினவினான்.

“அப்படியெனில் எனக்கு முன் உங்களது வாழ்வில் பல கன்னிகைகளை கடந்து வந்திருக்கிறீர்கள்?” எனச் சற்றே வருத்தத்துடன் வினவினாள் அவந்திகா.

“அடிக் கள்ளி...” எனச் சற்றே கோபத்துடன் தெரிவித்த திவ்யன், “இத்தனைக் காலமாக அதற்கெல்லாம் நேரமில்லாமல் போய்விட்டது அவந்திகா... சோழ தேசத்தின் அரசியல் நிலைமை என் உணர்ச்சிகள் அனைத்தையும் மறக்கடிக்கக் செய்து விட்டது. நிலைமை சரியாகப் போகும் சமயத்தில் யவனத்திற்கு அடிமையாக விற்கப்பட்டேன். என் வாழ்

வில் நான் சந்தித்த முதல் பெண் நீ தான்... அதை ஏற்பதும் ஏற்காமல் இருப்பதும் உனது விருப்பம்!" எனத் தெரிவித்தவன் அவளை அணைப்பதை விட்டு விட்டு சற்றே விலகினான்.

ஆனால் அவந்திகாவோ திவ்யனின் செயலுக்கு மாறுபாடாக விலகிச் சென்ற திவ்யனை இழுத்து அணைத்தவள், "இதற்கு முன் நீங்கள் எத்தனைப் பெண்களை வேண்டுமானாலும் கடந்திருக்கலாம். அதைப் பற்றிய கவலை எனக்கில்லை. ஆனால், இனி நான் எவளிடமும் உங்களைப் பகிர்ந்துகொள்ள மாட்டேன்" எனத் தெரிவித்தவள் கால் விரல்களில் நின்றுகொண்டு திவ்யனின் உயரத்திற்கு எழுந்து அவனது இதழ்களில் தனது இதழ்களை பதித்து விட்டிருந்தாள்.

அவளது திடீர், எதிர்பாராத முத்தத்தினால் திக்குமுக்காடிப் போயிருந்தான்

https://telegram.me/aedahamlibra

திவ்யன். திவ்யனை விடவும் வேகமாக செயல்பட்டாள் அவந்திகா.

அவளுக்கு முத்தமிட்டபடியே அவளைத் தூக்கிச் சென்று கட்டிலில் கிடத்தினான் திவ்யன். பிறகு அவளது இதழ்களிலிருந்து தனது இதழ்களை விடுவித்தவன் மெல்ல முத்தமிட்டபடியே மார்பு நோக்கி முன்னேறினான். அவளது ஆடையை விலக்கியவன் அவளது மார்புகளுக்கு இடையில் தனது முகத்தைப் புதைத்தான். அவனது முகத்தை மார்போடு அணைத்துக் கொண்டாள் அவந்திகா. பிறகு, "படைத் தலைவரே, நாம் இன்று இரவே மணம் செய்து கொள்வோமா?" என்றும் வினவினாள்.

"இன்றேவா?"

"இன்று அல்ல இப்போதே!"

"என்ன அவசரம்?"

https://telegram.me/aedahamlibra

“ஒரு சத்திரிய குலப் பெண் மணமாகாமல் ஆடவனுடன் கலவியில் ஈடுபடக் கூடாது!”

திவ்யன் எதுவும் பேசாமல் அமைதியாகக் காணப்பட்டான்.

“சத்திரியனும் அப்படியே மனம் செய்துகொள்ளாமல்...” எனக் கூற வந்ததை பாதியிலேயே நிறுத்திக் கொண்டாள்.

“.......”

“இது சத்திரியர்களுக்கென்று விதிக்கப்பட்ட விதி...”

“ஆனால், நான் சத்திரியன் அல்லவே...”

“என்ன, நீங்கள் சத்திரியன் அல்லவா?” என வியப்புடன் வினவிய அவந்திகா அதிர்ச்சி அடைந்தாள்.

அவளது அணைப்பிலிருந்து விடுபட்ட திவ்யன், அவளது முகத்தருகே

தனது முகத்தைக் கொண்டு சென்று அவளது இதழ்களில் மீண்டும் ஒரு முத்தத்தைப் பதித்தவன், "வர்ண கோட்பாடுகள் உங்கள் ஊரில் தான்! எங்கள் வழக்கம் அது அல்ல!" எனத் தெரிவித்தான்.

"படைத் தலைவரான தாங்கள் சத்திரியன் இல்லை என்றால் நீங்கள்..." என வினவினாள்.

"நான் வன்னியன்!"

"வன்னியனா?"

"ஆம்! எங்கள் ஊரில் வீரர்களை வன்னியன் என்றே அழைப்பார்கள்!"

அமைதியாக எந்தப் பதிலையும் கூறாமல் கட்டிலில் திவ்யனின் அணைப்பிலேயே கிடந்தாள் அவந்திகா.

"சத்திரிய குல பெண்களுக்கு தான் விரும்பும் ஆடவர்களுடன் காந்தர்வ முறையில் இணையும் வழக்கம் உண்டு. நாம் இருவரும் இப்போதே காந்தர்வ

முறையில் மணம் முடித்து இணைந்து விடுவோம். இனியும் என்னால் தங்க ளைப் பிரிந்து காத்திருக்க இயலாது!”

“எங்கள் ஊரில் இந்தக் காந்தர்வ மணம், சத்திரிய தர்மம் என எந்தக் கட் டுப்படும் கிடையாது. மனம் ஒன்றினால் இருவரும் இணைந்துவிடலாம்! இதற்கு எங்கள் ஊரில் “கலவி” என்று பெயர் சூட்டி தனி இலக்கணத்தை வழங்கியி ருக்கிறார்கள். ஆதலால் நீ அதைப் பற் றியெல்லாம் கவலை கொள்ள வேண் டாம்!” எனக் கூறியவன் அவளை இழுத்து தனது மார்பு மீது கிடத்தி போர்த்திக் கொண்டான்.

அப்போது அவந்திகா, “நாம் அவச ரப் படுகிறோமோ?” என வினவினாள்.

அப்போது திவ்யன் அவளுக்கு முத் தமிட்டபடியே, “அவசரப்படுவது நாம் அல்ல அவந்திகா...” எனத் தெரிவித் தான்.

https://telegram.me/aedahamlibra

"நாம் இல்லை என்றால் நான் மட்டுமா?"

"இல்லை!"

"பிறகு?"

"நாம் இருவரும் மற்றவர் மீது கொண்டிருக்கும் காதல். அது இப்படித் தான் நம்மை அத்துமீறச் சொல்லி தூண்டிக்கொண்டே இருக்கும்!"

திவ்யனின் தோளில் சாய்ந்தபோது அவனது தோளில் காணப்பட்ட தழும்பினைப் பார்த்தவள், "இந்தத் தழும்பு அன்று நான் எறிந்த குறுவாளினால் ஏற்பட்டது தானே!" எனக் கூறியவள் அந்தத் தழும்பில் முத்தமிடவும் செய்தாள்.

அப்போது திவ்யன் சிரித்தபடியே, "இப்படி நீ முத்தமிடுவாய் என்று தெரிந்திருந்தால் நீ எறிந்த மற்ற குறுவாட்களையும் என் உடலின் மீது தாங்கியிருப்பேன்!" என்றான்.

"முத்தம் தானே வேண்டும். வேண்டும் மட்டும் கொடுத்துவிட்டுப் போகிறேன். அதற்கு எதற்காக குறுவாளினை உடலில் தாங்க வேண்டும்" எனக் குழைந்தவள் அவனது உடலில் தாங்கியிருந்த மற்ற விழுப் புண்களிலும் முத்தமிட்டபடியே, "இந்த விழுப் புண்கள் அனைத்தும் போர்க்களத்தில் ஏற்பட்டவையா?" என வினவினாள்.

"ம்ம்ம்..."

"எங்கே?"

"யவனத்தில்!"

"யவனத்திலா?"

"ஆமாம். யவனத்தில் அடிமை வீரனாக சண்டையிட்டபோது ஏற்பட்ட தழும்புகள் இவை!"

"அனைத்துக்கும் காரணம் என் உடன் பிறந்த தமையன் தானே!"

"அவனும் ஒரு காரணம்!"

“தாங்கள் வெஞ்சினம் உரைத்த தைப் போன்று என் தமையனை கொன்று விடுவீர்களா?” என வருத்தத்துடன் வின வினாள் அவந்திகா.

“ஆமாம் அவந்திகா... நால்வரில் ஒருவனைக் கொன்றுவிட்டேன். இன் னும் மூவர் எஞ்சி இருக்கிறார்கள்.”

“அவர்களில் எனது தமையன் வஜ் ரபாகுவும் ஒருவன்!”

“நிச்சயமாக... மூவரின் மரணமும் கொடூரமாக இருக்கப் போகிறது அவந் திகா. சிங்களனின் மரணத்தை விடவும் கொடூரமாக அவர்களை கொலை செய் யப் போகிறேன்!” என திவ்யன் தெரி விக்க அவனது மார்பில் சாய்ந்து படுத் துக்கொண்டாள் அவந்திகா.

வஜ்ரபாகுவின் மீது அவந்திகா விற்கு கோபம் இருந்தாலும் அவந்திகா தனது தமையனை எண்ணி வருந்தவே செய்தாள். அந்த வருத்தம் விழிகளில்

சிறு துளி நீரை வரவழைத்திருந்தது. அந்தத் துளி திவ்யனின் மார்பில் ஏற்பட்டிருந்த விழு புண் தழும்பின் மீது சுடச் சுட விழுந்தது.

https://telegram.me/aedahamlibra

https://telegram.me/aedahamlibra

# 27.

# சூழப்பட்ட கார்த்திகா

வஜ்ரபாகுவினால் அவந்தி எல்லைக்கு அனுப்பப்பட்ட ஒற்றனை எதிர்நோக்கி உஞ்சையின் எல்லையிலிருந்து நெடுந்தொலைவு பயணித்து அவனுக்காகக் காத்திருந்தாள் கார்த்திகா. அவந்திகாவின் கட்டளையை ஏற்று அரண்மனை மாளிகையை விட்டு வெளியேறிய அடுத்த கணமே அவள் மாறுவேடம் அணிந்து கொண்டு புரவியின் மீது கைவினைக் கலைப் பொருட்களை ஏற்றி வணிகப் பெண்ணைப் போன்று உருமாறியிருந்தாள். பொழுது விடிந்து பரிதி மெல்ல உயர்ந்துகொண்டிருந்தது. வணிகர்கள் பலர் அவளைக் கடந்து சென்றுகொண்

டிருக்க வணிகர்களோடு வணிகர்களா கச் சென்று கொண்டிருந்ததைக் கவ னித்தாள் கார்த்திக்கா.

அவனை ஏற்கனவே பல முறை வஜ்ரபாகுவின் மாளிகையில் கார்த் திகா பார்த்திருப்பதால் பார்த்த அடுத்த கணத்திலேயே இவனாகத்தான் இருப் பான் என்று முடிவெடுத்தாள். அவ னைப் பார்த்த அடுத்த கணமே அவன் தான் ஒற்றன் என்பதை அறிந்துகொண் டாலும் அதை வெளிப்படுத்தாமல் அவன் தன்னை எந்தச் சூழலிலும் அறிந்து கொள்ளக் கூடாது என்பதில் பெரும் கவ னமாக இருந்த கார்த்திகா பெரும் எச்ச ரிக்கையுடன் அவனைப் பின்தொடர்ந்து சென்றுகொண்டிருந்தாள்.

எச்சரிக்கையாக யாரும் கண்டறி யாத அளவிற்கு இரண்டு குறுவாட் களை இடையில் மறைத்திருந்தாள். கட் டியிருந்த சீலைத் துணியின் முந்தா னையை மார்பு மற்றும் முதுகினைச் சுற்றி தலையை மூடியதோடு அல்லாமல்

https://telegram.me/aedahamlibra

முகத்தில் பாதியையும் அவர்களின் பழக் கவழக்கத்தின் படி மறைத்திருந்தாள். அவளை யார் பார்த்தாலும் அவளின் அழகிய அதரங்களுடன் கூடிய இரண்டு இதழ்கள் மற்றும் இதழ்களுக்குக் கீழே வழவழப்புடன் காணப்படும் தாழ்வாய் மற்றும் கழுத்து மட்டுமே பார்வைக்கு அகப்படும். மற்ற அனைத்தையும் நீண்ட அவளது சீலைத் துணியினால் மறைத்து எளிதில் அடையாளம் காண இயலாத அளவிற்கு தன்னை மாற்றிக் கொண் டிருந்தாள். தன்னை மறைத்ததைப் போன்றே அவள் வழக்கமாகப் பயன் படுத்தும் புரவியையும் மாற்றிக்கொண்டு முன் எச்சரிக்கையுடன் சென்றிருந்தாள் கார்த்திகா.

அவந்தி எல்லையை அடைவதற் குள் அவன் கொண்டு சென்றுகொண் டிருக்கும் ஓலையைப் பறித்து அவ னைத் தீர்த்துக் கட்ட தக்க சமயத்தை எதிர்பார்த்தபடி சென்றுகொண்டிருந் தாள் கார்த்திகா. அவனிடம் பேசுவதற்கு

தக்க சமயத்தை எதிர்பார்த்தபடி சீரான இடைவெளியில் அவள் சென்றுகொண்டிருந்த போது அவ்வொற்றன் தனது புரவியின் வேகத்தைக் குறைத்தான். அவனைப் போன்று தானும் வேகத்தைக் குறைத்தால் அவன் சந்தேகம் கொண்டு எச்சரிக்கை அடைந்து விடுவான் என்பதை உணர்ந்த கார்த்திகா தனது புரவியின் வேகத்தைக் குறைக்காமல் சீரான வேகத்தில் சென்றுகொண்டிருந்தாள். பொழுது உச்சிக்கு வந்துவிட்டதால் பரிதியின் வெம்மையைத் தாங்க முடியாமல் அனைவரும் வழியில் ஓடையில் நீரைப் பருகி இளைப்பாறினோர். கார்த்திகாவும் அவளது புரவிக்கு நீர் காட்டிவிட்டு மற்றவரைப் போன்று மரத்தின் நிழலில் ஓய்வு எடுக்காமல் அவள் புறப்பட்டு செல்லலானாள்.

அவள் செல்வதைப் பார்த்த வஜ்ரபாகுவின் ஒற்றனும் புறப்பட்டுச் செல்லலானான். கார்த்திகா முன்னால் செல்ல அவனைப் பின்தொடர்ந்தான் அந்த ஒற்

https://telegram.me/aedahamlibra

றன். "அவன் தன்னை அடையாளம் கண்டு கொண்டானோ?" என கார்த்திகா சற்றே எச்சரிக்கையுடன் புரவியின் வேகத்தைக் குறைக்க அவன் அவளிடம், "விதிசா வரை சென்று கொண்டு இருக்கிறாயா?" என வினவினான்.

பதிலுக்கு அவள் எதுவும் பேசாமல் புரவியின் வேகத்தை அதிகரித்தாள்.

அவளின் போக்கினைக் கண்டு புரியாமல் விழித்த அந்த ஒற்றன், "தனியாகச் சென்று கொண்டு இருக்கிறாயே என்று பேச்சுத் துணைக்கு உன்னுடன் வரலாம் என்று வந்தால் இப்படி அவமானப் படுத்துகிறாயே?" என வாய்விட்டே அவளிடம் வினவினான் அவன்.

அவனிடம் முதலில் பேசத் தயங்கிய கார்த்திகா பிறகு தயக்கத்துடனே, "ஆமாம். விதிசா வரைதான் சென்று கொண்டிருக்கிறேன்" எனத் தெரிவித்தாள்.

https://telegram.me/aedahamlibra

“நல்லது பெண்ணே! நானும் விதிசா வரைதான் சென்றுகொண்டு இருக்கிறேன்” எனத் தெரிவித்தவன் பிறகு, “இந்த பாதையில் இப்போதுதான் நீ முதல் முறையாக பயணிக்கிறாயா?” என வினவினான்.

“ம்ம்ம்” என மட்டுமே பதிலளித்தாள் அவள்.

“விதிசா வரை மட்டும் தானா அல்லது விதிசாவைக் கடந்து மகதம் வரைப் புறப்பட உத்தேசமா?” என வினவினான்.

“நான் கொண்டு செல்லும் பொருட்கள் அனைத்தும் விதிசாவில் விற்றுவிட்டால் மீண்டும் உஞ்சைக்குத் திரும்பி விடுவேன். விற்கவில்லை என்றால் மகதம் வரை செல்ல உத்தேசித்திருக்கிறேன்”

“உன்னைக் கண்டால் எனக்குப் பெருமையாக இருக்கிறது!”

https://telegram.me/aedahamlibra

“எதற்கு என்னைக் கண்டு பெருமைப்படுகிறீர்கள்?”

“நம் நாட்டு ராசபுதினப் பெண்கள் அனைவரும் வீட்டோடு அடைந்து கிடக்கும் நேரத்தில் நீ வாணிகம் செய்ய தனியாகப் புறப்பட்டு செல்கிறாயே! உன்னைப் போன்ற பெண்கள் தான் இப்போது நாட்டிற்குத் தேவையாக இருக்கிறார்கள்.”

“எனது தாய் மற்றும் தந்தையைக் காக்க நான் உழைக்கிறேன். தாங்கள் என்னை அளவுக்கு அதிகமாக புகழ்கிறீர்கள்” என அவள் கூறிக்கொண்டிருந்த போதே புரவியில் ஒரு தென்னாட்டு வணிகன் ஒருவன் அதிவேகமாக அவர்களைக் கடந்து சென்றான்.

அப்போது அந்த ஒற்றன், “நான் இந்த தென்னாட்டு வணிகர்களை வெறுக்கிறேன்” எனப் பெரும் இகழ்ச்சியுடன் தெரிவித்தான்.

"ஏன் அவர்களைக் கண்டு வெறுக் கிறீர்கள்?"

"நம் நாட்டு வளங்களைச் சுரண்டி தென்னாட்டுக்கு கொண்டு சென்று கொண்டிருக்கிறார்கள்."

"அவர்கள் தென்னாட்டிலிருந்து பொருட்களை கொண்டு வந்து இங்கு விற்றுக் கொண்டு இருப்பதால் தான் நம் நாட்டில் விலைவாசி இன்னும் உயர வில்லை. அவர்களை மட்டும் வணிகத் தின் பொருட்டு பொருட்களை இங்கு கொண்டு வந்து சேர்க்கவில்லை என் றால் நம் நாட்டில் நாம் பொருட் களை யானை விலை கொடுத்து வாங்க வேண்டி இருக்கும்!"

"நீ என்ன கூறினாலும் என்னால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. அவர் களை நான் வெறுப்பதற்கு காரணம் தேவையில்லை. ஆனாலும், நான் அவர் களை வெறுக்கிறேன்."

https://telegram.me/aedahamlibra

“நீ இப்போது பளபளப்புடன் பட்டாடை உடுத்திக் கொண்டிருக்கிறாயே? இது காஞ்சிப் பட்டு! உன் காதில் மின்னிக் கொண்டு இருக்கிறதே, இது பாண்டிய நாட்டு முத்து. உன் மார்பில் தவழ்ந்து கொண்டு இருக்கும் அந்த பவளக் கல் சோழ நாட்டின் புகாருக்குச் சொந்தமானது. இந்த வேளையில் நீ அவர்களை வெறுக்கிறேன் என்கிறாய்? உனது கூற்று எனக்கு விசித்திரமாக இருக்கிறது. முரண்பாடாகவும் இருக்கிறது.”

“நம் நாட்டில் வாணிகம் செய்து அவர்கள் தங்கள் நாட்டின் செல்வத்தைப் பெருக்கி வளமாக்கிக்கொண்டு இப்போது நம்மை எதிர்க்கவே பெரும் படையைத் திரட்டிக் கொண்டு வடுகர் நாடு வரை வந்துவிட்டார்கள்.”

“ஓ... இது எப்போது நடந்தது?”

“நீ எதைப் பற்றியும் கேள்விப்படவில்லையா?”

https://telegram.me/aedahamlibra

"இல்லை!"

"சோழப் படை நம் நாட்டு ஒரு பெரும் கோட்டையையும் கைப்பற்றிவிட் டார்களாம்! எப்போது வேண்டுமானாலும் அவர்கள் பைத்தான் மீது படையெடுக்க லாம் என்ற செய்தி வந்துகொண்டு இருக் கிறது."

"இது சாதவாகன அரசுக்கு சோதனை காலம்!"

"சோழ நாட்டின் தாக்குதலை நமது படைத் தலைவர் வஜ்ரபாகு நிச்சயம் தனது பராக்கிரமத்தனத்தினால் முறிய டித்து சோழ வீரர்களை வந்த வழியே நிச் சயம் விரட்டிவிடுவார்."

"பாவம் நமது மன்னர் சத கர்ணி தெற்கில் திரண்டிருக்கும் சோழப் படையை முறியடிப்பாரா அல்லது வடக்கே வச்சிர நாட்டில் அவந்தியைத் தாக்க திரண்டிருக்கும் சுங்கப் படையைத் தாக்குவாரா?" இரண்டு திசைகளிலும்

பெரிய ஆபத்து திரண்டு கொண்டு இருக்கிறது!”

“நீ வியப்படைந்து அதிர்ச்சியடைய மாட்டாய் என்றால் உனக்கு ஒரு இரகசியத்தை சொல்லட்டுமா?”

“என்ன?”

:”அதை நீ யாரிடமும் தெரிவிக்கக் கூடாது!”

“சரி...”

“அதைக் கேட்டால் நீ நிச்சயம் நிம்மதி அடைவாய்?”

“முதலில் நீ செய்தியைக் கூறு. அதன் பிறகு நான் நிம்மதி அடைவேனா அல்லது விரக்தி அடைவேனா என்று பார்க்கலாம்!”

“வச்சிர நாட்டில் சுங்கப் படை அவந்தியை எதிர்த்து திரண்டிருப்பதாகத் தெரிவித்தாயே!”

“ஆமாம் தெரிவித்தேன்!”

https://telegram.me/aedahamlibra

“அவர்களால் ஒரு நாளும் நமது நாட்டிற்கு ஆபத்து ஏற்படாது.”

“ஆபத்து ஏற்படாதா?”

“ஆம்!”

“எப்படி இவ்வளவு உறுதியுடன் கூறுகிறீர்கள்?”

“எனக்கு தெரியும். சுங்கப் படை அவந்திக்கு உதவத்தான் வச்சிர நாட்டில் காத்திருக்கிறது.”

“இது சாத்தியமே இல்லை. சாதவாகன நாடும் சுங்க நாடும் எதிரி நாடுகள். சுங்கன் எப்படி சதர்கணிக்கு உதவுவான்?”

“உனக்கு எதுவுமே தெரியவில்லை!”

“எனக்கா?

“ம்ம்ம்!”

“என்ன எனக்குத் தெரியவில்லை?”

https://telegram.me/aedahamlibra

“சுங்க மன்னருக்கு சாதவாகன மன்னர் சதகர்ணிதான் எதிரி, ஆனால், சாதவாகன படைத்தலைவர் அல்ல!”

“புரியவில்லையே!”

“உனக்கு அரசியல் ஞானம் என்பது துளி கூட இல்லை!”

“வணிகப் பெண்ணிடம் அரசியல் பற்றி வினவினால் எப்படி அய்யா அவள் பதில் அளிப்பாள்?”

“சுங்க நாட்டின் பட்டத்து இளவரசர் சுங்க புத்திரனும் நமது படைத் தலைவர் வஜ்ரபாகுவும் நெருங்கிய நண்பர்கள்.”

“அரசியலைப் பற்றி தாங்கள் நிறைய தெரிந்து வைத்திருக்கிறீர்கள்! அரண்மனையில் பெரிய இடத்தில் தொடர்பு வைத்திருப்பீர்கள் போலிருக்கிறதே!”

https://telegram.me/aedahamlibra

“அவந்தி இளவரசியின் தோழியான உன்னைவிடவுமா எனது தொடர்பு செல்வாக்கு மிகுந்தது?”

“ஆதலால் தான் தாங்கள் வஜ்ர பாகுவின் ஓலையைச் சுமந்து கொண்டு வச்சிர நாட்டிற்கு சென்றுகொண்டு இருக்கிறீர்களா?” என கார்த்திகாவும் பதிலுக்கு சிரித்தபடியே இடையில் மறைத்து வைத்திருந்த குறுவாள் ஒன்றைக் கையில் எடுத்து அவனது புரவியை வழிமறித்தாள்.

சுற்றிலும் பார்வையைச் செலுத்தினாள் விழிகளுக்கு எட்டிய வரை பார்வையில் யாருமே அகப்படவில்லை. இது தான் அவனை தீர்த்துக் கட்ட சரியான தருணம் என நினைத்து அவன் அவளை அறிந்துகொண்ட அதே நேரத்தில் அவளும் எந்த அதிர்ச்சியும் அடையாமல் அவளை வெளிப்படுத்திக் கொண்டாள்.

கையில் குறுவாளினை வைத்துக் கொண்டு, “வசமாகச் சிக்கிக் கொண்

டாய்! நான் என்று அறிந்தும் நீ தனியாக என்னிடம் சிக்கி தவறினை இழைத்து விட்டாயே! இப்போதே உனது உயிரை யும் நீ இழக்கப்போகிறாய்!" என புன்ன கையுடன் தெரிவித்தாள் கார்த்திகா.

"தவறினை இழைத்தது நான் அல்ல பெண்ணே! நீ தான். தனியாக வந்து எங்களிடம் சிக்கிக் கொண்டாய்!"

"உங்களிடமா?"

"ஆம்!" எனத் தெரிவித்த அந்த ஒற்றனை அதிர்ச்சியுடன் நோக்கினாள் கார்த்திகா.

அப்போது அந்த ஒற்றன், "நீ எனது இரண்டு நண்பர்களைக் கொன்ற போதே நான் உன்னைக் கொன்றுபோட்டிருக்க வேண்டும்! உன்னை உயிரோடு விட்டு வைத்தது பெரும் தவறாகிப் போய்விட் டது!" எனத் தெரிவித்தவன் உதடுக ளைக் குவித்து சீழ்க்கை ஒலி எழுப்பி னான்.

அடுத்த கணம் கார்த்திகா மற்றும் அந்த ஒற்றனைச் சூழ்ந்து நான்கு வீரர்கள் வாளுடன் சுற்றி வளைத்தார்கள்.

"என்ன பார்க்கிறாய் கார்த்திகா? நீ எப்படியும் என்னைத் தேடி வருவாய் என்று நான் எதிர்பார்த்தேன். அதற்குத் தான் இந்த முன் எச்சரிக்கை நடவடிக்கை!"

"என்னைப் பார்த்து உனக்கு இவ்வளவு அச்சமா? துணைக்கு நான்கு பேரை அழைத்து வந்திருக்கிறாய்?"

"பயம் அல்ல பெண்ணே! உனது குறுவாள் மற்றும் வாள் வீச்சின் வேகத்தினை அறிவேன் நான். எந்தச் சூழலிலும் நீ தப்பிச் செல்லக் கூடாது. அதற்காகத் தான் இந்த முன் எச்சரிக்கை நடவடிக்கை" என அவன் கூறிக் கொண்டிருந்த போதே கையிலிருந்த குறுவாளினை அவளுக்கு எதிரே நின்ற ஒற்றன் மீது எறிந்தாள். அவள் குறுவாளினை எரிய கையை உயர்த்திய போதே அவன்

தனது புரவியை நகர்த்தினான். எப்போதும் குறி தவறாத அவளது குறுவாட்களில் ஒன்று குறி தவறி கீழே விழுந்தது. மற்றொன்று அவனது தோளின் மீது பாய்ந்தது.

அடுத்த கணம் தனது புரவியைத் தட்டிவிட்டாள் கார்த்திகா. மின்னல் வேகத்தில் பாய்ந்த அவளைச் சூழ்ந்திருந்த மற்ற நான்கு புரவிகளையும் கடந்து செல்லலானாள். கண நேரத்தில் குறுவாளினை எறிந்து தப்பிச் சென்றுவிட்ட கார்த்திகாவைக் கண்ட அந்த ஒற்றன், "அவளை விடாதீர்கள். விரட்டிப் பிடியுங்கள். அவள் எந்தச் சூழலிலும் தப்பிச் செல்லக் கூடாது!" எனக் கட்டளையிட்டான்.

அடுத்த கணம் அவன் அழைத்து வந்திருந்த வீரர்கள் நால்வரும் கார்த்திகாவை விரட்டிச் செல்லலானார்கள். தோளில் பாய்ந்திருந்த குறுவாளினைப் பிடுங்கி எறிந்தவன் குருதி வழிவதைப்

பற்றியும் கவலைப் படாமல் கார்த்தி காவை ஆவேசத்துடன் விரட்டலானான்.

தனது புரவியை விட்டுவிட்டு வேற் றுப் புரவியை நம்பி வந்தது எவ்வ ளவு பெரிய தவறு என்பதை சிறிது நேரம் கழித்தே உணர்ந்தாள் கார்த் திகா. புரவி வேகமாக மூச்சிரைத்து தனது வாயில் நுரையைக் கக்கத் துவங்கியிருந் தது. அதன் வேகமும் நேரத்திற்கு நேரம் குறைந்து கொண்டிருந்தது. கார்த்திகா வின் மன வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் புரவி திணறிக் கொண்டிருந்த போது அவளை நால்வரும் மீண்டும் சுற்றி வளைத்தார்கள்.

ஐந்தாவதாக அந்த ஒற்றனும் அவளை நெருங்கினான்.

கொண்டு வந்திருந்த இரண்டு குறு வாட்களையும் முன்பே பயன்படுத்தியி ருந்தாள். புரவியையும் இனி நம்ப இய லாது. அது எப்போது வேண்டுமானாலும் அவளைக் கைவிட்டுவிடும் நிலைமை.

சுற்றிலும் பார்வையைச் செலுத்தினாள் கார்த்திகா. தப்பிக்க ஏதாவது மார்க்கம் அகப்படுகிறதா என்று பார்வையை நான்கு புறத்திலும் தீவிரமாகச் செலுத்தினாள்.

அப்போது அந்த ஒற்றன், "எங்கு நோக்கினாலும், உன்னால் இனி தப்பிக்க இயலாது. எங்களது நண்பர்களை நீ அனுப்பிய அதே இடத்திற்கு உன்னையும் நாங்கள் அனுப்புகிறோம். சென்று வா!" என அவன் கூறியபடியே புரவியின் மீது அமர்ந்திருந்தபடியே வாளினை உயர்த்தி கார்த்திகாவை நோக்கி வீசினான்.

அப்போது அவர்கள் யாருமே எதிர்பார்த்திருக்கவில்லை. புரவிச் சத்தம் ஒன்று அவர்களை நோக்கி விரைந்து வந்துகொண்டிருந்தது. புரவிச் சத்தம் எழுந்த திசையை அனைவரும் நோக்கினார்கள். சற்று முன் அவர்களைக் கடந்து சென்ற அதே தென்னாட்டு வணிகன்

அவர்களை நோக்கித் திரும்பி வந்து கொண்டிருந்தான்.

கார்த்திகாவைச் சூழ்ந்து நின்ற ஐவரையும் கண்ட அவ்வணிகன், "ஏதாவது பிரச்சனையா?" என வினவினான்.

"இதுவரையில் எதுவும் இல்லை. நீ இங்கேயே நின்றால் நிச்சயம் பிரச்சனை உருவாக வாய்ப்பிருக்கிறது!" எனத் தனது தோளில் வழிந்துகொண்டிருந்த குருதியை துணியால் துடைத்தபடியே தெரிவித்தான் வஜ்ரபாகுவின் ஒற்றன்.

"உன்னிடம் கேட்கவில்லை! அவளிடம் வினவுகிறேன்" எனக் கார்த்திகாவை நோக்கினான் அவன்.

அந்த வணிகனை நோக்கிய கார்த்திகா கண நேரத்தில் அவனை ஆராய்ந்து "இவனால் இந்த நால்வரை எதிர்த்து எப்படி என்னைக் காப்பாற்ற இயலும்?" என எண்ணி வருந்தியபடியே வருத்தத்துடன் நோக்கினாள்.

https://telegram.me/aedahamlibra

அப்போது அங்கு நின்றவர்களில் ஒருவன், "நீ இங்கிருந்து செல்கிறாயா? அல்லது இவளுடன் நீயும் பரலோகத்திற்கு போகிறாயா?" என வினவினான்.

"அப்படியெனில் நீங்கள் ஐவரும் சேர்ந்து ஒரு அபலைப் பெண்ணை கொலை செய்யப் போகிறீர்கள்?"

"ஆமாம்!"

"இது தவறு அல்லவா?"

"இவளை உயிரோடு இங்கிருந்து அனுப்பினால் தான் தவறாக முடியும்!"

ஐவரோடு நின்ற கார்த்திகாவையும் ஏறெடுத்து நோக்கினான் அவ்வணிகன்.

"இவன் இங்கிருந்து செல்ல மாட்டான் போலிருக்கிறது முதலில் இவனைக் கொன்று போடுங்கள். பிறகு இவளை அனுப்பி வைப்போம்!" எனக் கட்டளையிட்டான் வஜ்ரபாகுவின் ஒற்றன்.

https://telegram.me/aedahamlibrary

அவன் கட்டளையிட்டதுதான் தாமதம். அடுத்த கணம் இடையிலிருந்த வாளினை உருவிக் கொண்டு அவனை நோக்கிப் பாய்ந்தனர் இருவர். அவர்கள் புரவியில் பாய்ந்ததை நோக்கிய அவ்வணிகன் எவ்வித பதற்றமும் இல்லாமல் இடையில் வைத்திருந்த இரண்டு குறுவாட்களை எடுத்து அடுத்தடுத்து வீசினான்.

அவனைத் தாக்க வந்த இருவரும் புரவியின் மீதிருந்து தொப்பென்று கீழே விழுந்தனர்.

கையில் இன்னொரு குறுவாளினை எடுத்துக் கொண்ட அவ்வணிகன், “அப்பெண்ணை விடப்போகிறீர்களா? இல்லையா?” என வினவிக் கொண்டிருந்த போதே புரவியின் மீது அமர்ந்திருந்தவர்களில் ஒருவன் கையில் வைத்திருந்த நான்கு விரலிடைக் குறுவாட்களையும் அடுத்தடுத்து எறிந்தான்.

https://telegram.me/aedahamlibra

தன்னை நோக்கி அதிவேகத்தின் வந்துகொண்டிருந்த அளவில் மிகவும் சிறிய அந்தக் குறுவாட்களை கையில் வைத்திருந்த தனது குறுவாளினால் அந்தரத்திலேயே தடுத்து நிறுத்தியிருந்தான் அவ்வணிகன். அடுத்து உடனே கையிலிருந்த குறுவாளினை அவன் மீது வீசி எறிய அவனும் கழுத்தில் குறுவாள் பாய்ந்து கீழே விழுந்தான்.

வணிகனின் அதிவேகத் தாக்கு தலைக் கவனித்த இன்னொருவன், கையில் வைத்திருந்த வாளினை வணிகன் மீது எறிய ஓங்கினான். ஆனால், நடப்பதைப் பார்த்துக் கண்டிருந்த கார்த்திகா, ஓங்கிய அவனது வாளினைப் பற்றி அவனைப் புரவியிலிருந்து கீழே தள்ளினாள். கீழே தள்ளியதோடு மட்டும் அல்லாமல் அவளும் புரவியிலிருந்து குதித்து, அவனது வாளினைப் பிடுங்கி கீழே விழுந்தவனின் கழுத்தினைத் துண்டாக அறுத்து வீசி எறிந்தாள்.

கண்ணிமைக்கும் நேரத்தில் தனது கண்களுக்கு முன்னரே தனது வீரர்கள் நால்வரை இழந்துவிட்ட வஜ்ரபாகுவின் ஒற்றன் மிரண்டு போய் புரவியில் நின்றுகொண்டிருந்தான். அவனை நெருங்கினான் அவ்வணிகன்.

தனது கையில் வைத்திருந்த வாளினை அவனை நோக்கி எறிந்தாள் கார்த்திகா.

அதை லாவகமாகப் பற்றிய வணிகன் வஜ்ரபாகுவின் ஒற்றனின் மார்பின் மீது பாய்ச்சியிருந்தான். பாய்ச்சிய வாளினைக் கீழே இழுக்க அடுத்த கணம் புரவியிலிருந்து தொப்பென்று கீழே விழுந்தான் அவ்வொற்றன்.

கண நேரத்தில் நால்வரைக் கொன்ற அந்த வணிகனை பிரமிப்புடன் நோக்கிய கார்த்திகா, "விரலிடை வாளினை அந்தரத்தில் தடுத்து நிறுத்திய மாவீரரை இன்று தான் நான் காண்கிறேன்!" என் வியப்புடன் தெரிவித்தாள்.

https://telegram.me/aedahamlibra

அவளையும், கீழே இறந்து கிடந்தவர்களையும் பார்த்தபடி நின்றுகொண்டிருந்தான் அவ்வணிகன். அப்போது கார்த்திகா, “குறுவாளினை இவ்வளவு நேர்த்தியாக செலுத்தியவரையும் நான் இதுவரைக் கண்டதில்லை!” எனக் கூறியபடியே கீழே கிடந்த வஜ்ரபாகுவின் ஒற்றனின் ஆடைகளை ஆராய்ந்தாள் கார்த்திகா.

அவளது கைகளுக்கு எதுவுமே கிடைக்காமல் ஆத்திரத்துடன், “எங்கேயோ மறைத்து வைத்துவிட்டான்” என முணுமுணுத்தாள். அப்போது புரவியின் மீது அமர்ந்திருந்த படியே அவ்வணிகன், “இதையா தேடுகிறீர்கள்?” என வினவிய படியே ஒரு ஓலையை அவளிடம் நீட்டினான்.

அதை வாங்கிய கார்த்திகா, “ஆமாம். வணிகரே, இதைத் தான் தேடுகிறேன். மிக்க நன்றி...” எனக் கூறி அதை வாங்கி இடையில் மறைத்துக் கொண்டாள்.

“அந்த ஓலையினால் எந்தப் பயனும் இல்லை!”

“என்ன கூறுகிறீர்கள்?”

“அந்த ஓலையினால் எந்தப் பயனும் இல்லை என்று கூறினேன்!”

“எதற்காக அப்படிக் கூறுகிறீர்கள்?”

“அந்த ஓலை ஏற்கனவே பிரித்து படிக்கப்பட்டு விட்டது! வாய்வழியாக தகவல் நிச்சயம் மற்றவர்கள் மூலம் சென்று சேர்ந்துவிடும்!” என அவன் கூற அவனையே வியப்புடன் நோக்கினாள் கார்த்திகா.

அப்போது அவன் புரவியிலிருந்து திடீரென்று மயங்கி கீழே சரிந்தான். அவன் கீழே விழுவதற்குள் அவனைத் தாங்கிப் பிடித்த கார்த்திகா அருகில் காணப்பட்ட மரத்தின் நிழலில் கிடத்த இழுத்துக் கொண்டு வந்தாள். அவள் அவனைத் தாங்கி அழைத்துக்கொண்டு வந்தபோது அவனது தலையில் அவன்

அணிந்திருந்த தலைப்பாகை அவளது கையேடு சேர்ந்து வந்திருந்தது. அவ னைப் பார்த்ததும் சந்தேகம் கொண்ட கார்த்திகா பாதி மயக்கத்தில் இருந்த வணிகனின் முகத்தில் காணப்பட்ட பெருத்த மீசையை பற்றி இழுத்தாள்.

அதுவும் கையோடு வந்தது. தலைப்பாகை மற்றும் முகத்தை மறைக் கும் அளவிற்குக் காணப்பட்ட மீசை இல்லாத அவனது முகத்தைப் பார்த்த கார்த்திகா, "சோழப் படைத் தலை வர் திருக்கண்ணன்" எனப் பதறியபடியே திருக்கண்ணனின் ஆடையைக் கிழித்து எறிந்து அவனது உடலை பரிசோதித் தாள்.

விரலிடை வாள் ஒன்று அவனது மார்பில் பதிந்திருந்தது. அதிலிருந்து நஞ்சு சிறிது சிறிதாக திருக்கண்ணனின் உடலுக்குள் ஊடுருவி அவனை சிறிது சிறிதாக கொலை செய்ய துவங்கியிருந் தது.

https://telegram.me/aedahamlibra

# 28. கார்த்திகா அளித்த மருந்து

மரத்தடியில் நஞ்சு தோய்த்த விரலிடை வாளினால் தாக்கப்பட்ட திருக்கண்ணன் சிறிது சிறிதாக தனது நினைவினை இழக்கத் துவங்கி மயக்கமடைந்து கொண்டிருந்த போது அவனது மார்பில் பாய்ந்திருந்த விரலிடைக் குறுவாளினை பிடுங்கி எறிந்தாள் கார்த்திகா. அருகில் நின்று கொண்டிருந்த திருக்கண்ணனின் புரவியின் கடிவாளத்தில் மறைத்து வைக்கப் பட்டிருந்த குறுவாளினை எடுத்த கார்த்திகா அவனது மார்பில் குறுவாள் பாய்ந்த

இடத்தைக் கீறினாள். குருதி வழியத் துவங்கியது. வாள் பாய்ந்த இடத்தில் அவளது அழகிய அதரத்தைப் பதித்த வள் உறிஞ்சத் துவங்கினாள்.

நஞ்சானது அவனது உடலுக்குள் முழுவதும் ஊடுருவுவதற்குள் அதைக் குருதியோடு சிறிது சிறிதாக உறிஞ் சிக் கீழே துப்பினாள் கார்த்திகா. தனது சீலை முந்தானையைக் கிழித்தவள் மேற் கொண்டு குருதி வெளியேறாவண்ணம் காயத்தின் மீது இறுகக் கட்டி அவனைத் தோளோடு தூக்கி திருக்கண்ணனின் புரவி மீது கிடத்தினாள். பிறகு, அவளும் அதில் ஏறிக்கொண்டு எதிரிகள் யாரும் பின்தொடர்ந்து கண்டறிய இயலாதவண் ணம் காட்டுப் பாதையில் செலுத்தினாள் புரவியை. ஒரு ஓரைப் பொழுதிற்கு மேல் திருக்கண்ணனை சுமந்துகொண்டு புர வியில் சென்றவள் காட்டில் தனியாகக் காணப்பட்ட குடிசை ஒன்றுக்கு அரு கில் புரவியை நிறுத்தினாள். திருக்கண் ணனை தாங்கிக்கொண்டு குடிசைக்குள்

சென்றவள் கோரைப் பாயைக் கீழே விரித்து அவனைக் கிடத்தினாள்.

அவனை அங்கேயே போட்டுவிட்டு காட்டுக்குள் சென்றவள் கை நிறைய மூலிகைச் செடிகளைப் பறித்து வந்தாள். தாமதிக்காமல் அடுப்பினை மூட்டியவள் இரும்புக் கம்பி ஒன்றை அடுப்பில் வைத்து திருக்கண்ணனின் மார்பில் வாள் பாய்ந்த இடத்தில் ஆழமாக சூடு வைத்தாள். மயக்கத்திலும் அலறினான் திருக்கண்ணன். பிறகு அவள் கொண்டு வந்திருந்த மூலிகைச் செடியின் இலைகளை நன்கு கசக்கி அவனது காயத்தின் மீது ஊற்றியவள் பிறகு மூலிகையை வைத்து கட்டுகட்டி விட்டாள்.

மயக்கத்தில் கிடந்தாலும் திருக்கண்ணன் வலியில் முனகிக்கொண்டிருந்தான். அவனை அங்கேயே போட்டுவிட்டு குடிசையை விட்டு வெளியே வந்தாள் கார்த்திகா. அங்கேயே நின்றுகொண்டிருந்தது திருக்கண்ணனின்

https://telegram.me/aedahamlibrary

புரவி. அதன் அருகில் சென்று அதை நன்கு தடவிக் கொடுத்தாள் கார்த்திகா. பிறகு அதைத் தட்டிவிட்டாள். புரவி அங்கிருந்து நடந்து சென்று பார்வையை விட்டு மறைந்தது.

வனத்தில் சிற்றாற்றின் ஓரம் மரங்கள் நிறைந்த மறைவிடத்தில் அமைக்கப்பட்டிருந்த அந்த குடிசைக்குப் பின்புறமாக நின்றுகொண்டவள் புரவியில் வந்த போது தன்னை யாராவது பின்தொடர்ந்து வந்திருக்கிறார்களா என்று மறைந்து நின்று கண்காணித்தாள். யாரும் பின்தொடரவில்லை என்பதை உறுதி செய்து கொண்டவள் திருக்கண்ணனின் புரவி சென்ற திசையை நோக்கி நடந்தாள். அங்கே மறைந்து நின்று மேய்ந்துகொண்டிருந்த அந்த அற்புதப் புரவி அவளைப் பார்த்து தலையை ஆட்டியது. திருக்கண்ணனைப் போன்று தன்னையும் அது ஏற்றுக்கொண்டு விட்டதை எண்ணி மகிழ்ந்தபடியே அதைக் கடந்து சென்றாள்.

ஒரு ஓரைப் பொழுதிற்குப் பிறகு திரும்பி வந்தவள் கை நிறைய மூலிகைக ளின் வேர்களைப் பிடுங்கி வந்து கல்லில் இடித்து அடுப்பில் வேகவைத்துக் கசா யம் செய்தவள் அதைத் திருக்கண்ண னுக்கு சிறுக சிறுக ஊட்டினாள்.

பொழுது இருட்டியிருந்தது. கார்த் திகா பல வித மூலிகைக் கசாயங்க ளைத் திருக்கண்ணனுக்கு ஊட்டியிருந் தாலும் திருக்கண்ணனின் உடலுக்குள் பாய்ந்த நஞ்சினை எதிர்த்து அவனது உடல் போராடியதால் அவனது உட லானது கொதிக்கத் துவங்கியது. அந் தக் குடிசைக்குள் அடித்த குளிர்ச்சியான வனக் காற்றினால் அவனது உடல் நடுக் கத் துவங்கியது.

பனை ஓலைகளைக் கொண்டு அந்தக் குடிசையைச் சுற்றிலும் காணப் பட்ட திறப்புகளை அடைத்தாள். மாறு வேடம் தரிப்பதற்காக வைத்திருந்த மாற் றுத் துணியையும் அவனுக்குப் போர்த்

https://telegram.me/aedahamlibrary

தினாள். அவனது உடல் நடுக்கம் சற்றே அடங்கியது. ஆனாலும் அவனது உடலின் காய்ச்சல் அடங்கியபாடில்லை. அவள் தயாராக வைத்திருந்த மூலிகைச் செடிகளை கல்லில் இடித்து அவனது நெற்றியில் பூசிப் பத்து போட்டுவிட்டாள். அவனது நாடியைப் பிடித்து பார்த்தாள், அவன் ஆபத்துக் கட்டத்தை இன்னும் தாண்டவில்லை என்பதை அறிந்து கொண்டவள் விளக்கு ஒளியில் தெரிந்த அவனது முகத்தையே வருத்தத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள். அவனை எண்ணி வருந்தியவளின் விழிகளில் கண்ணீர் துளிர்க்க ஆரம்பித்தது.

பெரும் வீரனான திருக்கண்ணனின் இந்த அபாய நிலைக்குத் தான் காரணமாகிவிட்டதை எண்ணி வருத்தத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள். பொழுது கடக்க கடக்க திருக்கண்ணனின் உடல் அதிகமாக நடுங்கத் துவங்கியது. அவனது உடலைத் தொட்டுப் பார்த்தாள். உடல் சில்லிட்டிருந்தது.

நோய் வாய்ப்பட்டு கிடக்கும்போது உடல் வெப்பம் அதிகரித்தால் உடல் எதிர்த்துப் போராடுகிறது என்று அர்த்தம். ஆனால், உடல் வெப்பத்தை இழந்து குளிரத் துவங்கினால் உடல் எதிர்ப்பை நஞ்சு வென்றுவிட்டது என்பதை உணர்ந்த கார்த்திகா அச்சப்பட்டாள். தயாராக வைத்திருந்த கசாயத்தைச் சிறிது சிறிதாக ஊட்டினாள். அவனது உடல் தொடர்ந்து நடுங்கிக்கொண்டிருக்க அவள் அணிந்திருந்த சீலைத் துணியையும் அவிழ்த்து அவனுக்கு போர்த்திவிட்டாள். அவனது உடல் வெப்பம் தொடர்ந்து குறைந்து கொண்டிருந்தது. அவனது மார்பு, உள்ளங்கால், உள்ளங்கை ஆகியவற்றில் சூடு பறக்க தேய்த்துவிட்டாள். பிறகும் பயனில்லாமல் போகவே அவள் தினமும் வணங்கும் சண்டிகாலேசுவரை வணங்கிக் கொண்டு திருக்கண்ணனுக்கு அருகில் படுத்தவள் அவனை இழுத்து

https://telegram.me/aedahamlibra

அணைத்து தனது உடல் வெப்பத்தை அவனுடன் பகிரத் துவங்கினாள்.

பொழுது விரைந்து கடந்து கொண் டிருந்தது. கார்த்திகா அந்த இரவு முழுவ தும் உறங்காமல் திருக்கண்ணனை கவ னித்துக் கொண்டிருந்தாள்.

நாட்கள் மெதுவாக உருண்டு கொண்டிருந்தன.

ஒரு நாள் மாலைப் பொழுதில் திருக்கண்ணன் உடல் வலியுடன் கண் விழித்தான். அவனது முகத்தில் மூடியி ருந்த சீலைத் துணியை விலக்கியவன் விழிகளைத் திறந்தான்.

கார்த்திகா தூணில் சாய்ந்தபடி கண் மூடிக் கொண்டிருந்தாள். அவளது மடியில் தலை வைத்து படுத்திருந்தான் திருக்கண்ணன். சிறிது நேரம் அவளது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த வன் பேச முயன்றான். ஆனால், அவனது நா மேல் அன்னத்தில் ஒட்டிக்கொண்டு

https://telegram.me/aedahamlibra

பேச்சு வரவில்லை. தலையைத் தூக்க முயன்றான். சிறிது கூட அசைக்க இயலவில்லை. கார்த்திகாவின் இடை யைச் சுற்றி அணைத்துக் கொண்டிருந்த அவனது கரத்தையும் அவனால் நகர்த்த இயலவில்லை. சிறிது நேரம் சுயநினை வுடன் படுத்திருந்தவன் மீண்டும் மயங்கி னான்.

அடுத்த நாள் திருக்கண்ணன் கண் விழித்தபோது கார்த்திகா ஈரத் துணியி னால் அவனது உடலைத் துடைத்துக் கொண்டிருந்தாள். சிறிது நேரம் கவலை யுடன் காணப்பட்ட அவளது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தவன், "என்னைக் காப்பாற்றியதற்கு மிகவும் நன்றி கார்த் திகா" என ஒவ்வொரு சொற்களாக உதிர்த்தான் திருக்கண்ணன்.

அவன் பேசியதைக் கேட்டவள் மகிழ்ச்சியுடனே, "ஒரு வழியாகக் கண் விழித்துவிட்டீர்களா? சண்டிகாலேசுவர ரின் அருளினால் நீங்கள் பிழைத்து விட்

டீர்கள்!" எனக் கூறியபடியே கசாயத்தை அவனுக்கு ஊட்டினாள்.

கசப்பு நிறைந்த அந்த மூலிகைக் கசாயத்தை அவன் பருகியபடியே, "என்னைக் காப்பாற்றியது சண்டிகாலேசுவரரின் அருள் கிடையாது கார்த்திகா. இந்த மருந்தும், நீயும் தான்!" எனக் கூறியபடியே விழுங்க இயலாமல் விழுங்கிய திருக்கண்ணன், "இதை மனிதன் பருகுவானா?" எனக் கூறியபடியே பாதியை விழுங்கி மீதியைத் துப்பினான்.

அவனது செயலைப் பார்த்தவள் புன்னகையுடன், "இந்தக் கசாயம்தான் உங்களை இத்தனை நாட்களாக காப்பாற்றிக் கொண்டு இருக்கிறது!" என்றாள்.

"இத்தனை நாட்களாக என்றால்?"

"நாளை பொழுது விடிந்தால் பத்தாவது நாள்!"

"பத்து நாட்களாகவா நான் இங்கு இருக்கிறேன்?"

"நீங்கள் மட்டும் இல்லை. நானும் இங்குதான் உங்களுடனே இருக்கிறேன்!"

"இது எந்த இடம்! உஞ்சை மாளிகையைப் போன்று இது காணப்படவில்லையே?"

"நாம் இப்போது உஞ்சையில் இல்லை."

"பிறகு?"

"உஞ்சையின் எல்லையைத் தாண்டி யாராலும் கண்டறிய இயலாதபடி வெகு தொலைவில் இருக்கிறோம்!"

கார்த்திகாவின் தாங்கலில் திருக்கண்ணன் எழுந்து நிற்க முயன்றான். ஆனால் அவனது கால்கள் இரண்டும் நஞ்சினால் மறுத்துப் போய் இருக்க அடுத்த அடியை எடுத்து வைக்க இயலாமல் தொப்பென்று கீழே விழுந்தான். அவன் விழுவதற்குள் பிடித்துக்கொண்ட கார்த்திகா அவனைத் தாங்கலாகவே

https://telegram.me/aedahamlibrary

நடக்க வைத்தபடியே அந்தக் குடிசை யைவிட்டு வெளியே அழைத்துவந்தாள்.

கார்த்திகாவின் துணையுடனே நடந்தவன், “உனக்கு நான் பெரிதும் இடையூறாக மாறிவிட்டேன்!” என வருத் தத்துடன் தெரிவித்தான்.

“என் உயிரைக் காக்க உங்கள் உயிரையே இழக்கத் துணிந்த உங்க ளுக்கு இதைக் கூட நான் செய்யமாட் டேனா?”

“உஞ்சைக்குத் தகவல் தெரிவிக் கப்பட்டுவிட்டதா?” என வினவினான் திருக்கண்ணன்.

“இல்லை!”

“ஏன் தெரிவிக்கவில்லை?”

அவள் அமைதியாக காணப்பட் டாள்.

“என்னை நீ எதற்காக உஞ் சைக்கு அழைத்துச் செல்லவில்லை?

நாம் எதற்கு இந்த வனத்திலேயே இருக்கிறோம்?”

“நம்மைத் தேடி இந்த வனத்தைச் சுற்றிலும் வஜ்ரபாகுவின் ஒற்றர்கள் அலைந்துகொண்டிருக்கிறார்கள். உங்களது உடல் ஆபத்தான நிலையில் இருக்கும்போது உங்களை அங்கு அழைத்துச் செல்வது பெரும் ஆபத்து என்று தோன்றியது. அதுமட்டுமல்லாமல்...?”

“வேறு என்ன காரணம்?”

“உங்களுக்கு என்னைத் தவிர வேறு யாரும் எந்தப் பணிவிடையையும் செய்யக்கூடாது! ஆதலால் தான் உங்களை யாராலும் அறிய இயலாத இடத்திற்கு அழைத்து வந்துவிட்டேன்.”

அவளை வியப்புடன் நோக்கினான் திருக்கண்ணன். அவளும் அவனது விழிகளையே நோக்கினாள்.

அப்போது திருக்கண்ணன், “எனது வாழ்விலும் வசந்தம் விரைவில் வீசும்

என்று எதிர்பார்த்தேன். ஆனால், அது இவ்வளவு எளிதில் அதுவும் நான் கவனிக்காமல் தவறவிட்ட ஒரு விடம் தோய்த்த வாளினால் ஏற்படும் என நான் சிறிதும் எதிர்பார்க்கவில்லை."

அவன் கூறியதைக் கேட்டு புன்னகைத்தாள் கார்த்திகா.

"கார்த்திகா, இதைப் போன்றே இந்தச் சொச்சப் பொழுது முழுவதும் புண் சிரிப்பினை சிந்திக்கொண்டிரு. விடிவதற்குள் இழந்த எனது பலத்தை முழுவதுமாக அடைந்துவிடுவேன்!" என அவளது விழிகளை நோக்கியபடியே தெரிவித்தான் திருக்கண்ணன்.

அவன் தெரிவித்ததைக் கேட்டு நாணம் கொண்டாள் கார்த்திகா. அதைப் பார்த்தவன், "உனக்கு வெட்கமும் வருமா?" என வியப்புடன் வினவினான்.

"ஏன் இப்படியொரு கேள்வியைக் கேட்கிறீர்கள்?"

https://telegram.me/aedahamlibra

“அன்று ஒருவனது வாளினைப் பிடுங்கி அவனது கழுத்தினை அறுத்து தனியாக எறிந்தாயே, அப்போது ஒருக ணம் அதிர்ச்சியாகவே இருந்தது எனக்கு. அன்றைய கோபம் மற்றும் இன்றைய வெட்கம் என இரண்டும் முரணாகத் தோன்றுகிறது எனக்கு!”

அப்போதும் அவள் பதிலுக்கு எது வும் கூறாமல் அமைதியாகவே நடந்தாள். சிறிது தூரம் சென்றவள் அவனை மட்டும் தனியாக நடக்க விட்டு அவள் பின்தங்கிக் கொண்டாள். திருக்கண்ணன் மெல்ல நடந்துகொண்டிருந்தான்.

அருகில் ஓடிக் கொண்டிருந்த சிற் றாற்றின் குளிர்ந்த நீரில் விழுந்து தனது உடலைக் கழுவிக் கொண்டவன் அந்த ஆற்றங்கரையிலேயே அமர்ந்து நதி நீரை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தான் திருக்கண்ணன்.

திருக்கண்ணனுக்கு வேண்டிய மருந்துப் பொருட்களை தயார்செய்து

விட்டு அவனைத் தேடி வந்தாள் கார்த்திகா. நதியையே விரக்தியுடன் பார்த்துக் கொண்டிருந்த திருக்கண்ணனின் அருகில் அமர்ந்தாள். அவளிடம், "எனது உடல் எப்போது தயார் ஆகும்?" என வினவினான்.

"இன்னும் சில தினங்கள் ஆகும்!"

"இதற்கு மேலும் என்னால் இங்கு பொழுதைக் கழிக்க இயலாது?"

"உங்களது மயக்கமே இன்றுதான் நீங்கியிருக்கிறது. நிச்சயம் உங்களுக்கு ஓய்வு தேவை!"

"நாளை நாம் இங்கிருந்து புறப்பட வேண்டும். நீ என்ன மருந்தினை அளித்தாலும் நான் பருகுகிறேன். அதற்குள் இழந்த என் உடலின் பலம் திரும்பி வந்து விட வேண்டும்!"

"இப்போது என்ன அவசரம்?"

https://telegram.me/aedahamlibra

"அங்கே எனது அரசரும், எனது படைத் தலைவரும் என்னைத் தேடிக் கொண்டு இருப்பார்கள்! நான் விரைந்து செல்லவேண்டும்!"

"அரசரா?"

"ஆம்!"

"யாரைக் குறிப்பிடுகிறீர்கள்? கரிகா லரையா?"

"ஆம்!"

"அவர்தான் அவந்தியில் இல் லையே!"

"யார் சொன்னது?"

"அன்று மாளிகையைத் திறந்த போது அவர் அங்கு இல்லையே!"

திருக்கண்ணன் சிரித்தபடியே, "அவர் அங்குதான் இருந்தார். இப்போ தும் அங்குதான் இருக்கிறார்" என்றான்.

https://telegram.me/aedahamlibra

வியப்புடன் சிறிது நேரம் அமைதியாக அமர்ந்திருந்த கார்த்திகா பிறகு, “சரி... உங்களது உடல் எப்படி இருந்தாலும் நாளை நாம் இங்கிருந்து புறப்பட்டுவிடலாம். பொழுது மேற்கில் விழுந்துவிட்டது. குடிலுக்கு விரைந்து வாருங்கள். நான் காத்திருக்கிறேன்” எனக் கூறியபடியே சிந்தனையுடன் எழுந்து சென்றாள்.

குடிலுக்குச் சென்றான் திருக்கண்ணன். கார்த்திகா மட்டும் விரிக்கப்பட்டிருந்த பாயின் ஓரத்தில் அமர்ந்துகொண்டு அவனையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அகண்ட விழிகள், குழுமியும் செழித்தும் வளர்ந்திருந்த குழி விழுந்திருந்த அவளது கன்னம், திரண்ட மார்பு, சிவந்து கனிந்து காணப்பட்ட அவளது இதழ்கள், சிறுத்த இடை, அவள் அமர்ந்திருந்த நிலையில் இணைந்து கிடந்த வழவழப்பான வாழைக் கால்கள், அவற்றின் கூடுதலால் இணைந்து கிடந்த

அவளது சௌந்தர்யம் அந்த நிலையிலும் அவனை வா வா என்று அழைத்ததைப் போன்று உணர்ந்த திருக்கண்ணன் கதிகலங்கத் துவங்கினான். கலங்கிய எண்ணத்துடன் அவளை நோக்கியவன், “தயார் செய்த மருந்து எங்கே? நீ மட்டும் தனியாக அமர்ந்திருக்கிறாய்?” என வினவினான்.

“அதற்கெல்லாம் இனி அவசியமில்லை!”

“அவசியமில்லையா?”

“ஆம்!”

“ஏன்?”

“வேறு மருந்து ஒன்றினை அளிக்க சித்தமாகிவிட்டேன்! ஆதலால் இனி அவை பயன் அற்றவை!”

“பயன் அற்றவையா?”

“ஆம்!”

"எந்த மருந்தினை நீ பயன் அற்றது என்று குறிப்பிடுகிறாய்?"

"இத்தனை நாட்களாக தாங்கள் பருகிக் கொண்டிருந்தீர்களே, அதைத் தான் பயன் அற்றது என்று கூறுகிறேன்!"

"அப்படி எனில் புது மருந்து உனக் குக் கிடைத்துவிட்டதா?"

"ம்ம்ம்!"

"எங்கிருந்து தயார் செய்தாய்?"

"அதை எங்கிருந்தும் நான் தயார் செய்யவில்லை."

"பிறகு?"

"அது இத்தனை நாட்களாக என் னிடம்தான் இருந்தது!"

"நான் அடிபட்ட அன்றே அதை எதற்காக நீ எனக்குக் கொடுக்க வில்லை."

https://telegram.me/aedahamlibra

"அப்போது அதை நான் தங்க ளுக்கு வழங்கியிருந்தாலும், அதை உங் களால் எடுத்திருக்க இயலாது!"

"இப்போது?"

"நீங்கள் தயார் ஆகிவிட்டீர்கள்!"

"இப்போது நான் எதற்கு தயார் ஆகிவிட்டேன்?"

"நான் அளிக்கப் போகும் மருந் தினைத் தாங்கள் எடுத்துக் கொள்வ தற்கு?"

அவளது பேச்சு திடீரென்று விசித் திரமாக மாறிவிட்டதைக் கண்ட திருக் கண்ணன் திகைப்புடன் அவளை நோக் கியபடியே அவளுக்கு முன் அமர்ந்தான். அப்போது அந்த அறைக்குள் வேகமாக வீசிய குளிர்ந்த காற்று எரிந்துகொண் டிருந்த விளக்கினை அணைக்க திடீ ரென்று அந்தக் குடிலை இருள் கவ் வியது. இருள் கவ்விய அடுத்த கணம் திருக்கண்ணனை இழுத்து மடியில்

https://telegram.me/aedahamlibra

கிடத்திய கார்த்திகா அவனது இதழ்க ளில் முத்தம் ஒன்றைப் பதித்தாள்.

அந்த எதிர்பாராத முத்தத்தில் திணறிப்போனான் திருக்கண்ணன். நெடு நேரம் கழித்து அவனது இதழ்களிலி ருந்து தனது இதழ்களைப் பிரித்தாள் கார்த்திகா. அப்போது அவளது காதோ ரம், “நீ கூறிய மாற்று மருந்து இது தானா?” என வினவினான்.

“இது இல்லை!” எனக் கூறியவள் அவனைக் கீழே தள்ளி அவன் மீது படர்ந்தாள். அவள் தனது ஆடைகள் ஒவ்வொன்றாகக் களைந்து திருக்கண் ணனுக்கு எந்த மருந்தை அளித்தால் அவன் இழந்த தனது பலத்தை மீண்டும் அடைவானோ அதை அவன் திகட்டத் திகட்ட அளிக்கத் துவங்கினாள் கார்த் திகா.

அவனும் சிறிது சிறிதாக தனது பலத்தை ஒரே இரவில் திரும்பப் பெறத் துவங்கினான்.

அடுத்த நாள் கண் விழித்தபோது பெரும் உற்சாகத்துடன் கண் விழித்தான் திருக்கண்ணன். கார்த்திகா என்றும் இல்லாமல் பெரும் நாணத்துடன் காணப்பட்டாள். உற்சாகத்துடன் எழுந்தவன் காலைப் பொழுதிலேயே நீராடி விட்டு தயார் ஆகி சீழ்க்கை ஒலி எழுப்பினான். அவனது குரலைக் கேட்ட அந்த அற்புத வெண்ணிறப் புரவி திருக்கண்ணனை நோக்கி ஓடிவந்தது. பல நாட்களுக்குப் பிறகு அவனைக் கண்டதும் அப்புரவி வாஞ்சையுடன் அவனது முகத்தருகே தனது முகத்தைக் கொண்டு சென்றது. திருக்கண்ணனும் அதைத் தனது தோளோடு சாய்த்துக் கொண்டு அதைத் தடவிக் கொடுத்தான். பிறகு அதன் முகம், பிடரி ஆகியவற்றைத் தடவிக் கொடுத்தவன் அதன் வாளினைப் பிடித்து முறுக்கியபடியே ஒரே தாவலாக அப்புரவி மீது தாவி அமர்ந்தான்.

அவன் தாவியதைக் கண்டு கார்த்திகா அதிசயத்துடன் நின்றவள், “நீங்

https://telegram.me/aedahamlibra

கள் மிகவும் கொடுத்து வைத்தவர்" எனத் தெரிவித்தாள்.

"ஆமாம், நான் கொடுத்துவைத்தவன் தான்!" எனக் கார்த்திகாவின் விழிகளைப் பார்த்தபடியே தெரிவித்தான் திருக்கண்ணன்.

"நான் கூறுவது நீங்கள் நினைக்கும் காரணம் இல்லை."

"வேறு எந்தக் காரணத்திற்காக நான் கொடுத்துவைத்தவன் என்று குறிப்பிடுகிறாய்?"

"இந்தப் புரவியை நீங்கள் நண்பனாக பெற்றமைக்காக!"

"இந்த வெண்ணிறப் புரவி எனது படைத் தலைவருடையது. இருவரைக் கடந்து மூன்றாவதாக இதை நான் பயன் படுத்துகிறேன். எனது படைத்தலைவர் செங்குவீரரைக் காணாத துயரில் இதன் மீது ஏறிய என்னைக் கீழே தள்ளி விட்டது. இப்போது இது எனது நெருங்

https://telegram.me/aedahamlibra

கிய நண்பன். பல முறை இது எனது உயிரைக் காத்திருக்கிறது. நான் மனதில் நினைப்பதை செயல்படுத்திவிடும் இப்பு ரவி. அந்த விதத்தில் நான் கொடுத்து வைத்தவன் தான்!" எனக் கூறியவன் புர வியைத் தட்டி விட்டான். ஒரே பாய்ச்ச லாகப் பாய்ந்தது அப்புரவி. நீண்ட நாள் கழித்து புரவியின் மீது ஏறியவன் பெரும் உற்சாகத்துடன் கார்த்திகாவை இரண்டு முறை சுற்றிவந்தான். பிறகு திரும்பி வந்த திருக்கண்ணன் புரவியிலிருந்து சற்றே குனிந்து நின்றுகொண்டிருந்த கார்த்தி காவைத் தூக்கி அவனது மடியில் அம ரவைத்துக் கொண்டு புரவியைத் தட்டி விட்டான். புரவி இருவரையும் சுமந்து கொண்டு கம்பீரமாகச் சென்றுகொண்டி ருந்தது.

அவனது மடியில் அமர்ந்திருந்த கார்த்திகா, "நாம் இருவரும் இப்படியே தான் உஞ்சைக்குள் செல்லப் போகி றோமா?" என நாணத்துடன் வினவி னாள்.

வழியின் இரண்டு புறங்களிலும் கூர்மையாகப் பார்வையைச் செலுத்திக் கொண்டே, "ம்ம்ம்!" என மட்டும் பதில ளித்தான் திருக்கண்ணன்.

"வஜ்ரபாகுவின் ஒற்றர்கள் நம்மைப் பார்த்துவிட்டால்!"

"அவர்களையும் ஒரு கை பார்த்து விடுகிறேன்" எனக் கூறியவன் இடையில் வைத்திருந்த குறுவாட்களைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

"நேற்று நடக்கவே சிரமப்பட்டவர் இன்று கூறும் வீர வசனத்தைக் கேட்டால் விசித்திரமாக இருக்கிறது படைத் தலை வரே!" எனச் சிரிப்புடன் தெரிவித்தாள் கார்த்திகா.

"இந்த பலம், வீரம் அனைத்தை யும் மீட்டெடுத்து மீண்டும் வழங்கியவள் நீ தானே!" எனக் கூறியவன் அந்த நேரத்தி லும் அவளது இதழ்களில் முத்தம் ஒன் றைப் பதிக்கவே செய்தான்.

இருவரும் வனப் பாதையைக் கடந்து பொதுப் பாதைக்குள் நுழைந்தார் கள். இருவருமே எச்சரிக்கை அடைந் தார்கள். காலைப் பொழுதாகையால் முதன்மைச் சாலை வெறிச்சோடிப்போய் காணப்பட்டது. இருவரும் உஞ்சையை நோக்கி சென்றுகொண்டிருந்தார்கள்.

அப்போது திடீரென்று அவர்களை மூன்று புரவிகள் வழிமறித்தன. திருக் கண்ணன் எதிரில் நிற்பவர்களையே பார்த்துக் கொண்டிருக்க கார்த்திகா, மறைத்து வைத்திருந்த குறுவாளை நோக்கி அவளது வலது கரத்தைக் கொண்டு சென்றாள்.

அவளது கரத்தைத் தடுத்த திருக் கண்ணன், "அவசரம் வேண்டாம். பொறு மையாக இரு!" எனக் கட்டளையிட்டான்.

"எதிரிகள் சூழ்ந்திருக்க இவர் எதற் காகப் பொறுமை காக்கச் சொல்கிறார்?" என எண்ணிய கார்த்திகா குழப்பத்தில் காணப்பட்டபோது அவனை இடைமறித்

தவர்களில் ஒருவன், "திருக்கண்ணா, உன்னை இதற்காகத் தானா கார்த்திகாவைப் பின்தொடரச் சொல்லி வேளக்காரப் படைத்தலைவர் கட்டளையிட்டார்?" எனக் கோபத்துடன் வினவினான்.

அந்தக் குரலைக் கேட்டதுமே பதறிய திருக்கண்ணன் புரவியிலிருந்து குதித்தான். அவன் கீழே குதிப்பதற்குள் புரவியில் அமர்ந்திருந்த மற்றொருவன், "திருக்கண்ணா... உன்னை நான் கார்த்திகாவை தொலைவிலிருந்து கண்காணிக்கச் சொல்லித்தானே கட்டளையிட்டேன். ஆனால், நீ அவளுடன் வரும் நிலையைப் பார்த்தால்..." எனக் கூறிய திவ்யன் வாக்கியத்தை பாதியிலேயே விழுங்கி, "தகவல் அளித்து விட்டாவது சென்றிருக்கலாம் அல்லவா? எங்களை கடந்த பத்து தினங்களாக இந்தக் காடு, மலை என எங்கும் திரியவைத்து விட்டாயே?" எனச் சற்றே கோபத்துடன் வினவினான்.

https://telegram.me/aedahamlibra

அப்போது திருக்கண்ணன் எதையோ கூற வாயைத் திறந்தான். ஆனால், அதற்குள் குறுக்கிட்ட கார்த்திகா, “அவர் மீது எந்தத் தவறும் இல்லை. அவரை…” என அவள் கூறிக்கொண்டிருந்த போதே இடைமறித்த திவ்யன், “திருக்கண்ணா, தக்க சமயத்தில் முன் நிற்கும் தக்க துணையைத் தான் தேர்ந்தெடுத்திருக்கிறாய்!” எனத் தெரிவித்தான்.

புரவியில் அமர்ந்திருப்பது திவ்யன் தான் என அறியாத கார்த்திகா எதையோ பதிலுக்குக் கூற வாயெடுத்தாள். ஆனால் அதற்குள் அவளது இடையைப் பற்றி அவளை இழுத்த திருக்கண்ணன், “சற்று நேரம் நீ அமைதியாக இரு!” என அவளிடம் சற்றே கோபத்துடன் கூறியவன் திவ்யனின் மெய்க் காவல் தலைவனை நோக்கி, “பேரரசே, தகவல் அளிக்க முடியாத சூழ்நிலை. நேற்று காலையில்தான் நான் கண் விழித்தேன். மார்பில் நஞ்சு வாள் பாய்ந்துவிட்டது. இவள் தான்

https://telegram.me/aedahamlibra

என்னைக் காப்பாற்றினாள். புரவி ஏற முடிந்த உடனே உங்களைத் தேடி வந்துகொண்டிருக்கிறேன். உங்களது மெய்க் காவல் தலைவனான என்னையே தாங்கள் தேடி வரும் நிலைமையை உருவாக்கியமைக்கு என்னை மன்னித்துக்கொள்ளுங்கள்" எனத் தெரிவித்தவன் தரையில் ஒரு காலை ஊன்றி மண்டியிட்டு தலையைத் தாழ்த்தினான்.

அவன் பேரரசே என அழைத்த அடுத்த கணம் புரவியில் அமர்ந்திருந்த அவந்திகாவும் சட்டென்று புரவியிலிருந்து குதித்துவிட்டிருந்தாள். கார்த்திகா சற்றே நடுக்கத்துடன் நடக்கும் நிகழ்வுகளைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"உடல் நிலை இப்போது எப்படி இருக்கிறது மெய்க்காவலரே? அபாயம் ஏதும் இருக்கிறதா?"

"அபாய நிலையைக் கடந்து வந்துவிட்டேன் அரசே! இனி எந்தக் கவலையும் இல்லை!"

“ஆதலால் தான் உங்கள் இருவரையும் கொலை செய்ய வெறியுடன் சுற்றிக் கொண்டிருக்கும் வஜ்ரபாகுவின் ஒற்றர்கள் நிரம்பிய இந்தக் காட்டுப் பாதையில் அவளை மடியில் ஏற்றிக்கொண்டு வந்து கொண்டிருக்கிறாயா?”

திருக்கண்ணன் எந்தப்பதிலையும் அளிக்க முடியாமல் அமைதியாகத் தரையைப் பார்த்தபடி நின்றுகொண்டிருந்தான்.

அப்போது திவ்யன், “திருக்கண்ணா... வந்த காரியம் என்ன ஆனது? வஜ்ரபாகு அனுப்பிய ஒற்றனை தீர்த்துக் கட்டி விட்டாயா?”

“அவனை நான் கொன்றுவிட்டேன் தலைவரே?”

“ஓலையைக் கைப்பற்றிக் கொண்டாய் தானே?”

“கைப்பற்றிவிட்டேன்...” என அவன் கூறியபோதே, “ஓலையில் என்ன எழுதி

யிருந்தது?” என அவன் வினவ வஜ்ரபாகுவின் ஒற்றனிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஓலையை திவ்யனிடம் அளித்தான்.

அதை வாங்கிய திவ்யன் வாசித்துக் கொண்டிருந்த போதே, “ஓலையை நான் கைப்பற்றும் முன்னரே அது பிரிக்கப்பட்டு இருந்தது தலைவரே! ஒற்றனை நான் கொன்றுவிட்டேன். இருந்தாலும் தகவல் வாய் வழியாக சுங்கனை சேர்ந்திருக்கும் என்று கருதுகிறேன்” எனத் தெரிவித்தான்.

“கிடைக்கும் தகவல்கள் அனைத்தும் ஒன்றுக்கொன்று முரண்பாடாக அல்லவா இருக்கிறது?”

“கடந்த சில நாட்களாக உஞ்சையில் அரசர் சதகர்ணியின் உத்தரவும் இல்லாமல் வீரர்கள் வந்துகொண்டு இருக்கிறார்கள். ஒரு படைப் பிரிவு சுங்கப் படையை எதிர்க்க வந்திருக்கிறோம் என்று உஞ்சையின் கிழக்கே நிலைகொண்டிருக்கிறது. இந்த நிலையில் வஜ்

ரபாகு எதற்காக சுங்கனை வரவழைத்தி ருக்கிறான். அதுவும் நான் உஞ்சையில் இருப்பதை அறிந்தும்!" என வினவினான் திவ்யன்.

திவ்யன் வைத்திருந்த ஓலையை வாங்கிப் படித்த கரிகாலர், "சுங்கனை உடனே அழைத்திருக்கிறான். சுங்கன் என்றிருப்பது சுங்கபுத்திரனைக் குறிக்கி றதா அல்லது சுங்கப் படையைக் குறிக்கி றதா?" என வினவினார்.

அதுவரை அமைதியாக நின்ற கார்த்திகா, "சோழப் பேரரசர் அனுமதி அளிக்கும் பட்சத்தில்..." எனத் தெரிவித் தவள் அமைதியானாள்.

"என்ன கார்த்திகா நீ கூற விழைகி றாய்?"

"இன்னும் இரண்டு கிழமை கழித்து அவந்தியை சாதவாகன அரசர் குனாலா சுங்கர்களிடமிருந்து கைப்பற்றிய நாள் வர இருக்கிறது. அன்று வீரர்கள் அனைவ

ரும் ஒருவருக்கொருவர் சண்டையிட்டு தங்களது வீரத்தை வெளிப்படுத்துவர். ஒருவேளை, அதை மையமாக வைத்து தான் வஜ்ரபாகு திட்டம் தீட்டுகிறாரோ?" என வினவினாள்.

கரிகாலரும், திவ்யனும் ஒரே நேரத்தில் அதுவரை எதுவும் பேசாமல் அமைதியாக நின்ற அவந்திகாவை நோக்கினார்கள். அப்போது அவந்திகா, "ஆமாம் பேரரசே... இவள் கூறுவது உண்மை தான்" எனத் தயக்கத்துடன் தெரிவித்தாள்.

"சரி..." எனக் கூறிய கரிகாலர், பணிவுடன் நின்ற திருக்கண்ணனையும் அவனுடன் நெருக்கமாக நின்று கொண்டிருந்த கார்த்திகாவையும் கண்டவர், "எனது படைத் தலைவர் செங்கு வீரர் மட்டுமே நமது வாழ்வியல் இலக்கணமான வீரம் மற்றும் காதல் என இரண்டிலும் சிறந்து விளங்குகிறார் என எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால்,

மற்றவர்களும் காதலில் சளைத்தவர்கள் அல்ல என்பதை ஒவ்வொருவராக நிரூபித்துக் கொண்டிருக்கிறீர்கள்! மகிழ்ச்சியாக இருக்கிறது திருக்கண்ணா" என முதலில் திவ்யனையும் பிறகு திருக்கண்ணனையும் பார்த்தபடி கூறியவர் புரவியைத் தட்டிவிட்டார்.

அப்போது அவந்திகா கார்த்திகாவிடம் வந்தவள், "உன்னை அவந்தியில் தனியாக விட்டுவிட்டு நான் மட்டும் சோழப் படைத்தலைவருடன் புகாருக்கு எப்படிச் செல்வது என சிந்தித்துக் கொண்டிருந்தேன். நீயும் என்னுடன் துணைக்கு வரப்போகிறாய் என நினைக்கும்போதே எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது கார்த்திகா" என அவந்திகா கூறிக் கொண்டிருந்த போதே குறுக்கிட்ட திவ்யன், "உடனே இருவரும் உஞ்சைக்குத் திரும்பிச் செல்லுங்கள்!" என அவந்திகா மற்றும் கார்த்திகாவிடம் தெரிவித்தான்.

https://telegram.me/aedahamlibrary

அவந்திகா, “நீங்கள் இருவரும்?” என வினவினாள்.

“கரிகாலர் ஏதோ திட்டம் வகுத்துவிட்டார். அவரைக் காக்க வைப்பது அவ்வளவு நல்லது அல்ல” நாங்கள் உடனே செல்ல வேண்டும்” என அவளிடம் தெரிவித்தவன், “திருக்கண்ணா... நீ புறப்படு! நமக்கு பணிகள் காத்திருக்கின்றன...” எனக் கட்டளையிட்டுவிட்டு கரிகாலரைப் பின்தொடர்ந்து புரவியில் மின்னல் வேகத்தில் செல்லலானான்.

உடனே, இருவரிடமும் விடை பெற்ற திருக்கண்ணன் திவ்யனுடன் விரையலானான். இரண்டு தோழிகளும் மூவரும் புழுதி பறக்க செல்வதைப் பார்த்துக் கொண்டே நின்றிருந்தார்கள்.

https://telegram.me/aedahamlibra

# 29. வஜ்ரபாகு வகுத்த வியூகம்

சாதவாகன மன்னர் சதகர்ணிக்கு எதிராக சுங்க நாட்டிற்கும், வஜ்ரபாகுவின் விசுவாசிகளுக்கும் செய்திகளைக் கொண்டுசென்ற ஒற்றர்கள் உஞ்சையை விட்டு அகலுமுன்னே அவர்கள் கொண்டு சென்ற செய்திகளை அறிந்துகொண்டு அனைவரையும் தீர்த்துக் கட்டிக் கொண்டிருந்தாள் கார்த்திகா. ஒற்றர்களாக வஜ்ரபாகுவையும், பலதேவனையும் சந்திக்க வந்த அனைவரையும் கன்னி வைத்துக் கொலை செய்துகொண்டிருந்த கார்த்தி

காவை என்றாவது ஒரு நாள் அகப்பட
வைத்து பழி தீர்த்துவிட வேண்டும் என
எண்ணி துரிதமாகத் திட்டம் ஒன்றை தீட்
டினான் அவந்தி நதிக்கரையில் வஜ்ர
பாகுவிடம் ஓலையைப் பெற்றுக்கொண்ட
ஒற்றன். ஓலையைப் பெற்றுக்கொண்ட
அடுத்த கணமே அந்த ஓலையை வாசித்
தவன் தனது சேவகன் ஒருவனிடம் தக
வலைத் தெரிவித்து அவனை அவந்தி
எல்லையில் வச்சிர நாட்டில் நிலை
கொண்டிருக்கும் சுங்க இளவரசன் சுங்
கமித்திரனைத் தேடி இலச்சினை மோதி
ரத்துடன் அனுப்பி வைத்திருந்தான். வஜ்
ரபாகுவின் செய்தியை அறிந்துகொண்ட
அடுத்த கணமே அவனுடைய படைத்
தலைவர்களுக்கு உரிய கட்டளையைப்
பிறப்பித்துவிட்டு மாறுவேடத்தில் புறப்
பட்ட சுங்கமித்திரன் நடு சாமத்தில் வஜ்ர
பாகு மாளிகைக்குள் சுரங்கத்தின் வழியே
நுழைந்திருந்தான்.

அவனை வரவேற்றனர் அவனது இரண்டு நண்பர்களான வஜ்ரபாகுவும், பலதேவனும். அவனைத் தனது அறைக்கு அழைத்துச் சென்ற வஜ்ரபாகு, “நண்பா, உன்னை எதிர்பார்த்தேன். ஆனால், இவ்வளவு விரைவில் எதிர் பார்க்கவில்லை” எனத் தெரிவித்தான்.

"நம் மூவரையும் கொலை செய்வேன் என்று பகிரங்கமாக அறைகூவல் விடுத்த நமது பொது எதிரி அவந்தியில் திரிந்துகொண்டிருக்கிறான் என்பதை அறிந்தபிறகும் என்னால் எப்படி அங்கு வாளாவிருக்க முடியும்?" என வஜ்ரபாகுவிடம் தெரிவித்த சுங்கன் பலதேவனை நோக்கி, "பலதேவா, உன்னை அவன் மாளிகையில் சந்தித்த பிறகு அவனை நீ எங்காவது சந்தித்தாயா?" என வினவினான்.

"இல்லை நண்பா..."

"எங்கே மறைந்திருப்பான்?"

"உஞ்சையில் அவன் இல்லை! அது மட்டும் உறுதி. இருந்திருந்தால் இந்நேரம் நமது ஒற்றர்களின் விழிகளில் அவன் நிச்சயம் அகப்பட்டிருப்பான்!"

"அனைத்து இடங்களிலும் தேடியாகிவிட்டதா?"

"தேடிவிட்டோம்!"

"அவந்திகாவின் மாளிகையில்?"

"அங்கு... அங்கு..." என வஜ்ரபாகு சிந்தித்தபடியே நிற்க, "எனக்குத் தெரியும் வஜ்ரபாகு. அவந்தி நாட்டில் உனது அதிகாரம் செல்லுபடியாக ஒரே இடம் அவந்திகாவின் மாளிகைதான் என்பதை!" எனச் சிரித்தபடியே தெரிவித்தான் சுங்கமித்திரன்.

அப்போது குறுக்கிட்ட பலதேவன், "அவந்திகாவின் மாளிகையில் பணிப்பெண்கள், காவலர்கள் என அனைத்து இடங்களிலும் நமது ஆட்களை அமர்த்தி வைத்திருக்கிறேன். அவன் அங்கு இல்லை. வந்திருந்தால் இந்நேரம் எனக்கு செய்தி வந்திருக்கும்!" என நம்பிக்கையுடன் தெரிவித்தான்.

"அவர்களின் நடவடிக்கைகளில் ஏதேனும் மாற்றம்?" என வினவினான் சுங்கன்.

"கடந்த ஒரு கிழமைக் காலமாகவே அவந்திகா எங்கோ மறைந்து போனாள்!"

"எங்கே?"

"தெரியவில்லை!"

"திரும்பி வந்துவிட்டாளா?"

"வந்துவிட்டாள்!"

"எப்போது?"

"இன்று மாலையில்!"

"வரும்போது அவள் மட்டும்தான் வந்தாளா?"

"இல்லை!"

"அவளுடன் திரும்பி வந்தது யார்?"

"அவளது இணை பிரியா தோழி கார்த்திகா."

"கார்த்திகா..." என அந்தப் பெயரை ஒருமுறை உச்சரித்துப் பார்த்த சுங்கமித்திரன், "உனது ஒற்றன் உட்பட நான்கு

புரவி வீரர்களைக் கொலை செய்து தப்பி யவள் அவள் தானே?" என வினவினான்.

அவன் வினவியதை ஆச்சரியத்துடன் நோக்கிய இருவரும், "ஆமாம்... ஆமாம்..." என ஒரே நேரத்தில் பதிலளித்தார்கள் வஜ்ரபாகுவும், பலதேவனும்.

"அவளுக்கு யாரோ ஒருவன் உதவியிருக்கிறான். அவன் யார் என்ற தகவல் கிடைத்ததா?"

"இல்லை மித்திரா. இதுவரை தகவல் கிடைக்கவில்லை. எனது ஒற்றர்கள் கார்த்திகாதான் அந்த கொலைகளைச் செய்திருப்பாள் என்று உறுதியாக தெரிவித்தார்கள்."

"அங்கு கொலை நடந்தபிறகு வழியில் கிடந்த ஐந்து பிணங்களையும் அவந்தியில் சுற்றிக்கொண்டிருந்த எனது உபதளபதி ஆராய்ந்திருக்கிறான்."

"அவன் என்ன தெரிவித்தான்?"

“நிச்சயம் கார்த்திகாவினால் மட்டும் அந்த ஐவரையும் கொன்றிருக்க முடியாது என்று திடமாகத் தெரிவித்துவிட்டான். யாரோ அவளுக்கு உதவியிருக்கிறார்கள்?”

“யாரோ என்றால்?”

“அதை நீதான் கண்டறியவேண்டும் வஜ்ரபாகு. அதுமட்டுமல்லாமல்...” எனத் தெரிவித்த சுங்கமித்திரன் சிந்தித்தபடியே ஆசனத்தில் சாய்ந்துகொண்டு அமர்ந்திருந்தான்.

“என்ன சிந்தனை?” என வினவினான் வஜ்ரபாகு.

“அந்தக் குறுவாள்கள் பாய்ந்திருந்த விதத்தைப் பார்த்த எனது உபதளபதி மிரண்டு போயிருக்கிறான். அவ்வளவு நேர்த்தியாக அவர்களின் உடலில் பாய்ச்சப்பட்டிருந்தது அந்தக் குறுவாள். வாள் வித்தையைப் பிசகில்லாமல் கற்றிருந்த ஒருவனால் தான் குறுவாளினை இப்படி

நேர்த்தியாகப் பயன்படுத்த முடியும் என்பது எனது உபதளபதியின் கருத்து!"

"நம்மை எதிர்த்து அவளுக்கு உதவியது யாராக இருப்பார்கள்?" என வஜ்ர பாகுவிடம் வினவினான் பலதேவன்.

குழப்பத்துடன் நின்றான் வஜ்ரபாகு. பிறகு, திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டவனாய். "பலதேவா... அன்று நதிக்கரையில் நான் மூன்று வணிகர்களை சிறையில் அடையுங்கள் என்று கட்டளையிட்டு சென்ற பிறகு அவர்களில் ஒருவன் சூழ்ந்திருந்த நமது வீரர்களை குறுவாளினால் தாக்கி கொன்றுவிட்டதாக எனக்கு செய்தி கிடைத்தது. அவர்கள் மூவரும் எங்கே? ஒருவேளை நமது வீரர்கள் ஐவரைக் கொன்று கார்த்திகாவைத் தப்ப வைக்க அவர்களில் ஒருவன் உதவியிருப்பானோ?" என வினவினான்.

"அவர்கள் மூவரையும் உனது தங்கை எங்கே தங்க வைத்திருக்கிறாள் என்ற விவரமே இதுவரை எனக்குக்

கிடைக்கவில்லை. நதிக்கரை மாளிகையில் அவர்கள் இருப்பதாகக் கேள்விப்பட்டு அங்கே சென்றேன். அங்கேதான் திவ்யனை சந்தித்தேன்" எனக் கூறியவனின் உடல் அப்போதும் சிறிது உதறவே செய்தது. அதைக் கண்ட வஜ்ரபாகு, "மீண்டும் அவனைப் பற்றிய பேச்சினை நீ எடுக்க வேண்டாம் பலதேவா. என்றோ நாம் மிச்சம் வைத்த சிறு பாவம் நம்மை இந்த நிலை வரை கொண்டு வந்து விட்டிருக்கிறது!" எனத் தெரிவித்த வஜ்ரபாகு திவ்யனைப் பற்றி பேசவே அஞ்சினான்.

அவர்கள் இருவரின் உரையாடலைக் கேட்டுக்கொண்டு சிந்தித்தபடியே அமர்ந்திருந்த சுங்கமித்திரன் திடீரென்று, "சதகர்ணி எங்கே இருக்கிறான்?" என வினவினான்.

"அவன் பைத்தானில் தான் இருக்கிறான்!" என பலதேவன் கூற அருகில் நின்ற வஜ்ரபாகு, "ஆனால், சாதவாகன

https://telegram.me/aedahamlibra

மகாராணி அவந்தியில் தான் இருக்கி றாள்!" எனக் குறுக்கிட்டான்.

"அவளிடம் சதகர்ணி எங்கே இருக் கிறான் என்று வினவினாயா?"

"வினவினேன்!"

"என்ன பதில் அளித்தாள்?"

"பைத்தானில் இருக்கிறார் என்று பதிலளித்தாள்!"

"சாதவாகன தெற்குத் திசை மாதண்ட நாயகன் சோழத் தூதுவனாக அவந்திக்கு வருகை தந்தானல்லவா?"

"ஆம்!"

"அவன் கூறியது?"

"மன்னர் தலைநகர் பைத்தானில் இல்லை என்று தெரிவித்தான்!"

"நயனிகா தெரிவித்த செய்திக்கும் மாதண்ட நாயகன் தெரிவித்த செய்திக் கும் ஏன் இந்த முரண்பாடு?"

https://telegram.me/aedahamlibra

வஜ்ரபாகுவும், பலதேவனும் பதில் கூற முடியாமல் ஒருவனை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

அப்போது அவர்கள் இருவரின் தலையிலும் இடி விழுவதைப் போன்ற செய்தியைத் தெரிவித்தான் சுங்கமித்திரன். "சதகர்ணி பைத்தானில் இல்லை. அவன் இங்கு அவந்தியில்தான் இருக்கிறான்!" என்று.

இருவரும் அதிர்ச்சியில் நிற்க அப்போது சுங்கமித்திரன் ஆசனத்திலிருந்து எழுந்து, "உனது செயல் திட்டம் என்ன வஜ்ரபாகு?" என வினவினான் சுங்கமித்திரன்.

"நண்பா, அவந்தி சாதவாகனர் கையில் விழுந்த கிழமையை எந்த வருடமும் இல்லாமல் இந்த வருடத்தில் சிறப்பாக கொண்டாடப்போகிறேன். இன்றிலிருந்து பதினோராம் நாள் மாலைப் பொழுதில் நாம் விதிசாவில் வகுத்த திட்டப்படி அவந்திகா உனக்கு உரியவளாகி

விடுவாள்” என அவன் கூறிக்கொண்டிருந்த போதே இடைமறித்த சுங்கமித்திரன், “அவந்தி அரசனாக உன்னை அறிவித்துக்கொள்ள என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறாய்? அதை மட்டும் கூறு. மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன்” எனத் தெரிவித்தான்.

“இன்றிலிருந்து பதினோராவது நாள் மாலையில் நடைபெறும் விழாவில் அவந்தியின் மூத்த அமைச்சரைக் கொண்டு மன்னனாக முடிசூடிக் கொள்ளப் போகிறேன்! என்னை ஆதரிப்பவர்கள் அனைவரும் உயிரோடு இருப்பார்கள். மற்றவர்கள் அனைவரும் தயவு தாட்சண்யம் இன்றி கொல்லப்படுவார்கள்.”

“அவந்தியில் நிலை பெற்றிருக்கும் சாதவாகன வீரர்கள் உன்னை எதிர்த்து கலகம் செய்தால்?”

“அவர்களை அடக்குவதற்காகத் தான் அவந்தி எல்லையான வச்சிர நாட்டில் உனது படையை நிலை நிறுத்

தச் சொல்லி அனுப்பியிருந்தேன். சுங் கப் படையை எதிர்க்கவேண்டும் எனும் தோற்றத்தில் எனது கட்டளையை மறு பேச்சில்லாமல் நிறைவேற்றும் படைத் தலைவர்களைக் கொண்ட படையை நிறுத்தி வைத்திருக்கிறேன். என்னை எதிர்த்து எந்தக் கலகம் உருவானாலும் அதை அவந்தியில் நிலைபெற்றிருக்கும் எனது படையினர் அடக்குவார்கள். அதே நேரம் உஞ்சையிலும் எனது படையின் ஒருபகுதியை ஊடுருவ வைத்திருக்கி றேன். இது மட்டுமல்லாமல் அவந்திக்கு கிழக்கே மண்டிக் கிடக்கும் வனத்தில் இரகசியப் படையைத் திரட்டி தயாராக வைத்திருக்கிறேன்" எனத் தெரிவித்த வன் பிறகு, "என்னை எதிர்த்து கலகம் செய்ய யார் முயன்றாலும் அவர்களுக்குத் தலைமை ஏற்று அவர்களை வழிநடத்தும் தைரியம் உஞ்சையில் இருக்கும் எவ னுக்கும் கிடையாது!" என இறுமாப்புடன் தெரிவித்தான் வஜ்ரபாகு.

அவன் கூறியதைக் கேட்டதும் சுங் கமித்திரன் சிறிதும் தாமதிக்காமல், "சாத வாகன மன்னன் சதகர்ணி அவர்களுக் குத் தலைமை வகித்தால்???" என வின வினான்.

"அப்படி அவன் ஏதாவது செய்ய முயலுவான் என்பதை எதிர்பார்த்துதான் அவனைத் தீர்த்துக் கட்டவும் தகுந்த திட் டம் வரைந்திருக்கிறேன். நான் வகுத்த திட்டங்களை பைத்தானில் வேண்டு மானால் அவன் முறியடித்திருக்கலாம். ஆனால், இது அவந்தி. என்னை மீறி அவ னால் எதுவும் செய்ய முடியாது!" எனப் பெரும் நம்பிக்கையுடன் தெரிவித்தான் வஜ்ரபாகு.

"எப்படி வஜ்ரபாகு காரியத்தை நிறைவேற்றப் போகிறாய்?"

"ஏனெனில், இந்த முறை காரி யத்தை நிறைவேற்றப் போவது பலதே வன்" என அருகில் நின்ற பலதேவனின் முகத்தை நோக்கியபடியே தெரிவிக்க

https://telegram.me/aedahamlibra

பலதேவன் அதிர்ச்சியுடன் இருவரையும்
மாறி மாறி நோக்கினான்.

“அதிர்ச்சியடைய வேண்டாம் பல
தேவா...” எனத் தெரிவித்த வஜ்ரபாகு
அவன் வகுத்திருந்த திட்டத்தை பலதே
வனிடம் தெரிவித்தான்.

தொடக்கத்தில் பலதேவன் பெரி
தும் அதிர்ச்சியடைந்தாலும் பலதேவன்
தெரிவித்ததைக் கேட்டதும் பெரும் நம்
பிக்கை கொள்ளலானான்.

வஜ்ரபாகு வகுத்த திட்டத்தைப்
பற்றி சிந்தித்த சுங்கமித்திரன், “மித்திரா...
நீ வகுத்திருக்கும் திட்டம் மாசு இல்லா
தது. தற்போதுள்ள நிலையில் ஆர்யவ
தத்தில் சாதவாகனனுக்கு உதவும் ஒரே
படை சோழப் படை மட்டும்தான்! அதை
யும் பலதேவன் தந்திரமாக முறியடித்து,
சாதவாகனர்களை சோழப் படைக்கு
எதிரியாக்கிவிட்டான். இந்த நிலையில்
சோழர்கள் உதவுவார்கள் என்பதை கன
விலும் நினைக்க முடியாது! பலே திட்

டம் வஜ்ரபாகு. சதகர்ணி கையிலிருந்து அவந்தியை முதலில் நீ பறிப்பாய்! சோழப் படை கிழக்கில் நெருங்கிக் கொண்டிருக் கிறது. சதகர்ணிக்கு நம்மிடம் சரணாகதி அடைவதைத் தவிர வேறு வழியில்லை!" எனக் கூறியவன் பலமாகச் சிரித்தான்.

அங்கு சிறிது நேரம் அமைதி நில வியது. அப்போது சுங்கமித்திரன், "நானும் எனது படைக்கு தகுந்த கட்டளையைத் தான் பிறப்பித்துவிட்டு வந்திருக்கிறேன்!" எனத் தெரிவித்தான்.

"என்ன கட்டளை?" என வினவி னான் வஜ்ரபாகு.

"வச்சிர நாட்டில் நிலை கொண்டி ருக்கும் படை எந்த நேரத்திலும் அவந் தியைத் தாக்கும் விதத்தில் கட்டளை விதித்திருக்கிறேன். உனது முயற்சி தோல்வி அடைந்தாலோ அல்லது சதகர் ணியின் மேலாண்மை அதிகமானாலோ உஞ்சையை எனது படை தாக்கி அதை உனக்காக மீட்கும். அது மட்டுமல்

https://telegram.me/aedahamlibra

லாமல்...” எனக் கூற வாயெடுத்தவன் அதற்கு மேல் எதுவும் பேசாமல் அமைதி யானான்.

“என்ன தயக்கம் மித்திரா?” என வினவினான் வஜ்ரபாகு.

“அது மட்டுமல்லாமல் எனது மெய்க் காவல் வீரர்கள் சுமார் ஐநூறு பேர் உஞ்சைக்குள் ஊடுருவக் கட் டளை விதித்திருக்கிறேன். நமது திட்டத் தில் ஏதேனும் பிசகு ஏற்பட்டால் அவர் கள் என்னை அவந்தி எல்லையான வச் சிர நாடு வரைக் கொண்டு போய் சேர்த்து விடுவார்கள்!”

“நண்பா... ஆர்யவதத்தின் மாபெ ரும் வீரர்களுள் நீயும் ஒருவன். இந்த நிலையில் உனது பாதுகாப்புக்கு நீ காவ லர்களை ஊடுருவ வைத்திருக்கிறேன் எனக் கூறுவது சரியா? உன் வாள் வீச் சில் எனக்கு இருக்கும் நம்பிக்கையில் தான் அவந்திகாவை உனக்கு கைமாற் றும் திட்டத்தையே வகுத்திருக்கிறேன்.

என் திட்டத்தின் அடிப்படையே நீ தான்” என வஜ்ரபாகு கூற, “நண்பா... பட்டத்து இளவரசர்கள் ஒருநாளும் மெய்க் காவலர்கள் இன்றி தனது நாட்டுக்குள்ளாகவே நடமாடக் கூடாது என்பது எழுதப் படாத விதி. சாணக்கியரும் அதைத்தான், “அரசர்கள் மாறுவேடத்தில் திரிந்தாலும் தகுந்த பாதுகாப்பில்லாமல் செல்லக் கூடாது” என்று கூறியிருக்கிறார். எனது நாட்டை விட்டு நான் என் நண்பனுக் காக வெகு தொலைவு வந்திருக்கிறேன். எனது வாள் மீது எனக்கு எப்போதுமே நம்பிக்கை உண்டு. ஆனால், சில கட்டுப் பாடுகளை நாம் பின்பற்றியாக வேண்டும்” எனத் தெரிவித்தான் சுங்கமித்திரன்.

சுங்கமித்திரன் கூறியதைக் கேட்டதும் வஜ்ரபாகுவும், பலதேவனும் சிந்தித் தபடியே நின்றுகொண்டிருந்தார்கள். அப் போது சுங்கமித்திரன், “வஜ்ரபாகு விழா நடைபெறும் அரங்கிற்கு உனது தங்கை அவந்திகாவையும் அழைத்து வா!”

https://telegram.me/aedahamlibra

"எதற்காக?"

"அப்போது தானே சாதவாகன ராணி நயனிகாவை நம்மால் சிறைப்ப டுத்த முடியும்?"

"அவளை எதற்காக நாம் சிறைப்ப டுத்த வேண்டும்?"

"சதகர்ணி அவந்தியில்தான் இருக் கிறான் என்பது எனது ஊகம். நயனி காவை நாம் மாளிகைக்குள் சிறைப்ப டுத்தினால் சதகர்ணி நிச்சயம் நம்முன் நேருக்கு நேர் தன்னை வெளிப்படுத் திக் கொள்வான். அப்படி அவன் நம்முன் நேருக்கு நேர் வந்து நின்றால்தானே பல தேவனால் திட்டத்தை நிறைவேற்ற இய லும்?"

"இந்த யோசனையும் நன்றாகத் தான் இருக்கிறது மித்திரா..."

"சதகர்ணியை வெளிப்படுத்த மட் டுமே நாம் நயனிகாவை சிறைப்படுத்தப் போகிறோம். நமது திட்டம் நிறைவேறி

நீ அவந்தியின் மன்னனாக முடிசூடியதும் அவளை பைத்தானுக்கே அனுப்பி வைத்துவிடுவோம்!"

அதுவரை இருவரும் பேசிக் கொண்டிருந்ததை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த பலதேவன், "நமது திட்டம் அனைத்தும் சரி. ஆனால், ஒரு வேளை திடீரென்று திவ்யன் வெளிப்பட்டு நமது திட்டத்தை சீர்குலைக்க முயன்றால் என்ன செய்வது?" எனத் திகிலுடன் வினவினான்.

வஜ்ரபாகு தனது தழும்பு படிந்த விகார முகத்துடன் அவனை கோபத்துடன் நோக்க, "திவ்யன் எதிர்த்தால் அவனை எதிர்க்க எனது வாள் போதும்! அதுவும் போதவில்லை என்றால் நம்மைச் சூழ்ந்து நிற்கும் நமது மெய்க்காவல் படை இருக்கிறது. வச்சிர நாட்டில் எனது அதிவேகப் புரவிப்படை நின்றுகொண்டிருக்கிறது, இவை அனைத்தையும் கடந்து அந்த யவன அடிமையால் வேறு என்ன

செய்ய இயலும்?" எனத் திடமாகத் தெரி வித்தான் சுங்கமித்திரன்.

https://telegram.me/aedahamlibra

# 30.

# சதகர்ணியின் எதிர் வியூகம்

வானவல்லியினால் தூதுவனாக அனுப்பப்பட்ட சாதவாகன தென்திசைப் படைத் தலைவனான மாதண்ட நாயகன் சதகர்ணியை சந்திக்க படித்தானத்திற்குச் சென்று அங்கு சதகர்ணி இல்லாமல் அவந்திக்கு அவரைத் தேடி வந்திருந்தான். ஆனால், மாதண்ட நாயகன் அவந்திக்கு வந்ததுமே அவனை சந்தித்தான் வஜ்ரபாகு. அப்போது மாதண்ட நாயகன் வஜ்ரபாகுவிடம் வானவல்லி சத

கர்ணிக்கு அனுப்பிய செய்தியைத் தெரிவித்தான்.

மாதண்ட நாயகன் தெரிவித்த செய்தியைக் கேட்டதுமே கடும் கோபம் கொண்ட வஜ்ரபாகு, "சோழப் படையிடம் தென்திசைப் படை தோற்று ஒரு பெரும் கோட்டையை இழந்துவிட்டதால் சாதவாகன அரசர் சதகர்ணி அவர்களுக்குப் பணிந்து விடுவார் என்று கருத வேண்டாம் மாதண்ட நாயகரே! சாதவாகன அரசர் சதகர்ணி விரைவில் சோழப் படையை எதிர்கொள்வார் என்று அவர்களுக்குத் தெரிவியுங்கள். சோழப் படை அவரிடம் தோற்று புறமுதுகிடும் காலம் வெகு தொலைவில் இல்லை என்றும் அவர்களை எச்சரிக்கை செய்யுங்கள்!" எனக் கட்டளையிட்டான்.

சோழர்களின் தகவலைக் கொண்டு வந்த சாதவாகன தென்திசை மாதண்ட நாயகனிடம் என்ன கட்டளையைத் தெரிவித்தால் சோழ நாட்டிற்கும் சாதவாகன நாட்டிற்கும் பகை உண்டாகி

https://telegram.me/aedahamlibra

சோழப் படை தொடர்ந்து தாக்குமோ அப்படிப்பட்ட கட்டளையை அளித்து அனுப்பியிருந்தான் வஜ்ரபாகு.

சாதவாகனப் படையின் தென்திசை மாதண்ட நாயகன் வஜ்ரபாகுவைச் சந்தித்துவிட்டு உஞ்சையிலிருந்து திரும்பிச் சென்றுகொண்டிருந்தான். அப்போது அவனை நான்கு புரவி வீரர்கள் வழி மறித்தார்கள். செங்கோடரின் கட்டளையின்படி அவனுக்குக் காவலாக வந்த வீரர்கள் மாதண்ட நாயகனைச் சுற்றிவளைத்த புரவி வீரர்களை தடுக்கலானார்கள். அப்போது அந்தப் புரவி வீரர்களில் ஒருவனாக நின்ற திருக்கண்ணனைப் பார்த்தவர்கள் பணிந்து தலை வணங்கினார்கள். தலை வணங்கியவர்களிடம் ஓலை ஒன்றைக் கொடுத்து, “சேர்ப்பித்துவிடுங்கள்...” என மட்டும் கட்டளையிட்டான் திருக்கண்ணன்.

அப்போது காவலர்களில் ஒருவன், “மாதண்ட நாயகனை என்ன செய்யப்

https://telegram.me/aedahamlibra

போகிறீர்கள்? படைத் தலைவிக்கு என்ன பதிலைக் கூறுவது?" என வினவினான்.

"உங்கள் கையிலிருக்கும் ஓலையில் அனைத்திற்குமான பதில் இருக்கிறது. அதைப் படித்தபிறகு உங்களிடம் எந்த கேள்வியையும் படைத் தலைவியார் வினவ மாட்டார்கள்?" எனத் தெரிவித்த திருக்கண்ணன், "இம்ஹோடெப், மாதண்ட நாயகரை அழைத்து வாருங்கள்!" எனக் கட்டளையிட மாதண்ட நாயகனை வாள் முனையில் புரவியின் மீது ஏற்றி அழைத்துச் சென்றான் இம்ஹோடெப்.

புரவியில் பயணித்துக் கொண்டிருக்கும் போது இம்ஹோடெப், "உன்னைக் கைது செய்தது யார்?" என வினவினான்.

"சோழப் படைத் தலைவர் வில்லவன்" எனப் பதிலளித்தான் மாதண்ட நாயகன்.

"உன்னை அனுப்பி வைத்தது?"

"படைத் தலைவி!"

"அப்படியெனில் செங்குவீரர் உனது படையை முறியடிக்கவில்லையா?" என வியப்புடன் வினவிய இம்ஹோடெப் அவனுக்கு அருகில் புரவியில் பயணித்துக் கொண்டிருந்த திருக்கண்ணனை நோக்கினான்.

"இல்லை. நானும் அவரைப் பற்றி கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால், படையை வழி நடத்தியது ஒரு பெண். படைக்குத் தலைமை தாங்கியது ஒரு சிறு குழந்தை!" என வெறுப்புடன் தெரிவித்தான் மாதண்ட நாயகன்.

"குழந்தையா?" என ஒரே நேரத்தில் இம்ஹோடெப் மற்றும் திருக்கண்ணன் என இருவரும் வினவினார்கள்.

"உனது படையை அவர்கள் எப்படி எதிர்கொண்டார்கள்?" என வினவினான் இம்ஹோடெப்.

அப்போது குறுக்கிட்ட திருக்கண்ணன், “இம்ஹோடெப், நமது படைதான் வெற்றியடைந்து விட்டதே! ஒற்றர்கள் தான் தகவலைத் தெரிவித்தார்கள் அல்லவா?” என வினவினான்.

அப்போது இம்ஹோடெப், “படைத் தலைவரே, ஒற்றர்கள் சோழப் படை சாதவாகன எல்லைப் புறப் படையை முறியடித்துவிட்டது எனத்தான் தெரிவித்தார்கள். செங்குவீரர்தான் படையை நகர்த்தியிருப்பார் என்று தானே இத்தனை தினங்களாக நாம் எண்ணிக் கொண்டிருந்தோம். ஆனால்...” என திருக்கண்ணனிடம் தெரிவித்தவன் மாதண்ட நாயகனிடம், “சோழப் படையை நீ எப்படி தாக்கினாய்? அவர்கள் எப்படி எதிர்கொண்டார்கள்?” என வினவியபோது புரவியில் அமர்ந்து சென்றுகொண்டிருந்த திருக்கண்ணன் திடீரென்று இரைத்தான். அவனது உடல் அந்தக் குளிர் காற்றிலும் வியர்க்க ஆரம்பித்தது. உடனே புரவியில் தொங்கவிட்டிருந்த மூங்கில் குழாயில்

கார்த்திகா அளித்த மருந்தினைக் குடித் தான். சிறிது நேரம் அமைதியாக நின்ற திருக்கண்ணன் பிறகு புரவியின் மீது ஏறி, "புறப்படலாம் இம்ஹோடெப்!" எனத் தெரிவிக்க அவர்கள் நகர்ந்தார்கள்.

அப்போது இம்ஹோடெப், "உட லுக்கு என்ன?" என வினவினான்.

"இந்த இரைப்பு சில தினங்க ளாக வந்துகொண்டிருக்கிறது. கார்த் திகா மருந்து அளித்திருக்கிறாள். உடல் குணமாகிவிட்டது. ஆனால், நஞ்சின் தாக்கம் இன்னும் இருந்துகொண்டுதான் இருக்கிறது" எனத் தெரிவித்த திருக் கண்ணன் மாதண்ட நாயகனை நோக்கி, "இம்ஹோடெப்பின் கேள்விக்கு நீ இன் னும் பதிலளிக்கவில்லையே!" என அவனை நோக்கினான்.

கிருஷ்ணையின் வட கரையில் நடைபெற்ற பெரும் போரைப் பற்றி இருவரிடமும் விவரிக்கத் துவங்கினான் மாதண்ட நாயகன். "சோழப் படையை

முறியடிக்க அவன் வகுத்த அணிவகுப்பு, அவன் தாக்கிய முறை, அவனது தாக்கு தலை சோழர்கள் எதிர்கொண்ட முறை, சோழப் படையின் அணிவகுப்பு, சோழ வீரர்கள் சாதவாகனப் படையை எதிர்த்து தாக்கிக் கொண்டிருந்த போதே அவர்கள் சாதவாகன கோட்டையைக் கைப்பற்றிய முறை, வில்லவன் அவனைத் தோற்க டித்து கைது செய்தமை, அவன் தூதுவ னாக்கப்பட்ட முறை என" அனைத்தை யும் தெரிவித்தான் சாதவாகன படையின் தென்திசை மாதண்ட நாயகன்.

அவன் கூறியதைக் கேட்ட திருக் கண்ணன், "படைத் தலைவர் வில்லவ ரின் வீரம் மற்றும் பராக்கிரமச் செயல் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டிருக்கி றது. வெண்ணிப் போருக்கு முன் வேளக் காரப் படைத் தலைவருடன் சேர்ந்து எதி ரியின் கோட்டையிலேயே களமாடினர். சேர நாட்டில் தனியொருவனாக எரிப ரந்தெடுத்தலை மேற்கொண்டு அகப்பா கோட்டையைக் கைப்பற்றி சேர இளவர

சனுக்கே போக்கு காட்டினார். நமக்குத் தான் அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை" எனப் போரில் கலந்துகொள்ள இயல வில்லை என்பதை வருத்தத்துடன் இம் ஹோடெப்பிடம் தெரிவித்த திருக்கண் ணன் பெருமூச்சு விட்டான்.

"அவந்தியில் இருக்கும் தங்க ளுக்கே இத்தனை வருத்தம் என்றால் புகாரில் இருக்கும் நமது படைத் தலை வர் பரதவர் குமரன் எப்படியெல்லாம் வருத்தப்பட்டுக்கொண்டிருப்பார்?" எனத் தெரிவித்ததும் திருக்கண்ணன் பரதவன் குமரனை எண்ணி வருத்தப்படவே செய் தான்.

மேலும், ஒரு ஓரைப் பொழுதிற்கு மேலே மாதண்ட நாயகனை அழைத்துக் கொண்டு சென்ற இம்ஹோடெப் திருக் கண்ணனின் கட்டளையின் பேரில் மாளி கைக்குள் அழைத்துச் சென்றான். அப் போது மாதண்ட நாயகன், "சோழப் படை வீரர்களுக்கு ஒரு தேசத்தின் மாதண்ட

நாயகனை எப்படி நடத்தவேண்டும் என்ற முறை கூட தெரியாமல் போய்விட்டது. உங்களது படைத் தலைவி என்னை தூதுவனாக அனுப்பி வைத்திருக்கிறாள். ஆனால் நீயோ என்னை வாள் முனை யில் கடத்திக்கொண்டு வந்து மாளிகை யில் அடைத்திருக்கிறாய். இது முறை அல்ல சோழ வீரனே!" என அவனைப் பார்த்து வெகுண்டெழுந்தான்.

"எங்களுக்குக் கிடைத்த கட்டளை இதுதான். அதை நிறைவேற்றியிருக்கி றோம்" எனத் தெரிவித்தவன் அந்த மாளிகை அறையில் அவனைத் தனியா கவிட்டு வெளியேறினான்.

அவனது செயலைக் கண்ட மாதண்ட நாயகன் வெகுண்டெழுந்து, "நீ இழைத்திருக்கும் இந்த செயலுக்கான தண்டனையை விரைவில் அடைவாய். சாதவாகன தேசத்தில் ஒரு சாதவாகன மாதண்ட நாயகனை நீ சிறை செய்திருக் கும் செயலுக்கான எதிர் விளைவை நீ

நிச்சயம் அறிந்துகொள்வாய்!” என அவன் கூறிக் கொண்டிருந்த போதே அந்த அறைக்குள்ளிருந்து, “நீ செய்திருக்கும் காரியத்திற்கு உனக்கு என்ன தண்டனையை நான் அளிப்பது?” என எழுந்த குரலைக் கேட்டதுமே நடுநடுங்கிப் போன மாதண்ட நாயகன், எப்போது வேண்டுமானாலும் அணைந்து விடுவேன் என எரிந்துகொண்டிருந்த விளக்குத் திரியை நீட்டினான்.

தனித்துக் காணப்பட்ட மாளிகையின் அந்த விசாலமான அறையில் அனைத்து கதவுகளும் அடைக்கப்பட்டிருந்ததால் இருள் மண்டிக் கிடந்தது. எரிந்துகொண்டிருந்த அந்த ஒற்றை விளக்கிலிருந்து வெளிப்பட்ட வெளிச்சமும், விளக்கொளியினால் உருவாகியிருந்த நிழல்கள் கருத்த பெருத்த பூதங்களைப் போன்று நிலத்தில் விழுந்து அந்த அறைக்குப் பெருத்த பயங்கரத்தை வழங்கியிருந்தன. சோழப் படைகளுடன் மோதி தனது படையை இழந்த மனத் துய

ரம், தனது தலைமையில் படை தோற்றுப் போனது மட்டுமல்லாமல் தான் வீர மரணத்தை அடையாமல் உயிரோடு சோழப் படையிடம் பிடிபட்டதனால் ஏற்பட்ட விரக்தி, அவனை சிறையில் அடைத்திருந்தாலும் அல்லது மரண தண்டனையை அளித்திருந்தாலும் அவன் மகிழ்ந்து ஏற்றிருப்பான். ஆனால், அவனையே தூதுவனாக அனுப்பியதால் அவனுக்குள் உருவாகியிருந்த பெரும் வருத்தம், தொடர்ச்சியாகப் பயணித்ததால் ஏற்பட்ட உடல் சோர்வு, பைத்தான் மற்றும் அவந்திக்கு சென்றும் மன்னர் சதகர்ணியைக் காண இயலாததனால் ஏற்பட்ட ஏமாற்றம் என அனைத்தும் சேர்ந்து பெரும் வீரனான சாதவாகன மாதண்ட நாயகனை அந்தக் குரல் நடுங்கச் செய்திருந்தது. குரல் எழுந்த திசையை நோக்கினான் மாதண்ட நாயகன். அங்கே சாதவாகன அரசன் சதகர்ணி ஆசனத்தில் அமர்ந்திருந்தான். சதகர்ணியை அந்த நேரத்தில் மாதண்ட நாயகன் எதிர்பார்த்

https://telegram.me/pedahamlibra

திருக்கவில்லை. சதகர்ணியைப் பார்த்த துமே அதிர்ச்சியடைந்த மாதண்ட நாய கன் கலங்கிய விழிகளுடன் அவனுக்கு முன் பணிந்து நின்றான்.

“நான் கேட்ட கேள்விக்கு நீ எந் தப் பதிலையும் இன்னும் அளிக்கவில் லையே?” என சதகர்ணி அவனைப் பார்த்து வினவினான்.

“அரசே... என்ன கேள்வி?” என வினவினான் சற்றே நடுக்கத்துடன்.

“நீ செய்த தவறுக்கு என்ன தண் டனையை அளிப்பது என வினவினேன் நான்!”

“போரில் தோற்றும் வீர மரணத் தைத் தழுவாமல் உங்கள் முன் தோல் வியைச் சுமந்துகொண்டு நிற்கிறேனே... எனக்கு நீங்களே தண்டனையை அளித்து விடுங்கள்!” என சதகர்ணிக்கு முன் மண்டியிட்டான்.

“போரில் வெற்றியை மட்டுமே எதிர் பார்த்து இருப்பவன் வீரன் அல்ல. தோல் வியையும் ஏற்றுக்கொண்டு அதிலிருந்து தனது தவறினை உணர்கிறானே, அவன் தான் வீரன். நீ வீரன்தானா?” என அவனது விழிகளைப் பார்த்தபடியே வின வினான் சதகர்ணி.

மாதண்ட நாயகன் எந்தப் பதிலை யும் கூறாமல் அமைதியாக காணப்பட் டான்.

அவனிடம், “யாருடைய கட்டளை யின் பேரில் அமைதியாக நிலைகொண் டிருந்த சோழப் படையை நீ தாக்கினாய்?” என வினவினான்.

“சாதவாகனப் படைத் தலைவர் வஜ்ரபாகுவின் கட்டளையின் பேரில் ஒற் றர் தலைவர் தகவல் அளித்தார்.”

“ஒற்றர் தலைவன் தாக்குதல் தொடுக்கச் சொல்லி கட்டளை பிறப்பித்

https://telegram.me/aedahamlibra

தால் நீ உடனே தாக்குதல் தொடுத்து விடுவாயா?”

“அரசே...” என ஏதோ கூற வாயைத் திறந்தான் மாதண்ட நாயகன்.

ஆனால், அதற்குள் எழுந்த சத கர்ணியின் குரல் அவனை வாயடைக்க வைத்திருந்தன. “பெரும் படையுடன் சோழப் படை புறப்பட்டு வடுகர் நாட் டின் கிருஷ்ணை நதிக்கரையில் நிலை கொண்டிருப்பது எனக்குத் தெரியாது என்றா நீ நினைத்துக் கொண்டிருந்தாய்?” எனக் கடும் கோபத்துடன் வினவினான் சதகர்ணி.

“..........”

“நீ செய்திருக்கும் காரியத்தினால் நடந்திருக்கும் அனர்த்தங்கள் என்ன என்று நீ அறிவாயா?”

“அனர்த்தங்களா?”

“ஆம்!”

https://telegram.me/aedahamlibra

“நான் எந்த வித தீங்கையும் இது வரை செய்யவில்லையே?”

“உன் தலைமையில் எல்லைக் காவலுக்கு நிறுத்தி வைத்திருந்த படையை சோழப் படையைத் தாக்கச் சொல்லி மொத்தமாக அழித்திருக்கிறாய்? நம்முடன் காலம் காலமாக நட்பு பாராட்டும் தமிழ் பேரரசை விரோதியாக்கி விட்டாய்! அதனால் ஏற்பட்டிருக்கும் விளைவு என்ன தெரியுமா?”

“என்ன?”

“அதைப் பற்றி நீ பிறகு தெரிந்துகொள்ளலாம்! உஞ்சையில் யாரைச் சந்தித்துவிட்டு திரும்பிச் செல்கிறாய்” என அவனது விழிகளில் தனது விழிகளை நிலைநாட்டி ஆசனத்தில் சாய்ந்துகொண்டு கம்பீரமாக வினவினான் சதகர்ணி.

https://telegram.me/aedahamlibra

"உங்களை சந்திக்க பைத்தான் சென்றேன். அங்கே தங்களைக் காணாத தால் உஞ்சைக்கு வந்தேன். ஆதலால்..."

"ம்ம்ம்... தொடர்ந்து கூறு!" கட்ட ளையிட்டான் சதகர்ணி.

"ஆதலால், படைத் தலைவர் வஜ் ரபாகுவிடம் கட்டளையைப் பெற்றுக் கொண்டு சென்றுகொண்டிருக்கிறேன்."

"நீ என்ன தெரிவித்தாய்?"

"சோழப் படைத் தலைவி தெரிவித் ததை..."

"சோழப் படைத்தலைவி என்ன செய்தி அனுப்பினார்?"

"நூற்றுவர் கன்னர் அரசர்கள் தமிழ் அரசர்களுடன் நல்லுறவையே பேணி வந்துகொண்டிருக்கிறார்கள். அந்த நல் லுறவை சோழ மன்னரும் பின்பற்ற விழைகிறார். சோழ வீரர்களின் தாக் குதல் இலக்கு மகதம்தான். படித்

தானமோ அல்லது நூற்றுவர் கன்ன தேசமோ அல்ல. சாதவாகன அரசர் போரினை விரும்பினால் போருக்கும், அமைதியை விரும்பினால் அமைதிக்கும் சோழப் படை தயார்” என்று தெரிவித் தார்கள். போரினை முன்னின்று நடத் திய என்னையே தங்களிடம் போருக் கான காரணத்துடன் இதையும் தெரிவிக் கச் சொல்லி கட்டளையிட்டார்.”

“இவை அனைத்தையும் நீ வஜ்ரபா குவிடம் தெரிவித்தாயா?”

“தெரிவித்தேன்!”

“அவன் அளித்த மறுமொழி என்ன?”

“சோழப் படை புறமுதுகிடும் காலம் வெகு தொலைவில் அல்ல என்பதை அவர் தெரிவிக்கச் சொல்லி ஆணையிட் டார்.”

அவன் தெரிவித்ததைக் கேட்ட சத கர்ணி அமைதியானான். பிறகு மாதண்ட

நாயகனிடம், "நீ இதைத் தெரிவிக்கத் தான் வேகவேகமாக தெற்கு நோக்கி சென்றுகொண்டிருந்தாயா?" என ஏளன மாக வினவினான்.

எந்தப் பதிலையும் அளிக்கும் திராணி இல்லாமல் காணப்பட்டான் மாதண்ட நாயகன்.

"நீ இந்தச் செய்தியை சோழப் படைத் தலைவியிடம் தெரிவித்திருந் தால் என்ன நடந்திருக்கும் என்று உனக் குத் தெரியுமா?"

"தெரியும் அரசே!" அவனது குரலில் கம்பீரம் அதிகமாகியிருந்தது.

"என்ன நடந்திருக்கும்!"

"நான் சோழப் படையை எச்ச ரிக்கை செய்ததும் அவர்கள் பைத் தானை நோக்கி முன்னேறுவார்கள். முன்னேறும் சோழப் படையைத் தாங் களும், நமது படைத் தலைவர் வஜ் ரபாகுவும் சேர்ந்து மொத்தமாக அழிப்

பீர்கள். எஞ்சியிருக்கும் சோழப் படை வஜ்ரபாகுவின் கூற்றுப் படி புறமுதுகிட்டு ஓடும்! எனது தோல்விக்கு நமது வீரர் கள் நிச்சயம் பழி தீர்ப்பார்கள்? எப்படி அவர்கள் நமது படை வீரர்களை கொடு ரமாக கொலை செய்து நமது கோட் டையை கைப்பற்றினார்களோ அப்படியே சோழப் படை வீரர்களும் கொல்லப்பட்டு நான் இழந்த நமது கோட்டை மீண்டும் கைப்பற்றப்படும். சோழர்கள் கிருஷ்ணை நதிக்கரையையும் தாண்டி விரட்டியடிக் கப்படுவார்கள்!" என அவன் கூறிக் கொண்டிருந்த போதே சுவருக்கு அரு கில் இருளில் மறைவாக அதுவரை நின் றுகொண்டிருந்த உருவம் ஒன்று வெளிப் பட்டு மாதண்ட நாயகனுக்கு பின்புறமாக நின்றுகொண்டு, "மாதண்ட நாயகருக்கு சோழப் படையின் மீத இவ்வளவு கோபம் இருக்கக் கூடாது!" எனப் புன்னகையுடன் தெரிவித்தது.

திடீரென்று தனக்கு பின்புறமாக எழுந்த குரலைக் கேட்டு திரும்பிய

மாதண்ட நாயகன் எதிரில் நிற்பவன் யார் என்று அறிய இயலானால் அந்த விளக்கு வெளிச்சத்தில் அவனது முகத்தையே பார்த்தபடியே காணப்பட்டான்.

அப்போது அவன் மாதண்ட நாயகனிடம், "நீ மட்டும் வஜ்ரபாகுவின் தகவலை சோழப் படைத் தலைவியிடம் தெரிவித்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்று உனக்குத் தெரியுமா?"

"அதைத்தானே சற்று முன் தெரிவித்தேன்!"

"என்ன தெரிவித்தாய்?"

"சோழப் படை சாதவாகனப் படையால் முறியடிக்கப்படும் என்று!"

"அப்படி எதுவும் நடக்காது!"

"வேறு எப்படி நடக்கும்?"

"தகவலைக் கொண்டு செல்லும் உனது வாயிலிருந்து அந்தத் தகவல் வெளிப்பட்டவுடன் உனது நா அறுத்தெ

https://telegram.me/aedahamlibra

றியப்படும் அல்லது உனது தலை துண்டிக்கப்பட்டு உனது கோட்டையின் சுவற்றில் மாட்டித் தொங்கவிடப்பட்டிருக்கும்!"

மாதண்ட நாயகன் கோபம் கலந்த விரக்தியுடன் அவனைப் பார்க்க அப்போது குறுக்கிட்ட அந்த மற்றொருவன், "கலிங்கத்தின் வழியாக முன்னேற வேண்டிய சோழப் படை அவசியமே இல்லாமல் பைத்தானைத் தாக்கி பணியச் செய்திருக்கும். சோழப் படைத் தலைவி தனது படையுடன் புறப்பட்டுவிட்டால் என்னால் கூட தடுத்து நிறுத்த முடியாது!" என சிரித்த முகத்துடன் தெரிவித்தான்.

"தங்களால் கூட சோழப் படையின் நகர்வைத் தடுக்க இயலாதா?"

"ஆம்! எனது சகோதரி எந்த முடிவை எடுத்தாலும் சரி என்று கருதுபவன் நான். ஆதலால் பெரும்பாலும் அவரது முடிவில் நான் குறுக்கிடுவதில்லை. சதகர்ணியிடம் சிக்கி இருப்பதன் மூலம் பெரும் இழப்பை நீ தவிர்த்துக்

கொண்டாய்!" எனச் சிரித்தபடியே தெரிவித்தான் அவன்.

அப்போது சதகர்ணி, "நமது படையை நான் திரட்டிக்கொண்டு சோழப் படையை எதிர்க்க தெற்கு நோக்கி நகர்ந்த அடுத்த கணம் அவந்தி நம் கையை விட்டு சென்று தனி அரசாகிவிடும். சுங்கர்களின் படைகள் அவந்திக்கு ஆதரவாக நம் நாட்டிற்குள் ஊடுருவும். இதை நீ எதிர்பார்க்கிறாயா?" என வினவினான்.

சதகர்ணியை விடவும் இளையவனாக காணப்பட்ட அந்த இளைஞன் "சதகர்ணி" என ஒருமையில் அழைத்ததைக் கண்டு சதகர்ணி எந்த ஆட்சேபத்தையும் வெளிப்படுத்தாமல் சிரித்த முகத்துடன் அமர்ந்திருந்த இருக்கையிலிருந்து சிறிது நகர அவனுக்கு அருகிலேயே அமர்ந்து கொண்டார் கரிகாலர்.

அதிர்ச்சியுடன் சதகர்ணியை நோக்க சதகர்ணியே, "இவர் யார் என்று

உனக்குத் தெரியவேண்டுமா?" என வின வினான்.

தலையை ஆட்டியவன் எதிரில் அமர்ந்திருந்த கரிகாலரின் அழகிய முகத்தையே நோக்கினான் மாதண்ட நாயகன்.

"உனது நிலைக்குக் காரணமான வர்!"

"எனது நிலைக்குக் காரணமான வரா?"

"ஆம்!"

"எந்த நிலையைத் தாங்கள் குறிப்பி டுகிறீர்கள்?"

"உனது படையையும் இழந்து போரில் தோல்வியைத் தழுவி இப்போது ஏதுமற்றவனாக நிற்கிறாயே? அதற்குக் காரணமானவர்.!"

"புரியவில்லையே அரசே!"

"உனக்கு அறிவு இருந்திருந்தால் நீ சோழப் படையை தாக்கியிருக்கவே மாட்டாய்! இப்போது மட்டும் உனக்கு என்ன புரிந்துவிடப்போகிறது" என அவனிடம் தெரிவித்து தனது கையில் அணிந்திருந்த விரல் மோதிரத்தை கழட்டி அவனிடம் கொடுத்தவன், "உன் திறமை மீது நான் நம்பிக்கை வைக்கிறேன். இது இன்னொரு வாய்ப்பு என்று கூட நினைத்துக் கொள்" என அவனிடம் தெரிவித்தவன், "திருக்கண்ணா...!" என அழைத்தான்.

அறைக்கு வெளியே நின்றுகொண்டிருந்த திருக்கண்ணன் மற்றும் இம்ஹோடெப் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தார்கள். மாதண்ட நாயகனிடம் திருக்கண்ணனை சுட்டிக் காட்டியவன், "உன்னுடன் துணைக்கு இருவரையும் அழைத்துக் கொள்!" எனக் கட்டளையிட்டவன், "உன் கையிலிருக்கும் இந்த முத்திரை மோதிரத்தின் அதிகாரத்தை நீ அறிவாய் தானே?" என வினவினான்.

https://telegram.me/aedahamlibra

"அறிவேன் அரசே... அரசர் கூறுவதும் ஒன்றுதான் இந்த முத்திரை மோதிரம் வைத்திருப்பவன் கூறுவதும் ஒன்றுதான். இரண்டிற்கும் வித்தியாசம் இல்லை!" என்றான்.

"நல்லது. இதை நீ அறிந்து வைத்திருப்பதில் மிக்க மகிழ்ச்சி" எனக் கூறியவன் சிரித்தபடியே, "வச்சிர நாட்டின் எல்லையில் சுங்க படையை எதிர்க்க திரண்டிருக்கும் நமது வீரர்களிடம் இருவரையும் அழைத்துச் செல். அங்கு வழியிலேயே ஒருவர் உங்களைச் சந்திப்பார். அவர் உனக்கு என்ன கட்டளைகளை அளிப்பாரோ அதை நீ நிறைவேற்று! அவரை நீ எதிர்த்துப் பேசினாலோ அல்லது நமது படைத் தலைவர்கள் பணிய மறுத்தாலோ உனது தலை துண்டிக்கப்படும். இந்த முத்திரை மோதிரத்திற்கு யார் பணிய மறுத்தாலும் அவர்களை தயவு பார்க்காமல் கொன்றுபோட்டுவிடு."

https://telegram.me/aedahamlibra

“தங்களது முத்திரை மோதிரத்திற்கு பணிய மறுப்பவர்களும் இருக்கிறார்களா?” என வியப்புடன் வினவினான் மாதண்ட நாயகன்.

“நமது எதிரிக்குத் துணை போகும் வஞ்சகர்கள் சிலர் இருக்கிறார்கள். அவர்களை இன்னும் மூன்று தினங்களில் நீ அடையாளம் கண்டுகொள்வாய்.”

மாதண்ட நாயகன், “எதிரி என்றால்...” என வினாவைக் கேட்கும் முன்னே “சுங்கர்கள்...” என வாக்கியத்தை முடித்தான் சதகர்ணி.

“தங்களது உத்தரவு அரசே... இந்த முறை நான் நிச்சயம் வெற்றியோடு திரும்புவேன்” என நம்பிக்கையுடன் கூறிக்கொண்டிருந்த போதே குறுக்கிட்ட சதகர்ணி, “அவரது கட்டளையை நீ நிறைவேற்றினால் போதும். மற்றதை அவர் பார்த்துக் கொள்வார்கள். நாளை மாலை நீங்கள் அவரைச் சந்திப்பீர்கள். இன்றிலிருந்து எட்டு தினங்களுக்குள் காரி

யம் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும் என்று மட்டும் இருவரும் அவருக்குத் தெரிவியுங்கள்!" எனக் கட்டளையிட மூவரும் வெளியேறினார்கள்.

அந்த மாளிகையிலிருந்து வெளியேறிய திருக்கண்ணன், இம்ஹோடெப் மற்றும் மாதண்ட நாயகன் இருவரும் அவந்தியின் எல்லையில் நிலை கொண்டிருக்கும் படையை நோக்கிப் புரவியில் சென்றுகொண்டிருந்தார்கள். அப்போது மாதண்ட நாயகன், "நாம் யாரைச் சந்திக்கப் போகிறோம்?" என வினவினான்.

"தெரியவில்லை. மாதண்ட நாயகரே..." என பதிலளித்த இம்ஹோடெப் அவனுடன் வந்துகொண்டிருந்த திருக்கண்ணனை நோக்கி, "ஒரு வேலை சோழப் படைத் தலைவர் அறிந்திருக்கலாம்" எனத் தெரிவித்தான்.

அவன் கூறியதைக் கேட்ட மாதண்ட நாயகன் புரவியின் கடிவாளத்தைப் பற்றி இழுத்து நிறுத்தினான். இம்

ஹோடெப்பைப் பார்த்து, "சோழப் படைத் தலைவரா?" என அதிர்ச்சியில் வினவினான்.

"ஆம்!" எனப் பதில் அளித்தான் இம்ஹோடெப்.

"அங்கு சாதவாகன அரசருடன் சரிக்கு சமமாக ஆசனத்தில் அமர்ந்திருந்தவர்?"

"சோழப் பேரரசர் கரிகாலர்!" என அவனுக்குப் பின்னால் புரவியில் வந்துகொண்டிருந்த திருக்கண்ணன் தெரிவித்தான்.

"கரிகாலர்" என்ற பெயரைக் கேட்டதுமே மாதண்ட நாயகனின் உடல் ஒருகணம் சிலிர்த்து அடங்கியது. அந்த அதிர்ச்சியுடனே "நம்மைச் சந்திக்கப் போவது யார்?" என வினவினான்.

"தெரியவில்லை" எனப் பதிலளித்தான் இம்ஹோடெப்.

https://telegram.me/aedahamlibrary

“நம்மை சந்திக்கப் போவது யார்? அவர் எப்படி இருப்பார்? எங்கே இருப்பார் என்பதை அறியாமல்தான் நாம் மூவரும் சென்று கொண்டு இருக்கிறோமா?” என வினவினான் மாதண்ட நாயகன்.

“எனது அரசர் கரிகாலரின் திட்டம் ஒரு நாளும் தவறியதில்லை. ஆதலால் அவர் கூறியதை நிறைவேற்றுவது மட்டுமே நமது கடமை!”

“கட்டளையிட்டது சாதவாகன அரசர் சதகர்ணி தானே!”

“கட்டளையிட்டது வேண்டுமானால் சதகர்ணியாக இருக்கலாம். ஆனால், இந்தத் திட்டம் கரிகாலர் வகுத்த திட்டம்!”

அப்போது குறுக்கிட்ட திருக்கண்ணன், “அவந்தியில் நடப்பது மட்டுமல்ல மாதண்ட நாயகரே... தெற்கே வெகு தொலைவில் இருக்கும் சோழப் படையின் நகர்வைத் தீர்மானித்ததும் அவந்

தியில் இருக்கும் சோழப் பேரரசர்தான்!" என்றான்.

அமைதியாக புரவியின் மீது அமர்ந் திருந்தான் மாதண்ட நாயகன். அவனி டம், "நாம் எதற்காக சென்றுகொண்டு இருக்கிறோம் என்பதை நீ அறிவாயா?" என வினவினான் திருக்கண்ணன்.

"அதைத்தான் அரசர் தெரிவித் தாரே..."

"எனது எதிர்பார்ப்பு மட்டும் சரியா னால் நாவலந்தீவின் மாபெரும் வீரரை நீ சந்திக்கும் பேரினை பெறப்போகிறாய் மாதண்ட நாயகரே. அது மட்டுமல்ல அவ ருடன் பணிபுரியப் போகும் அரிய வாய்ப் பும் உனக்குக் கிடைக்கப்போகிறதது!" எனக் கூறிய திருக்கண்ணன், "பெரும் போரினை நோக்கி நாம் இருவரும் சென்று கொண்டு இருக்கிறோம். நீண்ட நாட்களாக பட்டினி கிடக்கும் எனது வாளும், தினவெடுத்த எனது தோளும் விரைவில் குருதியில் நனைந்து தனது

பசியை போக்கிக் கொள்ளவிருக்கிறது. எனது வாட்கள் குருதியைச் சுவைக்க தயாராகிவிட்டது. வா விரைந்து செல்ல லாம்...” எனக் கூறியவன் புரவியைத் தட் டிவிட்டான். மாதண்ட நாயகன் மற்றும் இம்ஹோடெப்பின் புரவியைக் கடந்து திருக்கண்ணனின் புரவி அதிவேகத்தில் பாய்ந்தது.

திருக்கண்ணனின் புரவியைத் தொடர்ந்து இம்ஹோடெப்பும் தனது புர வியைத் தட்டிவிட்டான். போரினை எதிர் நோக்கி அதிவேகமாகச் சென்று கொண் டிருக்கும் சோழப் படைத்தலைவன் திருக்கண்ணனை வியப்புடன் நோக்கிய சாதவாகன மாதண்ட நாயகனும் அவர் களைப் பின்தொடர்ந்து புரவியில் இழந் துவிட்ட உற்சாகம் அனைத்தையும் பெற் றுக்கொண்டு விரைந்தான்.

அப்போது அவனுக்குத் தெரிய வில்லை. சுங்க தேச பட்டத்து இளவர சன் சுங்கமித்திரன், சாதவாகன படைத்

தலைவன் வஜ்ரபாகு, பலதேவன் ஆகியோர் எந்த மாதண்ட நாயகனை வைத்து சோழப் படையை பைத்தானைத் தாக்கத் திட்டம் வகுத்து சதகர்ணியை வீழ்த்த நினைத்தார்களோ அதே மாதண்ட நாயகனை வைத்து அவந்தியைக் கைப்பற்ற மூவரும் வகுத்திருக்கும் திட்டத்தை சூன்யமாக்க விரைந்துகொண்டிருந்ததை அப்போது அந்த மாதண்ட நாயகன் அறிந்திருக்கவில்லை.

https://telegram.me/aedahamlibra

# 31. திருக்கண்ணனின் திட்டம்

இரண்டு நாள் தொடர் பயணத்திற்குப் பிறகு திருக்கண்ணன், இம்ஹோடெப் மற்றும் மாதண்டநாயகன் மூவரும் வஜ்ரபாகுவின் கட்டளையின் பேரில் சுங்கர்களை எதிர்கொள்ள நிலை கொண்டிருந்த படையை நெருங்கியிருந்தார்கள். இன்னும் ஒரு பொழுது பயணித்தால் அவர்கள் மூவரும் படை நிலைகொண்டிருந்த பாசறையை அடைந்துவிடும் தொலைவில் சத்திரம் ஒன்றில் காத்திருந்தார்கள். அப்போது

மாதண்ட நாயகன், "எந்த அடையாளமும் இல்லாமல் மன்னர் தெரிவித்தவரை நாம் எப்படி அடையாளம் கண்டுகொள்ளப் போகிறோம்?" என விரக்தியுடன் வினவி னான்.

அப்போது இம்ஹோடெப், "காலை யிலிருந்து இந்த சத்திரத்திலேயே நாம் அவருக்காக காத்திருக்கிறோம்? யார் என்றே தெரியாமல் அவரை நாம் எங் கிருந்து அடையாளம் காண்பது?" என வினவினான்.

திருக்கண்ணன் எதுவும் பேசா மல் அமைதியாகவே அமர்ந்திருந்தான். அவனை, "தலைவரே..." என அழைத் தான் இம்ஹோடெப்.

"கூறுங்கள் இம்ஹோடெப்!"

"கட்டளையிடுங்கள், என்ன செய் வது என்று!"

"காத்திருப்போம்!"

"எதுவரை?"

“இன்று பொழுது மேற்கில் விழும் வரை!”

“அதன்பிறகு?”

“நாம் புறப்பட்டு சாதவாகன மன்னர் தெரிவித்த கட்டளையை முதலில் நிறைவேற்றுவோம். பிறகு சூழ்நிலைக்குத் தகுந்ததைப் போன்று முடிவெடுத்துக் கொள்ளலாம்!”

“எந்தக் கட்டளையை?”

“சாதவாகன அரசர் சதகர்ணிக்குப் பணிய மறுக்கும் துரோகியை முதலில் அடையாளம் காணுவோம். பிறகு உபதலைவர்கள் மற்றும் உபதளபதிகளிடம் அங்கிருக்கும் நிலையை தெரிந்து கொண்டு பிறகு தக்க முடிவினை எடுத்துக்கொள்வோம்! அரசர் எட்டு தினங்கள் என்று கூறினார். பயணத்திலேயே இரண்டு தினங்கள் கடந்துவிட்டன என்பதையும் நாம் நினைவில் கொள்வோம்.”



https://telegram.me/aedahamlibra

"அப்படியெனில் இன்னும் ஆறு தினங்களுக்குள் நாம் பணியை முடித்து விட வேண்டும்!"

"ஆமாம்!"

"சரி, தலைவரே..." எனத் தெரிவித்த இம்ஹோடெப் மாதண்ட நாயகனையும் அழைத்துக்கொண்டு சத்திரத்திலிருந்து உலாவுவதற்குப் புறப்பட்டான்.

மாதண்ட நாயகன் அணிந்திருந்த இலச்சினை மோதிரத்தை சத்திரத் தலைவர் கவனித்திருந்ததால் மூவருக்கும் அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொடுத்திருந்தார். திருக்கண்ணன் அவனுக்கு ஒதுக்கப்பட்ட அறையில் கிடத்தப்பட்டிருந்த பஞ்சணையில் விழுந்தான். அவனது விழிகளை மட்டுமே மூடியிருந்தானே தவிர அவனது சிந்தனைகள் அனைத்தும் அலைந்துகொண்டு இருந்தன. "உங்களை ஒருவர் வழிநடத்துவார்" என சதகர்ணி தெரிவித்த போதே, "செங்குவீரர்" என எதிர்பார்த்த திருக்கண்ணன்

பெரும் உற்சாகத்தில் காணப்படலா னான். ஆனாலும், "தெற்கே படைகளு டன் தங்கியிருக்கும் படைத்தலைவரால் எப்படி திடீரென்று அவந்திக்கு வர இய லும்?" என செங்குவீரனை எதிர்பார்த்து ஏங்கவும் செய்தான். செங்குவீரனை மன தில் எண்ணிய அடுத்த கணத்திலேயே பெரும் உற்சாகத்தை அடைந்துவிட்ட திருக்கண்ணன் "உறைந்தை சென்று கரிகாலரை மீட்டு வந்தது, கொற்கை வரை சென்று திரும்பிய செயல்"களை நினைவு கூர்ந்து மனதினில் அசை போட் டபடியே படுக்கையில் கிடந்தவனுக்கு மாதண்ட நாயகன் தெரிவித்த செய்தி திடீரென்று மனதில் தோன்றி மறைந்தது.

"சாதவாகன படையை வழிநடத்தி யது வானவல்லி மற்றும் உபதலைவன் வில்லவன்தான். செங்குவீரர் அவர்களு டன் இருந்திருந்தால் நிச்சயம் அவர் தான் படையை வழி நடத்தியிருப் பார். அவர் படையை வழிநடத்தவில்லை எனில் அவர் அங்கு இல்லை என்பதா

கத்தான் அர்த்தம். அப்படியெனில் அவர் எங்கு சென்றிருப்பார்? சதகர்ணி கூறியது படைத்தலைவர் செங்குவீரைப் பற்றித் தானா? அப்படியே அவர் அவந்தி வரு வதாக இருந்திருந்தால் நிச்சயம் வேளக் காரப் படைத் தலைவர் தெரிவித்திருப் பாரே? கரிகாலரும் செங்குவீரர் வருவ தைப் பற்றி எந்த தகவலையும் கூறியி ருக்கவில்லையே?" எனப் பல கேள்வி களை தனக்குத்தானே வினவிக்கொண் டவனுக்கு பதில் கிடைக்காததால் அந்த குழப்பத்தினூடே உறங்கிப் போகவும் செய்தான்.

பொழுது மேற்கில் விழுவதற்கு முன்னரே கண் விழித்த திருக்கண்ணன் உடனே பயணத்திற்கு தயாரானான். அவனுக்கு முன்னரே பயணத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் இம்ஹோ டெப்பும், மாதண்ட நாயகனும் செய்து முடித்திருந்தார்கள். அவர்களுடன் திருக் கண்ணனும் சேர்ந்துகொள்ள உடனே மூவரும் புறப்பட்டார்கள்.

இரவில் ஆங்காங்கே ஓய்வெடுத்தும், ஒற்றர்களைச் சந்தித்து தகவல்களை சேகரித்துக் கொண்டும் விரைந்து சென்று சுங்கப் படையை எதிர்கொள்ளத் தயாராக காணப்பட்ட சாதவாகனப் படையை அடைந்தார்கள். அதிகாலை நேரமாதலால் வீரர்கள் அனைவரும் கூடாரங்களிலும், மரத்தடியிலும் உறங்கிக்கொண்டிருந்தார்கள். ஆங்காங்கே பரண் அமைத்து வீரர்கள் காவல் காத்துக்கொண்டிருந்தார்கள்.

பாசறையை அடைந்ததும் யாருடைய அனுமதியையும் எதிர்பார்க்காமல் திருக்கண்ணன் மற்றும் இம்ஹோடெப்பை அழைத்துக்கொண்டு பாசறைக்குள் நுழைந்த மாதண்ட நாயகனைப் பார்த்ததுமே காவலில் காணப்பட்ட உபதளபதிகள் பணிந்து வணங்கினார்கள். அவர்களிடன், “படைத் தலைவர் எங்கே?” என அதிகாரத்துடன் வினவினான்.

https://telegram.me/aedahamlibra

“படைத் தலைவர் உறங்கிக் கொண்டிருக்கிறார்!” எனப் பதிலளித்தான் உபதளபதி.

“அவர் உறங்கியது போதும். நான் அழைத்ததாகத் தெரிவித்து உடனே அழைத்து வா! அரசரிடமிருந்து முக்கிய கட்டளை வந்திருக்கிறது!” எனத் தெரிவிக்க உபதளபதி அவசர அவசரமாகச் சென்று உறங்கிக்கொண்டிருந்த படைத் தலைவனை அழைத்து வந்திருந்தான். மாதண்ட நாயகனைப் பார்த்ததுமே பணிந்து வணங்கினான் பாசறையின் படைத் தலைவன்.

அவனிடம், “உபதளபதிகள், படையின் அதிபதிகள் என அனைவரையும் இங்கு கூடச் சொல்!” எனக் கட்டளையிட்டான் மாதண்ட நாயகன்.

அடுத்த ஒரு நாழிகைப் பொழுதிற்குள் மாதண்ட நாயகன் கட்டளையிட்டபடி அனைவரும் கூடினார்கள். அவர்களிடம் மாதண்ட நாயகன், “அரசரின்

கட்டளைப்படி இனி இந்தப் பாசறைக்கு நான்தான் தலைமை வகிக்கப் போகி றேன். பாசறையின் நிலை என்ன? நமது படையின் பலம் எவ்வளவு? எதிரிகளின் நிலை என்ன? உங்களுக்கு கடைசியாக வஜ்ரபாகுவிடமிருந்துப் கிடைத்த கட் டளை என்ன?" என அடுத்தடுத்து கேள் விகளை எழுப்பினான்.

அவன் எழுப்பிய கேள்விகளைக் கேட்ட பாசறைத் தலைவன், "மாதண்ட நாயகரே, தாங்கள் தென்திசைப் படைக்கு மட்டுமே மாதண்ட நாயகர் என் பதை நினைவில் கொள்வது நல்லது. தாங்கள் இப்போது இருப்பது வடகிழக் கில். உங்கள் அதிகாரம் எந்த விதத்தி லும் இங்கு செல்லுபடியாகாது!" என அதி காரத்தில் தெரிவித்தான்.

அவன் கூறியதைக் கேட்டதும் அதிர்ச்சியடைந்தாலும் அதை முகத்தில் காட்டிக்கொள்ளாமல் நின்றுகொண்டி ருந்த மாதண்ட நாயகனிடம், "உங்களது

https://telegram.me/aedahamlibra

படையை தாங்கள் சோழப் படையிடம் இழந்துவிட்டதால் இங்கு ஓடி வந்துவிட்டீர்களா?” என ஏளனத்துடன் வினவவும் செய்தான் பாசறைத் தலைவன்.

அவன் கூறியதைக் கேட்டதுமே, இடையிலிருந்த வாளினை உருவி அவனது கழுத்தில் வைத்தான் மாதண்ட நாயகன். மாதண்ட நாயகனின் செயலைப் பார்த்த பாசறைத் தலைவன் சிரித்தபடியே, “இது எனது படை மாதண்ட நாயகரே! எனது கழுத்தில் வாளினைப் பாய்ச்சிவிட்டு உங்களால் இங்கிருந்து உயிரோடு சென்றுவிட இயலுமா?” என வினவினான்.

அவனது விழிகளில் தனது பார்வையை நிலைக்கவிட்டு சிறிது நேரம் அவனையே பார்த்துக்கொண்டிருந்த மாதண்ட நாயகன் அவனது கழுத்திலிருந்து தனது வாளினை எடுத்து மீண்டும் தனது உறைக்குள் செலுத்தியவன் கை விரலில் அணிந்திருந்த சதகர்ணி

https://telegram.me/aedahamlibra

யின் முத்திரை மோதிரத்தை உயர்த்தி அனைவருக்கும் காட்டினான். அந்த முத்திரை மோதிரத்தைப் பார்த்ததுமே சுற்றி நின்ற உபதலைவர்கள், உபதளபதிகள், படையின் அதிபதிகள் என பலரும் பணிந்தார்கள். அவர்களிடம், "அரசரின் உத்தரவுக்கு பணிபவர்கள் மட்டும் என் பக்கம் வாருங்கள்! மற்றவர்கள் எதிர்ப் புறத்திலேயே நிற்கலாம்!" எனத் தெரிவிக்க நால்வரைத் தவிர்த்து மற்ற அனைவரும் மாதண்ட நாயகன் நின்ற இடத்திற்கு நகர்ந்தார்கள்.

மீண்டும் இடையிலிருந்த வாளினை உருவினான் மாதண்ட நாயகன். அப்போது பாசறைத் தலைவனும் தனது இடையிலிருந்த வாளினை உருவிக் கொண்டான். "நம்மைத் தாக்க சூழ்ந்திருக்கும் சுங்கப் படையை முன்னிட்டு தானே இந்தப் படை இங்கு சூழ்ந்திருக்கிறது?" என வினவினான் மாதண்ட நாயகன்.

"இந்தக் கேள்விக்கு உங்களுக்கு நான் பதிலளிக்க வேண்டிய அவசியம் இல்லை மாதண்ட நாயகரே. எங்களை இங்கு பாசறை அமைக்கச் சொல்லி கட்டளையிட்டவர் சாதவாகன படைத் தலைவர் வஜ்ரபாகு! அவரது கட்டளை யில்லாமல் இங்கிருந்து சிறு துருப்புக ளையும் நகர்த்த இயலாது என்பதை உங் களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்!" என அவன் கூறிக் கூறிக் கொண்டிருந்த போதே மாதண்ட நாயகன் பாசறைத் தலைவன் மீது பாய்ந்தான். இருவருக் குள்ளும் அங்கு அதிகார யுத்தம் ஆரம் பமானது. சிறிது நேரம் தொடர்ந்த வாட் சமரின் முடிவில் தனது கையில் இருந்த வாளினை பாசறைத் தலைவன் இழக்க, அவனது மார்பில் சற்றே அழுந்த தனது வாளின் முனையை வைத்த மாதண்ட நாயகன், "இவனது கூடாரத்தை நன்கு சோதனை செய்யுங்கள்!" என அருகில் இருந்த உபதலைவர்களிடம் கட்டளை யிட்டான்.

https://telegram.me/aedahamlibra

இரண்டு உபதலைவர்கள் உடனே அவனது கட்டளையை ஏற்று செல்லலானார்கள். பாசறைத் தலைவனுக்கு ஆதரவாக நின்ற நால்வரும் வாளினை உருவிக் கொண்டு மாதண்ட நாயகனை நோக்கிப் பாய்ந்தார்கள். உடனே மாதண்ட நாயகனுக்கு அருகில் நின்ற உபதலைவர்களும், உப தளபதிகளும் அவர்களின் வாளினைத் தடுத்து மாதண்ட நாயகனுக்குக் காவல் அரணாக சூழ்ந்து நின்றபடியே நால்வரையும் தோற்கடித்தார்கள்.

“இந்த நால்வரையும் என்ன செய்வது? சிறையில் அடைத்து விடலாமா?” என வினவினான் உபதலைவன் ஒருவன்.

“சற்றுப் பொறு!” என அவன் கூறிக் கொண்டிருந்த போதே பாசறைத் தலைவன் அறைக்குச் சென்றவர்கள் கையில் சில பொருட்களைக் கொண்டுவந்தார்கள்.

பாசறைத் தலைவனின் மார்பில் அழுந்த வைத்திருந்த வாளினை நீக்கா மலேயே, "என்ன கிடைத்தது?" என வின வினான்.

"படைத் தலைவர் வஜ்ரபாகுவின் முத்திரை மோதிரம்!"

"பிறகு?"

"இன்னொரு மோதிரத்தையும் கண்டுபிடித்தோம்" எனக் கூறியபடியே ரத்தினக் கல் பதித்த மோதிரம் ஒன்றை அவனுக்குக் காட்டினார்கள். அதைப் பார்த்ததுமே, "சுங்கர்களின் இலைச் சினை மோதிரம் இது..." எனக் கூறிய மாதண்ட நாயகன் நான்கு உபதலை வர்களின் கழுத்தில் வாளினை வைத்து சிறை படுத்தியிருந்தவர்களை நோக்கி, "நான்கு துரோகிகளின் கழுத்தினையும் இப்போதே அறுத்தெறியுங்கள்!" எனக் கட்டளையிட்டான்.

அவன் கட்டளையிட்ட அடுத்த கணம் பாசறைத் தலைவனின் நான்கு உபதலைவர்களின் கழுத்துகளும் அறுக்கப்பட்டு மண்ணில் விழுந்தார்கள்.

தனக்கு முன்னரே தனது உபதலைவர்கள் கொல்லப்பட்டதைக் கண்டு அதிர்ச்சியுடன் இருந்த பாசறைத் தலைவனை நோக்கியபடியே, “இவனது அறையில் வேறு என்னென்ன கைப்பற்றினாய்?” என வினவினான்.

“இதோ இந்த பட்டுத் துணி ஒன்றையும் கைப்பற்றினேன்” எனத் தெரிவித்தவன் கையில் சுருட்டி வைத்திருந்த பட்டுத் துணியை விரித்தான். அதில் சில புள்ளிகளும், நீண்ட பல கோடுகளும் வரையப்பட்டிருந்தன. அதைப் பார்த்தபடியே பாசறைத் தலைவனின் மார்பில் பதித்திருந்த தனது வாளினை எடுத்தவன் அவனது கழுத்தினை நோக்கி விசிறினான். அடுத்த கணம் பாசறைத் தலை

https://telegram.me/aedahamlibra

வனின் கழுத்து மட்டும் அவனது உடலி
லிருந்து தனியாக கீழே உருண்டது.

“இந்த ஐந்து துரோகிகளின் உட
லையும் வனத்தில் எறியுங்கள்! கழுகுக
ளுக்கும், நரிகளுக்கும் இவர்கள் உண
வாகட்டும்!” எனக் கட்டளையிட்டவன்
கையிலிருந்த வாளினை அருகில் நின்ற
உபதளபதியிடம் கொடுத்துவிட்டு முகத்
தில் படிந்திருந்த பாசறைத் தலைவனின்
குருதியைத் துடைத்தபடியே அவனது
கூடாரத்தில் கைப்பற்றப்பட்ட பட்டுத்
துணியை வாங்கிக் கொண்டான். அந்
தக் கூடாரத்தில் வெளிப்பட்ட மாதண்ட
நாயகனின் வீரத்தைப் பார்த்து வியந்த
படியே நின்றுகொண்டிருந்த திருக்கண்
ணன் மற்றும் இம்ஹோடெப் இருவரையும்
அழைத்துக்கொண்டு கூடாரத்தை விட்டு
வெளியே சென்றான்.

அப்போது அந்த கூடாரத்தைக்
கடந்து சென்றுகொண்டிருந்தார் முனிவர்
ஒருவர். அவரை முதலில் கவனித்த இம்

https://telegram.me/aedahamlibra

ஹோடெப், “அவர் யார்” என்று மாதண்ட நாயகனிடம் வினவினான்.

மாதண்ட நாயகன் உபதலைவர்களை நோக்க அவர்கள், “நமது பாசறைக்கு அருகிலேயே மலைக் கோயில் ஒன்று இருக்கிறது. அங்கு இந்த முனிவர் தினமும் சென்று வழிபட்டுத் திரும்புவார்” எனப் பதிலளித்தான்.

“எத்தனை நாட்களாக அவர் வந்து சென்றுகொண்டு இருக்கிறார்?”

“நேற்றிலிருந்து!”

“ஒருவேளை அவர் ஒற்றராக இருந்தால்...?” எனக் குறுக்கிட்ட திருக்கண்ணன், “பாசறைக்கு அருகில் வேற்று மனிதர்கள் யாரையும் உலாவ விடுவது தவறு என்பதை அறியமாட்டீர்களா?” என வினவினான்.

“அவரை விசாரணை செய்தீர்களா?” என உபதலைவனை நோக்கி வினவினான் மாதண்ட நாயகன்.

“நேற்று அவரை நான் அழைத்து விசாரணை செய்தேன்!”

“என்ன தெரிவித்தார்?”

“அவர் எதையுமே தெரிவிக்க வில்லை!”

“என்ன உளறுகிறாய் உபதலை வனே?”

“ஆம், மாதண்ட நாயகரே. அவரை விசாரணை செய்யலாம் என்று நினைத்து அவரை அழைத்து அவரது திரு முகத்தை நோக்கினேன். இதுவரை எங் கும் காணாத ஒளியை அவரது கண்க ளில் கண்டேன் நான். அவரது முகத் தில் காணப்படும் அமைதி அவரைக் காண்கையில் நமது மனதையும் ஆட் கொண்டு விடுகிறது. ஆதலால் அவரிடம் எந்த வினாவையும் வினவாமல் அவரைச் சென்றுவிட பணித்து விட்டேன்.”

அவன் தெரிவித்த பதிலைக் கேட்டு மாதண்ட நாயகன், திருக்கண்

ணன் மற்றும் இம்ஹோடெப் ஆகிய மூவரும் அவனையே வியப்புடன் நோக்கினார்கள்.

அப்போது, “அவரை செல்லப் பணித்து விட்டாலும் அவரை நமது ஒற்றர்களை அனுப்பி கண்காத்துக் கொண்டுதான் இருக்கிறேன் மாதண்ட நாயகரே!” எனத் தெரிவிக்கவும் செய்தான் உபதலைவன்.

“சரி... சரி... அதைப் பற்றி பிறகு விவாதிப்போம்!” எனத் தெரிவித்த திருக்கண்ணன் மாதண்ட நாயகனின் கையில் இருந்த பட்டுத் துணியை விரித்து தரையில் கிடத்தினான். அனைவரும் அதை உற்று நோக்கினார்கள். திருக்கண்ணனுக்கு எதுவுமே புரியவில்லை. சிறிது நேரம் அதையே உற்று நோக்கிக்கொண்டிருந்தவன், “மாதண்ட நாயகரே உங்களுக்கு ஏதாவது புரிகிறதா?” என வினவினான்.

https://telegram.me/aedahamlibra

"இதில் வரையப்பட்டிருக்கும் சில கோடுகள், புள்ளிகள், அங்கிருந்து நோக்கும் அம்புக்குறிகள் ஆகியவற் றைத் தவிர்த்து எனக்கும் இதன் விவரம் புரிய மறுக்கிறது!" எனப் பதிலளித்தான் மாதண்ட நாயகன்.

அப்போது குறுக்கிட்ட இம்ஹோ டெப், "உஞ்சையை பூர்வீகமாகக் கொண்ட வீரர்கள் இங்கு பாசறையில் இருக்கிறார்களா?" என வினவினான்.

உபதளபதி ஒருவன் வந்தான். அவ னிடம் அந்த பட்டுத் துணியை நீட்டினான் திருக்கண்ணன். அதை சிறிது நேரம் உற்றுப் பார்த்தவன், அதில் நீளமாக, அதே சமயம் பட்டையாக தீட்டப்பட்டி ருந்த கோடு ஒன்றை சுட்டிக் காட்டியவன், "இது அவந்தி நதி" எனத் துவங்கினான்.

அருகில் நின்ற மற்றொரு உபத ளபதி, "இந்தக் கோடு அவந்தி நதி யைக் குறித்தால் இந்தப் பெரும் புள்ளி உஞ்சைப் பட்டினத்தைத்தான் குறிக்க

வேண்டும்!" எனத் தெரிவித்தவன் அந்தப் பெரும் புள்ளியை நோக்கி காணப் பட்ட அம்பு குறிகளைச் சுட்டிக் காட்டியவன், "இந்த மூன்று குறிகளும் எதற்காக உஞ்சையை நோக்கி வரையப்பட்டிருக் கிறது?" என வினவினான்.

உபதளபதி கீழே விரிக்கப்பட்டிருந்த பட்டுத் துணியை கையில் எடுத்து சிறிது நேரம் உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு மீண்டும் அதை தரையில் விரித்து, அதில் வரைந்திருந்த ஒரு கோட்டினையும், அருகே வைக்கப்பட்டிருந்த ஒரு புள்ளியையும் சுட்டிக் காட்டியவன், "இந்தப் புள்ளி நமது பாசறையைக் குறிக்கிறது. நமது பாசறைக்கு கிழக்குப் புறமாக ஓடும் சிற்றாறைத் தான் இந்தக் கோடு குறிக்கிறது!" எனத் தெரிவித்தவன் மற்ற இரண்டு புள்ளிகளும் எதைக்குறிக்கிறது?" எனத் தனக்குத்தானே வினவியவன், "இந்தப் புள்ளி நிலை வைக்கப்பட்டிருக்கும் இடத்தை நோக்கினால் இது சுங்கப் படையை அல்

லவா குறிக்கிறது? இதில் வரையப்பட்டிருக்கும் புள்ளிகளின் படி இங்கிருந்த ஒரு காத தொலைவில் நமது படையும் சுங்கப் படையுடன் இணைந்து விடுவதைப் போன்று இருக்கிறது? சுங்கப் படை எதற்காக உஞ்சையை நோக்கி நகரவேண்டும்? அப்படியே அவர்கள் முன்னேறினாலும் அவர்களை எதிர்க்கும் நமது படை எதற்காக அவர்களுடன் இணைய வேண்டும்? இதில் குறிக்கப்பட்டிருக்கும் மூன்றாவது புள்ளி எதைக் குறிக்கிறது?" அவர்கள் எதற்காக நமக்கு முன்னரே சுங்கப் படையுடன் கலந்துவிடுவதைப் போன்று கோடுகள் கிழிக்கப்பட்டிருக்கின்றன?" என தனக்குத் தானே வினாவைத் தொடுத்து பதிலைக் கண்டுபிடிக்க முயற்சித்துக் கொண்டிருந்தான்.

"மாதண்ட நாயகரே..." என அழைத்தான் திருக்கண்ணன்.

"கூறுங்கள் படைத் தலைவரே..."

https://telegram.me/aedahamlibra

"அவந்தியின் நிலையை இங்கிருக்கும் உபதலைவர்களள மற்றும் உபதளபதிகள் என அனைவரும் அறியட்டும். தெரியப்படுத்துங்கள்!" கட்டளையிட்டான் திருக்கண்ணன்.

திருக்கண்ணன் கூறியதைக் கேட்ட சாதவாகன உபதளபதிகள் மற்றும் உபதலைவர்கள் அனைவரும் இருவரையும் மாறி மாறி நோக்க, "உங்களுக்குத் தெரியாமல் பல சதிச் செயல்கள் உங்களை வைத்தே அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. அதன் வெளிப்பாடுதான் இந்த பட்டுத் துணி..." எனத் துவங்கினான் மாதண்ட நாயகன்.

"என்ன திட்டம் மாதண்ட நாயகரே?"

"வஜ்ரபாகு மற்றும் பலதேவன் மூலம் அவந்தியை நம்மிடமிருந்து கைப்பற்ற சுங்கர்கள் திட்டம் வகுத்திருக்கிறார்கள். வஜ்ரபாகுவின் அரியணைப் பைத்தியத்தை சுங்கர்கள் சாதகமாக பயன்

https://telegram.me/aedahamlibra

படுத்திக்கொள்ள முடிவு செய்துவிட்டார் கள்."

"இப்போது நாங்கள் என்ன செய்ய வேண்டும் மாதண்ட நாயகரே? கட்டளையிடுங்கள்!" என உபதலைவன் ஒருவன் வினவ, "இப்பொது அவர்களின் தாக்குதல் திட்டத்தை நாம் முழுவதுமாக தெரிந்துகொள்ள வேண்டும். அதன் பிறகுதான் நம்மால் அவர்களை எதிர்த்து முறியடிக்க இயலும்?" எனத் திருக்கண்ணன் கூறிய போது, "மாதண்ட நாயகரே, இவர் யார் என்று தாங்கள் இதுவரை எங்களுக்கு தெரியப்படுத்தவில்லையே? இவரைப் பார்த்தால் தென்னாட்டைச் சேர்ந்தவராக இருக்கிறாரே? அதிலும் இன்னொருவர் யவனராக இருக்கிறாரே? இவர்கள் இருவரும் யார்?" என வினவினான் உபதலைவன் ஒருவன்.

"இவர் திருக்கண்ணன். சோழ நாட்டு உபபடைத்தலைவர். மற்றொருவர் இவரது உபதளபதி."

https://telegram.me/aedahamlibra

“சோழ நாடு நமது பகை நாடு அல்லவா? உங்களது தலைமையிலான படையை அழித்ததும் அல்லாமல் நமது வலிமையான தென்திசைக் கோட்டை ஒன்றையும் அல்லவா அவர்கள் கைப் பற்றிக் கொண்டார்கள். இந்த நிலையில் தாங்கள் சோழப் படைத் தலைவரை தங் களுடன் அழைத்து வந்திருக்கிறீர்கள்?” என சற்றே கோபத்துடன் இரைந்து வின வியவன் இடையிலிருந்து வாளினையும் உருவினான்,

“வஜ்ரபாகுவின் கட்டளையை ஏற்று நான்தான் சோழப் படையைத் தாக்கி விரோதியாக்கிக் கொண்டேன். நமது சாதவாகன மன்னரை சந்தித்த பிற குதான் எனக்கு உண்மை நிலை தெரி யவந்தது. அதுமட்டுமல்ல...” எனக் கூறி வாக்கியத்தை முடிக்காமல் அவனைச் சுற்றிலும் நின்ற உபதளபதிகள் மற்றும் உபதலைவர்களை நோக்கினான்.

பிறகு, “நான் மட்டும் மன்னரை சந்திக்காமல் சென்றிருந்தால் சோழப் படையிடம் பைத்தானை இழந்திருப்போம். அவந்தியை வஜ்ரபாகுவிடம் இழந்திருப்போம்!” எனத் தெரிவித்தான் மாதண்ட நாயகன்.

அவன் கூறியதைக் கேட்டதும் சாதவாகன உபதலைவர்கள் மற்றும் உபதளபதிகள் அனைவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அவர்களில் ஒருவன், “இப்போது நாங்கள் என்ன செய்ய வேண்டும்?” என வினவினான்.

அப்போது திருக்கண்ணன், “அவர்களின் திட்டத்தை நாம் அறிந்துகொள்ள வேண்டும்” எனக் கூறியவன் பட்டுத் துணியில் விரிக்கப்பட்டிருந்த மூன்றாவது புள்ளியை சுட்டிக் காட்டி, “இந்தப் புள்ளி எங்கே இருக்கிறது?” என வினவினான்.

மாதண்ட நாயகன், “நாம் சத்திரத்தில் தங்கியிருந்தோமே, அங்குதான் இந்த இடம் இருக்க வேண்டும்! சரியா

கக் கூற வேண்டுமானால் சத்திரத்திற்கு வடக்கே அடர்ந்த வனம் இருக்கிறது. இந்த இடம் அதைத்தான் குறிக்கவேண் டும்" எனத் தெரிவித்தவன் அருகில் நின்ற உபதளபதியை நோக்கினான்.

அவனும் "ஆமாம்" என்பதைப் போன்று தலையை ஆட்டினான். பிறகு, "அங்கு எந்தப் படையும் நிலை கொண்டி ருக்கவில்லையே? பிறகு எதற்காக அவர் கள் பட்டுத் துணியில் குறித்திருக்கிறார் கள்?" என வினவினான்.

"யாருக்கும் தெரியாமல் அங்கு இர கசியப் படை மறைந்திருக்க வேண் டும். அதைத்தான் குறித்திருக்கிறார்கள்!" எனத் தெரிவித்த இம்ஹோடெப், "மூன்று படைகளையும் தனித் தனியாக இயக்கி அவற்றை ஒரு இடத்தில் ஒன்றுசேர்த்து உஞ்சைப் பட்டினத்தை நோக்கி முன் னேறுவதே அவர்களின் திட்டம்!" என முடித்தான்.

"இங்கு நிலைகொண்டிருக்கும் நமது படைபலம் எவ்வளவு?" என வினவினான் திருக்கண்ணன்.

"எட்டாயிரம் புரவி வீரர்கள் இருக்கிறோம். நாற்பது களிறுகள் இருக்கின்றன" எனப் பதிலளித்தான் சாதவாகன உபதலைவன்.

"புரவி வீரர்கள் வாள் மற்றும் வேலினை மட்டும்தான் வீசுவார்களா? அல்லது அம்புகளையும் செலுத்துவார்களா?"

"இங்கிருக்கும் அனைவருமே புரவியின் மீது நின்றுகொண்டு வாள் மற்றும் வேலினை வீசுவதில் வல்லவர்கள். ஆனால், புரவி வீரர்களில் இரண்டாயிரம் பேர் மட்டுமே வில் வீசத் தெரிந்தவர்கள்."

"ம்ம்ம்..." எனக் கூறிய திருக்கண்ணன் அந்த பட்டுத் துணியையே பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு, "சுங்கர்களின் படை பலம்?" என வினவினான்.

"அவர்களின் படைபலம் நம்மை விடவும் அதிகம்!"

"நான் எண்ணிக்கையை வினவி னேன்!" சற்றே கோபம் கொண்டான் திருக்கண்ணன்.

"பதிமூன்றாயிரம் புரவி வீரர்கள். யானை, காலாட்படையினர் என யாரும் இல்லை."

"அப்படியெனில் அவர்கள் விரைந்து தாக்குதல் தொடுக்கவே புரவி வீரர்களை மட்டும் அழைத்து வந்திருக் கிறார்கள்?"

"ஆமாம் படைத் தலைவரே... சுங் கர்களைப் போன்றே காட்டினுள் மறைந் திருக்கும் படையும் புரவி வீரர்களா கத்தான் இருப்பார்கள்" குறுக்கிட்டான் மாதண்ட நாயகன்.

"அவர்கள் எதிர்பாராத நேரத்தில், எதிர்பாராத இடத்தில் நாம் தாக்கி அவர் களின் முதுகெலும்பை உடைத்து அவர்

களை நாம் வீழ்த்தவேண்டும். தகவல் தெரிவிக்க ஒருவன் கூட தப்பக் கூடாது!"

"படைத் தலைவரே... எனக்கொரு திட்டம்!"

"கூறுங்கள் மாதண்ட நாயகரே..."

"நமது படையை இரண்டாகப் பிரிப் போம். ஒரு படையைக் கொண்டு அதி காலையில் உறங்கிக் கொண்டிருக்கும் சுங்கப் படையை அதிரடியாகத் தாக்கி சூறையாடுவோம்! இன்னொரு படையை காடுகளில் மறைந்திருக்கும் படையைத் தாக்க அனுப்பி வைப்போம். ஒரே நேரத் தில் இரண்டு இடத்திலும் தாக்குதலை நடத்துவோம்!"

"மாதண்ட நாயகரே, நம்மிடம் இருப்பவர்கள் எட்டாயிரம் பேர்தான். எதி ரிகளிடம் கிட்டத்தட்ட இரண்டு மடங்கு படை. அவர்களும் நம்மைப் போன்றே புர விப் படையைத்தான் வைத்திருக்கிறார் கள். இந்த நிலையில் நாம் சரியான திட்

டமிடுதல் இல்லாமல் நமது படையை இரண்டாகப் பிரிப்பது சாணக்கியத் தனம் அல்ல!"

"உதவிக்கு படைகளை அழைக்கலாமா?"

"நமக்குக் காலம் வெகு குறைவாகவே இருக்கிறது! இன்னொரு படையை அனுப்பி அவர்களை முறியடிக்க காலம் இருந்திருந்தால் அரசர் நம்மை அனுப்பியிருக்கவே மாட்டார். ஓலை மூலமே காரியத்தை சாதித்திருப்பார்!"

"இப்போது என்ன செய்வது?"

"அதைத் தான் நானும் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்! அவர்கள் எப்போது புறப்படுவார்கள்? அவர்களின் திட்டம்? என்ன என நாம் முழுவதும் தெரியாத வரை அவர்களை தாக்குவது நாமே வலிய சென்று தலையை கொடுத்துக் கொள்வதற்குச் சமம்! அனைத்தையும்

அறிந்த ஒருவனையும் நாம் கொன்றுவிட்டோம்!"

"இல்லை படைத் தலைவரே, இன்னொருவன் எஞ்சி இருக்கிறான்?"

"யார் அவன்?"

"இந்தப் பாசறைப் படைத் தலைவனின் மெய்க் காவலன். அவனுக்கு எப்படியும் தெரிந்திருக்கும். அவனுக்கு ஏதோ கட்டளையை அளித்து அவனை மட்டும் அருகில் இருக்கும் குன்றின் மீது ஏற்றி வைத்திருக்கிறான் பாசறைத் தலைவன்" எனக் கூறியவன் அருகில் உயர்ந்து வளர்ந்திருந்த குன்றினை சுட்டிக் காட்டினான்.

"அவனை இழுத்து வாருங்கள்!" கட்டளையிட்டான் திருக்கண்ணன்.

அடுத்த கணம் உபதலைவர்கள் நால்வர் அங்கிருந்து புறப்பட்டார்கள். ஒரு ஓரைப் பொழுதிற்குப் பிறகு அவனை அழைத்து வந்தார்கள். "இவ

னிடம் எதையாவது தெரிவித்தீர்களா?" என உபதலைவர்களை நோக்கி வினவினான் மாதண்ட நாயகன்.

"இல்லை" நால்வரும் ஒரே நேரத்தில் பதில் அளித்தார்கள்.

பாசறைத் தலைவனின் மெய்க் காவலனை நோக்கிய மாதண்ட நாயகன், "உனது பணி என்ன?" என்று வினவினான்.

"படைத் தலைவருக்கு காவல் காக்கும் பணி?"

"இப்போது எங்கிருந்து வருகிறாய்?"

"அருகில் இருக்கும் குன்றிலிருந்து!"

"அங்கு உனக்கு என்ன வேலை?"

"தலைவரின் கட்டளையை நிறைவேற்ற சென்றிருந்தேன்!"

"என்ன கட்டளை!"

"அதை உங்களிடம் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. படைத் தலைவருக்கு மட்டுமே கட்டுப்பட்டவன் நான்!"

"இவன் பாசறைத் தலைவனை சந்திக்கட்டும். பிறகு இங்கு அழைத்து வாருங்கள்!" எனக் கட்டளையிட இரண்டு உபதளபதிகள் அவனை தலை துண்டிக்கப்பட்டு கிடந்த பாசறைத் தலைவனை நோக்கி அழைத்துச் சென்றார்கள்.

மூவரும் திரும்பி வரும்போது மெய்க் காவலன் வெடவெடத்துப் போயிருந்தான். அதிர்ச்சியில் வியர்த்து போய் நின்றிருந்தவனிடம், "இப்போது அந்த துரோகி அளித்த கட்டளையை கூறப் போகிறாயா இல்லை அவனைப் போன்றே நீயும் உனது உயிரை இழக்கப் போகிறாயா?" என அவனது விழிகளில் தனது பார்வையை நிலைக்க விட்டபடியே வினவினான் மாதண்ட நாயகன்.

"என்னால் முடியாது! உயிரை நான் விட்டுவிடுகிறேன்!" எனத் திடமாகத் தெரிவித்தான்.

உபதலைவனிடம் இருந்த வாளினை வாங்கி ஓங்கினான் மாதண்ட நாயகன். அவனது கரத்தினைத் தடுத்த திருக்கண்ணன், "உண்மையை வாங்கு வதில் சாம, பேத, தண்டம் என மூன்று முறைகள் இருக்க முதல் இரண்டு முறை களில் மட்டும் முயற்சி செய்துவிட்டு முடி வெடுக்கக் கூடாது" எனத் தெரிவித்த வன் மெய்க் காவலின் வயிற்றில் தனது கையை விட்டு ஒரு திருகு திருகினான்.

திருக்கண்ணனின் நரம்படியினால் தாக்கப்பட்ட அடுத்த கணம் சுருண்டு போய் கீழே விழுந்தான் அந்த மெய்க் காவலன். "இன்னும் ஒரு நாழிகைக் காலம் கழித்து இவன் கண் விழிப்பான். அப்போது இவனை இழுத்து வாருங் கள்!" எனக் கூறியவன், "காலை உணவு தயார் ஆகட்டும்" எனக் கட்டளையிட்ட

படியே அருகில் ஓடிக்கொண்டிருந்த சிற்றாறை நோக்கிச் செல்லலானான்.

திருக்கண்ணன் கூறியதைப் போன்றே ஒரு நாழிகைக் காலம் கழித்து எழுந்து நின்றான் மெய்க் காவலன். உண வருந்திக் கொண்டிருந்த திருக்கண்ண னிடம் அழைத்துச் சென்றார்கள். அவ னுக்கு எதிரில் அவனை அமரவைத்த திருக்கண்ணன் அவனுக்கும் உணவை பரிமாறச் சொல்லி சைகை காட்டினான். அடுத்த கணம் அவனுக்கும் உணவு பரி மாறப்பட்டது.

அங்கிருந்த அனைவரும் காலை உணவை உண்டபிறகு மெய்க்காவலனி டம், "இப்போது சொல்!" எனக் கட்டளை யிட்டான் திருக்கண்ணன்.

"பாசறைத் தலைவர் தெரிவிக்கும் போது குன்றின் மீது வெண்புகையை உருவாக்கச் சொல்லி கட்டளையிட்டார்."

https://telegram.me/aedahamlibra

“சரி, நீ கிளம்பு!” எனக் கட்டளை யிட்டான் திருக்கண்ணன். அங்கிருந்து மெல்ல நடந்து சென்றான் மெய்க்காவ லன்.

“அவனை என்ன செய்வது? கொன்றுவிடட்டுமா?” என வினவினான் உபதலைவன் ஒருவன்.

“இவன் எய்யப்பட்ட அம்பு மட் டுமே! செல்லட்டும். ஆனால், நமது கண் காணிப்பிலேயே அவன் இருக்கட்டும்!” எனத் தெரிவித்த திருக்கண்ணன் மீண் டும் அனைத்து உபதலைவர்கள் மற்றும் உபதளபதிகளை அழைத்தான். மீண்டும் அதே பட்டுத் துணியை கீழே விரித்தவன், “நாளை இரவு நமது மொத்தப் படையும் இங்கிருந்து நகரப் போகிறது. நாளை மறு நாள் அதிகாலை நாம் சுங்கப் படையை சந்திக்கப்போகிறோம்!” எனத் திடமாகத் தெரிவித்தான் திருக்கண்ணன்.

“எங்கே தலைவரே, அவர்களின் பாசறையிலேயே அவர்களை நாம் தாக்

https://telegram.me/aedahamlibra

கப் போகிறோமா?" என மாதண்ட நாயகன் வினவ, "இல்லை!" என்ற பதில் உடனே திருக்கண்ணனிடமிருந்து வெளிவந்தது.

"வேறு எங்கே?" என வினவினான் இம்ஹோடெப்.

"இங்கே!" எனக் கூறிய திருக்கண் ணன், அந்தப் பட்டுத் துணியின் ஒரு இடத்தை சுட்டிக் காட்டினான்.

"சோழப் படைத் தலைவர் தனது திட்டத்தை தெளிவாக அறிவித்தால் செயல்பட சித்தமாக இருக்கும்!" என வேண்டினான் உபதலைவன் ஒருவன்.

"மெய்க்காவலன் கூறிய தகவலை யும், இந்த பட்டுத் துணியையும் வைத்து இணைத்துப் பார்த்தால் நமக்கு ஒன்று புரியும். படைகளின் நகர்வு இந்தப் பட் டுத் துணியில் தீட்டியிருக்கிறது. படை கள் புறப்படும் காலம் உஞ்சையில் எழும் கரும் புகை தீர்மானிக்கும். இங்கே குன்

https://telegram.me/aedahamlibra

றில் எழும் வெண் புகை சுங்கப் படை மற்றும் காட்டில் மறைந்திருக்கும் இரகசியப் படை ஆகியவற்றை புறப்படச் சொல்லி தெரிவிக்கும். நாளை மாலை நாமே இந்தக் குன்றின் மீது புகையை உருவாக்குவோம். சுங்கப் படை புறப்பட ஆயத்தமாகும். நமது ஒற்றர்கள் அதை உறுதி செய்வார்கள். நாமும் நாளை மாலையே இங்கிருந்து புறப்பட்டு பட்டுத் துணியில் நான் சுட்டிக் காட்டிய இடத்தில் அவர்களை எதிர்கொள்ளலாம்! அவர்களை முறியடித்துவிட்டு காடுகளிலிருந்து வந்துகொண்டிருக்கும் இரகசியப் படையை இரண்டாவதாக நேருக்கு நேர் தாக்குவோம்."

"எங்கே அவர்களை தாக்கப் போகிறோம் என்று புரிகிறது! ஆனால், எப்படி அவர்களை தாக்கப் போகிறோம் என்பதை படைத் தலைவர் இன்னும் குறிப்பிடவில்லையே?" என வினவினான் மாதண்ட நாயகன்.

https://telegram.me/aedahamlibra

“நமது படை நாளை புறப்படும் முன் நமது தாக்குதல் வியூகத்தை அனைவருக்கும் அறிவிக்கிறேன். அது வரை அனைவரும் ஓய்வெடுங்கள்! நமது ஒற்றர்களின் கண்காணிப்பிலேயே சுங்கப் படையின் நகர்வு இருக்கட்டும். இரண்டு ஒற்றர்கள் இன்றே புறப்பட்டு காடுக ளில் மறைந்திருக்கும் படையைக் கண் காணிக்கட்டும். அவர்களின் படைபலம், நகர்வு ஆகிய தகவல் தொடர்ந்து வந் துகொண்டே இருக்கட்டும்” எனத் திருக் கண்ணன் கூறிக்கொண்டிருந்த போதே அவர்களை நோக்கி ஒரு புரவி வந்து கொண்டிருந்தது. அந்தப் புரவியின் மீது உடைமையும் கிடத்தப்பட்டிருந்தது.

அதைக் நோக்கினான் திருக்கண் ணன். உடலின் மீது கார்மேகத்தைப் போர்த்தியதைப் போன்று கருமையாகக் காணப்பட்டது அப்புரவி. எஃது தூணைப் போன்று நீண்டிருந்தன கால்கள், சதை பிடித்த தேகம், கம்பீரமான திமில், திமி லில் வளர்ந்திருந்த அடர்ந்த கருத்த முடி

ஆகியவை அந்தப் புரவியை ராஜபுரவி யாக அடித்திருந்தது. ராஜ நடையுடன் அவர்களை நோக்கி வந்துகொண்டிருந்த அப்புரவியைக் கண்ட திருக்கண்ணன் வியப்பில் எழுந்து நின்றான்.

அப்போது அவனுக்கு அருகில் நின்ற உபதலைவன், "தலைவரே, கடந்த இரண்டு தினங்களாக இப்புரவி இங் குதான் சுற்றிக் கொண்டு இருக்கிறது. அதன் அருகில் யாராலும் நெருங்க இய லவில்லை" எனத் தெரிவித்தான் அப்புர வியை நோக்கியபடியே.

"தன் தலைவன் மற்றும் தலைவன் சுட்டிக் காட்டியவர்களைத் தவிர இப்புரவி வேறு யாரையும் தனக்கு அருகில் அனு மதிக்காது!" என அவன் கூறிக்கொண் டிருந்த போதே அவனை நோக்கி வந்த அப்புரவி அவனைப் பார்த்து கனைத் தது. பற்களைக் காட்டிக்கொண்டு துள் ளிக் குதித்து அவனிடம் வந்த அப்பு ரவி அவனது முகத்தை நக்கிக் கொடுக்

https://telegram.me/aedahamlibra

கவும் செய்தது. அதன் தலையை தனது முகத்தோடு அழுத்தி அதன் கழுத்து மற்றும் உடலை தடவிக் கொடுத் தான். திருக்கண்ணனின் தோள் மீது தனது தலையைக் கிடத்தியது அப்புரவி. உடலை வருடிக் கொண்டிருந்த அவனது கையை தனது வாளினால் அடித்தது புரவி. உடனே அதன் தேவையைப் புரிந்துகொண்ட திருக்கண்ணன் அதன் வாளினை நன்கு முறுக்கிக் கொடுத் தான்.

அதன் உடலின் மீது கிடத்தப்பட் டிருந்த உடைமைகளை கீழே இறக்கி னான் திருக்கண்ணன். அப்போது அந்த உடமைகளுக்குள் மறைத்து வைக்கப் பட்டிருந்த வாளினைப் பார்த்தவன், “நீ இங்கே இருக்கிறாய்? படைத்தலைவரின் வாளும் இங்கேதான் இருக்கிறது! அவர் எங்கே?” என அப்புரவியிடம் வினவி னான். அவனது கேள்வி அப்புரவிக்குப் புரிந்தாலும் அதனால் எந்தப் பதிலை

யும் தெரிவிக்க இயலாததால் தனது பல் தெரிய இரண்டு முறை கனைத்தது.

கண்களைக் கூசும் அளவிற்கு பள பளவென்று காட்சியளித்தது அவ்வீர வாள். அவனது கை அளவிற்கு நீண்டு கூர்மையாக காணப்பட்டது. அதன் கைப் பிடியில் புலிச்சின்னம் பொறிக்கப்பட்டு கம்பீரத்துடன் காணப்பட்ட அவ்வாளி னைப் பார்த்துப் பிரமித்தபடியே நின்ற திருக்கண்ணன் அந்த வீர வாளினை வணங்கி அதைக் கையில் எடுத்தான். கையில் எடுத்தவன் சற்றுத் தள்ளிச் சென்று வாளினை சுழற்றினான். அவனது கரங்களில் அதிவேகமாகச் சுழன்ற அந்த வாளினைப் பார்த்தபடியே அனைவரும் நிற்க, “என்ன திருக்கண்ணா... நான் பழக்கிய புரவியைப் போன்று எனது வாளும் இப்போது உனக்கு தேவையாக இருக்கிறதா?” என எழுந்த குரலைக் கேட்டு அங்கிருந்த அனைவருமே குரல் எழுந்த திசையை நோக்கித் திரும்பினர்.

முகம் முழுவதும் வளர்ந்த நரைத்த தாடியுடன் பழுத்த கிழம் போன்ற முனிவர் அவர்களை நோக்கி வந்துகொண்டிருந்தார். அந்தக் குரலைக் கேட்டதுமே வாளினை சுழற்றுவதை நிறுத்திய திருக்கண்ணன் முனிவரை நோக்கி ஓடினான்.

திருக்கண்ணன் முனிவரை நோக்கிய அடுத்தகணம் தனது முகத்தை மறைத்திருந்த நீண்ட தாடி மற்றும் நரைத்த முடி ஆகியவற்றை நீக்கிய அம்முனிவர் திருக்கண்ணனை அணைத்துக்கொண்டார்.

திருக்கண்ணனின் விழிகளில் இருந்து ஆனந்தத்தில் துளிர்த்த இரண்டு துளிக் கண்ணீர் மாறுவேடம் களைந்த செங்குவீரனின் வலிமையான தோளில் விழுந்து அவனது மனதை குளிரச் செய்தது.

https://telegram.me/aedahamlibra

# 32.

# செங்குவீர னின் முடிவு

நீண்ட நாட்கள கழித்து தனது படைத் தலைவனை சந்தித்த தால் பெரும் மகிழ்ச்சியில் அவனது தோளில் சாய்ந்தபடியே நின்றுகொண் டிருந்தான் திருக்கண்ணன். பிறகு அணைப்பிலிருந்து விடுபட்டவன் கையி லிருந்த வீர வாளினை தரையில் ஊன்றி செங்குவீரனுக்கு மரியாதை செலுத்தி னான். உடனே அருகில் நின்ற இம்ஹோ டெப்பும் திருக்கண்ணனுடன் சேர்ந்து மரியாதை செலுத்தலானான்.

இருவரது மரியாதையும் ஏற் றுக்கொண்ட செங்குவீரன் இம்ஹோ

டெப்பை, "இம்ஹோடெப், நலம் தானே?" என வினவினான்.

"தங்களைப் பிரிந்திருந்ததைத் தவிர என் நலத்திற்கு வேறு எந்த அசௌகரியமும் இல்லை தலைவரே!" எனப் பணிவுடன் தெரிவித்தான் இம் ஹோடெப்.

"நல்ல தமிழ் பேசக் கற்றுக்கொண் டீர்கள் இம்ஹோடெப்" என அவனிடம் கூறிக்கொண்டே சுற்றிலும் நோக்கினான் செங்குவீரன்.

முனிவர் வேடத்தை களைந்து நின்ற செங்குவீரனையும் அருகில் நின்ற அவனது புரவி, திருக்கண்ணனின் கையில் இருந்த அவனது வாள் ஆகிய வற்றைப் பார்த்தபடியே வியப்புடன் நின் றுகொண்டிருந்தார்கள் சாதவாகன உப தலைவர்கள் மற்றும் உபதளபதிகள் அனைவரும். எதிரில் வியப்புடன் நின் றுகொண்டிருந்த மாதண்ட நாயகனை

நோக்கி கையை அசைத்தான் செங்குவீ ரன்.

செங்குவீரன் யார் என்று அறி யாவிட்டாலும் திருக்கண்ணன் மற்றும் இம்ஹோடெப்பின் பணிவையும், மரி யாதையையும் பார்த்துக்கொண்டிருந்த மாதண்ட நாயகனும் செங்குவீரனுக்குத் தலை வணங்கி மரியாதை செலுத்தி னான். அவனிடம், “சோழப் படையை தாக்கியது தாங்கள்தானா மாதண்ட நாய கரே?” என வினவினான் செங்குவீரன்.

எந்தப் பதிலையும் அளிக்காமல் அமைதியாக நின்றுகொண்டிருந்தான் மாதண்ட நாயகன்.

“இனி நடக்கப் போவதைப் பற்றி பேசுவோம்!” எனத் தெரிவித்தவன் திருக்கண்ணனின் கையில் இருந்த பட் டுத் துணியை வாங்கி சிறிது நேரம் உற்று நோக்கிக் கொண்டிருந்தான்.

https://telegram.me/aedahamlibra

அப்போது மாதண்ட நாயகன் அருகில் நின்ற இம்ஹோடெப்பிடம், “யார்?” என்று கண் பார்வையால் வினவினான்.

“நான் தான் அன்றே தெரிவித்தேனே?”

மாதண்ட நாயகன் இம்ஹோடெப்பை மிரட்சியுடன் நோக்கினான்.

“உங்களுக்கு அதிர்ஷ்டம் இருந்தால் தலைச் சிறந்த வீரரை தாங்கள் சந்திப்பீர்கள் என்று!”

“இப்போது சந்திவிட்டு விட்டேனா?”

“ம்ம்ம்.”

“சரி, நான் சந்தித்திருக்கும் இவர் யார் என்று கூறுகிறாயா?” எனச் சற்றே சத்தத்துடன் வினவினான்.

அவன் எழுப்பிய சத்தத்தைக் கேட்டு திருக்கண்ணன் மற்றும் செங்குவீரன் என இருவரும் ஒரே நேரத்

தில் மாதண்ட நாயகனை நோக்கி னார்கள். திருக்கண்ணன் செங்குவீரனி டம், "இடையூருக்கு மன்னிக்க வேண்டும் தலைவரே..." எனக் கூறியவன் மாதண்ட நாயகனிடம், "சோழப் படைத் தலைவர் விறல்வேல்" எனத் தெரிவித்தான்.

"விறல்வேல். இந்தப் பெயரை நான் இதுவரை கேள்விப்பட்டதில் லையே. நான் சோழப் படையை முற்று கையிட சென்றபோது கூட சாதவாகன ஒற்றர்கள் குறிப்பிடவில்லை" என செங் குவீரனைப் பார்த்தபடியே தெரிவித்தான் மாதண்ட நாயகன்.

"மாதண்ட நாயகரே... இவர் தான் செங்குவீரர். உங்களுக்குப் புரிய வேண் டுமானால் உங்களது படையை முறியடித் தாரே வானவல்லி. அவர் இவரது தர்ம பத்தினி!" என செங்குவீரனின் காதுக ளில் விழாத அளவிற்கு மாதண்ட நாயக னிடம் தெரிவித்தான் திருக்கண்ணன்.

https://telegram.me/aedahamlibra

"செங்குவீரன்" என்ற பெயரைக் கேட்டதுமே உடல் சிலிர்க்க இடையில் கட்டியிருந்த உறையிலிருந்து வாளினை உருவி தரையில் ஊன்றியவன், "மன் னிக்கவும் வீரரே. தாங்கள் என்று அறி யாமல் நான் செய்த பிழையை பொறுத் துக்கொள்ள வேண்டும். பாரதவர்சத்தின் தலைச் சிறந்த வீரரான தாங்கள் இந் தச் சிறிய வீரனின் மரியாதையை ஏற்றுக் கொள்ள வேண்டும்" எனப் பணிந்தான். மாதண்ட நாயகனின் பணிவைப் பார்த் ததும் உடனே அங்கு நின்ற உபதளபதி கள், உபதலைவர்கள் என அனைவரும் செங்குவீரனுக்குப் பணிந்து மரியாதை செலுத்தலானார்கள்.

அவனது பணிவை ஏற்றுக்கொண்ட செங்குவீரன், "மாதண்ட நாயகரே, வீரத் தில் தலைச் சிறந்தது தாழ்ந்தது என எது வுமே இல்லை. நாம் அனைவருமே வீரர் கள்தான்" என அவனது தோளின் மீது தனது கையைப் போட்டபடி தெரிவித்த செங்குவீரன், மற்றொரு கையில் இருந்த

பட்டுத் துணியை திருக்கண்ணனிடம் கொடுத்துவிட்டு, “அனைத்தும் தாயார் தானே?” என வினவினான்.

“அனைத்தும் தயார் தலைவரே... தங்களது கட்டளைக்காக நாங்கள் காத் திருக்கிறோம்!”

“எனது கட்டளை எதற்கு?”

“தலைவரே...” அதிர்ச்சியுடன் செங் குவீரனை நோக்கினான் திருக்கண் ணன்.

“ஆமாம் திருக்கண்ணா... இந்தப் போரை நீ தான் வழிநடத்தப் போகிறாய். உனக்கு பக்கபலமாக மாதண்ட நாயகர் இருக்கிறார்.”

“சாதவாகன அரசர் தங்களது கட்ட ளையை நிறைவேற்றச் சொல்லி ஆணை பிறப்பித்திருக்கிறார்.”

“அதற்கு அவசியம் இல்லை திருக் கண்ணா... இரண்டு நாட்களாக நான்

உன்னைக் கண்காணித்துக் கொண்டு தான் இருக்கிறேன்" என அவன் கூறிக் கொண்டிருந்த போதே குறுக்கிட்ட திருக் கண்ணன், "இரண்டு நாட்களாகவா?" என வினவினான்.

"ஆமாம்... நீ சத்திரத்தை அடைவ தற்கு முன்னரே நான் உன்னை கண் காணிக்கத் துவங்கி விட்டேன். காலை யில் இங்கு நடந்த களேபரங்களை அரு கில் இருக்கும் குன்றிலிருந்து கவனத் துக் கொண்டுதான் இருந்தேன்! எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை முன்னெ டுத்துவிட்டாய்தானே?"

"தயார் தலைவரே... நீங்கள் ஒரு முறை கேட்டு..." என திருக்கண்ணன் கூறிக் கொண்டிருந்த போதே குறுக்கிட்ட செங்குவீரன், "எனக்கு எனது உபதலை வன் மீது நம்பிக்கை வந்துவிட்டது திருக் கண்ணா... உனது மனக் குமுறலை நான் அறிவேன். அதை நீ தணிக்கும் காலம் உனக்குக் கைகூடி விட்டது!" என்றான்.

https://telegram.me/aedahamlibra

“தலைவரே...” பதறினான் திருக் கண்ணன்.

“நான் அனைத்தையும் அறிவேன் திருக்கண்ணா... கரிகாலரின் மெய்க் காவலராக நீ நியமிக்கப் பட்டதிலிருந்து உனது வீரத்தை உன்னால் உபதலை வர்கள் வில்லவர் மற்றும் பரதவன் கும ரன் ஆகியவர்களைப் போன்று சுதந் திரமாக வெளிப்படுத்த இயலவில்லை எனும் உனது மனக் குமுறலை நான் அறி வேன். உனது இடையில் நீண்ட கால மாக உறங்கிக் கொண்டிருக்கிறது உனது வாள். அதன் பசியை சுங்கர்களின் தலை களாலும், தாகத்தை அவர்களின் குருதி களாலும் போக்கிவிடு. இந்தப் போரினை நீயே நடத்து. வெற்றியோடு சுங்கர்களின் தலையுடன் வரும் உனக்காக நான் காத் திருப்பேன்!” எனத் தெரிவித்த செங்குவீ ரன் சீழ்க்கை ஒலி எழுப்பினான். அவனது கருமை நிறப் புரவி அவனுக்கு அருகில் வந்து நின்று தலையை ஆட்டியது.

திருக்கண்ணனின் கையில் இருந்த வாளினை வாங்கி இடையில் கட்டிக்கொண்ட செங்குவீரன் அருகில் நின்ற இம்ஹோடெப்பை நோக்கி, "புறப்ப டலாமா?" என வினவினான்.

தலையை ஆட்டினான் இம்ஹோ டெப்.

அப்போது திருக்கண்ணன், "இம் ஹோடெப்பையும் உங்களுடன் அழைத் துச் செல்லப் போகிறீர்களா?" என வின வினான்.

"இல்லை!" உடனே பதில் வந்தது செங்குவீரனிடமிருந்து.

"அப்படியெனில்..." எனக் கூறிய திருக்கண்ணன் செங்குவீரனின் மன ஓட்டத்தை அறிந்துகொண்டு இம்ஹோ டெப்பை நோக்கினான்.

"இம்ஹோடெப் மீண்டும் அவருக் குப் பிடித்த கடல் மங்கையுடன் உற வாடப் போகும் காலம் நெருங்கி விட்

டது! இனி அவரது தேவை நமக்கு இல்லை!" எனக் கூறியவன் இடையில் இருந்த ஓலை ஒன்றை எடுத்து இம்ஹோடெப்பிடம் கொடுத்து, "ஏற்கனவே செய்தியை உரியவனுக்கு அனுப்பிவிட்டேன். கிருஷ்ணை நதிக்கரைக்கு தாங்கள் செல்லும் தருவாயில் சோழப் படைகள் அனைத்தும் அங்கு வந்து சேர்ந்திருக்கும். இணைந்து கொள்ளுங்கள்!" எனக் கட்டளையிட குதூகலமானான் இம்ஹோடெப்.

அந்தக் குதூகலத்திலும் அவனது முகத்தில் சிறு வருத்தம் தோன்றியது. அதைக் கண்ட செங்குவீரன், "உபதலைவரின் மனதில் வருத்தம் எதோ சூழ்ந்திருக்கிறது போலிருக்கிறதே!" என வினவினான்.

"ஆம் தலைவரே... தங்களைப் பிரிவது மனதிற்கு வருத்தத்தை அளிக்கிறது!"

https://telegram.me/aedahamlibra

"பிரிவுதான் எப்போதுமே உறவினை வலுவுடையதாக ஆக்குகிறது இம்ஹோடெப்! திருக்கண்ணனும் அவனது உயிரை அவந்தியிலேயே விட்டுவிட்டு இங்கு போரிட வந்திருக்கவில்லையா? நானும் விரைவில் உங்களுடன் சேர்ந்துகொள்வேன். இன்னும் பத்து நாட்களில் நான் அவந்தி வந்த பணி முடிவடைந்து விடும். உங்களைப் பின்தொடர்ந்து நானும் வந்துவிடுவேன். பிரிவோம் என்ற கவலை வேண்டாம். உரிய நேரத்தில் வானவல்லியிடம் ஓலையை சேர்ப்பித்து விடுங்கள்!"

"தங்களது கட்டளை தலைவரே" எனப் பதிலளித்தவன் தலைவருக்கு ஆட்சேபனை இல்லை எனில் நாளைய மறுதினம் நான் இங்கிருந்து புறப்படலாமா?" என வினவினான்.

செங்குவீரன் அவனது விழிகளை ஊடுருவுவதைப் போன்று அவனைக் கூர்ந்து நோக்கினான்.

https://telegram.me/aedahamlibra

“நாளை மறுநாள் காலை இங்கு யுத்தம் துவங்கவிருக்கிறது.. திருக்கண்ணனின் திட்டத்தைக் கேட்டபிறகு எனது இடை வாளும் என்னை நச்சரிக்கத் துவங்கிவிட்டது. ஆதலால் நானும் போரில்...” எனத் தயங்கினான்.

“சரி இம்ஹோடெப். உங்களது விருப்பம். ஆனால், ஓலை பத்திரம்!” என அவனிடம் கூறியவன், திருக்கண்ணனை நோக்கி அவனது விழிகளை நோக்கியபடியே, “உடலில் நஞ்சு இன்னும் முற்றிலும் விலகவில்லை. ஆதலால் கவனத்துடனே செயல்படு” எனத் தெரிவித்த செங்குவீரன் புரவியின் மீது தாவி கண நேரத்தில் அவர்களின் பார்வையிலிருந்து மறைந்தான்.

அவன் மறைந்த பிறகு மாதண்ட நாயகன், “இப்படியொரு படைத் தலைவரை நான் எங்கும் காணவில்லை” எனத் தெரிவித்தான்.

“ஏன் அப்படிக் குறிப்பிடுகிறாய்?”

"உபதலைவனின் மனதில் இருப்பதை அப்படியே அறிந்து வைத்திருக்கிறார்?"

"அதுதான் அவரை இன்னமும் தலைச் சிறந்த வீரராக உயர்த்திக் கொண்டிருக்கிறது."

"இந்தப் போரின் மூலம் தனக்குக் கிடைக்க வேண்டிய புகழ், பெயர் ஆகியவற்றை உங்கள் இருவருக்காகவும் அவர் விட்டுக்கொடுத்துவிட்டு செல்கிறார்."

"அதை நானும் அறிவேன் மாதண்ட நாயகரே..."

"தனது உபதலைவர்களை மதிக்கத் தெரிந்த படைத்தலைவர். அவருடன் போர் புரியவும், அவரது வாள் வீச்சை கவனிக்கும் வாய்ப்புதான் எனக்குக் கிடைக்காமல் போய்விட்டது" எனப் பெருமூச்சு விட்ட மாதண்ட நாயகன் செங்குவீரனின் புரவி சென்ற பாதையில் எழுந்தி

https://telegram.me/aedahamlibra

ருந்த புழுதியையே பார்த்துக் கொண்டி ருந்தான்.

அப்போது மகிழ்ச்சியில் நின்ற திருக்கண்ணனுக்கு அருகில் வந்த இம் ஹோடெப், "படைத் தலைவர் நீங் கள் உங்களது உயிரை உஞ்சையிலேயே விட்டுவிட்டு வந்திருப்பதாக தெரிவித் தாரே? அவர் அதனை எப்படி அறிந்தி ருப்பார்?" என வினவினான்.

"எனக்கும் அந்தக் குழப்பம் இருக் கிறது இம்ஹோடெப். நல்லது நடந்தால் சரி. முக்கியமான பணி ஒன்று இருக் கிறது, வாருங்கள் புறப்படுவோம்" எனத் தெரிவித்தவன் புரவியில் ஏறி சாதவாகன படைத் தளபதி ஒருவனையும் இம்ஹோ டெப்புடன் அழைத்துக்கொண்டு அங்கி ருந்து விரைந்து செல்லலானான்.

https://telegram.me/aedahamlibra

# 33. அதிரடித் தாக்குதல்

பொழுது மேற்குத் திசையில் விழுவதற்கு ஒரு முகூர்த்தப் பொழுது காலம் மிச்சமிருந்தாலும் வானில் சூழ்ந்திருந்த கார் மேகங்களால் கிழக்கு வானில் இருள் சூழத் துவங்கியிருந்தது. மேற்கு வானம் முழுவதும் குருதிக் கரை படிந்ததைப் போன்று சிவந்து காணப்பட்டது. விந்திய மலையிலிருந்து உருவாகி வடக்கு நோக்கிச் செல்லும் நதிகளாலும், ஓடைகளாலும் உருவாகியிருந்த அடர்ந்த வனத்தில் அவந்தியின் எல்லைக்குள் ஊடுருவி நிலை கொண்டிருந்தார்கள் சுங்கப் படையினர். சாதவாகன படையின் தலைவன் வஜ்ரபாகுவின் கட்டளையின் பேரில்தான் சுங்கப் படையினர் அவந்திக்குள் ஊடுருவியிருந்தா

லும் சுங்க அரசின் பட்டத்து இளவரசன் சுங்கமித்திரன் அவந்திக்குள் நுழைந்தி ருப்பதால் சுங்க உபதலைவர்கள் பெரும் எச்சரிக்கையுடன் காணப்பட்டார்கள். அனைத்து திசைகளிலும் ஒற்றர்களை ஊடுருவச் செய்து தொடர்ந்து கண்கா ணித்துக் கொண்டிருந்தனர். சுங்க வீரர் கள் எந்தவித கூடாரங்களும் அமைத்துக் கொள்ளாமல் எப்போது வேண்டுமானா லும் புறப்படும் வகையில் திறந்த வெளியி லேயே தங்கி உரிய கட்டளைக்காக காத் திருந்தார்கள்.

சுங்க வீரர்கள் பயிற்சியில் ஈடுபட் டுக் கொண்டும், காவல் காத்துக்கொண் டும், ஓய்வெடுத்துக் கொண்டுமிருந்ததை சுங்கர்களின் படைத் தலைவன் பார்வை யிட்டுக் கொண்டு அவர்களுக்கு உரிய கட்டளைகளைப் பிறப்பித்துக் கொண் டிருந்தான். அப்போது அவனை நோக் கிப் புரவியில் அதிவேகமாக வந்த புரவி வீரன், “தலைவரே, கிழக்குத் திசையில் வெண்புகை எழுந்துகொண்டு இருக்கி றது!” என மூச்சுவாங்கியபடியே தெரிவித் தான்.

https://telegram.me/aedahamlibra

“எவ்வளவு காலமாக?”

“கடந்த ஒரு நாழிகைக் காலமாக!”

வீரர்களுக்கு பயிற்சியளித்துக் கொண்டிருந்த அவனது உபதலைவனை அழைத்த சுங்கப் படைத் தலைவன், “நமது திட்டப்படி படை புறப்பட ஆயத்தமாகட்டும்! உடனே நாம் இங்கிருந்து புறப்படப் போகிறோம்!” எனக் கட்டளையிட்டவன் அந்தப் புரவி வீரனை அழைத்துக்கொண்டு புறப்பட்டான்.

பாசறைக்கு சற்றுத் தொலைவில் உயர்ந்து வளர்ந்திருந்த மரத்தின் மீது ஏறினான் சுங்கப் படைத் தலைவன். வெகு தொலைவில் வானை நோக்கி எழுந்துகொண்டிருந்த அந்த வெண் புகை மூட்டத்தையே சற்று நேரம் பார்த்தவன் பிறகு சிந்தனையுடன் கீழே இறங்கிச் சென்றான்.

அவன் திரும்பி வரும்போது அவனது முகத்தில் சந்தேகங்கள்

https://telegram.me/aedahamlibra

தோன்றி அவனை எச்சரித்துக் கொண் டிருந்தது. அவனது முகத்தில் தோன்றி யிருந்த சிந்தனையின் சாயலைக் கண்ட அவனுடைய உபதலைவன், “தலைவரே, புறப்பட ஆயத்தமாகிவிட்டோம்!” எனத் தெரிவித்தான்.

அவன் கூறியதைக் கூட காதில் வாங்கிக் கொள்ளாமல் சிந்தனையி லேயே புரவியின் மீது அமர்ந்திருந்தான் சுங்கப் படைத்தலைவன்.

அவனிடம், “தலைவரே...” என சற்றே சத்தத்துடன் அவனது சிந்தனை களையும்படி அழைத்தான் உபதலை வன்.

தனது உபதலைவனை நோக்கி னான் சுங்கப் படைத்தலைவன்.

“தலைவரே... உங்களது முகத்தில் சந்தேகத்தின் சாயல் தோன்றியிருக்கி றது? நடக்கக்கூடாதது ஏதேனும் நடந்து விட்டதா?” என வினவினான்.

https://telegram.me/aedahamlibra

"உறுதியாகத் தெரியவில்லை!"

"உங்களது முக வாட்டத்திற்குக் காரணம்?"

"நம் பட்டத்து இளவரசர் சுங்கமித் திரன் நமது எச்சரிக்கையையும் காதில் வாங்கிக் கொள்ளாமல் அவந்திக்குள் நுழைந்திருக்கிறார். அவரை எண்ணித் தான் நான் இப்போது கவலை கொள்கி றேன்."

"அவர் அவந்திக்கு சென்று பல நாட்கள் ஆகிவிட்டதே... அப்படியிருக்க திடீரென்று உங்களது முகத்தில் கவலை எதற்காக தோன்றியிருக்கிறது?"

"ஆமாம். கவலைதான். சுங்க இள வரசர் மற்றும் வஜ்ரபாகு வகுத்த திட் டப்படி நாம் புறப்பட இன்னும் இரண்டு தினங்கள் இருக்கின்றன. அப்படியிருக்க, இப்போது நாம் உடனே புறப்படும்படி சமிக்கை வந்திருக்கிறது. அதன் கார ணம்தான் எனக்குத் தெரியவில்லை."

https://telegram.me/aedahamlibrary

“நாம் முன்னதாக அழைக்கப்பட்டிருப்பதால் அவந்தியில் விரும்பத்தகாத நிகழ்வு ஏதேனும் நடந்திருக்கும் என்று கவலை கொள்கிறீர்களா?”

“ம்ம்ம்...” என மட்டும் தெரிவித்தவன் மீண்டும் சிந்தனையின் வசப்பட்டான். பிறகு சிந்தனையிலிருந்து மீண்டவன், “நமது படை புறப்படுவதற்கு ஆயத்தமாகிவிட்டதுதானே?” என வினவினான்.

“தயார் தலைவரே... உங்களது கட்டளைக்காகத் தான் காத்திருக்கிறோம்!”

“சரி... படை புறப்பட தயார் ஆகட்டும். உடனே, உபதலைவர்கள், உபதளபதிகள் என அனைவரையும் ஒன்றுகூடச் சொல்” எனக் கட்டளையிட்ட சுங்கப் படைத் தலைவன் புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்த புரவி வீரர்களை உற்சாகப்படுத்த விரைந்தான்.

https://telegram.me/aedahamlibra

மீண்டும் ஒரு நாழிகைப் பொழுது கழித்து திரும்பி வந்தான் படைத்தலைவன். அவனது கூடாரத்தில் அவன் கட்டளையிட்டதைப் போன்று அனைவரும் ஒன்றுகூடியிருந்தார்கள். அவர்களிடம், “அனைவரும் தயார்தானே?” என வினவினான்.

“அனைத்தும் தயார் தலைவரே... புறப்பட வேண்டியதுதான்.”

“காலையிலிருந்து கிடைத்துக் கொண்டிருக்கும் செய்திகளும், நிமித்தங்களும் என்னை ஏதோ ஒரு முறையில் எச்சரிக்கை செய்துகொண்டிருக்கின்றன. ஆதலால் நாம் எவ்வளவு விரைவில் உஞ்சையை அடைய இயலுமோ? அவ்வளவு விரைவில் உஞ்சையை அடைந்துவிட வேண்டும்! பயணிக்கும் அடுத்த ஒன்றரை நாள் முழுக்க அடர்ந்த வனத்தை மட்டுமே நாம் கடக்க வேண்டியிருக்கும். உணவு பெற்றுக்கொள்ள எந்த கிராமத்தையும் நம்மால் காண இய

https://telegram.me/aedahamlibra

லாது. ஆதலால் வேண்டிய உணவுப்
பொருட்களை எடுத்துக் கொள்ளுங்கள்!
இரவு முழுவதும் பயணிப்போம். கதிரவன்
உச்சி வந்ததும் ஒய்வு எடுப்போம் அதே
போன்று நள்ளிரவில் துவங்கி அதிகாலை
வரை இடையில் ஓய்வெடுத்துக் கொள்
வோம்!" முதலில் நான் செல்கிறான். பிறகு
நீங்கள் ஒவ்வொருவராக உங்களது புர
விப் படையுடன் என்னைப் பின்தொ
டர்ந்து வாருங்கள். கடைசியாக எனது
மெய்க் காவல் தலைவன் அனைவரை
யும் பின்தொடர்ந்து வருவான்!"

"தங்களது கட்டளை படைத் தலை
வரே" என எழுந்து தெரிவித்த சுங்
கப் படைத் தலைவனின் மெய்க் காவ
லன், "உணவுப் பொருட்கள் மற்றும் வில்,
வாள், வேல் போன்ற ஆயுதத் தளவா
டங்களைப் புரவியில் ஏற்றி அவற்றை
நான் என்னுடனே கொண்டு வருகிறேன்"
எனத் தெரிவித்தான்.

அவன் கூறியதைக் கேட்டதும் சற்றே கோபம் கொண்ட சுங்கப் படைத் தலைவன், "நாம் பயணித்துக் கொண்டி ருக்கும் போது திடீரென்று நாம் தாக்கப் பட்டால் என்ன செய்வாய்? நம் வீரர்கள் கையில் இருக்கும் ஆயுதத்தை எறிந்து பயன்படுத்தியதும் ஆயுதமில்லாமல் மர ணத்தைத் தழுவ வேண்டுமா?" என வின வினான்.

"தலைவரே, செல்லும் வழியில் நமக்கு என்ன ஆபத்து வந்துவிடப் போகி றது? சாதவாக படைகளின் போர்ப்ப டைத் தலைவன் வஜ்ரபாகு, உஞ்சை யின் காவல் தலைவன் பலதேவன் ஆகியவர்களின் அழைப்பினை ஏற்றுத் தானே நாம் சென்றுகொண்டு இருக்கி றோம். இந்த நிலையில் நம் பயணத்தில் ஆபத்தை விளைவிக்க யார் வந்துவிடப் போகிறார்கள்?" என வினவினான்.

"அடேய், முட்டாள். நாம் பயணிக் கப் போவது நம் எதிரிகளின் நாட்டிற்குள்.

ஆபத்து எப்படி வேண்டுமானாலும் ஏற்படலாம். அனைத்திற்கும் நாம் தயாராகச் செல்ல வேண்டும். நாம் எதிர்க்கச் செல்வது சாதவாகன மன்னன் சதகர்ணியை என்பதை நினைவில் கொள். அரசியல் தந்திரத்தில் கரை தேர்ந்தவன்" என அவனிடம் கூறியவன் அவனுக்கு எதிரில் அமர்ந்திருந்த உபதலைவர்கள் மற்றும் உபதளபதிகளிடம், "இருக்கும் ஆயுதங்கள் மற்றும் உணவுப் பொருட்களை அவரவர் படைக்கு எவ்வளவு வேண்டுமோ பிரித்து உங்களுடனே வைத்துக் கொள்ளுங்கள். எதிர்ப்பு வருவதற்கு வாய்ப்பில்லை. இருந்தாலும் நாம் அனைத்திற்கும் தயாராகவே புறப்படுவோம். போர் எப்போது வேண்டுமானாலும் ஏற்படலாம்" என எச்சரிக்கை செய்தான்.

பிறகு தனது ஆசனத்திலிருந்து எழுந்தவன், "தளவாடங்கள், உணவுப் பொருட்கள் என அனைத்தும் இன்னும் ஒரு நாழிகைப் பொழுதிற்குள் பிரிக்கப் பட்டு அவரவர் படையுடன் சேர்க்கப்

பட்டிருக்க வேண்டும். பொழுது மேற்கில் விழுந்து விட்டது. நமக்கு அதிக கால அவகாசமில்லை. உடனே படைகள் அனைத்தும் அணிவகுக்கட்டும்" எனக் கட்டளையிட உபதலைவர்கள் மற்றும் உபதளபதிகள் என அனைவரும் எழுந்துசென்று துரிதமாக பணிபுரியத் துவங்கினார்கள்.

"முன்னோடிகள் இருநூறு பேரும் என்முன் வரட்டும்!" கட்டளையிட்டான் சுங்கப் படைத் தலைவன்.

அவன் கட்டளையிட்ட அடுத்த கணம் முன்னோடிகள் அனைவரும் வந்து சேர்ந்தார்கள். அவர்களின் தலைவனிடம், "இருநூறு பேரில் நூறு பேர் நாம் பயணிக்கப் போகும் பாதையை சோதனையிடட்டும். ஏதேனும் ஆபத்து நேர்ந்தாலோ அல்லது நம்மைத் தாக்க எதிரிகள் ஏதேனும் வலை விரித்து வைத்திருந்தாலோ உடனே தகவல் அனுப்புங்கள். ஒரு சாமப் பொழுதிற்கு இருவர்

https://telegram.me/aedahamlibra

வீதம் நாம் பயணிக்கப் போகும் வழி யின் நிலையை எனக்குத் தெரியப்படுத் திக் கொண்டிருக்கட்டும். மீதி நூறு பேர் நமது ஒற்றர்களை நோக்கி செல்லட்டும். ஏதேனும் தகவல் கிடைத்தால் உடனே தெரியப்படுத்துங்கள்" எனக் கட்டளை யிட அவர்கள் அனைவரும் அங்கிருந்து உடனே புறப்பட்டுச் சென்றார்கள்.

பரிதி மேற்கில் விழுந்துவிட்டதால் பந்தங்கள் கொளுத்தப்பட்டு அதன் வெளிச்சத்தில் படை நகரத் துவங்கியது. படைத் தலைவனின் கட்டளையிட்டபடி அனைத்து ஏற்பாடுகளையும் அவனது உபதலைவர்கள் திறம்பட நிறைவேற்றியி ருந்தார்கள். புரவிப் படை வீரர்கள் உப தலைவர்களின் கீழ் தனித் தனியாகப் பிரிக்கப்பட்டு அணிவகுப்பில் நெருக்க மாகப் பயணிக்காமல் ஆபத்து காலத் தில் அதிவேகத்தில் செயல்படுவதற்கு வசதியாக இடைவெளியுடன் நகர்ந்து கொண்டிருந்தார்கள். ஏற்கனவே அவர் கள் வகுத்த பாதையில் மொத்தப் புரவிப்

படையும் மிதமான வேகத்தில் சென்று கொண்டிருந்தது.

புரவிப் படைக்கு முன்பே அனுப் பப்பட்ட முன்னோடிகள் அவ்வப்போது படைத் தலைவனைச் சந்தித்து வழியைப் பற்றியும், அங்கு நிறைந்திருக்கும் ஆபத்து பற்றியும் தகவலைத் தெரிவித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அளிக் கும் தகவலுக்கு ஏற்ற வகையில் தனது உபதலைவர்களுக்கு தகுந்த கட்டளை யைப் பிறப்பித்துக் கொண்டு மொத்தப் படையையும் வழி நடத்தி அழைத்துச் சென்றுகொண்டிருந்தான் சுங்கப் படைத் தலைவன்.

பொழுது நள்ளிரவை எட்டியது. கையிலிருந்த சங்கினை ஊதினான் சுங் கப் படைத் தலைவன். அவனது கட் டளையைப் புரிந்துகொண்ட உபதலை வர்கள் படைகளை தனித் தனியாகப் பிரித்து அதே நேரம் படையின் அணி வகுப்பு குலையாமல் ஓய்வெடுக்கலா

https://telegram.me/aedahamlibra

னார்கள். விடியும் வரை ஓய்வெடுத்தார்கள. விடிந்ததும் அதே ஏற்பாட்டின்படி பயணத்தைத் துவங்கினார்கள். அனைவரும் ஓய்வெடுத்து உற்சாகம் அடைந்திருந்ததாலும், பகல் பொழுதினாலும் இரவை விட சற்றே வேகமாக பயணத்தைத் துவங்கினார்கள். பயணத்தைத் துவங்கி ஒரு ஓரைப் பொழுது பயணித்திருப்பார்கள். அப்போது அவர்களின் பாதையில் குறுக்கிட்டது சிற்றாறு ஒன்று. சிற்றாறில் நீர் முழங்கால் ஆழத்தை விடக் குறையாக ஓடினாலும், அதன் கரையில் சேறு அதிகமாக மண்டிக் கிடந்தது. அதைக் கவனித்த சுங்கப் படைத் தலைவன் தயக்கத்துடன் நிற்கலானான். அப்போது அவனை நோக்கி வந்த முன்னோடிகளின் தலைவன், கிழக்குப் புறமாகக் கைகாட்டி, “அந்தப் பக்கம் சேறு சற்றே குறைந்து காணப்படுகிறது! நம்மால் எளிதில் கடந்துவிட முடியும்!” எனத் தெரிவித்தான்.

அப்போது அவனிடம், "ஒற்றர்களி டமிருந்து தகவல் கிடைத்ததா?" என வினவினான்.

"கிடைத்தது தலைவரே... திட்டமிட் டபடியே சாதவாகனப் படையும் நேற்று மாலையே புறப்பட்டுவிட்டது."

"அவர்கள் எப்போது நம்முடன் இணைவார்கள்?"

இடையில் செருகியிருந்த பட் டுத் துணி ஒன்றைக் கையில் எடுத் துப் பார்த்த முன்னோடிகளின் தலை வன், "இதே போன்றதொரு இன் னொரு சிற்றாறையும் நாம் கடக்கவேண் டியிருக்கிறது. அங்கு அவர்கள் நம்முடன் இணைந்து கொள்வார்கள்!" எனத் தெரி வித்தான்.

"எவ்வளவு தொலைவு இருக்கி றது!"

"இன்னும் ஒரு சாமப் பொழுது பயணத் தொலைவில் அவர்கள் நம்மு

https://telegram.me/aedahamlibra

டன் இணைந்து கொள்வார்கள். அங்கும் கண்காணிக்க முன்னோடிகளை அனுப்பிவிட்டேன். கவலை வேண்டாம், படைத் தலைவரே!"

"சரி, நீ கிளம்பு..." எனக் கட்டளையிட அங்கிருந்து புரவியில் விரைந்தான் முன்னோடிகளின் தலைவன். அவன் பார்வையிலிருந்து மறைந்ததும் அவன் தெரிவித்த திசையில் சற்றே கிழக்குத் திசையில் மணல் படர்ந்த ஆற்றில் பயணித்து கரையேறினான் படைத் தலைவன். அவனைத் தொடர்ந்து சுங்கப் புரவிப் படையினரும் கரையேறத் துவங்கினார்கள். பாதிப்படை அக்கரையிலும், பெரும் படை ஆற்று மணலிலும், மீதிப் படை சேறு மிகுந்த ஆற்றின் இக்கரையிலும் நின்றுகொண்டிருந்தார்கள். அனைவருமே உற்சாகத்தில் ஆற்றைக் கடக்க முயன்றதால் சற்றே நெருக்கமாக ஊர்ந்துகொண்டு இருந்தார்கள்.

அப்போது எங்கோ தொலைவில் பெருமழை பொழிவதைப் போன்ற இரைச்சல் சத்தம் அங்கு திடீரென்று எழுந்தது. தலையில் இடி விழுவதைப் போன்று யானைகளின் பிளிறல் சத்தம் எழுந்து அடங்கியது. மழை பொழிவதைப் போன்ற பெருஞ்சத்தம் தொடர்ந்து அவர்களை நெருங்கி வந்து கொண்டிருந்தது. வானத்தை நோக்கினான் சுங்கப் படைத் தலைவன். வானத்தில் மேகங்கள் வெளிறிப் போய் திட்டுத் திட்டாக கிடந்தன. குழப்பத்துடன் தனக்கு எதிரில் நோக்கினான். அங்கே புரவியில் அதிவேகமாக வந்துகொண்டிருந்தான் முன்னோடிகளின் தலைவன். அவர்களுக்குப் பின்னால் மூன்று முன்னோடிகளும் அவர்களுக்குப் பின்னால் தொலைவில் சாதவாகனப் படை புழுதி பறக்க விரைந்து வந்து கொண்டிருந்தார்கள்.

விரைந்து வந்த சாதவாகனப் படையைப் பார்த்த சுங்கப் படைத் தலைவன் அக்கணம் பெரும் மகிழ்ச்சியை அடைந்

https://telegram.me/aedahamlibra

தான். அடுத்த கணம் சற்று முன் முன் னோடித் தலைவன் கூறிய தகவல்கள் அவனுக்கு நினைவிற்கு வர அவனது முகம் கண நேரத்தில் இருண்டுபோய் போய்விட்டது.

"இன்னும் ஒரு சாமப் பொழுது பயணத் தொலைவில் அவர்கள் நம்மு டன் இணைந்து கொள்வார்கள்" என அவன் கூறிய சொற்களை அவன் நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்த போதே அதிவேகத்தில் புரவியில் வந்து கொண்டிருந்த முன்னோடிகளின் தலை வன், "ஆபத்து... ஆபத்து" என உரக்கக் கூறியபடியே புரவியிலிருந்து நிலை தடு மாறி புரவியுடன் கீழே விழுந்தான்.

அவனது முதுகில் ஈட்டி ஒன்று பாய்ந்திருந்தது. முன்னோடியுடன் புரவி யில் வந்தவர்களில் இருவர் வழியிலேயே கீழே விழுந்திருந்தார்கள். எஞ்சி தப்பிய ஒரேயொரு முன்னோடி சுங்கப் படைத் தலைவனிடம் ஏதோ கூற வாயைத்

திறந்தான். ஆனால் அவனது வாயிலிருந்து சொல் வெளிப்படுவதற்குள் எங்கிருந்தோ வானில் பறந்து வந்த எரியம்பு ஒன்று அவனது முதுகில் பாய அலறியபடியே நதியில் விழுந்து புரண்டான் அந்த முன்னோடி.

அவன் விழுந்த அடுத்த கணம் கையில் வைத்திருந்த சங்கு ஒன்றை ஊதினான் சுங்கப் படைத்தலைவன். சங்கு எழுந்த அடுத்த கணம் சுங்கப்புரவி வீரர்கள் அனைவரும் எச்சரிக்கை அடைவதற்குள் அதிவேகமாகத் தனது வெண்ணிறப் புரவியில் வந்த திருக்கண்ணன் சுங்கப் படைக்குள் முதல் ஆளாக ஊடுருவிவிட்டிருந்தான்.

சுங்கப் படைத் தலைவனின் எச்சரிக்கையைக் கேட்டு அவர்கள் இடையிலிருந்த வாளினையும், கையிலிருந்த ஈட்டி மற்றும் வேலினையும் எடுத்து ஓங்குவதற்குள் அவர்களின் படைக்குள் ஊடுருவிய திருக்கண்ணன் எதிர்ப்பட்ட

அனைத்து சுங்கர்களின் தலையையும் கொய்தபடி முன்னேறி வெகுதொலைவு ஊடுருவிவிட்டிருந்தான். திருக்கண்ண னைத் தவிர்த்து அவனைப் பின்தொ டர்ந்து வந்த சாதவாகனப் படையும் சுங் கப் படையுடன் கலந்து தனது ருத்ர தாண்டவத்தை அரங்கேறத் துவங்கியி ருந்தது. திடீர் தாக்குதலால் சுங்கப் படைத் தலைவன் அதிர்ச்சி அடைந் தாலும் உடனே சுதாரித்துக் கொண்டு படையைப் பின்னோக்கி நகர்த்தினான். அவர்களுக்குப் பின்னால் நதி ஓடிக் கொண்டிருந்ததால் அவர்களால் உடனே பின்னோக்கி நகர்ந்து சாதவாகனப் படையின் தாக்குதலிலிருந்து தப்பிக்க இயலவில்லை.

மலையிருந்து அதிவேகத்தில் கீழி றங்கி கடலுடன் சங்கமமாகும் நதியைப் போன்று திருக்கண்ணனின் தலைமையி லான சாதவாகனப் படை அன்று அதிக எண்ணிக்கையில் காணப்பட்ட சுங்கப் படையுடன் கலந்துகொண்டிருந்தது.

https://telegram.me/aedahamlibra

சாதவாகனர்களின் அதிவேகத் தாக்குதலிலிருந்து தப்ப படையின் ஒரு பகுதி அவர்களை தாக்கிக் கொண்டிருக்க மற்ற பகுதியை ஆற்றுக்குள் இறக்கினான். ஆற்றுக்குள் இறங்கிய வீரர்கள் அம்புகளை தொடர்ந்து சாதவாகன வீரர்களை நோக்கி எறியலானார்கள். பின்வாங்குவதை நிறுத்திய சுங்கத் தலைவன் சாதவாகன படைக்குள் ஊடுருவி தாக்குதல் தொடுக்கலானான். அவனைத் தொடர்ந்து சுங்கப் படையின் உபதலைவர்களும் தங்களது உப தளபதிகள் மற்றும் வீரர்களுடன் எதிர்த்துப் போரிடத் துவங்கினார்கள். ஆனால், தொடக்கத்தில் சாதவாகன புரவிப் படையின் ஊடுருவலையும், தாக்குதலையும் சுங்கப் படையினால் எதிர்கொள்ள இயலவில்லை என்றாலும், பிறகு அவர்கள் சுதாரித்துக்கொண்டு திறமையான தலைவன், உபதலைவன் மற்றும் உப தளபதிகளின் துரித நடவடிக்கைகளால் தடுத்துநிறுத்த முடிந்திருந்தது. தடுத்து

நிறுத்தியதோடு மட்டுமல்லாமல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையுடன் தயாராக வந்திருந்த சுங்கப் படையினரும் பதில் தாக்குதல் தொடுக்க துவங்கினார்கள். சுங்கப் படையினர் நதியின் கரையில் பாதி, நதியில் மீதி என பள்ளத்தில் நின்றுகொண்டிருந்ததாலும் சாதவாகனப் படையினரை உக்கிரத்துடன் தாக்கி இழப்பினை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

திருக்கண்ணனின் கட்டளை இல்லாமலே அவனது வெண்ணிறப் புரவி ஆபத்துகளைத் தவிர்த்தும், திருக்கண்ணன் போரிடுவதற்கு இலகுவாகவும், தக்க படி வளைந்தும், குதித்தும், தாவியும் சுங்கர்களின் படைக்குள் வெகு தொலைவிற்கு திருக்கண்ணனை அழைத்துச் சென்று விட்டிருந்தது. சுங்கப் படைக்குள் ஊடுருவிய திருக்கண்ணனின் இரண்டு கரங்களிலும் காணப்பட்ட வாள் அவனது புரவி அழைத்துச் சென்ற இடங்களில் எல்லாம் சுங்

கர்களின் தலைகளை சீவித் தள்ளியபடி முன்னேறிக் கொண்டிருந்தான்.

சுங்கப் படைத் தலைவன் கையில் பெரும் ஈட்டியுடன் சாதவாகன படைக்குள் ஊடுருவி தாக்குதல் தொடுக்கலானான். அவனது உபதலைவர்களும் அவனைப் போன்றே தாக்கிக் கொண்டிருந்தார்கள். பள்ளத்திலிருந்து மேட்டில் நின்ற சாதவாகன வீரர்கள் மீது அம்புகளை மழை போன்று தொடுக்க தொடுக்க சாதவாகனப் படையிலும் இழப்பு ஏற்பட்டுக் கொண்டிருந்தது. சுங்கப் படையினர் அனைவரும் நதிக்குள் நின்றுகொண்டே கரையில் நின்றபடி தாக்கிக் கொண்டிருந்த சாதவாகன வீரர்களின் மீது ஈட்டிகளையும், வேல்களையும், அம்புகளையும் சரமாரியாக எரிந்து கொண்டிருந்தார்கள். போர் இப்படியே நீடித்திருந்தால் சுங்கப் படையின் பெரும் எண்ணிக்கை, அவர்களின் முன் எச்சரிக்கை நடவடிக்கை ஆகியவற்றினால் சுங்கர்கள் எளிதில் வென்றிருப்பார்கள்.

https://telegram.me/aedahamlibra

ஆனால், திருக்கண்ணன் செய்திருந்த ஏற்பாட்டின்படி நதிக்குள் நின்றுகொண்டிருந்த சுங்கப் படையை நோக்கி இரண்டு புறங்களிலும் இருபது இருபது யானைகளும், அவர்களுக்குத் துணையாக வில் வீரர்களும் சுங்கர்களை தாக்கினார்கள். அதே நேரத்தில் சுங்கப் படையின் பின்புறமாக மாதண்ட நாயகனும், இம்ஹோடெப்பும் சேர்ந்து அதிரடித் தாக்குதல் ஒன்றை தொடுக்க அந்த நெருக்கமான இடத்திலும் அணிவகுத்து தாக்கிக் கொண்டிருந்த சுங்கப் படை சிதறத் துவங்கியது. கரைகளில் இருந்து தொடர்ந்து சாதவாகனப் படை வீரர்கள் அம்புகளையும், வேல்களையும், எறிந்து நதிக்குள் சிக்கியிருந்த சுங்க வீரர்களை கொன்றுகொண்டிருந்தார்கள்.

நான்கு திசைகளிலும் சாதவாகன வீரர்கள் சுங்கர்களை சூழ்ந்துவிட்டதால் அவர்களுக்குள் சிக்கிக் கொண்ட சுங்கப் படை மொத்தமாக அழியத் துவங்கியது. மாதண்ட நாயகன், இம்ஹோடெப், திருக்

கண்ணன் ஆகியோரின் அதிரடி மற்றும் திட்டமிட்ட தாக்குதலில் நிலை குலைந்து போன சுங்கப் படை ஒரு சாமப் பொழுது களில் தோல்வியைத் தழுவியது.

தோல்வியடைந்தனர் என்று கூறு வதை விடவும் சுங்கர்கள் ஒருவர் கூட தப்பிச் சென்று தகவல் தெரிவித்துவி டக் கூடாது என்பதற்காக சிக்கிய ஒட்டு மொத்த சுங்கர்களையும் கொன்று குவித் துக் கொண்டிருந்தார்கள் சாதவாகன வீரர்கள். புறமுதுகிட்ட சுங்க வீரர்கள் கூட தப்பிச் சென்று தகவல் தெரிவிக் கக் கூடாது என்பதற்காக முன் எச்ச ரிக்கையாக அந்த இடத்தை சுற்றிலும் கவசம் போன்று நின்றுகொண்டிருந்த வில் வீரர்களினால் கொல்லப்பட்டார் கள். அன்றைய கதிரவன் உச்சிக்கு வர ஒரு ஓரைப் பொழுதிற்கு முன்னரே யுத் தம் முடிவடைந்திருந்தது. சுங்கப் படை வீரர்களின் அடையாளங்களை துறந்து போரில் இறந்து கிடந்த சாதவாகன வீரர்களின் அடையாளத்தை அணிந்து

கொண்ட சுங்க வீரர்களைத் தவிர சுங்க வீரர்கள் ஒருவர் கூட பிழைத்திருக்க வில்லை.

உடல் முழுவதும் குருதி படிந்து மார்பில் சில விழு புண்களுடன் வாளி லிருந்து குருதி சொட்ட சொட்ட இறந்து கிடந்த சுங்கப் படையின் வீரர்கள் மற் றும் புரவிகளினூடே கம்பீரமாகப் புர வியில் வந்துகொண்டிருந்த திருக்கண் ணனிடம் பணிந்த மாதண்ட நாயகன், "தலைவரே, சாதித்து விட்டீர்கள். படை களின் எண்ணிக்கையை விடவும் தாக்கு தல் யுக்தி மற்றும் வீரம் ஆகியவை வெற் றிக்கு போதும் என்பதை புரியவைத்து விட்டீர்கள்" எனப் பணிவுடன் தெரிவித் தவன் சுற்றி நின்ற சாதவாகன வீரர்களை நோக்கி வெற்றிக் கூச்சல் எழுப்பவும் செய்தான். உடனே சாதவாகன வீரர்க ளும் பதிலுக்கு வெற்றிச் கூச்சலை எழுப் பத் துவங்கினார்கள்.

நதி நீர் சுங்க வீரர்களின் குருதி யினால் செக்கச் செவேலென்று சிவந் துபோய் ஓடிக் கொண்டிருந்தது. சிவந்த நதியில் இரண்டு கைகளிலும் இருந்த குருதிக் கரை படிந்த வாட்களை நதி நீரில் கழுவினான். அப்போது தோளில் வேல் பாய்ந்து குருதி சொட்ட சொட்ட வந்த இம்ஹோடெப் அவனிடம், "தலை வரே, உங்களது வாட்களின் தாகம் இப் போது அடங்கியிருக்கும் என்று நினைக் கிறேன்" எனச் சிரித்தபடியே தெரிவித் தான்.

"இல்லை இம்ஹோடெப். அந்த தாகத்தை சுங்கர்களால் மட்டும் தணிக்க இயலாது!"

"பிறகு?"

"காடுகளில் மறைந்திருக்கும் வஜ்ர பாகுவின் வீரர்களின் குருதியை சுவைத் தால்தான் என் தாகம் இப்போதைக்கு அடங்கும் போலத் தெரிகிறது" என அவனிடம் தெரிவித்த திருக்கண்ணன்

https://telegram.me/aedahamlibra

சுற்றி நின்ற சாதவாகன வீரர்களை நோக்கி, "வீரர்களே, வெற்றியில் களித் தது போதும். நமது வாட்களிடமும், வேல் களிடமும் தங்களது தலையையும், உடல் உறுப்புகளையும் இழக்க வஜ்ரபாகுவின் வீரர்கள் வனத்தில் நமக்காகக் காத் திருக்கிறார்கள். அவர்களின் வேண்டு தலை நிறைவேற்றுவோம். புறப்படுங்கள்" எனக் கையிலிருந்த இரண்டு வாட்க ளையும் உயர்த்தியபடியே தெரிவித்தவன் அருகில் தயாராய் நின்றுகொண்டிருந்த அவனது புரவியின் மீது ஏறி அதனைத் தட்டிவிட்டான். அடுத்த கணம் அவனது புரவி அங்கிருந்து புறப்பட்டது.

குருதி படிந்த உடலுடன் குருதி யைச் சுவைக்கச் சென்ற திருக்கண்ண னைத் தொடர்ந்து சாதவாகன வீரர்களும் ஆரவாரத்துடன் புரவியிலேறி காடுகளில் மறைந்திருக்கும் வஜ்ரபாகுவின் வீரர் களை வேட்டையாடச் செல்லலானார் கள்.

https://telegram.me/aedahamlibrary

# 34. திருக்கண்ணனின் கட்டளை

வனத்தில் எழுந்த வெண்புகையைக் கண்டு சுங்கப் படையினர் உஞ்சையை நோக்கிப் புறப்பட்டதைப் போன்றே வனத்தில் மறைந்திருந்த வஜ்ரபாகுவின் வீரர்களும் ஏற்கனவே சாதவாகன படைத் தலைவன் வஜ்ரபாகு வகுத்திருந்த திட்டத்தின் படி பெரும் புரவிப் படையுடன் புறப்பட்டுச் சென்றுகொண்டிருந்தார்கள். இரவில் சில சாமப் பொழுதுகள் ஓய்வெடுத்து பிறகு அதிகாலையில் பயணத்தைத் துவங்கி உஞ்சையை நோக்கி

விரைந்து சென்றுகொண்டிருந்தார்கள். பொழுது கிழக்கில் உதித்து ஒரு சாமப் பொழுது ஆகும் வரை அவர்களின் பயணம் இடை விடாமல் தொடர்ந்து கொண்டிருந்தது. அப்போது அவர்களின் பாதையில் சிறு ஓடை ஒன்று குறுக்கிட்டது. ஓடைக்கு இப்புறத்தில் காடு மண்டிக் கிடந்தது. அப்புறத்தில் சிறு குன்று ஒன்று ஒய்யாரமாக எழுந்து நின்றது. அவர்கள் வந்த பாதைக்கு இடப்புறமாக ஒரு பாதை பிரிந்து சென்றது. அதே போன்று வலப்புறத்தில் ஒரு பாதை அவர்கள் வந்த பாதையுடன் சேர்ந்து கொண்டது. அதைக் கண்ட வஜ்ரபாகுவின் படைத் தலைவன் கையில் இருந்த பட்டுத் துணியை எடுத்து நோக்கினான். பிறகு தனது உபதலைவனிடம், "இந்த இடத்தில் தான் நாம் காத்திருக்க வேண்டும். இங்கே தான் வந்துகொண்டிருக்கும் சுங்கப் படை மற்றும் வஜ்ரபாகுவின் படையுடன் நாம் இணைய வேண்டும்" எனத் தெரிவித்தான்.

"நமக்கு கிடைத்த தகவலின் படி இந்நேரம் அவர்களின் படை இங்கு வந்திருக்க வேண்டுமே?" என என வினவினான் உபதலைவன்.

“அவர்களின் பாதையில் தடங்கல் ஏதேனும் நேர்ந்திருக்கும். அவர்கள் வரும் வரை நாம் இங்கு ஓய்வெடுப்போம். பிறகு இங்கிருந்து கிளம்புவோம்!” எனத் தெரிவிக்க வஜ்ரபாகுவின் வீரர்கள் அங்கேயே தற்காலிகமாக தங்கி ஆங்காங்கே ஓய்வெடுக்கத்துவங்கினார்கள். அப்போது அங்கிருந்து கிளம்பிச் சென்ற உபதலைவன், ஓடையின் கரையில் புழங்கியிருந்த சில புரவிகளின் குளம்படிகளை கண்டான். குளம்படிகள் பல ஓடை நீரில் அழிக்கப்பட்டு சில மட்டுமே பார்வையில் படும்படி காணப்பட்டது.

அந்தக் குளம்படிகளைப் படைத்தலைவனிடம் தெரிவித்தான் உபதலைவன்.

அதைக் கண்ட படைத் தலைவன், “அவர்கள் அனைவரும் நமக்கு முன்னே இங்கிருந்து சென்றிருப்பார்கள் என்று நினைக்கிறாயா?” என வினவினான்.

https://telegram.me/aedahamlibra

"இங்குப் புழங்கியிருக்கும் குளம் படிகளின் எண்ணிக்கை குறைவாகவே இருக்கிறது. நாம் எதிர்பார்த்துக் கொண் டிருப்பது பெரும்படை!"

"காட்டு விலங்குகள் ஏதேனும் இந்த ஓடையின் வழியே கடந்து போயி ருக்கும்! இன்று பொழுது உச்சிக்கு வரும் வரை அவர்களுக்காக நாம் காத்திருப் போம். அவர்கள் வரவில்லை எனில் புறப் படுவோம்!" என படைத்தலைவன் கட்ட ளையிட உபதலைவன் அங்கிருந்து புறப் பட்டான்.

வீரர்கள் அனைவரும் ஓடையின் கரையிலும், வனத்திலும் ஆங்காங்கே மரத்தடியில் ஓய்வெடுத்துக் கொண்டி ருந்தார்கள். நேரம் கடக்கக் கடக்க வானம் கருக்கத் துவங்கியது. சிறிது சிறி தாக விழத் துவங்கிய தூறல்கள் பிறகு பெருமழையாக பெய்யத் துவங்கியது. மழை பெய்ததால் ஓடையில் நீர் பெருக் கெடுத்து ஆர்ப்பரித்து ஓடிக்கொண்டி

ருந்தது. மொத்தப் படையும் ஓடையிலிருந்து சற்றுத் தள்ளி மழை நீரில் நனைந்துகொண்டு நின்றுகொண்டிருந்தார்கள். எதிரில் நிற்பவர்கள் யார் என்று கண்டுபிடிக்க முடியாத படி மழை வெளுத்து வாங்கிக்கொண்டிருந்தது. அப்போது அவர்கள் நீண்ட நேரமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த புரவிப்படை அவர்களை நோக்கி மழையில் நனைந்தபடியே வந்துகொண்டிருந்தது. வீரர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஆரவார முழக்கமிடத் துவங்கினார்கள். பெய்துகொண்டிருந்த மழையை விடவும் எழுந்துகொண்டிருந்த வீரர்களின் ஆரவார முழக்கம் அதிகமாகவே இருந்தது. படைத் தலைவன் வந்துகொண்டிருந்த வீரர்களை வரவேற்க தனது புரவியில் ஏறினான்.

அப்போது அவன் எதிர்பார்ப்பிற்கும் மாறாக அவன் வந்த பாதையில் அவனுக்குப் பின்புறமாக புரவி வீரர்கள் அவனை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். தனது புரவியில் அமர்ந்திருந்த

படியே படைத்தலைவன் குழப்பத்துடன் நோக்க அவன் செல்ல வேண்டிய இடப்பு றப் பாதையிலும் அவனை நோக்கி புரவி கள் பல வந்துகொண்டிருந்தன.

அவனுக்கு முன்பாக ஓடையில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடிக்கொண் டிருந்தது. அவனைச் சுற்றி மூன்று புறத் திலும் புரவி வீரர்கள சூழ்ந்துகொண்டி ருந்தார்கள். அதைக் கண்ட படைத்த லைவன் மேலும் குழப்பமடைந்து தனது படையை எச்சரிக்கை செய்யலானான். ஆனால், பேய் மழையின் பெரும் இரைச் சலினால் அவனது சத்தம் மற்றவர்களுக் குத் துளியும் கேட்கவில்லை. அதே நேரம் வந்துகொண்டிருந்த வீரர்களைக் கண்ட தும் எழுந்துவிட்ட வீரர்களின் ஆரவார முழக்கம் வேறு அவனது சத்தத்தை கேட் கவிடாமல் செய்திருந்தது.

இடையில் தரித்திருந்த வாளினை உருவி அனைவரையும் எச்சரிக்கை செய்தான் படைத்தலைவன். வஜ்ரபாகு

https://telegram.me/aedahamlibra

வின் வீரர்கள் அவனது எச்சரிக்கையை கவனிப்பதற்குள் மழையோடு மழையாக கலந்து வந்த அம்புகள் வஜ்ரபாகுவின் வீரர்களின் மீது பேரிடியாக விழுவதற் கும் நேரம் சரியாக இருந்தது. தாங்கள் தாக்கபடுகிறோம் என்பதை வஜ்ரபாகு வின் வீரர்கள் உணர்வதற்குள் திருக் கண்ணன், மாதண்ட நாயகன் மற்றும் இம்ஹோடெப்பின் தலைமையில் மூன் றாக பிரிந்து வந்த படை வஜ்ரபாகுவின் படைகளுக்குள் ஊடுருவி கொடூரமாகத் தாக்கலானார்கள்.

வஜ்ரபாகுவின் வீரர்கள் தாக்கப்ப டுவதை உணர்ந்து அவர்கள் ஆயத்தமா குவதற்குள் சாதவாகன வீரர்கள் அவர் களை மூன்று திசைகளிலும் முழுவ தும் சூழ்ந்துகொண்டனர். தொடக்கத்தில் வஜ்ரபாகுவின் படைத்தலைவன் திண றினாலும் பிறகு சுதாரித்துக்கொண்டு எதிர் தாக்குதல் தொடுக்கத் துவங்கி னான். நேரம் கடக்க போர் முற்றிலும் சாதவாகன வீரர்களின் பக்கம் திரும்பிக்

கொண்டிருந்தது. திருக்கண்ணன் எதிர் பார்த்ததைப் போன்று வஜ்ரபாகுவின் வீரர்கள் அத்தனை திறமைசாலியாக இருக்கவில்லை. சாதவாகன வீரர்களின் அதிவேகத் தாக்குதலிலிருந்து தப்பிப்ப தற்காக வீரர்கள் ஆர்ப்பரித்து ஓடிய அந்த ஓடையில் குதித்து தப்பிக்க முயன் றார்கள். ஒருவர் கூட தப்பித்து உஞ் சைக்குத் தகவலைக் கொண்டு செல் லக் கூடாது என்பதை உணர்ந்த திருக் கண்ணன் அவர்கள் தப்பிக்கும் வழியான ஓடை மற்றும் வனம் ஆகியவற்றில் வீரர் களை நிறுத்தி வைத்து தப்பிக்க முயன்ற வர்களை கொன்று விட ஏற்பாடு செய்தி ருந்தான்.

தாக்குதல் ஒரு ஓரைப் பொழுதே நீடித்தது. ஆனாலும், வஜ்ரபாகுவின் பெரும் எண்ணிக்கையிலான வீரர்கள் அனைவரும் கொல்லப்பட்டதால் அவ்வீ ரர்களின் குருதி மழை நீரில் கலந்து அந்த ஓடை சிவப்பு நிறத்தில் ஓடிக்கொண்டி ருந்தது.

திருக்கண்ணன், இம்ஹோடெப், மாதண்ட நாயகன் மற்றும் சாதவாகன வீரர்களின் உடலில் படிந்திருந்த வஜ்ர பாகுவின் வீரர்களின் குருதிக் கரையை மழை நீர் சுத்தமாகக் கழுவி விட்டிருந் தது.

வஜ்ரபாகுவின் வீரர்களையும் ஒட் டுமொத்தமாகக் கொன்று இரண்டு போரி னையும் வெற்றிகரமாக முடித்த திருக் கண்ணன் சாதவாகன உபதலைவர்க ளையும், உபதளபதிகளையும் அழைத் தான்.

அவர்களிடம், "மடிந்து கிடக்கும் வஜ்ரபாகுவின் வீரர்களையும், சுங்க வீரர் களையும் நல்ல முறையில் அடக்கம் செய்துவிடுங்கள். இன்னும் சில தினங்க ளுக்கு இங்கு போர் நடைபெற்ற தகவல் வேறு எங்கும் கசியக் கூடாது. எச்சரிக் கையாக இருங்கள்!" எனக் கட்டளையிட உபதளபதிகள் அப்போதே கட்டளையை நிறைவேற்றத் துவங்கினார்கள்.

அவனுக்கு அருகில் நின்ற இம்ஹோடெப்பிடம், "படைத்தலைவர் செங்குவீரர் அளித்த ஓலை இன்னமும் தங்களிடம் பத்திரமாகத்தானே இருக்கிறது?" என வினவினான்.

தனது இடையில் கை வைத்துப் பார்த்த இம்ஹோடெப், "பத்திரமாகத்தான் இருக்கிறது!" எனப் பதிலளித்தான்.

"தாங்கள் இனி கிளம்பலாம் இம்ஹோடெப். படைத்தலைவரின் கட்டளையை நிறைவேற்றுங்கள். இனி நடக்க வேண்டியதை நான் பார்த்துக்கொள்கிறேன்" எனத் திருக்கண்ணன் கட்டளையிட, "தங்களது உத்தரவு படைத்தலைவரே" எனப் பணிந்துகொண்டு பெரும் மகிழ்ச்சியுடன் அங்கிருந்து தெற்கு நோக்கிப் புறப்பட்டான் இம்ஹோடெப்.

அருகில் நின்ற மாதண்ட நாயகன் மற்றும் படைத்தலைவர்கள் திருக்கண்ணனின் கட்டளையை எதிர்பார்த்து அவனையே பார்த்துக்கொண்டிருந்தார்

கள். கீழே இறந்து கிடந்த வஜ்ரபாகுவின் வீரர்களையும், தனக்கு எதிரே நின்றவர்களையும் நோக்கிய திருக்கண்ணன், "தேர்ந்தெடுத்த ஆயிரம் வீரர்களை வஜ்ரபாகுவின் வீரர்கள் அணிந்திருக்கும் ஆடைகளையும் அவர்கள் கையில் இருக்கும் கங்கண அடையாளத்தையும் எடுத்துக்கொள்ளச் சொல்லுங்கள். அதே போன்று இன்னும் ஆயிரம் வீரர்கள் சுங்க வீரர்களின் ஆடைகளை எடுத்துக்கொள்ளட்டும்!" எனக் கட்டளையிட்டான்.

திருக்கண்ணனின் கட்டளை எழுந்ததும் சாதவாகன உபதலைவர்கள் அவனது கட்டளையை நிறைவேற்ற அங்கிருந்து கிளம்பினார்கள். மாதண்ட நாயகன், "தலைவரே, எதற்காக நமது வீரர்களை அவர்களின் ஆடைகளை எடுத்துக்கொள்ளச் சொல்கிறீர்கள்?" என வினவினான்.

https://telegram.me/aedahamlibra

"உஞ்சைக்கு வாருங்கள் உங்களுக்கே தெரியும்!" எனக் கூறிய திருக் கண்ணன், மாதண்ட நாயகனிடம் இன்னொரு கட்டளையையும் இரகசியமாக தெரிவித்தான். அதைக் கேட்ட மாதண்ட நாயகனின் முகம் ஒரு கணம் அதிர்ச்சியில் உறைந்து போனது மட்டுமல்லாமல் அருவருப்பையும் அடைந்தது.

https://telegram.me/aedahamlibra

# 35. சுங்கனின் ஏற்பாடு

தெருவெங்கும் மாவிலைத் தோரணங்கள் கட்டி, வாசல்களில் சாணம் தேய்த்து, கோலமிட்டு அதன் மையத்தில் பூக்கள் வைக்கப்பட்டு உஞ்சைப் பட்டினம் விழாக்கோலம் பூண்டிருந்தது. விழாக்கோலம் பூண்டிருந்த தெருவெங்கும் வீரர்கள் அரண்மனை மாளிகையை நோக்கி சென்றுகொண்டிருந்தார்கள். காவலும் அதிக கெடுபிடி இல்லாமல் மக்கள் சுதந்திரமாக விழாவைக் கொண்டாட அனுமதிக்கப்பட்டிருந்தனர். ஆதலால் மக்களும் உற்சாகத்துடன் களிப்புகளில் ஈடுபடலானார்கள்.

அவந்தி நதிக்கரையில் குடி கொண்டிருந்த சண்டிகாலேசுவரருக்கும், காலபைரவருக்கும் மக்கள் காணிக்கைகளை செய்து மனமுருகி வேண்டிக்கொண்டிருந்தனர். உஞ்சை விழாக்கோலம் பூண்டிருந்ததால் கோயில்கள் அனைத்துக்கும் சிறப்பு வழிபாடும் வஜ்ரபாகுவின் பெயரில் நடந்துகொண்டிருந்தது. உஞ்சைப் பட்டினமே விழாக்கோலம் பூண்டிருந்தாலும் வஜ்ரபாகுவின் திட்டத்தை அறிந்திருந்த சிலர் மட்டும் விழாவின் களிப்பில் கலந்து கொள்ள மனமில்லாமல் தவித்துக்கொண்டிருந்தனர். அவர்களில் ஒருத்தியாக நடக்கப்போகும் அசம்பாவிதங்களை எண்ணி பெரும் துயரத்துடன் நின்றுகொண்டிருந்தாள் அவந்திகா.

தனது மாளிகையின் சாளரத்தில் நின்றுகொண்டு தெருவில் மது மயக்கத்தில் நடந்து சென்றுகொண்டிருந்த உஞ்சைவாசிகளை துயரத்துடன் பார்த்தபடியே நின்றுகொண்டிருந்தாள் அவந்திகா. அப்போது அவளிடம் வந்த கார்த்திகா, “தேவி...” என அழைத்தாள்.

“என்ன?” துயரம் நிறைந்த குரலுடன் வினவினாள் அவந்திகா.

“நேற்றிரவு பெரும் மாற்றங்கள் நடந்து விட்டன. சற்று முன்தான் எனக்கு செய்தி கிடைத்தது?”

“என்ன மாற்றங்கள்?”

“உஞ்சைப் பட்டினத்தின் அரண்மனைப் பகுதியை வஜ்ரபாகுவின் வீரர்கள் சூழ்ந்து கொண்டார்கள்! உஞ்சையின் காவல் பொறுப்புகளில் இருந்த அனைவரையும் அப்புறப்படுத்தி வஜ்ரபாகு தனது நம்பிக்கைக்குரியவர்களை நியமித்துக் கொண்டான். அதுமட்டுமல்லாமல்...” எனத் தயங்கியபடி நிற்கலானாள்.

“தயக்கம் வேண்டாம் கார்த்திகா. அனைத்தையும் தெரிவி” கட்டளையிட்டாள் அவந்திகா.

“சாதவாகன மன்னர் மற்றும் தங்களுக்கு உறுதுணையாக இருந்த படைத் தலைவர்கள், அமைச்சர்கள், அதிகாரிகள் என அனைவரும் நேற்றிரவே கொல்

https://telegram.me/aedahamlibrary

லப்பட்டுவிட்டார்கள். உஞ்சையில் இப்போது வஜ்ரபாகுவிற்கு எதிராக இருப்பவர்கள் நாம் இருவர் மட்டுமே!"

"ம்ம்ம்..." என மட்டும் தெரிவித்த அவந்திகா கார்த்திகாவின் வதனத்தையே சிறிது நேரம் நோக்கிக் கொண்டிருந்தாள். பிறகு, "சதகர்ணி எங்கே என்று செய்தி கிடைத்ததா?" என வினவினாள்.

"இல்லை" என்பதற்குப் பதிலாக தலையை மட்டும் அவந்திகாவை நோக்கி ஆட்டினாள் கார்த்திகா.

"அவரைப்பற்றிய தகவல் ஏதாவது?"

"சோழ தேசத்தின் வேளக்காரப் படைத் தலைவரைப் பற்றி வினவுகிறீர்களா?"

"ஆமாம்..."

"இல்லை தேவி. சாதவாகன அரசர் மற்றும் சோழப் பேரரசர் கரிகாலருடன்

அன்று அவர் சென்றதுதான். அதன் பிறகு அவர்களைப் பற்றிய எந்தவித தகவல்களும் எனக்குக் கிடைக்கவில்லை. உஞ்சையைச் சுற்றிலும் வஜ்ரபாகு மற்றும் சுங்க வீரர்களின் காவல் பலமடங்கு அதிகமாகிவிட்டதால் நமது ஒற்றர்களாலும் திறம்பட செயல்பட இயலவில்லை."

நடைபெறப் போகும் பெரும் அசம்பாவிதங்களையும், இழப்புகளையும் எண்ணியபடியே அவந்திகா மீண்டும் தெருவையும், அதில் மகிழ்ச்சியில் களித்தபடி சென்றுகொண்டிருந்த மக்களையும் வெறித்தபடி பார்த்துக் கொண்டிருந்தாள். அப்போது அவளது அறைக்குள் வந்த பணிப்பெண் அவளிடம், "படைத்தலைவர் வஜ்ரபாகு தங்களை அழைத்துச் செல்ல வந்திருக்கிறார்" எனத் தெரிவித்தாள்.

அவள் கூறியதைக் கேட்டதும் அவந்திகா அவளது விழிகளில் சில நேரம் தனது பார்வையை அதிகாரத்து

டன் நிலைக்க விட்டாள். பிறகு அவளிடம், “அவரை சிறிது நேரம் நான் காத்திருக்கச் சொன்னதாகத் தெரிவி” என அவளிடம் தெரிவிக்க, “தங்களது உத்தரவு” எனப் பணிவுடன் கூறிய பணிப்பெண் அங்கிருந்து செல்லலானாள்.

ஒரு நாழிகைப் பொழுது கழித்து அவந்தியின் இளவரசி அவந்திகா தனது தோழிகள் புடை சூழ கம்பீர நடையுடன் வஜ்ரபாகுவை நோக்கிச் செல்லலானாள். தனக்கே உரிய கம்பீர நடையுடன், பேரழகுடன் நடந்து வந்த அவந்திகாவைப் பார்த்ததும் அமர்ந்திருந்த ஆசனத்திலிருந்த எழுந்து நின்றான் வஜ்ரபாகு. தலையில் இரத்தினக் கல் பதித்த இளவரசிக்குரிய கிரீடம், கழுத்தில் கிடந்த வெண்முத்து மற்றும் மரகதக் கற்களால் ஆன விலையுயர்ந்த மாலை, இரண்டு கைகளிலும் வைரக் கற்கள் பதித்த காப்பு, தங்க இழைகளால் நெய்யப்பட்ட பட்டினை உடுத்திக் கொண்டு அவற்றின் முகப்பைக் கையில் ஏந்தியபடி விழிகளை

எதிரில் நிற்பவர்களின் மீது கம்பீரத்து டன விழ வைத்தபடியே ராஜ பார்வையு டன் நடந்து வந்தாள் அவந்திகா. அவள் நடந்து வரும்போது அவளது நடைக் கேற்ப அவளது ஆடைகளில் பதிக்கப் பெற்ற இரத்தினக் கற்களும், மரகதக் கற் களும் மின்ன ராஜ எழிலுடன் வஜ்ரபா குவை நோக்கி நடந்து வந்தாள் அவந் திகா.

வஜ்ரபாகுவின் அருகில் நின்று கொண்டிருந்த காவல் தலைவன் பல தேவனின் விழிகளில் தனது பார்வையை நிலைக்கவிட்ட அவந்திகா, "காவல் தலைவர் பலதேவர் நலமாகத்தானே இருக்கிறார்" என வினவினாள்.

"நலம்" எனக் கூட வாய் பேச இயலாத பலதேவன் அவளது அதிகா ரப் பார்வையில் நிலை குலைந்து சொற் களையும் இழந்து அவளுக்குப் பணிந்து தலையை தொங்க போட்டுக் கொண் டான்.

https://telegram.me/aedahamlibra

வஜ்ரபாகுவிடம், “நான் தயார். கிளம்பலாமா?” எனக் கூறியவள் வஜ்ரபாகுவையும் எதிர்பார்க்காமல் விழா நடைபெறும் திடலை நோக்கி செல்லலானாள்.

“தங்கள் திட்டம் அனைத்தையும் அறிந்ததால் தனது திட்டத்திற்குப் பணிய மறுப்பாள். எதிர்த்துப் பேசுவாள். தன்னையும் சிறை செய்ய வீரர்களுக்கு கட்டளைகளை விதிப்பாள்” என்று எதிர்பார்த்த வஜ்ரபாகு அவளது கட்டளைகளை நிறைவேற்ற நெருங்கும் வீரர்களை சரிபடுத்த தயாராக தனது காவல் வீரர்களையும் அழைத்து வந்திருந்தான். வஜ்ரபாகு அவந்திகாவின் மனநிலையை புரிந்துகொள்ள இயலாமல் சிறிது நேரம் அவள் செல்வதையே திகைத்துப் பார்த்தபடி நின்றுகொண்டிருந்தான்.

“தனது தங்கை அவந்திகாவைப் பற்றி சுங்க இளவரசன் பலவாறு கேள்விப்பட்டிருக்கிறான். நேரில் கண்டதில்லை. ஆனால், அழகே உருவமாக

https://telegram.me/aedahamlibra

நடந்து செல்லும் இவளைப் பார்த்தால் சுங்கமித்திரனின் மன நிலை கூட முற்றிலும் மாறிவிடுமே” என எண்ணிய வஜ்ர பாகு அடுத்த கணம், “அழகே உருவாக வானுலக அதிசய மங்கையைப் போன்று நடந்து செல்லும் தனது தங்கைக்கு சுங்கன் பொருத்தமானவன்தானா?” என ஒருகணம் சிந்திக்கவும் செய்தான். பிறகு, “நண்பனுக்காக தனது படையைத் திரட்டி அழைத்துக்கொண்டு வந்தது மட்டுமில்லாமல் எந்தவித பாதுகாப்பும் இல்லாமல் தனியாக தனக்கு உதவ வந்திருக்கும் தனது நண்பனுக்கு அளிக்கும் நன்றிக்கடன் அவந்திகாவைத் தவிர்த்து வேறு எவற்றாலும் பூர்த்தி செய்ய இயலாது” என எண்ணி அவனை நினைத்து மனதில் உவகை கொண்டான். பிறகு, “எது எப்படி இருந்தால் என்ன இவள் அவந்தியில் இருக்கப்போக்கும் கடைசி நாள் இன்றுதான். இனி இவள் நிச்சயம் தனது எஞ்சிய வாழ்வை சுங்க நாட்டில் தான் கழிக்கவேண்டும்” என நினைத்து

மனதை ஆசுவாசப்படுத்திக் கொண்டவன் அவந்திகாவைப் பின்தொடர்ந்து விழாத் திடலை நோக்கி செல்லலானான்.

விழாத் திடலை அடைந்த அவந்திகா விழா ஏற்பாடுகளை நோக்கினாள். வீரர்கள் ஆங்காங்கே ஒருவரை ஒருவர் எதிர்த்து வாட்களை ஏந்தி கடுமையாக போரிட்டுக் கொண்டிருந்தனர். உடல் பெருத்த வீரர்கள் மல் யுத்தத்தில் ஒருவரை ஒருவரை தாக்கிக் கொண்டு மண்ணில் விழுந்து புரண்டு கொண்டிருந்தனர். வெற்றி பெற்ற வீரர்கள் யுத்தத்தை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த பெண்களை நோக்கி கைகளை உயர்த்தியும், வாட்களை உயர்த்தியும் ஆரவாரமிட்டுக் கொண்டிருந்தனர். வீரர்கள் பலர் தனித்தனியாக ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டு தங்களது வீரத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தாலும் அவை அனைத்திலும் போலித்தன்மை மிகுந்து நாடகத் தன்மை இருப்பதைப் போன்று உணர்ந்

தவள் இதழில் இளநகை தோன்ற விழா அரங்கை நோக்கி நடந்தாள். அரங்கம் அரண்மனை மாளிகைக் காவல் சுவருக்கு ஒட்டியதைப் போன்று அமைக்கப்பட்டிருந்தது. அகலமாக அமைக்கப்பட்ட மேடையைச் சூழ்ந்து மூங்கில் தடுப்புகள் நான்கு அடுக்கு பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு மூங்கில் தடுப்பிலும் காவல் வீரர்கள் வரிசையாக நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களின் தோற்றத்தைப் பார்த்த அவந்திகா, “இவர்கள் சாதவாகன வீரர்கள் இல்லை” என்பதை அறிந்துகொண்டாள். மேடைக்கு இரண்டு புறத்திலும் வேடிக்கை பார்த்தபடி தடுப்புகளுக்கு அப்பால் மக்கள் சற்றே நெருக்கமாக நின்றுகொண்டிருந்தார்கள். அதே போன்று மேடைக்கு நேர் எதிரில் இரண்டு புறங்களிலும் மக்கள் கூட்டம் நிறைந்து காணப்பட்டாலும் அவர்கள் அனைவரும் மக்கள் கூட்டத்தைப் போன்று நின்றுகொண்டிருக்கும் வஜ்ரபா

https://telegram.me/aedahamlibra

குவின் வீரர்கள் என்பதை அவந்திகா புரிந்துகொண்டபடியே மேடையில் ஏற்க னவே அமர்ந்திருந்த அமைச்சர்களுடன் அமர்ந்துகொண்டாள். மேடையைச் சுற் றிலும் பார்வையை ஓட்டினாள். கூட்டம் கூட்டமாக நின்றுகொண்டிருந்த வஜ்ரபா குவின் வீரர்களுக்குப் பின்னால் அவந்தி மக்கள் நின்றுகொண்டிருப்பதைப் பார்த் தவள் மகிழ்ச்சிப் புன்னகை ஒன்றை சிந் தினாள்.

பார்வையை மேடைக்கு நேர் எதி ரில் செலுத்தினாள். அங்கே கூட்டத்தைப் பிளந்துகொண்டு சாதவாகன படைத்த லைவன் வஜ்ரபாகு புரவியின் மீது வந் துகொண்டிருந்தான். அவனுக்கு இடப்பு றம் பலதேவன் வந்துகொண்டிருந்தான். வலப்புறம் அவனது மெய்க்காவலன் வந்துகொண்டிருந்தான். தனது படைத் தலைவர்கள் சூழ வந்துகொண்டிருந்த வஜ்ரபாகுவை அனைவரும் வணங்கி வழி விட்டனர். கூட்டத்தைப் பிளந்து கொண்டு வந்தவன் பிரமாண்ட அரங்கத்

https://telegram.me/aedahamlibra

தின் மீது ஏறி அங்கு அமர்ந்திருந்த மூத்த அமைச்சருக்கும், அவந்திகாவுக்கும் நடுவில் பணிவுடன் அமர்ந்துகொண்டிருந்தான். வலப்புறம் அமர்ந்திருந்த அவந்திகாவிடம், “இந்த அரங்கிற்கு முன் என்ன நடந்தாலும் நீ இந்த அரங்கத்தை விட்டு இறங்கக் கூடாது. முடிந்த வரை அவந்தி இளவரசி இன்று மௌனமாக இருப்பதே சாலச் சிறந்தது” என மிரட்டும் தொனியில் தெரிவித்தான் வஜ்ரபாகு.

அவன் கூறியதைக் கேட்டதும் அவந்திகா, “என்ன அண்ணா, மிரட்டுகிறீர்களா?” என வினவினாள்.

“மிரட்டல் இல்லை அவந்திகா. உன்னைக் காக்கும் பணி எனக்கு உண்டு.”

“என் தமையனான தாங்கள் முதல் முறையாக எனக்கு கட்டளை விதிக்கிறீர்கள்! நிச்சயம் ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான்” எனப் புன்னகையுடன் தெரிவித்தாள்.

"நல்லது அவந்திகா. அதே போன்று எனது கட்டளைகள் அனைத்திற்கும் நீ உடன்பட வேண்டும்!"

"தங்களது கட்டளை!" தலையைத் தாழ்த்தி சிரித்தபடி தெரிவித்தாள் அவந் திகா.

அப்போது வஜ்ரபாகு அரங்கத்திற்கு கீழே வீரர்களுக்கு உரிய கட்டளையைப் பிறப்பித்துக் கொண்டிருந்த பலதேவனை நோக்கி கண் காட்டினான். அவனது கட் டளையை ஏற்ற பலதேவன் தலையை ஆட்டிக்கொண்டு நகர்ந்தான்.

அடுத்த கணம் சங்குகளும், குழல் களும் வேகமாக ஊதப்பட வாத்தியங்கள் அனைத்தும் இசைக்கப்பட்டன. முரசுகள் விரைந்து அடைந்த இடமே அதிரும்படி அடிக்கப்பட்டன. நடனக் குழுவினர் அப் போது அரங்கத்திற்கு முன் கூடி பாட்டுப் பாடியபடியே நடனம் ஆடத் துவங்கினார் கள். அதைப் பார்த்த அவந்திகா, "ஏற்

https://telegram.me/aedahamlibra

பாடுகள் எல்லாம் பலமாக இருக்கிறது!" என வஜ்ரபாகுவிடம் தெரிவித்தாள்.

"இதற்கே மலைத்துவிட்டால் இன்னும் அரங்கேறப் போகும் நிகழ்ச்சிகளைக் கண்டால் என்ன அவந்திகா கூறுவாய்?" எனப் பெருமையுடன் வினவினான் வஜ்ரபாகு.

"அனைத்தையும் கண்டு களிக்கத்தானே வந்திருக்கிறேன்!"

நடனம் ஒரு நாழிகைப் பொழுதிற்கு மேல் அரங்கேறியது. பிறகு மீண்டும் முரசு முழங்கப்பட்டது. நடனக் குழுவினர் அங்கிருந்து விலகி உடல் முழுவதும் சாம்பல் பூசிய காவி உடுத்திய சாமியார்கள் வந்து நின்றார்கள். அவர்கள் சண்டிகாலேசுவரரின் ருத்ர நடத்தை அரங்கேற்றினார்கள். அதி வேகமாக ஆடிய அவர்களின் நடனத்தை கண் இமைக்காமல் பிரமிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள் அவந்திகா.

அப்போது அவந்திகாவிடன் வந்த கார்த்திகா அவளது காதில் எதையோ தெரிவித்தாள். அவள் கூறியதைக் கேட் டதும் அவந்திகாவின் முகம் மாறியது. முகத்தில் கவலையின் சாயல் குடி கொண்டது. அதைக் கவனித்த வஜ்ர பாகு, "உனது தோழி கார்த்திகாவின் திற மையைக் கண்டு பல நாட்கள் நான் வியந்திருக்கிறேன். அவளைப் போன்று ஒற்றறியும் திறமைசாலியை நான் இது வரை கண்டதே இல்லை. நான் இர கசியம் என்று நினைத்திருந்த பல காரி யங்களை அவள் உன்னிடம் பகிரங் கப் படுத்தியிருக்கிறாள். என்ன, அவளது முடிவையும் இனி மோசமாக எழுதப் போகிறேன்!" என அவந்திகாவிடம் தெரி வித்தவன் நின்றுகொண்டிருந்த கார்த்தி காவைக் குரூரமாக நோக்கினான்.

"உனக்கு உயிர் பிச்சை அளிக்க வைக்கலாம் என நினைத்துக் கொண் டிருக்கிறேன் அண்ணா. நயனிகா உன் தம்பியின் மனைவி. சாதவாகன தேசத்

அப்போது அவந்திகாவிடன் வந்த கார்த்திகா அவளது காதில் எதையோ தெரிவித்தாள். அவள் கூறியதைக் கேட் டதும் அவந்திகாவின் முகம் மாறியது. முகத்தில் கவலையின் சாயல் குடி கொண்டது. அதைக் கவனித்த வஜ்ர பாகு, "உனது தோழி கார்த்திகாவின் திற மையைக் கண்டு பல நாட்கள் நான் வியந்திருக்கிறேன். அவளைப் போன்று ஒற்றறியும் திறமைசாலியை நான் இது வரை கண்டதே இல்லை. நான் இர கசியம் என்று நினைத்திருந்த பல காரி யங்களை அவள் உன்னிடம் பகிரங் கப் படுத்தியிருக்கிறாள். என்ன, அவளது முடிவையும் இனி மோசமாக எழுதப் போகிறேன்!" என அவந்திகாவிடம் தெரி வித்தவன் நின்றுகொண்டிருந்த கார்த்தி காவைக் குரூரமாக நோக்கினான்.

"உனக்கு உயிர் பிச்சை அளிக்க வைக்கலாம் என நினைத்துக் கொண் டிருக்கிறேன் அண்ணா. நயனிகா உன் தம்பியின் மனைவி. சாதவாகன தேசத்

தின் பட்டத்து ராணி அவள். அறிவினை இழந்து, சேரக் கூடாதவர்களின் அறிவு ரையைக் கேட்டு மதி கெட்டு செயல்ப டாதே!”

அவள் கூறியதைக் கேட்டு நகைத்த வஜ்ரபாகு, “என் மதிப்புக்கு ரிய சகோதரிக்கு நான் ஒன்றை தெரி வித்துக் கொள்கிறேன். யாருக்கு யார் உயிர்ப் பிச்சை அளிக்க வேண்டும் என் பதை முடிவு செய்ய வேண்டியவன் நான். சதகர்ணி இங்கேதான் உஞ்சைக்குள் இருக்கிறான் என்பதையும் அறிவேன் நான். அவனும் விரைவில் நயனிகாவைப் போன்று என்னிடம் பிடிபடுவான்” எனப் பற்களை கடித்துக்கொண்டு அவளிடம் தெரிவித்தான் வஜ்ரபாகு.

“மீண்டும் உன்னை எச்சரிக்கை செய்கிறேன் நான்!”

“அதைக் கேட்க வேண்டிய அவசி யம் எனக்கு இல்லை.”

"அவந்தியில் சதகர்ணி இருப்பதை மட்டுமே நீ அறிவாய். இன்னும் அவந்தியில் யார் யாரெல்லாம் இருக்கிறார்கள் என்பதை நீ அறிந்தால் இங்கு என்னுடன் அமர்ந்து நீ வீரம் பேசிக்கொண்டிருக்க மாட்டாய் வஜ்ரபாகு!"

"யார், சதகர்ணி தனது பெரும் படையை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறான் என்றா நீ குறிப்பிடப் போகிறாய்?"

"உன்னையும், உன் நண்பன் சுங்கனையும் எதிர்க்க பெரும்படை தேவை என்றா நீ நினைத்துக் கொண்டிருக்கிறாய்?" ஏளனத்துடன் வினவினாள் அவந்திகா.

"சுங்கன் அவந்தி வந்த செய்தி உனக்கு எப்படி தெரியும்?" அதிர்ச்சியில் வினவினான் வஜ்ரபாகு.

"சுங்கன் அவந்திக்கு என்று வந்தான். அவனது திட்டம் என்ன?

என அனைத்தையும் அறிவேன் நான். உன்னை எனக்குப் பிடிக்காவிட்டாலும், நீ எனக்கு முன் பிறந்துவிட்டாய் என் பதற்காக ஒரு தகவலைக் கூறுகிறேன். அதன் பிறகு உங்களை எதிர்க்க பெரும் படை வேண்டுமா அல்லது அவர் ஒரு வர் போதுமா என்று நீயே முடிவு செய்து கொள்!"

"யாரைப் பற்றி நீ குறிப்பிடுகிறாய்?"

"சோழப் படையின் வேளக்காரப் படைத்தலைவர் திவ்யனைப் பற்றித்தான் குறிப்பிடுகிறேன்!" அவனது விழிகளில் தனது பார்வையை நிலைக்கவைத்துக் கொண்டு தெரிவித்தாள் அவந்திகா.

"திவ்யன்" என்ற பெயரைக் கேட் டதுமே வஜ்ரபாகுவின் உடல் ஒருமுறை குலுங்கி அடங்கியது. அவனது உடலில் நடுக்கம் தோன்றியது. அதைக் கண்ட அவந்திகா நகைப்புடன், "அவரது பெய ரைக் கட்டதுமே, உனது உடல் நடுங் குகிறதே? அவரை நீ நேரில் கண்டால்

https://telegram.me/aedahamlibra

நீ இங்கேயே...” எனக் கூறியவள் தனது வதனத்தை கைகளால் மூடிக்கொண்டு சிரிக்கலானாள்.

அவள் கூறியதைக் கேட்டதும் வஜ்ரபாகு பெரும் கோபம் கொண்டு அவந்திகாவை அங்கேயே வெட்டிப் போட்டுவிடலாம் என எண்ணி தனது கரத்தை இடையில் கட்டியிருந்த வாளினை நோக்கிக் கொண்டு சென்றான். அதையும் கவனித்தவிட்ட அவந்திகா, “உனது வீரத்தை என்னிடம் நீ காட்டவேண்டாம் வஜ்ரபாகு. அவர் உன்னைத் தேடி வருவார்! அப்போது அந்த வாளுக்கு வேலை வேண்டும்” எனத் தெரிவித்தவள் பார்வையை கூட்டத்தை நோக்கி திருப்பிக் கொண்டாள்.

“அவனை நான் அவனுடைய நாட்டிற்கே சென்று தோற்கடித்து அடிமையாக்கி அனுப்பி வைத்தேன். இது எனது கோட்டை உஞ்சைப் பட்டினம். உஞ்சைக்குள் அவனை நான் கண்டால்

https://telegram.me/aedahamlibra

அடுத்த கணம் அவன் கொல்லப்படுவான்” எனத் தனது முகத்தில் நீண்டு காணப்பட்ட அந்த தழும்பினைத் தடவியபடியே தெரிவித்தான் வஜ்ரபாகு.

“நடக்கப் போவதை நான் இந்த அரங்கத்தை விட்டு இறங்காமல் தங்களது கட்டளைப்படி பார்க்கத்தானே போகிறேன்!” என வேடிக்கை பார்த்தபடி வஜ்ரபாகுவைச் சட்டை செய்யாமல் தெரிவித்தாள் அவந்திகா.

வஜ்ரபாகுவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்துக் கொண்டிருப்பதைக் கண்ட பலதேவன் அவனை நோக்கி வந்தான். அவனிடம் அனைத்தையும் தெரிவித்த வஜ்ரபாகு அவனை எச்சரிக்கை செய்தான். அவனது எச்சரிக்கையைக் கேட்ட பலதேவன் தனது உபதலைவர்களுக்கு உரிய கட்டளைகளை பிறப்பித்து அனைவரையும் அனுப்பி வைத்தான்.

https://telegram.me/aedahamlibra

சிறிது நேரம் கழித்து கையில் பட்டுத்துணியால் மூடப்பட்ட தங்கத் தட்டு ஒன்றைக் கையில் ஏந்தியபடி ஒருவன் நடந்து வந்தான். வாத்தியங்கள் அனைத்தும் இசைக்கப்பட்டன. யானைகள் இரண்டு புறத்திலும் நின்றுகொண்டு மரியாதை செலுத்தின. அவன் நடக்கும் பாதையில் பெண்கள் மலரைத் தூவ இரண்டு புறமும் வீரர்கள் சூழ அரங்கத்தை நோக்கி வந்தான். அப்போது அரங்கத்திற்கு முன் நின்ற கட்டியங்காரன், "வீராதி வீரர், சூராதி சூரர் சுங்க தேசத்தின் பட்டத்து இளவரசர் சுங்கமித்திரர் வருகிறார்" என அனைவருக்கும் தெரிவித்தான்.

கூட்டத்தில் சிறு சலசலப்புத் தோன்றியது. சாதவாகனர்களின் பரம வைரியான சுங்கமித்திரனை அங்கு எதிர்பாராத மக்களும், காவல் வீரர்களும் அதிர்ச்சியில் உறைந்து போய் நிற்க அப்போது அரங்கத்தில் அமர்ந்திருந்த பேரமைச்சர் ஒருவர் எழுந்து, "சுங்க தேசத்துப்

https://telegram.me/aedahamlibra

பட்டத்து இளவரசரை வீரர் வஜ்ரபாகு விற்கு அவந்தியின் மன்னனாக முடிசூட்ட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்" என சத்தமாக அறிவித்தார்.

அவர் அறிவித்ததைக் கேட்டதும் சில சாதவாகன வீரர்கள் எதிர்த்து குரல் கொடுக்கலானார்கள். மக்களோடு மக் களாக நின்ற வஜ்ரபாகுவின் வீரர்கள் அவர்களின் தலையை மக்கள் முன்னரே சீவலானார்கள். மக்கள் கூட்டத்திற்கு முன்னரே எதிர்த்த வீரர்கள் கொல்லப்பட அச்சத்தில் அதன் பிறகு எவரும் வாயைத் திறந்து பேசவில்லை.

அதுவரை அரங்கேறிக் கொண்டி ருந்த சதிச் செயல்களை பொறுமையு டன் பார்த்துக் கொண்டிருந்த அவந் திகாவே அதிர்ச்சியடையும்படி அடுத்த அறிவிப்பை வெளியிட்டான் வஜ்ரபாகு.

"ஆர்யதேசத்தில் எவராலும் வீழ்த்த முடியாத பெரும் வீரனும், எனது நண்ப னுமான சுங்கமித்திரனுக்கு அவந்தியின்

இளவரசி அவந்திகாவை மனைவியாகத் தாரை வார்க்கிறேன்!" என அறிவித்தான்.

அவன் அறிவித்ததைக் கேட்டதும் அமர்ந்திருந்த அவந்திகா எழுந்து நின்று வஜ்ரபாகுவை கோபத்துடன் நோக்கினாள். அரங்கத்தின் மீது ஏறி வந்த சுங்கமித்திரன் கையில் வைத்திருந்த தட்டினை வைதீகர் ஒருவரிடம் கொடுத்துவிட்டு அதிர்ச்சியில் எழுந்து நின்றுகொண்டிருந்த அவந்திகாவுக்கு முன் வந்து அவளை நோக்கினான்.

அவளது அழகிய வதனத்தையே சிறிது நேரம் நோக்கியவன், "வஜ்ரபாகு உன் தங்கை இவ்வளவு அழகாக இருப்பாள் என்று தெரிந்திருந்தால் நான் இதற்கு முன் இருவரை மணமுடித்திருக்க மாட்டேன்!" என்று வஜ்ரபாகுவிடம் தெரிவித்தான்.

வஜ்ரபாகு ஏதோ கூற வாயெடுத்தான். ஆனால், அதற்குள் சுங்கமித்திரன், "யாகம் துவங்கட்டும்! நல்ல நேரம்

முடிவதற்குள் நாம் வஜ்ரபாகுவிற்கு முடி சூட்டி விடுவோம்!" எனக் கட்டளை யிட்ட அடுத்த கணம் நெருப்பு உரு வாக்கப்பட்டு யாகம் உருவாக்கப்பட்டது. யாகத்தின் நாயகனாக வஜ்ரபாகு அமர்ந் தான். சுங்கமித்திரனும் அவனுக்கு அரு கில் யாகத்தில் அமர்ந்தான். வைதீகர் ஒருவர் யாக நெருப்பை உருவாக்கி மந்தி ரங்களை உச்சரிக்கத் துவங்கினார். வஜ் ரபாகு மற்றும் சுங்கமித்திரனின் மெய்க் காவல் வீரர்கள் கவசம் போல சூழ்ந்து நின்றுகொண்டிருந்தார்கள்.

யாகம் ஒரு நாழிகைப் பொழு திற்கு மேல் தொடர்ந்து நடந்துகொண் டிருந்தது. திடீரென்று சிறு சலசலப்புத் தோன்றியது அங்கு. களிறுகளின் பிளிறல் சத்தம் எழுந்தது. கூட்டத்தினர் அனைவ ரும் பிளிறல் எழுந்த சத்தத்தை நோக் கினார்கள். அங்கே இரண்டு பட்டத்து களிறுகள் நடந்து வந்துகொண்டிருந்தன. களிறுகளின் மீது சோழப் பேரரசர் கரி காலரும், சாதவாகன அரசன் சதகர்ணி

யும் அமர்ந்து வந்துகொண்டிருந்தார்கள். யானை மீது அமர்ந்திருந்த வேங்கை யான கரிகாலரை உஞ்சை மக்களுக்கு தெரியாததால் சதகர்ணியை அடையா ளம் கண்டு, "சாதவாகன மன்னர் சத கர்ணி வாழ்க... வாழ்க..." என அனைவ ரும் சேர்ந்து முழக்கமிடலானார்கள்.

முழக்கம் எழுந்ததும் சுங்கமித்தி ரனும், வஜ்ரபாகுவும் ஒருவரை ஒரு வர் பார்த்து புன்னகைத்துக் கொண்டார் கள். அப்போது சுங்கமித்திரன், "நண்பா... நாம் திட்டமிட்டதைப் போன்றே இது வரை அனைத்தும் அரங்கேறிக் கொண் டிருக்கிறது. பலதேவன் திட்டத்தை அரங் கேறட்டும்!" எனக் கட்டளையிட அடுத்த கணம் வஜ்ரபாகு பலதவனுக்கு கண் காட்டினான்.

வஜ்ரபாகுவின் கண் சிமிட்டல் கிடைத்த அடுத்த கணம் திட்டத்தை நிறைவேற்ற ஆயத்தமானான் பலதே வன். பலதேவன் செய்திருக்கும் சூழ்ச்

சியை அறிந்திராத சதகர்ணி கூட்டத்தைப் பிளந்துகொண்டு நெருப்பு குண்டலத்தை நோக்கிச் வந்துகொண்டிருந்தான்.

https://telegram.me/aedahamlibra

# 36. உருண்ட தலைகளும் சிதைக்கப் பட்ட திட்டமும்

யாக குண்டத்தில் அமர்ந்திருந்தபடியே சுங்கமித்திரனும், வஜ்ரபாகுவும் களிற்றின் மீது அமர்ந்திருந்த சதகர்ணியை நோக்கினார்கள். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து புன்னகைத்தபடியே சதகர்ணிக்கு அருகில் களிற்றின் மீது காணப்பட்ட கரிகாலரை நோக்கினார்கள். இருவருக்கும் அவரை அடையா

ளம் தெரியாததால் விழிகளை உயர்த்தி ஒருவரை ஒருவர் வினாவுடன் மீண்டும் நோக்கிக்கொண்டார்கள். வகுத்திருந்த திட்டத்தை நிறைவேற்றச் சொல்ல பலதேவனை நோக்கினார்கள் இருவரும். பலதேவனின் கரத்தில் இருந்த வாள் நடுங்கிக் கொண்டிருந்தது. அவனது உடல் அப்போது வியர்க்கத் துவங்கியிருந்தது. அதை இருவருமே கவனிக்க அவனிடம் காரணத்தை வினவினார்கள்.

பலதேவன் ஏதோ கூற வாயெடுத்தான். அவனது நா குழறியது. அவனால் ஒரு வார்த்தையைக் கூட உதிர்க்க இயலவில்லை. சொற்கள் அவனைக் கைவிட கையை உயர்த்தி யாரையோ சுட்டிக் காட்டினான் பலதேவன்.

அவனது விரல் சுட்டிக் காட்டிய திசையை நோக்கினர் இருவரும். இரண்டு களிறுகளுக்கும் வலப்புறத்தில் முகத்தில் புன்னகை தவழ கையில் தனது செண்டாயுதத்துடன் புரவியின் மீது அமர்ந்திருந்தான் திவ்யன். அவனை அங்கே சதகர்ணியுடன் எதிர்பார்த்திருக்

https://telegram.me/aedahamlibra
கவில்லை. மேடையில் அமர்ந்திருந்த அவந்திகாவை நோக்கினான் வஜ்ரபாகு.

"உன் காலன் வந்துவிட்டான்!" எனத் தெரிவித்தாள் புன்சிரிப்புடன்.

"உன் தங்கை கோபம் கொள்ளும் போது கூட அழகாகத் தான் இருக்கி றாள்!" என வஜ்ரபாகுவிடம் தெரிவித் தபடியே இடையை நோக்கிக் கையை கொண்டு சென்றான் சுங்கமித்திரன். "அவசரம் வேண்டாம்!" எனக் கூறிய வஜ் ரபாகு அவனது கையைத் தடுத்தான்.

கரிகாலரும், சதகர்ணியும் களிற் றின் மீது அமர்ந்திருக்க அவர்க ளுக்கு இரண்டு புறத்திலும் செங்குவீ ரன் தனது வாளினை இடையில் கட் டியபடியும், திவ்யன் தனது செண்டாயு தத்துடனும் அமர்ந்திருந்தார்கள். அவர் களுக்குப் பின்னால் திருக்கண்ணன் மற் றும் சாதவாகனப் படையின் தென்திசை மாதண்ட நாயகன் இருவரும் புரவி யில் அமர்ந்திருந்தார்கள். அவர்களுக்குப்

பின்னால் சதகர்ணியின் வீரர்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

திவ்யனை அங்கு எதிர்பார்க்காத பலதேவனுக்கு நதிக்கரை நிகழ்வுகள் சூழ அவனது மனதில் திகில் பரவச் செய்தது. புரவியில் அமர்ந்திருந்த திவ் யனையும், அவனுக்கு அருகில் களிற் றின் மீது அமர்ந்திருந்த சதகர்ணி யையும் நோக்கியவன் அரங்கத்திற்குப் பின்னால் காணப்பட்ட மாளிகையையும் ஒரு முறை நோக்கினான். பலதேவனின் ஒவ்வொரு அசைவையும் கவனித்துக் கொண்டிருந்த செங்குவீரன் மாளிகைக் குப் பின்னால் காணப்பட்ட மாளிகையை கவனித்தான். அங்கே உப்பரிகையில் திரைச் சீலைக்குப் பின்னால் ஏதோ கருத்த உருவம் ஒன்று அசைந்துகொண் டிருந்தது.

அடுத்த கணம் புரவியிலிருந்து குதித்த செங்குவீரன் கரிகாலரின் கரத் தில் இருந்த வேலினை வாங்கி அந்த

அரங்கத்தின் பின்புறம் உயர்ந்து காணப் பட்ட மாளிகையை நோக்கி எறிந்தான். வேல் பறந்து சென்ற அடுத்த கணம் அந்த மாளிகையின் உப்பரிகையிலி ருந்து வில் வீரன் ஒருவன் மார்பில் வேல் பாய்ந்தபடியே கீழே விழலானான்.

அப்போது தான் அமர்ந்திருந்த களிற்றைத் தட்டி விட்டான் சதகர்ணி. அவனது களிறு நான்கடி முன்னே வந் தது. அவனது களிறு நெருங்கியதுமே யாக குண்டத்தில் அமர்ந்திருந்த சுங்க மித்திரனும், வஜ்ரபாகுவும் எழுந்து நின் றார்கள். அவர்கள் எழுந்த அடுத்த கணம் சுங்கமித்திரனின் மெய்க்காவல் வீரர்கள் இருவரையும் சுற்றி நின்று பாதுகாப்புக் கவசம் போன்று சூழ்ந்து கொண்டார்கள்.

அப்போது களிற்றின் மீதிருந்து குதித்த சதகர்ணி களிற்றின் மீது அமர்ந் திருந்த கரிகாலருக்குத் தலை தாழ்த்தி னான். அவனது பணிவைக் கண்டதும் கூட்டத்தில் இருந்தவர்கள் மட்டுமல்லாது

https://telegram.me/aedahamlibra

சுங்கமித்திரன் மற்றும் வஜ்ரபாகுவும் களி றின் மீது "அமர்ந்திருப்பவன் யார்?" என வியப்புடன் நோக்கலானார்கள்.

அப்போது சதகர்ணி, "சோழப் பேரரசர் கரிகாலரை இந்தச் சூழ்நிலையில் வரவேற்கும் நிலை ஏற்பட்டது எனது துர் பாக்கியம். பேரரசர் பொறுத்துக் கொள்ள வேண்டும்!" என அவன் கூறியதுதான் தாமதம் உடனே கூட்டத்தோடு கூட்ட மாக சூழ்ந்திருந்த சுங்க வீரர்கள் மற் றும் வஜ்ரபாகுவின் வீரர்கள் அனைவரும் கையில் ஆயுதங்களுடன் கூட்டத்தினரை விலக்கிவிட்டு அவர்களைச் சூழலானார் கள்.

யாக குண்டலத்திற்கு முன் சுங்க மித்திரனும், வஜ்ரபாகுவும் நின்றுகொண் டிருந்தார்கள். அவர்களுக்கு முன் கவசம் போல சுங்கமித்திரனின் மெய்க் காவல் வீரர்கள் ஆயுதம் தரித்து போருக்கு ஆயத்தமாக நின்றுகொண்டிருந்தார்கள். சற்றுத் தொலைவில் அவர்களுக்கு முன்

னால் கரிகாலர் களிற்றின் மீது அமர்ந்தி ருக்க கீழே சதகர்ணி நின்றுகொண்டிருந் தான். இருவருக்கும் காவலாக இரண்டு புறத்திலும் செங்குவீரன், திவ்யன், திருக் கண்ணன் மற்றும் மாதண்ட நாயகன் காணப்பட்டார்கள். இவர்கள் அனைவ ரையும் சுங்கமித்திரன் மற்றும் வஜ்ரபா குவின் வீரர்கள கையில் ஆயுதத்துடன் சூழ்ந்து கொண்டிருந்தார்கள்.

அப்போது சுங்கமித்திரன், "சோழப் பேரரசருக்கு எனது பணிவான வணக்கம். தங்களின் வீர தீரச் செயல்களைப் பற்றி அடியேனும் கேள்விப்பட்டு வியந்திருக் கிறேன். உங்களது படையை அழைத்து வராமல் தாங்கள் மட்டும் அவந்தி வரை வந்திருக்கும் உங்களது தைரியம் என்னை வியப்படைய வைக்கிறது. உங் களை இந்த நிலையில் சந்திக்க நேர்ந்த தற்கு நானும் சாதவாகன மன்னன் சதகர் ணியைப் போன்று வருத்தப்படுகிறேன். ஆனால், தாங்கள் ஒன்றினை சிந்தித்

துப் பார்க்கவில்லை!" எனக் கரிகாலரை நோக்கியபடியே தெரிவித்தான்.

கரிகாலர் களிற்றின் மீது அமர்ந் திருந்தபடியே புன்னகை மாறாமல் அவ னையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"சுங்கமித்திரன் ஒருநாளும் தகுந்த முன்னேற்பாடில்லாமல் மாற்றான் நாட் டுக்குள் நுழைவதில்லை. சதகர்ணிக்கு உதவுகிறேன் என்று தாங்களும் உங்க ளது அடிமை படைத் தலைவனுடன் வந் திருப்பதை நினைத்தால் எனக்கு வருத் தமாக இருக்கிறது. புகாரில் வைதீகரின் திட்டத்தில் அகப்பட்டு இருங்கோவேளி டமிருந்து தப்பி இப்போது இந்த சுங் கமித்திரனின் கையினால் அனைவரும் மரணிக்கப் போகிறீர்கள்" எனச் சிரித்தப டியே தெரிவித்தான் சுங்கமித்திரன்.

அவன் கூறியதைக் கேட்டதும் அவ ருக்குப் பின்னால் புரவியில் அமர்ந் திருந்த திருக்கண்ணன் வேலினை கையில் எடுத்தான். திருக்கண்ணன் புர

வியிலிருந்து வேலினை எடுத்த சத்தத்தைக் கேட்டதுமே கையை உயர்த்தி அவனைத் தடுத்த கரிகாலர், “சுங்கமித்திரா அப்படி என்னென்ன ஏற்பாடுகளை நீ செய்திருக்கிறாய் என்பதை யாம் அறிந்துகொள்ளலாமா?” என வினவினார்.

கரிகாலரும், சுங்கமித்திரனும் பேசிக்கொண்டிருந்த போது அங்கு திடீரென்று சதகர்ணி நின்றுகொண்டிருந்த இடத்திற்கு சற்றுத் தொலைவில் கூச்சல் எழத் துவங்கியது. அங்கு நின்றுகொண்டிருந்த வீரர்களில் சிலர், “சதகர்ணி வாழ்க என்று முழக்கமிட்டார்கள்”. சிலர் “மாவீரர் வஜ்ரபாகு வாழ்க” என எதிர் முழக்கமிடலானார்கள். எதிர் முழக்கம் கணத்திற்கு கணம் அதிகரிக்க பிறகு அது தகராறாக மாறிக் கொண்டிருந்தது. ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டார்கள்.

அவர்களை அடக்க இடையில் தரித்திருந்த வாளினை உருவிக்கொண்டு அவர்களை நோக்கி நடந்தார்

https://telegram.me/aedahamlibra

சதகர்ணி. அவனுக்கு அருகில் களிற்
றின் மீது அமர்ந்திருந்த கரிகாலர் தனது
இடது கையை உயர்த்தி சதகர்ணியைத்
தடுக்க, சதகர்ணி அவ்விடத்தை விட்டு
நகராமல் நின்றுவிட்டான். இடையிலி
ருந்த வாளினை வலது கையில் எடுத்த
வர் கூச்சல் எழுந்த கூட்டத்தை நோக்கி
சுட்டிக் காட்டினார்.

அவரது வாள் சுட்டிக் காட்
டிய திசையை நோக்கிய திருக்கண்
ணன், கையில் தனது வாளினை உரு
விக்கொண்டு புரவியில் கூட்டத்தை
நோக்கி விரைந்து சென்று கூச்சல் செய்
துகொண்டிருந்தவர்களின் தலைகளை
மட்டும் தனித்தனியாக சீவத் துவங்கி
னான். திருக்கண்ணனின் தாக்குதலைக்
கண்ட மாதண்ட நாயகனும் அவனுக்கு
உதவ அங்கு நின்றவர்கள் அனைவரை
யும் இருவரும் மட்டுமே கொன்று போட்
டுக் கொண்டிருந்தார்கள். கொல்லப்பட்
டவர்களுக்குத் துணையாக வஜ்ரபாகு
வின் வீரர்கள் இருவரையும் சூழ்ந்து தாக்

https://telegram.me/aedahamlibra

கினார்கள். அப்போது சாதவாகன வீரனுடன் வந்திருந்த வீரர்கள் இருவருக்கும் துணையாக களத்தில் இறங்கி இருவருக்கும் பின்புலமாக நின்று பாதுகாப்பினை வழங்கிக்கொண்டு எதிர்த்த சொற்ப வீரர்களைச் சூழ்ந்து தாக்கினார்கள்.

கொல்லப்பட்ட வீரர்களின் அலறல் சத்தம் எழுந்து அங்கிருந்த அனைவரையும் கதிகலக்கச் செய்துகொண்டிருக்க அப்போது எங்கிருந்தோ இரண்டு குறுவாட்கள் சதகர்ணியை நோக்கி விரைந்து வந்தன. எச்சரிக்கையுடன் நின்றுகொண்டிருந்த செங்குவீரன் அதைக் கவனித்துவிட இடையில் வைத்திருந்த இரண்டு குறுவாட்களை அதிவேகமாக அதை நோக்கி எறிந்தான். செங்குவீரனின் இரண்டு குறுவாட்களும் சதகர்ணியை நோக்கி வந்த நஞ்சு தேய்க்கப்பட்ட குறுவாட்களை தடுத்து கீழே விழ வைத்திருந்தன.

தனது முதல் முயற்சி தோற்றதும் இடையை நோக்கி மீண்டும் கையைக் கொண்டு சென்றான் உஞ்சைக் காவல் தலைவன் பலதேவன். கையிலிருந்த வளரியை எடுத்து அவனை நோக்கி வீசி னான் செங்குவீரன். காற்றில் சுழன்று சென்ற வளரி பலதேவனின் மார்பில் தாக்கியது. வளரி தாக்கிய அடுத்த கணம் ஓங்கிய கையை அசைக்க முடியாமல் அப்படியே கல்லென சமைந்து நிற்கலா னான் பலதேவன். அவனைத் தாக்கிய வளரி மீண்டும் அவனை நோக்கிப் பறந்து வர அதைப் பிடித்த செங்குவீரன் மீண்டும் இடையில் வைத்துக் கொண்டான்.

திருக்கண்ணன், மாதண்ட நாயகன் மற்றும் அவனது வீரர்கள் சேர்ந்து கூச்சல் எழுப்பியவர்கள் மற்றும் எதிர்த்தவர்கள் அனைவரையும் கொன்று கரிகாலரின் கட்டளையை நிறைவேற்றிவிட்டு மீண் டும் பழையபடி நின்றுகொண்டார்கள்.

சதகர்ணி எப்படியும் அரங்கத்திற்கு தனது படை சூழ வருவான். அவனை நிச்சயம் கொன்றுவிட வேண்டும் எனும் திட்டத்திலேயே முதலில் மாளிகையிலி ருந்து அம்பினை எய்தல், வீரர்களை மோதவைத்து கூச்சல் எழச் செய்து அனைவரின் கவனமும் சிதைந்து போயி ருக்கும் போது பலதேவன் தனது குறு வாளை எய்து சதகர்ணியைக் கொலை செய்ய திட்டம் வகுத்திருந்தனர் பலதே வன், வஜ்ரபாகு மற்றும் சுங்கமித்திரன்.

மூவரும் இணைந்து வகுத்திருந்த மூன்று திட்டங்களையும் கண நேரத்தில் சிதைத்துவிட்டவர்களைக் கண்ட சுங்க மித்திரன் ஆத்திரத்தில் இடையிலிருந்த வாளினை உருவிக்கொண்டு நான்கடி முன்னே வைத்தான்.

களிற்றின் மீது அமர்ந்திருந்த கரி காலர் களிற்றைத் தட்டி விட்டார். அது யாக நெருப்பிற்கு முன் எழுந்து நின்றி ருந்த சுங்கமித்திரனை நோக்கி இரண்டடி

முன்னேறியது. களிறு நெருங்கியதுமே யாக குண்டலம் மற்றும் அரங்கத்திற்கு அருகில் நின்றுகொண்டிருந்த சுங்கமித்திரனின் மெய்க் காவலர்களுடன் மேலும் பலர் சேர்ந்துகொண்டார்கள்.

அவர்களைப் பார்த்து புன்னகைத்தபடியே மேலும் களிறினை தட்டி விட சில அடிகள் முன்னேறியது. களிற்றின் மீது அமைந்திருந்த படியே, “சுங்கமித்திரா, மௌரிய மன்னன் பிரகத்ரதனைப் போன்று அனைத்து மன்னர்களும் முட்டாள்களாக இருக்கமாட்டார்கள்!” எனத் தெரிவித்தவர் நகைக்கவே செய்தார்.

தனது தந்தை வீரர்களுக்கிடையில் கூச்சல் எழச் செய்து மௌரிய மன்னன் பிரகத்ரதனைக் கொலை செய்ததைத் தான் சோழப் பேரரசர் குறிப்பிடுகிறார் என்பதை உணர்ந்த சுங்கமித்திரன் கரிகாலரையே நோக்கியபடி நின்றுகொண்டிருந்தான். அவனிடம், “சுங்கமித்திரா, ஒரு நாளும் நீ தகுந்த முன்னேற்பாடுகள்

இல்லாமல் வருவதில்லை என்று தெரிவித்தாயே அப்படி என்னென்ன ஏற்பாடுகளை நீ செய்திருக்கிறாய் என்று நான் அறிந்துகொள்ளலாமா?" என வினவினார்.

"உயிரை இழக்குமுன் அறிந்து கொள்!" எனக் கூறி நீண்ட பெருமூச்சு ஒன்றை விட்டவன் பிறகு, "உஞ்சையைச் சுற்றி எனது பெரும்படையை நிறுத்தி வைத்திருக்கிறேன். இரண்டு தினங்களுக்கு முன்னரே அவைகளை புறப்பட்டு வரச்சொல்லி கட்டளையிட்டுவிட்டேன். இந்நேரம் அவர்கள் உஞ்சைப் பட்டினத்தின் எல்லையை அடைந்திருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. எனது வீரர்கள் மட்டுமல்லாமல் வஜ்ரபாகுவின் சாதவாகன படை வீரர்கள் பத்தாயிரம் பேர் மற்றும் அவன் இரகசியமாக திரட்டி வைத்திருந்த பதினைந்தாயிரம் புரவி வீரர்கள் என கிட்டத்தட்ட நாற்பதாயிரம் புரவி வீரர்கள் உஞ்சையை சூழ்ந்திருக்கிறார்கள். என் மீதோ அல்

லது வஜ்ரபாகுவின் மீதோ சிறு கீறல் ஏற்பட்டாலும் அந்தப் படைகள் அடுத்த கணம் உஞ்சையை மட்டுமல்ல உங்களையும் சேர்த்து தீக்கிரையாக்கிவிடுவார்கள் என்பதை புரிந்துகொள்!”

“சரியான முன் ஏற்பாடுதான் சுங்கமித்திரா!” எனக் கூறி அவனது திட்டத்தைப் பாராட்டிய கரிகாலர், “உனது அடுத்த ஏற்பாடுகளைப் பற்றியும் நான் அறிந்துகொள்ளலாமா?” என வினவினார்.

அப்போது குறுக்கிட்ட வஜ்ரபாகு, “உங்களை சூழ்ந்திருப்பவர்கள் அனைவரும் பொதுமக்கள் என்று எண்ண வேண்டாம் சோழப் பேரரசே! இவர்கள் அனைவரும் எனது மெய்க் காவலர்கள் மற்றும் சுங்க வீரர்கள்!” எனக் கம்பீரமாகத் தெரிவிக்கலானான்.

அவர்கள் இருவரும் கூறியதைக் கேட்டதும் களிற்றின் மீது அமைதியாக அமர்ந்திருந்தார் கரிகாலர். அப்போது

சுங்கமித்திரன், "கரிகாலா... உனக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கிறேன். சதகர்ணியைக் கைவிட்டு அவந்தியை விட்டு உனது படைத் தலைவனுடன் ஓடிவிடு. இல்லையேல், நீயும் இவனுடன் சேர்ந்து இறக்கவேண்டி வரும்!" என எச்சரிக்கை செய்தான்.

அதுவரை அமைதியாகப் புன்னகையுடன் அமர்ந்திருந்த கரிகாலர், "சுங்கமித்திரா, உனது அண்டை நாட்டுக்குள் ஊடுருவி வந்திருக்கும் நீயே இவ்வளவு முன் ஏற்பாட்டுடன் வந்திருக்கும்போது வெகு தொலைவிலிருந்து வந்திருக்கும் நான் என்னென்ன ஏற்பாடுகளை செய்துகொண்டு வந்திருப்பேன் என்று கண நேரமாவது நீ சிந்தித்ததுண்டா?" என வினவினார்.

சுங்கமித்திரன் அருகில் நின்றுகொண்டிருந்த வஜ்ரபாகுவை நோக்கினான். அவனும் பதிலுக்கு இவனை நோக்கினான்.

https://telegram.me/aedahamlibrary

அப்போது செங்குவீரன், "திருக் கண்ணா..." என அழைத்தான்.

உடனே புரவியைத் தட்டிவிட்டான் திருக்கண்ணன். அவனைப் பின்தொடர்ந்து மாதண்ட நாயகனும் அவனுடன் புரவியில் செல்லலானான். சுங்க வீரர்களின் பாதுகாப்புக்கு மத்தியில் நின்று கொண்டிருந்த சுங்கமித்திரனை நோக்கி கொண்டுவந்திருந்த துணி மூட்டையை வீசி எறிந்தான் திருக்கண்ணன். அவனைத் தொடர்ந்து மாதண்ட நாயகனும் இன்னொரு மூட்டையை வீசி எறிந்தான். இரண்டு மூட்டைகளும் சுங்கமித்திரனின் காலடியில் உருண்டுகிடந்தன.

"என் படைத்தலைவர் உனக்காக கொண்டுவந்திருக்கும் பரிசினை பிரித்துப் பார் சுங்கமித்திரா..." கட்டளையிட்டார் கரிகாலர்.

கீழே கிடந்த இரண்டு மூட்டைகளையும் தூக்கி தலைகீழாகக் கொட்டினான் சுங்கமித்திரன். அதிலிருந்து

உடலை இழந்த தலைகள் மட்டும் தொப் தொப்பென்று கீழே விழுந்து அவனது காலடியில் உருண்டன.

அதைப் பார்த்த சுங்கமித்திரன் அக்கணம் மிரண்டு போய் இரண் டடி பின்னால் நகர்ந்தான். கீழே கிடந்த தலைகளையே அவன் அதிர்ச்சியுடன் தனது பார்வையை நம்பலாமா? அல்லது வேண்டாமா? என எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்த போது, “உனக்காக வந்து கொண்டிருப்பதாகத் தெரிவித்த உனது படைத் தலைவர்களின் தலைகள் தானே இவை?” என வினவினார் கரிகா லர்.

“இது சாத்தியமே இல்லை!” என சுங்கமித்திரன் கூறிக்கொண்டிருந்த போதே கரிகாலர் கையை உயர்த்தி னார். அடுத்த கணம் அந்தக் கூட்டத்தில் வாளுடன் நின்றுகொண்டிருந்த சுங்க மற்றும் வஜ்ரபாகுவின் வீரர்களின் கழுத் தினை அறுத்துக் கொன்றார்கள் அவர்க

ளுக்குப் பின்னால் மாறுவேடத்தில் நின்றுகொண்டிருந்த சாதவாகன வீரர்கள்.

நிர்க்கதியாக நின்ற சுங்கமித்திரனிடம், "உனது தந்தை தானே ஒவ்வொரு தலைக்கும் நூறு பொற்காசுகளை அளிப்பதாக அறிவித்திருக்கிறான். அவனிடம் இங்கு உருண்டு கிடக்கும் தலைகளைக் கொடுத்து நீயும் பொற்காசுகளைப் பெற்றுக் கொள்!" என ஆத்திரத்தோடு தெரிவித்தார் கரிகாலர்.

தன்னைச் சுற்றி கடந்த அரை நாழிகை நேரத்தில் நடந்துவிட்ட நம்பத்தகாத நிகழ்ச்சிகளைக் கண்டு மிரண்டு போய் நின்றுகொண்டிருந்த சுங்கமித்திரனை நோக்கி, "இனி உனக்கு உதவுவதற்கு யாரும் இல்லை சுங்கமித்திரா... நீ திரட்டியிருந்த மொத்தப் படையையும் எனது படைத் தலைவர் அழித்துவிட்டார். உனது வீரர்களின் குருதி இன்னும் நதியில் வடிந்துகொண்டு இருக்கிறது" என அவனிடம் தெரிவித்தவர் செங்குவீரனி

டம், "படைத் தலைவரே, சுங்கமித்திர னைச் சுற்றிலும் சூழ்ந்திருக்கும் அவனது மெய்க் காவல் வீரர்களை களைந்தெறி யுங்கள். நம் வேளக்காரப் படைத்தலை வர் உரைத்த வெஞ்சினத்தில் இரண்டை இங்கேயே அவர் நிறைவேற்றட்டும்" எனக் கட்டளையிட்டார் கரிகாலர்.

"தங்களது உத்தரவு பேரரசே..." எனத் தெரிவித்த செங்குவீரன் திவ்யனை நோக்கி, "நண்பா..." என அழைத்தான்.

அவன் கையிலிருந்த செண் டினை செங்குவீரனை நோக்கி எறிந் தான். அதைப் பற்றிக்கொண்ட செங்கு வீரன் சுங்க வீரர்களை நோக்கி நடந் தான். "அவனைத் தாக்குங்கள்!" என சுங்கமித்திரன் கட்டளையிட்டது தான் தாமதம். அடுத்தகணம் அவனைச் சுற்றி நின்ற மெய்க் காவல் வீரர்கள் அனைவ ரும் செங்குவீரனை நோக்கி ஓடி வந்தார் கள். கையிலிருந்த செண்டினை சுழற்றி

யபடியே அவர்களுக்குள் ஊடுருவினான் செங்குவீரன்.

அவனது கரத்தில் சுழன்றுகொண் டிருந்த அந்த கொலைக் கருவியில் அகப்பட்ட சுங்கர்களின் தலை, கை, உடல் என ஒவ்வொன்றும் தனித்தனியா கப் பறிக்கப்பட்டு காற்றில் பறந்து விழுந் துகொண்டிருந்தன. அவனது சுழற்சி வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாத அத் தனை மெய்க்காப்பு வீரர்களையும் ஒரு நாழிகைக் காலத்திற்கும் குறைவான நேரத்தில் கொன்று போட்டிருந்தான் செங்குவீரன்.

அவனது கரத்தில் செண்டு சுழன்ற வேகத்தைப் பார்த்தவர்கள் அனைவரும் மிரண்டு போய் நின்றுகொண்டிருந்தார் கள்.

செண்டிலிருந்து குருதி சொட்ட சொட்ட எதிரில் யாராவது எஞ்சி இருக் கிறார்களா? என நோக்கினான் செங் குவீரன். பாதுகாப்புக்கு நின்ற அனை

https://telegram.me/aedahamlibra

வரும் பிணமாகக் கிடக்க வஜ்ரபாகுவும், சுங்கமித்திரனும் மட்டும் செங்குவீரனை வெறித்துப் பார்த்தபடியே பிணங்களுக்கு மத்தியில் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களுக்கு இடப்புறத்தில் நரம்படியால் தாக்கப்பட்ட பலதேவன் பிணத்தினைப் போல தலையைத் தவிர மற்ற எந்த பாகத்தையும் அசைக்க முடியாமல் அப்படியே நின்றுகொண்டிருந்தான்.

அதுவரை பொறுமையாக நின்ற வஜ்ரபாகு இடையிலிருந்த வாளினை உருவிக்கொண்டு செங்குவீரனை நோக்கி ஓடிவந்தான். திடீரென்று தன்னைத் தாக்கிய அவனது வாளினைத் தடுக்க தனது கையிலிருந்த செண்டினால் அவனது கையை நோக்கி விசிறினான் செங்குவீரன். அவனது வாளோடு அவனது கையும் சேர்ந்து காற்றில் பறந்துகொண்டிருந்தது. கையில் குருதி வழிந்தபடி நின்றுகொண்டிருந்த வஜ்ரபாகுவின் கழுத்தைப் பிடித்து தூக்கி நிறுத்தினான் செங்குவீரன். சற்றுத் தொலைவில்

நின்றுகொண்டிருந்த திவ்யனை நோக்கி இன்னொரு கையிலிருந்த செண்டினை எறிந்தவன், "நண்பா...!" எனக் கூறிக் கொண்டு வஜ்ரபாகுவையும் தூக்கி திவ் யனை நோக்கி எறியலானான்.

காற்றில் பறந்து வந்த செண்டி னைப் பற்றிய திவ்யன் செங்குவீரன் எறிந்த வஜ்ரபாகுவின் உடலை செண் டினால் வெட்டினான். அடுத்த கணம் அவனது உடல் இரண்டு துண்டாக கீழே விழுந்தது.

பலதேவன் மற்றும் சுங்கமித்திரனை நோக்கிக் கொண்டிருந்த செங்குவீரனி டம் வந்த திவ்யன் அசைய முடியா மல் நின்றுகொண்டிருந்த பலதேவனை பார்த்து, "இவனை என்ன செய்தாய்?" என வினவினான்.

"வழக்கமான வர்மஅடி தான்!"

"அவனை நீ நெருங்கவே இல்லையே, அப்புறம் எப்படி நீ அவனைத் தாக்கினாய்?"

"நரம்படியைக் தொடுக்க வேண்டுமெனில் வாள் தேவையில்லை. வளரி போதும்!" என செங்குவீரன் கூறிக் கொண்டிருந்த போதே அசையமுடியாமல் நின்றுகொண்டிருந்த பலதேவனை நோக்கிய திவ்யன், "அன்றே உன்னை நான் நதிக்கரை மாளிகையில் எச்சரிக்கை செய்தேன். இன்னொரு முறை உன்னை நான் காண நேர்ந்தால் உனது உயிருக்கு என்னால் உத்திரவாதத்தை அளிக்க முயலாது என்று" எனக் கூறியவன் அவனை நோக்கி செண்டினை செலுத்தினான் திவ்யன். அவனது உடல் அப்போதும் அப்படியே நிற்க அவனது தலை மட்டும் தனியாக பிரிந்து போய் யாக குண்டல நெருப்பில் விழுந்தது.

திவ்யன் சுங்கமித்திரனை நோக்கி நடந்தான். திவ்யன் சுங்கமித்திரனை

https://telegram.me/aedahamlibra

அடைவதற்குள் அவனே வாளோடு திவ்யனை நோக்கி நடந்து வந்த வன் வாளினை உயர்த்திக் கொண்டு போருக்கு ஆயத்தமாக நிற்கவும் செய் தான். திவ்யனும் கையிலிருந்த செண் டினை தரையில் ஊன்றி வைத்துவிட்டு இடையில் கட்டியிருந்த வாளுறையிலி ருந்து தனது வாளினை உருவிக் கொண் டான்.

திவ்யன் கடும் கோபத்தில் காணப் பட்டாலும் அமைதியாகவே நின்று கொண்டிருந்தான். வாளினை கையில் பிடித்தபடி தொங்கப் போட்டபடி நின் றுகொண்டிருந்த சுங்கமித்திரன் சிறிது நேரம் திவ்யனையே நோக்கினான். திவ் யன் வாளினை அவனுக்குப் பின்புறமாக நீட்டிக்கொண்டு வலது காலை முன் வைத்து நின்ற தோரணை அவனும் சம ருக்குத் தயார் என்பதை சுங்கமித்திர னுக்கு உணர்த்தியது.

https://telegram.me/aedahamlibra

கீழே தொங்கப்போட்டபடி பிடித்
துக்கொண்டிருந்த வாளினை திடீ
ரென்று உயர்த்திய சுங்கமித்திரன் தனது
வாளினை சுழற்றியது மட்டுமல்லாமல்
அவனும் சுழன்று திவ்யனைத் தாக்கி
னான். வாளினை திவ்யனை நோக்கி
அதிவேகமாகப் பாய்ச்சினான். போர்க்
கலைகளை நிரம்பக் கற்றவனும், சுங்க
தேசத்தின் பெரும் வீரன் எனும் பெயரெ
டுத்தவனுமான சுங்கமித்திரனின் தாக்கு
தலை முதலில் திவ்யன் கணிக்க தடு
மாறினாலும் பிறகு நிதானமாக நின்று
கொண்டு அவனது தாக்குதலைத் தடுத்
துக் கொண்டிருந்தான். திவ்யன் எதிர்
தாக்குதல் தொடுக்காமல் தற்காப்புப்
போரில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாலும்
திவ்யன் பதிலுக்குத் தாக்குவதற்கு எந்
தவித வாய்ப்பும் அளிக்காமல் தாக்
கிக் கொண்டிருந்தான் சுங்கமித்திரன்.
சுங்கமித்திரனின் கரம் ஓய்ந்துவிட்டது
என்று நினைக்கும்போது அவன் தனது
வாளினை இன்னொரு கரத்திற்கு மாற்

https://telegram.me/aedahamlibra

றிக்கொண்டு அதே வேகத்தில் திவ்யனை நோக்கித் தனது வாளினை செலுத்தலானான். வாளினை இரண்டு கைக்கும் மாறி மாறி செலுத்தி திவ்யனைக் குழம்பச் செய்யும் நோக்கில் தாக்கினான் சுங்கமித்திரன். சமரின் தொடக்கத்தில் தற்காப்புப் போரில் மட்டுமே ஈடுபட்ட திவ்யன் பிறகு மெல்ல தனது தாக்குதலையும் துவங்கினான். தொடக்கத்தில் திவ்யனின் தாக்குதலையும் லாவகமாகத் தடுத்து நிறுத்திக் கொண்டிருந்தான் சுங்கமித்திரன். திவ்யனின் வாளின் வேகம் கணத்திற்கு கணம் அதிகமாகிக்கொண்டிருந்தது. திவ்யனின் வாளானது பலமாக இடியைப் போன்று சுங்கமித்திரனை நோக்கி பல திசைகளிலும் இறங்கினாலும் அதையும் சுங்கமித்திரன் தடுத்துக் கொண்டிருந்தான். அப்போது திடீரென்று தனது கழுத்தை நோக்கி வந்த திவ்யனது வாள் வீச்சினை தடுத்து தள்ளி விட்ட சுங்கமித்திரன், “திவ்யா... குணக் கடலில் உன்னை நான் சந்தித்தபோது காணப்

https://telegram.me/aedahamlibrary

பட்டதை விடவும் உனது வாளின் வேகம் இப்போது பல மடங்கு அதிகமாகிவிட்டது. ஆனால், உனது வாளின் வேகம் என்னைத் தோற்கடிக்கும் அளவிற்கு இன்னும் அதிகமாகவில்லை" என்று கூறிக் கொண்டே திவ்யனைத் தாக்க திவ்யனும் அவனது வாளினைத் தடுத்து நிறுத்தினான். அந்த வாளினை அவன் இழுக்கும் போது திவ்யனின் கரத்தைக் கிழித்திருந்தது. அவனது கரத்தில் குருதி சொட்டவும் செய்தது.

திவ்யனின் கரத்தில் வழிந்த குருதியைப் பார்த்த சுங்கமித்திரன், "உன்னுடன் விளையாடியது போதும் என்று நினைக்கிறேன்" எனக் கூறியவன் தனது தாக்குதல் முறையை மாற்றிக்கொண்டு திவ்யனைத் தாக்கினான். அதுவரை திவ்யனின் வாளினை நோக்கித் தனது வாளினை செலுத்தி தாக்கிக் கொண்டிருந்த சுங்கமித்திரன் பிறகு அவனது வாளிலிருந்து விலகி பக்கவாட்டில் வாளினை செலுத்தினான். திவ்யனும்

https://telegram.me/aedahamlibra

அவனது தாக்குதல் வியூகத்தைப் புரிந் துகொண்டு பின்னால் நகர்ந்தபடியும் உடலை சாய்த்தும் அவனது வாள் வீச் சைத் தடுத்துக் கொண்டிருந்தான். இரு வருக்கும் ஒரு நாழிகை நேரத்திற்கும் மேல் போர் நீடித்துக் கொண்டிருந்தது. திவ்யனின் கரத்தில் மூன்று காயங்களை ஏற்படுத்தியிருந்தான் சுங்கமித்திரன்.

இரண்டு வாட்களுமே ஒன்றுக் கொன்று சளைக்காமல் எதிர்த்து தாக்கிக் கொண்டும், தற்காத்துக்கொண்டும் நின் றுகொண்டிருந்தன.

அதுவரை திவ்யன் எவரிடமும் அவ்வளவு நேரம் சண்டையிட்டுப் பார்க் காத கரிகாலரும், செங்குவீரனும் சுங்க மித்திரனின் வீரத்தை எண்ணி வியந்தபடி அவர்களின் சமரைப் பார்த்துக் கொண் டிருந்தார்கள். அப்போது திடீரென்று சுங் கமித்திரனின் வாள் வீச்சு முறை மீண் டும் மாறியது. அவனது கரத்தின் மணிக் கட்டை வேகமாக அசைக்க அவனது

கையில் அவனுடையே வாள் அதிவே கத்தில் சுழன்றபடியே திவ்யனைத் தாக் கியது. அவனது கரமும், மணிக்கட்டும் மட்டுமே அசைவது வேடிக்கை பார்த்த வர்களுக்கு தெரிந்தது. அவனது வாளின் அதிவேக சுழற்சியினால் அவனது வாளினை எவராலும் காண இயல வில்லை. திவ்யனின் வாளும், சுங்கமித் திரனின் வாளும் எதிர்கொள்ளும் போது எழுந்த சத்தம் மட்டுமே சுங்கமித்திரனின் வாளினை திவ்யன் தடுத்துக் கொண்டி ருக்கிறான் என்று சுற்றி இருந்தவர்கள் அறிந்துகொண்டார்கள். சுற்றி நின்றவர் கள் அனைவரும் வியந்துபோய் அவர் களின் சமரைப் பார்த்துக்கொண்டிருந்த வேளையில் அப்போது திடீரென்று அவ் விடத்தில் சரேலென்ற சத்தம் எழ சுங்க மித்திரனின் வாள் காற்றில் பறந்து சென் றுகொண்டிருந்தது.

ஆயுதத்தை இழந்து நின்ற சுங்க மித்திரன் தனது வாள் எப்படி கையை விட்டுப் பிரிந்தது என்று நம்புவதற்கு

இயலாமல் அதிர்ச்சியில் நின்றுகொண்டி ருந்த பொது அவனது கழுத்தில் தனது வாளினை வைத்த திவ்யன், “உன்னைக் கொல்லவேண்டும் என நான் நினைத்து எனது வாளினைச் சுழற்றியிருந்தால் இவ் வளவு நேரம் நமது போர் நீடித்திருக் காது சுங்கமித்திரா. உனது நண்பர்க ளைப் போன்று உனது உயிரும் எனது வாளினால் குடிக்கப்பட்டிருக்கும். வச்சிர நாட்டின் சுங்க இளவரசனான உனக்கு அவந்தியில் சிறு காயத்தையும் ஏற்படுத் தக் கூடாது என்ற நோக்கத்தினாலேயே இந்தப் போர் இவ்வளவு நேரம் நீடித் தது. உன்னை அவந்தியில் கொன்று சத கர்ணிக்கும், சோழப் பேரரசர் கரிகால ருக்கும் நான் அவப்பெயரை உண்டாக்க விரும்பவில்லை. உன்னை நான் மகத் திலேயே வந்து சந்திக்கிறேன்! நீ புறப்ப டலாம். நீ அவந்தி எல்லையைத் தாண் டும் வரை உன்னை யாரும் தொந்தரவு செய்யமாட்டார்கள்!” என அவனது விழி களைப் பார்த்து திவ்யன் கூற பதில் பேசா

இயலாமல் அதிர்ச்சியில் நின்றுகொண்டி ருந்த பொது அவனது கழுத்தில் தனது வாளினை வைத்த திவ்யன், "உன்னைக் கொல்லவேண்டும் என நான் நினைத்து எனது வாளினைச் சுழற்றியிருந்தால் இவ் வளவு நேரம் நமது போர் நீடித்திருக் காது சுங்கமித்திரா. உனது நண்பர்க ளைப் போன்று உனது உயிரும் எனது வாளினால் குடிக்கப்பட்டிருக்கும். வச்சிர நாட்டின் சுங்க இளவரசனான உனக்கு அவந்தியில் சிறு காயத்தையும் ஏற்படுத் தக் கூடாது என்ற நோக்கத்தினாலேயே இந்தப் போர் இவ்வளவு நேரம் நீடித் தது. உன்னை அவந்தியில் கொன்று சத கர்ணிக்கும், சோழப் பேரரசர் கரிகால ருக்கும் நான் அவப்பெயரை உண்டாக்க விரும்பவில்லை. உன்னை நான் மகத் திலேயே வந்து சந்திக்கிறேன்! நீ புறப்ப டலாம். நீ அவந்தி எல்லையைத் தாண் டும் வரை உன்னை யாரும் தொந்தரவு செய்யமாட்டார்கள்!" என அவனது விழி களைப் பார்த்து திவ்யன் கூற பதில் பேசா

மல் அங்கிருந்து நகர்ந்தான் சுங்கமித்தி ரன்.

அப்போது, "சுங்கா..." என அழைத் தான் செங்குவீரன்.

அவனது குரலைக் கேட்டு திரும்பி னான் சுங்கமித்திரன்.

"நீ மட்டும் செல்கிறாய். உனக்கு துர்போதனை போதித்தும் உனது குரு வான வைதீகர் பாகவதர் மாறுவேடத் தில் அமர்ந்திருக்கிறாரே அவரை விட்டுச் செல்கிறாய்? அவரை அழைத்துச் செல் வது யார்?" என செங்குவீரன் வினவ மாறுவேடத்தில் முகம் முழக்க தாடியுடன் அமர்ந்து மந்திரம் ஓதிக் கொண்டிருந்த வைதீகர் எழுந்து நின்றார்.

எதிரில் குருதிக் கரை படிந்த செங்குவீரனை பல வருடங்கள் கழித்து பார்த்த வைதீகர் நடுக்கத்துடன் நின் றுகொண்டிருந்தார். அவரது விழிகளில் கோபமும், குரோதமும் நிறைந்திருந்தன.

அவரிடம், "மாறுவேடத்தில் அமர்ந்திருந் தால் உன்னை அடையாளம் காண இயலாது என எண்ண வேண்டாம்... எங்கு, எந்த உருவத்திற்குள் மறைத்தி ருந்தாலும் உன் உயிர் எனது கையில் தான்! இப்போது நீ அவனுக்கு துணை யாக அவனுடன் கிளம்பலாம்!" எனக் கட்டளையிட வைதீகர் நடுக்கத்துடன் விரைந்தார்.

செங்குவீரனும், திவ்யனும் களிற் றின் மீது அமர்ந்திருந்த கரிகாலரிடன், "பேரரசே, உங்களது கட்டளையை நிறை வேற்றி விட்டோம்!" எனப் பணிந்தனர்.

கரிகாலர் செங்குவீரனிடம், "படைத் தலைவரே, உங்களது வாள் வீச்சின் வேகம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. செண்டினை வேளக் காரப் படைத்தலைவரை விடவும் அதி வேகமாக சுழற்றுகிறீர்கள்!" எனப் பாராட் டியவர் திவ்யனிடம், "தலைவரே, அவந்

https://telegram.me/aedahamlibrary

திக்கு வந்த அனைத்து பணியும் முடிந்து விட்டதா?” என வினவினார்.

“தங்களது உத்தரவுப் படி அனைத்தும் நிறைவேற்றப்பட்டுவிட்டது!”

“எனது உத்தரவு இருக்கட்டும்! அவந்திக்கு எதற்காக வந்தீர்கள்?”

“தங்களது திட்டப்படி வஜ்ரபாகுவை வீழ்த்தி சுங்கமித்திரனின் திட்டத்தை முறியடித்து சாதவாகன அரசர் சதகர்ணிக்கு உதவுவதற்காக!”

அப்போது குறுக்கிட்ட திருக்கண்ணன், “தலைவரே, இத்திட்டம் பின்னாளில் கரிகாலரால் வகுக்கப்பட்டது. புகார் கடற்கரையில் அன்று உபதலைவர் வில்லவன் மற்றும் உபதலைவர் பரதவன் குமரனிடம் தாங்கள் என்ன தெரிவித்தீர்கள் என்று நினைவு இருக்கிறதா?” என வினவினான்.

திவ்யன் அரங்கத்திற்கு அருகில் நின்றுகொண்டிருந்த அவந்தி

காவை நோக்கினான். அப்போது செங் குவீரன், "அனைத்திற்கும் பேரரசரின் உத்தரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்க கூடாது நண்பா..." எனச் சிரித்தபடி கூற அவர்களுடன் சேர்ந்து சாதவாகன அரசர் சதகர்ணியும் சிரிக்கலானார்.

அனைத்தையும் புரிந்துகொண்ட திவ்யனால் அதற்கு மேல் பொறுமை காக்க முடியவில்லை. அருகில் நின்ற புரவியை நோக்கினான். அது அவனை நோக்கி நடந்து வந்தது. உடனே அதன் மீது தாவியவன் கீழே கிடந்த சுங்கர் களின் உடல்களைக் கடந்து அவந்தி காவை அடைந்தான்.

அடுத்த கணம் அவளைத் தூக்கி தனது மடியில் கிடத்தியவன் புரவியைத் தட்டிவிட்டான். உஞ்சைப் பட்டினத்தின் பெரும் வீதிகளின் வழியாக அவளது மாளிகையை நோக்கி தூக்கிச் சென்று கொண்டிருந்தான் திவ்யன்.

அவன் செல்வதையே அனைவரும் அக்கணம் பார்த்துக் கொண்டிருக்க அப் போது திருக்கண்ணன் செங்குவீரனிடம், "தலைவரே, அடுத்து மகதம் தானே?" என வினவினான்.

"இல்லை திருக்கண்ணா... மகத மன்னன் புஷ்யமித்திரனை விடவும் பெரும் வீரனான பீமவேலனை நாம் கலிங்கத்தில் சந்திக்கவேண்டி இருக்கி றது. கலிங்கப் போர் முடிந்த பிறகே நம் மால் மகதம் நோக்கி முன்னேற முடியும்!"

அப்போது களிறின் மீது அமர்ந்தி ருந்த கரிகாலர் கீழே குதித்து, "ஆமாம், திருக்கண்ணா... கலிங்கப் பீமவேலன் பெரும் வீரன். ஆனால் அவனது தந்தை காரவேலனிடம் எனக்கு தீர்க்க வேண்டிய கணக்கு நிறைய இருக்கிறது. அவனை முதலில் நாம் முறியடிப்போம். பிறகு மக தத்தை நோக்கி முன்னேறுவோம்!" எனத் தெரிவிக்கலானார்

https://telegram.me/aedahamlibra

"தங்களது உத்தரவு பேரரசே!" எனப் பணிந்தான் திருக்கண்ணன்.

அடிக்குறிப்பு:

1. மௌரிய மன்னன் பிரகத்ரதன் மகதத்தில் தனது படைகளின் அணிவகுப்பை பார்வையிட்டுக் கொண்டிருந்தான். அப்போது படைகளில் சிறு சலசலப்புத் தோன்ற அதனை பார்வையிடுவதற்கு மன்னர் பிரகத்ரதன் தனது மெய்க் காவல் வீரர்களின் துணை இல்லாமல் சென்றபோது தனது சேனாதிபதி புஷ்யமித்திர சுங்கனால் கொல்லப்பட்டார். அவரைக் கொன்றது மட்டுமல்லாமல் தன்னை மகதத்தின் அரசனாக அறிவித்துக் கொண்டான் புஷ்யமித்திர சுங்கன். Sourse: A Comprehensive Histry of Ancient India (3rd Volume) P.N Chopra, .B.N Puri, M.N Das, A.C Pradhan

2. மௌரியர்களின் பௌத்தம் தழுவிய அரசை வீழ்த்திவிட்டு சுங்க

அரசை தோற்றுவித்த புஷ்யமித்திரன் பிறகு தன்னிடம் கொண்டுவரும் ஒவ்வொரு பௌத்த தேரர்களின் தலைக்கும் நூறு பொற்காசுகளை அளிப்பதாக அறிவித்தான். Sourse: Buddhism & Indian Civilization By R.K Pruthi Discovery Publishing House. Page No. 83

https://telegram.me/aedahamlibra

# 37. வில்லவனின் கழுத்தில் வைக்கப் பட்ட வாள்

சேர மன்னரால் வஞ்சியிலிருந்து அனுப்பப்பட்ட சேரப் படை, பாண்டிய மன்னரால் கூடலிலிருந்து அனுப்பப்பட்ட பாண்டியப் படை மற்றும் தென்னக

வேளிர்களின் சிறு சிறு படைகள் என அனைத்தும் கரிகாலரின் சோழப் படையுடன் இணைக்கப்பட்டு தொண்டை மண்டலம் வழியாகவும், புகாரிலிருந்து கடல் மார்க்கமாகவும் புறப்பட்டு கிருஷ்ணை நதிக்கரையில் நிலை கொண்டிருந்த படையுடன் சேர்ந்திருந்தது. கிருஷ்ணை நதிக்கரையின் வடகரையில் வடுக நாட்டில் நிலை கொண்டிருந்த தென்னகத்தின் பெரும்படை சமுத்திரத்தைப் போன்று பரந்து விரிந்து காணப்பட்டது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை கூடாரங்களும், வீரர்களின் தலைகளுமே தென்பட்டுக் கொண்டிருந்தன. காலாட் படையினர், புரவி வீரர்கள், வில் வீரர்கள், யானைகள், ஈட்டி எறியும் வீரர்கள், காற்றை விடவும் அதி வேகத்தில் விரையும் கரிகாலரின் தேர்ப்படை என ஒவ்வொரு படையும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு எப்போது வேண்டுமானாலும் அணிவகுப்பதற்கு வசதியாக பரந்த இடைவெளியில் கூடாரங்களில் தங்க வைக்கப்பட்டிருந்தார்கள். வீரர்களுடன் கோட்டைகளைத் தகர்க்க உதவும் பொறிகளான இடங்கணிப் பொறி, வலங்கணிப் பொறி, எரிதழல், விற்களை சரமாரியாக எறியும் வளைவிற்பொறி, கவண், தாக்கவரும் களிறுகளை சிக்கவைத்து சிதைக்கும் களிற்றுப் பொறி ஆகியவை

மரக்கலங்களின் மூலம் கொண்டுவரப் பட்டிருந்தன. வடக்கு நோக்கிப் புறப்பட் டிருக்கும் படைகளுக்கு வேண்டிய உண வுப் பொருட்கள் தென்னகத்திலிருந்தும், சாதவாகன நாட்டிலிருந்தும், வடுக நாட் டிலிருந்தும் மாட்டு வண்டிகளிலும், மரக் கலங்களிலும் வந்து சேர்ந்து கொண்டி ருந்தன.

கரிகாலரின் அவையில் சேர இள வரசரின் வேண்டுகோளின் படி சேரப் படைக்கு சோழ உபதலைவன் வில்ல வனே படைத் தலைவனாக பொறுப் பேற்றிருந்தான். அதே போன்று பாண் டியப் படையை பாண்டிய நாட்டின் மாதண்ட நாயகரே வழிநடத்திக் கொண் டிருந்தார். வேளிர்களின் சிறு சிறு படைகளை வேளிர்களே வழிநடத்திக் கொண்டிருந்தாலும் வேளிர்களின் படை அனைத்திற்கும் செங்கோடரே தலைமை ஏற்று உரிய கட்டளைகளை பிறப்பித்துக் கொண்டிருந்தார். வடக்கு நோக்கிப் புறப் பட்டு வந்த தென்னகத்தின் பெரும்படை பெரும் உற்சாகத்துடனும் காணப்பட்டார் கள்.

https://telegram.me/aedahamlibra

செங்குவீரனுடன் முதன் முதலில் புறப்பட்டு வந்த வீரர்கள் புதிதாக வந்த வீரர்களை வரவேற்று வேண்டிய வசதிகளை செய்துகொடுத்து புகார் பற்றியும், அவர்கள் புறப்படும்போது முடிக்கும் தருவாயில் இருந்த காவேரிக் குறுக்கே கட்டப்பட்ட அணையைப் பற்றியும் பெரும் ஆவலாக ஒருவருக்கு ஒருவர் வினவிக் கொண்டிருந்தார்கள். புதிதாக வந்த வீரர்கள் பிரமாண்டமான அந்தக் கல்லால் ஆன அணையைப் பற்றியும், அதன் அமைப்பைப் பற்றியும் ஒருவருக்கு ஒருவர் பெருமையுடன் தெரிவித்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது சேர நாட்டு வீரன் ஒருவன் சோழ வீரர்கள் தங்கியிருந்த பாசறைக்கருகில் வந்து, “உறைந்தையிலிருந்து வந்திருக்கும் வீரர்கள் இங்கு யாரேனும் இருக்கிறீர்களா?” என சற்று சத்தத்துடன் அனைவருக்கும் கேட்கும்படி வினவினான்.

https://telegram.me/aedahamlibra

கூட்டத்திலிருந்த பலர் எழுந்து நின்று அவனை நோக்கினார்கள்.

அவர்கள் அனைவரையும் அழைத்த சேர வீரன், "வீரர்களே, எனக்கு காவேரிக்குக் குறுக்கே கரிகாலரால் கட்டப்பட்டிருக்கும் அந்தப் பிரமாண்டமான அணையைப் பற்றி யாராவது விளக்கமாக தெரிவியுங்களேன். ஒவ்வொரு கண்ணிமைப் பொழுதிற்கும் கோடிக்கணக்கான மாகாணிக் கொள்ளளவு நீர் காவிரியின் குறுக்கே இரண்டு கரைகளையும் தொட்டுக்கொண்டு பாய்ந்துகொண்டிருக்கும் போது அதன் குறுக்கே தடுப்பணை எப்படி கட்ட முடிந்தது? அணையால் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கும் காவேரி நதி நீரானது குணக்கடல் போன்றே காணப்படுவதாக இங்கு வந்திருக்கும் வீரர்கள் அனைவரும் குறிப்பிடுகிறார்கள். அது உண்மை தானா?" என வினவினான்.

அவனுக்கு முன்னே நின்றுகொண்டிருந்த சோழ வீரன் ஒருவன், "வீரரே, நீங்

கள் கேள்விப்பட்ட அனைத்தும் உண் மைதான். அதில் சிறு பிசகு கூட இல்லை. உங்களுக்கே காவேரியின் அமைப்பைப் பற்றி நன்கு தெரியும் காவேரியானது உயர்ந்த மெட்டு நிலத்தில் பாய்கிறது. ஆனால், காவேரியில் வளம்பெரும் பூமி அனைத்தும் பள்ளத்தில் அமைந்திருக் கிறது. காவேரியில் நீர் குறைந்த அளவு பாய்ந்தாலே நதி நீரை எளிதாக வயல்க ளுக்குத் திருப்பி விடலாம். இந்த நிலை யில் எப்பொழுதெல்லாம் பெரும் மழை பெய்து காவிரியில் நீர் பேருக்கு ஏற் படுகிறதோ அப்போதெல்லாம் நதி நீர் கரைகளை உடைத்துக்கொண்டு கிரா மங்களையும், வயல்களையும் மூழ்கடித் துவிடும் என்பதும் தாங்கள் அறிந்ததே!" என அவன் கூறிக்கொண்டிருந்த போது குறுக்கிட்ட சேர வீரர், "ஐயனே, தாங்கள் இப்போது கூறியவை அனைத்தும் எனக் குத் தெரிந்த தரவுகளே, அந்த அணை யைப் பற்றி கூறுகிறீர்களா?" என வினவி னான்.

"கோடைக் காலத்திலேயே காவிரியில் நதி நீர் மரக்கலப் போக்குவரத்து மேற்கொள்ளும் வகையில் மிகுந்தே பாய்ந்துகொண்டிருக்கும். இந்த நிலையில் கார் காலத்தில் பெருக்கெடுத்து கரைகளை உடைத்துச் செல்லும் நதி நீரை தடுத்து நிறுத்தி அனுப்பினால் காவேரிக் கரை உடைந்து விளை நிலங்களும், காவேரிக் கரையில் இருக்கும் கிராமங்களும் சேதம் அடையாது என்று கரிகாலர் நினைத்தார்."

"எனக்கு ஒரு சந்தேகம்?"

"என்ன?"

"இயல்பாகவே காவேரி நதியில் நீர் பிரவாகத்தில் நதி நீர் கரையை உடைத்துவிடும். இந்த நிலையில் நதிக்கு குறுக்கே தடுப்பணை அமைத்தால் நதி நீர் மட்டம் அதிகரித்து அணையின் இக்கரை உடைந்து விடாதா?" என வினவினான் சேர நாட்டு வீரன்.

https://telegram.me/aedahamlibra

"கரிகாலர் அணையை மட்டும் கட்டவில்லை. போரில் கைப்பற்றப்பட்ட சிங்கள வீரர்களைக் கொண்டு காவேரி நதியின் அணையை இரண்டு புறத்திலும் உயர்த்தி பலப்படுத்தி விட்டார். அது மட்டுமல்ல, அணையின் நீர் தேக்கப் பகுதியில் காவேரி நதியிலிருந்து பல வாய்க்கால்கள் வெட்டப்பட்டு சோழ நாடெங்கும் காவேரி நீரை கொண்டு சேர்ப்பித்துக் கொண்டிருக்கிறது. எப்பொழுதெல்லாம் அணையின் நீர் மட்டம் உயர்கிறதோ அப்போதெல்லாம் நதியின் நீர் வாய்க்கால் மூலம் வடிந்து விடும். அது மட்டுமல்லாமல் பெரும் மழை பொழியும் போது அதிவேகத்தில் காவேரியில் பாய்ந்து வரும் வெள்ளமானது அணையினால் தடுக்கப்பட்டு வழிந்து காவேரியின் வழியே பாய்ந்து விடும். அணையில் நிரம்பும் தண்ணீர் வாய்க்கால்கள் மூலம் பாயும், அதையும் மீறி காவேரியில் தண்ணீர் பெருக்கெடுப்பு நிகழ்ந்தால் ... செல்

லும் கிளை நதியின் வழியே பாய்ந்து சென்று கடலில் சேர்ந்துவிடும்.”

“திட்டத்தைக் கேட்கும் போதே பிரமிப்பாக இருக்கிறதே? இப்பேற்பட்ட அணையை எப்படி கட்டினீர்கள் என்று கூறுங்களேன்!” என வியப்புடன் வினவினார்.

“காவேரி ஆறானது மணல் ஆறு. ஆறில் ஆறு பெரும்பொழுது காலத்திலும் நதியில் நீர் பிரவாகம் குறையாமல் இருப்பதால் ஆற்றில் நாணல் புற்கள் கூட கிடையாது. ஆறு முழுவதும் நீரும் மணலும் மட்டுமே நிறைந்திருக்கிறது. நதியில் நின்றால் நமது காலுக்கு அடியில் இருக்கும் மணல் அடித்துக்கொண்டு போய் நமது கால் புதைவதில்லையா?” அப்படியே தான் ஆற்றின் குறுக்கே பெரும் பாறைக் கற்களை கொண்டு போய் போட்டார்கள். நதியின் புனல் தீரத்தில் பாறைக் கற்களுக்கு அடியில் இருக்கும் மணல் பகுதியானது நதியினால் அடித்

https://telegram.me/aedahamlibrary

துக்கொண்டு போய் பாறைக் கற்கள்
மண்ணுக்குள் புதைந்தன, பிறகு நதி
யில் அடித்துவரப்படும் வண்டல் மண்
பாறைக் கல்லுடன் சேர்ந்து உறுதியான
அடித்தளம் இயற்கையான முறையி
லேயே அமைக்கப்பட்டது. இந்த பாறைக்
கற்களை வண்டல் மண்ணும், மணலும்
மூடிய பிறகு அதில் சிறு சிறு பாறைக்
கற்களை கொண்டு போய் போட்டார்கள்.
அதுவும் இப்படியே நதி நீரின் போக்கில்
மண்ணுக்குள் புதைந்தது. இப்படியே பல்
வேறு வடிவங்களில் பாறைக் கற்களை
ஆற்றுக்குக் குறுக்கே போட்டு வலிமை
யான அடித்தளத்தினால் உருவான தடுப்
பணையை அமைத்தார் கரிகாலர். பிறகு
அதன் மீது நீரில் கரையாத, அடித்துச்
செல்ல இயலாத சுண்ணாம்பு, வண்டல்
மண் மற்றும் பல மரக் கூழ் கலவையை
தயாரித்து அப்பாறைகள் மேல் பூசினார்
கள். கற்களால் மட்டுமே அமைக்கப்பட்ட
அணை இது!"

சோழ வீரர் கூறக் கூற அதிசய நிகழ்வைக் கேட்பதைப் போன்று கேட்டுக்கொண்டிருந்த சேர வீரர் ஏதோ கூற வாயெடுத்தார். ஆனால், அவருக்கு அருகில் அமர்ந்திருந்த பாண்டிய வீரர், "கல்லணையைக் கட்டி முடித்துவிட்டார். நீரால் அதில் நிரம்பிவிட்டது. கரிகாலர் காலத்தில் அவ்வணை எந்தவிதக் குறைவும் இல்லாமல் பராமரிக்கப்படும். ஆனால், எதிர்காலத்தில் அதை எப்படிப் பராமரிப்பார்கள்?" என வினவினான்,

"அங்கு தான் கரிகாலர் மற்றும் சோழப் படைத் தலைவரின் தந்திரம் அடங்கியிருக்கிறது. ஒருமுறை வலிமையான பூச்சு பூசப்பட்டு விட்டது. ஆற்றில் அடித்து வரப்படும் வண்டல் மண்ணும், மணலும் அப்பூச்சுக்கு கவசமாக எப்போதுமே சூழ்ந்திருக்கும். ஆதலால், அந்த அணைக்கு எந்த வித பராமரிப்பும் எதிர் காலத்தில் தேவையிருக்காது!"

"ஆற்றில் அடித்து வரப்படும் மணல் அணையின் நீர்பிடி பகுதியை தூர்த்து அதை மணல் மேடாக அடித்துவிட் டால்..." என குறுக்கிட்டு வினவினார் சேர வீரர்.

"வீரரே, நீங்கள் அணை கட்டப் பட்ட விதத்தை அறிந்துகொண்டீர்கள்! ஆனால், அதன் அமைப்பை நீங்கள் தெரிந்துகொள்ளவில்லையே!" எனக் கூறியவர் அமைதியானார்.

அவன் கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்த வீரர்கள் அனைவரும் அவனையே அவன் என்ன கூறப்போகி றான் என்று கேட்க ஆவலோடு நோக்கிக் கொண்டிருந்தார்கள்.

"கரிகாலர் அமைத்திருக்கும் தடுப் பணையின் நீளம் கிட்டத்தட்ட ஆயிரத்து நூறு அடி. அதன் உயரம் அறுபத்தி ஆறு அடி. அணையானது மூன்று வளைவுக ளுடன் அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் முகடு மட்டமாக இல்லாமல் சாய்

https://telegram.me/aedahamlibra

வாக அமைக்கப்பட்டிருக்கிறது. அதாவது கிழக்கு முனையை விட மேற்கு முனை சற்றே அதிக உயரமாக அமைக்கப்பட்டி ருக்கும். இந்தச் சாய்வானது சில இடங் களில் சீரான சாய்வாக அமைக்கப்பட் டிருக்கிறது. சில இடங்களில் ஒழுங்கற்று காணப்பட்டு அதில் முக்கால் அங்குலத் திற்கும் அதிகமாக சுண்ணாம்புக் கலவை பூசப்பட்டு வலிமையானதாக அமைத்தி ருக்கிறார்கள். அணையின் நீர் தேக்கத் தில் எப்பொழுதெல்லாம் வண்டல் மண் ணும், மணலும் சேர்ந்து அதிகமாகிறதோ அப்போதெல்லாம் அது அணையிலி ருந்து பிரிந்து பாயும் பக்க ஆற்றின் வழி யாக அடித்துச் சென்று கடலில் கலந்துவி டும் விதமாக அணையை கட்டியிருக்கி றார் கரிகாலர்."

"அப்படியெனில் இனி சோழ நாட் டில் மழை பொய்த்தாலும், நீர் பிரச்சனை இருக்காது என்று குறிப்பிடுங்கள் சோழ வீரரே!"

“ஆமாம்... ஆமாம்... இனி சோழ நாட்டில் நீர்ப் பிரச்சனை என்பது சிறிதும் இருக்காது. சோழப் பேரரசர் கட்டியிருக்கும் நதி நீரினால் சோழ நாடு மட்டும் அல்ல ஒட்டுமொத்த தென்னகமுமே வளம் பெறப் போகிறது!”

“அது எப்படி வீரரே உறைந்தைக்கு அருகே கட்டியிருக்கும் அணையினால் ஒட்டுமொத்த தென்னகமும் எப்படி வளம் பெரும்?”

“கரிகாலர் காவேரிக்குக் குறுக்கே அணையை மட்டும் கட்டியிருக்கவில்லை! காவேரியின் இரண்டு புறங்களிலும் சூழ்ந்திருக்கும் அடர்ந்த காடுகளை வெட்டி வயல்களாகத் திருத்தி விட்டார். அந்த வயல்கள் அனைத்தும் பாசனம் பெரும் வகையில் அணையிலிருந்து பெரும் நீண்ட வாய்க்கால்கள் வெட்டப்பட்டுவிட்டன. இந்த வாய்க்கால் மூலம் திருத்தப்பட்ட வயல்கள் பாசனம் பெறப்போகிறது. திருத்தப்பட்ட வயல்க

https://telegram.me/aedahamlibra

ளில் இனி ஆண்டு முழுவதும் முப்போகம் நெல் விளைவிக்கப்போகிறார்கள். சோழ நாட்டில் விளைவிக்கப்படும் நெல் தென்னகத்தின் பசியைப் போக்கும். இனி நாட்டில் வறட்சி என்ற சொல்லுக்கே அர்த்தம் இல்லாமல் போய்விடப் போகிறது!" எனக் கூறிக்கொண்டு பெருமையுடன் சிரித்தான் சோழ வீரன்.

அவன் கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்த அனைத்து வீரர்களும் பெருமையில் புன்னகைத்தார்கள். அப்போது பாண்டிய வீரர், "அந்த அணை கட்டியிருப்பதில் ஒட்டுமொத்த சோழர்களும் மகிழ்ச்சியிலும், பெருமையிலும் இருப்பார்கள்!" எனத் தெரிவித்தான்.

"ஆமாம் வீரரே, சோழர்கள் அனைவரும் அந்த அணையை எண்ணி மகிழ்ச்சியிலும், பெருமையிலும் திளைக்கிறார்கள். ஆனால், ஒருவரைத் தவிர..."

"அணை கட்டியதனால் ஒருவர் வருத்தத்துடன் இருக்கிறாரா?"

https://telegram.me/aedahamlibra

"ம்ம்ம்..."

"யார் அவர்?"

"அவர் தான் சோழப் படை உபதலைவர் பரதவன் குமரன்!"

"குமரன் தானே இப்போது சோழ தேச ராணியாருக்குத் துணையாக அனைத்து நிர்வாகப் பணிகளையும் கவனித்துக் கொண்டிருக்கிறார். அவருக்கு இதில் வருத்தமா?"

"ஆமாம்... அவரது நண்பர்களான சோழப் படைத்தலைவர்கள் அனைவரும் புறப்பட்டு வடக்கே படைகளுடன் வந்துவிட்டார்கள். ஆனால், அவர் மட்டும் அங்கு தனிமையில் சிங்கள வீரர்களை மேய்த்துக்கொண்டு இருக்கிறார். போரில் கலந்துகொள்ள வேண்டும் என அவர் துடித்துக்கொண்டு இருக்கிறார். ஆனால், அவர் புகாரில் சோழ நாட்டின் நிர்வாகத்தைக் கவனித்துக்கொண்டு அதே நேரம் சிங்கள வீரர்களால் மேற்

கொள்ளப்படும் காடு திருத்தும் பணியை யும் மேற்பார்வையிட வேண்டும் என்பது அவருக்கு இப்போது விதிக்கப்பட்டிருக் கும் பணி. ஆதலால் அவர் மட்டும் அதை எண்ணி மிகுந்த துயரத்திலேயே இருக்கி றார்."

"பெரும் வீரரான அவருக்கு இந்த நிலை வந்திருக்கக் கூடாது!" ஒரே நேரத் தில் சேர மற்றும் பாண்டிய வீரர் என இரு வரும் வருத்தத்தைத் தெரிவித்தார்கள்.

"ஆதலால் தான் அவர், "போர்க் களத்தில் களமாட வேண்டிய நான் இப்போது இந்த சுவானப்புத்திரர்களை மேய்க்கவேண்டிய நிலை வந்துவிட் டதே!" என்று எப்போதும் வருத்தப்பட்டுக் கொண்டே இருப்பார்!"

சோழ வீரன், "சுவானப்புத்திரன்" எனக் கூறியதைக் கேட்டதும் சேர மற் றும் பாண்டிய வீரர்களும் வாய் முழு வதும் பற்கள் தெரிய சிரிக்கலானார் கள். அப்போது அவர்கள் தங்கியிருந்த

பாசறைக்கு வெளியே, "படைத்தலைவர் வில்லவர் வருகிறார் வருகிறார்" என கட்டியங்காரன் தெரிவித்தான்.

வீரர்களின் சிரிப்புச் சத்தம் உடனே அடங்கவும், வில்லவன் அங்கு தனது புரவியில் நுழையவும் நேரம் சரியானதாக இருந்தது. உள்ளே நுழைந்தவன், "சோழப் பேரரசர் தனது படைத் தலைவர்களுடன் ஒரு கிழமைக்கு முன்னரே புறப்பட்டு விட்டார். அவர் எப்போது வேண்டுமானாலும் இங்கே வருகை தரலாம். அவர் கட்டளை எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். இன்றே நம்மை புறப்படச்சொல்லி கட்டளையிட்டாலும் நாம் தயாராக இருக்கவேண்டும்!" எனக் கட்டளையிட்டவன் கண நேரமும் அங்கே தாமதிக்காமல் புரவியைத் தட்டிவிட்டு அங்கிருந்து விரைந்து செல்லலானான்.

வில்லவன் புரவியில் பயணித்துக் கொண்டு இருக்கும்போது அவனுக்கு எதிரே வானவல்லி நடந்து வந்துகொண்

https://telegram.me/aedahamlibra

டிருந்தாள். அவளது கையைப் பிடித்துக் கொண்டு திரையனும் மெல்ல அடி மேல் அடிவைத்து நடந்து வந்துகொண்டிருந் தான். வானவல்லியைக் கண்டதுமே புர வியிலிருந்து இறங்கி அவளுக்குப் பணிந் தான் வில்லவன்.

"அனைத்தும் ஏற்பாடுகளும் தயார் தானே!" என வினவினாள் வானவல்லி.

"ஆமாம் தேவி. அனைத்து ஏற்பாடு களும் தயார் நிலையிலேயே இருக்கின் றன. உத்தரவு எப்போது கிடைத்தாலும் நாம் புறப்பட்டுவிடலாம்!"

"நல்லது" என வானவல்லி கூறிக் கொண்டிருந்த போதே வானவல்லியின் கையை விட்ட திரையன் வில்லவனை நோக்கி தடுமாறியபடி நடக்கலானான். அடுத்த அடியை அவன் எடுத்து வைப் பதற்கும் அவனது கால்கள் தடுக்கி கீழே விழுந்தான். ஆனால், அவன் மண் ணில் விழுவதற்குள் அவனைத் தாங்கிக் கொண்ட வில்லவன் அவனைத் தூக்கி

https://telegram.me/aedahamlibra

புரவியின் மீது அமர வைத்தான். பிறகு வானவல்லியை நோக்கினான்.

தலையை ஆட்டி அவனுக்கு சம் மதத்தை அளித்தாள். அவள் தலையை ஆட்டியதுதான் தாமதம் அடுத்த கணம் புரவியின் மீது தாவிய வில்லவன் திரை யனுடன் அந்தப் போர்ப் பாசறையை சுற்றினான். அன்று கவனிக்க வேண் டிய அனைத்து ஏற்பாடுகளையும் வில்ல வன் திரையனுடனே கவனிக்கலானான். பொழுது மேற்கில் நிலை கொண்டிருந் தது. திரையனுடன் வில்லவன் வானவல் லியின் பாசறையை நோக்கி நடந்தான். அங்கே வானவல்லி இல்லை என்று காவ லர்கள் தெரிவித்தார்கள்.

வானவல்லியைத் தேடிக்கொண்டு வில்லவன் செல்ல அவள் ஆற்றின் கரை யில் கிடந்த பாறையில் அமர்ந்து அமை தியாக ஓடிக்கொண்டிருந்த நதியையே பார்த்துக்கொண்டிருந்தாள். வில்லவன்

https://telegram.me/aedahamlibrary

புரவியில் அமர்ந்திருந்த படியே, “தேவி” என அழைத்தான்.

குரல் எழுந்த திசையைக் கேட்டு வானவல்லி திரும்பினாள். வில்லவனது மடியில் திரையன் புரவி மீது அமர்ந்தி ருந்ததைக் கண்ட வானவல்லி எழுந்து திரையனை மட்டும் தூக்கினாள்.

அடுத்த கணம் வில்லவனும் புரவி யின் மீதிருந்து கீழே குதித்தான். அப் போது திரையனின் கையில் இருந்த குறு வாளினைக் கண்ட வில்லவன் பதறிய படியே அவனை நோக்கி குறுவாளினை வாங்க கையை நீட்டினான்.

அப்போது திரையன், “மாமாஆஆ.... ஊகூம்ம்ம்...” என மழ லைக் குரலில் கூறியவன் அந்தக் குறுவா ளினை அவனிடம் கொடுக்க விருப்பப்ப டாதவன் போல் மறைத்துக் கொண்டான்.

திரையன் “மாமா” எனக் கூறிய தைக் கேட்ட வானவல்லி மகிழ்ச்சியுடன்,

"இதுவரை அம்மா, அப்பா என்ற இரண்டு சொற்களை மட்டும் தான் கூறிக்கொண் டிருந்தான் இன்றுதான் மாமா என்று கூறு கிறான்" எனப் பெருமிதத்துடன் தெரி வித்தாள்.

"இன்று பகல் பொழுது முழுவ தையும் நம் வீரர்களுடனே திரையன் கழித்தான். அவர்கள் கற்றுக்கொடுத்து இருக்கிறார்கள்" எனக் கூறிக்கொண்டே அவனது கரத்தில் இருந்த குறுவாளினை வாங்க மீண்டும் முயற்சி செய்தான் வில்ல வன்.

அப்போதும் அதை மறைத்துக் கொண்டான் திரையன்.

திரையனைக் கீழே இறக்கிய வான வல்லி, "அதை மாமாவிடம் கொடு!" எனக் கட்டளையிட்டாள்.

"மாட்டேன்" என்பதைப் போல தலையை ஆட்டினான் திரையன்.

"உனக்கு இது பிடித்திருக்கிறதா?"

"ம்ம்ம்..." எனக் கூறிக்கொண்டு தலையை ஆட்டினான்.

"அப்படியெனில் மாமாவுடன் நீ சண்டையிடு" எனக் கூறியவள் வில்லவனை நோக்கினாள்.

வில்லவன் அவளை குழப்பத்துடன் நோக்கினான். "என் மகன் தான் தங்களுடன் வாட்சமர் புரியவேண்டும் என்கிறானே... வாளினை உருவுங்கள்!" எனக் கட்டளையிட்டாள் வானவல்லி.

அவள் கூறியதைக் கேட்ட வில்லவனும் சிரித்துக்கொண்டே இடையில் வைத்திருந்த மற்றொரு வாளினை எடுத்து திரையனை நோக்கி நீட்டினான். அவனது குறுவாளினை தன் கையில் இருந்த குறுவாளினால் தட்டினான் திரையன்.

வில்லவனும் பதிலுக்கு அவனது கையிலிருந்த வாளினைத் தட்டினான். இருவரது குறுவாட்களும் மோதும்போது

எழுந்த சத்தத்தைக் கேட்க கேட்க குதூகலமான திரையன் நேரம் கடக்க கடக்க சற்று வேகமாகவே வில்லவனின் குறுவாளினை தாக்கினான்.

அப்போது வில்லவன் தனது கையில் இருந்த குறுவாளினை கீழே போட்டான். அருகில் நின்ற வானவல்லி, “என் மகன் உங்களைத் தோற்கடித்து விட்டான்” என வில்லவனிடம் சிரித்தபடி கூறியவள் திவ்யனை நோக்கி, “மாமா உன்னிடம் தோற்றுவிட்டார். குறுவாளினை இங்கே கொடு!” என வானவல்லி கூற மண்டியிட்டு அமர்ந்திருந்த வில்லவனை நோக்கி நகர்ந்த திரையன் அவனது கழுத்தில் தனது குறுவாளினை வைத்தான்.

அவனது திடீர் செய்கையைக் கண்டு இருவருமே ஒருகணம் அதிர்ச்சி அடைந்தாலும் வில்லவன் நிதானத்துடன் திரையனின் விழிகளையே நோக்கிக் கொண்டிருந்தான். திரையனும்

வில்லவனின் முகத்தையே பார்த்துக் கொண்டு குறுவாளினை எடுக்காமல் அவனது கழுத்திலேயே வைத்திருந் தான்.

அன்று வில்லவன் சாதவாகன படைத் தலைவனை தோற்கடித்ததும் அவனது கழுத்தில் தனது வாளினை வைத்து அவனை சிறை பிடித்ததை திரையனும் யானை மீதமர்ந்து பார்த்துக் கொண்டிருந்ததை நினைத்துப் பார்த் தான் வில்லவன். அப்போது திடீ ரென்று கையில் பிடித்திருந்த வாளினை கீழே போட்டுவிட்ட திரையன், "அப்பா... அப்பா..." எனக் கூறிக்கொண்டு வில்லவ னையும் கடந்து அடியை அகல வைத்து நடந்தான்.

தன்னை நோக்கி ஓடிவந்த திரை யனை தூக்கிக்கொண்ட விறல்வேல் வானவல்லி மற்றும் வில்லவனை நோக்கி, "அதற்குள் என் மகனுக்கு வாள் பயிற்சியை துவங்கிவிட்டீர்களா?" என

வினவியபடியே திரையனுக்கு முத்தமிட்டான்.

எழுந்து நின்ற வில்லவன் செங்குவீரனுக்குப் பணிந்தான்.

“கரிகாலர் வந்துகொண்டு இருக்கிறார். அவர்களை வரவேற்க வேண்டிய ஏற்பாடுகளை செய்!” எனத் தெரிவித்த செங்குவீரன் திரையனை புரவியின் மீது அமரவைத்து அவனும் அமர்ந்துகொண்டு அங்கிருந்து அப்போதே புறப்பட்டு அவர்களின் பார்வையிலிருந்து மறைந்தான்.

வானவல்லியும் அனைத்து ஏற்பாடுகளையும் செய்துவிட்டு காத்திருந்தாள். செங்குவீரன் வந்து சென்ற ஒரு ஓரைப் பொழுது கழித்து மூன்று புரவித்தேர் அவர்களின் பாசறைக்குள் நுழைந்தது. வீரர்கள் அனைவரும் குழுமி, “கரிகாலர் வாழ்க... சோழப் பேரரசர் வாழ்க...” என்று வெற்றி முழக்கமிடலானார்கள்.

வீரர்கள் வெற்றி முழக்கமிட, யானைகள் பிளிற, அங்கு வந்திருந்த பணிப்பெண்கள் மலர் தூவ வெற்றிப் புன்னகையுடன் புரவித் தேரிலிருந்து கீழே இறங்கினார் கரிகாலர்.

அப்போது அவருக்கு வெற்றித் திலகமிட்டு வரவேற்ற வானவல்லி அவர்க்கு ஆரத்தி எடுக்க பணிப் பெண்ணின் கையில் இருந்த தட்டினை வாங்கி கரிகாலரை நோக்கிக் கொண்டு சென்றாள்.

அப்போது வானவல்லியைத் தடுத்த கரிகாலர், "புரவித் தேரில் மேலும் நால்வர் இருக்கிறார்கள். அவர்களுக்குத்தான் இது தேவை!" என்று கூறி வானவல்லியையும் அழைத்துச் சென்றார்.

முதல் புரவித் தேரிலிருந்த திரைச் சீலையை நீக்கிவிட்டு முதலில் திவ்யன் இறங்கினான். பிறகு அவளைத் தொடர்ந்து அழகே உருவான அவந்திகாவும் இறங்கினாள். அடுத்த புரவித் தேரை நோக்கினாள் வான

வல்லி. திரைச்சீலை நீக்கப்பட்டது. முதலில் கார்த்திகா தான் கீழே இறங்கினாள். அடுத்து யார் இறங்கப் போகிறார்கள் எனும் ஆர்வத்தில் வானவல்லி, வில்லவன், வேளிர் செங்கோடர் வீரர்கள் என அனைவரும் ஆர்வத்துடன் நோக்கிக்கொண்டிருந்தார்கள். சிறிது நேரம் திரைச் சீலை மட்டுமே அசைந்தது. ஆனால், யாரும் வெளியே வரவில்லை.

வானவல்லி எதிரில் நின்ற கார்த்திகாவையும், அருகில் நின்ற திவ்யனையும் நோக்கினாள். அப்போது திவ்யன், "திருக்கண்ணா... இப்போது நாணம் கொண்டு என்ன பயன்? அன்று நீ புரவியில் ஒன்றாகப் பயணிக்கும்போது இந்த நாணம் எங்கே சென்றதாம்?" என வினவ அங்கே பெருத்த சிரிப்பலை எழுந்தது.

புரவித் தேரிலிருந்து சிரித்தபடியே கீழே இறங்கினான் திருக்கண்ணன். அதை பார்த்த அவந்திகா, "வீரரே, நாணப்பட வேண்டிய எனது தோழியே

தைரியமாக நிற்கிறாள்! நீங்கள் எதற்கு தயங்குகிறீர்கள்?" என வினவ மீண்டும் அங்கே சிரிப்பலை எழுந்து சற்று நேரம் கழித்து அடங்கியது. நால்வரையும் ஒன்றாக நிற்க வைத்து ஆரத்தி எடுத்து திலகமிட்டு வரவேற்ற வானவல்லி, "எனது இரண்டு சகோதரர்களையும் இப்படி காண்பதில் எனக்கு மகிழ்ச்சி" எனத் தெரிவித்து மகிழ்ந்தாள்.

அருகில் நின்ற பெரியவரான செங்கோடரிடம் நால்வரும் பணிந்து வாழ்த்துகளைப் பெற்றுக்கொண்டார்கள். நால்வரையும் அழைத்துக்கொண்டு கூடாரத்திற்கு அழைத்துச் சென்று வேண்டிய ஏற்பாடுகளை செய்தாள் வானவல்லி.

பொழுது மேற்கில் சாய்ந்து ஒரு நாழிகைப் பொழுது கடந்திருந்தது. வானவல்லி அதே பாறை மீது அமர்ந்து நதியை நோக்கிக்கொண்டிருந்தாள். அப்போது அவளுக்கு அருகில் நெருக்கமாக அமர்ந்தான் செங்குவீரன்.

“திரையன் எங்கே?” என வினவினாள் வானவல்லி.

“கரிகாலர் தன்னுடன் அழைத்துச் சென்றுவிட்டார்!”

“சரி, வாருங்கள் நம் கூடாரத்திற்கு செல்வோம்!” என எழுந்தாள் வானவல்லி.

“இப்போது அங்கே நம்மால் செல்ல முடியாது!”

“ஏன்?”

“என் நண்பனையும், அவந்திகாவையும் அங்கே தான் தங்க வைத்திருக்கிறேன்!”

“அவர் எனக்கு அண்ணன். பிறகு தான் உங்களது நண்பர் என்பதை எப்போதுமே உங்களது நினைவில் கொள்ளுங்கள்!”

“சரி, தேவியின் கட்டளை!”

அவன் தெரிவித்த பதிலைக் கேட்டு சிரித்த வானவல்லி, “நாம் இன்று எங்கே தங்குவதாம்?” என அவனது முகத்தைப் பார்த்து வினவினாள்.

“அதற்கும் ஏற்பாடுகளை செய்தி ருக்கிறேன்!” எனத் தெரிவித்த விறல் வேல் நதிக்கு சற்றே தூரத்தில் வந்து கொண்டிருந்த பரிசல் ஒன்றை சுட்டிக் காட்டினான்.

அந்தப் பரிசல் சற்றே அகலமாக காணப்பட்டு அதில் இருவர் தங்கும் வகையில் வேண்டிய வசதிகள் செய் யப்பட்டு கூடாரமும் போடப்பட்டிருந்தது. அதைக் கண்ட வானவல்லி, “முன் எச் சரிக்கை ஏற்பாடுகள் பலமாக இருக்கி றதே?” என வினவினாள்.

அப்போது அந்தப் பரிசலை செலுத்தி வந்த வீரன் பரிசலை நதிக் கரையோரம் நிறுத்திவிட்டு இருவரிட மும் சொல்லிக்கொள்ளாமல் அங்கிருந்து புறப்பட்டான்.

அவன் செல்லும் வரை அமைதியாக அவளுக்கு அருகில் அமர்ந்திருந்த விறல்வேல் அவன் சென்றபிறகு வானவல்லியைத் தூக்கிக்கொண்டு பரிசலுக்குள் நுழைந்தான்.

https://telegram.me/aedahamlibra

https://telegram.me/aedahamlibra

# 38. இறுதி முடிவு

பொழுது கிழக்கில் உதித்த ஒரு நாழி கைப் பொழுது கழித்து கரிகாலரின் தலைமையில் போர் பற்றி விவாதிக்க மந்திராலோசனை கூடி யது. இனி நடக்கவிருக்கும் போர், படை கள் நகர வேண்டிய முறை, உணவுப் பிரச் சனை, தாக்குதல் முறை, எடுக்க வேண் டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை பற்றி விவாதிப்பதற்காக அனைவரையும் வரவ ழைத்திருந்தார் கரிகாலர். ஆலோசனை சபையில் செங்கோடர், திரையனுடன் வானவல்லி, திவ்யன், அவந்திகா, திருக் கண்ணன், கார்த்திகா, வில்லவன், பாண் டிய மற்றும் சேர படைத்தலைவர்கள், வேளிர்கள், உபதலைவர்கள் மற்றும் பல உபதளபதிகள் என அனைவரும் கூடியி

ருந்தார்கள். அனைவரும் அமர்ந்திருக்க செங்குவீரனைக் காணாததைக் கண்ட கரிகாலர் திவ்யனுக்கு அருகில் அமர்ந்தி ருந்த வானவல்லியிடம், “படைத் தலை வர் எங்கே?” என்று வினவினார்.

“நான் கண் விழிப்பதற்கு முன் அதி காலையிலேயே அவர் எங்கோ புறப் பட்டு சென்றுவிட்டார். விரைவில் வந்து சேர்ந்து விடுவார். அவருக்காக காத்தி ருக்க வேண்டாம். சபை துவங்கட்டும்!” எனத் தெரிவித்தாள் வானவல்லி.

“படைத் தலைவர் இல்லாமல் ஆலோசனையைத் துவங்குவது எப்படி?” என ஆட்சேபனையைத் தெரிவித்தார் செங்கோடர்.

“படைத்தலைவர் சரியான நேரத் திற்கு வந்துவிடுவார். அவரைப் பற்றிய கவலை வேண்டாம்! நாம் விவாதத்தைத் துவங்கலாம்.”

வானவல்லி மீண்டும் தெரிவித்த பிறகு யாரும் மறுப்பு கூறாமல் அமைதி யாக அமர்ந்திருந்தார்கள். அனைவரின்

முக பாவனைகளையும் நோக்கிய கரிகாலர், "என் தமக்கையார் கூறுவது சரிதான்! சபை துவங்கட்டும்! போர் பற்றி எந்த சந்தேகம் இருந்தாலும் அல்லது எந்த யோசனையாக இருந்தாலும் யார் வேண்டுமானாலும் தெரிவிக்கலாம்! அனைவரது கருத்தும் பரிசீலிக்கப்படும்" என அறிவித்தார்.

அனைவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்தார்கள். அப்போது ஆசனத்திலிருந்து எழுந்த செங்கோடர், "அரசே, எனக்கு ஒன்றிற்கான காரணம் மட்டும் புலப்படவில்லை?" என வினவினார்.

"எதன் காரணம் செங்கோடரே?" என வினவினார் கரிகாலர்.

"தாங்கள் கடந்த இரண்டு திங்கள் காலத்திற்கும் மேலாக அவந்தியில்தான் தங்கியிருந்தீர்கள். தாங்கள் அவந்தியில் தங்கியிருந்த போது நம்மைத் தாக்கிய சாதவாகனப் படையை நாம் முறியடித்

துவிட்டோம். அதன் பிறகு நாம் சாத வாகனரின் கோட்டையிலேயே தங்கியி ருந்தோம். பேரரசர் மட்டும் கட்டளை விதித்திருந்தால் நமது படையை நாம் அவந்திக்கு நகர்த்தியிருக்கலாம். அவந் தியிலிருந்து நாம் கலிங்க நாட்டினை தாக்கினால் என்ன? அது மட்டுமல்லாமல் சாதவாகனப் படை நம்மைத் தாக்கியதும் நாம் எதற்காக சாதவாகன நாட்டினைத் தாக்கவில்லை?"

அப்போது எழுந்த வானவல்லி, "சாதவாகனப் படை நம்மைத் தாக்கிய சமயத்தில் கரிகாலர் உஞ்சையில் அல் லவா இருந்தார். கரிகாலர் உஞ்சையில் இருக்கும்போது நம்மால் எப்படி அவர்க ளின் நாட்டினைத் தாக்க முடியும்?" என செங்கோடரை நோக்கி வினவினாள்.

"இவ்வளவு ஆபத்து இருக்கும் போது பேரரசர் உஞ்சை வரை தகுந்த பாதுகாப்பு இன்றி செல்ல வேண்டிய அவ சியம் என்ன?"

"வேளக்காரப் படைத் தலைவர் கரிகாலருடன் இருந்தும் அவருக்கும் போதிய பாதுகாப்பு இல்லை என்கிறீர் களா செங்கோடரே?"

"இல்லை தேவி. வேளக்கா ரப் படைத் தலைவரைவிடவும் கரி காலருக்கு வேறு பாதுகாப்பு என்பது தேவை இல்லை. இருந்தாலும் வீரர்க ளின் துணை இல்லாமல் வேளக்காரப் படைத் தலைவர், திருக்கண்ணன் மற் றும் இம்ஹோடெப்பின் துணையுடன் மட் டும் கரிகாலர் செல்ல வேண்டிய அவசி யம் என்ன? சாதவாகன படை நம்மைத் தாக்கியதும் கரிகாலர் உஞ்சையிலிருந்து வெளியேறியிருந்தால் நமது படை பலத் தினால் இந்நேரம் சாதவாகன நாட் டையே கைப்பற்றியிருக்கலாமே?"

கரிகாலர், "செங்கோடரே நாம் பல சாலியாக இருக்கிறோம் என்பதற்காக அனைவரையும் விரோதித்துக் கொள் ளக் கூடாது! செங்கோடருக்கு மட்டு

மல்லாமல் பலருக்கும் நான் எதற்காக அவந்தி வரை சென்றேன் என்ற காரணம் எழலாம்? இதற்கான பதிலை செங்குவீரர் தகுந்த நேரத்தில் அனைவருக்கும் தெரி விப்பார். இதுவரை நடந்ததைப் பற்றி இனி யாரும் கேள்வி கேட்க வேண்டியது இல்லை. இனி படை நகர்வைப் பற்றி நாம் விவாதிப்போம்!" என்றார்.

அப்போது எழுந்த படைத்தலை வன் வில்லவன், "காரவேலனின் படை சிங்கபுரத்தில் குவியத் துவங்கிவிட்டது என்று ஒற்றர்கள் செய்தி கொண்டு வந்திருக்கிறார்கள். காரவேலன் நம்மை நேருக்கு நேர் சந்திக்க ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறான்!"

அப்போது திருக்கண்ணன், "அரசே, பீமவேலன் நம்மை தெற்கிலி ருந்தே எதிர்பார்த்துக் கொண்டிருக்கி றான். நாம் பெயரளவிற்கு மட்டுமே சிறு படையை வடுக நாட்டிலிருந்து அனுப் பிவிட்டு நாம் நமது பெரும்படையுடன்



https://telegram.me/aedahamlibra

அவந்தி சென்று அங்கிருந்து தக்சின கோசலத்தின் தெற்கெல்லை வழியாகச் சென்று மகாநதி மற்றும் வம்சதாரா நதியைக் கடந்து சிங்கபுரியின் வடக்குப் பகுதியை அதாவது காரவேலனின் எதிர்பார்ப்பிற்கு மாறாக அவனைத் தாக்கினால் என்ன?" என வினவினான்.

அப்போது செங்கோடர், "திருக்கண்ணனின் திட்டம் சரியாகத்தான் இருக்கிறது. கலிங்கத்தை நாம் அவர்கள் எதிர்பாராத நேரத்தில் தாக்கினால் தான் வெற்றி எளிதாகக் கிடைக்கும். நமது படையை அவந்திக்கு நகர்த்தி அதை இரண்டாகப் பிரித்து ஒரு படையினால் மகதத்தை தாக்கலாம். மற்றொரு படையைக் கொண்டு கலிங்கத்தை அவர்கள் முற்றிலும் எதிர்பாராத நேரத்தில், எதிர்பாராத இடத்தில் தாக்குவோம்" என திருக்கண்ணனின் யோசனைக்கு பலத்தைச் சேர்த்தார்.

அப்போது வானவல்லி, "இவர்களின் திட்டமும் சரியாகத்தானே இருக்கிறது. சுங்க மன்னன் புஷ்யமித்திர சுங்கன் நம்மை கலிங்கத்திலிருந்தே மகத நாட்டின் தென்கிழக்கில் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறான். அதே நேரம் கலிங்க மன்னன் காரவேலனும் நம்மை தெற்கிலிருந்தே எதிர்பார்க்கிறான். அவந்தியிலிருந்து படை இரண்டாகப் பிரிந்து தாக்கினால் கலிங்கத்தையும், மகதத்தையும் நம்மால் ஒரே நேரத்தில் எளிதில் கைப்பற்றிவிட விட இயலும் அல்லவா?" என வினவினாள்.

அப்போது திருக்கண்ணன், "கலிங்க மன்னனைப் போன்று மகத மன்னனான புஷ்யமித்திர சுங்கனின் படை அப்படி ஒன்றும் பலமானதாக இல்லை. எதிர்ப்பும் குறைவாக இருக்கும். ஆதலால் நமது படையில் நான்கில் ஒரு பகுதியே மகதத்தை அடக்க போதுமானதாக இருக்கும் என்பது எனது கருத்து!" எனத் தெரிவித்தான்.

அவன் தெரிவித்ததை ஆச்சரியமாக நோக்கிய கரிகாலர், "புஷ்யமித்திரனை எளிதில் அதிக எதிர்ப்பின்றி அடக்கிவிடலாம் என்று எதனால் கூறுகிறாய் திருக்கண்ணா? ஆர்யவதத்தில் இப்போது காணப்படும் மூன்று மாபெரும் பேரரசில் அவனும் ஒருவன் என்று உனக்கும் தெரியும் தானே?" என வினவினார்.

"அரசே, புஷ்யமித்திர சுங்கனை காரவேலன் மகதம் வரைக்கும் சென்று அவனைத் தோற்கடித்திருக்கிறான். சாதவாகனர் அவனைத் விரட்டி அவனுடைய வசம் இருந்த அவந்தியைக் கைப்பற்றியிருக்கின்றனர். அதே நேரம் மேற்கிலிருந்து கணவாய்களின் வழியாக ஊடுருவி வந்த யவனர்களான சாகர்களும், பகலவாக்களும் சுங்கனைத் தாக்கி வெற்றி பெற்றிருக்கிறார்கள். அனைவரிடமும் அவன் தோற்றிருக்கிறான். அப்படிப்பட்ட ஒருவனின் படையை நம்மால் எளிதில் தோற்கடித்துவிட இயலும் அல்

https://telegram.me/aedahamlibrary

லவா, அதில் என்ன பிரச்சனை இருந்துவிடப் போகிறது?”

அவன் கூறியதைக் கேட்டதும் கரிகாலர், “நம் பெரும்படையை அவந்திக்குக் கொண்டு சென்று அங்கிருந்து இரண்டாகப் பிரித்து ஒரே நேரத்தில் கலிங்கம் மற்றும் மகதத்தை தாக்கும் திட்டத்தை யார் யார் ஆதரிக்கிறீர்கள். இதில் மாற்றுக்கருத்து யாருக்கேனும் இருக்கிறதா?” என வினவினார் அவையினரைப் பார்த்து.

அவையில் அமர்ந்திருந்த அனைவரும் திருக்கண்ணனின் திட்டத்தை ஆதரித்து குரல் கொடுத்தார்கள். அனைவரும் ஆதரவுக் குரல் எழுப்ப திவ்யன், அவந்திகா மற்றும் கார்த்திகா மட்டும் ஏதும் குறிப்பிடாமல் அமைதியாக அமர்ந்திருப்பதைக் கண்ட கரிகாலர், “வேளக்காரப் படைத்தலைவர் மௌனமாக இருப்பதன் காரணம் என்ன? இத்திட்டத்தில் தங்களுக்கு உடன்பாடு இல்லையா?

இத்திட்டத்தைப் பற்றிய தங்களது எண் ணத்தையும் தெரிவிக்கலாமே?" என வினவினார்.

கரிகாலர் வினவியதைக் கேட்டதும் சிரித்த வேளக்காரப் படைத்தலைவன் திவ்யன், "படை எப்படி நகர வேண் டும் என ஏற்கனவே தாங்களும், செங் குவீரனும் முடிவுசெய்து விட்டீர்கள். நாம் இப்போது என்ன விவாதித்து முடிவெ டுத்தாலும் படையின் நகர்வைத் தீர்மா னிக்கப்போகிறவன் விறல்வேல் மட்டுமே. அதற்குக் காரணம் நம்மை விடவும் நமது எதிரியின் உண்மையான பலத்தை அறிந்தவன் அவன்தான்! கடந்த இரண்டு வருடமாக கலிங்கம், மகதம், அவந்தி, தக் சின கோசலம் என்று ஒற்றர்களை அனுப் பியும், நேரில் சென்றும் படை நகர வேண் டிய இடத்தை ஆராய்ந்து கொண்டிருக்கி றான். நாம் இங்கு விவாதித்துக்கொண்டி ருக்கும் அதே நேரத்தில் அவன் போர்வி யூகத்தை வகுத்து இறுதி செய்திருப்பான். ஆதலால் அவன் இல்லாத இச்சூழலில்

https://telegram.me/aedahamlibrary

நாம் என்ன விவாதித்தாலும் அது விழலுக்கிறைத்த நீர் போலத்தான்...” எனக் கூறிக்கொண்டிருந்த போதே அவைக்குள் பிரவேசித்தான் விறல்வேல்.

செங்குவீரனைக் கண்டதும் அவையினர் அனைவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்தினர். அனைவரின் மரியாதையையும் ஏற்றுக்கொண்ட செங்குவீரன் திவ்யனுக்கு அருகில் ஒதுக்கப்பட்டிருந்த அவனது இருக்கையில் அமர்ந்து கொண்டான்.

அவையினர் அனைவரும் செங்குவீரனையே நோக்கினார்கள். அப்போது ஆசனத்திலிருந்து எழுந்த திவ்யன் செங்குவீரனை நோக்கி, “செங்குவீரா, இங்கிருக்கும் அனைவரும் படையை அவந்தி வழியாக நகர்த்துவதையே விரும்புகிறார்கள். உனது கருத்து என்ன?” என வினவினான்.

அவன் கூறியதைக் கேட்டதும் தனது ஆசனத்தில் நன்கு வசதியாக

https://telegram.me/aedahamlibra

சாய்ந்து அமர்ந்தவன் அவனுக்கு அருகில் வானவல்லியின் மடியில் அமர்ந்திருந்த திரையனைத் தூக்கி தனது மடியில் அமரவைத்து, "இந்த திட்டத்தை முதல் முதலில் பரிந்துரைத்தது யார்?" என்று வினவினான்.

"திருக்கண்ணன், செங்கோடர், வானவல்லி."

"அதற்கு நீ என்ன தெரிவித்தாய்?"

"நான் எதுவும் தெரிவிக்கவில்லை" என திவ்யன் கூறியதும் தனக்கு முன் அமர்ந்திருந்த திருக்கண்ணனை நோக்கினான் செங்குவீரன். அவன் ஆசனத்திலிருந்து எழுந்து நின்றான்.

அவனிடம், "உனது திட்டத்தை விளக்கமாகக் கூறு!" எனக் கட்டளையிட்டான் செங்குவீரன்.

"தலைவரே..." எனத் துவங்கியவன் பிறகு தயங்கினான்.

"தயக்கம் வேண்டாம் திருக் கண்ணா. எந்த ஒரு திட்டத்திலும் நிறை, குறை நிச்சயம் இருக்கும். உனது வியூகம் சிறப்பானதாக இருந்தால் நாம் அதையே பின்பற்றி விடலாம். ஆதலால் நீ தயங் காதே. உனது கருத்தை நீ தெரிவிக்க லாம், அந்த உரிமை உனக்கு எப்போ துமே உண்டு!"

செங்குவீரன் கூறியதைக் கேட்ட தும் நம்பிக்கை பெற்ற திருக்கண்ணன் நீண்ட பெருமூச்சு ஒன்றை இழுத்துக் கொண்டு, "சிறு படைப் பிரிவு ஒன்றை மட்டும் பெயரளவிற்கு நாம் கலிங் கத்தை நோக்கி அனுப்பிவைத்துவிட்டு பெரும் படையை அவந்திக்குக் கொண்டு சென்று அங்கிருந்து நாம் நம் படையைப் பிரித்து கலிங்கத்தையும், மகதத்தையும் அவர்கள் எதிர்பாராத திசையில் தாக்க லாம் என்பது எனது கருத்து!"

"இந்தத் திட்டத்தின் சாராம்சம்?"

"நமது படையை அவந்தியிலிருந்து யாரும் எதிர்பார்க்க மாட்டார்கள். மகத மன்னன் புஷ்யமித்திர சுங்கன் நம்மை கலிங்கத்திலிருந்தே எதிர்பார்த்துக் கொண்டிருப்பான். அதே நேரம் கலிங்க மன்னன் நம்மை தெற்கிலிருந்து எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறான். அவந்தியி லிருந்து புறப்படும் படையை தக்சன கோசலத்தில் இரண்டாகப் பிரித்து சிங்கபு ரியை வடக்கிலும் மகதத்தை மேற்கிலும் அவர்கள் எதிர்பாராத நேரத்தில் தாக்கி அழித்துவிடலாம் அல்லவா?"

"ஒரே நேரத்தில் நமது படையை இரண்டாகப் பிரித்து நமது எதிரி கள் எதிர்பாராத சமயத்தில் அதிரடியாக அவர்களைத் தாக்கி அழித்துவிடலாம் என்பது உன் கருத்து!"

"ஆமாம் தலைவரே..."

"நாம் சிறு படையை இங்கிருந்து கலிங்கத்தை நோக்கி அனுப்பிவிட்டு நாம் பெரும்படையுடன் அவந்தி நோக்

கிச் செல்வதை காரவேலனும், பீமவேல னும் அறியமாட்டார்கள் என்று நீ நினைக் கிறாயே?"

"நிச்சயமாக தலைவரே...:"

"நான் இங்கிருந்து சிங்கபுரத்தை நோக்கிச் சென்றபிறகு சோழப் படை சாத வாகனப்படையால் தாக்கப்பட்ட செய் தியை நான் எப்படி அறிந்துகொண்டேன் என்று உனக்குத் தெரியுமா?"

"நமது ஒற்றர்கள் தெரிவித்திருப் பார்கள்?"

திருக்கண்ணன் கூறியதைக் கேட் டதும் சிரித்த செங்குவீரன், "கலிங் கத்தின் பட்டத்து இளவரசி வர்த்தினி தான் முதன்முதலில் எனக்கு சாதவாகன போர் பற்றித் தெரிவித்தாள்! தாக்குதல் செய்தி நமது ஒற்றர்களை அடைவதற் குள் அவள் செய்தியைப் பெற்று சிங்கபு ரம் வரை வந்துவிட்டாள்! தகவல்களை சேகரிப்பதில் நம்மை விடவும் வர்த்தினி

திறமையானவள். நான் சிங்கபுரத்திற்கு நுழைந்த கணமே கலிங்கத்தின் இளவரசன் பீமவேலன் என்னை அடையாளம் கண்டு வரவேற்றான். இதுவரை நான் பீமவேலனை நேரில் சந்தித்ததே இல்லை. அந்த அளவிற்கு புத்திக் கூர்மை உடையவன் பீமவேலன். நாம் இங்கே நமது படைப் பிரிவுக்கு மத்தியில் இரகசியமாக போர்பற்றி விவாதித்துக் கொண்டிருக்கும் செய்தி கூட இந்நேரம் கலிங்கத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்தத் தகவலும் நிச்சயம் அவர்கள் அறிந்து கொள்வார்கள். இந்த நிலையில் நாம் சிறு படையை அங்கே அனுப்பிவிட்டு மீதிப் படையை அவந்திக்கு அழைத்துச் செல்வதை கலிங்க மன்னர் தெரிந்துகொள்ளாமலா இருப்பார்? அதை அறிந்தபிறகும் பீமவேலன் வாளாவிருப்பானா?" என வினவினான்.

“படைத் தலைவர் எதிரியின் திற மையை அதிகமாக மதிப்பிடுகிறார்” எனக் குறுக்கிட்டாள் வானவல்லி.

“எப்போதுமே எதிரியின் திற மையை குறைத்து மதிப்பிடுவதுதான் தவறு வானவல்லி. அதிகமாக மதிப்பிடு வதில் தவறு எதுவும் இல்லை!” என அவளிடம் தெரிவித்தவன் திருக்கண் ணனை நோக்கி, “அவந்தியைக் கடந்து படையை தெற்குக் கோசலத்தில் இரண் டாகப் பிரிக்கலாம் என்றுதானே குறிப்பிட் டாய்?” என வினவினான்.

“ஆமாம்” எனக் கூறி தலையை மட் டும் ஆட்டினான்.

“வெண்ணிப் போரில் கரிகாலர் எப் படி வெற்றிபெற்றார் என்று உனக்கு நினைவு இருக்கிறதா?”

அப்போது குறுக்கிட்ட கரிகாலர், “படைத் தலைவரே, அது நமது வெற்றி.

https://telegram.me/aedahamlibra

அந்த வெற்றி என் ஒருவனுக்கு மட்டும் உரியது அல்ல" எனத் தெரிவித்தார்.

"அதைப் பற்றி நாம் பிறகு விவாதித் துக் கொள்வோம் பேரரசே!" எனக் கரிகா லரிடம் தெரிவித்தவன், "திருக்கண்ணா நீ பதில் கூறு!" எனக் கட்டளையிட்டான் செங்குவீரன்.

"அதை எப்படி தலைவரே மறக்கமு டியும்? வைதீகர் சேர மன்னர் பெருஞ்சே ரலாதனுக்கு அனுப்பிய தகவலை வான வல்லி தேவியார் மாற்றினார். சோழப் படையைத் தாக்க இருங்கோ, சேர மற் றும் பாண்டிய நாட்டுப் படைகள் புறப் பட்டதுமே சேரப் படை இருங்கோவுடன் இணையக் கூடாது என்று வில்லவரை அனுப்பி சேர நாட்டில் எரிபரந்தெடுத் தலை மேற்கொண்டு சேரப் படையைத் தாமதப்படுத்தினோம்! அதே நேரத்தில் கரிகாலர் வேந்தனுடன் மாற்றுருவில் கூடலுக்கு சென்று அவனைத் தடுத்து நிறுத்தினார். பெரும் மழைக் காலம்

https://telegram.me/aedahamlibra

வேறு. பாண்டியப் படையும் தாமதமானது. இருங்கோவின் படை மட்டும் புகாரை முற்றுகையிட்டது. இருங்கோவை முறிய டித்தோம். பிறகு...” என அவன் கூறிக் கொண்டிருந்தபோதே குறுக்கிட்ட திவ் யன், “இருங்கோவின் படையுடன் சேர, பாண்டிய மற்றும் வேளிர்களின் மொத்தப் படையும் இணைந்து புகாரை முற்றுகை யிட்டிருந்தால் நம்மால் அவர்களின் முற் றுகையை தகர்த்திருக்க முடியுமா திருக் கண்ணா?” என வினவினான்.

“கடினம்!”

“நான் கடினமானதா அல்லது எளி தானதா என்று கேட்கவில்லை. தகர்க்க முடிந்திருக்குமா என்றுதான் கேட்கி றேன்.”

“தகர்த்திருக்க முடியாது!”

அப்போது செங்குவீரன், “பாண்டிய மற்றும் சேர மரக்கலங்களுடன் சிங்கள மரக்கலங்களும் இணைந்து வந்திருந்

தால் பரதவன் குமரன் மற்றும் யவன தளபதி டாள்தொபியாசினால் அந்தக் கடற்போரில் வெற்றியடைந்திருக்க முடியுமா?" எனவும் வினவினான்.

"கடினம் தான்!" எனத் தெரிவித்தான் திருக்கண்ணன்.

"வெண்ணிப் போரின் வெற்றி இரகசியம் என்ன?"

"சோழ நாட்டின் மீது படையெடுத்த பகைநாட்டு வீரர்களை நாம் ஒன்றிணைய விடவில்லை. அவர்களின் நகர்வினை நாம்தான் தீர்மானித்துக் கொண்டிருந்தோம்!"

"சரி... இந்த நிலையில் நமது படையை மட்டும் அவந்தியைக் கடந்து கோசலத்தில் இரண்டாகப் பிரித்துவிட்டால் நமது படை பலமும் குறையாதா திருக்கண்ணா? நாம் மட்டும் நமது படையை இரண்டாகப் பிரித்தால் நமது பலம் நான்கில் ஒருபங்காக குறைந்து

போய்விடும். இது சோழ நாடு அல்ல நினைத்தபடி படையைப் பிரித்து சேர்த் துக்கொள்ள. சோழ நாட்டிலிருந்து வெகு தொலைவில் வந்திருக்கிறோம். ஒற்று மையாக நாம் பயணித்தால்தான் வெற்றி நமக்கு உரித்தாகும்!"

அப்போது குறுக்கிட்ட செங்கோடர், "படையை இரண்டாகப் பிரித்தால் நமது பலம் குறையும் என்றால் அவந்தியிலி ருந்தே நேராக முதலில் கலிங்கத்தைத் தாக்குவோம். பிறகு கலிங்கத்திலிருந்து புறப்பட்டு மகதத்தை வீழ்த்துவோம்!" என முழங்கினார்.

"நாம் இங்கிருந்து புறப்பட்ட அடுத்த கணமே கலிங்கத்திற்கு ஒற்றர்கள் நமது நகர்வை தெரிவித்துவிடுவார்கள். கலிங்க மன்னரும் தனது படையுடன் நம்மை வரவேற்க தயாராக சிங்கபுரத் திற்கு வடக்கே காத்துக் கொண்டிருப்பார். நாம் அவந்தி சென்று அங்கிருந்து கலிங் கத்தை நோக்கிச் செல்லும்போது தென்

கிழக்கிலிருந்து கலிங்கப் படையும், வடக்கிலிருந்து மகதப்படையும் ஒரே நேரத்தில் நம்மைத் தாக்கினால் நமது நிலை என்ன ஆகும்?"

அப்போது அங்கு பெருத்த அமைதி நிலவியது. செங்குவீரனும் சிறிது நேரம் அமைதியாக அமர்ந்திருந்தான். பிறகு, "நாம் கிருஷ்ணை நதிக்கரையின் வடகரையில் இப்போது நமது பெரும்படையுடன் நிலை கொண்டிருக்கிறோம். இங்கிருந்து அவந்திக்கு செல்ல வேண்டுமெனில் நமது படை இருபது யோசனை தொலைவு பயணிக்க வேண்டும். இந்தத் தொலைவு நாம் பயணித்தால் கலிங்கத்தைக் கடந்து மகத தலைநகரான பாடலியையே அடைந்து விடலாம். இங்கிருந்து பாடலி இருபத்தி மூன்று யோசனை தொலைவு தான்" எனத் தெரிவித்தவன் அங்கு அமர்ந்திருந்த அவந்திகாவிடம், "தேவி, அவந்தியிலிருந்து கலிங்கம் செல்லும் பாதை எவ்வளவு அபாயகரமா

னது என்று இவர்களுக்கு தெரிவியுங்க ளேன்" என வேண்டினான்.

ஆசனத்திலிருந்து எழுந்த அவந் திகா, "அவந்தியிலிருந்து கலிங்கத்தின் தலைநகர் சிங்கபுரியை அடைய வேண் டுமெனில் முதலில் விந்திய மற்றும் சாத் புரா மலைத் தொடர்களுக்கு இடையில் பாயும் நர்மதை நதியை நாம் கடந்து போக வேண்டும். அவந்தி எல்லையி லேயே நாம் அதைக் கடந்துவிடலாம். அது பிரச்சனை இல்லை. ஆனால், நர் மதை நதிக்குப் பிறகு நாம் அடர்ந்த எட்டு யோசனை தொலைவு பரந்து விரிந்திருக் கும் தண்டகாரண்ய வனத்தை நாம் கடக் கக் வேண்டும். அது சாதாரண காரியம் அல்ல. கலிங்கத்தின் மகாமேகவாகன மன்னர் காரவேலர் சிங்கபுரியிலிருந்து வெகு தொலைவில் நாம் தங்கியிருக் கும் இந்தக் கோட்டையை சதகர்ணியின் எச்சரிக்கையையும் மீறித் தாக்கினார். ஆனால், அவர் சாதவாகன தலைநகர் பைத்தானை நோக்கி இதுவரை அவர்

ஒரு முறை கூட படையெடுக்கவில்லை. காரணம் என்ன என்று தெரியுமா?” என வினவினாள்.

அனைவரும் அமைதியாக அமர்ந் திருந்தார்கள். கரிகாலர் செங்குவீரனை நோக்கினார். அவனும் அவந்திகாவை பார்த்தபடியே அமர்ந்திருந்தான்.

“அதற்குக் காரணம் சாதவாகன நாட்டிற்கும் மகாமேகவாகன நாட்டிற்கும் இடையிலிருக்கும் தண்டகாரண்ய வனம் தான். ஆறுகளும், மலைகளும் நிறைந்த அவ்வனத்தை எளிதில் கடக்க இயலாது. அந்த வனத்தைக் கடக்க ஒரு சில பாதைகள் மட்டுமே இருக்கின்றன. அந் தப் பாதைகள் அனைத்தும் கலிங்க மன் னர் நன்கு அறிவார். கலிங்கப் படையின் தாக்குதலிலிருந்து சாதவாகன நாட்டை இத்தனை ஆண்டுகளாக காப்பாற்றி வருவது இந்த வனம் தான்! இந்த வனத் தைக் கடக்கும் முடிவு தற்கொலைக்குச் சமம். அப்படியே நாம் கடந்தாலும் சிங்கபு

ரத்தை அடைய வேண்டும் எனில் மகாநதியை நாம் கடக்க வேண்டும். இது கலிங்கத்திற்குள் பாயும் நதி. சிங்கபுரத்திற்கு அருகில் அதைக் கடப்பது என்பது நாமே நமது தலையை வலிய சென்று கொடுப்பதற்கு சமம். இங்கிருந்து அவந்தியை அடைய பயணிக்கும் இருவது யோசனை தூரம், அவந்தியிலிருந்து சிங்கபுரத்தை அடைய ஆகும் தொலைவான பத்தொன்பது யோசனை தூரம் பயணித்து தண்டகாரண்ய வனத்தைக் கடப்பதற்குள் நமது படையில் பாதியை நாம் இழந்து விடுவோம். இங்கிருந்து அவந்தி சென்று சிங்கபுரம் பயணிக்கும் முப்பத்தி ஒன்பது யோசனை தூரத்தை நாம் கலிங்கம் வழியாக பயணித்தால் பாடலியை கடந்து இமயத்தையே அடைந்துவிடலாம்" எனத் தெரிவித்தாள்.

"அவந்தி இளவரசி கூறியது அனைவருக்கும் புரிந்திருக்கும் என நினைக்கிறேன். இங்கிருந்து ஏழு யோசனை தொலைவில் இருக்கும் சிங்கபுரியை

https://telegram.me/aedahamlibra

தாக்க நாம் கிட்டத்தட்ட நாற்பது யோசனை தூரத்திற்கும் மேல் சுற்ற வேண்டும் என்பது மடத்தனம்" என்று அவையினரைப் பார்த்து கூறியவன் எதிரில் நின்ற திருக்கண்ணனைப் பார்த்து, "திருக்கண்ணா, சுங்க வீரர்களை அவந்தி எல்லையில் தாக்கியது நீ தானே?" என வினவினான்.

"ஆம், படைத் தலைவரே..."

"எப்படித் தாக்கினாய்?"

"அவர்கள் நதியைக் கடக்கும் போது எதிர்பாராத நேரத்தில் அவர்களைத் தாக்கி அழித்தேன்!"

"நீ சுங்கப்படையை அவந்தியில் தாக்கிய அதே முறையில் கலிங்கர்களும், சுங்கர்களும் நம்மைத் தாக்கினால் என்ன செய்வாய்?"

திருக்கண்ணன் எந்த பதிலை அளிப்பது என்று தெரியாமல் நின்று கொண்டிருந்தான்.

"சிங்கபுரத்திற்கு நான் சென்று வந்ததை அனைவருமே அறிவீர்கள். சிங்கபுரத்தை கிழக்கு மற்றும் தெற்கிலிருந்து தாக்கினால் மட்டுமே நம்மால் வெற்றி பெற முடியும்!" எனச் சற்றே சத்தமாகத் தெரிவித்தான் செங்குவீரன்.

அப்போது கார்த்திகா, "ஆமாம்... படைத்தலைவர் கூறுவது உண்மை தான். கலிங்கத்தின் வடக்கே கரடுமுரடான குன்றுகள் தண்டகாரண்யம் வரை இருக்கின்றன. அவற்றிற்கிடையில் வம்சதாரா நதி அதிவேகத்தில் பாய்ந்து கொண்டிருக்கிறது. மேற்கே அடர்ந்த காடு, தெற்கே நாகவதி நதி பாய்கிறது. கிழக்கே ஆழமில்லாத கடல் என இயற்கை அரண் மட்டுமல்லாது வலிமையான கோட்டை மற்றும் அதைப் பாதுகாக்க நூறாயிரத்திற்கும் மேற்பட்ட வீரர்கள் சிங்கபுரியைக் காத்து நிற்கிறார்கள். இவற்றையும் மீறி நாம் சிங்கபுரியை தாக்கவேண்டும் எனில் தெற்கு திசைத் தாக்

குதல் மட்டுமே உகந்தது!" எனக் குறுக் கிட்டாள்.

அப்போது ஆசனத்திலிருந்து எழுந்த வேளிர் ஒருவர், "கலிங்கத்தை அடைய அவந்தி வழி என்பது மிக வும் ஆபத்து என்பதை ஒத்துக் கொள் கிறோம். ஆனால், அவந்தியிலிருந்து நேராக மகதத்தை நாம் தாக்கினால் என்ன?" என வினவினார்.

செங்குவீரன், "அவந்தியிலிருந்து நாம் மகதம் நோக்கி நகர்ந்தால் தக்சன கோசலத்தின் படை நம்மை முதலில் எதிர்க்கும், அடுத்ததாக உத்தர கோச லத்தின் படையையும் முறியடித்த பிறகே நதிகளைக் கடந்து சென்றால் தான் நம் மால் மகதத்தின் பாடலியை அடைய முடி யும். நாம் அவந்தியை நோக்கி நகரும் போது காரவேலனின் கலிங்கப்படை நம் மைப் பின்புறமாகத் தாக்கினால் என்ன செய்வது?" என வினவினான்.

"கலிங்கமும், சுங்கமும் பகை நாடு கள் அல்லவா? மகதத்தைக் காக்க கார வேலன் எப்படி வருவான்?"

"மகதத்தைக் காக்க கலிங்க மன் னர் வரமாட்டார். ஆனால் தனது நாட் டைக் காத்துக்கொள்ள அவரது தற்கா லிக பகைவனான நம்மை அழிக்க அவர் நிச்சயம் தாக்குவார். அரசியலில் நிரந்தர எதிரி, நண்பர் என்ற பேச்சிற்கே இட மில்லை வேளிரே! நேற்று சோழ நாட் டிற்கு சேர மற்றும் பாண்டிய நாட்டி னர் பகை நாடுகள். ஆனால், இன்று அவர்களின் படையும் சோழப் படையு டன் இணைந்து நம்முடன் வந்திருக்கி றார்கள். இப்போது அவர்களுக்குப் பொது எதிரி நாம் மட்டுமே. அதுமட்டுமல்லாமல், பீமவேலன் அறிவான், மகதத்தை அழித்த பிறகு நாம் கலிங்கத்தை நோக்கித் தான் முன்னேறுவோம் என்று! ஆதலால் அவன் நிச்சயம் நம்மைத் தாக்குவான்."

https://telegram.me/aedahamlibra

"அதற்குத்தான் உதவுவதற்காக அவந்தியில் சதகர்ணியின் படை நமக்கு இருக்கிறதே?" என வினவினார் செங் கோடர்.

அதுவரை ஆசனத்தில் அமர்ந் திருந்து அமைதியாகப் பதிலளித்துக் கொண்டிருந்த செங்குவீரன் எழுந்து, "செங்கோடரே, நாம் சதகர்ணியின் படை பலத்தைப் பெற்று நாம் போரில் வெற் றிபெற வேண்டிய அவசியம் இல்லை. அதற்காகவா நாம் சோழ நாட்டிலி ருந்து நமது தமிழ்ப் படைகளை திரட் டிக்கொண்டு வந்திருக்கிறோம்?" என வெகுண்டெழுந்தான்.

"படை பலத்தை நாம் சதகர்ணியி டம் எதிர்பார்க்கவில்லை எனில் பிறகு நாம் எதிர்பார்ப்பது என்ன?" என வினவி னாள் வானவல்லி.

"ஒன்று உணவு!"

"இன்னொன்று?"

"அதை நேரம் வரும்போது தெரிவிக்கிறேன்!" என அவளிடம் தெரிவித்தவன் கரிகாலரை நோக்கி, "அரசே, தாங்கள்தானே அவந்தியில் இருக்கும்போது நமது படை எப்படி கலிங்கத்தை தாக்க வேண்டும் என்று முடுவெடுத்தீர்கள். இப்போது அமைதியாக இருப்பதன் காரணம் என்ன?" என வினவினான்.

அதுவரை அவையில் நடந்த விவாதங்களை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த கரிகாலர் ஆசனத்திலிருந்து எழுந்தார். அவையில் அமர்ந்திருந்த அனைவரும் எழுந்து நின்றார்கள். அனைவரையும் அமருவதற்கு சைகை காட்டி அமரவைத்த கரிகாலர் அவையில் நடந்தபடியே, "ஓயாத பயணம் என்னை அலுப்படைய வைத்துவிட்டது படைத்தலைவரே, ஆதலால் உங்களிடமும் வேளக்காரப் படைத்தலைவரிடமும் படையை ஒப்படைத்துவிட்டு புகாருக்கு சென்றுவிட்டால் என்ன என்று தோன்றியது. ஆதலால் நம் படை தலைவர்

கள் மற்றும் படைத் தளபதிகளின் போர் தந்திரத்தை அறிந்துகொள்ள வேண்டும் எனும் எண்ணம் தோன்றியது. ஆதலால் தான்...” எனக் கூறியவர் பிறகு “இங்கிருக்கும் அனைவருக்கும் தென்னகத்தின் மீது நடந்த மௌரியப் போரைப் பற்றி அறிவீர்கள் என நினைக்கிறேன்!” எனத் தெரிவித்தார்.

அனைவரும் அமைதியாக அமர்ந்திருந்தார்கள். செங்கோடரிடம், “தென்னகத்தில் மௌரியப் போர் எங்கெங்கு நடைபெற்றன செங்கோடரே?” என வினவினார்.

“வட்டாறு, செல்லூர், துளுநாடு மற்றும் செருப்பாழி ஆகிய இடங்களில் நடைபெற்றது!”

“மௌரியனின் அசோகப் படையானது ஒன்றுதான். ஆனால், அவர்களால் எப்படி ஒரே நேரத்தில் நான்கு இடங்களில் போரிட முடிந்தது?”

https://telegram.me/aedahamlibra

“அவர்கள் தங்களது படையைத் தனித்தனியாகப் பிரித்து தென்னக மன்னர்களைத் தாக்கினார்கள்.”

“அவர்கள் தங்களது பெரும்படையை பிரித்தது அவர்களின் முதல் தவறு. இரண்டாவது இந்த வடுக நாட்டில் நிலை கொண்டிருந்த மூவேந்தர்களின் கூட்டுப் படையை முறியடித்த பிறகு அவர்கள் தென்னகத்தில் வலுவாக காலூன்றியிருக்க வேண்டும். மொழிபெயர் தேய மலையில் நிலை கொண்டிருந்த பெரும் படையை அவர்கள் தவிர்த்து மேற்கு கடற்கரை வழியாக கோசர்களையும், இதே வடுகர்களையும் கொண்டு பாதை அமைத்து முன்னேறினார்கள். ஆனாலும் அவர்களின் தாக்குதல் முறியடிக்கப்பட்டு விட்டது. காரணம் என்ன?”

அப்போது செங்குவீரன் “பெரும்படையை பிரித்தது அவர்களின் இரண்டாவது தவறு. மூவேந்தர் கூட்டுப் படையை முறியடிக்காமல் தென்

னகத்திற்குள் நுழைந்தது முதல் தவறு. படையை பிரித்ததால் அவர்களின் பலம் குறைந்துவிட்டது. பிறகு சோழ மன்னர் சென்னியின் படை, அழுந்தூரின் படை, மூவேந்தர் படை அவர்களை சூழ்ந்து மொத்தமாக அழித்துவிட்டார்கள்" எனத் தெரிவித்தான்.

"இதற்கு மேல் விவாதம் தேவை இல்லை என்று கருதுகிறேன் படைத்த லைவரே. தாக்குதல் திட்டத்தை தாங் களே அவையில் அனைவருக்கும் தெரி வித்துவிடுங்கள்!" கட்டளையிட்டார் கரி காலர்.

நின்றபடியே அவையினரை நோக் கினான் செங்குவீரன். பிறகு, "கலிங்க மன்னன் காரவேலன் மூவேந்தர் கூட்ட ணியை முறியடித்து நம்மிடமிருந்த பித் துண்டாவைக் கைப்பற்றி கழுதையைக் கொண்டு உழுதான். வீண் போரினைத் தவிர்ப்பதற்காக அதையும் மன்னித்து சோழப் படையின் இலக்கு கலிங்கம்

அல்ல மகதம் தான். ஆதலால் சோழப் படை கலிங்கம் வழியாக மகதம் செல்ல அனுமதிக்க வேண்டும் என்று நானே சிங்கபுரம் வரை சென்று காரவேலரிடம் கேட்டுக்கொண்டேன். அவர் மாற்றான் படை ஒருநாளும் கலிங்கத்தைக் கடக்க அனுமதிக்க மாட்டேன் என்று தெரிவித்துவிட்டார். சோழப் படை கலிங்கத்தைக் கைப்பற்றி மகதத்தை நோக்கி முன்னேறும் என்று தெரிவித்துவிட்டு வந்திருக்கிறேன். ஆதலால், படை எந்தச் சூழலிலும் அவந்திக்கு செல்லாது. நேரே கலிங்கம் தான். கலிங்கத்தில் காரவேலனையும், பீமவேலனையும் நேருக்கு நேர் எதிர்கொள்வோம்!" என செங்குவீரன் கூறிக்கொண்டிருந்த போது குறுக்கிட்ட வானவல்லி, "நாம் சிங்கபுரத்தில் காரவேலனை எதிர்த்துத் தாக்கும்போது வடக்கிலிருந்து புஷ்யமித்திர சுங்கன் காரவேலனுக்கு உதவிக்கு வந்துவிட்டால்?" என வினவினாள்.

https://telegram.me/aedahamlibra

"அப்படி அவர்கள் இறங்கி வந்தால் சோழப் படையின் நிலை கேள்விக்குரியது தான்?"

"இதற்கு தீர்வு?"

"சதகர்ணி!"

"சதகர்ணியா?"

"ஆம்!"

"சதகர்ணியை நாம் போருக்கு பயன்படுத்துவது நமது வீரத்திற்கு இழுக்கு அல்லவா?" என செங்குவீரன் தெரிவித்ததையே வானவல்லியும் தெரிவித்தாள்.

"சதகர்ணியின் படை நமது படையுடன் ஒரு நாளும் இணைக்கப்படாது. ஆனால், சதகர்ணிக்கும் மகதத்திற்கும் தீராத பகை இருக்கிறது. மகத மன்னனை எப்போது வீழ்த்தலாம் என்று சமயம் பார்த்துக்கொண்டு இருக்கிறான் சதகர்ணி. ஆதலால் இந்நேரம் சாதவாகனப்

படை அவந்தியின் கிழக்கு எல்லையில் அதாவது தக்சின கோசலத்தின் தெற்கு எல்லையை நோக்கிப் புறப்பட்டிருக்கும். கலிங்க மன்னனுக்கு உதவ மகதப் படை கீழே இறங்கினால் அடுத்த கணம் சாத வாகன படை மகதத்தை நோக்கி மேலே செல்லும். ஆதலால் கலிங்கத்தில் மகத மன்னனை நாம் எதிர்பார்க்க வேண்டிய அவசியம் இல்லை."

"சதகர்ணியை புஷ்யமித்திர சுங்கன் கோசலப் படையுடன் தாக்கினால்?"

"அதற்கு வாய்ப்பு இல்லை. நாம் மேலே வடக்கு நோக்கி நகர்ந்துகொண் டிருக்கும் போது தேவையில்லாத போரில் ஈடுபட்டு தனது பலத்தை குறைத்துக் கொள்ள புஷ்யமித்திர சுங்கன் ஒன்றும் முட்டாள் அல்ல."

"படைத் தலைவரே, கலிங்கப் போர் தான் நமக்கு பெரும் அச்சுறுத்தலாக, சவாலாக இருக்கும் என்று கருதுகிறீர் களா?" என வினவினான் வில்லவன்.

“இல்லை படைத் தலைவரே, கலிங்கத்தை விடவும் மகதப் போர்தான் பெரும் அச்சுறுத்தலாக இருக்கும் என்பது எனது கருத்து!”

“கலிங்க மன்னனை விடவும் புஷ்யமித்திர சுங்கன் அப்படியொன்றும் வலிமையானவனாக இல்லையே?”

“மேல் பார்வைக்கு அப்படித்தான் நமக்குத் தெரியும். கலிங்கத்தில் நாம் கலிங்கப்படையை மட்டுமே எதிர்கொள்ளப் போகிறோம். ஆனால், மகதத்தில் அப்படி நிலை இல்லை. சுங்க அரசன் புஷ்யமித்திரனது மகதப் படையுடன் உத்திர கோசலப் படை, தக்சின கோசலப் படை, வச்சிரநாட்டுப் படை, விதர்பாவின் படை எனப் பெரும்படை தயாராக நிற்கிறது. காரவேலன் புஷ்யமித்திர சுங்கனை மகதத்திலேயே வீழ்த்தி அவனது அரண்மனைக்குள் நுழைந்திருக்கிறான். சதகர்ணி புஷ்யமித்திர சுங்கனை வீழ்த்தி மாளவத்தை கைப்பற்றி இருக்கிறான்.

அதே நேரம் யவன முரடர்களான சாகர் களும், பகலவர்களும் புஷ்யமித்திர சுங் கனை தோற்கடித்திருக்கிறார்கள் என்ப தால் நாம் சுங்கனை குறைத்து மதிப்பிடக் கூடாது. மூவரிடமும் தோற்றும் புஷ்யமித் திர சுங்கன் இன்னும் மகதத்தில் தன்னை நிலை நிறுத்திக்கொண்டு பேரரசனாக ஆட்சி செலுத்திக்கொண்டு இருக்கிறான் என்றால் நாம் அவனது வலிமையை இங்கு புரிந்துகொள்ள வேண்டும். அது மட்டுமல்லாமல் புஷ்யமித்திர சுங்கன் தான் மௌரிய அரசின் சேனாதிபதி. அவன் ஆட்சியைக் கைப்பற்றிய முறை தவறாக இருந்தாலும் அவனும் பெரும் வீரன். போர் யுக்திகள் அனைத்தையும் அறிந்தவன்."

"அப்படியெனில் கலிங்கப்போரை விடவும் மகதப் போர் தான் பெரும் சவா லாக இருக்கும் எனக் கருதுகிறீர்களா?" எனக் குறுக்கிட்டு வினவினான் திருக் கண்ணன்.

https://telegram.me/aedahamlibra

“நிச்சயமாக திருக்கண்ணா...”

“கலிங்கத்தை நோக்கி நாம் எப்போது தலைவரே புறப்படப்போகிறோம்?” என வினவினான் திருக்கண்ணன்.

“அதைக் கரிகாலர் அறிவிப்பார் திருக்கண்ணா...” எனப் பதிலளித்தான் செங்குவீரன்.

அனைவரும் கரிகாலரை நோக்கினர். அப்போது கரிகாலர், “நிறைந்த அமாவாசை அன்று நமது படை கலிங்கத்தை நோக்கிப் புறப்படும்!” என அறிவித்தார்.

அடிக்குறிப்பு:

1. தக்சின கோசலம் - தெற்கு கோசலம். (தக்சினா (Dhakshina)- தெற்கு) கோசலம் உத்தர கோசலம் மற்றும் தக்சின கோசலம் என இரண்டு பகுதி இருக்கிறது. தெற்கு கோசலம் என்பது இன்றைய சட்டிஸ்கர் மற்றும் ஓடி

https://telegram.me/aedahamlibra

சாவின் வடக்குப் பகுதியை உள்ளடக்கியது. உத்தர கோசலம் என்பது அயோத்தியை தலைநகராகக் கொண்டது. இது அயோத்தி, காசி ஆகிய பகுதிகளை உள்ளடக்கியது. உத்தர கோசலம் என்பது இன்றைய பாகிரியாச் (Bahraich), கொண்டா (Gonda), பாசிலி (Basili), கோராக்பூர் (Gorakhpur) பகுதிகள்.

2. யோசனை: ஒரு காத தொலைவு என்பதை அளவிட பல அளவீடுகள் இருக்கின்றன. ஒரு காதம் - 6.7 கி.மீ, 11.2 கி.மீ, 16.80 கி.மீ எனப் பலரும் பலவிதமாக அளவிடுகிறார்கள். சோழத் தலைநகர் உறைந்தைக்கும் சேரத் தலைநகர் வஞ்சி மாநகருக்கும் இடையே உள்ள தொலைவு நான்கு காத தொலைவு என்று சங்கப் பாடல் ஒன்று தெரிவிக்கிறது. இரண்டிற்கும் இடைப்பட்ட தொலைவை வைத்து ஒப்பிடும் போது சராசரியாக ஒரு காத தொலைவு என்பது 19 கி.மீ (தோராயமாக) வருகிறது.

https://telegram.me/aedahamlibra

ஆதலால் நான் ஒரு காத தூரம் என்பதை 16.80 கி.மீ என்று கொண்டுள்ளேன்.

ஒரு காதம் = 7.5 நாழிகை பயணத் தூரம்

= சராசரியாக மூன்று மணி நேரம் பயணிக்கும் தூரம்

= பத்து மைல் = 16.80 கி.மீ

ஒரு யோசனை = 4 காத தூரம்

= ஒரு பொழுது (12 ஏனூண்) பயணிக்கும் தொலைவு

= 67.2 கி.மீ

ஒரு யோசனை தொலைவு என்பது 67.2 கி.மீ எனக் கொண்டே அவந்தி, மகதம், சிங்கபுரம் ஆகிய பட்டினங்களுக்கு இடைப்பட்ட தோராய தொலைவை கூறியிருக்கிறேன்.

ஒரு யோசனை தொலைவு என்பது ஒரு மனிதனால் ஒரு நாளைக்கு சரா

சரியாக நடந்து பயணிக்கும் தொலைவு ஆகும்.

3. அத்திகும்பா கல்வெட்டு - யானைக்குகை கல்வெட்டு வரி - 4)

பிராகிருதம்: காரயதி பநதிஸாஹி ஸதஸஹஸேஹி பகதியே ச ரஞ்ஜயதி (ஐஐ) துதியே ச வசே அசிதயிதா ஸாத கநிம் பசிமதிஸம் ஹய கஜ நர ரத பஹீ லம் தண்டம் படாபயதி கந்ஹவேம்ணாம் கதாய ச சேநாய விதாஸிதி அஸிக நகரம் ததியே புநவசே.

தமிழ் மொழிபெயர்ப்பு: முப்பத்து ஐந்து நூறாயிரம் காசுகள் செல வில் மக்கள் மனதைக் குளிரவைத் தார். தம் இரண்டாம் ஆட்சியாண் டில் சதகர்ணியைப் பொருட்படுத்தா மல், மேற்கு நோக்கி வலிமையான குதிரை, யானை, காலாட், தேர்ப்படை களை அனுப்பி கன்னபெண்ணையாற் றின் (கன்னபெண்ணை - கிருஷ்ணை நதி) கரையை எட்டி மூசிக நகரத்தைக்

https://telegram.me/aedahamlibra

கலங்க வைத்தார். தம் மூன்றாம் ஆட்சி யாண்டியில்...

4. தென்னகத்தில் ஏற்பட்ட மௌரியப் போர் பற்றி அறிந்துகொள்ள என் வெள்வேல் சென்னி புதினத்தை வாசிக்கவும்...

https://telegram.me/aedahamlibra

# 39. புறப்பட்ட சோழப்படை

வெண்ணிப் போரில் தன்னை எதிர்த்த சேரர், பாண்டியர் மற்றும் வேளிர்களைத் தோற்கடித்து தனக்குரிய அரியணையை மீட்டவர், சிங்களத்தின் வீரர்களைச் சிறைபிடித்து சோழ நாட்டின் வழியாக குணக் கடலில் கலக்கும் காவேரியின் குறுக்கே அணையைக் கட்டியது மட்டுமல்லாது அதன் இரண்டு கரைகளையும் உயர்த்தி, அடர்ந்த காட்டைத் திருத்தி காவேரியை பொன்னி நதியாக மாற்றி சோழ நாட்டை “சோழ நாடு சோறுடைத்தது” எனப் புகழ் பெறச் செய்த மாவீரன், சோழப் பேரரசன் கரிகால் பெருவளத்தான், “நிறைந்த அமாவாசை அன்று படை கலிங்க நாட்டை

நோக்கி புறப்படட்டும்” என அறிவித்தி ருந்தார்.

ஆதலால் சோழ வீரர்கள் அனைவ ரும் படை புறப்பட வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும் செய்து பெரும் எதிர் பார்ப்புடன் இருந்தனர். கரிகாலர் அறி வித்த அமாவாசை நாளும் வந்தது. கிருஷ்ணை நதியின் வடகரையில் தமி ழரின் போர்த்தெய்வமான கொற்றவைத் தேவியின் திருவுருவச் சிலையை களி மண்ணால் வார்த்து அதற்கு வேண்டிய நிறத்தையும் பூசியிருந்தார்கள். வெண் ணிற பாம்புக்குட்டியைப் போன்ற பொன் இழையால் கட்டப்பட்டிருந்த நீண்ட சடைமுடி அவளது தலையிலிருந்து தொங்கிக்கொண்டிருந்தது. பிறைச் சந் திரன் போலத் தோற்றமளித்த அச்சடை முடியில் வளைவான காட்டுப் பன்றியின் கொம்பு சாத்தப்பட்டிருந்தது. நெற்றியில் பெரிய பொட்டு, அகன்ற பெரிய கண் கள், அவளது சிங்கப் பற்கள் இரண்டு நீட்டிக்கொண்டிருக்க, அவளது நாக்கா

னது அச்சப்படுத்தும் வகையில் தொங் கிக்கொண்டு அவளது வாயானது பசியில் குருதியை வேண்டிக்கொண்டு அகலத் திறந்திருந்தது.

திறந்த வாயினை உடைய புலியின் பல்லானது அவளது கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்தது. அவளது இடையில் வரிகளும், புள்ளிகளும் உடைய புலித் தோலை மேகலையுடன் அணிந்திருந் தாள். நீளமான முறுக்கிய கொம்புகளு டைய கவரிமானின் மீது காட்டு யானை யின் தோல் போர்த்தப்பட்டு அதன் மீது கம்பீரமாக அமர்ந்திருந்தாள் கொற்ற வைத் தேவி. அவளது ஒரு கை பிடித்துக் கொண்டிருந்த கோலில் புலிக் கொடி கம் பீரமாகப் பறந்துகொண்டிருந்தது. மற்ற ஏழு கரங்களில் பஞ்சவர்ணக் கிளி, வில், வீர வாள், வேல், செண்டாயுதம், குருதி காய்ந்து போயிருந்த எருமைத் தலை மற் றும் குருதிச் சட்டியைத் தாங்கிக்கொண்டு மானின் மீது கம்பீரமாக அமர்ந்திருந் தாள்.

அவளுக்கு முன் மணமுள்ள சந்தனம், வேகவைத்த அவரை, துவரை, எள்ளுருண்டை இவற்றுடன் பன்றி, எருமை, ஆடு ஆகியவற்றின் இறைச்சியுடன் சேர்ந்து பிழையப்பட்டிருந்த சோறு படைக்கப்பட்டிருந்தது. இவற்றிற்கு முன் நெருப்பு மூட்டப்பட்டு அகில் தூவி புகையும் உருவாக்கப்பட்டிருந்தது. புகை எழுந்து அந்த இடம் முழுவதையும் மணம் பரப்பிக்கொண்டிருந்தது.

கொற்றவைத் தேவிக்கு முன் கரிகாலர் பக்தியுடன் நின்றுகொண்டிருந்தார். அவருக்கு இரண்டு புறத்திலும் சோழப் படைத்தலைன் விறல்வேல், வேளக்காரப் படைத்தலைவன் திவ்யன், திரையன், வானவல்லி, நாங்கூர் வேளிர் செங்கோடர், உபதலைவன் திருக்கண்ணன், சோழப் உபதலைவனும், சேரப் படையின் தலைவனுமான வில்லவன், அவந்திகா, கார்த்திகா, வேளிர்கள், மற்ற உபதலைவர்கள், உபதளபதிகள் என அனைவரும் நின்றுகொண்டிருந்தார்கள்.

https://telegram.me/aedahamlibra

அவர்களுக்கு இரண்டு புறத்திலும் இரு நூறாயிரத்திற்கும் மேற்பட்ட சோழப் படை பரந்து விரிந்து அணிவகுத்து நின்று கொண்டிருந்தனர்.

சோழப் படையின் காலாட் படை கொற்றவையின் பேய் படையைப் போன்றும்; இரக்கமே இல்லாத சோழப் படையின் வேல் வீரர்கள் கொற்றவையின் ஒளி மிகுந்த சூலப் படையைப் போன்றும்; யானைப்படை கொற்றவைக்கு தினமும் பணிவிடை செய்யும் கருத்த பூதங்களைப் போன்றும்; காற்றுகளை விடவும் வேகமாகப் பயணித்துச் செல்லும் சோழப் படையின் தேர் படையானது கொற்றவை தினமும் கடந்து செல்லும் மேகத்தைப் போன்றும்; கொற்றவையின் கட்டளை எழுந்ததும் பாய்ந்து செல்லும் அவளது படையை விடவும் அதிவேகமாகச் செல்லும் புரவிப் படையும் நின்றுகொண்டிருந்தன.

கொற்றவைக்கு முன் கரிகாலரும், அவரது படையும் நின்றுகொண்டிருந்த தோரணையானது கொற்றவைத் தேவி யின் ஐவகைப் படைதான் அணிவகுத்து நிற்பதைப் போன்ற எண்ணத்தை உரு வாக்கியிருந்தது.

கொற்றவையை வணங்கிய கரி காலர் பணிவுடன் நின்றுகொண்டிருந்த தனது படைத் தலைவர்களையும்; உல கைச் சூழ்ந்திருக்கும் பெருங்கடலே வீரர் களாகவும், காற்று முழுவதும் குதிரைக ளாகவும், மலைகளே யானைகளாகவும், மேகங்கள் எல்லாம் தேர்களாகவும் நின் றுகொண்டிருத்த தனது படையை பெரு மையுடனும் நோக்கினார்.

பிறகு, “வழிபாடு துவங்கட்டும்!” எனக் கட்டளையிட்டார் சோழப் பேரர சர் கரிகாலர். உடனே பறை, கொம்பு, தாளம், முரசு, முழவு, தமருகம் ஆகியவை இசைக்கப்பட்டன. வீரர்கள் அனைவரும்

வெற்றி முழக்கம் செலுத்தத் துவங்கினார்கள்.

செங்கோடர் காளியின் முன் மண்டியிட்டு, “பழையோள், ஓங்குபுகழ் கானமர் செல்வி, விறல் கெழு சூலி, உருகெழு மரபின் அயிரை” எனக் கொற்றவையின் புகழ் பாடியவர், “அந்த எருமைக் கடாக்களை இழுத்து வாருங்கள்!” எனக் கட்டளையிட்டார்.

வீரர்கள் தயாராகக் கட்டி வைத்திருந்த இரண்டு எருமைகளை இழுத்து வந்தார்கள். கொற்றவையையும், எருமைகளையும் வணங்கியர், “மூத்த குடியினர் யாராவது இருவர் இங்கே வாருங்கள்?” எனச் சத்தத்துடன் வினவினார்.

கூட்டத்திலிருந்து மூத்த குடியைச் சேர்ந்த தொம்பன், பறையர் குலத்தைச் சேர்ந்த இரு போர் வீரர்கள் கையில் வேலுடனும், இடையில் நீண்ட வாளுடனும் வந்து கொற்றவையை வணங்கினர்.

கொற்றவைக்கு முன் சாத்தப்பட் டிருந்த இரண்டு வாட்களை எடுத்த செங்கோடர் மூத்த குடியினர் இருவ ரிடமும் கொடுத்து, "கொற்றவைக்கான பலியைத் தாங்களே நிறைவேற்றுங்கள்!" எனக் கட்டளையிட்டார்.

இருவரும் கையில் வாளுடன் தயா ராக நின்றுகொண்டிருந்த எருமைக்க டாக்களை அணுகி வாளினை ஓங்கி னார்கள். அப்போது செங்கோடர், "கொற் றவைத் தாயே இந்த பலியை ஏற்றுக் கொண்டு எங்களுக்கு வேண்டிய மன உறுதியையும், வலிமையையும் வழங்கு வாயாக. எமது வீரர்கள் போர்க்களத் தில் சாய்க்கும் பகைவர்களான கலிங் கர்கள் மற்றும் சுங்கர்களின் உடல்க ளைக் கொண்டு நீயும், உனது பெரும் பேய்ப்படையும் பசியைத் தீர்த்துக்கொள் ளட்டும்! போர்க்களத்தில் வழிந்து ஓடும் குருதியானது உனது கருத்த பூதங்களின் அடங்கா தாகத்தை அடக்கட்டும்!" எனத் தனது முரட்டுக் கரகரத்த குரலால் கொற்

றவையை வணங்கியவர் உச்சி வானை நோக்கினார்.

பரிதி சரியாக உச்சி வானில் நிலை கொண்டிருந்தது. "பலி நிறைவேற்றப்ப டட்டும்!" எனக் கட்டளையிட்டார்.

அடுத்த கணம் மூத்தகுடி வீரர்கள் இருவரும் ஓங்கிய வாளினை அதிவே கமாக எருமைக் கடாவின் கழுத்தினை நோக்கி ஒரே நேரத்தில் இறக்கினார்கள். வாள் கழுத்தில் இறங்கியதுதான் தாமதம் அடுத்த கணம் எருமைக் கெட வின் உடல் தனியாக தலை தனியாகப் பிரிந்து இரண்டும் கீழே கிடந்தன. எரு மையின் உடல் மட்டும் கால்களை ஆட் டிக்கொண்டு துடித்துக்கொண்டிருந்தன. எருமையின் கழுத்திலிருந்து பெருக்கெ டுத்த குருதியானது வீரர்களுக்கு போர் வெறியை உருவாக்க அவர்களின் முழக் கங்கள் பல மடங்கு அதிகரித்தன.

வீரர்கள் அனைவரும், "கரிகாலர் வாழ்க" "சென்னியின் புதல்வர் வாழ்க"

"கரிகால் பெருவளத்தான் வாழ்க" "வெற்றி வேந்தர் வாழ்க" "வெற்றிவேல் வீரர் வாழ்க" எனப் பலரும் பலவிதமாக வெற்றி முழக்கத்தினை முழங்கினார்கள். இரண்டு நூறாயிரத்திற்கும் மேற்பட்ட வீரர்களின் வெற்றி முழக்கம் அந்த பகுதியையே அக்கணம் கலங்கடிக்கச் செய்தன.

இடையில் கட்டியிருந்த வாளினை உருவிய கரிகாலர் வாளினை வானை நோக்கி உயர்த்தினார். அவர் வாளினை உயர்த்திய அடுத்த கணம் வீரர்களின் கூச்சல் அடங்கியது. அனைவரும் அமைதியானார்கள். இரண்டு புறமும் அணிவகுத்து நின்றுகொண்டிருந்த படைகளின் நடுவே பெரும் கம்பீரத்துடன் நடந்து சென்ற கரிகாலர் தனது வீரர்களை நோக்கி, "வீரர்களே... போருக்குத் தயாரா?" என வினவினார்.

https://telegram.me/aedahamlibra

வீரர்கள் அனைவரும், “தயார்” என்று கூறி கையிலிருந்த ஆயுதங்களை மோதியபடியே ஆரவாரமிட்டனர்.

“பல வருடங்களுக்கு முன் மௌரியப் பேரரசன் அசோகப் பியதசி தென்னகம் நோக்கிப் படையெடுத்தான். நம் தமிழ் மன்னர்கள் ஒன்று சேர்ந்து அவர்களைத் தடுத்து நிறுத்தி விரட்டியடித்தார்கள். நாம் பலத்தை இழந்திருந்த காலத்தில் மகா மேகவாகன மன்னன் கலிங்காதிபதி காரவேலன் நம் முன்னோர்கள் இதே வடுக மண்ணில் மொழிபெயர் தேய மலையில் நிறுத்தி வைத்திருந்த மூவேந்தர் கூட்டணிப் படையை அவனது தந்திரத்தால் முறியடித்து நாம் காலம் காலமாகப் பயன்படுத்திக் கொண்டிருந்த பித்துண்டாவைக் கைப்பற்றி கழுதையைக் கொண்டு உழுது நம் வீரத்தையும், உணர்வையும் அன்று அவன் அவமானப்படுத்தினான். அதற்கு பழிக்குப் பழி வாங்க வேண்டிய காலம் பதினைந்து வருடங்கள் கழித்து இப்போதுதான் நமக்கு வாய்த்

https://telegram.me/aedahamlibra

திருக்கிறது! எத்தனைக் காலம்தான் நாமும் ஆரிய மன்னர்களைத் தடுத்துக் கொண்டு இருப்பது? இந்த முறை நாமே சென்று ஆரிய மன்னர்களான கலிங்கா திபதி காரவேலனையும் அவனது மகன் பீமவேலனையும் நேருக்கு நேர் சென்று தாக்கி அவர்களைத் தோற்கடிப்போம். அங்கிருந்து சுங்க மன்னன் புஷ்யமித்திர சுங்கனையும் வீழ்த்துவோம். அவனையும் கடந்து வடக்கே இமயம் வரை சென்று நம் வெற்றிக்கொடியான புலிக்கொடியை நாட்டுவோம்!" என முழங்கினார்.

வீரர்கள் அனைவரும் ஆரவார முழக்கமிடலானார்கள்.

"சுங்க தேசத்தைக் கடந்தால் நமது படை இமயத்தால் தடுக்கப்படும். நம்மைத் தடுக்க முனையும் வீரர்களை அழித்துவிடலாம்! ஆனால், இமயத்தை என்ன செய்வது?"

சிறிது நேரம் இருநூறாயிரம் படை வீரர்கள் அனைவரும் அமைதியாக நின்

றுகொண்டிருந்தார்கள். அப்போது செங்குவீரன், “நம்மை இமயம் தடுத்தால் அதைத் தரைமட்டமாக்குவோம் அல்லது கொற்றவையின் கையில் இருக்கும் செண்டாயுதத்தால் இமயத்தின் முதுகில் நம் புலிக் கொடியை நட்டுவைத்துத் திரும்புவோம்!” என முழக்கமிட்டான்.

வீரர்கள் அனைவரும் போர் வெறியில் ஆரவாரமிடலானார்கள்.

வீரர்களின் ஆரவார முழக்கம் அடங்கும் வரை அமைதியாக நின்றுகொண்டிருந்தார் கரிகாலர். பிறகு, அங்கே நின்றுகொண்டிருந்த உபதலைவர்கள் திருக்கண்ணனையும், வில்லவனையும் அழைத்தார். “நீங்கள் இருவரும் நமது புரவிப்படையில் ஆளுக்கு பத்தாயிரம் புரவி வீரர்களையும், ஆயிரம் தேர்களையும், கோட்டைகளின் மதில்களைத் தகர்க்கும் இடங்கணி, வலங்கணி, கவண், கல்லிடுகூடை ஆகியபொறிகளை வேண்டிய மட்டும் கொண்டு செல்

லுங்கள். உங்களுக்குப் பின்னால் சோழப் படை வரும்போது சாரதா நதி வரை எந்த எதிர்ப்பும் இருக்கக் கூடாது. அனைத்துக் கோட்டைகளும் நம் கையில் வீழ்ந்திருக்க வேண்டும். எதிர்த்தவர்கள் அனைவரும் அழிக்கப்பட்டிருக்க வேண்டும்" எனக் கட்டளையிட்டார்.

அவரது கட்டளை எழுந்த அடுத்த கணம் வில்லவனும், திருக்கண்ணனும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட படைகளுடன் புறப்பட்டுச் சென்றார்கள். அடுத்து தனக்கு இரண்டு புறத்திலும் அணிவகுத்து நின்றுகொண்டிருந்த படைகளை நோக்கியவர், "படை கலிங்கத்தை நோக்கிப் புறப்படட்டும்!" எனக் கட்டளையிட்டார்.

அவரது கட்டளை எழுந்த அடுத்த கணம் ஆர்த்தெழுந்த படை அணிவகுத்துப் புறப்பட வேண்டியதற்கு கட்டளையாக சங்குகள் ஒலித்தன. முரசுகள் முழங்

கின. போர்ப்பறை கொட்டின. கொம்புகள் ஊதப்பட்டன.

கடலில் விழும் இடியைப் போன்று தரையில் அடியை எடுத்துவைத்து மேகம் பொழியும் நீர்த்துளியின் ஒழுங்கினைப் போன்றும், ஒலிக்கும் கடல் அலைகளின் வரிசை போலவும் அணிவகுத்துச் சென்றன சோழப் புரவிப் படை. விரைந்து ஓடுவதால் நிலத்தில் எழுப்பும் புழுதியை அடக்க மேகத்தையே காலில் போட்டு மிதிப்பதைப் போன்று விரைந்து ஓடும் புரவிப்படை கரிகாலரின் கட்டளையைக் கேட்டதும் போர்முனையில் வெஞ்சினம் உரைத்து போரிட வந்த பகைவர்களின் தலைகளைக் கால்களால் தட்டி வீழ்த்த முதன் முதலில் புறப்பட்டுச் சென்றன.

நெருப்பை உண்டாக்கிப் பொழியும் மேகங்கள் உண்டா என்று எவரேனும் வினவினால் “உண்டு” என்று கூறும்படி கரிய பெரிய முகில் போன்ற கண்களால் கோப நெருப்பை உமிழும் குஞ்சர

மல்லர்கள் யானை மீது அமர்ந்திருக்க, போரில் தம்மை எதிர்க்கும் யானைகளின் உடம்புகளோடு குதிரைகளின் உடம்புக ளையும் பிளப்பதற்கென்றே பிறைச் சந் திரங்களைப் போன்று கூர்மையான தந் தங்களில் கூர்மையான வாள் செரு கப்பட்டு நீட்டிக்கொண்டிருந்தன. உல கையே நடுங்கவைக்கும்படியான ஊழித் தீயைக் காட்டிலும் கொடுமையான யானைப் படை எதிரிகளை நோக்கி இரண்டாவதாகப் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தன.

தாமரை மலரின் மொட்டுப் போன்ற உச்சியையும், விரிந்த தாமரை மலர் போன்ற வலிமையான தேர்த்தட்டையும் அமையுமாறு பல்வேறு வேலைப்பாடுக ளுடன் செய்யப்பட கரிகாலரின் தேர்ப் படை பகைவரை நோக்கி யானைப் படையைத் தொடர்ந்து நகர்ந்து கொண் டிருந்தன. பெரிய நிலப்பரப்பை உடைய இவ்வுலகின் நிலங்கள் எப்படி மேட்டு நிலங்களாக இருந்தாலும் அதைப்

பொருட்படுத்தாமல் காற்றை விடவும் விரைந்து செல்லும் தன்மை உடைய தேர்கள் நுகத்தடியில் பூட்டப்பெற்ற புர விகள் முந்திச் சென்றால், அது தனக்கு அவமானம் என்று புரவிகளை முந் திச் செல்லும் நினைப்புடன் பகைவர்க ளின் போர்த் தொழிலையே மறக்கடிக்கச் செய்ய விரைந்துகொண்டிருந்தன.

நிலையில்லாத இந்த உடல் ஒரு சுமை என்றும் அதை வெறுமனே சுமந் துகொண்டு இன்பத்தில் மட்டும் திளைப் பது அவமானம் என்றும் வீரப் போரிட் டுப் புகழ் மரணம் அடைதலையே பிற விப்பயன் என்றும் நினைத்து ஒருவரை ஒருவர் மிஞ்சும் வகையில் நெருக்க மாக விரைந்துகொண்டிருந்தனர் சோழப் படையின் காலாட்படை வீரர்கள். போரை நோக்கி முன்வைத்த காலை பின்வைத் தால் விண்ணுலகும், மண்ணுலகும் வச மாகும் என்றாலும் போரில் புறமுதுகிட்டு ஓடுவதைத் தவிர்ப்பவர்கள். இதுவரை போரில் வெற்றிபெற்று அரசரால் அளிக்

கப்பட அடையாளச் சின்னங்கள், மார்பில் பதிந்த விழுப்புண்களோடு இடையில் வாட்களையும், கையில் வேல்களையும் தாங்கிக்கொண்டு காலாட்படையின் ஒரு பிரிவு முன்னே சென்றாலும் அவர்க ளைத் தொடர்ந்து இடையில் வாளை யும், தோளில் அம்பாராத் துணி முழுவதும் அம்புகளை நிரப்பிக்கொண்டு கையில் நீண்ட வில் ஒன்றைத் தாங்கிக்கொண்டு அணிவகுப்பு கலையாமல் தேர்ப்படை யைக் கடந்து சென்றுகொண்டிருந்தனர் வில்வீரர்கள்.

எதிரியின் படை எப்படிப்பட்டதாக இருந்தாலும், போரின் சூழல் எப்படி இருந்தாலும் அதைத் தங்களது தோள் வலிமையினாலும், மதி வலிமையினாலும் மாற்றிவிடும் வல்லமை வாய்ந்த படைத்த லைவர்களான செங்குவீரனும், செண்டா யுதனும் தங்களது புரவியின் மீது அமர்ந் துகொண்டு நான்கு வித படைகளையும் வழிநடத்திக்கொண்டு சென்று கொண்டி ருந்தார்கள்.

https://telegram.me/aedahamlibra

படைத்தலைவர்களுக்கும், வீரர்களுக்கும் பின்னால் நின்றுகொண்டு கட்டளைகளை மட்டுமே விதிக்கும் சராசரி மன்னர்களைப் போன்று அல்லாமல் இருநூறாயிரத்திற்கும் மேற்பட்ட படையினர் அணிவகுத்து வர எதரியின் ஆயுதம் தன்னைக் கடந்துதான் தன் வீரர்களைத் தாக்க வேண்டும் எனும் கர்வத்துடன் மொத்த படைக்கும் முன்னால் பட்டத்து யானையின் மீது அமர்ந்து முதல் மனிதராக கலிங்கத்தை நோக்கி சென்றுகொண்டிருந்தார் சோழப் பேரரசர் கரிகாலர்.

https://telegram.me/aedahamlibra

# 40. மகாமேகவா கன வியூகம்

கலிங்கத்தை நோக்கி வந்து கொண்டிருக்கும் சோழப் படையை எதிர்ப்பதற்கு தனது ஒட்டுமொத்தப் படையையும் நாகவதி நதியின் தென்கரையில் குவித்திருந் தான் கலிங்கத்தின் பட்டத்து இளவர சன் பீமவேலன். காலாட்படை, புரவிப் படை, யானைப்படை, தேர்ப்படை ஆகி யவை அனைத்தும் தனித்தனியாக பிரிக் கப்பட்டு ஆங்காங்கே தங்கியிருந்தார் கள். தனது தந்தை காரவேலர், தங்கை வர்த்தினி, படைத்தலைவர்கள் ஆகிய வர்களுடன் திரண்டிருந்த ஒட்டுமொத்தப் படையையும் பார்வையிட்டுக்கொண்டி ருந்தான். அப்போது அவர்களை நோக்கி

புரவியில் வேகமாக வந்த வீரன் ஒருவன், "தங்கள் இருவரையும் சந்திக்க நமது ஒற்றர் தலைவர் வந்திருக்கிறார். சந்திக்கக் அனுமதி கோருகிறார்!" என பீமவேலன் மற்றும் காரவேலரிடம் பணிவுடன் தெரிவித்தான்.

"உடனே அழைத்து வா!" கட்டளையிட்டார் கலிங்கத்தின் மகாமேகவாகன மன்னரான காரவேலர்.

அவரது கட்டளை எழுந்த அடுத்த கணம் அதிவேகமாகப் புறப்பட்டுச் சென்ற புரவி வீரன் உடனே ஒற்றர் தலைவரை அழைத்து வந்தான். ஒற்றர் தலைவன் புரவியை விட்டு இறங்குமுன்னே, "என்ன செய்தி?" என வினவினான் பீமவேலன்.

புரவியிலிருந்து குதித்து அவர்கள் அனைவருக்கும் பணிந்து தனது வணக்கத்தைத் தெரிவித்தவன், "சோழப் படை வடுகர் நாட்டிலிருந்து புறப்பட்டுவிட்டார்கள்!" எனத் தெரிவித்தான்.

"படையைப் பிரித்து தனித்தனியாக வந்துகொண்டிருக்கிறார்களா? அல்லது ஒரே படையாக வந்துகொண்டிருக்கிறார் களா?"

"முதலில் அவர்களின் புரவிப்படை யில் ஒரு பிரிவினர் புறப்பட்டிருக்கிறார் கள். மற்ற அனைத்து படையும் ஒன் றன் பின் ஒன்றாக அணிவகுத்து வந்து கொண்டிருக்கிறார்கள்."

"படைக்குத் தலைமை தாங்குவது யார்?"

"சோழப் பேரரசர் கரிகாலர்!"

"அவர் தனது படை வீரர்களுடன் அவந்தியில் இருந்ததாகத்தானே கடந்த கிழமை எனக்கு செய்தி கிடைத்தது!" எனக் குறுக்கிட்டார் காரவேலர்.

"ஆமாம் தந்தையே... சோழப் பேர ரசர், அவரது இரண்டு படைத்தலைவர் கள் என அனைவரும் அவந்தியில் தான் இருந்திருக்கிறார்கள்."

https://telegram.me/aedahamlibra

"எப்போது அங்கிருந்து அவர்கள் மூவரும் வடுகர் நாட்டுக்குத் திரும்பினார்கள்?"

"தெரியவில்லை. அவர்களைப் பற்றிய செய்தி நமது ஒற்றர்களின் மூலம் பயணிப்பதை விடவும் அவர்கள் மூவரும் அதிவேகத்தில் செயல்படுகிறார்கள்!"

"அங்கே எதற்கு சென்றார்களாம்? தகவல் ஏதேனும் கிடைத்ததா?"

"எனக்குக் கிடைத்த செய்திப்படி மூவரும் சதகர்ணிக்கு உதவி வஜ்ரபாகு மற்றும் சுங்கமித்திரனின் திட்டத்தை முறியடிக்கச் சென்றிருக்கலாம்!" என அவன் கூறிக்கொண்டிருந்த போதே அங்கு வந்த இன்னொரு ஒற்றன், "சதகர்ணி தனது படையுடன் அவந்தியிலிருந்து கிழக்கு நோக்கிப் புறப்பட்டு விட்டானாம்! செய்தி பருந்து மூலம் இப்போது தான் கிடைத்தது?" எனத் தெரிவித்தான் மூச்சு வாங்கியபடியே!

"அப்படியெனில் சோழப் படை நம்மை தெற்கில் தாக்கும்போது சத கர்ணி தனது பெரும்படையுடன் நம்மை வடக்கில் தாக்க உத்தேசித்திருக்கி றானா? இதற்காகத்தான் சோழப் பேரர சன் நெடுந்தொலைவு பயணித்து அவந் திக்குச் சென்றானா?" என வினவினார் கலிங்காதிபதி காரவேலர்.

"இல்லை தந்தையே, அதற்கு வாய்ப்பு இல்லை!"

"எதற்கு பீமவேலா?"

"சதகர்ணி நம்மை வடக்கில் தாக்கு வதற்கு"

"எதனால் இப்படி அறுதியிட்டுக் கூறுகிறாய்?"

"சதகர்ணி தனது பெரும்படையை கலிங்கத்தை நோக்கி நகர்த்தினால் அடுத்த கணம் அவனது நாட்டினை விழுங்குவதற்கு மேற்கே தயாராக இருக் கும் சாகர்கள் முதலில் அவனைத் தாக்

குவார்கள். தக்சன கோசலத்தைவிட்டு சதகர்ணியின் படை கீழே இறங்கினால் அடுத்த கணம் தக்சன கோசலத்தின் படை அவந்திக்குள் நுழையும்! ஆதலால் சதகர்ணி அவ்வளவு எளிதில் தனது படையை கலிங்கத்தை நோக்கி நகர்த்த மாட்டன்!"

"அப்படியே அவன் நகர்த்திவிட் டால்....?"

"வடுகநாட்டில் புறப்பட்டிருக்கும் சோழப் படை இன்னும் ஒரு பட்சம் அல் லது அதற்கு அடுத்த கிழமையில் அவர் கள் சாரதா நதியை அடைந்துவிடுவார் கள்! ஆனால் சதகர்ணியின் சாதவாகனப் படை கலிங்க எல்லையையே அடைய இன்னும் பல கிழமைகள் பிடிக்கும். ஆத லால் சதகர்ணியின் படையினால் எந்த வொரு காலத்திலும் சோழப் படைக்கு கலிங்கத்தில் உதவ முடியாது!"

"அப்படியெனில் சதகர்ணி கிழக்கு நோக்கி தனது பெரும்படையுடன் புறப்

பட்டுவிட்டான் என வந்திருக்கும் செய்தி?"

"அதுவும் உண்மை தான்!"

அவர்களின் உரையாடலில் குறுக்கிடாமல் அதுவரை அமைதியாக நின்றுகொண்டிருந்த வர்த்தினி, "அண்ணா... எதற்காக அனைவரையும் குழப்புகிறீர்கள்?" என பீமவேலனிடம் வினவினாள்.

அப்போது பீமவேலன், "தந்தையே சதகர்ணியின் படை அவந்தியிலிருந்து புறப்பட்டிருப்பது சோழப் படைக்கு உதவுவதற்காகத்தான். ஆனால், கலிங்கப் போரில் நேரடியாக உதவுவதற்காக அல்ல!" எனத் தெரிவித்தான்.

"பின் மறைமுகமாக உதவுவதற்காகவா?" என வினவினான் நின்றுகொண்டிருந்த பீமவேலனின் படைத்தலைவர்களில் ஒருவன்.

"ஆமாம்!"

https://telegram.me/aedahamlibra

“தாங்கள் கூறுவது புரியவில்லை இளவரசே. சற்று விளக்கமாக கூற இயலுமா?” என வேண்டினான் படைத்தலைவன்.

மாவீரரான தனது படைத்தலைவனை நோக்கிய பீமவேலன், “படைத் தலைவரே... சோழப் படை வெகு தொலைவு கடந்து கலிங்கத்தை நோக்கி வந்துகொண்டிருக்கிறது! அவர்கள் கலிங்கத்தை தெற்கிலிருந்து தாக்கும்போது நமக்கு உதவுவதற்காக சுங்கனின் படை மகதத்திலிருந்து கீழிறங்கி விடக் கூடாது அல்லவா? அதைத் தடுப்பதற்காகவே சதகர்ணியின் படை தக்சனக் கோசலத்தில் தெற்குப் பகுதியில் நிலை பெற சென்றுகொண்டிருக்கிறது. அவர்கள் அதைக் கடந்து வடக்கிலும் செல்ல மாட்டார்கள் தெற்கு நோக்கியும் இறங்க மாட்டார்கள்! அவர்களைப் பற்றிய கவலை வேண்டாம்!” என விளக்கினான்.

https://telegram.me/aedahamlibra

“ஒருவேளை அவர்கள் சோழப் படையுடன் சேர்ந்து போரில் இறங்கிவிட் டால் என்ன செய்யப் போகிறோம்? மாற் றுத்திட்டம் என்ன வகுத்திருக்கிறீர்கள்?” என தனது தந்தையையும், தமையனை யும் நோக்கி வினவினாள் வர்த்தினி.

“அது ஒருநாளும் நடைபெறாது வர்த்தினி!”

“ஏன்?”

“சோழ அரசரும், படைத் தலைவ ரும் தங்களது வெற்றியை யாருடன் பங்கு போட்டுக்கொள்ள விரும்பமாட்டார்கள்! ஆதலால் சதகர்ணியின் படையைப் பற் றிய கவலையை விடுங்கள்!”

“இத்தனை வருடங்களாக சத கர்ணி எனக்கு முன் அடங்கிக் கிடந்தான். ஆனால், இப்போது நமக்கு ஆபத்து தெற் கிலிருந்து உருவான சோழனால் உரு வான பிறகு வாலாட்டத் துவங்கிவிட் டான். நமக்கும் சாதவாகன நாட்டுக்

கும் இடையில் தண்டகாரண்ய வனம் மட்டும் இல்லை என்றால் என்றோ அவனை எனது காலடியில் பணிய வைத் திருப்பேன்!" என வெகுண்டெழுந்தவர், "சோழப் போரை முடித்த கையோடு நாம் சதகர்ணியை அடக்கவேண்டும்!" என பீமவேலனிடம் தெரிவித்தார்.

பீமவேலன் கலிங்காதிபதி காரவே லரை நோக்கினான். "தந்தையே, சத கர்ணி சோழப்படைக்கு உதவுவதாக நினைத்து நகர்ந்தாலும் அவன் நமக்கு மறைமுகமாக உதவியே செய்திருக்கி றான்!" எனத் தெரிவித்தான்.

"என்ன பீமவேலா, குழப்புகிறாய்? சதகர்ணி நமக்கு உதவுகிறானா?"

"ஆம்!"

"எப்படி?"

"சதகர்ணி மட்டும் தெற்கு கோசலத்தின் தனது படையுடன் நிற்காவிட் டால் கிடைக்கும் வாய்ப்பைப் பயன்

படுத்தி சுங்கமித்திரன் கலிங்கத்தை நோக்கி நகரவும் வாய்ப்பிருக்கிறது. சோழப் படையை நாம் தோற்கடித்தா லும் நம் படை சேதமடைந்திருக்கும். தான் திரட்டி வைத்திருக்கும் இரண்டு நூறாயிரம் படை வீரர்களுடன் அவனும் கலிங்கத்திற்குள் நுழைந்தால் சோழனை முறியடித்த கையோடு நம்மால் அவனை வீழ்த்த முடியாது. சதகர்ணி தக்சன கோச லத்தில் நின்றுகொண்டிருக்கும் வரை நிச்சயம் அவன் தனது படையை நகர்த்த மாட்டான்!"

பீமவேலன் கூறியதைக் கேட்டதும் காரவேலர், வர்த்தினி படைத்தலைவர் கள் என அனைவரும் சிந்தனையுடன் நின்றுகொண்டிருந்தார்கள்.

அப்போது அவர்களுக்கு முன் நின்றுகொண்டிருந்த ஒற்றர் தலைவர், "அரசே, சோழப் படை புறப்பட்டுவிட் டது என்ற செய்து கலிங்க நாடெங் கும் பரவிவிட்டது. ஊர்க்காவல் தலை

வர்கள் அனைவரும் என்ன செய்வது என்று தெரியாமல் குழம்பிப் போய் இருக்கிறார்கள். சிங்கபுரத்திலிருந்தும் இது வரை அவர்களுக்கு எந்த செய்தியும் வரவில்லை என்று தெரிவிக்கிறார்கள்" என வருத்தத்துடன் தெரிவித்தான்.

பீமவேலனும் சிந்தித்தபடியே அமைதியாக நின்றுகொண்டிருந்தான். அப்போது ஒற்றர் தலைவன், "அவர்கள் அனைவரையும் புறப்பட்டு சிங்கபுரத்திற்கு வந்துவிடச் சொல்லி கட்டளை விதித்துவிடவா?" என வினவினான்.

அப்போது குறுக்கிட்ட காரவேலர், "கிராம மக்கள் அனைவரும் போருக்கு முன் தலைநகரில் குவிந்துவிட்டால் அதுவே நமது நகர்வுக்குப் பெரும் பாதகமாகிவிடும். அவர்களும் தலைநகரில் குவிந்துவிட்டால் கோட்டையில் சேமித்து வைத்திருக்கும் உணவு விரைவில் தீர்ந்துவிடும். போர் முற்றுகைப் போராக நீடிக்கும் பட்சத்தில் அவர்களே நமக்குப்

பெரும் இடையூறாக மாறிவிடுவார்கள். ஆதலால் இப்போதிருக்கும் நிலையில் யாரையும் சிங்கபுரத்தை நோக்கி நகர்த்த வேண்டாம்!” எனக் கட்டளையிட்டார்.

“நமது குடிகளுக்கு போதிய பாது காப்பளிப்பது நமது கடமை தந்தையே?” என காரவேலேனிடம் வினவினாள் வர்த்தினி.

அப்போது குறுக்கிட்ட பீமவேலன், “அதற்கு எந்த அவசியமும் இல்லை வர்த் தினி. நடை பெறப்போகும் போரைப் பற்றி சிந்தித்த நான் நமது குடிமக்களைப் பற்றி சிந்திக்காமல் இருப்பேனா?” என வின வினான்.

“என்ன செய்யப் போகிறோம்?”

“கலிங்கத்திற்கும், வடுக நாட்டிற் கும் இடைப்பட்ட மக்கள் எங்கும் நகரத் தேவையில்லை.”

“அவர்கள் அங்கேயே இருக்கட்டும் எனக் கூறுகிறீர்களா?”

https://telegram.me/aedahamlibrary

"ம்ம்ம்...." என பீமவேலன் தலையை ஆட்டியபோதே, "அண்ணா... என்ன இது பொறுப்பற்ற பேச்சு?" என அவனை கண்டிக்கவும் செய்தாள் வர்த்தினி.

அமைதி தரும் அவளது அழகிய வதனத்தை நோக்கிய பீமவேலன், "வர்த்தினி, வந்துகொண்டிருப்பது சோழப் படை. கட்டுப்பாடும், ஒழுங்கும் நிறைந்த படை. அவர்களை வழி நடத்துவது செங்குவீரர். அவரை வழி நடத்துவது சோழப் பேரரசர். நீ தான் சோழப் படைத்தலைவரின் பண்பினை கலிங்க வனத்தில் கண்டிருப்பாயே! இன்னொரு நாட்டின் மீது போர் தொடுக்கும் படை வீரர்களுக்கு தேவை செல்வம். புகாரில் இல்லாத செல்வமா நமது கலிங்க கிராமங்களில் கிடைத்துவிடப் போகிறது. இன்னொன்று உணவு. அதுவும் சாதவாகன நாட்டிலிருந்தும், வடுக நாட்டிலிருந்தும் வண்டி வண்டியாக சென்றுகொண்டிருக்கிறது. இந்த நிலையில் அவர்களால்

நமது கிராமங்களுக்கு எந்தவித தீங்கும் ஏற்படாது" என வர்த்தினியிடம் தெரிவித் தவன் ஒற்றனை நோக்கி, "நமது கலிங்க கிராமங்கள் அனைத்திற்கும் பறையறி வித்து தெரிவித்துவிடு. கலிங்காபுரி பட் டினத்தை நோக்கி வரும் சோழப் படை யைக் கண்டு எந்த அச்சமும் கொள்ளத் தேவையில்லை என்று!" எனக் கட்ட ளையிட்டவன் பிறகு அவனிடமே, "கலிங் கத்தை நோக்கி வரும் சோழப் படை யின் எண்ணிக்கை பற்றி தகவல் ஏதாவது கிடைத்ததா?" என வினவினான்.

"இருநூறாயிரத்திற்கும் குறைவில் லாத படை என்று கேள்விப்பட்டேன் இளவரசே!" எனத் தெரிவித்தான் ஒற்றர் தலைவன்.

அவன் கூறியதைக் கேட்டதும் பீம வேலனின் முகம் மாறியது. சற்றே சோர்ந்த முகத்துடன், "நீ கிளம்பலாம்" என்று ஆணையிட்டான்.

https://telegram.me/aedahamlibra

அப்போதும் அவன் அங்கிருந்து கிளம்பாமல், "இளவரசே..." என அழைத்தான்.

"என்ன?"

"கிராம மக்களைப் போன்றே நமது கடற்கரைப் பட்டினங்கள் மற்றும் கோட்டைகளுக்கும் இதுவரை தாங்கள் எந்தக் கட்டளைகளையும் அளிக்கவில்லை என்று நினைக்கிறேன்! அவர்கள் சோழப் படையை எதிர்த்துப் போர் புரிவதா அல்லது அமைதியாக அவர்களை சிங்கபுரம் நோக்கி முன்னேற விட்டுவிடுவதா என்ற குழப்பத்தில் இருக்கிறார்கள்?" எனத் தெரிவித்தான்.

"அனைவருக்கும் இரண்டு நாட்கள் முன்னரே கட்டளை அனுப்பிவிட்டேன்! நீ கிளம்பலாம்" எனக் கட்டளையிட்டான் பீமவேலன்.

"தங்களது உத்தரவு" எனக் கூறிய ஒற்றர் தலைவன் அப்போதே அங்கிருந்து

கிளம்பி அவர்களின் பார்வையிலிருந்து மறைந்தான்.

யோசனையில் நின்றுகொண்டிருத்த பீமவேலனிடம், "அண்ணா... அவர்களுக்கு என்ன கட்டளை விதித்திருக்கிறாய்?" என வினவினாள்.

அடுத்த கணமே, "அவர்கள் அனைவரையும் கோட்டையை இழக்கச் சொல்லிவிட்டு சிங்கபுரம் வரச்சொல்லி கட்டளையிட்டிருக்கிறேன்!" எனத் தெரிவித்தான்.

வர்த்தினி மட்டுமல்லாமல் காரவேலரும் பீமவேலனை மிரட்சியுடன் நோக்கினார்கள். "பீமவேலா... போர் பற்றி நான் உனக்குக் கூறி தெரிய வேண்டிய அவசியமில்லை. இருக்கும் கொட்டைகளை இழந்துவிட்டால் நாம் எளிதில் வீழ்த்தப் படுவோம் என்பதை நீ அறிந்துமா நம் கோட்டைகளை அவர்களிடம் விட்டுக் கொடுக்கச் சொல்லி கட்டளை விதித் தாய்?" என வருத்தத்துடன் வினவினார்.

வர்த்தினியும் தனது பங்கிற்கு, "இது கோழைத்தனமான முடிவு அண்ணா..." என வெகுண்டெழுந்தாள்.

அப்போது பீமவேலன், "நமது கடற்கரை கோட்டைகளிலும், அதைச் சார்ந்த பட்டினங்களிலும் எத்தனை வீரர்கள் இருக்கிறார்கள்?" என வினவினான்.

"கோட்டையை சார்ந்திருக்கும் ஒவ்வொரு பட்டினத்திலும் இருபதிலிருந்து முப்பதாயிரம் வீரர்கள் இருக்கலாம்!"

"வந்துகொண்டிருக்கும் சோழப் படையின் வீரர்கள் எத்தனை பேர் என்று ஒற்றர் தலைவர் தெரிவித்தார்?"

"இருநூறாயிரம் வீரர்கள் என்று!"

"உண்மையில் அவர்களின் எண்ணிக்கை அதை விடவும் அதிகமாக இருக்கும் என்று கருதுகிறேன் நான்!"

வர்த்தினியும், காரவேலரும் அமைதியாக நின்றுகொண்டிருந்தார்கள்.

"அவர்களை நமது கோட்டைக் காவல் வீரர்களால் தடுத்து நிறுத்த முடியுமா வர்த்தினி? அப்படியே அவர்களை நம் வீரர்கள் எதிர்த்து போரிட்டாலும் எத்தனை நாழிகைகள் அந்தக் கோட்டைகள் சோழப் படையின் தாக்குதலை எதிர்த்து நிற்கும்?"

"அவர்களைத் தடுத்து நிறுத்த வாய்ப்பே இல்லைதான்!"

"ஆதலால் தான் கிருஷ்ணை நதிக்கு வடக்கே நம் வசம் இருக்கும் கோட்டைகளில் பெயரளவிற்கு மட்டுமே படை வீரர்களை நிறுத்தி வைத்துவிட்டு அனைத்து வீரர்களையும் இங்கே வரச் சொல்லி கட்டளையிட்டுவிட்டேன்!"

"இதுவும் முன் யோசனை தான்! அவர்களை எதிர்த்து நமது வலிமையான கோட்டையை இழப்பதற்கு முன் நம் வீரர்

களை வெளியேற்றி இழப்பை சாமர்த்திய மாக தடுத்துவிட்டீர்கள்!" என அவளைப் பாராட்டினாள்.

"சோழர்கள் கோட்டையைக் கைப் பற்றினாலும் ஒரு நெல் மற்றும் ஒரு தங் கக் காசு கூட அவர்களின் கரங்களுக் குக் கிடைக்காது! அனைத்தையும் ஏற் கனவே நான் அங்கிருந்து வெளியேற்றி விட்டேன்!"

"முன் யோசனைதான் பீமவேலா..." என பீமவேலனை காரவேலரும் பாராட் டவே செய்தார்.

அப்போது வர்த்தினி, "நமது படையை விட அவர்களின் எண் ணிக்கை குறைவாக இருக்கும். ஆத லால் போரில் இழப்பில்லாமல் சோழப் படையை நாம் வீழ்த்திவிடலாம் என் றல்லவா நான் நினைத்துக்கொண்டிருந் தேன்?" என வருத்தத்துடன் தெரிவித் தவள் பிறகு, "சரி சோழப் படையை எப்படி நாம் எதிர்கொள்ளப் போகிறோம்

அண்ணா? அவர்களை எப்படித் தாக்குவது? சிங்கபுரிக்குள் பதுங்கியா அல்லது அவர்களை நேருக்கு நேர் எதிர்க்கப் போகிறோமா? இறுதிப் போரினை தீர்மானிக்கப் போவது யார் நாமா? அல்லது சோழப்படையா?" என வினவினாள்.

"வர்த்தினி, கலிங்கம் நமது பூமி. இங்கு நாம்தான் போர் எங்கே, எப்படி நடைபெற வேண்டும் என்று தீர்மானிக்கப் போகிறோம். கரிகாலர் அல்ல!" எனத் தெரிவித்தான்.

"அண்ணா, வந்துகொண்டிருக்கும் பகைவன் வலிமையானவன் என்பதை தாங்களே அறிவீர்கள். அவர்களின் பலம் இருநூறாயிரத்திற்கும் மேலே! இந்த நிலையில் தங்களால் மட்டும் எப்படி இவ்வளவு அமைதியாக இருக்க முடிகிறது? தங்களது திட்டம் தான் என்ன? என்ன முடிவெடுத்திருக்கிறீர்கள்? சோழப் படையை எங்கே, எப்படி எதிர்கொள்ளப் போகிறோம்?" என சற்றே

உணர்ச்சிவசப்பட்டு வினவினாள் வர்த்தினி.

"வர்த்தினி அவர்களின் பெரும்படையைக் கண்டு நீ அஞ்சுகிறாயா?" என வினவினான் பீமவேலன்.

"சோழர்கள் வெண்ணிப் போரை முடித்த முறையை பலர் கூறக் கேட்டிருக்கிறேன். அதிலும் அவர்களை வழிநடத்தும் சோழப் படை வீரரின் வீரத்தை நாம் அனைவருமே சிங்கபுரத்தில் கண்டோமே?" என வருத்தத்துடன் தெரிவித்தாள்.

"போரில் படைபலம் தான் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டும் என்றால் குருசேத்திரப் போரில் துரியனின் கௌரவப் படை வென்று பாண்டவர் படை தோற்றிருக்க வேண்டும். அதே போன்று நமது கலிங்கத்தை சுடுகாடாக்கிவிட்டு தெற்கு நோக்கிப் புறப்பட்ட மௌரியப் படையை எதிர்த்த சோழர் படை எண்ணிக்கையில் குறைவு தான். படை வலி

மையின்படி பார்த்தால் தெற்கே நடந்த செருப்பாழிப் போரில் சோழப் படை தோற்று மௌரியர் படை அல்லவா வெற்றி பெற்றிருக்கவேண்டும்? இரண்டு இடத்திலும் என்ன நடந்தது? படை பலத்தில் இரண்டு மடங்கு பெரியதான கௌரவர் படையும், அசோகனின் மௌரியப் படையும் தோற்கவில்லையா?" என வர்த்தினியின் விழிகளை நோக்கியபடியே வினவினான் பீமவேலன்.

"எண்ணிக்கையில் மிகுந்த கௌரவப் படையை எதிர்த்து பாண்டவர் படையை வழிநடத்த கண்ணனும், சோழப் படையை வழிநடத்த சோழ மன்னர் இளஞ்சேட்சென்னியும் இருந்தனர். அவர்களிடம் பெரும் திட்டமும் இருந்தது. அவர்களின் போர் வியூகமும் நன்கு கைகொடுத்தது."

"இப்போது நீ படை பலத்தை விடவும் போர் வியூகம் தான் வெற்றியைத் தேடித் தரும் என்பதை நீ ஒத்துக்கொள்

கிறாய் தானே மகளே?" எனக் குறுக்கிட்டு வர்த்தினியிடம் வினவினார் காரவேலர்.

"அப்படி என்ன திட்டத்தை நீ வகுத் திருக்கிறாய்?"

"சோழர் படையின் எண்ணிக்கை எப்படியும் நம்மை விட ஐம்பது ஆயிரத் திலிருந்து நூறாயிரம் வரை குறைவாக இருப்பார்கள். ஆதலால் அதிக இழப் பில்லாமல் சோழப் படையை வீழ்த்திவிட வேண்டும் என நினைத்தேன். ஆனால், இப்போது சோழப் படையின் படை பல மும் கலிங்கப் படையின் படை பலமும் சரி சமமாக இருக்கிறது. இரண்டு பெரும் படைகளும் நேருக்கு நேர் மோதப்போ கின்றன!"

"இழப்பு சற்றே அதிகமாகத்தான் இருக்கும்!" எனத் தெரிவித்தார் காரவே லர்.

"இது கலிங்கம் என்பதை தாங் கள் மறந்துவிட வேண்டாம் தந்தையே...

இதன் நிலப்பரப்பு முழுவதையும் அறிந்த வர்கள் நாம். ஆதலால் எங்கே நகர்ந்து எப்படி தாக்கப் போகிறோம் என்பதுதான் நமது வெற்றியையும், இழப்பையும் தீர் மானிக்கப் போகிறது. இதுவரை சோழப் படை புறமுதுகு காட்டியதில்லை என்கி றார்கள். இந்தக் கலிங்கப் போரில் அவர் களைப் புறமுதுகிட வைக்கப் போகிறேன் அல்லது அவர்களின் ஒட்டுமொத்தப் படையையும் கலிங்கத்திலேயே அழிக்கப் போகிறேன்!" எனக் கூறியவன் வர்த்தினி, காரவேலர் மற்றும் படைத் தலைவர் களை நாகவதி நதியின் ஆற்றுப்படுகை யில் கிடந்த மணல் பரப்பிற்கு அழைத்துச் சென்றான்.

ஆற்று நீர் ஓடி வடிந்துபோய் சம தளமாகக் கிடந்த நதியின் மணற்பரப் பில் இடையில் வைத்திருந்த குறுவா ளினை எடுத்து வரிசையாகக் கோடு களைப்போட்டான் பீமவேலன். வரிசை யாக வரையப்பட்டிருந்த கோடுகளில் முதலில் வரைந்த கோட்டினை சுட்டிக்

காட்டிய பீமவேலன், "சோழப் படை இப் போது இந்தக் கிருஷ்ணை நதிக்கரை யிலிருந்து புறப்பட்டிருக்கிறது. அவர்கள் வரிசையாக எலேறு நதி மற்றும் கோதா வரி நதியைக் கடந்து வருவார்கள். அதே நேரம் கிருஷ்ணை நதிக்கும் கோதா வரி நதிக்கும் இடையில் எதிர்படும் அனைத்து கோட்டைகளிலும் வீரர்கள் பெயரளவிற்கே சோழப் படையை எதிர்த் துத் தாக்குவார்கள். நமது கோட்டை விழ விழ சோழப் படையினரின் உற்சா கமும், வேகமும் அதிகரிக்கும். வெற்றிக் களிப்பில் வந்துகொண்டிருக்கும் அதே களிப்பில் சோழப் படை சாரதா நதி யைக் கடப்பார்கள். நாம் சாரதா நதியைக் கடந்து நாகவதி நதியின் கரையின் தெற் குக் கரையில் நிலை கொண்டிருக்கி றோம்" என அவன் கூறிக்கொண்டிருந்த போதே இடைமறித்த வர்த்தினி, "அவர் கள் நதியைக் கடந்துகொண்டிருக்கும் போது நமது படை அதிவேகமாகச்

சென்று அவர்களைத் தாக்கி அழிக்கும்!" என உற்சாகத்தில் தெரிவித்தாள்.

"நீ கூறுவது முற்றிலும் தவறு வர்த்தினி. வந்துகொண்டிருப்பது சோழப் படை. அதை வழிநடத்துவது போர்த் தந்திரங்கள் அறிந்த செங்குவீரர். செங்குவீரரும் நாம் அவர்களை சாரதா நதியைக் கடக்கும்போது தாக்குவோம் என்று நிச்சயம் எதிர்பார்ப்பார். அவர்கள் நதியை பெரும் எச்சரிக்கையுடன் கடப்பார்கள். அந்தச் சூழலில் நாம் தாக்கினால் நமக்கு இழப்பு நிச்சயம் ஏற்படும். அதைத் தடுக்க முடியாது. ஆதலால் அவர்கள் நதியைக் கடக்கும்போது நாம் அவர்களைத் தாக்கப்போவதில்லை."

"பிறகு எப்போது அவர்களை நாம் தாக்கப் போகிறோம்? நாகவதி நதியை நெருங்கும்போதா?"

"இல்லை. மொத்த சோழப் படையும் சாரதா நதியைக் கடந்த பிறகு ஒரு காத தூரம் அவர்கள் முன்னேறட்டும். பிறகே

https://telegram.me/aedahamlibra

அவர்களை நாம் நேருக்கு நேர் தாக்கப் போகிறோம்!"

"இது தற்கொலைக்குச் சமம் அண்ணா... நம்மிடமும் இருநூறாயிரத் திற்கும் மேற்பட்ட படைகள். எதிரியி டமும் இருநூறாயிரத்திற்கும் மேற்பட்ட படைகள். இந்த நிலையில் அவர் களை நேருக்கு நேர் தாக்குவது என் பது முட்டாள் தனம், நமது தந்தை கூட கிருஷ்ணை நதிக்கரையில் சாதவாகன தேசத்தைத் தாக்கும்போது எதிர்பாராத அதிரடித் தாக்குதல்தான் தொடுத்தார். அவரது கட்டளைப்படி நீயும் சுங்கர்களை வீழ்த்த மகதத்திற்குள் மகதத்திற்குள் நுழையும் போது அப்படித்தான் அதிரடி யாக நுழைந்தாய். காலம் காலமாக நமக்கு அதிரடித் தாக்குதலே கைகொடுத்திருக் கிறது. இந்த நிலையில் நீ சோழப் படையை நேருக்கே நேர் தாக்கப் போகி றேன் என்று கூறுவது வேண்டும் என்றே நம் தலையை நீட்டுவதைப் போன்று உள்ளது!"

"இதோ பார் வர்த்தினி!" எனக் கூறியவன் கையிலிருந்த குறுவாளினால் மணல் தரையில் இரண்டு கோட்டினை இழுத்து, "இதில் ஒன்று சாரதா நதி, இன்னொன்று நாகவதி. இப்போது இந்த இரண்டு நதிகளிலுமே நதி பெருக் கெடுத்துப் பாய்கிறது. எச்சரிக்கையுடன் இருந்தால் மட்டுமே நதியைக் கடக்கமு டியும். அதுவும் சில இடங்களில் மட்டுமே முடியும்" எனக் கூறியவன் வரைந்திருந்த இரண்டு நதிகளுக்கும் இரண்டு புறத்தி லும் மேலும் சில கோடுகளை இழுத் தவன், "சாரதா நதியும், நாகவதி நதி யும் கிழக்கு நோக்கிப் பாய்ந்துகொண்டு இருக்கிறது. இரண்டுமே கலிங்கக் கட லில் சங்கமமாகிறது. மேற்கே அடர்ந்த குன்றுகள் சூழ கலிங்க வனம் இருக்கிறது. ஆதலால் நாம் நமது பெரும்படையுடன் அவர்களை நேருக்கு நேர் தாக்கினால் அவர்களால் உடனடியாக பின்வாங்க வும் முடியாது. சோழப் படைக்கு வலப்பு றம் கரடு முரடான பாறைகளுடன் கலிங்

https://telegram.me/aedahamlibra

கக் கடல் இருக்கிறது" எனக் கூறியவன் அமைதியானான்.

"நமக்கு சாதகமான இடத்தைத் தான் தேர்தெடுத்திருக்கிறாய் பீமவேலா... மேலே கூறு!" என உற்சாகமூட்டினார் காரவேலர்.

"சாரதா நதியை கடக்கும்போது நாம் நிச்சயம் அவர்களைத் தாக்குவோம் என்று அவர்கள் எதிர்பார்ப்பார்கள். ஆத லால் அவர்கள் எப்படியும் பெரும் படையை நள்ளிரவில் தான் சாரதா நதி யைக் கடப்பார்கள். இரவு முழுவதும் நதி யைக் கடந்ததால் அவர்கள் அணிவகுப் பின்றி சாரதா நதியின் வடகரையில் நின் றுகொண்டிருக்கும் படையை நான் அதி வேகத்தில் அதிகாலையில் தாக்குகி றேன். அவர்களால் உடனே எதிர்தாக்கு தல் தொடுக்க முடியாது. அப்படியே அவர் கள் எதிர்தாக்குதல் தொடுக்க முனைந் தாலும், அதனால் பயன் இருக்காது.

https://telegram.me/aedahamlibra

காலையில் துவங்கும் போர் மாலைக்குள் முடிக்கப்பட்டிருக்கும்!"

"அண்ணா... வந்துகொண்டிருப்பது சோழப் படை என்பதை உனக்கு மீண்டும் நினைவு படுத்துகிறேன் நான். நதியைக் கடந்தபிறகு அவர்கள் தங்களது படையை அணிவகுக்க கண நேரம் போதாதா? படையை அணிவகுக்க சாமப் பொழுது ஆகுமா என்ன?"

"படையை உடனே அணிவகுத்து விடலாம் வர்த்தினி... ஆனால், நான் வகுத்துச் செல்லும் அணிவகுப்பை அவர்கள் புரிந்துகொண்டு எதிர் அணிவகுப்பை அவர்கள் நிகழ்த்துவதற்கும் நம் படை அவர்களை விழுங்கிவிடும்!"

"என்ன நமது படை அவர்களை விழுங்கி விடுமா?"

"ஆம்!"

"என்ன அண்ணா உளறுகிறாய்?"

"உளறவில்லை வர்த்தினி. உண்மையைத் தான் கூறுகிறேன்!"

"அவர்களை எப்படி நீ தாக்கப்போகிறாய்?"

"நம் அரசின் பெயரை இனி உலகம் உள்ளவரை மறக்க முடியாத அணிவகுப்புத் தாக்குதலாக இது இருக்கப்போகிறது!"

வர்த்தினியும், காரவேலரும் பீமவேலனை மிரட்சியுடன் நோக்கினார்கள். "நம் அரசின் பெயருக்கும் அணிவகுப்பிற்கும் என்ன பீமவேலா தொடர்பு இருக்கிறது?" என வினவினார் காரவேலர்.

"நம் அரசின் பெயர் என்ன?"

"கலிங்கம்!"

"கலிங்கம் நமது தேசத்தின் பெயர் தந்தையே. நான் வினவுவது நமது குளத்தைப் பற்றி?"

"மகாமேகவாகன அரச வம்சம் நம் முடையது!"

"மகாமேகவாகனர் என்றால்?"

"ஒப்பற்ற உயர்ந்த மேகத்தை வாகனமாகக் கொண்டவர்கள்" என்று பொருள்!"

"மேகத்தை வாகனமாகக் கொண் டது எது?"

"கருடன்!"

"கருட வியூகத்தைத் தான் அமைக் கப் போகிறேன் தந்தையே. நமது தாக்கு தல் வியூகம் என்ன என்று அறிவதற்குள் அவர்களின் மொத்தப் படையும் நிர்மூல மாகிவிடும்!"

"கருட வியூகமா?" என ஒரே நேரத் தில் வியப்புடன் வினவினார்கள் காரவே லரும், வர்த்தினியும்.

"ஆமாம் தந்தையே..."

"குருஷேத்திரப் போரில் பீஷ்மரால் அமைக்கப்பட்ட வியூகம் அல்லவா அது!"

"ஆம் தந்தையே... இரண்டாவது நாளில் அவர் அமைத்த வியூகம் தான் இது. இந்த வியூகத்தைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள் என்று நினைக் கிறேன். கருட வியூகத்தை எதிர்த்து தாக் குதல் தொடுக்க இதுவரை எனக்குத் தெரிந்த எந்த வியூகமும் வகுக்கப்பட வில்லை. குருஷேத்திரப் போரில் இரண் டாவது நாளில் யுதிஷ்டிரன் அமைத்த கிரஞ்ச வியூகத்தால் கூட பீஷ்மரின் கருட வியூகத்தை முறியடிக்க இயலவில்லை. கருட வியூகத்திற்குள் சிக்கிய எதிர்ப் படை எப்படி சிதறி அழியும் என்பதை கேள்விப்பட்டிருப்பீர்கள்!"

பீமவேலன் கருட வியூகம் அமைக் கப்போவதை பற்றி கூறியதுமே பிரமை பிடித்து அமர்ந்திருந்த இருவரும் தெளிய நீண்ட நேரம் ஆனது. அதுவரை அமைதி யாக அமர்ந்திருந்தான் பீமவேலன். அப்

போது வர்த்தினி, "கருட வியூகத்தில் இருக்கும் மிகப் பெரிய குறை அதை வேண்டியபோது நம்மால் நீட்டிக்கொள்ள முடியாது. நாம் சோழப் படையை கருட வியூகத்தில் தாக்கும்போது அவர்கள் தங் களது படையை இரண்டாகப் பிரித்து இரண்டு புறத்திலும் விலகி நமது தாக் குதலிலிருந்து தப்பித்துக்கொண்டால்?" என வினவினாள்.

அப்போது காரவேலர், "நமது தாக் குதலைக் கண்டு அவர்கள் மீண்டும் சாரதா நதியின் அக்கறைக்கு பின்வாங்கி விட்டால், என்ன செய்வது?" என வினவி னார்.

"சோழப் படைக்கு வலப்புறம் கலிங் கக் கடல். அதுவும் ஆழமில்லாத கரடு முரடான கடல். அதில் சில இடங்களி லேயே மரக்கலங்களை செலுத்திக் கரை அருகில் கொண்டு செல்ல முடியும். மற்ற இடங்களில் முயற்சித்தால் கலம் தரை தட்டிவிடும். சோழப் படைக்கு இடப்புறம்

https://telegram.me/aedahamlibra

குன்றுகளும், வனமும் அடர்ந்து காணப் படுகிறது. அங்கே நமது சிறு வில் படை ஒன்றை நிறுத்திவைக்கப்போகி றேன். அவர்களால் இரண்டு புறத்திலும் நகர முடியாது."

"அவர்கள் சாரதா நதியைக் கடந்து பின்வாங்கிவிட்டால் என்ன செய்வது என வினவினேன் நான்?"

"ஒருமுறை அவர்கள் சாரதா நதி யைக் கடந்தால் பிறகு அவர்களால் மீண் டும் அக்கறைக்கு செல்ல முடியாது!" திட மாகத் தெரிவித்தான் பீமவேலன்.

இருவரும் அவனையே மீண்டும் நோக்கினார்கள்.

அப்போது பீமவேலன், "சோழப் படைக்கு மிகப்பெரிய பலவீனம் ஒன்று இருக்கிறது. அது என்ன என்று அறிவீர் களா?" என வினவினான்.

"அவர்கள் போரிடப்போவது கலிங் கம். அது மட்டுமல்லாமல் போரினைத் தீர்மானிக்கப் போவதும் நாமே!"

"படையெடுத்துச் செல்பவர்கள் அனைவருமே எதிர்கொள்ளும் சவால் இது. அவர்களின் பலவீனம் நமது மிகப் பெரும் பலம்!"

"என்ன அது?"

"மரக்கலங்கள்!"

"மரக் கலங்களா?"

"ஆம் தந்தையே! சோழப் பேரர சின் படை மிகப் பெரியதுதான். ஆற்ற லும் நிறைந்தது தான். ஆனால், அவர் களிடம் இப்போது ஒரு மரக்கலங் கள் கூட இல்லை. முற்றிலும் தரைப் படையை மட்டுமே நம்பி வருகிறார்கள். எனது கருட வியூகம் சோழப் படையை பிளந்துகொண்டு ஊடுருவும். கருடனின் தலையும், உடலும் சோழப் படைக்குள் ஊடுருவிய பிறகு நிலை கொண்டுவிடும்.

ஆனால், இரண்டு வேகமாக இயக்கப்படும் இரண்டு இறக்கைகளையும் சோழ வீரர்கள் எதிர்கொள்ள முடியாமல் திணறுவார்கள். அவர்களின் படை மூன்றாகப் பிரியும் அல்லது சாரதா நதி வழி பின்வாங்கும். அப்படி அவர்கள் பின்வாங்கும் போது கலிங்கக் கடலின் வழியாக நமது மரக்கலங்கள் சாரதா நதிக்குள் பிரவேசித்து சோழ வீரர்களை பின்புறமாகச் சூழும். அம்புகளையும், எரி அம்புகளையும் தொடர்ந்து எறிவார்கள். முன்னால் கருடனும், பின்னால் கலங்களும் சோழப் படையை சூறையாடும் அவர்களின் படை வலப்புறமாகவோ அல்லது இடப்புறமாகவோ விலகினால் கடலில் நிறுத்தப்பட்டிருக்கும் மரக்கலங்களிலிருந்தும் வனத்தில் தயாராக மறைந்திருக்கும் நமது வீரர்களும் தொடர்ந்து அம்பு மழை பொழிவார்கள். சோழ வீரர்கள் நான்கு புறத்திலும் சூழப்படுவார்கள். அனைவரும் அழிக்கப்படுவார்கள். அல்லது மொத்தமாக சிறைபிடிக்கப்படுவார்கள்!"

தனது போர்த்திட்டத்தை விளக்கிய தனது மகனை பெருமையுடன் அணைத்துக்கொண்டார் காரவேலர்.

பீமவேலன் தெரிவித்த திட்டத்தை கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த வர்த்தினி "கலிங்கக் கடலில் மரக்கலங்களை நேர்த்தியாக செலுத்தத் தெரிந்தவர்களான தாங்கள் இருவரும் போரில் நேரடியாக ஈடுபடப் போகிறீர்கள். மற்ற படைத்தலைவர்களும் உங்களுக்கு உதவியாக படையை அணி வகுத்து நிறுத்தி கட்டுப்படுத்த உங்களோடு இருக்க வேண்டியது அவசியம். உங்களது திட்டத்தின் முதுகெலும்பே நம் கடற்படையின் தாக்குதல்தான். அப்படியிருக்க நம்மிடம் இருக்கும் மரக்கலங்களுக்கு தலைமையேற்று செலுத்தப்போவது யார்?" என்று வினவினாள் வர்த்தினி.

தனக்கு முன் நின்றுகொண்டிருந்த வர்த்தினியைப் பார்த்த பீமவேலன், "எனக்குத் தெரிந்த வரை கலிங்கக்

https://telegram.me/aedahamlibra

கடலில் மரக்கலங்களை பாறைகளை விளக்கி நேர்த்தியாக செலுத்தும் திறன் உன்னை விடவும் திறமை மிக்கவர்கள் யாரும் இல்லை வர்த்தினி. நம் மரக்கலங் களை நீதான் செலுத்தப் போகிறார். தயா ராக இரு!" எனக் கட்டளையிட்டான் பீம வேலன்.

வர்த்தினி அதிர்ச்சியிலிருந்தே மீளவே சற்று நேரம் ஆனது. அமை தியாகவே அமர்ந்திருந்தாள். அவளிடம், "நான் தாக்கிய இரண்டாவது நாள் அதி காலைப் பொழுது நீ அவர்களை பின்புற மாகத் தாக்கு! அதற்குள் நீ அவசரப்பட்டு விடாதே!" எனவும் தெரிவித்தான்.

"முதல் நாளில் நான் எதற்காக அவர்களை தாக்கக் கூடாது!"

"அவர்களின் படையினர் எண் ணிக்கை இருநூறாயிரம். ஆதலால் அவர்கள் நதியைக் கடந்தபிறகு நிற்கவே அரைக் காத தூரத்திற்கு மேல் இடம் வேண்டும். சாரதா நதியிலிருந்து அவர்

கள் ஒரு காத தொலைவில் இருக்கும்போதே நான் அவர்களைத் தாக்கப் போகிறேன். நீ முதல் நாளிலேயே சாரதா நதியை அடைந்துவிட்டால் உன்னிடமிருந்து அவர்கள் அதிக தொலைவில் இருப்பார்கள். உன்னால் அவர்களை தாக்க முடியாது. இரண்டாம் நாள் நீ நதியை அணுகி அவர்கள் எதிர்பாராத நேரத்தில் அதிரடித் தாக்குதல் ஒன்றை தொடு!”

“இந்தப் போர் ஒரே நாளில் முடிவடையாது என்று கருதுகிறாயா அண்ணா?”

“இல்லை. கருட வியூகத்தை அவர்களால் தாங்க முடியாது. எனது திட்டப்படி தாக்குதல் நடந்தால் நம் படை ஒரே நாளிலேயே அவர்களை விழுங்கி விடும். ஆனால், சோழப் படையின் வலிமையையும் நாம் குறைத்து மதிப்பிடக் கூடாது அல்லவா? போர் முதல் நாளில்

முடிந்துவிடும். அப்படி இரண்டாவது நாள் தொடர்ந்தால் நீ களத்தில் இறங்கிவிடு!"

"தங்களது உத்தரவு!"

"அனைத்து மரக்கலங்களிலும் வேண்டிய ஆயுதங்களையும், பொறிகளையும் பொருத்தச் சொல்லி கட்டளையிட்டிருக்கிறேன். நீ இப்போதே புறப்பட்டுச் சென்று அனைத்தையும் சோதனை செய்துவிடு. உனது படைத் தலைவர்களை சந்தித்து எவ்வளவு விரைவில் யுத்தத்திற்கு தயாராக முடியுமோ அவ்வளவு விரைவாக தயாராகிவிடு!" எனக் கட்டளையிட்டவன் அங்கிருந்து கிளம்பினான்.

வர்த்தினியும் எதிர்பாராத அதிர்ச்சியுடன் கலிங்கக் கடலில் நிறுத்தப்பட்டிருக்கும் மரக்கலங்களை நோக்கி நடக்கலானாள்.

https://telegram.me/aedahamlibra

# 41. இருவித போர்கள்

கிருஷ்ணை நதிக்கரையிலிருந்து புறப்பட்ட சோழப் படை எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் சாரதா நதியின் தென் கரையை அடைந்திருந்தார்கள். தொலைவில் தண்டகாரணய வனம் மற்றும் மலை முகட்டில் பெய்த பெருமழையால் சிறிய நதியான சாரதாவிலும் பெரும் வெள்ளம் பாய்ந்து கொண்டிருந்தது. மேகமும் கருத்து எப்போது வேண்டுமானாலும் மழையைப் பெய்வேன் என்று இரண்டு படைகளையும் மிரட்டிக்கொண்டிருந்தது. புறப்பட்ட ஒட்டுமொத்த படையும் சாரதா நதிக்கரையில் நிலை கொண்டு ஓய்வெடுத்துக்கொண்டிருக்க சாரதா நதியின் வட கரையில் நின்றபடியே வடக்கு நோக்கி பார்த்துக்கொண்டு நின்றனர் கரிகாலரும், செங்குவீரனும். அவர்களிடம் வந்த

திருக்கண்ணனும், வில்லவனும், "சாரதா நதியை இன்றிரவே கடந்துவிடலாம் என்று வேளக்காரப் படைத்தலைவர் கருதுகிறார். தங்களது பதிலைக் கேட்டு வரச் சொல்லி கட்டளையிட்டார்" என கரிகாலரிடம் பணிந்து வினவினர் இருவ ரும்.

"அதற்கான பணிகளை துவங்கச் சொல்!" கட்டளையிட்டார் கரிகாலர்.

வில்லவனும், திருக்கண்ணனும் கரிகாலரின் கட்டளையைப் பெற்றுக் கொண்டு திவ்யனை நோக்கி நடந் தனர். அப்போது செங்குவீரன், "படை எப்போது வேண்டுமானாலும் புறப்படுவ தற்கு ஆயத்தமாக இருக்கட்டும். எப் போது சாரதா நதியைக் கடக்க வேண்டும் என்பதை நான் தெரிவிக்கிறேன்" எனக் கட்டளையிட்டான்.

"தலைவரே, இன்னும் ஒரு ஓரைப் பொழுதில் இருள் சூழத் துவங்கிவி டும். கண்ணுக்கு எட்டிய தொலைவு வரை கலிங்கப்படை வழிகளுக்கு அகப் படவில்லை. அவர்கள் எதிர்பார்க்காத

https://telegram.me/aedahamlibra

நேரத்தில் நதியைக் கடப்பது தானே புத்திசாலித்தனம்!" என கரிகாலர் செங்குவீரனிடம் வினவிக்கொண்டிருந்தபோதே அங்கு திவ்யன் அவர்களை நோக்கிப் புரவியில் வந்துகொண்டிருந்தான். திவ்யனிடம் தகவல் கூறச் சென்ற திருக்கண்ணனும், வில்லவனும் திரும்பி வந்துகொண்டிருந்தார்கள்.

புரவியிலிருந்து இறங்கியவன், "செங்குவீரா... என்ன முடிவெடுத்திருக்கிறாய்?" என வினவினான்.

"எந்த முடிவையும் என்னால் எடுக்க முடியவில்லை. அவசரப்பட வேண்டாம் என்று மட்டும் இப்போது தோன்றுகிறது!"

"பெரும் நதியான கோதாவரி நதியையே நமது படை எளிதில் கடந்துவந்துவிட்டது. இப்போது இந்த சிறு நதியை இரவில் கடக்கும்போது என்ன பிரச்சனை வந்துவிடப் போகிறது?"

https://telegram.me/aedahamlibra

"கோதாவரி நதி கலிங்கத்திலிருந்து வெகு தொலைவு. ஆதலால் நம்மால் எந்த ஆபத்துகளையும் இல்லாமல் கடக்க முடிந்தது. ஆனால், நமக்கு முன் ஓடும் சாரதா நதியையும், அதற்கு அப்பால் பாயும் நாகவதி நதியையும் கடந்தால் கலிங்கத்தின் பெரும் பட்டினமான சிங்கபுரம் இருக்கிறது. நாகவதி நதியின் தெற்கில் கலிங்கப்படை நம்மை வரவேற்க நின்றுகொண்டிருக்கிறது. இப்பொது நமது படைக்கும் கலிங்கப்படைக்கும் இடையே இந்த சிறு நதிதான் பாய்ந்துகொண்டிருக்கிறது. இந்த நிலையில் நாம் சாரதா நதியைக் கடந்தால் நாம் கலிங்கப்படையை சந்திக்க நேரிடும். ஆதலால் தான் சிந்தனையாக இருக்கிறது."

"கோதாவரி நதி பெரும் நதிதான் ஆனால் அதுவும் கலிங்கத்தின் பகுதி தான் என்பதை மறக்கக்கூடாது. நம் வீரர்கள் தாக்குதல் நடத்தி கோட்டைகளை கைப்பற்றியிருக்கிறார்கள்!"

"நாம் இதுவரை எந்தக் கோட்டையையும் கைப்பற்றவில்லை நண்பா..."

"நம் படை கலிங்கத்தின் கோட்டைகளைக் கைப்பற்றவில்லையா?"

"ஆம்!"

"பிறகு?"

"அந்தக் கோட்டைகள் அனைத்தும் கைவிடப்பட்டிருக்கின்றன?"

"கைவிடப்பட்ட கோட்டைகளையா நாம் தாக்கி கைப்பற்றினோம்!"

"ஆம்!"

"அப்படி எனில் நமது வீரர்களை எதிர்த்தவர்கள் யார்?"

"அவர்கள் நம்மை எதிர்க்க, நமது கவனத்தை திசைதிருப்ப பெயரளவிற்கே நிறுத்தப்பட்ட படை."

"எதன் அடிப்படையில் அந்தக் கோட்டைகள் கைவிடப்பட்டவை என்று கூறுகிறாய்?"

இருவரின் விவாதங்களையும் கேட்டபடி நின்றுகொண்டிருந்த கரிகா லர், திருக்கண்ணன் மற்றும் வில்லவன் ஆகிய மூவரையும் ஒரு முறை நோக்கிய செங்குவீரன், "கலிங்கத்தின் வசமிருந்த வடுகநாட்டுக் கோட்டைகளைத் தாக்கி யவர்கள் இருவரும் தானே?" என எது வும் தெரியாதவனைப் போன்று திருக் கண்ணனிடமும், வில்லவனிடமும் வின வினான்.

"ஆமாம் தலைவரே... இருவரும் தான் தாக்கினோம்!" எனத் தெரிவித் தான் திருக்கண்ணன்.

"கோட்டைகளில் எதிர்ப்பு எப்படி இருந்தது?"

அப்போது குறுக்கிட்ட வில்லவன், "சேர நாட்டில் அகப்பா கோட்டையை

நான் கைப்பற்றியபோது இருந்த எதிர்ப்பு கூட கலிங்கக் கோட்டையைத் தாக்கிய போது இருக்கவில்லை!" எனத் தெரிவித் தான்.

அப்போது கரிகாலர், "தோராயமாக எத்தனை வீரர்கள் உங்களை எதிர்த்தி ருப்பார்கள்?" என வினவினார்.

"ஒவ்வொரு கோட்டையிலும் சில ஆயிரம் வீரர்கள் மட்டுமே எதிர்த்தார்கள். பெரும்பாலான கோட்டைகள் சோழப் படையைக் கண்டதுமே பணிந்துவிட் டன!" எனப் பெருமையுடன் தெரிவித்த னர் திருக்கண்ணனும், வில்லவனும்.

"எத்தனை கோட்டைகள் இப் பொது நம் வசம் இருக்கின்றன?"

"ஒன்பது கோட்டைகள்!"

"ஒன்பது கோட்டைகள் கைப்பற் றியிருக்கிறீர்கள்? அங்கே உங்களால் வழக்கமாக கோட்டைக்குள் பதுக்கி

https://telegram.me/aedahamlibra

வைக்கப்படும் உணவு மற்றும் செல்வங்களை கண்டறிய முடிந்ததா?"

திருக்கண்ணனும், வில்லவனும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள். அப்போது திருக்கண்ணன், "எதிர்த்து இறந்துபோன வீரர்களையும், எங்களைக் கண்டு அச்சத்தில் நடுங்கிக் கொண்டிருந்த மக்களையும் தவிர வேறு எதையும் எங்களால் கண்டறிய இயலவில்லை!" எனப் பதிலளித்தான்.

"நண்பா... இப்போது புரிகிறதா?" என திவ்யனை நோக்கி வினவினான் செங்குவீரன்.

"புரிகிறது செங்குவீரா..."

"கோட்டைகள் அனைத்திலும் சொற்ப வீரர்களை மட்டும் நிற்க வைத்துவிட்டு மற்ற அனைத்து வீரர்களையும் சிங்கபுரத்திற்கு அழைத்துக்கொண்டு விட்டான் பீமவேலன்!"

https://telegram.me/aedahamlibrary

“எதற்கு இந்த அபாயகரமான முடிவினை கலிங்க இளவரசர் பீமவேலர் எடுத்திருக்கிறார் படைத் தலைவரே?” என வினவினார் கரிகாலர்.

“மேலோட்டமாகப் பார்த்தால் அவர்கள் நம்மைக் கண்டு அஞ்சுவதைப் போன்று தெரியும். ஆனால், இதில் பெரிய தந்திரம் அடங்கியிருக்கிறது!”

“என்ன தந்திரம்?”

“எனக்குக் கிடைத்த தகவலின் படி இப்போதிருக்கும் நிலையில் சோழப் படையின் படை வலிமையும், கலிங்கப்படையின் படை வலிமையும் கிட்டத்தட்ட சரிக்கு சமம். ஆதலால் கோட்டைகளில் தங்கியிருக்கும் வீரர்களை அழைத்து படையுடன் இணைத்துக் கொண்டால் படை பலம் பெருகும். நாம் அவர்களிடம் கோட்டையைக் கைப்பற்றிவிட்ட பிறகு நமது வீரர்களை ஒவ்வொரு கோட்டைக்கும் காவலுக்கு நிறுத்துவோம். கணிச

https://telegram.me/aedahamlibra

மான படை வீரர்கள் நம் கையை விட்டுப் பிரிந்திருப்பார்கள்!"

"நதியைக் கடந்தால் போர் நிச்சயம் என்று யூகிக்கிறாயா செங்குவீரா?" என வினவினான் திவ்யன்.

செங்குவீரன் எந்தப் பதிலையும் அளிக்காமல் வடக்கு நோக்கியேப் பார்த்துக்கொண்டிருந்தான். அவனது மனதில் கடந்த முறை சிங்கபுரத்தை நோக்கிப் பயணித்தபோது கண்ட கலிங்கத்தின் காட்சிகள் அனைத்தும் நிழலாடிக் கொண்டிருந்தன. பெரும் சிந்தனையில் சிறிது நேரம் நின்றுகொண்டிருந்தவன் பிறகு, "திருக்கண்ணா... இப்போதிருக்கும் நிலையில் படையை எப்படி நகர்த்தலாம்?" என வினவினான்.

"நள்ளிரவில் படையை நகர்த்துவது மிகவும் அனுகூலமாக இருக்கும் எனக் கருதுகிறேன்!" எனத் தெரிவித்தான்.

எதிரில் நின்ற வில்லவனை நோக்கி, “இந்த நிலையில் கலிங்கத்தின் இளவரசராக தாங்கள் இருந்தால் என்ன வில்லவரே செய்திருப்பீர்கள்?” என வின வினான்.

“சாரதா நதி மற்ற நதிகளைப் போன்று இருக்கவில்லை. நிலத்தின் உட்பரப்பில் இந்த நதி எப்படி பாய் கிறது என்று தெரியவில்லை. ஆனால், இங்கே கடலுக்கருகில் மரக்கலங்கள் செல்லும் அளவிற்கு ஆழமாக இருக்கி றது. பெரும் மழையின் போது அடித்து வரப்பட்ட களிமண் இரு கரைகளிலும் சூழ்ந்து சேரும், சகதியுமாக காட்சி அளிக் கிறது. ஆதலால் இதைக் கடக்கும்போது சற்றே எச்சரிக்கையுடன் இருக்கவேண் டும். இல்லையெனில், யானை, தேர் மற் றும் புரவிகள் சேற்றில் சிக்கிக்கொள் ளும். சாரதா நதியிலிருந்து தொலைவில் பெரும் படையுடன் நிலை கொண்டிருந் தாலும் சாரதா நதியைக் கடந்த பிறகு அல்லது படை கடக்கும்போது நிச்சயம்

https://telegram.me/aedahamlibrary

எதிர்த்து வந்து அதிரடித் தாக்குதல் ஒன் றைத் தொடுத்து நிலைகுலையச் செய்து விடுவேன்!"

"சாரதா நதியைப் படை எப்போது கடக்கும் என்று நீ எதிர்பார்ப்பாய்?"

"தலைவரே, காலம் காலமாக படைகள் நள்ளிரவில் தானே ஆற்றி னைக் கடந்துகொண்டிருக்கின்றன. யவ னத்திலிருந்து பாரசீகத்தைக் கைப்பற்றி விட்டு இமயம் வழியாக நம் தேசத்திற்குள் நுழைந்த அலெக்சாண்டர் எனும் யவன அரசனும் தனது படையை இரவில் ஆற் றைக்கடந்து அல்லவா போரசு மன்ன னைத் தாக்கித் தோற்கடித்தான்."

"திருக்கண்ணா... நீ எப்போது படையை நகர்த்தலாம் எனத் தெரிவித் தாய்?"

"நள்ளிரவில்!"

"நள்ளிரவில் நாம் இந்த சேறு படிந்த ஆற்றினைக் கடக்கும்போது அவர்கள்

நம் மீது அதிரடித் தாக்குதலை மேற் கொண்டால் என்ன செய்வாய் நீ?”

“ஆற்றில் ஒரே இடத்தில் பெரும்ப டையைக் கடந்தால் தானே நமக்கு பிரச் சனை? நாம் நம் படையை பிரித்து சற்றே மேற்கு நோக்கி நகர்த்தி பிறகு சிறிது சிறி தாக ஆற்றினைக் கடந்தால் என்ன?”

“இதுவும் நல்ல யோசனை தானே செங்குவீரா?” எனத் தெரிவித்தான் திவ் யன்.

“அவர்கள் நள்ளிரவில் நம்மைத் தாக்கினால் நாமும் அவர்களை எதிர்த்து தாக்கலாம் படைத்தலைவரே...” என உறுதியுடன் தெரிவித்தான் திருக்கண் ணன்.

செங்குவீரன் மீண்டும் அமை தியாக நதிக்குள் ஊடுருவியிருந்த கடல் நீரையே பார்த்துக்கொண்டிருந் தான். அப்போது வில்லவன், “கலிங் கப்போரை மட்டும் மனதில் கொண்டு

படையை நகர்த்த முடிவு செய்திருந் தால் படைத் தலைவர் செங்குவீரர் இத் தனை யோசனையில் இறங்கவே மாட் டார். கலிங்கத்திற்குப் பிறகும் நடைபெ றப் போகும் சுங்கப் போரைப் பற்றியும் சிந்திக்கொண்டிருக்கிறார். இப்பொழுதே நம் படை பலத்துடன் இணையான படை பலத்துடன் இருக்கிறது கலிங்கப்படை, நம்மை எதிர்பார்த்து காத்திருக்கும் சுங் கப் படையிலும் இதே அளவுடைய படை இல்லை என்றாலும் கிட்டத்தட்ட நூற்று ஐம்பது ஆயிரம் வீரர்களுக்கும் மேல் இருப்பார்கள் என்று நம்பத்தகுந்த செய்தி கிடைத்திருக்கிறது. நம் வீரர்களையும், வலிமையையும் கலிங்க வெற்றிக்கு மட் டும் செலவு செய்துவிடக் கூடாது என்று எண்ணி நம் படைக்கு சேதம் அதிகமில் லாமல் கலிங்கத்தை எப்படி வீழ்த்துவது என்ற யோசனையில் இருக்கிறார்!" எனத் தெரிவித்தான்.

"வில்லவர் எனது எண்ணத்தை அறிந்துகொண்டுவிட்டார்" என செங்

https://telegram.me/aedahamlibra

குவீரன் கூறிக்கொண்டிருந்த போதே குறுக்கிட்ட கரிகாலர், "படைத்தலைவரே, போரினை இரண்டு விதங்களில் முடித்து வைக்கலாம்!" எனத் தெரிவித்தார்.

அவர் கூறியதைக் கேட்டதும் செங்குவீரன், திவ்யன், திருக்கண்ணன் மற்றும் வில்லவன் என நால்வரும் அவரை நோக்கினார்கள்.

"ஆமாம் படைத் தலைவரே. போரின் முடிவினை இரண்டு விதங்களில் தீர்மானிக்கலாம். புகாரை முற்றுகையிட சேர மற்றும் பாண்டிய நாட்டு மரக்கலங்கள் வந்தபோது மரக்கலங்களில் நிறைந்திருந்த வீரர்கள் அனைவரையும் கொன்று கடைசியாக மரக்கலத் தலைவனைக் கொன்று பரதவன் வில்லவனும், டாள்தொபியாகும் போரினை முடித்தார்களே. அது முதல் வகை. அதாவது படையில் வீரர்கள் அனைவரையும் தீர்த்துக்கட்டிய பிறகு அப்புறமாக போருக்

குத் தலைமை வகிப்பவனைக் கொன்று போரினை முடித்து வைப்பது!"

"இரண்டாவது வகை?" என வின வினான் திருக்கண்ணன்.

"வெண்ணிப் போர். சேர, பாண்டிய, வேளிர்களின் படைகளைத் திரட்டி தலைமையேற்று வந்த சேர மாமன்னர் மாவீரர் பெருஞ்சேரலாதன் மட்டும் எனது வேலுக்குப் பலியாகாமல் இருந்திருந்தால் அன்றைய போரில் நம்மை எதிர்த்து வந்த ஒட்டுமொத்த படை வீரர்களும் கொல்லப்பட்டிருப்பார்கள். வெண்ணிக் களமே சுடுகாடாயிருக்கும். இது இரண்டாவது வகை. அதாவது படை வீரர்களைவிடுத்து படைக்குத் தலைமை வகிப்பவனைக் கொன்று படையை முடித்து வைப்பது. உங்களுக்கு இன்னொரு உதாரணமும் என்னிடம் இருக்கிறது. சிங்கள மரக்கலங்கள் நம்மைத் தாக்க வந்தபோது மரக்கலங்களுக்கு தலைமை ஏற்று வந்த சிங்கள இளவ

ரசனைக் கொன்று மொத்தப் படையை யும் சிறை பிடித்தோமே அந்தப் போரும் இரண்டாவது வகை தான்!"

கரிகாலரின் மன ஓட்டத்தை அறிந் துகொண்ட செங்குவீரன், "பேரரசே, நீங் கள் நினைப்பது இரண்டுமே இந்த முறை நடக்க வாய்ப்பில்லை!" எனத் தெரிவித் தான்.

"ஏன்?"

"இந்த முறை தாங்கள் கலிங்க மன் னர் காரவேலரை நேருக்கு நேர் எதிர்க் கப் போவதில்லை!"

"எதற்காக?"

"அவருக்கு வயதாகிவிட்டது! அவ ரைத் தாங்கள் எதிர்ப்பது நியாயம் அல்ல!"

"மன்னனை மன்னன் எதிர்ப்பது தானே முறை!"

“ஆமாம் கரிகாலரே… அதை நான் மறுக்கவில்லை. உங்களது வீரத்திற்கு காரவேலர் பாத்திரமில்லை!”

“அப்படியெனில் அவரை நேருக்கு நேர் எதிர்க்கப்போவது யார்?”

“அதை நான் இன்னும் முடிவுசெய் யவில்லை. ஆனால், அவரை நிச்சயம் தாங்கள் எதிர்கொள்ளப் போவதில்லை” என சிரித்தபடியே தெரிவித்தான் செங்கு வீரன்.

“சரி, அப்படியெனில் பெரும் வீர னான பீமவேலனை நான் எதிர்கொள்கி றேன்.”

“அதுவும் முடியாது?”

கரிகாலர் செங்குவீரனை அதிர்ச்சி யுடன் நோக்கினார்.

“பீமவேலனுக்கும் எனக்கும் ஒரு தீர்க்க வேண்டிய கணக்கு ஒன்று மிச் சம் இருக்கிறது. கலிங்கப்போரில் பீமவே

லனை நேருக்கு நேர் எதிர்கொள்கிறேன் என்று வாக்குக்கொடுத்திருக்கிறேன்!"

"நான் என்ன செய்வது படைத்தலைவரே?" சற்றே ஏமாற்றத்துடன் வினவினார் கரிகாலர்.

"சுங்கப் பேரரசன் புஷ்யமித்திர சுங்கன் மற்றும் அவனது படைத்தலைவர்கள் உங்களுக்காக மகதத்தில் காத்திருக்கிறார்கள்!" என செங்குவீரன் கூறிக்கொண்டிருந்த போதே இடைமறித்த திவ்யன், "செங்குவீரா... எப்போது சாரதா ஆற்றினைக் கடக்கப் போகிறோம்?" என வினவினான்.

"நாளை பொழுது விடிந்து ஒரு முகூர்த்தப் பொழுது கழித்து!"

"நாளை காலையா?"

"ஆம்!"

"எதற்காக இந்த விபரீத முடிவு!"

"இல்லை. பீமவேலன் எதிர்பார்க்காத நேரம் பகல் பொழுது தான். பகல் பொழுதில் நாம் நதியைக் கடக்கப் போகிறோம் என்பதை அவன் கற்பனை கூட செய்து பார்க்கமாட்டான். ஆதலால் அப்போது நாம் இந்த நதியைக் கடப்பதுதான் புத்திசாலித் தனம்!"

"நாம் நதியைக் கடந்துவிட்டோம் என்பதை அறிந்து அவன் தாக்கினால்...?"

"தாக்கிக்கொள்ளட்டும்!"

"உன் பேச்சு வர வர புரிய மறுக்கிறது?" சற்றே கோபத்துடன் தெரிவித்தான் திவ்யன்.

"நாளை காலையில் நமது படை நதியைக் கடக்கட்டும். நமது படை நதியைக் கடக்கத்துவங்கிய அடுத்த கணம் செய்தி காரவேலனுக்கும், பீமவேலனுக்கும் தெரிவிக்கப்படும். செய்தி அடைந்து கலிங்கப்படை புறப்படுவதற்குள் நமது படை மொத்தமும் சாரதா நதியைக் கடந்

துவிடும். அவர்களின் படை நம்மை நெருங்கித் தாக்கும்போது பொழுது நிச்சயம் உச்சிக்கு வந்து கிட்டத்தட்ட சாமப் பொழுதும் கடந்திருக்க வேண்டும்!”

“போரினை நாளையே துவங்கிவிடலாம் என்கிறாயா செங்குவீரா?”

“ஆமாம் நண்பா... அதுதான் எனது எண்ணமும்!”

அப்போது கரிகாலர், “போரினை நாளையே நாம் துவங்கவிருக்கிறோம் என்றால் எதற்காக படைத்தலைவரே நாம் பொழுது உச்சியைக் கடந்த பிறகு அவர்களின் படையை எதிர்கொள்ள வேண்டும்? இன்று இரவே நதியைக் கடப்போம். நாளை காலைப் பொழுதில் கலிங்கப்படையை நேருக்கு நேர் எதிர் கொள்வோம்!” எனத் தெரிவித்தார்.

“இல்லை பேரரசே... பொழுது உச்சியைக் கடந்த பிறகே நாம் கலிங்கப் படையை சந்திக்க வேண்டும்! அதற்குத்

https://telegram.me/aedahamlibra

தகுந்தவாறு நாம் படையைக் காலையில் ஒருசாமப் பொழுது கடந்தபிறகு நதியைக் கடக்கிறோம்!"

"படைத் தலைவரே... உங்களது திட்டம் தான் என்ன?"

"கலிங்கப்படையின் பலம் எவ்வளவு என்று நமக்கு உறுதியாக இதுவரை தெரியாது. சிறு படையைக் கொண்ட சாதவாகன மாதண்ட நாயகனே பெருங் கடல் வியூகம் அமைத்துத் தாக்கியிருக்கிறான். பெரும் படை பலத்தைக் கொண்ட கலிங்க மன்னன் என்ன வியூகத்தை அமைத்து நம்மைத் தாக்கப் போகிறான் என்று இதுவரையும் நமக்குத் தெரியாது. அதற்குத் தான் நமது படை பொழுது மேற்கில் விழுவதற்கு முன் இரண்டு சாம அளவில் கலிங்கப் படையை எதிர்கொள்ளும். அவர்கள் வகுத்திருக்கும் வியூகத்தில் நம்மைத் தாக்குவார்கள். நமது படை தற்காத்துக்கொண்டு சிறிது சிறிதாகப் பின்

https://telegram.me/aedahamlibra

வாங்கி மீண்டும் இதே சாரதா நதியை நோக்கி நகரும். அவர்களின் தாக்குதல் உக்கிரத்தை அடையத் துவங்கும் போது பொழுது மேற்கில் விழுந்துவிடும். போர் நிறுத்தப்படும். மீண்டும் கலிங்கப் படை பின்வாங்கும். அவன் பின்வாங்கும் போது அவனது படையின் உண்மையான பலம், வீரர்களின் திறன், நம்மை தாக்குவதற்கு அவன் வகுத்திருக்கும் வியூகம் என அனைத்தையும் அறிந்துவிடுவோம் நாம். காரவேலன் நினைத்திருந்தால் படையை திரட்டி முன்னேறிவந்து நம்மைக் கோதாவரி நதிக் கரையிலேயே எதிர்த்திருக்கலாம். அல்லது வலிமையான சிங்கபுரப் பட்டினத்திற்குள் பதுங்கி நம்மைத் தாக்கியிருக்கலாம். ஆனால் அவர்கள் எதற்காக சாரதா நதிக்கும், நாகவதி நதிக்கும் இடப்பட்ட இடத்தை தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்று நாளை நமக்குத் தெரிந்துவிடும். இரண்டாவது நாள் நடக்கும் போரினை நாமே முன்னெடுப்போம். அப்போது கார

வேலன் உணர்வான். சோழப் படை கலிங்கத்தின் வழியாகவே மகதம் செல்ல அனுமதித்திருக்கலாம் என்று!”

https://telegram.me/aedahamlibra

# 42. கருடனின் ருத்ர தாண்டவம்

செங்குவீரன் வகுத்த திட்டத்தின்படி பரிதி கிழக்கில் உதித்த ஒரு சாமப் பொழுது கழித்தே சோழப் படை சாரதா நதியைக் கடக்க ஆயத்தமானது. திருக்கண்ணன் அளித்த யோசனையின் படி படை இரண்டாகப் பிரிந்து சாரதா நதியைக் கடந்தது. நதியைக் கடக்கும்போது கலிங்கப் படை தாக்கினால் அவர்களை எதிர்கொள்வதற்கு வசதியாக முதலில் காலாட்படையின் ஒரு பிரிவான வேல்

படை நதியைக் கடந்து அக்கறையை அடைந்தது. அடுத்ததாக வில் வீரர்கள் நதியைக் கடந்தார்கள். வில் வீரர்களைத் தொடர்ந்து தேர்ப்படை, புரவிப் படை, கடைசியாக யானைப் படை ஆகியவை சாரதா நதியைக் கடந்தன. படை இரண் டாகப் பிரிந்து சாரதா நதியைக் கடந் தாலும் படையின் பெரும் எண்ணிக்கை யின் காரணமாக அனைத்து படைகளும் நதியின் அக்கறையை அடைந்தபோது பொழுது உச்சியை அடைந்திருந்தது.

சாரதா நதியை ஒவ்வொரு படை யாக கடக்கக்கடக்க கலிங்கப் பெரும்ப டையின் அதிரடித் தாக்குதலைத் தடுப் பதற்கு ஏற்றவகையில் படையை அணி வகுக்கத் துவங்கினர் திருக்கண்ணனும் மற்றும் வில்லவனும். காற்றைவிட அதிக வேகத்தில் பயணிக்கும் சோழப் படை யின் தேர்ப்படை முதலில் சீரான இடை வெளியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. தேர்களுக்கு இடையில் வரிசையாக யானைப்படையினர் நிறுத்தப்பட்டிருந் தார்கள். முன் வரிசை அணிவகுப்பிற்கு அடுத்ததாக காலாட்படையினர் வரி சையாக அணிவகுக்கப்பட்டிருந்தார்கள்.

அவர்களுக்குப் பின்னால் வில் வீரர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். புரவிப் படையானது இரண்டாகப் பிரிக்கப்பட்டு அணி வகுப்பிற்கு இரண்டு புறத்திலும் நின்றுகொண்டிருந்தன. அவற்றிற்குப் பின்னால் போர்ப் பொறிகளான இடங்கணி மற்றும் வலங்கணிப் பொறி, கல்லெறி கவண், வளைவிற்பொறி ஆகியவை அவசியமானபோது மட்டும் பயன்படுத்த நிறுத்தி வைத்திருந்தார்கள். செங்குவீரனின் கட்டளைப்படி சோழப் படையின் பெரும் பிரிவானது நெருக்கமாக நிற்காமல் அகலமாகப் பிரித்து நிற்கவைக்கப்பட்டிருந்தன.

படை அணிவகுத்து நின்ற முறையைக் கண்ட வானவல்லி பெரும் அதிருப்தியுடன் கரிகாலனை நோக்கிச் சென்றாள். அவளுடன் அவந்திகா மற்றும் கார்த்திகாவும் செல்லலானார்கள். கரிகாலரிடம், “கரிகாலா.... படை அணி வகுக்கப்பட்டிருக்கும் முறையைக் கண்டால் நாம் தாக்குவதற்கு செல்வதைப்

போன்று எனக்குத் தெரியவில்லை?” என சற்றே கோபத்துடன் தெரிவித்தாள்.

அப்போது அவந்திகா, “தேவி கூறுவது முற்றிலும் உண்மைதான். எனக்கும் அப்படித் தான் தோன்றுகிறது. முன் வரிசையில் யானைகளும், தேர்களும் நிற்கின்றன. ஊடுருவித் தாக்கும் காலாட்படையினர் எதற்கும் பயன்படப்போவதில்லாமல் தேர்களுக்குப் பின்புறமாக நிற்கிறார்கள். வில் வீரர்கள் எதிரிகளைத் தாக்குவதற்கு ஏதுவாக அணிவகுத்து நிற்காமல் தாக்க வரும் கலிங்கப்படையிடமிருந்து நம் படையைக் காப்பதற்கு வசதியாக பின்புறமாக நிற்கவைக்கப்பட்டிருப்பதைப் போன்று எனக்குத் தோன்றுகிறது. புரவிப்படையை எதற்காக இரண்டு புறத்திலும் நிற்க வைத்திருக்கிறீர்கள்? படை அணிவகுக்கப்பட்டிருக்கும் முறையை நோக்கினால் படை தாக்குவதற்கு அணிவகுக்கப்பட்டிருப்பதைப் போன்று எனக்குத் தெரியவில்லை!” என அவள் கூறிக்கொண்டிருந்த போதே அப்போது அங்கு

நுழைந்த திவ்யன், “படை தாக்குவதற்கு அணிவகுத்து நிற்பதைப் போன்று தோன் றவில்லை என்றால் வேறு எப்படித் தெரி கிறதாம்?” என வினவினான்.

புன்னகையுடன் நின்றுகொண்டி ருந்த திவ்யனைக் கண்டதும் நாணம் கொண்ட அவந்திகா அமைதியாக நிற் கலானாள். அப்போது வானவல்லி, “எதற்காக அவந்திகா அமைதி கொள் கிறாய்? படை அணிவகுக்கப்பட்டிருப்ப தைப் பார்த்தால் பின்வாங்குவதற்கு வச தியாக நிற்கிறது என்று மனதில் பட்ட தைத் தெரிவி” எனத் தெரிவித்தாள்.

அப்போது திவ்யனுக்குப் பின்னால் வந்துகொண்டிருந்த செங்குவீரன், “ஆம் வானவல்லி... படை பின்வாங்குவதற்கு ஏதுவாகத்தான் அணிவகுத்து நிற்கிறது” எனத் தெரிவித்துக்கொண்டு வானவல் லிக்கு எதிரில் சென்று நின்றான்.

அப்போது கொம்பு வேகமாக ஊதும் சத்தம் எழுந்தது. அப்போது கார்த்

திகா, “படை புறப்பட்டுவிட்டது!” எனத் தெரிவித்தாள்.

“ஆமாம். நான்தான் படை புறப்ப டட்டும் எனக் கட்டளையிட்டு வந்தேன்” எனத் தெரிவித்தான் செங்குவீரன்.

“இதே அணிவகுப்பில்தான் நாம் கலிங்கப்படையை தாக்கப் போகி றோமா?”

“இல்லை...!”

“பிறகு?”

“எதிர்கொள்ளப்போகிறோம்!” என மட்டும் தெரிவித்தான் செங்குவீரன்.

செங்குவீரன் கூறியது ஒற்றை சொல்லாக இருந்தாலும் அந்த, “எதிர் கொள்ளப்போகிறோம்” என்ற ஒற்றைச் சொல்லில் செங்குவீரனின் திட்டத் தைப் புரிந்துகொண்ட வானவல்லி தனது மோகனப் புன்னகை ஒன்றை செங்குவீர னின் மீது செலுத்தினாள். செங்குவீரனும்

https://telegram.me/aedahamlibra

அவளது அறிவுக் கூர்மையை எண்ணி வியந்தபடியே அவளை புன்சிரிப்புடன் நோக்கினான்.

அவனது விழிகளை நோக்கியபடியே, “நாங்கள் மூவரும் இன்று படையுடன் வரவேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறேன். நாங்கள் இங்கேயே நதிக்கரையில் ஓய்வெடுக்கிறோம்” என செங்குவீரனிடம் கூறியவள் அவந்திகா மற்றும் கார்த்திகாவிடம், “நாம் புறப்படலாம் அவந்திகா... நம் போர் இன்று துவங்கவில்லை” என இருவரிடமும் தெரிவித்தாள்.

“நம் போர் இன்று துவங்கவில்லையா?” என வியப்புடன் வினவினாள் அவந்திகா.

“ஆம்!”

“நமக்கு இன்று போர் துவங்கவில்லை எனில் கலிங்கர்களுக்கு மட்டும்

குறுக்கிட்ட செங்குவீரன், "படை புறப் பட்டு நாழிகை நேரம் கடந்துவிட்டது. நாம் புறப்படலாம்!" எனக் கட்டளையிட்டான்.

அடுத்த கணம் மூவரும் அங்கிருந்து புறப்பட்டு படையை அடைந்தார்கள். அகலமாகப் பரந்து விரிந்து சென்றுகொண்டிருந்த சோழப் படையின் நடு நாயகமாக கரிகாலர் தனது புரவித் தேரில் நின்றுகொண்டிருந்தார். அவரது தேரில் எட்டு புரவிகள் கட்டப்பட்டு கையில் வில் மற்றும் அம்புகளுடன் கம்பீரமாகக் காட்சியளித்தார். அவருக்கு அருகில் யானையில் நாங்கூர் வேளிர் செங்கோடர் நின்றுகொண்டிருந்தார். அவர்களுக்கு ஒருபுறத்தில் செங்குவீரனும், மறுபுறத்தில் திவ்யனும் படைக்குத் தலைமை தாங்கிக் கொண்டு சென்றுகொண்டிருந்தார்கள். பெரும்படையின் இரண்டு பக்கங்களிலும் சென்றுகொண்டிருந்த புரவி வீரர்களுக்குத் தலைமை தாங்கிக்கொண்டு திருக்கண்ணனும், வில்லவனும் சென்றார்கள்.

https://telegram.me/aedahamlibra

சோழப் படை சாரதா நதியைக் கடப்பதற்கு முன்பாகவே பீமவேலன், "போரினை இரண்டாவது நாளுக்கு இழுக்கக் கூடாது. அவர்களை எதிர்த்துத் தாக்கி முறியடித்துவிட வேண்டும்" என எண்ணி சோழப் படையை நோக்கி முதல் நாள் இரவிலேயே நாக நதியின் தென் கரையிலிருந்து புறப்பட்டிருந்தான்.

முதல் நாள் இரவில் புறப்பட்ட கலிங்கப்படை அடுத்த நாள் மூன்றாம் சாமத்தின் இறுதியில் சோழப் படையை நெருங்கியிருந்தது. சோழ வீரர்களின் பார்வைக்குத் தெரிவதற்கு முன்னரே அவர்கள் எழுப்பிய பேரிரைச்சல் சோழப் படையை அடைந்திருந்தது. பீமவேலனின் அணிவகுப்பில் விரைந்து வந்து கொண்டிருந்த கலிங்கப் படை அதிவேகமாக வந்து கொண்டிருந்தது சோழப் படையின் பார்வைக்கு எட்டியது. கலிங்கப்படையை நோக்கியதும் கரிகாலர், செங்குவீரன், திவ்யன், சோழப் படைத் தலைவர்கள் மற்றும் வீரர்கள் என

https://telegram.me/aedahamlibra

அனைவரும் ஒரு கணம் திகைப்படைந் தார்கள்.

கலிங்கப்படை குறுகி அடர்த்தியாக சோழப் படையை நோக்கி கருடக் கொடி கம்பீரமாகப் பறக்க விரைந்து வந்து கொண்டிருந்தது. சோழப் படை பரந்து விரிந்து சென்றுகொண்டிருக்க கலிங்கப் படை சிறு படையைப் போன்று குறுகி வந்துகொண்டிருந்தார்கள். இரு நூறாயி ரம் வீரர்களுக்கும் மேற்பட்ட பெரும்ப டையைக் கொண்ட கலிங்க வீரர்களை பீமவேலன் ஒன்றன் பின் ஒன்றாக அணி வகுக்கச் செய்திருந்தான்.

வந்துகொண்டிருந்த கலிங்கப் படையைக் கண்ட செங்குவீரனும் ஒரு கணம், "கலிங்கப்படையின் பலத்தை அளவுக்கு அதிகமாக மதிப்பிட்டு விட் டோமோ? படை இவ்வளவு சிறியதாக இருக்கும் என்று தெரிந்திருந்தால் ஒரே நாளில் போரினை முடித்திருக்கலாமே..." என எண்ணிக்கொண்டிருந்தான்.

கலிங்கப்படை தொலைவிலிருந்து வந்துகொண்டிருந்தது பெரிய அம்பு ஒன்று வானிலிருந்து கீழே விழுவதைப் போன்று அனைவருக்கும் காட்சியளித்து. படையின் முகப்பில் புரவித் தேரின் மீது அமர்ந்திருந்தார் கலிங்கத்தின் மகாமே கவாகன பேரரசர் காரவேலர். அவ ரைச் சுற்றிலும் யானைப் படை வீரர்கள் பெரும் அடர்த்தியாக நெருங்கி விரைந் துகொண்டிருந்தார்கள். கலிங்க மன்னர் காரவேலருக்குப் பின்னால் பீமவேலன் அவனது புரவியின் மீது அமர்ந்து வந்து கொண்டிருந்தான்.

இரண்டு படைகளும் மேலும் நெருங்கியிருந்தன. வேகமாக வந்த கலிங்கப்படையை நோக்கிய கரிகாலர் தனது கையிலிருந்த வில்லினை உயர்த் தினார். அடுத்த கணம் மொத்தப் படை யும் நின்றன.

வானத்தில் இரையைத் தேடி பறந் துகொண்டிருக்கும் கருடனானது இரை

யைக் கண்டதும் தனது இறக்கைகளை உடலுடன் சேர்த்து தரையை நோக்கி வேகமாக விழும் அம்பினைப் போன்று கலிங்கப்படையும் சோழப் படையை நோக்கி வந்துகொண்டிருந்தது. இரண்டு நூறாயிரத்திற்கும் மேற்பட்ட வீரர்கள் அனைவரையும் நெருக்கமாக அணிவ குக்க வைத்து விரைந்து செலுத்திக் கொண்டிருந்தான் பீமவேலன். கலிங்கப் படை சோழப் படையை நெருங்கியதும் இடையிலிருந்த வாளினை உயர்த்திய வன் இரண்டு முறை ஆட்டினான்.

அவன் தனது வாளினை ஆட்டி வீரர்களுக்கு சைகை தெரிவித்ததுதான் தாமதம். இரையை நெருங்குவதற்கு முன் தனது இறக்கைகளை உடலோடு சேர்த்து அம்பினைப் போன்று விழுந் துகொண்டிருந்த கருடன் இரையை நெருங்கியபிறகு தனது இறக்கைகளை விரிப்பதைப் போன்று கலிங்கப் படையும் தனது இறக்கையை விரிக்கத் துவங்கி யது. கருட வியூகத்தின் கழுத்துக்குப் பின்

உடலுடன் மறைந்திருந்த பெரும் படை விரியத் துவங்கி கருட வியூகம் தனது இறக்கையை விரித்து சிறிது சிறிதாக பூர்த்தியாகத் துவங்கியது.

கருட வியூகத்தில் தலையும், கழுத் தும் எதிரிப் படையைக் கிழித்துக் கொண்டு ஊடுருவியபிறகு ஒரே இடத் தில் நிலை கொண்டு எதிரிப் படையை சிதறடிக்கும். அதன் படியே கருட வியூ கத்தில் எதிரிப்படையைக் கிழித்துக் கொண்டு முதல் முதலில் ஊடுருவ அல கில் ஆயிரக்கணக்கான புரவி வீரர்கள் கையில் ஈட்டியைத் தாங்கிக்கொண்டு அமர்ந்திருந்தார்கள். கருடனின் தலை யில் கலிங்க மன்னர் காரவேலர் அமர்ந் திருந்தார். அவரைச் சூழ்ந்து கருட வியூ கத்தின் தலை முழுவதும் யானைப் படை வீரர்கள் நிறைந்திருந்தார்கள். தொலை விலிருந்து தாக்குவதற்கு உகந்த ஆயு தமான வில் மற்றும் அம்புடன் வீற்றி ருந்தார்கள் யானையின் மீது அமர்ந்தி ருந்த வீரர்கள். கருடனின் அலகுக்கும்,

https://telegram.me/...

தலைக்கும் பாதுகாப்பாக ஆயிரக்கணக் கான காலாட்படையினர் உடலில் கவசம் அணிந்து கையில் வாளுடன் நின்று கொண்டிருந்தனர்.

தலைக்குக் கீழே கருடனின் உயிர் நாடியான கழுத்துப் பகுதியில் கலிங் கத்தின் பட்டத்து இளவரசனான மாவீ ரன் பீமவேலன் கம்பீரத்துடன் தனது புரவியின் மீது அமர்ந்திருந்தான். கருட னின் கழுத்து முழுவதும் புரவி வீரர் கள் கையில் ஈட்டி மற்றும் விற்களு டன் அவனைச் சூழ்ந்திருந்தார்கள். புரவி களுக்கு கவசமாக யானைகளை நிறுத்தி வைத்திருந்தான் பீமவேலன். கருடனின் உடல் பகுதி முழுவதும் வில் வீரர்கள் கையில் அம்பு மற்றும் எரியம்பு ஆகியவற் றுடன் நிறைந்திருந்தார்கள். வால் பகுதி யில் அதி பயங்கர கல்லெறியும் கவண், வளைவிற் பொறி ஆகியவற்றை அவசி யம் ஏற்பட்டால் பயன்படுத்துவதற்கு தயா ராக நிறுத்தி வைத்திருந்தனர்.

எப்போது தேவை எழுகிறதோ அப்போது வேகமாக இயக்குவதற்கு வசதியாக உடலிலிருந்து பிரிந்த இறக்கைகள் இரண்டிலும் ஆயிரக்கணக்கான தேர்கள் சில வரிசைகள் அணிவகுத்து நின்றுகொண்டிருந்தன. யானை மற்றும் புரவிகளின் உடல்களைக் கிழித்துப் போடும் களிற்றுப் பொறி தேர்ச் சக்கரத்திலும், தேரின் வழியினை இடைமறிப்பவற்றைக் கிழித்துத் தள்ளும் பிண்டிபாலம் மற்றும் தள்ளிவெட்டி பொறிகள் நுகத்தடியிலும் பொருத்தப்பட்டிருந்தன. இவை மட்டுமல்லாமல் சகடப்பொறி, அரிநூர் பொறி, தாமணி, தோமரம் ஆகிய பொறிகள் வரிசையாக புரவிகளின் தலைகளிலும், புரவித் தேரிலும் இணைக்கப்பட்டு கொலைக் கருவிகளைத் தாங்கி காட்சியளித்துக்கொண்டிருந்தன. புரவித் தேர்களுக்குப் பின்னால் புரவி வீரர்கள் அணிவகுத்திருந்தார்கள். புரவி வீரர்கள் அனைவரும் கையில் விற்களுடனும், தோளில் அம்பறாத் துணி நிறைய

https://telegram.me/aedahamlibra

அம்புகளையும், இடையில் வாளுடனும், புரவியின் மீது வேலினைக் கிடத்தியும் நின்றுகொண்டிருந்தார்கள். புரவிகளுக் குப் பின்னால் எஞ்சிய காலாட்படை வீரர் கள் அணிவகுத்து நின்றிருந்தார்கள்.

கருட வியூகத்தை எதிர்ப்பவர்கள் பெரும்பாலும் சர்ப்ப வியூகத்தை அமைப் பதே வழக்கம் என்பதை உணர்ந்த பீம வேலன் எஞ்சிய காலாட்படை வீரர்களை இறக்கைக்குப் பின்னால் சுற்றிவளைக் கும் சர்ப்ப வியூக வீரர்களைத் தாக்க முன் எச்சரிக்கையுடன் நிறுத்தி வைத்திருந் தான்.

இரு நூறாயிரத்திற்கும் மேற்பட்ட கலிங்க வீரர்கள் அமைத்திருந்த கருட வியூகமானது தனது இரண்டு இறக் கைகளையும் நீட்டிக்கொண்டு சோழப் படையை நோக்கிப் பாய்ந்து வந்தது கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. கலிங் கப் படை அணிவகுத்து வந்தது ராட் சச வடிவ கருடன் ஒன்று பறந்து வரு

வதைப் போன்றே காட்சியளித்தது. கருடன் இரையை நோக்கிப் பறந்து வந்த போது அது தனது இறக்கையை சில முறை அடித்துக் கொள்வதை போன்றும், உடலையும், தலையையும், ஒரு முறை திருப்பி கவனிப்பதைப் போன்றும் கலிங்கப் படையின் வீரர்கள் இறக்கையை அடித்துக்கொண்டு அதிவேகமாக சோழப் படையை நோக்கி நெருங்கினார்கள்.

புராணங்களிலும், கதைகளிலும் கேட்ட கருட வியூகத்தின் மெய்த் தோற்றத்தைக் கண் முன்னே கண்ட சோழப் படை அக்கணம் செயலற்று அப்படியே கருட வியூகம் தங்களை நோக்கிப் பறந்து வரும் அழகினைக் கண்டு நின்றுகொண்டிருந்தார்கள்.

கருடனிடம் இரையாகப் போவது நாம்தான் என்பதை அறிந்தும் சோழப் படை செயலற்று நின்றதைப் பொருட்படுத்தாமல் கருட வியூகம் ஒரே அடியில்

சோழப் படையை வீழ்த்திவிட அதிவே கத்தில் நெருங்கியிருந்தார்கள். கலிங்கப் படை நெருங்கிவந்ததும் முதன் முதலில் உணர்வு பெற்ற கரிகாலர் தனது கையி லிருந்து வில்லின் நாணில் அம்பினைப் பூட்டி வேகமாக கலிங்கப் படையின் மீது எய்தார்.

அவர் வில்லினைத் தொடுத்த அடுத்த கணம் தேர் மற்றும் யானை களுக்குப் பின்புறமாக நின்றுகொண்டி ருந்த வில் வீரர்கள் அனைவரும் ஒரே நேரத்தில் அம்புகளை கலிங்கப் படை யின் மீது எறிந்தார்கள். பெரும் மழை போல பொழிந்த அம்புகள் சோழப் படைக்கும் கலிங்கப் படைக்கும் இடை யில் விழுந்தது. வானிலிருந்து அம்பு கள் மழை போல விழுந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் உடலில் அணிந் திருந்த கவசத்தில் தாங்கிக்கொண்டு கலிங்கத்தின் கருடப் படை சோழப் படை யின் மீது அதிவேகத்தில் மோதுவதற்கு நெருங்கியது. கலிங்கப் படை நெருங்கிய

துமே சோழப் படையும் கண நேரத்தில் வேகம் கொண்டு கலிங்கப் படையின் மீது மோதினார்கள்.

இருபக்கமும் இரு நூறாயிரத்திற் கும் மேற்பட்ட வீரர்களைக் கொண்ட பெரும்படைகள் இரண்டும் அசுர வேகத் தில் ஒன்றை ஒன்று மோதிக் கொண் டன. கருட வியூகத்தின் அலகினில் திரண்டிருந்த புரவிகள், அதன் தலை யில் நின்றிருந்த யானைப் படை ஆகி யவை சோழப் படையின் வலிமையான தற்காப்பினை அறியாமல் நேருக்கு நேர் தாக்க சோழ யானைகளின் கூர்மையான தந்தத்தாலும், அதில் பொருத்தப்பட்டி ருந்த வாளினாலும் அவற்றின் உடல் கள் கிழிக்கப்பட்டு அங்கேயே மடிந்தன. முதல் வரிசையில் நின்றுகொண்டிருந்த யானைகள் கருடனின் புரவிப் படையை துவம்சம் செய்யத் துவங்கின. யானை மற் றும் புரவித் தேர்களின் தற்காப்பையும் மீறி சற்று தூரம் ஊடுருவியது கருடனின் தலை மற்றும் கழுத்து. கருட வியூகத்

தின் இறக்கையின் முதன்மை வரிசை யாக நின்றுகொண்டிருந்த புரவித் தேர்க ளும், சோழப் படையில் முதல் வரிசையில் நின்றுகொண்டிருந்த புரவித் தேர் மற்றும் யானைகளும் ஒன்றோடொன்று நேருக்கு நேர் மோதிக்கொண்டன. கலிங்கப் படை யின் புரவித் தேர்களில் பொறிக்கப்பட் டிருந்த களிற்றுப் பொறி, பிண்டிபாலம், தள்ளிவெட்டி பொறி, சகடப்பொறி, அரி நூர்பொறி, தாமணி, தோமரம் ஆகியவை சோழ யானைகளின் நெற்றியில் பொருத் தப்பட்டிருந்த வலிமையான கவசத்தி னால் சுக்கு நூறாக உடைந்து சிதறின. களிற்றுப் பொறியில் சிக்கிய யானைகள் அப்போதே அலறியபடி உடல் கிழிந்து பரலோகத்திற்கு சென்றன. பிண்டிபாலம், தள்ளிவெட்டி ஆகியவை யானை மற் றும் புரவிகளின் மீது பெருத்த காயங் களை உருவாக்க யானைகளும், புரவி களும் அங்கேயே அலறியபடி விழுந் தன. பொறிகளால் சிறிது தாக்கப்பட்டா லும் அவற்றைத் தாங்கி அந்தப் பொறி

களையும் தகர்த்துக்கொண்டு யானை கள் முன்னேற அவற்றின் தந்தங்களில் பொருத்தப்பட்டிருந்த கூர்மையான ஆயு தங்களால் எதிர்பட்ட கருட வியூகத்தின் யானை மற்றும் புரவிகளின் உடல்களை யும் கிழித்துப்போட்டன.

சோழ வில் வீரர்கள் தொடர்ந்து வில்லினை கலிங்கப் படையை நோக்கி ஆவேசத்துடன் எறிந்துகொண்டிருந்தார் கள். அதே போன்று கருடனின் உட லில் நிலை கொண்டிருந்த வில் வீரர்கள் நான்கு திசைகளிலும் அம்புகளை எறிந் தார்கள்.

கருடத் தாக்குதலின் முதல் கட்ட அதிரடித் தாக்குதலை எளிமையாக எதிர்கொண்டது சோழப் படை. போர் அப்படியே நீடித்திருந்தால் சோழப் படை அன்றே கலிங்கப் படையை வீழ்த்தி எளி தாக வெற்றியடைந்திருக்கும். ஆனால், கருடனின் கழுத்தில் அமர்ந்திருந்த பீம வேலன் புரவியின் மீது அமர்ந்து

கொண்டே கொம்பினை வாங்கி வேக மாக ஊதினான்.

அவன் கொம்பு ஊதிய அடுத்த கணம் கருடனின் இறக்கையில் நிலை கொண்டிருந்த பெரும் புரவித் தேர்களும் ஒரு கணம் பின்வாங்கின. சோழப் படை யின் யானைகளும், புரவித் தேரும் விடா மல் தாக்கியபடி முன்னேறின. அப்போது மீண்டும் கொம்பினை வேகமாக ஊதி னான் பீம்வேலன்.

அவனது கொம்பின் ஓசை மீண் டும் எழுந்ததும் புரவித் தேருக்குப் பின் வரிசையில் நின்றுகொண்டிருந்த புரவி வீரர்கள் அனைவரும் முன்னேறி வந்த சோழப் படையின் மீது அம்புகளை தொடர்ந்து எறிந்தார்கள். பீமவேலன் கொம்பினை ஊதுவதை நிறுத்தினான். கொம்பின் ஓசை நிறுத்தப்பட்ட அடுத்த கணம் கலிங்கப் புரவி வீரர்கள் அனை வரும் வேல் மற்றும் வாளுடன் தேர்க ளைக் கடந்துவந்து சோழப் படையுடன்

https://telegram.me/aedahamlibra

கலந்துவிட்டிருந்தார்கள். கலிங்கப் படையின் எதிர்பாராத தாக்குதலினால் சோழப் படையின் பிரதான தற்காப்பு வரிசை சீர் குலைந்தது.

மீண்டும் கொம்பினை ஊதினான் பீமவேலன். அப்போது புரவி வீரர்கள் அனைவரும் சோழப் படைக்குள் ஊடுருவுவதை விட்டுவிட்டு சற்று பின்வாங்கி கருட வியூகத்தின் மையத்தை நோக்கி நகர்ந்தார்கள். அதாவது கருட வியூகத்தில் தலைக்கு இடப்புறம் அணிவகுத்திருந்த வீரர்கள் வலப்புறத்திலும், வலப்புறம் அணிவகுத்து நின்றுகொண்டிருந்த வீரர்கள் இடப்புறத்திலும் நகர்ந்தார்கள். அடுத்து கொம்பின் ஓசை எழுந்த போது மீண்டும் பழையபடி கருட வியூகத்தின் மையத்திலிருந்து விலகி முன்பிருந்த நிலையை அடைந்தார்கள். அப்போது அவர்களுக்குத் துணையாக புரவித் தேர்களும் சோழப் படையைத் தாக்கியபடி நகர்ந்துகொண்டிருந்தன.

https://telegram.me/aedahamlibra

சிக்கிய இரையை கருடன் தனது அலகு மற்றும் கால்களால் நன்கு பற்றிக்கொண்டு வானில் பறந்து தனது இறக்கையை அப்படியும், இப்படியுமாக அடித்து இரையை அலைகழிப்பதைப் போன்று கருட வியூகமும் சோழப் படையின் மையத்தில் நன்கு நிலைக்கொண்டு தனது இறக்கையை அப்படியும் இப்படியுமாக அசைத்து தாக்கிக் கொண்டிருந்ததால் சோழப் படையை புரவி வீரர்கள் மற்றும் புரவித் தேர்கள் என மாறி மாறி ஒரே நேரத்தில் தாக்கிக்கொண்டிருந்தன. சோழப் படையின் இரண்டாவது வரிசையில் நின்றுகொண்டிருந்த காலாட்படையினர் போரில் பிரதானமாகப் பங்கெடுக்காமல் முன் வரிசை புரவித் தேர்கள் மற்றும் யானைகளைக் கடந்து ஊடுருவிய கலிங்க வீரர்களை மட்டும் கொன்றுகொண்டு வெறுமனே நின்றுகொண்டிருந்தார்கள். ஆனால், அவர்களுக்கு பின்னால் அணிவகுத்து நின்றுகொண்டிருந்த வில் வீரர்கள் எய்த அம்பு

கள் தொடர்ந்து கலிங்கப் படையின் மீது விழுந்து அவர்களின் முன்னேற்றத்தை பெரும் அளவிற்குத் தடுக்காவிட்டாலும் ஓரளவிற்குக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தன.

சோழப் படையின் மையத்தில் நிலை கொண்டிருந்த கரிகாலர் தனது புரவித் தேரில் நின்றுகொண்டே அம்புகளை சரமாரியாக எய்தபடி கருட வியூகத்தின் போக்கினைக் கவனித்து கட்டளைகளை விதித்துக்கொண்டிருந்தார். அவருடன் நின்றுகொண்டிருந்த வேளிர் செங்கோடர் அவருக்குத் தகுந்த பாதுகாப்பை அளித்துக் கொண்டிருந்தார்கள்.

செங்கோடரைக் கடந்து நின்ற திவ்யனும், கரிகாலரைக் கடந்து நின்ற செங்குவீரனும் சோழப்படைக்குள் ஊடுருவ முயன்ற கலிங்கப் படையைத் தாக்கிக் கொண்டு கருட அணிவகுப்பை அரங்கேற்றிக்கொண்டிருக்கும் பீமவேலனை

https://telegram.me/aedahamlibra

யும், காரவேலரையும் நெருங்குவதற்கு வாய்ப்பினை எதிர்பார்த்தபடி போர் புரிந்துகொண்டிருந்தனர். ஆனால், கருடனின் இறக்கையானது ஒரே இடத்தில் இல்லாமல் முன்னும் பின்னுமாக, இடமும் வலமுமாக அசைந்து கொண்டு சோழப் படையைத் தாக்கிக் கொண்டிருந்ததால் சோழப் படை வீரர்களால் அவர்களின் தாக்குதலை கணித்து தற்காத்துக் கொள்ளவே நேரம் சரியாக இருந்தது. பொழுது வேகமாக விரைந்து கொண்டிருந்தது. கருடனின் தாக்குதலும் நேரத்திற்கு நேரம் தீவிரமாகிக் கொண்டிருந்தது.

நிலைமை கட்டுக்குள்ளிருந்து மீறுவதை உணர்ந்த கரிகாலர் இடையிலிருந்த வாளினை உயர்த்தி வேகமாக ஆட்டினார். அடுத்த கணம் சோழப் படை மொத்தமும் பின் வாங்கியது. பின் வாங்கிய சோழ வீரர்களை கலிங்க வீரர்களும் விரட்டத் துவங்கினார்கள்.

சோழப் பெரும்படை பின்வாங்கிய படியே சென்றுகொண்டிருந்தது. பின் வரிசையில் நின்ற வில் வீரர்கள் தொடர்ந்து அம்புகளை எய்து கலிங்கப்படையின் முன்னேற்றத்தை தடுத்துக் கொண்டிருந்தார்கள்.

பின் வாங்கிச் சென்ற சோழப் படையை விரட்டி வந்த கலிங்கத்தின் கருட வியூகத்தின் அணிவகுப்பு சீர்குலையத் துவங்கியது. சோழப் படைத் தலைவன் செங்குவீரன் வானை நோக்கினான். பொழுது மேற்கில் விழ எப்படியும் இன்னும் ஒரு ஓரைப் பொழுதே மிச்சமிருந்தது.

இடையில் வைத்திருந்த சங்கினை எடுத்து வேகமாக ஊதினான் செங்குவீரன். அடுத்த கணம் மறுபுறம் நின்றுகொண்டிருந்த திவ்யனும் சங்கினை ஊதினான். சங்கின் சத்தம் எழுந்த அடுத்த கணம் பின் வாங்கிக்கொண்டிருந்த செங்குவீரன் முதல் வீரனாக கருட

https://telegram.me/aedahamlibrary

வியூகத்தின் தலையை நோக்கி ஒருபுறத்திலிருந்து முன்னேற மறுபுறத்திலிருந்து திவ்யன் முன்னேறினான். இருவரைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான போர் யானைகள் ஒரே நேரத்தில் கருடனின் கழுத்தையும், தலையையும் தாக்கின.

சோழப் படை வீரர்கள் எதிர்த்து முன்னேறிய அடுத்த கணம், அதுவரை தற்காப்பில் மட்டும் ஈடுபட்டு வந்த திருக் கண்ணனும், வில்லவனும் பெரும் புர விப்படையுடன் அதிரடியாக கருடனின் இறக்கைக்குள் புகுந்து தாக்கினார்கள்.

பின்வாங்கிச் சென்ற சோழப் படை எதிர்த்துத் தாக்கும் என்று எதர்பார்க்காத கலிங்க இளவரசன் பீமவேலன் அடுத்த கட்ட நடவக்கைகளை எடுப்பதற்குள் சோழப் படை வீரர்கள் கருடனின் அசை வினை மொத்தமாகத் தடுக்கும் அள விற்கு ஊடுருவி அதன் ஓட்டத்தை நிறுத் தியிருந்தார்கள்.

ஒரே நேரத்தில் செங்குவீரனும், திவ்யனும் எதிர்ப்பட்ட வீரர்கள் அனை வரையும் கொன்று குவித்துக்கொண்டு கருடனின் கழுத்தில் அமர்ந்துகொண்டு வியூகத்தின் உயிர் நாடியாக செயல் பட்டுக் கொண்டிருக்கும் பீமவேலனை நெருங்க முயன்றாலும், கருட வியூ கத்தின் வலிமையான தற்காப்பினால் தடுக்கப்பட்டு திணறிக்கொண்டிருந்த னர். அப்போது பீமவேலன் முன்னேறி வந்திருக்கும் சோழப் படையை மொத்த மாக அழிப்பதற்கு ஏதுவாக கருட வியூ கத்திற்குள் ஊடுருவியிருக்கும் சோழ வீரர்களை மொத்தமாக சூழ்ந்து கொள் ளச் செய்ய இடையிலிருந்த வாளினை உருவி கையை வட்டம் போல சுழற்றி னான்.

அடுத்த கணம் கருட வியூகத்தின் இறக்கையின் தொடக்கத்தில் நின்று கொண்டிருந்த புரவித் தேர்கள், யானை கள் ஆகியவை கருடனின் கழுத்தில் தாக்கிக்கொண்டிருந்த செங்குவீரன் மற்

றும் திவ்யனை சூழ்ந்துகொள்ள அதி வேகத்தில் விரைந்து செல்ல புரவி வீரர்கள் மற்றும் இறக்கையின் பின்புற மாக நின்றுகொண்டிருந்த காலாட்படை யினர் திருக்கண்ணன் மற்றும் வில்ல வனின் படையை எதிர்கொண்டார்கள். கருடனின் கழுத்தினை தாக்கிக்கொண் டிருந்த செங்குவீரனையும், திவ்யனை யும் ஒரே நேரத்தில் இரண்டு புறத்திலும் சூழ்ந்து தாக்கினார்கள் கலிங்க புரவித் தேர் மற்றும் யானைப் படையினர். சோழப் படையின் பெரும் பிரிவு கருட வியூ கத்தின் இறக்கைக்குள் சிக்கிக்கொண்ட ஆபத்தான நிலை.

கருட வியூகத்தினால் சூழப்பட்ட செங்குவீரன் மற்றும் திவ்யனின் படைக ளுக்கு உதவுவதற்காக திருக்கண்ணன் மற்றும் வில்லவன் இருவரும் பின்வாங்கி இரண்டு பக்கத்திலிருந்தும் கருடனின் கழுத்தை நோக்கி நகர்ந்தார்கள்.

https://telegram.me/aedahamlibra

அப்போது பீமவேலன் கருடனின் உடலில் நின்றுகொண்டிருந்த வில் வீரர்களுக்கு ஆணையிட்டான். அடுத்த கணம் வில்லவன் மற்றும் திருக்கண்ணனின் புரவிப் படை நெருங்க முடியாத அளவிற்கு அம்புகளை செலுத்தினார்கள் கலிங்க வீரர்கள். அம்புகளைப் பொருட்படுத்தாமல் சோழ வீரர்கள் முன்னேற அடுத்த கணம் கருட வியூகத்தின் வால் பகுதியிலிருந்து எரி கற்களும், மழை போன்று விற்களும் பொறிகளிலிருந்து விழுந்து அவர்களின் முன்னேற்றத்தினைத் தடுத்தன.

பீமவேலனின் பொறிக்குள் வசமாக சிக்கிக்கொண்ட சோழப் படைத் தலைவர்கள் செங்குவீரனும், திவ்யனும் எதிர்பட்டவர்கள் அனைவரையும் ஆவேசத்தில் கொன்றுபோட்டு விடுபட முயற்சித்துக் கொண்டிருந்தார்கள்.

கருட வியூகத்தின் பொறியிலிருந்து இருவரையும் விடுவிக்க வில்லவன் மற்

றும் திருக்கண்ணன் ஆகியோர் எடுத்த முயற்சிகள் தோல்வியடைய கரிகாலரே தனது தேர்ப்படையுடன் அவர்களை நோக்கி விரைந்து வரலானார். கரிகாலர் கருட வியூகத்தைத் தாக்கி ஊடுருவி முன்னேறிக் கொண்டிருந்த அதே நேரம் செங்குவீரன் கருட வியூகத்திலிருந்து பின்வாங்கும் முயற்சியைக் கைவிட்டு கருடனின் கழுத்தில் பாதுகாப்பாக நின்று வியூகத்தை இயக்கிக்கொண்டிருந்த பீமவேலனை நோக்கி முன்னேறிக்கொண்டிருந்தான்.

தனது தற்காப்பினை சிதறடித்து விட்டு ஊடுருவியிருந்த செங்குவீரனைக் கண்ட பீமவேலனும் கையில் வாளினை எடுத்துக்கொண்டு அவனை நேருக்கு நேர் வரவேற்க நெருங்கினான்.

செங்குவீரன் எதிர்த்த புரவி வீரர்களின் வாட்களையும், வேல்களையும் பறக்கவிட்டு அவர்களைக் கொன்று வீழ்த்திக்கொண்டிருந்த போது பீமவே

லன், "சோழப் படைத் தலைவரை கலிங் கத்தில் மீண்டும் சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்" எனக் கூறிக் கொண்டு செங்குவீரனை நோக்கிப் புரவி யில் பாய்ந்தான்.

பீமவேலனுடன் பாய்ந்து வந்த அவனது வாளினைத் தடுக்க செங்கு வீரன் தனது வாளினை உயர்த்தினான். அவன் தனது வாளினை உயர்த்திய அடுத்த கணம் கருட வியூகத்தின் தலை யில் நின்றுகொண்டிருந்த கலிங்க மன்னர் காரவேலர் சங்கினை நீண்ட நேரம் முழங் கினார்.

சங்கு சத்தம் நிறுத்தாமல் நீண்ட நேரம் ஊதப்பட்டதைக் கேட்டதும் இரு தரப்பு வீரர்களும் யுத்தம் புரிவதை விட் டுவிட்டு மேற்கு வானை நோக்கினார்கள். பரிதி மேற்கு வானில் விழுந்திருந்தது.

செங்குவீரனை நோக்கிய பீமவே லன் உயர்த்திய வாளினை தனது இடை யுறையில் போட்டுக்கொண்டு, "இந்த

முறையும் உங்களுடன் வாட்போர் புரிய முடியாமல் திரும்புவது ஏமாற்றத்தை அளிக்கிறது வீரரே!" எனத் தெரிவித் தான்.

"போர் இன்னும் முடியவில்லை கலிங்க இளவரசே! நாளையும் தொட ரும். நாளை தங்களின் விருப்பம் நிச்ச யம் நிறைவேறும்" எனக் கூறிய செங்குவீர னும் உருவிய வாளினை இடையுரையில் போட்டுக்கொண்டு திரும்பினான்.

கருடவியூகம் உருவாக்கியிருந்த ருத்ர தாண்டவத்தைப் பார்த்தபடியே செங்குவீரன் சென்றுகொண்டிருந்தான்.

இறந்து கிடந்த வீரர்களினூடே செங்குவீரன் தனது புரவியில் செல்வ தைப் பார்த்த பீமவேலன், "கருட வியூ கத்தின் முழு பலத்தை நாளை சோழப் படைக்கு புரியவைத்து அவர்களை இதே மண்ணில் புறமுதுகிட வைக்கிறேன்!" எனத் தனக்குத்தானே கூறிக்கொண் டான்.

https://telegram.me/aedahamlibra

# 43.

# போர்க்களத் தில் பூத்த புயல்

முதல் நாள் போரில் இறந்த வீரர்களை சோழப் படை வீரர்களும், கலிங்கப் படை வீரர்களும் சேர்ந்து அப்புறப்படுத்தி அடக்கம் செய்து கொண்டிருந்தார்கள். போரில் காயம் பட்ட வீரர்களுக்கு மருத்துவம் அளித்துக் கொண்டிருந்தார்கள். சாரதா நதியின் வடகரையில் மரத்திற்கு அடியில் சோழப் படைத் தலைவர்களும், கரிகாலரும் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் அனைவருக்கும் போரில் ஏற்பட்டிருந்த காயங்களுக்கு வானவல்லி, அவந்திகா மற்றும்

கார்த்திகா ஆகியோர் மருந்து வைத்துக் கட்டிகொண்டிருந்தனர். அப்போது நாங் கூர் வேளிர் செங்கோடர், "இதுவரை எத்தனையோ போரில் பங்கெடுத்திருக் கிறேன். ஆனால், என் வாழ்வில் இப்படி யொரு கட்டுக்கோப்பான வியூகத்தினை நான் கண்டதில்லை. கருட வியூகத்தை எவ்வளவு அழகாக பீமவேலன் இயக்கி னான்?" எனக் கலிங்க இளவரசனைப் பற்றி பெருமையுடன் கூறவும் செய்தார்.

அப்போது வில்லவன், "கலிங்கப் படையின் படை பலம் இருநூறாயிரம் வீரர்கள் என்று ஒற்றர்கள் தெரிவித்த தக வலில் எனக்கு இப்போது சந்தேகம் வரு கிறது?" என வினவினான்.

அப்போது திவ்யன், "ஆமாம் வில் லவரே.... அவர்களின் படையில் நிச்சயம் கிட்டத்தட்ட முந்நூறாயிரம் படை வீரர் கள் நிரம்பியிருப்பார்கள்!" என்றான்.

"ஆமாம்... வேளக்காரப் படைத் தலைவர் கூறுவது உண்மைதான்!" எனக் குறுக்கிட்டார் கரிகாலர்.

அப்போது சிறிது நேரம் அமைதி நிலவியது. பிறகு திருக்கண்ணனின் தோளில் அம்பு பாய்ந்து ஏற்பட்டிருந்த காயத்திற்கு மருந்திட்டுக் கொண்டிருந்த கார்த்திகா, "நாளை, எப்படி கருட வியூ கத்தை எதிர்கொள்ளப்போகிறீர்கள்?" என வினவினாள்.

அப்போது வானவல்லியும், "இன்று போர் பொழுது உச்சிக்கு வந்தபி றகு துவங்கியதால் கருட வியூகத்தின் கோர தாண்டவத்திலிருந்து நம்மால் பின் வாங்கி இழப்பினைத் தவிர்த்து பொழுது முடியும் தருவாயில் எதிர்த்துத் தாக்கி சிறிது சேதத்தை கலிங்கப் படைக்கு உருவாக்க முடிந்தது. ஆனால், நாளை பொழுது விடிந்ததும் நாம் கருட வியூகத் தின் கோரத் தாக்குதலை எதிர்கொள்ள வேண்டும். இன்று போல நாளையும் நம் மால் பின்வாங்கிக் கொண்டிருக்க இய லாது. நாளை பொழுது முழுவதும் நாம் கருட வியூகத்தை எதிர்கொள்ள வேண் டியிருக்கும். எப்படி அவர்களை நாம்

எதிர்கொள்ளப் போகிறோம்?” என வின வினாள்.

அப்போது செங்கோடர், “கருட னின் தலையை தனியாகத் திருகி வெட்டி எடுத்தால் கூட கருட வியூகத்தை முறி யடிக்க முடியும் என்று எனக்குத் தோன் றவில்லை. ஆனால், கருட வியூகத்தின் சரிவு அதன் தலையில் இருந்துதான் துவங்கும். கருட வியூகத்தின் தலையில் கலிங்காதிபதி மகாமேகவன அரசர் கார வேலர் அவரது யானைப் படையுடன் அமர்ந்திருக்கிறார். அவருக்கு ஆதரவாக தலைக்கு முன்னே கருடனின் அலகில் பெரும் எண்ணிக்கையில் புரவிப்படை அணிவகுத்து நிற்கிறது. அவருக்குப் பின் னால் பீமவேலன் நின்றுகொண்டிருக்கி றான். அவன் கழுத்தில் நின்றுகொண்டு கருட வியூகத்தை இயக்கிக் கொண்டி ருக்கும் வரையில் நம்மால் கருடனின் தலையை நெருங்க முடியாது. என்ன செய்வது? நாளை எப்படி கருட வியூ

கத்தை எதிர்கொள்ளப் போகிறோம்?” என வினவினார்.

“கருட வியூகத்தை பெரும்பாலும் சர்ப்ப வியூகம் அமைத்து தான் எதிர்ப்பது வழக்கம். நாமும் நாளை சர்ப்ப வியூகம் அமைத்து அவர்களை எதிர்த்தால் என்ன?” என வினவினான் திருக்கண்ணன்.

“திருக்கண்ணா, போரில் யாரும் கருட வியூகத்தை எதிர்த்து சர்ப்ப வியூகத்தை அமைப்பதில்லை.”

“பிறகு?”

“சர்ப்ப வியூகத்தை எதிர்க்கவே கருட வியூகத்தை வகுப்பார்கள்!”

அப்போது வில்லவன், “அதுமட்டுமல்ல திருக்கண்ணா... சர்ப்ப வியூகத்தை அமைத்தும் கருட வியூகத்தையும் தாக்கலாம். ஆனால், சர்ப்ப வியூகம் அமைக்கும் படைபலம் கருட வியூகத்தை விடவும் அதிகமாக இருக்க வேண்டும்.

https://telegram.me/aedahamlibra

ஆனால், இப்போது நம் படையை விடவும் கலிங்கப் படையின் வலிமை அதிகம்!" எனக் குறுக்கிட்டான்.

அவந்திகா திவ்யனை நோக்கி, "தலைவரே, குருசேத்திரப் போரின் இரண்டாவது நாளில் கருட வியூகத்தை எதிர்க்க யுதிஷ்டிரன் கொக்கு வியூகத்தை அமைத்திருப்பான். நாமும் அதைப் போன்றே கொக்கு வியூகத்தில் படைகளை அணிவகுத்தால் என்ன?" என வினவினாள்.

வானவல்லி, "அவந்திகா, குருசேத்திரப் போரின் இரண்டாவது நாளில் யுதிஷ்டிரன்தான் முதன்முதலில் கொக்கு அணிவகுப்பை வகுத்திருப்பான். பிறகு தான் கொக்கு வியூகத்தை எதிர்கொள்ள பீஷ்மர் கருட வியூகத்தை அமைப்பார்! நாளை நம்மாலும் கொக்குப் பறவை வியூகத்தில் கருட வியூகத்தை எதிர் கொண்டு வெற்றி பெற்றுவிடலாம். பெரும் சேதம் இரண்டு படைகளுக்கும் ஏற்படும்.

https://telegram.me/aedahamlibra

கலிங்கப் போருக்குப் பிறகு நாம் சுங்கப் படையையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்!" எனத் தெரிவித்தாள்.

"அப்படியெனில் கருட வியூகத்தை வெற்றி பெறவும் வேண்டும். அதே நேரம் படை அதிக சேதத்தையும் அடைந்துவிடக் கூடாது எனில் கருட வியூகத்தை எப்படி தான் எதிர்கொள்வது?" என சற்றே சலிப்புடன் வினவினாள் கார்த்திகா.

"சாதவாகன படையை சிதறடித்த செண்டாயுத வியூகத்திலேயே நாம் கலிங்கப் படையை எதிர்கொண்டால் என்ன?" என வினவினாள் வானவல்லி.

வில்லவன், "சாதவாகன படையின் படைபலம், வலிமை குறைவு. நம்மைத் தாக்கிய சாதவாகன வீரர்கள் பெருங்கடல் வியூகத்தில் இருந்ததால் நம்மால் செண்டாயுத வடிவில் படையை நிறுத்தி பெருங்கடல் வியூகத்தை சிதறடிக்க முடிந்தது. ஆனால், நம்மை போருக்கு

அழைத்த சாதவாகன படையை விட பல மடங்கு பெரிய படையை நாம் இங்கு கலிங்கத்தில் எதிர்கொள்ள வேண்டும் என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண் டும்!" எனத் தெரிவித்தான்.

வானவல்லி, "சர்ப்ப வியூகத்தையும் நம்மால் அமைக்க முடியாது. கொக்கு வியூகத்தையும் அமைக்க முடியாது. செண்டாயுத வியூகமும் சரி வராது எனில் கலிங்கப் படையை எப்படித்தான் நாம் எதிர்கொள்ளப் போகிறோம்? இப்படியே விவாதித்துக் கொண்டிருந்தால் இரவு கடந்து பொழுது புலர்ந்துவிடும். எவ்வ ளவு விரைவில் நாம் நமது தாக்குதல் வியூகத்தை முடிவு செய்கிறோமோ அவ் வளவு விரைவில் நம்மால் படைகளை அணிவகுத்து நிறுத்த முடியும். இருநூ றாயிரம் வீரர்களை நாம் அணிவகுத்து நிறுத்த வேண்டும் என்பதை அனைவ ரும் நினைவில் கொள்ளுங்கள்!" என அனைவரையும் எச்சரித்தாள்.

அப்போது கார்த்திகா, "எனக்கு ஒரு சிந்தனை!" எனத் தெரிவித்தாள்.

அனைவரும் அவளது முகத்தை நோக்கினார்கள். "நாம் விருட்சக வியூ கத்தை அமைத்தால் என்ன?" என வினாவினாள்.

செங்கோடர் கார்த்திகாவை நோக்கி, "மகளே, நாம் கருட வியூ கத்தை எதிர்கொள்ளப் போகிறோம் என் பதை நினைவில் கொண்டு பேசு. கருட வியூகத்திற்கு சர்ப்ப வியூகமும், விருட்சக வியூகமும் ஒன்றுதான். விருட்சக வியூ கம் கருட வியூகத்தைத் தாக்கிய அடுத்த கணமே கருட வியூகம் விருட்சகத் தின் உடலைத் தனது அலகினால் கவ் வும். விருட்சகத்தின் வாளும், இரண்டு கொடுக்குகளும் கருடனின் இரண்டு இறக்கைகளையும் தாக்கும். அப்போது கருடனின் அலகு விருட்சகத்தின் உட லைக் கிழிக்கும். அடுத்த கணம் விருட் சக வியூகம் இரண்டாக உடையும் அதா

வது விருட்சகத்தின் உடல் இரண்டாகக் கிழிக்கப்படும். அடுத்த சில நாழிகைக ளில் வியூகம் முற்றிலும் சிதைந்து விருட் சகம் கருடனுக்கு இரையாகிவிடும்" எனச் சற்றே கண்டிப்பு கலந்த அன்புடன் பதில ளித்தார்.

வில்லவன், "திரிசூல அணிவ குப்பை நாம் மேற்கொண்டால் என்ன?" என யோசனை தெரிவித்தான்.

அதுவரை சிந்தனையுடன் இருந்த கரிகாலர், "திரிசூலத்தை விடவும் வலி மையான ஆயுத வியூகம் நமக்கு வேண் டும் படைத் தலைவரே!" எனத் தெரிவித் தார்.

"திரிசூலத்தை விடவும் வலிமை யான ஆயுதமா?"

"ஆம்!"

"திரிசூலத்தை விடவும் வலிமை யான ஆயுதத்திற்கு நாம் எங்கே போவது?" என வினவினான் வில்லவன்.

"இருக்கிறது வில்லவரே..."

"என்ன?"

"வச்சிராயுதம்!"

"வச்சிராயுதமா?"

"ஆம்!"

அப்போது திருக்கண்ணன், "வச்சி ராயுத அணிவகுப்பில் இடி முழக்க அணி வகுப்பு, முக்கோண அணிவகுப்பு மாற்றும் செண்டாயுத ஆயுதத்தை ஒத்த மூன்று அணிவகுப்பு இருக்கிறது. தாங்கள் கூறு வது எந்த அணிவகுப்பை பேரரசரே?" என வினவினான்.

"தான் மகாமேகவாகன அரசின் இளவரசன் என்பதை நிலை நிறுத்துவ தற்கு கருட வியூகத்தை அமைத்திருக் கிறான் பீமவேலன். நாம் அமைக்கப்போ கும் வியூகம் மேகத்தை வாகனமாகக் கொண்டு பறக்கும் கருடனையும் சிதற டிக்கும் வகையில் இருக்க வேண்டும்!"

https://telegram.me/aedahamlibra

"..........."

"இடி முழக்க வியூகத்தில் நமது படையை அணிவகுத்து நிறுத்துவோம். இடி முழக்கத்தின் போது அடுத்தடுத்து உருவாகும் மின்னலைப் போன்று நமது படையும் அடுத்தடுத்து கருட வியூகத் தைத் தாக்கட்டும். கருட வியூகத்தை நாம் வீழ்த்த வேண்டுமெனில் கருடனின் தலையை நாம் கழுத்திலிருந்து தனியா கப் பிரிக்கவேண்டும். தலையை உட லிலிருந்து கழுத்தினை வெட்டி பிரித்து விடலாம். அதே போன்று நமது படை இரண்டாகப் பிரிந்து கருடனின் இறக்கை இரண்டையும் வெட்டட்டும். கருடனின் தலை, உடல், இறக்கைகள் என்று நான் காகப் பிரிவடையும். அப்போது அவர் களை நாம் ஒரு கை பார்த்துவிடுவோம்!" எனக் கரிகாலர் முழங்கினார்.

அதுவரை அவர்கள் அனைவ ரும் விவாதித்ததைக் கேட்டுக்கொண்டி ருந்த செங்குவீரன், "நாளை கலிங்கப்

படை இதே கருட வியூகத்தில் அணிவ குத்து வந்தால் நம்மால் அவனை வச் சிர வியூகத்தின் இடி முழக்க அணிவ குப்பில் எதிர்க்கலாம். ஆனால், அவன் தனது அணிவகுப்பை மாற்றிக்கொண் டால்?" என வினவினான்.

போர் பற்றிய சிந்தனையில் இருந்த திவ்யன் திடீரென்று விழிப்படைந்து, "என்ன செங்குவீரா வினவினாய்?" என வினவினான்.

"நாளை பீமவேலன் தனது அணி வகுப்பையும், தாக்குதல் திட்டத்தையும் மாற்றிக்கொண்டு நமது படையை எதிர் கொண்டால் என்ன செய்வது?" என மீண்டும் தெரிவித்தான் செங்குவீரன்.

"தினமும் தனது படையின் அணி வகுப்பை மாற்றிக்கொள்ள பீமவேலன் ஒன்றும் பீஷ்மரும் அல்ல கண்ணனும் அல்ல" எனச் சற்றே சினத்துடன் தெரி வித்தாள் வானவல்லி.

"தினமும் படையின் அணிவகுப்பை மாற்றுவதற்கு பீஷ்மராகவோ அல்லது கண்ணனாகவோ இருக்க வேண்டிய அவசியம் இல்லை வானவல்லி. போர் அறிவு இருந்தால் போதும். போரில் தோல்வியடையக்கூடாது எனும் வெறி இருந்தால் போதும். அந்த அறிவும், வெறியும் நம்மை விடவும் பீமவேலனிடம் அதிகம் இருக்கும் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை!" திடமாகத் தெரிவித்தான் செங்குவீரன்.

"விறல்வேல் கூறுவதிலும் உண்மை இருக்கிறது. நாளையும் அவன் கருட வியூகத்தில்தான் நம்மைத் தாக்குவான் என்பது என்ன நிச்சயம்?" என வினவினான் திவ்யன்.

"என்ன வியூகம் என்று தெரியாத போது நாம் தேவ வியூக அணிவகுத்தால் நம்மால் நன்கு தற்காத்துக்கொள்ள முடியும்!" என யோசனை தெரிவித்தான் திருக்கண்ணன்.

“திருக்கண்ணா, நாம் இங்கு தற்காத்துக்கொள்ள வரவில்லை!” எனக் குறுக்கிட்டான் வில்லவன்.

“ஆமாம் வில்லவரே... நாம் இங்கு தற்காத்துக்கொள்ள வரவில்லை. எதிர்க்கும் படையை அழித்துவிட்டு முன்னேறிச் செல்வதற்காக வந்திருக்கிறோம்!” எனத் தெரிவித்தான் செங்குவீரன்.

“படைத்தலைவரே... இந்நேரம் தாங்கள் ஒரு முடிவுக்கு வந்திருப்பீர்கள் என்று கருதுகிறேன். என்ன முடிவு அது?” என வினவினார் கரிகாலர்.

அவர் வினவிய அடுத்த கணம் செங்குவீரன், “அசுர வியூகம்!” என்று பதிலளித்ததுதான் தாமதம், அமர்ந்திருந்த அனைவரும் அதிர்ச்சியில் செங்குவீரனைத் தவிர எழுந்து நின்றார்கள்.

உடனே செங்கோடர், “படைத்தலைவரே... தங்களது முடிவை மாற்றிக்கொள்ளுங்கள். அசுர வியூகம் அமைத்

https://telegram.me/aedahamlibra

தால் எதிர்ப்படும் படை எதற்கும் உதவாமல் அழிந்து போய்விடும். மீள முடியாத அழிவினைத் தரவல்லது. நாம் போரிடத்தான் சோழ நாட்டிலிருந்து வந்திருக்கிறோம். ஆனால், அசுர வியூகத்தில் போரிட்டு கலிங்கப்படையையே மொத்தமாக அழிப்பதற்கு வரவில்லை!" என அவனிடம் கெஞ்சினார்.

அப்போது வானவல்லி, "படைத் தலைவரின் முடிவை நான் ஆதரிக்கிறேன். இந்த நிலையில் நமக்கு அசுர வியூகம் அமைப்பதைத் தவிர வேறு வழியில்லை. செங்கோடர் கூறுவதைப் போன்று போர்க்களத்தில் தயவு பார்த்துக்கொண்டு இருக்க முடியாது. போரிடுவதற்கு கிளம்பி வந்துவிட்டோம். எப்படிப் போரிட்டால் என்ன? போர் நியதிகளை மீறாமல் நேர்மையான வழியில் போரிட வேண்டியது மட்டுமே நமது கடமை. எதிரியின் அழிவைப் பற்றி சிந்தித்து நாம் கவலைப்பட்டுக் கொண்டிருந்தால் நாம்

அழிய வேண்டியதுதான்” எனத் தெரிவித் தாள்.

கரிகாலர் அங்கு அமர்ந்திருந்த அனைவரையும் நோக்கினார். அனைவ ரும் அமைதியாக அமர்ந்திருந்தார்கள். செங்குவீரனிடம், “படைத் தலைவரே, தங்களது திட்டம் என்ன? விரிவாகக் கூறுங்கள்!” எனக் கட்டளையிட்டார்.

“நாளை பொழுது விடிவதற்குள் நமது படை அசுர வியூகத்தில் நிற்க வைக்கப்படும். நாளை பீமவேலன் தனது படையை எப்படி வேண்டுமானாலும் அணிவகுத்துக்கொண்டு வரட்டும். கருட வியூகத்தைத் தவிர்த்து வேறு வியூகத் தில் அவன் நம்மை எதிர்கொண்டால் அவனது படையில் சிலர் உயிரோடு பிழைக்க வாய்ப்பு உண்டு. இல்லை யேல்...” என செங்குவீரன் கூறிக்கொண் டிருந்த போதே இடைமறித்த திவ்யன், “ஒருவேளை நாளையும் அவர்கள் கருட

https://telegram.me/aedahamlibra

வியூகத்தில் நம்மைத் தாக்கினால்....?" என வினவினான்.

"கருடனின் உடலிலிருந்து இறக் கைகள், தலை, கழுத்து என ஒவ்வொன் றும் அசுரனால் வெட்டி எறியப்படும். கருட வியூகம் மொத்தமாக சிதறடைந்த பிறகு ஒருவர் கூட தப்பிக்க முடியாமல் அழிக் கப்படுவார்கள்."

அப்போது திருக்கண்ணன், "தலை வரே... தாக்குதல் சரி... தாக்கப் போவது யார்? அசுர வியூகத்தை இயக்கப்போ வது யார்? யார் யார் படைக்கு தலைமை வகிக்கப் போகிறோம்? யார் யார் எங் கெங்கு நிலை பெறப் போகிறோம்? தெளி வாகக் கூறுங்கள்!" என வேண்டினான்.

அப்போது கரிகாலர், "படைத் தலைவரே... நானே, கருட வியூகத்தின் தலையை எதிர்கொள்கிறேன்..." எனத் தெரிவித்தார்.

அப்போதும் செங்கோடர், "பேரரசே... படைத் தலைவர் கூறுவதைப் போன்று கருடனின் இறக்கை, தலை, கழுத்து என அவற்றை தனித்தனியாக வெட்டி எறிவது என்பது அவ்வளவு எளிது அல்ல. கருடனின் தலையை நெருங்குவது என்பது மரணத்தின் வாசலை நெருங்குவதற்கு சமம். கருடனின் கழுத்து, உடல், இறக்கை என அனைத்துப் படைகளின் எதிர்ப்பையும் நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். கருட வியூகத்தில் தலையை கொடுப்பவர்கள் யாரும் மீண்டு வருவதில்லை! புகாரில் என் மகள் மரகதவல்லியும், என் பெயர்த்தி ஆதிமந்தியும் தங்களுக்கு வெற்றித் திலகமிட்டு வரவேற்க காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆதலால், சோழப் படைத் தலைவர்களான நாங்கள் ஒருநாளும் அதற்கு சம்மதிக்க மாட்டோம்!" எனத் தெரிவித்தார்.

"அசுர வியூகத்தை நான் முடிவு செய்த போதே யார் முதலில் கருட

னின் தலையை எதிர்கொள்ள வேண்டும் என்பதை முடிவுசெய்துவிட்டேன்!” எனத் தெரிவித்தான் செங்குவீரன்.

“கட்டளையிடுங்கள் படைத் தலைவரே... தயாராக இருக்கிறோம்!” எனப் பணிந்தான் வில்லவன்.

“அசுர வியூகத்தை உருவாக்கப் போகும் நானே படைக்கு முதலில் தலைமையேற்று கருடனின் தலையைக் கொய்ய முடிவுசெய்துவிட்டேன்!” எனத் தெரிவித்தான் செங்குவீரன்.

அங்கு அப்போது பெருத்த அமைதி நிலவியது. அப்போது செங்கோடர், “படைத் தலைவரே... முடிவெடுப்பதற்குள் நன்கு சிந்தித்து முடிவெடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்” என வேண்டினார்.

“இனியும் சிந்திப்பதற்கு நேரமில்லை செங்கோடரே...”

https://telegram.me/aedahamlibra

“படைத் தலைவரே... சோழப் படை இன்னும் பயணிக்க வேண்டிய தொலைவு நிரம்ப இருக்கிறது. கரிகால ருக்கு நீங்கள் இன்னும் துணையிருக்க வேண்டுமெனில் தாங்கள் நீண்ட காலம் ஆயுளுடன் இருக்க வேண்டும். உங்க ளது முடிவை மாற்றிக்கொள்ளுங்கள்!”

“செங்கோடரே... இரவானது கோடி நட்சத்திரங்களுடன் விடியலுக்காகத் தன்னைப் பலிகொடுத்துக் கொள்வ தில்லையா... அப்படியே நட்சத்திரங்க ளுள் ஒருவனாக நானும் இருந்துவிட்டுப் போகிறேன்.”

செங்குவீரனின் பதிலைக் கேட்ட தும் அனைவரும் ஒருகணம் உறைந்து போனார்கள். அவந்திகா எதையோ கூற வாயெடுத்தாள். ஆனால் உயர்ந்த வான வல்லியின் அதிகாரப் பார்வை அவளது வாயை மூட வைத்திருந்தது.

சிறிது நேரம் செங்குவீரனை யும், அவனுக்கு அருகில் அமர்ந்திருந்த

https://telegram.me/aedahamlibra

வானவல்லியையும் நோக்கிய செங்கோடர் இடையுரையிலிருந்து தனது வாளை உருவினார். சில அடிகள் முன்வைத்து செங்குவீரனுக்கு முன் நின்றவர், “படைத் தலைவரே... தாங்கள் நட்சத்திரங்களுள் ஒருவர் என்று ஒருநாளும் எங்களால் ஏற்றுகொள்ள முடியாது. தாங்கள் தான் விடியல். என்றோ மறைந்திருக்க வேண்டிய சோழ குலத்திற்கு விடியலாக இருந்து கதிரவனுக்கு பாதுகாவலனாக இருந்துகொண்டிருப்பது தாங்கள்தான்” எனக் கூறிக்கொண்டிருந்தவர் கையிலிருந்த வாளினை தரையில் ஊன்றி மண்டியிட்டு, “நாளை நானே கருட வியூகத்தின் தலையில் இருக்கும் காரவேலனை எதிர்கொள்கிறேன். தயவுசெய்து தங்களது முடிவை மாற்றிக்கொள்ளுங்கள்” என வேண்டியபடியே தலையை தாழ்த்தினார்.

அவரது செய்கையைக் கண்டு ஒருகணம் செங்குவீரனே அதிர்ச்சியில் உறைந்து போனாலும், உடனே மீண்ட

வன், "செங்கோடரே... என்ன இது???" எனக் கூறிக்கொண்டு அவரைத் தூக்கி நிற்கவைத்தான்.

"மன்னிக்க வேண்டும் படைத் தலைவரே... தங்களது கட்டளையை முதன் முதலில் மீறுவதற்கு முடிவுசெய்து விட்டேன். நாளை காரவேலனை நானே எதிர்கொள்ளப் போகிறேன். அதற்கு தாங்கள் அனுமதி வழங்கினாலும் சரி, வழங்காவிட்டாலும் சரி. மரணப் பள்ளத் தாக்கு என்று அறிந்தும் நான் யாரை யும் அனுமதிக்கப் போவதில்லை. நான் வாழ்க்கையை வாழ்ந்து முடித்துவிட் டேன். இங்கிருக்கும் அனைவரும் இப் போது தான் வாழ்க்கையை துவங்கியி ருக்கிறீர்கள்!"

சிறிது நேரம் சிந்தித்தபடியே நின்று கொண்டிருந்த செங்குவீரன், "சரி செங் கோடரே... தங்களது விருப்பம். நாளை காலை அசுர வியூகத்தை கரிகாலர் இயக்குவார். கரிகாலருக்கு வேளக்காரப்

படைத்தலைவர் காவல் புரிவார். வியூகத்தின் முதலில் செங்கோடரின் படை நிற்கும். கட்டளை எழுந்ததும் அவர் கருட வியூகத்தின் தலையை நேருக்கு நேர் தாக்குவார். அவருக்கு இரண்டு புறத்திலும் நிற்கும் வில்லவரும், திருக்கண்ணனும் கருடனின் இறக்கையை வேகமாகத் தாக்கி உடலிலிருந்து பிரிப்பார்கள். செங்கோடர் தலையையும், படைத்தலைவர்கள் இருவரும் இறக்கையை தாக்கி செயலிழக்க வைத்துக்கொண்டிருக்கும் அதே வேளையில் நான் கருடனின் கழுத்தில் நின்று கருட வியூகத்தை இயக்கிக் கொண்டிருக்கும் பீமவேலனை எதிர்கொள்கிறேன். எனக்குத் துணையாக வானவல்லி புரவி படையுடன் துணை இருக்கட்டும்!" என செங்குவீரன் கூறிக்கொண்டிருந்த போதே அவந்திகா, "இதை நான் ஒருநாளும் அனுமதிக்க மாட்டேன்!" எனக் குறுக்கிட்டாள்.

அங்கு அமர்ந்திருந்த அனைவரும் அவந்திகாவையே மிரட்சியுடன் நோக்கினர்.

மீண்டும் ஒருமுறை, “இதற்கு நான் ஒரு நாளும் அனுமதிக்கக் மாட்டேன்!” எனத் தெரிவித்தாள்.

“அவந்திகா, நீ சிறிது நேரம் அமைதியாக நிற்கிறாயா!” எனக் கோபத்துடன் அவந்திகாவிற்குக் கட்டளையிட்ட வானவல்லி, “தாங்கள் தாக்குதல் முறையைத் தொடர்ந்து கூறுங்கள் படைத் தலைவரே...” எனத் தெரிவித்தாள்.

“தேவி, இத்தனை நாட்களாக நான் அமைதியாக இருந்ததே தவறு என்று நினைக்கிறேன். ஆனால், நாளை நான் நிச்சயமாக உங்களை போர்க்களம் செல்ல அனுமதிக்கமாட்டேன். அதிலும், தாங்கள் புரவியிலேறி போர்க்களம் விரைவதை என்னால் நிச்சயம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது!”

https://telegram.me/aedahamlibra

"அவந்திகா... என்ன பழக்கம் இது!" என சற்றே கோபத்துடன் அதட்டினான் திவ்யன்.

"என்னை மன்னித்துவிடுங்கள். இத்தனை நாட்களாக அமைதியாக இருந்ததைப் போன்று இப்போதும் என் னால் அப்படி இருக்க முடியாது!"

அப்போது கரிகாலர் அவந்தி காவை நோக்கி, "இளவரசி... தாங்கள் எதை அனுமதிக்கப்போவதில்லை என்று நாங்கள் அறிந்துகொள்ளலாமா?" என வினவினார்.

உடனே, "வானவல்லி தேவி போர்க்களம் செல்வதை!" என்று பதில ளித்தாள்.

"அதில் தங்களுக்கு என்ன ஆட்சே பனை!" எனக் குறுக்கிட்டார் செங்கோடர்.

"தாங்கள் இல்லாமல் வானவல்லி தேவி மட்டும் படைக்களம் செல்வதால்

https://telegram.me/aedahamlibra

தங்களுக்கு விருப்பம் இல்லையா?” என வினவினான் திருக்கண்ணன்.

அப்போது வில்லவன், “தேவியைப் பற்றிய கவலை வேண்டாம். அவர் இதற்கு முன் பல போர்க்களங்களைக் கண்டவர். உங்களது மாதண்ட நாயகன் தாக்கிய போது கூட சோழப் படையை இயக்கிய வர் வானவல்லி தேவிதான்” எனத் தெரி வித்தான்.

“எனக்கு கவலை வானவல்லி தேவி மீது அல்ல!”

“பிறகு யார் மீது உங்களுக்கு கவலை?” என அவந்திகாவை நோக்கி வினவினான் செங்குவீரன்.

அவந்திகா ஒருகணம் செங்குவீர னையும், வானவல்லியையும் மாறி மாறி நோக்கினாள். பிறகு வானவல்லியிடம், “என்னை மன்னித்துவிடுங்கள் தேவி. உங்களுக்கு கொடுத்த வாக்கினை மீறப் போகிறேன்” என அவள் கூறிக்கொண்

https://telegram.me/aedahamlibra

டிருந்த போதே, "என்ன வாக்கு அவந்திகா?" என வினவினான் திவ்யன்.

அவந்திகா திவ்யனை நோக்கி, "உங்களது தங்கை வயிற்றில் இன்னொரு உயிரையும் சுமந்துகொண்டு இருப்பதால்தான் நான் அவர் போர்க்களம் செல்வதைக் கடுமையாக ஆட்சேபனை செய்கிறேன்! உங்களுக்கு என் மீது சந்தேகம் இருந்தால் வானவல்லி தேவி உடலில் அணிந்திருக்கும் கவசத்தை நீக்கச் சொல்லுங்கள். நீங்களே புரிந்துகொள்வீர்கள்!" என அவள் கூறிக் கொண்டிருந்த போதே வானவல்லியிடம் வந்த செங்குவீரன், "அவந்தி இளவரசி கூறுவது....?" எனப் பெரும் அதிர்ச்சியுடன் அவளை நோக்கினான்.

சிறிது நேரம் அமைதியாக நின்ற வானவல்லி பிறகு, "ம்ம்ம்..." என மட்டும் கூறி நிலம் நோக்கினாள்.

அங்கு நின்றுகொண்டிருந்தவர்கள் அனைவரும் இன்ப அதிர்ச்

சியில் உறைந்து நின்றுகொண்டிருக்க செங்குவீரன் வானவல்லியை அணைத் துக்கொண்டான். அங்கு நின்றவர்கள் அனைவரும் செங்குவீரனுக்கு வாழ்த்து களைக் கூறி இன்பத்தைப் பகிர்ந்து கொண்டார்கள்.

அப்போது அவந்திகா, "நாளை நானும், கார்த்திகாவும் வானவல்லி தேவியை அவந்திக்கு அழைத்துச் செல் கிறோம். சோழப் பேரரசர் அவந்திக்கு வருகை தந்தபோதே சரியாக உபச ரிக்கவில்லை என்ற வருத்தம் எனக்கு இருக்கிறது. கலிங்கனையும், சுங்கனை யும் வீழ்த்திவிட்டு வெற்றியுடன அனைவ ரும் அவந்திக்கு வாருங்கள். பிறகு நாம் அனைவரும் சோழ நாட்டிற்குக் கிளம் பலாம்" என அனைவரிடமும் கூறிய வள் செங்குவீரனிடம், "நாளை போருக்கு வேண்டிய அனைத்து ஏற்பாடுகளை யும் செய்துவிட்டு விடிவதற்குள் கூடா ரத்திற்கு வந்துவிடுங்கள்" எனக் கூறி விட்டு வானவல்லி மற்றும் கார்த்திகாவை

அழைத்துக்கொண்டு அங்கிருந்து புறப் பட்டாள்.

அனைவரும் மூவரும் செல்வ தையே பார்த்துக்கொண்டு இருந்தார் கள். பிறகு செங்குவீரன் படை அணிவ குக்க வேண்டிய முறை, தாக்குதல் முறை என அனைத்தைப் பற்றியும் கூறிவிட்டு வானவல்லி சென்ற அடுத்த ஒரு ஓரைப் பொழுது கழித்து அவனும் கூடாரத்திற் குச் செல்லலானான்.

அவந்திகா, கார்த்திகா மற்றும் பணிப்பெண்கள் அருகிலிருந்த கூடா ரங்களில் உறங்கிக்கொண்டிருக்க வான வல்லி மட்டும் தனியாக தீப்பந்த வெளிச்சத்தில் கட்டிலில் அமர்ந்திருந் தாள். கூடாரத்தின் திரையை நீக்கி விட்டு உள்ளே நுழைந்தான் விறல்வேல். அவன் உள்ளே வந்ததைக் கண்ட துமே எழுந்து நின்ற வானவல்லி தலை யைக் கீழே குனிந்தபடி நின்றுகொண்டி ருந்தாள்.

அவளது அழகிய வதனத்தை உயர்த்தினான் விறல்வேல். அவள் நாணம் கலந்த அச்சத்துடன் அவனை நோக்கினாள். விறல்வேலும் அவளது முகத்தையே சிறிது நேரம் மகிழ்ச்சி யுடன் பார்த்துக்கொண்டிருந்தான். அப் போது வானவல்லி, "அத்தான்..." என்று எதையோ கூற வாயெடுத்தாள்.

"இப்போது நீ எதுவும் கூற வேண் டிய அவசியமில்லை!" எனத் தெரிவித்த விறல்வேல் அவளை அப்படியே இறுக்க மாக அணைத்துக்கொண்டான்.

நீண்ட நேரம் கழித்து அவளது அணைப்பிலிருந்து விடுபட்ட விறல்வேல் அவளது நெற்றியில் முத்தம் ஒன்றைப் பதித்தான். பிறகு, அவளுக்கு முன் மண் டியிட்டு அவளது வயிற்றை மூடியிருந்த சீலைத் துணியை நீக்கினான். அவளது வயிறு அப்போதுதான் மேடு தட்ட துவங் கியிருந்தது. அவளது அடிவயிற்றில் முத் தம் ஒன்றை பதித்த விறல்வேல் வயிற்

றில் முகத்தைப் புதைத்துக் கொண்டான். விழிகளில் துளிர்த்த கண்ணீர் விறல்வேலின் மீது விழ வானவல்லியும் விறல் வேலை அணைத்துக்கொண்டாள்.

மகிழ்ச்சியில் அவளது வயிற்றில் மீண்டும் முத்தமிட்டபடியே, "எப்போதிலிருந்து வானவல்லி?" என வினவினான்.

"தாங்கள் வடுக நாட்டிலிருந்து புறப்பட்டு சிங்கபுரத்திற்கு புறப்பட்ட பிறகே எனக்குத் தெரியும்!" என சற்றே அச்சத்துடன் பதிலளித்தாள் வானவல்லி.

விறல்வேல் எந்தப் பதிலையும் கூறாமல் அவளது வயிற்றைத் தடவிக்கொண்டே அவளருகில் அமர்ந்தவன் அவளைத் தனது மடியில் கிடத்திக் கொண்டான்.

அப்போது வானவல்லி, "உங்களுக்கு என் மீது கோபம் வரவில்லையா?" என வினவினாள்.

"எதற்கு கோபம்?"

"இத்தனை மாதங்களாக நான் மறைத்துவிட்டேன் என்று!"

"வந்திருக்க வேண்டும். ஆனால், உனது முகத்தைப் பார்க்கும்போது என் மனம் அமைதியாகிவிடுகிறது வான வல்லி. எதற்காக இத்தனை நாட்களாக என்னிடமிருந்து மறைத்தாய்?"

"போரில் தாங்கள் வெற்றி வாகை சூடியதும் உங்களுக்கு இன்பப் பரிசாக இதைத் தெரிவிக்கலாம் என்று நினைத் துக்கொண்டிருந்தேன். ஒரு நாளில் அவ சரப்பட்டு அவந்திகா காரியத்தை கெடுத் துவிட்டாள். அதுமட்டுமல்லாமல்..."

"இன்னும் வேறு காரணங்கள் ஏதா வது இருக்கிறதா?"

"ம்ம்ம்..."

"என்ன?"

"நான் கர்ப்பமடைந்த செய்தி தெரிந்திருந்தால் சாதவாகனப் போரை

என்னால் முன்னெடுத்திருக்க முடியாது. வடுக நாட்டிலேயே என்னை சோழ நாட்டுக்கு அனுப்பி வைத்திருப்பீர்கள். திருமணத்திற்கு முன்னரே நான் உங்களை நிறைய காலம் பிரிந்திருந்துவிட்டேன். இனி என்னால் தங்களைப் பிரிந்திருக்க முடியாது. ஆதலால்தான் உண்மையை மறைத்து கலிங்கம் வரை வந்துவிட்டேன்....”

அவள் கூறியதைக் கேட்ட விறல்வேல் அவளை இன்னும் இறுக்கமாக அணைத்துக்கொண்டான்.

“போர்க்களமோ அல்லது நந்தவனமோ எனக்கு என் கருத்தானின் அருகாமை போதும்!” என அவனது மார்பில் சாய்ந்தபடியே தெரிவித்தாள் வானவல்லி.

மனம் முழுவதும் காதல் நிறைந்திருந்த அதன்பிறகு இருவருக்கும் சொற்கள் பயன்படாமல் போனது. நெடுநேரம் அமைதியாகவே காணப்பட்டார்கள். பிறகு செங்குவீரன் அவளது அணைப்பி

லிருந்து விடுபட்டு, "நாளை எனது மகனுக்கு நான் கலிங்க வெற்றியை சமர்ப்பிக்கிறேன்!" எனக் கூறிக்கொண்டிருந்த போதே உறங்கிக்கொண்டிருந்த திரையன் எழுந்து நடந்து வந்து வானவல்லியின் மடியில் படுத்துக்கொண்டான்.

"இருக்கும் ஒரு மகன் போதாது என்று உங்களுக்கு இன்னொரு மகன் வேண்டுமா?" என்று வினவினாள் வானவல்லி.

அவள் கூறியதைக் கேட்டு புன்னகைத்த விறல்வேல், "நான் புறப்படுகிறேன். காலையில் என்னால் மீண்டும் உன்னைச் சந்திக்க வர முடியுமா என்று தெரியவில்லை. பத்திரமாக செல். அவந்தியில் உன்னை நான் வெற்றியுடன் சந்திக்கிறேன்" எனக் கூறிக்கொண்டு எழுந்தான்.

விறல்வேல் செல்வதைக் கண்ட திரையன், "அப்பா..." என அழைத்தான்.

அவனிடம் மீண்டும் வந்து அமர்ந்தான் விறல்வேல். திரையனிடம், "அம்மாவுடன் செல்கிறாயா? அல்லது என்னுடன் வருகிறாயா?" என வினவினான்.

அப்போது திரையன் வானவல்லியையும், விறல்வேலையும் மாறி மாறி நோக்கினான். விறல்வேலின் இடையில் வைத்திருந்த குறுவாளினை எடுத்தவன் அவனது தோளுக்கு தாவினான். திரையனைத் தனது தோளில் போட்டுக்கொண்ட விறல்வேல் வானவல்லியை மீண்டும் ஒருமுறை அணைத்து அவளது இதழ்களில் முத்தம் ஒன்றைப் பதித்தவன், "நம் மகன் என்னுடன் போர்க்களத்திலேயே வளரட்டும். நான் புறப்படுகிறேன்!" எனக் கூறிக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டுச் செல்லலானான்.

விறல்வேல் புறப்பட்டுச் சென்றதையே பெருமை பொங்க நீண்ட நேரம் பார்த்துக்கொண்டு நின்ற வானவல்லி

பிறகு நிறைவான மனதுடன் படுக்கையில் விழுந்தாள்.

அடிக்குறிப்பு:

1. கரிகாலரின் மகளது பெயர் ஆதிமந்தி என்று சிலம்பு 21 வது காதையில் இளங் கோவடிகள் குறிப்பிடுகிறார். ஆதிமந்தி ஒரு புலவர். இவளது பாடல் குறுந்தொகையில் 31வதாக தொகுக்கப்பட்டிருக் கிறது. இளங்கோவடிகளால் கற்புக்கரசி என்று வரிசைப் படுத்தப்பட்டிருக்கும் கண்ணகி வரிசையில் ஆதி மந்தியும் ஒருத்தி. ஆதிமந்தி கண்ணகிக்கு முன்னோடி. நீராடியபோது காவேரியாறு அடித்துச் சென்ற தனது காத லன் ஆட்டனத்தியை தேடிச் சென்று உயிருடன் மீட்டவள் ஆதிமந்தி.

https://telegram.me/aedahamlibra

# 44.
# சுற்றிவளைத்த கலிங்கப் படைகள்

அசுர வியூகத்தின் தொடக்கத்தில் கூர்மையான அம்பின் நுனியைப் போன்று புரவிப் படை அணிவகுத்து நின்றுகொண்டிருந்தன. அப்புரவிகளின் மீது சோழப் படையின் கருணையே இல்லாத வேல் வீரர்கள் அமர்ந்திருந்தார்கள். அசுரனின் தலையில் புரவிப் படைகளுக்குப் பின்னால் யானைப் படையின் ஒரு பகுதியி

னர் வேளிர் செங்கோடரின் தலைமை யில் நின்றுகொண்டிருந்தனர். செங்கோ டருக்கு இரண்டு புறத்திலும் புரவிப் படை யினர் உபதலைவர்கள் வில்லவன் மற் றும் திருக்கண்ணன் ஆகியோரின் தலை மையில் அசுரனின் வலிமையான தோளி னைப் போன்று அணிவகுத்து நின்றனர். அவர்களுக்கு இரு புறத்திலும் சோழப் படையின் காலாட்படையினர் இடை யில் வாளுடன் அசுரனின் இறக்கையைப் போன்று நெடுந்தூரம் பரந்து விரிந்து நின்றுகொண்டிருந்தனர். செங்கோடரின் யானைப் படைக்குப் பின்புறமாக சோழப் படையின் வில் வீரர்கள் அணிவகுத்து நின்றுகொண்டிருந்தார்கள். வில் வீரர்க ளுக்கு மத்தியில் கரிகாலர் பட்டத்து யானையின் மீது கம்பீரமாக அமர்ந்திருந் தார். அவருடன் திரையனும் யானையின் மீது அமர்ந்திருந்தான். கரிகாலருக்கு இரண்டு புறத்திலும் அணிவகுத்திருந்த புரவிப் படைக்குத் தலைமை தாங்கிக் கொண்டு திவ்யன் நின்றுகொண்டிருந் தான்.

அசுர வியூகத்தின் இரண்டு புறத் திலும் தோள்களில் நின்றுகொண்டி ருந்த திருக்கண்ணன் மற்றும் வில்லவ னின் படைகளுக்குத் தொடர்ச்சியாக புர வித் தேர்கள் அசுரனின் நீண்ட கரத்

தினைப் போன்று நின்றுகொண்டிருந் தன. அசுர வியூகத்தைத் தவிர்த்த மற்ற இடங்கள் அனைத்திலும் சோழப் படை யின் காலாட்படையினர் அனைவரும் நிறைந்து வியூகத்தைப் பூர்த்தி செய்தி ருந்தார்கள். அணிவகுப்பின் பின் புறத் திலும், பக்கவாட்டிலும் கொலைக் கரு விகளான இடங்கணி மற்றும் வளங்கணி, வளைவிற்பொறி, கல்லிடு கூடை, கவண் ஆகியவை வரிசையாக நின்றுகொண்டி ருந்தன.

சோழப் படை நின்றுகொண்டிருப்ப தைப் பார்த்தால் அணிவகுப்பின்றி முத லில் புரவிப் படையும் அதற்குப் பின் னால் யானைப் படையும், யானைக ளுக்கு இரண்டு புறத்திலும் புரவிப் படை யும், புரவிகளுக்கு இரண்டு புறத்தி லும் கடல் போன்று காலாட் வீரர்களும் முன் வரிசையில் நின்றுகொண்டிருப்ப தைப் போன்றும், யானைப் படைக்குப் பின்னால் வில் வீரர்களும், வில் வீரர்க ளுக்கு இரண்டு புறத்திலும் புரவிப் படை

யும் புரவிப் படைகளுக்குப் பின்னால் புரவித் தேர்கள் அணிவகுத்து நிற்பதைப் போன்றும் காட்சியளித்துக் கொண்டிருந்தனர். இந்த அணிவகுப்பிற்கு பின்புறமாக எஞ்சிய காலாட்படையினர் அனைவரும் நின்றுகொண்டிருந்தார்கள். சோழப் படை சிறு சிறு பகுதியாக பிரிக்கப்பட்டு ஆங்காங்கே நின்றுகொண்டிருப்பதைப் போன்று தோன்றினாலும் கவனமாகப் பார்த்தால் மட்டுமே ராட்சச அசுரன் ஒருவன் தனது இறக்கைகள் இரண்டையும் உயர்த்திக்கொண்டு கையைத் தொங்க போட்டபடி நின்றுகொண்டிருப்பது தெரியும்.

பொழுது மெல்ல புலர்ந்தது. படைத் தலைவர்களின் தலைமையில் படைகள் அனைத்தும் அணிவகுத்து அசுர வியூகத்தில் நின்றுகொண்டிருப்பதை தனது புரவியில் வலம் வந்து பார்வையிட்டுக் கொண்டிருந்தான் செங்குவீரன். படைத் தலைவர்கள் ஒவ்வொருவரையும் சந்தித்தது படையை எப்படி நகர்த்த வேண்

டும் எனக் கட்டளையிட்டபடியும், வீரர்களுக்கு உற்சாகத்தையும் அளித்துக் கொண்டிருந்தான்.

பொழுது முதல் சாமத்தை வேகமாக கடந்துகொண்டிருந்தது. தொலைவில் பார்வைக்கு எட்டும் தொலைவில் கலிங்கத்தின் படை சோழப் படையை நோக்கி வந்துகொண்டிருந்தனர். வானிலிருந்து இரையைக் கண்டு பூமியை நோக்கி விழும் கருடனைப் போன்று கலிங்கப் படையினர் கூர்மையான அம்பினைப் போன்று அதிவேகத்தில் வந்து கொண்டிருந்தனர்.

அசுர அணிவகுப்பின் முனையில் நின்றுகொண்டிருந்த புரவிப் படைக்குத் தலைமை தாங்கிக்கொண்டு முதல் வீரனாக நின்றுகொண்டிருந்த செங்குவீரனின் இதழில் சிறு இளநகை ஒன்று தோன்றி மறைந்தது. சற்றுத் தொலைவில் வந்துகொண்டிருந்த கலிங்கப் படை

யின் கருட வியூகம் மெல்ல தனது இறக்கையை விரிக்கத் துவங்கியது.

கருடனின் இறக்கை விரியத் துவங்கிய அடுத்த கணம் செங்குவீரன் கையிலிருந்த வாளினை உயர்த்தினான். அவனது வாள் வானை நோக்கி உயர்ந்த அடுத்த கணம் அவனது கட்டளைக்காகவே செங்கோடரின் இடது மற்றும் வலது புறத்தில் தயாராகக் காத்திருந்த வில்லவனும், திருக்கண்ணனும் அசுர வியூகத்திலிருந்து வெளிப்பட்டு இறக்கையை விரித்துக்கொண்டிருந்த கருட வியூகத்தை நோக்கி காற்றை விடவும் அதிவேகத்தில் விரைந்தார்கள். அசுர வியூகத்திலிருந்து புரவிப் படையின் ஒரு பகுதியினர் பிரிந்து முன்னேறிச் சென்ற அடுத்த கணமே புரவிப் படைகளுக்குப் பின்புறமாக நின்றுகொண்டிருந்த புரவித் தேர்கள் முன் வந்து புரவிகள் நின்ற இடத்தில் செங்கோடரின் யானைப் படையின் இரு புறத்திலும் நின்றுகொண்டன.

திடீரென்று சோழப் படையினர் எதிர்த்து வந்து முன்னேறி கருட வியூகத்தைத் தாக்குவார்கள் என்று கனவிலும் எதிர்பார்க்காத பீமவேலன் தனது படையினருக்கு, "அவர்களை முன்னேற விடாமல் அம்புகளை எறியுங்கள்!" எனக் கட்டளையிட்டான்.

பீமவேலன் கட்டளையிட்ட அடுத்த கணம் கருட வியூகத்தின் உடலில் நின்றுகொண்டிருந்த வில் வீரர்கள் புரவிகளின் மீது அதிவேகத்தில் வந்துகொண்டிருந்த திருக்கண்ணன் மற்றும் வில்லவனின் மீது அம்புகளை எய்தார்கள். ஆனால், புரவி வீரர்கள் தொலைவில் வந்து கொண்டிருந்ததால் கலிங்க வீரர்கள் எய்த அம்புகள் அனைத்தும் அவர்களை எட்டுமுன்னே கீழே விழுந்தன. உடனே கருடனின் வாளில் நின்றுகொண்டிருந்த வளைவிற்பொறி இயக்கப்பட்டன. வளைவிற் பொறி இயக்கப் பட்ட அடுத்த கணம் அம்புகள் மழை

யைப் போன்று சோழப் படையின் புரவி வீரர்களை நோக்கி விரைந்தன.

வளைவிற் பொறி வீரர்கள் குறி வைத்து எய்த அம்புகள் இலக்கினை அடைவதற்குள் சோழப் புரவிப் படையினர் அவ்விடத்தைக் கடந்து அதிவேகத்தில் நெருங்கியிருந்தார்கள். புரவிகள் கடந்த பிறகு கலிங்க வீரர்கள் எய்த அம்புகள் மழையைப் போன்று வெற்று நிலத்தில் விழுந்தன. கலிங்கப் படையின் அம்புகளிலிருந்து தப்பி அதிவேகத்தின் நெருங்கிக் கொண்டிருந்த புரவிப் படையை எதிர்கொள்ள கருடனின் அலகில் நின்றுகொண்டிருந்த கலிங்கப் புரவி வீரர்கள் ஆயத்தமானார்கள்.

அவர்கள் ஆயத்தமான அடுத்தகணம் கையிலிருந்த கொம்பினை வேகமாக ஊதினான் பீமவேலன்.

உடனே கருடனின் அலகினில் நின்றுகொண்டிருந்த பெரும் புரவிப் படையினர் கையில் வேலுடன் சோழப்

படையினரை நேருக்கு நேர் எதிர் கொள்ள விரைந்தார்கள். இரண்டு புரவிப் படையும் நேருக்கு நேர் எதிர்கொள்ளும் நிலை. புழுதி பறக்க இருநாட்டு புரவி வீரர்களும் நெருங்கிக் கொண்டிருந்தார்கள். கலிங்கத்தின் புரவிப் படையினர் வெகு அருகில் நெருங்கிய போது சோழப் படையினர் அவர்களை விலக்கிவிட்டு இரண்டு பிரிவாகப் பிரிந்து கருட வியூகத்தின் இரண்டு இறக்கைகளும் உடலுடன் இணைந்திருக்கும் இடத்தை இரண்டு புறத்திலும் அதிவேகத்தில் தாக்கினார்கள். சோழப் புரவிப் படையின் அதிவேகத்தில் தாக்குதலில் ஒரு கணம் நிலை தடுமாறியது கருட வியூகம். திருக்கண்ணனும், வில்லவனும் கருட வியூகத்தை இரண்டு புறத்திலும் கிழித்துக்கொண்டு எதிர்த்தவர்களைக் கொன்று போட்டபடியே ஊடுருவினார்கள்.

அதிவேகத்தில் எதிர் தாக்குதல் தொடுக்க வந்த கலிங்கப் படையினரை சோழப் புரவிகள் நேருக்கு நேர் எதிர்

கொள்ளாமல் விலகிச் சென்றுவிட்டதால் சற்றே குழப்பமாக நின்றுகொண்டிருந்தனர் கலிங்கப் புரவி வீரர்கள். பிறகு கலிங்க வீரர்கள் தங்களது புரவிகளை சோழப் புரவிகளை பின்புறமாகத் தாக்க திருப்பிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது, அதிவேகத்தில் வந்த சோழப் புரவி வீரர்களால் எழுந்த புழுதி அடங்குவதற்குள் அந்தப் புழுதிகளின் நிழலில் அதிவேகத்தில் வந்த செங்குவீரன் தனியாகப் பிரிந்துவந்து நின்ற கலிங்கத்தின் புரவி வீரர்களைத் தாக்கினான். கடல் போன்று பறந்து நின்ற இரண்டு பெரும் படைகளுக்கும் இடையில் புரவிப் படைகள் இரண்டும் மோதிக்கொண்டன. படைகள் மோதிக்கொண்டதன் விளைவால் எழுந்திருந்த புழுதிகளால் படைகள் மோதிக்கொண்டிருந்ததும், எழுந்த அலறல் சத்தங்களும் மட்டுமே அப்போது இரு பிரிவினருக்கும் கேட்டது. கருணையே இல்லாத சோழப் படையின்

வேல் வீரர்கள் கலிங்கப் புரவி வீரர்களை கொன்று போட்டனர்.

கலிங்க வீரர்கள் அனைவரும் இறந்து புரவிப் போர் முடிந்தபிறகு புழுதி மண்டலம் மறையத் துவங்கியபோது தான் கலிங்க மன்னர் காரவேலரும், கலிங்க இளவரசன் பீமவேலனும் மொத்த சோழப் படையும் கலிங்க கருட வியூகத்தை நோக்கி வந்துகொண்டிருந்ததை அறிந் தார்கள்.

கருடனின் அலகில் அணிவகுத்தி ருந்த புரவிப் படையினரை மொத்தமாக இழந்துவிட்டதை எண்ணிய பீமவேலன் கடும் கோபம் கொண்டான். உடனே அவ னுக்கு அருகில் நின்றவனிடம், "இனி யும் தாமதிக்க வேண்டாம். எரியம்பை வானை நோக்கி செலுத்து!" எனக் கட்ட ளையிட்டான்.

அவன் கட்டளையிட அடுத்த கணம் வானை நோக்கி கரும் புகை

யைக் கக்கியபடி ஒரேயொரு அம்பு மட்டும் பறந்து சென்றது.

சோழப் படையின் புரவிப் படையினர் கருட வியூகத்தின் இறக்கையைப் பிளக்க முயற்சிகள் செய்துகொண்டிருந்த போதே மீண்டும் கொம்பினை வாங்கி ஊதினான் பீமவேலன்.

திருக்கண்ணன் மற்றும் வில்லவனின் தாக்குதலை இறக்கையில் சுமந்தபடியே கருட வியூகம் சோழப் படையை நேருக்கு நேர் தாக்குவதற்கு அதிவேகத்தில் முன்னேறியது.

கலிங்கப் படை நகரத் துவங்கியதுமே திட்டத்தின் படி கருட வியூகத்தின் தலையில் யானைகள் சூழ நின்றுகொண்டிருந்த கலிங்க மன்னர் காரவேலரை நாங்கூர் வேளிர் செங்கோடர் தனது யானைப் படையினால் நேருக்கு நேர் மோதினார். அசுர வியூகத்தில் நின்றுகொண்டிருந்த வில் வீரர்கள் கருட வியூகத்தை நோக்கி மழை போன்று அம்

புகளை எய்யத்துவங்கினார்கள். அசுர வியூகத்தின் விளிம்பில் நின்றுகொண்டிருந்த காலாட்படையினர் கருட வியூகத்தின் இறக்கையின் விளிம்பு வழியே ஊடுருவினார்கள். சோழப் படையின் புரவித் தேர்கள் வெளிப்பட்டு கருடனின் இறக்கையின் முன் வரிசையில் நின்றுகொண்டிருந்த புரவித் தேர்களை நேருக்கு நேர் எதிர்கொண்டனர்.

கருட வியூகமும், அசுர வியூகமும் நேருக்கு நேர் மோதிக்கொண்டன. சோழப் படையினர் கருட வியூகத்திற்குள் புகுந்து தாக்கத் துவங்கியதுமே கலிங்க இளவரசன் பீமவேலன் வாளினை வானை நோக்கி சுழற்றினான். ஆங்காங்கே நின்றுகொண்டிருந்த வீரர்கள் முரசினை அடித்தும், கொம்பினை ஊதியும் இளவரசனின் கட்டளையை அனைவருக்கும் தெரியப்படுத்தினார்கள். நேற்றைய தினத்தைப் போன்றே கலிங்க வீரர்கள் சற்றே முன்னேறி தாக்கிவிட்டு பின் வாங்கினார்கள். கலிங்க வீரர்களின் நகர்

வைப் புரிந்துகொண்ட கரிகாலர் அருகில் நின்ற உபதளபதிக்கு கண் காட்டினார்.

அவரது கட்டளை எழுந்த கணம் பீமவேலனின் கட்டளையை அனைவருக்கும் தெரியப்படுத்திக் கொண்டிருந்த வீரர்களைக் கொல்லத் துவங்கினார்கள் சோழ வீரர்கள். முரசுக்கு முன் நின்றவர்கள், கையில் கொம்புடன் நின்று கொண்டிருந்தவர்கள், சங்கினை வைத்துக்கொண்டு ஊதியபடி நின்றவர்கள் அனைவரையும் வில்லினை எய்தும், வாளினால் கொன்றும் கருட வியூகத்தின் தகவல் தொடர்பைத் தற்காலிகமாகத் தடுத்து நிறுத்தினார்கள் சோழ வீரர்கள்.

போர் துவங்கியது முதலே நிலைமை தொடர்ந்து மோசமாகி வருவதை உணர்ந்த பீமவேலன் மீண்டும் எரியம்பை வானை நோக்கி செலுத்தக் கட்டளையிட்டான்.

https://telegram.me/aedahamlibra

மீண்டும் எரியம்பு வானை நோக்கி கரும்புகையைக் கக்கியபடி சென்று கொண்டிருந்தது. சோழப் படைக்குள் ஊடுருவி கரிகாலரை நோக்கி முன் னேறிவந்த கலிங்க வீரர்களைத் தனது செண்டினால் கொன்று வீழ்த்தியபடியே, "கரிகாலா... பீமவேலன் மீண்டும் இரண் டாவது முறையாக எரியம்பை வானை நோக்கி செலுத்தியிருக்கிறான். அவன் வேறு எதற்கோ திட்டம் தீட்டியிருக் கிறான்!" என திவ்யன் கரிகாலரிடம் கூறிக்கொண்டிருந்த போதே ஆயிரக்க ணக்கான மரக்கலங்களில் சாரதா நதி யின் வழியாக வந்த வர்த்தினி சோழப் படையை பின்புறமாகத் தாக்கினாள்.

அதே நேரம் கலிங்கக் கடலின் வழியாக ஊடுருவிய கலிங்க வீரர் கள் சோழப் படையை வலது புறத் தில் சூழ்ந்து தொடர்ந்து அம்புகளை செலுத்திக் கொண்டிருந்தார்கள். சோழப் படைக்கு இடப் புறத்திலும் அடர்ந்த காடுகளில் மறைந்திருந்த வில் வீரர்கள்

சோழப் படையை இடது பக்கமாக தாக்கி னார்கள்.

ஒரே நேரத்தில் சோழப் படையை நேருக்கு நேர் கருட வியூகமும், வலப் புறத்தில் மரக்கல வீரர்களும் இடப் புறத் தில் வில் வீரர்களும், பின் புறமாக வர்த் தினியும் தனது மரக்கலங்களில் நின்று கொண்டு வளைவிற் பொறி மூலமும், கவண் மற்றும் கல்லிடு கூடை ஆகி யவற்றின் மூலமும் தொடர்ந்து சோழப் படையை பின்புறமாகவும் தாக்கிக் கொண்டிருந்தாள்.

நான்கு புறத்திலும் தாக்கப்பட்ட தால் சோழப் படையின் கட்டுக்கோப் பான அசுர அணிவகுப்பும் சிதறத் துவங் கியது. சோழப் படையினர் சிறு சிறு பிரிவாகப் பிரிந்து சூழ்ந்த படைகளை எதிர்த்தார்கள். சோழப் படையின் பின் வரிசை முழுவதும் காலாட் வீரர்களே நிரம்பியிருந்ததால் வர்த்தினியின் தாக்கு

தல் பெருத்த சேதத்தை விளைவிக்கத் துவங்கியது.

அசுர வியூகத்தின் கடைசியில் நின்றுகொண்டிருந்த சோழப் போர்ப் பொறிகள் அனைத்தும் வர்த்தினியின் கலங்களைக் குறிவைத்து கற்களை யும், அம்புகளையும் தொடர்ந்து எறிந் தன. ஆனால், சாரதா நதியின் குறு கிய நீர்ப் பிரவாகத்திலும் கலங்களை நகர்த்தி சோழப் படையின் தாக்குதலை திறமையாக எதிர்கொண்ட வர்த்தினி சோழப் படைக்கு சேதத்தை விளைவித் துக் கொண்டிருந்தாள்.

வர்த்தினியின் தாக்குதல் அப்படியே நீடித்திருந்தால் நான்கு புறமும் பீமவே லனின் வியூகத்தினால் சுற்றிவளைக்கப் பட்ட சோழப் படை சீர்குலைந்து அழிந்து போயிருக்கும்.

சோழப் படையை நதியிலி ருந்து தாக்கிக்கொண்டிருந்த வர்த்தினி யின் கலங்கள் மீது திடீரென்று அம்பு

கள் மழையைப் போன்று பெய்தன. திடீரென்று பின்புறத்திலிருந்து தாக்கப்பட்டதால் பெரும் அதிர்ச்சியடைந்த வர்த்தினி நதியை நோக்கினாள்.

அங்கே, செங்குவீரனின் கட்டளைப்படி புகாரிலிருந்து புறப்பட்ட உபபடைத் தலைவன் பரதவன் குமரன் புலிக்கொடி பறக்க அக்ர மண்டலக் கலத்தின் முகப்பில் நின்றுகொண்டு வர்த்தினியின் கலங்களை நோக்கி அதிவேகத்தில் வந்துகொண்டிருந்தான். அவனுக்குப் பின்புறமாக சொழாந்தியக் கலங்கள் அனைத்தும் நெருக்கமாக வந்துகொண்டிருந்தன.

பரதவன் குமரனுடம் வந்திருந்த இம்ஹோடெப் தனியாகப் பிரிந்து கலிங்கக் கடலின் கரைகளில் நிலை கொண்டு சோழப் படையை வலப்புறமாகத் தாக்கிக்கொண்டிருந்த கலிங்க வீரர்களை நோக்கிச் சென்றான்.

பரதவன் குமரனின் திடீர் வரவை கனவிலும் எதிர்பார்த்திருக்காத வர்த்

தினி அக்கணம் பெரும் குழப்பமடைந்து அவனையே நோக்கிக்கொண்டிருந்தாள். கலிங்க வீரர்கள் அனைவரும், "சோழப் படையின் மரக்கலங்கள் பின்புறமாகத் தாக்குகின்றன.... கலங்களைத் திருப்புங் கள்..." என கலிங்க உபதலைவர்கள் அனைவருக்கும் பெரும் அதிர்ச்சியுடன் கூறிக்கொண்டார்கள்.

பரதவன் குமரன் மீண்டும் கட்ட ளையிட்டான். அடுத்த கணம் கலிங்கக் கலங்களின் மீது எரியம்புகள் வானத்தி லிருந்து நெருப்பு மழையைப் பொழிந் தன.

திடீரென்று பின்புறமாகத் தாக்கப் பட்டதும் வர்த்தினி எச்சரிக்கையடைந்து பரதவன் குமரனை எதிர்த்துத் தாக் கக் கட்டளையிட்டாள். இத்தனை நாட்க ளாக புகாரில் சிறைப்பட்டதைப் போன்று காலத்தைக் கழித்ததால் போர் வெறிபி டித்து வந்திருந்த பரதவன் குமரன் கலிங் கக் கலங்கள் பார்வையில் அகப்பட்ட

துமே தனது அதிரடித் தாக்குதலைத் துவங்கினான்.

கலிங்க மரக்கலங்களும், சோழ மரக்கலங்களும் நேருக்கு நேர் மோதிக் கொண்டன. புகாரில் பாயும் காவேரி நதியைப் போன்று சாரதா நதியில் நீர் பிரவாகம் அதிகம் இல்லாத காரணத்தாலும், சாரதா நதி குறுகி ஓடியதாலும் பரதவன் குமரனின் கலங்கள் வேகமாக நகர முடியாமல் தடுமாறின. கரடு முரடான பாறைகளில் மோதிக்கொண்டன.

நதிக்குள் செல்ல செல்ல நிலைமை மோசமாவதை உணர்ந்த பரதவன் குமரன் எச்சரிக்கை நடவடிக்கை எடுப்பதற்குள் கலிங்கத்தின் கலங்கள் நெருங்கி வந்து சோழ மரக்கலங்கள் மீது அம்பு அம்பு மாரியைப் பொழிந்தார்கள். கவணின் மூலம் பாறைக்கற்களை எறிந்து சோழ கலங்களை சேதப் படுத்தினார்கள்.

https://telegram.me/aedahamlibra

சோழக் கலங்களைத் தாக்கிய கலிங்க மரக்கலங்களை நோக்கினான் பரதவன் குமரன். குறுகிய நதிப் பிர வாகத்திலும், கரடு முரடான நதியிலும் பயணிப்பதற்கென்றே அக்கலங்கள் உரு வாக்கப்பட்டிருந்தன. கலிங்கக் கலங் கள் அனைத்திலும் பொறிகள் இணைக் கப்பட்டிருந்தன. அவற்றிலிருந்து கற்க ளும், அம்புகளும் தொடர்ந்து சோழக் கலங்களை நோக்கி விழுந்துகொண்டி ருந்தன. கலிங்கக் கலங்களை செலுத் திக் கொண்டிருந்த வர்த்தினி முகத்தி லும், மார்பிலும் கவசத்தை அணிந்து ஆணைப் போன்ற தோற்றத்தில் நின்று தகுந்த கட்டளையை மரக்கலங்களுக் குப் பிறப்பித்துக் கொண்டிருந்தாள்.

சாரதா நதியின் முகத் துவாரத்தி லேயே இரண்டு படைகளும் மோதிக் கொண்டிருந்தன. “சாரதா நதியில் எங்கே ஆழம்? எங்கே மேடு? எங்கே நதி நீரின் பிரவாகம் அதிகமாக இருக்கும்? எங்கே நீரின் வேகம் குறைவாக இருக்கும்?” என

அனைத்தையும் அறிந்த வர்த்தினி நேர்த் தியாக மரக்கலங்களை செலுத்தியதால் பரதவன் குமரனின் தாக்குதல் துளியும் பலனளிக்கவில்லை.

மரக் கலங்களை செலுத்துவதில் நிகரற்றவனான பரதவன் குமரனுக்கு பெரும் சிம்ம சொப்பனமாக நின்று கொண்டிருந்தாள்.

கலிங்கக் கலங்களைத் தாக்க பர தவன் குமரன் தனது சொழாந்தியக் கலங்களை முன்னோக்கி நகர்த்தினான். அவை பாறையில் இடித்து நகர மறுத் தன. நேரத்திற்கு நேரம் கலிங்கக் கலங் களின் தாக்குதல் வேகம் அதிகமானது. அதுவரை சோழ மரக்கலங்களை சற்றுத் தொலைவில் நின்று அம்புகளை எரிந்து தாக்கியவர்கள் அப்போது நெருங்கி கலங்களை மோதவைத்து சோழ மரக் கலங்களுக்குள் ஊடுருவித் தாக்கத் துவங்கினார்கள்.

கலிங்க மரக்கலங்களின் தாக்கு தல் நேரத்திற்கு நேரம் வேகமெடுத்துக் கொண்டிருக்க அவர்களின் தாக்குதலி லிருந்து தப்பிக்க பரதவன் குமரன் தனது மரக் கலங்களை கலிங்கக் கடலை நோக் கிப் பின்வாங்கத் துவங்கினான்.

வர்த்தினியும் அவனது கலங்களை விடாமல் விரட்டத் துவங்கினாள். பின் வாங்கிச் சென்றுகொண்டிருந்த சோழ மரக்கலங்களின் மீது அம்புகளையும், எரியம்புகளையும் எரிந்தபடியே கலிங்க மரக்கலங்கள் தாக்கியபடி சென்று கொண்டிருந்தனர். சோழப் படை பின் வாங்கியதால் பெரும் உற்சாகமடைந்த கலிங்க வீரர்கள் அதிவேகத்தில் விரட் டிக்கொண்டு சென்றார்கள்.

முதலில் அதி வேகத்தில் பின் வாங் கிச் சென்றுகொண்டிருந்த சோழ மரக்க லங்கள் பிறகு மெல்ல தனது வேகத்தை படிப்படியாகக் குறைத்து கலிங்கப்

படையை நோக்கி நேருக்கு நேர் பார்த்த படி கலங்களைத் திருப்பினர்.

திடீரென்று சோழப் படையின் மரக் கலங்கள் எதிர்த்துத் தாக்கத் திரும்புவதைக் கண்ட வர்த்தினி ஒரு கணம் அதிர்ச்சியடைந்து பார்வையை சுற்றிலும் செலுத்தினாள். அவர்கள் அனைவரும் நதியிலிருந்து பிரிந்து நெடு தூரம் கலிங்கக் கடலுக்குள் வந்திருந்தனர். அதைப் பார்த்தபிறகே வர்த்தினி தனது தவறை உணர்ந்தாள்.

“சாரதா நதியைப் பற்றி எதுவுமே அறியாத சோழப் படையினரை சாரதா நதியின் முகத் துவாரத்தில் எதிர்த்திருந்தால் அவர்களை எளிதில் வீழ்த்தியிருக்கலாம். அவர்கள் பின்வாங்கி வந்ததை தோற்று ஓடுகிறார்கள் என்று எண்ணி அதிவேகத்தில் விரட்டி வந்தது எவ்வளவு மடத் தனம்” என்று எண்ணி தன்னையே அக்கணம் நொந்து கொண்டாள்.

புத்திசாலித் தனமாக தன்னை நதியிலிருந்து பிரித்து கடலுக்குள் இழுத்து வந்த சோழப் படைத் தலைவனை நோக்கினாள் வர்த்தினி. சோழ மரக்கலங்களான சொழாந்தியக் கலங்கள் அனைத்தும் பிறை வடிவ நிலையில் அணிவகுத்து நிற்க பரதவன் குமரன் மட்டும் அக்ரமண்டல கலத்தில் பிறை வடிவ அணிவகுப்பிற்கு முன்புறமாக கையில் வாளுடன் நின்றுகொண்டிருந்தான்.

அணிவகுத்து நின்ற சோழ மரக்கலங்களுக்கு சற்றுத் தொலைவில் கலிங்க மரக் கலங்கள் நின்றுகொண்டிருந்தன. கரையை நோக்கினான் பரதவன் குமரன். தன் வாழ்நாளில் பாதிக்கு மேற்பட்ட நாட்களை கடலிலேயே கழித்த இம்ஹோடெப் கலிங்க கடற்கரையின் ஆழமில்லாத பகுதியையும், ஆழமுடைய பகுதியையும் கடல் நீரின் நிறத்தை வைத்தே கண்டுபிடித்து கலங்களை சிக்கிக் கொள்ளாமல் செலுத்தி கரையில் நின்றுகொண்டிருந்த கலிங்க வீரர்

களைக் கொன்று முன்னேறிக் கொண்டிருந்தான்.

மரக் களத்தில் நின்றபடியே சீழ்க்கை ஒலி எழுப்பினான் பரதவன் குமரன். அடுத்த கணம் அவனது பெரிய அக்ர மண்டலக் கலத்திலிருந்து அவனது புரவி அவனுக்கு முன் நின்று கனைத்தது. அதன் மீது ஏறி அமர்ந்த பரதவன் குமரன் வாளினை வானை நோக்கி உயர்த்தி, “ஒருவர் கூட இங்கிருந்து உயிரோடு கரைக்குச் செல்லக் கூடாது. துடுப்புகள் துழாவப்படட்டும்!” என வெறிபிடித்தவனைப் போன்று கட்டளையிட்டான்.

சொழாந்தியக் கலத்தில் வீரர்கள் துடுப்புகளை துழாவத் துவங்கினார்கள். சொழாந்தியக் கலங்கள் அனைத்தும் கலிங்க மரக் கலங்களை நோக்கி அதி வேகத்தில் விரைந்து சென்றன. சோழ மரக்கலங்கள் கலிங்க மரக்கலங்களை நெருங்க நெருங்க அவற்றின் பிறை வடிவ வியூகம் மாறி விரைந்து செல்லும் அம்

பினைப் போன்று சென்றுகொண்டிருந்த னர்.

சோழர்களின் சொழாந்தியக் கலங் கள் தாக்குவதற்கு வருவதைக் கண் டதும் வர்த்தினியும் தனது வீரர்களுக் குக் கட்டளையிட்டாள். அவளது கட் டளை எழுந்த அடுத்த கணம் கலிங்க மரக் கலங்களும் சோழ மரக்கலங்களை நேருக்கு நேர் தாக்குவதற்கு புறப்பட்டன.

பரதவன் குமரனைப் போன்று வர்த் தினி படையின் முகப்பில் நின்று படை யினருக்குக் கட்டளையிட்டு வழி நடத் தாமல் கலிங்கப் படையின் மையத்தில் நின்று கட்டளையிட்டுக் கொண்டிருந் தாள். அவளும் கையில் நீண்ட வாளுடன் நின்றுகொண்டிருந்தாள்.

ஒன்றை ஒன்று நோக்கி வந் துகொண்டிருந்த சோழ மற்றும் கலிங்க மரக்கலங்கள் அதிவேகத்தில் மோதிக் கொண்டன. மோதிக்கொண்ட தும் அனைத்து மரக் கலங்களும் ஒரு

https://telegram.me/aedahamlibra

கணம் குலுங்கி அடங்கின. சோழ வீரர்கள் அனைவரும் கலிங்கத்தின் கலங்களுக்குள் நுழைந்து தாக்கினார்கள்.

இரு தரப்பு வீரர்களும் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டார்கள்.

புரவியின் மீது அமர்ந்திருந்த பரதவன் குமரன் கையில் வாளுடன் கலிங்க மரக்கலங்களுக்குள் தாவிச் சென்று எதிர்பட்ட கலிங்க வீரர்கள் அனைவரையும் தனது வாளுக்கு இரையாக்கிவிட்டு வீரர்களுக்கு மத்தியில் நின்று கட்டளையிட்டுக்கொண்டிருந்த வர்த்தினியை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தான்.

உடல் முழுவதும் கவசம் அணிந்திருந்த வர்த்தினி எதிர்ப்பட்ட சோழ வீரர்களைத் தாக்கிவிட்டு நேரே புரவியின் மீது அமர்ந்திருந்த பரதவன் குமரனை நோக்கி அவளும் வந்துகொண்டிருந்தாள்.

பரதவன் குமரனை நெருங்கிய துமே அவனை நோக்கி கையிலிருந்த வாளினை வேகமாக எறிந்தாள் வர்த்தினி. தன்னை நோக்கி வந்த வாளினைக் கண்ட பரதவன் குமரன் தலையைக் குனிந்துகொண்டான். பறந்து சென்ற வாளானது பின்னால் சண்டையிட்டுக் கொண்டிருந்த வீரன் ஒருவனின் மார்பில் பாய்ந்து குருதியைக் குடித்துக் கொண் டிருந்தது. இரு படைகளின் தாக்குதலி னால் கலிங்கக் கடலே குருதியில் சிவந்து கொண்டிருந்தது.

கையில் வேல் ஒன்றைத் தாங்கிக் கொண்ட வர்த்தினி பரதவன் குமரனைத் தாக்கினாள். அவளது தாக்குதலைத் தடுத்த பரதவன் குமரனும் எதிர் தாக்கு தலை தொடுக்கலானான். பரதவன் கும ரனின் தாக்குதலை வெற்றிகரமாக தடுத் துக்கொண்டு யுத்தம் செய்து கொண்டி ருந்தாள் வர்த்தினி.

https://telegram.me/aedahamlibra

புரவியின் மீது அமர்ந்தபடி தாக்கியதால் பரதவன் குமரனின் வாளினை தடுக்க வர்த்தினிக்கு எந்த பிரச்சனையும் இருக்கவில்லை. அவளது கையில் நீண்ட வேல் இருந்ததால் பரதவன் குமரனின் தாக்குதல் தொலைவிற்கு சற்றே எட்ட நின்று தாக்கிக்கொண்டிருந்ததால் பரதவன் குமரனின் வாள் வர்த்தினியை எட்டவில்லை.

அவளது தாக்குதலை எதிர்கொள்ள பரதவன் குமரனே தடுமாறிக் கொண்டிருந்தான். இதை அவளது தாக்குதலை எதிர்கொண்ட அடுத்த கணமே புரிந்துகொண்ட பரதவன் குமரன் கையிலிருந்த வாளினை வர்த்தினிக்கு ஆதரவாக சண்டையிட வந்த கலிங்க வீரனை நோக்கி எறிந்து அவனைக் கொன்றவன் கையை உயர்த்தினான். அவனுக்குப் பின்னால் நின்று சண்டையிட்டுக் கொண்டிருந்த அவனது மெய்க் காவலன் நீண்ட வேல் ஒன்றை பரதவன் குமரனை நோக்கி எறிந்தான்.

https://telegram.me/aedahamlibra

அதைப் பிடித்துக்கொண்டவன் தன்னை நோக்கி வந்த வர்த்தினியின் வேலை தடுத்து நிறுத்தி தள்ளி விட்டான். மீண்டும் பரதவன் குமரனின் கழுத்தை நோக்கி வேலினை அதிவேகத்தில் இறக்கினாள் வர்த்தனி.

தனது கையிலிருந்த வேலினால் தன்னை நோக்கி வந்த வர்த்தினியின் வேலினை ஓங்கி அடித்தான் பரதவன் குமரன். அடுத்த கணம் அவளது கையிலிருந்த வேல் விடுபட்டு கடலில் விழுந்தது. அவள் ஆயுதத்தை இழந்ததும் கண நேரமும் பரதவன் குமரன் தாமதிக்கவில்லை. தனது கையிலிருந்த வேலினை அவளது மார்பை நோக்கி இறக்கினான்.

அவனது வேல் தன்னை நோக்கி வேகமாக இறங்குவதைக் கண்ட வர்த்தினி நகர்ந்துகொண்டாள். அந்த வேல் அவளது தோளில் காயத்தை ஏற்படுத்தியபடி பாய கீழே விழுந்தவள் மரக்கலத்

தில் கிடந்த வேலினைக் கையில் எடுத்துக் கொண்டாள்.

கையில் எடுத்த வேலினை அவள் பரதவன் குமரனை நோக்கி எறிவதற்குள் அவளது கழுத்தை நோக்கி மீண்டும் வேலினை இறக்கினான். அப்போது படகின் மீது இன்னொரு படகு மோதி அவள் நிலை தடுமாற பரதவன் குமரனின் வேலானது வர்த்தினியின் தலைக் கவசத்தை தாக்க அது தலையிலிருந்து விடுபட்டு கடலுக்குள் சென்று விழுந்தது.

தலைக் கவசம் விழுந்ததால் விடுபட்ட அவளது கூந்தல் சரிய அவளை அதிர்ச்சியுடன் நோக்கினான் பரதவன். "ஒரு பெண்ணைத் தாக்கிவிட்டோமே" என பரதவன் குமரன் அதிர்ச்சியில் அவளையே பார்த்துக்கொண்டிருக்க தலையில் தாக்கப்பட்டதால் வர்த்தினி மயக்கமடைந்து கீழே சரிந்தாள்.

அவள் கீழே விழுவதற்குள் அவளைத் தாங்கிப் பிடித்துக்கொண்ட பர

https://telegram.me/aedahamlibra

தவன் குமரன் அவளைத் தூக்கி மடியின் மீது போட்டுக்கொண்டு அவளது வதனத்தை நோக்கினான். அவளது வதனத்தை நோக்கிய அடுத்த கணம் அது வரை அவனுக்குள் கொழுந்து விட்டு எரிந்துகொண்டிருந்த போர் வெறி காணாமல் போனது.

வர்த்தினி தோற்கடிக்கப்பட்டதால் கலிங்க வீரர்கள் சரண் அடைந்தார்கள். சரணடைய மறுத்து எதிர்த்த வீரர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர்.

எதிர்த்த கலிங்கப் படையைக் கொன்று வர்த்தினியையும் தோற்கடித்த பரதவன் குமரன் கைப்பற்றிய மரக் கலங்கள் மற்றும் வர்த்தினியுடன் போர்க் களத்தை நோக்கி கம்பீரமாகச் செல்லலானான்.

https://telegram.me/aedahamlibra

# 45.

# அசுரனின் கோர தாண்டவம்

கருட வியூகத்திற்கு கவசமாக கருடனின் அலகில் நிலை கொண்டிருந்த புரவி படைகளை செங்குவீரனின் தலைமையிலான புரவிப் படைகள் துவம்சம் செய்துகொண்டிருந்த அதே நேரம் திருக்கண்ணன் மற்றும் வில்லவன் ஆகியோர் புரவிப் படையுடன் கருட வியூகத்தின் இறக்கைகளை உடலிலிருந்து துண்டித்து வெட்டியபடி நெடுந்தூரம் ஊடுருவித் தாக்கிக்கொண்டிருந்தார்கள். வில்லவன் மற்றும் திருக்கண்ணன் அசுரப் படையிலி

ருந்து பிரிந்து கருடனின் இறக்கைக்குள் ஊடுருவியதும் அவ்விடத்தை ஆக்கிர மித்துக்கொண்ட சோழப் புரவித் தேர் கள் படர்ந்து கருடனின் இறக்கையில் நிலை கொண்டிருந்த புரவிகளையும், புரவித் தேர்களையும் எதிர்கொண்டார் கள். புரவித் தேர்கள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டன. புரவித் தேர்களின் மீது அமர்ந்திருந்த வீரர்கள் எய்த அம் பும், வேலும் எதிரில் நின்றவர்களின் மார் பில் பாய்ந்து உயிரைக் குடித்துக்கொண் டிருந்தன. கருடனின் இரண்டு புறத்திலும் நின்றுகொண்டிருந்த காலாட்படையினர் பிரிந்து போய் கருடனின் இருபக்க இறக் கையின் வெளிப்புற விளிம்பில் தாக்கு தலை மேற்கொண்டார்கள்.

அதே நேரம் சோழப் படையை இடது, வலது மற்றும் பின்புறத்தில் கலிங்க வீரர்கள் எதிர்பாராமல் தாக்க அப்போதுதான் பரதவன் குமரன் வர்த் தினியைத் தாக்கி அவளை கடலுக் குள் இழுத்துச் சென்றுகொண்டிருந் தான். சோழப் படையை வலப்புறமாகத் தாக்கிய மரக்கல வீரர்களை இம்ஹோ டெப் பின்புறமாகத் தாக்கினான். கலிங்க வனத்தின் குன்றுகளில் மறைந்திருந்து

திடீரென்று வெளிப்பட்டு இடப் புறமா கத் தாக்கிய வில் வீரர்களை நோக்கி சோழ வளைவிற்பொறி மற்றும் கல்லிடு கூடை நெருங்க விடாமல் அம்புகளை யும், பாறைக் கற்களையும் மழையைப் போன்று பெய்து அவர்களை நெருங்க விடாமல் செய்தன.

கருடனின் உடலில் நிலை கொண் டிருந்த வில் வீரர்கள் தொடர்ந்து சோழப் படையினர் மீது அம்புகளை எறிய லானார்கள். சோழ வீரர்கள் கேடயங் களை உயர்த்தி அவற்றைத் தாங்கியப டியே கலிங்க வீரர்களை துவம்சம் செய் துகொண்டிருந்தார்கள். கலிங்கப் படை யின் இறக்கைக்குள் ஊடுருவிய திருக் கண்ணனும், வில்லவனும் முன்னேறி புர விகளில் அமர்ந்திருந்தபடியே கையில் வேலுடன் வில் வீரர்களை சூறையாடத் துவங்கினார்கள். தொலைவில் இருக் கும் வில் வீரர்களைத் தாக்கி அழிக்கும் வில் வீரர்களால் அருகில் நின்று வேல் களை எறிந்து தாக்கும் புரவிப் படையை

எதிர்கொள்ள இயலாமல் திணறி மடிந்து கொண்டிருந்தார்கள்.

கருடனின் அலகுப் படை ஏற்கனவே மொத்தமாக அழிக்கப்பட்டிருக்க கலிங்காதிபதி காரவேலர் கருட வியூகத்தின் முனைப்பில் யானைப் படைகளுக்கு மத்தியில் நின்றுகொண்டு தாக்குதல் தொடுத்துக்கொண்டிருந்தார். அவருக்குப் பின்னால் அணிவகுப்பு குலையாமல் பீமவேலன் புரவிப் படைக்குத் தலைமை தாங்கிக்கொண்டு சோழப் படையின் தாக்குதலுக்கு ஏற்ப படை வீரர்களுக்கு கட்டளை விதித்து தாக்கிக்கொண்டிருந்தான். அவனுக்குப் பின்னால் கருடனின் உடலில் நின்றிருந்த வில் வீரர்கள் அனைவரும் திருக்கண்ணன் மற்றும் வில்லவனால் கொடூரமாகக் கொல்லப்பட்டுக் கொண்டிருந்தார்கள். உடனே பீமவேலன், “கருட வியூகத்தின் பின்புறமாக இறக்கையில் இருக்கும் காலாட்படையினர் சோழப் புரவிப் படையை தாக்கட்டும்!” எனக் கட்டளையிட்டான்.

https://telegram.me/aedahamlibrary

பீமவேலன் சரியான தற்காப்பு நடவடிக்கை எடுத்தாலும் அவனது கட்டளையை பரந்து விரிந்த கருட வியூகத்திற்குள் கொண்டு சேர்க்க யாரும் உயிரோடு இல்லாததை அறிந்தவன் புரவியில் அமர்ந்தபடியே வாளினை உயர்த்தி காலாட்படைகளை நோக்கிச் சுட்டிக் காட்டினான்.

அவனது கட்டளையைப் புரிந்து கொண்ட கலிங்கத்தின் உபதலைவர்கள் உடனடியாக செயல்படத் துவங்கினார்கள். திருக்கண்ணன் மற்றும் வில்லவனின் புரவிப் படையைத் தாக்க கலிங்க காலாட்படையினர் நகருவதைப் பார்த்த கரிகாலர், “செங்கோடரே... முன்னேறுங்கள்!” எனக் கட்டளையிட்டார்.

கரிகாலரின் கட்டளை எழுந்தது தான் தாமதம். அடுத்தகணம் யானையின் மீது அமர்ந்திருந்த கிழட்டு வீரரான செங்கோடர் விரைந்து சென்று கருட வியூகத்தின் முகப்பில் நின்றுகொண்டு சோழ

வீரர்களைத் தாக்கிக்கொண்டிருந்த கார வேலரின் யானைப் படையைத் தாக்கி னார். அணிவகுத்து நின்றுகொண்டிருந்த கலிங்க யானைகளின் மீது சோழ யானை கள் முரட்டுத் தனமாக மோதிக்கொண் டன. யானைகளின் நீண்ட தந்தத்தில் எதிர்பட்ட யானைகள் கிழித்து எறியப்பட் டன. தும்பிக்கையை உயர்த்தி அடித்துக் கொண்டன. யானைகளின் மீது அமர்ந் திருந்த குஞ்சர மல்லர்கள் ஒருவரை ஒருவர் நீண்ட வாட்களாலும், வேல்க ளாலும் தாக்கிக்கொண்டார்கள். சிறு சிறு மாமிச மலைகள் மோதிக் கொள்வதைப் போன்றே யானைப் படைகள் மோதிக் கொண்டன.

அணிவகுப்பு குலைந்து விடக் கூடாது என்று காரவேலர் யானைப் படையை நகர்த்தாமல் ஒரே இடத் தில் நின்றபடியே போரிட்டார். ஆனால், சோழ யானைப் படை ஒரே இடத் தில் நின்று போரிடாமல் தாக்குதலுக்கு ஏற்ப நகர்ந்து போரிட்டார்கள். சோழப்

படையின் யானைகள் எதிர்பட்ட கலிங்க யானைகளையும், வீரர்களையும் கிழித்தும், தூக்கி எறிந்தபடியும் தொடர்ந்து முன்னேறிக்கொண்டிருந்தன. முன்னேறிய சோழ யானைகளின் மீது கருட வியூகத்தின் கழுத்து, இறக்கை, உடல் ஆகியவற்றின் மீது நிலை கொண்டிருந்த கலிங்க வீரர்கள் கண்மூடித்தனமாகத் தாக்கினார்கள். தோளில் பாய்ந்திருந்த சில அம்புகளைப் பொருட்படுத்தாத செங்கோடர் காரவேலரை நோக்கி நெருங்கிக்கொண்டிருந்தார்.

காரவேலரும் தன்னை நெருங்கிய செங்கோடரை நேருக்கு நேர் எதிர்கொண்டார். இருவரின் வேல்களும் நேருக்கு நேர் மோதிக்கொண்டன. இருவரது யானைகளும் ஒன்றையொன்று தாக்கிக்கொண்டன. யானைகளின் மீது அமர்ந்திருப்பவரின் கட்டளைகளுக்கு ஏற்ப இருவரின் யானைகளும் நகர்ந்தும், முன்னேறியும் தாக்குதல் தொடுத்துக்கொண்டிருந்தன.

சோழ யானைப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்ட காரவேலருக்கு உதவ பீமவேலன் தனது புரவி படையை நகர்த்த நினைத்தான். ஆனால், அவனது புரவிப் படை அங்கிருந்து நகர்ந்தால் அடுத்த கணம் கருட வியூகத்தின் அணிவகுப்பு மொத்தமும் குலைந்துபோய்விடும் என்பதை உணர்ந்தவன், கருடனின் இறக்கையில் இரண்டாவது வரிசையில் அணிவகுத்து நின்ற புரவி வீரர்களுக்கு, “அரசரைத் தாக்கும் யானைப் படையை விரட்டியடியுங்கள்!” எனக் கட்டளையிட்டான்.

புரவிகள் அனைத்தும் செங்கோடரை எதிர்க்க விரைந்து வந்துகொண்டிருந்தன. அப்போது தனது பட்டத்து யானையின் மீது அமர்ந்தபடியே செங்கு வீரனை நோக்கினார் கரிகாலர். அவன் வெகுதொலைவில் தனது புரவிப் படையுடன் கலிங்க வீரர்களை கொன்று குவித்துக்கொண்டிருந்தான்.

அப்போது கரிகாலர் அவருக்கு இரண்டு புறத்திலும் நின்றுகொண்டிருந்த புரவிப் படைக்குத் தலைமை எற்றுக் கொண்டு நின்ற திவ்யனை நோக்கி, "தலைவரே... செங்கோடரைத் தாக்க கலிங்கத்தின் பெரும் புரவிப்படை ஒன்று விரைந்து வந்துகொண்டிருக்கிறது. செங் கோடருக்கு உதவுங்கள்!" எனக் கட்ட ளையிட்டார்.

"நான் சென்றுவிட்டால் உங்களை யார் காப்பது?" என வினவினான் ஊடுரு விய கலிங்க வீரர்களைக் கொன்றபடியே.

"என்னைக் காத்துக்கொள்ள எனக்குத் தெரியும். தாங்கள் உடனே செங்கோடருக்கு உதவுங்கள். செங்கோ டர் வீழ்ந்தால் அடுத்து கலிங்கத் தின் யானைகள் நம்மைத்தான் தாக்கும். நிலைமை சிக்கலாகுவதற்குள் விரைந்து செல்லுங்கள்" எனக் கட்டளையிட்டார்.

கரிகாலரின் கண்டிப்பான உத்த ரவு கிடைத்ததும் திவ்யன் தனது பெரும்

https://telegram.me/aedahamlibra

புரவிப் படையை அழைத்துக்கொண்டு செங்கோடரைத் தாக்க வந்த கலிங்கப் புரவிகளை நோக்கி அதிவேகத்தில் சென்று கண்மூடித்தனமாக தாக்குதல் தொடுக்கலானான். அவனது புரவிகளின் வேகத்தை விடவும் அவனது கையில் இருந்த செண்டு சுழல எதிர்பட்ட புரவி வீரர்கள் அனைவரும் மடிந்து விழுந்து கொண்டிருந்தார்கள்.

தாக்குதல் உக்கிரத்தை அடைந்ததும் கரிகாலர் கையிலிருந்த கொம்பினை வேகமாக ஊதினார். கரிகாலரின் கொம்பு சத்தம் கேட்டதும் செங்குவீரன் தனது புரவிப் படையுடன் அதிவேகமாக பீமவேலனை நோக்கி வந்துகொண்டிருந்தான். செங்குவீரன் தொலைவிலிருந்து அதிவேகமாக வந்துகொண்டிருந்ததை பீமவேலனும் கவனித்தான். பீமவேலனுக்குத் தெரியும். "செங்குவீரன் தன்னை நோக்கித்தான் அதிவேகத்தில் வந்துகொண்டிருக்கிறான் என்று. செங்குவீரன் மட்டும் தன்னை இதே வேகத்

தில் மோதினால் தான் நின்றுகொண்டி ருக்கும் கருடனின் கழுத்து வியூகத்திலி ருந்து வெட்டப்படும். தான் வெட்டப்பட் டால் தந்தை தனியாக பிரிக்கப்படுவார்" என்பதை உணர்ந்தவன் கொம்பினை விட்டு விட்டு நீண்ட நேரம் ஊதினான்.

அவனது கொம்பு அடுத்தடுத்து ஊதப்பட்ட அடுத்த கணம் பூமியே அதி ரும் படியான சத்தம் எழுத்து. அப்போது கலிங்க வீரர்கள் சற்றே விலகி வழிவிட வியூகத்தின் பின்புறத்தில் இரகசியமாக நெருங்க நிற்கவைக்கப்பட்டிருந்த ஆயி ரக்கணக்கான எருமைகள் முண்டியடித் துக்கொண்டு எதிர்ப்பட்ட கலிங்க மற்றும் சோழ வீரர்களை தனது வலிமையான கொம்புகளால் தூக்கி எரிந்தபடி முன் னேறிக் கொண்டிருந்தன.

அதிவேகத்தில் வந்துகொண்டி ருந்த செங்குவீரனின் புரவிப் படையை எருமைகள் நேருக்கே நேர் தாக்கி துவம் சம் செய்தபடி ஓடிக்கொண்டிருந்தன.

எருமை ஒன்றினால் தாக்கப்பட்ட செங்கு வீரனின் புரவி அவ்விடத்திலேயே தூக்கி எறியப்பட்டு கீழே விழுந்தது. தூக்கி எறியப்பட்ட புரவியுடன் செங்குவீரனும் கீழே விழுந்தான். விழுந்தவன் கையி லிருந்த வாளினைத் தரையில் ஊன்றி எழுந்து நின்றான். அவனது புரவி கீழே துடித்துக்கொண்டிருந்தது. கையிலிருந்த வாளினை புரவியின் கழுத்தில் செலுத்தி னான் செங்குவீரன்.

அவனது புரவி நீண்ட பெருமூச்சு ஒன்றை விட்டு செங்குவீரனைப் பார்த் தபடியே விழிகளை மூடியது. விழிகளில் துளிர்த்த நீரினைப் பொருட்படுத்தாத செங்குவீரன் தொலைவில் சண்டையிட் டுக்கொண்டிருந்த பீமவேலனை நோக் கியபடியே எதிர்பட்ட கலிங்கர்களைக் கொன்றபடியே நடந்து சென்றுகொண்டி ருந்தான்.

அப்போது அவனுக்குப் பின்புறமாக எருமை ஒன்று, “ம்மா...” என்று அடித்

தொண்டையில் கத்த திரும்பிப் பார்த் தான் செங்குவீரன்.

அன்று கலிங்கப் பட்டினமான சிங் கபுரத்தில் செங்குவீரனால் அடக்கப்பட்ட எருமைகளில் ஒன்று அவனை அடையா ளம் கண்டு முன்னங்கால்கள் இரண்டை யும் சற்றே மடித்தபடி அவனைப் பார்த்து தனது தலையை வேகமாக ஆட்டி கொம் பினை தரையில் குத்தி மண்ணை வாரி இறைத்தது. அதை நோக்கி நடந்தான் செங்குவீரன்.

அப்போதும் அந்த எருமை அப் படியே நிற்க அதன் மீது தாவினான். எருமையைத் தட்டிவிட்டான் செங்குவீ ரன். அவனது கட்டளைப்படியே அவ் வெருமை பீமவேலனை நோக்கி தரை குலுங்க சென்றுகொண்டிருந்தது.

எதிர்பட்ட வீரர்களை அனைவரை யும் தனது கொம்பினால் குத்தித் தூக்கி எறிந்து எவராலும் தடுத்து நிருத்த முடியா மல் அதிவேகமாக சென்றுகொண்டிருந்

https://telegram.me/aedahamlibra

தது அவ்வெருமை. கலிங்க வீரர்களின் விழிகளுக்கு குருதி படிந்து அதிவேகத் தின் கையிலிருந்த வாளினை சுழற்றிய படியே வந்துகொண்டிருந்த செங்குவீரன் எருமையின் மீது வளம் வரும் காலனைப் போன்றே காட்சியளிக்கச் செய்தான்.

பீமவேலனின் வலிமையான தற் காப்புகள் அனைத்தையும் எருமையின் மீது அமர்ந்துகொண்டு தகர்த்தபடி செங் குவீரன் விரைந்துகொண்டிருந்த அதே நேரத்தில் செங்கோடரைத் தாக்க வந்த புரவிப் படையை எதிர்கொண்ட திவ்யன் அதை மொத்தமாக அழித்துக் கொண்டி ருந்தான்.

செங்கோடருக்கும், காரவேலருக் கும் யுத்தம் கடுமையாக நடந்துகொண் டிருந்தது. இருவரது உடலிலும் வாட்கள் தாக்கப்பட்டு குருதித் துளிகள் வழிந் துகொண்டிருந்தன. யானைகளின் தும் பிக்கைகள் இரண்டும் ஒன்றோடொன்று

பிணைத்து சண்டையிட்டுக்கொண்டி ருந்தன.

தலையை நோக்கி வந்த செங் கோடரின் வாளைக் கண்டதும் காரவே லர் தனது யானையைப் பின்வாங்கினார். பின்வாங்கிய அடுத்த கணம் யானையை முன்னே செலுத்தி செங்கோடரின் விலாவை நோக்கி வாளினை வேகமாக இறக்கினார் காரவேலர். யானையைத் திருப்பி அவரது வாளினை நேருக்கு நேர் தடுத்த செங்கோடர் அவரது வாளினை வேகமாகவும் தட்டி விட்டார். இப்படியே ஒருவர் ஒருவர் மாறி ஒருவர் தாக் கிக்கொண்டிருக்க போர் இருவருக்குள் ளும் ஒரு நாழிகைப் பொழுதைக் கடந் தும் நீடித்துக் கொண்டிருந்தது. இரண்டு கிழட்டுச் சிங்கங்களின் உடலிலும் குருதி பெருக்கெடுத்து இருவரின் கரங்களுமே சோர்வடையத் துவங்கியிருந்தன. தனது கையிலிருந்த வாளினை வேகமாக செங் கோடரை நோக்கி எறிந்தார் காரவேலர். செங்கோடர் அதைத் தனது வாளினால்

தட்டி விட அடுத்த கணம் யானையிலிருந்து தாவிய காரவேலர் செங்கோடரின் மீது பாய்ந்தார். அவரைத் தடுப்பதற்குள் காரவேலரால் தாக்கப்பட்ட செங்கோடர் யானையிலிருந்து கீழே விழுந்தார். செங்கோடருடன் காரவேலரும் கீழே விழுந்தார்.

இருவரும் ஆயுதமின்றி தாக்கியபடி மண்ணில் விழுந்து புரண்டு கொண்டிருந்தனர். செங்கோடரின் மணிக்கட்டு காரவேலரின் கன்னத்தை வேகமாகத் தாக்கியது. காரவேலரின் கை முட்டி செங்கோடரின் தோளில் வேகமாக இறங்கியது. இருவரும் வலியினால் துடித்தாலும் போரில் வெற்றி அல்லது வீர மரணம் எனும் உத்வேகத்தில் கை மற்றும் கால்களையே ஆயுதமாக்கி இருவரும் ஒருவரையொருவர் தாக்கிக்கொண்டிருந்தனர். சுற்றி சண்டையிட்ட கலிங்க மற்றும் சோழ வீரர்கள் கூட அக்கணம் சண்டையை நிறுத்திவிட்டு இரண்டு கிழட்

டுச் சிங்கங்களின் முரட்டுச் சண்டையை வேடிக்கை பார்க்கத் துவங்கினர்.

செங்குவீரன் எருமையின் மீது அமர்ந்தபடி வருவதை பார்த்த பீமவேலன், "எருமையின் மீது வந்துகொண்டிருக்கும் படைத் தலைவரை தடுத்து நிறுத்துங்கள்!" எனக் கூறிக்கொண்டு செங்கோடருக்கு உதவ விரைந்தான்.

ஆனால், பீமவேலன் அனுப்பிய வீரர்கள் அனைவரும் எருமையின் கொம்பினால் தாக்கப்பட்டு கீழே விழ செங்குவீரனின் வாளினால் புரவி வீரர்கள் மண்ணில் உயிரை விட்டு சரிந்தார்கள். காரவேலருக்கு உதவுவதற்கு சென்றுகொண்டிருந்த பீமவேலனை இடையில் மறித்தபடி எருமையின் மீது நின்றுகொண்டிருந்தான் செங்குவீரன்.

"தாக்குங்கள்!" எனத் தனது வீரர்களுக்கு மீண்டும் கட்டளையிட்டான் பீமவேலன்.

அடுத்த கணம் புரவிகளும், காலாட் வீரர்களும் செங்குவீரனைச் சுற்றி வளைத்தார்கள். ஒருகணம் சுற்றி நின் றவர்களை நோக்கினான் செங்குவீரன். அடுத்தகணம் புரவி வீரர்கள் மற்றும் காலாட்படையினர் அனைவரும் ஒரே நேரத்தில் எருமை மீது அமர்ந்திருந்த செங்குவீரனை நோக்கி வாளினை வீசிய படியே தாவினார்கள்.

எருமையின் மீது அமர்ந்திருந்த படியே கையிலிருந்த வாளினை வேக மாக வீசினான் செங்குவீரன். அவனை நோக்கி வந்தவர்கள் அனைவரும் வாளி னால் வெட்டப்பட்டு மண்ணில் விழுந் தார்கள். எருமையைத் தட்டிவிட்டான். அடுத்த கணம் எருமை அதிவேகத்தில் பீமவேலனை நோக்கி நெருங்கியது.

பீமவேலனும் புரவியில் அமர்ந் திருந்தபடியே செங்குவீரனைத் தாக்கி னான். அவனது வாள் அதிவேகத்தில் சுழன்றாலும் அதை அந்தரத்திலேயே

தடுத்துக் கொண்டிருந்தான் செங்குவீ ரன். பீமவேலனுக்கு எந்த விதத்திலும் காயத்தை உருவாக்கக்கூடாது எனும் நினைப்பில் பீமவேலனின் தாக்குதலை செங்குவீரன் தடுத்துக் கொண்டிருந் தான். செங்குவீரனுக்கும் பீமவேலனுக் கும் யுத்தம் நடந்துகொண்டிருந்த அதே வேளையில் காரவேலருக்கும், செங்கோ டருக்கும் யுத்தம் இறுதி கட்டத்தை அடைந்திருந்தது.

இருவரும் தரையில் உருண்டு சண்டையிட்டுக் கொண்டிருந்த வேளை யில் தரையில் கிடந்த நீண்ட வாள் ஒன்றைக் கையில் எடுத்து செங்கோ டரை நெருங்கினார் காரவேலர். கார வேலன் கையில் ஆயுதத்தை எடுத்ததும் இடையில் வைத்திருந்த குறுவாளினைக் கையில் எடுத்தார் செங்கோடர்.

அவரது கையிலிருந்த குறுவாளி னைப் பொருட்படுத்தாத காரவேலர் செங்கோடரின் மீது பாய்ந்தார். காரவே

லரின் வாளினைத் தடுக்க செங்கோடர் தனது குறுவாளினை உயர்த்துவதற்குள் காரவேலரின் தோளில் பாய்ந்து மார்பு வரை இறங்கியிருந்தது. காரவேலரின் வாள் செங்கோடரின் தோளில் பாய்ந்த தால் காரவேலர் வெற்றிப் பெருக்குடன் வாளினை வெளியே இழுத்தார்.

காரவேலர் தனது வாளினை வெளியே இழுக்க மண்டியிட்டபடி கீழே அமர்ந்தார் செங்கோடர். வெற்றிப் பெருக்குடன் குருதி படிந்த தனது மார் பினைத் தட்டி தனது வெற்றியை உறு திசெய்துகொண்டார் காரவேலர். அவரது நரைத்த முடிகள் அனைத்திலும் குருதிக் கறை படிந்து அவரது வீரத்தை நன்கு வெளிப்படுத்தியிருந்தன.

காரவேலர் செங்கோடரை வெற் றிச் செருக்குடன் நோக்கினார். அப்போ தும் செங்கோடர் காரவேலரைப் பார்த்து புன்னகைக்கச் செய்தார். புன்னகைத் தபடியே மற்றொரு கையில் வைத்தி

ருந்த குறுவாளினை உயர்த்தினார். அந்தக் குறுவாளில் குருதி சொட்டு சொட்டாக வடிந்துகொண்டிருந்தது. அதைப் பார்த்த அதிர்ச்சியில் காரவேலர் தனது வயிற்றை நோக்கினார். அவரது அடிவயிற்றில் செங்கோடரின் மெல்லிய குறுவாள் ஆழமாக இறங்கியிருந்தது.

அதைப் பார்த்த அடுத்த கணத்தில் காரவேலரின் முகத்தில் தோன்றிய வெற்றிக் களிப்பு மறைந்து போனது. காரவேலர் கையில் வாளுடன் பாய்ந்து செங்கோடரின் தோளில் வாளினை செலுத்த வாளை ஓங்கியபோது செங்கோடர் தன் கையிலிருந்த குறுவாளினை தனது வயிற்றுக்குள் செலுத்தி தன்னை வீழ்த்திவிட்டதை உணர்ந்த காரவேலர், “இது பெருமைப் படும்படியான தோல்விதான். வீரமரணத்தை அளித்தமைக்கு நன்றி!” எனக் கூறியபடியே தரையில் விழுந்தார்.

காரவேலரின் தோல்வியைப் பார்த்ததும் செங்கோடரும் வெற்றிப் பெருமி

தத்துடன் நரைத்திருந்த தனது மீசையை சுற்றி நின்ற கலிங்க வீரர்களைப் பார்த்த படியே கம்பீரமாக நீவி விட்டார். அடுத்த கணம் அவரும் தரையில் விழுந்தார்.

செங்குவீரனும், பீமவேலனும் கடுமையாக யுத்தம் செய்துகொண்டிருந்தார்கள். செங்குவீரனின் தாக்குதல் அனைத்தையும் திடமாக எதிர்கொண்டிருந்தான் பீமவேலன். பீமவேலன் புரவியின் மீது அமர்ந்திருந்த படியே வேகமாக் இயங்கிக்கொண்டிருந்தான். அப்போது காரவேலர் இறந்துவிட்டதற்கான அறிவிப்பாக நீண்ட நேரம் சங்கு முழங்கிக் கொண்டிருந்தது. "கலிங்க இளவரசே... போர் முடிந்துவிட்டது. உங்களது தாக்குதலை இத்தோடு நிறுத்திக் கொள்ளுங்கள்" என எச்சரிக்கை செய்தான் செங்குவீரன்.

"நான் உயிருடன் இருக்கும் வரை இந்தப் போர் தொடர்ந்து நடைபெற்றுக்

கொண்டிருக்கும்" என பீமவேலன் முழங்கியபடியே கடுமையாகத் தாக்கினான்.

அவனது பலம் மிகுந்த தாக்குதலை தனது வாளினால் தாங்கிக்கொண்டிருந்த செங்குவீரன், "உனது படை முக்காலுக்கு மேல் அழிந்துவிட்டது இளவரசே... நீங்கள் சரணடைய மறுக்கும் ஒவ்வொரு கணமும் உங்கள் வீரர்கள் அழிந்துகொண்டிருப்பார்கள். எஞ்சியிருக்கும் படையையும் இழந்துவிடாதீர்கள்!" எனக் கூறியபடியே அவனது வாளினை ஓங்கி அடித்தான் செங்குவீரன்.

அடுத்த கணம் அவனது வாள் பீமவேலனின் கையிலிருந்து பறந்து சென்றுகொண்டிருந்தது. எருமையின் மீது அமர்ந்திருந்தபடியே பீமவேலனின் கழுத்தில் தனது வாளினை வைத்த செங்குவீரன், "போர் இத்தோடு முடிந்துவிட்டது" என உரக்க ஆணையிட்டான்.

தனது தோல்வியை ஏற்றுக்கொள்ள இயலாத பீமவேலன், "என் தந்தையைப்

போன்றே எனக்கும் வீர மரணத்தை அளித்துவிடுங்கள்!” எனக் கூறியபடியே மண்டியிட்டான்.

அப்போது அங்கு வந்த கரிகாலர், “எங்கள் படைத் தலைவரை எதிர்த்த வர்களில் மிகச் சிறந்த வீரர் நீங்களாகத் தான் இருப்பீர்கள் கலிங்க இளவரசே...” எனக் கூறிக்கொண்டே யானையின் மீதி ருந்து குதித்தார்.

“இவருடன் எனது தாக்குதல் அரை நாழிகை நேரம் கூட நீடிக்கவில்லை. நான் மிகச் சிறந்த வீரனா?” என வினவி னான் பீமவேலன்.

“வீரம் தனியொருவனின் பலம் மட் டும் அல்ல இளவரசே... படைகளை திற மாக நடத்துவதும் ஒரு வகை வீரம் தான். அந்த வகையில் தாங்கள் மிகச் சிறந்த வீரர்!” எனத் தெரிவித்த செங்குவீரன் பீம வேலனை நிற்க வைத்தான்.

https://telegram.me/vedahamlibra

கருட வியூகத்தை சிதறடித்து மொத்தமாக அழித்த அசுர வியூகத் தலைவர்களான வில்லவன், திருக்கண் ணன், திவ்யன் ஆகியோர் கரிகால ருக்கு முன் உடல் முழுவதும் படிந்த குருதிக் கறையுடன் வெற்றிக்களிப்புடன் வந்து நின்று வணங்கினார்கள். அப்போது இம்ஹோடெப்பும் கலிங்கக் கலங்களை வீழ்த்திவிட்டு பெருமிதத்துடன் வந்த வன் கரிகாலரையும், செங்குவீரனையும் வணங்கினான்.

சுற்றிலும் விழுந்து கிடந்த கலிங்க வீரர்களின் உடல்களை நோக்கினர் அனைவரும். அசுர வியூகம் தனது கோர தாண்டவத்தை அரங்கேற்றியிருந்தது. கலிங்கப் படையில் முக்கால்வாசிக்கு மேல் இறந்திருந்தார்கள். உயிரோடு எஞ் சியிருந்தவர்கள் பெரும் காயத்துடன் துடித்துக்கொண்டிருந்தார்கள்.

சோழப் படை வெற்றி பெற்றதற் கான அறிவிப்பு வெளியானது. எங்கெங்

கும் சோழ வீரர்கள் புலிக்கோடியை உயர்த்திப் பிடித்து கொண்டாடினார்கள். அப்போது இம்ஹோடெப், “தலைவரே... அங்கே பாருங்கள்!” என செங்குவீரனிடம் சுட்டிக் காட்டினான்.

இம்ஹோடெப் சுட்டிக் காட்டிய திசையை நோக்கினான் செங்குவீரன். அங்கே பரதவன் குமரன் வர்த்தினியைத் தோளில் போட்டுக்கொண்டு வெற்றிக் களிப்புடன் அவர்களை நோக்கி புரவியில் வந்துகொண்டிருந்தான்.

வர்த்தினி தாக்கப்பட்டு மயங்கிய நிலையில் பரதவன் குமரனின் தோளில் கிடந்ததைக் கண்டதும் பீமவேலன் ஒரு கணம் தனது படை அடைந்திருந்த தோல்வியைக் கூட மறந்து, “வர்த்தினி... வர்த்தினி...” எனக் கலங்கியபடியே அவளை நோக்கி ஓடினான்.

பரதவன் குமரனைப் பார்த்தபடியே திவ்யன், “செங்குவீரா... இதற்காகத் தான் நீ பரதவன் குமரனை அவசரம் அவசர

https://telegram.me/aedahamlibra

மாக ஓலை எழுதி கலங்களுடன் வரச் சொல்லி கட்டளை விதித்தாயா?" என சிரித்தபடியே வினவினான்.

அப்போது கரிகாலர், "திரும்பிச் செல்வதற்குள் நம் படைத் தலைவர் கள அனைவரும் அவரவர் இணையு டன் தான் திரும்புவார்கள் என்று காலம் நிர்ணயித்திருந்தால் யாரால் தான் மாற்ற முடியும்?" என வினவினார்.

அப்போது திவ்யன் மற்றும் திருக் கண்ணன் இருவரும் நாணம் கொண்டு நிலம் நோக்க மற்றவர்கள் அனைவரும் சிரிக்கலானார்கள்.

https://telegram.me/aedahamlibra

# 46.

# காலிங்காதி பதி குதுப்ஸ்ரீ பீமவேலன்

மௌரியப் பேரரசன் அசோகப் பியதசி கலிங்கத்தின் மீது படையெடுத்து கலிங்கத்தை மொத்தமாக அழித்தான். அவன் இறந்த பிறகு கலிங்கத்தில் சிங்கபுரத்தை தலைமையாகக் கொண்டு மகாமேகவாகன பேரரசு உருவானது. ஆர்யவதத்தில் வலிமை மிக்க பேரரசுகளில் ஒன்றாக கலிங்கத்தை விளங்கச் செய்தவர் கலிங்காதிபதி காரவேலர். சோழப் படையை

எதிர்த்த காரவேலர் வீரமரணம் அடைந் திருந்ததால் அவரது புகழ் மேலும் பர வினாலும் கலிங்க மக்கள் அனைவ ரும் பெரும் துயரத்தில் காணப்பட்டனர். கலிங்கப் பட்டினத்தில் பறந்துகொண்டி ருந்த மகாமேகவாகன சின்னமான கரு டனின் கொடிக்குப் பதில் சோழர்களின் புலிக்கொடி கம்பீரமாகப் பறந்துகொண் டிருந்தது.

சிங்கபுரத்தில் புலிக்கொடி பறக்க படைத் தலைவர்கள் செங்குவீரன், திவ் யன், வில்லவன், திருக்கண்ணன் மற் றும் பரதவன் குமரன் சூழ சோழப் பேரரசர் கரிகாலர் கம்பீரத்துடன் தனது பட்டத்து யானையின் மீது அமர்ந்தபடி சிங்கபுரியின் அரண்மனைக்குள் பிரவே சித்தார். கலிங்கத்தின் மூத்த அமைச்சர் கள் வழிகாட்டியபடி கரிகாலரை மந்திரா லோசனை சபைக்கு அழைத்துச் சென்று கலிங்கத்தின் அரியாசனத்தில் அமர வைத்தனர்.

கலிங்காதிபதியின் சிம்மாசனத்தில் அமர்ந்த கரிகாலர் சபையினரை நோக் கினார். அவருக்கு இரண்டு பக்கங்களி

https://telegram.me/aedahamlibra

லும் காணப்பட்ட ஆசனங்களுக்கு முன் சோழப் படைத்தலைவர்கள், கலிங்க அமைச்சர்கள் என அனைவரும் நின்று கொண்டிருந்தார்கள். கையை உயர்த்தி னார் கரிகாலர். அடுத்த கணம் நின்று கொண்டிருந்த அனைவரும் இருக்கைக ளில் அமர்ந்தார்கள்.

சபையினரை மீண்டும் ஒருமுறை நோக்கினார் கரிகாலர். அங்கே கலிங்கத் தின் இளவரசன் பீமவேலன் இல்லாத தைக் கண்டவர், "கலிங்க இளவரசர் பீம வேலர் எங்கே?" என்று வினவினார்.

சோழப் படைத்தலைவர்கள் ஒருவ ருக்கு ஒருவர் நோக்க கலிங்க அமைச் சர் ஒருவர் எழுந்து, "போரில் ஏற்பட்ட காயங்கள் இன்னும் முழுமையாக குணம டையவில்லை பேரரசே... ஆதலால் அவர் ஓய்வெடுத்துக் கொண்டு இருக்கிறார்!" எனத் தெரிவித்தார்.

அவர் கூறியதைக் கேட்டதும் சிறிது நேரம் அமைதியாக காணப்பட்ட கரிகா

லர் பிறகு, “கலிங்க இளவரசர் உடனே இங்கு வருகை தரட்டும்!” எனக் கட்டளையிட்டார்.

“அவரது உடலில் போர்க் காயங்கள் இன்னும் ஆறவில்லை!” எனத் தெரிவித்தான் திவ்யன்.

“போரில் ஏற்பட்ட விழுப்புண்களைக் கண்டு வீரர்கள் ஒருநாளும் சோர்ந்து போய் அமர்ந்திருக்க மாட்டார்கள். கலிங்கத்தின் இளவரசர் பீமவேலர் பெரும் வீரர் என்பதை யாம் அறிவோம். அவரை உடனே அழைத்துவாருங்கள். அவர் வந்தபிறகு சபை துவங்கட்டும்!”

கரிகாலரின் தீர்க்கமான கட்டளை எழுந்ததும் கலிங்கத்தின் அமைச்சர் ஒருவர் ஆசனத்திலிருந்து எழுந்து பீமவேலனை அழைத்துச் செல்ல விரைந்து சென்றார். பீமவேலன் வரும் வரை சபையினர் காத்திருந்தார்கள். ஒரு நாழிகைப் பொழுது கழித்து பீமவேலன் வாடிய முகத்துடன் அவைக்கு வருகை தந்

தான். போரில் தோல்வியடைந்திருந்த தால் அவனது முகம் வாடியிருக்கிறதா? அல்லது போரில் தோற்றும் வீர மர ணத்தை அடையாததால் முகம் வாடியி ருக்கிறதா? என இனம்காண முடியாத அளவிற்கு அவனது முகம் பொலிவினை இழந்து காணப்பட்டது.

கலிங்காதிபதியின் சிம்மாசனத்தில் அமர்ந்திருந்த கரிகாலரையே விரக்தி யுடன் நோக்கியபடி நின்றுகொண்டிருந் தான் பீமவேலன். அவனை புன்னகையு டன் நோக்கிய கரிகாலர், "இருக்கையில் அமருங்கள் பீமவேலரே..." என அவனுக் காக செங்குவீரனுக்கு அருகில் ஒதுக் கப்பட்டிருந்த ஆசனத்தை நோக்கி கை காட்டினார்.

கரிகாலரின் கட்டளை எழுந்த அடுத்த கணம், "பேரரசர் என்னை அழைத்ததன் காரணத்தை நான் அறிந்துகொள்ளலாமா?" என நின்று கொண்டே வினவினான் பீமவேலன்.

“முதலில் ஆசனத்தில் அமருங்கள் இளவரசே...” எனக் கட்டளையிட்டார் கரிகாலர்.

கரிகாலர் “இளவரசே” என்று அழைத்ததும் பீமவேலன் எதையோ கூற வாயெடுத்தான். ஆனால், அதற்குள் உயர்ந்த கரிகாலரின் அதிகாரப் பார்வை பீமவேலனை அமரச் செய்திருந்தது.

அப்போது எழுந்த கலிங்கத்தின் அமைச்சர் ஒருவர், “பேரரசே... கலிங் கத்தை போரில் வென்று யார் முதன் முத லில் கலிங்கத்தின் அவைக்குள் நுழைந் தாலும் அவர்களுக்கு அமைச்சர்களான நாங்கள் செய்யும் சில நடைமுறை பழக்க வழக்கங்கள் இருக்கின்றன. காலம் கால மாக கலிங்கத்தில் கடைபிடித்துவரும் மர பினை நாங்கள் தொடர்ந்து நடத்த பேர ரரசர் தயவு கூர்ந்து அனுமதிக்க வேண் டும்!” எனப் பணிந்து வேண்டினார்.

உடனே கரிகாலர் பீமவேலனை நோக்கினார். பீமவேலனும் ஆசனத்திலி

ருந்து எழுந்து, "ஆமாம் பேரரசே..." எனக் கூறியபடி தலையை ஆட்டினான்.

"சரி... நீங்கள் கடைப்பிடித்து வரும் மரபு என்னால் ஒருநாளும் தடைபடாது. நீங்கள் தாராளமாக நிறைவேற்றிக் கொள்ளலாம்!" என அறிவித்தார்.

உடனே கலிங்கத்தின் மூத்த அமைச்சர் அருகில் அமர்ந்திருந்த ஒருவரிடம் ஏதோ கட்டளையை வழங்கினார். அடுத்த கணம் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றவர் திரும்பி வரும்போது கையில் தங்கத்தட்டு ஒன்றை பட்டுத்துணியினால் மறைத்தபடி வந்துகொண்டிருந்தார். அவருக்கு அருகில் கலிங்கத்தின் மூத்த சமணத் திகம்பர அடிகள் ஒருவர் கௌபீனம் ஒன்றையே ஆடையாக உடுத்திக்கொண்டு கையில் கோல் ஒன்றைத் தாங்கிக்கொண்டு எளிமையாக காட்சியளித்துக் கொண்டிருந்தார்.

திகம்பரர் தொலைவில் வந்துகொண்டிருந்ததைப் பார்த்ததுமே

அவையில் அமர்ந்திருந்தவர்களில் சோழப் படைத்தலைவர் மற்றும் கரிகால ரைத் தவிர பீமவேலன் உட்பட அனைவ ரும் எழுந்து நின்று அவருக்கு மரியாதை செலுத்தினார்கள். எழுந்த பீமவேலன் அவரை நோக்கி மரியாதையுடன் சென்ற வன் அவரைப் பணிந்து அழைத்துவந்து தனது ஆசனத்தில் அமரவைத்தான்.

பழைய கௌபீனம் ஒன்றையே ஆடையாக உடுத்திக்கொண்டு எளிமை யாக அமர்ந்திருந்த திகம்பரரின் கையில் இருந்த கோலானது தங்கத்தால் செய்யப் பட்டு அதில் முத்துக்களும், மரகதக் கற் களும், வைர வைடூரியமும் பதிக்கப்பட்டு ஆடம்பரத்துடன் காணப்பட்டது. உடை உட்பட அனைத்தையும் துறந்த திகம்பர அடிகளாரின் கையில் காணப்பட்ட அந் தக் கோலையே கரிகாலர் மற்றும் சோழப் படைத்தலைவர்கள் பார்த்துக்கொண்டி ருந்தார்கள்.

அப்போது கலிங்கத்தின் மூத்த அமைச்சர் பட்டுத் துணியினால் மூடப் பட்ட தங்கத் தட்டினைக் கையில் ஏந்திய படியே கரிகாலரை நோக்கியபடியே பணி வுடன் நின்றுகொண்டிருந்தார்.

கரிகாலர், "என்ன அது?" என அமைச்சரை நோக்கி அவரது கையிலி ருந்த தங்கத் தட்டினை பார்த்தபடி வின வினார்.

அப்போது அமைச்சர், "பேரரசே... தாங்கள் எப்போது கலிங்கத்தின் படை களை போரில் தோற்கடித்தீர்களோ அப் போதே கலிங்கம் தங்களுக்கு உரியதாகி விட்டது. ஆதலால் கலிங்கத்தின் மணிம குடத்தை தாங்கள் சுமந்து கலிங்காதிப தியாக தாங்கள் நல்லாட்சியை செலுத்த வேண்டுகிறோம்!" என பணிவுடன் தெரி வித்தார்.

அமைச்சர் கூறும்வரை அமைதி யாக அமர்ந்திருந்த திகம்பர அடிகள், "பேரரசே, இது கலிங்கத்தில் நடைமுறை

https://telegram.me/aedahamlibra

யில் இருக்கும் வழக்கம். தாங்கள் கலிங்கத்தின் பேரரசராக மகுடத்தை சூடிக் கொள்ள வேண்டுமாய் நானும் கேட்டுக் கொள்கிறேன்!” எனத் தெரிவித்தார்.

“கலிங்கத்தின் நடைமுறை விசித்திரமாக அல்லவா இருக்கிறது?” என வினவினார் கரிகாலர்.

பீமவேலன், திகம்பர அடிகளார் மற்றும் கலிங்க அமைச்சர்கள் ஆகியோர் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள்.

அப்போது கரிகாலர், “போரில் தோல்வி அடைந்தாலும், பகை நாட்டு அரசருக்கு யாரும் மகுடத்தை சூட்டுவதில்லை. போரில் தோற்ற அடுத்த கணம் மணி மகுடம், செங்கோல் ஆகியவற்றை மறைத்து விடும் பழக்கமே இருக்கிறது. இந்த நிலையில் தாங்கள் எனக்கு கலிங்கத்தின் அரசனாக முடிசூட்ட விழைகிறீர். ஆச்சரியமாக இருக்கிறது. பீமவேலரே, இதில் தங்களது முடிவு என்ன?” என பீம

வேலனை நோக்கி வினவினார் கரிகாலர்.

"போரில் வெற்றி பெற்ற தங்களுக்கு கலிங்காதிபதியாக முடிசூடிக்கொள்ளும் தார்மீக உரிமை உண்டு. எனக்கும் அதில் முழு சம்மதம் உண்டு. தங்களுக்கு கலிங்கத்தின் அரசராக முடிசூடிக்கொள்ள ஏற்பாடு செய்து அமைச்சரையும், எங்களது மத குரு திகம்பர அடிகளாரையும் வரவழைத்ததே நான் தான்!" எனத் தெரிவித்தான் பீமவேலன்.

அப்போது அமைச்சர், "பேரரசே... தாங்கள் மறுக்காமல் இதை ஏற்றுக் கொள்ள வேண்டும்" என மீண்டும் அவரை நோக்கிப் பணிந்தார்.

"நான் கலிங்கத்தின் அரசராக முடிசூடிக்கொண்டால் தாங்கள் என்னிடமிருந்து எதிர்பார்ப்பது என்ன?"

"அரசே, கலிங்கத்தின் மணிமுடியை யார் தரித்து கலிங்கத்தை ஆட்சி

https://telegram.me/aedahamlibra

செய்தாலும் அவர்களுக்கு பணி செய் வதே எங்கள் பணி. அப்படி யார் கலிங் கத்தின் அரசராக அமர்ந்திருக்கிறாரோ அவர் கலிங்கத்திற்கு வேண்டிய பாது காப்பினை அளிக்க வேண்டும்."

"பாதுகாப்பு என்றால்?"

"எங்கள் நாட்டுப் பெண்களின் கற்பு, கலிங்க மக்களின் உடைமை, நாங் கள் பின்பற்றி வரும் சமயம் ஆகியவற் றிற்கு மதிப்பளித்து பாதுகாப்பு அளிக்க வேண்டும்!"

அவர் கூறியதைக் கேட்ட கரிகாலர் ஆசனத்திலிருந்து எழுந்தார். அமர்ந்தி ருந்தவர்கள் அனைவரும் கரிகாலரைப் பார்த்து எழுந்து நின்றனர். கைகளை உயர்த்தி அனைவரையும் அமர வைத்த வர், "மொழிபெயர் தேய மலையில் ஆயி ரத்து முன்னூறு ஆண்டுகளாக நிலை கொண்டிருந்த தமிழர் மூவேந்தர் கூட் டணியை எப்போது காரவேலரின் தந் திரத்தால் முறியடித்து காலம் காலமாக

தமிழர் வணிகம் மேற்கொண்டிருந்த பித்துண்டா நகரத்தைக் கைப்பற்றி கழுதையைக் கொண்டு உழுதாரோ அப்போதே எனக்கு கலிங்கத்தை கொளுத்தி தீக்கிரையாக்கிவிட வேண்டும் என எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனாலும், பழி உணர்ச்சியுடன் போரினை முன்னெடுப்பதை நானும் விரும்பவில்லை. எனது படைத் தலைவர்களும் அதை ஒப்பவில்லை. காரவேலரால் முறியடிக்கப்பட்ட மூவேந்தர் கூட்டணிப் படைகளை மீண்டும் மொழிபெயர் தேய மலையில் காரவேலரின் காலத்திலேயே ஏற்படுத்திவிட வேண்டும் என்று நினைத்தாலும் போரினால் பல்லாயிரக்கணக்கான வீரர்கள் அழிவதை விரும்பாத காரணத்தினால்தான் யாம் எனது படைத் தலைவர் செங்குவீரரை கலிங்க மன்னர் காரவேலரிடம் பேச அனுப்பி வைத்தோம். ஆனால், கலிங்க மன்னர் காரவேலர் எமது அமைதி வழி நடவடிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை. சோழப் படையின்

https://telegram.me/aedahamlibra

இலக்கு மகதம் தான். மகதத்தை அடைய வேண்டும் எனில் கலிங்கத்தைக் கடந்தால் தான் முடியும். வடுகர்களைப் போன்று காரவேலரும் சோழப் படைக்கு வழி விட்டிருந்தால் இந்தப் போர் ஏற்பட்டிருக்காது. இரு நூறாயிரத்திற்கும் மேற்பட்ட வீரர்கள் மடிந்திருக்க மாட்டார்கள். தென்னகத்தின் மீது தொடர்ந்து படையெடுத்துக் கொண்டிருக்கும் ஆரிய மன்னர்களுக்கு தகுந்த பாடம் எடுக்க முடிவு செய்தேன். காரவேலரின் முடிவினால் இந்தப் போர் தவிர்க்க முடியாததாகி விட்டது. காரவேலரின் வீரத்திற்கு நான் தலை வணங்குகிறேன். அவரது வீரமும், தியாகமும் ஒருநாளும் வீண் ஆகிவிடக் கூடாது. இந்தக் கலிங்காதிபதியின் ஆசனத்தை நான் அலங்கரிப்பதை விடவும் காரவேலரின் புதல்வர் மாவீரரான பீமவேலர் அலங்கரிப்பது தான் சரியாக இருக்கும்!" என அவைக்கு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததுதான் தாமதம், அடுத்த கணம் செங்குவீரன் எழுந்து

https://telegram.me/aedahamlibra

நின்று கலிங்க அமைச்சரின் கையில் வைத்திருந்த மணி மகுடத்தை எடுத்து பீமவேலனின் தலையில் சூட்டினான். திகம்பரரின் கையில் இருந்த செங் கோலை வாங்கி பீமவேலனிடம் அளித் தான் செங்குவீரன்.

அவையினர் அனைவரும் கரிகா லர் மற்றும் செங்குவீரனின் விசித் திர செயலைக் கண்டு அதிர்ச்சியில் உறைந்து போய் நிற்க, "கலிங்காதிபதி... மாவீரர் குதுப்ஸ்ரீ பீமவேலர்..." என செங் குவீரன் முழக்கமிட, அவையில் நிறைந் திருந்தவர்கள் அனைவரும், "வாழ்க... வாழ்க..." என்று முழக்கமிட்டனர்.

அவையினரின் அதிர்ச்சி அடங்கும் முன்னரே கரிகாலர், "சோழப் படைத் தலைவர்கள் மற்றும் குதுப்ஸ்ரீ பீம வேலரைத் தவிர மற்ற அனைவரும் செல்லட்டும்" எனக் கட்டளையிட்டார். அடுத்தகணம் அவையினர் அனைவரும் கலைந்து சென்றனர்.

பீமவேலன் கரிகாலரை நோக்கி, "பேரரசே... இதை நான் எதிர்பார்க்க வில்லை. கலிங்கத்திற்கு இன்னும் ஒரு உதவி செய்யவேண்டும்!" என வினவி னான்.

"என்ன பீமவேலரே?"

"கலிங்கப் படையை மொத்தமாக போரில் இழந்து நிற்கிறோம். தாங் கள் கலிங்காதிபதியாக பொறுப்பேற் றிருந்தால் கலிங்கத்தின் பாதுகாப்பு பற்றி கவலைப் பட்டிருக்க மாட்டோம். ஆனால், படை பலம் இல்லாத கலிங் கத்திற்கு வடக்கே சுங்கன், மேற்கே சத கர்ணி, தெற்கே வடுகர் ஆகியோர் தாக் குதல் தொடுக்க தயாராக இருக்கிறார் கள். ஆதலால் அவர்களிடமிருந்து தாங் கள்தான் உரிய பாதுகாப்பினை அளிக்க வேண்டும்" என வேண்டினான் பீமவே லன்.

"நிச்சயமாக பீமவேலரே... கலிங்கத் திற்கு உரிய பாதுகாப்பு அளிக்க வேண்

டிய தார்மீக கடமை எனக்கு இருக்கிறது. ஒருநாளும் தாங்கள் அதைப் பற்றிக் கவலை கொள்ளவேண்டிய அவசியமில்லை!”

“நன்றி பேரரசே... நானும் தங்களுக்கு சில வாக்குறுதிகளை அளிக்கிறேன். மொழிபெயர் தேயத்தில் மீண்டும் நிலைநிறுத்தும் தமிழர் கூட்டுப் படைகளை எந்த விதத்திலும் இனி நாங்கள் தொந்தரவு செய்ய மாட்டோம். அதே போன்று எனது தந்தையினால் கழுதை கொண்டு உழப்பட்ட பித்துண்டா நகரத்தையும் விட்டுக் கொடுக்கிறேன்” எனத் தெரிவித்தான் குதுப்ஸ்ரீ பீமவேலன்.

“நல்லது...” என கரிகாலர் கூறிக் கொண்டிருந்த போதே பீமவேலன், “தாங்கள் விரும்பும்பட்சத்தில் கலிங்கத்தின் பேரரசர் காரவேலரால் பாறைகளில் எழுதப்பட்ட விவரத்தையும் நான் அழிக்க சித்தமாக இருக்கிறேன்!” எனத் தெரிவித்தான்.

https://telegram.me/aedahamlibra

"அது கூடாது பீமவேலரே... யானைக் குகையில் எழுதப்பட்டிருக்கும் கல்வெட்டுகளைப் பற்றி நானும் அறி வேன். மாவீரரின் வெற்றிச் சின்னங்களை சுமந்து நிற்கிறது அக்கல்வெட்டுகள். அதை அழித்து நான் சிறுமைப் பட விரும் பவில்லை" என பீமவேலனிடம் தெரி வித்த கரிகாலர் செங்குவீரனை நோக்கி, "படைத் தலைவரே... நமது படையின் நிலை என்ன?" என வினவினார்.

"நமது படை சிங்கபுரத்தை கடந்து கலிங்கத்தின் வடக்கு எல்லையை நோக்கி நகரத் துவங்கிவிட்டது பேர ரசே..." எனத் தெரிவித்தான்.

"சுங்கப் படைகளின் நிலை என்ன என்று தகவல் கிடைத்ததா?"

"கடைசியாக கிடைத்த தகவலின் படி சுங்கமித்திரனின் தலைமையில் சுங்க நாட்டின் பெரும்படை, வச்சிர நாடு மற் றும் கோசலத்தின் சிறு படை என என மூன்று பிரிவுகளாக நம்மை எதிர்

கொள்ள புஷ்யமித்திர சுங்கன் தயாராகி விட்டதாக செய்தி கிடைத்திருக்கிறது!"

"போர் எங்கே நடைபெறப்போகிறது என்று ஊகிக்க முடிகிறதா?"

"கலிங்கப் படைகளைப் போன்று சுங்கப் படையும் நம்மை வச்சிர நாட்டின் எல்லையில் எதிர்கொள்ளும் என்று எதிர்பார்க்கிறேன்" என செங்குவீரன் கூறிக்கொண்டிருந்த போதே வர்த்தினி, "படைத் தலைவரே, நீங்கள் கூறும் தகவல் ஒரு பட்சம் காலத்திற்கு முந்தைய சுங்கப் படையின் நிலை. புஷ்யமித்திர சுங்கன் மௌரியப் படையின் படைத் தலைவனாக இருந்து மகதத்தின் அரசனாக தனக்குத்தானே முடிசூட்டிக்கொண்டவன் என்பதை ஒருநாளும் தாங்கள் மறக்கவேண்டாம். அவன் போரில் கெட்டிக்காரன்! கெட்டிக்காரன் மட்டுமல்ல அவனுக்கு அவனது படை தோற்கக் கூடாது. அதற்கு அவன் என்ன வேண்டுமானாலும் செய்வான்" என்று

https://telegram.me/aedahamlibra

கூறிக்கொண்டே அவைக்குள் பிரவே சித்தாள்.

வர்த்தினியைக் கண்டதும் செங்கு வீரன் தனது தலையை மட்டும் தாழ்த்தி வணக்கத்தை தெரிவித்துக் கொண் டான். வர்த்தினியும் தனது வணக்கத்தை தெரிவித்துக்கொண்டே, “நீங்கள் யாரும் கனவிலும் எதிர்பார்க்காத போருக்கு புஷ்யமித்திர சுங்கன் ஆயத்தமாகிவிட் டான்!” எனத் தெரிவித்த வர்த்தினி சுற்றி அமர்ந்திருந்த படைத் தலைவர்களை நோக்கினாள்.

படைத் தலைவர்கள் திவ்யன், வில் லவன், பரதவன் குமரன், திருக்கண்ணன் ஆகியோர் ஒருவரை ஒருவர் நோக்கிக் கொண்டார்கள்.

“எந்த வகையான போர் அது?” என வினவினான் செங்குவீரன்.

“முற்றுகைப் போர்!”

https://telegram.me/aedahamlibra

"என்ன முற்றுகையா?" எனக் குறுக் கிட்டு வினவினான் திவ்யன்.

"ஆம்!"

அனைவரும் ஒருவரை ஒருவர் மீண்டும் பார்த்துக்கொண்டார்கள்.

அப்போது தொடர்ந்த வர்த்தினி, "புஷ்யமித்திர சுங்கன் தனது இருநூறாயி ரம் படை வீரர்களுடன் வச்சிர நாட்டின் தெற்கு எல்லையில் பெரும் கோட்டைக் குள் பதுங்கியபடி தாக்க முடிவு செய்து விட்டான்."

"இது கோழைத் தனமான முடிவு!" எனத் தெரிவித்தான் பரதவன் குமரன்.

குரல் எழுந்த திசையை நோக்கி னாள் வர்த்தினி. பரதவனின் குமரனைக் கண்டதும் அவளது முகம் கண நேரத்தில் பிரகாசமானது. பரதவன் குமரனின் விழி களில் தனது பார்வையை பதிக்கவிட்டப டியே, "உங்களுக்கு இது கோழைத்தன மான முடிவு தலைவரே... ஆனால், புஷ்

யமித்திரனின் நிலையில் நோக்கினால் இது மிகவும் தந்திரமான முடிவு!"

"தந்திரமான முடிவா?"

"ஆமாம். தந்திரமான முடிவுதான். உங்கள் அனைவருக்கும் தெரியும் கலிங்க எல்லைக்கு வடக்கே இருக்கும் வச்சிர நாடு, மகதம், விதர்பா, தக்சின கோசலம், உத்தர கோசலம் ஆகியவற்றை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக்கொண்டு மகதத்தின் பெரும் பட்டினமான பாடலியில் இருந்துகொண்டு புஷ்யமித்திரன் ஆண்டுகொண்டிருக்கிறான். சுபர்னரேகா நதியின் வடக்கே வச்சிர நாடு அமைந்திருக்கிறது. வச்சிர நாட்டிற்கு வடக்கே விதர்பாவும், மேற்கே மகதமும் இருக்கிறது. மகதத்திற்கு மேற்கே தக்சன கோசலமும், உத்தர கோசலமும் இருக்கிறது. மகதத்தில் இருந்துகொண்டே அதைச் சுற்றி இருக்கும் அனைத்து சிறு தேசங்களையும் அடக்கி பேரரசனாக ஆண்டுகொண்டிருக்கிறான்.

தக்சன கோசலம், மகதம், வச்சிர நாடு மூன்றையும் சுபர்னரேகா நதி தான் பிரிக்கிறது. சுபர்னரேகா நதியின் வடகரையில் அமைந்திருக்கும் வலிமையான பெரும் கோட்டையில் புஷ்யமித்திர சுங்கன் தனது மகதப் படையுடன் நிலை கொண்டிருக்கிறான். மகதத்திற்கு கிழக்கே இருக்கும் கோட்டையில் வச்சிர நாட்டுப் படையும், மேற்கே இருக்கும் கோட்டையில் உத்தர மற்றும் தக்சன கோசலப் படைகள் சேர்ந்து தங்கியிருக்கின்றன. மூன்று கோட்டைகளையும் இணைத்தால் முக்கோண வடிவத்தை அடையும். மூன்று கோட்டைகளுமே சுபர்னரேகா நதியின் வடகரையில்தான் அமைந்திருக்கின்றன. நாம் எந்தக் கோட்டையைத் தாக்க வேண்டுமானாலும் முதலில் நதியைக் கடந்தாகவேண்டும். நதியையும் கடந்து நாம் முதலில் எந்தக் கோட்டையைத் தாக்கினாலும் மற்ற இரண்டு படைகளும் சேர்ந்து இரண்டு புறத்திலும் தாக்கி நம்மை அழித்துவிடுவார்கள்!"

"சுங்கனின் படை எல்லையில் இருக்கும்போது நாம் நாம் நேரே பாடலி யைத் தாக்கினால் என்ன?" என வினவி னான் படைத்தலைவன் திருக்கண்ணன்.

"அப்படியும் தாக்கலாம். ஆனால், அது அது வீரம் ஆகாது. அதையும் கடந்து நாம் பாடலியைத் தாக்க முன்னேறினால் நாம் பின்புறமாக தாக்கப்படுவோம். சுங் கப் படையை அழித்துவிட்டு வடக்கு நோக்கி முன்னேறுவதே சாலச் சிறந்தது."

அங்கு சிறிது நேரம் பெருத்த அமைதி நிலவியது. கரிகாலர் செங்குவீ ரனை நோக்கினார். செங்குவீரன், "இது எதிர்பாராத செய்திதான் கரிகாலரே... படை தொடர்ந்து வடக்கு நோக்கி நகர்ந் துகொண்டிருக்கட்டும். சுங்கப் படையை நெருங்கும்போது அவர்களின் திட்டத் திற்கு ஏற்ப எதிர் நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளலாம்!" எனத் தெரிவித் தான்.

"காலாட், யானை, புரவி மற்றும் தேர்ப் படைகள் அனைத்தும் நிலம் வழி யாக விரையும். சோழக் கலங்களை யும், கைப்பற்றப்பட்ட கலிங்கக் கலங்க ளையும் என்ன செய்யப் போகிறீர்கள்? அதை எப்படி பயன்படுத்தப் போகிறீர் கள்? மூன்று கோட்டைகளும் சுபர்ன ரேகா நதியின் கரையில் தான் அமைந்தி ருக்கின்றன. கலிங்கப் போரின் முடிவை மாற்றி அமைத்த சோழ மரக்கலங்கள் நிச் சயம் மகதப் போரின் முடிவையும் தீர் மானிக்கும் என்று கருதுகிறேன் நான். ஆனால், அதை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். இல்லையேல், கலங்கள் மொத்தத்தையும் நாம் இழக்க வேண்டி வரும்!"

"உங்களது தகவலுக்கு மிக்க நன்றி இளவரசி... பரதவன் குமரன் மரக்க லங்களுடன் குணக் கடலின் வழியாக விரைந்து சுபர்னரேகா நதிக்குள் ஊடு ருவி செல்லட்டும். அதே நேரம் நாம் நிலம் வழியாக அந்த மூன்று கோட்டைகளை

யும் நோக்கி முன்னேறுவோம். நமது தாக்குதல் எப்படி இருக்கவேண்டும் என்று புஷ்யமித்திர சுங்கன் முடிவுசெய்யட்டும்!" எனக் கட்டளையிட்டான் திவ்யன்.

"அதில் ஒரு சிக்கல் இருக்கிறது!"

"எதில்?"

"சுபர்னரேகா நதியின் வழியாக மரக்கலங்களை செலுத்துவதில்...."

"பரதவன் குமரனும், இம்ஹோடெப்பும் காணாத நதிகளா? இருவரும் எந்தச் சூழலையும் முறியடிக்கும் வல்லமை பொருந்தியவர்கள். இம்ஹோடெப் கடலையே வாழிடமாகக் கொண்டவன்."

"கலிங்கத்தில் எனது கலங்களைத் தாக்கிய முறையை வைத்தே இருவரும் எப்படிப்பட்ட வீரர்கள் என்பதை நான் அறிந்துகொண்டேன். ஆனால், இங்கு வீரத்தை விடவும் விவேகமும், அனுபவமுமே கைகொடுக்கும். சுபர்னரேகா நதியைப் பற்றி நன்கு அறிந்தவர்களால் மட்

டுமே எதிர்ப்புகளைக் கடந்து நதியின் பிறப்பிடம் வரை கலங்களைச் செலுத்த முடியும்!"

திவ்யன் எதிரில் நின்ற பரதவன் குமரனை நோக்கினான்.

பரதவன் குமரன் எந்தப் பதிலையும் கூறாமல் நின்றுகொண்டிருந்தான்.

அப்போது வர்த்தினி, "நானும் மரக் கலங்களுடன் செல்கிறேன். எனக்கு சுபர்னரேகா நதி மிகவும் பழக்கப்பட்டது. உரிய நேரத்தில் கலங்கள் உரிய இடத்திற்கு வந்து சேரும். அதற்கு நான் பொறுப்பு!" எனத் தெரிவித்தாள்.

வர்த்தினி கூறியதைக் கேட்டதும் அனைவருமே ஒருகணம் தயக்கத்துடன் நின்றுகொண்டிருந்தார்கள். அப்போது பீமவேலன், "வர்த்தினி என்ன பேச்சு இது?" எனக் கண்டித்தான்.

“அண்ணா.. இதில் தாங்கள் தலையிட வேண்டாம்! நான் சிந்தித்த பிறகே இந்த முடிவினை எடுத்திருக்கிறேன்!”

அப்போது செங்குவீரன், “வர்த்தினி... போருக்கு புறப்பட்டு வருபவர்களை தடுக்கும் உரிமை யாருக்கும் கிடையாது. மகதப் போர் எப்படி இருக்கும் என்று இதுவரை யாருக்குமே தெரியாது. இந்த நிலையில் நீ போருக்கு வருகிறேன் என்று கூறுவது தர்ம சங்கடத்தை உருவாக்குகிறது” எனக் குறுக்கிட்டு தெரிவித்தான்.

“வீரரே, தங்களது தர்ம பத்தினி வானவல்லி போரின் முடிவினைத் தெரிந்துகொண்டா படைகளை வழிநடத்திக்கொண்டு வந்தார். போரின் முடிவைத் தெரிந்தபிறகா தோளிலும், வயிற்றிலும் தங்களது குழந்தைகளைத் தாங்கிக்கொண்டு வீரச்சமர் புரிந்தார்? நீங்கள் அனைவரும் அவந்தி சென்று திரும்பியதும் அவந்தி இளவரசி அவந்திகா,

அவளது தோழி கார்த்திகா என்று அனை வரும் புறப்பட்டு கலிங்கம் வரை படையு டன் துணை வந்தார்களே? நான் படையு டன் செல்வது தவறா?" என வினவினாள்.

அவள் கூறியதைக் கேட்டு சற்றே கோபம் கொண்ட பீமவேலன், "வர்த்தினி, வானவல்லி தேவி வந்ததற்கு காரணம் படைத் தலைவர் செங்குவீரர், அவந்திகா படைத்தலைவர் திவ்யனுக்கும்; கார்த் திகா படைத்தலைவர் திருக்கண்ணனுக் கும் உரிமையானவர். ஆதலால் அவர்கள் உரிமையுடன் படையுடன் கிளம்பி வந் தார்கள். ஆனால், நீ எப்படி, எந்த உரி மையுடன் சோழப் படையுடன் செல்வாய்? உன் பிடிவாதத்தைக் கைவிட்டுவிடு!" எனக் கட்டளையிட்டான்.

அவன் கூறியதைக் கேட்டதும் வர்த்தினி ஒருகணம் அதிர்ச்சியடைந் தாள். பிறகு, நிதானத்துடன், "அண்ணா... சோழப் படைத்தலைவர் எப்போது என்னை வீழ்த்தி அவரது தோளில் தூக்

கிக்கொண்டு சென்றாரோ, அப்போது அவருக்கு நான் உரியவள் ஆகிவிட்டேன். இனி எனக்கு தங்களது அனுமதி தேவையில்லை!" எனத் தெரிவித்தவள் அதுவரை அமைதியாக அமர்ந்திருந்த கரிகாலரை நோக்கினாள் வர்த்தினி.

சபையில் வர்த்தினி கூறுவதைக் கேட்டு அதிர்ச்சியின் உச்சத்தில் நின்று கொண்டிருந்த பரதவன் குமரனை நோக்கினார் கரிகாலர். பரதவன் குமரன் வர்த்தினியையே நோக்கிக்கொண்டிருந்தான்.

கரிகாலர் புன்சிரிப்பு ஒன்றை வர்த்தினிக்கு பதிலாக அளித்தார். பிறகு, "சோழப் படையின் மரக்கலங்களுடன் வர்த்தினி தேவியும் புறப்பட்டுச் செல்லட்டும். சிங்கபுரத்திற்கு வடக்கே பாதையானது கரடு முரடான வனம் மற்றும் குன்றுகளால் ஆனது. ஆதலால், நமது படை நிதானமாக சுபர்னரேகா நதியின் வட கரையில் நிலை கொண்டிருக்கும் சுங்கப் படைகளை நோக்கி செல்லட்டும்"

எனக் கட்டளையிட்ட கரிகாலர் அவையி லிருந்து எழுந்து சென்றார்.

அவரைத் தொடர்ந்து அனைவ ரும் அவையிலிருந்து வெளியேற பரத வன் குமரன் மட்டும் அதிர்ச்சியில் சித்தம் குலைந்து நடந்தது உண்மையா? அல் லது கனவா? என அறியாத நிலையில் இருக்கையிலேயே அமர்ந்திருந்தான்.

அவனது அருகில் சென்ற வர்த் தினி, “வீரரே... உங்களுக்கு விருப்பம் இல்லாததைப் பற்றி நான் ஏதேனும் அவ சரப்பட்டு கூறி விட்டேனே?” என வினவி னாள்.

அவளது குரலை வெகு அரு கில் கேட்டு திடுக்கிட்டு சுய நினையை அடைந்த பரதவன் குமரன் வர்த்தினியை நோக்கினான்.

அவள் அவனுக்கு வெகு அரு கில் வெகு நெருக்கமாக நின்றுகொண்டு

அவனது முகத்தையே காதல் ததும்பப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இவளுடன் இனி தனித்து மரக்க லத்தில் தனியாக பயணிக்கப் போவதை எண்ணிய பரதவன் குமரன் மகிழ்ந்தா லும் சிறிது அஞ்சவே செய்தான். அவனது மனதின் எண்ண ஓட்டத்தை அறிந்து கொண்ட வர்த்தினி, “படைத் தலை வரே, தண்டகாரண்ய வனத்தில் பெய் துகொண்டிருக்கும் பெரும் மழையினால் இப்பொது சுபர்னரேகா நதியில் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுக் கொண்டி ருக்கிறது. இப்போது நம்மால் படைத் தலைவரின் கட்டளையை நிறைவேற்ற முடியாது! சில கிழமைகள் நாம் காத் திருந்து தான் புறப்படவேண்டும்” எனத் தெரிவித்தாள்.

“அதுவரை சேதமடைந்த கலங் களை சரி செய்துவிடலாம்! வேண்டிய பொறிகளையும் கலங்களில் பொருத்தி விடலாம்!”

"அதற்கு நீங்கள் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. இம்ஹோடெப் அந்தப் பணியைத் தானே ஏற்கனவே செய்து கொண்டிருக்கிறார்."

"அதுவரை நான் என்ன செய்வதாம்? புகாரிலேயே இத்தனை காலங்களாக வீணாக பொழுதைக் கழித்துவிட்டேன். இனியும் என்னால் எந்தப் பணியையும் செய்யாமல் வாளாவிருக்க முடியாது!"

"அதைப் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம் வீரரே... உங்களுக்கு பணி தானே வேண்டும். நான் வழங்குகிறேன். அதை நிறைவேற்றுங்கள்!" எனக் கூறியவள் பரதவன் குமரனின் கையைப் பிடித்து அழைத்துச் சென்றாள். அவள் அவனது கரத்தைப் பற்றி அழைத்துச் சென்றபோது இருவரும் நெருக்கமாக நடக்க இருவரது உடலும் ஒன்றோடு ஒன்று இழைந்தே நடந்துகொண்டிருந்தார்கள்.

அவளது உரிமையான செயல் பரதவன் குமாரனையும் நன்கு கவர்ந்திருந்தது. கனவிலும் எண்ணிப் பார்க்க முடியாதவளான கலிங்க இளவரசி வர்த்தினி தன்னை மணந்துகொள்ள சம்மதித்ததை எண்ணி பிரமிப்புடன் சென்றுகொண்டிருந்தான்.

அப்போது பரதவன் குமரன், "நாம் எங்கே சென்றுகொண்டிருக்கிறோம்?" என வினவினான்.

"எனது மாளிகைக்கு?"

"எதற்கு?"

"நீங்கள் தானே எந்த வேலையும் இல்லை என்று கூறினீர்கள்? திகட்ட திகட்ட பேரின்பத்தை அளிக்கும் உரிய வேலையை நான் அளிக்கிறேன். மறுப்பு கூறாமல் நிறைவேற்றுங்கள்!" என விசமத்துடன் கூறியவள் குமரனின் உடலை அவளது உடலோடு நெருக்க

மாக அணைத்தபடி அழைத்துச் .செல்ல லானாள்.

அடிக்குறிப்பு:

1. ஒடிசாவில் Mancapuri cave Inscription (Upper storey - 2) மன்காபுரி குகையில் தேவநாகரி எழுத்தில் எழுதப் பட்டிருக்கும் கல்வெட்டு ஒன்று, 'This is the cave of the Aira mahamegavahana maharaja kudepasri, the overlord of kalinga' செய்தி இருக்கிறது. இந்த குதுப்ஸ்ரீ தான் கலிங்க மன்னன் காரவே லனுக்கு அடுத்து கலிங்கத்தில் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த அரசன் என்று பல வர லாற்று ஆய்வாளர்களும் கருதுகிறார்கள்.

https://telegram.me/aedahamlibra

# 47. தேவ அஸ்திரம்

தண்டகாரண்ய வனத்தின் வடகிழக்குப் பகுதியில் மலை முகடுகளுக்கிடையில் உருவாகியிருக்கும் சுபர்னரேகா நதியானது வடகிழக்கில் பாய்ந்து பிறகு தென் கிழக்கில் வனத்தினூடே சரிந்து நெடுந்தூரம் பாய்ந்து கலிங்கக் கடலில் சங்கமிக்கிறது. நதிக்கரையில் தங்கத் துகள்கள் அதிகம் வெட்டி எடுக்கப்பட்டதால் சுபர்னரேகா எனப் பெயர் பெற்ற நதிதான் கலிங்கம், தக்சன கோசலம், மகதம் மற்றும் வச்சிர நாட்டிற்கு எல்லையாக அமைந்திருந்தது. வடகிழக்கு நோக்கிச் சென்றுகொண்டிருந்த சுபர்னரேகா நதியின் மேற்கில் அமைந்திருந்தது உத்தர கோசலத்தின் எல்லை. வடகிழக்கே பாய்ந்த நதியானது திடீரென்று தென்கிழக்கில் சரிந்து பாயும் அதன் வட முனையில் மகதத்தின் எல்

லையும், பிறகு தென்கிழக்கு நோக்கிப் பாயும் நதியின் வடகரையில் வச்சிர நாட்டின் எல்லையும் அமைந்திருந்தது. சுபரனரேகா நதியின் வடகரையில் வெகு நெருக்கமாக அமைந்திருந்த மூன்று நாடுகளும் வலிமையான கோட்டையை அமைந்திருந்தனர். வலப்புறம் தென்மேற்கில் கோசலத்தின் கோட்டையும், இடப்புறம் தென் கிழக்கில் வச்சிர நாட்டின் கோட்டையும் அமைந்திருக்க இரண்டுக்கும் மத்தியில் மகதத்தின் கோட்டையில் சுங்க மன்னன் புஷ்யமித்திரன் தனது பெரும் படையுடன் நிலை கொண்டிருந்தான்.

சுபர்னரேகா நதியின் வடமுனையில் சுங்கன் அமைத்திருந்த கோட்டையானது மற்ற கோட்டைகளைப் போன்று அல்லாமல் பெரும் மாறுபாட்டுடன் காணப்பட்டது. கோட்டையின் மதிலுக்குள் தான் போர் புரியும் களமானது அமைந்திருந்தது. கோட்டை மதிலின் வெளிப்புறத்தில் ஒரு புறம் சுபர்னரேகா நதி, ஒருபுறம் உயர்ந்த குன்று, மற்ற இரண்டு பக்கங்களிலும் அடர்ந்த வனம்

https://telegram.me/aedahamlibra

என இயற்கை அரண்களைக் கொண்டிருந்தது.

கோட்டை மதிலுக்குள் அமைந்திருந்த பெரும் களத்தில் இரு நூறாயிரத்திற்கும் மேற்பட்ட படை வீரர்கள் தங்கியிருந்தார்கள். வீரர்கள் சூழ சுங்கப் பேரரசன் புஷ்யமித்திர சுங்கன் அஷ்ட பசு விதான யாகத்திற்கு தயார் ஆகிக் கொண்டிருந்தான்.

யாகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை வைதீகர் பாகவதர் கவனித்துக் கொண்டதோடு மட்டுமல்லாமல் அவரே யாகத்தை முன்னின்று நடத்தும் புரோகிதராகவும் மாறியிருந்தார். பதினெட்டு கன்னிப் பசுக்களை பதினெட்டு நாட்கள் தொடர்ந்து பலியிட்டு யாகத்தை வெற்றிகரமாக முடித்தால் போருக்கு இந்திரன் உதவுவான் எனும் நம்பிக்கையில் தொடர்ந்து நடத்திக்கொண்டிருந்தார்.

யாகம் முடிவடையப்போகும் பதினெட்டாவது நாளில் வீரர்கள் அனை

வரும் பெரும் உற்சாகத்துடன் காணப் பட்டார்கள். வைதீகர் பாகவதர் புரோ கிதர்கள் குழுவுடன் தொடர்ந்து அக்னி தேவனையும், இந்திரனையும் மகிழ்விக்க வேத மந்திரங்களை ஓதிக்கொண்டிருந் தார். யாகத்தின் முடிவில் கடைசி பசு வும் பலியிடப்பட்டு யாகம் பூர்த்தி ஆனது. யாகத்தின் முடிவில் பசுவை சமைத்து அனைவருக்கும் பரிமாறினார்கள். யாகம் முடிவடைந்த நேரத்தில் சுங்கப் பேரரசன் புஷ்யமித்திர சுங்கன், சுங்க இளவரசர்கள் சுங்கமித்திரன் மற்றும் அக்னிமித்திரன், கோசலத்தின் மன்னர், வச்சிர நாட்டின் சேனாதிபதி, படைத் தலைவர்கள் ஆகி யோர் பெரும் மகிழ்ச்சியுடன் யாகம் பூர்த் தியானதை நினைத்து சோம பாணத்தை அருந்தியபடி களித்துக் காணப்பட்டார் கள்.

அனைவரும் மகிழ்ச்சியில் இருக்க சுங்கமித்திரனின் முகம் மட்டும் சோகத் தில் மூழ்கியிருந்தது. அவனது முக வாட் டத்தைக் கவனித்த புஷ்யமித்திர சுங்கன்,

"என்ன சுங்கமித்திரா, யாகத்தில் உனக்கு திருப்தி ஏற்படவில்லையா? உனது முகம் எதற்காக வாடியிருக்கிறது?" என வினவினான்.

"ஒற்றர்கள் சற்று முன்னர் தகவல் கொண்டுவந்தார்கள் அல்லவா! அதை நினைத்தால் தான் எனக்குக் கவலையாக இருக்கிறது!"

"சோழப் படையினர் நம்மை நோக்கி நெருங்கி வந்துவிட்டார்கள் என்ற தகவலா?"

"ஆமாம்!"

"நமது இருநூறாயிரம் வீரர்கள், உதவிக்கு கோசலம் மற்றும் வச்சிர நாட்டுப் படைகள், நமக்கு அரணாக சுபர்ன ரேகா நதி, வலிமையான இந்த கோட்டை இவற்றை நினைத்துமா நீ கலங்குகிறாய்?"

"அவந்தியில் வஜ்ரபாகு மற்றும் பலதேவன் இருவருடன் சேர்ந்து நான்

https://telegram.me/aedahamlibra

செய்த அனைத்து ஏற்பாடுகளையும் தனது படைத்தலைவர்களைக் கொண்டு சிதறடித்தவன் கரிகாலன். ஆதலால் தான் எனது மனம் கலங்குகிறது."

அப்போது அங்கு வந்த வைதீகர் பாகவதர், "இருங்கோவேளின் முற்றுகை, அதை சோழப் படை வீரர்கள் முறிய டித்த விதம், சோழப் படைத் தலை வன் வெண்ணிப் போரை முடித்த முறை அனைத்தையும் நேரில் கண்டவன் நான் சுங்கமித்திரா. ஆதலால் நானும் அவர்க ளின் படையெடுப்பை எண்ணி முதலில் கலங்கி நின்றேன். ஆனால், இப்போது எனது மனதில் அந்தக் கவலை இல்லை" எனத் தெரிவித்தார்.

"சோழப் படை தென்னகத்தில் வேண்டுமானால் பெரும் பலமுடையாத இருந்திருக்கலாம் இது ஆரிய தேசம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்!" எனத் தெரிவித்தான் புஷ்ய மித்திரன்.

https://telegram.me/aedahamlibra

"கலிங்கமும் ஆரிய தேசம் தானே?" என வினவினான் சுங்கமித்திரன்.

"ஆமாம்!"

"அங்கு நடந்த போரின் முடிவு தங்களுக்கும் கிடைத்தது தானே!"

"கிடைத்தது!" பெரும் வெறுப்புடன் கூறினான் சுங்கப் பேரரசன் புஷ்யமித்திர சுங்கன்.

"கலிங்கமும் ஆர்ய தேசம் தான். கலிங்க மன்னன் காரவேலன் நம்மையே தோற்கடித்து மகதம் வரை முன்னேறி வந்தவன். அப்பேற்பட்ட காரவேலனையே கரிகாலன் தோற்கடித்து வீர மரணத்தை அடைய வைத்துவிட்டான். சோழர்களின் அசுர வியூகத்தில் கலிங்கப் பெரும்படையே மொத்தமாக அழிந்து போய் விட்டது."

"அசுர வியூகம்!" எனப் பெரும் கோபத்துடன் கூறிய வைதீகர் பாகவதர், "நமது ஆர்ய மன்னர்கள் வடக்கிலிருந்து

போர் தொடுத்தால் வடுக நாட்டைக் கடப்பதற்குள் தடுத்து நிறுத்தி விரட்டி விடுகிறார்கள் அந்த அசுரர்கள். பசுமாசு ரன், இரணியன், மாயன், நரகன், திருபா சுரன் என யார் படையெடுத்து வந்தாலும் பெரும் இழப்பினை ஏற்படுத்திவிட்டு நம் மிடம் இருக்கும் செல்வம் அனைத்தை யும் கைப்பற்றிக்கொண்டு செல்கிறார் கள். இவர்களின் வரிசையில் இப்போது கரிகாலன். இதற்கு நான் முடிவு கட்டப் போகிறேன்!" எனக் கோபத்துடன் தெரி வித்தார்.

"எப்படி?"

"நம்மிடம் இருக்கும் வலிமையான படைகளினால்!"

"கலிங்கத்தில் நம்மை விடவும் அதிக எண்ணிக்கையிலான படையை முறியடித்துவிட்டு கரிகாலன் நம்மை நோக்கி வந்துகொண்டிருக்கிறான்!"

https://telegram.me/aedahamlibra

"சுங்கமித்திரா, நமது படை பலத்தை நீ நிச்சயம் அறிவாய். இருந்தாலும் அதை உனக்கு நான் மீண்டும் கூறுவதில் நான் பெருமிதப்படுகிறேன்" எனக் கூறிய புஷ்யமித்திர சுங்கன் வைதீகரை நோக்கினான்.

வைதீகரிடம் புஷ்யமித்திர சுங்கன், "நண்பா... சுங்கமித்திரன் சோழப் படையைக் கண்டு சலனப்படுகிறான். சோழப் படைத் தலைவன் சுங்கமித்திரனை அவந்தியில் தோற்கடித்த பிறகு சோழப் படையைக் கண்டு அஞ்சத் துவங்கிவிட்டான். நமது படை பலத்தையும் தாக்குதல் முறையையும் நீயே அவனுக்குக் கூறு!" எனக் கட்டளையிட்டான்.

"சுங்கமித்திரா... சோழப் படைத் தலைவர்கள் பெரும் வீரர்களாக இருக்கலாம். ஆனால், அவர்களின் படையை விடவும் நமது படையின் வலிமை அதிகம்!" எனத் தெரிவித்தவர் சுங்கமித்தி

ரனின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தார்.

சுங்கமித்திரன் அமைதியாக அவரையே நோக்கிக் கொண்டிருந்தான்.

வைதீகர், “சுங்கமித்திரா, சோழப் படையை விடவும் நமது படை வலிமை என்று கூறுவது நான் படை வீரர்களின் எண்ணிக்கையை மட்டும் கொண்டு கூற வில்லை. ஆயுதங்களின் பலத்தையும் கொண்டுதான் குறிப்பிடுகிறேன்” எனத் தெரிவித்தார்.

“சோழப் படையிடம் இருக்கும் பொறிகளைப் பற்றி தாங்கள் பல முறை என்னிடம் வியந்து கூறியிருக் கிறீர்களே குருவே. ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட வீரர்களைக் கொண்டு இருங் கோவுடன் புகாரைத் தாங்கள் முற்றுகை யிட்டீர்கள். தங்களால் புகாரின் சுவரைக் கூட நெருங்க இயலவில்லை. அவர்கள் நினைத்தால் சுபர்னரேகா நதியின் அக்க ரையில் இருந்து கூட பெரும் கற்களை

https://telegram.me/aedahamlibra

யும், நெருப்புப் பந்துகளையும் இங்கே நாம் உறைந்திருக்கும் கோட்டைக்குள் செலுத்த முடியும் என்று எண்ணுகிறேன் நான். அவர்கள் பயன்படுத்திய பொறிக ளில் பலவற்றின் பெயர்களைக் கூட தங் களால் அறிந்துகொள்ள முடியவில்லை. அப்படியிருக்கையில்...”

“சுங்கமித்திரா... நீ இப்படிக் கூறுவது எனக்கு பெரும் விசித்திரமாக இருக்கி றது.”

“சில முறை உண்மையையும் ஏற் றுக்கொள்ள வேண்டும் குருவே...”

“எந்த உண்மையை?”

“நம் எதிரி நம்மை விடவும் வலிமை யானவன் என்பதை!”

வைதீகர் எந்த மறுப்பையும் கூறா மல் சுங்கமித்திரனின் முகத்தையே பார்த் துக் கொண்டிருந்தார்.

"சோழப் படையின் வலிமையை அறிந்துதானே தாங்கள் ஆர்யவதத்தின் மூன்று பேரரசுகளான சுங்கம், மகாமேக வாகனம் மற்றும் சாதவாகனத்தை ஒன்று பட்டு சோழப் படையை எதிர்க்கவைக்க முயன்றீர்கள். ஆனால், அந்த முயற்சி வெற்றிபெறவில்லை. சோழப் படைத்த லைவர்களின் வீரத்தை நாம் அவந்தியில் நேரில் கண்டோம் தானே?"

"திவ்யன் வேண்டுமானால் உன்னை அவந்தி வாட்சமரில் தோற் கடித்திருக்கலாம். ஆனால், நமது படையை அவன் முடிந்தால் முறியடிக்கட் டும்!"

"இந்த நதி மற்றும் இந்தக் கோட் டையின் மதிலின் மீதிருக்கும் சில பொறி கள் இவற்றின் நம்பிக்கையிலா தாங் கள் இப்படிக் கூறுகிறீர்கள் குருவே? ஆர்யவதத்தின் அதிவிரைவான எனது புரவிப் படை எப்போது சோழ உபத லைவனால் தோற்கடிக்கப்பட்டதோ அப்

போதே எனது நம்பிக்கையும் என்னை விட்டு சென்றுவிட்டது குருவே.”

“சுங்க மித்திரா நீ சுங்கப் பேர ரசின் பட்டத்து இளவரசன். எதிரியின் படை பலம் எப்படி இருந்தாலும் கலங்கக் கூடாது!”

“கரிகாலனை அவந்தியில் சந்திக் கும் வரை அப்படிதான் நானும் இருந் தேன் குருவே. ஆனால், அவனை நேரில் சந்தித்த பிறகு எனது நம்பிக்கை அனைத்தையும் என்னைவிட்டு பறிபோய் விட்டது!”

“இல்லை சுங்கமித்திரா... உனது நம்பிக்கையை நீ ஒருநாளும் இழந்துவி டக் கூடாது. நமது படையைக் கொண்டு நாம் நிச்சயம் சோழப் படையை முறியடிக் கப் போகிறோம்.”

“அதுதான் எப்படி பயன்படுத்தப் போகிறோம் என்று வினவுகிறேன் வைதீ கரே?”

"சுங்கமித்திரா நம்மிடம் முக்தா, அமுக்தா, இயந்திரமுக்தா என மூன்று விதமான ஆயுதங்களையும் நாம் போரில் பயன்படுத்தப்போகிறோம். மூன்றின் சக்தியில் சோழப் படை புறமுதுகிட்டு கூட ஓட இயலாமல் மரணமடையப் போகிறார்கள்."

"இந்த வகைப் போர் ஆயுதங்கள் அனைத்தும் ருத்ரனான மகாதேவரின் காலத்தில் உபயோகப்பட்டது தானே? இன்னும் நடைமுறையில் இருக்கிறதா?" என வியப்புடன் வினவினான் சுங்கமித்திரன்.

அப்போது குறுக்கிட்ட புஷ்யமித்திர சுங்கன், "இதற்கே மலைத்துவிட்டால் எப்படி சுங்கமித்திரா..." என சுங்க நாட்டின் பட்டத்து இளவரசன் சுங்கமித்திரனிடம் தெரிவித்தவன் வைதீகரை நோக்கி, "நண்பா... இந்த முக்தா, அமுக்தா, இயந்திரமுக்தா பிரிவுகளில் நம்மிடம் இருக்கும் ஆயுதங்களைப் பற்றியும் உனது சீட

https://telegram.me/aedahamlibra

னுக்கு நீயே விளக்கிக் கூறு. அதன் பிறகாவது அவனது மனம் தைரியத்தை அடைகிறதா என்று பார்ப்போம்!" எனத் தெரிவித்தான்.

சுங்கமித்திரன் வியப்புடன் வைதீகரை நோக்க, "முக்தா பிரிவில் அம்புகளும், எரியம்புகளும் நிறைந்திருக்கின்றன" என அவர் கூறிக்கொண்டிருந்தபோதே, "சோழப் படையிலும்தான் வில் வீரர்கள் நிரம்பியிருக்கிறார்கள்!" எனக் குறுக்கிட்டான் சுங்கமித்திரன்.

அப்போது குறுக்கிட்ட புஷ்யமித்திர சுங்கன், "இருக்கலாம் சுங்கமித்திரா... ஆனால், நம்மிடம் இருக்கும் அக்னி பாணம், நாக பாணம் அவர்களிடம் நிச்சயம் இருக்காது! அதற்கான வாய்ப்பும் இல்லை" எனத் தெரிவித்தான்.

"என்ன நாக பாணமா?"

"ஆம்!"

"அதை நான் நமது புராணங்களில் அல்லவா படித்திருக்கிறேன்!"

அப்போது வைதீகர், "அந்தப் பாணத்தில் ஒன்றை இங்கே கொண்டு வா..." எனக் கட்டளையிட்டார் நின்று கொண்டிருந்த அவரது அந்தரங்கக் காவலனிடம்.

வைதீகரின் கட்டளை எழுந்த அடுத்த கணம் காவலன் ஒரு கையில் அம்பு மற்றும் இன்னொரு கையில் வெள்ளிக் கிண்ணத்தில் எதையோ கொண்டு வந்தான். அவை இரண்டையும் வாங்கிய வைதீகர் அம்பினை கிண்ணத்தில் இருந்த திரவத்தில் நனைத்தான். பிறகு, அதில் தீச் சுவாலையைக் காட்ட அடுத்த கணம் அம்பின் நுனி மட்டும் சுடர் விட்டு எரிந்தது.

அதைப் பார்த்த சுங்கமித்திரன், "என்ன ஆச்சரியம்? அம்பின் நுனி மட்டும் எரிகிறது. அதுவும் நீல நிறத்தில்?" என வினவினான்.

அருகில் இருந்த வில்லினை எடுத்த வைதீகர் அதில் நாணைப் பூட்டி எரிந்துகொண்டிருந்த அம்பினை தொலைவில் நின்றுகொண்டிருந்த யானையை நோக்கி எய்தார். அவர் எய்த அடுத்த கணம் அம்பு பாய்ந்து சென்று குறி தவறாமல் யானையைத் தாக்கியது.

அம்பு தாக்கிய அடுத்த கணம் யானை வலியில் தும்பிக்கையைத் தூக்கியது. அது தும்பிக்கையைத் தூக்கிப் பிளிறுவதற்குள் மரணித்துக் கீழே விழுந்தது.

சுங்கப் பேரரசின் பட்டத்து இளவரசன் சுங்கமித்திரன் அதிர்ச்சியில் உறைந்து நின்றுகொண்டிருந்த போது காவலனிடம், "உனது கையில் இருக்கும் கிண்ணத்தை முகர்ந்து பார்?" எனக் கட்டளையிட்டார் வைதீகர்.

காவலன் தயக்கத்துடன் நிற்க, "முகர்ந்து பார்க்கச் சொல்லி கட்டளையிட்டேன் நான்!" எனப் பெரும் அதிகாரத்

துடன் மீண்டும் கட்டளையிட்டார் வைதீகர்.

உடனே காவலன் அந்த வெள்ளிக் கிண்ணத்தை முகத்திற்கு அருகே கொண்டு சென்றான். கிண்ணத்தில் நிரம்பியிருந்த திரவத்தை முகர்வதற்குள் அக்காவலனும் மரணித்து கீழே விழுந்தான்.

"குருவே... என்ன மந்திரம் செய்தீர்கள்? அம்பு பாய்ந்த அடுத்த கணம் யானை மரணித்து விழுகிறது. முகர்ந்து பார்த்த அடுத்த கணம் காவலன் மரணித்து விழுகிறான். அந்த வெள்ளிக் கிண்ணத்தில் அப்படி என்ன இருக்கிறது?"

"நாக பாணத்தில் பயன்படுத்தும் மந்திர திரவம்!"

"எங்கிருந்து கிடைத்தது உங்களுக்கு?"

"அது மிகவும் இரகசியம் சுங்க மித்திரா. அதை யாருக்கும் என்னால் வெளிப்படுத்த முடியாது."

"இன்னும் என்னென்ன இருக்கிறது?"

"அமுக்தா பிரிவில் பரசு, வாள், ஈட்டி ஆகியவற்றைத் தயார் செய்திருக்கிறேன்!"

"பரசுராமர் சத்திரிய மன்னர்களை அழிக்க கூர்மையான கோடாரியைப் பயன்படுத்தினார். அவரது ஆயுதமான கூர்மையான கோடரியைத் தான் தாங்கள் பரசு என்று குறிப்பிடுகிறீர்களா?"

"இல்லை. கோடரிக்கும், பரசுவுக்கும் வேறுபாடு இருக்கிறது!"

"வேறுபாடா?"

"ஆம்!"

"என்ன அது?"

https://telegram.me/aedahamlibra

"கோடாரியை நாக பாணத்தில் மூழ்கவைத்து எடுத்தால் அதற்குப் பெயர் பரசு. நமது வீரர்கள் அனைவருக்கும் அதை நான் அளிக்கப் போகிறேன். சாதா ரண கோடரி வெட்டினால் அது காயம். ஆனால், மந்திர நீர் பட்ட கோடாரியான பரசு தாக்கினால் மரணம் நிச்சயம்! பரசு ராமரின் ஆயுதமான இந்தப் பரசுவை நம் படையில் முன் வரிசை வீரர்கள் தாங்கி நிற்கப் போகிறார்கள்."

"அற்புதம் குருவே அற்புதம்! இயந் திரமுக்தா பிரிவில் என்னென்ன ஆயுதங் கள் இருக்கின்றன?"

"நீ கேள்விப்பட்ட அஸ்திரங்கள் தான்!"

"நான் கேள்விப்பட்ட அஸ்திரங் களா?"

"ஆம்!"

https://telegram.me/aedahamlibra

“என்னென்ன அவை?” எனப் பெரும் பிரமிப்புடன் வினவினான் சுங்க மித்திரன்.

“அம்புகளை மழை போன்று எறியும் இந்திர அஸ்திரம்!”

“அடுத்து?”

“நெருப்பினைக் கக்கியபடியே பாய்ந்து செல்லும் அக்னி அஸ்திரம்!”

“அடுத்து என்ன?”

“நாகத்தின் நஞ்சினை சுமந்து மழை போன்று அம்புகளை எய்யும் நாக அஸ்திரம்!”

“இன்னும் ஏதேனும் மிச்சம் இருக் கிறதா?”

“இருக்கிறது சுங்கமித்திரா!”

“என்ன அது?”

“கற்களை தொடர்ந்து எறியும் வந் தபாசனா அஸ்திரம்!”

https://telegram.me/aedahamlibrary

சுங்கமித்திரன் எதையும் கூற இயலாமல் பிரமித்துப் போய் நின்றுகொண்டிருந்தான். பிறகு எதையோ கூற வாயெடுத்தான். ஆனால், அதற்குள் குறுக்கிட்ட புஷ்யமித்திர சுங்கன், "சுங்கமித்திரா.. நமது போர்த் திட்டத்தையும் கூறுகிறேன் கேள். அதன் பிறகு சாவகாசமாக உனது பிரமிப்பை வெளிப்படுத்து!" எனக் கூறியவன் சிறிது நேரம் அமைதியாக அவனையே பார்த்துக்கொண்டு நின்றான். பிறகு, "வச்சிர நாட்டின் படைக்கு வைதீகர் தான் தலைமை ஏற்கப் போகிறார்!" என கூறிக்கொண்டிருந்த போதே வைதீகர் "நானா?" என பெரும் அதிர்ச்சியுடன் வினவினார்.

"ஆமாம்."

"இதை நான் எதிர்பார்க்கவில்லை."

"நீ எதிர்பார்க்காவிட்டாலும், நீதான் வச்சிரப் படைக்கு தலைமை வகிக்கப் போகிறாய்?"

https://telegram.me/aedahamlibra

"நான்..." என எதையோ கூற வாயெடுத்தார். ஆனால், அதற்குள் குறுக்கிட்ட புஷ்யமித்திர சுங்கன், "குரு சேத்திரப் போரில் பீஷ்மர் இறந்தபி றகு ஐந்து நாட்கள் துரோணாச்சாரியார் படையை வழி நடத்தவில்லையா? அவ ரைப் போன்றே நீயும் வச்சிர நாட் டுப் படையை வழிநடத்து. நான் போர்த் திட்டத்தை கூறிக்கொண்டிருக்கும் போது குறுக்கே பேசாதே பாகவதா...." எனக் கட்டளையிட்ட புஷ்யமித்திர சுங்கன், "சோழப் படை எந்தக் கோட்டையைத் தாக்க நினைத்து சுபர்னரேகா நதி யைக் கடக்க முயற்சித்தாலும் மற்ற இரண்டு கோட்டைகளிலிருந்தும் அம்பு கள் பெய்து சோழப் படையினர் அழிக் கப்படுவார்கள். சோழப் படைத்தலை வன் எப்படி நமது புரவிப்படையை நதி யில் சிக்க வைத்து அழித்தானோ அப்ப டியே நாமும் சோழப்படையை அழிக்கப் போகிறோம். நமது மகதக் கோட்டையில் யானைகள் தேவையில்லை. இருநூறா

யிரம் படை வீரர்களுடன் நம்மிடம் இருக்கும் பாணங்களும், அஸ்திரங்களும் நமக்குப் போதும். ஆதலால் இரண்டு கோட்டைகளிலும் அதாவது வச்சிரநாட்டு வீரர்கள் இருபதாயிரம் பேர் மற்றும் கோசலப் படை வீரர்கள் முப்பதாயிரம் பேர் என மொத்தம் ஐம்பதாயிரம் வீரர்களுக்கும் துணையாக நான் நமது பத்தாயிரம் யானைகளையும் அனுப்பி விட்டேன்! எனது யூகப்படி சோழப் படை முதலில் நமது மகதக் கோட்டையைத் தான் தாக்கும்."

"தங்களது யூகம் தவறினால்?" என வினவினான் சுங்கமித்திரன்.

"அதற்கு வாய்ப்பே இல்லை சுங்கமித்திரா..." எனக் குறுக்கிட்டார் வைதீகர் பாகவதர்.

"எப்படி இவ்வளவு உறுதியுடன் கூறுகிறீர்கள் குருவே?"

“அதற்கான ஏற்பாடுகளை நானும் உனது தந்தையும் செய்துவிட்டோம்.”

“என்ன ஏற்பாடுகள்?”

“கோசலம் மற்றும் வச்சிர நாட்டுக் கொட்டைகளில் மொத்தம் ஐம்பதாயிரம் வீரர்களே இருக்கப் போகிறார்கள். ஆனால், அந்தக் கோட்டைகளின் சுவர்களில் வீரர்களையும் பொறிகளையும் நிற்கவைக்கப் போகிறேன். அதே நேரம் நமது கோட்டையின் உட்புறத்தில் தான் நமது இருநூறாயிரத்திற்கும் மேற்பட்ட வீரர்கள் அமைதியாக அணிவகுத்து நிற்பார்கள். கோட்டை மதிலின் உட்புறங்களில் நமது பாணங்களும், அஸ்திரங்களும், இயந்திரங்களும் தயாராக நிற்கும். வெளியிலிருந்து நோக்கினால் மகதக் கோட்டையில் தான் வீரர்களின் எண்ணிக்கை குறைவு என்றும், வச்சிர மற்றும் கோசலத்தின் கோட்டையில் அதிக வீரர்கள் நிறுத்திவைக்கப் பட்டிருக்கிறார்கள்

என்றும் தோன்றும்!" எனக் கூறிய வைதீகர் அமைதியானார்.

அப்போது புஷ்யமித்திர சுங்கன், "நமது கோட்டையில் வீரர்களின் எண்ணிக்கை மற்றும் பாதுகாப்பு குறைவு என்று முதலில் சோழப் படை மகதக் கோட்டையைத் தாக்கும்" எனத் தெரிவித்தார்.

வைதீகர், "அவர்கள் நம்மைத் தாக்கும்போது நாம் கோட்டைக்குள் பதுங்குவோம், மற்ற இரண்டு கோட்டைகளிலிருந்தும் பெரும் எண்ணிக்கையிலான வீரர்கள் வெளிப்பட்டு சோழப் படையை இரண்டு பக்கங்களிலிருந்தும் தாக்குவார்கள்" என்று அவர்கள் எதிர்பார்ப்பார்கள். கோட்டைக்குள்ளிருந்து நமது வீரர்கள் வெளிப்பட்டால் அவர்களை விரைவில் அழித்துவிடலாம் என்பது அவர்கள் யூகம். வலிமையான சிங்கபுரத்தை விட்டு திறந்த வெளியில் சோழப் படையை எதிர்கொண்ட காரவேலனைப் போன்று

நான் ஒரு நாளும் தவறு செய்ய மாட்டேன் சுங்கமித்திரா. சோழப் படை மகதக் கோட்டையை தாக்க நெருங்கிய அடுத்த கணம் நமது கோட்டை மதிலின் மீதிருக்கும் இயந்திரங்களில் இருந்து பாணங்களும், அஸ்திரங்களும் தொடர்ந்து அவர்கள் மீது எறிவோம். மந்திர நாக நீர் பட்ட அடுத்த கணம் சோழ வீரர்கள் துடிதுடிக்கக் கூட முடியாமல் மரணித்து விழுவார்கள். அப்போது சோழ வீரர்களின் அணி வகுப்பு சீர்குலையும். அதே நேரம் வச்சிர மற்றும் கோசலப் படையினர் வெளிப்பட்டு சோழப் படை பின்வாங்க முடியாமல் மொத்தமாக அழிப்பார்கள்!” எனக் கூறிய வைதீகர் அந்த இடமே நடுங்கும்படி பேய் சிரிப்பு சிரிக்கச்செய்தார்.

“எதற்காக வச்சிர மற்றும் கோசலப் படையினர் கோட்டையிலிருந்து வெளிப்பட்டு சோழப் படையைத் தாக்க வேண்டும்? கோட்டைக்குள்ளிருந்து அவர்கள் அஸ்திரத்தை எய்து சோழர்களை விரட்ட வேண்டியதுதானே?”

"இல்லை. பாணங்களும், அஸ்தி ரங்களும் நம் கையில் தான் இருக்கும். இது காலம் காலமாக காத்து வரும் ரகசிய ஆயுதம். அதை நான் அனைவருக்கும் வெளிப்படுத்த விரும்பவில்லை!"

"இருந்தாலும்...?"

"என்ன இருந்தாலும் சுங்கமித் திரா...?"

"நாம் தங்கியிருக்கும் மகதக் கோட் டைக்கு முன் நதிக் கரையில் அடர்ந்த மரங்கள் நிறைந்திருக்கின்றன. கோட்டை மதிலில் சில இடங்கள் சிதை வடைந்து இருக்கின்றன. மரங்களை நிழ லாகக் கொண்டு சேதமடைந்த மதில் வழியாக அவர்கள் கோட்டைக்குள் ஊடு ருவிவிட்டால்?"

"இந்தப் பலவீனங்களை நான் வேண்டுமென்றே விட்டு வைத்திருக்கி றேன் சுங்கமித்திரா?"

"எதற்காக குருவே?"

"இந்தப் பலவீனங்களை சோழ வீரர்கள் தங்களின் பலமாகப் பயன் படுத்த முனைந்து நம் கோட்டைக்கு வெகு அருகில் நெருங்குவார்கள். அப் போது நம் அஸ்திரங்கள் மற்றும் பாணங் கள் வெளிப்பட்டு அவர்களை கொண்டு வீழ்த்தும். அணிவகுப்பு சிதறும்!"

"சோழப் படையின் அணிவகுப்பை பீமவேலனின் கருட வியூகத்தினால் கூட சிதறடிக்க முடியவில்லை. நம்மால் முடி யும் என்று தாங்கள் நம்புகிறீர்களா?"

அப்போது வெற்றுச் சிரிப்பு ஒன்றை சிந்திய புஷ்யமித்திர சுங்கன், "சுங்கமித் திரா... நம்மால் இப்போது கருட வியூ கத்தை மட்டுமல்ல வானில் பறக்கும் கரு டக் கூட்டத்தின் அணிவகுப்பைக் கூட சிதறடிக்க முடியும்!"

"எப்படி?"

"நிச்சயம் அதை நீ இப்போதே தெரிந்துகொண்டுதான் ஆக வேண்டுமா?"

"ஆம்!"

"போரின் போது அல்லவா அதன் கோரதாண்டவத்தை உனக்குக் காட்டலாம் என நினைத்துக் கொண்டிருந்தேன்!" எனக் குறுக்கிட்டான் புஷ்யமித்திர சுங்கன்.

"தந்தையே... பீடிகைகள் போதும். என்ன அஸ்திரம் அது?"

புஷ்யமித்திரன் வைதீகனை நோக்கினான். அப்போது வைதீகர், "தேவ அஸ்திரம்!" எனப் பதிலளித்தார்.

"தேவ அஸ்திரம்" எனும் பெயரைக் கேட்டதுதான் தாமதம். அந்தப் பெயரைக் கேட்டதுமே சுங்கமித்திரனின் முகத்தில் வெற்றிப் புன்னகை வந்துவிட்டது. அதே முக மலர்ச்சியுடன், "பின் வாங்கி புறமுதுகிட்டு ஓடப்போகும் சோழப் படை வீரர்

களின் நிலையை எண்ணினால் எனக்கு இப்பொது பரிதாபமாக இருக்கிறது!" என உற்சாகத்துடன் தெரிவித்தவனின் முகம் திடீரென்று சோகமாகி, "குருவே... போரில் நாக பாணத்தையும், அஸ்திரங்களையும் நாம் பயன்படுத்துவது முறையா? அதிலும் சோழ வீரர்கள் போர் நெறி மாறாதவர்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்களை நோக்கி இந்தக் கொடிய அஸ்திரங்களை பிரயோகிப்பது முறையா? அதிலும் தேவ அஸ்திரத்தை நாம் கண்டிப்பாக உபயோகப்படுத்த வேண்டுமா?" என வினவினான்.

அவன் வினவியதைக் கேட்டு சிரித்த புஷ்யமித்திர சுங்கன், "நண்பா... போர்க் களத்தில் அர்ச்சுனன் கௌரவரை நோக்கி சலனப்பட்டதைப் போன்று என் மகனும் தைரியத்தை இழந்து சலனப்படுகிறான். அர்ச்சுனனுக்கு கண்ணன் உபதேசம் அளித்ததைப் போன்று நீயும் இவனுக்கு உபதேசத்தை வழங்கு. அப்போதாவது இவனது மனம் மாறுகி

றதா என்று பார்ப்போம்?" என வைதீகரை நோக்கித் தெரிவித்தார்.

"சுங்க மித்திரா... சில வருடங் களுக்கு முன்னால் நான் கொடிய நாகத்தின் நஞ்சினை செங்குவீரனைக் கொலை செய்வதற்கு இருங்கோவே ளின் ஒற்றர்களான வேந்தன் மற் றும் சேந்தனிடம் கொடுத்தேன். அப் போதும் அவர்கள், "செங்குவீரன் பெரும் வீரன். அவனை நஞ்சு தடவிய அம் பெய்தி கொள்வது தர்மமா?" என உன்னைப்போன்றே இதே கேள்வியைக் கேட்டார்கள். அப்போது அவர்களுக்கு கூறிய அதே பதிலைத்தான் உனக் கும் நான் கூறுகிறேன். போரில் தர் மம், அதர்மம் என்று எதுவும் கிடையாது. சரித்திரம் வெற்றி பெற்றவர்களை மட் டுமே கொண்டாடுகிறது. வெற்றி பெற் றவர்கள் செய்த காரியத்தையே சரித்தி ரம் தர்மம் என்று புகழ்கிறது. அதற்கு நமது புராணமான மகாபாரதமே ஆதார மாக விளங்குகிறது. ஆகையால் எப்படி

வெற்றி பெறுகிறோம் என்பது முக்கியம் அல்ல. வெற்றி பெற்றோமா என்பதையே உலகம் நினைவில் வைத்திருக்கும். ஆதலால், உனது மனதில் இருக்கும் சங்கடத்தை துடைத்தெறிந்துவிடு. மனதை திடப்படுத்திக்கொண்டு போரினை முன்னெடுக்க ஆயத்தமாகு சுங்கமித்திரா... இந்தப் போருக்கான மூல காரணமே நீதான். சோழப் படைத்தலைவன் திவ்யன் உன்னைத் தேடித்தான் பெரும் படையை திரட்டிக்கொண்டு வந்திருக்கிறான். அவனை போரில் கொன்று வீழ்த்த வேண்டிய நீயே கலங்கி நின்றால் எப்படி? நான் உனக்கு கட்டளையிடுகிறேன். இடையில் இருக்கும் வாளின் மீது ஆணையிடு. "இந்தப் போரில் நிச்சயம் நான் சோழப் படையை வீழ்த்தி திவ்யனை கொன்று பழி தீர்ப்பேன்" என்று" என ஆணையிட்டார் வைதீகர் பாகவதர்.

அவரது கட்டளை எழுந்த அடுத்த கணம் இடையிலிருந்த வாளினை உருவிய சுங்கமித்திரன், "எனது வாளின் மீது

https://telegram.me/aedahamlibra

ஆணையிடுகிறேன் நான். சுங்க நாட்டினை நோக்கி வரும் சோழப் படையை எனது வீரர்களால் சிதறடிப்பேன். எனது அம்புகளால் சோழர்களின் மார்பையும், வாளினால் சோழர்களின் தலையையும் கொய்வேன்!" என ஆணையிட்டான்.

"என்ன துணிச்சல் இருந்தால் அவர்கள் சுங்கனை எதிர்க்க வந்திருப்பார்கள்? வந்திருக்கும் படையில் ஒருவன் கூட இங்கிருந்து தப்பிச் செல்லப் போவதில்லை" எனக் குறுக்கிட்டு தெரிவித்தான் புஷ்யமித்திரன்.

"அதிலும் திவ்யனை நான் அத்தனை கொடூரமாக வதைக்கப் போகிறேன் பாகவதரே... அதை நினைத்து மொத்த தென்னகமுமே காலத்திற்கும் மறக்கப் போவதில்லை!" எனப் பெரும் ஆத்திரத்துடன் தெரிவித்தான் சுங்கமித்திரன்.

"எனது திட்டங்களிலிருந்து புகாரில் தப்பிய செங்குவீரனையும் நான்

இங்கு வதைக்கப் போகிறேன் சுங்கமித்திரா... இருவரின் மன ரணமும் ஒன்றாக ஆறப்போகிறது!" என வைதீகர் கூறிக் கொண்டிருந்த போதே அங்கு ஓடிவந்த வீரன் ஒருவன், "நதியின் அக்கரையில் சோழ வீரர்கள் தென்படத் துவங்கிவிட்டார்கள்!" என மூச்சுவாங்கியபடி தெரிவித்தான்.

"முற்றுகைப் போர் என எண்ணி நான் வகுத்திருக்கும் பொறியில் சோழப் படை சிக்கப்போகிறது! கட்டளையிட்டபடி அனைத்து ஏற்பாடுகளும் துவங்கட்டும்" என புஷ்யமித்திர சுங்கன் கட்டளையிட அடுத்த கணம் அவ்வீரன் அங்கிருந்து விரைந்து செல்லலானான்.

அடிக்குறிப்பு:

1. முக்தா (Thrown) – கையினால் எறிந்து தாக்கும் ஆயுதம், அமுக்தா (Not Thrown) – கையிலேயே வைத்துக் கொண்டு தாக்கும் ஆயுதம்,

https://telegram.me/aedahamlibra

யந்த்ரமுக்தா (Thrown by machine) – எந்திரத்தின் உதவியினால் ஆயுதங்களை எறியும் ஆயுதம் என மூவகை போராயுதங்கள் அக்காலத்தில் பயன்படுத்தப்பட்டன.

source: War in ancient india By V.R Ramachandra dikshitar (Cosmo publication)

https://telegram.me/aedahamlibra

# 48.
# வில்லவ னின் பார்வை

முக்கோணத்தின் மூன்று முனைகளைப் போன்று மூன்று கோட்டைகளும் சுபர்னரேகா நதியின் வடகரையில் அமைதியாக நின்றுகொண்டிருக்க நதிக்குத் தெற்கே சோழப் படையினர் பெருங்கடலைப் போன்று பரந்து விரிந்து நின்றுகொண்டிருந்தார்கள். சோழப் படையின் காலாட்படையினர், யானைப் படை, புரவிப் படை மற்றும் தேர்ப்படை தனித்தனியாகப் பிரிக்கப் பட்டு அணிவகுத்து நின்றுகொண்டிருந்தனர். சோழப் படைத்தலைவர்கள்

சூழ கரிகாலர் படையின் முகப்பில் நின்றுகொண்டு தொலைவில் எழுந்து நின்றுகொண்டிருந்த மூன்று கோட்டைகளையும் பார்த்துக்கொண்டிருந்தார்.

அப்போது செங்குவீரன் வில்லவனை நோக்கினான்.

"ஒரு நாழிகைப் பொழுது காத்திருங்கள் தலைவரே..." எனக் கூறிக்கொண்டு அவனது உபதளபதிகளான கள்வர்களை அழைத்தவன் அவர்களுக்கு அடுத்தடுத்த கட்டளைகளைப் பிறப்பித்தான்.

வில்லவனின் கட்டளையுடன் சென்றவர்கள் கணு நீக்கப்பட்ட நீண்ட வலிமையான இரண்டு மூங்கில் கழிகள், அதைக் கட்டுவதற்கு பச்சைக் கொடிகள் ஆகியவற்றை ஒரு நாழிகை நேரம்" கழித்து கொண்டு வந்தார்கள். இரண்டு மூங்கில் கழிகளையும் அடுத்தடுத்து சேர்த்துக் கட்டி வெற்றுத் தரையில் நிற்கவைத்து அவனது உபதளபதிகள் அதை பிடித்துக்கொண்டார்கள்.

சேர்த்துக் கட்டப்பட்ட மூங்கிலின் உயரத்தைப் பார்த்த வில்லவன் திருப்தியுடன் கையைத் தரையில் தேய்த்துக்கொண்டு உயர்ந்து காணப்பட்ட மூங்கில் மரத்தில் விறுவிறுவென்று ஏறத் துவங்கினான்.

வில்லவன் எவ்வித சிரமமும் இன்றி ஏறுவதைப் பார்த்துக்கொண்டிருந்த படைத்தலைவன் திருக்கண்ணன் பிரமித்தபடி நிற்க அவனிடம் திவ்யன், "நம் வில்லவரின் அசாத்திய திறமை இது திருக்கண்ணா... கோட்டையின் மதில் எப்படிப்பட்டதாக இருந்தாலும் அதன் மீது ஏறிவிடும் வல்லமை நம் வில்லவருக்கு உண்டு. அரை காத தூரத்திற்கு அப்பால் எவரேனும் நின்றுகொண்டிருந்தாலும் நம் வில்லவரால் அவரை அடையாளம் கண்டுவிட முடியும். ஆதலால் தான் வில்லவர் கள்வராக இருந்த காலத்தில் களவின் போது அவரை பிடித்துவிட வேண்டும் என ஊர்க் காவலர்கள் கங்கணம் கட்டிக்கொண்டு திரிந்தார்கள்!" எனப் பெருமையுடன் தெரிவித்தான்.

மூங்கிலின் உச்சிக்குச் சென்ற வில்லவன் ஒரு நாழிகை நேரத்திற்கும் மேலே மூன்று கோட்டைகளையும் மாறி மாறி நோக்கினான். பிறகு சறுக்கிக்கொண்டு அதி வேகமாக கீழே இறங்கியவன் செங்குவீரனை நோக்கிச் செல்லலானான்.

"படைத் தலைவரே கோட்டைகளின் நிலை என்ன?" என வினவினான் செங்குவீரன்.

"தலைவரே, மூன்று கோட்டைகளும் நதியின் அக்கரையில் வலிமையான அரணுடன் நின்றுகொண்டிருக்கின்றன."

"அந்த மூன்று கோட்டைகளும் வலிமையானதா இல்லை வலிமையற்றதா என்பதை பிறகு தீர்மானித்துக் கொள்வோம் வில்லவரே, என்ன கண்டீர்கள் என்பதை முதலில் தெரிவியுங்கள்!" எனக் கட்டளையிட்டார் கரிகாலர்.

"நமக்கு இடப்புறம் நிற்கும் கோட்டை மற்றும் வலப்புறம் நிற்

https://telegram.me/aedahamlibra

கும் கோட்டை இரண்டிலும் வீரர்க ளின் நடமாட்டம் அதிகமாகத் தெரிகிறது. இரண்டு கோட்டைகளின் மதில்களும் வலிமையானதாக இருக்கின்றன. அதே நேரம் மதில்களுக்கும், நதிக்கரைக்கும் இடைப்பட்ட இடத்தில் வெற்று நிலம் காணப்படுகிறது. இரண்டு மதில்களின் மேலும் வீரர்கள நிறைய வீரர்கள் நின்று கொண்டு கண்காணித்துக்கொண்டிருக் கிறார்கள்!"

"சரி, நமக்கு எதிரில் இருக்கும் கோட்டையின் நிலை என்ன?"

"மூன்று கோட்டைகளில் நமக்கு எதிரில் இருக்கும் கோட்டை தான் பல வீனமானதைப் போன்று தோற்றமளிக்கி றது. அதன் மதில்கள் ஆங்காங்கே சேத மடைந்திருக்கின்றன. மதிலுக்கும் நதிக் கும் இடையில் அடர்ந்த மரங்கள் நிறைந் திருக்கின்றன. கோட்டையின் மதிலின் மீதும் வீரர்களின் எண்ணிக்கை அறவே இல்லை என்று கூறும் அளவிற்கு வெகு

சொற்பமாகவே கண்காணித்தபடி நிற்கின்றனர்!"

"அதிலிருந்து தெரிந்துகொள்வது?"

"பார்வைக்கு நமக்கு இடப்புறமும் வலப்புறமும் இருக்கும் இரண்டு கோட்டைகளில் தான் அதிக வீரர்கள் நிலை கொண்டிருக்கிறார்கள் என்று நான் கண்ட காட்சிகள் எனக்கு உணர்த்துகின்றன!"

"அப்படியெனில் நமக்கு எதிரில் இருக்கும் பலவீனமான கோட்டையை நாம் முதலில் தாக்கலாம் என்று கூறுகிறீர்கள்?" என வினவினான் திருக்கண்ணன்.

அப்போது குறுக்கிட்ட திவ்யன், "அவசரப்படாதே திருக்கண்ணா... வில்லவர் கண்ணால் கண்ட காட்சியை மட்டுமே நம்மிடம் கூறுகிறார்!" எனத் தெரிவித்தான்.

"கண்ணால் கண்ட காட்சி மட்டும் தானா?"

https://telegram.me/aedahamlibra

"ஆம்!"

"அப்படி எனில் உண்மை நிலை?"

"அது எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம்!"

"தங்களது பேச்சு புரியவில்லையே?"

"அனைத்தையும் உனக்கு வில்லவரே விளக்குவார்!" எனத் திருக்கண்ணனிடம் தெரிவித்த திவ்யன் வில்லவனை நோக்கி, "வில்லவரே... மூன்று கோட்டைகளிலும் கண்ட காட்சி இருக்கட்டும். கோட்டைகளின் உண்மை நிலை என்ன? அனைவருக்கும் தெரிவியுங்கள்?" எனக் கட்டளையிட்டான்.

"எந்தக் கோட்டையின் தலைவர்களும் கோட்டையின் பலத்தை வெளிப்படையாக வெளிப்படுத்திக்கொள்ள மாட்டார்கள். ஆனால், நமக்கு இரண்டு புறத்திலும் அமைந்திருக்கும் கோசல மற்றும் வச்சிர நாட்டுக் கோட்டையின் மதில்

https://telegram.me/aedahamlibra

களில் வீரர்கள் புழக்கம் அதிகமாகவும், வேல்கள் பலவும் சாய்த்துவைத்தபடி இருக்கின்றன. மதில்களின் மீது அனைவருக்கும் தெரியும் வண்ணம் வில் மற்றும் கற்களை எறியும் பொறிகள், மதிலைக் கடக்க முயன்றால் ஊற்றுவதற்கு வசதியாக எண்ணெய்க் கொதிகலன்கள் சற்றே அதிக எண்ணிக்கையில் வைக்கப்பட்டிருக்கின்றன. கோட்டைப் பாதுகாப்பில் வழக்கத்திற்கு மாறான செயல்கள் இவை! நம்மை ஏமாற்றுவதற்காக செய்யப்பட்டிருக்கும் சூழ்ச்சி அது. எனது ஊகப்படி இந்த இரண்டு கோட்டைகளையும் விடவும் நமக்கு எதிரில் இருக்கும் மகதத்தின் கோட்டையில் தான் நமக்கு கடும் சவால் காத்திருக்கும் எனக் கருதுகிறேன்!”

“எதிரில் இருக்கும் கோட்டைக்கும் நதிக்கரைக்கும் இடையில் அடர்ந்த மரங்கள், சேதமடைந்த கோட்டையின் மதில், ஆள் நடமாட்டமில்லாத மதில் என நமக்கு அனுகூலமாகத்தானே இருக்

கின்றன?" என வினவினான் திருக்கண்ணன்.

"படைத் தலைவரே, மற்ற இரண்டு கோட்டைகளும் படு சுறுசுறுப்புடன் இயங்கிக்கொண்டிருக்க நமக்கு எதிரில் இருக்கும் கோட்டை மட்டும் அமைதியுடன் இருக்கிறது. இந்த அமைதியே என்னை சந்தேகம் கொள்ள வைக்கிறது. இந்த அமைதி சுடுகாட்டின் அமைதியாக இருக்கும் என்றும் கருதுகிறேன் நான். அந்த அமைதியைத் தேடி நாம் சென்றால் அங்கு நாமே புதைக்கப்படுவோம் அல்லது எரிக்கப்படுவோம். கோட்டை மதிலுக்கும் நதிக் கரைக்கும் இடையில் பச்சை மரங்கள் தென்பட்டாலும் அதில் காய்ந்து போன மரங்களும் இருக்கின்றன. நாம் அதை பாதுகாப்பாகக் கொண்டு கடக்க முயலும்போது அதில் தீ வைத்தால் மொத்தமாக நாம் தீக்குள் அழிய வேண்டியதுதான். என்னைக் கேட்டால் அந்த அமைதி செயற்கையாக உருவாக்கப்பட்டிருக்கிறது என்பேன். நம்மை

சிக்க வைக்க அவர்கள் வகுத்திருக்கும் அமைதி சூழ்ச்சி அது!”

வில்லவன் கூறியதைக் கேட்டு திருக்கண்ணன் அதிர்ச்சியுடன் நின்று கொண்டிருந்தான். பிறகு, “அவர்களின் தந்திரம்தான் என்ன?” என வினவினான்.

அதுவரை அமைதியாக வில்லவன் கூறிக்கொண்டிருந்ததைக் கேட்டுக்கொண்டிருந்த செங்குவீரன், “நமக்கு இரண்டு புறத்திலும் இருக்கும் இரண்டு கோட்டைகளையும் வலிமையானவை என்று எண்ணி அதை விட்டுவிட்டு நாம் நமக்கு எதிரில் இருக்கும் மகதக்கோட்டையை பலவீனமான கோட்டை என்று நினைத்து அதைத் தாக்குவோம். அப்போது மகதக் கோட்டைக்கு உதவ மற்ற இரண்டு கோட்டைகளிலும் வீரர்கள் வெளிப்பட்டு நம்மை இரண்டு புறத்திலும் நசுக்கி விடுவார்கள்!” எனக் கூறிக் கொண்டிருந்த போதே குறுக்கிட்ட திருக்கண்ணன், “நமக்கு வேண்டியதும் அது

தானே படைத்தலைவரே. மகதக் கோட்டையைத் தாக்கினால் மற்ற கோட்டையிலிருந்து வெளிப்படும் வீரர்களை நாம் நேருக்கு நேர் எதிர்கொண்டு வீழ்த்தி விடலாம் அல்லவா...” எனத் தெரிவித்தான்.

“சுங்கனும் அதையேதான் திருக்கண்ணா எதிர்பார்ப்பான்!”

“புரியவில்லை?”

“வலிமையற்றதைப் போன்று காணப்படும் மகதக் கோட்டைதான் இங்கிருக்கும் மூன்று கோட்டைகளில் பெரும் பலமானது. அதனுள் தான் புஷ்யமித்திரனின் பெரும்படை நிலை கொண்டிருக்கிறது. மகதக் கோட்டையைத் தாக்கினால் கோசல மற்றும் வச்சிர நாட்டுப் படை வெளிப்படும் என நினைப்பது முட்டாள்தனம். அவர்கள் ஒருநாளும் நம்முடன் நேருக்கு நேர் மோத மாட்டார்கள். நாம் நதியைக் கடக்கும்போது சுங்கப் படையே முதன் முதலில் வெளிப்பட்டு நம்மைத்

தாக்கும். மற்ற இரண்டு கோட்டையி லும் பதுங்கியிருக்கும் வீரர்களும் இரக சியமாக வெளிப்பட்டு நம்மை பின்புறமா கத் தாக்க வாய்ப்பிருக்கிறது. பாறைகள் நிறைந்த நதியில் நாம் சிக்கியிருக்கும் போது நான்கு புறங்களிலும் தாக்கப்பட் டால் நமது நிலை என்ன ஆகும்!"

அங்கு சற்று நேரம் பெருத்த அமைதி நிலவியது.

"மூன்று படைகளையும் வெளியே இழுத்து ஒரேயடியாக தாக்குவதுதான் சரியாக இருக்கும்!" எனத் தெரிவித்தான் திவ்யன்.

அப்போது குறுக்கிட்ட கரிகாலர், "இல்லை படைத் தலைவரே... அது சரி யாக இருக்காது. மூன்று கோட்டைக்குள் இருக்கும் வீரர்களை நாம் வெளியேறவே விடக்கூடாது. அவர்களை கோட்டைக் குள் வைத்தே கோட்டைச்சமாதி கட்ட வேண்டும்!" எனத் தெரிவித்தார்.

“கரிகாலர் கூறுவது தான் சரி... வில்லவர் கூறியதைப் போன்று நமக்கு மகதத்தின் கோட்டைதான் பெரும் சவாலாக இருக்கப் போகிறது. மற்ற இரண்டு கோட்டைகளும் மகதத்தின் கோட்டைக்கு பாதுகாப்பாகவே நிற்கின்றன!”

“அப்படியெனில் முதலில் பாது காப்பு அரண்களை தகர்த்து எறியுங்கள் படைத் தலைவரே...” கட்டளையிட்டார் கரிகாலர்.

“வில்லவரே, உங்களுக்கு எந்தக் கோட்டை வேண்டும் என்று முடிவுசெய்து விட்டீர்களா?” என வினவினான் செங்கு வீரன்.

“நமக்கு வலப்புறத்தில் நிற்கும் வச்சிர நாட்டின் கோட்டையை நான் தாக்குகிறேன். இடப்புறம் இருக்கும் கோட்டையை திருக்கண்ணன் தாக்கட்டும்.”

“எத்தனை வீரர்கள் தங்களுக்கு வேண்டும்?”

https://telegram.me/aedahamlibra

“ஆயிரம் யானைகள், ஐந்தாயிரம் வேல் வீரர்கள், கோட்டைகளின் மதில்களை உடைக்கும் பத்து இடங்கணி மற்றும் வலங்கணி பொறி, நான்கு கல்லிடு கூடை, ஐந்து கவண், மூன்று வளை விற்பொறி அது மட்டுமல்லாமல் பத்தாயிரம் புரவி வீரர்கள், அவர்கள் அனைவரும் வேல் வீரர்களாக இருக்க வேண்டும். இது மட்டுமல்லாமல் யானைப் படையின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்த களிற்றுப் பொறி பொருத்தப்பட்ட ஆயிரம் புரவித்தேர்கள் வேண்டும்!”

அவன் கேட்ட வீரர்களின் விபரத்தைக் கேட்டதும் செங்குவீரன் சிரித்தபடி, “அதற்குள் தாக்குதல் திட்டத்தை வகுத்துவிட்டீர்கள் போலிருக்கிறதே?” என வினவினான்.

வில்லவன் எந்தப் பதிலையும் கூறாமல் சிரிக்கலானான்.

“எத்தனை நாட்களில் வச்சிரக் கோட்டை கைப்பற்றப்படும்?”

"அது உள்ளே இருக்கும் படைகளை வழிநடத்தும் கோட்டையின் தலைவனை சார்ந்தது படைத் தலைவரே... குறைந்தபட்சம் ஒருநாள் அதிக பட்சம் நான்கு நாட்கள். வச்சிர நாட்டின் கோட்டைக்குள் புஷ்யமித்திர சுங்கனே இருந்தாலும் நான்காவது நாளில் வச்சிர நாட்டின் கோட்டைக்குள் புலிக்கொடி பறக்கும்!"

"ஒரு கிழமை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள் வில்லவரே... பரதவன் குமரன் வந்த அதே நாள் நாம் மகதத்தின் கோட்டையை தாக்கத் துவங்கிவிட வேண்டும்!"

"தங்களது உத்தரவு!"

அப்போது திருக்கண்ணன், "வில்லவரே, வேல் வீரர்கள் ஐந்தாயிரம் பேர் போதுமா, கவசம் தரித்த காலாட்படையினர் தேவை இல்லையா?" என வினவினான்.

https://telegram.me/aedahamlibra

“தேவை இல்லை!”

“அவர்களின் துணை இல்லாமல் நதியை எப்படி கடப்பதாய் திட்டம்? நதியைக் கடக்கும் போது அம்பு மழை பெய்தால் என்ன செய்வீர்கள்?”

“நான் கோட்டைக்கு எதிரில் நதியைக் கடக்கப் போவதில்லை. இங்கிருந்து அரை காத தூரம் நதியின் இக்கரையிலேயே நதியின் போக்கில் பயணித்து நதியைக் கடக்கப் போகிறேன். பிறகு நதியின் வடகரையில் நதியின் போக்கில் எதிர் திசையில் பயணித்து வச்சிரக் கோட்டையை அதன் கிழக்குப் புறமாகத் தாக்குகிறேன்.”

“நல்ல திட்டம் வில்லவரே...” பாராட்டினான் செங்குவீரன்.

அப்போது கரிகாலர் திருக்கண்ணனிடம், “படைத் தலைவரே, வில்லவர் கொண்டு செல்லும் அதே அளவிலான படையை தாங்களும் எடுத்துக்கொண்டு

கோசலத்தின் கோட்டையைத் தாக்குங்கள்!" எனக் கட்டளையிட்டார்.

"தங்களது உத்தரவு பேரரசே!" பணிந்தான் திருக்கண்ணன்.

செங்குவீரன், "இருவரும் நினைவில் கொள்ளுங்கள். கொண்டு செல்லும் பொறிகள் கோட்டையின் அரணை உடைப்பதற்காக மட்டுமே. எக்காரணத்தைக் கொண்டும் வீரர்களைத் தாக்க அதை பயன்படுத்தக் கூடாது! கலிங்கப் போரில் வீரர்களை நெருங்கவிடாமல் தற்காத்துக்கொள்ளவே அதை நாம் பயன்படுத்தினோம். அதே போன்றே இப்போதும் நமது தற்காப்பிற்கு மட்டுமே நாம் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இரண்டு கோட்டைகளும் கைப்பற்றப்பட்ட பிறகு வீரர்கள் பின்வாங்கிச் சென்றால் அவர்களை விரட்டிச் செல்ல வேண்டாம். விட்டு விடுங்கள். எனது கட்டளை வரும் வரை யாரும் மகதக் கோட்டையை

நெருங்கக் கூடாது!" என இருவருக்கும் கட்டளையிட்டவன் அருகில் நின்ற உப தளபதிகளிடம், "நமது வளைவிற்பொறி, இடங்கணி, வலங்கணி மற்றும் கவண் ஆகியவற்றை தயாராக வைத்திருங்கள். சிலவற்றை மகதத்தின் கோட்டையை நோக்கி நதியின் தென் கரையில் நிறுத்தி வையுங்கள். இரண்டு கோட்டைகளை யும் காக்க சுங்கர்கள் வெளிப்பட்டால் அவர்களை நகர விடாமல் பொறிகளை இயக்கி தடுத்துவிடுங்கள்!" எனக் கட்ட ளையிட்டான்.

வில்லவனும், திருக்கண்ணனும் செங்குவீரனிடம் விடைபெற்று அங்கி ருந்து அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட படை களை அழைத்துக்கொண்டு செல்லலா னார்கள்.

அவர்கள் சென்ற பிறகு செங்கு வீரன் திவ்யனிடம், "நண்பா... இரண்டு கோட்டைகளும் வீழ்ந்த அடுத்த கணம் மகதக் கோட்டையை நீ தான் தகர்க்

கப் போகிறாய். இனி நடைபெறப்போகும் போர் உனக்கான போர். சுங்கர்களிடமிருந்து எதிர்ப்பு எப்படி வேண்டுமானாலும் வெளிப்படலாம். அனைத்திற்கும் நாம் தயாராக இருக்க வேண்டும்! உனது வெஞ்சினத்தை நிறைவேற்றும் காலம் வந்துவிட்டது" எனத் தெரிவித்தான் செங்குவீரன்.

https://telegram.me/aedahamlibra

# 49.

# கைப்பற்றப் பட்ட கோட் டைகள்

சுபர்னரேகா நதியின் தென் கரையிலேயே நதிப் போக்கில் சற்றுத் தூரம் பயணித்த வில்லவன் கோட்டைக்குள் பதுங்கியிருக்கும் வச்சிர நாட்டுப் படைகளால் ஆபத்து ஏற்படாத இடத்தில் முன் எச்சரிக்கையுடன் நதியைக் கடந்தான். பிறகு நதியின் போக்குக்கு எதிர்த் திசையில் படைகளுடன் சென்றவன் வச்சிர நாட்டுக் கோட்டை

யின் கிழக்குத் திசையில் நின்றுகொண்டு முற்றுகையிடத் துவங்கினான் வில்லவன். கோட்டையின் மதிலைச் சூழ்ந்து பெரும் அகழி காணப்பட கோட்டைக்கு முன் திறந்த வெளி நிரம்பிக் கிடந்தது. முற்று கையிடும் படைகள் நெருங்கவோ அல் லது மரங்களை பிடுங்கி வந்து கோட்டை யின் கதவுகளை உடைக்கவோ அருகில் பெரும் மரங்கள் இல்லாதவாறு அனைத் தும் வெட்டப்பட்டிருந்தன. ஆனால், நதி யின் கரையெங்கும் பாறைகள் நிரம்பிக் காணப்பட்டன.

கோட்டைக்கு முன் காணப்பட்ட திறந்த வெளியில் சற்றுத் தொலைவி லேயே தனது படைகளை நிறுத்திக் கொண்டான் வில்லவன். வைதீகர் பாக வதர் வில்லவன் தனது படையுடன் நின் றுகொண்டிருந்ததை நோக்கினார். தனது மகனின் நெருங்கிய நண்பனான வில்ல வன் தன்னை எதிர்த்தே படையை திரட் டிக்கொண்டு வந்து முற்றுகையிட நிற் பதை நினைத்த வைதீகர் பாகவதர் புன் னகைக்கவே செய்தார். சோழப் படை ஒரே நேரத்தில் மகதக் கோட்டையைத் தாக்க நதியைக் கடப்பார்கள். அப்போது,

அவர்களை எதிர்த்து அழிக்கலாம் என நினைத்தே நதிக்கரைக்கு நெருங்கி நின்றிருந்த மதில்களின் மீது அதிகளவு எந்திரங்களை நிறுத்தியிருந்தார். நதியைக் கடக்கும்போது எளிதில் அவர்களை அழித்துவிடலாம் எனும் தனது முதல் திட்டத்தை வில்லவன் தந்திரமாக முறியடித்துவிட்டதை எண்ணி அவனை சாமர்த்தியத்தை வியந்த வைதீகர், “கள்வனாக இருந்த வில்லவன் இப்பொது சோழப் படையின் படைத் தலைவர்களில் ஒருவனாக உயர்ந்திருக்கிறான் என்றால் அவனது திறமையை குறைத்து மதிப்பிடக் கூடாது” எனத் தனக்குத் தானே கூறிக்கொண்டார்.

பிறகு, கோட்டை மதிலின் மீது நின்றபடியே சுற்றிலும் நோக்கினார். நதியின் அக்கரையிலும் சோழ வீரர்களும், யானைகளும் தயாராக நிற்பதைக் கண்டவர் வச்சிர நாட்டு படைத் தலைவனிடம், “சோழப் படை எப்போது வேண்டுமானாலும் நம்மை நோக்கி வந்து தாக்

குதல் தொடுக்கலாம். நமது கோட்டையை தாக்க வந்திருக்கும் சோழப் படையில் யானைகளின் எண்ணிக்கை சொற்ப அளவிலேயே இருக்கின்றன. புஷ்யமித்திர சுங்கன் அனுப்பிய ஐந்தாயிரம் யானைகளும் தயாராக இருக்கட்டும். நான் குறிப்பிடும்போது நமது படை கோட்டைக்குள் இருந்தபடியோ அல்லது கோட்டையை விட்டு வெளியேறியோ தாக்குதல் தொடுக்கட்டும்" என அவனுக்குக் கட்டளையிட்டவர் கோட்டை மதிலின் மீது காவலுக்கு பொறுப்பேற்றிருந்த உபதலைவனிடம், "சோழ வீரர்கள் நம்மை நோக்கி நெருங்கினாலே அம்புகளையும், எரியம்புகளையும், பாறைக் கற்களையும் தொடர்ந்து கணக்கில்லாமல் எறிந்து அவர்களை விரட்டியடி. உனது தாக்குதலை சோழப் படை எதிர்கொள்ளும்போது கோட்டைக்குள் நூறாயிரம் வீரர்களுக்கு மேல் தங்கியிருக்கிறார்கள் எனும் நினைப்பு வரவேண்டும். நம்மிடம் இருக்கும் அனைத்து பொறிகளை

யும் நீ பயன்படுத்திக் கொள்ளலாம். நேரம் வரும்போது உனக்கு வேண்டிய கட்டளைகளை நான் பிறப்பிக்கிறேன்!” எனக் கட்டளையிட்டுவிட்டு செல்லலானார்.

கோட்டையை நோக்கிய வில்லவன் தனது உபபடைத் தளபதியிடம், “நூறு யானைகள், அவர்களுக்குத் துணையாக முன்னூறு வேல் வீரர்கள் கோட்டையின் மதிலை நோக்கி முன்னேறட்டும்!” எனக் கட்டளையிட்டான்.

“கட்டளையிடுங்கள் தலைவரே... நமது ஆயிரம் யானைகளையும் கொண்டு சென்று இன்று மாலைக்குள் கோட்டை மதிலை உடைக்கிறேன் நான்!” எனத் தெரிவித்தான் உபதளபதி.

“உள்ளே கோட்டைக்குள் படைகளை வழிநடத்துபவர் யார் தெரியுமா?”

“யார்?”

“வைதீகர் பாகவதர்!”

“புகாரிலிருந்து செங்குவீரருக்குப் பயந்து ஓடி வந்துவிட்டாரே, அவரா?”

“ஆம்!”

“அவரை எப்போது கண்டீர்கள்?”

“சற்று முன் மதிலின் மீது நின்று கொண்டு வீரர்களுக்கு கட்டளைகளை விதித்துக்கொண்டிருந்தார்.”

“நிச்சயமாக அவரே தானா?”

“அவரே தான். எனது நண்பன் அக்னி புத்திரனின் தந்தைதான் அங்கு நின்று கொண்டிருந்தார்! எனச் சிரித்தபடி தெரிவித்தான் வில்லவன்.

உபதளபதி அமைதியாக நின்று கொண்டிருந்தான்.

“நான் இப்பொழுது அனுப்பும் சொற்ப வீரர்கள் செல்வது கோட்டையைத் தாக்குவதற்காக அல்ல” எனத் தெரிவித்தான் வில்லவன்.

“பிறகு எதற்காக?”

"கோட்டை மதிலின் மீது நிற்கும் வில் வீரர்கள் எய்யும் அம்புகளும், கல்லெறியும் கவண்களிலிருந்து வெளிப்படும் கற்களும் எவ்வளவு தூரம் நம்மை நோக்கிப் பாயும் என்பதை நாம் முதலில் அறிய வேண்டும். அதற்குத் தான் இந்த சொற்பப் படையை முதல் கட்டமாக அனுப்புகிறேன்."

"தங்களது திட்டப்படி வச்சிரப் படையின் தாக்குதல் எல்லையை நாம் முதலில் அறிந்துகொண்டு நமது முற்றுகையைத் தீவிரப்படுத்துவோம் படைத் தலைவரே..." எனக் கூறிய உபதளபதி வில்லவனின் கட்டளைப்படி வீரர்கள் மற்றும் யானைகளை அழைத்துச் செல்லலானான்.

அவனிடம், "அவர்கள் எய்யும் அம்புகளை கேடயங்களால் தடுத்து முதலில் சிறிது தொலைவு முன்னேறிச் செல். கற்கள் விழத் துவங்கியதும் பின்வாங்கி

விடு!" எனக் கட்டளையிட்டே அனுப்பி னான் வில்லவன்.

வீரர்கள் கேடயங்களை பாதுகாப் பிற்கு எடுத்துக்கொண்டு யானைகளை அழைத்துக்கொண்டு கோட்டை மதிலை நோக்கி முன்னேறினார்கள். வைதீகர் கட்டளையிட்டபடி மதிலின் காவலன் அம்புகளை ஏறிய கட்டளையிட்டான்.

மதிலின் மீது நின்றுகொண்டிருந்த வில் வீரர்கள் அம்புகளை சரமாரியாக இடைவேளையின்றி எறியத் துவங்கி னார்கள். எதிர் காற்று அடித்ததால் அம் புகளானது சோழப் படையை அடையும் முன்னரே மண்ணில் விழுந்து குத்திட்டு நின்றன. சோழ வீரர்கள் தொடர்ந்து முன் னேறினார்கள். அடுத்து எரியம்புகளை எறியத் துவங்கினார்கள்.

எரியம்புகளையும் கேடயங்களால் தாங்கிக்கொண்டு சோழ வீரர்கள் முன் னேறினார்கள். சோழ வீரர்கள் முன்னே றத் துவங்கியதும் கோட்டையின் மதி

https://telegram.me/aedahamlibra

லின் மீதிருந்து கணைகளும், கற்களும் தொடர்ந்து விழத் துவங்கின.

அடுத்து கவண்களிலிருந்து கற்கள் விழத் துவங்கின. கற்களோடு எரி பந்து களையும் சேர்ந்து விழ சோழ வீரர்கள் சிலரது உடல்கள் நசுங்கி மரணமடைய யானைகள் மிரளத் துவங்கின.

திறமையான குஞ்சர மல்லர்கள் யானைகளை அடக்கிக் கட்டுப்படுத்த வில்லவனின் கட்டளைப்படி அனைவ ரும் பின்வாங்கலானார்கள்.

"வளைவிற்பொறி, கவண், கல்லிடு கூடை, இடங்கணி, வலங்கணி ஆகிய வற்றை கோட்டையின் மதிலை நோக்கி நிறுத்தி வையுங்கள். பொறிகளுக்கு பின் புறத்தில் நமது தேர்களும், அதைத் தொடர்ந்து யானைகளும், யானைக ளுக்கு இரண்டு புறத்திலும் புரவி வீரர் களும் அணிவகுத்து நிற்கட்டும். வேல் வீரர்கள் அனைத்து இடங்களிலும் பரவி நில்லுங்கள்" எனக் கட்டளையிட்டான்.

வச்சிர நாட்டின் கோட்டையிலிருந்து வெளிப்படும் அம்புகளும், கற்களும் தாக்காத இடத்தில் சோழப் படை அணிவகுத்து நின்றுகொண்டிருந்த போது அங்கு வந்த வில்லவனின் உப தளபதி, "தலைவரே, கோட்டைக்குள் வீரர்கள் நம்மை விடவும் பல மடங்கு நிற்கிறார்கள் போலிருக்கிறது. நான் உதவிக்கு படைகளை அழைக்கட்டுமா?" என வினவினான்.

"எதற்காக இப்பொழுது உதவிப்படைகள்?"

"கோட்டைக்குள்ளிருக்கும் வீரர்களை நாம் முழுவதும் ஒடுக்குவதற்கு?"

"எதைவைத்து கோட்டைக்குள் வீரர்கள் அதிகம் இருக்கிறார்கள் என்று கூறுகிறாய்?"

"நமது சொற்பப் படையை தாக்கவே இத்தனை அம்புகளையும், கற்களையும், எரிபந்துகளையும் எறிகிறார்

கள் என்றால் நமது மொத்தப் படையும் உள்ளே நுழைந்தால் அவர்கள் எப்படி எல்லாம் தாக்குதல் தொடுப்பார்கள்?”

“நூறு யானைகள், முன்னூறு வேல் வீரர்கள் இவர்களை எதிர்க்க கோட்டைக்குள்ளிருந்து அம்புகளையும், எரி பந்துகளையும், கற்களையும் ஒருவன் எறிகிறான் என்றால் அவன் முட்டாளாகத் தான் இருக்க வேண்டும்!”

“வைதீகர் பாகவதரை தாங்கள் முட்டாள் என்று கூறுகிறீர்களா?”

“அவரது தந்திரத்தை நாம் அறியா விட்டால் நாம் முட்டாள் அறிந்துகொண் டால் அவர் முட்டாள்.”

“அப்படியெனில் கோட்டைக்குள் அதிக வீரர்கள் இருக்கிறார்கள் என்று நம்மை ஏமாற்ற முயற்சிக்கிறாரா?”

“ஆமாம்!” எனக் கூறிய வில்லவன், “நமது எதிரிகள் நமக்கு உகந்த இடத்தைத் தான் தேர்ந்தெடுக்கிறார்கள். நதிக்

கரை முழுவதும் பாறைக் கற்கள் நிறைய கிடக்கின்றன. அவற்றை உடைத்து கல் விடு கூடை மற்றும், கவணில் வைத்து கோட்டை மதிலின் கதவினை முதலில் உடையுங்கள். அதே போன்று கோட்டைக் கதவின் இரண்டு புறத்திலும் பாறைக் கற்கள் தொடர்ந்து தாக்கி மதிலை உடைக்கட்டும்!" என உரக்கக் கட்டளையிட்டான் வில்லவன்.

அவனது கட்டளை எழுந்த அடுத்த கணம் பொறிகள் அனைத்தும் இயக்கப் பட்டன. பெரும் பாறைக் கற்கள் பொறிகளிலிருந்து வெளிப்பட்டு கோட்டை நுழைவாயிலை நோக்கிப் பறந்து சென்று தாக்கின. கோட்டை சுவரில் நின்ற வீரர்கள் பொறிகளை இயக்கி அம்புகளை சோழப் படையை நோக்கி எறிந்தார்கள்.

அதைக் கண்ட வில்லவன், "வளைவிற்பொறிகள் இயக்கப்படட்டும். கோட்டை மதிலின் மீது நின்றுகொண்

https://telegram.me/aedahamlibra

டிருக்கும் வீரர்களை விரட்டியடியுங்கள்!" எனக் கட்டளையிட்டான்.

அடுத்தகணம் வளைவிற் பொறி களிலிருந்து விற்களும், எரியம்புகளும் வானை நோக்கிப் பறந்து சென்று கோட் டைக்குள் விழுந்தன. வளைவிற்பொறி தொடர்ந்து இயக்கப்படாமல் கோட்டை யின் மதிலில் வீரர்கள் தென்படுகி றார்களோ அப்பொழுதெல்லாம் இயக்கி அவர்களை விரட்டி அடித்தார்கள். கோட்டையின் மதிலையும், நுழைவாயி லையும் இரண்டாவது நாளின் காலைப் பொழுதில் வெற்றிகரமாக தகர்த்து எறிந் தான் வில்லவன்.

"நொறுங்கிக் கிடக்கும் கோட்டை நுழைவாயிலின் மீது எரியம்புகளை தொடர்ந்து எறிந்து அதைக் எரித்து சாம் பலாக்குங்கள்" எனக் கட்டளையிட்டான்.

அடுத்த கணம் நூற்றுக்கணக்கான எரியம்புகள் கோட்டையின் உடைந்த நுழைவாயிலை நோக்கி வளைவிற்பொ

றியிலிருந்து பறந்து சென்று விழ பற்றி எரியத்துவங்கியது கோட்டையின் நுழைவாயில்.

"கோட்டையின் மதிலை நோக்கி பாறைக் கற்களை எறிந்தது போதும். நமக்கும் கோட்டைக்கும் இடையிலிருக்கும் அகழியை பாறைக் கற்களால் தூற்று விடுங்கள்" எனக் கட்டளையிட்டான்.

கவண், கல்லிடுகூடை, இடங்கணி மற்றும் வலங்கணி ஆகிய பொறிகளிலிருந்து பாறைக் கற்கள் தொடர்ந்து வீசி அகழியைத் தூர்க்கத் துவங்கினார்கள். இரண்டாவது நாள் பொழுது முடியும் தருவாயில் அகழியும் தூர்க்கப்பட்டு சோழப் புரவித் தேர்கள் பயணிக்கும் அளவிற்கு கற்கள் கொண்டு நிரப்பப்பட்டிருந்தன.

கோட்டையின் நுழைவாயில் உடைக்கப்பட்ட அடுத்த கணம் மண் சுவர் ஒன்றை எழுப்ப முயற்சித்தார்கள் வச்சிர நாட்டு வீரர்கள். ஆனால், பறந்து வந்த அம்புகளும், எரியம்புக

ளும், பாறைக் கற்களும் நுழைவாயி லுக்கு அருகில் வச்சிர நாட்டு வீரர்களை நெருங்கவே விடாமல் செய்திருந்தன. உடனே வைதீகர் பாகவதர் மாற்றுத் திட் டம் ஒன்றையும் வகுத்துவிட்டிருந்தார்.

சோழப் படை வீரர்கள் கோட்டை யைக் கைப்பற்ற நெருக்கமாக உடைந்த மதிலின் வழியாக கோட்டைக்குள் நுழை யும்போது அவர்கள் அனைவரையும் உள்ளே நிறுத்தப்பட்டிருக்கும் யானைப் படையினால் தாக்கி அழித்துவிடலாம்" என திட்டமிட்டு உடைந்த மதிலின் கோட்டைக்கு உட்புறமாக புஷ்யமித்திர சுங்கன் அளித்த ஐந்தாயிரம் யானைக ளையும் முதல் வரிசையில் நிற்க வைத் திருந்தார். யானைகளுக்குப் பின்புறமாக வச்சிர நாட்டின் முப்பதாயிரம் வீரர்களை யும் புரவி, காலாட், வில் என்று தனித்தனி யாக அணிவகுத்து நிற்கவைத்திருந்தார்.

இரண்டாவது நாளில் கோட்டை யின் நுழைவாயில் மற்றும் மதில் உடைக்

கப்பட்டாலும் வில்லவன் கோட்டைக் குள் பிரவேசிக்கவில்லை.

மூன்றாவது நாளில் பரிதி கிழக்கில் தலைகாட்டத் துவங்கிய அடுத்த கணம் சோழப் புரவித் தேர்கள் முதன் முதலாக வச்சிர நாட்டின் கோட்டைக்குள் பிரவே சித்தன. நுழைவாயிலின் வழியாக ஆயி ரம் புரவித் தேர்கள் நுழைய உடைக் கப்பட்ட இரண்டு கோட்டை மதிலின் வழியாக சோழப் படையின் பத்தாயி ரம் புரவிகளும் அதிவேகத்தில் நுழைந்து கோட்டைக்குள் அணிவகுத்து இருக்கும் படையைத் தாக்காமல் அதன் இரண்டு புறத்திலும் பிரிந்து சென்றுகொண்டிருந் தார்கள்.

புஷ்யமித்திரன் அளித்த ஐந்தா யிரம் யானைகளும் கோட்டைக்குள் நுழைந்த சோழப் படையின் புரவித் தேர் களை நோக்கி தாக்குவதற்காக அதிவே கமாக ஓடி வந்தன. ஐந்தாயிரம் யானை களும் ஓடி வந்த வேகத்தில் அந்த

இடமே அதிர்ந்து அடங்கியது. சோழப் புர வித் தேர்களில் கட்டப்பட்டிருந்த புரவி கள் கூட மிரளத் துவங்கின.

வேகமாக ஓடிவந்த யானைகள் புர வித் தேர்களை துவம்சம் செய்ய தும்பிக் கையைத் தூக்கிக்கொண்டு தலையால் இடித்தன. வேகமாக வந்த யானைகளின் தாக்குதலினால் சோழப் புரவித் தேர்கள் அனைத்தும் உடைந்து நொறுங்கியிருக்க வேண்டும். ஆனால், தேர்களின் நுகத் தடியில் பொருத்தப்பட்டிருந்த களிற்றுப் பொறி, பிண்டிபாலம், பன்றிப் பொறி ஆகியவற்றினால் யானைகளின் தும்பிக் கைகள் வெட்டப்பட்டும், அதன் தலை கிழித்தும் எறியப்பட்டன. முன் வரிசையில் நின்ற யானைகள் அனைத்தும் கொடூர மாகத் தாக்கப்பட்டு கீழே விழ பின் வரி சையில் நின்றுகொண்டிருந்த யானைகள் மிரளத் துவங்கின. அந்த அரிய சூழ்நிலை யைப் பயன்படுத்திக்கொள்ள நினைத்த வில்லவன், "புரவித் தேர்களில் நிற் கும் ஆயிரம் வேல் வீரர்களும் தாக்கு

தல் தொடுக்கட்டும்!" எனக் கட்டளை யிட்டான்.

அவனது கட்டளை எழுந்த அடுத்த கணம் எதற்கும் அஞ்சாத கருணை என்பதையே மறந்திருந்த வேல் வீரர் கள் வச்சிர நாட்டுப் படைக்குள் ஊடு ருவிச் சென்று யானைகளின் விழிகளை நோக்கி குறிவைத்து வேல்களால் தாக்க யானைகள் அனைத்தும் சுமந்து கொண் டிருந்த குஞ்சர மல்லர்களை கீழே எறிந் துவிட்டு தறிகெட்டு ஓடி வச்சிர நாட்டு வீரர்களையே தாக்கத் துவங்கின.

சோழப் படையின் தேர்களில் சிக்கி மாண்ட யானைகள் தவிர்த்த மற்ற அனைத்து யானைகளும் மிரண்டு பின் வாங்கி ஓடி வச்சிர நாட்டு வீரர்களைத் தாக்கி அவர்களின் அணிவகுப்பை சிதற டிக்கத் துவங்கின.

புரவியின் மீது கையில் அவனது நீண்ட வாளுடன் நின்றுகொண்டிருந்த வில்லவன், புரவி வீரர்கள் ஊடுருவட்

டும்!” எனக் கட்டளையிட்டுவிட்டு அவனும் வச்சிர நாட்டு வீரர்களுக்கிடையில் ஊடுருவி தாக்கத் துவங்கினான்.

வச்சிர நாட்டின் முப்பதாயிரம் வீரர்கள் சோழப் படையின் பத்தாயிரம் புரவி வீரர்களின் அதிரடித் தாக்குதலை தொடக்கத்தில் துணிந்து எதிர்கொண்டாலும் சோழப் புரவி வீரர்களின் வேல்களின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் மண்ணில் மரணித்து விழத்துவங்கினார்கள்.

காலையில் துவங்கிய போரானது பொழுது முதல் சாமத்தைக் கடந்து இரண்டாவது சாமத்தின் முதல் நாழிகையை அடைந்தபோது முடிவடைந்திருந்தது. சோழப் படையின் தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் புறமுதுகிட்டு ஓடியவர்களைத் தவிர மற்ற அனைவரும் கொல்லப்பட்டிருந்தார்கள்.

மூன்று கோட்டைகளில் வச்சிர நாட்டின் கோட்டையை கைப்பற்றிய வில்

லவன் வச்சிர நாட்டின் கொடியை இறக்கி புலிக் கொடியை பறக்கவிட்டான்.

வெற்றிக் களிப்பில் வில்லவன் நின்றுகொண்டிருந்த போது, “வைதீகரின் உடலை எங்கும் தேடித் பார்த்துவிட்டேன் தலைவரே... அவரும் எங்கோ ஓடிச் சென்றுவிட்டார்!” என வில்லவனிடம் தெரிவித்தான் உபதளபதி ஒருவன்.

“எங்கு சென்றிருக்கப் போகிறார் மகதத்தின் கோட்டைக்கு சென்றிருப்பார். அவரைப் பற்றிய கவலை வேண்டாம். போரில் இறந்த வீரர்களை நல்லடக்கம் செய்யத் துவங்குங்கள்!” எனக் கட்டளையிட்டான்.

உபதளபதியும் அங்கிருந்து விடைபெற்று செல்லலானான். சென்றுகொண்டிருந்த உபதளபதியை அழைத்தவன், “திருக்கண்ணனிடம் இருந்து தகவல் ஏதேனும் கிடைத்ததா?” என வினவினான்.

“காலையில் கிடைத்த தகவல் தான். அதன் பிறகு எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. கோசலக் கோட்டை யின் முற்றுகையும் இந்நேரம் இறுதி கட் டத்தை நெருங்கியிருக்கும்!” எனத் தெரி வித்தவன் அங்கிருந்து செல்லலானான்.

*****

கோசலத்தின் கோட்டையை முற் றுகையிட்ட அடுத்த கணத்திலிருந்து திருக்கண்ணனும் தாக்குதலை தீவிரப் படுத்திக்கொண்டிருந்தான். இடங்கணி, வலங்கணி, கல்லிடு கூடை, கவண் ஆகி யவற்றைக் கொண்டு கோட்டை மதி லையும், வாயிலையும் தகர்த்து எறிந்தி ருந்தான். கோட்டையின் சுவரில் நின் றுகொண்டிருந்த வீரர்களை வளைவிற் பொறியின் உதவியுடன் விரட்டி அடித் திருந்தான். வில்லவன் வச்சிர நாட் டின் கோட்டையைக் கைப்பற்றி அதில் புலிக்கொடியைப் பறக்கவிட்டுக்கொண் டிருந்த அதே நேரத்தில் திருக்கண்

https://telegram.me/aedahamlibra

ணனும் கோசலத்தின் கோட்டையின் பாதுகாப்பு அரணை உடைத்திருந்தான். கோட்டைக்குள் நுழைய திருக்கண்ணன் ஆயத்தமாகிக் கொண்டிருந்த போதே கோசலத்தின் வீரர்கள் சோழப் படையை நேருக்கு நேர் எதிர்கொள்ள விரைந்து வெளியேறி வந்துகொண்டிருந்தார்கள்.

புஷ்யமித்திர சுங்கன் அளித்த யானைப் படை முதன்மையாக வர கோசலத்தின் இருபதாயிரம் வீரர்கள் அடுத்ததாக சோழப் படையைத் தாக்க வந்து கொண்டிருந்தார்கள்.

அவர்கள் கோட்டையை விட்டு தானே வெளியே வருவதைக் கண்ட திருக்கண்ணன், "அவசரப்படாதீர்கள். அவர்கள் கோட்டையின் மதிலை விட்டு முழுவதுமாக வெளியே வரட்டும்" எனக் கட்டளையிட்டான்.

சோழ வீரர்கள் அமைதி காத்தார்கள். கோசலத்தின் படை நெருங்கியதும்,

ணனும் கோசலத்தின் கோட்டையின் பாதுகாப்பு அரணை உடைத்திருந்தான். கோட்டைக்குள் நுழைய திருக்கண்ணன் ஆயத்தமாகிக் கொண்டிருந்த போதே கோசலத்தின் வீரர்கள் சோழப் படையை நேருக்கு நேர் எதிர்கொள்ள விரைந்து வெளியேறி வந்துகொண்டிருந்தார்கள்.

புஷ்யமித்திர சுங்கன் அளித்த யானைப் படை முதன்மையாக வர கோசலத்தின் இருபதாயிரம் வீரர்கள் அடுத்ததாக சோழப் படையைத் தாக்க வந்து கொண்டிருந்தார்கள்.

அவர்கள் கோட்டையை விட்டு தானே வெளியே வருவதைக் கண்ட திருக்கண்ணன், "அவசரப்படாதீர்கள். அவர்கள் கோட்டையின் மதிலை விட்டு முழுவதுமாக வெளியே வரட்டும்" எனக் கட்டளையிட்டான்.

சோழ வீரர்கள் அமைதி காத்தார்கள். கோசலத்தின் படை நெருங்கியதும்,

"யானைப் படை முன்னேறட்டும்" எனக் கட்டளையிட்டான் திருக்கண்ணன்.

முதலில் இரண்டு யானைப் படைகளும் ஒன்றோடொன்று நேருக்கு நேர் மோதிக்கொண்டன. யானைகளின் தந்தங்கள் பட்டு யானைகளின் உடல்கள் கிழிந்து குருதி தெறிக்க அவ்விடமே கண நேரத்தில் இரத்தக் காடாகத் துவங்கியது. யானைப் படைகளுக்கு பின்புறமாக நின்றுகொண்டிருந்த கோசலத்தின் வீரர்கள் சோழ யானைகளைத் தாக்க ஊடுருவி வந்து கொண்டிருந்தார்கள். சோழ வேல் வீரர்கள் யானைகளைத் தாக்கி அவற்றை மிரளச் செய்துகொண்டிருந்தார்கள். வீரர்கள் ஊடுருவிச் சென்று வேலினால் யானைகளின் கழுத்தில் பாய்ச்சிக் கொன்றும், வாளினால் யானைகளின் தும்பிக்கையை வெட்டி வீழ்த்திய படியும் முன்னேறிக் கொண்டிருந்தனர்.

"யானைகளுக்குப் பின்புறமாக நிற்கும் கோசலத்தின் வீரர்களை புரவிப்

படையினர் தாக்கட்டும்!" எனக் கட்டளையிட்டவன் அவனது உபதளபதியிடம், "விரைந்து சென்று கோட்டையின் மதிலைக் கைப்பற்று!" எனக் கூறிவிட்டு அவனும் புரவிப் படையுடன் விரைந்து சென்று கோசலத்தின் படைகளைத் தாக்கினான்.

வில்லவனின் போரைப் போன்று கோசலத்தின் போர் எளிதில் முடிவடையவில்லை. கோசலத்தின் வீரர்கள் இரு பதாயிரம் வீரர்கள் மட்டுமே கொண்டாலும் புஷ்யமித்திரன் அளித்த யானைப் படைகளின் உதவியால் போர் நீடித்துக் கொண்டிருந்தது. சோழப் படையின் புரவி வீரர்கள் கோசல வீரர்களை வீழ்த்தி விட்டு யானைப் படையை பின்புறமாகத் தாக்கி அழித்த பிறகே போர் முடிவுக்கு வந்தது.

இரண்டு சாம நேரத்திற்கும் அதிகமாக நடந்த போரில் சற்றே அதிக இழப்புடன் திருக்கண்ணன் கோசலத்

தின் கோட்டையைக் கைப்பற்றியிருந்தான். அவனும் கோசலக் கோட்டைக்குள் நுழைந்த அடுத்த கணம் கோட்டையில் புலிக்கொடியைப் பறக்கவிடலானான்.

மகதக் கோட்டைக்கு காவல் அரணாக விளங்கிய இரண்டு கோட்டைகளையும் திருக்கண்ணனும், வில்லவனும் கைப்பற்றிய பிறகு மீண்டும் மகதப் படை தாக்கும்போது பதிலடி கொடுக்க வசதியாகவும், கோட்டையைத் தற்காத்துக்கொள்ள வேண்டியும் பல பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள்.

கொண்டு வந்திருந்த பொறிகள் அனைத்தையும் கோசல மற்றும் வச்சிர நாட்டின் கோட்டை மதிலின் மீது நிறுத்தி வைத்தார்கள்.

போரினை மூன்றாவது நாளிலே முடித்துவிட்டாலும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுவிட்டு நான்காவது நாளின் மூன்றாவது சாமத்தின்

முதல் பொழுதில் வில்லவன் சோழப் படையை நோக்கிச் சென்றான். வில் லவன் சென்ற அடுத்த ஒரு நாழி கைப் பொழுது கழித்து திருக்கண்ணனும் சென்று சேர்ந்திருந்தான்.

அப்போது திருக்கண்ணன், "தலை வரே... மகதத்தின் இரண்டு கோட்டை களும் நம் கையில் விழுந்துவிட்டன. இனி அவர்கள் மீண்டும் கோட்டையைக் கைப்பற்ற இயலாத அளவிற்கு வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்துவிட் டோம். மகதக் கோட்டையை எப்போது தலைவரே தாக்கப் போகிறோம்?" என வினவினான்.

"திருக்கண்ணன் வந்து சேரட்டும்!"

"அவன் எப்போது வருவான்?"

"இந்நேரம் அவர்கள் வந்திருக்க வேண்டியது! சுபர்னரேகா நதியில் வெள் ளப்பெருக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆத

லால் அவனது பயணம் தாமதமாகியிருக்கும்!"

"அடுத்த கட்டளை என்ன தலைவரே?" என வினவினான் வில்லவன்.

"நான் நதி வழியாக மகதக் கோட்டையைத் தாக்கும்போது இருவரும் வச்சிர மற்றும் கோசலத்தின் கோட்டையிலிருந்து முன்னேறிச் சென்று நதியின் அக்கரையில் நின்றபடி மகதக் கோட்டையை கிழக்கு மற்றும் மேற்குத் திசையில் நின்று கொண்டு தாக்குங்கள்!"

"செங்குவீரா... படையை என்னை வழிநடத்தச் சொல்லிவிட்டு நீ மகதக் கோட்டையை தாக்கப் போகிறேன் என்கிறாய்?" என வினவினான் திவ்யன்.

"ஆமாம் நண்பா... படையை கரிகாலருடன் நீதான் வழிநடத்தப் போகிறாய். ஆனால், நதியைக் கடக்கும் படையில் நான் தான் முதலாக செல்லப் போகிறேன்!"

https://telegram.me/aedahamlibra

"உனது திட்டம் என்ன?"

"பரதவன் குமரன் நாளை மாலை வந்துவிடுவான் என்று எதிர்பார்க்கிறேன். அதற்கு அடுத்த நாள் நமது படை மகதக் கோட்டையை நெருங்கும்!"

"தாக்குதல் திட்டம்?" என மீண்டும் வினவினான் திவ்யன்.

"நமது தாக்குதல் எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதை புஷ்யமித்திர சுங் கன் தீர்மானிப்பான்!" எனத் தெரிவித் தான் செங்குவீரன்.

https://telegram.me/aedahamlibra

# 50. அதிர்ந்த சோழப் படை

மகதக் கோட்டையைத் தவிர்த்து கோசலம் மற்றும் வச்சிர நாட்டின் கோட்டைகள் இரண்டும் கைப்பற்றப்பட்ட பிறகு சோழப் படையும், பொறிகளும் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டன. ஒரு பிரிவு கரிகாலரின் தலைமையில் நதியின் தென் கரையிலேயே செங்குவீரன் மற்றும் திவ்யனுடன் நின்று கொண்டிருந்தன. மற்ற இரண்டு பிரிவுகளும் திருக்கண்ணன் மற்றும் வில்லவனின் தலைமையில் கோசலம் மற்றும் வச்சிர நாட்டின் கோட்டையிலிருந்து புறப்பட்டு மகதக் கோட்டையை மேற்கு மற்றும் கிழக்குத் திசையில் நின்றபடி முற்றுகை

யிடலாம் எனும் திட்டத்தில் பிரிக்கப்பட்டிருந்தன.

இரண்டு நாட்கள் கழித்து திருக்கண்ணன், வர்த்தினி, இம்ஹோடெப் ஆகியோர் சுபர்னரேகா நதியின் வழியாக பாய் விரித்து வந்து சேர்ந்தார்கள். காவேரி நதியைப் போன்று சுபர்னரேகா நதியானது அதிக ஆழமில்லாத காரணத்தினால் பரதவன் குமரன் சொழாந்தியக் கலங்களையும், கலிங்கப் போரில் கைப்பற்றப்பட்ட மரக் கலங்களையும் மட்டுமே சுங்கப் போருக்கு கொண்டு வந்திருந்தான். அனைத்திலும் பொறிகளையும், வீரர்களையும் நிரப்பி கொண்டு வந்திருந்தான்.

மரக்கலங்களின் உதவி கிடைத்தவுடன் செங்குவீரன் கூறியதைப் போன்று மகதக் கோட்டையை முற்றுகையிட ஆயத்தமானான்.

சுபர்னரேகா நதியின் தென் கரையில் யானைப்படை மற்றும் கவசம் தரித்த காலாட்படையினருடன் நின்ற செங்குவீ

ரன், "நதிக்கரைக்கும் மகதக் கோட்டை யின் மதிலுக்கும் இடையில் இருக்கும் அடர்ந்த மரங்களை நோக்கி எரியம்பு களை எறியுங்கள்!" எனக் கட்டளையிட் டான்.

அவன் கட்டளையிட்ட அடுத்த கணம் வளைவிற்பொறிகள் திருப்பப் பட்டு இயக்கப்பட்டன. எரியம்புகள் ஆற் றைத் தாண்டி பறந்து சென்று தொடர்ந்து விழ பட்ட மரங்களுடன், பச்சை மரங்க ளும் சேர்ந்து எரியத் துவங்கின. எரியம்பு களின் நுனியில் தடவப்பட்டிருந்த அரக் குகள் எரிந்து உருக உருக பச்சை மரங் களும் தீப்பிடித்து கொழுந்துவிட்டெரிய அந்த இடமே புகை மண்டலத்தால் சூழத் துவங்கியது.

நதிக் கரையில் மகதக் கோட்டை அமைந்திருந்ததால் பெரும் வாய்க்கால் கள் வெட்டப்பட்டு நதி நேரானது கோட் டையின் அகழிக்கு நேரடியாகச் சென் றுகொண்டிருந்தது. மொத்த மரங்களும்

https://telegram.me/aedahamlibrary

எரிந்து அடங்கும் வரைக் காத்திருந்த செங்குவீரன் பரதவன் குமரன் மற்றும் இம்ஹோடெப்பிடம், “கோட்டையின் அகழி நதி வரை நீண்டிருக்கிறது. அதன் வழியாக நமது மரக்கலங்கள் முன்னேறட்டும். கோட்டை மதிலை நெருங்கவேண்டாம். தொலைவில் இருந்தபடியே முற்றுகையைத் தீவிரப் படுத்துங்கள். நான் நதியின் வடகரையில் நிலை கொண்டு முற்றுகையைத் துவங்குகிறேன்!” எனக் கூறியவன் திவ்யனிடம், “வளைவிற்பொறிகளின் மூலம் இங்கிருந்து கோட்டைக்குள்ளேயே நம்மால் அம்புகளையும், எரியம்புகளையும் செலுத்த முடியும். ஆனால், பாதி நதியைக் கடந்தால் தான் நம்மால் கல்லிடுகூடை, இடங்கணி, வலங்கணி, கவண் ஆகியவற்றின் மூலம் தாக்குதல் மேற்கொண்டு கோட்டைக் கதவினையும், மதிலையும் தகர்க்க முடியும்! நான் யானைப் படையுடன் கோட்டையின் கதவினை நேருக்கு நேர் தாக்குகிறேன். கோட்டை மதிலில் யாரையும் நெருங்க

விடாமல் வளைவிற்பொறி எனக்கு பாது காப்பினை அளிக்கட்டும்!" எனக் கட்ட ளையிட்ட செங்குவீரன் முதல் வீரனாக ஆற்றில் இறங்குவதற்கு செல்லலானான்.

அப்போது வர்த்தினி நீண்ட இரும் புக் கேடயம் ஒன்றை எடுத்து செங்குவீர னிடம் கொடுத்து, "உங்களைப் போன்று சுங்கர்களும் நேர்மையாக போரிடுவார் களா என்று தெரியாது? ஆதலால் இந்த இரும்புக் கேடயம் உங்களுடன் இருக் கட்டும்! இது உங்களுக்கு உதவும்" எனக் கூறி அவனிடம் நீட்டினாள்.

அப்போது பரதவன் குமரன், "படைத் தலைவர் ஒரு நாளும் போருக் குச் செல்லும்போது கேடயத்தை எடுத் துச் சென்றதில்லை. எத்தனை அம்புகள் அவரை நோக்கி வந்தாலும், கையிலி ருக்கும் வாள் மற்றும் வேல் இரண்டை யும் சுழற்றி அதைத் தடுத்து நிறுத்திவிடும் வல்லமை உடையவர் நம் படைத் தலை வர்" எனத் தெரிவித்தான்.

பரதவன் குமரனின் விழிகளில் தனது பார்வையை சிறிது நேரம் பதிக் கவிட்ட வர்த்தினி, "படைத்தலைவரின் வீரத்தை நானும் அறிவேன் தலைவரே... இது போர் அல்ல... முற்றுகை என்பதை நினைவில் கொள்ளுங்கள். மற்ற காலாட் படை வீரர்களைப் போன்று படைத் தலைவர் உடல் முழுவதையும் மறைக் கும் இரும்புக் கவசம் அணிந்திருந்தால் நான் கேடயத்தை அளிக்க வேண் டிய அவசியம் இருந்திருக்காது. சுங்கர் கள் தங்களைக் காத்துக்கொள்ள என்ன வேண்டுமானாலும் செய்வார்கள். ஆத லால், இன்று இவர் நிச்சயம் இந்தக் கேட யத்தையும் எடுத்துச் செல்லட்டும்!" எனத் தெரிவித்தாள்.

அவள் கூறியதைக் கேட்டதும் செங்குவீரன், "தங்களின் விருப்பத்தை நிறைவேற்றுவதில் நான் மகிழ்கிறேன் இளவரசி..." எனத் தெரிவித்தவன் கேட யத்தை அவளிடமிருந்து வாங்க கையை உயர்த்தினான்.

கேடயத்தை அவளிடம் அளித்த வார்த்தினி, "வீரரே... இனி என்னை கலிங்க இளவரசி என அழைக்க வேண் டாம். நான் என்றோ சோழ நாட்டுக்கு உரியவளாகி விட்டேன்" என பரதவன் குமரனைப் பார்த்தபடியே தெரிவித்தவள் மரக்கலங்களை நோக்கி அங்கிருந்து செல்லலானாள்.

அவளைப் பின்தொடர்ந்து பரத வன் குமரனும், இம்ஹோடெப்பும் செல் லலானார்கள். சொழாந்திய மரக்கலங் கள் இரண்டு பிரிவாக பிரிக்கப்பட் டன. ஒரு பிரிவுக்கு பரதவன் குமரனும், இன்னொரு பிரிவுக்கு இம்ஹோடெப்பும் தலைமையேற்று கோட்டையின் கிழக்கு மற்றும் மேற்குப் புற அகழியை நோக்கி நதியில் செல்லலானார்கள்.

மகதக் கோட்டையைப் பற்றி நன்கு அறிந்த வர்த்தினி பரதவன் குமரனுடன் சென்று அனைவருக்கும் வேண்டிய கட்

டளைகளை பிறப்பித்துக் கொண்டிருந் தாள்.

வர்த்தினி அளித்த பெரிய இரும் புக் கேடயத்துடன் நீண்ட வேல் ஒன்றை எடுத்துக்கொண்ட செங்குவீரன் இடை யில் தனது வாளுறையுடன் ஆற்றில் இறங்கி பாறைகளில் நடந்து முதல் வீர னாக மகதக் கோட்டையை நோக்கி செல்லலானான். கோட்டைகளின் கதவு களை உடைப்பதற்கு ஏதுவாக நெற்றி யில் வலிமையான இரும்புக் கவசங்கள் பொருத்தப்பட்டிருந்த யானைகளும், மதி லின் மீது நின்றிருந்த வீரர்களை எதிர் கொள்ள இரும்புக் கவசம் அணிந்த வீரர்களும் செங்குவீரனைத் தொடர்ந்து நதிக்குள் இறங்கிச் செல்லலானார்கள்.

அமைதியாக நின்றுகொண்டிருந்த மகதத்தின் கோட்டையை நோக்கி நதி யைக் கடந்து செங்குவீரன் சென் றுகொண்டிருக்க, அகழியின் வழியாகத் தாக்குதலைத் தொடுப்பதற்கு சொழாந்

தியக் கலங்கள் விரைந்துகொண்டிருந் தன. கோட்டையை நோக்கி கிழக் கிலிருந்து வில்லவனும், மேற்கிலிருந்து திருக்கண்ணனும் நெருங்கிச் சென்று கொண்டிருந்தார்கள்.

மகதப்படை கோட்டையிலிருந்து வெளிப்பட்டால் அவர்களை எதிர் கொள்ள தயாராக செங்குவீரர் திவ்யனு டன் சுபர்னரேகா நதியின் தென் கரை யில் நின்றுகொண்டிருந்தார். செங்குவீ ரன் இடுப்பளவு நீரில் பாதி நதியைக் கடந்துகொண்டிருந்தான். அப்போது மகதக் கோட்டையிலிருந்து வில் வீரர்கள் அம்புகளை எய்தார்கள். அதைத் தங் களின் கேடயங்களாலும் உடலில் தாங் கியிருந்த இரும்புக் கவசத்தாலும் வீரர் கள் தாங்கிக் கொண்டார்கள். உடலில் தைத்த அம்புகளை பொருட்படுத்தாமல் யானைகள் விரைந்து சென்றுகொண்டி ருந்தன.

அப்போது திடீரென்று அகழியில் சில மரக்கலங்கள் கோட்டையிலிருந்து இறக்கப்பட்டன. இறக்கப்பட்ட மரக்கலங்கள் கோட்டையின் கிழக்கு மற்றும் மேற்குத் திசையில் பாய்ந்த அகழிகளிலிருந்து அதி வேகத்தில் சொழாந்தியக் கலங்களை நோக்கி விரைந்து வந்தன. அவர்களின் துணிச்சலைக் கண்ட பரதவன் குமரனும், இம்ஹோடெப்பும் அக்கலங்களை மோதி அகழியில் மூழ்கடிக்க சொழாந்தியக் கலங்களை அதி வேகத்தில் செலுத்தினார்கள்.

வச்சிர மற்றும் கோசலத்தின் கோட்டையிலிருந்து புறப்பட்ட திருக்கண்ணனும், வில்லவனும் பெரும் எச்சரிக்கையுடன் கோட்டையை நெருங்கினார்கள். மூன்று திசைகளிலும் சோழ வீரர்கள் நெருங்கியதும் புஷ்யமித்திர சுங்கன், "நாக அஸ்திரத்தை இயக்குங்கள்!" எனக் கட்டளையிட்டான்.

https://telegram.me/aedahamlibra

அவன் கட்டளையிட்ட அடுத்த கணம் கோட்டையின் மதில்களுக்குப் பின்புறமாக மறைத்து வைக்கப்பட்ட இயந்திரங்களிலிருந்து எரியம்புகள் நதியைக் கடந்து கொண்டிருந்த செங்குவீரனை நோக்கி எய்தார்கள். ஒரே நேரத்தில் பெரும் மழையைப் போன்று பறந்து வந்துகொண்டிருந்த எரியம்புகளை நோக்கிய செங்குவீரன், “எரியம்புகள் வந்துகொண்டிருக்கின்றன. கேடயங்களால் காத்துக்கொள்ளுங்கள்!” எனக் கட்டளையிட்டவன் கேடயத்தை உயர்த்திப் பிடித்து தற்காத்துக் கொண்டான்.

உடலில் இரும்புக் கவசத்துடன் நின்றுகொண்டிருந்த வீரர்கள் அந்த எரியம்புகளை பொருட்படுத்தாமல் முன்னேற மற்ற வீரர்கள் கேடயத்தை உயர்த்திப் பிடித்து தற்காத்துக் கொண்டார்கள்.

தனது கேடயத்தைத் தாக்கி நதியில் விழுந்த எரியம்புகளை நோக்கினான்

செங்குவீரன். எரியம்பு நீரில் அணைந்த போது அதில் நீல நிற புகை எழுந்ததைக் கண்டவன், "வீரர்களே... பின்வாங்குங் கள். நச்சு அம்பு!" எனக் கூறிக்கொண்டு மூச்சினைப் பிடித்துக்கொண்டு பின் வாங்கினான்.

அவனது எச்சரிக்கையைக் கேட் டதும் வீரர்களும் மூச்சினைப் பிடித் துக் கொண்டு பின்வாங்கினார்கள். வீரர் களில் பலர் நாக பாணத்தின் நஞ் சுப் புகையை சுவாசித்து நதியிலேயே மரணித்து விழுந்தார்கள். கோட்டையை நோக்கி முன்னேறிய திருக்கண்ணன் மற் றும் வில்லவனின் படைப் பிரிவின் முன் வரிசை வீரர்களும் நாக பாணத்தி னால் தாக்கப்பட்டு அங்கேயே மரணித்து விழுந்தார்கள்.

மகதக் கோட்டையிலிருந்து இயக் கப்பட்ட இந்திர அஸ்திரம் சோழ வளை விற்பொறியினைப் போன்று விற்களை சரமாரியாக சோழ வீரர்களை நோக்கிப்

பாய்ச்சின. அப்போது நெருப்பினை கக்கியபடியே வானில் பறந்து வந்த அக்னி அஸ்திரம் சோழ யானைகளை மிரள வைத்தன. வந்தபாசனா அஸ்திரத்திலிருந்து கற்கள் தூக்கி எறியப்பட்டன. கோட்டையிலிருந்து வெளிப்பட்ட அம்புகள் தாக்கியதிலும், அதன் புகையை முகர்ந்ததிலும் வீரர்கள் கொத்துக் கொத்தாக மரணித்து விழுந்தார்கள். தாக்கப்பட்ட யானைகள் அனைத்தும் நதியிலேயே விழுந்தன. கோட்டையை நோக்கி முதல் கட்டமாக நெருங்கிச் சென்ற வீரர்களில் பெரும்பாலோனோர் மரணித்து விழுந்தார்கள்.

எச்சரிக்கை அடைந்த வீரர்கள் அனைவரும் பின்வாங்கிக் கொண்டிருந்த அதே நேரத்தில் அகழியின் வழியாக சென்றுகொண்டிருந்த சொழாந்திய மரக்கலங்களை நோக்கி சில மரக்கலங்கள் அதி வேகத்தில் வந்துகொண்டிருந்தன. அதைப் பார்த்ததும் முன் வரிசையில் சென்ற சோழ மரக்கல வீரர்கள்

அதைத் தாக்குவதற்கு விரைந்து செல்ல லானார்கள்.

சுங்கர்களின் கலங்களில் சில மட்டும் எதிர்த்து வருவதைக் கண்ட வர்த்தினி எச்சரிக்கை அடைந்து, “பின் வாங்குங்கள்!” எனக் கட்டளையிட்டாள். அவளது கட்டளைகள் முன் வரிசை வீரர்களை அடைவதற்குள் அவர்கள் மகதக் கலங்களை நெருங்கியிருந்தார்கள்.

இதே போன்றே இம்ஹோடெப்பின் மரக்கலத்துடன் மோதுவதற்கும் கோட்டையிலிருந்து கலங்கள் இறக்கப்பட்டு அதிவேகமாக சென்றுகொண்டிருந்தன.

கோட்டையிலிருந்து இறக்கப்பட்ட மரக்கலங்கள் அதிவேகத்தில் வந்து சோழ மரக்கலங்களுடன் நேருக்கு நேர் மோதின. இரண்டு மரக்கலங்களும் மோதிக்கொண்ட அடுத்த கணம் மகதக் கோட்டையின் மரக் கலங்கள் வெடித்துச் சிதறின. முன் வரிசையில் சென்றுகொண்டிருந்த சொழாந்திய மரக்

கலங்கள் அனைத்தும் வெடித்துச் சிதறி அழிந்து நீரில் மூழ்கின.

வெடிச் சத்தம் எழுந்து அடங்கிய தும் அந்த பகுதியே ஒரு கணம் குலுங்கி அடங்கியது. சோழ வீரர்களின் மனதில் திகில் கவ்வத் துவங்கியது. சுங்கர்களின் மரக்கலங்கள் மோதி வெடித்துச் சிதறிய துமே, “தேவ அஸ்திரம்” என முணுமு ணுத்தாள் வர்த்தினி.

வெடிச் சத்தம் எழுந்ததும் சோழ மரக்கலங்கள் அனைத்தும் பின்வாங்கின. அதே போன்று நதி வழியாக முன்னேறிய வில்லவன் மற்றும் திருக்கண்ணன் ஆகி யோரும் மகதப் படையின் தாக்குதல் எல் லையைக் கடந்து நின்றுகொண்டார்கள்.

நதியில் செங்குவீரன் பின்வாங் கிக் கையிலிருந்த கேடயத்தை கரையை நோக்கி வீசிவிட்டு பயங்கர கோபத்து டன் கரையில் ஏறிக்கொண்டிருந்தான். அப்போது திவ்யன், “என்ன செங்குவீரா இங்கே நடக்கிறது? நமது யானைகளுக்கு

என்ன ஆனது? அவை ஏன் நதியில் மடிந்து விழுந்துவிட்டன? நமது வீரர்கள் எதற்காக மயங்கி விழுந்துவிட்டார்கள்?" என வினவியபோது, "அது என்ன சத்தம் தலைவரே... இடி விழுந்ததைப் போன்ற பயங்கர சத்தம். அது எப்படி நேர்ந்தது? நமது மரக்கலங்கள் எதற்காக எரிந்து எரிந்துகொண்டிருக்கின்றன?" என வின வினார் கரிகாலர்.

செங்குவீரன் எந்தப் பதிலையும் அளிக்காமல் மகதத்தின் கோட்டையை யும், நதியில் மரணித்து விழுந்து கொண் டிருந்த சோழ வீரர்களையுமே பார்த் துக்கொண்டிருந்தான். அப்போது அங்கே வர்த்தினி, பரதவன் குமரன் மற்றும் இம் ஹோடெப் ஆகியோர் வந்துகொண்டி ருந்தார்கள். வெடிச்சத்தத்தில் பாதிப்ப டைந்த பரதவன் குமரனின் காதில் குருதி வழிந்துகொண்டிருந்தது. இம்ஹோடெப் பின் ஒரு கால் வெந்துபோய் ரணமாகியி ருந்தது.

இருவரின் நிலையையும் பார்த்த செங்குவீரன், "நமது படைத்தலைவர்கள் திருக்கண்ணன் மற்றும் வில்லவரின் கதி என்ன என்று உடனே அறிந்துவாருங்கள். யார் உயிரோடு இருந்தாலும் உடனே இங்கு அழைத்து வாருங்கள்! எனது கட்டளை எழும்வரை யாரும் மகதக் கோட்டையை நெருங்க வேண்டாம்" என தனது உபதளபதிகளிடம் கட்டளையிட்டான்.

அடுத்த கணம் அவர்கள் அங்கிருந்து இருவரைத் தேடியும் விரைந்தார்கள். அதே நேரம் திருக்கண்ணன் மற்றும் வில்லவனும் எதிரில் வந்துகொண்டிருந்தார்கள்.

திரும்பி வந்ததும் திருக்கண்ணன் செங்குவீரனிடம், "அது என்ன சத்தம் படைத் தலைவரே? பகலிலேயே இடி முழங்கும் சத்தம்?" என வினவினான்.

"அதன் காரணம் எனக்கும் தெரியவில்லை திருக்கண்ணா..." எனப் பதிலளித்தான் செங்குவீரன்.

அப்போது குறுக்கிட்ட வர்த்தினி, "தேவ அஸ்திரம்!" எனப் பதிலளித்தாள்.

"என்ன அஸ்திரம்?" என வினவி னார் கரிகாலர்.

"தேவ அஸ்திரம் பேரரசே..." எனப் பணிந்தாள் வர்த்தினி.

"என் வாழ்வில் இப்படி ஒரு அஸ்தி ரத்தை நான் கேள்விப்பட்டதே இல்லை" எனக் குறுக்கிட்டுப் பதிலளித்தான் திவ் யன்.

"இந்த அஸ்திரம் ருத்ரனான மகா தேவரின் காலத்தில் அல்லவா பழக்கத் தில் இருந்தன. ஆனால், இப்போது இது எப்படி அவர்களின் கையில் கிடைத் திருக்கும்?" என வினவிய வர்த்தினி அதிர்ச்சியுடன் நின்றுகொண்டிருந்தாள்.

அனைவரும் அமைதியாக நின்று கொண்டிருந்தார்கள்.

“தேவ அஸ்திரம் அவர்களின் கரத்தில் இருக்கும் வரை நம்மால் அவர்களை நெருங்கவே முடியாது!”

அதுவரை அமைதியாக நின்ற வில்லவன், “கோட்டையிலிருந்து எய்யப்பட்ட அம்புகள் தாக்கியதும் நமது வீரர்களும், யானைகளும், புரவிகளும் உடனே மரணித்து விழுகிறார்கள். அது எப்படி சாத்தியம்?” என வினவியபடியே நதியில் மிதந்துவந்த வீரன் ஒருவனின் உடலில் தைத்திருந்த அம்பினைப் பிடுங்கினான்.

அந்த அம்பில் குருதி வழிந்து கொண்டிருக்க அதை நீரில் முக்கி எடுத்து அதை நோக்கினான். பிறகு அதை முகர்ந்து பார்க்க அம்பினை முகத்தை நோக்கி கொண்டு சென்றான் வில்லவன்.

அப்போது, “வேண்டாம்... அந்த அம்பினை முகத்தருகே கொண்டு செல்ல வேண்டாம்!” என எச்சரித்த வர்த்தினி உடனே ஓடிப்போய் வில்லவனின்

https://telegram.me/aedahamlibra

கையில் வைத்திருந்த அம்பினை வாங்கிக் கொண்டாள்.

அவளது செயலை அனைவரும் ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருக்க நதியில் மிதந்த சோழ வீரனின் உடலைச் சுட்டிக்காட்டிய வர்த்தினி, “அந்த உடலை கரைக்கு இழுத்து வாருங்கள்!” எனக் கட்டளையிட்டாள்.

அவளது கட்டளையை நிறைவேற்ற இரண்டு வீரர்கள் விரைய அதற்குள் வில்லவன் அந்த உடலை கரையில் நின்ற வர்த்தினிக்கு முன் இழுத்து வந்து போட்டான்.

அவளது கையிலிருந்த அம்பினையும், கீழே கிடந்த வீரனின் உடலையும் நோக்கிய வர்த்தினி, “இந்த அம்பில் நாகத்தின் நஞ்சு தடவப்பட்டிருக்கிறது!” எனக் கூறிக்கொண்டே கீழே கிடந்த வீரனின் இமைகளை உயர்த்தி விழிகளை நோக்கினாள்.

https://telegram.me/aedahamlibra

அவனது விழிகள் முழுவதும் நீல நிறம் பாய்ந்திருந்தது.

“நாக நஞ்சுடன் வேறு சில நஞ்சுகளும் சேர்ந்து அம்பின் முனையில் தடவப் பட்டிருக்கின்றன. ஆதலால் தான் இந்த அம்பு தாக்கிய அடுத்த கணம் அல்லது இந்த அம்பிலிருந்து வெளிப்படும் புகையை சுவாசித்த அடுத்த கணம் நமது வீரர்கள் அனைவரும் மடிந்துவிட்டார்கள்!” எனத் தெரிவித்தவள் அமைதியாக நின்றாள்.

மொத்த சோழப் படையுமே அதிர்ச்சியில் உறைந்து போய் நின்றுகொண்டிருந்தது. அப்போது அவர்களின் அதிர்ச்சியை உச்ச கட்டத்திற்கு கொண்டு செல்லும் வகையில், “இது நாக பாணம்!” எனக் கூறவும் செய்தாள் வர்த்தினி.

“நாக பாணமா?” என வினவினான் பரதவன் குமரன்.

“ஆமாம் தலைவரே...!”

https://telegram.me/aedahamlibra

"வேறு தீர்வு?" என பரதவன் குமரன் வினவ, "நாக பாணத்தை எதிர்ப்பது என்பது அவ்வளவு எளிது அல்ல குமரா... குருசேத்திரப் போரில் கர்ணன் இதே நாகபானத்தை ஏவித்தான் இரண்டு நாளில் இரண்டு அக்செளனி படைகளை அழித்திருப்பான். கொடூர நஞ்சினை உடையது. இது அனைவருக்கும் எளிதில் கிடைக்காது!" எனத் தெரிவித்தான் திவ்யன்.

அப்போது செங்குவீரன், "தேவ அஸ்திரமே அவர்களின் கரங்களுக்கு கிடைத்திருக்க நாக பாணம் கிடைத்திருப்பது ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை நண்பா..." எனத் தெரிவித்தான்.

"இது கோழைத்தனம் தலைவரே..." எனத் தெரிவித்தான் வில்லவன்.

"இதற்கு உரிய தண்டனையை அளித்துதான் ஆகவேண்டும்!"

https://telegram.me/aedahamlibra

"அவர்களை நாம் விடக்கூடாது. முற்றுகை எத்தனை மாதங்கள் நீடித்தாலும் சரி... ஒருவர் கூட அக்கோட்டையை விட்டு வெளியேறக் கூடாது. அப்படி வெளியேறினால் அவர்கள் பிணமாகத் தான் செல்ல வேண்டும்!" பெரும் ஆத்திரத்துடன் தெரிவித்தான் வில்லவன்.

அதுவரை அமைதியாக நின்ற கரிகாலர், "படைத் தலைவரே... போர் இப்படித் தான் நடைபெறவேண்டும் என இலக்கணம் வகுத்து வீரத்துடன் போர் செய்பவர்கள் நாம். சுங்கர்களிடம் போர் தர்மத்தை எதிர்பார்த்தால் எதிர்கால மக்கள் நமது முட்டாள் தனத்தை இழிவாகப் பேசும் நிலை வந்துவிடும்" எனத் தெரிவித்தவர் அமைதியானார். அவரது நாசித் துவாரங்களில் கோபத்துடன் அனல் காற்று வெளிப்பட்டுக்கொண்டிருந்தது. பிறகு, "செங்குவீரரே... இனியும் போர் தர்மத்துடன் நாம் போரினை முன்னெடுத்தால் அழிந்துபோவோம். "போர் வேண்டாம்" என்று சுங்கன் என்னிடம்

பணிந்திருந்தால் நான் விட்டுக் கொடுத்திருப்பேன். ஆனால், நம்மை அழிக்க அவன் அநீதியான வழியை தேர்ந்தெடுத்துவிட்டான். அவனுக்கு உரிய பாடத்தை அளித்தே தீர வேண்டும். நீங்கள் எப்படி வேண்டுமானாலும் தாக்கிக் கொள்ளுங்கள். படையை எப்படி வேண்டுமானாலும் நகர்த்திக்கொள்ளுங்கள். அனைத்து அதிகாரத்தையும் உங்களுக்கு நான் வழங்குகிறேன். இந்தக் கோட்டை மொத்தமாக எரிந்து, இதனுள் தஞ்சமடைந்திருக்கும் சுங்கப் படை மொத்தமாக அழிய வேண்டும். ஒருவர் கூட தப்பிச் செல்லக் கூடாது. இந்த கொடூர செயலுக்கு அவர்கள் நிச்சயம் தண்டனையை அனுபவிக்க வேண்டும்!" எனப் பெரும் ஆத்திரத்துடன் கட்டளையிட்டார்.

அப்போது வில்லவன் அவனது உபதளபதிகளுக்கு, "கோட்டையை சுற்றிவளைத்து தொலைவில் நில்லுங்கள். யாரும் கோட்டையை நெருங்க வேண்டாம்! ஆனால், ஒருவர் கூட கோட்

டையை விட்டு வெளியேறக் கூடாது" எனக் கட்டளையிட்டான்.

உடனே உபதளபதிகள் அனைவரும் கட்டளைகளை சுமந்து செல்லலானார்கள். அவர்களை அழைத்த திவ்யன், "இந்தக் கோட்டைக்கு நிச்சயம் சுரங்கப் பாதை அமைக்கப்பட்டிருக்கும். அது அருகில் இருக்கும் மலை முகடு, ஆற்றங்கரை, கோயில் என எங்கு வேண்டுமானாலும் முடிவடைந்திருக்கலாம். அதை முதலில் கண்டுபிடியுங்கள்!" எனக் கட்டளையிட்டு அனுப்பி வைத்தான்.

"இம்ஹோடெப்!" என அழைத்தான் செங்குவீரன்.

"கட்டளையிடுங்கள் தலைவரே..." எனப் பணிந்தான் இம்ஹோடெப்.

"எத்தனை நாட்கள் தங்களுக்கு வேண்டும்?"

"எரி எண்ணெய் நம் கலங்களில் நிரப்பி வைத்திருக்கிறேன். கற்பூ

ரம், எஃகு துகள்கள் மட்டுமே தேவை. எனக்கு ஐந்து தின கால அவகாசம் கொடுங்கள். அதற்குள் அனைத்தும் தயாராகிவிடும்."

"ஐந்து நாட்கள் மட்டுமல்ல... ஒரு கிழமை காலம் கூட எடுத்துக்கொள் இம்ஹோடெப். அடுத்த கிழமை இதே நாள் நாம் அந்தக் கோட்டைக்குள் நுழைந்திருக்க வேண்டும்! இந்தக் கோட்டை நெருப்புக்கு இரையாகியிருக்க வேண்டும்."

"தங்களது உத்தரவு!" எனக் கட்டளையிட்ட இம்ஹோடெப் அங்கிருந்து விடைபெற்று செல்லலானாள்.

அப்போது திருக்கண்ணன், "நாக பாணத்திற்கு மாற்று மருந்து நிச்சயம் வானவல்லி தேவியிடம் இருக்கும். ஆண்ட்ரிமேடாவின் உடலில் இருந்த சர்ப்ப நஞ்சினையே சில கிழமைகளில் நீக்கியவர். அவரை அழைத்து வந்தி

ருந்தால் நமக்கு நிச்சயம் மாற்றுத் தீர்வு கிடைத்திருக்கும்" எனத் தெரிவித்தான்.

"இப்போதிருக்கும் நிலையில் நம்மால் அவந்திவரை சென்று திரும்ப முடியாது திருக்கண்ணா..."

அவர்கள் எதைப் பற்றி பேசுகிறார்கள் என்பதை அறியாவிட்டாலும் வர்த்தினி, "என்னிடமும் ஒரு திட்டம் இருக்கிறது" எனப் பதிலளித்தாள்.

"என்ன திட்டம் தேவி?" என வினவினான் செங்குவீரன்.

"இந்த நாக பாணத்தை செயலிழக்கச் செய்யும் மருந்தினை என்னால் உருவாக்க முடியும். ஆனால், அம்மருந்து நீண்ட நேரம் நமக்கு கைகொடுக்காது. மருந்தினைக் குடித்த பிறகு அடுத்த சில சாமங்கள் நமது உடலை நாக பாணம் தீண்டினாலும் நமது உடல் அந்த நஞ்சினை எதிர்த்து நிற்கும். அந்த மருந்துக்கு

முன் இந்த நாக பாணம் வேலை செய் யாது!"

"செங்காநல்லியை உண்டு உயிர் வாழும் கீரி"யை நாகம் தீண்டினா லும் நஞ்சு வேலை செய்யாது. அதைப் போன்றா?"

"ஆம்... படைத் தலைவரே..."

"நல்லது. உடனே அம்மருந்தை உருவாக்கு!" எனக் கட்டளையிட்டான் செங்குவீரன்.

"என்னால் இங்கிருக்கும் அத் தனை வீரர்களுக்கும் வேண்டிய அளவு மருந்து உருவாக்க முடியுமா என்று தெரியவில்லை? கிடைக்கும் மூலிகைப் பொருட்களைப் கொண்டு மருந்தினை உருவாக்கி கொண்டு வருகிறேன்!" எனத் தெரிவித்தாள்.

"உங்களால் முடிந்ததை செய்யுங் கள்!"

https://telegram.me/aedahamlibra

“எனக்கு சில நாட்கள் அவகாசம் அளியுங்கள். நான் திரும்பு வரும்போது மருந்துடன் வருகிறேன்” எனக் கூறிய வர்த்தினி பரதவன் குமரனை அழைத்துக்கொண்டு புரவியில் ஏறி எங்கோ புறப் பட்டுச் சென்றாள்.

அடிக்குறிப்பு:

1. கி.மு காலங்களில் போரில் வெடிபொருட்கள் (Gun powder) பயன் படுத்தப்பட்டிருப்பதாகக் கருதுகிறார் War in ancient indiaவின் ஆசிரியர் V.R Ramachandra dikshitar. (Cosmo publication) பக்கம் - 103

https://telegram.me/aedahamlibra

# 51. வெளியேற்றப்பட்ட சுங்கப் படை

செங்குவீரன் ஹிப்பாலாசுடன் எரித்திரியன் கடலில் பயணித்துக்கொண்டிருந்த போது ஆண்ட்ரிமேடாவின் மரக்கலங்களை தாக்குவதற்கு செய்யப்பட்ட எரி உருண்டைகளைப் போன்று நூற்றுக் கணக்கில் செய்து மரக்கலங்களில் நிரப்பி வைத்திருந்தான் இம்ஹோடெப். செங்கு வீரனின் கட்டளையை திறம்பட நிறை வேற்றிவிட்ட மகிழ்ச்சியில் இம்ஹோடெப்

செங்குவீரனிடம், "தலைவரே... அனைத்தும் தயார்!" எனத் தெரிவித்தான்.

உடனே கூடாரத்திலிருந்து புறப்பட்டு நதிக் கரைக்கு வந்த செங்குவீரன் எரி உருண்டைகளை நோக்கினான். அப்போது இம்ஹோடெப், "தலைவரே... எதற்காக உருண்டைகளில் சங்கிலிகளை இணைக்க வேண்டாம் என்று ஆணையிட்டீர்கள்? சங்கிலி இல்லாமல் நம்மால் எப்படி அதனைத் தூக்கி எறிய முடியும்?" என வினவினான்.

"விரைவில் தெரிந்துகொள்வீர்கள் இம்ஹோடெப்!" என செங்குவீரன் கூறிக் கொண்டிருந்த போதே அங்கு திரையனுடன் கரிகாலரும், திவ்யனும் வந்து சேர்ந்தார்கள்.

அப்போது செங்குவீரன் திவ்யனை நோக்கி, "நண்பா... தாக்குதலை துவங்கலாமா?" என வினவினான்.

"பரதவன் குமரனுடன் சென்ற வர்த்தினி இன்னும் திரும்பவில்லையே... இரு

வரும் வந்த பிறகு நாம் தாக்குதலை துவங்கலாமே" எனத் தெரிவித்தான் திவ்யன்.

"அவர்களிடமிருந்து செய்தி ஏதேனும் கிடைத்ததா?"

"இன்று வந்துவிடுவார்கள் என்று நேற்றிரவு செய்தி கிடைத்தது!"

"அப்படியெனில் கலிங்க இளவரசி நிச்சயம் திரும்பி வந்துவிடுவார்!" என செங்குவீரன் கூறிக்கொண்டிருந்த போதே கரிகாலரின் தோளில் அமர்ந்திருந்த திரையன் செங்குவீரனை நோக்கி, "அப்பா..." எனக் கூறியபடி தாவினான்.

அவனைத் தூக்கி மார்பில் அணைத்துகொண்ட செங்குவீரன் திவ்யனை நோக்கி, "எதற்காக திரையனின் முகம் வாடியிருக்கிறது? அழுதானா?" என வினவினான்.

"ஆமாம்... அவனுக்கு அவனது அம்மா நினைவு வந்துவிடுகிறது. அதன்

பிறகு அவனை சமாதானம் செய்வதற்குள் எங்களின் பாடு திண்டாட்டமாகி விடுகிறது?" என கரிகாலரையும் செங்குவீரனையும் நோக்கியபடி தெரிவித்தான் .திவ்யன்.

அவனுக்கு முத்தமிட்டு அருகில் நின்ற வில்லவனிடம் கொடுத்த செங்குவீரன், "இம்ஹோடெப்... எனது மகனுக்கு வேடிக்கை காட்டலாமா?" என வினவினான்.

"நான் தயார் தலைவரே..." என செங்குவீரனிடம் கூறியவன், "ஒரு வில் மற்றும் எரியம்புகளை உடனே கொண்டு வாருங்கள்" என அருகில் நின்ற வீரர்களுக்குக் கட்டளையிட்டான் இம்ஹோடெப்.

இம்ஹோடெப்பின் கட்டளை எழுந்த அடுத்த கணம் வீரர்கள் ஓடிச் சென்று வில், அம்பு மற்றும் எரிந்துகொண்டிருந்த தீப்பந்தம் ஆகியவற்றைக் கொண்டு வந்தார்கள். அதைப்

பெற்றுக்கொண்ட செங்குவீரன், "சங்கிலி பிணைக்கப்பட்ட எரி உருண்டைகள் ஏதேனும் இருக்கிறதா?" என வினவி னான்.

"இருக்கின்றன தலைவரே..." எனக் கூறிய இம்ஹோடெப் ஓடிச் சென்று சில உருண்டைகளைக் கொண்டு வந்தான்.

அப்போது கரிகாலர், "படைத் தலைவரே... என்ன உருண்டைகள் இவை?" என வினவினார்.

அப்போது குறுக்கிட்ட திவ்யன், "சற் றுப் பொறு கரிகாலா... எரித்திரியன் கட லில் செங்குவீரன் நிகழ்த்திய சாகசத்தை நாம் மீண்டும் இன்று காணப் போகி றோம்!" எனக் கூறியவன் பின் வாங்கி னான்.

திவ்யனைத் தொடர்ந்து கரிகாலர், திருக்கண்ணன், வில்லவன் என அனை வரும் பின்வாங்க நதிக் கரையில் செங்கு வீரன் மற்றும் இம்ஹோடெப் மட்டும் நின்

றுகொண்டிருந்தார்கள். மற்ற சோழ வீரர்கள் அனைவரும் பின்னால் காணப்பட்டார்கள்.

உருண்டையில் பிணைக்கப்பட்ட சங்கிலியைப் பிடித்துக்கொண்ட இம்ஹோடெப் அதைத் தூக்கி கரகரவென்று சுழற்றத் துவங்கினான். இம்ஹோடெப் வேகமாக சுழல அவனுடன் அந்த உருண்டையும் சுழலத் துவங்கியது.

இம்ஹோடெப் எரி உருண்டையுடன் சுழன்றுகொண்டிருந்த போதே செங்குவீரனும் அம்பின் முனையை நெருப்பில் காட்டி வில்லின் நாணில் தொடுத்து தொலைவில் நின்றுகொண்டிருந்த மகதக் கோட்டையை நோக்கி குறி பார்க்கலானான்.

அதிவேகமாகச் சுழற்றிய சங்கிலியை விடுவித்தான் இம்ஹோடெப்.

அவர் சங்கிலியை விடுவித்த அடுத்த கணம் தொலைவில் நதிக்கு

https://telegram.me/aedahamlibra

அக்கரையில் நின்றுகொண்டிருந்த மகதத்தின் கோட்டைச் சுவரை நோக்கி அதிவேகத்தில் பறந்து சென்றுகொண்டிருந்தது அந்த எரி உருண்டை.

பறந்துசென்றுகொண்டிருந்த எரி உருண்டையை நோக்கியபடியே நாணில் பொருத்தப்பட்டிருந்த அம்பினை விடுவித்தான் செங்குவீரன். அடுத்த கணம் வில்லிலிருந்து புறப்பட்ட எரியம்பு வானில் அதி வேகத்தில் சென்றுகொண்டிருந்தது. இஹோடெப்பினால் எறியப்பட்ட எரி உருண்டையானது பறந்து சென்று கோட்டையின் மதிலை நோக்கி இறங்க அப்போது செங்குவீரன் எறிந்த எரியம்பானது குறி தவறாமல் அதைத் தாக்கியது.

செங்குவீரனின் எரியம்பு தாக்கப்பட்ட அடுத்த கணம் அந்த உருண்டை பெருஞ்சத்தத்துடன் வானிலேயே வெடித்துச் சிதறியது. எரி உருண்டையிலிருந்து வெளிப்பட்ட நெருப்புத்

துகள்கள் வானில் சிதறி மாயத் தோற் றத்தை அவ்விடத்தில் உருவாக்க வருத் தத்துடன் நின்றுகொண்டிருந்த திரையன் உற்சாகத்துடன் சிரிக்கலானான்.

அதே நேரம் பெருஞ்சத்தத்தைக் கேட்டதும் கோட்டைக்குள் உறைந்தி ருந்த மகதப்படை திகிலுடன் பதற்றம டையத் துவங்கினார்கள்.

அதைக் கண்ட இம்ஹோடெப் உற் சாகம் கொண்டு மேலும் சில நெருப்பு உருண்டைகளை அடுத்தடுத்து மகதக் கோட்டையை நோக்கி வீசி எறிந்தான். செங்குவீரனும் அம்புகளைத் தொடர்ந்து எறிய குறி தவறாத அவனது அம்புகள் எரிபந்துகளைத் தாக்க பெருஞ்சத்தத்து டன் வெடித்துச் சிதறின.

பெருஞ்சத்தம் எழுந்து வானில் வெடித்துச் சிதறிய உருண்டைகளைக் கண்டு திரையன் கைதட்டி குதூகலத் துடன் நின்றுகொண்டிருந்தான். அதே நேரம் பெருஞ்சத்தத்தை கேட்டதும் மக

தத்தின் கோட்டை மதிலின் மீது ஏறி சோழர் பாசறையை நோக்கினார்கள் புஷ்யமித்திர சுங்கன், வைதீகர், சுங்கமித்திரன் மற்றும் அக்னிமித்திரன் ஆகியோர்.

அவர்கள் அனைவரும் மதிலின் மீது நிற்பதைக் கண்ட வில்லவன், "சுங்கர்கள் அச்சமடைய ஆரம்பித்துவிட்டார்கள் தலைவரே... இந்த விளையாட்டு எனக்கும் பிடித்திருக்கிறது" எனக் கூறிக் கொண்டு அவனும் கையில் ஒரு வில்லினை எடுத்துக்கொண்டு எரியம்பை அதன் நாணில் தொடுத்து தயாரானான். வில்லவனின் செயலைக் கண்ட கரிகாலர், திவ்யன், திருக்கண்ணன் ஆகியோர்களும் கையில் வில்லுடன் வரிசையாக நிற்கலானார்கள்.

அனைவரின் ஆர்வத்தையும் கண்ட செங்குவீரன் இம்ஹோடெப்பை நோக்கினான். பிறகு, "இத்தனைப் பேருக்கும் இம்ஹோடெப் எரிபந்துகளை வீசி எறிந்தால் அவரது கை உடைந்து

விடும்” எனத் தெரிவித்தவன் வீரர்களை நோக்கி, “கல்விடுகூடை, இடங்கணி, வலங்கணி ஆகியவற்றைக் கொண்டு வாருங்கள்!” எனக் கட்டளையிட்டான்.

அடுத்த கணம் பொறிகள் அணி வகுத்து நிற்கவைக்கப்பட்டன. அப்போது அங்கு புரவியில் வருகை தந்தனர் வர்த்தினியும், பரதவன் குமரனும்.

சோழப் பேரரசர் கரிகாலர் மற்றும் அனைத்து படைத் தலைவர்களும் எரியம்புடன் அணிவகுத்து நிற்பதைப் பார்த்ததும் இருவரும் அமைதியாக நிற்கலானார்கள்.

“இம்ஹோடெப், எரி பந்துகளை வைத்து பொறிகளை இயக்கு!” எனக் கட்டளையிட்டான் செங்குவீரன்.

கல்விடுகூடையில் ஒரேயொரு எரி பந்தை மட்டும் பொருத்தினார்கள். ஆனால், இடங்கணி மற்றும் வலங்கணி பொறிகளில் பத்துக்கும் மேற்பட்ட எரிபந்

துகளை அடுக்கி வைத்து பொறிகளை சுழற்றி ஒரே நேரத்தில் விடுவித்தார்கள்.

பொறிகளின் விசைகள் விடுவிக்கப்பட்ட அடுத்த கணம் விசைகளுடன் இணைக்கப்பட்டிருந்த தூக்கிகள் அதி வேகமாக எரிபந்துகளை மகதத்தின் கோட்டையை நோக்கி செலுத்தின.

பொறிகள் இயக்கப்பட்டு எரிபந்துகள் வானில் பறந்த அடுத்த கணம் படைத் தலைவர்கள் மற்றும் பேரரசரின் விற்களின் நாண்கள் விடுவிக்கப்பட எரியம்புகள் அனைத்தும் ஒரே நேரத்தில் வானில் பறந்து சென்று எரி உருண்டைகளைத் தாக்கின.

பொறிகளினால் இயக்கப்பட்டதும் எரி உருண்டைகள் அனைத்தும் அதி வேகத்தில் மகதக் கோட்டையின் மதிலையும் தாண்டிச் சென்று வெடித்துச் சிதறின. எரி உருண்டைகள் கோட்டையின் மதிலுக்குள் விழுந்து வெடித்துச் சிதறிய அடுத்த கணம் கோட்டையின் உள்பக்

கத்திலிருந்து சுங்க வீரர்களின் அலறல் சத்தம் எழுந்து அவ்விடத்தை ஆக்கிர மித்தது.

இந்த நிகழ்வுகளைப் பார்த்த வர்த் தினி, "இது எந்த வகையான அஸ்தி ரம் படைத் தலைவரே..." என வினவிக் கொண்டு பொறிகளையும் நோக்கினாள். செங்குவீரன் பதிலளிக்க வாயெடுப்பதற் குள், "நான் புறப்படுவதற்கு முன் இந்தப் பொறிகளால் இங்கிருந்து மகதக் கோட் டையின் மதிலைக் கடந்து எறிய முடிய வில்லை. ஆனால், இன்று மட்டும் எப்படி சாத்தியமானது!" என பெரும் ஆச்சரியத் துடன் வினவினாள்.

அப்போது குறுக்கிட்ட திவ்யன், "பொறிகளில் செங்குவீரன் மாற்றத்தை செய்திருக்கிறான். ஆதலால் தான் பொறி களால் நீண்ட தொலைவிற்கு எறிய முடி கிறது! அது மட்டுமல்லாமல் அன்று எறிந் தவை அனைத்தும் பாறைக் கற்கள். அதன் கணமும் அதிகம். ஆனால், எரி

உருண்டைகள் அப்படி அல்லவே! அதன் பாரம் குறைவு. ஆதலால் கற்களை விடவும் அதிக வேகத்தில் நம்மால் எரி உருண்டைகளை செலுத்த முடிந்தது" என அவளுக்கு பதிலளித்தவன், "சென்ற காரியம் என்ன ஆனது?" என வினவினான்.

"வெற்றிதான் தலைவரே... ஆனால், அதில் ஒரு சிக்கல் இருக்கிறது!" எனத் தெரிவித்தாள்.

"என்ன சிக்கல்?" என வினவினார் கரிகாலர்.

"நாக பாணத்தின் நஞ்சை முறிக்கும் எதிர் மருந்தின் நிலைப்புத் தன்மையை அதிகரிக்க வைக்கும் மூலிகை எனக்குக் கிடைக்கவில்லை!"

"அதனால்....?"

"நாம் மருந்தினை பருகினாலும் அது நெடும் நேரத்திற்கு நமது உடலுக்கு எதிர்ப்பு சக்தியை அளிக்காது."

"எவ்வளவு நேரம் சக்தியை அளிக்கும்?"

"அதிக பட்சம் இரண்டு சாமப் பொழுது நமக்கு துணை புரியும்!" என வருத்தத்துடன் தெரிவித்தாள்.

"இரண்டு சாமம் கழித்து நாம் மீண்டும் இதே மருந்தினை பருகினால்?"

"பயன் இருக்காது!" சோகத்துடன் தெரிவித்தாள் வர்த்தினி.

"சற்று சிக்கல் நிறைந்ததுதான்!" எனக் கவலையுடன் தெரிவித்தார் கரிகாலர்.

"எத்தனை பேருக்கு மருந்தினை உருவாக்க முடிந்தது இளவரசி?" என வினவினான் செங்குவீரன்.

"நூறு மூங்கில் கணுக்குகளில் கொண்டு வந்திருக்கிறேன். ஒவ்வொரு வரும் ஒரு குழாயை எடுத்துக் கொண்

https://telegram.me/aedahamlibra

டாலும் நூறு பேருக்குத்தான் அதிகம் கொடுக்க முடியும்!"

"நமது படையில் இருநூறாயிரம் வீரர்கள் இருக்கிறார்கள் தேவி!" என கோபத்துடன் வினவினான் திவ்யன்.

"என்னால் முடிந்தது இவ்வளவு தான் தலைவரே..." என திவ்யனிடம் தெரிவித்தவள், செங்குவீரனை நோக்கி, "இந்த மருந்து சிலருக்கு ஒத்துக் கொள் வதில்லை. ஒவ்வாமை இருந்தால் வாந்தி வந்துவிடும்!" எனவும் தெரிவித்தாள்.

"இப்பொது நமக்கு ஒரே வழிதான் இருக்கிறது!" எனத் தெரிவித்தான் செங் குவீரன்.

"என்ன அது?" என வினவினார் கரிகாலர்.

"நாம் மகதக் கோட்டையின் மதி லைக் கைப்பற்ற வேண்டும்!"

"மகதக் கோட்டையின் மதிலைக் கைப்பற்றியதும் நமது படையை உள்ளே அனுப்பி அனைவரையும் கொன்று போரினை முடிக்கலாம் எனக் கூறுகிறாயா செங்குவீரா?" என வினவினான் திவ்யன்.

"உள்ளே கோட்டைக்குள் இரு நூறாயிரத்திற்கும் மேற்பட்ட வீரர்கள் இருக்கிறார்கள். அவர்களை தாக்க இந்த சிறு நுழைவாயிலின் மூலம் நமது படை உள்ளே நுழைந்தால் நம்மை நசுக்கி விடுவார்கள்."

"நாக பாணத்திற்கு எதிராக வேலை செய்யும் மருந்து நூறு பேருக்குத்தான் இருக்கிறது. மருந்தும் நீண்ட நேரம் வேலை செய்யாது. இப்போது நமக்கிருக்கும் ஒரே வழி கோட்டைக்குள் புகுந்து தாக்குவது தான். இதை விட்டால் வேறு என்ன செய்வது?"

https://telegram.me/aedahamlibra

"நமது படை ஒரு நாளும் கோட்டைக்குள் நுழையாது. மகதப் படையை நான் வெளியே கொண்டு வருகிறேன்!"

"அது எப்படி சாத்தியம்?" எனக் குறுக்கிட்டு வினவினார் கரிகாலர்.

"நாக பாணம், தேவ அஸ்திரம் நிறைந்த பெரும் பாதுகாப்புடன் இருக்கும் மகதக் கோட்டையின் மதிலை நம்மால் கைப்பற்ற முடியுமா?" என வினவினான் வில்லவன்.

அதுவரை அவர்களின் உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த வர்த்தினி குறுக்கிட்டு, "நம்மால் நிச்சயம் முடியும் படைத் தலைவரே..." எனத் தெரிவித்தாள்.

அனைவரும் வர்த்தினியை நோக்கினார்கள். அப்போது அவள், "சுங்கர்களிடம் தேவ அஸ்திரம் இருக்கிறது. நம்மிடம் அதை விடவும் வலிமையான வெடித்துச் சிதறி பெரும் சேதத்தை உருவாக்

கும் எரி உருண்டைகள் இருக்கின்றன. நமது பொறிகளிலிருந்து எரிபந்துகளும், கற்களும், நெருப்புப் பந்துகளும், விற்களும் தொடர்ந்து கோட்டையின் மதிலின் மீது எறிவோம்!" என கூறிக்கொண்டிருந்த போதே குறுக்கிட்ட திருக்கண்ணன், "அவர்கள் நாக பாணத்தை நம்மீது எறிவார்கள்!" எனத் தெரிவித்தான்.

"இந்த தேவ அஸ்திரமும், நாக பாணமும் அவர்களிடம் அதிக அளவிற்கு இருக்க வாய்ப்பில்லை. குறைந்த அளவிலேயே இருக்கும் என்பது எனது எதிர்பார்ப்பு. நாம் எறியும் உருண்டைகள் வெடித்துச் சிதறும் போது நிச்சயம் அவர்கள் அஞ்சி பின்வாங்குவார்கள். ஏனெனில் தேவ அஸ்திரங்களை விடவும் நமது எரி உருண்டைகள் அதிக ஆபத்தை உருவாக்க வல்லது! நமது தாக்குதலால் அவர்கள் மிரண்டு பின்வாங்கும் போது நம்மிடம் இருக்கும் மருந்தினைக் குடித்து நாம் தைரியமாக கோட்டையை நெருங்குவோம். மதிலைக் கைப்பற்றுவோம்.

https://telegram.me/aedahamlibra

மதிலில் அவர்கள் இயக்கும் அஸ்திரங்களை நாம் அவர்களுக்கு எதிராகவே திருப்புவோம். நமது பொறிகளையும் மதிலுக்கு கொண்டு சென்று சுற்றி வளைத்து தாக்குவோம். அப்போது அவர்கள் நிச்சயம் கோட்டை மதிலின் வழியே வெளிப்பட்டுதான் ஆகவேண்டும். அப்போது அவர்களை நமது படை அழிக்கட்டும். அவர்கள் கோட்டைக்குள் அடங்கி சிறுமைப்பட்டு கிடக்கிறார்கள். அவர்களுக்கு வெளிப்புறத்திலிருந்து இப்போது உதவி கிடைக்க வழியே இல்லை. நமக்குத் தேவை ஒரேயொரு திட்டமிட்ட அதிரடித் தாக்குதல். அவ்வளவுதான், போரினை இன்றே நம்மால் முடித்துவிட முடியும்!"

"நான் கூற வந்ததை இளவரசி கூறிவிட்டார்கள்!" எனப் புன்னகையுடன் தெரிவித்தான் செங்குவீரன்.

"சுங்கர்களை இன்றே அடக்குவோம். அனைவரும் தயார் ஆகுங்கள்!" எனக் கட்டளையிட்ட திவ்யன் பரதவன்

குமரனிடம் சென்று அவனிடம் இருந்த மருந்தினை வாங்கிக் கடகடவென்று குடித்து முடித்தான்.

திவ்யனைத் தொடர்ந்து செங்குவீரன், வில்லவன், திருக்கண்ணன், இம்ஹோடெப் ஆகியோர் அடுத்தடுத்து மருந்தினைக் குடித்தார்கள். பரதவன் குமரன் மட்டும் மருந்தினைக் குடிக்காமல் நிற்பதைப் பார்த்த வில்லவன், “நண்பா... நீ மருந்தினைப் பருகவில்லையா?” என வினவினான்.

“சிலருக்கு ஒவ்வாமை ஏற்பட்டு வாந்தி, மயக்கம் ஏற்படும் என்று வர்த்தினி கூறினாள் அல்லவா? அந்த சிலரில் நானும் அடக்கம்!” எனச் சிரித்தபடி தெரிவித்தான் பரதவன் குமரன்.

மருந்தினை திறமையான வீரர்களுக்கு மட்டும் அளித்து பருகவைத்தார்கள்.

“கரிகாலர் நதியின் தென் கரையிலேயே படையுடன் நிற்கட்டும். அவருக்குத் துணையாக பரதவன் குமரன் மற்றும் வர்த்தினி படையை இயக்கட்டும். வில்லவன் மற்றும் திருக்கண்ணன் ஆகியோர் எங்களுடன் மதிலைக் கைப்பற்ற வரட்டும். உபதளபதிகள் மூலம் படைகள் கிழக்கிலிருந்தும், மேற்கிலிருந்தும் கோட்டையை நெருங்கட்டும். கோட்டை கைப்பற்றப்பட்டதும் தெரிவிக்கிறோம். அப்போது கரிகாலரின் தலைமையில் படை நதியைக் கடக்கட்டும்! இம்ஹோடெப் அனைத்து மரக்கலங்களுக்கும் தலைமை வகிப்பார். பொறிகளை மரக்கலங்களிலும் ஏற்றுங்கள். எரி உருண்டைகள் அனைத்து படையினருக்கும் பிரித்து வழங்கப்படும். நான்கு திசைகளிலும் ஒரே நேரத்தில் தாக்குதல் தொடுப்போம். சுங்கன் முடிந்தால் தப்பிக்கட்டும்!” எனக் கட்டளையிட்ட செங்குவீரன் நதியை நோக்கி நடக்கலானான். அவனைத் தொடர்ந்து திவ்யன், திருக்

கண்ணன், வில்லவன் மற்றும் மருந்து பருகிய வீரர்கள் ஆகியோர் செல்லலா னார்கள்.

மகதக் கோட்டையின் வடக்குப் புறத்தில் உயர்ந்த குன்று இருப்பதால் சோழப் படை கிழக்கு, மேற்கு மற் றும் தெற்குப் புறங்களிலிருந்து சுற்றி வளைத்து பொறிகளை இயக்கி எரியம்பு களையும், அம்புகளையும், பாறைக் கற்க ளையும் மதிலின் மீது எறிந்து தாக்குதல் தொடுக்கத் துவங்கினார்கள்.

செங்குவீரன் மற்றும் படைத் தலை வர்கள் யானைப் படை நதியைக் கடந்த போது சுங்கர்கள் மகதக் கோட்டையிலி ருந்து அம்புகள் எரியத் துவங்கினார்கள். அவர்கள் தென்படத் துவங்கிய அடுத்த கணம் சோழ பொறிகளில் வைத்து எரி உருண்டைகளை மதிலை நோக்கி எறிந் தார்கள். அதே நேரம் வளைவிற் பொறியி லிருந்து எரியம்புகள் எறியப்பட அம்புகள்

தாக்கி எரிபந்துகள் அனைத்தும் வெடித்துச் சிதறின.

சிதறிய உருண்டைகளிலிருந்து வெளிப்பட்ட இரும்பு, தாமிரம் ஆகியவற்றின் துண்டுகள் மதிலின் மீது நின்று கொண்டிருந்த வீரர்களின் உடல்களைக் கிழித்து எறிந்தன. அதே நேரம் வளைவிற் பொறிகளிலிருந்து எறியப்பட்ட எரியம்புகள் தாக்கி மதிலின் மீது நின்றவர்கள் அனைவரையும் மடிந்தார்கள். எத்தனை பேர் மதிலின் மீது ஏறி அஸ்திரங்களை இயக்க நெருங்கினாலும் அத்தனை பேரின் உயிரையும் குடித்துக்கொண்டிருந்தன சோழ போர்ப் பொறிகள்.

எரிபந்துகள் வெடித்து சிதற சிதற சுங்க வீரர்கள் தாக்கப்பட்டு மடிந்தவர்களைக் காட்டிலும் காயமடைந்து துடித்தவர்கள் தான் அதிகமானவர்களாக இருந்தார்கள். காயமடைந்து கதறியவர்களைப் பார்க்க பார்க்க மற்ற சுங்க வீரர்கள்

அனைவரும் பீதியடையத் துவங்கினார் கள்.

தேவ அஸ்திரத்தை படகிலோ அல்லது வேறு எதிலாவது கொண்டு சென்று நெருப்பு பற்றவைத்தால் தான் வெடித்துச் சிதறும். ஆனால், சோழர்க ளின் பறக்கும் பொறிகளைப் போன்று அதிக சேதத்தை தேவ அஸ்திரங்க ளால் உருவாக்க முடியாது. ஆதலால் தேவ அஸ்திரங்களை சோழப் படையை மிரள வைக்கவே பயன்படுத்தினார்கள் சுங்கர்கள். மதிலைச் சுற்றி சோழ வீரர் களின் தாக்குதல் அதிதீவிரமாக இருந் துகொண்டிருக்க தங்களின் பலமாக நினைத்து மதிலில் நிறுத்தி வைத்தி ருந்த பாணங்களையும், அஸ்திரங்களை யும் நெருங்க முடியாமல் சுங்கப் படை யினர் கோட்டைக்குள்ளேயே முடங்கிக் கிடந்தனர்.

கோட்டை மதிலுக்கு உட்புறமாக பாதுகாப்பான இடத்தில் நின்றுகொண்டு

சோழ வீரர்கள் எங்கு நெருங்குகிறார்கள் என்பதை அறிய முடியாமல் குத்துமதிப் பாக அஸ்திரங்களை இயக்கிக் கொண் டிருந்தனர் சுங்க வீரர்கள். இலக்கில் லாமல் பாய்ந்த நாக பாணங்கள், இந் திர அஸ்திரங்கள் ஆகியவை நெருங்கி யிருந்த சோழ வீரர்களைத் தாக்கினாலும் அது பயன்படாமல் போயிருந்தன.

சோழ வீரர்களிடமிருந்து இப்படிப் பட்ட தாக்குதல் ஏற்படும் என்பதை கன விலும் நினைத்துப் பார்த்திராத புஷ்மித் திர சுங்கன் மற்றும் வைதீகர் ஆகியோர் செய்வதறியாது திகைத்து நின்றுகொண் டிருந்தார்கள்.

சோழ எரிபந்துகளின் தாக்கு தல் அதிகமானதும் கோட்டை மதிலி லிருந்து எதிர்தாக்குதல் குறைந்துவிட்ட தும் தைரியமாக முன்னேறிச் சென்று கோட்டை மதிலை நெருங்கியிருந்தனர் சோழ வீரர்கள். சோழ வீரர்கள் பலவீன மாக நினைக்க வேண்டும் என நினைத்து

வைதீகரும், புஷ்யமித்திர சுங்கனும் விட்டு வைத்திருந்த அந்த சிதைந்த மதி லினூடே வில்லவன் ஏறி மதிலின் உய ரத்தை அடைந்தான். மதிலை அடைந்த வன் மறைந்திருந்து பொறிகளை இயக் கிக் கொண்டிருந்த சுங்க வீரர்களை நோக்கி குறுவாட்களை எறிந்து அவர்க ளைக் கொன்றான்.

மதிலின் மீது ஏறிய அடுத்த கணம் இடையில் கட்டியிருந்த உறையிலிருந்து வாளினை உருவிய வில்லவன் அதை வானை நோக்கி உயர்த்தினான். அவன் தனது வாளினை உயர்த்திய அடுத்தக ணம் சோழ வீரர்கள் பொறிகளை இயக் குவதை நிறுத்தினார்கள்.

உடன் கொண்டு வந்த கயிற்றினை மதிலில் கட்டி கீழே தொங்கவிட்டான் வில்லவன். சோழப் படைத் தலைவர்க ளும், வீரர்களும் மதிலின் மீது ஏறத்துவங் கினார்கள்.

மதிலின் மீது வில்லவன் ஏறி நிற்பதைப் பார்த்துவிட்ட வைதீகர் நாகபாணம் ஒன்றை வில்லவனின் மீது ஏவினார். பாய்ந்து வந்த அம்பானது குறி தவறி வில்லவனின் இடது கரத்தில் பாய்ந்தது. அம்பு பாய்ந்த வந்த திசையை நோக்கினான் வில்லவன். தொலைவில் வைதீகர் பாகவதர் நின்றுகொண்டிருந்தார். அவரை கொலைவெறியுடன் நோக்கியவன் கையில் தைத்திருந்த அம்பினைப் பிடுங்கி கீழே எறிந்தான்.

நாக பாணம் தாக்கியும் உயிரை இழக்காமல் நின்றுகொண்டிருந்த வில்லவனை நோக்கிய வைதீகர் பாகவதர் தனது விழிகளை நம்பலாமா அல்லது வேண்டாமா என எண்ணியபடியே அவனையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது வில்லவன் அவரது பிரமை களையும்படி அருகில் மதிலின் மீது நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இந்திர அஸ்திரத்தை வைதீகரை நோக்கித் திருப்பினான்.

அஸ்திரம் இயக்கப்பட அதிலிருந்து அம்புகள் வைதீகரை நோக்கிப் பாய்ந்தன. எச்சரிக்கையடைந்த வைதீகர் பெரிய கேடயத்தை உயர்த்திப் பிடித்துக் கொண்டார். அஸ்திரத்திலிருந்து வெளிப்பட்ட அம்புகள் அவருடன் நின்றுகொண்டிருந்த வீரர்களைத் தாக்க அவர்கள் அனைவரும் அப்போதே மரணமடைந்து மண்ணில் விழுந்தார்கள். பாணம் ஒன்று வைதீகரின் உடலைத் தாக்கியிருந்தது. அவரும் நாக நஞ்சிற்கு எதிர்ப்பு மருந்தினை அருந்தியிருந்ததால் பானத்திற்கு உயிரை இழக்காமல் நின்று கொண்டிருந்தார்.

வில்லவன் வீசிய கயிற்றின் துணை கொண்டு சோழப் படைத் தலைவர்கள் செங்குவீரன், திவ்யன், திருக்கண்ணன் ஆகியோர் மதிலின் மீது ஏறி மதிலில் மறைந்திருந்த சுங்க வீரர்களைக் கொன்று மதிலின் மீது நின்றுகொண்டிருந்த அஸ்திரங்கள் ஒவ்வொன்றாக கைப்பற்றத் துவங்கினார்கள். படைத்

தலைவர்கள் மதிலின் மீது ஏறியதும் சோழ வீரர்களும் மதிலின் மீது ஏறத் துவங்கினார்கள். சோழ வீரர்கள் மதிலைக் கைப்பற்றத் துவங்கியதுமே சுங்க வில் வீரர்கள் அம்புகளை தொடர்ந்து மதிலின் மீது நின்றுகொண்டிருந்த சோழ வீரர்களை நோக்கி எறியலானார்கள். மதில்களில் அமைக்கப்பட்டிருந்த மறைவிடங்களில் சோழப் படைத் தலைவர்களும், வீரர்களும் மறைந்து கொண்டார்கள்.

கேடயங்களின் துணை கொண்டு வெளிப்பட்ட சோழ வீரர்கள் மதிலின் மீது நின்றுகொண்டிருந்த அஸ்திரங்களை சுங்கப் படையின் மீது திருப்பி இயக்கத் துவங்கினர். நஞ்சு தோய்க்கப்பட்ட நாக பாணங்கள் தாக்கி சுங்க வீரர்கள் கொத்துக் கொத்தாக மடிந்து விழத் துவங்கினார்கள். சுங்கப் படையினர் எதிர் நடவடிக்கையில் துரிதமாக இறங்கினார்கள்.

கோட்டையை நோக்கி நெருங்கி வந்த வீரர்களைத் தாக்க தேவ அஸ்திரங் களை திருப்பினார்கள். அகழி வழியாக நெருங்கிக் கொண்டிருந்த சோழக் கலங் களை நோக்கி மீண்டும் தேவ அஸ்தி ரத்தை பிரயோகிக்க முயன்றார்கள். மதி லின் மீது நின்றுகொண்டிருந்த சோழ படைத் தலைவர்களை தாக்கவும் தேவ அஸ்திரத்தை பயன்படுத்த முயற்சித்தார் கள்.

அதைப் பார்த்த செங்குவீரன் எரி யம்புகள் செலுத்தும் அக்னி அஸ்தி ரத்தை தேவ அஸ்திரங்கள் குவிக்கப் பட்டிருந்த இடத்தை நோக்கித் திருப்பி இயக்கினான்.

அடுத்த கணம் அஸ்திரத்திலிருந்து எரியம்புகள் மழை போன்று வெளிப்பட்டு அவ்விடத்தில் விழத் துவங்கின. நெருப்பு பட்டதுமே தேவ அஸ்திரத்தில் நிரப்பப் பட்டிருந்த வெடி பொருட்கள் அனைத் தும் வெடித்துச் சிதறின. அந்தக் கோட்

டையே ஒருகணம் குலுங்கி அடங்கியது. மதில்களில் விரிசல்கள் விழுந்தன. தேவ அஸ்திரங்கள் வைக்கப்பட்டிருந்த இடத்தில் மொத்த மதிலுமே இடிந்து தரை மட்டமானது.

"கோட்டையின் நுழைவாயிலைத் திறந்து விடுங்கள்!" எனக் கட்டளையிட்டான் செங்குவீரன்.

வில்லவன் கோட்டைக் கதவுகளை திறந்துவிட்டான். மதிலின் மீது நின்ற செங்குவீரன் வாளினை உயர்த்தி சோழப் படைக்கு சமிக்கையைத் தெரிவித்தான். மொத்த சோழப் படையும் சுபர்னரேகா நதியைக் கடந்தது. அதே நேரம் கிழக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் சோழப் படையினர் கோட்டையை நெருங்கினார்கள்.

கோட்டை மதிலின் மீது கைப்பற்றப்பட்ட அஸ்திரங்கள் அனைத்தும் சுங்கப் படையை நோக்கியே இயக்கப்பட அதே நேரம் சோழப் பொறிகளும் மதி

https://telegram.me/aedahamlibrary

லுக்கு வெகு அருகில் நெருங்கி மதி லைக் கடந்து கோட்டைக்கு உள்ளே தொடர்ந்து கற்களையும், எரி பந்துக ளையும், எரி அம்புகளையும் எறிந்து கொண்டிருந்தார்கள்.

கோட்டையின் கதவு திறக்கப்பட்ட தும், சோழப் படை வீரர்கள் கோட்டைக் குள் நுழைவார்கள். கோட்டையின் குறு கிய நுழைவாயிலின் வழியாக உள்ளே சோழ வீரர்கள் நுழைந்ததும் அவர்களை தாக்கலாம் என நினைத்து பொறுமை காத்துக் கொண்டிருந்தான் சுங்கப் பேரர சன் புஷ்யமித்திரன்.

ஆனால், கடைசி வரை சோழ வீரர்கள் கோட்டைக்குள் நுழையவே இல்லை. பொறிகள் கொண்டுவரப்பட்டு தாக்குதலை தீவிரப்படுத்திக் கொண்டி ருந்தார்கள்.

போரின் முடிவு மாறிக்கொண்டிருப் பதை நோக்கிய சுங்கமித்திரன், “தந் தையே... நம்மிடம் வீரர்களின் பலம் அதி

கம். சோழ வீரர்கள் உள்ளே நுழை வார்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. நாமாக அவர்களை வெளியே சென்று தாக்கினால்தான் உண்டு. உள்ளே பதுங்கியிருந்தால் பதுங்கும் ஒவ் வொரு கணத்துக்கும் நமது வீரர்களை ஆயிரக்கணக்கில் இழக்க நேரிடும். நமது வீரர்கள் நம்பிக்கையை இழக்கத் துவங் கிவிட்டார்கள். அவர்கள் முழு நம்பிக் கையை இழந்து இங்கிருந்து ஓடுவதற் குள் தாங்கள் ஒரு முடிவுக்கு வரவேண் டும்!" என எச்சரிக்கை செய்தான்.

"நமக்காக சோழப் படை வெளியே காத்திருக்கிறது. இந்த நிலையில் நமது பெரும்படையை எப்படி நாம் இந்தக் குறு கிய நுழைவாயிலின் வழியாக வெளியே கொண்டு செல்வது?" என வினவினான் புஷ்யமித்திரன்.

அப்போது சுங்கமித்திரனும் அமை தியானான்.

https://telegram.me/aedahamlibra

சோழப் படையின் தாக்கு தலை எதிர்கொண்டிருந்த அக்னிமித்தி ரன், "விரைவில் ஒரு முடிவுக்கு வாருங் கள். இல்லையேல் நாம் நமது படையை மொத்தமாக இழக்க வேண்டி வரும்!" என எச்சரிக்கை செய்தான்.

அதுவரை அமைதியாக நின்று சோழப் படையின் தாக்குதலை நோக் கிக் கொண்டிருந்த வைதீகர் பாகவதர், "சர்ப்ப வியூகம்!" எனப் பதிலளித்தார்.

"சோழப் படையினர் கருட வியூகத் தையே சிதறடித்தவர்கள். அவர்களிடம் சர்ப்ப வியூகம் எடுபடுமா பாகவதா?" என வினவினான் புஷ்யமித்திர சுங்கன்.

"இப்பொது இதை விட்டால் நமக்கு வேறு வழியில்லை நண்பா..."

"வேறு வழி நிச்சயம் இருக்கும். சிந் தித்து வழி சொல்!"

"வேறு வழி இல்லை நண்பா... இந் தக் குறுகிய கோட்டையின் நுழைவாயி

லின் வழியே நாம் நமது பெரும்படையை நகர்த்த வேண்டுமெனில் நமக்கு சர்ப்ப வியூகம் ஒன்றே கைகொடுக்கும்.”

“சரி... படைகள் உடனே புறப்படட் டும்!” எனக் கட்டளையிட்டான் புஷ்யமித் திர சுங்கன்.

அடுத்த கணம் சுங்கப் படை சர்ப்ப அணிவகுப்பில் சோழப் படையைத் தாக்க கோட்டையை விட்டு புறப்பட்டது.

https://telegram.me/aedahamlibra

# 52.

# செண்டாயுதனின் வெஞ்சினம்

சோழப் படை கோட்டையின் வெளிப்புறத்திலிருந்தும், கோட்டை மதிலின் மீதிருந்தும் தொடர்ந்து அசுரத்தனமான தாக்குதலை வெளிப்படுத்திக் கொண்டிருக்க கோட்டைக்குள் பதுங்கியிருந்த புஷ்யமித்திர சுங்கன் படையை சர்ப்ப வியூகத்தில் கோட்டையிலிருந்து வெளியேற்றி சோழப் படையைத் தாக்க உத்தேசித்து கட்டளைகளைப் பிறப்பித்திருந்தார்.

அவரது கட்டளை எழுந்த கணம் சுங்கப்படை சர்ப்ப வியூகத்தில் வெளியேறும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள். படை அணிவகுக்கத் துவங்கிய பிறகு தான் புஷ்யமித்திர சுங்கனும், வைதீகர் பாகவதரும் தங்களது பிழையை உணர்ந்தார்கள். சோழப் படையை கோட்டைக்கு அருகிலேயே நெருங்க விடாமல் தொலைவிலேயே நிற்க வைத்து அழித்துவிடலாம் எனும் எண்ணத்தில் அவர்கள் சர்ப்ப வியூகத்தின் தொடக்கத்தில் நிலை நிறுத்தும் புரவித் தேர்கள் எதையும் கொண்டுவந்திருக்கவில்லை. அதே நேரம் சர்ப்ப வியூகத்தின் இரண்டு பக்கங்களிலும் பாதுகாப்பு அரணாக நிற்க வைக்கும் யானைகளையும் வச்சிர மற்றும் கோசலக் கோட்டைகளுக்கு அளித்து விட்டிருந்தது எவ்வளவு பெரிய பிழை என்பதை சர்ப்ப வியூகத்தில் படையை நகர்த்த முடிவு செய்த பிறகே உணர்ந்தார்கள்.

பிழையை உணர்ந்தாலும் அதை எண்ணி வருத்தப்பட்டுக் கொண்டிருக்காமல் புஷ்யமித்திர சுங்கனும், வைதீகர் பாகவதரும் விரைந்து செயலாற்றத் துவங்கினார்கள்.

சர்ப்ப வியூகத்தின் தலையில் புரவி வீரர்களை நெருக்கமாக நிற்க வைத்தான் புஷ்யமித்திர சுங்கன். வியூகத்தை எதிர்க்கும் வீரர்களைத் தொலைவிலிருந்தே தாக்குவதற்கு வசதியாக புரவிகளில் அமர்ந்திருந்தவர்கள் அனைவரும் விற்களுடன் காணப்பட்டார்கள். புரவிகளுக்குப் பின்புறமாக வில் வீரர்கள் அணி வகுத்து நிற்கவைக்கப் பட்டார்கள். அவர்களைத் தொடர்ந்து காலாட்படையினர் அனைவரும் நெருக்கமாக நீண்டு பாம்பின் உடலைப் போன்றே அணிவகுக்கலானார்கள். சர்ப்ப வியூகத்தின் இரண்டு புறத்திலும் காலாட்படையினர் பெரும் கேடயங்களுடன் வியூகத்திற்கு பாதுகாப்பாக நின்றுகொண்டிருந்தார்கள்.

சர்ப்ப வியூகத்தின் தலையில் புஷ்யமித்திர சுங்கன் தனது பட்டத்து யானையின் மீது அமர்ந்திருந்தான். அவர்களைச் சுற்றி அவனது மெய்க் காவல் வீரர்கள் சூழ்ந்திருந்தார்கள். வியூகத்தின் கழுத்தில் சுங்கமித்திரனும், உடலில் அக்னிமித்திரனும், வால் பகுதியில் வைதீகர் பாகவதரும் படைக்குத் தலைமை தாங்கி நின்றுகொண்டிருந்தார்கள்.

படையின் தலைப் பகுதியில் நின்றுகொண்டிருந்த வீரர்கள் அனைவரின் வில் மற்றும் வாட்கள் அனைத்திலும் நாக நஞ்சினைக் கலந்திருந்தார்கள். சர்ப்ப வியூகத்தின் இரண்டு புறத்திலும் கேடயங்களுடன் அணிவகுத்து நின்றுகொண்டிருந்த வீரர்கள் அனைவரும் கையில் கொடுமையான நஞ்சு தோய்க்கப்பட்ட பரசுவுடன் நின்றுகொண்டிருந்தார்கள்.

சுங்கப் பேரரசன் புஷ்யமித்திர சுங்கன் இடையுறையிலிருந்த வாளினை

உருவி வானை நோக்கி உயர்த்தினான். கொம்புகள் நீண்டு ஊதப்பட்டன. பேரிகைகள் அனைத்தும் வேகமாக அடிக்கப் பட்டன. அடுத்த கணம் ஊர்ந்து செல்லும் சர்ப்பத்தினைப் போன்றே சுங்கப் படையானது மகதக் கோட்டையின் மிகப் பெரிய நுழைவாயிலான தெற்கு வாயிலின் வழியே வெளியேறத் துவங்கினார்கள்.

படைகள் வெளியேறத் துவங்கியதுமே மதிலின் மீது நின்றுகொண்டிருந்த திவ்யன் வெளியே நின்றுகொண்டிருந்த சோழப் படைக்கு தனது செண்டினை உயர்த்தி சமிக்கையைத் தெரிவித்தான். மதிலின் மீது நின்றுகொண்டிருந்த செங்குவீரன், திருக்கண்ணன், வில்லவன் ஆகியோர் வீரர்களுடன் சேர்ந்து நகர்ந்துகொண்டிருந்த சுங்கப் படையின் சர்ப்ப வியூகத்தின் மீது அஸ்திரங்களை எய்து தொடர்ந்து தாக்குதல் தொடுத்துக் கொண்டிருந்தார்கள். அஸ்திரங்களால் தாக்கப்பட்டு முன் வரிசையில் நின்

றுகொண்டிருந்த சுங்க வீரர்கள் மடிந்து விழுந்தாலும் தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருந்தார்கள்.

"சுங்கப் படை முன்னேறுகிறது" எனத் திவ்யன் தகவல் தெரிவித்த அடுத்த கணமே சோழப் படையின் பொறிகள் அனைத்தும் நுழைவாயிலை நோக்கி குறி வைக்கப்பட்டன. சுங்கப் படையின் முன் வரிசையில் நிற்பவர்கள் நிச்சயம் நஞ்சு தோய்க்கப்பட்ட ஆயுதத் தையே பயன்படுத்துவார்கள் என்பதை உணர்ந்த கரிகாலர் முன் வரிசையில் நிற்பவர்கள் அனைவரையும் பொறிகள் கொண்டே அழிக்க வேண்டும் எனும் திட்டத்தில் ஆயத்தமாக நின்றுகொண்டி ருந்தார். கரிகாலருக்கு ஒரு புறம் பரதவன் குமரனும் மறுபுறம் வர்த்தினியும் படை களுக்கு தலைமை தாங்கிக்கொண்டு நின்றனர். உபதளபதிகளின் தலைமை யில் கோட்டையின் கிழக்கிலும் மேற்கி லும் பெரும்படை தயாராக நின்றுகொண் டிருந்தார்கள். அகழியில் இம்ஹோடெப்

பொறிகளையும், வேல் வீரர்களையும் சுமந்துகொண்டு மரக்கலங்களில் நின்று கொண்டிருந்தான்.

புஷ்யமித்திரன் கட்டளையை பிறப் பித்தவுடன் சர்ப்ப வியூகம் கோட்டை யின் வாயிலினூடே நகரத் துவங்கியது. சர்ப்பமானது சிறு துளை வழியாகவும் உடலைக் குறுக்கி செல்வதைப் போன்று சுங்கனின் பெரும் படையும் சுருங்கி மதி லின் வழியாக வெளியேறிக்கொண்டிருந் தது. சுங்க வீரர்கள் கோட்டை வாயிலில் தென்பட்ட அடுத்த கணமே அகழிக்கு இப்புறமாக நின்றுகொண்டிருந்த சோழப் பொறிகள் அனைத்தும் ஒரே நேரத்தில் இயக்கப்பட்டன. பொறிகளிலிருந்து விற் கள், பாறைகள், எரி பந்துகள், வெடித்துச் சிதறி நாசம் விளைவிக்கும் எரி உருண் டைகள் ஆகியவை ஒரே நேரத்தில் சர்ப்ப வியூகத்தின் சுங்க வீரர்களைத் தாக்கின. அதே நேரத்தில் சோழ வில் வீரர்கள் அம் புகளையும், எரியம்புகளையும் விற்களில் தொடுத்து எறிந்தார்கள்.

சர்ப்ப வியூகத்தில் நின்றுகொண்டு வெளிப்பட்ட சுங்க வீரர்கள் அனைவரும் விற்களாலும், பாறைக் கற்களாலும் தாக்கப்பட்டு மடிந்து விழ விழ தொடர்ந்து வந்துகொண்டே இருந்தார்கள். வெளிப்பட்ட சுங்க வீரர்கள் அனைவரும் நஞ்சு தோய்க்கப்பட்ட நாக பாணத்தை எறிந்து முன் வரிசையில் நின்று பொறிகளை இயக்கிக்கொண்டிருந்த சோழ வீரர்களைத் தாக்கி மண்ணில் சரியவைத்தார்கள்.

கோட்டையின் தெற்கு வாசலில் போர் கோரமாக நடந்துகொண்டிருக்க செங்குவீரனும், திவ்யனும் மதிலிலிருந்து கீழே குதித்து சோழப் படைகளுடன் சேர்ந்துகொண்டு தேவ அஸ்திரத்தினால் தரைமட்டமாகியிருந்த மதில் வழியாக மகதக் கோட்டைக்குள் நுழைந்தார்கள்.

உள்ளே நுழைந்த அடுத்த கணமே சோழப் படை இரண்டாகப் பிரிந்தது. ஒரு பிரிவுக்கு தலைமையேற்ற செங்குவீ

ரன் சர்ப்ப வியூகத்தின் வால் பகுதியில் நின்று படைகளை இயக்கிக் கொண்டிருந்த வைதீகர் பாகவதரை நோக்கி அதி விரைவாக முன்னேறினான். இன்னொரு படைப் பிரிவுக்கு தலைமை ஏற்றிருந்த திவ்யன் சர்ப்ப வியூகத்தின் நடு உடலை நோக்கி அதிவேகமாக விரைந்துகொண்டிருந்தான்.

மகதக் கோட்டையின் மதில் உடைந்து விழுந்தாலும் அதைக் கடந்த பெரும் அகழி இருப்பதாலும், அந்த அகழியில் முதலைகள் பல பசியுடன் இருந்ததால் சோழப் படையினால் அகழியை எளிதில் கடந்து கோட்டைக்குள் நுழைய முடியாது என எண்ணிய வைதீகர் பாகவதர் மற்றும் புஷ்யமித்திர சுங்கன் படையைக் கோட்டையை விட்டு வெளியேற்றுவதிலேயே முழு கவனத்தையும் செலுத்திக் கொண்டிருந்தனர். ஆனால், சுங்கப் படை சர்ப்ப வியூகத்தை அமைக்க முடிவெடுத்த நேரத்திலேயே சோழப் பொறிகள் பாறைக் கற்களை செலுத்தி பெரும்

படை நகரும் அளவிற்கு அகழியைத் தூர்த்துவிட்டதை அவர் அறிந்திருக்க வில்லை.

காலாட்படையும், புரவிப் படை வீரர்களும் நிறைந்த பெரும் சுங்கப் படையை வைதீகர் பாகவதர் கட்டுப்ப டுத்தி முன்னோக்கி செலுத்திக்கொண்டி ருந்த அதே நேரம் செங்குவீரனின் தலை மையில் பெரும் யானைப் படை சர்ப்ப வியூகத்தின் வால் பகுதியைத் தாக்கியது. செங்குவீரனின் தாக்குதலை எதிர்பார்க் காத வைதீகர் படையைத் திருப்பி செங் குவீரனைத் தடுத்து நிறுத்த முயற்சிகளை மேற்கொண்டார்.

சர்ப்ப வியூகத்தின் வாலில் அணி வகுத்து நின்றுகொண்டிருந்த காலாட் படை வீரர்களைத் தனது யானைப் படையினால் மோதினான் செங்குவீரன். காலாட்படை வீரர்கள் நீண்ட வேல்க ளைக் கொண்டும், வாட்களைக் கொண் டும் யானைகளை தடுத்து நிறுத்த

முயன்றார்கள். யானைகளின் நெற்றியில் காணப்பட்ட கவசங்கள் யானைகளுக்கு பாதுகாப்பினை அளிக்க நீண்ட தந்தங்க ளினால் எதிரில் நின்றவர்களை கிழித்து தூக்கிப் போட்டபடியே தொடர்ந்து முன் னேறிக் கொண்டிருந்தன. யானைப் படையினூடே யானையின் மீது அமர்ந் திருந்த செங்குவீரன் வைதீகரை நோக்கி விரைவுடன் முன்னேறிக் கொண்டிருந் தான். வைதீகரைக் குறிவைத்து முன் னேறிய செங்குவீரன் எதிரில் நின்ற சுங்க வீரர்களை வதம் செய்துவிட்டு வைதீ கரை நோக்கினான். அப்போது திடீ ரென்று வைதீகர் பாகவதர் மறைந்திருந் தார். அவர் அமர்ந்திருந்த புரவியும் மாய மாக மறைந்திருந்தது.

யானைகள் சுங்க வீரர்களை வதைத்து அணிவகுப்பை சிதறடித் துக் கொண்டிருக்க யானையின் மீது அமர்ந்திருந்த செங்குவீரன் புரவிக ளின் துணையுடன் சர்ப்ப வியூகத் தின் வாளினை மையத்தில் கிழித்துக்

கொண்டு தலையை நோக்கி முன்னேறத் துவங்கியிருந்தான்.

செங்குவீரனால் கிழிக்கப்பட்டு இரண்டாகப் பிரிந்த சர்ப்பத்தின் உட லைத் திருக்கண்ணனும், வில்லவனும் தங்களின் படையுடன் சூழ்ந்து அழிக்கத் துவங்கினார்கள். செங்குவீரனுக்கு பக்க பலமாக இரண்டு புறத்திலும் திருக்கண் ணனும், வில்லவனும் சுங்கப் படைகளை சிதறடிக்க செங்குவீரன் சர்ப்பத்தின் உட லைக் கிழித்துக்கொண்டு எதிர்பட்ட உப தலைவர்கள், உபதளபதிகள் அனைவ ரையும் கோரமாகக் கொன்று போட்டபடி நீண்டு காணப்பட்ட சர்ப்ப வியூகத்தின் தலையை நோக்கி முன்னேறிக் கொண் டிருந்தான்.

சர்ப்ப வியூகத்தின் உட லைக் கிழித்துக்கொண்டு செங்குவீரன் தலையை நோக்கி முன்னேறிக் கொண் டிருந்த போது சர்ப்ப வியூகத்தை கோட் டையிலிருந்து முழுவதும் வெளியேற்ற

முழு முயற்சியை எடுத்துக் கொண்டிருந்தான் புஷ்யமித்திர சுங்கன். கோட்டையின் வாயிலை புஷ்யமித்திர சுங்கனைக் கடக்கவிடாமல் சோழ வீரர்கள் விற்களையும், எரி அம்புகளையும் தொடுத்துத் தாக்கிக்கொண்டிருந்தார்கள். விற்களையும் அம்புகளையும் உடலில் சுமந்துகொண்டு சுங்க வீரர்கள் தொடர்ந்து முன்னேற அவர்களின் முன்னேற்றத்தை அகழி தடுத்து நிறுத்தியது. சர்ப்ப வியூகத்தின் பின்புறமாக நின்றுகொண்டிருந்த வீரர்கள் தொடர்ந்து முன்னேற முன் வரிசையில் நின்றுகொண்டிருந்த புரவி வீரர்கள் அகழிகளில் விழுந்து அதைத் தூர்க்க பின்வரிசையில் வந்த வீரர்கள் அகழியில் விழுந்த வீரர்களின் உடல்களைப் பாலமாகக் கொண்டு கடந்து முன்னேறினார்கள்.

சுங்க வீரர்கள் அகழியைக் கடக்க அகழியில் மரக் கலங்களில் நின்றுகொண்டிருந்த இம்ஹோடெப் மூர்க்கத்தனமாக இரண்டு புறத்திலும் தாக்கு

https://telegram.me/aedahamlibra

தல் தொடுக்கலானான். அதே நேரம் சோழப் பேரரசர் கரிகாலர், "பொறிக ளைக் கொண்டு தாக்கியது போதும். போரினை முடித்து வையுங்கள்!" எனத் தனது வீரர்களுக்கு கட்டளையிட்டது தான் தாமதம் அடுத்த கணம் தயாராக நின்ற சோழ வீரர்கள் யானைகளிலும், புரவிகளிலும், தேர்களிலும் முன்னேறிச் சென்று சுங்கப் படையுடன் கலந்துவிட் டிருந்தார்கள். சோழப் பேரரசர் கரிகாலர் நேருக்கு நேர் சர்ப்ப வியூகத்தின் தலை யைத் தாக்குதல் தொடுக்க அவருக்கு இரண்டு புறத்திலும் நின்றுகொண்டிருந்த பரதவன் குமரனும், வர்த்தினியும் கரிகா லருக்குப் பக்கமாகச் சென்று சர்ப்ப வியூ கத்தின் கழுத்தைத் தாக்கினார்கள்.

சர்ப்ப வியூகத்தின் வாலில் செங் குவீரன், தலையில் கரிகாலர், கழுத்தின் இரண்டு புறத்திலும் வர்த்தினி மற்றும் பரதவன் குமரன் ஆகியோரின் படை கள் அசுரத்தனமாக தாக்குதல் தொடுத் துக்கொண்டிருக்க கையில் செண்டினை

https://telegram.me/aedahamlibra

சுழற்றிக்கொண்டு வேல்களைத் தாங்கிய சோழப் புரவி வீரர்களுடன் சர்ப்ப வியூகத்தின் உடலில் இரண்டறக் கலந்துவிட்டிருந்தான் திவ்யன். திவ்யன் தாக்கிய அடுத்த கணம் சர்ப்ப வியூகத்தின் உடலானது தலையிலிருந்து வெட்டி எறியப்பட்டது. சர்ப்பத்தின் வாலில் நின்றுகொண்டிருந்த வைதீகர் செங்குவீரனைக் கண்டதும் எப்போதோ தப்பி ஓடியிருக்க அதன் உடலில் நின்றுகொண்டிருந்த அக்னிமித்திரன் செங்குவீரனுக்கும், திவ்யனுக்கும் இடையில் சிக்கிக்கொண்டிருந்தான். புரவியின் மீது அமர்ந்தபடி அம்பினைத் தொடுத்து சோழ வீரர்களைத் தாக்கிக்கொண்டிருந்த அக்னிமித்திரனை நோக்கி எதிர்ப்பட்ட சுங்க வீரர்களைத் தனது செண்டினால் கொடூரமாக வதைத்துக்கொண்டு முன்னேறினான் திவ்யன்.

திவ்யன் அக்னிமித்திரனை நெருங்கி விட்டிருந்த அதே நேரம் செங்குவீரன் சுங்கர்களை கோரமாக வதைத்

https://telegram.me/aedahamlibra

துக் கொண்டிருந்தான். அப்போது புரவியின் மீது அமர்ந்திருந்த அக்னிமித்திரன் தொலைவில் போரிட்டுக்கொண்டிருந்த செங்குவீரனை நோக்கி அம்பினைக் குறி வைத்துக்கொண்டிருந்தான். அதைப் பார்த்துவிட்ட திவ்யன் கையிலிருந்த செண்டினை அக்னிமித்திரனை நோக்கி எறிந்தான். திவ்யனின் செண்டானது புரவியின் கழுத்தின்மீது பாய அக்னிமித்திரன் புரவியிலிருந்து கீழே விழுந்தான். கீழே விழுந்தவன் மீண்டும் எழுந்து நின்று இடையிலிருந்த வாளினை உருவிக்கொண்டு ஆயுதமின்றி வந்த திவ்யனை நோக்கி அதி வேகமாக ஓடிவந்து தாக்கினான். அக்னிமித்திரனின் தாக்குதலைக் குனிந்து விலக்கிக்கொண்ட திவ்யன் அவனது பிடரியைப் பிடித்துத் தூக்கி எதிரில் நின்ற சுங்க வீரர்களை நோக்கி எறிந்தவன் புரவியின் உயிரைக் குடித்துக்கொண்டிருந்த செண்டினைப் பற்றி இழுத்தான்.

https://telegram.me/aedahamlibra

அப்போது அக்னிமித்திரனின் மெய்க் காவல் வீரர்கள் பலர் திவ்யனைச் சூழ்ந்துகொண்டு தாக்கத் துவங்கினார்கள். கையில் வைத்திருந்த செண்டினை சுழற்றினான் திவ்யன். அவனது செண்டு பட்டு வாட்களும், வாட்களுடன் சுங்க வீரர்களின் கரங்களும் காற்றில் பறக்க செண்டானது அவர்களின் உடல்களில் பாய்ந்து அவர்களின் உயிரை உடலிலிருந்து பிரித்துக்கொண்டிருந்தது.

எதிர்த்த அத்தனை மெய்க்காவல் வீரர்களையும் கொன்று போட்டு அக்னிமித்திரனை நெருங்கினான் திவ்யன். மீண்டும் கையில் வாளினைத் தாங்கிக் கொண்டு திவ்யனை நோக்கி ஓடி வந்தவன் கையிலிருந்த வாளினை திவ்யனின் கழுத்தை நோக்கி அதி வேகமாகச் செலுத்தினான். செண்டினை சுழற்றினான் திவ்யன். அடுத்த கணம் அக்னிமித்திரனின் வாளானது அவனது கரத்திலிருந்து விடுபட்டு காற்றில் பறந்து சென்றது.

ஆயுதமின்றி நின்றுகொண்டிருந்த அக்னிமித்திரனின் மார்பில் எட்டி உதைத்தான் திவ்யன். அடுத்த கணம் வானத்தைப் பார்த்தபடி மண்ணில் விழுந்தான் அக்னிமித்திரன். கீழே கிடந் தவனின் மார்பில் தனது காலினை வைத்து செண்டினை ஓங்கினான் திவ் யன்.

அப்போது அக்னிமித்திரனின் விழி களில் எதையோ பார்த்துவிட்ட திவ்யன் உடனே திரும்பினான். தனது தம்பி அக் னிமித்திரனைக் காப்பாற்ற சுங்கமித்திரன் கையில் நீண்ட வேலுடன் திவ்யனின் முதுகில் பாய்ச்சுவதற்கு புரவியிலிருந்து தாவியிருந்தான்.

உடனே சுதாரித்துக்கொண்ட திவ் யன் ஒற்றைக் கையால் அவனது வேலி னைப் பிடித்துக்கொண்டு சுங்கமித்தி ரனை புரவியிலிருந்து இழுத்து தூக்கி எறிந்தான். அதைப் பார்த்த அக்னிமித்தி ரன் பயத்தில் நடுங்கி தன் மார்பின் மீது

வைக்கப்பட்டிருந்த திவ்யனின் காலைப் பற்றினான்.

அச்சத்தில் விழிகளை மூடி காலைப் பிடித்துக்கொண்டு மண்ணில் கிடந்த அக்னிமித்திரனை நோக்கிய திவ் யன், "இவனைக் கொல்வது அவமானம்" என எண்ணி அவனது மார்பிலிருந்து தனது காலை எடுத்தான்.

அடுத்த கணம் அக்னிமித்திரன் உயிர் பிச்சை கிடைத்த மகிழ்ச்சியில் அங்கிருந்து ஓடினான். அக்னிமித்திரன் ஓடிச் சென்ற அதே நேரம் புரவியிலி ருந்து தூக்கி எறியப்பட்ட சுங்கமித்திரன் கையில் வாளுடன் திவ்யனை நோக்கி ஓடி வந்தான். ஓடி வந்தவன் அதி வேக மாக வாளினை திவ்யனின் மார்பை நோக்கி இறக்கினான். கையிலிருந்த செண்டினால் அதைத் தட்டி விட்டான் திவ்யன். அவனது வாளானது கையை விட்டு நீங்கி வெகுதூரம் ஓடிச் சென்று விழுந்தது.

தனது வாள் தன்னைக் கைவிட்டு விட்டதை நம்பலாமா? அல்லது வேண் டாமா? என எண்ணி சுங்கப் பேரரசின் பட்டத்து இளவரசன் சுங்கமித்திரன் நின் றுகொண்டிருந்த போது தனது கையி லிருந்த வாளினை தரையில் ஊன்றிய திவ்யன் அவனது அடிவயிற்றில் கையை விட்டு வர்ம அடி ஒன்றைத் தொடக்க லானான். அடுத்த கணம் சுங்கமித்திரன் மண்ணில் விழுந்து வலியில் புரண்டான். கையில் தனது செண்டினை எடுத்த திவ்யன் சுங்கமித்திரனைக் காக்க வந்த அவனது மெய்க் காவலர்கள் அனைவ ரையும் கோரமாகக் கொன்று வதைத் தான்.

திவ்யன் எதிர்த்த அனைவரையும் கொன்று போட்டுக் கொண்டிருந்த அதே நேரம் சர்ப்பத்தின் வாலில் ஊடுரு விய செங்குவீரன் அதன் தலை வரை அதைக் கிழித்துக்கொண்டு வந்து திவ் யனை சந்தித்தான். இரண்டாகக் கிழிக் கப்பட்ட சர்ப்பத்தின் உடலில் நின்று

கொண்டிருந்த வீரர்களை திருக்கண்ண னும், வில்லவனும் தாக்கி அழிக்க எஞ்சிய சுங்க வீரர்கள் உயிர் பிழைத்தால் போதும் என்று புறமுதுகிட்டு கோட்டையின் மறுபுறத்தை நோக்கி ஓடலானார்கள். வலியினால் துடித்துக்கொண்டிருந்த சுங்கமித்திரனை நோக்கிய செங்குவீரன், "நண்பா... இன்னும் எதற்காக தாமதிக்கிறாய். அவனை வதைத்துவிடு!" எனக் கட்டளையிட்டான்.

"இவனது மரணம் கோரமாக இருக்கும் என்று நான் வாக்களித்திருக்கிறேன் செங்குவீரா... இவனால் நான் யவனத்தில் அடிமைப்பட்ட காலத்தில் எப்படியெல்லாம் வேதனைகளை அனுபவித்தேனோ அனைத்து வேதனைகளையும் இவனும் அனுபவிக்க வேண்டும்!" என திவ்யன் கூறிக்கொண்டிருந்த போதே அங்கு வந்த திருக்கண்ணனும், வில்லவனும் கீழே கிடந்து வலியில் துடித்துக்கொண்டிருந்த சுங்கமித்திரனை தூக்கி நிறுத்தினார்கள்.

சுங்கமித்திரன் நின்ற அடுத்த கணம் மீண்டும் அவனது உடலில் எலும்புகள் இணைந்திருக்கும் அனைத்து இடங்களையும் தாக்கி அனைத்தையும் உடைத்தான் திவ்யன். மரண வலியில் சுங்கமித்திரன் துடித்துக் கொண்டிருந்த போது அவனது தலை முடியைப் பற்றி தூக்கிய திவ்யன், "செங்குவீரா... இவனைப் பெற்ற இவனது தந்தை புஷ்யமித்திரனின் கண் முன்னால் இவனை நான் கொலை செய்யப் போகிறேன்... படைகளை விலக்கி எனக்கு வழி ஏற்படுத்து" எனக் கட்டளையிட்டான்.

அடுத்த கணம் செங்குவீரன் சர்ப்ப வியூகத்தின் தலையின் பின்புறத்தில் தாக்கி ஊடுருவினான். அவனுக்கு இரண்டு புறத்திலும் வில்லவனும், திருக்கண்ணனும் எஞ்சியவர்களைக் கொன்று வழி ஏற்படுத்த திவ்யன் புஷ்யமித்திரனின் தலையைப் பிடித்து இழுத்துக்கொண்டு நடந்து சென்றான்.

https://telegram.me/aedahamlibrary

சுங்கப் பட்டத்து இளவரசன் சுங்கமித்திரன் தோற்கடிக்கப்பட்ட செய்தி சுங்கப் படையில் பரவ சுங்கர்கள் நம்பிக்கையை இழந்து தப்பி ஓடத் துவங்கினார்கள். அவர்கள் தப்பி ஓடுவதற்குக் கூட வழி இல்லாமல் கோட்டை முழுவதையும் கைப்பற்றி சூழ்ந்திருந்த சோழ வீரர்களால் தாக்கப்பட்டு மரணத்தைத் தழுவினார்கள்.

சர்ப்ப வியூகத்தின் உடலானது செங்குவீரனாலும், திவ்யனாலும் மொத்தமாக அழிக்கப்பட்டாலும் தலையில் நிலை கொண்டிருந்த புஷ்யமித்திர சுங்கன் தொடர்ந்து போராடிக்கொண்டிருந்தான். மொத்தப் படையுமே கிட்டத்தட்ட அழிந்து போயிருந்த நிலையிலும் கடைசி வரை சோழப் படையை எதிர்த்து போராடிக்கொண்டிருந்தான். கரிகாலர் எஞ்சியிருந்தவர்களை வேகமாகக் கொன்று புஷ்யமித்திரனை நெருங்கிக் கொண்டிருந்தார். கரிகாலருக்கு இரண்டு புறத்திலும் சென்ற வர்த்தினியும், பரதவன் குமர

னும் அவருக்கு பாதுகாப்பினை அளித்துக் கொண்டிருந்தார்கள்.

கரிகாலர் நெருங்கிவிட்டதைக் கண்டதுமே கையில் வைத்திருந்த வில்லினை தூர எறிந்துவிட்ட புஷ்யமித்திர சுங்கன் இடையிலிருந்த வாளினை உருவிக்கொண்டு சென்று கரிகாலரை நேருக்கு நேர் எதிர்கொண்டான். புஷ்யமித்திரனின் அனைத்து தாக்குதலையும் வெற்றிகரமாக தடுத்து நிறுத்திக் கொண்டிருந்தார் கரிகாலர். "வெண்ணிப் போரில் காளனைக் கொன்றதும் சேரமான் பெருஞ்சேரலாதனின் மீது கோபம் கொண்டு அவரைப் போரின் தொடக்கத்திலேயே கொன்றது தவறு" என்ற குற்ற உணர்ச்சியில் இருந்ததால் கரிகாலர் புஷ்யமித்திரனை வீழ்த்த கிடைத்த சந்தர்ப்பங்களையும் விட்டுவிட்டு எச்சரிக்கையுடன் சமர் செய்துகொண்டிருந்தார். ஒரு கட்டத்தில் புஷ்யமித்திரனின் தாக்குதல் வேகம் அதிகரிக்க கரிகாலர் புஷ்யமித்திர சுங்கனின் வாளினை அவரது

கரத்திலிருந்து லாவகமாகப் பிரித்து, “சர ணடைந்து விடுங்கள்!” எனக் கூறிக் கொண்டு அவனது கழுத்தில் தனது வாளினை வைத்தார் கரிகாலர்.

“புஷ்யமித்திர சுங்கனிடம் சரண டைதல் என்ற சொல்லே கிடையாது!” எனக் கூறிய சுங்கப் பேரரசன் இடையில் மறைத்து வைத்திருந்த குறுவாளினை உருவி கரிகாலரை நோக்கி ஓங்கினான். அதைத் தடுக்க கரிகாலரும் தனது வாளினை உயர்த்த ஓங்கிய புஷ்யமித் திர சுங்கன் வாளினை உயர்த்தியபடியே பெரும் அதிர்ச்சியில் உறைந்து போய் நின்றுகொண்டிருந்தான்.

கையிலிருந்த குறுவாளினைக் கீழே வீசிய புஷ்யமித்திர சுங்கன், “நான் தோல்வியை ஒப்புக் கொள்கிறேன்! எனது மகனை விட்டுவிடுங்கள்!” எனக் கூறிக்கொண்டு ஓடினான்.

அவர் ஓடிய திசையை நோக்கினார் கரிகாலர். அங்கே செங்குவீரன் முன்னே

https://telegram.me/aedahamlibra

வர திவ்யன் சுங்கமித்திரனின் தலை முடியைப் பற்றி இழுத்துக்கொண்டு வந்து கொண்டிருந்தான்.

சுங்கப் பேரரசனே தோல்வியை ஒப்புக் கொண்டதால் போர் நிறுத்த முரசு உடனே அடிக்கப்பட்டது. சுங்க வீரர்களில் முக்காலுக்கும் மேற்பட்டோர் அழிந்துபோனாலும் எஞ்சி நின்றவர்கள் ஆயுதங்களைத் துறந்து சோழ வீரர்களிடம் சரணடைந்தார்கள்.

திவ்யனின் நரம்படியால் தாக்கப்பட்ட சுங்கமித்திரனின் உடலின் நரம்புகள் அனைத்தும் பாலம் பாலமாக வெடித்து கொடூரமான வலியை ஏற்படுத்திக்கொண்டிருக்க துடித்துக்கொண்டிருந்த சுங்கமித்திரனைக்கண்டு அழுது கொண்டிருந்தான் புஷ்யமித்திர சுங்கன்.

நெடுங்காலமாக மௌரியப் பேரரசின் முதன்மைப் படைத் தளபதியாக இருந்து பல போர்களை சந்தித்தவனும், பிறகு தனது அரசனையே கொன்று தன்

னையே அரசனாக முடிசூடிக்கொண்டு "சுங்க மரபு" என்ற அரச மரபையே தோற் றுவித்து மகதத்தை சூழ்ந்திருந்த தக்சன கோசலம், உத்தரகோசலம், வச்சிர நாடு ஆகியவற்றை அடக்கி பேரரசனாக வளம் வந்தவனும், தனது வைதீக மதத்தைப் பரப்ப பௌத்தர்கள், சமணர்கள் என அனைவரையும் படுகொலை செய்தவ னும், தன்னை எதிர்த்த அனைவரை யும் கொன்று தனது மதத்தையும், ஆட்சி யையும் பரப்பிய புஷ்யமித்திர சுங்கனால் தனது மகனின் நிலையைக்கண்டு கண் ணீர் சிந்தாமல் இருக்கவில்லை.

கண்ணீர் சிந்தியபடி புஷ்யமித்திர சுங்கன், "எனது மகனைக் கொன்றுவிடு... அவன் வலியினால் வேதனைப் படுவதை என்னால் காண இயலவில்லை. உன் னிடம் மன்றாடுகிறேன் நான். சுங்கமித் திரனை உனது கையாலேயே கொன்று விடு!" எனத் திவ்யனிடம் கெஞ்சினான்.

புஷ்யமித்திர சுங்கன் மற்றும் ஆயி ரக்கணக்கான சுங்க வீரர்களின் முன் உடலின் நரம்புகள் அனைத்தும் பாலம் பாலமாக வெடித்து குருதி கசிந்து வலி யில் துடித்துக் கொண்டிருந்த சுங்கமித்தி ரன் தட்டுத்தடுமாறி மண்டியிட்டு அமர்ந் தான். அப்போது தனது செண்டினை சுங் கமித்திரனின் கழுத்தில் செலுத்திய திவ் யன் வெளியே இழுத்தான்.

சுங்கமித்திரனின் தலை மட்டும் தனியாக பிய்த்துக்கொண்டு வந்தது திவ் யனின் செண்டோடு.

சுங்கமித்திரனின் உடலிலிருந்து தலையை மட்டும் தனியாகப் பிய்த்து புஷ் யமித்திரன் காலடியில் போட்ட திவ்யன், "தலைக்கு பொற்காசுகள் அளிப்பதாக அறிவித்தவன் நீ தானே... இந்தத் தலை யையும் நீயே எடுத்துக்கொள்!" எனத் தெரிவித்தான்.

உடலிலிருந்து தனியாக பிய்க் கப்பட்ட சுங்கமித்திரனின் தலையைப்

பார்த்த புஷ்யமித்திர சுங்கன் கதறிக் கொண்டிருந்த அதே நேரத்தில் அங்கு ஓடி வந்த செங்குவீரனின் ஒற்றன் ஒரு வன், “வைதீகர் பாகவதர் சில வீரர்க ளுடன் தப்பி வடக்கு நோக்கி சென் றுகொண்டிருக்கிறார்” எனத் தெரிவித் தான்.

“எதிர்பார்த்தேன் நான். நமது வீரர் களைப் பின்தொடரச் சொல்!”

“ஏற்கனவே கட்டளையிட்டுவிட் டேன் தலைவரே...”

“நல்லது!” என செங்குவீரன் கூறிக் கொண்டிருந்த போதே திவ்யன், “செங் குவீரா... அவன் ஒருநாளும் தப்பி விடக் கூடாது. அவனை விரட்டிச் சென்று கொன்று போடு!” எனக் கட்டளையிட் டான்.

“அவனை விரட்டிச் செல்லவேண் டிய அவசியம் இருக்காது நண்பா... அவன் கன்வர்களின் தேசத்தைக் கடந்து

வடக்கே இமயத்தில் இரகசிய இடம் ஒன்றை ஏற்படுத்தி வைத்திருக்கிறான். அங்குதான் சென்றுகொண்டிருக்கிறான். நம் சில வீரர்கள் பின்தொடர்ந்தால் போதும்! மற்றதை நான் பார்த்துக் கொள் கிறேன்!"

"சரி..." எனத் திவ்யன் கூற அப் போது குறுக்கிட்ட கரிகாலர், "படைத் தலைவரே... நானும் வேளக்காரப் படைத்தலைவர் திவ்யனும் மகத்திற்கு செல்கிறோம். தாங்கள் திருக்கண்ணன் மற்றும் வில்லவரை துணைக்கு அழைத் துக்கொண்டு நமது புரவிப் படையுடன் புறப்பட்டுச் செல்லுங்கள். வைதீகரைக் கொன்று போட்டு இமயத்தில் நமது புலிக் கொடியை பறக்கவிட்டுத் திரும்புங்கள்..." எனக் கட்டளையிட்டார்.

"தங்களது உத்தரவு!" எனத் தெரி வித்த செங்குவீரன் தலையாட்டினான்.

அப்போது திவ்யன், “செங்குவீரா.. எப்போது புறப்படப் போகிறாய்?” என வினவினான்.

“புரவி வீரர்கள் இன்று ஓய்வெடுக் கட்டும். நாளை நான் இமயத்தை நோக் கிப் புறப்படுகிறேன்!” எனத் தெரிவித்த செங்குவீரன் “இம்ஹோடெப் பயணத்திற் கான ஏற்பாடுகளை செய்யுங்கள்!” என அனிச்சையாகக் கட்டளையிட்டான்.

அப்போது அங்கு நின்ற திருக்கண் ணன், “தலைவரே...” எனப் பெரும் வருத் தத்துடன் கூறி பார்வையை அகழியை நோக்கிச் செலுத்தினான்.

அங்கே பரதவன் குமரன் இம்ஹோ டெப்பின் உடலைத் தோளில் சுமந் துகொண்டு அவர்களை நோக்கி வந் துகொண்டிருந்தான். போரில் வீர மர ணமடைந்த இம்ஹோடெப்பை நோக் கிய செங்குவீரனின் விழிகளிலிருந்து சில கண்ணீர்த் துளிகள் தரையில் விழுந்து இம்ஹோடெப்பின் வீரத்திற்கும், பணி

விற்கும் உரிய மரியாதையை செலுத்தி யது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibra

# 53.

# இமயத்தில் புலிக்கொடி

சோழப் படையைத் தாக்குவதற்கு சர்ப்ப வியூகத்தை அமைக்கும் வரை பெரும் நம்பிக்கையில் காணப்பட்ட வைதீகர் பாகவதர் உடைந்த கோட்டை மதிலின் வழியே செங்குவீரன் நுழைந்து சர்ப்ப வியூகத்தின் பின்புறத்தில் தாக்குதல் மேற்கொள்ளத் துவங்கியதும் நம்பிக்கையை சிறிது சிறிதாக இழக்கத் துவங்கினார். நம்பிக்கையை இழந்தாலும் வீரர்களைத் திருப்பி செங்குவீரனைத் தடுத்து நிறுத்த முயன்றார். ஆனால், யானைப் படையுடன் தாக்குதல் மேற்கொண்ட செங்குவீரனைச் சுங்க வீரர்களின்

காலாட்படை வீரர்களால் தடுத்து நிறுத்த முடியவில்லை. அவனது வாளில் அகப் பட்ட சுங்க வீரர்கள் மரணித்து கீழே விழுவதைப் பார்க்கப் பார்க்க வைதீகரி டம் எஞ்சியிருந்த நம்பிக்கை, தைரியம் என அனைத்தும் மொத்தமாக விலகிக் கொண்டிருந்தது.

சர்ப்ப வியூகம்தான் எதிரி கள் அணிவகுத்திருக்கும் வியூகத்தைக் கிழித்துக்கொண்டு ஊடுருவித் தாக்கு தல் தொடுக்கும். ஆனால், அந்த சர்ப்ப வியூகத்தையும் இரண்டாகக் கிழித்துக் கொண்டு வைதீகரை நோக்கி செங்கு வீரன் முன்னேறிக் கொண்டிருந்ததைக் கண்டதுமே வெண்ணிப் போரின் இறு தியில் இருங்கோவேளைக் கைவிட்டு வடக்கு நோக்கி ஓடி வந்துவிட்ட தைப் போன்று அப்போதும் படையைக் கைவிட்டுவிட்டு அங்கிருந்து நழுவிச் சென்று மறைந்துவிட்டார் வைதீகர் பாக வதர். சோழ வீரர்களின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறி புறமுது கிட்ட சுங்க வீரர்கள் நால்வரை உதவிக்கு அழைத்துக்கொண்ட வைதீகர் பாகவதர்

https://telegram.me/aedahamlibra

தனது பிரதம சீடனுடன் கோட்டையின் இரகசிய சுரங்கத்தை நோக்கிச் சென்றார்.

அப்போது வைதீகர் பாகவதர், “கோட்டையில் வைத்திருக்கும் எனது கமண்டலம், ஓலைச் சுவடிகளை உடனே கொண்டுவா... சோழ வீரர்கள் நம்மை நெருங்குவதற்குள் நாம் இங்கிருந்து தப்பிக்க வேண்டும்!” எனக் கட்டளையிட்டார்.

“அதற்கெல்லாம் இப்போது நேரம் இல்லை வைதீகரே...” எனத் தெரிவித்தவன் தொலைவில் சோழ வீரர்கள் கோட்டைக்குள் ஊடுருவித் தாக்கியதை சுட்டிக் காட்டி, “அவர்கள் வருவதற்குள் நாம் இங்கிருந்து தப்பிக்க வேண்டும். உடனே புறப்படுங்கள்!” என அவசரப்படுத்தினான்.

“அந்தக் கிராகதர்களின் பார்வையில் படுவதற்குள் நாம் இங்கிருந்து மறைந்துவிடுவோம்!” எனக் கூறிய வைதீ

கர் சுவற்றில் இருந்த கல் ஒன்றை நீக்கி துருத்திக்கொண்டிருந்த இரும்புக் கம்பி ஒன்றை கீழே அழுத்தினார். அப்போது சுவற்றுக்கு எதிர்ப் புறமாக நின்றுகொண் டிருந்த பெரியத் தூணுக்கு அருகில் இருந்த பெரிய கல் ஒன்று நகர்ந்து தரை யில் மிகப்பெரிய பள்ளம் ஒன்று தோன்றி யது.

இருண்டு காணப்பட்ட பள்ளத்தில் முதலில் சில படிக்கட்டுக்கள் மட்டுமே பார்வைக்குத் தெரிந்தன. துணைக்கு அழைத்து வந்த சுங்க வீரர்களை அவசர அவசரமாக உள்ளே அனுப்பிவைத்த வைதீகர் சுவற்றில் எரிந்துகொண்டிருந்த தீப்பந்தம் ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டு கடைசியாக உள்ளே நுழைந் தார். உள்ளே நுழைந்ததும் மீண்டும் சுரங்கத்தின் மேலே இருந்த கல் ஒன்றை நகர்த்தினார். அடுத்த கணம் சுரங்கப் பாதை இருந்த சுவடே தெரியாமல் கல் ஒன்று மூடியது.

https://telegram.me/aedahamlibra

சுரங்கப் பாதையின் வழியே ஒரு ஓரைப் பொழுதுக்கும் மேலே நடந்து சென்றுகொண்டிருந்தார்கள் ஆறு பெரும். முன் வரிசையில் சென்ற வைதீகரின் சீடன் கையில் வாளுடன் சென்றுகொண்டிருந்தான். அவனுக்குப் பின்புறமாக நான்கு சுங்க வீரர்கள் வர கடைசியாக தீப்பந்தத்தைத் தாங்கிக்கொண்டு வைதீகர் சென்றுகொண்டிருந்தார். அப்போது முன் வரிசையில் சென்ற வைதீகரின் சீடன் திடீரென்று நின்றான்.

அவனது செயலைக் கண்ட வைதீகர், “எதற்காக நிற்கிறாய்? சோழ வீரர்கள் சுரங்கப் பாதையைக் கண்டறிந்து வருவதற்குள் நாம் இங்கிருந்து தப்பிச் செல்ல வேண்டும். விரைந்து செல்!” என அவசரப்படுத்தினார்.

“சுரங்கப் பாதை முடிவடையப் போகிறது!”

“ஆமாம். அதோ, சூரிய வெளிச்சமும் தென்படுகிறது!” என வைதீகருக்கு

முன் நின்றுகொண்டிருந்த சுங்க வீர னொருவன் தெரிவித்தான்.

அப்போது அங்கு குளம்படிச் சத்தம் எழ, "என்ன சத்தம் அது? சுரங்கத்திற் குள் யாரோ நுழைந்துவிட்டார்கள். எச்ச ரிக்கையுடன் இருங்கள்!" என அனைவ ருக்கும் கட்டளையிட்டார் வைதீகர்.

அப்போது வைதீகரின் சீடன், "சத் தம் குகைக்குள் எழவில்லை வைதீகரே... நம் தலைக்கு மேல் சத்தம் எழுந்து கொண்டிருக்கிறது. குகைக்கு வெளியே வீரர்கள் நின்றுகொண்டிருக்கிறார்கள்."

"என்ன கூறுகிறாய் நீ?

"அவர்கள் பேசிக்கொள்வது கொள்வது கூட எனக்கு கேட்கிறது. உங்களுக்கு அருகில் பாறையிலிருந்து சொட்டிக் கொண்டிருக்கும் நீரின் சத் தத்தினால் புரவிகளின் குளம்படிச் சத் தம் உங்களுக்குக் கேட்கவில்லை!" என

https://telegram.me/aedahamlibra

அவன் கூறிக்கொண்டிருந்த போதே அவனருகில் வந்து நின்றார் வைதீகர்.

அப்போது குகைக்கு வெளிப்புறத்தில் நின்றுகொண்டிருந்த புரவிகளின் குளம்படிச் சத்தம் மற்றும் வீரர்களின் பேச்சுக் குரல் சன்னமாக குகைக்குள் ஊடுருவி வைதீகருக்குத் தெளிவாகக் கேட்க, “நாம் சுரங்கத்தின் வழியே தப்பி வந்தது அவர்களுக்கு எப்படித் தெரியும்?” என பதற்றத்துடன் வினவினார்.

“அது அவர்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை வைதீகரே...”

“எதனால் இப்படி உறுதியுடன் கூறுகிறாய்.?”

“இங்கு சுரங்கத்தின் பாதை முடிவடைந்திருப்பதை அவர்கள் அறிந்திருந்தால் நிச்சயம் இந்தச் சுரங்கத்தின் மறுபுறம் வழியே உள்நுழைந்து இந்நேரம் நம்மைத் தீர்த்துக் கட்டியிருப்பார்கள். ஆனால், அவர்கள் அப்படி செய்

https://telegram.me/aedahamlibra

யவில்லை. போர் உக்கிரமாக நடந்து கொண்டிருக்கிறது. இந்த வேளையில் தாங்கள் தப்பித்த செய்தி சோழப் படைத் தலைவருக்கு தெரிய வாய்ப்பில்லை!"

"பிறகு, அவர்களுக்கு இங்கு என்ன வேலை?"

"கோட்டையின் சுரங்கப் பாதையை எங்கெல்லாம் அமைக்க வாய்ப்பிருக்கி றதோ அங்கெல்லாம் வீரர்களை அனுப்ப சோழப் படைத்தலைவர்களில் யாராவது உத்தரவை பிறப்பித்திருக்கலாம். ஒரு வேளை இங்கு குகை இருப்பதை சோழ வீரர்கள் ஊகித்திருந்தாலும் குகையின் பாதையை எப்படி திறப்பது என அறி யாமல் அவர்கள் நின்றுகொண்டிருக்க லாம்."

"போர் நடக்கும் கோட்டையிலி ருந்து நாம் தப்பி வந்துவிட்டோம். இங்கி ருந்து நாம் எப்படித் தப்பப் போகிறோம்? நாம் வெளியேறினால் அவர்கள் நம்மைப்

பிடித்து கொன்றுவிடுவார்களே...” எனப் பதறினார் வைதீகர்.

எந்தப் பதிலையும் கூறாமல் அமைதியாக நின்றான் வைதீகரின் சீடன். அப்போது அவர்களின் தலைக்கு மேலே புரவிகள் சில நடக்கும் சத்தம் மீண்டும் கேட்டன. அந்த சத்தங்களைக் கேட்ட வைதீகரின் சீடன், “குருவே... ஆபத்தான கால கட்டங்களில் தாங்கள் தான் யோசனையை தெரிவித்திருக்கிறீர்கள். பதற்றத்தை விட்டு நிதானமாக சிந்தியுங்கள். நிச்சயம் இங்கிருந்து தப்பிக்கும் மார்க்கம் உங்களுக்குத் தோன்றும். எங்கள் ஐவரையும் தாங்கள் தான் காத்தருள வேண்டும்” எனக் கூறியவன் இடையில் மறைத்து வைத்திருந்த குறுவாளினை வெளியே எடுத்து அருகில் நின்ற வைதீகரை நோக்கினான்.

வைதீகர் சிந்தித்தபடி நின்று கொண்டிருக்க அவருக்குப் பின்னால் சுங்க வீரர்கள் நால்வரும் கையில் பயங்

https://telegram.me/aedahamlibra

கர ஆயுதங்களுடன் நின்றுகொண்டி ருந்தார்கள். அதைப் பார்த்த வைதீக ரின் சீடன், "வைதீகரே... சிந்திக்க நேர மில்லை. உடனே முடிவெடுங்கள்!" என அவசரப்படுத்தினான்.

"நான் குகையின் வாயிலை திறக்கி றேன். ஐயவரும் சத்தமில்லாமல் வெளி யேறி வெளியே நின்றுகொண்டிருக்கும் சோழ வீரர்களைத் தாக்குங்கள். அவர் கள் எதிர்த்துத் தாக்கினால் அவர்களைக் கொன்று போடுங்கள். இல்லையேல் கட் டிப்போட்டுவிட்டு நாம் அவர்களின் புர விகளின் புரவியைப் பயன்படுத்திவிட்டு இங்கிருந்து தப்பிவிடுவோம்!"

"வைதீகரே... அவர்கள் அனைவ ரையும் கொன்றுபோட்டு விடுவோமே!"

"வேண்டாம். நீண்ட பயணம் மேற் கொள்ள வேண்டி இருக்கிறது. புறப்ப டுவதற்கு முன் அவசியமில்லாமல் நாம் கொலைசெய்ய வேண்டாம்!" எனக் கட் டளையிட்ட வைதீகர் தரையில் பதிந்து

கிடந்த கல் ஒன்றைக் காலால் அழுத்தி தலைக்கு மேலே இருந்த கல்லை வலப் புறமாக நகர்த்தினார். அப்போது குகை யின் வாயில் மெல்ல திறந்தது. சுங்க வீரர் களும், வைதீகரின் சீடனும் கையில் ஆயு தங்களுடன் உள்ளே நுழையும் சோழ வீரர்களைக் கொன்று போட ஆயத்தமாக நின்றுகொண்டிருந்தார்கள்.

அவர்கள் எதிர்பார்த்ததைப் போன்று எவரும் உள்ளே நுழைய வில்லை. பிறகு வைதீகர், "இந்த சுரங் கத்தின் பாதையை நம் தலைக்கு மேலே இருக்கும் இடத்திலிருந்து காண இய லாது. சத்தமில்லாமல் வெளியேறி அவர் களைத் தாக்கி அவர்களின் புரவிகளைக் கைப்பற்றுங்கள்!" எனக் கட்டளையிட் டார்.

வேளக்காரப் படைத்தலைவன் திவ்யனின் கட்டளைப்படி "கோட்டையி லிருந்து யாரும் தப்பிக்கக் கூடாது" என்ப தற்காக கோயில், மலை முகடு, அடர்ந்த

https://telegram.me/aedahamlibrary

வனம் என எங்கெல்லாம் கோட்டையின் சுரங்கப் பாதை முடிவடைய வாய்ப்பிருக்கிறதோ அங்கெல்லாம் சோழ வீரர்கள் காவலுக்கு நின்று கண்காணித்துக் கொண்டிருந்தார்கள். மகதக் கோட்டையின் சுரங்கப் பாதை முடிவடைந்திருந்த அந்த மலை முகட்டிலும் புரவி வீரர்கள் காவலுக்கு நின்று கண்காணித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது சுரங்கத்திலிருந்து சத்தமில்லாமல் வெளிப்பட்ட வைதீகரின் சீடன் மற்றும் சுங்க வீரர்கள் திடீரென்று புரவியில் நின்று கொண்டிருந்த வீரர்களைத் தாக்கினார்கள். எதிர்பாராத அந்தத் தாக்குதலினால் சோழ வீரர்கள் சுதாரிப்படைந்து எதிர் தாக்குதல் தொடுப்பதற்குள் புரவியின் மீது நின்றவர்களை கீழே தள்ளி அனைவரின் கழுத்தின் மீதும் கத்திகளை வைத்து சிறை பிடித்திருந்தான் வைதீகரின் சீடன்.

அருகில் நின்ற சுங்க வீரனிடம், "இவர்களின் கை மற்றும் கால்களை கட்டிப் போடு!" எனக் கட்டளையிட்டான்.

அடுத்த கணம் நீண்ட கயிறுகளைக் கொண்டு சோழ வீரர்களின் கை, கால்களை இறுகக் கட்டினார்கள். பிறகு, "வைதீகரே... வெளியே வாருங்கள்!" என வைதீகரை அழைத்தான் வைதீகரின் சீடன்.

அவனது குரல் கேட்டு சுரங்கத்திலிருந்து வெளியேறினார் வைதீகர் பாகவதர். அனைத்து சோழ வீரர்களும் கட்டப்பட்டுக் கிடந்ததைப் பார்த்ததும் வைதீகர், "நல்ல பணி... வா புறப்படுவோம்!" எனக் கூறி அருகில் நின்றுகொண்டிருந்த சோழப் புரவியின் மீது தாவினார். அவரைத் தொடர்ந்து அவரது சீடன், சுங்க வீரர்கள் நால்வரும் மற்ற புரவிகளில் ஏறினார்கள்.

https://telegram.me/aedahamlibra

அப்போது வைதீகரின் சீடன், “எங்கே வைதீகரே, செல்வது?” என வினவினான்.

“இன்றிருக்கும் நிலையில் நாம் எங்கு சென்றாலும் நமக்கு ஆபத்து தான். நமது உறைவிடத்திற்கு நாம் சென்று பதுங்கிவிடுவோம். நமக்கு அதுதான் பாதுகாப்பானது!” எனத் தெரிவித்தார்.

“தங்களது உத்தரவு!” என வைதீகரின் சீடன் கூறிக்கொண்டே கீழே கட்டுண்டு கிடந்த சோழ வீரர்களை நோக்கினான்.

பிறகு சுங்க வீரர்களிடம், “என்ன கட்டியிருக்கிறீர்கள். நாம் விலகியதும் இவர்களின் கயிறுகள் அவிழ்ந்துவிடும் போலிருக்கிறதே...” என வசை பாடிய சீடன் புரவியிலிருந்து கீழே குதித்தான்.

அப்போது வைதீகர், “நாம் தப்பித்த செய்தி நிச்சயம் சோழப் படைத்தலை

https://telegram.me/aedahamlibrary

வனுக்கு தெரிய வேண்டும். அவர்களை விட்டுவிடு!" எனக் கட்டளையிட்டார்.

"நாம் இந்தக் கோட்டையை விட்டு நெடுந்தூரம் சென்றபிறகு நாம் தப்பித்த செய்தி சோழப் படைத் தலைவனை எட்டட்டும்!" எனக் கூறியவன் குனிந்து அவிழ்ந்துபோகும்படி கட்டப்பட்டிருந்த கயிற்றினை இறுக்கியபடியே, "வைதீகர் வடக்கு நோக்கி தப்பித்து சென்றுகொண்டிருக்கிறார் என்று செங்குவீரரிடம் தெரிவித்துவிடு!" எனக் கூறிக்கொண்டே எழுந்தவன் கீழே கிடந்த வாளினை அவனிடம் தள்ளிவிட்டு புரவியில் தாவினான்.

அடுத்தகணம் வைதீகர், அவரது சீடன் மற்றும் சுங்க வீரர்கள் நால்வரும் புரவிகளில் தப்பித்துச் செல்லலானார்கள். பார்வையிலிருந்து அவர்கள் மறைந்ததும் வைதீகரின் சீடனால் அருகில் தள்ளிவிடப்பட்ட வாளினை எடுத்து கயிறுகளை அறுத்துக்கொண்ட சோழ வீரர்

கள் உடனே தகவலைத் தெரிவிக்க அங் கிருந்து செல்லலானார்கள்.

சில திங்கள்கள் தொடர் பயணத் திற்குப் பிறகு வைதீகர் பாகவதர் வச்சிர நாடு மற்றும் கன்வா நாட்டைக் கடந்து இமய மலையில் தஞ்சமடைந்திருந்தார். சோழ வீரர்கள் அங்கு தேடிக்கொண்டு வருவதற்கு எந்த வாய்ப்பும் இல்லாததால் நிம்மதியாக நாட்களை கழித்துக் கொண் டிருந்தார். அவருடன் வந்திருந்த சுங்க வீரர்கள் அவருடனே தங்கிவிட்டிருந்தார் கள். கோடைக் காலத்தைக் கழிக்க இமயத்தின் அடிவாரத்தில் உயர்ந்து காணப்பட்ட மலையில் அமைக்கப்பட்டி ருந்த தனது கூடாரத்தில் தொலைவில் தெரிந்த இமயத்தின் பனிச் சிகரத்திலி ருந்து வந்த குளிர் காற்றின் சுகந்தத்தை அனுபவித்தபடியே கயிற்றுக் கட்டிலில் அமர்ந்திருந்தார்.

சோழப் படைத் தலைவனிடமி ருந்து தப்பித்தாலும், தான் மேற்கொண்ட

அனைத்து முயற்சிகளும் தோற்கடிக்கப் பட்டு இரண்டாவது முறையாக தான் விரட்டப்பட்டதை எண்ணி பெரும் மன வருத்தத்தில் காணப்பட்டார் வைதீகர்.

அந்நேரத்தில் அங்கு வந்த வைதீ கரின் சீடன், "வைதீகரே..." என அவரது அமைதியை சிதைக்கும் வகையில் சற்று சத்தமாக அழைத்தான்.

கண்களைத் திறந்து எதிரில் நின்ற தனது சீடனை நன்றியுடன் நோக்கிய வைதீகர், "என்ன?" என வினவினார்.

"சோழப் படையின் புரவிப் படை செங்குவீரனின் தலைமையில் வச்சிர மற்றும் விதர்பா நாட்டைக் கடந்து தொடர்ந்து வடக்கு நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள்!"

"வச்சிர நாட்டு மன்னன் சோழப் படையை எதிர்க்கவில்லையா?"

"இல்லை!"

https://telegram.me/aedahamlibra

“விதர்பா மன்னன்?”

“அவரும் எதிர்க்கவில்லை. சோழப் படையை வரவேற்று வடக்கு நோக்கி வழியனுப்பி வைத்திருக்கிறார்!”

“முதுகெலும்பில்லாத கோழைகள்!”

“சோழப் படையை எதிர்த்த கலிங்கப் படை மொத்தமாக அழிக்கப் பட்டு விட்டது. சுங்கப் படையைப் பற்றி கூற வேண்டியதில்லை. சுங்கப் படைக்கு உதவிய கோசலம் மற்றும் வச்சிர நாட்டுப் படையையும் சோழர்கள் முறியடித்து விட்டதால் வடக்கே அவர்களின் பெயரைக் கூறவே அஞ்சுகிறார்கள்.”

“இப்போது சோழப் படையின் நிலை என்ன?”

“கடைசியாக எனக்குக் கிடைத்த தகவலின் படி சோழப் படை கன்வ நாட்டைக் கடந்துவிட்டார்கள். அவர்கள்

எப்போது வேண்டுமானாலும் இமயம லையை அடைந்துவிடலாம்!”

“சோழப் படையினால் எப்படி இவ் வளவு விரைவில் பயணிக்க முடிகிறது?”

“சோழப் படைக்குத் தலைமை தாங்கிக்கொண்டு வருவது செங்குவீரர் என்பதை அறிந்தும் தாங்கள் இந்தக் கேள்வியை என்னிடம் வினவலாமா?” என வினவினான் வைதீகரின் சீடன்.

எந்தப் பதிலையும் கூறாமல் தொலைவில் தெரிந்த பனிச் சிக ரத்தையே நோக்கிக் கொண்டிருந்தார் வைதீகர். பிறகு, “பலர் சீடனாக என்னி டம் பணிபுரிந்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் அனைவரையும் விடவும் தலைச்சிறந்தவன் நீதான். புகாரில் நீ வேலைக்கு சேர்ந்ததிலிருந்து உனது பற் றினைப் பார்த்து நான் பலமுறை வியந் திருக்கிறேன். பலமுறை எனது உயிரை நீ காத்திருக்கிறாய். வெண்ணிப் போரில் திக்கற்று நின்ற காலத்தில் நீதான் உத

https://telegram.me/aedahamlibra

வினாய். அதே போன்று இன்று மகதப் போரிலும் உதவியிருக்கிறாய். உனக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன் என்று எனக்குத் தெரியவில்லை. போர்க் களத்தில் நான் இருந்திருந்தால் செங் குவீரன் நிச்சயம் என்னைக் கொன்றி ருப்பான். போர்க் களத்தில் சுங்கனைக் கைவிட்டு தப்பி வந்துவிட்ட என்னால் மீண்டும் அவனிடம் சென்று உதவி கேட்க முடியாது. வாழ்க்கையே என் னைக் கைவிட்டதைப் போன்ற நிலை. நான் வணங்கிக் கொண்டிருக்கும் உருத் திரனும், விஷ்ணுவும் என்னைக் கைவிட் டுவிட்டார்கள்" என வருத்தத்துடன் தெரிவிக்கலானார்.

"வைதீகரே... எனக்கு விதிக்கப் பட்ட பணியை நான் திறமையுடன் மன நிம்மதியுடன் செய்துகொண்டிருக்கி றேன். அதைத் தாங்கள் இவ்வளவு பெரி தாக எடுத்துக்கொள்ள வேண்டிய அவசி யமில்லை!"

"உனக்கு விதிக்கப்பட்ட பணியா?"

"ஆம்!"

"யார், இருங்கோவேளைக் கூறுகிறாயா?"

"இல்லை வைதீகரே..."

"பிறகு?"

"சோழப் படைத்தலைவர் விறல்வேல்!"

"விறல்வேல்" என்ற பெயரைக் கேட்டதுதான் தாமதம் அமர்ந்திருந்த கட்டிலிலிருந்து பெரும் அதிர்ச்சியுடன் எழுந்து நின்றார் வைதீகர்.

எழுந்து நின்றவர் பேச முயன்றார். ஆனால், அவரது வாயிலிருந்து ஒரு வார்த்தை கூட வரவில்லை. பிறகு தட்டுத் தடுமாறி ஏதோ கூற முயன்றார். அதற்குள் முந்திக்கொண்ட அவரது சீடன், "சோழப் படைத் தலைவர் கட்டளையிட்டுத்தான் நான் தங்களிடம் சீடனாக சேர்ந்தேன்.

உங்களிடம் பணிக்குச் சேர்வதற்கு இருங் கோவேளின் பெயரை பயன்படுத்திக் கொண்டேன். அது தவறா?" எனச் சிரித் தபடி வினவினான்.

அதிர்ச்சியில் உறைந்துபோய் நின் றவர், "துரோகி" என தனது சீடனை அழைத்தார்.

அப்போது அவரது சீடன், "உங் களை விடவுமா நான் துரோகத்தை இழைத்திருக்கிறேன். தங்களை நம்பிய தங்களின் மகனது நண்பன் காளனைத் தாங்கள் துரோகத்தினால் ஏமாற்றினீர் கள். பிறகு இருங்கோவேள், சுங்க மன் னன் புஷ்யமித்திர சுங்கன் என அனை வரையும் தாங்கள் ஏமாற்றியிருக்கிறீர்கள். அதை விடவுமா நான் செய்தது பெரும் துரோகம்!" என கூறிக்கொண்டிருந்த போதே வைதீகர் பாகவதர் கையில் குறு வாள் ஒன்றை எடுத்தார்.

அதைக் கண்டு சிரித்த வைதீகரின் சீடன், "சோழர் ஒற்றர் படையின் உபதள

பதியை தங்களின் வாளினால் கொலை செய்ய முடியுமா என்று ஒருமுறை சிந்தித்துப் பார்த்து தங்களின் கையிலிருக்கும் வாளினை உயர்த்துவது நலம்?" எனக் கூறிக்கொண்டு அவரது விழிகளையே நோக்கினான்.

"வீரர்களே..." என கூடாரத்திற்கு வெளியே நின்ற சுங்க வீரர்களை அழைத்தார் வைதீகர்.

எந்த அரவமும் அங்கு எழவில்லை.

"வீரர்களே, எங்கே போய்த் தொலைந்தீர்கள்?" எனச் சற்றே பெரும் சத்தத்துடன் அழைத்தார் வைதீகர்.

"அவர்களிடமிருந்து எந்த சத்தமும் வராத போதே தாங்கள் உண்மை நிலைமையை யூகித்துவிட வேண்டாமா"

"அவர்களை என்ன செய்தாய்?" பெரும் ஆத்திரத்துடன் வினவினார் வைதீகர்.

https://telegram.me/aedahamlibra

“நீங்கள் வணங்கும் உருத்திரன் மேற்கொள்ளும் பணியை இன்று தற்காலிகமாக நான் கையில் எடுத்துக்கொண்டேன்!” சிரித்தபடியே கூறினான் ஒற்றர் படைத் தளபதி.

குழப்பத்துடன் நின்றுகொண்டிருந்தார் வைதீகர். “சோழப் படையின் ஒற்றனாக இருந்தும் உங்களை நான் எதற்காக இத்தனை வருடங்களாக கொலை செய்யாமல் உங்களுக்கு பணிவிடை செய்து கொண்டிருந்தேன் என்ற சந்தேகம் தோன்றுகிறதா?” என வினவினான்.

வைதீகர் எந்தப் பதிலையும் கூறாமல் அமைதியாக நின்றுகொண்டிருந்தார்.

“சோழப் படைத்தலைவர் செங்குவீரரின் கரத்தினால்தான் நீங்கள் மரணிக்கவேண்டும் என்பது உங்களுக்கு விதிக்கப்பட்ட விதி. ஆதலால் தான் நான் உங்களைக் கொலை செய்ய பல சந்தர்ப்பங்கள் கிடைத்தும் அந்த எண்ணத்

தைக் கைவிட்டுவிட்டேன்" என வைதீக ரின் சீடன் கூறிக்கொண்டிருந்த போதே அவர்களின் கூடாரத்தை நோக்கி புரவிக ளின் குளம்படிச் சத்தம் நெருங்கிக் கேட்க ஆரம்பித்தது. அதைக் கேட்ட ஒற்றர் படையின் தளபதி, "நான் துணிந்து நான் தான் சோழ ஒற்றன் என்பதைக் கூறும் போதே தாங்கள் புரிந்துகொண்டிருப்பீர் கள் என்று நம்புகிறேன். படைத்தலைவர் வந்துவிட்டார். உங்களுக்கு ஒரு வாய்ப் பினை அளிக்கிறேன். இங்கிருந்து முடிந் தால் தப்பியுங்கள். என்னால் சிறைப்ப டுத்தப்பட்ட உங்களை எனது படைத்த லைவர் கொல்வது அவரது வீரத்திற்கு இழுக்கு. உங்களை அவர் விரட்டி விரட் டிக் கொலை செய்ய வேண்டும்" எனக் கூறியவன் கூடாரத்தின் வாயிலை விட்டு விலகி, "உடனே ஓடிச் சென்றுவிடு!" எனக் கட்டளையிட்டான்.

தனது முதன்மை சீடனே தனக்கு பெரும் துரோகத்தை செய்து சோழப் படைக்கு தனது இருப்பிடத்தை காட்

https://telegram.me/aedahamlibra

டிக் கொடுப்பான் என்பதை கனவி லும் நினைத்துப் பார்த்திராத வைதீகர் அவசர அவசரமாக அங்கிருந்து ஓடலா னார். அப்போது சோழப் படைத்தலை வன் செங்குவீரன் தனது உபதலைவர் கள் வில்லவன் மற்றும் திருக்கண்ணன் சூழ அவரை நோக்கி வந்துகொண்டிருந் தான்.

உடனே சுதாரிப்படைந்த வைதீகர் பாகவதர் மலையின் அடர்ந்த காட்டை நோக்கி தப்பிக்க ஓடினார். அவர் தொலைவில் ஓடுவதைக் கண்டதும் சோழப் படைத் தலைவர்களும், சோழ வீரர்களும் பின்தொடரலானார்கள்.

தப்பி ஓடிய வைதீகர் திடீ ரென்று பார்வையிலிருந்து மறைந்திருந் தார். அவர் ஓடி வந்த இடத்தில் மலை முகடு ஒன்று மட்டுமே எஞ்சி இருந்தது. மலை முகட்டிற்கு அப்புறமாக ஆழமான பள்ளத்தாக்கு ஒன்று காணப்பட்டது.

செங்குவீரன், திருக்கண்ணன், வில்லவன் ஆகியோர் புரவியில் அமர்ந் திருக்க சோழர் ஒற்றர் படைத் தளபதி நின்றுகொண்டிருந்தான். அவனி டம், "கார்கோடா... வைதீகர் எங்கே தப் பிச் சென்றிருப்பான்?" என வினவினான் செங்குவீரன்.

"இந்த மலை முகட்டில் இயற்கை யாகவே பல குகைகள் காணப்படுகின் றன" என மலைகளில் காணப்பட்ட புதர் களுக்கு பின்புறமாக காணப்படும் குகை களை சுட்டிக் காட்டிக் கட்டிக்கொண் டிருந்த நேரத்தில் தொலைவிலிருந்து, "ஹர ஹர மகா தேவா..." என வாழ்த்து முழக்கம் எழுந்து அடங்கியது.

அருகில் நின்றுகொண்டிருந்த கார் கோடனை நோக்கினான் செங்குவீரன். "தலைவரே... இங்கு வைதீகர் மதத்தின் சந்நியாசிகள் பலர் தவமிருந்து வாழ் கிறார்கள். அவர்கள் சேர்ந்து வழிபாடு நடத்தும்போது இப்படித்தான் கூவிக்

https://telegram.me/aedahamlibra

கொள்வார்கள்!" என அவன் கூற அடுத்த கணம் சத்தம் எழுந்த திசையை நோக்கி புரவியைத் தட்டிவிட்டான் செங்குவீரன். அவனைத் தொடர்ந்து திருக்கண்ணன் மற்றும் வில்லவன் ஆகியோரும் செல்ல லானார்கள்.

காவித் துணியை உடுத்தி, கழுத் தில் ருத்ராட்ச மாலையை அணிந்து கொண்டு, சுடுகாட்டு சாம்பலை உடலி லும், நெற்றியிலும் பூசியிருந்த அகோர முனிவர்கள் பலர் மலைக்குகையில் ஒன்று சேர்ந்து, "ஹர... ஹர... மகா தேவா..." என முழக்கமிட்டுக் கொண்டி ருந்தார்கள்.

கூட்டத்தை நோக்கினான் செங்கு வீரன். அங்கே சந்நியாசி முனிவர்கள் நூற் றுக்கணக்கானவர்கள் விழிகளை மூடிக் கொண்டு ருத்ரதேவனை வணங்கிக் கொண்டிருந்தார்கள். விழிகளை மூடி களை மூடிக்கொண்டிருந்தாலும் அவ் வப்போது அனைவரும் ஒன்றுசேர்ந்து,

https://telegram.me/aedahamlibra

"ஹர... ஹர... மகாதேவா...." என முழக்கமிடலானார்கள்.

அனைவரும் விழிகளை மூடி ருத்ர தேவனை வழிபட்டுக் கொண்டிருக்க இரண்டு விழிகள் மட்டும் கடும் சினத்துடன் தன்னையே நோக்கிக்கொண்டிருப்பதை உணர்ந்தான் செங்குவீரன். கூட்டத்தை விழிகளால் ஊடுருவி ஒவ்வொருவரையும் சோதனை செய்தான் செங்குவீரன். கூட்டத்தில் காணப்பட்ட அகோர சந்நியாசிகள் பலர் தங்களின் கடுமையான விரதத்தினாலும், தவத்தினாலும் உடல் இளைத்து எலும்புகள் தெரியும்படி இருக்க மாமிசத்தையும், நெய்யையும், பலவித அறுசுவை உணவுகளையும் உண்டு கொழுத்த தனது உடலுடன் கூட்டத்தோடு கூட்டமாக அமர்ந்திருந்தார் வைதீகர்.

அருகில் நின்ற வில்லவனிடம் சுட்டிக் காட்டினான் செங்குவீரன். உடனே புரவியிலிருந்து இறங்கிய வில்லவன்

வைதீகரை நோக்கி கூட்டத்தை விலக்கி விட்டுச் செல்லலானான். அகோர முனிவர்கள் அனைவரும் தவத்தில் ஆழ்ந்திருந்ததால் வில்லவனை தடுக்கவில்லை. வில்லவன் தன்னை நோக்கி வந்ததைக் கண்ட வைதீகர் பாகவதர் அச்சத்தில் எழுந்து மலைக் குகையின் உட்புறமாகச் செல்லலானார்.

வில்லவன் வைதீகரைப் பின்தொடர்ந்து சென்றுகொண்டிருக்க செங்குவீரன் அந்த மலைக் குகையைச் சுற்றி மலையின் மறுபுறத்தை நோக்கி புரவியை செலுத்தினான். வைதீகர் சிறு குகையின் வழியே தப்பித்துச் சென்றுகொண்டிருந்தார். அந்தக் குகைகள் அனைத்தும் அவருக்கு நன்கு பழக்கப்பட்டதால் எந்த வித தடுமாற்றமும் இன்றி விரைந்து சென்றுகொண்டிருந்தார். ஆனால், வில்லவன் குகைகளில் பயணித்து எந்த பழக்கமும் இல்லாததால் குகையின் கூர்மையான பாறைக் கற்கள் உடலில் கிழிக்க குருதி வழிந்தபடி வில்லவன்

தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருந் தான். ஒரு நாழிகைப் பொழுதிற்கும் மேல் குகையில் பயணித்த வைதீகர் குகை யின் மறுபுறத்தை அடைந்து வில்ல வனை நோக்கினார். வில்லவன் கையில் வாளுடன் வைதீகரை நோக்கி ஆவே சத்துடன் தடுமாறியபடி வெகு தொலை வில் வந்துகொண்டிருந்தான். அவர் செல்ல வேண்டிய பாதையை நோக்கி னார். அது நேர் பாதையாக அல்லாமல் வளைந்து வளைந்து சென்றுகொண்டி ருந்தது. பக்கவாட்டில் பெரும் பள்ளத் தாக்கு விழுந்து பயமுறுத்திக்கொண்டி ருந்தது. அவர் மேற்கொண்டு பயணித் தால் குகையிலிருந்து வெளிவரும் வில் லவன் நிச்சயம் இடையிலிருக்கும் குறு வாளினை எறிந்து கொன்றுவிடுவான் என்பதை உணர்ந்த வைதீகர் குகையின் மறுபுறத்தில் நின்றுகொண்டு ஒரு கணம் சிந்தித்தார். பிறகு சிறிதும் தாமதிக்காமல் இடையிலிருந்த குறுவாளினை உருவி னார்.

https://telegram.me/aedahamlibra

வைதீகர் பாகவதர் குகையை விட்டு வெளியேறி தப்பித்துச் செல் லாமல் வாயிலில் வில்லவனின் மீது குறுவாளினைப் பாய்ச்சுவதற்கு தயா ராக கையை உயர்த்தியபடி நிற்பதை யும் குகை அமைந்திருந்த மலையின் முகட்டை சுற்றிக்கொண்டு வந்த செங் குவீரன் மற்றொரு மலையின் உச்சியிலி ருந்து நோக்கினான்.

செங்குவீரன் மலையின் உச்சியில் நின்றுகொண்டிருந்ததை வைதீகர் கண் டிருந்தால் அவர் வில்லவனைக் கொலை செய்யும் எண்ணத்தைக் கைவிட்டுவிட்டு ஓடிச் சென்றிருப்பார். அந்தக் குகை யின் பக்கவாட்டில் சற்றே உயர்ந்த மலை முகட்டின் மீது நின்றுகொண்டிருந்த செங் குவீரனை வைதீகரால் காண இயல வில்லை. ஆதலால் தன்னை விரட்டி வரும் வில்லவனைக் கொன்றுபோட்டு விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுவிட லாம் என எண்ணி ஓங்கிய குறுவாளுடன் ஆத்திரத்துடன் நின்றுகொண்டிருந்தார்.

https://telegram.me/aedahamlibra

தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் வில்லவனின் உயிருக்கு ஆபத்து என்பதை உணர்ந்த செங்குவீரன் கையை உயர்த்தி, “திருக்கண்ணா....” என அழைத்தான்.

“வைதீகர் பாகவதர் வில்லவனின் மீது குறுவாளினைப் பாயச்சுவதற்குள் அவர் மீது வேலினை எறிந்து கொன்றுவிடுவதற்கு செங்குவீரன் வேலினைக் கேட்கிறான்” என்பதை உணர்ந்த திருக்கண்ணன் அருகில் நின்ற வீரர்களை நோக்கினான். வீரர்கள் அனைவரும் கையில் வாளுடன்தான் நின்றுகொண்டிருந்தார்கள். சிலர் புலிக்கொடி கட்டப்பட்ட நீண்ட ஈட்டியுடன் நின்றுகொண்டிருந்தார்கள்

கையை உயர்த்திய செங்குவீரன், “திருக்கண்ணா...” என மீண்டும் வைதீகரைப் பார்த்தபடியே அழைத்தான்.

அருகில் நின்ற வீரனின் கையில் பறந்துகொண்டிருந்த புலிக் கொடி கட்

டப்பட்ட ஈட்டியை வாங்கி செங்குவீரனை நோக்கி எறிந்தான் திருக்கண்ணன்.

திருக்கண்ணன் எறிந்த ஈட்டியைப் பிடித்துக்கொண்டு மலை முகட்டிலிருந்து குகையின் வாயிலில் கையில் குறுவாளு டன் நின்றுகொண்டிருந்த வைதீகர் பாக வதரை நோக்கிய செங்குவீரன் கண நேர மும் தாமதிக்கவில்லை. கையிலிருந்த ஈட்டியை வைதீகரை நோக்கி எறிந் தான் செங்குவீரன். புலிக்கொடி முனை யில் கட்டப்பட்டிருக்க காற்றைக் கிழித் துக்கொண்டு அதி வேகத்தில் பாய்ந்து சென்ற ஈட்டியானது குகையை நோக்கி நின்றுகொண்டிருந்த வைதீகரின் முது கில் பாய்ந்து மார்பு வழியாக வெளிப்பட் டது. தனது முதுகு வழியாகப் பாய்ந்து மார்பு வழியாக வெளிப்பட்டிருந்த ஈட்டி யைப் பார்த்த வைதீகர் திரும்பி ஈட்டி வந்த திசையை நோக்கினார். அங்கே மலை முகடுதான் தெரிந்தது. உயரத்தில் நின்ற செங்குவீரனை வைதீகரால் காண இயலவில்லை. அதே நேரம் குகையை

விட்டு வெளியே வந்த வில்லவன் கையி லிருந்த வாளினால் ஒரே வெட்டில் வைதீ கரின் தலையைக் கொய்தான்.

காலம் முழுக்க துரோகத்திலேயே வாழ்ந்துகொண்டிருந்த வைதீகர் பாகவ தர் அதே துரோகத்தினாலேயே தனது தலையை இழந்து இமயத்தின் மலை முகட்டில் குப்புற விழுந்தார். குப்புற விழுந்த அவரது முதுகில் பாய்ந்திருந்த ஈட்டியின் முனையில் கட்டப்பட்டிருந்த சோழப் புலிக்கொடி கம்பீரமாக இமயம லையில் பறந்துகொண்டிருந்தது.

**அடிக்குறிப்பு:**

பகைவிலக் கியதுஇப் பயங்கெழு மலை என,

இமையவர் உறையும் சிமையப் பிடர்த்தலைக்

கொடுவரி ஏற்றிக் கொள்கையின் பெயர்வோற்கு சிலம்பு 5: (96-98)

செண்டு கொண்டுகரி காலனொரு காலி னிமயச்

சிமய மால்வரை திரித்தருளி மீள வதனைப்

பண்டு நின்றபடி நிற்கவிது வென்று முதுகிற்

பாய்பு லிக்குறிபொ றித்தது மறித்த பொழுதே. (கலிங்கத்துப் பரணி: ராசபரம் பரியம் - தாழிசை 178)

சோழப் பேரரசன் கரிகாற் பெரு வளத்தான் இமயத்தில் புலிக்கொடி நாட் டியதை சிலப்பதிகாரமும்கலிங்கத்துப் , பரணியும் தெளிவாகக் குறிப்பிடுகிறது. தமிழ் இலக்கியம் தவிர்த்த கரிகாலனின் வடநாட்டுப் படையெடுப்பு பற்றி தேடிய போது தற்பொழுது சிக்கிம் மாநிலத்திற்கு கிழக்கே திபெத்தின் எல்லையில் இருக் கும் இமய மலையின் தொடருக்கு சோலா மலைத் தொடர் Mountain chola range) Latitudes 27” 5’ N to 20” 9’ N and (Longitudes 87” 59’ E to 88” 56’ Eஎன் றும் அதைக் கடந்து காணப்படும் கண

வாய்க்கு சோலா கணவாய் (chola pass) என்றும் பெயர் பெற்றிருக்கின்றன. இவற்றின் அருகில் இருக்கும் ஒரு மலைச் சிகரத்திற்கு புலி மலை (Tiger hill) என்றும் பெயர். கரிகாலரின் வடநாட்டுப் படையெடுப்பின்போது சோழப் புலிச் சின்னம் பொறிக்கப்பட்ட இடமாக இது இருக்கலாம் என்று பல ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

சோல' எனும் சொல் திபெத்திய' மொழிச் சொற்களுக்குப் பொருந்தாத காரணத்தினால் கரிகாலரின் படையெடுப்பினாலேயே அப்பெயர் அங்கு தோன்றியிருக்கலாம் என்று 'பல்லவர்க்கு முற்பட்ட தமிழகம்' எனும் புத்தகத்தில் ராசமாணிக்கனார் 9வது பக்கத்தில் குறிப்பி .டுகிறார்

சர்ரிச்சர்ட் ராபர்ட் எனும் புவி . யியல் ஆராய்ச்சியாளர் தன்னுடைய புவியியல் ஆராய்ச்சிக் கட்டுரையில் 'சோல' எனும் சொல் உச்சரிப்புக் கோளாறாக இருக்கலாம் என்று கூறுகிறார். TCHOஎனும் சொல்லே சோல என்று சிதைந்திருக்கும் என்று குறிப்பிட்டிருக்கி

றார் .திபெத்திய மொழியில் TCHO என்றால் தண்ணீர் என்று பொருள். தண்ணீர் எனும் பொருள் படும்படியான இந்த TCHO எனும் சொல் தான் சொல என மாறியிருக்கும் என சர். ரிச்சர்ட் ராபர்ட்டின் கருத்தும் ஏற்றுகொளும்படி .இல்லை

"“…Tso is a common termination in Tibetan names, meaning water, and is sometimes pronounced tcho; in fact, Europeans cannot tell whether natives are saying tso or tcho. It merely means a lake. Nimyetso is Nimye Lake. And I ought to take this opportunity of mentioning that the termination la means a pass, so that Chola, or Cho-la merely means lake-pass, and Yakla, or Yak-la, is nothing more than the pass of the Yak, the famous Tibetan cow…. (p. 334)”

Reference: Proceedings of the Royal Geographical Society and monthly record of Geography, Volume 3, 1881. Chapter: Lake Region of Sikkim,

on the Frontier of Tibet, by Sir Richard Temple(p. 334). By Royal Geographical Society (Great Britain)..

தமிழகத்திலிருந்து அல்லாமல் வட நாட்டிலிருந்து கள ஆய்வு மேற்கொண்டால் மட்டுமே தமிழ் இலக்கியங்கள் தவிர்த்து கரிகாலரின் வடநாட்டுப் படையெடுப்பு பற்றி நிரூபிப்பதற்கு வேண்டிய ஆதாரங்கள் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது.

https://telegram.me/aedahamlibra

# 54.
# வரவேற்பு

இமயத்தில் புலிக் கொடியை நாட்டிவிட்டு வெற்றிகரமாக மகதத்தை நோக்கித் திரும்பிய செங்குவீரனை கரிகாலர், திவ்யன், பரதவன் குமரன், வர்த்தினி ஆகியோர் வரவேற்று மகத்தின் பாடலிக்கு அழைத்துச் சென்றார்கள். எதிர்த்த படைகள் அனைத்தையும் தோற்கடித்துவிட்டு வெற்றியுடன் திகழ்ந்த சோழப் பேரரசை மகதத்தின் சுங்க மன்னன் புஷ்யமித்திர சுங்கன், வச்சிர நாட்டு மன்னன், கோசலத்தின் அரசர் ஆகியோர் மகதத்தின் பாடலியில் தங்கச் செய்து உபசரிக்கலானார்கள்.

1சோழப் பேரரசர் கரிகாலரை வணங்கிய கடலரசனை அரணாகக் கொண்ட வச்சிர நாட்டு வேந்தன் தான்

https://telegram.me/aedahamlibrary

சேர்த்துவைத்திருந்த பெருஞ்செல்வத்
தையும், முத்துப் பந்தரையும் திறைப்
பொருளாகச் செலுத்தி தனது பணி
வினைத் தெரிவித்தான். திறமையான
காலாட்படை வீரர்களைக் கொண்ட மக
தத்தின் சுங்க அரசனான புஷ்யமித்திர
சுங்கன் சோழப் படையை எதிர்த்துத்
தோற்றதால் திறைப் பொருளாக பட்டி
மண்டபத்தையும், பெரும் செல்வத்தை
யும் அளித்தான்.

மகதத்தின் சுங்கப் பட்டத்து இளவ
ரசன் சுங்கமித்திரனை திவ்யன் போரில்
கொன்றுவிட்டதால் அவனது தம்பி அக்
னிமித்திரன் பட்டத்து இளவரசனாகப் பட்
டமேற்றுக் கொண்ட பிறகு பெரும் செல்
வக் குவியல்களுடன் சோழப் பேரரசர்
கரிகாலர், படைத் தலைவன் செங்குவீ
ரன், வேளக்காரப் படைத் தலைவன் திவ்
யன், உபதலைவர்கள் வில்லவன், திருக்
கண்ணன், பரதவன் குமரன், கலிங்க
இளவரசி வர்த்தினி மற்றும் சோழப் படை

வீரர்கள் அனைவரும் அவந்தியை நோக்கிப் புறப்பட ஆயத்தமானார்கள்.

அப்போது கரிகாலரிடம் புஷ்யமித்திர சுங்கன், "பேரரசே..." என்று தயக்கத்துடன் அழைத்தான்.

புஷ்யமித்திர சுங்கனை நோக்கினார் கரிகாலர்.

"திறைப்பொருளாக நான் அளித்த பட்டி மண்டபம், செல்வம் ஆகியவற்றைப் போன்று நான் கொடுக்கவிருப்பதையும் எனது அன்புப் பரிசாக தாங்கள் மறுக்காமல் ஏற்றுக்கொள்ள வேண்டும்" என வேண்டுகோள் விடுத்தான்.

அவனது வேண்டுகோளைக் கேட்டதும் கரிகாலர், "என்ன பரிசு? புஷ்யமித்திரரே?" என வினவினார்.

"சற்றுப் பொறுங்கள்!" எனக் கூறிய புஷ்யமித்திர சுங்கன் அங்கிருந்து செல்லலானான். சிறிது நேரம் கழித்துத் திரும்பி வந்தவன் புரோகிதர்கள் பலரை தன்னு

டன் அழைத்து வந்திருந்தான். அவர்களுடன் புஷ்யமித்திர சுங்கனின் மகளும், சுங்கப்பேரரசின் பட்டத்து இளவரசியுமான சங்கமித்திரையும் நின்றுகொண்டிருந்தாள்.

“பேரரசே... நாவலந்தீவின் பேரரசர் தாங்கள் நிச்சயம் இந்த புரோகிதர்களைக் கொண்டு யாகம் செய்து உங்களின் வெற்றியை முழுமையடையச் செய்ய வேண்டும். அயோத்தியின் அரசர் ஸ்ரீராமர், பாண்டுவின் புதல்வன் யுதிஷ்டிரன் செய்த ராஜசூய யாகத்தை நிறைவேற்றி தேவர்கள் வரிசையில் அழியாத புகழைப் பெற்றதைப் போன்று தாங்களும் பெற வேண்டும்!” என வேண்டினான்.

அவனது கோரிக்கையைக் கேட்ட கரிகாலர் அருகில் நின்ற தனது படைத் தலைவர்களை நோக்கினார். பிறகு சிரிக்கவும் செய்தார். அதே சிரிப்புடன், “இந்த யாகம், பலி ஆகியவற்றில் எமக்கு நம்பிக்கை இல்லாவிட்டாலும் தங்களின்

வேண்டுகோளை யாம் ஏற்றுக் கொள் கிறோம். விரைவில் இராசசூய யாகத் திற்கான ஏற்பாடுகளை செய்து உங்க ளுக்கும் சொல்லி அனுப்புகிறேன். வந்து சேருங்கள்!" எனக் கூறிய கரிகாலர் அங் கிருந்து கிளம்பினார்.

அப்போது புஷ்யமித்திர சுங்கன், "பேரரசே..." என மீண்டும் அழைத்தான்.

திரும்பிய கரிகாலர் புஷ்யமித்திர சுங்கனை நோக்கினார்.

"எனது இன்னொரு வேண்டுகோ ளையும் தாங்கள் மறுக்காமல் ஏற்றுக் கொள்ள வேண்டும்!"

"நான் ஏற்றுக்கொள்வதும், ஏற்றுக் கொள்ளாததும் தங்களின் வேண்டுகோ ளைப் பொறுத்தது புஷ்யமித்திரரே..."

புரோகிதர்களுடன் நின்றுகொண் டிருந்த தனது மகள் சங்கமித்திரையை அழைத்து வந்த புஷ்யமித்திர சுங்கன், "பேரரசர்... எனது மகள் சங்கமித்திரை

யையும் தங்களின் ராணிகளுள் ஒருவராக ஏற்றுக்கொள்ள வேண்டும்!" எனப் பணிந்தான்.

புஷ்யமித்திர சுங்கனின் விசித்திரமான வேண்டுகோளைக் கேட்ட கரிகாலர் எதிரில் நின்ற சங்கமித்திரையை நோக்கினார். அவள் தனது முகத்தில் எந்த உணர்ச்சிகளையும் காட்டிக் கொள்ளாமல் தரையை நோக்கிக்கொண்டிருந்தாள் பிறகு சற்றுத் தொலைவில் நின்றுகொண்டிருந்த வில்லவனை நோக்கியவள் மற்றவர்கள் பார்க்குமுன் மீண்டும் தலையைத் தாழ்த்திக் கொண்டாள்.

"எனது மனைவிக்குப் பிறகு வேறு யாரையும் மணந்துகொள்ள மாட்டேன் என்று எனது மனைவிக்கு நான் வாக்களித்திருக்கிறேன் புஷ்யமித்திரரே... உங்களின் இந்த வேண்டுகோளினை என்னால் ஏற்றுகொள்ள முடியாது!" எனத் தெரிவித்தார் கரிகாலர்.

https://telegram.me/aedahamlibra

“பேரரசர் தயவுகொள்ள வேண்டும்!” எனப் பணிந்தான் புஷ்யமித்திர சுங்கன்.

கரிகாலர் எதிரில் நின்ற புஷ்யமித்திர சுங்கன், அவரது மகள் சங்கமித்திரையையும் பிறகு தனக்கருகில் நின்றுகொண்டிருந்த படைத் தலைவர்களையும் நோக்கினார்.

அப்போதும் புஷ்யமித்திர சுங்கன், “பேரரசர் நிச்சயம் எனது மகளையும் உங்களுடன் நிச்சயம் அழைத்துச் செல்ல வேண்டும்!” எனப் பணிவுடன் தனது வேண்டுகோளை சற்றே அழுத்தமாக முன்வைத்தான்.

“வில்லவரே...” என அழைத்தார் கரிகாலர்.

கரிகாலருக்குத் தலையைத் தாழ்த்திய வில்லவன், “கட்டளையிடுங்கள் பேரரசே...” எனப் பணிந்து வேண்டினான்.

“புஷ்யமித்திர சுங்கரின் கட்ட ளையை நிறைவேற்றுங்கள்!” எனக் கட்ட ளையிட்டார்.

“எந்தக் கட்டளையை பேரரசே?”

“அவரது மகள் சங்கமித்திரையை நம்முடன் அழைத்துச் செல்ல வேண் டும் என்று பணித்தார் அல்லவா, அவரது ஆசையை நிறைவேற்றி அவரது புதல்வி சங்கமித்திரையின் எண்ணத் தையும் ஈடேற்றுங்கள்!” எனக் கட்டளை யிட்ட கரிகாலர் நடக்கலானார்.

கரிகாலரின் கட்டளையைக் கேட்ட வில்லவன், புஷ்யமித்திர சுங்கன் ஆகி யோர் அதிர்ச்சியில் நிற்க, “வில்லவரே... தாமதம் வேண்டாம். கரிகாலரின் கட்ட ளையை நிறைவேற்றுங்கள்!” எனக் கட்ட ளையிட்டான் செங்குவீரன்.

உடனே வில்லவன் சங்கமித்திரை யின் கையைப் பிடிக்க சங்கமித்திரை பெரும் மகிழ்ச்சியுடன் வில்லவனுடன்

நடக்கலானாள். வில்லவன் சங்கமித்தி ரையின் கையைப் பிடித்ததும் அவளது முகத்தில் தோன்றிய மகிழ்ச்சியைக் கண்ட புஷ்யமித்திர சுங்கன் மகிழவே செய்தான்.

சோழப் பேரரசர் கரிகாலர், சோழப் படைத் தலைவர்கள் செங்குவீரன், திவ் யன், திருக்கண்ணன், பரதவன் குமரன் - வர்த்தினி, வில்லவன் - சங்கமித்திரை, சோழப் படை வீரர்கள் அனைவரும் அவந்தியை நோக்கிப் புறப்பட்டார்கள்.

போருக்கு முன் கரிகாலர் அவந் திக்கு வருகை தந்தபோது உரிய மரி யாதையை அளிக்க இயலாததால் பெரி தும் வருத்தப்பட்ட சதகர்ணி இந்த முறை கரிகாலரை ராஜ மரியாதையுடன் வரவேற்க அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொண்டிருந்தான். சுங்கர்களிடமி ருந்து சாதவாகன நாட்டைக் காத்ததால் சோழப் பேரரசரை அவந்தி மக்களும் பெரும் அன்புடன் வரவேற்க ஆயத்தமா

கிக் கொண்டிருந்தார்கள். திருவிழாவி னைப் போன்றே ஒவ்வொரு வீட்டு வாச லிலும் தோரணங்கள் கட்டி, வாயிலில் வண்ண வண்ணக் கோலங்கள் இட்டு, மலர்களால் அலங்கரித்து அவந்தி மக் கள் அனைவரும் பெரும் உற்சாகத்துடன் காணப்பட்டார்கள்.

இயல்தேர் வளவன் எனப் புக ழப்படும் கரிகாலர் தனது பொன்னால் செய்யப்பட்ட புரவித் தேரில் அவந்தியை நோக்கி வந்துகொண்டிருந்தார். கரிகா லரின் புரவித் தேரானது பொன்னாலும், யானைத் தந்தத்தாலும் செய்யப்பட்டிருந் தது. தேர் சக்கரத்தின் கால்கள் தந் தத்தால் செய்யப்பட்டிருந்தது. சக்கரத் தின் வட்டை, நடுப்பகுதியில் இருக்கும் அச்சு, குடம் போன்ற அனைத்து பாகங் களும் தங்கத்தால் செய்யப்பட்டு கடை யாணிக்கு பதில் ஒரு நீண்ட யானையின் தந்தம் சொருகப்பட்டு ஒளிர்ந்துகொண் டிருந்தது. தேரின் விமானமும் தங்கத் தால் செய்யப்பட்டு அதில் பொதிக்கப்பட்

டிருக்கும் வைரம், பவளம், மரகதக் கற்கள், வைடூரியம் போன்றவற்றால் உருவான தோற்றம் பிரமிக்க வைக்கும்படி தோன்றியிருந்தது. கருமையான எட்டு புரவிகள் இரண்டு இரண்டாக வரிசையாகத் தங்க இழைக் கயிற்றால் கட்டிப் பட்டு பிரம்மாண்ட அழகுடன் விளங்கிய புரவித் தேரின் மீது சோழப் பேரரசர் கரிகாலர் கம்பீரத்துடன் வந்துகொண்டிருந்தார். அர்ச்சுனனின் வெண்ணிறப் புரவிகள் பூட்டப்பட்ட புரவித் தேரினைத்தான் அவந்தி மக்கள் உலகின் பிரசித்தி பெற்ற புரவித் தேர் என்று நினைத்துக்கொண்டிருந்தார்கள். கரிகாலரின் கருமை நிறப் புரவிகள் பூட்டப்பட்ட புரவித் தேர்களைக் கண்டபிறகு "அர்ச்சுனின் தேர் கூட கரிகாலரின் புரவித் தேரினைப் போன்று இருந்திருக்குமா?" என ஒருவருக்கொருவர் நினைத்துக்கொண்டார்கள்.

சோழப் பேரரசர் கரிகாற் வளவன் புரவித் தேரின் மீது இளந்திரையனுடன் அமர்ந்திருக்க சோழப் படைத் தலைவன்

செங்குவீரன் புரவித் தேரைச் செலுத்திக் கொண்டிருந்தான். கரிகாலரின் இரண்டு புறத்திலும் சோழப் படைத் தலைவர்கள் திவ்யன், திருக்கண்ணன், வில்லவன் மற்றும் பரதவன் குமரன் ஆகியோர் புரவிகளில் ஆரோகணித்து கம்பீரமாக வந்து கொண்டிருந்தார்கள். புரவித்தேரின் மீது மீது வரும் சோழப் பேரரசை எதிரில் புரவியிலோ அல்லது யானையிலோ சென்று வரவேற்பது மரியாதைக் குறைவு என எண்ணிய சாதவாகன பேரரசன் சதகர்ணி தனது மனைவி நயனிகா மற்றும் தனது மாதண்ட நாயகனுடன் நடந்தே சென்று கொம்புகள் முழங்க, பேரிகைகள் அதிர, வாத்தியங்கள் இசைக்க கரிகாலரை வரவேற்றான்.

அவந்தி மக்கள் அனைவரும் மாளிகையின் உப்பரிகையிலிருந்து மலர்களையும், மலர் மாலைகளையும் சோழப் பேரரசர் கரிகாலரின் மீது தூவி தங்களின் மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டார்கள். அவந்தியின் பெரும்பட்

டினமான உஞ்சையின் எல்லையில் கரிகாலரை எதிர்கொண்டு வரவேற்ற சதகர்ணி அரண்மனை வரை நடந்தே அழைத்து வந்துகொண்டிருந்தான். சதகர்ணி கரிகாலருடன் பட்டினத்திற்குள் நுழைய நுழைய மக்கள் திரள் இரண்டு புறத்திலும் சேர்ந்து, "கரிகாலர் வாழ்க..." "சதக்ரணி வாழ்க" என வாழ்த்து முழக்கங்களை முழங்கிக்கொண்டே இருந்தார்கள்.

உஞ்சைப் பட்டினத்தின் அரண்மனையின் நுழைவாயிலில் வெற்றியுடன் திரும்பி வரும் சோழப் பேரரசர் கரிகாலர் மற்றும் படைத் தலைவர்களை வரவேற்க வானவல்லி, அவந்திகா, கார்த்திகா ஆகியோர் ஆரத்தியுடன் காத்திருந்தார்கள்.

சோழப் பேரரசர் கரிகாலர், செங்குவீரன், திவ்யன், திருக்கண்ணன், வில்லவன், பரதவன் குமரன், வர்த்தினி அவர்களுக்குப் பின்னால் சோழ வீரர்கள் நிற்க தனது கைக்குழந்தையுடன் வந்த வான

வல்லி குழந்தையை புரவித் தேரின் மீது அமர்ந்திருந்த கரிகாலருக்கு முன் தரையில் கிடத்தி, “அவந்திகா...” என அழைத்தாள்.

அடுத்த கணம் கையில் ஆரத்தியைக் கொண்டு வந்து வானவல்லியிடம் அளித்தாள் அவந்திகா.

சோழப் பேரரசர் கரிகாலர், படைத் தலைவர்கள், வீரர்கள் என அனைவருக்கும் சேர்த்து ஆரத்தியை சுழற்றிய வானவல்லி, “கரிகாலா... புரவித் தேரிலிருந்து கீழே இறங்கு!” எனக் கட்டளையிட்டாள்.

புரவித் தேரிலிருந்து கீழே குதித்த செங்குவீரன் கரிகாலர் மற்றும் திரையன் கீழே இறங்குவதற்கு வசதியாக புரவித் தேரின் காலடியை நகர்த்தினான். இளந்திரையனுடன் புரவித் தேரிலிருந்து கீழே இறங்கினார் கரிகாலர். புரவித் தேரிலிருந்து கீழே இறங்கியதுமே திரையன், “அம்மா...” என்று கூறிக்கொண்டு வான

வல்லியின் கால்களைக் கட்டிக் கொண் டான்.

புரவித் தேரிலிருந்து கீழிறங்கிய கரி காலர் தரையில் கிடத்தப்பட்டிருந்த செங் குவீரனின் குழந்தையைத் தூக்க கீழே குனிந்தார். அதைப் பார்த்த வானவல்லி, “அவசரப்படாதே கரிகாலா....” எனக் கூறி தடுத்து நிறுத்தியவள் கரிகாலருக்கு வெற்றித் திலகத்தை சூட்டினாள். பிறகு இளந்திரையன், செங்குவீரன், திவ்யன், திருக்கண்ணன், பரதவன் குமரன், வில் லவன் என அனைவருக்கும் திலகத்தை சூட்டி, “கரிகாலா... உன் மருமகனை இப் போது நீ தூக்கிக்கொள்ளலாம்!” எனத் தெரிவித்தாள்.

வானவல்லி தெரிவித்ததுதான் தாமதம் வரிசையாகக் கட்டப்பட்டிருந்த புரவிகளைப் பார்த்து சிரித்துக் கொண்டி ருந்த குழந்தையைத் தூக்கிக் கொஞ்சிய கரிகாலர் செங்குவீரனிடம் அளித்தார்.

குழந்தையை வாங்கிய செங்குவீரன் குழந்தையின் நெற்றியில் முத்தமிட்டு உணர்ச்சிப் பெருக்குடன் குழந்தையின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். உடனே திவ்யன், “எனது மருமகனை இங்கே கொடு” என வாங்கிக் கொண்டான்.

செங்குவீரன் நெகிழ்ச்சியுடன் நின்றுகொண்டிருக்க, “செங்கோடர் போரில் வீர மரணம் அடைந்துவிட்டார் என்று கேள்விப்பட்டேன்! இம்ஹோடெப் எங்கே?” என வினவினாள் வானவல்லி.

“அவரும் வீர மரணத்தை அடைந்துவிட்டார்.”

“நம் இரண்டாவது மகனை வாழ்த்துவதற்காகவாவது அவர் வந்திருக்கலாம்! பார்த்திருந்தால் பெரிதும் மகிழ்ந்திருப்பார்” என வருத்தத்துடன் தெரிவித்தாள் வானவல்லி. அப்போது அவளிடம் வந்த அவந்திகா, “தேவி... அங்கே பாருங்கள்” என சற்றுத் தொலைவில் நின்

றுகொண்டிருந்த வர்த்தினி மற்றும் சங் கமித்திரையை நோக்கி சுட்டிக் காட்டி னாள்.

“அவர்கள் யார்?” என அவந்திகா விடம் வினவினாள் வானவல்லி.

“இருவருள் ஒருத்தி கலிங்க இள வரசி வர்த்தினி. மற்றொருவள்....?” எனக் கூறிய அவந்திகா சங்கமித்திரையை யார் என்று தெரியாமல் நிற்க, “சுங்க இளவ ரசி சங்கமித்திரை...” எனத் தெரிவித்தான் செங்குவீரன்.

வானவல்லியும், அவந்திகாவும் ஒருவரை ஒருவர் நோக்கிக் கொண்டார் கள். அப்போது, வானவல்லி செங்குவீ ரனை நோக்க “குழந்தையை யார் தூக் குவது?” என சண்டையிட்டுக் கொண்டி ருந்த பரதவன் குமாரனையும், வில்லவ னையும் அழைத்தான் செங்குவீரன்.

“வர்த்தினியும், சங்கமித்திரையும் எதற்காக வந்திருக்கிறார்கள் என்று

இவர்களிடம் வினவு வானவல்லி. இவர்கள் பதில் கூறுவார்கள்!" எனத் தெரிவித்த செங்குவீரன் குழந்தையை நோக்கி நடந்தான்.

பரதவன் குமரனும், வில்லவனும் தரையைப் பார்த்துக்கொண்டு நிற்க, திரையனைத் தூக்கி இடுப்பில் அமர வைத்த வானவல்லி, "இவர்கள் இருவரும் பதில் கூறாமல் தரையை நோக்குவதிலிருந்தே இவர்களின் கள்ளத்தனம் வெளிப்படவில்லையா அவந்திகா? அவர்கள் இருவரையும் அழைத்துக் கொண்டு வா..." என அவந்திகாவிடம் கட்டளையிட்டாள்.

உடனே அவந்திகாவும், அவளுக்கு அருகில் நின்ற கார்த்திகாவும் சென்று வர்த்தினியையும், சங்கமித்திரையையும் மகிழ்ச்சியுடன் அழைத்துக்கொண்டு வந்தார்கள். பிறகு சோழப் பேரரசர் கரிகாலர், சோழப் படைத் தலைவர்கள், அவர்களின் துணைவிகள் என அனைவரும்

https://telegram.me/aedahamlibra

உஞ்சையின் அரண்மனைக்குள் பிரவே சிக்கலானார்கள்.

அரண்மனையின் மாளிகையில் தனது குழந்தையை மடியில் போட்டுக் கொண்டு கொஞ்சிக்கொண்டிருந்தான் விறல்வேல். போரில் வாளினை இறுகப் பிடித்து மரத்துப் போயிருந்த அவனது கரங்களால் குழந்தையை மென்மையு டன் தடவிக்கொடுத்துக் கொண்டிருந் தான்.

திரையனை தோளில் போட்டு உறங்கவைத்துக் கொண்டிருந்த வான வல்லியிடம், “நீ என்னை மிகவும் பெருமைப்படுத்திவிட்டாய் வானவல்லி...” எனத் தெரிவித்தான் விறல்வேல்.

அவன் கூறியதைக் கேட்ட வான வல்லி உறங்கியிருந்த திரையனைப் பஞ் சணையில் போட்டுவிட்டு விறல்வேலின் அருகில் அமர்ந்தவள் அவனது தோளில் சாய்ந்துகொண்டாள்.

https://telegram.me/aedahamlibra

குழந்தையையும் விறல்வேலையும் மாறி மாறி நோக்கிய வானவல்லி, "குழந்தை உங்களைப் போன்றே இருக் கின்றான்!" எனத் தெரிவித்தாள்.

"ஆமாம் வானவல்லி... இவனது முகம், உடல், கை, கால் என அனைத்தும் என்னை வார்த்தெடுத்ததைப் போன்று தான் இருக்கின்றன. ஆனால் இவனது கண்கள் உனது கண்களைப் போன்றல் லவா இருக்கின்றன."

வானவல்லி எந்தப் பதிலையும் கூறாமல் அவனது தோளிலேயே சாய்ந் திருந்தாள். பிறகு, "இப்படி உங்களின் தோளில் சாய்ந்து எத்தனை திங்கள் ஆகிறது!" எனப் பெருமூச்சுவிட்டாள்.

"மனைவியைத் தோளிலும், குழந் தையை மடியிலும் சுமக்கும் சுகத்தை இத்தனை நாட்களாக இழந்துவிட் டேனே..."

"இன்னொருவன் உறங்கிக் கொண்டிருக்கிறான். அவன் கண் விழித் தால் என் இடம் பறிபோய்விடும்!" என வருத்தத்துடன் தெரிவித்தாள் வான வல்லி.

"இந்த மகிழ்ச்சிக்கு ஈடு, இணை எதுவுமே இல்லை வானவல்லி."

"ஆனால், இதைவிடவும் போர்க் களத்தில் பொழுதைக் கழிப்பதில் தானே உங்களுக்கு அதிக விருப்பம்!"

"உனக்கு மட்டும் எப்படியாம்? போரில் விருப்பம் இல்லாமலா திரைய னுடன் நீ போர்க்களம் வரை வருகை தந் தாய்?" என வினவினான் விறல்வேல்.

அதுவரை அமைதியாக படுத்துக் கொண்டிருந்த குழந்தை இருவரின் சத் தத்தைக் கேட்டதும் பதிலுக்கு கைகளை ஆட்டி, விழிகளை உருட்டி சத்தம் எழுப் பத் துவங்கினான்.

அதைப் பார்த்த செங்குவீரன் தனது காப்பு காய்த்திருந்த கைகளால் மென் மையாக குழந்தையின் முகத்தை வரு டினான். அவனது விரலைக் கெட்டியாக பிடித்துக் கொண்டான் குழந்தை.

அப்போது விறல்வேல், "இவன் வளர்ந்த பிறகு இவனது விழிகளைக் கண்டு எத்தனைப் பெண்கள் மயங்கிக் கிடக்கப் போகிறார்களோ?" எனப் பெரு மையுடன் வினவினான்.

"அதற்குள்ளாகவே எதிர்காலக் கனவிற்குள் தலைவர் சென்றுவிட்டீர்கள் போலிருக்கிறீர்களே?"

"ஆமாம் வானவல்லி. இவன் சான் றோர்கள் நிறைந்த அவையில் நடந்தால் அனைவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்த வேண்டும். வீரர்கள் நிறைந்த போர்க் களத்தில் புகுந்தால் எதிரிகள் இவனது பார்வையைக் கண்டே மிரண்டு ஓட வேண்டும். இவனது விழி அசை வுகளுக்கே கன்னியர்கள் பலர் காத்

துக் கிடக்க வேண்டும்” என விறல்வேல் கூறிக்கொண்டிருந்த போதே குறுக்கிட்ட வானவல்லி, “முதலில் குழந்தைக்கு பெயர் சூட்டுங்கள். பிறகு அவன் எப் படி இருப்பான் என்று கனவு காணலாம்!” எனத் தெரிவித்தாள்.

“நான் ஏற்கனவே பெயர் சூட்டிவிட் டேன் வானவல்லி!”

“என்ன பெயர்?”

“இரண்டு பெரும் வீரர்களின் பெயர்.”

“யார் அந்த வீரர்கள்?”

“யாரும் ஆதரவிற்கு இல்லாத காலத்தில் எனக்கு ஆதரவாக இருந்து, எனக்கு போர்க் கலையைக் கற்றுக்கொ டுத்து தந்தையாக, தாயாக, தோழனாக என உறவுக்கு இருக்கும் அத்தனைப் பரி மாணங்களிலும் எனக்குத் துணையாக இருந்தவன் எனது நண்பன். நல்ல நண் பனாக இருந்தது மட்டுமல்லாமல் உன்

னையும் எனக்குக் கட்டிவைத்து யாருமே இல்லாதவனான எனக்கு ஒரு குடும்பத்தை உருவாக்கிக் கொடுத்திருக்கும் எனது நண்பன் திவ்யனின் பெயர் ஒரு பாதி!"

"மறுபாதி பெயர்?"

"இன்னொரு பாதி பெயர் சோழ தேசத்தின் நலனுக்காக தனது குழந்தையைக் கூட காணாமல் போர்க் களத்தில் வீர மரணத்தை அடைந்தாரே காளனான வேளக்காரப் படைத்தலைவர் இளந்திரையன். அவரது பெயரைத் தான் சூட்டப் போகிறேன். இரண்டு வேளக்காரப் படைத்தலைவர்களின் பெயரையும் சேர்த்து "இளந்திவ்யன்" என்று சூட்டலாமென்று இருக்கிறேன் வானவல்லி!"

"இளந்திவ்யன்!"

"நல்ல பெயர்!"

"ம்ம்ம்..."

"மூத்தவன் பெயர் இளந்திரையன், இளையவன் பெயர் இளந்திவ்யன்! நல்ல பொருத்தம்!" என வானவல்லி கூறிக் கொண்டிருந்த போதே அந்த அறைக்குள் நுழைந்தான் திவ்யன். அவனைக் கண்டதும் செங்குவீரனும், வானவல்லியும் எழுந்து நின்று மரியாதை செலுத்தினார்கள்.

"உன்னை நினைத்தால் எனக்குப் பெருமையாக இருக்கிறது விறல்வேல்..." எனக் கூறிய திவ்யன் அவனை அணைத்துக்கொண்டான்.

அப்போது வானவல்லி, "அண்ணா... நீங்கள் எப்போது வந்தீர்கள்?" என வினவினாள்.

"எனது மருமகன் எதிர்காலத்தில் எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்று விறல்வேல் கூறிக்கொண்டிருந்தானே அப்பொழுதே வந்துவிட்டேன்!" எனத் தெரிவித்த திவ்யன், "உங்கள் இருவரையும் கண்டால் எனது கண்ணே பட்

டுவிடும் போலிருக்கிறது!" எனத் தெரிவித்து வானவல்லியையும், விறல்வேலையும் தனது இரு தோள்களிலும் அணைத்துக்கொண்டு ஆனந்தக் கண்ணீரைச் சிந்தலானான்.

பிறகு இளந்திவ்யனைத் தூக்கி தோளில் போட்டுக்கொண்டவன், "நாளைய மறுநாள் எங்கள் நால்வருக்கும் ஒரே மேடையில் திருமணம் நடக்கவிருக்கிறது. திருமணம் நடந்த மூன்றாவது நாள் நாம் அனைவரும் சோழ தேசத்திற்குப் புறப்படுகிறோம்" எனக் கூறிய திவ்யன் குழந்தையை வானவல்லியிடம் கொடுத்துவிட்டு அங்கிருந்து கிளம்பிச் செல்லலானான்.

குறித்த நாளில் சோழப் படைத்தலைவர்கள் திவ்யன் - அவந்திகா, திருக்கண்ணன் - கார்த்திகா, பரதவன் குமரன் - வர்த்தினி, வில்லவன் - சங்கமித்திரை ஆகிய அனைவருக்கும் கரிகாலரின் தலைமையில் அவந்தியின் உஞ்

சைப் பட்டினத்தில் திருமணம் இனிதே நிறைவேறியது. பிறகு 2தனது முன்னோர் கள் மாயனால் பொன், வைரம், வைடூரி யம், மரகதக் கற்கள் ஆகியவற்றால் செய் யப்பட வாயில் தோரணம் ஒன்றைக் கரி காலருக்குப் பரிசாக அளித்து கௌரவப் படுத்தினான் அவந்தி மன்னன் சதகர்ணி.

திருமணம் நடந்த தினத் தின் மாலைப் பொழுது. முழுநிலவின் குளிர்ந்த கிரணங்கள் பூமி முழுவதி லும் நிறைந்து காதல் மணத்தைப் பரப் பிக்கொண்டிருக்க புது மணப் பெண் கள் அவந்திகா, கார்த்திகா, வர்த்தினி மற்றும் சங்கமித்திரை ஆகிய நால்வரை யும் திவ்யன், திருக்கண்ணன், பரதவன் குமரன் மற்றும் வில்லவனது அறைக ளுக்கு அழைத்துச் சென்றுகொண்டிருந் தாள் வானவல்லி. அப்போது வர்த்தினி, “தேவி... உங்களின் இரு புதல்வர்க ளுக்கும் எங்களின் யாருடைய பெண் களை மணமுடித்து வைக்கப்போகிறீர்

கள்?” என வானவல்லியிடம் வினவி னாள்.

இளந்திரையன் வானவல்லியுடன் நின்றுகொண்டிருக்க, மார்போடு இளந் திவ்யனை அணைத்தபடியே அவளுக்கு முன் நின்ற நால்வரையும் மாறிமாறி நோக் கினாள் வானவல்லி.

அப்போது கார்த்திகா, “உங்களின் தமையன் வேளக்காரப் படைத்தலைவர் திவ்யனின் மகளை மட்டும்தான் இரு வருக்கும் கட்டி வைப்பீர்களா? அல்லது எங்களது மகள்களுக்கும் அந்த வாய்ப்பு கிடைக்குமா?” என வினவினாள்.

உடனே வானவல்லி, “எனக்கு என் தமையன் திவ்யன் வேறு படைத்தலை வர்கள் வில்லவர், திருக்கண்ணன், பரத வன் குமரன் ஆகியோர் வேறு இல்லை கார்த்திகா. எனக்கு நால்வரும் தமை யன்கள் தான். கரிகாலனுடன் எனது இரு குழந்தைகளுக்கும் ஐந்து மாமன் கள். நீங்கள் நால்வரும் சேர்ந்து எத்

தனை பெண்களைப் பெற்றுக்கொள்ள முடியுமோ அத்தனைப் பெண்களைப் பெற்றுக்கொள்ளுங்கள். எனது மகன் கள் இருவரும் அத்தனை பெண்களை யும் கட்டிக்கொள்வார்கள்!" எனச் சிரித்த படியே பதிலளித்தாள்.

நால்வரும் வானவல்லியின் பதி லைக் கேட்டு ஒரே நேரத்தில் புன்ன கைக்கலானார்கள். பிறகு திருக்கண்ண னின் அறையில் கார்த்திகாவையும், பர தவன் குமரன் அறையில் வர்த்தினியை யும், வில்லவனின் அறையில் சங்கமித் திரையையும் விட்ட வானவல்லி அவந் திகாவை அழைத்துக்கொண்டு திவ்ய னின் அறையை நோக்கி நடந்து சென் றுகொண்டிருந்தாள். அப்போது திவ்யன் அவர்களை நோக்கி எதிரில் வந்து கொண்டிருந்தான்.

திவ்யனைக் கண்டதும் திரையன் ஓடிப் போய் அவனை நோக்கித் தாவ அவனைத் தூக்கி தோளில் கிடத்திக்

கொண்டான் திவ்யன். அப்போது வான வல்லி, "என்ன அண்ணா... நான் அவந் திகாவை உங்களது அறைக்கு அழைத்து வரும்வரை கூட தங்களால் பொறுத்தி ருக்க இயலாதா?" என அவனைப் பரிக சிக்க தரையை நோக்கினான் திவ்யன்.

"வாருங்கள் அறையை நோக்கிச் செல்வோம்" என திவ்யனையும், அவந் திகாவையும் அவனது பள்ளியறைக்கு அழைத்துச் செல்லலானாள்.

அறைக்குச் செல்வதற்கு முன் இளந்திரையன் மற்றும் இளந்திவ்யன் இருவருக்கும் முத்தமிட்டுவிட்டு அறைக் குள் நுழைய அவந்திகாவை அறைக்கு அனுப்பிவைத்த வானவல்லி திரும்பிச் செல்லலானாள்.

தொலைவில் மலை முகட் டில் எழுந்துகொண்டிருந்த முழுநில வையே பார்த்துக்கொண்டிருந்தான் திவ் யன். திவ்யனின் அருகில் சென்ற அவந் திகாவும் அந்த முழுநிலவையே பார்க்க

லானாள். இருவருக்குமிடையில் பேசுவதற்கு ஆயிரம் காரியங்கள் கொட்டிக்கிடந்தாலும் இருவருக்குமிடையில் பூரண மௌனம் நிறைந்து வழிந்துகொண்டிருந்தது.

நீடித்துக்கொண்டிருந்த மௌனத்தை விரும்பாத அவந்திகா, "நான் வருவதற்கு தாமதமானதும் தேடிக்கொண்டு பாதிவழி வந்துவிட்டீர்கள். இப்போது நிலவையே பார்த்துக்கொண்டு நிற்கிறீர்கள்?" என வினவினாள்.

அவந்திகாவின் குரல் கேட்டதும் அவளை நோக்கித் திரும்பினான் திவ்யன். நிலவின் வெள்ளிக் கிரணங்கள் அவளது முகத்தில் பட்டு எதிரொளித்தது. அறையில் எரிந்துகொண்டிருந்த தீவர்த்தியின் பொன்னொளி, நிலவின் வெள்ளிக் கிரணங்கள் சேர்ந்து அவளை தேவலோக மங்கையைப் போன்று வடித்திருக்க அவளது முகத்தையே பார்த்த

படி மீண்டும் மௌனித்துப் போய் நின்று கொண்டிருந்தான் திவ்யன்.

அப்போது அவந்திகா, "வருவதற்கு முன் இரு மருமகன்களையும் தூக்கிக் கொஞ்சிக்கொண்டிருந்தீர்களே? என்ன சொல்லி அனுப்பிவைத்தார்கள்? இப்ப டித்தான் மௌனமாக நின்றுகொண்டி ருங்கள் மாமா எனக் கூறி அனுப்பி வைத் தார்களா?"

"இல்லை!"

"பிறகு?"

"அவர்கள் இருவரும் கட்டிக் கொள்ள இரு பெண்களுக்கு விரைந்து ஏற்பாடு செய்யச்சொல்லி அனுப்பி வைத் திருக்கிறார்கள்!"

"நிச்சயம் கேட்டிருப்பார்கள்!" புன் னகையுடன் தெரிவித்தாள் அவந்திகா.

"அதுவும் அவர்கள் இருவருக்கும் இரட்டைக் குழந்தைகள் வேண்டுமாம்!"

https://telegram.me/aedahamlibra

"இரட்டைக் குழந்தைகளா?"

"ம்ம்ம்...!"

"ஆதலால்தான் சிந்தித்தபடி இப்படி அமைதியாக நிற்கிறீர்களா?" அவனது விழிகளில் தனது மோகனப் பார்வையை நிலைநிறுத்திக்கொண்டு வினவினாள் அவந்திகா.

திவ்யன் எந்தப் பதிலையும் கூறாமல் அமைதியாக அவளது யௌவன சௌந்தர்ய முகத்தைப் பார்த்தபடியே நின்றுகொண்டிருந்தான்.

"நல்ல தங்கை... நல்ல மருமகன்கள்!"

"வானவல்லி என்ன தெரிவித்தாள்?"

"நாங்கள் நால்வரும் எத்தனை பெண்களைப் பெற்றாலும் அத்தனை பேரையும் இருவருக்குமே கட்டிவைக்க உங்களது தங்கை விரும்புகிறார். தாங்

கள் இரட்டைக் குழந்தையைப் பற்றி சிந்தித்துக்கொண்டிருக்கிறீர்கள்!"

அவந்திகா கூறியதைக் கேட்டதும் சிரித்த திவ்யன் அவளது அருகில் நெருங்கினான். அப்போது அவந்திகா இரண்டடி பின்னோக்கிச் செல்லலானாள். அவள் விலகிச் சென்றபோது காற்றில் பறந்த அவளது சேலையைப் பற்றி உருவி எறிந்தான் திவ்யன்.

அவள் இரண்டடி பின்னோக்கி நகர்ந்ததும் அருகில் மெல்ல சுடர் விட்டு எரிந்துகொண்டிருந்த விளக்கொளி மறைந்து நிலவின் கதிர் மட்டும் அவளது உடலில் பட்டு அவளது வனப்பினை பலமடங்கு அதிகரிக்கச் செய்தது. கறைகளே இல்லாத அவளது முகம், தாகத்தை அதிகமாக்கிக் கொண்டிருக்கும் அவளது சிவந்த இதழ்கள், கச்சையை விட்டு விடுபடத் துடித்துக் கொண்டிருந்த அவளது செழித்த மார்புகள், குறுகிப் போய் ஒடுங்கியிருந்த

அவளது இடை, இடைக்குக் கீழே மீண்டும் பெருத்திருந்த அவளது திரண்ட அழகு என அனைத்தும் திவ்யனை நிலைதடுமாற செய்துகொண்டிருந்தன. அவளது முகத்தில் துவங்கி பார்வையை மெல்ல இறக்கி அவளது அழகுகளை பார்வையால் பருகிய திவ்யன் பிறகு மீண்டும் அவளது விழிகளில் தனது பார்வையை நிலைக்கவைத்து அவளையே வைத்தகண்ணை எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

அப்போது அவந்திகா, "இன்னும் எவ்வளவு நேரம் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறீர்கள்?" என வினவினாள்.

அவளது கேள்விக்கு தொடர்பே இல்லாமல், "வானில் பசியுடன் வளம் வந்துகொண்டிருக்கும் ராகு மாசுபடிந்த சந்திரனுக்குப் பதில் மாசற்ற உனது முகத்தைக் கண்டு குழம்பி உன்னை விழுங்கி விடப் போகிறான்! இப்படி நகர்ந்து நில்!"

என நிலவொளி விழாத இடத்தில் அவளைப் பிடித்து தள்ளி நிறுத்தினான்.

அவனது அசட்டுத்தனத்தைக் கண்டு சிரித்த அவந்திகா, "காதல் மயக்கத்தில் இப்படியே இரவு முழுவதும் பேசிக்கொண்டிருங்கள். இரவு கடந்து பொழுது விடிந்துவிடும். நமது மருமகன்களுக்கு இரண்டு குழந்தைகள் என்ன மூவரைக் கூட பெற்றுக்கொடுத்துவிடலாம்!" என திவ்யனிடம் சற்றே கோபத்துடன் தெரிவித்தாள்.

அப்போது திவ்யன் அவந்திகாவை நோக்கி இரண்டடி முன்னோக்கி வைத்தான். அவனது மார்பில் கையை வைத்து அவனைத் தடுத்த அவந்திகா மற்றொரு கையால் கச்சையின் முடிச்சினை அவிழ்த்தாள். அடுத்தகணம் அவளது மார்பை மூடியிருந்த கச்சைத் துணி கீழே விழுந்தது.

அவளது முகத்தில் தனது பார்வையை நிலைநிறுத்தியிருந்த திவ்யன்

பார்வையை கீழே இறக்கினான். உடனே திரும்பி பஞ்சணையை நோக்கி நடக்கலானாள் அவந்திகா. இரண்டடி நடந்த பிறகு இடையில் கட்டியிருந்த துணியையும் அவிழ்த்தாள். அடுத்தகணம் அதுவும் கீழே விழுந்தது. உடலின் அழகுகளை மறைத்திருந்த ஆடைகளைக் களைந்து பஞ்சணையில் சென்று படுத்தவள் சற்றுத் தொலைவில் நின்ற திவ்யனை மோகன விழிகளுடன் நோக்கினாள்.

அதற்கு மேல் திவ்யன் பொறுமை காக்கவில்லை. உடனே பஞ்சணையை நோக்கி நடந்தவன் அவந்திகாவின் மீது படரலானான். இருவரும் காதல் களிப்பில் திளைக்கத் துவங்க அதற்கு மேல் அவர்களின் விளையாட்டினைக் காண இயலாத சந்திரன் மேகக் கூட்டங்களுக்குள் மறையலானான்.

சோழப் படைத்தலைவர்கள் திவ்யன் - அவந்திகா, திருக்கண்ணன் - கார்த்திகா, பரதவன் குமரன் - வர்த்தினி, வில்

லவன் - சங்கமித்திரை ஆகியோர் தங்களின் காதல் வாழ்வை இனிதே துவங்கியிருந்த அதே வேளையில் சோழப் படைத்தலைவன் செங்குவீரன் படை சோழ நாட்டை நோக்கிப் புறப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தான். உபதலைவர்களுக்கு அனைத்து கட்டளைகளையும் விதித்து விட்டு மாளிகையை நோக்கித் திரும்பினான்.

மாளிகையில் அவனுக்காகக் காத்திருந்த வானவல்லி தொலைவில் தெரிந்த முழு நிலவையே நோக்கிக் கொண்டிருந்தாள். குழந்தைகள் இருவரும் தொட்டிலில் உறங்கிக் கொண்டிருந்தார்கள். அறைக்குச் சென்ற விறல்வேல் வானவல்லியை பின்னாலிருந்து அணைத்தான்.

அவனது அவசரத்தைப் புரிந்து கொண்ட வானவல்லி பஞ்சணையை நோக்கி நடந்தாள். விறல்வேலும் அவ

ளுக்குப் பின்னாலேயே நடந்து சென்றான். பஞ்சணையில் படுத்து விறல்வேலை நோக்கிய வானவல்லியின் அருகில் சென்ற விறல்வேல் அவளை இழுத்துப் போர்த்திக்கொண்டான்.

அப்போது தூக்கம் கலைந்த இளந்திரையன், “அம்மா...” என்று அழைத்தபடியே இருவருக்கும் இடையில் வந்து படுத்துக்கொண்டான்.

விறல்வேலின் தவிப்பைப் பார்த்து சிரித்த வானவல்லி, “இனி இப்படித்தான்...” எனக் கூறி இளந்திரையனை அணைத்துக்கொண்டாள். விறல்வேலும் சிரித்தபடியே திரையனுடன் வானவல்லியையும் சேர்த்து அணைத்துக்கொண்டான்.

அடிக்குறிப்பு:

1. மாநீர் வெளி வச்சிரு நன்னாட்டுக்

கோன் இறை கொடுத்த கொற்றப் பந்தரும்

மகத நன்னாட்டு வாள்வாய் வேந் தன்

பகை புறத்துக் கொடுத்த பட்டிமண் டபமும் (சிலம்பு 5: 99 - 102)

2. அவந்தி வேந்தன் உவந்த னன் கொடுத்த,

நீவந்தோங்கு மரபின் தோரண வாயிலும்,

பொன்னினும், மணியிலும் புனைந் தன வாயிலும்

நுண்வினைக் கம்மியர் காணா மரபின

துயர்நீங்கு சிறப்பின் அவர் தொல் லோர் உதவிக்கு

https://telegram.me/aedahamlibra

மயன் விதித்துக் கொடுத்த மரபின
இவைதாம் (சிலம்பு 5: 103 - 108)

https://telegram.me/aedahamlibra

# 55. நிறைவு

சோழ நாட்டில் அடர்ந்து காணப்பட்ட வனங்கள் அனைத்தும் திருத்தப்பட்டு வயல்களாக்கப்பட்டிருந்தன. நதிக்குக் குறுக்கே கட்டப்பட்டிருந்த பிரமாண்ட தடுப்பணையினால் நதி நீரானது தடுக்கப்பட்டு காவேரி நதியானது கடல் போன்று நீர் தேங்கி காணப்பட்டது. அணையின் நீர் தேங்கும் பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கான கால்வாய்கள் மற்றும் வாய்க்கால்கள் வெட்டப்பட்டு காவேரி நீர் சோழ நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் கொண்டு செல்லப்பட்டு மூன்று போகமும் நெல் விளையச் செய்து சோழ நாட்டை "சோறுடைத்த நாடாக்கி" வளமான நாடாக மாற்றியிருந்தார் கரிகாலர்.

சோழ நாட்டில் விளைவிக்கப்பட்ட நெல் அனைத்து நாடுகளுக்கும் மூட்டை மூட்டையாக வண்டிகளில் ஏற்

றுமதி செய்யப்பட்டன. சோழ தேசத்தின் புதுத் தலைநகரான புகாரின் துறைமுகத்தில் வரிகள் அனைத்தும் முறைப்படுத்தப்பட்டன. யவனத்திலிருந்து வணிகர்கள் பொன்னையும், பொருளையும் புகாரில் கொண்டு வந்து கொட்டி புகாரை உலகப் பிரசித்திப் பெற்ற பட்டினமாக மாற்றியிருந்தார்கள். விவசாயத்திலும், வணிகத்திலும் சோழ நாடு தன்னிறைவு பெற்றிருந்தது. சோழ நாட்டினால் ஒட்டுமொத்த தென்னகமும் பயனடைந்து அனைத்து மதங்களும் சகிப்புத்தன்மையுடன் வளர்ந்துகொண்டிருந்தன.

ஆயிரமாயிரம் வருடங்கள் கடந்தாலும் தனது புகழை உலகிற்கு உரக்கக் கூறிக்கொண்டிருக்கும் தடுப்பணையின் மீது நின்று கடல் போன்று நீர் தேங்கி பரந்து விரிந்துக் காணப்பட்ட காவேரி நதியைப் பெருமையுடன் நோக்கினார் கரிகாலர். தொலைவில் வயல் வெளிகளில் வேலை செய்த விவசாயிகள் வேலை அலுப்பு தெரியாமல் இருக்க

https://telegram.me/aedahamlibra

பாடலைப் பாடிக்கொண்டிருந்தார்கள். வயல்களிலிருந்து மண் வாசனையுடன் பாடலும் காற்றில் மிதந்து வந்து சோழப் பேரரரசரை மேலும் மகிழ்ச்சிக்குள்ளாக்கியது.

அப்போது கரிகாலருடன் இரும்பிடர்த்தலையர், பெருமறவர் மகேந்திர வளவனார், திவ்யன் ஆகியோரும் நின்றுகொண்டிருந்தனர்.

இரும்பிடர்த்தலையர் திவ்யனிடம், “திவ்யா... மன்னர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுவிட்டது தானே?” என வினவினார்.

“அனைவருக்கும் அனுப்பிவிட்டேன் பிடர்த்தலையரே...” எனத் தெரிவித்தான் திவ்யன்.

“யார் யாருக்கு அனுப்பியிருக்கிறாய்?”

“சேர மன்னர், பாண்டிய மன்னர், தென்னகத்தின் வேளிர்கள், சாத

வாகன மன்னர் சதகர்ணி, கலிங்க மன்னர் குதுப்ஸ்ரீ பீமவேலன், சுங்க மன்னர் புஷ்யமித்திர சுங்கன், வச்சிர நாட்டு மன்னர், கோசலத்தின் மன்னர் மற்றும் விதர்பாவின் மன்னர் என அனைவருக்கும் தகவல் அனுப்பிவிட்டேன்!"

"இலங்கையின் சிங்கள மன்னர் வங்க நசிக திஸ்யனுக்கு?" எனக் குறுக்கிட்டு வினவினார் சோழப் பேரரசர் கரிகாலர்.

"இன்னும் அனுப்பவில்லை!"

"அனுப்பிவிடுங்கள் தலைவரே... சோழ நாட்டிற்கு இனி எந்த நாடும் பகை நாடு அல்ல. அனைவரும் இனி நமது நண்பர்கள் தான்!"

"சரி கரிகாலா..." எனத் தெரிவித்தான் திவ்யன்.

அப்போது பெருமறவர் மகேந்திர வளவனார், "இராசசூய வேள்வியைக் காண வருகை தரும் மன்னர்கள் எவ

https://telegram.me/aedahamlibra

ருக்கும் நமது நண்பர்கள், பகைவர்கள் என எந்தவித பாகுபாடும் இல்லாமல் அனைவருக்கும் அனைத்து ஏற்பாடுக ளும் செய்துவிடு!" எனக் கட்டளையிட் டார்.

"தங்களது உத்தரவு தந்தையே..."

அழைப்பு அனுப்பப்பட்ட அனைவ ரும் சோழ நாட்டின் தலைநகரான புகா ரில் வந்து சேர்ந்தார்கள். வெண்ணிப் போரில் வீர மரணம் அடைந்த பெருஞ் சேரலாதனின் புதல்வரான சேர மன்னர், பாண்டிய மன்னர் தென்னவரின் மகன், தென்னக வேளிர்கள், மகாமேகவாகன மரபின் கலிங்க மன்னன் குதுப்ஸ்ரீ பீம வேலன், சாதவாகன மன்னன் சதகர்ணி, சுங்க மன்னன் புஷ்யமித்திர சுங்கன், வச் சிர நாட்டு வேந்தன், விதர்பாவின் மன் னன், கோசலத்தின் மன்னன், சிங்களத் தின் மன்னன் வங்க நசிக திஸ்யன் என அனைத்து மன்னர்களும் கரிகாலரின்

வேள்வியை சிறப்பிக்க வருகை தந்திருந் தார்கள்.

சோழப் படைத்தலைவர்கள் செங் குவீரன், திவ்யன், திருக்கண்ணன், பர தவன் குமரன், வில்லவன், வானவல்லி, அவந்திகா, கார்த்திகா, வர்த்தினி, சங்க மித்திரை ஆகியோருடன் துறவறம் பெற்ற திகம்பர அடிகளார் ஈழவாவிரையர், பத் திரைத் தேவி, பத்திரையின் தந்தை வேளாதன், புலவர்கள், பொதுமக்கள் ஆகியோருடன் கரிகாலரின் அழைப்பின் பேரில் அனைத்து மதத்தினரும் வர வழைக்கப் பட்டிருந்தார்கள். வேள்விக் கான பணியினை இரும்பிடர்த் தலைய ரும், பெருமறவர் மகேந்திர வளவனாரும் முன்னின்று கவனித்துக்கொண்டார்கள்.

சோழ தேசத்தின் புகார் பட்டினமே விழாக்கோலம் பூண்டு விளங்கியது. புகாரின் அரண்மனையின் அரியாசனத் தில் கரிகாற் பெருவளத்தான், அவரது மனைவி மரகதவல்லி, அவரது மகள்

ஆதிமந்தி ஆகியோர் விழாவுக்கு தலைமையேற்று அமர்ந்திருக்க மற்ற தேசத்து மன்னர்களின் முன்னிலையில் இராசசூய யாகம் வெற்றிகரமாக இனிதே நிறைவேறியது.

தமிழக மன்னரான கரிகாலர் முதன் முதலில் இராசசூய யாகத்தை வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதும் அவை கூடியது. அவை கூடியதும் வேலனும், அவனது மனைவியும் சேர்ந்து நாட்டியம் ஆடி அவையைத் துவங்கி வைத்தார்கள்.

பிறகு, "வறுமையில் வாழும் பொருநர்களிடம் கரிகாலரின் கொடை உள்ளம், வெண்ணிக் களத்தில் சேர, பாண்டிய மன்னர்கள் மற்றும் வேளிர்கள் அனைவரும் ஒரே களத்தில் அழியுமாறு ஆத்தி மாலை சூடி போர் செய்த கரிகாலனின் சிறப்பு, சோழ நாட்டு வளம், காவேரி நதியின் வளம்" பற்றி கூறி எடுத்துக் கூறி கரிகாலர் பெருவளத்தானிடம் சென்றால் உங்களின் வறுமை அனைத்தும் நீங்கி

https://telegram.me/aedahamlibrary

விடும் எனக் கூறுவதைப் போன்று பொருநராற்றுப்படை நூலை எழுதி பெரும் பரிசினை பெற்றுச் சென்றார் புலவர் முடத் தாமக் கண்ணியார்.

முடத்தாமக் கண்ணியாரைத் தொடர்ந்து கடியலூர் உருத்திரங்கண்ணனார் தான் எழுதிய "பட்டினப்பாலை" எனும் நூலை அவையில் அரங்கேற்றத் துவங்கினார்.

வசையில் புகழ் வயங்கு வெண்மீன்
திசை திரிந்து தெற்கு ஏகினும்,
தற் பாடிய தளி உணவின்
புள் தேம்பப் புயல் மாறி
வான் பொய்ப்பினும் தான் பொய்யா
மலைத் தலைய கடல் காவிரி
புனல் பறந்து பொன் கொழிக்கும்.

"விளங்கிய கதிர்களையுடைய ஞாயிறு எத்திசை சென்றாலும், பெரும்

புகழினையுடைய வெள்ளி மீனானது, தான் வசிக்கின்ற வட திசையிலிருந்து தென் திசைக்குப் போனாலும், தன் னைப் பாடி, மழைத்துளிகளை மட்டுமே உணவாக உண்டு வாழும் வானம்பாடிப் பறவை தனக்கு உணவான மழைத்து ளிகளைப் பெற முடியாமல் வருந்துமாறு கார் மேகம் திசை மாறி மழை பெய் யாது பொய்த்தாலும், தான் பொய்க்கா மல் இருப்பது காவிரியாறு. இக்காவிரி யானது குடகு மலையில் தோன்றி கடல் போன்று எங்கும் பறந்து பொன்னாக விளை நிலங்களைச் செழிக்கச் செய்யும்" எனப் பொருள் படும்படி காவேரி நதியின் புகழைப் பாடி பாடலைத் துவங்கியவர் பிறகு, சோழ நாட்டின் நில வளம், புகா ரின் செல்வ வளம், புகார் வீரர்களின் மறப் போர், வாட்போர், பரதவரின் இருப்பிடம், புகாரின் இரவு நேரக் காதல் நிகழ்ச்சிகள், புகாரின் பண்டகசாலை, உழவர்களின் நல்லியல்புகள், வணிகர் குடி சிறப்பு, புகா ரில் உரையும் பன்னாட்டவரின் இயல்பு

கள் என புகாரைப் பற்றியும் சோழ நாட்டின் சிறப்பியல்புகள் பற்றியும் விளக்கமாக எடுத்துக் கூறிய கடியலூர் உருத்திரங்கண்ணனார்

வாரேன் வாழிய நெஞ்சே!

முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்,

வார் இருங்கூந்தல் வயங்கிழை ஒழிய

வாரேன் வாழிய நெஞ்சே!

என "குறைவில்லாத சிறப்பினை உடைய இப்புகாரையே உரிமையானதாக எனக்குக் கொடுத்தாலும் நீண்ட கரிய கூந்தலை உடைய எனது அழகிய காதலியை விட்டு நான் பிரிந்துசெல்ல மாட்டேன்" எனப் பொருள் படும்படி பாடி முடித்ததும் அவையினர் அனைவரும் எழுந்து நின்று கைதட்டி பாராட்டினார்கள்.

"புகாரின் சிறப்பினைக் கூறி அந்தப் புகாரையே பரிசாக அளித்தாலும் எனது காதலியை விட்டுப் பிரியமாட்டேன்" என அவர் புறப்பொருள் இலக்கியத்தை அகத்துறையில் கலந்த விதத்தை அனைவரும் பாராட்டவே செய்தனர்.

புகாரின் சிறப்பினைக் கூறியபிறகு கரிகாற் பெருவளத்தானின் பெருமைகள், அவரது போர்த் திறம், கரிகாலரை எதிர்த்த எதிரிகளின் நிலை, கரிகாலரின் கருதியது முடிக்கும் செயல், காடு திருத்தி வயல்வெளிகளாக்கி வளம் பெருக்கிய வளவனின் செயல், அவரது அகவாழ்வு, புறவாழ்வு எனக் கரிகாலரைப் பற்றி பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனார் கடைசியாக, "நான் பொருளீட்ட பிரிந்து செல்ல நினைக்கும் காட்டு மார்க்கம் கரிகாலர் தனது பகைவரின் மீது செலுத்திய கருணையில்லாத வேல் படையைக் காட்டிலும் கொடுமையானது. என் மெல்லிய காதலியின் தோள்கள் அந்தக் கரிகால

https://telegram.me/aedahamlibra

ரின் செங்கோலைக் காட்டிலும் குளிர்ச்சி யைத் தருவன" எனப் பொருள்படும்படி யான

திருமாவளன் தெவ்வர்க்கு ஓக்கிய

வேலினும் வெய்ய கானம் அவன்

கோலினும் தண்ணிய, தடமென் தோளே!

என "முட்டாச் சிறப்பின் புகார் பட் டினத்தையே அளித்தாலும் என் காத லியை விட்டுப் பிரிய மாட்டேன், கரிகா லரின் செங்கோலைக் காட்டிலும் குளிர்ச் சியான எனது காதலியின் தோள்களை விட்டு ஒரு நாளும் பிரியவேமாட்டேன்" என அகத்துறையைப் பற்றி பாடிய கடிய லூர் உருத்திரங்கண்ணனாருக்கு கரிகா லர் பதினாறு நூறாயிரம் பொற்காசுகளை யும், மகத மன்னன் அளித்த பட்டி மண் டபத்தையும் பரிசாக அளித்து அப்புலவ ரைப் பெருமைப்படுத்தினார்.

இரண்டு பெரும் நூல்களின் அரங்கேற்றம் முடிந்ததும் அவை கலைந்தது. அவையினர் அனைவரும் களைந்து சென்றார்கள். இளந்திரையனையே வைத்த கண்ணை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த பத்திரைத் தேவியிடம் திரையனை அழைத்து வந்தாள் வானவல்லி.

திரையனிடம் பத்திரைத் தேவியைப் பற்றிக் கூற வாயெடுத்தாள் வானவல்லி. ஆனால், அதற்குள் அவளைத் தடுத்துவிட்ட பத்திரைத் தேவி இளந்திரையனைத் தூக்கி முத்தமிட்டாள். பத்திரைத் தேவி, அவளுக்கு அருகில் நின்ற திரையனின் தாத்தா வேளாதன், திகம்பர அடிகளார் ஈழவாவிரையர் ஆகியோரிடம் வாழ்த்துகளைப் பெற்றான் திரையன்.

பிறகு இளந்திவ்யனைத் தூக்கி வந்த வானவல்லி தனது ஆருயிர் தோழி பத்திரைத் தேவியிடம் கொடுத்தாள். இளந்திவ்யனைக் கொஞ்சிக்கொண்டி

ருந்தாள் பத்திரைத் தேவி. வேளா தன், திகம்பர அடிகளார் ஈழவாவிரையர் இளந்திவ்யனை வாழ்த்தினார்கள். அப் போது அங்கு கையில் பொருநராற்றுப் படை மற்றும் பட்டினப்பாலை ஆகிய நூல் களின் ஓலைகளைக் கொண்டு வந்த திரையன் வானவல்லியை, "அம்மா..." என்று அழைத்தான்.

அவனை நோக்கிக் குனிந்த வான வல்லி, "என்ன?" என வினவினாள்.

"இதில் மாமாவின் வெண்ணிப் போர் வரைதான் இருக்கிறது. வடநாட் டுப்போர் பற்றி எதுவும் குறிப்பிடவில் லையே?" என வினவினான்.

"இவை இரண்டும் கரிகாலர் வடக்கு நோக்கிப் படையெடுப்பதற்கு முன் எழுதப்பட்ட நூல்கள்!" எனப் பதி லளித்த வானவல்லி மீண்டும் பத்திரை யைப் பற்றி வினவலானாள்.

இருவரும் பேசிக்கொண்டிருந்த போது மீண்டும் திரையன், "அம்மா..." என அழைத்தான்.

ஒரே நேரத்தில் வானவல்லியும், பத்திரைத் தேவியும் இளந்திரையனை நோக்கினார்கள்.

"நானும் தொண்டை மண்டலத் திற்கு அரசனாக முடிசூடியதும் பட்டினப் பாலை பாடிய புலவர் என்னைப் பற்றி யும் பாடல் பாடுவாரா?" என வினவினான் இளந்திரையன்.

"நீயும் கரிகாலரைப் போன்று வீரத் திலும், கொடைத் தன்மை, ஆட்சி செலுத்தும் முறை ஆகியவற்றில் பெரும் புகழைப் பெற்றால் நிச்சயம் கடியலூர் உருத்திரங்கண்ணனார் உன்னைப் பற்றி யும் இதே போன்று பாடல் இயற்றுவார்."

"மாமா தான் அனைத்து நாடுக ளையும் வென்றுவிட்டாரே... நான் எப்படி அவரைப் போன்று புகழை அடைவது?"

என மீண்டும் வினவினான் இளந்திரையன்.

"நீ சிறந்த அரசனாக மக்கள் நலனிலும், வீரத்திலும் சிறப்புற்று விளங்கினால் அவர் நிச்சயம் எழுதுவார்!"

"சரி அம்மா... நான் வளர்ந்ததும் மக்கள் நலனில் சிறந்தவன் என்பதை நிரூபிக்கிறேன். ஆனால், இப்போதே வீரத்தில் சிறந்தவன் என்பதை காட்டுகிறேன்!" எனக் கூறிய திரையன் ஓடிச் சென்று கரிகாலரின் இருக்கைக்கு அருகில் கிடத்தப்பட்டிருந்த உறைவாளினை எடுத்துக்கொண்டு வானவல்லியிடம் ஓடி வந்தான்.

அவனது செயலைக் கண்டு பதறிய வானவல்லி, "திரையா... அதை அம்மாவிடம் கொடுத்துவிடு. அது கூர்மையான வாள். தவறினால் உனது கையை வெட்டிவிடும். உனக்குத்தான் மரவாள் செய்து கொடுத்திருக்கிறேனே, அதை வைத்துக்கொண்டு மாமாவின் வாளினை

இங்கே கொடு" எனக் கூறி கையை நீட்டி னாள்.

அப்போது எழுந்த வானவல்லியின் அதட்டலைக் கேட்டு கரிகாலர், திவ்யன், செங்குவீரன், திருக்கண்ணன், பரதவன் குமரன், வில்லவன் என அனைவரும் அங்கு சூழ்ந்தார்கள்.

அனைவரையும் நோக்கிய இளந்தி ரையன் இன்னொரு கையிலிருந்த மர வாளினை வானவல்லியிடம் அளித்து விட்டு, "தம்பி இளந்திவ்யன் வளர்ந்த தும் அவனுக்கு நான் பயிற்சி அளிக்க இந்த வாள் உதவும்! அதுவரை பத்தி ரமாக வைத்திருங்கள்!" என கூறியவன் கரிகாலரின் வாளினை உறையிலிருந்து வெளியே இழுத்தான்.

அவனது செயலைப் பார்த் துப் பதறிய வானவல்லி இளந்திரைய னின் கையிலிருந்து வாளினைப் பிடுங்க குனிந்தாள்.

"வானவல்லி வேண்டாம்!" என எழுந்த செங்குவீரனின் கட்டளையைக் கேட்டு வானவல்லி அப்படியே நிற்கலா னாள்.

இளந்திரையன் வாளினை வெளியே இழுத்தான். பிறகு அதன் கைப்பிடியைப் பிடித்துக்கொண்டு வாளினை உயர்த்த முயன்றான். வாளின் கைப்பிடியை அவன் பிடித்திருந்தா லும் அது தரையில் தொங்கி ஊன் றிக் கொண்டிருந்தது. கைப்பிடியின் ஆட் காட்டி விரலை நீட்டி வாளினை உயர்த்த தாங்கலாகப் பிடித்துக்கொண்டு வாளினை உயர்த்தினான் திரையன். அப்போதும் வாளினை அவனால் தூக்க முடியவில்லை. பிறகு இரண்டாவதாக ஆட்காட்டி விரலோடு நடுவிரலையும் சேர்த்து தாங்கிப் பிடித்தபடி வாளினை உயர்த்தினான். வாள் தரையிலிருந்து மெல்ல மெல்ல மேலே உயர்ந்தது.

இரண்டு விரல்களாலும் தாங்கிக் கொண்டு வாளினை தோளிற்கு நேருக்கு நேர் உயர்த்திய இளந்திரையன் வான வல்லியை நோக்கி, “இனி என்னாலும் இந்த வாளினை உயர்த்த முடியும்!” எனக் கூறி சிரித்தான்.

அவனது செயலைப் பார்த்த வான வல்லி அவனை அணைத்து உச்சி முகர்ந்து முத்தமிட்டாள்.

தனது மகனின் வீர செயலைப் பார்த்து பரவசமடைந்திருந்த பத்திரைத் தேவி விழிகளில் வழிந்த கண்ணீர் துளி களைத் துடைத்துக்கொண்டு, “அவரது தியாகம் வீண் போகவில்லை. அவரது கனவின்படி எனது மகனும் அவரைப் போன்று உலகம் போற்றும் மாவீரனாக வளம் வருவான். அந்த நம்பிக்கை எனக்கு வந்துவிட்டது. இனி எனக்கு எந் தக் கவலையும் இல்லை. இனி இந்த உலகில் எனக்கு என்ன வேலை...? அவர் சென்ற இடத்திற்கே நானும் சென்று

https://telegram.me/aedahamlibra

விட வேண்டியதுதான்!” எனத் தனக் குத்தானே கூறிக்கொண்டவள் யாரிட மும் சொல்லிக்கொள்ளாமல் அங்கிருந்து விரைந்து சென்று மறைந்தாள் காளனின் காதலியான பத்திரைத் தேவி.

**அடிக்குறிப்பு:**

1. ஆறாம் அறக்கண்ட நெறி மாண் அவையத்து

முறை நற்கு அறியுநர் முன்னுறப் புகழ்ந்த

தூவியற் கொள்கைத் துகளறு மக ளிரொடு

பருதி உருவின் பல்படைப் புரிசை

எருவை நுகர்ச்சி யூப நெடுந்தூண்

வேத வேள்வித் தொழில்முடித் தாதூஉம் (புறம் 224 : 4- 9)

2. தத்து நீர் வரால் குருமி வென்றதுந்

தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர் பொன்

பத்தொடு ஆறுநூறு ஆயிரம் பெறப்

பண்டு பட்டினப் பாலை கொண் டதும் (பட்டினப்பாலை இராசபாரம்பரியம்-199)

பட்டினப்பாலை பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனாருக்கு கரிகாலர் ஆறு நூறாயிரம் பொற்காசுகளை பரிசாக அளித்தார் என்று பட்டினப்பாலையில் செயங்கொண்டார் கூறுகிறார்.

**(வானவல்லி முற்றும்)**

https://telegram.me/aedahamlibra

# முடிவுரை

## கரிகாலரின் காலம்:

கரிகாலரைப் பற்றியும் கரிகாலர் வாழ்ந்த காலத்தைப் பற்றியும் நாம் அறி வதற்கு மயிலை சீனி. வேங்கடசாமி, கா. அப்பாத்துரையார், நீலகண்ட சாஸ்திரி, புலவர் கா. கோவிந்தனார் ஆகிய தமிழ் வரலாற்று ஆய்வாளர்களின் நூல்களைப் படித்தால் ஒவ்வொருவரிடமிருந்தும் ஒவ் வொரு விதமான முரண்பட்ட ஆய் வுத் தகவல்களே கிடைக்கின்றன. சிலர் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் கரி காலன் வேறு, பட்டினப்பாலையில் குறிப் பிடும் திருமாவளவன் வேறு, பொருநராற் றுப் படையில் குறிப்பிடப்படும் வளவன் வேறு என்று ஆதாரங்களை அடுக்கி கரி காலன் - 1, கரிகாலன் - 2, கரிகாலன் -

3 என வகைப்படுத்துகின்றனர். அவர்கள் வெண்ணிப் போரில் வெற்றி பெற்ற கரிகாலன் வேறு; காவேரிக்கு அணை கட்டிய திருமாவவளன் என்பவன் வேறு; இமயத்திற்கு படையெடுத்த புகழ்பெற்ற கரிகாலன் என்பவன் வேறு என்று கூறுகிறார்கள். சிலர் அதே ஆதாரங்களை மறுத்து கரிகாலன் என்பது ஒருவர் தான் என்றும் கூறுகிறார்கள்.

வெண்ணிப் போரில் வெற்றி பெற்ற அதே கரிகாலன் தான் சிங்களர்களைக் கொண்டு காவேரிக்கு அணையக் கட்டினான். இதே கரிகாற் பெருவளத்தான் தான் இமயம் வரை படையெடுத்தான் என்று சிலர் கூறுகிறார்கள். பெருவளத்தான், கரிகாற் பெருவளத்தான், கரிகாற் வளவன், வளவன், திருமாவளவன், இயல்தேர் வளவன் என புறநானூறு, அகநானூறு, பத்துப்பாட்டு, பொருநராற்றுப் படை மற்றும் சிலப்பதிகாரத்தில் பல்வேறு பெயர்களில் குறிப்பிடப்படுவது சோழப் பேரரசன் கரிகாலன் ஒருவனையே என்று

மயிலை சீனி. வேங்கடசாமி கூறுகிறார். நானும் அதையே ஏற்றுக்கொண்டு கரி காலன் நாட்டினை இழந்து எதிரிகளால் சிறைப்பட்டு உயிரோடு எரிக்கப்படும் போது அதிலிருந்து தப்பி பிறகு படை யைத் திரட்டி வெண்ணிப் போரில் சேரன், சோழன் மற்றும் பதினொரு வேளிர் களைக் கொன்று தனக்குரிய ஆச னத்தை மீட்டுப் பிறகு சிங்கள வீரர்க ளைக் கொண்டு காவேரியின் கரையை உயர்த்தி அதன் குறுக்கே அணை கட்டிப் பிறகு வடக்கு நோக்கிப் படையெடுத்த சோழப் பேரரசன் கரிகாலன் ஒருவனே எனக்கொண்டு இப்புதினத்தை எழுதியி ருக்கின்றேன்.

மௌரியர் மற்றும் வடுகரின் தென் னகப் படையெடுப்பைத் தடுத்து நிறுத்தி முறியடித்தவன் சோழ மன்னன் இளஞ் சேட்சென்னி என்ற ஆதாரம் புறநானூறு பாடலில் தெளிவாகக் கிடைக்கிறது. மௌரிய அரசர்கள் பிந்துசாரன் அல் லது அவனது மகன் அசோகப் பியதசி

காலத்தில் தென்னகத்தின் மீது படையெடுப்பு நடந்திருக்கலாம் என்று வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். கி.மு 260 ல் (யீ10 வருடங்கள்) மௌரியப் பேரரசன் அசோகப் பியதசி தனது இளமைக் காலத்தில் கலிங்கத்தின் மீது படையெடுத்தான். கலிங்கப் போருக்குப் பிறகு அவனது பார்வை தென்னகத்தின் மீது திரும்பியிருக்கலாம். அதாவது அசோகப் பியதசியின் கடைசி காலத்தில் தென்னகத்தின் மீது தாக்குதல் தொடுக்க அவன் தனது மௌரியப் படையை அனுப்பியிருக்கலாம். தோராயமாக கி.மு 230 (யீ10 வருடங்கள்). மௌரியப் படையை சோழ மன்னன் இளஞ்சேட்சென்னி தனது இளமைக் காலத்தில் தடுத்து நிறுத்தினான் என்றும்; பொருநராற்றுப் படையில் கரிகாலர் பிறப்பதற்கு முன்னே சோழ மன்னர் இளஞ்சேட்சென்னி இறந்துவிட்டார், கரிகாலரை அவரது மாமா இரும்பிடர்த் தலையர் வளர்த்தார் போன்ற தகவலால் சென்னியின் கடைசி காலத்தில் கரிகா

https://telegram.me/aedahamlibra

லர் பிறந்திருக்க வேண்டும் என்று கருத இடமிருக்கிறது. அதாவது கி.மு 200 (யீ 10 வருடங்கள்). கரிகாலருக்கு வயது 17 அல்லது 18 வயதில் அதாவாது கி.மு 175 (யீ 10 வருடங்கள்) வாக்கில் என்று முடிவுசெய்து கரிகாலரின் காலத்தை வரையறுத்து இப்புதினத்தை இயற்றியிருக்கிறேன்.

வெண்ணிப் போரில் சேரமான் பெருஞ்சேரலாதன் மற்றும் பாண்டியன் தென்னவன் மற்றும் எதிர்த்த வேளிர்களைக் கரிகாலர் கொன்றது தவறு என்று பெரும்பாலான வரலாற்று அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். அதிலும் மார்பில் புகுந்து முதுகு வழி தனது வேல் வெளிப்படும் அளவிற்கு சேரமானின் மார்பில் தனது வேலினை செலுத்திக் கொன்றது கொடுமை என்றே குறிப்பிடுகிறார்கள். அவர்களின் கருத்து எந்த அளவு சரி என்று தெரியவில்லை.

கரிகாலரைச் சிறை செய்தது மட்டுமல்லாமல் உயிரோடு மாளிகையில் கொளுத்தவும் முயன்று, அந்த முயற்சி தோல்வியடைந்த பிறகு சோழ நாட்டைக் கைப்பற்ற சேரன், பாண்டியன் மற்றும் பதினோரு வேளிர்கள் துணையுடன் பெரும் படையுடன் சோழ நாட்டிற்குள் புகுந்து படையெடுத்த சமயத்தில் கரிகாலனின் மனம் எப்படி இருக்கும் என்பதை கரிகாலனின் செயல் கொடுமை என்று கூறுபவர்கள் சிந்தித்துப் பார்த்தால் நன்றாக இருக்கும்.

## கரிகாலரின் வடசெலவு:

உறுதியான கல்வெட்டு ஆதாரம் இல்லாமல் இலக்கிய ஆதாரம் மட்டுமே கொண்டிருப்பதால் கரிகாலரின் வடநாட்டுப் படையெடுப்பை வெறும் கட்டுக் கதை என்றும், அது பிற்காலத்தில் பெருமைக்காக சேர்க்கப்பட்டது என்றும் கூறி

https://telegram.me/aedahamlibrary

ஆராய்ச்சியாளர்கள் பலர் குறிப்பாக வட நாட்டு ஆராய்ச்சியாளர்கள் கரிகாலரின் பெரும் வெற்றியை ஒதுக்கித் தள்ளிவிடு கிறார்கள். இதே நிலைதான் சேரன் செங் குட்டுவனின் வடநாட்டுப் படையெடுப் புக்கும். பிற்காலச் சோழப் பேரரசர் மது ராந்தக இராஜேந்திரரின் கங்கைப் படை யெடுப்பைத் தவிர மற்ற முற்கால தமிழக மன்னர்களான சோழப் பேரரசன் கரிகாற் பெருவளத்தான் மற்றும் சேரன் செங்குட் டுவன் ஆகியோரின் வடநாட்டுப் படை யெடுப்பு அனைத்துக்கும் கல்வெட்டு ஆதாரங்கள் இல்லை.

கரிகாலரின் காலத்திற்குப் பிறகு இயற்றப்பட்ட சிலம்பில் குறிப்பிடப்பட்டி ருக்கும் கரிகாலரின் இமயப் படையெ டுப்பு பற்றிய தகவல் கரிகாலரின் சமகா லத்திய இலக்கியமான பட்டினப்பாலை, பொருநராற்றுப்படை, அகநானூறு மற்றும் புறநானூறு பாடல்களில் குறிப்பிடப்பட வில்லை என்ற காரணத்தினால் கரிகால ரின் வடநாட்டுப் படையெடுப்பு “இல்லை”

என்று ஆகிவிடாது. கரிகாலரின் காலத்தில் இயற்றப்பட்ட பாடல்கள் அவரது படையெடுப்பு நிகழ்வதற்கு முன் கூட இயற்றப்பட்டிருக்கலாம் அல்லது அதற்கு போதிய முக்கியத்துவம் அக்காலத்தில் கொடுக்கப்படாமல் கூட இருந்திருக்கலாம்.

சேர மன்னன் செங்குட்டுவனின் தம்பி இளங்கோவடிகளின் பெரும் காப்பியமான சிலப்பதிகாரம், பிற்காலச் சோழர் குலோத்துங்கனது கால போர் இலக்கியமான கலிங்கத்துப் பரணி, ஒட்டக்கூத்தரின் குலோத்துங்க பிள்ளைத் தமிழ் மற்றும் பிற்காலப் பாண்டியன் கி.பி பதிமூன்றாம் நூற்றாண்டின் முதல் மாற வர்மன் சுந்தரபாண்டியனின் திரு வள்ளறைக் கல்வெட்டு ஆகியவற்றில் சோழப் பேரரசர் கரிகாற் பெருவளத்தானின் வட நாட்டுப் படையெடுப்பிற்கான ஆதாரம் இருக்கின்றன. ஐந்து ஆதாரங்களையும் தனித்தனியாக நோக்கினால் அது வெறும் செய்தியாக மட்டுமே நமக்கு

கிடைக்கும். ஆனால், அனைத்தையும் ஒன்றிணைத்து நோக்கினால் நமக்கு கரிகாலரின் வடநாட்டுப் படையெடுப்பிற்கான உறுதியான ஆதாரம் கிடைக்கும்.

சேரன் செங்குட்டுவரின் தம்பியும், புலவருமான இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில்

இரு நில மருங்கின் பொரு நரைப் பொறாஅச்

செருவெங்காதவின், திருமாவளவன்

வாளும், குடையும் மயிர்க்கண் முரசும்,

நாளொடு பெயர்ந்து. "நண்ணார்ப் பெறுக; இம்

மண்ணக மருங்கின்என் வலிகெழு தோள்", என்ப

புண்ணிய திசைமுகம் போகிய அந்நாள்,

https://telegram.me/aedahamlibra

அசைவில் ஊக்கத்து நசை பிறக்கு ஒழியப்,

இமையவர் உறையுஞ் சிமையப் பிடர்த்தலைக்

கொடுவரியொற்றிக் கொள்கையிற் பெயர்வோற்கு

மாநீர் வேலி வச்சிர நன்னாட்டுக்

கோன் இறை கொடுத்த கொற்றப் பந்தரும்,

மகத நன் நாட்டு வாளவாய் வேந் தன்

பகைப் புறத்துக் கொடுத்த பட்டி மண்டபமும்,

அவந்தி வேந்தன் உவந்தனன் கொடுத்த

நிவந்தோங்கு மரபின் தோரண வாயிலும்,

பொன்னினும் மணியிலும் புனைந் தன ஆயினும்

நுண்வினைக் கம்மியர் காணா மரபின;

துயர்நீங்கு சிறப்பினவர் தொல் லோர் உதவிக்கு

மயநன் விதித்துக் கொடுத்த மரபின; இவை தாம்

ஒருங்குடன் புணர்ந்தாங்கு உயர்ந் தோரேத்தும்

அரும் பெறல் மரபின் மண்டபம்... (சிலம்பு 5: 89 - 110)

“பரந்த இவ்வுலகில் தன்னோடு எதிர்த்துப் போரிடும் அரசர் எவரும் இல் லாததால் போர் ஆர்வம் மிக்க கரி காற் திருமாவளவன் வான், குடை மயிர் நீக்காத தோல் போர்த்த எதிர்க் கவல்ல பகைவரைப் பெறலாம் என்ற வேட்கையால் வடநாடு நோக்கிச் சென்

றபோது, இமையவர் இருக்கும் இமயப் பெருமலை அவன் ஆசை அழியுமாறு இடை நின்று தடுத்து, அவன் ஊக் கத்தை உருக்குலைத்து விடவே அம்ம லையின் மீது பெரும் சினம் கொண்டு அதன் பிடரியில் தன் புலிச் சின்னத்தைப் பொறித்துவிட்டுத் திரும்பினான் கரிகா லன். மனம் சலித்து மீள்பவனுக்குக் கடல் அரண் கொண்ட வச்சிர நாட்டு அரசன் திறையாகக் கொடுத்த முத்துப் பந்தர், வாட்போரில் வலிமையான மகதத்து மன் னன் கரிகாலருடன் போரில் தோற்றுக் கொடுத்த பட்டிமண்டபம், அவந்தி வேந் தன் உவந்து அளித்த தொழில் நலம் பிக்க வாயில் தோரணம் என்ற பொன் னும், மணியும் கொண்டு தொழில் வல்ல கம்மியனால் பண்ணப்படாத, இவர்களின் குல முன்னோர், தனக்கு இடர் வந் துற்ற போது, ஓரொரு கால் செய்த உதவிகளுக்குக் கைம்மாறாக மயனால் செய்து கொடுக்கப்பட்ட இம்மூன்றையும் வைத்து உயர்ந்தோர் ஒன்று கூடிவந்து

ஏத்தும் மண்டபம்” எனக் கரிகாலரின் வடநாட்டுச் செலவு பற்றி இளங்கோவடிகள் கூறுகிறார்.

பிற்காலச் சோழர் குலோத்துங்கனின் அவைக்களப் புலவர் செயங்கொண்டாரின் கலிங்கத்துப் பரணி இராசபாரம்பரியம் பகுதியில் குலோத்துங்கனின் முன்னோரின் புகழினைக் கூறும் இடத்தில் கரிகாலனின் வடநாட்டுப் படையெடுப்பு பற்றியும் அவன் தனது புலிக்கொடியை இமயத்தில் பொறித்ததைப் பற்றியும் கீழ்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

செண்டு கொண்டு கரிகாலன் ஒரு காலின் இமயச்

சிமைய மால்வரை திரித்து அருளி மீள அதனைப்

“பண்டு நின்றபடி நிற்க இது” என்று முதுகில்

பாய் புலிக் குறிபொறித்து, அது மறித்த பொழுதே. (பட்டினப்பாலை இரா சபாரம்பரியம் - 179)

"கரிகாற்சோழன், தமிழகத்தில் தன்னோடு எதிர்த்துப் போர் புரியும் பகைவர் எவரும் இல்லாததால் வடதிசையை நோக்கிப் படையெடுத்தான். எதிர்த்த மன்னர்கள் அனைவரையும் போரில் தோற்கடித்து வடக்கு நோக்கிச் சென்ற சமயத்தில், சிகரங்களையுடைய பெரிய மலையாகிய இமயமானது அவனை மேலே செல்லவிடாமல் தடுத்து நிறுத்தியது. அதனால் சினங்கொண்ட கரிகாலன் தன் கைச் செண்டால் அம்மலையைத் தலைகீழாகப் புரட்டிப்போட்டான். அவ்வாறு புரட்டியவன், "இம்மலை முன்பு நின்றது போலவே நிற்கட்டும்" என்று எண்ணி, பாய்ந்து செல்லும் புலியின் வடிவம்பொறித்த தனது கொடியை அம்மலையின் முதுகில் பதித்து, அம்மலையை மீண்டும் முன்போல நிலை நிறுத்தினான்" என்று கரிகாலரின் வடநாட்டுப் போரைப்

பற்றி இலக்கிய சுவையுடன் கூறுகிறார் செயங்கொண்டார்.

தத்து நீர் வரால் குருமி வென்றதுந்

தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர் பொன்

பத்தொடு ஆறுநூறு ஆயிரம் பெறப்

பண்டு பட்டினப் பாலை கொண் டதும் (பட்டினப்பாலை இராசபாரம்பரியம்-199)

"வரால் மீன்கள் துள்ளிப் பாய்கின்ற தடாகங்களை உடைய "குருமி" (இந்தக் குருமி என்பது எந்த நகரம் என்று அடையாளம் காண இயலவில்லை) என்னும் நாட்டை வெற்றி கொண்ட தன்மையும், இனிமை பொருந்திய செந்தமிழ்ச் செய்யுளைப் பாடும் கவிவாணராகிய "கடியலூர் உருத்திரங்கண்ணனார்" பதினாறு இலட்சம் பொன்னைப் பரிசாகப் பெறும்படி, முன்பு "பட்டினப்பாலை" என்னும் நூலைத் தனக்கு உரிமையாகக் கொண்ட

https://telegram.me/aedahamlibra

தன்மையுடையவர்” என்று கவிச்சக்கர வர்த்தி செயங்கொண்டார் சோழப் பேர ரசர் கரிகாலரின் இமயச் செலவு மற்றும் பட்டினப்பாலைக்கு பரிசளித்ததைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

கவிச்சக்கரவர்த்தி சோழப் பேரர சர் கரிகாலரின் இமயப் படையெடுப்பைப் பற்றி குறிப்பிடும் அதே வேளையில் ஒட் டக்கூத்தர் இயற்றியுள்ள குலோத்துங்கன் பிள்ளைத் தமிழில்

முழுகுல நதிக்கரசர் முடிகொடு வகுத்தகரை

முகில்தொட அமைத்தது அறி வோம்

இருபுறமும் ஒக்க நினது ஒருபுலி பொறிக்க வட

இமகிரி திரித்தது அறிவோம்.

என கரிகாலர் காவேரியின் இரண்டு கரைகளுக்கும் கரை எடுத்த

தைப் பற்றியும், இமயப் படையெடுப்பு பற்றியும் குறிப்பிடுகிறார். மற்றொரு பாடலில்

'அன்று கவிக்கு வியந்து நயந்து தரும் பரிசிற் கொடுபோர்

ஆழியில் வந்து தரா தலம் நின்று புகாரில் அனைத்துலகும்

சென்று கவிக்கு மகத்தது தூண் வயிரத்தினு முத்தினிமெய்

செய்ததொர் பொற்றிரு மண்டபம் நல்கிய செயகுல நாயகனே'

என்று பட்டினப்பாலை இயற்றிய கடியலூர் உருத்திரங்கண்ணனாருக்கு பதினாறு நூறாயிரம் பொன் மற்றும் பட்டி மண்டபத்தையும் கரிகாலர் பரிசாக அளித்தார் என்று ஒட்டக்கூத்தர் கூறுகிறார். இந்த மண்டபம் கரிகாலர் வடநாடு சென்றபோது அவரை எதிர்த்துத் தோற்ற மகத மன்னன் அளித்த பட்டி மண்டபம் என்று சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கூறுகிறார்.

https://telegram.me/aedahamlibrary

இப்படி கரிகாலரின் வட இந்தியப் போர் மற்றும் கடியலூர் உருத்திரங்கண் ணனாருக்கு கரிகாலர் அளித்த பதினாறு நூறாயிரம் பொன் மற்றும் பட்டி மண்ட பம் பற்றிய செய்திகள் இலக்கியங்களில் மட்டுமே கிடைக்கும் வேளையில் முதல் முறையாக சோழர் அல்லாத பாண்டியர் கல்வெட்டில் அதாவது கி.பி 13 ஆம் நூற்றாண்டின் முதல் மாறவர்மன் சுந் தர பாண்டியனின் திரு வள்ளறைக் கல் வெட்டில் கரிகாலரின் வட இந்தியப் போர் பற்றிய தகவல் மறைமுகமாக பொதிந்து கிடக்கிறது.

வெறியார் தளவத் தொடைச் செய மாறன் வெகுண்டதொன்றும்

அறியாத செம்பியன் காவிரி நாட்டி லரமியத் துப்

பறியாத தூணில்லை கண்ணன் செய் பட்டினப் பாலைக் கன்று

https://telegram.me/aedahamlibra

நெறியால் விடுந்தூண் பதினாறு மேயங்கு நின்றனவே.

மாறவர்மன் சுந்தர பாண்டியன் கி.பி 13 ஆம் நூற்றாண்டில் சோழ நாட்டின் மீது படையெடுத்து சோழ நாட்டின் தலைநகரான கங்கை கொண்ட சோழபுரத்தையும், அவர்களின் அரண்மனை இருந்த பழையாறை மற்றும் தஞ்சை நகரத்தையும் அழித்து சூறையாடினான். சோழ நாட்டின் பெரும்பட்டினங்கள் அனைத்தையும் அழித்த மாறவர்மன் சுந்தர பாண்டியன் புகாரில் கரிகாலரால் புலவர் உருத்திரங்கண்ணனாருக்கு அளித்த பதினாறு கால் பட்டிமண்டபத்தை மட்டும் புலவரின் மீதும் கரிகாலரின் மீதும் கொண்ட பெரும் மதிப்பினால் அழிக்காமல் விட்டுச் சென்றான் என்று கூறுகிறது மேற்கூறிய கல்வெட்டு.

சிலப்பதிகாரம், கலிங்கத்துப்பரணி, குலோத்துங்கச் சோழனுலா போன்ற இலக்கியச் செய்தி அல்லாமல் கரிகால

https://telegram.me/aedahamlibra

ரின் வடநாட்டுச் செலவு பற்றி மறைமுகமாக செய்தி குறிப்பிட்டிருப்பது இந்தப் பாண்டியக் கல்வெட்டு ஒன்றில்தான். இந்தக் கல்வெட்டில் மாறவர்மன் சுந்தர பாண்டியன் "கரிகாலர் உருத்திரங்கண்ணனாருக்கு அளித்த பதினாறு கால்களை உடைய மண்டபத்தை மட்டும் இடிக்காமல் சென்றான்" என்று கல்வெட்டில் கூறுவதால் கரிகாலர் உருத்திரங்கண்ணனாருக்குப் பட்டி மண்டபத்தைப் பரிசாக அளித்தார் சென்ற செய்தி உறுதியாகிறது. அந்தப் பட்டி மண்டபம் எங்கிருந்து கிடைத்தது என்றதை நோக்கினால் கரிகாலரின் வட நாட்டுப் படையெடுப்பின்போது தோல்வியடைந்த மகத நாட்டு மன்னனால் கப்பமாக கட்டிக் கொடுக்கப்பட்டது விளங்கும்.

இதை விடவும் வலிமையான ஆதாரம் வேண்டுமென்றால் வடக்கே சிக்கிம் மாநிலத்தில் அமைந்திருக்கும் சோழ கணவாய், சோழ மலைத்தொடர் மற்றும் புலி மலை ஆகியவற்றை அடிப்படையா

https://telegram.me/aedahamlibra

கக் கொண்டு வடக்கிலிருந்து தெற்கு நோக்கிக் கள ஆய்வு மேற்கொண்டால் மட்டுமே கிடைக்க வாய்ப்பிருக்கிறது.

## கரிகாலரின் வடசெலவுக் காலம்:

கரிகாலரின் வடசெலவு பற்றி ஆராய்ந்த வரலாற்று அறிஞர்கள் பலரும் குறிப்பிடும் காலம்

1. மகத மன்னன் அசாதசத்து"வின் கடைசி காலம் அல்லது அவனது மகன் உதயனின் ஆட்சிக் காலம் (கி.மு 462 க்கு அண்மையில்)

2. அசோகனுக்குப் பிற்பட்ட மௌரியர் காலம் (கி.மு. 232 - கி.மு. 184)

3. புஷ்யமித்திர சுங்கனுக்குப் பிற்பட்ட காலம் (கி.மு. 148 - கி. மு. 27)

https://telegram.me/aedahamlibra

4. கலிங்கத்தின் மகாமேகவா கன மன்னன் காரவேலனுக்கு பிற்பட்ட காலம் (கி.மு 170க்குப் பிற்பட்ட காலம்)

5. ஆந்திரர் ஆட்சி குன்றிய காலம் (கி.பி. 163 - 300)

இந்த ஐந்து காலங்களையும் ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடக் காரணம் இந்தக் காலகட்டத்தில் தான் வட நாட்டு ஆட்சியாளர்கள் மிகவும் பலவீ னமாக இருந்திருக்கிறார்கள். மேற்கண்ட மன்னர்களுக்குப் பிற்பட்ட பலவீனமான காலத்தில் தான் கரிகாலரால் வடக்கு நோக்கி படையெடுத்திருக்க முடியும் என நினைப்பது எந்த வகையில் சரி என்று தெரியவில்லை.

பிறப்பதற்கு முன்னே தந்தையை யும், பிறகு தாயையும், வளரும் போது தனது நாட்டையும் இழந்து எதிரிகளால் கோட்டையில் சிறைவைக்கப்பட்டு உயி ரோடு எரிக்கப்பட்ட காலத்தில் அங்கி ருந்து தப்பி, திரிந்து யாருடைய உதவி

யும் இல்லாமல் தனது நாட்டைக் கப ளீகரம் செய்ய படையெடுத்த சேரர், பாண்டியர், சிங்கள மற்றும் ஒட்டுமொத்த தென்னகத்தின் பதினொரு வேளிர்க ளையும் வெண்ணியில் அழித்த பெரும் வீரன் கரிகாற் பெருவளத்தான். இப்படிப் பட்ட மாவீரனான கரிகாலன் “வடக்கே இருக்கும் ஆட்சியாளர்களின் வலிமை குன்றிய காலத்தில் தான் படையெடுத்து இமயத்தை அடைந்திருக்க முடியும்” என எண்ணி அவனது காலத்தை வரைய றுக்க முயல்வது அவனது வீரத்தை அவ மதிப்பதைப் போன்றது என்று கருதுகி றேன் நான்.

https://telegram.me/aedahamlibra